JL
O6m 211, N03NA
N03.14
162023




"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுயாடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம் 14. } ஜனவரி, 1916. { இலக்கம் 1

## THE NEW YEAR.

## புது வருடம்.

இன்று பிறக்கும் புது வருஷமான இந்த 1916-ம் ஆண்டு நமது "நல்லாயனைச்" சன்மானித்து வரும் சந்தாதாரநேயர்களுடையவும், அதின் அபிவிருத்தியைக் கோரி அதற்கு அன்புடன் பொருளுதவியும் விஷயதானமும் செய்துவரும் புண்யபுருடர் பூலையருடையவும், இன்னும் பலவிதமாய் அதற்கு அனுகூலஞ்செய்து அதை ஆதரித்துவரும் அன்பர்களுடையவும், இவர்கள் எல்லோருடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடையவும் ஆத்தும சரீரத்துக்குப் பாக்கியகரமானதா யிருக்கக் கருணையுள கடவுள் கிருபை புரிவாராக. இக்கிருபை இவர்களெல்லோருக்கும் நிரம்பக் கிடைக்கும் பொருட்டு வருடப்பிறப்பு நாளாகிய இன்று நாம் திவ்விய பூசைசெய்து ஒப்புக்கொடுப்பதோடு நமது பத்திரிகையின் வாயிலாய்ச் சகலருக்கும் புதுவருடச் சோபனமுங் கூறுகிறோம்.

நம்முடைய விருப்பத்தின்படி இப்புதுவருடம் நம்மெல்லோருக்கும் பாக்கியமானவருடமாயிருக்க, முந்த முந்த நாம் செய்யவேண்டிய தென்னவென்றால், சர்வதயாபரரான சர்வேசுரன் இனி நமக்குக் கிடைக்க இருக்கும் மோட்ச சம்பாவனையை அதிகரிக்கச் செய்துகொள்ளுமாறு இன்னுமொரு வருடத்தை நமக்குக் கட்டளையிட்டதற்காக நாம் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்ய வேண்டியது. பிறகு அவருடைய சித்தப்பிரகாரம் இவ்வருடத்தைக் கழிக்க நம்மாலான பிரயாசையும் படவேண்டியது. சுவிசேஷத்திற் சொல்லப்பட்டிருக்கிற எசமானன் தான் தூரதேசத்துக்குப்போவதற்கு முந்தி தன் ஊழியர்களை வரவழைத்து, ஒருவனுக்கு ஐந்து தலேந்தும், இன்னொருவனுக்கு இரண்டு தலேந்தும், மற்றொருவனுக்கு ஒரு தலேந்தும் கொடுத்து வர்த்தகஞ் செய்யச் சொல்லிவிட்டுப் போனதுபோல, நாம் ஞானவியாபாரஞ்செய்ய, அதாவது நம்முடைய இரட்சண்ய அலுவலில் நாம் கண்ணுங் கருத்துமா யிருந்து புண்ணியங்களைச் செய்ய, சர்வேசுரன் நமக்கும் இன்னொரு வருடத்தைக் கொடுத்திருக்கிறார். மேற்படி எஜமானன் தனது ஊழியர்களுக்குத் தலேந்துகளை ஓரேயளவாய்க் கொடாததுபோல் சர்வேசுரனும் நமது ஆயுசாகிற

162023

காலஅளவை நம்மெல்லோருக்குஞ் சமமாகக்கொடுத்தவரல்ல. இப்போது ஜீவந்தராயிருக்கும் நம்முக்குள் சிலருக்கு இன்னுஞ் சில வருடங்களையும், சிலருக்கு இந்த ஒரு வருடத்தையும், சிலருக்கு ஒருவேளைச் சில மாதங்களையும், இன்னும் சொல்லவேண்டுமானால் சிலருக்கு சிலநாட்களையும் சில டணி நேரத்தையு மாத்திரமே கொடுத்திருக்கலாம். ஆனபடியால், ஒரு தலேந்து பெற்றுக்கொண்ட ஊழியன் அதைச் சற்பிரயோகப்படுத்தித் தனக்கு ஆதாயமாக்கிக்கொள்ளாமல் வீணா அதைப் பூமியில் புதைத்துவைத்துக் கெட்டுப்போனது போல், நாமும் காலத்தை வீணாய்ப்போக்காமல், நமக்குக் கிடைத்திருக்கிற வருடங்களையும் மாதங்களையு மாத்திரமல்ல, இன்னும் நாட்களையும், நாழிகைகளையும், நிமிஷங்களையுங்கூட நமக்கு ஆதாயமாக்கிக்கொள்ள நம்மாலான பிரயாசையெல்லாம் படவேண்டியது. ஏனெனில், முன் சொல்லப்பட்ட உவமையில் தூரதேசம் போயிருந்த எஜமான் திரும்பி வந்தமாத்திரத்தில் தனது ஊழியரிடத்தில் தான் கொடுத்துவிட்டுப்போன தலேந்துகளைப்பற்றிக் கணக்குக் கேட்டு, அவைகளைச் சரியானபடிக்கு இலாபகரமாய்ச் செலவு செய்தவர்களுக்குச் சம்பாவனையையும், சோம்பலுக்கு இடங்கொடுத்து அதை விருத்திபண்ணாத ஊழியனுக்குத் தண்டனையையும் கட்டளையிட்டதுபோல், சர்வேசுரனும், நம்முடைய மரணத்துக்குப்பின், நமக்குக் கொடுக்கப்பட்டிருந்த நமது வாழ் நாளாகிற காலத்தைப்பற்றி நம்மைக் கண்டிப்பான கணக்குக் கேட்டு, அதைத் துர்ப்பிரயோகப்படுத்தினதற்கு அல்லது நற்பிரயோகப்படுத்தினதற்குத் தக்கபடி ஆக்கினையை அல்லது சம்பாவனையைக் கட்டளையிடுவார்.

ஆதலால், சர்வேசுரனிடமிருந்து நாம் பெற்றிருக்கும் சகல நன்மைகளிலும் காலமானது மேலானதும் விலையேறப்பெற்றதுமென்பதிற் சந்தேகமில்லை. இவ்வுலகத்தில் தங்கம், பொன், வெள்ளி முதலிய உலோகங்களையும், இரத்தினம், வைடூரியம், மாணிக்கம், மரகத முதலிய கற்களையும் விலையேறப்பெற்றவைகளென்பார்கள். ஏனெனில், அவைகளைக்கொண்டு இவ்வுலக நன்மைகளைப் பெறவும், சுகமாயுஞ் சந்தோஷமாயுஞ் சில நாள் வாழவும் அவைகள் நமக்கு உபகரணங்களா யிருப்பதினாலேயாம். ஆனால் இவையனைத்தும் நிலையற்றனவாகையால், சொற்பக் காலத்தில் அழிந்து மறைந்துபோம். காலமோ என்றென்றைக்கும் அழியாத மோக்ஷ பேரின்ப பாக்கியத்தை நமக்குப் பயக்கும்படியான அவ்வளவு மதிப்பிலடங்கா விலையேறப்பெற்ற சொத்து. ஆதலால்தான் அர்ச். பெர்நர்தென்பவரும் "காலமானது சர்வேசுரனுடைய கிரயமாயிருக்கிறது; ஏனென்றால் காலத்தை மாத்திரம் நாம் சரியாய்ச் செலவழிப்போமானால் சர்வேசுரனைத் தானே நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளலாம்" என்று வசனித்திருக்கிறார். இப்போது நரகத்தில் சகிக்கவொண்ணா வேதனைப்படுகிற பசாசுகளுக்கும் பாவிகளுக்கும், நமக்குக் கிடைத்திருக்கிற இந்தக் காலத்தில் ஒரு நிமிஷ நேரமாத்திரம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடுமானால், அதைக் கொண்டு அவர்கள் மோக்ஷ சம்பாவனையைச் சம்பாதித்துக்கொள்வார்களென்று வேத சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். மேலும் இப்பொழுது மோக்ஷத்திலுள்ள மோக்ஷவாசிகள் எப்படித் தாங்கள் சுகித்தனுபவிக்கிற பேரின்ப பாக்கியத்திற்குப் பாத்திரவான்களானார்களென்று நாம் விசாரிப்போமானால், அவர்களெல்லோரும் தங்களுடைய காலத்தைச் சரியானபடி செலவழித்து வந்ததினாலேயே என்று அறிந்துகொள்ளுவோம். ஆனபடியால், சர்வேசுரன் மிக்க தயவாக நமக்குக் கொடுத்திருக்கிற நமது வாழ்நாளாகிற காலத்தைப் பாவவழியில் வீணாகச் செலவழித்துக் கெட்டுப்போகாமல், அதை மோக்ஷ சம்பாவனையைப் பெறுவிக்கும் புண்ணிய வழியில் செலவழிக்க இப்போதே பிரதிக்கினை செய்துகொள்ளுவோமாக.

இதற்காக நாம் செய்யவேண்டியதென்ன? புத்திமானான ஓர் நல்ல வியாபாரியை நாம் கண்டு பாவித்து நடக்கவேண்டியது. புத்திமானான வியாபாரி தன்னுடைய தொழிலின்பேரில் கண்ணுங் கருத்துமாயிருந்து தனக்கு நஷ்டமுண்டாகா வண்ணம் தன்னுடைய வரவு செலவுகளை யடிக்கடி பரிசோதித்து தனக்கு லாப முண்டானதோ, அல்லது நஷ்டமுண்டானதோ வென்று கணக்குப் பார்ப்பான். தனக்கு நஷ்டம் நேர்ந்திருந்தால் அதைப் பரிகரித்து லாபம் உண்டாகும் வழியைத் தேடுவான். லாபமுண்டாயிருந்தால் பின்னும் அதிக லாப முண்டாகும் வழிக்கு முயற்சிசெய்வான் அல்லவா? அதுபோல் நாமும் சென்ற வருஷத்தில் நம்முடைய ஆத்தும இரக்ஷணிய வியாபாரத்தை எவ்வண்ணம் நடத்தினோமென்றும், அதில் லாபம் உண்டானதோ அல்லது நஷ்டமுண்டானதோ வென்றும் பரிசோதித்துப் பார்க்கவேண்டியது.

ஆகையால், சென்ற வருடத்தில் தேவ கற்பனைகளையும் திருச்சபையின் கட்டளைகளையும் எப்படி அநுசரித்து நடந்தோம்? தேவ சிநேகம் பிறசிநேகம் நம்மிடத்தில் வளர்ந்தோங்கினவா, அல்லது குறைந்து போயினவா? நமது ஞானத்திரவியமாகிய தேவஇஷ்டப்பிரசாதத்தை ஜெபத்தினாலும் தேவத்திரவியானுமானங்களாலும், விசேஷமாய் அடிக்கடி நல்ல பாவசங்கீர்த்தனஞ்செய்து தேவநற்கருணையை யுட்கொள்ளுவதினாலும் நம்மிடத்தில் வளரச்செய்தோமா? அல்லது நாம் மனம் பொருந்திக் கட்டிக்கொண்ட அநேக அற்பப்பாவங்களால் அவற்றின் அபிவிருத்தியைக்குறைத்துக்கொண்டோமா? அல்லது சாவான பாவங்களினால் அவற்றை முற்றுமே போக்கடித்துக்கொண்டோமா? என்று நன்றாய் நம்மை ஆராய்ந்து பரிசோதித்துப் பார்த்துச் சர்வேசுரனுடைய தயவால் மெய்யாகவே நாம் புண்ணிய வழியில் விருத்தியடைந்தோமெனக் காண்போமானால், அதற்காக முழு மனதோடு அவருக்கு நன்றி செலுத்துகிறது மல்லாமல், இன்னும் அதிகமாய் அவருக்குப் பிரியப்படும் பொருட்டு என்னென்ன செய்யவேண்டுமென்று நன்றாய் யோசித்துப்பார்த்து, அவற்றைக் கைக்கொண்டு நடக்கவேண்டியது. இதற்கு விரோதமாய் நாம் கட்டிக்கொண்ட சாவான பாவங்களால் சர்வேசுரனுடைய இஷ்டப்பிரசாதத்தை யிழந்துபோய் நாம் ஆத்தும நஷ்டம் அடைந்திருக்கிறோமென்று காண்போமானால், மெய்யாகவே நரகத்தினின்று சர்வேசுரனுடைய தயவினால் இவ்வுலகத்துக்கு அனுப்பப்பட்ட பாவிகளாக நம்மைப் பாவித்து இவ்வருஷத்திலாவது நமது ஆத்தும க்ஷேம லாபங்களைக் கவனிப்போமாக. நாம் பாவங் கட்டிக்கொள்ள ஏதுவாயிருந்த பொருளையும், இடத்தையும், சமயத்தையும் முற்றுமே நீக்கவேண்டியது. அடிக்கடி நல்ல பாவசங்கீர்த்தனத்தால் நம ஆத்துமத்தைச் சுத்திசெய்து, அடிக்கடியுங் கூடுமானால் நாடோறும், தேவ சற்பிரசாதத்தை யுட்கொள்ளவேண்டியது. எத்தனைவிசை பாவத்தில் விழுந்தபோதிலும் சோர்வடையாமல் உடனுக்குடனே தைரியத்தோடெழுந்து பாவத்தைப் பரிகரிக்கும் வழியைத் தேடிக்கொள்ளவேண்டியது. புண்ணியத்தில் அதிகரிக்க வழிவகைகளையுங் கைக்கொண்டு நடக்கவேண்டியது. இவ்வாறாக நாம் இவ்வருஷத்தைப் போக்கி வருவோமானால் இவ்வருஷம் நமக்குப் பாக்கியகரமான வருஷமா யிருக்குமென்பதற் கையமில்லை. ஒரு தலேந்தாக் கொப்பாயிருக்கிற இவ்வருஷத்தை நமக்குக் கொடுத்திருக்கிற சர்வேசுரனும் இவ் வருஷத்தின் எந்த நாளிலாவது எந்த மாதத்திலாவது எந்த நிமிஷத்திலாவது நம்மைக் கணக்குக்கேட்க வந்தபோதிலும், சந்தோஷத்துடன் நம் ஒவ்வொருவரையும் நோக்கி "பிரமாணிக்க முள்ள ஊழியனே, நல்லது, நீ சொற்ப காரியங்களில் பிரமாணிக்க முள்ளவனாயிருந்தபடியினாலே, அநேக காரியங்களின் மேல் உன்னை அதிகாரியாக்குவேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று சொல்லி நமக்கு நித்திய பேரின்ப பாக்கியத்தை யளிப்பார்.

---

## THE GOD OF GENESIS.
## ஆதியாகம தேவன்.

---

ஆதியாகமத்தின் தேவன் நீதியின் தேவனென்றும், புதிய ஏற்பாட்டின் தேவன் அன்பின் தேவன் என்றும் அநேகர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். இதற்கு உதாரணமாகப் பின் வருவன பழைய ஏற்பாட்டில் சர்வேசுரனுடைய கோபத்தைக் காட்டும். நமது ஆதித்தாய் தந்தையர்க்

ருக் கிடைத்த தண்டனை, ஜலப்பிரளயம், இஸ்ரவேலர் நாடோடிகளாய்த் திரிந்தது, பத்துக் கற்பனைகளை அநுசரியாதவர்களை மோயீஸன் பயமுறுத்தியது, நன்றிகெட்ட யூதஜாதியார் எகிப்து தேசத்தில் சிறையாக்கப்பட்டது முதலியனவாம். இதற்கு மாறாக, நமதாண்டவரருளிச்செய்த புதிய ஏற்பாட்டில் அவருடைய அன்பின் ஜீவியம், பரம தேவ நற்கருணையை உண்டாக்கினது, சுவிசேஷத்தில் ஆங்காங்கு காட்டியுள்ள அளவற்ற சிநேகம், காட்சியாகமத்தில் அர்ச். அருளப்பர் வரைந்துள்ள அன்பின் வெற்றியால் எல்லா விஷயங்களையும் புதுப்பித்தது முதலியவற்றை எடுத்துச் சொல்லலாம். இந்த மாற்றம் உண்டாயது கர்த்தர் அவதாரத்திற்குப் பின்னென்பர். அந்த மகத்தான தாழ்ந்தருளலால் சர்வேசுரன் மன்பதைக்குள் அவருடைய சிநேகத்தின் இராச்சியத்தை ஸ்தாபித்து விட்டனரன்றோ!

இவ்விஷயத்தை மேலாகப் பார்க்கும்போது, இந்த அபிப்பிராயங்கொள்ள இடமிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. தன் குழந்தையை வளர்ப்பதில் ஒரு நல்ல தந்தை அன்பைக்காட்டிலும் நீதியையே விசேஷமாகக் காட்டுவான்; பிள்ளை வளர்ந்து வாலிப வயதாகும்போது, அன்பினால் அதை யாளுவான். அதுபோலவே மனுமக்கள் ஆதியில் குழந்தைகளைப் போலிருந்ததால், தேவ பிதா அவர்களை நடத்துவதில் நீதியைக்காட்டினார்; நாளடைவில் மன்பதை வளர்ந்து வாலிபமாகவே, அவர்களைத் தேவசிநேகத்தினால் நடத்தினார். ஆனால் ஆதிமுதலந்தம் வரையில் அவர் ஒருவரே நல்ல தந்தையாக இருப்பதைக் காணலாம்; குழந்தையினிடம் நீதியைக் காட்டுகையில், தன்னுடைய விசேஷ பட்சத்தை மறப்பதில்லை; பிள்ளை பெரியவனாகையில் காட்டும் அன்புடன் நீதியுமில்லாமற் போவதில்லை. அப்படியே மனுக்குலத்தின் தந்தையாகிய சர்வேசுரனும் ஆதியில் தன் பிள்ளைகளை நீதியையும் பட்சத்தையுங் காட்டி நடத்தினார்; பின்னர் பட்சத்தையும் நீதியையுங் காட்டி நடத்திவருகிறார்.

மேலும் ஒரு நல்ல தகப்பன் நீதியுள்ளவனாயிருந்து தன் குழந்தை தப்பிதஞ் செய்யாவண்ணம் பயமுறுத்தி, தவறினால் அதைக் கண்டித்த போதிலும், அவனுடைய பயமுறுத்துதலையும் தண்டனையும் பட்சத்தினாலுண்டாகி, இரக்கத்தினால் தணிதலடைகின்றன என்பதை மறக்கலாகாது; தண்டனை யடைந்த குழந்தை தற்சமயந் தன் தந்தையை வெறுக்கலாம்; ஆனால், தன்னைக் கண்டித்ததின் கருத்தை நன்குணர்ந்தபோது அக்குழந்தை கடைசியில் தன்னை நோகும்படி யடித்த அந்தக் கரங்களாலேயே அணைக்கப்பட விரும்புகின்றது. அப்படியே சர்வேசுரனும் அவருடைய பிள்ளைகளாகிய மனிதரும், மனிதன் கடவுளால் தண்டிக்கப்படுவது அவன் குற்றத்துக்கல்லவா? தண்டிக்க உயர்த்திய தேவகரங்கள் தம் முழு வலியுடன் மனிதன்மேல் விழுகிறதில்லை; தணிவாகவே அவன்மேல் இறங்குகின்றன. அவ் வடியைத் தாங்கமாட்டாமல் மனிதன் தள்ளாடியபோதிலும், தன்னைத் தண்டித்தவர் அடிமைகளை யடக்கியாளும் எஜமானருமல்ல, அல்லது பாரபட்சமில்லாத நீதிபதியுமல்ல. ஆனால் தனக்குள்ள பட்சத்தால் தண்டித்து, மனஸ்தாபக்குறிகள் கண்டஅளவிலே தம் பிள்ளையைத் தம் அணைப்பிற்கொண்டு சேர்க்கப் பின்வாங்காத தயாளகுணமுள்ள தந்தையென அவன் ஒருக்காலும் உணராமற் போகான் என்பது நிச்சயம்.

பழைய ஏற்பாட்டில் முதற் புத்தகமாகிய ஆதியாகமத்தில் சர்வேசுரனைப்பற்றிச்சொல்லியிருப்பதை யாராய்ந்துபார்த்தால், மேற்கூறியவைகள் விளங்கும். அங்கே சர்வேசுரன் ஒரு மிகச் சிறிய குழந்தையுடன் புழங்குகிறார்; அச்சிறுகுழந்தை தன் தந்தையைப்பற்றித் தானறிந்ததைக் கலப்பில்லாத மழலைச்சொற்களால் நமக் கெடுத்துரைக்கின்றது. தான் பிறந்த வீட்டிற்குரியவரான தகப்பனாருடைய இயல்பும், தன்னுடைய குற்றங்களும் அவற்றைத் தண்டித்த விதமும் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் வரிகளுக்கிடையில் இந்த நீதியுள்ள தகப்பனே பயப்படத்தக்கவராயிருந்தபோதிலும், இந்த பயமென்பதே பட்சமென்றும், என்ன நடந்தபோதிலும், எல்லாவிஷயங்களிலும் மேலாக இந்தத் தந்தையைக் குழந்தை எப்போதும் முழு மனதுடன் நம்பலாமென்றும் கண்டுகொள்ளலாம்.

அந்தக் குழந்தை தன் பேச்சை எப்படித் தொடங்குகிறதென்று பார்ப்போம். தன் தகப்பன் பிள்ளைக்கென்று ஒரு வீடு கட்டி அதில் அக்குழந்தையை வைக்கிறார்; ஆதிமுதல் அந்தம்



## THE NAMES OF THE MESSIAH.

## மேஸியாவின் நாமதேயங்கள்.

இசாயாஸ் என்னும் தீர்க்கதரிசி மேஸியாவாகிய கிறீஸ்துநாதரைப்பற்றியும், அவருடைய தேவ இராச்சியமாகிய திருச்சபையைப் பற்றியும், வெகு வாக்கலங்காரச் சிறப்போடு உரைத்த தீர்க்கதரிசனங்களில்:

“ஒரு பாலன் நமக்குப் பிறந்தார்; சுதன் நமக்கு அளிக்கப்பட்டனர். அவர் தம் தோள்மீது தமது அரசாட்சியின் அடையாளத்தைக் கொண்டிருப்பார். அவர் அதிசயர் எனவும், புத்திப் பிரபோதகர் எனவும், வல்லப தேவர் எனவும், எதிர்கால பிதாவெனவும், சமாதானப் பிரவு எனவும் அழைக்கப்படுவர்” (இசாயாஸ் 9-6) என்ற திருஷ்டி வாக்கியம் நமக்கு வெகு ஆறுதல் தரக்கூடியதானதால், இதை நமது திவ்ய இரட்சகர் பிறந்த திருநாள் கொண்டாட்ட நாட்களாகிய உற்சவகாலத்தில் கிறீஸ்துவர்கள் அடிக்கடி பத்தியோடு தியானித்தால் இருதய மகிழ்ச்சியடைவார்கள் என்பதற் கையமில்லை.

1. ஒரு பாலன் நமக்குப் பிறந்தார்; சுதன் நமக்கு அளிக்கப்பட்டார்—தாவீதரசனின் நகரமாகிய பெத்லேமில் ஒரு மாட்டுக்கொட்டிலில் ஒரு முன்னிட்டியிலே மாடு மிதிக்கும் வைக்கோலின்மீது படுத்திருக்கும் உலக இரட்சகராகிய கிறீஸ்துநாதர்தான் இப்பாலன். இவர் நமக்காகவும் நம்முடைய சர்வ நன்மைப் பிரயோசனத்துக்காகவும்தான் மனுஷ உருவெடுத்துப் பிறந்தார். சர்வேசுரன் தம் ஏக குமாரனை நமது மேல் வைத்த அளவற்ற நேச பெருக்கத்தால், நமக்கு அளித்துவிட்டார். ஆகையால், கிறீஸ்துநாதர் நமக்கு முற்றும் சொந்தமானவர். மானிட இருதயங்களைக் காந்தக்கல்போல் கவர்ந்திழுத்துத் தம் வசமாக்க இனிய அழகிய பாலன் ரூபமாய் வந்தார். அவரிடம் அச்சமுறத்தக்கூடிய தொன்றுமே யில்லை. எல்லாம் அருள், எல்லாம் அன்பு, எல்லாந் தயை. அன்பும் அருளும் அவதாரமானாற்போல் தோன்றுகிறார்.

ஓ! திவ்ய பாலகா! அழகு வடிவுள்ள குழந்தாய்! நீ பேச வாயில்லாத பாலகனாய்த் தோன்றினாலும் உன்னிடத்தில் எல்லையும் அளவும் கடந்த ஞானமும் அறிவும் பூரணம் பெற்றிருக்கின்றன. உன் மழலைச் சொல்லால் பேசு; தேவ ஞானத்தை எங்களுக்குப் படிப்பிப்பாயாக. உன் வார்த்தை எங்களுக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கும்.

2. அவர் தம் தோளின்மீது தமது அரசாட்சியின் அடையாளத்தைக் கொண்டிருக்கிறார். இப்பாலன் தாவீது இராசாவின் கோத்திரத்தில் பிறந்தவர். இவரே இராஜாக்களுக்கெல்லாம் மேலான இராஜா. பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் மெய்யான அரசர் இவரே. வல்லமையும் அதிகாரமும் இவரிடத்திலிருந்துதான் வருகின்றது. சலோமோனைப் பார்க்கிலும் ஞானம், அறிவு, விவேகத்தில் சிறந்தவர். அலக்சாண்டர், நப்போலியன் முதலிய சௌரிய வீர அரசர்களைப் பார்க்கிலும் புஜபராக்கிரமத்திலும் ஆண்மையிலும், மனவலிமையிலும் நிகரற்றவர். இவர் தம் அரசாட்சியின் அடையாளத்தைத் தம் தோளின் மீது கொண்டிருக்கிறார் என்றால், இராஜசின்னங்களாகிய செங்கோல், பொன் ஆடை ஆபரணங்கள், முத்து இரத்தின ஆரங்கள், இராஜகிரீடம், சிம்மாசனம் முதலியவைகள் இவரிடம் இல்லாவிட்டாலும், இவைகளால் குறிக்கப்படும் அதிகாரம், வல்லமை, செல்வம், ஞானம், நீதி, ஈகை, இரக்கம், ஜீவகாருண்ணியம், அன்பு, அருள் பராக்கிரமம், மனவலிமை முதலிய உத்தம இராஜகுணங்கள் நிறையப் பெற்றவராய் இருக்கிறார். தமது இராஜாங்கத்தின் பெரும் பாரச்சுமையை மற்றவர்கள் தோள்மீது சுமத்தாமல், தமது சொந்த தோள்மீது தாமே பொறுப்பாய்ச் சுமந்துகொள்கிறார். தாமே அதைச் சுமந்துகொள்வதினால், அவருடைய இராஜாங்கத்துக்கு யாதொரு பழுதுமிராது; பலமும் குன்றாது. என்றென்றைக்கும் பலமுள்ளதாய் நீடித்து நிற்கும். அவருடைய தோளானது பாலனுடையதானாலும், பூலோகத்திலுள்ள சகல இராச்சியங்களைப் பார்க்கிலும் செல்வாக்கிலும்

வரையில் அக்குழந்தைக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் அவர் செய்கிறார். வீட்டின் சுவர்களைப் பலமாக்கி, அவற்றை அழகு செய்கிறார்; தரையில் பிள்ளைக்கு வேண்டிய விளையாட்டுச் சாமான்களைப் பரப்புகிறார்; அவரே ஒவ்வொன்றையும் வெகு சாக்கிரதையாகச் செய்து, செய்தவை நல்லவை யெனத் திருப்தியடைகிறார். தம்மைப்போல் அழகுஞ் சாயலு மமைந்துள்ள தம் சிருஷ்டியாகிய அக்குழந்தையை அவற்றின் மத்தியில் விடுகிறார்; மேற்கூறிய சாமான்களை அதனிடங் கொடுத்து, தம்மிஷ்டப்படி அவற்றிற்கு பேர் கொடுக்கும்படி அக்குழந்தைக்கு முழுச்சுதந்திரங்கொடுக்கிறார்; அவனுக்கு ஒரு துணைவியைக் கொடுக்கிறார்; விளையாடுவதற்குத் துணை வேண்டுவ தவசியமல்லவா? "தனிமையாயிருப்பது மனிதனுக்கு நல்லதல்ல;" கடைசியாய் ஒரு நல்ல தந்தை செய்வதுபோல, ஒருவருக்கு மேல் பலர் கூடியவிடத்தில், தங்களுக்கேனும் பிறர்க்கேனும் தீங்கொன்றும் வாராமலிருப்பதற்காகச் சில நிபந்தனைகளை ஏற்படுத்துகிறார். அவர்கள் ஜன்னலின்மேல் ஏறக்கூடாது; நெருப்போடு விளையாடலாகாது; பெரியோர் துணையின்றி வெளியே போகலாகாது; வேறேதேனும் அவர்கள் செய்யலாம். "சிங்காரத் தோட்டத்தின் எல்லா மரக்கனிகளையும் நீ புசிக்கலாம், ஆனால் நன்மை தின்மையறியும் மரத்தின் கனியைமட்டும் புசிக்காதே. ஏனெனில் நீ என்றைக்கு அதைப்புசிப்பாயோ, அன்றைக்கே நீ சாவுக்குள்ளாவாய்."

ஆனால் குழந்தை யின்னந் தன் தந்தையை யறியவில்லை; அவன் தன்னிஷ்டப்படியே நடக்க விரும்புகிறான், நெருப்போடு விளையாடுகிறான்; ஜன்னலண்டை போய் ஏறுகிறான்; தன் தந்தை சொல்லை மீறி தன் துணைவியுடன் கைகோர்த்துக்கொண்டு வெளியேபோகிறான். "அந்தப் பெண்பிள்ளை அந்த மரத்தின் கனி தின்பதற்குரியதாகவும், கண்களுக்கழகாகவும் பார்ப்பதற் கினிமையாகவும் இருக்கு மெனக் கண்டாள்; அவள் பழத்தை யெடுத்துப்புசித்ததுடன் தன் புருஷனிடமு மொடுத்துப் புசிக்கச் செய்தாள்."

"அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன," தாங்கள் செய்ததைக் கண்டுகொண்டார்கள்; அதினின்று மீளும் வழிதெரியவில்லை; இனிமேல் எல்லாம் மாறிப்போய் முன்னிருந்த ஸ்திதிக்கு வரமுடியாது. அவர்களுடைய தந்தை அங்கு வந்து யாவற்றையும் பார்த்தார்; அவர்களைவிட மிக்கத் தெளிவாய்ப் பார்த்தார். தங்களுக் கருளிய சந்தோஷ வீடு ஒரு சிறைச்சாலையெனவும், இனி சகலமும் அனுபோகத்தாலறிந்தே தாங்கள் வளரவேண்டும் எனவும், போதுமான அளவு தெரிந்துகொண்டார்கள். வெளியேறத் தாமே தெரிந்து கொண்டமையால், அவர்கள் அவ்விடத்தைவிட் டகலவேண்டியவர்களாயினர். தாமே அறியவேண்டுமென ஆசித்தபடியால், அப்படியே செய்ய அவர்களுக்குத்தர வளிக்கப்படவேண்டியதே. அவர் உண்டாக்கிய நல்ல பொருள்களெல்லாம் அங்கேயே இருக்கவேண்டியவைகளே; ஆனால் இனிமேல் மனிதன் அவற்றைக் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டியவனானான். தானெடுக்கப்பட்டவிடமாகிய பூமியை யுழுது பயிரிடும்படியாய், சந்தோஷம் நிறைந்த சிங்கார தோப்பினின்றும் ஆண்டவராகிய சர்வேசுரன் அவனை வெளியே அனுப்பிவிட்டார்." இப்படியாக தேவபிதா தம்முடைய அகம்பாவம் கொண்ட பிள்ளையை நீதியோடு கண்டித்தார்; ஆனால் அந்நீதி யன்பினாலுண்டானதும், இரக்கத்தால் தணிவடைந்ததுமாம்.

மனிதன் வெளியே கிளம்பி வேலை செய்யப் போனான்; அங்கும் அவனுடைய அகம்பாவம் அவனை விட்டதில்லை. அவனுடைய துணைவனே அவனுக் கெதிரியாயினன். சகோதரன் சகோதரனைக் கொன்றான்; மறுபடியும் தேவபிதா தம்முடைய கரத்தை யுயர்த்தித் தண்டிக்கவேண்டியவராயினர். காயின் என்பவனுடைய சரித்திரத்தைப் படித்தவர்கள், அன்பும் நீதியுங் கலந்த கடவுளின் தன்மையை நன்கறியலாம். அவன் தண்டிக்கப்பட்டான், ஆனால் அளவுடன்றான். முழு தண்டனையும் விதிக்கப்படவில்லை. அவன் தண்டிக்கப்படுவான், ஆனால் தேவபிதா மட்டுமே தண்டனை விதிக்கக்கூடும்; அந்த வேலையை வேறெவரேனும் எடுத்துக் கொண்டால், அவர்களுங் கையோ கேடாம் "காயினைக் கொல்பவர்கள் ஏழு மடங்கு தண்டிக்கப்படுவார்கள்."

S. Selva Raju.

(தொடரும்.)

---

கத்தோலிக்குப் பத்திரிகையில்லாத வீடு கடவுள் சம்பந்தமில்லாத பள்ளிக்கூடத்துக்குச் சரியென்று கிறீஸ்தி அந்தேமற்றிராணியார் சொல்லுகிறார்.



பெருமையிலும் சிங்கார மகத்துவத்திலும் சிறந்தோங்கிய தம்முடைய தேவ இராச்சிய பரிபாலனத்தின் பாரச்சுமையை தானே எவ்வித உதவி ஒத்தாசையையும் தேடாமல் சுமக்கச் சத்தியுள்ளதா யிருக்கின்றது. தம் இராச்சியத்தின் அடையாளமும், தமது ராஜ மகிமையின் செங்கோலுமாகிய சிலுவை மரத்தைத் தாமே தமது தோளின்மீது சுமந்தாரல்லவா?

3. அவர் அதிசயர் எனவும், புத்திப் பிரபோதகர் எனவும், வல்லப தேவர் எனவும், எதிர்காலப் பிதா எனவும், சமாதானப் பிரபு எனவும் அழைக்கப்படுவர்:— இத் திவ்ய பாலனுடைய அரிய இந்நாமங்களைச் சற்று விளக்கிக்காட்டுவோம்.

இந்நாமங்களால் மேஸியாவின் சுபாவம், தன்மை, குணங்கள், இலட்சணங்கள் காண்பிக்கப்படுகின்றன. அவர் அதிசயர்: அற்புதர்: சகல அதிசயங்களையும் இயல்பிலே கொண்டவர். கன்னிமரியாயின் உதரத்தில் அதிசயமாய் உற்பவித்தார். அவளுடைய கன்னிமைக்கு அற்பப் பழுதுமின்றி அதிசயமாய் ஜனனமானார். அதிசயமாய்ச் சீவித்தார். அதிசய அபூர்வப் புண்ணியங்களைச் செய்தார். அதிசயமாய்ப் பிரசங்கித்தார். அதிசயமாய்ப் பாடுபட்டார். அதிசயமாய் மரித்தார். அதிசயமாய் உயிர்த்தெழுந்தார். அதிசயமாய்ப் பரலோகத்துக்கு ஆரோகணமானார். அதிசயங்களையும் புதுமைகளையும் செய்வது அவருடைய சுபாவ இலட்சணம். சர்வ வல்லப சர்வேசுரன் சகல அதிசயங்களையும் சம்பூரணமாய் அவரிடம் விளங்கப்பண்ணினார்.

4. அவர் புத்திப்பிரபோதகர்: அதிசயராகிய அவர் சகல மனிதருக்கும் நல்லாலோசனை புகட்ட வல்லவர். அவர் மேலான பரம்ஞான ஆலோசனைகளைச் சகலருக்கும் தெளிவாய் மாதுரியமாய் வாக்கு வல்லமையோடும், வாய்ச்சாலக இனியமையோடும் போதிக்கவல்லவர். அஞ்ஞானக்குருட்டாட்டத்தில், அந்தகாரப் பாவப் படுகுழியில், துன்ப சாகரத்தில், மரண நிழலில் தயங்கித்தவித்துக்கிடக்கும் பாவிகளாகிய மனிதருக்கு, மெய்யான பேரின்ப பாக்கியத்துக்கும் நித்திய ஜீவியத்துக்கும் போகும் நேர்வழியைத் தயவாய்க் காண்பிக்கவும், நமது ஜன்ம சத்துருவாகிய பசாசின் கொடிய கபட தந்திர சோதனை மாய்கையில் அகப்படாதபடி தப்பித்துக்கொள்ள தேவ ஞான போதகங்களை உரைக்கவும், வரம்பில்லா ஞானமும் அருளும் நிறைந்தவர் அவர்.

5. அவர் வல்லப தேவர்: இந்நாமம் மனித சுபாவமுள்ள அப்பாலனுக்கு மெய்யான தேவத்துவமும் உண்டென்று தெளிவாய்க் கூறுகிறது. ஆகையால, உலக இரட்சகராய் வந்த மேஸியாஸ் என்பவர் மெய்யான மனிதனும் மெய்யான தேவனுமாய் இருக்கிறார்.

வானத்தையும் பூமியையும் அவைகளில் உள்ள சமஸ்த சிருஷ்டிகளையும் உண்டாக்கிய சர்வ வல்லப சர்வேசுரன் அவர்தான். அவர் ஆதியுமந்தமும் அற்றவர்; சர்வத்துக்கும் அதிபதிகர்த்தன்; அளவற்ற வல்லமை, வரம்பிலா ஞானம், கரைகாணாத கிருபாகடாக்ஷம், அன்பு, நீதி, அருள் முதலிய தேவ இலக்ஷணங்கள் அளவு எல்லை எல்லாம் கடந்து சம்பூரணமாய் அவரிடத்தில்நிறைந்திருக்கின்றனவென்று சொல்லவேண்டும். "சீரியவுலக மூன்றுஞ் செய்தளித் தழிப்பவல்லான் நேரிய வெதிரொப்பின்றி நீத்த வோர் கடவுள் அவர்."

(தேம்பாவணி.)

6. அவர் எதிர்காலப்பிதா: நமக்காகப் பிறந்த அப்பாலன் தேவனும், சர்வ வல்லப தேவனும் இருப்பதினால், தம்முடைய தேவ இராச்சியத்தின் சத்துருக்களாகிய பசாசுக்களை முற்றும் ஜெயித்தடக்க வல்லவராய் இருக்கிறார்.

எதிர்காலப் பிதா என்றால்: நித்தியத்தை உடைய, அல்லது நித்தியத்தை அநுபவிக்கிற பிதா அல்ல, ஆனால் சதாகாலத்திலும், என்றென்றைக்கும் நமக்குத் தந்தையாய், நல்ல தகப்பனாய் இருப்பவர் என்றும், தம்முடையவர்களுக்கு எந்தக் காலத்திலும் தந்தையின் மதுரமான நேசபட்சத்தையும், அன்பின் உருக்கத்தையும் தயாள இரக்கத்தையும் காண்பிக்கிறவர் என்றும் அருத்தம் கொள்ளும.

வல்லப தேவர் என்னும் நாமத்தால், தேவத்துவத்தின் உன்னதமகத்துவம் விளங்குகிறதுபோல், எதிர்காலப் பிதா என்னும் நாமத்தால், மனுக்குலத்தின் மட்டில் அவ

ருக்குள்ள அன்பின் விசாலமும், கரைகாணாத தயாள இரக்கமும் விளங்குகின்றது.

ஆகையால், சர்வவல்லபமும் மட்டில்லாத உருக்க நேசமுமுள்ள ஆண்டவரை நாம் நமது தந்தையாகக் கொண்டிருப்பதினால் அவரை எப்போதும் நாம் பிள்ளைக்குரிய பட்சத்தோடு நேசிக்கவும், நமக்கு வரும் இக்கட்டுத் துன்பங்களில் அவர் மட்டில் நம்முடைய நம்பிக்கையெல்லாம் காட்டவும் கடன்பட்டிருக்கிறோம்.

வல்லப தேவர் என்னும் பெயரால், அவருடைய தேவத்துவத்தின் உன்னத மகத்துவம், அச்சத்தையும் நடுக்கத்தையும் பிரமிப்பையும் நமக்கு உறுத்தி, நம்மைத் தாழ்த்தி, பின்னர் எதிர்காலப் பிதா என்னும் பெயரால், அவருடைய தந்தைக்குரிய அளவில்லாத அன்பின் உருக்க மதுரம் நமது இருதயத்தில் உத்தம நேச பட்சத்தையும் அணை கடந்த நம்பிக்கையையும், இன்பம் பற்றுதலையும் அவர்மட்டில் எழுப்பிவிடுகின்றது.

அவரைச் சர்வவல்லப தேவரென்றும், எதிர்காலப் பிதாவென்றும் அழைப்பதினால், அவர் தமது தெய்வீக வல்லபத்தை, நமக்குத் தந்தையாயிருப்பதிலும் தந்தையைப்போல் எப்போதும் நம்மை உருக்கமாய் நேசிப்பதிலுந்தான், காண்பிக்க விரும்புகிறார் என்று சொல்லத்தகும்.

7. **அவர் சமாதானப் பிரபு:** நமது தந்தையாகிய மேஷியாவுடைய இராச்சியத்தின் பலன்களையெல்லாம் (pax) சமாதானம் என்ற பதத்தால் வேதாகமத்தில் குறிப்பதுண்டு.

பாக்கியம், பேரின்பம், சந்தோஷம் இவைகள்தான் அவ்விராச்சியத்தின் பலன்கள். இவைகளைத்தான் உலக இரட்சகராகிய மேஷியாஸ் என்பவர் பாவத்தினால் சீரழிந்த நிர்ப்பாக்கிய மனுக்குலத்துக்குச் சம்பூரணமாய் அளிக்கவந்தார். ஆகையால் சமாதானப் பிரபு என்னும் திவ்யநாமம் மேஷியாவுக்கு முழுதும் ஏற்ற பெயர்.

இவர் தம் இராச்சியத்தைச் சமாதானத்தில் ஸ்தாபிக்கிறார், சமாதானத்தைப் போதிக்கிறார், சமாதானத்தை அளிக்கிறார். இப்பூலோகத்தில் சமாதானத்தை நிலை நாட்டுவது இவருடைய ஏக அலுவல். சர்வேசுரனுக்கும் மனிதனுக்கும் பாவத்தால் உண்டாகிய பகையை ஒழித்து, சமாதானத்தில் உறவு கட்டுகிறார்.

மனிதர்கள் மத்தியில் இருக்கும் பகை, வர்மம் குரோதத்தையும், இவைகளால் விளையும் கணக்கற்ற கேடுகளையும், தீவினைகளையும் முழுதுமே நீக்கிச் சமாதானத்தை நிலைநிறுத்த மனுவுரு வெடுத்துப் பிறந்தார். அதினிமித்தந்தான் அவர் பிறந்த அவ்விராத்திரியிலேதானே வானலோக தேவதூதர் "உன்னத ஸ்தலத்தில் சர்வேசுரனுக்கு மகிமைப் பிரதாபமும் பூலோகத்தில் நல்ல மனிதருக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது" என்று பாடி வாழ்த்தி ஸ்துதித்தார்கள்.

உலகத்தில் தற்காலம் பலஜாதி ஜனங்கள் பற்றியெரியும் பகையினாலும், பயங்கரமான யுத்தத்தின் நிஷ்டூரங்களினாலும் அலைக்கழிக்கப்பட்டு லக்ஷக்கணக்காய் மடிகிறதினால், இக்காலத்தில்தான் பூலோகத்துக்குச் சமாதானம் அவசரமாய் வேண்டும்.

ஆகையால், சமாதான ராசாவாகிய நமது திவ்ய இரட்சகர், பரிசுத்த புண்ணியாத்துமாக்களுடைய செபதபங்களையும், திருச்சபையின் மன்றாட்டுகளையும் பார்த்து, மனிதர் செய்த பாவாக்கிரமங்களைத் தயவாய்ப் பொறுத்து இராசாக்கள், பிரபுக்களுக்கும், மந்திரிகள் பிரதானிகளுக்கும், பிரஜைகளுக்கும் சாந்த குணத்துக்குரிய ஆலோசனைகளையும் நித்திய சமாதான சிநேக பற்றுதல்களையும் அளித்து, மனிதர்கள் எல்லோரும் திரும்பவும் சிநேக பந்தனத்தினால் ஒருமித்து வாழக் கிருபைசெய்வாராக!

15—12—15.

*S. M.*
*Kovalong.*

---

நமது கத்தோலிக்கு கோவில்களில் சற்பிரசாத ஆண்டவர் வீற்றிருப்பதால், நாம் அந்தப் பக்கமாய்ச் செல்லும்போதெல்லாம் சற்று தலை குனிந்து வணங்குதல் விசுவாச முயற்சியாகும். மேலும் அவ்வணக்கத்துக்கு ஒவ்வொரு விசைக்கும் 300-நாள் பலன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.



## GNANAMANI, III PART.
## ஞானமணி 3-ம் பாகம்.
### 27-ம் அதிகாரம்.

"நீங்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு போடுங்கள் கல்லை என் தலைமேல்."

---

இந்தத் துராதிஷ்டமான விருத்தாந்தம் நடந்த ஒரு மாதத்துக்குப் பின், சலமோன் அப்போதைக்கப்போது இராவேளையில் தன் மாமனார் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வருவான். குழந்தையின் ஞானஸ்நான விஷயமாக நடந்த சங்கதியெல்லாம் மேட்பார் பேச்சைக்கேட்டு நடத்தப்பட்டனவென்று தன் மனைவியுடன் சொல்லி, அதைப் பற்றி வருத்தப்படாதேயென்று சொல்லிவருவான். இதற்குப்பின் சலமோன் நாளெல்லாந்தன் மனைவியுடன் தங்கி குழந்தையை யெடுத்துக் கொஞ்சி முத்தமிடுவதில் காலத்தைச் செலவழிப்பான். சிலவாரத்துக்குப்பின் கொஞ்சங்கொஞ்சமாய்க் குடிக்க ஆரம்பித்தான். இதற்காக அங்கங்கே கடன் வாங்கினான். கடன் கொடுத்தவர்களும் தாங்கள் கொடுத்த பணம் கைக்கு வாராதென்று சந்தேகித்துச் சலமோனை நெருக்கிடை செய்தபடியால், "இதோ தருகிறேன்; அதோ தருகிறேன்" என்று சாக்குப் போக்குச் சொல்லி, அவர்களை யேமாற்றிவந்தான். தனக்கு வழக்கமாய்ப் பணங் கொடுக்கிறவர்களிடம் பணம் பறியாதபடியால், சாராயக் கடைக்காரனைக் கெஞ்சி மன்றாடினதின்மேல் அவனும் அவனுக்குச் சாராயம் வார்த்து, மாதக் கடைசியில் 35 ரூபாய் கொடுத்தால் சரி இல்லாவிட்டால் இனி ஒருபோதும் சாராயம் வார்ப்பதில்லையென்றும், இன்னும் பத்து நாளைக்குள் பணத்தைச் செலுத்தாவிட்டால் கோர்ட்டில் நம்பர் செய்வதாகவும் [illegible]மறுத்தினான். இதைக்கேட்ட சலமோன் [illegible]சஞ் சஞ்சலப்பட்டபோதிலும், [illegible]ய இருக்கும்பிராதைப்பற்றி லக்ஷி[illegible]யல்ல. ஏனெனில், தான் கோர்ட்[illegible]தப்பட்ட காலத்தில் தன் தகப்பனா[illegible] மாமனாராகிலும் வாதிக்குத் தான் செலுத்த வேண்டிய பணத்தை வட்டியுடன் பூர்த்தியாய்ச் செலுத்தி விடுவார்கள் என்று பூரண நம்பிக்கை கொண்டிருந்தான். ஆனால், தான் கடனைச் செலுத்துமட்டும் சாராயக் கடைக்காரன் தனக்குச் சாராயம் வார்ப்பதில்லையென்றதால், சொல்லி முடியாத துக்கங்கொண்டு, ஒரு கள்ளுக்கடைக்குப் போய்க் கள் குடிக்கத் தொடங்கினபோதிலும் அதில் அவன் திருப்தி கொண்டவனல்ல.

ஒருநாள் சாயந்திரம் தன் மாமனார் வீட்டுக்குப் போனபோது, அவ்விடத்தில் தன் மனைவி தனிமையாயிருந்து, குழந்தைக்குப் பாலூட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு அவளுடன் பக்ஷமாய்ப் பேசி, குழந்தையைக் கையில் வாங்கி, முத்தமிட்டுக் கொஞ்சிக்கொண்டிருந்தான். குழந்தை தூக்கமயக்கமாய் இருப்பதைக்கண்ட அபிராமி குழந்தையை வாங்கி, தொட்டிலில் படுக்கப் போட்டு, கொஞ்சநேரம் தன் கணவனுடன் பேசியபின், கடைக்குப்போய் வருகிறேன் என்று சொல்லி வெளியே புறப்பட்டாள். அந்நேரத்தில் சாராயக்காரனுக்குத் தான் செலுத்த வேண்டிய பணத்தின் ஞாபகம் சலமோனுக்கு வந்து, துணிமணி யகப்படுமாவென்று வீட்டில் நாலாபக்கமும் தேடிப்பார்த்தும், ஒன்றும் கண்ணுக்குத் தென்படவில்லை. சிற்றறையின் பூட்டுக்குத் தன் கையிலிருந்த கொத்துச் சாவிகளில் எந்தச் சாவியும் பிடிக்காததைக் கண்டு, மனத்துயரங்கொண்டு, பல யோசனைகளைச் செய்துகொண்டிருக்கையில் சடுதியில் குழந்தையின் ஞாபகம் அவனுக்கு உண்டாகி, தொட்டிலில் தூங்கும் குழந்தையின் கையிலிருந்த பொன் காப்பு, கொலுசு முதலியவற்றைப் பலவந்தமாய்க் கழற்றும்போது குழந்தை அழத் தொடங்கிற்று. அதன் கழுத்தில் போடப்பட்டிருந்த பொன் சுருபத்தையும் கழற்றிக்கொண்டு வெளியே புறப்பட்டான். தன் குழந்தையின் கழுத்திலுள்ள நகையைக் கழற்றிக்கொண்டு வீட்டைவிட்டுச் சற்றுதூரம் போகும்போது, அவனுடைய மனைவி அபிராமி அவனுக்கு எதிர்ப்பட்டு "நீங்கள் வீட்டில இருப்பீர்களென்று வீட்டைப் பூட்டாமல் கடைக்குப்போனேன்; நான் வீட்டுக்குத் திரும்புமட்டும் வீட்டில் இருக்கக்கூடாதா?" என்று சொல்லிக்கொண்டு துரிதமாய் வீடுபோய்ச் சேர்ந்து, அங்கு குழந்தை அழுகிற சத்தத்தைக் கேட்டு, தொட்டிலை ஊஞ்சலாட்டி இனிய தொனியுடன் பாடின சற்று நேரத்துக்குள்

குழந்தை நித்திரை செய்தது. அபிராமியும் தன் வீட்டு வேலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

சலமோன் தன் குழந்தையின் நகையைத் திருடிக்கொண்டு நேராய்ச் சென்றான் சாராயக் கடைக்கு. சாராயக்கடைக்காரன் சலமோனைப் பார்த்தக்ஷணமே கோபத்தால் பொங்கி, "என்ன ஓய், பெரிய போக்கியனாயிருக்கிறாய்? கடந்த 25 நாளாய்த் தலை மறைவாய்த் திரிகிறாய்? நாளைக்கே உனக்கு லாயர் நோட்டிஸ் கொடுக்கிறதற்கு இருந்தேன்" என்றான் "அதற்கு என்ன ஐயா, அவ்வளவு ஆத்திரம்! ஆக்கப் பொறுத்தவர் ஆறப்பொறுக்கக் கூடாதா? நான் யோக்கியனோ அயோக்கியனோ சீக்கிரத்தில் கண்டறிவீர்; பயப்படவேண்டாம், உமக்குச் செலுத்தவேண்டிய பணத் தொகையை வைத்திருக்கிறேன்" என்று சலமோன் சொன்னதைக் கேட்ட கடைக்காரன், "அப்படியா!" என்று, கடைக்கு வந்திருந்தவர்களை விசாரித்து கூடியசீக்கிரத்தில் அவர்களை அனுப்பிவிட்டுச் சலமோன் பக்கமாய்த் திரும்பினான்.

உடனே சலமோன் தான் கொண்டுவந்திருந்த நகைகளைக் கடைக்காரன் கையில் கொடுத்தான்.

பவுல் போதகர் 80 ரூபாய் செலவு செய்து பொன்னால் காப்புங் கொலுசும் செய்வித்துத் தமது பேரனுக்குப் போட்டிருந்தார், விஸ்வாசநாயகர் 12 ரூபாய்க்கு ஒரு பொன் குருஸ் சுரூபம் சுவாமியார் மூலமாய்ச் சீமையிலிருந்து தருவித்து, அபிராமியுடைய குழந்தையின் கழுத்தில் தரிப்பித்திருந்தார்.

இந்தப் பொன் நகைகளைக் கண்டவுடனே, கடைக்காரன் சந்தோஷித்து மகிழ்ந்து, நகையை வீட்டுக்குள் கொண்டுபோய் உரைக்கல்லில் உரைத்துப் பார்த்தபின், இடைபார்த்து, சலமோனை நோக்கி: எவ்வளவுக்குக் கொடுக்கிறாயப்பா? என்றான், "சலமோன் நீங்கள் எவ்வளவுக்கு வைத்துக்கொண்டாலும் சரி" என்றதின்மேல் "50 ரூபாய்க்கு வைத்துக்கொள்ளுகிறதா?" என்று கடைக்காரன் கேட்டான். "அப்படியே ஆகட்டும்" என்று சலமோன் சொல்லவே, 35 ரூபாயைக் கடனுக்கு வைத்துக்கொண்டு மீதி 15 ரூபாயைச் சலமோன் கையில் கொடுத்தான். அப்போதே ஒரு ரூபாய்க்குப் பூர்த்தியாய்க் குடித்துவிட்டு, 14 ரூபாயை மடியில் சொருகிக்கொண்டு அங்கேயே படுத்துத் தூங்கினான். அன்று சாயந்திரம் 7 மணிக்கு மயக்கந்தெளிந்து எழுந்திருந்து, மடியில் சொருகியிருந்த பணத்தைப் பார்த்தபோது, அதைக் காணாதபடியால் சற்றேனும் அதைப்பற்றி கவலைப்படாது சிந்தையற்றிருந்தான். உப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தியைப்போல் காணாமற்போன பணத்தைப்பற்றி யாரையும் விசாரித்தவனுமல்ல. மறுபடியும் கடனாக 4 திராம் குடித்துவிட்டுத் தட்டுத்தடுமாறி வீதி வழியாய் நடந்து பித்தனைப்போல் உளறிக்கொண்டும், கழுதைபோல பாடிக்கொண்டும் வீடுபோய்ச் சேர்ந்தான்.

அன்று சாயந்திரம் ஈசாக் உபதேசியார் வீட்டுக்குப்போய்த் தொட்டிலில் படுத்திருந்த குழந்தையைத் தூக்கி முத்தமிட்டபோது, அதன் கைகாலும் கழுத்தும் வெறுமையாய் இருப்பதைக்கண்டு அதிசயித்து, தன் மகளைப் பார்த்து, "குழந்தையின் காப்பு கொலுசை எடுத்துப் பத்திரப்படுத்தினாயோ அம்மா?" என்றார். "நான் எங்கே எடுத்தேன்?" என்று தொட்டிலண்டை ஓடி வந்தாள் அபிராமி.

ஈசாக் உபதேசியார் அபிராமியைப் பார்த்து, "சலமோன் இன்றைக்கு இங்கே வந்தானா?" என்று வினவ, "ஆம்," என்று நடந்த சங்கதியை அபிராமி வெளிப்படுத்தினாள்.

உடனே ஈசாக் உபதேசியார் பவுல் போதகரையும் விஸ்வாச நாயகரையும் வரவழைத்து நடந்த சங்கதியை அவர்களுக்கு வெளியிட்டு, அவனே திருடியிருக்கவேண்டுமென்று நிச்சயித்து, இதைப்பற்றி போலீசாருக்குத் தெரியப்படுத்தலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது, சலமோன் தட்டுத்தடுமாறி அசைந்தாடிக்கொண்டு 'அப்பப்பா, இன்றைக்கு எவ்வளவு பசி! வெயிலின் கொடுமையோ? குளிரின் உஷ்ணமோ? தெரியவில்லை; என்ன குழம்பு அபிராமி? இன்றைக்கு என்ன? பூமி அதிர்ச்சியா? சூரியகிராணமா? ஆ! ஆ!! (என்று, குடிவெறியின்மேல் சிரித்துக்கொண்டுப் பொத்தென்று கீழே விழுந்து) என்ன? வீடெல்லாம் தலைகீழாய் சாய்கிறது! என்னடா இது? பம்பரம் ஆடுவதுபோல் ஆடுகிறதே! ஆ! ஆ! ஆ!! என்று பித்துப் பிடித்தவனைப்போல் உளறி சிரித்துக் கொண்டு தலையைக் கீழே சாய்த்துப் படுத்துக் குறட்டையிடத் துவக்கினான்.

அங்கு நின்றுகொண்டிருந்தவர்கள் இப்பரிதாபத்துக்குரிய காக்ஷியைக் கண்டு [illegible]



ந்து, மௌனமாயிருக்கையில், விஸ்வாச நாயகர் சொல்லுவார்: "குடி வெறியால் மதிமயங்கிக் கிடக்கும் இந்த நிற்பாக்கியனை நகையைப்பற்றி வினவுவதால் பயனில்லை. நாளைக்குத்தான் இதைப் பற்றி அவனை விசாரிக்கவேண்டியதென்றார்." "நகை போனதைப்பற்றிப் போலீசாருக்குத் தெரியப்படுத்தக்கூடாதோ இப்போது?" என்று பவுல் போதகர் சொல்லும்போது, "என்ன பிரயோசனம்? நடந்த சங்கதியைப்பற்றி யோசிக்கும்போது இவன்தான் கைதியாகி, போலீஸ் ஸ்டேஷனில் அடைபடுவான். கிணறு வெட்டப் போய் பூதம் கண்டவன் பாடாகும் நமது பாடும்!" என்று ஈசாக் உபதேசியார் சொன்னார். "எதற்கும் நாளை காலை வரைக்கும் நிதானிப்பது நலம்" என்று விஸ்வாச நாயகர் சொல்லி எழுந்திருந்தார். மறுநாள் காலை நாயகரும் போதகரும் தமது வீட்டுக்கு வரும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார் ஈசாக் உபதேசியார்.

மறுநாள் காலை ஏழுமணிமட்டும் சலமோன் நித்திரை செய்து, எழுந்து, முகங் கழுவி, காலை போசனம் செய்து கொண்டிருக்கும்பொழுது, விஸ்வாச நாயகரும் பவுல் போதகரும் அவ்விடம் வந்து ஈசாக் உபதேசியாருடன் வெளித்திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

சலமோன் போசனஞ்செய்து வெளியே போகிறதற்கு தயாராயிருக்கும்போது, விஸ்வாச நாயகர் வீட்டில் பிரவேசித்து, அவனைப் பார்த்து, "சலமோன், எப்படியிருக்கிறாய்?" என்று அன்புடன் விசாரித்தார்.

சல.—சுகமாய்த்தான் இருக்கிறேன் சார்.

விஸ்.—குழந்தை யெப்படி யிருக்கிறது?

சல.—அதற்கு என்ன கேடு!

விஸ்.—குழந்தையைப் பார்த்தாயா?

சல.—அவனை நான் பார்த்தாலும் பாரா விட்டாலும் உங்களுக் கென்ன?

விஸ்.—ஒன்றுமில்லை; நேற்றுகூட குழந்தையை பார்க்கவில்லையோ?

சல.—என்ன சார், விடுகதை போடுகிறீர் எனக்கு?

விஸ்.—குழந்தை கைகாலில் போட்டிருந்த காப்பு கொலுசு முதலியவற்றை நேற்று பார்த்தாயா?

சல.—நான் என்ன, திருடனா சார்?

பவுல் போ.—என்னடா? உன்னை அவர் திருடன் என்றாரா? குழந்தை கைகாலில் போட்டிருந்த காப்பு கொலுசைப் பார்த்தாயா என்று கேட்டதற்கு நீ கொடுக்கும் மறுமொழி இது தானா?

சல.—குழந்தைக்குக் காபந்து நான்தானா?

பவு.—உன்னை அதெல்லாங் கேட்கவில்லை, காப்பையும் கொலுசையும் பார்த்தாயா இல்லையா நேற்றையத்தினம்?

சல.—நான் நேற்று முழுதும் வீட்டுக்கு வரவே இல்லை.

அபி.-நேற்று சாயந்திரம் வீட்டுக்கு வந்து, குழந்தையை என் கையிலிருந்து வாங்கவில்லையா?

சல.—எல்லாரும் கமிட்டிக்கூடி யென்னைத் திருடனாக்கப் பார்க்கிறீர்களோ?

பவு.—உன்னை ஒருவரும் திருடன் என்னவில்லை; நேற்றையத்தினம் நீ குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு இருந்தாயா இல்லையா?

சல.—என் கண்ணானை, அப்பானை (என்று தனக்குத் தெரிந்த ஆணையெல்லாம் இட்டு), கடந்த இரண்டு மூன்று நாளாய் நான் வீட்டுக்கு வரவே இல்லை (யென்று எகர அடித்தான்.)

விஸ்.—குழந்தை கைகாலில் போட்டிருந்த நகையெல்லாம் காணாமல் போயிற்றே!

சல.—அதற்கு நான் என்ன செய்கிறது? யார் திருடிக்கொண்டு போனார்களோ?

அபி.—நேற்று சாயந்திரம் குழந்தையை என் கையிலிருந்து வாங்கி வெகுநேரம் அதைக் கொஞ்சிக்கொண்டிருக்கும்போது, நான் கடைக்குப்போய் வருகிறதற்குள்ளாக வீட்டிலிருந்து நீர் வெளிப்பட்டபோது என்ன சொன்னேன்?

சல.—நீ யென்ன சொன்னாயோ?

அபி.—இப்படி அபாண்டமாய்ப் பொய் சொல்லுகிறவர்களுடன் என்ன செய்கிறது?

சல.-(கண்ணிரண்டையும் உருட்டி வெறிக்க அபிராமியைப் பார்த்துத் தலையை அசைத்து) நீ கூட அவர்களுடன் சேர்ந்து கொண்டாயோ? நீங்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு, போடுங்கள் கல்லை யென் தலைமேல்.

ஈசா.—உன்மேல் கல்லைப்போட எங்களுக்கு பைத்தியமா? நீ நேற்று வெளியே போனபின்

நானும் என் மகளுந் தவிர ஒருவரும் இந்த வீட்டுக்கு வரவில்லை; உன் கையில் குழந்தையை வைத்துக்கொண்டிருந்தபோது அதன் கைகாலிலிருந்த நகை எப்படிக் காணமற் போயிற்று?

சல.—நான் அதைக் கழற்றும்போது யாராவது பார்த்திருந்தால் வரட்டும் முன்னுக்குச் சாக்ஷி சொல்ல. நான் குழந்தையைச் சற்று நேரங் கையில் வைத்துக்கொண்டிருந்து பிறகு தொட்டிலில் போட்டேனே ஒழிய அந்த நகையை நான் தொடவே இல்லை.

பவு.—நீ நேற்று வீட்டுக்கு வரவுமில்லை, குழந்தையைப் பார்க்கவுமில்லை என்றாயே!

சல.—ஆமா, நீங்கள் என்னை கிராஸ்போட்டு துன்பப்படுத்தினதால் எனக்கு குழப்பமுண்டாகி ஒன்றுக்கு மற்றொன்றைச் சொல்லிவிட்டேன். நீங்கள் நாலுபேர், நான் ஒருவன்!

விஸ்.—எத்தனைபேர் இருந்தாலும் உனக்கென்ன? இங்கே என்ன, கைபிடி சண்டையா? நியாயந்தானே பேசுகிறோம். நேற்று வீட்டுக்கு வரவே இல்லையென்றாய்; பிறகு வீட்டுக்கு வந்ததாகவும் குழந்தையை தொட்டிலில் போட்டதாகவும் ஒத்துக்கொள்ளுகிறாய். நீ நகையை எடுத்திருந்தால் சொல்லிவிடு, இல்லாவிட்டால் போலீசாருக்குத் தெரிவிக்கும்படி நேரிடும்.

சல.—(முகத்தில் சற்று பயங் காணப்பட்டு) நான் எடுக்கவில்லை சார். முன்னொரு விசை நான் வீட்டிலிருந்த துணிமணியை எடுத்ததாகக் காயரா செய்தார்கள்; இன்னொரு விசை அபிராமி கழுத்தில் கைபோட்டதாக வீணாய்த் தூற்றினார்கள்; இப்பொழுது குழந்தைக்குப் போட்டிருந்த நகையை திருடினதாகச் சொல்லுகிறார்கள். இன்னம் என்னென்ன அபாண்டத்தை யென்மேல் போடப் போகிறீர்களோ தெரியாது!

அபி.—ஏன்? துணிமணியை மூட்டைக் கட்டிக்கொண்டு எழுந்திருந்தபோது, அது கைதவறி கீழேவிழுந்த சமயத்தில், "அபிராமீ, யென் பிழையை மன்னித்துக்கொள்; இனி அப்படிச் செய்யேன்; என் தோழருடைய துர்ப்போதனையால் செய்தேன்" என்று சொல்லவில்லையா?

ஈசா.—அபிராமி கழுத்தில் நீ கைபோட்டு நகையை அவிழ்த்ததைப்பற்றி என்னிடத்தில் நீயென்ன சொன்னாய்?

சல.—என்ன சொன்னேனோ?

ஈசா.—"இந்தத் தப்பிதத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள், இனி யிப்படிச்செய்யேன்" என்னவில்லையோ?

சல.—(சற்று நேரம் பேசாமல் மௌனமாயிருந்து) நான் ஒருத்தன். நீங்கள் நாலுபேர்; என்ன சொன்னாலும் சொல்லுங்கள்.

விஸ்.—அது இருக்கட்டும நகையைப்பற்றியென்ன?

சல.—(சத்தியத்தின்மேல் சத்தியம் செய்து) நீங்கள் என்ன செய்தாலும் செய்யுங்கள். நகைபோனபோக்கு எனக்குத்தெரியாது (என்று எழுந்து வெளியே போனான் சலமோன்.)

---

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

---

### தொகைப்பட வரும் மேலான ஞானவாசகம்.

---

### ஒன்பதென்னு மிலக்கத்தில்.

(முன் தொடர்ச்சி)

1-வது—நாம் நமஸ்கரித்து வேண்டிக்கொள்ள வேண்டிய வானோர் கணங்கள் ஒன்பது. அவையாவன: பத்திச்சுவாலகர் (கடவுளைக்குறித்த பத்தியினாலே சுவாலிக்கிறவர்கள்,) ஞானாதிக்கர், (கடவுளைக்குறித்த ஞானத்தில் ஆதிக்கம்பெற்றவர்கள்,) பத்திராசனர், (கடவுளெழுந்தருளியிருக்கும் தேவ சிங்காசனத்தைப் புகழ்ந்திருப்பவர்கள். இவர் முதலாம் அர்ச்சிய பிரபுத்துவ முடையோராம்,) நாதகிருத்தியர் (நாதனுடைய கிருத்தியத்தை அவனருளாற் புரிபவர்,) சத்துவகர், (கடவுளருளாற் பற்பல அற்புதங்களைச் செய்யுஞ் சத்துவம் பெற்றவர்ககள், சத்திகரென்றுமாம்,) பலவத்தர், (கடவுள் திருவுளப்படியெய்துங் கருமங்கட்கு வருமிடையூற்றையவனருளாற்றடுக்கும் பலாத்காரம் பெற்றவர்கள். இவரிரண்டாம் அர்ச்சியபிரபுத்துவ முடையோராம்,) பிராதமிகர் (கடவுட்டிருவுளப்படியே இராச்சிய சம்பந்தமான சாதாரண நன்மைகளை நடத்துந் தலைமைப்பெற்றவர்கள்,) அதிதூதர் (அதிசப்பிரதான விசேஷங்களை உலகத்திலறிவிக்கத் தாமைதியாக வருபவர்கள்,) தூதர் (மனிதர் பிறந்த கண முதலாகத் தனித்தனியே யவரவரைப் பாதுகாத்து நன்னெறியினடத்தி மற்றும் பிரதான விசேஷங்கட் கனுப்பப்படுபவர். இவர் மூன்று மர்ச்சிய பிரபுத்துவ முடையோராம்) அர்ச்சிய பிரபுத்துவத்திற்கு அதீச்சுர பதவி யென்பாருமுளர்.

2-வது—பிறர் பாவத்திலவிழக் காரணமா யிருக்கும்வழி ஒன்பது. அவையாவன: பிறருக்குத்துர்ப்புத்தி சொல்லுதல், பாவஞ்செய்யக் கட்டளையிடுதல், அதற்குச் சம்மதித்தல், அதற்குச் சுறுசுறுப்பு வருத்துதல், அதைப்புகழ்தல், அதைவெளிப்படுத்த வேண்டியபோது மறைத்தல், அதற்கு உதவியாயிருத்தல், அதற்கு மவுனமாயிருத்தல், அதைக்காப்பாற்றல் இவைகளேயாம்.

3-வது.—பிச்சைகொடுக்குங் கிரமங்களொன்பது. அவையாவன: நீதியுள்ளதாய்ப் பிறர்சொத்தைக் கொண்டல்ல, தன் சொந்த சொத்தைக் கொண்டுமாத்திரந் தருமஞ் செய்தல், அடக்கமுள்ளதாய்க் கொடுக்க வேண்டியவர்களுக்கு மாத்திரங் கொடுக்கவும், அவர்கள் எல்லோருக்குங் கொஞ்சங் கொஞ்ச மகப்படவும் பிரயாசைப்படுதல், தாழ்ச்சியுள்ளதாய்த் தருமத்தைப் பிரபலியப் படுத்தாமல் கூடுமானவரையி லந்தரங்கத்திற் செய்தல், தாராளமாய் தனது அந்தஸ்துக்குத் தக்காப்போலே கொடுத்தல், கெடுவின்றி கொடுக்கக் கூடுமானதை நாளைக்காகட்டும்பின்னைக்காகட்டு மென்னாமை யுடனே கொடுத்தல், சிடுசிடென்னாமல் மனப் பூர்த்தியாய்ச் சந்தோஷமாய்க் கொடுத்தல், தயவாய்த் தான் கொடுக்குங் கொஞ்சகாரியத்தை முதலா வெளியவர்களை நிந்திக்காமல் இரக்கத்தால் கொடுத்தல், பத்தியுள்ளதா யெளியவர்கள் பிச்சைவாங்குந் தருணத்தில் வேதசத்தியத்தை யுணரல் பாவசங்கீர்த்தனம் பண்ணல் பூசைகாணல் முதலான அவர்கள் ஞானக்கடமைகளைச்செய்ய அவர்களைத் தூண்டல், நீடித்ததாய் ஒரு நாளைக்குக் கொடுத்துப் பின்னில்லை யென்னாமை இவைகளேயாம்.

4-வது.—ஆங்காரத்தினுடையாளமொன்பது. அவையாவன: தானிருப்பதைப் பார்க்கத் தன்னைக் கனமாயெண்ணுதல், தான்தெய்வத்தாலடைந்த வரங்களைத் தெய்வத்துக்குச் சேர்க்காமல் தன்னதென்றெண்ணுதல், மற்றவர்களால்புகழப்பட ஆசிதல், தானகொண்ட நிர்மானங்களில் பிடிவாதம பண்ணுதல், பிறரை நிந்தித்தல், தனக்கில்லாதகாரியங்களை யுண்டென்று நம்புதல், மகிமையில்லாதகாரியங்களில் மகிமை கொள்ளுதல், தன்னிடத்திருக்கப்பட்ட நன்மைகள் தன் சொந்தப் பலத்தினால் வந்ததென்றெண்ணுதல், பெரியோருக்குக் கீழ்ப்படிய மனதில்லா திருத்தல் இவைகளேயாம்.

### பத்தென்னு மிலக்கத்தில்.

1-வது.—சர்வேஸ்வரன் நமக்கருளிச் செய்த வேதகற்பனைகள் பத்து. அவையாவன: உனக்குக்கர்த்தாவான சர்வேஸ்வரன் நாமே, நமக்கு முன்பாக வேறே சர்வேஸ்வரன் உனக்கில்லாதே போவதாக, சர்வேஸ்வரனுடைய திருநாமத்தை வியர்த்தமாகச் சுவிகரியா திருப்பாயாக, சர்வேஸ்வரனுடைய திருநாட்களை ஆசரிக்கத்தக்கதாக நினைப்பாயாக, பிதாவையு மாதாவையுஞ் சங்கித்திருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, மோகம் அசுமியா கமனம் பண்ணா திருப்பாயாக, களவாணா திருப்பாயாக, பொய்ச்சாக்ஷி சொல்லாதிருப்பாயாக, பரதாரத்தை யபேக்ஷியாதிருப்பாயாக, பரருடைமையை அபேக்ஷியா திருப்பாயாக இவைகளேயாம்.

### பதினோரா மிலக்கத்தில்.

1-வது.—ஆங்காரத்தின் பிள்ளைகள் பதினொன்று. அவையாவன: தன்பலத்தைக் கடந்த காரியத்தைச் செய்யத் துணிவு கொள்ளுதல், கிரமமற்ற வகையாய் மகிமையை விரும்புதல், வீண்சிலாக்கியங் கொண்டிருத்தல், கீழ்ப்படியாதிருத்தல், தன்னைப்பெருமை பாராட்டிப்பேசல், கள்ளப்பத்தியா யிருத்தல், வாதாடல், முரட்டுத்தனம் பண்ணல், சண்டை பிடித்தல், மற்றவர்களைவிட நூதனமான வகையாய் நடத்தல், தன்னுள்ளத்தில் கர்வங்கொள்ளுதல் இவைகளேயாம்.

பன்னிரேன்டேன்னு மிலக்கத்தில்.

1-வது.--பெற்றுக்கொள்ளவேண்டிய இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேஸ்வரனுடைய ஞானக்கனிகள் பன்னிரண்டு. அவையாவன : பிறசிநேகம், ஞானசந்தோஷம் சமாதானம், பொறுமை, தயை, நன்மைத்தனம், ஒறுப்பு, சாந்தகுணம், விசுவாசம் மரியாதை, நிக்கிரகம், கற்பு இவைகளேயாம்.

2-வது.-துறவறத்துக்கடுத்த அகண்டஞானபூரணம்பன்னிரண்டு. அவையாவன: நீ பூரணப் பொருளாகிய தெய்வத்தினுள்ளேபுகுந்து உல்லாசிக்கவேணுமானுல்ஒரு காரியத்திலாகிலும் ஆசைவையாதே, பரமஞானத்தில் பிரவேசம்பண்ணி அவரோடு வாழவேணுமானுல் உன்னுத்தும சரீர தத்துவங்களாகிய உள்ளிந்திரியங்கள் வெளியிந்திரியங்கள் எல்லாம் அவரிடத்திற்சார்ந்து சுவறிப்போகக்கடவது, ஆனந்தபூர்த்தியாகிய சர்வேஸ்வரனை நீயனுபவிக்கவேணுமானுல்பூமியிலொன்றையு மனுபோகம்பண்ண நினையாதே; பரிபூரண ஆனந்தமாகிய பரமதேவனுடைய பாதாரவிந்தம் உனக் ககப்படவேணுமானுல் பற்றுக ளற்று ஒரு காரியத்தையுஞ் சிந்தை செய்யாதிருப்பாயாக, பரஞ்சோதி சமுத்திரமுமாய் தெவிட்டா வமுதமுமாய் இந்திரியங்களுக்கெட்டாதவருமாகிய சுவாமியுடைய திருவடி யடையவேணுமானுல் வானவொளி தங்கி மனுக்குலத்துக்கு உருசிதட்டாமல் மங்கின விசுவாசத்தின் பாதையிற் கெட்டியாய் நடக்கவேண்டும், உன் புத்திக்கடங்காத ஆனந்த சோதிப் பிரகாசத்தை நீ தழுவி யறிந்து அனுபோகம் பண்ணவேணுமனுல் நீ அறியக்கூடாத காரியங்களை அறியவேணு மென்கிற ஆசையைவிட்டு வேத முன்னைக் கொண்டுபோகும் பாதையில் எல்லாம் அன்போடு கெட்டியாய் நடப்பாயாக. ஆனந்த சயஞ்சீவியாகிய தேவனுடைய பரமானந்தப் பரிமளம் வீசும் அரண்மனையிற் பிரவேசம் பண்ணவேணுமானுல் இந்திரியங்களுக்கும் ஆத்துமத் தத்துவங்களுக்கும் தட்டுப்படும் பூமியின் பொருட்கள் பேரில் ஆசை வைக்காமல் வெறுங்கையனுய்க் கொடைதரும் மெய்யனை நாடிப் போவாயாக, நீ வேறு சொரூபனுகிய பரமானந்தப் பரம்பொருளின் தூய வெளிச்சத்தில் தோய்ந்து பேரின்ப செல்வக் கடலில் அமிழ்ந்தவேணுமானுல் நீ வாசம் பண்ணு நாற்றதோற் றுருத்தியாகிய சரீர மிடைந்துபோகவும் ஊத்தைப் பாண்டமாகிய இந்தத் தேக முடைந்துபோகையில் மெஞ்ஞான தீபமாகிய தெய்வத்தைப் பார்க்கவும் ஆவல்கொண் டிருப்பாயாக, சச்சிதானந்த ஏக கர்த்தாவாகிய சேசுநாதருடைய திருவடியை நாடிப்போகையில் பூமியின் அநித்தியப் பொருட்களாகிய வீடுகள் சோலைகள் பூமிகொண்டஅழியுந் திரவியங்களின் மேல் ஆசைபட்டுச் சிற்றின்பந் தேடுவாயாகில் அவரொளியு மங்கச் சங்கடங்கள் நேரிடும், ஒன்று மில்லாதவனுகிய நீ நித்திய கருணை சமுத்திர பரப்பிரம்மத்தைச் சதாகாலங் கண்டடைய வருகையில் சிருஷ்டிக்கப்பட்ட யாவையும் பரித்தியாகம் பண்ணிப் பேரின்பத்திற்கு ஊருணியாகிய பரமானந்தத்தை உறுதியாய்த் தழுவிப் பிடிப்பாயாக, பரிசுத்த அச்சயனுகிய அமலன் திருவடியில் சேர்ந்தோர் அதை விடாமல் மற்றெல்லாவற்றையும் விட்டுவிடக்கடவர், சுயஞ் சீவியாகிய கடவுளுடைய திருவடியின் மகிமை யானந்தத்திற்குப் பங்காளியானவர்கள் முற்றுந் துறந்தவர்களாயிருக்கவேண்டியது என்பவைகளேயாம்.

---

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

---

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### இருதயகுளத்தில் அர்ச். லூர்து நாயகியின் கெபி.

திருநெல்வேலி ஜில்லா அம்பா சமுத்திரத்திற்கு மேல்புறம் பாபநாசம் என்ற ஓர் ஊர் இருக்கிறது. ஆங்கு இந்துக்களின் கோவிலொன்றைக் காணலாம். அதற்குத் திரளான இந்துக்கள் யாத்திரிகராய்ப் போவார்கள். அம்பா சமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்குப் போகிற பெரிய ரஸ்தாவிற்கு வடபுறமாய் இருககும் விக்கிரமசிங்கபுரத்திற்குக் கீழ் பக்கம் இருதய குளமென்னும் ஒரு சிற்றூர் உண்டு. இவ்விடத்தில் யேசு சபையாரால் கட்டபட்டிருக்கும் நேர்த்தியான இருதயக் கோவிலும், போர்டிங் ஹவுசும் பள்ளிக்கூடமும் இருக்கின்றன. இவற்றிற்கு வடக்கும் மேற்குமாய்த் தென்னை, மா, வேம்பு, மாதுளை, கொடிமுந்திரிகை முதலிய தாவரங்களடங்கிய தோப்பானது ஆங்குள்ள குன்றுகளுக் கிடையில் தோன்றுவதால் அவ்விடத்துலாவும் பிரயாணிகளின் பார்வைக்கு வெகுரமணியமாயிருக்கும். இவ்வித சிறப்புவாய்ந்த இருதயகுளத்திற்கு மேல்பக்கம் அரை பர்லாங்கு தூரத்தில் ஓர் கெபியில் அர்ச். லூர்து நாயகியின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இக்கெபியை மந்திரித்து ஆங்கு சுற்றுப்பிரகாரம் செய்தவிதமும், ஞானப்பிரசங்கம், தேவநற்கருணை ஆசீர்வாதம், பெரிய பூசையிவைகளின் மகோன்னதமும், இங்கு சுருக்கமாய்க் கூறி, ஆங்கு நடந்த ஓர் அற்புத சம்பவத்தைக் குறித்துப்பேசி, அர்ச். லூர்து நாயகியின் பேரில் பத்திவைப்பது நமது ஆத்துமத்திற்கு மிகவும் ஞானப்பிரயோசனமாயிருக்கு மென்று விளக்குவோம்.

நிகழ்வருடம் நவம்பர்-மீ 13உ சனிக்கிழமையன்று பாளையங்கோட்டை அர்ச். சவேரியார் மடத்துக் கத்தோலிக்மாணவர்கள், ஆசிரியர்கள், சந்நியாசிமார்கள், சங்கைக்குரிய குருக்கள் சுற்றுக்கிராமங்களிலுள்ள கிறீஸ்துவர்கள், இந்துக்கள், இவர்களில் ஏறக்குறைய 4000-பேர் இருதயகுளத்தில் கூடினூர்கள். மாலை 6 மணிக்கு மிகவும் கனம் பொருந்திய கிரான்ச் சிரேஷ்ட சுவாமிகள், லூர்து கெபி, அதன் மேலிருந்த சுரூபம், அருகிலுள்ள கிணற்றுநீர் இவைகளை மந்திரித்தார்கள். அப்பால் மாணவர்கள் சிலுவைத் துவஜம், வர்த்தி, விளக்கு, மத்தாப்பு இவைகளுடன் வெடிகளும் மேளி வாத்தியங்களும் முழங்கும் ஆரவாரத்தோடு கெபியைச் சுற்றிச், சுற்றுப்பிரகாரம் வந்தார்கள். இருபது வருடங்களுக்கு முன் இருண்டதோர் வனமாயிருந்த இவ்விடம் இப்போது பக்கமெல்லாம் தேவதா தோத்திரவகைகள் நிறைந்த ஒரு சிங்கார ஸ்தலமாயிருந்து பிரகாசித்தது. சுற்றுப் பிரகாரம் முடிந்ததும் யேசுசபை கனம்தன சுவாமிகள் "அர்ச். தேவமாதா மூலமாய் சேசுநாதஸ்வாமி உலகத்திற்குப் பிரசித்தமானுர்." என்பதின்பேரில் ஓர் தேவாமிர்த ஞானப்பிரசங்கம் செய்தார்கள். அது வருமாறு,

ஆதாமால் கெட்டழிந்த உலகம் ஆசாபாசத்தில் அமிழ்ந்திக் கிடந்ததைக்கண்ட அர்ச். மரியம்மாள் நம்மை இரட்சிப்பவர் விரைந்து வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டிருந்த தருணத்தில் அர்ச். கபிரியேல் சம்மனசானவர் அவளுக்குத்தோன்றி இரட்சகரின் தாயாராயிருக்க அவளைச் சம்மதங் கேட்டார். அர்ச். மரியாயும் சம்மதித்து உலகத்திற்கு இரட்சகரைக் கொடுத்தாள். இடையருக்கு இரட்சகரை முதன் முதல் காண்பித்தது அவள்தான். அவள் கரங்களில் இருந்த இரட்சகரைத்தான் மூன்றிராசாக்கள் வணங்கினது. முப்பது வருஷம் அந்தரங்கமாய் ஜீவித்துவந்த இரட்சகரிடத்தில் கானுன் ஊரில் தண்ணீரை முந்திரிகை இரசமாக்கக்கேட்டு முதல் புதுமையைச் செய்வித்து தேவனென்று அவரைத் தேவநாயகி பிரசித்தப்படுத்தினுள். இவ்விதம் தாய் காட்டிய வழியை மகன் கைப்பற்றிக், கூன், குருடு, முடவர் திமிர்வாதக்காரர் முதலியவர்களைக் குணப்படுத்தி மூன்று வருடம் ஆயிரக்கணக்கான புதுமைகளைச் செய்தார். அவருடைய தெய்வீகம் வெளிப்பட்டது. அவர் மோக்ஷத்திற்கு ஆரோகணமானபின் நடந்த புதுமைகளினிமித்தம் ஜனங்கள் அவரைத் தெய்வமென்று விசுவசித்தாலும், தெய்வம் எவ்விதம் மனுஷனுகக் கூடுமென்னும் இரகசியத்தைக் கண்டுபிடிக்கக்கூடாமல் சேசுநாதர் ஓர் மாயசரீரத்தைப் பூண்டிருந்தவரென்று ஜனங்கள் நினைக்க ஆரம்பித்தார்கள். தேவமாதா தனது பிரசன்னத்தின் மூலமாய் இன்னவேளைய ஜனமருளைத் தகர்த்து சேசுநாதர் மெய்யான மனுஷனென்னும் சத்தியத்தை, மருண்டவர் மனதில் ஸ்திரப்படுத்தியபின், இவ்வுலகத்தைவிட்டு மோக்ஷம்போய்ச் சேர்ந்தாள்.

அப்பால், மனிதர் தாயையும் மகனையுங் கொண்டாடி நல்ல கிறீஸ்துவர்களாய் நடந்து வந்தார்கள். காலம் போகப்போக "இரட்சகரின் தாய் சாதாரண மனுஷியன்றோ? விசேஷவணக்கம் அவளுக்குக் காண்பிக்கத் தேவையில்லை; இரட்சகரே போதுமென்று" அவளைப் புறக்கணிக்க ஆரம்பித்தார்கள், தாயை மறந்த சிறிது காலத்துள் மகனையும் மறந்துவிட்டார்கள். இம்மைக்குப்பிறகு மறுமை யுண்டென்னும் சத்தியத்தை முதலாய்ச் சந்தேகிக்கத்

தவிக்கிறார்கள். இதனிமித்தம் பாவம் மென்மேலும் அதிகரித்து இரட்சகர் பிறக்குமுன் உலகம் எவ்வித ஈனஸ்திதியிலிருந்ததோ அதேஸ்திதிக்கு வந்துவிட்டது. மோட்சத்திலிருந்த தாய் பார்த்தாள். ஜனங்கள் இவ்விதம் கெட்டுப் போனார்களே என்று மனங்கலங்கினதுபோல் திரும்பவும் உலகத்தில் தோன்றித் தன் மகனைப் பிரசித்தப்படுத்தத் தொடங்கினாள். லூர்து கெபியில் இடைப்பெண்ணான பெர்னதெத்திற்குப் பதினெட்டு விசை தரிசனங்கொடுத்தாள். அச்சிறுமிக்கு மாத்திரம் தேவநாயகி தோன்றினாளென்றாலும் சிறுமியின் முகம் வேறுபட்டு மோட்சமயம் ஜொலிப்பதையும் அவள் கரங்கள் எழுந்து சிலுவை வரையும்போது காணப்படும் அடையாளங்களின் மகிமைப் பிரதாபத்தையும் கண்ணுற்ற ஜனங்கள் தங்கள் கட்புலனுக்கு மறைந்திருந்த மோட்ச நங்கையின் பிரசன்னத்தை யுணர்ந்து முழங்காற்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தனர். ஒன்பதாவது காட்சி முடிந்தவுடன் தன் ஞாபகம் மனிதர் மனதில் எக்காலும் பதிந்திருக்கும் பொருட்டு அவ்விடத்தில் நூதனமாய் ஓர் நீரூற்று உண்டாகச் செய்து அவ்வூற்று நீருக்கு அற்புதவல்லமையைக் கொடுத்தாள். அந்த ஜலத்தை யருந்தக் கோடிக்கணக்கான வியாதியஸ்தருக்கு சௌக்கியம் வரப்பண்ணுகிறாள். பெரியவித்வான்களும் வக்கீல்களும வயித்தியர்களும லூர்து நகர்க் கெபியில் நடக்கும் புதுமைகளை சோதித்துப்பார்த்து வியப்பையும், தேவதாயின் வல்லபத்தையும், பல பிரபந்தங்களால் வெளிப்படுத்துகின்றனர். இதனால் மனந்திரும்புகிற ஜனங்கள் அநந்தம். இவ்வண்ணம் தாய்மார்களுக்கு இயல்பான (அதாவது மக்களைக் கைவசப்படுத்துகின்ற) சாதுரிய குணத்தைக்கொண்டு மனித குலத்தை இளக்கியபின் தன் மகனிடம் அவர்களைச் சேர்ப்பிக்கிறாள். அது தற்காலம் லூர்து நகரில் நடக்கும புதுமைகளால் விளங்குகின்றது. தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரத்தின்போது ஒவ்வொரு நோயாளியின சிரசுக்கும் மேலாக சற்பிரசாதக்கதிர்ப் பாத்திரத்தைச் சற்று உயர்த்தி அவர்களை ஆசீர்வதிக்கும்போது அவர்கள் குணப்படுகிறார்கள். ஆகவே, தவ்யநற்கருணையில் மெய்யான தேவனும் மெய்யான மனுஷனுமாகிய தன்னுடைய திருக்குமாரன் எழுந்திருக்கிறதைப் பரிசுத்த லூர்துநாயகி இந்தவிதமாய்ப் பகிரங்கப்படுத்துகிறாள்.

தேவமாதா லூர்துநகரில் மாத்திரம் அவள் வல்லமையைக்காட்டி ஜனங்களைத் தன் மகனிடம் இழுப்பது போதாததுபோல் ஆங்காங்கு லூர்து கெபியின் பாவனையாகப் பல கெபிகளை யேற்படுத்தச்செய்து தன் வல்லமையையும் தன் திருக் குமாரனையும் வெளிப் படுத்துகிறாள். இதோ இங்கேயும் ஓர் கெபிஸ்தாபிக்கப் பெற்றிருப்பதைப் பார்க்கின்றீர்கள். இவ்விடத்திலும் அவள் தனது வல்லமையைக் காண்பித்துப் பாவிகளுடைய மனதைத்திருப்பி அவர்களின் அஞ்ஞான அந்தகாரத்தை அகற்றுவாள் போலும். ஆம், அப்படியே செய்வாளென்று நினைக்க அநேக காரணங்களிருக்கின்றன.

இருதய குளக்கெபியின் தோற்றம் சற்றேறக்குறைய லூர்து நகர்க் கெபிக்கு ஒத்திருக்கின்றது. லூர்து நகர்க்கெபி மலையடிவாரம் சிறு சிறு குன்றுகளால் சூழப்பட்டிருக்கின்றதுபோல இக்கெபியும் சூழப்பட்டிருக்கின்றது. இங்கேயும் ஆங்கிருப்பதுபோலவே, கெபியின் இடது பக்கத்தில் ஓர் ஊற்று இருக்கிறது. இப்படியிருந்தபோதிலும் பின்னால் கூறப்படும் முகாந்தரமும் விசேஷித்தது. அதாவது, இவ்வூருக்கு அருகிலிருக்கும் பாபநாசமானது இந்துக்களுக்குச் சிறந்த ஓர் யாத்திரை ஸ்தலம். அவ்விடத்தில் போய், ஸ்நானம் பண்ணினால் தங்கள் பாவமெல்லாம் தீர்ந்து போகுமென்று அவர்கள் எண்ணுகின்றனர். பாபநாசத்திற்குப் போகிற யாத்திரிகர் இந்தக் கெபியைக் கடந்துதான் செல்லவேணடும். இவர்கள் போகும் வரவைப் பார்த்துக்கொண்டிருக்கும் லூர்து நாயகி அவர்களமேல் மனமிளகாதிருப்பாளோ? இந்தப் பாபநாசத்திற்கு அவள் வெறுங்கையாய் வந்திருப்பாளோ? கைநிறையத் தன் கிருபையைக்கொண்டு வந்திருக்கின்றாள். புதுமைகளைப் பண்ணுவாள். பாவிகளை மனந்திருப்புவாள். ஆம், அஞ்ஞானிகளுக்குத் தன் திருக்குமாரனைப் பிரசித்தப்படுத்துவாள். இக்கருத்திற்காக இப்போது நமது லூர்துநாயகியை மன்றாடுவோமாக."

கனம் தனசுவாமியவர்கள் பின்வரும் ஜெபங்களையும் சொல்ல எல்லோருமே சேர்ந்து சொன்னார்கள்.

"பாவிகளுக்கு அடைக்கலமே, பாபநாசத்தில் குடியேறியிருக்கும் பரமதேவதாயே, உனது ஜனத்தின் பாவங்களை நாசமாக்காயோ?



லூர்து நாயகியே, உன்வல்லபத்தை லூர்து நகரில் காண்பித்ததுபோல இங்கேயும் காண்பித்து பாவிகளை மனந்திருப்புந்தாயே. லூர்துநாயகியே, இக்கெபியில் சுரந்துவரும் ஊற்று ஜலத்தால் வியாதிக்காரரைக் குணப்படுத்தி அஞ்ஞானிகளை மனந்திருப்புவாய் அம்மணி."

இவ்வாறு பிரசங்கமும் ஜெபமும் முடிந்தபின் தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பெற்று மறுநாள் 14உ ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் பெரிய பாட்டுப்பூசை நடந்தது. ஆயிரக்கணக்கான கிறீஸ்துவர்கள் நன்மைவாங்கினார்கள். இந்த நல்ல சமயத்தில் இந்துக்களில் 30 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இந்தப் பிரகாரம் கெபியின் பிரதிஷ்டையும் மற்றும் திருச்சடங்குகள் முதலிய ஞானக்காரியங்களும் நிறைவேறின.

இச்சமயம் நடந்த மறறொரு அற்புத சம்பவமேதெனில்; "இந்தப் பெரு மழைகாலத்தில் தேவமாதாவைக்குறித்து இக்காட்டில் இவ்வளவு ஆடம்பரச் சிறப்போடு திருவிழா கொண்டாடுகிறார்கள். திடும்பிரவேசமாய் மழைவந்து கிறீஸ்தவர்களின் கருத்து நிறைவேறாமல் சீர்கேடுவாட்டுமென்று" அஞ்ஞானிகளில் அநேகர் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்களாயினும் ஷை தேதிகளில் மழையே வரவில்லை. சர்வமும் ஒழுங்காய் நடைபெற தேவநாயகி கிருபைசெய்தாள். இது ஓர் அற்புத சம்பவம். இஃதை இக்கெபியில் நடந்த முதற் புதுமை யென்கலாம்.

இச் சிறந்த கெபியை யுண்டுபண்ணுவதற்காக இருதய குளத்தில் ஒரு மாதகால மிருந்து அதிக உழைப்பெடுத்த சேசுசபை சங்கைக்குரிய ஆங்கிளாத் (Anglade S. J.) சுவாமி யவர்களுக்கும் சங்கைக்குரிய லெயோனார்த் (Leonard S. J.) சுவாமி யவர்களுக்கும் நன்றியறிந்த மங்கள வாழ்த்துக் கூறப்படுகிறது.

வருகிற 1916-ம் ௵ பெப்ருவரி௴ 11உ அர்ச். லூர்துமாதா திருவிழா இக் கெபியில் கொண்டாட நினைத்திருக்கிறார்கள். ஆதலால் நமது அமலோற்பவ நாயகியின் வாசஸ்தலமாகிய இந்தப் பாபநாசத்திற்குக் கிறீஸ்துவர்கள் யாத்திரையாய்வந்து அஞ்ஞானிகள் மனந்திரும்பவும், இக்கெபியின் தண்ணீரால் ஞானஸ்நானம் பெறவும், வியாதியஸ்தர்கள் குணமடையவும், எல்லோரும் தம் ஆத்தும சரீரத்திற்கு வேண்டிய உதவி சகாயம் பெற்றுக்கொள்ளவும், மோட்ச வழியில் நடந்து அளவில்லாப் பேரின்ப பாக்கியம் அநுபவிக்கவும் பரிசுத்த லூர்துநாயகியைப் பார்த்து வேண்டிக்கொள்ள வேணுமென்று இஃதால் எல்லோரிடத்திலும் வெகு விநயமாய்க் கேட்டுக்கொள்ளப் பெறுகிறது.

M. P. MASCARENHAS.
(இருதய குளவாசிகள் விருப்பத்தின்படி.)

## கூட்டப்புளி.

இவ்வூரின் கண் சிலவருடங்களுக்கு முன் கத்தோலிக்கருக்குள்ளே சண்டையும் சச்சரவும் சமாதானக்குறைவு முண்டாகி ஒருவித அலங்கோலையாயிருந்தது. ஆனால் மிகவும் சங்கை பொருந்திய A. கௌசானல் சுவாமிகள் கூட்டப்புளிக்கு ஞானமேய்ப்பராய் அமர்ந்தபோது சூரியனைக் கண்ட பனிபோல் ஆங்கு உலாவிய கலகங்கள் யாவும் ஒரு கொடியில் பறந்துபோய் விட்டன. சுவாமிகள் இவ்வூருக்கு வந்ததும் தமக் குள்ள வைதீக, லௌகீக ஞானத்தைக் கொண்டு யாவரையும் நன்னீதியோடு சமாதானப்படுத்திய நன்றியைக் கூட்டப்புளியூரானது என்றும் மறக்கத்தக்கதன்று. இதுமாத்திரமல்ல, இவ்வூருக்கு அத்தியாவசியமாயிருந்த ஆடவர், பெண்டிர் பாடசாலைகளும், கன்னிகாரத்தின மடமும் ஸ்தாபிக்கப்பட்டன. சூதுகொண்ட பசாசுக்கள் அஞ்சி நடுநடுங்கும்படியான பிரமாண்டமான சிலுவையும் நாட்டப்பட்டு, அந்தத் திருச் சிலுவையை ஸ்தாபித்த இடத்தில் ஏராளமான புதுமைகளும் நடந்தேறிவருகின்றன.

*அன்பிலா ரெல்லாந் தமக் குரியர்*
*அன்புடையர் என்பு முரியர் பிறர்க்கு,*

என்னும் மேலோர் வசனம் அந்நல்ல குருவுக்கே செல்லுமென்பது திண்ணம். சென்ற 1912-ம் ௵ மே௴ 20உ பரதவாலிபர்களாய்ச் சேர்ந்து பரலோக நாயகியின் பாதுகாவலின் கீழ் உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்கள் சபை என்றோர் சபையும் ஏற்படுத்தப்பட்டு நன்றாய் நடைபெற்றும் வருகிறது. இந்தச் சபையார், வாரத்தில் மூன்றுநாள் இரவு தேவ ஆராதனை முடித்து, திருச்சிலுவையை வீதிகளிற் சுற்றுப் பிரகாரஞ்செய்து, ஆத்துமாக்களுக்காக விசேஷ

ஜெபம் ஒப்புக்கொடுத்தும், மாதமொருமுறை ஓர் பூசை செய்வித்தும், வருஷத்தில் வரும் நவம்பர் மாசம் முழுதும் ஒவ்வொரு நாள் இரவும் மிக்க சிறப்புடன் மாலை ஆராதனை முடிந்த உடன் வீதிசுற்றி சபையார் ஜெபஞ் செய்தும், மாதக்கடைசியில் பெரிய வெஸ்பர்ஸ் நடைபெறச் செய்தும், மறுநாள் பெரிய பாடற் பூசை செய்வித்தும் பூசை முடிந்த உடன் பாண்ட்வாத்தியத்தோடு களம் டைரெக்டர் சுவாமிகளைக் கண்டு சந்தித்துக்கொள்ளுகிறதுமான இத்தகைய பெரும் பக்திக் கிருத்தியங்களைச் செய்து வருவது மெத்தவும் வியக்கத்தக்கதே. தற்போது இவ்வுத்தம சபையில் 100 மெம்பர்கள் இருக்கிறோம். இச்சபையானது சுக்கில பக்ஷத்து சந்திரனைப்போல் தினே தினே விருத்தியடைய சதா வேண்டிக்கொள்ளும்படி நேயர்களனைவோரையும் வெகு ஆவலாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஷை சபை மெம்பர்களில் ஒருவனாகிய
S. P. சூசைமிக்கேல் பர்னாந்து.

[“அயலோர்பவ நாயகியின் திருநாள் மகோற்சவம்”, புதுக்கோட்டை, என்ற கடிதம் அடுத்த மாசப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.]

சென்னைமாநகரில் செந்தமிழில் மாதந்தோறும் வெளிவரும் “நல்ல ஆயன்” செய்யும் நன்மையின்கண் விடுபட்டுரைத்த நவவருட வாழ்த்து.

### ஆசிரிய விருத்தம்.

அணிமருவு மகிலமிசை மன்பதைகள் படுதுயரை
யருணன் முன் பனிபோலவே
ஆவலுடன் றேடிவந்தொரு கொடியினீக்கவல்
லம்பரா பரமனருளாள்
பிணிமருவும் பாவிகளைக் காணமற் போனதொரு
பேதை யாட்டினை நாடியே
பேதற்ற லைந்தபிடித்தே தொணர்ந்தக மகிழும்
பினநல் லாயன் பெயரை
பணிமருவு நாமமாய்ப் பூண்டு தமிழ் நாட்டினிற்
பரிதி யெனவே யுலாவிப்
பன்னரிய வுண்மை நெறி காட்டியதிற் கொண்டுவரப்
பல்வகை யுயர்ந்த மொழிகள்
அணிமருவப் பேசிவருந்தாய நல்லாயனே!
தோன்றுமிப் புதிய வாண்டில்
அணைபெற்றுப் பலபேர்களைல மூற்றுக் கனமுற்றுச்
சுப முற்று வாழ்க மாதோ!

S. SELVA RAJU.

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாசாரம்.

**83-பதிதப்பாதிரிமார் மனந்திரும்பினார்கள்.**—1910-ம் வருடமுதல் நாளதுவரைக்கும் மனந்திரும்பி நமது சத்திய கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்ந்த ஆங்கிலேய பதிதபாதிரிமார் 83 பேர்களெனக் கேள்வியுற்றுச் சந்தோஷிக்கிறோம். சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாகுக. தங்கள் பாதிரிமார்கள் மனந்திரும்பி கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்வதைப் பார்க்கும் பதிதரும் சத்தியத் திருச் சபையில் உட்படுவார்களென்பதற்கு ஐயமில்லை.



**வாடின புஷ்பங்களைப் புதியனவாக்கல்.**—பூக்கள் அல்லது பூங்கொத்துகள் வாடிப்போனால், அவற்றையெறிந்துவிடாமல், அவற்றின் காம்பை கொஞ்சம் நறுக்கிவிட்டுக் கொதிக்காத வெந்நீரில் காம்புகளை யரைமணிநேரம் வைத்து, ஜலங்குளிர்ந்த பின்னெடுத்துப் பிறகு ஒரு சிட்டிகை சோடா சேர்ந்த சுத்த ஜலத்தில் அவற்றை வெகுநேரம் போட்டுவைத்தால் அன்று மலர்ந்த புஷ்பங்களைப்போல்தோன்றுமாம்.

**அர்ச். ஜனுவாரியாரின் திரு இரத்தம்.**-நேப்பில்ஸ் நகரத்தைச் சேர்ந்த பெரிய தேவாலயத்தில் அர்ச். ஜனுவாரியாரின் திரு இரத்தமானது ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. வருஷா வருஷம் அவருடைய திருநாளன்று அது இளகி புதிய உதிரம்போல் காணப்படும். இவ்வதிசயத்தைக் காணும்படி வந்திருந்த திரளான ஜனங்களின் சமுகத்தில் இவ்வருஷம் ஒன்றே கால்மணி நேரஞ் சென்று இவ்வற்புதம் நடந்தேறியதாம்.

**பரிசுத்த பாப்பவர்களின் சுகவீனம்.**-தற்காலம் திருச்சபையை யரசாண்டுவரும் நம்முடைய பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் தமது ஸ்நானத்துக்குரிய தாங்கவொண்ணு பொறுப்பினாலும், அதிலும் விசேஷமாய் தற்காலத்தில் நடந்தேறும் கொடியயுத்த சம்மாரத்தாலும் அவருடைய சிரசிலும் இருதயத்திலும் சகிக்க முடியாத வேதனை யுடையவராய் நித்திரையேயின்றி கஷ்டப்படுகிறு ரென்று தெரியவருகிறது. அவருக்கு நல்ல சௌக்கிய முண்டாகும்படியாக நாமனைவரும் உருக்கப் பற்றுதலோடு சர்வேசுரனை மன்றுடுவோமாக.

**உத்தரியச் சுரூபம்.**—உத்தரிய சபையில் சேரும்போது (எந்த சபையில் சேருகிறார்களோ அதற்குரிய) உத்தரியத்தை ஒழுங்கின்படி மந்திரித்துத் தரித்துதான் சேரவேண்டும். அதற்குப்பின் இஷ்டமுள்ளபோது உத்தரியத்துக்குப் பதிலாகச் சுரூபம் தரிக்க விரும்பினால், அதை மந்திரித்துத் தரித்துக்கொள்ளவேண்டும். பல உத்தரியச் சபைகளில் சேர்ந்தவர்களும், ஒரே உத்தரியச் சுரூபத்தை அச்சபைகளின் பேரைச் சொல்லி மந்திரித்து தரித்துக்கொண்டால், அச்சபைகளின் பலன்களையெல்லாம் குறையாமல் பெறக் கூடும்.

**குரும்பகரம்**—காரைக்காலை யடுத்த ஷை யூரின் விசாரணை குருவாகிய சங். ரேஜிஸ் சுவாமியாரவர்கள் தம்முடைய பங்கு கிறிஸ்துவர்கள் இவ்வருடம் அர்ச். தேவ தாயார் ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த திருநாளை மற்ற வருடங்களைவிட அதிகபக்தி சிறப்பலங்காரமாய்க் கொண்டாடும்பொருட்டுப் பட்ட பிரயாசை கொஞ்சமல்லவென்று தெரியவருகிறது. அத்திருநாளுக்கென்று தமக் குதவியாக இவரால் அழைப்பிக்கப்பட்டிருந்த சங். மரிய ஆரோக்கியநாதர் சுவாமியாரவர்கள் திருநாளுக்கு முந்தின ஒன்பது நாட்களிலும் மதுரம்பொருந்திய புத்தி பிரசங்கங்களால் அக்கிறிஸ்துவர்களைத் தக்கபடி ஆயத்தப்படுத்தினார். ஆயிரங் கிறிஸ்துவர்கள் மாத்திரம் அடங்கிய அவ்வூராரில் திருநாளன்று 500 அல்லது 600 பேர் வரையிலும் திவ்வியசற்பிரசாத பந்தியில் அமர்ந்து சந்துஷ்டிகொண்டார்கள். இதுவல்லவோ மெய்யான திருநாள் கொண்டாட்டம்!

**கட்டாய இராணுவம்.**—ஐரோப்பிய தேசங்களைச் சேர்ந்த கிரேட்பிரிட்டனில் ராணுவச் சட்டம், அதாவது ஒவ்வொரு ஆண்மகனும் சிலகாலம் ராணுவத்தில் சேவித்து, யுத்தம் தொடங்கியவுடன் எல்லா ஆண் மக்களும் யுத்தத்திற்குச் செல்ல வேணடுமென்ற கட்டாயம் கிடையாது. அந்த ஏற்பாடு பொது ஜனங்களின் சுதந்தரத்தைக் குறைக்கச் செய்வதாகப் பிரிட்டிஷ் பூமியில் கருதப்படுகிறது. ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே தங்கள் தேசத்தைக் காத்தற்பொருட்டாகப் படையில் சேருவதே உண்மையான தேசாபிமானமாகுமேயன்றி அவர்களைக்கட்டாயப்படுத்தக்கூடாதென்பது பிரிட்டிஷின் கொள்கை. பிரிட்டிஷ் தேசத்து ராணுவத்தலைவராயும் சேனாதிபதியாகவும் இருந்த லார்ட் ராபர்ட்ஸ் கட்டாய ராணுவச் சேவகம் அவசியமென்று வெகுவாக வற்புறுத்தி வந்தார். லார்ட் ராபர்ட்ஸ் நமக்குப் புதியவரல்ல. போயர் யுத்தத்தை அவர்தான் முன்பு வெற்றிக்குக் கொணர்ந்தவர். அவர் இப் பெரிய யுத்தம் தொடங்கிய பிறகுதான் 14-11-14ல் காலமானார்.

**இருபுறமும் பார்த்தல்.**—பாரிஸ் நகரத்தில் ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர், தன் கீழ் உத்தியோகஸ்தர்களின் உபயோகத்திற்காக ஒரு மூக்குக் கண்ணாடி கண்டுபிடித்திருக்கிறாராம். அதைப் போட்டுக்கொண்டால் அதன் மூலமாய் எதிரிலிருப்பவைகளை மாத்திரமல்ல தன் பின்னாலிருப்பவர்களையும் கூட நன்றாய்ப் பார்க்கக்கூடுமாம்.

**கம்பளித்துணிகளைச் சுத்தி செய்ய**—வடித்த கஞ்சி கை பொறுக்கிற சூடாயிருக்கும்போது ஷை துணிகளை அதில் ஊறவைத்து நன்றாய்க் கசக்க அவைகள் சுத்தமாகும். இப்படியே கம்பளங்களையும் தூசிபோக உதறி மாசிக்காயை அறைத்து சுத்த ஜலத்தில் கலக்கிவைத்துக்கொண்டு, அதில் அவைகளை நன்றாய் நனைத்துக் கசக்கினால் புதுக் கம்பளங்கள்போலாய்விடும்.

**கண்டியில் ஓர் புதுகலாசாலை**—இங்கிலாண்டிலுள்ள ஆக்ஸ்போர்டு (Oxford) சர்வகலாசாலைக்குச் சம்பந்தப்பட்டதான ஓர் புதிய சர்வகலாசாலையை இலங்கையில் ஸ்தாபிதஞ் செய்யும்படி அவ்விடத்து அரசாட்சியார் யோசித்திருக்கிறார்கள். அது அநேகமாய்க் கண்டியிலேதான் ஸ்தாபிக்கப்படுமென்றும், அதில் மாணாக்கரின் நிவாசத்துக்கேற்ற வசதிகள் கிடைக்குமென்றும், பெண்களும் அக்கல்விசாலையில் சேரலாமாயினும் அவர்கள் தங்க இடங்கொடுபடாதென்றுந் தெரியவருகிறது. கத்தோலிக்கு மாணாக்கரின் சௌகரியத்துக்காகத் திருச்சபை யதிகாரிகள் அவ்விடத்தில் ஓர் கத்தோலிக்கு விடுதியையும் ஓர் கோவிலையுங் கட்டி, அவர்களைக் கண்காணிக்க ஒரு குருவானவரையும் நியமிப்பார்களென்றுஞ் சொல்லப்படுகிறது. இவ்விதமாக இதர மாணாக்கர்களுக்காக ஸ்தாபகமாகப் போகும் வெவ்வேறு விடுதிகளையும் விசாரித்து வர நியமிக்கப்படுகிறவர்கள் மேற்படி சர்வகலாசாலையில் பண்டிதராயிருக்க இடம்பெறுவார்கள். (Rev. Fr. Le Goc. M.A., B. Sc., Ph. D.) சங். லெகாக் சுவாமியார் எம். ஏ., பி. எஸ்சி., பி. எச். டி. முதலிய பட்டங்களுடையவரைப்பற்றி அவர், கத்தோலிக்கு மாணாக்கருடைய விடுதியின் விசாரணைக் கர்த்தராக நியமிக்கப்படுவாரானால் ஷை சர்வகலாசாலையின் பண்டிதர்களில் அவரும் ஒருவராக நியமிக்கப்படுவாரென்று நம்பப்படுகிறது.

**கேய்சரின் சர்வ வியாபகம்.**—கேய்சருடனிருக்கும் உத்தியோக சமுதாயத்தாருள் இரண்டுபேர் முகச்சாயலினும், உயரம், பருமன், தேகக் கட்டுப்பாடு இவை அனைத்திலும் கேய்சரைச் சரியொத்தவர்களாயிருக்கிறது மல்லாமல், அவர்களுடைய உடையிலும் நடையிலுந் தோற்றத்திலும் கொஞ்சமும் பேதகமில்லையாம். அவர்கள் புருஷியப்படை வகுப்புகளுக்குள் சக்கிரவர்த்திக்குரிய விருதோடு தங்கள் பிரியம்போல் அங்கங்கே செல்லுவார்களாம். இவ்விதமாக மெய்யான கெய்சர் யாரென்று தெரிந்துகொள்ள ஏதுவில்லாமற் போகிறபடியால், ஏககாலத்தில் பிராஞ்சு தேசத்திலும், ஜெர்மனியைச் சேர்ந்த பெர்லின் பட்டணத்திலும், ருஷியாவைச் சேர்ந்த வார்சா பட்டணத்திலும் கேய்சர் இருக்கிறதாகச் சொல்லப்படுவது அதிசயமல்ல. ஓர் வேளை அவர் யுத்த முகத்துக்குப் போகாமல் தமது அரண்மனையில் சுகமாய்த் தூங்கிக்கிடந்தாலும் அவர் போர்க்களத்தில் பிரசன்னமாயிருந்தாரென்று சொல்லப்படுவதும் சகஜமே. இதுவும் ஓர் சமயோஜிதமான தந்திர யுக்திதான்.

**அர்ச். பேர்னர்துசபையாரின் நாய்கள்.**—அர்ச். பெர்னர்து சபையார் வைத்துவளர்க்கிற இந்த நாய்களால், பனியால் மூடப்பட்டிருக்கும் மலைப்பிராந்தியமான தேசங்களில் வழிப்போக்கருக்கு உண்டாகும் நன்மை கொஞ்சமல்ல என்பது உலகம் அறிந்த விஷயம். அப்படியே டார்டனெல்ஸ் ஜலசந்தியில் இப்போது நடந்தேறிவரும் யுத்தத்திலும் இந்நாய்கள் அதிசயமான உதவிபுரிந்துவருகின்றன. அவைகளை அன்றாடம் யுத்தம் முடிந்ததும் அவிழ்த்து விடுவார்கள். அவை நாலாபக்கங்களிலும் போர்க்களமெல்லாம் சுற்றித்திரிந்து மரித்துக் கிடக்கிறவர்களை நீக்கிக் குற்றுயிராய்க் கிடப்பவனின்னானென்று தெரிந்துகொண்டு, அவனுடைய தொப்பியை வாயில் கௌவிக்கொண்டுவந்து கீழே வைத்துவிட்டுத் துயரமான விதமாயூளையிடுமாம். உடனே சாகக்கிடப்பவன் துலுக்கனோ அல்லது ஆங்கிலேயனோ என்றும், எந்தப் படையைச் சேர்ந்தவனென்றுந்



தெரிந்துகொள்ளுகிறார்களாம். பிறகு அந்நாயைப் பின்சென்று நேராய் அந்த இடத்துக்குப்போய் அம்மனிதனைக் கொண்டுவந்து, அவனுக்கு வேண்டிய உதவி செய்வார்களாம். ஆகவே, இந்நாய்களின் அருமையான புத்திக்கூர்மையை மெச்சுவோமா, அல்லது அந்நாய்களை யம்மாத்திரம் பயிற்றிவைத்திருக்கிற ஷை சபையாரின் பரோபகார குணத்தை மெச்சுவோமா !!

**ஓர் புத்தக வரவு.**-"நோயாளிகளுக்கு ஆறுதல்" (*Consolation to the Sick.*) என்றதோர் அருமையான புத்தகம் எமது பார்வைக்கு எட்டியது. இப்புத்தகமானது பிராஞ்சு பாஷையினின்று யாழ்ப்பாணம் சங். ஞானப்பிரகாச சுவாமியாரவர்களால் மொழிபெயர்க்கப் பெற்றது. இதற்கு சூட்டியுள்ள நாமதேயமே இதன் நன்மையையும் பிரயோசனத்தையும் எல்லோருக்கும் நன்கு விளக்குகின்றதாகையால், இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியமாயிருக்கத்தக்க ஒரு புத்தகம். நாம் ஒவ்வொருவரும் நல்ல மரணத்துக்கு ஆயத்தஞ் செய்யவும், நமக்கு வருகிற கஸ்தி, துன்பம். நோவு நொடிகளில் பொறுமையாயிருக்கவும், விசேஷமாய் மரணப் படுக்கையிலிருப்பவர்கள் ஆறுதலடையவும், அவர்கள் சர்வேசுரனோடு ஐக்கியமாகவும், அவருடைய திருச் சித்தத்துக் கமைந்து தங்கள் ஆத்துமத்தை அவருக்கு ஒப்படைக்கவும் இப் புத்தகம் உதவுமென்பதற்கையமில்லை. வேண்டியவர்கள் யாழ்ப்பாணம் அர்ச். சூசையப்பர் அச்சியந்திரசாலை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**புதுவை குருமடம்.**—சென்றமே 19-ந் தேதி சனிக்கிழமையன்று மிகவும் வந்திக்கத்தக்க புதுவை அதிமேற்றிராணியார் அவர்களால் ஷை மடத்தின் வித்தியார்த்திகளிற் சிலருக்கு குருப்பட்டமும் சிலருக்குக் குருப்பட்டத்துக்குத் தாழ்ந்த வெவ்வேறு பட்டங்களு மளிக்கப்பட்டனவென்று கேள்வியுற்று சந்துஷ்டியடையலானோம். அவர்களுடைய நாமதேயங்களாவன:—மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். உவில்லியம் மாத்தியூ தெக்ஸெய்ரா (Willam Mathew Texeira) என்பவர் குருப்பட்டமும், சங். இக்னேஷஸ் லோபோ (Ignatius Lobo) என்பவர் டீக்கன் பட்டமும் பெற்றார்கள். கோயம்பத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். மார்ஷல் குருசாமி (Martial Gurusamy,) என்பவரும், புதுவை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். பிரான்சிஸ் ஈசாக்(Francis Isaac,) சங். G.M. சவிரியப்பா(G.M. Xaveriappa) என்பவர்களும், மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். ஆன்றனிதிசூசா(Antony D' Souza,) சங். லாரென்ஸ் மஸ்காரெஞ்ஞாஸ்(Laurence Mascareinhas) ஆக இவர்கள் ஐவரும் சப்டீக்கன் பட்டம் பெற்றார்கள். புதுவை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். R. M. அனந்தும் (R. M. Anandou,) மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். விக்டர் பர்ட்டாடோ (Victor Furtado,) சங். செபஸ்தியான் பெர்னாண்டெஸ் (Sibastian Fernandez) என்பவர்களும், கோயம்புத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். R. ஆரோக்கியசாமி (R. Arokiasamy) என்பவரும் இதர சில்லறைப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அதுபோல கண்டி குருமடத்திலும் 46-பேர் குருபட்டத்தைச் சேர்ந்த பற்பல பட்டங்களைப் பெற்றனரென்றும் சொல்லப்படுகிறது. இவர்கள் எல்லோரும் சரீர சுகமும், திடமும் பெற்று திருப்பணி புரியக் கடவுள் கிருபைபுரிவாராக.

**தளரா விசுவாசத்தினாலுண்டான பலன்.**—எதெல் பெர்கா என்ற ஓர் கன்னியாஸ்திரி யம்மாளால் வாலிப வயதும் அழகுமுடைய ஓர் பெண் சென்ற வருஷம் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்தப்பட்டு வந்தாள். இதை யறிந்த அவளுடைய பந்துக்கள் அவளுக்குச் செய்துவந்த நிர்ப்பந்தம் கொஞ்சமல்ல. ஆயினும் தான் கொண்ட எண்ணத்தில் அவள் பாறைபோல அசையாதிருந்தபடியால், அவளைத் தங்கள் பதிதப் பாதிரியாரிடம் ஒப்படைத்தார்கள். அந்தப் பாதிரி அந்தப் பெண்ணின் கருத்தைக் கலைக்க பட்டபிரயாசையெல்லாம் வீணாயிற்றென்று கண்டு, ஷைச் சர்ச்சு பாதிரியாயிருந்த தனது குமாரனிடம் அவளை யனுப்பிவைத்தான். அவன் அவளுடைய ரூபலாவண்யத்தைக் கண்டு மயங்கித் தனக்கு வாழ்க்கைப்படும்படி

அவளைக் கேட்டான். அவள் கூடவே கூடாதென்று அதை மறுத்துவிட்டாள். இதனால் அவன் சலிப்புற்று யுத்த முகத்தினின்று போராடுபவர்களை விசாரிக்கும் பாதிரியாராய்ப் போய், ஒன்றரை மாதஞ் சென்று வீட்டுக்குத் திரும்பிவந்து மறுபடியும் அப்பெண்ணின் சம்மதத்தைக் கேட்டான். அப்புண்ணியவதியோ முன்போலவே கலியாணத்தை மறுத்துவிட்டதுமல்லாமல், தனது ஜெபமாலையை அவன் கையில் கொடுத்துத் துரிதமாய்ப் படைமுகத்துக்குப் போகும்படி அவனை யனுப்பிவிட்டாள். அப்படியிருக்க, ஒருநாள் அங்கு விழுந்து வெடித்த ஒரு குண்டினால் அவனுடைய இரண்டு கால்களு முறிந்துபோகவே கீழே விழுந்துவிட்டான். அவனைத் தூக்கிப்போக வந்தவர்களிடம் ஓர் கத்தோலிக்குக் குருவை யழைத்து வரும்படிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதின்பேரில், ஓர் பிராஞ்சு போர்வீரர் அவரை அணுகி "நான் கத்தோலிக்குக் குருதான், உனக்கு என்னவேணும்?" என்று அவனைக் கேட்டார். அதற்குக் காயம்பட்ட பதிதபாதிரி "நான் சாகப்போகிறது நிச்சயம், கூடிய சீக்கிரத்தில் எனக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்" என்று ஞானஸ்நானம் பெற்று, ஒரு அர்ச்சியசிஷ்டவரைப்போல் காலஞ் சென்றான். அவனுடைய ஆத்தும இரட்சணியத்துக்குக் காரணமாயிருந்த அந்த வாலிபப் பெண்ணோ, ஓர் கன்னியாஸ்திரி மடத்தில் நவ கன்னியாஸ்திரி அந்தஸ்திலிருக்கிறாள்.

---

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

ப. ர்.

### ஜனன அறிக்கை.

#### தூவிலாதுப்பு.

எனக்குப் பத்துவருஷ காலமாக குழந்தையில்லாதிருந்து அர்ச். தேவமாதா, சூசையப்பர், அந்தோனியார், அன்னம்மாள், சுவக்கீன், சேசுவின் சிறிய புஷ்பம் இவர்களின் மூலமாய்ச் சேசுவின் திரு இருதயத்தை வேண்டிக்கொண்டபின் என் மனைவி கர்ப்பவதியாகிப் பிரசவ காலத்தில் மிக்க வேதனைப்பட்டபடியால் டாக்டருக்கு ஆள் அனுப்பியானபின், சேசுவின் திரு இருதயத்தைப்பார்த்து டாக்டர் வருமுன் பிரசவித்தால் நல்லாயனில் பிரசுரஞ் செய்வேனென்று நேர்ந்துகொண்டேன். அப்படியே டாக்டர் வருமுன் ஓராண் குழந்தை பிறந்தது. சேசுவின் திரு இருதயத்துக்கு எப்போதும், தோத்திரமுண்டாகக்கடவது.

இப்படிக்கு,
பி. ஜோசேப்.

---

#### தூத்துக்குடி.

பரிசுத்த திருக்குடும்பத்தின் கிருபையாலும் அர்ச். பிரான்சிஸ் சவேரியார் முனீந்திரரின் வேண்டுதலினாலும் நிகழும் 1915-ம் ௵ டிசம்பர் ௴ 3௳ இரவு 7-மணிக்கு எனதருமை மனைவி தோன் மரியசூசைமச்சாது ஓராண்மகவைப் பெற்று நாளது ௴ 11௳ யாகிய சனிவாரமன்று திவ்ய சந்தமரியதஸ்நேவிஸ் ஆண்டவளின் தேவாலயத்தில் ஸ்ரீமான். J. X. Fernandez அவர்களும் ஸ்ரீமதி மரிய வியாகுலம் பீரிஸ் அவர்களும் ஞானத்தகப்பன், ஞானத்தாயாக நின்று இராஜரிஷி M. J. Pinto சுவாமிகளால் Joseph Maria Francis Benedict என்ற நாமகரணமிடப்பட்டு திருச்சபை யாசாரப்படி ஞானதீட்சை கொடுக்கப்பட்டது. தாயுஞ் சேயுஞ் சுகம். இதனைக் கண்ணுறும் எம் நேசரனைவோரும் அப்பாலகனைத் தேவனாசீர்வதித்து, நற்பயிராய் வளர்த்து, நீடிய ஆயுளையும் நித்திய சுகசெல்வபாக்கியத்தையும் அருளும்படி அமல சுதனை மன்றாடப் பிரார்த்திக்கின்றேன்.

தூத்துக்குடி 18—12—1915 } இங்ஙனம்
S. T. Fernandez.

---

#### வேம்பார்.

திரியேக பரமனருளால் எனது சகோதரர் கீ. ச. மா. தங்கசாமிபெருணாந்தீஸ் துணைவியும், சிலோன் பட்டணங்களில் பலவித வர்த்தகஞ் செய்யும் மகா-ா-ா-ஸ்ரீ ச. அ. அய்யாத்தம்பி தமேல் அவர்களின் இஷ்ட புதல்வி மரியமர்கரீத்தம்மாள் தமேல் பர்ணாந்து, நவம்பர் ௴ 25௳ வியாழக்கிழமை பிற்பகல் 3-40 க்கு சேசுவின் திரு இருதய சகாயத்தால் தலைக்குழந்தையாகப் பெண்மகவைப்பெற்று மரியசந்தரினம்மாள் பெருணாந்து தமேல் என்று நாமகரணஞ் சூட்டப்பட்டது. தாயும் சேயும் நல்ல சுகசெல்வசீவியராய்ச் சீவிக்கும்படி கருணாகரக் கடவுள் கருணை புரிவாராகவும்.

நீ. யுவானி. அந்தோனிப் பெருணாந்தீஸ்.
அருமைக் குழந்தையின் பெரிய தந்தை.



### நன்மரண அறிக்கை.

#### தூத்துக்குடி.

எனது அருமைப்பிதா சவேரியர் அந்தோனி சின்னத்தம்பி பெர்ணாந்தீஸ் அவர்கள் கொஞ்சகாலமாக அசௌக்கியமுற்று, கடைசியாக சகல தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்று, இன்று காலை 8-மணிக்கு என்னையும் என் சகோதரர், சகோதரிகளையும் பரிதபிக்கவிட்டு பரலோகப் பிராப்தியானதைத் தெரிவித்து, அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளுகின்ற,

7-12-15 மணல் தெரு தூத்துக்குடி } பிலிப்பு பேர்ணாந்தீஸ்.

---

#### மொம்பாசா.

35-வது பட்டாளத்து பென்ஷன் அவுல்தாரும், சென்னை அஷ்ட அவதானம் பாப்பையா மாணாக்கரும், ஆயுள்வேத பண்டிதரும், சென்னை, புரசை, வடமலைப்பிள்ளை தெருவு, 37-வது நம்பர் வீட்டில் வசித்தவரும், தற்போது ஐதராபாக் டெக்கனைச் சேர்ந்த ஐதர்குடாவில் வசித்தவருமாகிய என் அருமை மாமனார், C. Antiock, 1915 வருஷம் அக்டோபர் மாதம் 26௳ இரவு 8-15 க்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இதைக் கண்ணோக்கும் நண்பர்கள் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., ஒரு பிரி., ஒரு திரி. வேண்டிக்கொள்ளும்படியாய்க் கேட்டுக்கொள்பவனாகிய இறந்தவரின் மருமகப்பிள்ளை,

S. Davasagayam, Jemadar,
Indian Adjutant, 63 P. L. I.

---

#### வேம்பார்.

ஐயா, எனக்கு ஊரிலிருந்து வந்த கடிதத்தால் எனது தமையனார் மரிய ஆரோக்கியம் தவேய்ர அவர்களின் மனைவியும் எனது நேச மதினியாருமாகிய மரியமிக்கேலம்மாள் தெக்குரூஸ் பிரசவ நோயால் குழந்தை பெறமாட்டாமல் கடின வேதனைப்பட்டு நவம்பர் ௴ 7௳ ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 7-மணிக்குக் கடைசி தேவத்திரவிய அநுமானங்களையும் குறைவின்றிபெற்று தனது ஆத்துமாவைப் படைத்தோன் வசம் ஒப்புவித்து, சேசு மரிய சூசை என்னும் திருநாமங்களைப் பத்திவிசுவாசத்துடன் உச்சரித்து, தனது அருமை மக்களையும், நேச பத்தாவையும் இக்கண்ணீர் கணவாயில் பரதவிக்க விட்டுப் பரலோக பிராப்தியானாள். இதைக் கண்ணுறும் கனவான்களே, இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளும்.

Manuel Davaira,
Kandy

---

#### போல்லிபெற்று.

மைசூர்மாநகர் அர்ச். அன்னம்மாள் தெருவின் வாசியாகிய மகா-ா-ா-ஸ்ரீ, கனம் K. மிக்கேல் பிள்ளையவர்களின் செல்வப் புத்திரியும் South Coorg, Polli Betta, Grove தோட்டத்தின் ரைட்டராகிய M. V. துரைசாமிபிள்ளையின் பிரிய மனைவியுமாகிய சௌ. அன்னம்மாள் கொடிய இருமல் வியாதியால் சென்ற சிலகாலமாய்த் துன்புற்றிருந்து, வைத்தியர்களாலும் டாக்டர்களாலும் செய்யாத சிகிச்சைகளெல்லாம் செய்யப்பட்டு, சௌக்கியமடையாமல் நிகழும் 1915௵ டிசம்பர் ௴ 9௳ வியாழக்கிழமை மாலை 6-மணிக்கு, தனது 21-ம் வயதில் கடைசித்தேவத்திரவிய அநுமானங்கள்யாவும் குறைவறப்பெற்று, பெற்றோர் உற்றோரையும் காதலரையும் மற்றுமுள்ள பந்துக்களனைவோரையும் விட்டு, சேசு மரியே சூசை என்னும் நாமத்தை உச்சரித்து இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகப் பிராப்தியாயினள். அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு மைசூர், அர்ச். சூசையப்பர் கோவில் விசாரணைக் கல்லறையில் அவள் சடலம் பந்துமித்திரராகிய அநேக ஜனங்களால் புடைசூழப்பட்டு, அவ்விடத்தும் ஆகவேண்டிய சடங்கு நிறைவேறியபின் பூஸ்தாபகமாயிற்று. இதைக் கண்ணுறும் சகோதரர்களே இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக 1-பர., 1-பிரி., 1-திரி, வேண்டிக்கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:
அருமை சகோதரியை இழந்து
பாதவிக்கும் சகோதரன்,
B. Joseph.

---

## அதிமுக்கிய கவனிப்பு.

இதனால் யாவருக்கும் அறிவிப்பது யாதெனில் எங்களிடத்தில் சீமை கர்மேல் உத்தரீயம், நீல உத்தரீயம், உத்தரீய சுரூபங்கள் பெரிய சயிஸ், சின்ன சயிஸ், தேங்காய்க் கொட்டை ஜெபமாலைகள் பலதினுசு, அமலோற்பவ பொக்கிஷம் இவை முதலியவைகள் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதினால் வி. பி. இல் அனுப்பப்படும்.

தி. வே. மரியானந்தம் பிள்ளை, கதவு நெ. 3, கோமாகுடி தெரு, பாலக்கரை, திருச்சினாப்பள்ளி.

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌண்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக் கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 3,807-8-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால், அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அனதக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவருங் கொடுத்தால் பெருந் தொகை யாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

| | |
|---|---|
| புதுப் பேட்டை, சென்னை. | உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில், |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,807 | 8 | 6 |
| Mr. அற்புதமரியம்மாள், (பங்களூர்) | 5 | 0 | 0 |
| ,, ஓர் நன் கொடை | 10 | 2 | 0 |
| ,, ஆனந்தநாதபிள்ளை | 1 | 0 | 0 |
| ,, Powel | 1 | 0 | 0 |
| ,, Rev. Bro. J. A. அந்தோனிசாமி (ஜபல்பூர்) | 1 | 15 | 0 |
| Mr. J. பகவன்த்ராஜ் (மதராஸ்) | 5 | 0 | 0 |
| ,, T. I. ராஜாச்சாரி (செவ்வாப் பேட்டை) | 0 | 4 | 0 |
| ஆகமொத்தம், | 3,831 | 13 | 6 |

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்.

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து எமது கஷ்ட நஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ஞு ஏப்ரல் மாத முதல் 1915-ஞு மார்ச்மீ 31வ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும், விசாரணைக் குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியைப் பூர்த்திக்குக்கொண்டுவரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்குங் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப்பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனுளியாரேனும் என்பதைச் சிந்தித்து எமதுபேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள்பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்யவேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,

எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஊழியனாகிய, விசாரணைக் குரு

ஜே. ஞானதீக்கம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஷை தருமத்துக்காக ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 883 | 0 | 0 |
| Mr. சதானந்தபிள்ளை. செல்வபுதூர் | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம் ரூ. | 884 | 0 | 0 |



The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு மிகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10: 11-16.)

புத்தகம் 14. } பெப்ரவரி, 1916. { இலக்கம் 2

## THE CATHOLIC INDIAN ASSOCIATION.

## கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

இந்தத் தென்னிந்தியாவிலுள்ள சுதேசக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களின் இலௌகிக பொது நன்மைக்காக ஸ்தாபிக்கப்பட்டது ஷை சங்கம். ஒருவரை யொருவர் மேற்கொள்ளப் போட்டி மிஞ்சிய இக்காலத்தில், கல்வி, நாகரிகம் முதலிய மேம்பாடுகளில் மிகவும் பின்னிடைந்திருக்கும் நம்மவர்களுக்குள் இத்தகைய பரோபகார சங்கம் ஒன்று அத்தியாவசியகம் எனக் கருதியே, ஷை சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இது ஏற்படுத்தப் பட்டு பதினெட்டு வருஷங்கள் ஆகின்றன. இந்தப் பதினெட்டு வருஷங்களாய் இச் சங்கம் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு அநுகூலமான பொது நன்மை என்ன செய்திருக்கின்றது என்று கேட்பவர்களுக்கு, இன்ன நன்மை யென்று சுட்டிக்காட்டயாதொன்றும் காணோம். சாமான்ய கண்களுக்குப் புலப்படக்கூடிய நன்மை ஒன்றுமில்லைப் யாயினும், இப்பேர்ப்பட்ட சங்கங்களின் முக்கிய பொது நோக்கங்களாகிய, ஒற்றுமை, பரஸ்பர நேசம், பொது நலப்பிரியம் முதலிய கூட்டுறவு நலங்களும், ராஜாங்கத்திற் செல்வாக்கும் நம்மவர்களுக்கு முன் னிருந்ததைவிட இப்போது விருத்தியாயிருக்கின்றனவென்பது எவராலும் மறுக்கப்படக்கூடாதது. மற்றபடி சங்கத்தின் இதர கருத்துக்களாகிய சத்திரம் சாவடி கட்டுதல், கல்விச்சாலை, பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தல், அநாத பிள்ளைகள், விதவைகள், வயது சென்றவர்கள் முதலிய ஆதரவற்றோருக்கு அன்னசாலை ஏற்படுத்துதல், ஏழை மாணாக்கர்கள் கல்வி பயில உபகாரச்சம்பளம் கொடுத்தல் முதலியவைகள், இன்னும் ஏட்டுச் சுரைக்காயாய் இருக்கின்றனவே ஒழிய அவைகளில் ஒன்றேனும் ஈடேறினபாடில்லை. ஏனெனில், அவைகளில் ஒன்றையாவது செய்வதற்கு வேண்டிய பணமில்லை. சங்கத்து அங்கத்தினர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய சந்தாக்களைச் சரியாய்ச் செலுத்துவதுமில்லை. பொதுப்பட நமது கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் பரம ஏழைகளாயிருக்கிறார்களாயினும், அவர்களுக்குள் பணக்காரர் இல்லாமற்போகவில்லை. இவர்களாயினும் இந்தப் பொதுநலக் காரியங்களுக்

காக முன்வந்து தாராளமாய்க் கொடுத்து, காரியங்களை ஈடேறச் செய்கிறார்களோ? அதுவுமில்லை. ஆகவே, நமது பொது நலக் காரியங்களைப் பார்க்கப்போனால் எல்லாம் "இல்லை, இல்லை" என்னும் பாட்டாயிருக்கிறதேயொழிய "ஆம், உண்டு" என்பதற்கு வழியில்லை. இதற்குக் காரணங்களை ஆராயப்போனாலோ அங்கேயும் "இல்லை, இல்லை" யென்றே முடியும். ஆம், நமது கத்தோலிக்குச் சுதேசக் கிறிஸ்துவர்கள் தங்களது நாகரிக நிலைமையை உள்ளபடி உணரவில்லை. அதை விருத்திசெய்து, மற்ற வகுப்பினர்களைப்போல் தாங்களும் முன்னுக்கு வரவேணுமென்ற ஆசை அவர்கள் மனதில் இன்னும் உதிக்கவில்லை. அவர்களிடத்தில் சுய நலப்பிரியந் தவிர பொது நலப்பிரியமே யில்லை. இதுவே நமது தற்கால நிலைமை. இப்படி யிருந்தால் எப்படி உற்சாகம் பிறக்கும்? பணம் எப்படிசேகரமாகும்? பணமின்றி மேற்கூறிய பொது நலக் காரியங்கள் எப்படி ஈடேறும்? மந்திரத்தினால் மாங்காய் விழுமா?

ஆயினும், சென்ற டிசம்பர் 29-ம் தேதி, சென்னையைச் சேர்ந்த மயிலாப்பூரில் நிறைவேறிய பொதுக் கூட்டத்தில் நடந்த நடவடிக்கைகளைப்பற்றி யோசிக்குமிடத்தில், நமது பொது ஜன சமூகத்தின் எதிர்காலமானது ஒருவாறு நல்ல காலமாயிருக்குமென்று ஊகிக்க இடமுண்டு. எப்படியெனில், அக்கூட்டத்தில் நமது கத்தோலிக்குக் குடும்பம் ஈடேறுவதற்கான மூன்று முக்கிய விஷயங்களைப்பற்றி, இதுவரையிலும் விட, விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. இவைகளைப் பிரேரபனை செய்து பேசினவர்களும், இவைகளை ஆமோதித்தவர்களும் வெகு உற்சாகமாகவே பேசினார்கள். அந்த மூன்று விஷயங்களாவன: (1) சுதேசக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்குள் உயர்தரக் கல்வியை விருத்திசெய்தல் (2) கத்தோலிக்கு மாணாக்கர்களும், மற்ற முசாபரிக் கிறிஸ்துவர்களும் தங்கியிருக்க ஒரு விடுதி சென்னையில் ஸ்தாபித்தல் (3) சுதேசக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுடைய பொது அபிப்பிராயங்களை வெளியிடவும், அவர்களுக்கு உரித்தானதும் சம்மந்தப்பட்டதுமான பற்பல விஷயங்களைப்பற்றி பகிரங்கமாய்ப் பேசவும், மற்றபடி அவர்கள் அறியத்தக்க சமாசாரங்களை அறிவிக்கவும் சங்கத்தின் பத்திரிகை ஒன்று பிரசுரித்தல் ஆகிய இவைகளே. இம்மூன்று காரியங்களையும் சித்தி பெற முடித்துவைக்க கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. இனி நடக்க வேண்டிய விஷயங்கள் யாவும், இந்த கமிட்டியாரையும் கத்தோலிக்கு ஜன சமூகத்தையும் பொருத்ததா யிருக்கின்றன. கமிட்டியார்கள், தங்கள் கஷ்ட நஷ்டங்களைப் பாராமல், விடா முயற்சியாய் எடுத்த காரியத்தை முடிக்கப் பிரயாசைப்படவேண்டும். நமது கிறிஸ்துவர்கள் அவர்களுக்கு உடந்தையாயிருந்து, இல்லை யென்னுமல் தங்கள் தங்களாலானமட்டும், பண உதவி செய்து காரியத்தை ஈடேறச் செய்யவேண்டும். இப்படி எல்லோரும் ஒரே வைராக்கியமாய் நின்று "தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்" செய்த தீர்மானங்களை முடிக்கப் பிரயாசைப்படாமற் போவார்களேயாகில், இன்னும் நமக்கு "விடியுங்காலம்" வரவில்லை யென்றே சொல்லவேண்டும். ஏனெனில் இந்துக்கள், மகம்மதியர்கள் முதலிய வகுப்பினோர்கள் விசேஷமாய் நமது பிரிவினைக்காரர்களாகிய புரோடெஸ்டாண்டார்கள் நாளு விஷயத்திலும் அடைந்திருக்கிற அபிவிருத்தியைப் பார்க்குமளவில், கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களாகிய நாம் அன்னோர்களுக்கு அகவர்தமும் அடிமைகளாய் நசுக்கப்படுவோம் என்றே நினைக்கவேண்டியதாகிறது. ஏனெனில், அன்னோர்களுக்குள், கல்வியானது அபாரமாய்ப் பெருகி வருகிறது. யாதோர் குடும்பம், வகுப்பினர் அல்லது நாட்டார் விருத்தியடைவதற்கு மூலாதாரமாகிய பெண் கல்வியும் அவர்களுக்குள் ஆச்சரியத்துக்குரிய விதமாய் அபிவிருத்தியடைந்து வருகிறது. மெற்றிரிக்குலேஷன், எப்.ஏ., எல். எம். அண்டு எஸ்., பி.ஏ., பி.எல்., எல்.டி., எம்.ஏ., எம். பி. சி. எம். முதலிய பரிட்சைகளைக் கொடுத்து கௌரதா பட்டங்கள் பெற்ற பெண்மணிகள் அவர்களுக்குள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்! பெண்களே இவ்வளவு அபிவிருத்தி யடைந்து வருகையில் ஆண்களைப்பற்றி விவரிக்க வேண்டியதேயில்லை. அன்னோர்கள் இராஜாங்கத்தில் அநேக உயர்தர உத்தியோகங்களை வகித்துவருகிறார்கள். அதனால் அவர்களுக்குச் செல்வமும் செல்வாக்கும் வளர்பிறைச் சந்திரனைப்போல் தினே தினே விருத்தியாகி வருகின்றன. இவ்வாறு இதர வகுப்பினோர்கள் முன்னுக்கு வந்துகொண்டிருக்க, நாம் நெடுநித்திரையி லிருப்போமானால், கடைத்தேறும் வழி யெங்கே? சுதேச கத்தோலிக்குக் கிறிஸ்துவ கனவான்களே! தனவான்களே! இன்னு மற்றவர்களே! எழுந்திருங்கள், எழுந்திருங்கள், எல்லோரும் எழுந்திருங்கள். நாம் ஏற்கெனவே நெடுங்காலம் நித்திரையிலிருந்துவிட்டோம். இனி நித்திரைபோக ஒண்ணாது. எழுந்திருந்து மேற்சொல்லிய மூன்று விஷயங்களுக்கும் கை கொடுங்கள். உங்கள் உங்களாலான உதவி செய்யுங்கள். இதை வனாந்தரத்தில் கூவும் விழல் ஒலியாக்கி விடாதேயுங்கள். இப்போது நாம் அசட்டையா யிருந்துவிட்டால் பின்னிட்டு நாம் மிக்க கஷ்டதசை யடையும்படி நேரிடும்; பின்னால் நாம் அதுதாப்பப்பட்டுக் காரியமில்லை. நமது கத்தோலிக்கு ஜன சமூகம் முன்னுக்கு வரும்படியானவழிக்கு வேலை செய்யுங்கள். நமக்கு நாமே உதவிசெய்து கொள்ளவேண்டும். புறத்தியார் உதவியை நாம் எதிர் பார்ப்பதில் பிரயோசனமில்லை. "வானம்பாடியும் அதன் குஞ்சுகளும்" என்கிற கதையாய் முடியும். நாம் புறத்தி உதவியைப் பார்த்துப் பார்த்துத் தானே இந்தக் கதியிலிருக்கின்றோம். தன் முயற்சியே தக்க பலன் தரும். "தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்" இப்போது எடுத்திருக்கும் மூன்று காரியங்களுக்கும் கைகொடுங்கள். அச்சங்கத்தில் ஏராளமாய்ச் சேர்ந்து அதன் சொற்ப சந்தாவைத் தவறாமல் செலுத்தி அதைச் சன்மானியுங்கள். இப்படிச் செய்தால் அது தொடங்கியுள்ள காரியங்கள் அனைத்தும் கைகூடும். நமது சுதேசக் கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் கூடிய சீக்கிரத்தில் நலம் பெற்று வாழ்வார்களென்பதற் கையமில்லை.

---

தேவமாதாவுக்குப் பிரியமாயிருக்கும்படி விசேஷித்த விதமாய் அவளுடைய பரிசுத்த தனத்தைக் கண்டு பாவித்த கெட்ட நினைவெல்லாம் தள்ளுவதுமன்றி, அசுத்த பாவச் சோதனைகள் அல்லது பாவத்துக்கு ஏதுவான சமயங்கள் வரும்போது அவளுடைய அடைக்கலத்தையும் அணடிப்போவேன்.

(அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர்.)



# THE IMPORTANCE OF THE EXAMINE OF CONSCIENCE.

# ஆத்துமசோதனையின் அவசரம்.

---

ஆத்தும சோதனை நாம் புண்ணியத்தில் வர்த்திப்பதற்கு முக்கிய பலாபலனுள்ள வழிப்பாடாகும். இதினாலேயே நாம் ஆத்தும சோதனை செய்யவேணுமென்று அர்ச்சியசிஷ்டவர்கள் அக்கரையோடு போதித்திருக்கிறார்கள். சந்நியாசிகளுக்கு ஒழுங்கு எழுதித்தந்த பூர்வீக கிரந்த கர்த்தாக்களுக்குள் ஒருவரான அர்ச். பசிலியார் இராத்திரிதோறும் ஆத்தும சோதனை செய்யவேணுமென்று கற்பித்திருக்கிறார். அர்ச். அகுஸ்தீன் தமது ஒழுங்கில் கற்பித்திருக்கிறதும் இதுவே. அர்ச். அந்தோனியார் தமது மாதிரிகையினாலே சந்நியாசிகளுக்கு இதைப் போதித்ததுமன்றி, ஆத்தும சோதனையிலே அவர்களைப் பழக்கிக்கொண்டும் வருவார். அர்ச். பெர்நர்துஸ், அர்ச். பொனவெந்தூர், காசியான் முதலியவர்களும், சந்நியாச சபையை ஏற்படுத்தினவர்கள் எல்லாரும், ஞான சிவிய கிரந்த கர்த்தாக்கள் அனைவரும் ஆத்தும சோதனை செய்யவேணுமென்று நிரூபித்திருக்கிறார்கள். "உங்கள் கட்டிலில் மனஸ்தாபப்படுங்கள்" என்று தேவ சங்கீதத்தில் சொல்லி யிருக்கின்றது. இதின்பேரில் அர்ச். கிறிசோஸ்தொமுஸ் வியாக்கியானம்பண்ணி இராத்திரி படுக்கப்போகுமுன் ஆத்துமசோதனை செய்யவேணுமென்று சொல்லுகிறதுமன்றி, அதற்கு நேர்த்தியான இரண்டு நியாயங்களையும் எடுத்துக்காட்டி யிருக்கிறார். முதலாவது, முந்தினநாளில் நாம் கட்டிக்கொண்ட குற்றங்களை மறுநாளில் விலக்கி நடப்பதற்கு இந்த ஆத்துமசோதனை உதவியாயிருக்கும்; ஏனென்றால், சாயங்காலம் நாம் ஆத்துமசோதனைபண்ணி மகா மனஸ்தாபப்பட்டு இனிமேல் குற்றங்குறை செய்யமாட்டோமென்று உறுதியான பிரதிக்கினை பண்ணியிருந்தால், இது மறுநாளில் அந்தக் குற்றத்தில் விழாதபடிக்குக் கடிவாளம்போல இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. இரண்டாவது, நாம் இன்றைக்குத்தானே ஆத்துமசோதனை செய்து

நமக்குத்தானே கணக்குக் கொடுக்கவேணுமென்கிற நினைவானது நாளடவிலே நாம் எச்சரிக்கையாயிருந்து நமது நடக்கையின்பேரில் கவனமுற்றிருப்பதற்கு உதவியாயிருக்கும். ஒழுங்காய் நடக்கிற பெரிய எசமான் ஒருவன் தன் மேஸ்திரி அசட்டைத்தனமாயிருந்து தாறுமாறாய்ச் செலவுபண்ணாதபடிக்கு ஒருநாளாகிலும் அவனிடத்தில் கணக்குக் கேளாமல் விடமாட்டான். அப்படியே நமது அசட்டைத்தனத்தினாலும், மறதியினாலும் நமது நடக்கையில் தாறுமாறு உண்டாகாதபடிக்குத் தினந்தோறும் ஆத்துமசோதனைபண்ணி, நம்மிடத்தில் நாமே கணக்குக் கேட்பது நலமென்று அர்ச். கிறிசோஸ்தோமுஸ் அருளிச்செய்தார். அர்ச். எபிரேமென்பவரும், அர்ச். கிளிமாக்கருளப்பரும் சொல்லுமாப்போல, வியாபாரிகள் தினந்தோறும் தங்களுக்கு வரும் லாபநஷ்டங்களைக் குறித்துக்கொண்டு, நஷ்டம் வந்திருந்தால், உடனே அதைப் பரிகரிக்கப் பிரயாசைப்படுவார்களல்லவோ? அப்படியே நாமும் நமது ஈடேற்றமாகிற அலுவலில் வரும் லாபநஷ்டத்தைத் தினந்தோறுஞ் சோதித்துப் பார்த்து நஷ்டத்தை உடனே பரிகரிக்கவேண்டும். இல்லாவிட்டால் நஷ்டத்தின்மேல் நஷ்டம் வந்து முதலையும் முழுகடிக்கும். அர்ச். தொரேத்தேயர் ஆத்துமசோதனையினால் வரும் ஓர் உச்சிதமான பிரயோசனத்தைச் சொல்லிக்காட்டியிருக்கிறார். அதென்னவென்றால், தினந்தோறும் ஆத்துமசோதனை நன்றாய்ச் செய்யப் பழகி, அநுதினம் நமது குற்றத்தின்பேரில் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு வந்தால், துர்க்குணம் ஆத்துமத்தில் வேரூன்றிக் கெட்டவழக்கம் அதிலே பலப்படாதபடியிருக்க இதுவே நல்ல உபாயமாகுமென்றார்.

"சோம்பேறியினுடைய நிலத்தின் வழியாகவும், புத்தியீனனுடைய திராட்சதோட்டத்தின் வழியாகவும் போனேன். அதிலே எருக்கும் குருக்கும் ஏகமாய் முளைத்து முட்செடி முழுதும் மூடிச் சுற்றுமதில் சாய்ந்து இடிந்துகிடந்தது" என்று ஞானியானவர் வசனித்திருக்கிறார். ஆத்தும சோதனையை அக்கறையோடு செய்யாதவர்களுடைய ஆத்துமத்தை அர்ச்சியசிஷ்டவர்கள் மேற்சொன்ன நிலத்துக்குந் திராட்சத்தோட்டத்துக்கும் ஒப்பிட்டிருக்கிறார்கள். ஆத்துமசோதனை செய்யாதவர்களுடைய இருதயம் தரிசாய்க்கிடந்து முள்ளும் முறடும் ஏகமாய் மண்டிக்கிடக்கிற திராட்சத் தோட்டம்போலாகும்; ஏனென்றால், நமது கெட்ட சுபாவம் முள்ளும் முறடும் முளைத்திருக்கும் பாழ்நிலத்துக்கு ஒப்பாகும். ஆகையால் எப்போதும் கையில் களைக்கொட்டைப் பிடித்துக் கொத்திப் பிடுங்கி எறிவதே எந்நேரமும் நமக்கு வேலையாயிருக்கவேண்டும். ஆத்துமசோதனையினால் நாம் செய்கிறது இதுவே. துர்க்குணம், கெட்ட ஆசாபாசம் முதலியவைகள் முளைக்கத் துவக்கின மாத்திரத்தில் அவைகளை அடியோடே வெட்டிப் பிடுங்கி, ஆகாத வழக்கம் ஆத்துமத்தில் வேரூன்றாதபடிக்குச் செய்கிறது ஆத்துமசோதனையாமே.

ஆனால் ஆத்துமசோதனை எவ்வளவு முக்கிய பலாபலனுள்ளதென்று அர்ச்சியசிஷ்டவர்களே அறிந்துகொண்டதுமல்லாமல், பல அஞ்ஞான சாஸ்திரிகளும் தங்களுடைய சுபாவ புத்தியினாலேயே இந்த நிச்சயத்தைக் கண்டுபிடித்துக் கொண்டார்கள். அர்ச். எரோனிமுசும் அர்ச். தோமாசும் சொல்லுமாப்போலப் பித்தாகோரென்பவன் தன் சீஷர்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த முக்கியமான புத்தியாவது: "தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நான் இன்றைக்கு என்னசெய்தேன்? அதை எப்படிச் செய்தேன்? நான் செய்யாமல் விட்டுவிட்டது என்ன? என்று இந்த மூன்று காரியத்தையும் கொஞ்சநேரம் சோதித்துப் பார்த்து எல்லாம் நன்றாய்ச் செய்திருந்தால் சந்தோஷப்படவேணுமென்றும், யாதொன்றைக் கெடுதலாய்ச் செய்திருந்தால் கஸ்திப்படவேணுமென்றும் சொல்லுவான்" என்பதே. சேனேக்கா, புளுத்தார்க்கு, எப்பிக்தெத்து முதலிய பல அஞ்ஞான சாஸ்திரிகளும் போதித்துக்கொண்டுவந்த போதகமும் இதுவே.

அர்ச்சியசிஷ்டவர்களுடைய போதகத்தையும் சுபாவ புத்தியையும் அநுபவ சித்தியையுங் கொண்டு துலக்கமாய் விளங்குகிற இந்தச் சத்தியத்தை அர்ச். இஞ்ஞாசியார் கைக்கொண்டு ஆத்தும சோதனையை மிகவும் கனமாய் எண்ணியிருந்ததினாலே, நாம் புண்ணியத்தில் வர்த்திப்பதற்கு இது மகா உதவியான முக்கிய வழிப்பாடென்று சொல்லியிருக்கிறதுமன்றி, அவர் இவ்விஷயத்தில் விசேஷமான ஒழுங்குங் கொடுத்திருக்கிறார். அவர் ஓரிடத்தில் சொல்லுகிறதாவது: சேசுசபையார் அனைவரும் அநுதினம்



ஆத்துமசோதனை செய்யக் கடவார்களென்றார். வேறோரிடத்தில் ஒருநாளைக்கு இரண்டுவிசை ஆத்துமசோதனை செய்யவேணுமென்று கற்பித்ததுமன்றி, ஆத்துமசோதனை செபத்தியானத்துக்கு மேற்பட்டதென்றும் சொல்லியிருக்கிறார்; ஏனென்றால் நாம் செய்யவேணுமென்று செபத்தியானத்தில் பிரதிக்கினை செய்ததை அதின்பின் ஆத்துமசோதனையில் செய்து முடித்துத் துர்க்குணத்தை வேர்ப்பிடுங்காய்ப் பிடுங்கி ஆசாபாசத்தை அறுத்துத் தள்ளுகிறோம்; இதுவே முக்கியமான காரியம். சேசுசபையிலே ஆத்துமசோதனையை வெகு கனமாய் மதித்திருப்பதினாலே, காலையிலும் மாலையிலும், ஆத்துமசோதனை செய்வதற்காக மணி அடிக்கிறதுண்டு. அந்நேரத்திலே ஒருவரும் ஆத்துமசோதனையை விடாதபடிக்குச் சிரேஷ்டரால் குறிக்கப்பட்ட ஒருவர் அறைக்கறை போய்ப் பார்ப்பது வழக்கம். ஆனால் சேசுசபையில் ஆத்துமசோதனை செய்கிற வழக்கத்தை அர்ச். இஞ்ஞாசியார் ஏற்படுத்தினதுமல்லாமல், சேசுசபையார் தாங்கள் பேசிப் பழகி வருகிற சமுசாரவாசிகளும் ஆத்துமசோதனை செய்யும்பொருட்டுத் தங்களால் இயன்றமட்டும் அவர்களுக்குப் புத்தி சொல்லவேணுமென்றும் சொல்லியிருக்கிறார். ஆகையால் நாம் ஆத்துமசோதனையை வெகு கனமாக மதித்து, இது நாம் புண்ணியத்தில் வர்த்திப்பதற்கு மகா முக்கியமான வழிப்பாடென்று எண்ணித் தினந்தோறும், ஆத்துமசோதனை சரியாய்ச் செய்துகொண்டு வரக்கடவோமாக.

---

## EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

---

அர்ச். லூக்காஸ் முதல் அதிகாரம். (1-4)

1. "நமது மத்தியில் நடந்தேறிய விஷயங்களின் வரலாற்றை ஒழுங்குடன் எழுத அநேகர் முயன்றபடியால்,

2. துவக்க முதல் கண்ணால் கண்டவர்களும், வாக்கியத்தைப் பிரசங்கிக்கிற உத்தியோக முள்ளவர்களுமாய் இருந்தவர்கள் நமக்குக் கையளித்தபடியே,

3. ஆதி முதல் யாவற்றையும் கவனமாய்க் கற்றுக்கொண்ட நானும், உத்தம தெயோபிலே, உனக்கு ஒழுங்குடன் எழுதுவது நலமென்று எனக்குத் தோன்றிற்று.

4. ஏனெனில், உனக்குப் போதிக்கப்பட்டவைகளின் உண்மையை நீ அறிந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றித்தான்."

அர்ச். லூக்காஸ் எழுதிய சுவிசேஷத்துக்கு ஒருசிறப்புப்பாயிரமாய்க் கிரேக் பாஷையில் சிறந்த நடையில் முதல் அதிகாரத்தில் உள்ள இந்த முதல் நான்கு வசனங்களையும் அவர் வரைந்தார் என்று வியாக்கியான சாஸ்திரிகள் கூறுகிறார்கள். இதில் ஐந்து காரியங்களை வெளியாக்கியிருக்கிறாரென்று அல்பெர்துஸ் (Albertus.) எழுதியிருக்கிறார்.

அதாவது: 1. சுவிசேஷத்தை எழுதுவதற்குண்டான அவசரம்.

2. அதில் அடங்க வேண்டிய விசேஷங்கள்.

3. அதை எழுதுகிறவருடைய திறமை, உத்தமகுணம்.

4. அதை எழுதும் விதம்.

5. அதை எழுதுவதில் உண்டான கருத்து, நோக்கம்.

1. நமது மத்தியில் நடந்தேறிய விஷயங்களின் வரலாற்றை ஒழுங்குடன் எழுத அநேகர் முயன்றபடியால்:—இதில் அநேகர் என்றால் யார் என்று நாம் நிச்சயமாய்க் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் தப்பறைகளும் கட்டுக்கதைகளும் நிறைந்த போலி சுவிசேஷங்களை (Apocryphal Gospels.) உண்டாக்கிய அக்காலத்து பதிதர், கள்ள தீர்க்கதரிசிகள் இவ்வார்த்தையால் குறிக்கப்படுகிறார்கள் என்றும் சொல்லலாகாது. அப்போஸ்தலர்கள் அக்காலத்துக் கிறிஸ்துவ ஜன சமூகத்தின் மத்தியில் போதித்த விஷயங்களைக் கேட்டு, அநேகர் அருமையான அக்காரியங்களை இழந்து போகாதபடிக்கு, எழுத்துப் பிரதிகளில் குறித்துக்கொண்டார்கள். சிலர் எழுதப்பிரயாசைப்பட்டார்கள். சிலர் எழுதத் துவக்கியும் சரியாய்ப் பூர்த்தி செய்யாமல் விட்டுவிட்டார்கள். சிலர் திருப்திகரமாய் நிறைவேற்றாமல் போனார்கள். அதற்

காகத்தான் அர்ச். லூக்காஸ் தாமே சுவிசேஷத்தை ஒழுங்காய் எழுதத் துணிந்தார்.

அப்போஸ்தலர்கள் போதித்த வேத விஷயங்களை அக்காலத்து புதுக் கிறீஸ்துவர்கள் எவ்வளவு சாக்கிரதையாயும், பிரியமாயும், எவ்வளவு விசுவாசத்தோடும், மனவேக்கத்தோடும் ஏற்றுக்கொண்டார்களென்றும், அவைகளை மறக்காமல், அல்லது இழந்து விடாமல் பாதுகாக்க எழுத்துமூலமாய்ப் பதிய எம்மாத்திரம் சிரத்தையோடு முயன்றார்கள் என்றும் இந்த முதல் வசனத்தால் தெரியவருகிறது.

நடந்தேறிய விஷயங்களின் வரலாற்றை—அவை எந்த விஷயங்கள் என்றால்,—கிறிஸ்து நாதருடைய சுகிர்த கிருத்தியங்கள், அவர் திருவுளம்பற்றிய சுகிர்த வாக்குப் பிரசங்கங்கள், அவர் செய்த அருமையான புதுமைகள், அதிசயங்களாமே. ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால், சேசுநாதர் இப் பூலோகத்தில் சஞ்சரித்தபோது உலக இரட்சண்ணியத்துக்காகச் செய்த சகல காரியங்களும் தான்.

நடந்தேறிய (Completac) என்னும் இவ்வார்த்தையால், அவ்விஷயங்கள் யாவும், உண்மையாகவே நிறைவேறினவென்று உறுதியாய்க் கூறப்படுகின்றது. தீர்க்கதரிசனங்களின்படி சகலமும் சம்பூரணமாய் நிறைவேறினவென்றும் சொல்லலாம்.

2. துவக்க முதல் கண்ணால் கண்டவர்களும் வாக்கியத்தைப் பிரசங்கிக்கிற அதிகார முள்ளவர்களுமாயிருந்தவர்கள் நமக்குக் கையளித்தபடியே :—

சேசுநாதருடைய பகிரங்க ஜீவிய காலத்தின் ஆரம்பத்திலிருந்து அப்போஸ்தலர்களும் சீஷர்களும் ஆண்டவரோடு கூடவே இருந்தார்கள். அவருடைய புதுமைகளைத் தாங்களே கண்ணால் கண்டார்கள். அவருடைய புத்தி பிரசங்கங்களைக் கேட்டார்கள். சேசுநாதருடைய சீவியத்துக்கு மெய்யான சாட்சிகளாய் இருந்தார்கள். "ஆதி முதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களால் நாங்கள் கண்டதும், தரிசித்ததும், எங்கள் கைகளால் ஸ்பரிசித்ததுமான ஜீவ வார்த்தையைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று அர்ச். அருளப்பர் தாம் எழுதிய முதல் நிருபத்தின் முதல் வசனத்தில் கூறியதை ஆண்டவருடைய மற்ற அப்போஸ்தலர்களும் சீஷர்களும் பூரண உரிமையோடு ஏற்றுக்கொண்டார்களென்று திண்ணமாய்ச் சொல்லலாம்.

இவர்கள் தான் வேதவாக்கியத்தைப் பிரசங்கிக்க ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். அவரால் அனுப்பப்பட்டார்கள். மெஸியாவின் இராச்சியத்தின் சுப சங்கதிகளாகிய சுவிசேஷத்தைப் பூமியின் எத்திசையிலும்போய் சகல ஜாதி ஜனங்களுக்கும் போதிக்க இவர்களுக்குத்தான் தேவ அதிகாரம் அளிக்கப்பட்டது.

ஆகையால், இவர்கள் வாக்குமூலமாய் போதித்தவைகளை, அதாவது: சேசுநாதருடைய சீவிய வரலாற்றை அநேகர் தேவ ஏவுதலின்றி எழுத்துமூலமாய்ப்பதிய முயன்றும் திருப்திகரமாயும் அனுகூலமாயும் அதை முடிக்காததினால் (3) ஆதிமுதல் யாவற்றையும் கவனமாய்க் கற்றுக்கொண்ட லூக்காஸ், தெயோபிலஸ் என்பவருக்கு ஒழுங்குடன் எழுதுவது நலமென்று உணர்ந்தார். சுவிசேஷத்தில் சேர்க்கவேண்டிய சகல காரியங்களையும் லூக்காஸ் வெகு சிரத்தையோடும், சாக்கிரதையோடும் ஆராய்ந்து பரிசோதனைசெய்து, நுணுநுணுக்கமாய்த் தீர விசாரித்துத்தான் அவற்றை எழுதத் துவக்கினார்.

சேசுநாதருடைய முன்னோடியான ஸ்நாபக அருளப்பரின் ஜனன அறிவிப்பிலிருந்து லூக்காஸ் தம் சுவிசேஷத்தைத் துவக்குகிறபடியால், ஆதிமுதல் நடந்த சங்கதிகளைத் தெரிவிக்கிறார் என்று சொல்லத்தகும்.

அநேகர் எழுதினபின் லூக்காஸ் எழுதினார். அவர்கள் திருப்திகரமாயும் செவ்வையாயும், அநுகூலத்தோடும் சுவிசேஷத்தை எழுதி முடிக்காததினால் லூக்காஸ் எழுத தாற்பரியப்பட்டார். ஆனால் எழுதுவதற்குமுன் ஒவ்வொரு காரியத்தையும், விசேஷத்தையும், வர்த்தமானத்தையும் கவலையுடன் ஆராய்ச்சிசெய்தார். நுணுநுணுக்கமாய்ப் பரிசோதித்தார். தம் புஸ்தகத்துக்கு ஓர் அற்பப்பழுதும், குறையும் உண்டாகாதபடிக்கும், எவ்வளவும் யாதொரு பிழையும்நேரிடாதபடிக்கும் வெகு எச்சரிக்கையா யிருந்தார். ஆனால் இவ்வளவு பிரயாசையும் சிரத்தையும் எடுத்து சுபாவபுத்தியால் எல்லாக்காரியங்களையும் ஆராய்ச்சி செய்து சுவிசேஷத்தை எழுதினதினால், இஸ்பிரீத்து சாந்துவின் தேவ ஏவுதலால் தூண்டப்பட்டாரோ இல்லையோ என்று சந்தேகிக்கலாமா? பரிச்சேதம் கூடாது.



இஸ்பிரீத்துசாந்துவின் தேவ ஏவுதல் அவருக்கு முற்றும் இருந்ததென்று சந்தேகமில்லாமல் சொல்லவேண்டும். ஏனெனில், அவர் தம் சுபாவ பிரயாசை முயற்சியெல்லாம் எடுத்திருந்தபோதிலும், இஸ்பிரீத்துசாந்துவே தமது அருளால் அவருடைய புத்தியைத் துலக்கி, அவருடைய மனதில் சுவிசேஷத்தை எழுத ஆசையை மூட்டி, அப்புஸ்தகத்தை முழுதும் எழுதி முடிக்கும்வரையில், அவரை இனிமையாய்க் கையைப்பிடித்து நடத்தினாப்போல் அவருக்கு உதவியாயிருந்தார். கத்தோலிக்கு திருச்சபை லூக்காஸ் எழுதிய சுவிசேஷத்தைத் தேவ ஏவுதலால் எழுதப்பட்ட புஸ்தகம் என்று எக்காலத்திலும் விசுவசித்துக் கற்பித்துவந்தபடியால், இதைத் தேவ புஸ்தகமென்றும், இதிலடங்கிய சகல விஷயங்களும் தேவ ஏவுதலால் எழுதப் பட்டவைகளென்றும் விசுவசிக்க சகல கிறிஸ்துவர்களும் கடன்பட்டிருக்கிறார்கள்.

3. ஒழுங்குடன் எழுதுவது: அதாவது கிரேக் பாஷையில் "கத்தெக்ஸெஸ்" என்ற பதத்துக்கு, நடந்த சம்பவங்களைக் காலக்கிரமமாய்ச் சரித்திரமேரையாய் எழுதுவது, என்றர்த்தமாம்.

4. உனக்குப் போதிக்கப்பட்டவைகளின் உண்மையை நீ அறிந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றித்தான்.

என்றதினால் லூக்காஸ் தம்சுவிசேஷத்தை எழுதினபோது தமக்குண்டான நோக்கமிதுவென்று வெளியிடுகிறார். அப்போஸ்தலர்கள் வாக்குமூலமாய் வெளிப்படுத்திய வேத விஷயங்களின் சத்தியத்தைக் கிறீஸ்துவர்கள் தளரா மனதோடும் அசைவற்ற உறுதியோடும் விசுவசிக்கும் பொருட்டுத்தான் சுவிசேஷம் எழுதப்பட்டது. அப்போஸ்தலர்கள் போதித்த காரியங்களைப் பலர் கேட்டு அவர்கள் தங்கள் இஷ்டம்போல் பலவிதமாய் எழுதி வழங்கி வந்ததால் அவர்கள் எழுதிய விஷயங்களில், சில வித்தியாசங்களும், தப்பறைகளும் உண்டாயின. இக்குறையை நீக்கவும் போதிக்கப்பட்ட சகல விஷயங்களையும் தீர்க்கமாய் ஆராய்ந்து, அவைகளின் உண்மையைப் பலத்த ஆதாரங்களாலும், அத்தாட்சிகளாலும் ஸ்தாபித்து, சகலரும் உறுதியாய் விசுவாசிக்கும்படியாகவும் தான் லூக்காஸ் சுவிசேஷ புஸ்தகத்தை எழுதத் தூண்டப்பட்டார்.

3. உத்தம தேயோபிலே என்று கூறுகிறார்: இவர் லூக்காஸுடைய பிரிய சிநேகிதராய் அல்லது சீஷனாய் அல்லது கல்வி சாஸ்திரத்தில் தேர்ந்த உயர்குலபிரபுவாய் இருந்திருக்கவேண்டும்.

உத்தம: கிரேக் பாஷையில் "கிராதிஸ்தே" என்னும் இப்பதம் ஓர் சிறந்த பட்டப்பெயரைக் குறிக்கும். ராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்தை வகித்துவரும் உயர்குல சீமானுக்கு அல்லது ஓர் தேசாதிபதிக்கும் கூட இப்பெயரைக் கொடுப்பதுண்டு; அல்லது அருமையான ஓர் சிநேகிதனையும் பிரியமாய் இப்படி அழைப்பதுண்டு; சாஸ்திர நூற்களில் பயின்று மேன்பாடடைந்த வித்வானுக்கும் இப்பெயர் செல்லும்.

ஒரு புஸ்தகத்தை அல்லது சாஸ்திர நூலை, ஒரு பிரபந்தத்தை அல்லது காவியத்தை எழுதுகிறவன், இக்காலத்தில் கூட தனக்கு மிகவும் வேண்டிய பிரியமான சிறந்த கல்விமான் ஒருவனுக்கு அதை நேர்ச்சி செய்கிறதுபோல், லூக்காஸும் தமது சுவிசேஷ புஸ்தகத்தை தெயோபிலஸ் என்னும் நாமம் பூண்ட தம தருமையான சிநேகிதரொருவருக்கு நேர்ச்சி காணிக்கை செய்தார் என்று உண்மையாய்ச் சொல்லலாம்.

அப்படி ஓர் புஸ்தகத்தை ஒருவனுக்கு நேர்ச்சி செய்தால் அது அவனுக்கே முழுதும் சொந்தமாகாமல் பலபேரும் அதை வாங்கி வாசிக்கலாம் அல்லவா?

அவ்வாறே லூக்காவின் சுவிசேஷம், தேயோபிலஸ் என்பவருக்கு நேர்ச்சிசெய்யப்பட்டதினால், அது அவர் ஒருவருக்கே சொந்தமாகாமல், அதைக் கிறிஸ்துவர்கள் சகலரும் வாசித்து ஞானப் பிரயோசனம் அடைய, அவர்களுடைய பொது நன்மை

யைக் கோரி எழுதப்பட்டதென்றும் திருச்சபையின் விலை மதிக்கப்படாத பொது பொக்கிஷம் என்றும் வேத உரையாசிரியர் ஒரே சம்மதமாய்க் கூறுகின்றார்கள்.

S. M.
13—1—1916. Kovalong.

GNANAMANI, III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 28-ம் அதிகாரம்.

### அபிராமி செத்ததினால் எனக்கு உண்டான துக்கத்தை ஆற்றிக்கொள்ளத்தான்டா சாராயக் கடைக்குப் போகிறேன்.

சலமோனுடைய பேச்சால் அவனே குழந்தையின் நகையைத் திருடியிருக்க வேண்டுமென்று நிச்சயித்து, அதைப்பற்றி போலீசாருக்குத் தெரியப்படுத்தினால் அவன் அவசியம் தண்டிக்கப்படுவானென்று எண்ணி, அதை யாருக்குந் தெரியப்படுத்தாமல் சும்மா இருந்துவிட்டார்கள்.

இதற்குப்பின் சலமோன் தலைமறைவாய்ச் சிலநாள் வீட்டுக்கு வாராமலிருந்தான். இனி அவன் தங்கள் வீட்டுக்கு வாராமல் நின்று போனால் நலமாயிருக்குமென்று ஈசாக் உபதேசியாரும் அவருடைய குமாரத்தி அபிராமியும் ஆசித்திருந்தும், சலமோன் மறு வாரத்தில் எட்டுமணி இராத்திரிவேளையில் குடிவெறியுடன் வீட்டிற்குள் சென்று விலாப்புடைக்க சாப்பிட்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து பித்தனைப்போல் வாய்க்கு வந்தபடி பாட ஆரம்பித்தான். அபிராமியும் சாப்பிட்டபின் தன் கணவன் பக்கமாய் உட்கார்ந்து பக்ஷ நேசத்துடன் பேசத் துவங்கி, "குழந்தையின் நகையைக் கொண்டுபோய் என்ன செய்தீர்கள்? அது இப்போது யாரிடம் இருக்கிறது?" என்று கேட்டாள்.

இது அவன் காதில் விழவே, அவனுக்கு மூர்க்க கோபமுண்டாகி, கலியாண நாள் முதற்கொண்டு இதுவரைக்கும் வெகு மேரை மரியாதையாய்ப் பேசினவன், அன்றைய இராத்திரி மதிமயங்கி அவலக்ஷணமான வார்த்தைகளைச் சொல்லி, "போடி, வாடி, முண்டைச்சி, சிறுக்கி" என்று காட்டுமிராண்டியைப்போல் இழிவான பெயரால் அபிராமியைத் திட்டி, "நான் திருடனடி, உன்னையும் உன் அப்பனையும் என் கால் ஜோட்டால் அடிக்கிறேன் பாரடி," என்று வாய்க்கு வந்தபடி துர்ப்பாஷையாய்ப் பேசினான். அபிராமியோ, மானமுள்ள பெண்ணும், இப்பேர்ப்பட்ட இழிவான பெயரால் இதுவரை ஒருபோதும் அழைக்கப்படாதிருந்தபடியாலும், தன் புருஷன் இன்றையத்தினம் தன்னைத் துர்ப்பாஷையாய்த் திட்டுவதைக் கண்டு, பயத்தாலும் பிரமிப்பாலும் பீடிக்கப்பட்டவளாய்ப் பேச வாய் வாராமல் நட்டுக் கம்பம்போல் மௌனமாய் நின்றாள்.

குடியனோ, குடிவெறியால் புத்தி தடுமாறி அசங்கியமான வார்த்தைகளைச் சொல்லி, அபிராமியையும் அவள் தகப்பனையும் ஏசித் திட்டி அங்குமிங்கும் தாண்டிக் குதித்து, "நானடி திருடன் முண்டைச் சிறுக்கி?" என்று அபிராமியைத் தலை மயிரைப் பிடித்து இழுத்து, அவள் முதுகில் ஓங்கின கையால் குத்தவே, அவள் "ஆ ஸ்வாமி" என்று கீழே விழுந்தாள்.

வீட்டில் நடக்கும் சந்தடியைக் கேட்ட ஈசாக் உபதேசியார் தன் அறையிலிருந்து வருவதைக் கண்ட சலமோன் சர்ப்பம்போல் வீட்டைவிட்டு மெல்லென வெளியே நழுவிப்போய் விட்டான். கீழேவிழுந்து பெருமூச்சுவிடும் தன் குமாரத்திக்கு என்ன சம்பவித்ததென்று அறியாத உபதேசியார் பக்கத்து வீட்டுக்காரரை அழைத்து, அவர்களுடைய உதவியால் அபிராமியைத் தூக்கி கட்டிலில் படுக்கவைத்து அந்தக்ஷணமே டாக்டருக்கு ஆள் அனுப்பினார்.

ஈசாக் உபதேசியார் தன் பிரிய குமாரத்திக்கு உண்டான கடுதியான வியாதியால் வாக்குக்கெட்டாத துக்கங்கொண்டு சிலவிசை சற்று நேரத்துக்கு முன் வீட்டுக்கு வந்திருந்த குடிகாரனான சலமோனால் ஏதேனும் தீங்கு நடந்திருக்குமென்று சந்தேகங்கொண்டு அபிராமியின் தலைமாட்டில் உட்கார்ந்துகொண்டு, "ஐயோ! என் செல்வபுத்திரீ! என்நேச அபிராமீ! நீ அனுபவிக்கும் சங்கடத்துக்கும் வாதைக்கும் காரணம் நானே! ஐயையோ! கலியாணம் வேண்டாம், வேண்டாம், குடிகாரனை நம்பக்கூடாது! அப்பேர்ப்பட்டவர்கள் குடியைவிட்டு விடுவது அசாத்தியம் என்று சொல்லி அந்தக் கலியாணம் வேண்டாமென்று அதற்குச் சம்மதியாதிருந்தும், நானே, சண்டாளன்! நானே உன்னை அந்தக் கலியாணத்துக்குக் கட்டாயப்படுத்தி, உன்னை வீதியில் இழுத்துவிட்டு, நாலுபேரும் உன்னைப் பார்த்து நகைக்கும்படி செய்தேன். உன் தகப்பனான நானே உனக்குக் கொலைஞனாய் ஏற்பட்டேன் என் விமரிசையற்ற எண்ணத்தால்" என்று தன் தலையைக் கையால் அடித்துக்கொண்டு ஏராளமாய்க் கண்ணீர்விட்டு அழுவதைக் கண்டவர்கள் அவருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினார்கள். அங்கு நின்றுகொண்டிருந்த விசுவாசநாயகர், ஈசாக் உபதேசியாருடைய துக்கத்தைக் கண்டு சகிக்கக்கூடாதவராய் மனதுருகி கண் கலங்கி, "நீரல்ல காரணம், இந்தக் கன்றுவிக்கு; நானே, என்புத்தியீனமே காரண" மென்று மனதில் சொல்லிக்கொண்டு விசனப்பட்டார்.



கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த சிலர் குளிர்ந்த ஜலத்தை அபிராமியின் முகத்தில் அடிக்கடி தெளித்து, விசிறியால் விசிறிக்கொண்டிருக்கும்போது அபிராமி சடுதியில் கண் திறந்து "நாயனே" என்றாள். அப்போது ஈசாக் உபதேசியார் கண்ணைத் துடைத்துக்கொண்டு, "அபிராமி! அம்மா, அபிராமீ! என்னமாயிருக்கிறது" என்றபோது, "ஒன்று மில்லை நாயனே, நன்றாயிருக்கிறேன்" என்றாள்.

அதற்குள் டாக்டரும் வீட்டில் பிரவேசித்து அபிராமியுடைய கையைப் பிடித்துப் பார்த்து "நாடியில் யாதொரு பேதமுமில்லை; நன்றாயடிக்கிறது" என்று சொல்லி, வியாதிக்காரியைப்பார்த்து "உனக்கு என்ன வியாதியம்மா?" என்றபோது, "ஒரு வியாதியுமில்லை, சுகமே இருக்கிறேன்" என்றாள். கொஞ்சநேரத்துக்குள் கூட்டங்கலைந்து, ஈசாக் உபதேசியாரும் அபிராமியு மாத்திரம் வீட்டிலிருந்தார்கள். அப்போது உபதேசியார் தன் மகளைப்பார்த்து "சலமோன் உனக்கு ஏதேனும் தீங்கு செய்தானோ?" என்று வினவினபோது, தனக்கு எதிராகமாட்டி இருக்கும் படத்தைக் சுட்டிக்காட்டி "நாயனே அந்தச் சிலுவைபாரத்திலும் நமது சிலுவை லேசானது" என்றாள். மறுபடியும் உபதேசியார், "என் பிரியமகளே! அந்தக் குடிகாரனால் யாதேனும் துன்பப்பட்டாயோ?" என்றதைக் கேட்ட அபிராமி, தன் தகப்பனுடைய கைரெண்டையும் பிடித்துக்கொண்டு "நாயனே சர்வேசுரனுக்குப்பின் உங்களை நான் அன்புடன் நேசிக்கிறேன்; என்னைப்பற்றிக் கவலைப்படாதேயுங்கள். அந்த நிற்பாக்கிய மனிதன் மனந்திரும்பும்படி நாம் இருவரும் வேண்டிக்கொள்வோம்," என்றாளே ஒழிய, அன்று சலமோன் அவளைப் பேசின துற்பாஷையையும் அடித்த அடியையும்பற்றி தன் தகப்பனுக்கு மாத்திரமல்ல, மற்ற எந்தப் பிராணிக்கும் வெளிப்படுத்தினவளல்ல.

ஈசாக் உபதேசியார் வீட்டில் இவ்வாறு துக்கதுயரமும் அழுகையுமுண்டாயிருக்கும்போது, சலமோன் பைத்தியக்காரனைப்போல் வீதிவீதியாய்த் திரிந்து, ஒரு மையில் தூரத்திலிருந்த சாராயக்கடையைச் சமீபித்தபோது, அவனுடைய கூட்டாளியாகிய நாத்தான் அவனுக்குப் பின்னால் ஓடிவந்து சலமோனுடைய தோளைப் பிடித்துக்கொண்டு, "என்ன பிரதர், எங்கே போகிறீர்?" என்று கேட்டான்.

சல.—உனக்காக எங்கெங்கே அலைந்து திரிந்தேனடா, டாம் பகர்!

நாத்.—நீர் என்னை விசாரித்ததாக வீட்டில் கேள்விப்பட்டு, அங்கிருந்து இதோ ஓட்டமாய் ஓடிவருகிறேன் பிரதர்.

சல.—சங்கதி தெரியுமடா, நாத்தான்?

நாத்.—என்ன சங்கதி பிரதர்?

சல.—அபிராமி செத்த சங்கதி!

நாத்.—மெய்தானா பிரதர்?

சல.—(கெக்கே என்று பித்தனைப்போல் சிரித்து) அவள் செத்ததினால் எனக்கு வந்த துக்கத்தை ஆற்றிக்கொள்ளத்தானடா, சாராயக்கடைக்குப் போகிறேன் (என்று உளறிக்கொண்டு சிரிக்கத் துவக்கினான்)

இருவரும் சாராயக்கடையில் பிரவேசித்து, தோசை கறி, சாக்கனா, கைமாகறி, உண்டைக்கறி முதலியவைகளை இலையில் வாங்கி வைத்துக்கொண்டு, சாராய புட்டியும் டம்ளரும் தயார்படுத்திக்கொண்டு, தகுதியான ஒரு இடத்தில் இருவரும் உட்கார்ந்து 'போடடா, ஒரு டோஸ்' என்று, தண்ணியைப் போட்டுக்கொள்வதும், மேற்படி கறிவகை தோசையைத் தின்னுவதுமாக கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அன்று இராத்திரியிருவரும் 2½ ரூபாய் செலவு செய்து, கடையை விட்டு வெளிப்பட்டு சாலையிலிருந்த ஒரு ஆல மரத்தடியில் உட்கார்ந்து, வாய்குளறி ஒருவன் ஒருவனைத் திட்டி அடித்து

உளைத்துக்கொண்டிருக்கும் சமயத்தில், நாத்தான் சலமோனை நோக்கி "பிரதர்! நாளைக்குப் பியுனரல் (அடக்கம்) எத்தனை மணிக்கு?"

சல.-அது எத்தனை மணிக்கோ! எப்போது புதைத்தாலும் நமக்கென்னடா? அவள் செத்ததினால் உண்டான துக்கம் சாராயத்தால் எவ்வளவு குறைந்தது (என்று அழத் தொடங்குகிறான். சற்று நேரத்துக்குப்பின் பெரும் சத்தத்துடன் ஏப்பத்தின்மேல் ஏப்பம் விட்டுக்கொண்டு) சாக்ஷு, கைமா, உண்டைக்கறி, வெகு ருசியாயிருந்ததடா?

நாத்.—ஆமா, பிரதர், ருசியாயிருந்தது. நமது வீட்டில் அப்படிச் செய்யமாட்டார்கள், பிரதர்.

சல.—கடைக்காரன் அபிராமி செத்த சங்கதி யறிந்து நன்றாய்ச் சமைத்து வைத்தானோ என்னமோ! (என்று சிரிக்கத் துவக்குகிறான்)

நாத்.—பாவம்! அபிராமி நல்ல பெண்.

சல.—அடே, அவள் செத்தாலும் இன்னொருத்தி ஆகிறாள்; என்ன? பெண்களுக்குக் குறைவா?

நாத்.-அபிராமியைப்போல் நற்குணமுள்ள பெண் அகப்படுவது அரிது பிரதர்!

சல.-திட்டினாலும், அடித்தாலும், உதைத்தாலும் அவள் பேசாமல் ஊமைபோல் சும்மா இருப்பாள். நினைக்கும்போதெல்லாம் வயிறு நிறையப் போடுவாள் சாப்பாடு, (என்று பேசிக்கொண்டிருக்கையில், நாத்தான் சலமோன் கையைப் பிடித்துக்கொண்டு தன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகையில், சலமோனோ வழியில் அடிக்கடி கீழே விழுந்து எழுந்திருந்து வாயால் சொல்லக்கூடாத அசங்கிய வார்த்தைகளைச் சொல்லி, அபிராமியையும் ஈசாக் உபதேசியாரையும் திட்டிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து தொப்பென்று கீழே விழுந்து நித்திரிக்க ஆரம்பித்தான். நாததான் சலமோனுடைய சட்டைச் சாக்கில் தேடிப்பார்த்து அதிலிருந்த 3 ரூபாயை எடுத்துக்கொண்டான்.)

அதுமுதல்கொண்டு சிலநாள் சலமோன் தன் மாமனார் வீட்டுக்குப் போகாமல் தன் சிநேகிதர் வீட்டில் தங்கி, அவர்கள் அரைகுறையாய்ப் போடும் பருக்கையைத் தின்றுவந்தான். ஆனால் தன் மாமனார் வீட்டிலுள்ள ருசிகரமான கறி பதார்த்தத்தின்மட்டில் ஆவல்கொண்டு அப்போதைக்கப்போது யாருக்குந் தெரியாமல் இராவேளையில்போய் வயிறு நிறைய சாப்பிட்டு வருவான்.

சலமோனுக்குக் கடன்கொடுத்த ஆசாமிகள் அவனை நெருக்கிடை செய்ததின்பேரில், அவன் தன் சிநேகிதருடைய பிரேரபனைப்படி, பவுல்போதகருக்கு லாயர்நோட்டீசு அனுப்பி, தனக்குச் சேரவேண்டிய நிலங்களையும் வீடு மனையையும் தோட்டந் துரவையும் இந்த நோட்டீஸ் சேர்வான பதினைந்து தினத்துக்குள் பிரித்துக் கொடுத்தால் சரி, இல்லாவிட்டால் கோர்ட்டுத் துவாராவாய்ப் பெற்றுக்கொள்ளப்படுமென்று தெரியப்படுத்தினான். பவுல்போதகர் அந்த நோட்டீசை வாசித்துப் பார்த்து, "உனக்கு அரைக்காசாகிலும் வீசங்காணி யென்கிலும் கொடேன்; உனக்கு இஷ்டமிருந்தால் கோர்ட்டில் தாவாசெய்ய விக்கினமில்லை" யென்று பதில் நோட்டீஸ் அனுப்புவித்தார்.

தன் தகப்பனாருடைய நோட்டீசைப் பார்த்த சலமோன் தனக்குக் கடன்கொடுத்தவர்களுக்கு அதைக்காட்டி அந்த நிலத்தின்மேல் 200-ரூபாய் கடன்வாங்கி, பாதிபணத்தை லாயர் கையில் கொடுத்து,மீதிபணத்தைக் குடியில் செலவுசெய்தான். அந்த 100-ரூபாய் செலவாகுமட்டும் தன் மாமனார் வீட்டுக்குப் போனவனல்ல. சலமோன் தன் தகப்பன்மீது தாவாசெய்த இரண்டாம் மாதத்தில் பவுல்போதகருக்குச் சம்மன் சேர்வானது. குறித்த கெடுவில் இருகக்ஷிக்காரரும் கோர்ட்டுக்குப் போனபோது சாக்ஷிகளுக்குப் படிகட்டச்சொல்லி மறுமாதத்துக்கு ஈரங்கி போடப்பட்டது.

சலமோனோ, கோர்ட்டு சாக்கு வைத்துக்கொண்டு சாக்ஷிகளின் படிக்கென்றும், ரயில் சார்ஜிக்கென்றும் நோட்டே பாண்டு எழுதிக்கொடுத்து, 25 ரூபாய் பெற்றுக்கொண்டு தன் இஷ்டப்படி செலவுசெய்துவந்தான்.

ஒருநாள் வெறியெடுக்கக் குடித்து நடுச்சாமவேளையில் தன் மாமனார் வீட்டுக்குப்போனான். அன்று குழந்தைக்கு அசௌக்கியமாகி, ஈசாக் உபதேசியாரும் அபிராமியும் வெகுநேரம் விழித்திருந்து மருந்து முதலியவைகளைக்கொடுத்து, குழந்தை தூங்கும்போது ஈசாக் உபதேசியார் படுத்து இளைப்பாறும்படி உள்வீட்டுக்குப் போனார். அபிராமியோ, கீழே படுக்கப் போட்டிருந்த குழந்தை பக்கத்தில் தானும் உட்கார்ந்த பிரகாரம் கட்டிலில் தலைசாய்த்து அயர்



ந்து தூங்கினாள். அந்நேரத்தில் யாரோ கதவு தட்டுகிற சத்தங்கேட்டு அண்டைவீட்டுக்காரர் குழந்தையைப் பார்க்க வந்திருக்கிறார்களென்று நினைத்து கதவைத் திறந்தாள். கதவைத் திறந்தவுடனே பெரிய பூட்சைமாட்டிக்கொண்டு டாட் பூட் என்று உளறிக்கொண்டு வீட்டில் பிரவேசித்தான் சலமோன். இவனை அபிராமி பார்த்தவுடனே மனதில் துயரங்கொண்டு முன்போல குழந்தை பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்.

அந்நேரத்தில் குடிகாரன் மூர்க்ககோப வெறியுடன் கோவைப்பழம்போல் சிவந்திருக்கும் தன் கண்ணை உருட்டி, அப்போதைக்கப்போது காறி கீழே துப்பிக்கொண்டு அபிராமியை நோக்கி "என்னடி? நான் நின்றுகொண்டிருக்கும்போது நீ உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்? நீ யென்ன துரைசாணியா? ராஜாத்தியா? என்ன ஆணவம் இந்த முண்டைக்கிருக்கிறது?" என்று பெருங் கூச்சல்போட்டுக் கத்துவதைக் கேட்ட அபிராமி என்ன செய்வானோ குடிமயக்கத்திலென்று பயந்து நடுங்கி, "குழந்தைக்கு மாந்தமுண்டாகி இராத்திரியெல்லாம் கண்விழித்து இருந்த எனக்கு இப்போது மெத்த பலவீனமுண்டாகி அசதியாயிருக்கிறது" என்றாள். "ஆ! ஆ! உனக்குக்கூட பலவீனமா? மூன்றுவேளையும் மூக்கைப்பிடிக்கத் தின்று, சிறைப்பன்றியைப்போலிருக்கும் உனக்கு வியாதியாடி?" என்று கொச்சைச்சொற்களாலும் அசப்பியமான வார்த்தைகளாலும் அவளைத் திட்டி, அதகுமிதகும் பட்டுபட்டென்று நடந்துகொண்டு "நல்லது, எழுந்திருந்து சோறு போடடி, பசியாயிருக்கிறது" என்றான். "நீங்கள் இங்கே சாப்பிட வந்து 20 நாளைக்கு அதிகமாயிற்று; நீங்கள் வருகிறது தெரிந்திருந்தால் கால்படி அரிசி அதிகமாய்ப் போட்டுச் சமைத்திருப்பேன்; கொஞ்சம் சாதங்கூட மீறவில்லை." என்னவே "எழுந்திருடி என்றால் என்னோடு கதைபாடி பேசுகிறாய்?" என்று அபிராமியுடைய தலைமயிரைப் பிடித்துக்கொண்டு, "உடனே எனக்கு சாப்பாடு போடாவிட்டால் நீ படுகிற பாடு பார்" என்று கோபாக்கிரமத்துடன் கர்ச்சிப்பதைக் கண்ட அபிராமி வெகுவாய்ப் பயந்து திக்கிட்டு எழுந்து தன் தகப்பனார் படுத்திருக்கும் அறையின் கதவைப் பலமாய்த் தட்டி, "நாயனா நாயனா" என்று அழுதாள். குடிகாரனோ மூர்க்கங்கொண்டவனாய்க் குடி வெறியால் தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாதவனாய் ஊளையிட்டு உளறிக்கொண்டு துர்மார்க்கமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு, "அந்தத் தோலான் வந்து என்னை யென்ன செய்யப்போகிறாண்டி?" என்று சொல்லும்போது, உள்ளறையில் அசந்து நித்திரைபோகும் ஈசாக் உபதேசியார் தன் குமாரத்தியின் அழுகைச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்திருந்து கதவைத் திறந்துகொண்டு, "என்னம்மா அபிராமி? குழந்தைக்கு எப்படியிருக்கிறது?" என்று அறையிலிருந்து வெளியே வந்தார்.

உபதேசியார் வெளிப்பட்டதைக் கண்ட குடிகாரன், பூட்ஸ்காலால் தரையைப் பலமாய்ப் பட்பட்டென்று மிதித்துக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்படும்போது குழந்தையினுடைய இடது கையின் சுண்டுவிரல் பூட்ஸ்காலால் மிதிபட்டபடியால், அது வீறிட்டுக்கொண்டு அழத் தொடங்கிற்று. அபிராமி குழந்தையைக் கையில் தூக்கும்போது அதன் விரல் நசுங்கி இரத்தம் புறப்பட்டது. உடனே விரலைக் கழுவி கட்டுகட்டி அழுகை அமருமட்டும் குழந்தையைக் கையில் வைத்துத் தாலாட்டித் தொட்டிலில் போட்டாள்.

இதற்குப்பின், அபிராமி அழுத சங்கதியைப்பற்றி உபதேசியார் வினவினபோது, அவள் நடந்த சங்கதியை விவரமாகச் சொல்லாமல், தன் புருஷன் நடுச்சாமவேளையில் வந்ததினால் தனக்கு என்னதின்மை செய்வானோ என்கிற பயத்தால் அழுததாகச் சொல்லி, தன் தகப்பனை நித்திரை செய்யும்படி கேட்டுக்கொண்டதன்மேல் ஈசாக் உபதேசியார் தன் அறைக்குச் சென்றார்.

காயம்பட்ட குழந்தையின் விரலுக்குப் பினாஸ்டிரி முதலிய மருந்துகளைப் போட்டும் புண் ஆறும் விருத்தினிமித்தம் குழந்தையை அபிராமி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் டாக்டரிடங் காட்டினாள். அவர் அதை நன்றாய்ப் பரிசோதித்து இன்னம் இரண்டுநாள் தாமதித்திருந்தால் குழந்தைக்கு பிளட் பாய்ஸன் (Blood poison) உண்டாகி மரணச் சேதமாகுமென்று சொல்லி, காயப்பட்ட விரலை அரை அங்குலத்துக்கு அறுத்துவிட்டு அதற்கு மருந்து போட்டதின்மேல் வெகு சீக்கிரத்தில் அது ஆறிக் குணப்பட்டது. வலதுகைச் சுண்டுவிரலுக்கு இடதுகைச் சுண்டுவிரல் அரை அங்குலம் குறைந்துபோயிற்று.

## CORRECT THINGS FOR CATHOLICS.

## கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கு நல்லொழுங்குகள்.

தொகைப்பட வரும்

மேலான ஞானவாசகம்.

### பன்னிரண்டென்னு மிலக்கத்தில்.

(முன் தொடர்ச்சி.)

3-வது.—அப்போஸ்தலர்கள் அருளிச்செய்ததும் விசுவசிக்க வேண்டியதுமான காரியங்கள் பன்னிரண்டு. அவையாவன: அர்ச். இராயப்பர் அருளிச்செய்தது: பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேஸ்வரனை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன்; அர்ச். பெலவேந்திரர் அருளிச்செய்தது: அவருடைய ஏகசுதனாகிய நம்முடைய நாதர் சேசுக்கிறீஸ்துவை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன்; அர்ச். பெரியயாகப்பர் அருளிச்செய்தது: இவர் இஸ்பிரீத்து சாந்துவினாலே கருப்பமாய் உற்பவித்து அர்ச். கன்னிமரியம்மாளிடத்திலே நின்று பிறந்தார்; அர்ச். அருளப்பர் அருளிச்செய்தது: அவர் போஞ்சுபிலாத்துவின்கீழ் பாடுபட்டு சிலுவையிலே அறையுண்டு மரித்தடக்கப்பட்டார்; அர்ச். தோமையார் அருளிச்செய்தது: அவர் பாதாளங்களிலே யிறங்கி மூன்றாநாள் மரித்தவர்களிடத்திலே நின்று உயிர்த்தெழுந்தருளினார்; அர்ச். சின்ன யாகப்பர் அருளிச்செய்தது: பரமண்டலங்களிலேயேறி சர்வத்துக்கும்வல்ல பிதாவாகிய சர்வேஸ்வரனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்; அர்ச். பிலிப்பு அருளிச்செய்தது: அவ்விடத்திலே நின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவார்; அர்ச். பற்தலோமை அருளிச்செய்தது: இஸ்பிரீத்து சாந்துவை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன்; அர்ச். மத்தேயு அருளிச்செய்தது: பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூகப் பிரயோசனத்தையும் விசுவசிக்கிறேன்; அர்ச். சிமோன் அருளிச்செய்தது: பாவப்பொறுத்தலை விசுவசிக்கிறேன்; அர்ச். ததேயு அருளிச்செய்தது: மாம்ஸ உத்தானத்தை விசுவசிக்கிறேன்; அர்ச். மத்தியாசு அருளிச்செய்தது: சததமான சீவியத்தை விசுவசிக்கிறேன் என்பவைகளேயாம்.

### பதிமூன்றென்னு மிலக்கத்தில்.

1வது.—உரோமான் கத்தோலிக்குச் சபை போதிக்கின்றதைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, அருவருத்துத் தள்ளவேண்டிய பிரதான பதிதர்கள் பதிமூவர். அவர்களெவரெனில் மனிக்கயர், நோவாசியர், தோனுதிஸ்தர், அரியானித்தர், மசதோனியர், நெஸ்தோரியர், எத்திக்கயர், பேலாசியர், இக்கனோகிலாஸ்தர், பேரங்காரியர், வல்தேசியர், விக்கிளேபித்தர், கடைசியானவராகிய புரோடெஸ்டாண்டு என்னும் பதிதர்களேயாம்.

### பதினான்கென்னு மிலக்கத்தில்.

1-வது.—சேசுநாதருடைய பாடுகளின் வரலாறு பதினாலு; அவையாவன: சேசுநாதர் மரணத்துக்குத் தீர்வையிடப்பட்டது, அவர் சிலுவை சுமத்தப்பட்டது, அவர் முதல்விசை தமது பாரமான சிலுவையோடு குப்புறவிழுந்தது, அவர் தம்முடைய பரிசுத்தமாதா எதிர்கொண்டு வருகிறதைக் கண்டது, அவர் தமது சிலுவையைச் சுமந்து போகிறதற்குச் சிரேனென்கிற சிமோன் உதவிசெய்தது, பத்தியுள்ள ஒரு இஸ்திரீயானவள் அவருடைய திருமுகத்தைத் துடைத்தது, அவர் இரண்டாம்விசை குப்புறவிழுந்தது, அவர் தம்மைப் பின்சென்று புலம்புகிற எருசலேமென்கிற பட்டணத்தின் புண்ணிய இஸ்திரீகளுக்கு ஆறுதல் சொன்னது, அவர் மூன்றாமுறை தரையில் விழுந்தது, அவருடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டது, அவரைச் சிலுவையில் அறைந்தது, அவர் சிலுவையில் உயிர்விட்டது, அவருடைய திருச்சரீரத்தைச் சிலுவையினின்றிறக்கி அவருடைய திருத்தாயார் மடியிலே வளர்த்தினது, அவருடைய திருச்சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது இவைகளேயாம்.

2-வது.—அர்ச். பிராஞ்சீஸ்கு அம்மாள் கண்ட காட்சியில் தெய்வத்தால் திருவுளம்பற்றப்பட்ட அகண்ட ஞான சாங்கோபாங்க நிபந்தனைகள் பதினாலு.



அவையாவன: சகலமான படைப்புண்ட வஸ்துக்களில் நின்று உள்ளும் புறம்புமாகத் தன்னைத்தானே பரித்தியாகம் பண்ணிக்கொண்டேயிருக்கல், தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டும் சகலராலும் நிந்தைப்படத் தான் தகுந்தவனென்றும் நினைத்துக்கொண்டிருத்தல், எல்லாவற்றிலுங் கபடற்ற வகையாய் நடந்துகொண்டு தான் சர்வேஸ்வரனுடைய கண்களுக்குமுன் தானிருக்குமிருப்பைப் பார்க்கவும் தானினைப்பதைப் பார்க்கவும் அதிகமாய்க்காணப்பட ஆசை கொள்ளாதிருத்தல், தான் சர்வேஸ்வரனுக்குச் செய்வேனென்று சொன்னவைகளைச் செய்யப் பின்வாங்காமலும் தான் ஒப்புக்கொடுத்தவைகளைப் பின்பு எடுத்துக்கொள்ளாமலுமிருத்தல், தன்னை முழுமையும் வெறுத்துத் தன்னுடைய நிர்ப்பாக்கியங்களை யறிந்துகொண்டு சுவாமியைநோக்கிக் கண்ணெடுக்கத் தான் பாத்திரமுள்ளவனல்லவென்று நினைத்துக்கொண்டிருத்தல், தன்னைத்தான் பகைத்துத் தன்னைச் சர்வேஸ்வரன் பழிவாங்கித் தன் பாவங்களுக்கு ஆக்கினையிட வேணுமென்று அவரை மன்றாடல், அவரைமாத்திரந் தன் ஞாபகத்திலிருத்தித் தன் ஞாபகத்தை அவருக்கு ஒப்புக்கொடுக்கவும் அவரிடத்தில் நின்றுவருகிற பிரகாசங்களையல்லாமல் வேறே பிரகாசங்களைத் தேடாமல் தன் புத்தியை யவருக்குக் கொடுக்கவும் தெய்வச்செயலின் அமைப்புப் பிரகாரமுழு நம்பிக்கையோடே தன்னை முழுமையும் கையளித்து வேண்டும் வேண்டாமென்பதைவிட்டுத் தன்னுடைய மனதை முழுமையும் அவருக்கு ஒப்புக்கொடுக்கவும்வேண்டும். இந்தப் பிரகாரம் தன்னுடைய புத்தி மனது நினைவு முழுமையும் தெய்வத்துக் கொப்புக்கொடுத்து, அவர் கொடுத்த வரங்களை அவருக்கே செலுத்தல், தான் புகழப்படும்போது ஒருக்காலும் அதற்கு மனதுபொருந்தியிணங்காமல் அப்புகழ்ச்சிகளினாலே தான் துன்பப்படுகிறவனாக இருத்தல், பூலோகத்தினுடைய சந்தோஷங்கள் சிலவிசை இருதயத்துக்குள்ளே புகுந்தால் உடனே அதினாலே கஸ்தியாய் வியாகுலப்பட்டுக்கொண்டிருத்தல், யாராகிலும் தன்னை நிந்தித்துத் தூஷணித்தால் அந்த நிந்தை தூஷணங்கள் பரிசுத்த தாழ்ச்சியினாலே பன்னீரிலே ஸ்நானம் பண்ணுகிறாப்போலே தனக்குத்தோன்றல், ஆராகிலும் நிந்தை யவமானம் பண்ணும்போது அந்த நிந்தை யவமானங்களை மகா பிரியமாகக் கொள்வதுமன்றி நிந்திக்கிறவர்களுக்காகச் சர்வேஸ்வரனை வேண்டிக்கொள்ளல், மற்றவர்கள் தன்னைத் தகாத வகையாய் நடத்தினால் அதனைப் பூரித்துச் சர்வேஸ்வரனுக்கு நன்றியறிந்ததோத்திரஞ் செய்தல், கொந்தரை செய்கிறவர்களை நமஸ்கரித்தல், தன்னாலே ஒன்றுங் கூடாதென்று நினைத்துக்கொண்டிருந்து ஆழ்ந்த ஆற்றின் கீழேபோட்ட ஒரு சின்ன விதையைப்போலே தன்னைத் தானே சின்னவனாக எண்ணிக்கொண்டிருத்தல் இவைகளேயாம்.

### பதினைந்தென்னு மிலக்கத்தில்.

1-வது.—நாம் அடிக்கடித் தியானம் பண்ணவேண்டிய தேவ இரகசியங்கள் பதினைந்து; அவையாவன: தேவமாதாவுக்குச் சம்மனசானவர் மங்களவார்த்தை சொன்னது, தேவமாதா எலிசபேத்தம்மாளை வினவப்போனது, தேவமாதா உலகவிரட்சகராகிய சேசுநாதரைப் பெற்றது, தேவமாதா தமது குமாரனைக் கோவிலுக்குக் கொண்டுபோய் பிதாவுக்குக் காணிக்கையாக அவரை ஒப்புக்கொடுத்தது, தேவமாதா தமது குமாரனைத் தேடிக் காணாமல் மூன்றாநாள் சாஸ்திரிகள் சபை நடுவிலே கோவிலுக்குள் ளவரைக் கண்டது, இவ்வைந்துஞ் சந்தோஷத் தேவ இரகசியங்களாம். சேசுநாதர் பூங்காவனத்தில் இரத்த வேர்வை வேர்த்தது, சேசுநாதர் நிஷ்டூரராலே தூணோடிறுகக் கட்டப்பட்டு அடிபட்டது, சேசுநாதரைப் பரிபாச இராசாவாக ஸ்தாபித்து முள்முடி தரித்தது, சேசுநாதர் சாவுக்குத் தீர்வையிடப்பட்டுச் சிலுவை சுமந்து கொண்டுபோனது, சேசுநாதரைச் சிலுவையிலறைந்து நாட்டினது, இவ்வைந்துந் துக்கத் தேவ இரகசியங்களாம். சேசுநாதர் உத்தானமானது, சேசுநாதர் பரலோகத்துக் கேறினது, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேஸ்வரன் தேவமாதா பேரிலும் சீஷர்கள்பேரிலும் இறங்கினது, தேவமாதா ஆத்தும சரீரத்தோடே மோக்ஷத்துக் கேறினது, தேவமாதா கிரீடந்தரிக்கப்பட்டது. இவ்வைந்தும் மகிமைத் தேவ இரகசியங்களாம்.

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### அமலோற்பவ நாயகியின் திருநாள் மகோற்சவம்.

திருச்சிறுப்பள்ளி மேற்றிராசனத்தைச்சேர்ந்த புதுக்கோட்டை பங்கில் சேசுநாதருடையவும் தேவமாதாவுடையவும் திரு இருதயங்களின் கோவிலில் விசாரணை குருவாகிய சங்கைக்குரிய (*Revd. Fr. J. Castets, S. J.*) கனம் அருளப்பர் சுவாமியவர்களால் டிசம்பர் மீ 3-ந் தேதி சிந்து தேசங்களுக்கு அப்போஸ்தலராகிய அர்ச். சவேரியார் திருநாளன்று பரிசுத்த அமலோற்பவத்துக்குத் தோத்திரமாக உபயம் துவக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் காலை 6-மணி திவ்விய பூசைக்குப் பிறகு அமலோற்பவ நாயகியின் சுரூப ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டு, கடைசி நாளாகிய 12-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7½ மணிக்கு திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்தப் பங்கைச் சேர்ந்த ஏறக்குறைய எல்லா கிறிஸ்தவர்களும் அன்று திவ்விய நற்கருணை உட்கொண்டார்கள்.

அன்று சாயங்கிரம் 5-மணிக்குத் தங்கமயமான சுத்தரிச்சால்களையும் திருச்சிலுவையையும், சேசுக்கிறீஸ்து நாதருடையவும், தேவமாதாவுடையவும் திரு இருதயங்களின் படங்களையும் கைகளிலேந்திக்கொண்டு, குருசுவாமியாரோடு கோவிலைச் சுற்றிலும் பவனி சென்றார்கள். அப்போது மகாராஜா அவர்களின் பாண்ட் வாத்தியக்காரர்களால், *National Anthems*, தேசக்கீதங்களாகிய. (*Belgium, France*) பெல்ஜியம், பிராஞ்சு முதலிய ஐக்கிய தேசங்களின் பாட்டுகளை மெத்த இன்பமாய் வாசித்துக் கொண்டு முன் செல்ல, பங்கைச்சார்ந்த எல்லா கிறிஸ்தவர்களும், பெரியவர்கள் முதல் சிறுக்கள் வரையிலும், தங்கள் கரங்களில் மெழுகுதிரிகளை ஏந்திப் புடை சூழ்ந்துகொண்டு திரு இருதய ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு போகும்போது, இந்தப் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அது ஒரு காட்சியாகவும், காம்பீரியமாகவும், பக்திக்குரியதாகவும் காணப்பட்டது. சற்றுப்பிரகாரம் கோவிலில் நுழைந்தபிறகு சற்பிரசாதநாதரைப் பீடத்தில் ஸ்தாபித்து, மகாராஜா பாண்டைச் சேர்ந்த பாடகர்களால், ஓ சாலுத்தாரிஸ், ஆவே மாரிஸ் ஸ்தெல்லா, பார்லேதோமினே என்னும் பாடல்களைப்பாடியபின் சற்பிரசாதநாதர் முன்பாக எல்லா கிறீஸ்துவர்களாலும்,

“ஓ! அமலோற்பவ மரியே, பரலோக பூலோகஇராக்கினியே, இந்த மேற்றிராசனத்தப்பங்கு கிறீஸ்துவர்களாகிய நாங்கள், தேவரீர் திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்து சகல சம்மனசுக்கள் அர்ச்சியசிஷ்டவர்கள் முன்பாக உமது பிரிய மகன் சமூகத்தில் தேவரீரை எங்கள் பாதுகாவலாகவும் மனுப்பேசுகிறவளாகவும் இன்று தெரிந்துகொள்ளுகிறோம். ஓ, நல்ல தாயே! அருள் நிறைந்த அன்புடன் இக்காணிக்கையை ஏற்றுக்கொள்ளும். உம்முடைய விசேஷ பாதுகாவலில் எங்களை வைத்துக்கொண்டு, சகல சத்துருக்களிடத்தினின்றும் இரட்சித்து, பாவத்தில் விழாமல் பாதுகாத்து, சகல கிறீஸ்தவ புண்ணியங்களிலும் விசேஷமாய் ஆத்தும சரீர பரிசுத்ததனத்திலும் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைய அனுக்கிரகஞ் செய்தருளும். உமது ஏழை தாசர்களாகிய அடியோர்கள் பிள்ளைக்குரிய நம்பிக்கையோடு உம்மை நாடிவந்து உமக்கும் உமது அமலோற்பவத்துக்கும் ஸ்துதிபுரிய தவறோம். மேலும் உம்மைப்பிறர் அறிந்து தாயைப்போல் சங்கித்து சிநேகித்து உமக்கு ஊழியஞ் செய்ய ஏவித் தூண்டுவோமென்பது எங்களுடைய உறுதியான தீர்மானமாமே. நாங்களெல்லோரும் உமது ஊழியத்தில் மரண பரியந்தம் நிலைத்திருந்து உம்மை எந்நாளும் நேசித்து உம்மோடு மோட்சத்தில் நித்திய பாக்கியம் அனுபவிக்கும் வரத்தை உமது பேரால் ஆண்டவர் எங்களுக்கு அளித்தருளுவாராக. சர்வேசுரனுடைய மாதாவே, மனுக்குலத்தாயே, சாந்த குணமுள்ள கன்னிகையே. உமது அமலோற்பவத்தின் திருநாளாகிய இச்சுபதினத்தில் இன்னமோர் விண்ணப்பம்செய்துகொள்ள இவ்வருஷம் விடைதாரும். ஐரோப்பாவில் கடும்போர் புரிந்துவரும் தேசத்தார்மீது உமது கருணைக் கண்ணைத் திருப்பி, நீதியும் நியாயமும் ஜெயமுற்று, நீடிய சமாதானம் நிலைபெற்று, அபையமும் துயரமும் நீங்கிட துணைசெய்து ஆதரியும் தாயே! ஆமென்சேசு.” என்று ஜெபித்தபின், தாந்தும் எர்கோ என்னும் பாடல் பாடகர்களால் பாடப்பட்டு, பிறகு கோவில் மணி யோசையுடன் பாண்ட்வாத்திய முழங்க, திவ்விய நற்கருணை யாசீர்வாதம் கொடுக்கப்பட்டது.

தேவ கன்னிமாமரியின் அமலோற்பவத்துக்கு என்றும் புகழ் உண்டாவதாக.

13—12—1915. புதுக்கோட்டை. } இப்படிக்கு. M. ARLAND, MUSICIAN.

---

### உரிகாம்.

### அமலோற்பவ நாயகியின் ஓர் அற்புதம்.

“மாசற்ற கன்னிகையின் புகழ்ச்சியையும், அவளுடைய மேலான நாமத்தையும், என் நாவே களிகூர்ந்து வாழ்த்துவாயாக.”

சேத்துப்பட்டு வென்னும் திருஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அமலோற்பவ ஆண்டவளிடமாய் அடைந்துள்ள அற்புத சகாயத்தின் வரலாற்றை அப்பரம நாயகிக்குத் தோத்திரமாகவும் விசுவாச பரம்புதல் விஷயமாகவும் எழுதுகிறேன்.

அனுக்கிரகமும் கருணையும் நிறைந்த அமலோற்பவதாயின் கிருபையால் நான் பெற்ற புத்திரர் 8-பெயர். அவர்களில் சிரேஷ்ட புதல்வன் பேர் பிரான்சிஸ். அவனும் திருமணம் பூண்டு சமுசார சகிதமாய் சிவிக்கிறான். இங்ஙனமிருக்க சில வருஷங்களுக்கு முன்னதாக என் பிரிய பிரான்சிஸுக்கு திடும்பிரவேசமாய் ஓர்வித வியாதிகண்டது. வியாதியை இன்னதெனச் சொல்ல முடியாது. அதனால் அவன் பட்ட ஆராட்டத்தை அளவிடவும் கூடாது. ஆ! ஆண்டவளே! அதை நினைக்கையில் என் ஆதியந்தமும் சிலிர்த்துப்போகிறது. என்றாலும், கொஞ்சம் சொல்வேன். இரவில் அயர்ந்து நித்திரை செய்யும்போதே திடீரென தன்னிரு கைகளை மடக்கிக் கொண்டு பூமியில் அடித்துக்கொள்வான். கால்களையும் உயர்த்தி அடித்துக்கொள்வான். அவயவங்கள் அசைந்தாலும் தன் நிலையின்றி ஸ்மரணையற்றிருப்பான். மடீர் மடீர் என்று தன் மார்பில் அறைந்து கொள்வான். இவ்வடிகளால் மார்பு வீங்கிப்போகும். வாயின் வழியாய் இரத்தமும் புறப்பட்டு வழியும். இதனை அமர்த்த யார் என்ன முயன்றாலும் அத்தனையும் வியர்த்தமே. அவனது முகவடிவு கொஞ்சங் கொஞ்சமாய் மாறி இரண்டொரு மணிகளுக்குள்ளாக அவனைப் பார்க்கவே பயங்கரமாயிருக்கும். அண்டையிலுள்ளவர்கள் அழும் கண்ணீரோடுதான் நிற்பார்கள். கண்கள் மூடியிருக்க, வாய் கிட்டிப்போக, காதும் அடைபட, செத்த பிரேதம் போல் இருந்துவிடுவான். இவ்விதமாய் இரவெல்லாம் கழிந்து காலையில பார்த்தாலோ கண்கொள்ளா காக்ஷியாயிருக்கும். சர்வாங்கமும் சூடு இட்டமாதிரியாய்ச் சகல நரம்புகளும் எழும்பியிருக்க, கை கால்களில் கனத்த காயங்களும், மார்பு வீங்கியும், கழுத்தின் இருபுற நரம்புகளும் ஏகமாய் வீங்கிபோக, பிள்ளை என்னும் உருவமேயில்லாமல், மூச்சுவிடமுதலாய்த் தத்தளிப்பான். ஓ! மக்களைப்பெற்ற மாதா பிதாக்களே! இவ்வித காக்ஷியைப் பார்க்கும் தந்தையின் மனம் எவ்விதமிருக்கும்! இது ஒருநாள் இருநாளல்ல. வாரங்கள் மாதங்கள் அல்ல, வருஷமும் ஒன்றிரண்டல்ல. ஏழுவருஷமளமாய் வாதைப்பட்டு வந்தான். இதற்கிடையில் அழித்த பணத்திற்கு அளவில்லை. பரிசோதியாத பண்டிதர்களில்லை. அலையாத ஆஸ்பத்திரிகளில்லை. உண்ணாத மருந்தில்லை. எண்ணாத எண்ணமில்லை. பார்வையிட்ட வைத்தியர்களெல்லாம் இன்ன வியாதிதான் என்று தீர்மானிக்கக்கூடாமல் திகைத்துக் கடைசியாய் கைவிட்டு விட்டார்கள். இவ்விதமாய்ச் சகலராலும் கை விடப்பட்டு, நம்பிக்கையுமற்று, பரிதபித்து நிற்கையில், பரிசுத்த ஊர்துராபுகிலைபத் தியானித்து. “என் ஆண்டவளே! அனுக்கிரகமும் கருணையும் நிறைந்த தாயே! பயமும் கிலேசமும் படுகிற பாவியாகிய நான், இதோ உம்முடைய கெர்ப்ப உற்பத்தியின் நேசத் தாய்மையான சுவாலைபால் கொளுத்தப்பட்டு உம்மை நோக்கி ஓடிவந்தேன். என் மன்றாட்டுக்கு இரங்கி என் மகன்படும் துயரை நீக்கியருளும் தாயே. இச்சணமுதல் என் குமாரனை உமதடைக்கல நிழலில் ஒப்படைக்கிறேன்; உமது நேசகுமாரன் திருமுகத்தைப் பார்த்து என் நேசகுமாரனைக் குணப்படுத்தும்” என்று இராப்பகலாய் வேண்டிக்கொண்டிருக்கும் தறுவாயில், சில தினங்களுக்குள் சேத்துப்பட்டியில் அர்ச். ஊர்து நாயகியின் மகோற்சவ காலம் நெருங்கவே சற்றே ஆறுதலடைந்து, என் மகனை அழைத்து, டை ஆலயம் போய்வரும்படியாய்க் கேட்க, அவன் சற்றே அஞ்சி “வழியில் வியாதிகண்டால் என்ன செய்வேன்!” என்று கலங்க. நானவைராக்கியமனதுடன் “மகனே உன்னைக் காப்பாற்ற அமலோற்பவியிருக்கையில் ஏன் கலங்குகிறாய்? இவ்விதம் நீ துன்பமடைவதைவிட அவ்வாண்டவள்பாதத்தில் உன் உயிரைக் கொடுப்பது வாசி

யன்றே! ஆகையால் ஒரே நம்பிக்கையாய்ப்போ" என்று தேற்றவே, குறிக்கப்பட்ட நாளில் புறப்பட்டான் புண்ய ஸ்தலத்திற்கு. அதுமுதல் ஒரு மாத காலமாய் யாதொரு சங்கதியும் எட்டவில்லை. நான்கு வாரங்கள் கழிந்த பின்னர் வந்தான் மகன் வீட்டிற்கு. விருத்தாந்தங்களை விசாரிக்க, யாதொரு விபத்தின்றி கால் நடையாகவே சென்று வந்ததாகச் சொல்ல; அச்சணமே முழந்தாளிட்டு என் பிரதிக்கினையைப் புறப்பித்து "மகனே, இனி பிரதிவருஷமும் தவறாமல் அமல நாயகியைத் தரிசிப்பதாக பிரதிக்கினை செய். மெய்யாகவே நீ சுகப்பட்டுவிட்டாய் என்பது என் பூரணநம்பிக்கை" யென்று சொல்லவே, குடும்ப முழுதும் ஆனந்தக் கண்ணீர்விட்டு அமலநாயகியைப் போற்றினோம். ஆ என்ன அற்புதம்! கால் மைல் தூரம் கால் நடையாய்ச் செல்லக்கூடாதவன், ஒருமாத பயணம் தனிமையாய்ச் செய்வதென்றால் அற்பக்காரியமோ! அன்றுமுதல் அவ்வியாதி அறவே நீங்கிப் போக, ஆண்டவளின் கிருபையால் உத்தியோகமும் செய்துகொண்டு பந்துமித்திரருடன் சந்தோஷமாய் வாழ்ந்து வருகிறான். ஓ! வல்லபம் பொருந்திய அரசியே! உமது திருக்கருணையால் பரிசுத்த லூர்து நகரத்தில் செய்துவரும் கணக்கில்லா புதுமைகளை கண்ணாரக்காணும் பாக்கியம் வாய்க்காத இவ்வேழை மக்கள்மீது மனங்கனிந்து, இவ்வேழை கிராமத்தில் மறுமுறையாய்க் காக்ஷி கொடுக்கத் திருவுளமானீரோ? அல்லது உமது மகிமையை அறிந்தும் அறியாத கபோதிகளாய் அலைமோதித்திரியும் பாஷாண்ட பதிதர் அஞ்ஞானிகளை உமது திருப்பாதாரவிந்த நிழலில் சேர்ப்பிக்க திருவுளங்கொண்டீரோ? ஓ! மட்டில்லாத மகிமையின் ஊருணியே! உமது மகிமையை வர்ணிக்க வானோர் முதலாய் வாயெடுக்கத் துணிவார்களோ?

தங்கமயமான மின்னங்கமதில் வெய்யோனைத் தரித்தவுன்னுடை யழகும்—சற்குணத்தமராற் சங்கைபெற்றோங்கிடுந் தண்டாமரைக் கையழகும்—சிங்கார வடிவுற்ற சிலபானருளுற்ற சீதமதி பாத வழகும்—ஜெகஜோதியொளிகொண்டு மாறுதிலங்கிடுஞ் செய்யமீன் சிரத்தினழகும்-வங்கார மனுவோர்க்கிரங்கியே வேண்டு முன் வதனவாய் வடிவினழகும்—மங்கையுடனின்றுபரி பாலனஞ்செய்யுமின் மாசுத்த பீடவழகும்—அங்கவ வரமுற்ற வம்மணியுன்புகழை யறைய வென்னாலாகுமோ—அருமையொடு சேத்துமா பட்டிதனில் வாழ்கின்ற அமலியே அன்னைமரியே.

ஓ! கிருபையின் ஊருணியே! இனிய நம்பிக்கை உம்மிடத்தில் காணப்படுகிறது. மகிமைப் பிரகாசத்தின் நக்ஷத்திரங்களால் முடிசூட்டப்பட்ட சௌந்தரிய அரசியே! உம்முடைய மன்றாட்டினால் கடவுள் பாவிகளை விடுதலையாக்குவார். குளிர்ந்த ஒளியுற்ற சமுத்திர நக்ஷத்திரமே! கப்பல் சேதம் அடைந்தவர்களின் கண்களைக் களிப்பிக்கும் துறைமுகமே! திறக்கப்பட்ட வாசலும் பாவிகளின் தஞ்சமுமாகிய உம்மால் நாங்கள் பரலோக இராசாவைக்கண்டு அர்ச்சியசிஷ்டவர்களாகக்கடவோமாக-ஆமென் சேசு.

கடைசியாய் நான் முன்னே செய்த பிரதிக்கினைப்படியே இவ்வருஷமும் போகிறதுமன்றி 1916௵ பெப்ரவரி௴ 11௳ நடைபெறும் திருவிழாவுக்குச் சமஸ்த விசுவாசிகளும் திருயாத்திரையாய்ச் சென்று கிருபா சமுத்திரமான காருண்ய அமலோற்பவியின் ஆசீரைப் பெற்று வாழும்படியாய் அனைவோரையும் அன்புடன் பிரார்த்திக்கும்

V. தோமாஸ் பிள்ளை..
உபதேசியார்.
உரிகம்.

---

## முன்னேறுவதெப்படி ?

ஏழைகளுக்கும், தாழ்ந்தவர்களுக்கும், ஆங்காரிகளால் இம்சிக்கப்படுகிறவர்களுக்கும் ஏக அடைக்கலமும் ஆதாரமும் இரட்சண்யமுமாயிருக்கும் பரிசுத்த புண்ணிய மூர்த்தியாகிய திவ்விய நல்ல ஆயனின் திருநாமத்தைப் பூண்டு, தமிழ் நாடுகளில் உலாவி அப்போஸ்தல கிருத்தியத்தைச் சித்திபெற முடித்துவரும் "நல்லாயன்" என்னும் பத்திரிகை வாயிலாய், இந்திய கிறிஸ்தவர்களென் றழைக்கப்பட்டு வருகிறவர்களும் என் இனத்தாருமாகிய வலங்கமத்து கிறிஸ்தவர்களுடைய லௌகிக ஈடேற்றத்தை நாடி, உள்ளது உள்ளபடி சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

சகோதிரர்காள்,

ஒரு அற்ப அசைவுமின்றி தெளிந்திருக்கும் ஜல மடங்கிய கிணற்றில், ஒரு கல்லை யெறிந்ததும் முதலில் ஒரு சிறு வட்டம் உண்டாகும். அதைச் சுற்றி யின்னொரு வட்டமும், அதைச் சுற்றி அதிலும் பெரிய இன்னொரு வட்டமும், இப்படியே எறியப்பட்ட கல்லின் பருமனுக்கும் வேகத்திற்கும் ஏற்றபடி கிணற்றின் உரைச்சுவர் மட்டும் பல வட்டங்களுண்டாகும். அப்படியே சதா தத்துவசாஸ்திரப் பயிற்சியில் அயர்ந்து நித்திரை செய்துகொண்டு, தன்னைச் சுற்றி உலகம் இருக்கும் விதம் எவ்வாறு என்பதைப் பற்றிக் கவலைகொள்ளாமல், தானே பெரியது என்று பெருமை பாராட்டி, தன்னிலை குடியில்லாமல் அந்நிய நாடுகளில் குடியிருப்பவர்களை மிலேச்சர் என்று ஏளனஞ்செய்து வந்த இந்தியாவிலும் ஒரு பரபரப்பு உண்டாயிருக்கிறது. இது முதலில் இந்துக்களுள் துவக்கி, மகம்மதியர்களைப் பற்றிக்கொண்டு இப்போது கிறிஸ்துவர்களுள்ளும் தலைகாட்டியிருக்கிறது. ஆனதைப் பற்றி இந்தியாவையிப்போது தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த இந்தியா (Awakened India) அல்லது புது இந்தியா (New India) என்று அழைக்கிறார்கள். இப்படிப்பட்ட பரபரப்பு எவ்வளவு தூரம் போகிறதென்றால், இந்தியர்களே இந்தியாவை அரசுபுரிந்து ஆளவேண்டுமென்னுமட்டும் போகிறது. இது ஒரு பக்கமிருக்கட்டும்.

இப்படிப்பட்ட பரபரப்பு அல்லது அசைவு நமக்குள்ளும் தோன்றியிருக்கிறது.

தங்களுக்கு உயர்தரப் படிப்பு ஆவசியகமென்பதைப்பற்றியும், தேவ அழைப்பை யடைந்த தங்கள் குல மக்களுக்கு குருப்பட்டம், சந்நியாசப்பட்டம் தரவேண்டுமென்பதைப்பற்றியும், தங்களைப் பஞ்சமர் அல்லது பறையர் என்னும் இழிவைக் குறிக்கும் பதங்களால் அழைத்தல் ஆகாதென்றும், நமது சென்னையில் பிரசுரமாகி வரும் "கத்தோலிக்கு வாச்மன்" எனனும் ஆங்கிலேய வாரப் பத்திரிகையில் கடந்தசில மாதங்களாக சிலர் எழுதியிருந்ததைக் கவனித்திருக்கலாம். மேலும் பெரிய பட்டணங்களில் கொஞ்சம் முன்னுக்குவந்து ஐவேசுடன் சீவித்து வரும் நமது ஜனத்தாரிடம், தங்கள் குலத்தாரின் கேவலநிலைமையைப்பற்றியோ, அவர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்னும் ஆவலைப்பற்றியோ, இதரர்களால் அவர்களுக்குண்டாகும் இடைஞ்சலைப்பற்றியோ, அல்லது இதரர்கள் அவர்களமட்டில் கொள்ளும் பரிதாபக் குறைவைப்பற்றியோ முறுமுறுப்பான வார்த்தைகளைக் கேட்டிருக்கலாம்.





ஆனால் முன்னுக்குவரும் விஷயத்திலும், பூர்வ பிளெபியர்களைப் போல் (Plebians) வாதாடி, சுதந்திரங்களை யடையும் விஷயத்திலும் எவ்வளவுமட்டுக்கும் தங்கள் கடமையும் உண்டென்பதைப்பற்றி, அல்லது அக்கடமையைத் தாங்கள் எவ்விதமாய் நிறைவேற்றி வரவேண்டுமென்பதைப்பற்றி யாரும் சிந்திப்பதில்லையாது. உடன் முயற்சியில் (Co-operation) இருவிதமுண்டு. அதாவது (Active co-operation) சுதந்தரவாக்கியங்கொண்டு பல பேருக்கு பலவிதத்திலும் நன்மைசெய்து பாடுபட்டு வருவது ஒன்று. மற்றொன்று (Passive co-operation) அவரவர்கள் தங்கள் மட்டுக்கும் தங்கள் கடமையை நிறைவேற்றி வருவதாகும். "ஒவ்வொருவனும் தன் தன் வீட்டெதிரில் பெருக்கினால் வீதியே சுத்தமாயிடும்" என்று சொன்னதற்கு வழங்கும் பழமொழிக்கொப்ப, ஒவ்வொருவரும் தம் தம் மட்டிலாவது பார்த்துக்கொண்டால், நாளாவட்டத்தில் குலமே விருத்தியடையும். இப்படிப்பட்ட இருவித உடன் முயற்சிகளுமின்றி ஜாதியென்னும் இந்திய வேதாளமும், அந்தஸ்து என்னும் ஐரோப்பிய பேதாளமும் கலந்து இந்திய ஜனசமூகத்தை நெருக்கி வாட்டிவரும் நமது நாட்டில், —நாங்கள் இருக்கிறோம்போல் இருப்போம்; எங்களுக்கு ஏன் இவர்கள் இடம் கொடுக்கிறதில்லை? அவர்கள் அதைக் கொடுக்கிறதில்லையே? இதைக்கேட்டால் மறுக்கிறார்கள் அதைக் கேட்டால் மாட்டோமென்கிறார்கள்—என்று புலம்பினால் போதுமா? உடன் முயற்சியே தேவை.

ஒருவன் ஒரு கிணற்றில் விழுந்துவிட்டானென்று வைத்துக்கொள்ளுவோம். ஒன்றில் அவன் தன சுயப்பிரயாசையால் கிணற்றின் படியைத் தேடி, ஏறி, வெளிக்குவரவேண்டும், அல்லது அவன் சுற்றத்தார் யாராவது அவனுக்காக முயன்று, அவனை வெளியேயெடுக்கப் பிரயாசப்படவேண்டும். அல்லது ஒரு அந்நியன் அவன்மட்டில் இரக்கங்கொண்டு அவன் ஏறிவரக் கயிறுவிட்டால், அக்கயிற்றைப் பிடித்து மேலே கிளம்பவேண்டும். தானே ஏறிவராமலும் தன் சுற்றத்தார் அவனைச் சட்டைசெய்யாமலுமிருக்கும்போது, அந்நியர்விட்ட கயிற்றையாவது பற்றிக்கொண்டு மேலே வரமுயற்சியெடுக்காமல், கிணற்றுள்ளேயே யிருந்துகொண்டு—என்னைப் பற்றிப் பரிதாபம் யாருக்குமில்லையா? நானா இப்படியிருக்கிறேனோ? அப்படி தவிக்கிறேனே?—

என்று நம்பிபறை சிந்தித்தலந்தால் அப்படிப் புட்டங்களைப் பிறர் என்ன சொல்வார்கள்? இவைத வரிசிப்பவர்களே கிரகித்துக்கொள்ளலாம். பொருளையில்லாவிட்டாலும், அநேக சந்தர்ப்பங்களில் சாதா ஜனங்கள் அப்படிப்பட்டவர்களாயிருக்கிறார்கள். பேக்கன் என்னும் ஆங்கிலேய தத்துவ சாஸ்திரியார் சொல்வது போல் வீண் வார்த்தைகளால் பயனில்லை. காரணத்தையறிந்து பரிகாரத்தைத் தேடவே சிறந்த தத்துவசாஸ்திரம். இதிலேயே பூர்வ தத்துவ சாஸ்திரத்திற்கும் தற்காலத்துத் தத்துவசாஸ்திரத்திற்கும் உள்ள பேதாபேதம் அடங்கியிருக்கிறது.

ஆனதால், இப்பத்திரிகையில், மேற்கண்ட தலைப்பின் கீழ், அதாவது "முன்னேறுவதெப்படி" என்பதைப்பற்றிய வியாசங்களில், நமது விருத்தி விஷயமாய் எவ்வளவுக்கு நமது உடன் முயற்சி தேவையென்று காட்ட முயலுவேன்.

இந்திய கிறிஸ்துவன்.

## கத்தோலிக்கரின் உயர்தரக் கல்வி.

சங்கைக்குரிய பத்திராதிபரே,

கத்தோலிக்கரின் உயர்தரக்கல்வியை விருத்திசெய்யும் விஷயமாய்க் கல்வியிற்றேர்ந்த பல கனவான்கள் இப்போது அக்கறைகொள்வதைப் பார்க்க எனக்கு வாஸ்தவத்தில் சந்தோஷமுண்டாகிறது. ஆயினும், கத்தோலிக்கருக்குள் ஜாதி வித்தியாசப் பாராட்டுதலை இத்தென் இந்தியாவில் அறவே ஒழிக்குந்தனையும், அவர்கள் எண்ணம் ஈடேறுவது துர்லபம என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

ஜாதிவித்தியாசம் பாராட்டுபவர்களுக்காக போர்டிங் பள்ளிக்கூடங்கள் அநேகம் உண்டு. ஆனால் அதைப் பாராட்டாதவர்களுக்காக அவைகள் அருமையிலும் அருமையாயிருக்கின்றன.

ஆகலால், இந்தக் குறையைப் பரிகரிக்கும்படி ஷை கனதனவான்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கத்தோலிக்கு வேதம் பொதுவானது. ஆகையினால் அதை அநுசரிக்கிறவர்களுக்குள்ளும் ஒரே பொதுவான ஜாதி இருத்தல் வேண்டும். அப்போது மாத்திரமே ஷை கருத்து சித்திபெறவாகும்.

இப்படிக்குத் தங்கள்
கீழ்ப்படிதலுள்ள ஊழியன்

செகந்திராபாத் } ஏ. சி. ஞானப்பிரகாசம்,
20—1—16. } ரெஜிமெண்டல் பஜார்.

# MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்,

**கம்பிகளில்லா மின்சாரம்.**—அமெரிக்கா நாட்டில் மில்னர் (Dr Milner) என்பவர் மின்சாரவிளக்கை, மயிற் கணக்கான தூரங்களுக்குங் கம்பிகளில்லாமற் செலுத்தக்கூடிய ஓர் இயந்திரத்தை கண்டுபிடித்திருப்பதாகக் கூறுகிறார்.

**நிலவில் படுத்து நித்திரை செய்யலாமா?**—நிலா வெளிச்சத்தில் படுத்து நித்திரைகொள்வது சுகாதாரத்துக்கு ஏற்றதல்லவென்று லான்செட் என்னும் பிரபல இங்கிலீஷ் வைத்திய பத்திரிகை சொல்லுகிறது. அப்படிக் கொஞ்சகாலம் நித்திரைகொள்பவர்களுக்கு மூளை சம்பந்தமான வியாதிகளும்சிரசைப்பற்றிய வியாதிகளும் பார்சுவநோய்களுமுண்டாகின்றனவாம்.

**சேர்விய அரசனது ஆபரணங்கள்.**—சேர்விய மந்திரியின் வீட்டைப் பல்கேரியர் சோதனைபோட்டு அங்கு ஒளித்துவைக்கப்பட்டிருந்த இராஜ ஆபரணங்களைக் கண்டுபிடித்தார்களென்று ஓர் அறிக்கை தெரிவிக்கிறது. இராசனின் கிரீடமுதற்கொண்டு சகலமும் பூமியில் ஒளிக்கப்பட்டிருக்க அவையெல்லாம் வெட்டியெடுக்கப்பட்டனவாம்.

**சமாதானத்தின் இராக்கினியே!**—அநேக மேற்றிராணிமார்களின் வேண்டுகோளுக் கிரங்கி, பரிசுத்த பாப்பவர்கள் அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனையின் கடைசியில் "திருச் செபமாலையின் இராக்கினியே" என்ற வாசகத்துக்குப்பின் "சமாதானத்தின் இராக்கினியே" என்னும் வாசகத்தைச் சேர்த்துத் தற்கால யுத்தம் முடியும்வரை சொல்லலாம் என்று உத்தரவளித்திருக்கிறார்கள்.

**மரியாயே வாழ்க.**—ஓர் மனிதன் ஓர் குருவி வளர்த்தான். அந்தக் குருவிக்கு எப்போதும் "Ave Maria" மரியாயே வாழ்க வென்பது வழக்கம். ஒருநாள் அந்தக் குருவி கூட்டை விட்டு வெளியே பறந்து போனபோது, அதை ஓர் இராசாளி பிடிக்க வந்தது. இதைச சிறு குருவி பயந்து "Ave Maria" மரியாயே வாழ்க வென்றபோது



அந்த இராசாளி கீழே விழுந்து இறந்தது. என்னே மரியாயின் வல்லபம்!

**சிலோனிலிருக்கும் தந்தியில்லாச் சமாசாரக் கருவிகளின் சக்தி:**-தற்போது சிலோனில் வைக்கப்பட்டிருக்கும் தந்தியில்லா சமாசாரக் கருவிகள் மூலமாய் அவ்விடத்திலிருந்தபடியே பிரான்சின் தலைநகராகிய பாரீஸ், இங்கிலாந்தின் தென் திசையிலுள்ள கார்ன்வால் முதலிய இடங்களிலிருந்து நேராக சமாசாரங்கள் அறிந்துகொள்ளக் கூடியதாக, அக்கருவிகள் அவ்வளவு சக்தியோடிருக்கின்றனவென்று கொழும்பிலிருந்து செய்தி எட்டுகிறது.

**அர்ச். பாப்புமார்களின் கல்லறைகள்.** இதுவரைக்கும் மரணமடைந்த பாப்புமார்களின் சடலங்களைத் தக்கபடி க்ஷேமிக்கும் பொருட்டு நம்முடைய பரிசுத்தபிதா 15ம் ஆசீர்வாதப்பர் ஓர் பிரமாண்டமான கல்லறையைக் கட்ட யோசித்திருப்பதாகவும், அதுபரியந்தம் அவற்றைக் காபந்தாய் வைத்துவைக்க உரோமாபுரி அர்ச். இராயப்பரின் பெரிய தேவாலயத்திலிருக்கும் அர்ச். காணிக்கைமாதாக் கோவிலில் தற்போது சமாதியொன்று கட்டுவதாகவும் தெரியவருகிறது.

**நீ ஏன் பூகோளபாடம்படிக்கவில்லை?**-என்று "ஹாரல்ட்" என்னும் தமது மாணாக்கனை உபாத்தியாயர் கேள்வி கேட்க, அதற்கு அவன் "ஐயா! தாங்கள் சில தினங்களுக்கு முன் இப்போது நடந்தேறி வரும் யுத்தத்தினால் பூகோளபடங்களில் காட்டியிருக்கிற அந்தந்த தேசங்களின் எல்லைகளெலாம் மாறுபட்டுப்போம் என்று சொன்னது என ஞாபகத்திலிருக்கிறது. ஆகையால் அந்த மாறுதல்களுக்குப்பின் ஒரே மூச்சாய்ப் படித்துவிடலாமென்று காத்திருக்கிறேன்" என்றான். இம்மாணாக்கன் சமர்த்தான மறுமொழி கொடுத்தானென்றாலும் பெரிய சோம்பேறி யென்பதற்கு ஐயமில்லை.

**ஒரு உரோட்டிக்காரனின் தந்திரம்.**—வியன்னா நகரத்தின் உரொட்டி வியாபாரி ஒருவன் தனது வியாபாரத்தில் அதிக லாபத்தை அடையவேண்டி தான் சுடும் உரோட்டிகளில் ஆயிரத்துக் கொன்றில் "டியுகாட்" என்னும் ஓர்வித பொன்நாணயம் வைத்திருக்கிறதாகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தான். இந்த உரொட்டிக் கடையின் சுற்றிலுமுள்ள எளிய ஜனங்கள் எளிதில் அந்த நாணயத்தை அடையலாமென்று, ஒருவர்மேல் ஒருவர் விழுந்து உரொட்டியை வாங்கினார்களாம். இதனால் அந்த உரொட்டிவியாபாரிக்கு அதிக லாபம் உண்டானது. பணம் சம்பாதிக்க இதுவும் ஓர் தந்திரந்தான்.

**ஜெருமனியரின் ஏற்பாடுகள்.**—இங்கிலாந்தில் பிரசுரமாகும் டெயிலி மெயில் பத்திரிகைக்கு ரோமாபுரி நிருபர் அறிவித்திருக்கிறதாவது: சூவெஸ்கால்வாயைத் தாக்குவதற்கு வேண்டிய யுத்த தளவாடங்களை யாவையும் துருக்கிக்கு அனுப்பிவிட்டதாக ஜெருமனியர் சொல்லுகின்றனர். மேலும் சூவெஸ் கால்வாய்க்குப் போகும் வழியிலுள்ள பாலைவனங்களிலே மும்முரமாய் இருப்புப்பாதையையும் போட்டு வருகிறார்களாம். அந்த வேலையானது இரவும் பகலும் ஓயாமல் நடந்துவருகிறதாம். இனி பால்கன் சண்டையின் முடிவாக வேறு இடங்களில் உபயோகப்படும்படி பத்துலட்சம் சேனைகள் கிடைக்க இடமுண்டென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதே.

**யுத்தகளத்தின் விஸ்தீரணம்**—இக்காலத்தில் சண்டையானது நூறு இருநூறு மைல் தூர விஸ்தீரணமான பரப்பளவில் நடத்தப்படுகின்றது. ஆகவே ரயில்பாதைகள் இல்லாத இடங்களில் அவைகளைப் புதிதாகப் போட்டுக்கொண்டும் யுத்த நடவடிக்கைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. பிராஞ்சுசேனையில் ஒரு பாகம் முன்னதாகச் சென்று சண்டையிட, அதன் மற்றொருபாகம பின்தங்கியிருந்து, முன்னது களைத்துப்போனால், அதற்கு உதவியாகச் செல்ல உபயோகமாகும்படி பிரித்துக்கொண்டு யுத்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கிறார்கள். இப்போது ஜர்மனி நடத்திவருகிற யுத்த முறைகளிற் பல பிரசித்த புருஷனாகிய நப்போலியனிடமிருந்து கற்றுக்கொண்டவைகளேயாம்.

**கோயனா மருந்து**-இம்மருந்து மலேரியா வென்னும் விஷ ஜுரத்தைப் போக்குங் கைகண்ட ஔஷதமென வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இது ஒரு மரத்தின் பட்டை. இதைத் தென்

அமெரிக்காவிலிருந்து 17-வது நூற்றாண்டில் டாக்டர் டால்பட் என்பவர் இங்கிலாந்துக்கு முதல் முதல் கொண்டுவந்து, வெகு இரகசியமாய் வைத்துக்கொண்டு, ஓர் சேர் தூளை பதினையாயிரம் ரூ. வீதம் விற்பனை செய்து வந்தாராம். 1679-ம் ஆண்டில் பிரான்சு தேசத்து மன்னர் அகோர ஜுரத்தால் பிடிக்கப்பட்டபோது டை டாக்டர் இத் தூளைக் கொடுத்துக் குணமாக்கிப் போட்டார். இதற்குக் கைம்மாறாக இம்மன்னர் டாக்டர் டால்பட் அவர்களுக்கு எழு லட்சம் ரூ. இறைமாக வளித்ததுமன்றி, வருஷ மொன்றுக்கு முப்பதினாயிரம் ரூ. வீதம் உபகாரச் சம்பளமுங் கொடுத்து வந்தாரெனச் சொல்லப்படுகிறது.

**ஆங்கிலிக்கன் புரோடஸ்டாண்டார் —** இப்புரோடஸ்டாண்டாருக்கு நல்லகாலம் பிறந்திருக்கிற தென்றறிந்து மிக்க சந்தோஷிக்கிறோம். இவர்களுக்குள் சிலர் தேவமாதாவின்பேரில் பக்தி வைத்து ஜெபமாலையைச் செபித்து வருகிறார்கள். இவர்கள் நம்திவ்ய இரட்சகருடைய மனிதாவதாரத்தை விவரமாய் விளக்கிக் காட்ட ஜெபமாலையே தகுதியும் சிறந்ததுமான பக்தி கிருத்தியமென்றும், வேறெந்தப் பக்திக் கிருத்தியமும் அவ்வளவு தெளிவாய் அதைப் புலப்படச் செய்யாதென்றும் மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறார்கள். தேவமாதாவின்பேரில் பக்தி வைக்கிற யாரும் நித்திய கேட்டுக்குள்ளாகா ராகையால், இவ்வாண்டவளுடைய இரக்கத்தால் இப்புரோட்டஸ்டாண்டு சபையார் மனந்திரும்பி நமது சத்திய திருச்சபையிற் சேர்ந்து, உத்தம கிறிஸ்துவர்களா யொழுகி, நித்திய மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரித்துக் கொள்வாரென்பதற் கையமில்லை.

**புத்தக வரவு.**—யாழ்ப்பாணத்து சங். S. ஞானப்பிரகாச சுவாமியாரவர்கள் நமது பார்வைக்கு அனுப்பின "சமய ஆராய்ச்சியும் தேர்வையும்" என்னுந் துண்டு புத்தகமொன்றை மிகுந்த வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம். சைவருக்கு விரோதமாய் எழுதப்பட்ட இப்புத்தகம் கிறீஸ்துவர்களுக்கும் வெகு பிரயோசனமுள்ளதே. சகல தேசங்களிலுமுள்ள பழக்க வழக்க பாவனைப் புடை முதலியவற்றைக் கண்டு பரிகசிக்கத் தொடங்கியிருக்கும் தற்காலத்திப் இதுகா சைவர், தங்கள் ஆத்தும விஷயக ஞானத்தில் மாத்திரம் தாங்கள் ஆராய்ந்தறியும் சத்தியத்தைக் கடைப்பிடிக்க நாடாமல், இன்னும் மற்றவரையும் தங்களோடு படுகுழியில் வீழ்த்தத் தேடுகிறார்கள். இதற்காக இவர்கள் பட்டணங்களிலும் நாடுகளிலும் போய் ஆதாரமற்ற தங்கள் பொய்ப் போதகத்தைப் பிரசங்கிக்கவுந் துணிகிறார்கள். அன்னவருக்கு நல்லறிவுறுத்துமாறே யித்துண்டுப்புத்தகம் எழுதப்பட்டமையால், இதனை வாசித்தேனும் கடைத்தேறுவாரென நம்புகின்றோம். இப்புத்தகம் வேண்டியவர்கள் யாழ்ப்பாணத்து அர்ச். சூசையப்பர் அச்சியந்திரசாலைக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புற் கூழ்.**—ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டார் உல்லா (Ulla) என்னும் புல்லிலிருந்து கூழ் (Pulp) என்னுமொரு வஸ்துவை எடுத்துக் காகிதம் செய்வதற்கான ஓர் கைத்தொழிற்சாலை ஸ்தாபிப்பதற்கு யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த வஸ்துவானது முதல் முதல் 1911 வருஷத்தில் ஐக்கிய மாகாணப் பொருள் காட்சியில் கொணர்ந்து வைக்கப்பட்டது. அது முதற்கொண்டு இக் கைத்தொழிலை விருத்தி செய்ய வேண்டுமென்று பலர் முயற்சித்து வருகிறார்கள். தற்போது நடக்கும் யுத்தத்தின் காரணமாக காகிதங்கள் அதிகமாக அந்நிய நாட்டினின்று இங்கு இறக்குமதியாவதில்லை. ஆகையால், நமக்கு வேண்டிய காகிதங்களை நாமே செய்துகொள்ள வேண்டிய தவசியம். நம் தேசத்தில் ஒவ்வொரு வருஷமும் ஏறக்குறைய 100 கோடி ரூ. மதிப்புள்ள காகிதங்கள் இறக்குமதியாகின்றன. காகிதம் செய்வதற்கு உபயோகமான பலவித புல்லுகள் நமதேசத்தில் பலவிடங்களில் கிடைக்கின்றன. அவைகளைக் கண்டுபிடித்து இக் கைத்தொழிலை வெகு சீக்கிரம் முன்னுக்குக் கொண்டுவருவது தவசியம்.

**110, 116 வயதுள்ள இருவயோதிபர்கள்.**—திருவாங்கூரைச் சேர்ந்த நாஞ்சிநாட்டில் நெசவுத்தொழிலைச் செய்யும் ஒருவருக்கு வயது 110 ஆகிறதாம். இவ்வளவு விருத்தாப்பியத்திலும் இவர் தினந்தோறும் நாலுமணிநேரம் தமது நெசவுத்தொழிலைச் செய்துவருகிறாராம். இதுபோல் திருவாங்கூரைச் சேர்ந்த கல்குளத் தாலுக்காவில் சாணார் வகுப்பைச் சார்ந்த மற்றொருவருக்கு பிராயம் 116 ஆகியும், இன்னும் நாலு மைலுக்குக் குறையாமல் அன்றாடம் நடந்து திரிகிறாராம். இவ்விருவருக்கும் இவ்வளவு தீர்க்க ஆயுள் கிடைத்ததின் காரணமென்னவா யிருக்குமென யோசித்துப்பார்க்குங்கால், அவர்கள் வசிக்கும் மலைநாட்டின் சுத்தமான ஆகாயமும் அவர்கள் செய்துவந்த சரீரமுயற்சிக்கான தொழிலுமேயென யூகிக்க இடமுண்டு. இதற்கொப்ப சில வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட ஜனக்கணக்கில் கண்டிருந்தபடி உலகமடங்கிலுமுள்ள எல்லா ஜாதியாரிலும் தற்போது யுத்தம் புரிந்துவருகிற பால்கன் நாடுகளின் மலைப்பிராந்தியங்களில் வசிக்கும் ஓர் வகுப்பாரே மற்றெல்லோரையும் விட நீண்ட ஆயுளுடையவர்களெனத் தெரியவருகிறது.

**சமஸ்தமான பாம்பு விஷங்களுக்கு கைகண்ட ஓர் மை.**—(1.) பனங்கூழ்ம்வல்லம் ஓர் ஆழாக்கு. (2) சென்னையில் கொம்புக்கள்ளி யென்றும் தென் தேசங்களில் கொடிக்கள்ளி என்றும் சொல்லப்படுகிற செடியின் பால் ஓர் ஆழாக்கு. (3) முற்றின தேங்காய்ச் சிரட்டை (கண்ணுள்ளது) சுட்டெடுக்கப்பட்டது ஒன்று. ஆகிய இவைகளில் முதல் முந்த கூழ் வெல்லத்தைத் தனியாக மூன்று மணிநேரம் அரைத்து, பின் பாலைச் சேர்த்து மூன்றுமணிநேரம் அரைக்கவும். கடைசியாய்ச் சுட்டெடுத்த சிரட்டைக் கரியை நன்றாய்ப் பட்டுபோல் நுணுக்கிக்கொண்டு மேற்படி மருந்தில் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்த்து ஆறு மணி நேரம் அரைத்தெடுத்துச் சீசாவிலாவது, கொம்புச் சிமிழிலாவது பத்திரப்படுத்தவும். ஓர் புளியங்கொட்டைப் பிரமாணம் மையை இரண்டு மூன்று வெற்றிலையில் வைத்து மென்று சாப்பிடவும். இரண்டொரு தடவை பேதியாகும். உப்பில்லாமல் பச்சரிசிக் கஞ்சியே அன்றைக் கெல்லாஞ் சாப்பிட வேண்டியது. மறு நாள் உப்பை வறுத்துப் புளி, நல்லெண்ணை சேர்க்காமல பத்தியமான காய்கறி சேர்த்துக்கொள்ளலாம். மூன்றாம் நாள் நல்லெண்ணை தேய்த்து ஸ்நானஞ்செய்து, வேண்டியதைச் சேர்த்துக்கொள்ளலாம். சகல விஷங்களும் நீங்கும். ஆரம்பிக்கும் குஷ்டமும் ஒழிபடும். சுமார் கடந்த 40 வருடங்களாகக் கையாடிவந்த முறையிது. மாடு, குதிரை முதலிய ஜீவ ஜெந்துக்களுக்கும் ஓர் நெல்லிக்காயளவு மையெடுத்து வெற்றிலையில் வைத்துச் சுருட்டி புல்லோடு சேர்த்துக் கொடுக்கவும்.

**ஜெர்மனியின் தற்கால நிலைமை —** ஜெர்மனியின் தலைநகரமாகிய பெர்லினில் பிரசுரமாகும் டஜ்ப்ளாட் என்னும் பேர்போன பத்திரிகை ஒன்று தெரிவிப்பதியாதெனில்: நாங்கள் கொண்டிருந்த வெளிவேஷமனைத்தும் விட்டுவிட்டோம். இனி நாங்கள் ஜீவித்திருந்தாலுஞ்சரி அல்லது நசுக்குண்டுபோனாலுஞ்சரி என்றபடி அவ்வளவு பிரமாதமான போராட்டத்தில் தலையிட்டுக்கொண்டிருக்கிறோம். எங்களை நாசமாக்கி விடுவது அசாத்தியமென்று கிரேட் பிரிட்டன் உணர்ந்துகொள்ளட்டும். பிரான்சுக்காரருக்கு நேர்ந்திருக்கும் சேதம் எங்களுக்கும நேர்ந்திருப்பதினால் பாலில நீரைக் கலக்குமாறு முயற்சியுடையோராயிருக்கிறோம். கிரேட்பிரிட்டனோ நீரில் பாலைக் கலப்பதுபோல முயற்சியுடையதாயிருக்கிறது. மிக்க நல்ல பெரிய சேனையொன்றை அது சேர்த்து வருகிறது. இம்மாதிரியான சேனையைக் கிரேட்பிரிட்டன் தயாரிக்குமென்று யெங்கள் இராணுவ நிபுணர்கள் எதிர்பார்க்கவில்லை என்று தெரிவித்து, இப்படியாகத் தன்னுடைய தற்கால நிலைமையைப்பற்றி, ஐயாவுபட்டபோதிலும் வீரியமும் பேச பின்னிடைகிறதில்லை. ஜெர்மனி எவ்வளவு வீரியங்காட்டினபோதிலும், அது ஐக்கிய கட்சிக்காரரால் நாளடைவில நசுக்கப்பட்டுப் போமென்பது திண்ணம். ஐக்கிய கட்சிக்காரருங் கொஞ்சங் கொஞ்சமாய் முன்னேறிப்போய் ஜெர்மனியரை பின்னுக்கு வெருட்டிக்கொண்டே போகிறார்களென்று தந்திசமாசாரங்களினாலும் தெரியவருகிறது. தற்போது ஜெர்மனிக்குள் பிரிட்டிஷார் ஆக்ஷேபிக்கக்கூடிய சரக்குகள் போய்ச் சேராதபடிக்கு முயற்சியெடுத்துக்கொண்டும் வருகிறார்கள். இதனால் ஜெர்மனிக்கு உணவு பொருள்களும் மற்றுமுள்ள ஆகாராதி பண்டங்களும் போகவிடமில்லை. எப்போது ஒரு தேசத்துக் குடிக்கு உணவு பொருள்கள் குறைகின்றனவோ அப்போது அதில் வெறுப்பும் அதிருப்தியும் எற்படுவது சஜமேதானே. அதன்மேல கலகமும் உண்டாகக்

கூடுமல்லவா? அன்றியும் போர்த் தளவாடங்களுக்கு வேண்டிய பருத்தி, ரப்பர் முதலிய சரக்குகளுங் குறைவுபட்டிருக்கிறபடியால் ஜெர்மனியின் ராணுவ செருக்கும் குன்றிப்போகிறது. இதுவே ஜெர்மனியின் தற்கால நிலைமையாகும்.

நமது புதிய இராஜப் பிரதிநிதி:—தற்போது யுத்த காரியதரிசியாக விருக்கும் லார்டு கிச்சனர் யுத்தம் முடிந்த பிறகு ஒருக்கால் நமக்கு இராஜப் பிரதிநிதியாக வருவாரென்னும் வதந்தி உலாவுவதாக சென்ற டிசம்பர் மாதப் பத்திரிகையின் வாயிலாய் அறிவித்திருந்தோம். ஆனால் இப்போது லார்டு செம்ஸ்போர்டு என்பவர் இந்தியாவுக்கு வைசிராயாகவும் கவர்னர் ஜெனரலாகவும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாரது சிபாரிசின்மேல் நம் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இந்தியாவுக்குப் புதியவரல்லர். யுத்தம் தொடங்குவதற்கு முன் இவர் டார்செட்ஷையர் ரெஜிமெண்டுக்கு அதிகாரியா யிருந்தபடியால், இந்தத் தேசத்தின் நடையுடை பாவனைகள் முதலியவைகளை நன்றாய் அறிந்தவர். மேலும் க்வீன்ஸ் லாண்டிலும், நியூ சௌத்வேல்ஸிலும் கவர்னரா யிருந்திருக்கிறபடியால் நிர்வாக காரியங்களை யொட்டிய விசேஷங்களிலும் அனுபோகஸ்தராவர். லார்டு ஹார்டிஞ்சு அவர்களது நிருவாக சமர்த்தையும் அறியாதவரல்ல. சமீபத்தில் இவர் இங்கிலாண்டுக்குப் போயிருக்கிறபடியால் அடுத்த மார்ச்சுமாதத்தில் திரும்பி வந்து தமது அதிகாரத்தை வகித்துக் கொள்வார்.

மூழ்கியிறந்த 4 கன்னியர்கள்.-சென்ற மாதம், பி அண் ஓ கம்பனியைச்சேர்ந்த "பெர்ஷியா" வென்னும் மெயில் ஸ்டீமர், மத்தியதரைக் கடலில் ஆஸ்டிரியன் நீர் மூழ்கிக் கப்பலினால் அமிழ்த்தப்பட்ட சங்கதி நமது சந்தாதாரர்கள் அறிவார்கள் போலும். இந்தக் கப்பலோடு கடலில் மூழ்கி இறந்தோர் அநேகர். அவர்களில் நாலுபேர் (Daughters of the Cross) திருச்சிலுவை சபையின் கன்னியர்களாவார். இவர்கள் நால்வரும் லண்டன் நகரத்தைவிட்டு "பெர்ஷியா" கப்பலிலேறி இந்தியாவுக்கு வரப் புறப்பட்டவர்கள். இவர்களில் (Gerard Majella) ஜெரார்டு மாஜெல்லா என்ற சகோதரி வங்காளத்தில் வெகுகாலம் உழைத்து, சுகத்துக்காகத் தமது சுயதேசமாகிய பெல்ஜியத்துக்குப் போயிருந்தார்கள். நிகழும் யுத்தம் பெல்ஜியத்தில் ஆரம்பமானபோது இந்தச் சகோதரி வீஜ் பட்டணத்தி லிருந்துகொண்டு காயம்பட்ட அநேகாநேக போர்வீரருக்குக் காயங்கட்டி அநேகவிதமான உதவிசெய்துவந்தார்கள். இவர்களுடைய விசேஷித்த பராமரிப்பாலும் ஜாக்கிரதையாலுமே கைகால்களைத் தரித்தெடுக்கும்படியா யிருந்த அநேகம் போர்வீரர்கள் அவ்வித அபாயகரமான சிகிச்சைக்குத் தப்பித்துக் குணப்பட்டார்கள். இந்தச் சகோதரியோடு லண்டனிலிருந்து பயணப்பட்டு வந்த வேறு மூன்று கன்னியர்களுக்குள் (Marie Molhant) மரிய மொலான் தென்னும் கன்னியாஸ்திரீயும் ஒருவளாவள். இக் கன்னியாஸ்திரீ கல்குத்தா அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். மொலாந்த சுவாமியாரவர்களின் சகோதரி. மற்றிரு கன்னியரும் இன்னாரென்று நாமறியோமாயினும், இவர்கள் நால்வரும் நித்திய இளைப்பாற்றி அடையும்படி வேண்டிக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வருஷாந்திர திருவிழா.—சென்னைக்கு 40 மைல் தூரத்தில் ஈஸ்ட்கோஸ்ட் இருப்புப்பாதை யிலிருக்கும் ஆரம்பாக்க ஸ்டேஷனுக்குச் சமீபமாயுள்ள மோக்ஷமுடி இராக்கினியின் பொருத்தனைக் கோவிலில் லூர்து மாதா தரிசனை திருநாள் வழக்கப்படி கொண்டாடப்படும். கொடியேற்றமும், நவநாட் செபமும் இம்மாதம் 5-ம் தேதியாகிய சனிக்கிழமை. வெஸ்பர், தேர் சுற்றுப்பிரகாரம், பிரசங்கம் முதலியவைகள் 12-ம் தேதி சனிக்கிழமை நடந்தேறி, பாட்டுப் பூசை, தேர்சுற்றுப் பிரகாரத்தோடு அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று முடிவு பெறும். கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களும் மற்றவர்களும் இந்தப் பொருத்தனைக் கோவிலில் நமது பரமதேவ தாயாரைக் கொண்டாட இத்திருநாளுக்கு வரக் கேட்டுக் கொள்ளுகிறோம். மோக்ஷ இராக்கினி முடி பெற்ற பரம ஆண்டவள் திருயாத்திரைக்காரருக்கும், இத்திருநாளுக்கு உதவிசெய்யும் தாமஷ்டருக்கும் வரமளமாயச் சம்பாவனை அளிப்பாள். S. M. F. Ignatius, விசாரணை குரு, ஆரம்பாக்கம்.



திருவிழா விளம்பரம்—இதனால் சகலமான கிறீஸ்தவர்களுக்கும் தெரிவிக்கிறதென்னவென்றால், திருநெல்வேலி ஜில்லா தென்காசி ரயில்வே ஸ்டேஷனுக்கு 13 மைல் தூரத்திலிருக்கிற சேர்ந்தமரம் பங்கைச் சேர்ந்த திருமலைபுரம் வரதாக்ஷி மலையின்மேல் கட்டப்பட்டிருக்கும் அர்ச். லூர்து மாதா கோவில் திருநாளுக்கு 1916-ம் வருஷம் பிப்ரவரி மீ 10உ வியாழக்கிழமை நவநாள் துவக்கமும் கொடி ஏற்றச் சடங்கும். பிப்ரவரி மீ 19உக்குத் தமிழ் மாசி மீ 7உ சனிக்கிழமை காலை மலைமேல் ரத உற்சவத்துடன் திருநாள் சிறப்பாய் முடிவு பெறும். அர்ச். லூர்துமாதாவின் தாசர்களெல்லாம் வந்து இத் திருநாளின் பலனடைய ஆசிக்கிறோம். J. Ignatius, S. J. பங்குவிசாரணை குரு, சேர்ந்தமரம்.

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக, முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

ப. ர்.

### ஜனன அறிக்கை.

#### கூட்டப்பனை.

தேவகிருபையால் எனக்கு மெய்விவாஹம் நடந்து மூன்று வருஷகாலமாய்ப் புத்திர பாக்கியம் இல்லாமல் கடைசியாய் நான் பரிசுத்த சேசுவின் திரு இருதயத்தை மன்றாடினதின் பயனாக 1915ஆம் அக்டோபர் மீ 5உ என தருமை மனைவி மரியம்மாள் பெர்னந்தாள் ஓராண் மகவைப்பெற்றனள். அதற்கு எட்டாம் நாள், ஸ்ரீமான் ராயப்பன் பெர்னந்து அவர்கள் ஞானத்தகப்பனாகவும் ஸ்ரீமதி அந்தோனியாள் குருஸ் பெர்னந்து அவர்கள் ஞானத்தாயாராகவும் நின்று இராஜரிஷி கனம். ராயப்பர் சுவாமிகளால் தொம்மை அந்தோனி குருஸ என்ற நாமகரணமிடப்பட்டு திருச்சபை யாசாரப்படி ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. தாயுஞ் சேயுஞ் சுகம். இதனைக் கண்ணுறும் நம்மித்திரரனைவரும் அப்பாலகனைத் தேவனாசீர்வதித்து நீடிய ஆயுளையும் நித்திய சுக செல்வபாக்கியத்தையும் அதற்குக் கட்டளையிட அமல சுத்தனை மன்றாடப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு

கா. மாதவடியான் பெர்னந்து.

ரட்னபுரி.

### நன்மரண அறிக்கை.

சில நாட்களாய் அசௌக்கியமா யிருந்த என் அருமை மனைவி ரீத்தம்மாள் சகலவித பரிகாரஞ்செய்தும் குணமாகாமல் தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்று தனது 26-வது வயதில் என்னையும் பந்து மித்திரர்களையும் பிரிந்துவிட்டு 1915-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 8½ மணிக்குப் பரலோக பிராப்தி யடைந்தனள். மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு கன்றோன் மென்ற் கல்லறையில் சடலத்தை நல்லடக்கஞ் செய்தோம். அந்த ஆத்துமத்தின் இளைப்பாற்றிக்காக நண்பர்கள் வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கின்ற நிர்ப்பாக்கியன்,

L. R. கிரகோரி.

113. Montgomery Street, Rangoon.


## வீரமாமுனிவர் ஔஷதசாலை.

"வீரமாமுனிவரின் சுகந்தருமாத்திரை" அல்லது "சர்வ ரோக நிவாரண சஞ்சீவி"யானது பற்பல வியாதிகளைப் பற்றறப்போக்கும் பலமான மருந்து. விசேஷமாய் ஏழைகளுக்கு ஏற்ற மருந்து. ஆயிரம் ஆயிரமான ஜனங்களுக்கு ஆரோக்கியத்தை அளித்திருக்கிறது. இந்தியாவில் மாத்திரமல்ல, பர்மா, சிலோன், சிங்கப்பூர், நெட்டால் முதலிய தூர தேசங்களிலெல்லாம் பேர்போன மருந்து. சுகமடைந்தோர்களிடமிருந்து

வரும் நற்சாட்சிப் பத்திரங்களுக்குக் கணக்கில்லை. வட பர்மாவைச் சேர்ந்த மாண்டலேயிலிருந்து சமீபத்தில், அதாவது ஜனவரி 14-ந் தேதி தான், மாண்டலே, அர்ச். சவேரியார் கலாசாலை உபாத்தியாயர் Mr M. Paul அவர்களிடமிருந்து வந்த அடியிற்கண்ட கடிதத்தை வாசித்துப் பாருங்கள்:

*Dear Sir,*

*"Some time ago I sent for some of your Beschi's Health Tonic Pills. You then asked me in your despatch to let you know the effect of these pills. Owing to pressure of work I was not able to inform you about them. I am glad to tell you that the pills worked wonders. My sister was for a long time ailing from anaemia. I tried all sorts of costly Medicines from Europe but none of them did her any good. At last your pills have brought on her a complete change. The pills possess all the qualities that you claim. It is invaluable especially for the diseases of women. I found them so successful in the first trial that I was emboldened to indent for 400 more pills. I cured 3 diseases of women quite successfully. They are equally efficacious in malarial fevers; I treated 5 cases with success, the very first dose giving relief. I am recommending your pills to many here Please send me 300 more Pills per V P P. & oblige Also send 100 Pills to Mr. A. Thomas, Clerk, P. W. D, Mawlaik, Upper Chindwin, with due instructions. Wishing you success."*

விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0
தபாற்செலவு, வீ. பி. சார்ச்சு உட்பட ... „ 1—3—0
வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

C. A. Silveira,
Branch Office,
2/74, Broadway, Madras.

சி. எ. சில்வேயிரா,
பிராஞ்ச் ஆபீசு,
2/74, பிராட்வே, மதுராஸ்.

## அதிர்ஷ்ட லாட்ரி விளம்பரம்.

இதனால் சகல கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் (St. Ann's Orphanage & Relief of the Poor) செண்ட். ஆனெஸ் அர்பேனேஜ் லாட்ரி டிக்கெட் ஒன்றுக்கு 4-அணா. 22-டிக்கெட்டுகள் அடங்கிய புஸ்தகம் ஒன்றுக்கு 5-ரூபாய்கள். இதை விற்பனை செய்கிறவர்களுக்கு 2-பிரீ டிக்கட்டும், 2-புஸ்தகமுழுதும் விற்பனை செய்கிறவர்களுக்கு 1-ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும். வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசதார்களிடம் டிக்கட்டுகளாவது அல்லது முழுபுஸ்தகங்களாவது பெற்றுக்கொள்ளலாம். மேமீ 8உ சாயரட்சை டிராயிங் 5-மணிக்கு நடக்கிறும்.

இப்படிக்கு, J. A. சாமி. விலாசம் —J. A. Sawmy, Special Agent, 242. Old Poor House Road, Bangalore. J. A. சாமி. ஏஜெண்ட், 242. ஓலட் பூர் அவுஸ் ரோட், பெங்களூர்.

## ரோஷா நகரத்துக் கோவில் கட்டுந் தருமம்.

நண்பர்களே, சென்னைக்கு வடக்கே ஆரம்பாக்கம் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு 9-மைல் தூரத்தில் ரோஷா நகரமென்னும் ஓர் சிற்றூர் உண்டு. இவ்வூரிலும் இதைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலும் சென்ற 10 வருஷங்களுக்குள் ஞானஸ்நானம் பெற்ற 1000 புது கிறிஸ்தவர்களிருக்கிறார்கள். இவர்களுக்கு ஓர் தகுதியான கோவிலில்லை. அவசரத்தின் நிமித்தம் கட்டப்பட்டிருந்த குச்சுக் கோவில் இடிந்து விழுந்துவிட்டது. ஆனதுபற்றி, புதுக்கோவில் ஒன்று கட்டத் தீர்மானித்து வேலையைத் தொடங்கிவிட்டோம். மூன்றடி வரையிலும் சுவர் எழுப்பி விட்டது. இதற்காக இதுவரையிலும் பிடித்த செலவு ரூ 6 0. பூர்த்தியாய்க் கோவில் கட்டிமுடிக்க 4000 ரூ பிடிக்குமென மதிப்பிடப்படுகிறது. ஆகவே "நல்ல ஆயன்" சந்தாதாரர்கள் எமக்குக் கைகொடுத்து உதவுவார்களென நம்பி இந்த மனு செய்துகொள்ளுகிறோம். "ஆயிர மாகாணி அறுபத்திரண்டரை" என்பதுபோல் ஒவ்வொருவரும் கொஞ்சம் கொடுத்து உதவுவார்களேயானால், இப்புது கிறிஸ்தவர்களுடைய பேருபகாரிகளாகி, தேவாசீரைப் பெற்றுக்கொள்வார்களென்பது திண்ணம்.

Fr. KOPERDRAAD,
விசாரணை குரு, ரோஷாநகரம், சதியவேடு.




"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 14. | மார்ச்சு, 1916. | இலக்கம் 3

## ASH WEDNESDAY.
## விபூதித் திருநாள்.

சத்திய திருச்சபை நடாத்தும் சகல சாங்கிய சடங்குகளும் பரிசுத்தமானவைகளாயும் பரம இரகசியங்களையும் புத்திப் போதகங்களையும் புகட்டுகிறவைகளாயுமிருப்பதினால் அவைகள் மிகவும் சன்மானிக்கத் தக்கவைகளாமே. எப்படி ஒரு நல்ல தாயானவள் தன் பிள்ளைகளை, வாய்மொழிகளால் மாத்திரமல்ல, கைச்சாடை கண் சாடை முதலிய வெளி யடையாளங்களாலும் நல் வழியில் நடத்தப் பிரயாசைப்படுவாளோ, அப்படியே நமது ஞானத் தாயாகிய திருச்சபையும், தன் பிள்ளைகளாகிய நம்மை, புத்திப் பிரசங்கங்களான வாய்ச்சொற்களினாலும் திவ்யபூசை, சுற்றுப்பிரகாரம், தேர், திருநாள் முதலிய வெளி யடையாளங்களாலும் மோக்ஷ கரையேற்றப் பிரயாசைப்படுகின்றது. திருச்சபை அநுசரிக்கும் ஒவ்வொரு சாங்கியமும் நாம் விசுவசிக்க வேண்டிய ஒரு வேத சத்தியத்தையோ அல்லது நாம் அனுசரிக்க வேண்டிய ஒரு புண்ணியத்தையோ நமக்குக் கற்பிக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. விபூதித் திருநாளன்று திருச்சபை சாம்பலை மந்திரித்து அதை நம் ஒவ்வொருவருடையவும் நெற்றியில் சிலுவை அடையாளமாக வரைவதினால், நாம் பெருமை பாராட்டும்படியாக நமக்குச் சொந்தமாயிருப்பது யாதொன்றும் நம்மிடத்தில் இல்லையென்றும், நாம் தாழ்ச்சி யென்னும் புண்ணியத்தை அநுசரிக்க வேண்டுமென்றும், நாம் பாவிகளாயும் சாகவேண்டியவர்களாயுமிருக்கிறபடியினாலே, நமது பாவங்களுக்காகத் தபசு செய்து, நிழலைப்போல் நில்லாமலோடி மறையும் இவ்வுலக சீவியத்துக்குப்பின் நித்திய சீவியத்துக்கு நம்மைப் பாத்திரவான்களாக்க வேண்டுமென்றும் நமக்குப் படிப்பிக்கின்றது.

நமக்குச் சொந்தமான தொன்றும் நம்மிடத்திலில்லை. ஆம்; நம்முடைய சரீரமாவதென்ன? அதன் உற்பத்தி என்ன? அது தூசியிலிருந்து உற்பத்தியாகி தூசியுந் தூளியுமாகவே யிருக்கிறதல்லவா? "ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் களிமண்ணால் உருவாக்கி அவன் முகத்திலே சீவ ஆவியை ஊத அவன் சீவந்தனானான்" நம்முடைய சரீரத்தின் தற்கால நிலைமை

மாத்திர மென்ன? அதுவும் காற்றினால் பறக்கடிக்கப்படும் தூசியின் நிலைமைதான். நமது ஆத்துமம் சரீரத்தை விட்டு இன்றைக்கோ, நாளைக்கோ, இன்னுஞ் சிலதினங்கள் அல்லது மாதங்களுக்குள்ளேயோ பிரிந்துபோன மாத்திரத்தில் அதன் அழகும் சௌந்தரியமுங் குன்றி, அழுகி, நாறி, கசுமாலமாகு மல்லவா? இதன் தற்கால நிலைமை யிப்படியா யிருக்கக்கொள்ள, அதின் முடிவென்ன? மண்தான்: "மண்ணாயிருக்கிற மனிதா நீ மறுபடியும் மண்ணாய்ப் போவாய்." என்னும் தேவ வாக்கியத்தை நாம் விசுவசியாதவர்களல்ல. நாம் எவ் வந்தஸ்தி லிருந்தாலும் அதாவது, இராசாவா யிருந்தாலும் சரி, பணக்காரனா யிருந்தாலும் சரி, பரம ஏழையா யிருந்தாலும் சரி நம் ஒவ்வொருவருடைய சரீரத்தின் கதி இதுவே. நம்முடைய சரீரத்தைப் பற்றி எவ்வளவோ வீட்பு பாராட்டுகிறோம்! எவ்வளவோ பெருமை கொள்ளுகிறோம்! அதற்காக எவ்வளவோ கவலைப்படுகிறோம்! அதை எவ்வளவோ பேணிக் காப்பாற்றி அலங்கரிக்கிறோம்! கடைசியில் அது என்ன? சாம்பரும் தூசியுமல்லவா? ஆகையால், "நாம் மனித ரூபமுடைய ஒரு பிடி களிமண்" என ஓர் பூர்வீக சாஸ்திரியான தெர்த்துலியன் என்பவர் சொல்லி யிருக்கிறார். இன்னொரு அர்ச்சியசிஷ்டவர் சொல்லி யிருப்பது யாதெனில்: ஓ அகங்காரியே! உன் அகங்காரத்தினாலும், பெருமையினாலும், வீண் சிலாக்கியத்தினாலும் நீ உன்னை மகிமைப் படுத்தும்போது காற்றிலடித்துக்கொண்டு போகப்படும் ஒரு துரும்புக்குச் சமானமா யிருக்கிறாய். எப்படி அத் துரும்பு காற்று அமர்ந்த மாத்திரத்தில் விழுந்த விடத்திலேயே கிடக்குமோ அப்படியே நீயும் உன் ஆத்துமம் பிரிந்தவுடன் விழுந்த விடத்திலேயே கிடப்பாய். உன் ஆட்ட பாட்டமெல்லாம் காற்றாய்ப் பறந்துபோம் என்பதே. ஆகையாற்றான் ஒரு அந்நாள வித்துவானும் "மனிதன் ஓர் அற்பத் தூசி என்று காட்ட மரணமொன்றே போதும்" என்றான்.

அப்படியானால், நமக்குச் சொந்தமானது வேறேதாவது உண்டோ? ஒன்றுமேயில்லை. புத்தி, மனது ஞாபக முதலிய நமது ஆத்துமத்தின் தத்துவங்களும், வல்லமை அழகு சவுந்தரிய முதலிய நமது சரீரத்தின் குணகுணங்களும் சர்வேசுரனுக்கே சொந்தம். "நீ பெற்றுக்கொண்டதைத் தவிர உன்னிடத்தி லிருப்பதென்ன? நீ பெற்றுக்கொண்டாயே யானால், பெற்றுக்கொள்ளாததுபோல பெருமை பாராட்டுவதென்ன?" "நாம் அல்ல, சர்வேசுரனே நம்மை உண்டாக்கினார்." "அவரே உண்மையான சாஸ்திரத்திற்குரியவைகளை எல்லாம் எனக்குக் கொடுத்தார்." என்னும் தேவ வாக்கியங்களை நாம் அடிக்கடி சிந்தனை செய்வோமாக.

ஆனால் சர்வேசுரன் நமக்கு இவ்வாறாக அருளிச் செய்திருக்கிற எண்ணிறந்த உபகார நன்மைகளுக்காக நாம் வழங்கும் கைம்மாறென்ன? நம்முடைய நன்றிகேட்டையும் பாவங்களையுமே யன்றி வேறெதையு மல்லவே! நம்முடைய பாவாக்கிரமங்களை நமக்குச் சொந்தமா யிருக்கின்றன. நாம் சர்வேசுரனுடைய சத்துருக்களாகி அவருடைய நீதி கோபாக்கினைக்கே இலக்கா யிருக்கிறோமே யல்லாமல், வேறெதற்கும் சுதந்தரமுள்ளவர்களல்ல. நாம் நிர்மூல மாகாததற்குக் காரணம் கர்த்தருடைய தயையும் அவருடைய குறையாத இரக்கப்பெருக்கமுமேயாம். நம்முடைய பாவங்களானது நம்மைச் சர்வேசுரனுடைய அருவருப்புக்கும் புறக்கணிப்புக்கும் ஆளாக்கினது மல்லாமல், நம்மை ஒன்றுமில்லாதவர்களாகவும் மிருகத்துக்கொப்பானவர்களாகவும் செய்துவிட்டது. "ஒன்றுமில்லாமற் போனேன்.......மிருகத்துக் கொப்பானேன்..."; என்னும் வேதவாக்கியப்படி, சர்வ வல்லமை யுடைத்தான சர்வேசுரனுடைய மகத்தான கரங்களின் கீழ் நம்மைத் தாழ்த்துவோமாக. ஏனெனில், அவர் எல்லாவற்றின் பேரிலும் சர்வ அதிகார முடையவர். நாமோவெனில், "ஒன்றுமில்லாதவர்களாயும்......சாம்பலும் தூசியுமா யிருக்கிறோம்."

மேலும், விபூதித் திருநாளன்று நமது சிரசிலிடப்படும் சாம்பலானது நாம் நம்முடைய பாவங்களுக்காகத் தபசு செய்ய வேண்டுமென்றும் நமக்குக் கற்பிக்கிறது. சாம்பலானது ஆதிகால முதற்கொண்டு துக்க மனஸ்தாபத்துக்கும் தபசுக்கும் அடையாளமா யிருந்துவருகிறது. யோபு



என்பவர் சர்வேஸ்வரனுடைய சித்தப்படி பல துன்பங்களுக்கும் இலக்காகி, அவைகளை அவர் பட்டநுபவிப்பதைக் கண்ட அவருடைய சிநேகிதர்கள் தங்களுடைய அநுதாபத்தை அவருக்குக் காட்டத் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தங்களுடைய சிரசின்மீது சாம்பலை வாரித் தூவிக்கொண்டார்கள். ஜோசுவே என்பவரும், இஸ்ராயேலரின் மூப்பர்களும் ஜெரிக்கோ பட்டணத்தைப் பிடிக்கப் போகும்போது, ஆக்கான் கட்டிக்கொண்ட அக்கிரமத்தின் நிமித்தம் சர்வேஸ்வரனுக் குண்டான கோபத்தைத் தணிக்க இவ்விதமாய்த் தபசு செய்தார்கள். தாவீது இராசா தம்முடைய பாவங்களுக்காக தம் போசனத்தோடு சாம்பலைக் கலந்து சாப்பிட்டுத் தவம் புரிந்தார். நினிவே பட்டணத்தார் தங்களுடைய பாவங்களின் அகோரத்தினிமித்தம் சர்வேசுரன் தங்களையும் தங்கள் பட்டணத்தையும் அழிக்கப்போகிறார் என்று கேள்விப்பட்டவுடனே சாக்குத் துணிகளை யணிந்தவர்களாய்ச் சாம்பலை வாரிப் பூசிக்கொண்டு தவம்புரிந்தார்கள். தீர்க்கதரிசிகள் யாவரும் இவ்விதமாகவே தபசு செய்ய வேண்டுமென்று இஸ்ராயேலரைத் தூண்டிவந்தார்கள். பூர்வீக கிறிஸ்துவர்களும் இப்படியே அடிக்கடி தங்களுடைய பாவங்களுக்காகத் தபசு செய்தார்கள். ஆகையாற்றான், தெர்த்துலியன் அவர்களை "சாக்கினால் மூடப்பட்டுச் சாம்பலினால் குறிக்கப்பட்டவர்கள்" என்றழைத்திருக்கிறார்.

நாமும் இவர்களைப் பின்பற்றி நம்முடைய பாவங்களுக்காக நல்ல துக்க மனஸ்தாப நிறைந்த இருதயத்தோடு இத் தபசு காலத்தைத் துவக்குவோமாக. விபூதித் திருநாளன்று நமது சிரசிலிடப்படும் திருநீறானது நாம் கட்டிக்கொண்ட சகல பாவங்களையும் நமக்கு ஞாபகப்படுத்தக் கடவது. அப்பாவங்களுக்காக நாம் உத்தம மனஸ்தாபப்படவும், அவைகளை எல்லாம் ஒன்றும் மறைக்காமல் சர்வேஸ்வரனுக்கு முன்பாக அவரால் நியமிக்கப்பட்ட குருவிடத்தில் சங்கீர்த்தனஞ் செய்யவும், பிறகு நம்முடைய சரீரத்தையும் அதின் ஆசாபாசங்களையும் அடக்கி அப் பாவங்களுக்காகத் தபசு செய்யவும் வேண்டியது எவ்வளவோ அவசரமென்று விபூதி மந்திரிக்குஞ் சடங்கு நமக்கு கற்பிப்பதை அநுசரிப்போமாக. "அக்கிரமியானவன் தன் பாதையையும், அநீதன் தன் தூர் எண்ணங்களையும் விட்டு ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்" "திடீரென மரணம் வரும்போது நாம் தபசு செய்ய நேரம் தேடி ஏமாந்துபோகாதபடிக்கு இப்போதே நம்மைச் சீர்படுத்திக் கொள்வோமாக."

## GOD OF GENESIS.

## ஆதியாகம தேவன்.

முன் தொடர்ச்சி.

மீண்டும் மனிதன் சும்மா விருக்கவில்லை. கடவுள் காட்டிய நெறியை விட்டு விலகி முன் னடந்து தன் மனதிற்கேற்ற ஒரு சுக வீட்டைக் கட்டத் தொடங்கிவிட்டான். ஏதோ அபூர்வமாய் ஆங்காங்கு ஒருவன் சர்வேசுரனுடன் நடந்து, தன் தேவ தந்தையை ஞாபகத்தில் வைத்திருந்தான்; ஆனால் மற்றவர்களோ எப்படி நடந்தார்கள் என்பதைப் பின் வரும் மொழிகளால் அறியலாம்: "பூமியில் மனித ரக்கிரமங்கள் மிகுந்தன; அவனிருதயச் சிந்தனைகளோ எப்போதும் பாவத்தையே நாடி யிருந்தன." இங்கே குழந்தையாகிய மனிதன், தன் சீவிய சரிதையை வரைந்து வருகையில், தன் தேவ தந்தையின் வதனத்தைக் கண்ணுற்று, அதில் விளங்கு மிரண்டுவித குறிகளைப் பார்க்கிறான். தேவ பிதா தம் குழந்தையை எப்போதும்போல் நேசிக்கிறார். ஆனால் அவனுடைய கர்வத்தையும் அகம் பாவத்தையும் வெறுக்கிறார். இதை அக் குழந்தையாகிய மனிதன், தன் பேதைமையான பாஷையில், "அவர் உள்ளம் மனஸ்தாபத்தால் பற்றுண்டதாகவும், பூமியில் மனிதனை உண்டுபண்ணினேனேயென்று மன வருத்தப்பட்டதாகவும்" எழுதி யிருக்கிறான்.

பழிவாங்குந் தேவனைப்பற்றி இம் மொழிகளால் எவரும் வர்ணியார் என்பது திண்ணம்.

பின் வருபவைகளும் இதையே தெரிவிக்கின்றன. சர்வேசுரன் உலகத்தின் மேற்கண்ணோக்கினார். தம் பார்வைக் குகந்த ஒருவனைக் கண்டுவிட்டார். "தன் காலத்தவர்களில் நோவா என்பவர் நீதியும் உத்தமமுமான மனிதன். அவரே சர்வேசுரனுடன் நடந்தார்; தேவன் தமது நீதியின் செய்கை ஒவ்வொன்றின் பக்கந் துணையாகும் தம் மிரக்கத்தின் வாய்க்காலாக அந் நோவா என்பவரையே தெரிந்துகொண்டார். அவரைத் தம்மிட மழைத்து, வேண்டியதைச் சொல்லி, அவர் மூலமாய் உலகத்தைக் காப்பாற்றினார் இரக்கமுள்ள சர்வேசுரன். இரட்சண்யத்தின் அலுவல் நிறைவேறியபோது, இவ் விரட்சண்ய வேலையில் நோவா என்பவர் செய்த உதவிக்கு அவரிடம் நன்றிப் பாராட்டுவது, போலும், தம் மகத்தினின் றெழும் சிநேகப் பெருக்கத்தைத் தடுக்க முடியாதது போலும், அவர் நோவாவுடன் ஒருடன்படிக்கை செய்து கொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதனிடஞ் சுபாவமாய்த் தோன்றும் கெடுதியே அவனைக் காப்பதற்கான காரணமாய் எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் அவர் நோயனுக்குச் சொன்னதாவது: "மனிதனிமித்தம் நான் இனி பூமியைச் சபிக்கமாட்டேன்: ஏனெனில் அவனிதய சிந்தனையும் மனோபாவமும் அவனிளமையிலிருந்து தீமையையே நாடி நிற்கின்றன. ஆதலால் நான் செய்ததுபோல் இனி ஒவ்வொரு ஜீவாத்மாவையும் அழிக்கமாட்டேன். பூமியின் நாட்கள் எல்லாம் விதைக்குங் காலம். அறுப்புக் காலம், சீதோஷ்ணம், வெனிற்காலம் குளிர்காலம், இரவு பகல், என்றும் ஒழியாவாம்." சர்வேசுரன் நோயனையும் அவர் மக்களையும் ஆசீர்வதித்துச் சொல்வார் "உன் சந்ததி மேன்மேலும் பெருகி உலகம் நிரம்பக்கடவது."

பிரளய சரித்திரம் பழிவாங்குந் தேவனைக் குறித்த வரலாறென்றே சொல்லல் வேண்டும். தன் குற்றத்தையும் தன் கூலியையு மங்கீகரிக்கும் ஓர் குழந்தையால் சொல்லப்படும் சரித்திரம் என்னலாம். அது தவறி நடந்தது; அது தண்டனைக்குரிய தென்பது திண்ணம்; தண்டனையின் தீர்ப்புப் பத்திரம் படித்தாயிற்று; ஆனால் தண்டனையை நிறைவேற்றுகையில் நீதிக்குமேல் இரக்கம் அதிகரித்து, கடைசியில் தந்தையாய் மாறிய நீதிபதி, மகனாய் மாறிய பாதகன் இவர்க ளிருவருடைய இருதயங்களிலும், அமைதி சமாதானம், ஒன்றிப்பு முதலியன குடிகொண்டதன்றி, பழிவாங்கும் எண்ணம் சர்வேசுரனிட மிருந்ததாகத் தெரியவில்லை. இவ்விதமாகவே அக்காலத்து மாந்தரும் இச் சரிதையைப் படித்தனர்; அவர்களுக்கு நோயன், கோபாவேசங்கொண்ட தேவனின் அறிகுறியா யில்லாமல், சிநேக தேவனைக் குறிக்கும் ஞாபகச் சின்னமாம். அப்படியே சீராக்கின் குமாரன் நோயனைப்பற்றிச் சொல்லுகிறார்: "நோயன் நீதியும் பூர்ணமுமானவராய்க் காணப்பட்டார். கோபகாலத்தில் அவரே இரட்சிக்கப்பட்டார். ஆதலால்தான் பிரளய காலத்தில் பூமியில் மீதி கொஞ்சம் விடப்பட்டது. பிரளயத்துடன் எல்லா ஜீவாத்மாக்களும் இனி அழிந்துபடாவண்ணம், அவரோடு பூமியின் உடன்படிக்கைகள் செய்யப்பட்டன." ஞானாகமத்தின் நூலாசிரியர் சொல்வதை இங்கறியற்பாலது. "பூமியைத் தண்ணீர் அழித்தபோது, ஞானம் அதைக் குணமாக்கி, கேவலமான மரப்பலகையால் புண்ணியவானின் நெறியைக் காட்டிற்று;" இன்றைக்கும் இம் முதல் உடன்படிக்கையின் தேவன் என்று குறிப்பன வானிற்றோன்றும் வில்லும் நோயனுடைய பேழையுமே யன்றி பூமியில் நாம் பார்க்கும் ஜலப்ரவாக மல்லவாம்.

பிதாப் பிதாக்களின் சரிதையை எடுத்துக்கொண்டால் அதிலும் சர்வேசுரன் நீதியினும் நேசத்தையே அதிகமாய்க்காட்டியுள்ளார் என்பதற்கான நியாயப்பிரமாணங்களைக்காணலாம். இது வரையில் தேவன் செயலற்றவர்போல் விளங்கினார்; அவர் தங் குழந்தையைத் தவறி விழும்படி விட்டுத் தன் குற்றத்தைத் தானே உணரும்படிச் செய்தார்; இப்போதோ தங் கரங்களை நீட்டி அவனைத் தூக்கி, நல்ல வழியில் நடக்கும்படி அவனுக்குக் கற்பிப்பதுமன்றி, அவனுடைய குற்றங் குறைகளை மறந்தவராய். அவனை ஆசீர்வதித்து, தம்முடைய மனதினின்றெழும் உதாரத்துவத்தைக் காட்ட தாமே அவனுக்கு அநேக வார்த்தைப்பாடுகளை அளிக்கிறார். இந்த பாகத்தைத் துவக்கும் போதே நாம் படிக்கும் வார்த்தைகளைக் கொண்டே பின்னால் வருவனவற்றை யூகித்தறியலாம். "மேலும் ஆண்டவர் அபிரகாமுக்குச் சொன்னதாவது: உன் நாட்டையும் சுற்றத்தாரையும் விட்டு, உன் தந்தையின் வீட்டினின்றும் வெளியேறி நான் காட்டு மிடத்திற்கு வருவாயாக. உன்னினின்றும் ஒரு பெரிய குலத்தை யுண்டாக்கி உன்னாமத்தைப் பெருமைப்படுத்துவேன்; மேலும் நீ ஆசீர்வதிக்கப்படு



வாய். உன்னை ஆசீர்வதிப்பவரை நான் ஆசீர்வதித்து, உன்னைச் சபிப்பவர்களை நான் சபிப்பேன்; உலகத்தின் எல்லா வம்சங்களும் உன்னில் ஆசீர்வதிக்கப்படுவார்கள்."

இதோ இக்கடைசி வசனத்தில் சர்வேசுரன் தன் சயரூபத்தை வெளியிடுகிறார். நமதாண்டவராகிய தேவன் இவ்வசனங்களைச் சொன்னது முதல், அவற்றைத் தமக்கு மாறா யுபயோகித்து, தம்மைத்தாமே யடிக்கடி இரக்கத்தைப்பற்றி நினைப்பூட்டிக்கொண்டு வருகின்றனர் போலும். "சோதம், கொமாரா வென்னும் நகரங்களின் ஆரவாரமதிகரிக்க, அவற்றின் பாவாக்கிரமங்கள் பெருகிக்கொண்டுவர" தேவநீதி அவற்றையழிக்க நெருங்கும்போது, சர்வேசுரன் என்ன சொல்லுகிறார்? "அவன் ஒரு பெரிய வல்லப மிகுந்த குலத்தானாய், அவனில் உலகத்தின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவார்கள் எனத் தெரிந்திருந்தும், நான் இப்போது செய்ய விருப்பதை அபிரகாமிடம் மறைக்கக்கூடுமோ?"

அப்படியே சர்வேசுரன் அபிரகாமுக்குக் காண்பித்து, பின்னால் வருவதை யுணர்ந்திருந்தும், தாம் செய்யவிருப்பதை வெளிப்படுத்தினார்; பின்னால் வந்தது யாதெனிலோ, அப்புண்ணியவான் செய்துகொண்ட அவ்வழகிய விண்ணப்பமும், அக்கால முதல் இது காறும் மனிதருக்குத் தைரியம் வருவிப்பதாகிய தேவ இருதயத்தைத் திறந்து காட்டிய அவ்வுன்னதக் காட்சியுமே. மீண்டும் சர்வேசுரன், அபிரகாமைத் தன் மகனைப் பலியிடும்படிச் சோதித்துப்பார்த்தார். அபிரகாம் கீழ்ப்படிந்தார். ஆனால் ஈசாக்கோ காப்பாற்றப்பட்டார்; மீண்டும் ஆசீர்வதிப்பதில் ஆநந்தங்கொள்ளும் ஒருவர் தம் வாக்குறுதியை வற்புறுத்துவதுபோல், ஆண்டவர் சொல்வதைக்கேளுங்கள். "என்னாமத்தினால் நான் உறுதிமொழி தந்திருக்கிறேன்: இந்தக் காரியத்தைச் செய்து, என்னிமித்தம் உன்னேக புத்ரனை யுமிழக்கத்துணிந்தமையால், நான் உன்னை யாசீர்வதித்து, உன் வித்தை வானத்தின் நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலுள்ள மணல்களைப்போலவும் பெருகச்செய்வேன்: உன் வித்துப் பகைவரின் தலைவாசலைக்கைக்கொள்ளும். உலக ஜாதியார் உன்வித்தில் ஆசீர்வதிக்கப்படுவார்கள், ஏனெனில் நீ என் குரலொலிக்குக் கீழ்ப்படிந்தாய்."

ஆபிரகாம் இறந்த பின்னர், ஈசாக் அவரிடத்தைக் கைக்கொண்டபோது, "ஆண்டவர் அவர் முன்தோன்றிச் சொன்னதாவது: எகிப்து தேசத்திற்குப் போகாதே; ஆனால் நான் உனக்குச் சொல்லுமிடத்தில் தங்கியிரு. அதிலே வசித்திரு; நான் உன்னுடனிருந்து உன்னை ஆசீர்வதிப்பேன்: ஏனெனில், நின் தந்தையாகிய ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற இத்தேசங்களை எல்லாம் உனக்கும் உன் வித்துக்குமளிப்பேன். உன் வித்தை வானத்தின் நட்சத்திரங்களைப்போல் பெருகச்செய்வேன்; இத்தேசங்களை யெல்லாம் உன் சந்ததியாருக்களிப்பேன். உன்னுடைய வித்தில் உலகத்தின் எல்லா ஜாதியாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஏனெனில், ஆபிரகாம் என் குரலுக்குக்கீழ்ப்படிந்து, என்னுடைய ஒழுங்குகளையும் கற்பனைகளையும் அநுசரித்து, என்னுடைய சடங்குகளையும் சட்டங்களையும் நிறைவேற்றினார்."

(இன்னும் வரும்)

*S. Selva Raju.*

## St. BENEDICT & HIS SISTER.

## அர்ச். பெனதிக்துஸ் என்பவரும் அவருடைய தங்கையும்,

(அர்ச். பெனதிக்துஸ் என்பவருக்கும் அவருடைய தங்கையாகிய அர்ச். ஸ்கொலாஸ்திக் கம்மாளுக்கும் நடந்தேறிய பின்வரும் சம்பாஷணை பாப்பரசராகிய அர்ச். கிரகோரியார் எழுதிய சரிதையினின்று எடுக்கப்பட்டது.)

பெனதிக்துஸ்.—என தன்புக்குரிய தங்கையே, இன்று நாம் செய்த சம்பாஷணை மிக்க நீடியதா யிருந்ததையாலும், மோட்சானந்த பாக்கியங்களைப் பற்றிப்பேசினமையாலும் நேரம் வெகு துரிதமாய்ப் போயிற்று. இத் திவ்ய சம்பாஷணையாலென் னிருதயம் இன்பக் கடலில் மூழ்கினதென வெண்ணுகிறேன். ஆனால் நட்சத்திரங்கள், புஷ்பங்கள் பூத்தாற்போல் வான மண்டலத்தில் ஜொலிக்கின்றன. நேரமாகின்றது. என் மடத்துக்குப் போக செலவு கொடும் தங்கையே!

ஸ்கொலாஸ்திக்காள்.—இன்னும் சில விநாடி இங்கு தங்கும் என் அருமை சகோதரரே! நீர் என்னோடிருப்பது என் இருதயத்தைச் சந்தோஷத்தால் பூரிக்கச்செய்

கின்றது. நீர் கொஞ்சம் விரைவாய் நடந்து போனால் உம் வாசத்திற்குச் சரியான வேளையில் போய்ச் சேருவீர். மற்ற தினங்களை விட நாமின்று மாலை பரலோக பேரின்பத்தைப் பற்றிப் பேசினது மெய்தான். என்னிருதயம் இன்னும் அம் மதுர தேசத்தைக் குறித்துச் சம்பாஷித்துத் தேவாமிர்த பாக்கியங்களைச் சுவைத் தனுபவிக்க அவாவுற்றிருக்கின்றது.

பென.—நாம் இன்பமான இவ் விசேஷத்தைப் பேச மண்ணுலகு தரும் மொழிகளை ஏராளமாயிறைத்த போதிலும், பிரத்தியக்ஷ தேவ தரிசன மோட்சானந்த மகிமையைச் சரியாய் வருணித்து விவரித்துக் காண்பிக்க முடியுமோ? சர்வ உத்தம இலக்ஷண சம்பன்னமாகிய தேய்வீகமே தன்னை முழுதும் பிரசித்தமாய்க் காண்பிக்கத் திருவுளங் கனிந்து செய்து முடித்த மோட்சத்தின் அழகு, அலங்கார சோபனத்தை என்னென்று உரைக்கலாம்!

ஸ்கொ.—என் அருமை சகோதரரே! நீர் மொழிந்த அமிர்த வார்த்தைகளால் என்னிருதயம் இன்று தேவ சிநேகாக்கினிமயமாய்த் தணல்பெற்றெரிகின்றது. இன்னும் நீர் அத் தேவஸ்தலத்தின் உட்சோபனங்களை உமது வாய்ச்சால சாதுரியத்தால் விளக்கிக் காட்டும்.

பென.—அர்ச்சியசிஷ்டவர்களின் மகிமைப் பிரதாபம் விளங்கும் அத்திவ்ய ஸ்தலத்துட் புகுந்து பார்க்கப் பிரயாசைப்படுவோம். அழகு வான தலங்கள் எல்லாத்துக்கும் உயர்ந்த பரமண்டல மாகையால், அதிக அழகுஞ் சிறப்பும் அலங்காரமும் உள்ளதாமே. நாம் வசிக்கும் இக்காணப்படும் உலகம், மரிப்போர் உறையும் பூதலம் என்று நமக்கு உணர்த்தவேண்டி, வேதாகமங்கள் பரமண்டலத்தைச் சீவியர் வாழுஞ் செல்வ ஸ்தலம் என்று கூறுகின்றன. ஆயினும், இப் பூவுலகம் எத்தனையோ சித்திர விசித்திர அற்புதங்களை நமது கண்களுக்குப் பரப்பிக் காட்டுகின்றது. வானத்தின் உயர்ச்சியும், சந்திர சூரிய நட்சத்திரங்களின் சோதிப் பிரகாசமும், பூமியின் அழகும், விருக்ஷங்கள், பக்ஷிகள், மிருகங்களின் சிங்காரமும் வடிவும் எவ்வளவு அதிசயத்துக்குரியதாயிருக்கின்றன. விசால மைதானங்களையும் உயர்ந்த மலைகளையும், பசுமையான கனைவாய்களையும், குளும் புனற்சுனைகளையும், பூமியின் இரத்தந் தாரைகள் போல் அதனை எப்புறத்தும் சுற்றிவரும் ஆறுகள், நதிகள் ஓடும் சிறப்பையும் பார். ஆச்சரியத்துக்குரிய ஜீவ கோடிகள் வாழ்ந்து உலவும் இடமாகி, தம் அகட்டில் திரளான செல்வங்களை ஒளித்து வைத்திருக்கும் சமுத்திரங்களின் விசாலத்தையும் பார். தம் சலத்தின் தெளிவினால் பூமியின் கண்கள் போலும், வானத்தின் கண்ணாடிகள் போலும் ஏறிகள், குளங்கள் தடாகங்களையும், தெளிந்த இராப்பொழுதில் மீன் பூத்த வானம்போல நமது பார்வைக்கு ஆயிரமாயிரம் பூமலர் அலங்காரத்தைக் காட்டும் பசும்புற் போர்த்த நிலங்களையும் பார். பூமிக்குள் புதைபட்டிருக்கும் பொன், வெள்ளி முதலிய பஞ்சலோக புதையல்களைக் குறித்தும், காந்தி ஒளியாலும் அழகாலும் வான் மீன்களைப் பழிக்கும் கெம்பு, வயிரம், மாணிக்க முதலிய விலையுயர்ந்த இரத்தினங்களைக் குறித்தும் என்ன சொல்வேன்! புஷ்பங்கள், பறவைகள், மிருகங்களும், வேறு பற்பல வஸ்தாக்களும் அணிந்திலங்கும் அளவிறந்த விசித்திர வண்ணங்கள் நிறங்களைக் குறித்தும் என்ன பேசலாம்! இச் சுபாவ சிங்காரங்களோடு மனிதர் தொழிற் சாஸ்திர சோடினைகளும் ஒன்று கூடவே, இப் பூவுலகம் எவ்வளவு நேர்த்தியாய்ச் சீரிட்டுச் சிங்காரிக்கப்பட்டதாய் விளங்குகின்றது! எல்லா உலகங்களுக்கும் இழிதரமான இவ்வுலகமே இத்தனை இன்ப உல்லாசங்களையும், அதிசயங்களையும் கொண்டிருக்குமெனில், சகல உலகங்களுக்கும் மேலாய் உயர்ந்து, தன் பேரழகாலும் உச்சித சிறப் பலங்காரத்தாலும் அவை யனைத்தையுந் தோற்கடிக்கும் பரலோகம் என்னாகுமோ! நமது கண்களுக்குப் புலப்படும் வானம், ஒளியாலும் சந்தியாலும் இகத்தின் பொருட்கள் எல்லாவற்றிற்கும் எவ்வளவு மீக்கரமென்று யோசித்த பிறகு, வானோர் கண்களுக்கு மாத்திரந் தரிசனமாகும் பரலோகம் எப்படிப்பட்டதென்று மதித்துக்கொள்.

இகலோகம் இறப்போர் இருக்கும் வாசமாகவும், இனி வரும் உலகம் சீவியர் வாழும் ஸ்தலமாகவும் இருக்கின்றது. ஒன்று மனிதர் உறையுமிடம், ஒன்று வானோர் வீற்றிருக்கும் ஸ்தலம். மாசில்லா ஆத்துமாக்களுந் தேவனோடு திரும்ப உறவாடினவர்களும் சஞ்சாரம் பண்ணுவது வானுலகம்; பாவிகள் தவத்துக்குக் குறிக்கப்பட்டது இப் பூவுலகம். யுத்த வீரர் அப்பியசித்துப் பழகும்போர்க்களம் இது; செய மடைந்தோர் ஒட்டோலக மகிமை பெற்று விளங்கும் தேவராச்சியம் அது. கடைசியாய்ப் பூலோகம் மித்துரு சத்துரு, நல்லோர் தீயோர் யாவர்க்கும் பொதுப் பங்காம். பரலோகமோ நல்லோருக்கும் சிநேகிதருக்குமே சொந்த பங்காம்.

ஸ்கொ.—ஓ! தேவ திருமாநகரமே, மோக்ஷமே, வாழி! உன்னைக் குறித்துச் சொல்லப்பட்டவை மகா அதிசயத்துக் குரிய காரியங்களாமே. உன் விசாலத்துக்கோர் அளவில்லை. உன் கட்டிட வேலையின் சிங்காரமே சிங்காரம். அதற் குதவிய தளவாடமோ விலை வரம்பு அறியாது. உன் குடிகளின் மகிமையால் பிரகாசித்து, உன்னிடத்துச் சுகித்தனுபவிக்கும் வைபோகங்களால் பேரின்பமாகி, துன்பமெல்லாம் நீக்கி, இன்ப நலங்களை எல்லாம் நிறையக் கொண்டிருக்கிறாய்! அஸ்திவாரமிட்டு உன்னைக் கட்டினவர் பெருமையாலும், நீ நியமிக்கப்பட்ட கதியின் உன்னதத்தாலும், உன்னிடத்தில் வாழ்வோர் அந்தஸ்தாலும் மாட்சியிற் சிறந்திருக்கின்றாய்! உன்னை எப்புறத்து அணுகி நோக்கினாலும் உன்னிடத்தில் மகிமையே விளங்குகின்றது!

பென.—சகோதரியே! சர்வேசுரன் மோக்ஷத்தில் அர்ச்சியசிஷ்டவர்கள் எல்லோருக்குஞ் சமஸ்த நன்மை தொகுதியாகவும், பூரண ஆனந்தமாகவும், அவர்கள் ஆசைகளுக்கெல்லாம் நிறைந்த திருப்தியாகவும் இருப்பார். அங்கே நமது கண்ணுக்கு எப்பொருளையும் நன்றாய்த் துலக்கிக் காட்டுஞ் சித்திரப்படமாகவும், செவிக்கு மதுர இன்னிசையாகவும், நாவிற்குத் தித்திக்குஞ் செந்தேனாகவும், நாசிக்குப் பரிமள சுகந்தமாகவும் இருப்பார். அங்கே வசந்தகால இளங் குளிர்ச்சியும் கோடைகாலத் தெளிந்த வெக்காளிப்பும், அங்கே சனிகால ஏராளமும், சார்கால இளைப்பாற்றியும் ஆகிய காலபேதங்களால் உண்டாகுஞ் சுகங்களையும் இன்பங்களையும் சுகிப்போம். நமது ஞானேந்திரியங்களையும் பஞ்சேந்திரங்களையும் ஆத்தும தத்துவங்களையும் மகிழ்விக்கத் தக்க நுகர்ச்சிகளையும் போகங்களையும் அனுபவிப்போம். அங்கே சர்வேசுரன் நமது அறிவுக்கு ஒளியாகவும் மனதுக்குச் சமாதான இளைப்பாற்றியாகவும், நினைவின் நித்தியானந்தமாகவும் இருப்பார். அங்கே சலமோன் மூதறிவு பேதமையாகவும், சம்சோன் புஜ பராக்கிரமம் பலவீனமாகவும், அப்சலோன் பேரழகு அங்கபங்கமாகவும், ஆதி மனிதர் உயிர்வாழ்ந்த நெடும் வயது நீடியதோர் சாவாகவும், சமஸ்த மண்டலேஸ்வரர் செல்வ திரவியங்கள் முற்றுந் தரித்திரமாகவும் வறுமையாகவும் தோன்றும்.

ஸ்கொ.—ஐயோ! இதெல்லாம் இப்படி இருக்க, ஏழை மதிகொண்ட மனிதன் இப்பிரபஞ்சத்தில் காய்ந்த சருகுக்குச் சமானமான புன்னலங்களைத் தேடிப் பொறுக்கி இளைப்பானேன்? ஆனந்தந் தரும் தெண்ணீர்ச் சுனையைத் தேடாமல் அகன்று, உளை பாயுஞ் சேற்றுக் குழியிற் கிடக்கும் நாற்கந்த விஷநீரை விரும்பித் திரிவானேன்? எல்லாமாகிய கடவுளிடத்து ஒருப்படச் சேர்ந்து குறையற நிறைந்த செல்வங்களைத் தேடாமல் எதுகாலம் வரையில் அங்கு மிங்குஞ் சிஷ்டிகளிடம் சென்றிரந்து உழல்வான்.

பென.—என் அருமை சகோதரியே! நித்திய மோக்ஷமாநகரத்தின் அலங்கார சோபனங்களையும், அதில் வாழ்ந்து வசிக்க அதிஷ்டம் பெற்றவர்களின் பிரதிஷ்டை மகிமைகளையும் சிஷ்டிகர்த்தாவின், ஒளிவீசுந் திருமுகமண்டலத்தையும், இவரது திருமாளிகையின் விசாலத்தையும், சிங்காரத்தையும் தரிசிக்கவும் நியமிக்கப்பட்ட கண்கள் பெற்ற பாக்கியமே பாக்கியம். மேலோக மனோரூபிகளின் இன வருக்கங்கள் தம் பார்வைக் கெதிரே அணி அணியாய்ச் சென்று திரியப் பார்க்கவும், அதியகோசர தேவ சமூகத்தில் தங்கள் சிம்மாசனங்களில் வீற்றிருக்க, அர்ச். அருளப்பர் கண்ட மேன்மையில் உயர்ந்த விருந்தின் சங்கத்தின் பிரதாபத்தை நோக்கவும் பேறுபெற்ற நேத்திரங்களின் செல்வமே செல்வம். மௌனமநாட்டின் களிப்பு பாடல்களையும், இங்கே போலச் சிற்சில குரல்

தொனியால் மாத்திரமல்ல, ஆனல் வானோர், முத்தர் எத்தனை எத்தனையோ, அத்தனை அத்தனை குரல் தொனியோடு பாடப்பட்டு ஆனந்தத்தால் பரவசமாகும் நாதகீத சுரங்களையும் கேட்க வரம்பெற்ற செவிகளே செல்வச் செவிகளாம்.

ஆ! சகோதரியே, இதென்ன! உம் வதனத்தினின்று அமிர்த பிரபை வீசுவதற்கும், நேத்திர விழியினின்று கண்ணீர் சலசல வென்று சொரிவதற்கும், உமது முகம் செந்தாமரையைப்போல் சிவந்து மலர்வதற்கும் காரணம் யாது! இதென்ன நீர் அதி சிந்தையாய் மேகமண்டலத்தை உற்றுப்பார்க்கின்றனை!

ஸ்கொ.—கலையெல்லாம் கடந்த என் நேய சகோதரரே! என் விழிகள் ஆகாசத்தின்மேல் எரிந்து துலங்கும் எண்ணிறந்த தாரகை தீபங்களை மிக்க அதிசய வியப்புடன் பார்க்கின்றன. இப்பிரமாண்ட அக்கினிகோளங்களை நான் பார்க்கப் பார்க்க என்னிருதயம் அவைகளைப் படைத்த சர்வ வல்லப சிருஷ்டிகர்த்தாவின் பாரிசமாய் நாடி, தாவி, சிநேக அக்கினியால் பற்றியெரிகின்றது. ஆகையால் பொழுது விடியும் வரையில் அவருடைய தெய்வீக சோபன மகிமைகளைப்பற்றி சம்பாஷிக்க இன்னும் என்னுடன் இருப்பீராக.

பென.-நீர் எனக்கு உரைப்பது யாது? பரிச்சேதம் என் மடத்தின் புறம்பே இராகழிக்க என்னால் இயலாது. இரவு கருக்கலாய் விட்டது. நீர் உம் வாசதுக்குப்போவீர். நானும் என்மடத்திற்கு ஏகுவேன்.

(ஸ்கொலாஸ்தீக்கா தம் சகோதரர் சொன்ன இவ்வார்த்தைகளைக் கேட்டு, சிரம் சாய்த்து கைகுவித்துத் தேவனைப் பிரார்த்திக்கின்றனள். உடனே மப்பில்லாத தெள்ளிய வானமண்டலம் கார்முகிலால் மூடிக்கொள்ளவே பின்வருமாறு பெனதிக்துஸ் சொல்வார்:)

ஓ! இதென்ன அதிசயம். வானெல்லாம் கரிய மதயானைக் கூட்டம்போல் கருந்த முகிலால் மூடப்படுகின்றதே! சமர்க்களத்தில் பகைவர் மார்பில் தேய்ந்தொளிரும் வேலைப்போல் மின்னல்கள் மின்னுகின்றனவே! வார் கட்டிய முரசம்போல். இடிகள் அதிர்ந்து கர்ச்சிக்கின்றனவே! எய்யப்பட்ட அம்புகளைப்போல் மழை தாரைதாரையாய்ப் பொழிகின்றதே! என் அருமைப் பிறப்பே! என்ன வேலை செய்தீர்? இப்புயலுக்கு நீர்தான் காரணம். கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக. யார்தான் இப்படிப்பட்ட கருக்கலிலும் கூடகோபுரங்களை முதலாய்த் தகர்த்திடிக்கும் இம்மாரியில் காலடிவைக்கத் துணிவார்? நாம் ஏற்படுத்திய ஒழுங்கை அநுசரிக்கக் கூடாமையாய்ச் செய்தீரே!

ஸ்கொ.—நான் உம்மைக் கேட்க உத்தாரம் தர நீர் சம்மதிக்க வில்லை. பரலோக இராசாவை மன்றாடினேன். உடனே என் விண்ணப்பதை யன்புடன் கேட்டருளினார். உம்மாலியன்றால் மடத்திற்குச் செல்லும்.

பென.—பரம பிதாவின் உதவியைக் கொண்டு என்னை வென்றீர். மாதர் புரியும் காரியம் இதுவே. கடவுளின்மேல் அவர்களுக்குள்ள உயிருள்ள விசுவாசம், மானிடர் ஞானத்திற்கும் வல்லமைக்கும் எட்டாத அதிசயங்களைச் செய்து முடிக்கின்றது.

ஆகையால், கணீர் கணீர் என்று சப்திக்கும் மேக முழக்கங்களாகிய நாதகீத சங்கீத சிறப்பிலும், மண்ணுலகையும் விண்ணுலகையும் அளாவிக்கொண்டிருக்கும் இக்கோளத்தின் மத்தியிலும், அதனைப் பிரகாசிப்பிக்கும் பலவர்ண இரத்தின தீபங்களினிடையிலும், பளீர் பளீர் என்று மின்னும் மின்னல்களின் மத்தியிலும் தேவலோக வாசிகளின் பேரானந்தக் கடலில் மூழ்கி நமது சிருஷ்டிகரின் சுந்தர சோபனமகிமை பிரதாபத்தையும் ஞானத்தையும் வல்லபத்தையும் நன்மை சம்பன்னத்தையும்பற்றி அன்புற்று இன்புற்றுப் பேசித் துதிப்போமாக!

*Kovalong.* S. M.

---

வீண் பார்வையிலும், வீண் கேள்வியிலும், வீண் வாசிப்பிலும், விசேஷமாய் வீண் பேச்சிலும் பொழுது போக்காதே.

---

கத்தோலிக் பத்திரிகையை நான் வாசிக்க வேண்டிய அவசியமில்லையென்று இப்போது தகப்பன் சொன்னால், கத்தோலிக் கோவிலுக்குப்போக வேண்டிய அவசியமில்லையென்று பிற்பாடு மகன் சொல்வான்.

---



# GANNAMANI, III PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

## 29-ம் அதிகாரம்.

### உடனே துடியன் விளக்கை அவித்துவிட்டு வாய்த்துவந்தபடி உளறி ஊளையிட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

சலமோன் கோர்ட்டில்செய்த பிரியாதினிமித்தம் பவுல் போதகர் கச்சேரிக்கு அடிக்கடி போய், வக்கீல்களுடன் ஆலோசனை செய்துவந்தார். ஒருநாள் போதகர் இந்தக் கேசினிமித்தமாக மணியக்காரர்-முத்துப்பிள்ளையுடன் கச்சேரிக்குப்போய் தன் வேலையை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பி, இருவரும் தங்கள் வீட்டுக்கு வந்துகொண்டிருக்கும்போது, கடையில் உட்கார்ந்திருந்த வீரசெட்டியென்பவர் மணியக்காரனைக் கூப்பிட்டு, கடைமட்டும் வந்து போகும்படி கேட்டுக்கொண்டதன்மேல், முத்துப்பிள்ளை போதகரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு கடைக்குப்போனார்.

அப்போது செட்டியார் ஒரு பொன் நாணயத்தை கையில் வைத்துக்கொண்டு, "இதைப் பாருங்கள் ஐயா. இங்குவழங்குகிற சவரனுக்கும் இதற்கும் எவ்வளவு பேதம்!" என்றார். மணியக்காரர் பொற்காசை கையில் வாங்கி இருபுறமும் திருப்பிப்பார்த்து, "இதை சவரன் என்று யார் சொன்னது? நீங்கள் பாருங்கள் ஐயா!" என்று அதை பவுல்போதகர் கையில் கொடுத்தார். அதைப் போதகர் கையில் வாங்கினவுடனே, அதிசயித்து, "இதை உமக்குக் கொடுத்ததார்?" என்று செட்டியாரைக் கேட்டார். "இந்த முனியன்தான் அதை மாற்றிக்கொள்ளும்படியென்னிடம் கொடுத்தான்" என்றார் செட்டியார். உடனே பவுல்போதகர் மணியக்காரனைத் தனியாகக் கூப்பிட்டு, "முன் காணமற் போன சுரூபம் இதுதான்; நீங்கள் சற்று இவனை மிரட்டினால் குழந்தையின் காப்பும் கொலுசும் வந்துவிடும்" என்று சொன்னதன்மேல், மணியக்காரர் சாராயக்கார முனியனைத் தம்முடன் வரச்சொல்லி, வீட்டுக்குச் செல்லும் போதே, "அடே முனியா? இதை உனக்கு ஆர் கொடுத்தது"' என்றார். முனியன் பயந்து பே, பே என்று விழித்தான். "உள்ளதைச் சொன்னால் சரி, இல்லாவிட்டால் போலீசாரை வரவழைப்பேன்" என்றார். அப்போது முனியன் பயந்து நடுங்கி. போதகரைக் காட்டி இவருடைய குமாரன்தான் கொடுத்தார் என்றான்.

மணி.—இத்துடன் இன்னம் என்னென்ன நகை கொடுத்தார்?

முனி.—ஒன்று மில்லை ஸ்வாமீ!

மணி.—(தலையாரியைப் பார்த்து) அடே, கோலா! இவனை யெங்கும் போகவிடாமல் இங்கேயே மடக்கு (என்று காகிதத்தையும் பேனாவையும் எடுத்தார்.)

முனி.—சாமீ! காப்புங் கொலுசுங் கொடுத்தார்.

மணி.—யார் கொடுத்தது?

முனி.—அவர் தான், சலமோன் என்பவர்.

மணி.—எத்தனை ஜதை?

முனி.—ஒரு ஜதை.

மணி.—உனக்குக் கெட்டகாலம் சமீபித்திருக்கிறது; உள்ளதைச் சொல்.

முனி.—இரண்டு ஜதை சாமீ.

மணி.—அந்த நகை யெங்கே இருக்கிறது இப்போது?

முனி.—அதை அழித்துவிட்டேன் சுவாமீ.

மணி.—அழித்த பொன்னைக் கொண்டு வந்தால் சரி; இல்லாவிட்டால் போலீஸ்டாணாவில் அடைபடுவாய்.

முனியன் உடனே வீட்டுக்குப்போய் இரண்டு ஜதை காப்பையுங் கொலுசையுங் கொண்டுவந்து மணியக்காரர் கையில் கொடுத்து, அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்தான். அப்போது மணியக்காரன் முனியனைப் பார்த்து "எவ்வளவு பணத்துக்கு இந்த ஐந்து நகையையும் கிரயப்படுத்திக்கொண்டாய்?"

முனி.-அவர் வாங்கின கடனுக்கு விற்றுப் போட்டார் சாமீ.

மணி.—சாராயக்கடனுக்குத் தானே.

முனி.—ஆ......ஆ......மா......சாமீ.

மணி.—எத்தனை ரூபாய்க்கு இந்த நகையை ஏற்றுக்கொண்டாய்? உள்ளதைச் சொல்லடவா, இல்லாவிட்டால் பார்......

முனி.—..........50 நூக்கு சாமீ

மணி.—அந்த சலமோன் என்பவர் எத்தனை நாளைக்குள் இந்த 50 ரூ.க்கும் குடித்தார்?

முனி.—35ரூ. அவர் என்னிடம் பாக்கிப் பட்டிருந்தார்.

மணி.—சாராயங்குடித்தது தானே?

முனி.—ஆமா சாமீ.

மணி.—மீதி 15ரூ.?

முனி.—அதை அவருக்குக் கொடுத்து விட்டேன்.

மணி.—அந்த 35 ரூ.க்கு எத்தனை நாளில் குடித்தார்?

முனி.—20/25 நாளிருக்கலாம்.

மணி.—அடே, பாவிப்பயலே; அவன் குடல் வெந்துபோகாமலிருந்தது அதிசயந்தான்.

முனி.—எல்லா செலவும் உள்பட சாமீ.

மணி.—எல்லா செலவென்றால்?

முனி.—கறி-தோசை, சாக்ணா முதலியதெல்லாம் சேர்ந்துதான் சாமீ.

மணி.—அடடா! உலகம் எப்படிக் கெட்டுப்போச்சு ஐய்யா இந்தக் காலத்து குடியினாலே! 20, 25 வருஷத்துக்கு முன்னே இந்த ஊரிலும் பக்கத்து ஊரிலும், எவனையுங் குடிக்கப் பார்த்ததில்லே. யாதாம் ஒருத்தன் கள், சாராயம் குடிப்பதாகக் கேள்விப்பட்டால் அவனைப் பெரும்பாதகனாகப் பாவிப்பார்கள் மற்ற ஜனங்கள். இந்தகாலத்திலேயோ! ஐயையோ!! பெரியோரும் சிறியோரும், சமஸ்த ஜாதியாரும் வருணத்தாரும், தங்கள் குலத்தையும் வருணத்தையும் மறந்து பஞ்சபாதகத்தில் ஒன்றாகிய குடியைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்! மதுபானஞ் செய்வது கௌரவத்துக்குரியதென நினைக்கிறார்கள் இக்காலத்திய ஜனங்கள். குடியால் குலத்துக்கு நிந்தையும், மதத்துக்கு அவமானமும், ஜாதிக்கு அபகீர்த்தியும், குடும்பத்துக்கு வறுமையும், பெண்சாதி பிள்ளைகளுக்குச் சிறுமையும், தன் பேருக்கு நிந்தை அவமானமும், தன் சுகத்துக்குக் கேடும் சீரழிவும் உண்டாகுமென்று தீர்க்கமாய் அறிந்திருந்தும், இந்தப் பாவிமக்கள், சகல பாவிஷ்டதனங்களையும் விளைவிக்கும் பேய்த்தண்ணீருக்கு எப்படி அலைந்து திரிகிறார்கள்! அதற்காக எவ்வளவு தூரம் நடக்கிறார்கள்! எத்தனை பொய் புரட்டு! எத்தனை திருட்டு! இதனால் விளையும் பாதகங்களுக்குக் கணக்கேது! வழக்கேது!

அடே, முனியா! நீயும் இப்பேர்ப்பட்ட பாவத்தில் பங்கடையாமல் போகமாட்டாய். இனியாகிலும் பத்திரமாயிரு; இது முதற்கொண்டு (பவுல்போதகரைக் காட்டி) அவருடைய குமாரன் உன் கடைக்கு வந்தால் மதுபானங் கொடாதே. அதனாலேதானே இப்போது அந்த பிள்ளையாண்டான் கெட்டு, பெற்றோருக்கும் பந்துக்களுக்கும் அபகீர்த்தி யுண்டாக்கிப்போட்டு, சீரழிந்து, மானங்கெட்டு. பெண்சாதி பிள்ளை கழுத்தில் கை போட்டு, வாயற்ற மிருகத்துக்குச் சமானம் ஆய்விட்டான். இனி ஜாக்கிரதை! அந்த வாலனுக்கு ஒரு துளியுங் கொடுக்கவேண்டாம்: அப்படிக் கொடுத்ததாகத் தெரியவந்தால்; நீ படும் பாட்டை அப்போது கண்டுகொள்வாய். (என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.)

மணியக்காரர் பவுல்போதகரை நோக்கி, "ஐயா, என்வீட்டு வண்டவாளத்தை மூடிக்கொண்டு ஊரார் குறையைத் தீர்க்க வந்தால் பயன் என்ன? கடந்த வியாழக்கிழமை நீர் என்னைத் தேடிக்கொண்டு வந்தீரல்லவா?"

பவுல்.—ஆம், ஸ்திரீகள் ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்ததைப் பார்த்து நான் என் வீட்டுக்குத் திரும்பிப்போய்விட்டேன்.

மணி.—ஏன் அழுதார்கள் தெரியுமா?

பவுல்.-பந்துக்கள் யாராகிலும் செத்திருக்க வேண்டும்.

மணி.-அது வாஸ்தவந்தான். என் மைத்துனன் மதுரைப்பிள்ளை யிறந்ததைப் பற்றியேயாம். இந்த மதுரைப்பிள்ளை பி. ஏ.; பி. எல். பரீக்ஷை கொடுத்துப் படிப்பில் தேர்ந்தவன். பேச ஆரம்பித்தால் கல்மழை பெய்வதுபோல் பேசுவான். நியாயத்தை ஒப்பிப்பதிலோ நிபுணன். இவன் வாய்ச்சாலகமாய்ப் பேசுவதையும் லாப்பாயிண்டுகளை யெடுத்துக் காட்டுவதிலும் ஐகோர்ட்டு ஜட்ஜுகள் முதலாய் மலைத்துப்போவார்கள்.

பவுல்.—அவர் வக்கீலா?

மணி.—அவன் வக்கீல்தான். சம்பாதித்தான் பணத்தை யதேஷ்டமாய். செம்பரம்பாக்கம் ஏரியின்கீழ் விஸ்தாரமான பூமியைச் சம்பாதித்தான். என்ன பிரயோசனம்? எப்படியோ மதுபானத்தை உபயோகிக்க ஆரம்பித்து, ஒரு நாளைக்கு 2, 3, விசைக்குள் 4, புட்டி உடைத்துக் குடிப்பான். தான் குடிப்பதுடன் தன்னோடு சேருகிறவர்களையும் மகா உதார குணத்துடன் விசாரிப்பான். குடிக்க ஆரம்பித்தது முதற்கொண்டு பெண்சாதி பிள்ளைகுட்டிகள் மட்டில் சிந்தைகொண்டவனல்ல. இராவேளையில் தன் வீட்டில் தங்காமல் பெரிய ஓட்டல்களில் தங்கி, பெருந்தீனி தின்று, அவ்விடத்திலேயே இரவைக் கழிப்பான். தனக்குப் பிரியமாகும் இறைச்சி யெப்பேர்ப்பட்டதென்றும், அதைச் சமைப்பவர்கள் இன்னாரென்றும், அறிந்திருந்தும் சற்றேனும் சங்கோசமின்றி உண்பான். நாலைந்து நாளில் ஒருதடவை பேருக்கு தன் வீட்டுக்குப்போய். தேவையான புஸ்தகத்தையோ வஸ்திரத்தையோ எடுத்துக்கொண்டு வெளியேறுவான்.

இவனுடைய கெட்ட பழக்கத்தினிமித்தம் யெவனும் அவனிடத்தில் கேஸ் கொண்டு போகாததைப்பற்றி, இரவும் பகலும் ஓட்டலில் தங்கி குடித்துக்கொண்டே இருப்பான். வெளியே புறப்பட்டால் 2, 3, உயிஸ்கி புட்டியில்லாமல் புறப்படமாட்டான். கையிலிருந்த பணமெல்லாம்செலவானவுடன்; திவ்வியமான நிலங்களையும் அரைகுறையாய் விற்க ஆரம்பித்தான்.

பத்து நாளைக்குமுன் அவனுடைய ஸ்நேகிதாள் வேண்டுகோளுக்கு இணங்கி யேதோ ஒரு மீட்டிங்கின் நிமித்தம் மதராசுக்கு 30 மையில் தூரத்திலுள்ள கிராமத்துக்கு ரயில் வழியாய்ப்புறப்பட்டான். புறப்படும்போதே இரண்டு உயிஸ்கி புட்டிகளையுங் கூட கொண்டுபோனான். ஒருமணி நேரத்துக்குள் ஒரு புட்டியைத் தீர்த்துப்போட்டான். அங்கிருந்து ஜட்காவண்டியேறிப்போகும் போது இரண்டாம் புட்டியை அரைமணி நேரத்துக்குள் வெறுமையாக்கிவிட்டான். குறித்த கிராமம்போய்ச் சேர்ந்தபோது அவனுக்கு மயக்கமுண்டாகி, வண்டியில் படுத்தபடுக்கையாய்க் கிடந்தான். முழங்கால் மாத்திரம் கீழே தொங்கிக்கொண்டிருந்தது. நாலுபேர் அவனைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு திண்ணைமேல் போட்டு என்னமா யிருக்கிறானென்று பார்த்தபோது உயிர் பிரிந்ததாகக் கண்டுகொண்டார்கள். என்ன பரிதாபம்! ஐயா! வீடுவாசல் விட்டு, பெண்டாட்டி பிள்ளைகளைவிட்டு அசலூரில் துர்மரணம் அடைவதற்கு அந்தப் பேய்த்தண்ணீர்தானே காரணம்!!

வருகிற வியாழக்கிழமை நான் புறப்படவேண்டும் அவன் கருமாந்திரத்துக்கு—என்று குடியாலுண்டாகும் தின்மையைப்பற்றி மணியகாரர் பேசியபின் பவுல்போதகர் அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார் தமது வீட்டுக்கு.



போதகர் தன் வீட்டுக்குப் போய் ஈசாக் உபதேசியார் வீட்டுக்குச் சென்று அவ்விடத்தில் உபதேசியாரும் விஸ்வாசநாயகரும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு, "அகப்பட்டது குழந்தையின் நகை" என்று அதை மேசைமேல் வைத்து: அது அகப்பட்ட வரலாற்றை அவ்விருவருக்குந் தெரியப்படுத்தினார்.

விஸ்.—என்ன அதிசயம்? சலமோன் எத்தனைவிசை ஆணை சத்தியஞ்செய்து அந்த நகையைத் தொடவில்லையென்றான்? கிஞ்சித்தேனிலும் அவனுக்கு மனச்சாக்ஷியில்லை?

பவுல்.—அவன் முழுதுங் கெட்டுப்போனான். இனி அவன் மனந்திரும்பாவிட்டால், அது பெருத்த புதுமையாயிருக்கும்.

ஈசாக்.—பார்த்தாலும் பார்த்தேன் குடிகாரரை. ஆனால் இப்பேர்ப்பட்டவனை நான் எங்கும் பார்த்ததில்லை! என்ன திருட்டு! பொய் புரட்டு! ஆணை சத்தியம்!! இதைப்பற்றி நினைக்கும் போதே எனக்குச் சொல்லமுடியாத பயமுண்டாகிறது! (பெருமூச்சுவிட்டு) அபிராமி கெட்டலைய நானே காரணம்! அபிராமி! அபிராமி! (என்று கூப்பிட அவளும் அங்குவந்து சேர்ந்து காணாமற்போன நகையைக்கண்டு அதிசயித்து) "அது எப்படி அகப்பட்டது நாயனே"? என்றாள்; பவுல்போதகர் இரண்டு மூன்று வார்த்தையில் அது அகப்பட்ட விதத்தைச் சுருக்கமாய்த்தெரியப்படுத்தினார்.

"குழந்தையைக் கொண்டுவா அம்மா" என்று விஸ்வாச நாயகர் சொன்னபோது, அபிராமி தன் மகனை நாயகர் கையில் கொண்டுவந்து கொடுத்தாள். அப்போது அவர் அதன் கைக்கும் காலுக்கும், காப்பையுங் கொலுசையும் போட்டுக் கழுத்தில் சுருபத்தையும்போட்டு கையில் தூக்கினவுடனே குழந்தை சிரிக்க ஆரம்பித்தான். அப்போது அவர் "இந்தக் குழந்தை யிவ்வளவு அழகு சௌந்தரியமா யிருந்தால் பரலோகத்திலுள்ள சம்மனசுக்களின் அலங்காரவடிவை வர்ணிக்கக் கூடியவனார்!" என்று பலதடவை குழந்தைக்கு முத்தங்கொடுத்து அதை அபிராமி கையில் கொடுத்தார்.

அந்தக் குழந்தை வெகு அழகாயிருந்ததைப் பற்றி அந்த வீட்டுக்கு வரும் சகலரும் அதை யெடுத்துக் கொஞ்சி முத்தமிடாமல் போகமாட்டார்கள். அந்தக் குழந்தை ஈசாக் உபதேசியார் வீட்டுக்குப் பெரும் பொக்கிஷம் போலவும் அவி

யாத் தீபம் போலவும் இருந்தது. சலமோனால் உண்டாகும் துக்க துயரத்துக்கெல்லாம் பெரும் ஆறுதலாயிருந்தது. இவ்வளவு அழகுள்ள குழந்தையை அபிராமியும் ஈசாக் உபதேசியாரும் பார்க்கும்போதெல்லாம் அவனுடைய தகப்பனால் உண்டான மனச் சஞ்சல வேக்காட்டை அவிக்கும் குளிர்ந்த ஜலம் போல் அவர்களுக்கிருந்தது. அவர்களிருவரும் அவனைத் தங்கள் உயிர்போல் பாவித்து வந்தார்கள்.

இது இப்படியிருக்க, கோர்ட்டார் அவர்களால் போடப்பட்ட ஈரங்கிக்கு இரு கக்ஷிக்காரரும் தங்கள் தங்கள் சாக்ஷிகளுடன் கோர்ட்டில் ஆஜரானார்கள். கக்ஷிக்காரருடைய வக்கீல்கள் வாதித்து வாதித்துப் பேசினபின், ஜட்ஜு துரை இந்தக் கேசை டிஸ்மிஸ் செய்ததுடன், பிரதிவாதியின் செலவை வாதி கட்டிக்கொடுக்கும்படி தீர்மானஞ் செய்தார்.

சலமோனோ, சற்றேனும் கிலேசப்படாமல் எப்போதும் போல் மதுபானங்களை அருந்தினதுடன் வழியிலுள்ள கடைகளிலும் போய் மனங்குளிர குடித்து ஊர்போய்ச் சேர்ந்தான்.

அன்று இராத்திரி அபிராமி நித்திரை செய்யும்போது நடுச்சாம வேளையில் தன் வீட்டுக் கதவு தட்டுகிற சத்தங்கேட்டு, "யார் அங்கே?" என்றாள். "கதவு திறங்கம்மா, நான் தானாக்;" என்ற சத்தத்தைக் கேட்டு, அபிராமி யெழுந்து விளக்கேற்றி கதவைத் திறந்தாள். கதவைத் திறக்கவே, அவள் முன் பூதம் போல் நின்றான் சலமோன்.

"இந்நேரத்தில் என்னை யிப்படி யேமாற்றலாமா" என்று அபிராமி வினவினபோது, "பத்து நாளைக்குமுன் நான் கதவைத் தட்டின போது திறவாதபடியால், இந்த உபாயம் எடுத்தேன்" என்று குடிகாரன் உளறினபின், மறுபடி அவன் அவளைப் பார்த்து, "நீ யென் மனைவியானால் தக்ஷணமே எழுந்து என்னைப் பின்செல், இல்லாவிட்டால்.........." என்று சொல்லும்போது அபிராமி "நான் ஒருபோதும் இந்த வீட்டை விட்டுப் புறப்பட மாட்டேன் இந்த அர்த்த ராத்திரி வேளையில்" என்றாள். உடனே குடியன் விளக்கை அவித்துப்போட்டு வாய்க்குவந்தபடி உளறி ஊளையிட்டுக்கொண்டு தட்டுத் தடுமாறி வெளியே புறப்பட்டான்.

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### பத்திரிகாபிவிருத்தி.

சென்ற 1915-ம் வருடம் டிசம்பர் மாதம் 29-ம் தேதி, சென்னையில் தென் இந்திய கத்தோலிக் சங்கம் கூடிற்று. சங்கத்தின் தீர்மானங்களில் ஒன்று கத்தோலிக் பொது ஜனங்களின் க்ஷேம லாபத்தைக் கோரிக் "கத்தோலிக்கர் நேசன்" என்னும் பத்திரிகை யொன்று நடத்துவது. இதை அநுசரித்துத் திருமயிலை கனம் மிக்கேல் மோத்த வாஸ் சுவாமிகளிடமிருந்து பத்திரிகையின் முன் போக்கை விரும்பிய என் அபிப்பிராயத்தைக் கேட்டும், நான் பத்திரிகையின் விஷய நேயரா யிருத்தல் வேண்டுமென ஆசித்தும் எனக்கோர் கடிதம் கிடைத்தது. கடிதத்திற்குப் பதில் சுவாமியவர்களுக்கு இன்னும் சிறிது தினங்களுள் நான் எழுதிக் கொள்வேனாயினும், பத்திரிகாபிவிருத்தியைப் பற்றிய எனது எளிய அபிப்பிராயத்தை நமது நல்லாயனிலும் பிரசுரிக்க வேண்டுமெனல் எனது நன்னோக்கமா யிருக்கிறது. நல்லது இப்போது என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்.

பத்திரிகாபிவிர்த்தி பத்திராதிபரின் வல்லாண்மையில் மாத்திரம் கட்டுப்பட்டதா யில்லை. அது கடித நேயர், சந்தாதாரர் இவர்களுடைய நல்லெண்ணத்தைப் பொறுத்ததாகவு மிருக்கின்றது. பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய மேலைத் தேசங்களில் பத்திரிகைகளின் செல்வாக்கைப் பலப்படுத்துகிறதற்குப் பிரத்தியேகமான சங்கங்கள் இருக்கின்றனவாகத் தெரிகிறது. இதில் ஆடவர்களைப்போல மகளிருமே அங்கத்தினராயிருக்கின்றனர். இவர்கள் வீடு வீடாய்ப் போய்க் குடும்பத் தலைவர்களைக் கண்டு, பத்திரிகைகளினால் நாட்டுக்கும் வீட்டுக்கும் உண்டாகி வருகின்ற பிரயோஜனத்தைச் சொல்லுகிறார்கள். எந்தெந்தப் பத்திரிகைகளுக்குத் தாங்கள் சந்தாதாரர்களா யிருக்கப் பிரியப்படுகிறார்களெனக் கேட்கிறார்கள். எப்படியாவது ஒரு பத்திரிகை தாங்கள் சிபார்சு பண்ணுவதி னிமித்தம் கட்டாயம் வரவழைக்க வேணுமென்று கெஞ்சுகிறார்கள். அப்படியே அநுகூலம் அடைகிறார்கள். இந்தப்பட்டி யெல்லாம் பிரயாசித்து வீடுகள் தோறும், நாடுகள் தோறும் பத்திரிகைகளைப் பலுக்குகின்றனர். இதற்காகப் பத்திரிகாதிபர்களிட மிருந்து சில சங்கங்கள் சன்மானங்களும் பெற்று வருகின்றன. சில சங்கங்கள் சன்மானம் பெறாமலே தருமத்திற்காக வேலை செய்கின்றன.



இப்பேர்ப்பட்ட சங்கங்கள் சேருவது நம் நாட்டில் மிகவும் இலேசான கருமம். பத்திரிகையைப் பலுக்குவது மிகவும் அநுகூலமும் சாத்தியமுமானவை யென்பது எனக்குப் பிரத்தியட்சத்தில் தெரியும். ஆனால், சன்மானங்களை நமது கத்தோலிக்குப் பத்திரிகைகளிடமிருந்து எதிர்பார்ப்பது இன்றைக்கு யுக்தமல்ல. இப்போது சென்னை நல்லாயன் பத்திரிகையில் 2000-பிரதிகளும், யாழ்ப்பாணம் சத்திய வேத பாதுகாவலன் பத்திரிகையில் 1000-பிரதிகளும், புதுவை சர்வவியாபிப் பத்திரிகையில் 800-பிரதிகளும், திருச்சி திரு இருதயத்தூதன், கத்தோலிக் குடும்பபோதினி இவைகளில் 3500-பிரதிகளும் அச்சிடப்படுகிறதாகத் தெரிகிறது. மேற்படி பத்திரிகைகளின் க்ஷேமலாபத்தை விருத்தி பண்ணுவதற்கு நம்மில் சிலர் ஒரு சிறிது முயற்சிப்பார்களாகில், சில மாதங்களிலேயே அன்னவைகளுள் இரண்டத்தனை மூன்றத்தனை தொகைகள் விருத்தியாகச் செய்துவிடலாம்.

எழுதத் தெரிந்தவர்கள் சன்மார்க்க விஷயங்களை வியாசங்களாக எழுதி வரவேண்டும். பத்திரிகை படிக்க விரும்பும் ஏழைகளுக்குச் செல்வவான்கள் மொத்தமாகப் பத்திரிகைகள் வரவழைத்துக் கொடுக்கவேண்டும். அவகாச முள்ளவர்கள் குடும்பத் தலைவர்களையடுத்துப் பத்திரிகையினால் உண்டாகும் பயன்களை விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லவேண்டும். வாசிக்கத்தெரியாதவர்களுக்கு வாசித்துக் காட்டவேண்டும். மேனாட்டில் தோட்டி முதல் தொண்டமான் வரையில் பத்திரிகை வாசிக்கின்றனர். பத்திரிகை வாசிக்கக் கிடையாதே போனால் அவர்களுக்கு ஒருகாரியமும் செய்யப் பிரியம் வருகிறதில்லை. சிலர் சாப்பிடுகிறதில்லை. சிலர் தூங்குகிறதில்லை. இப்படியிருக்கிறது மேனாட்டில் பத்திரிகாபிரியம். அதனால்தான் அவர்கள் அதிசீக்கிரத்தில் முன்னேறி வருகிறார்கள். பத்திரிகைக்கு முதலில் இவ்வுலகத்தில் சீனதேசமே தாயகமென்றாலும், இன்றைக்கு சீனாவைப் பார்க்கிலும் ஜப்பானில் பத்திரிகை வளம் மிகுதியாயிருக்கின்றது. ஜப்பானில் பத்திராதிபர்களில் அநேகர் பெண்பிள்ளைகள். அந்நாட்டுக் குழந்தைகள் இந்நாட்டு குழந்தைகளைப்போ லல்ல. அந்நாட்டுச் சிறுவன் காலணா கிடைத்தால் உடனே ஓடிப்போய்ப் பத்திரிகை வாங்கிப் படிக்கிறான். இந்நாட்டுச் சிறுவனோவென்றால் பீடிவாங்கி உறுஞ்சுகின்றான். சென்ற 50 வருடங்களுள் ஜப்பான் இத்தனை முன்னிற்க வேண்டியதற்கு ஏற்பட்ட அநேக காரணங்களுள் அந்நாட்டிலிருக்கும் பத்திரிகைப் பொலிவே முக்கியகாரணம்.

விஷயாதிகள் இப்படியிருக்க, நம்மிலநேகர் இன்னும் பத்திரிகை யென்றால் பாஷாணம் போல் பாவிக்கின்றனர். சிலர் பத்திரிகை வாசிப்புக் கேவலம் ஏழைகளுக்கு அடாதென்றும் அது செல்வவான்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்குமே உரிய தென்றும் நினைக்கிறதுபோல் விளங்குகிறது. இந்நினைவு போலி நினைவே யொழிய புனித நினைவல்ல. எத்தனை யேழைகளாயிருந்தாலும் எந்தத் தொழிலாளரா யிருந்தாலும் பத்திரிகை வாசிக்கலாம். ஆனால் எவருக்கும் சாவதானம் கிட்டவேண்டும். சிலர் சாவதானம் தம்மை நோக்கித் தானே வருமெனக் கருதுகின்றனர். அற்றன்று. சாவதானத்திற்கு வேண்டிய நிமித்தங்களை நாமே கைக்கொள்ள வேண்டும். அதிகாலை 4½ மணி தொடுத்து இரவு 10 மணிக்குப் படுக்கைக்குப்போகும்வரையில் நம் கைவசத்தில் அநந்தஞான முடைத்தான கடவுள் 17½ மணி நேரத்தைத் தந்திருக்கிறார். இந்த 17½ மணி நேரத்தில் சாப்பாட்டிற்காக வேண்டுமான ஏறக்குறைய 1½ மணி நேரந்தவிர மற்ற 16 மணிநேரத்தைக்கடவுள் நம் சுவாதீனத்தில் விட்டிருக்கிறார். இந்த 16 மணி நேரத்தையும் ஒரு மனிதன் தன் வயிற்றுப்பிழைப்பிற்காகவே செலவழிக்க வேண்டியிருக்கிற தென்பதை நாம் நம்புகிறதற்கு வழியில்லையே. கிடைத்த 16 மணி நேரத்தையும் இன்ன நேரத்தில் இன்ன செய்யவேண்டுமென்ன வரையறுத்து வைக்கப் பழக்கமுள்ளவர்கள் பத்திரிகை படிக்க சாவதானமில்லை யென்று சொல்லுவது அபூர்வம். மாட்சிமை தங்கிய விக்டோரியாசக்கரவர்த்தினி அரசாட்சியில் நெடுங்காலம் பிரதம மந்திரியாயிருந்த Mr. உவில் லியம் கிளாஸ்டனுக்குள்ள வேலை நெருக்கடி நம்மில் அநேகருக்குத் தெரியும். ஆயினும் அவர் ஒருநாளென்கிலும் லண்டன் டைம்ஸ் பத்திரிகை வாசிக்காது படுக்கைக்குப் போகிறதில்லை யென வாசிக்கிறோம். இப்போது நமது சக்ரவர்த்தியின் பிரதம

மந்திரியான Mr. ஆஸ்குவித் என்பவரைப் பாருங்கள். ஒரு நாளாவது இவர் பத்திரிகை வாசியாமலிருந்த துண்டா? பத்திரிகை வாசிப்பதாலுண்டாகும் பிரயோசனம் பற்றும் பத்தாய்த் தெரிந்தபடியினாலல்லவா இந்த நெருக்கடியான நிலைமையிலும் கூடக் கற்றறிந்த மேதாவிகள் எப்போது பார்த்தாலும் பத்திரிகையுங் கையுமாயிருக்கின்றனர்? ஆகையால் நாம் நமது முதல் சாவதானத்தைப் பத்திரிகை வாசிப்பதில் செலவழிப்போம். ஆகவே, பத்திரிகாபிவிருத்தி தானே உண்டாகும்.

*M P. Mascarenhas.*

## ஓர் நவமான மனந்திரும்புதல்.

“முட் செடிக்குள்ளே லீலி யென்னும் புஷ்பமிருப்பதுபோல ஆதாமின் குமாரத்திகளுக்குள்ளே என் அன்புடையவ ளிருக்கிறாள்” என்னும் சத்தியத்தை எண்பிக்க. இப் பூதலத்தில் முளைத்துள்ள அபத்த மதங்களெனும் முட் செடிகளுக்குள்ளே அன்புடைய தாயாகிய சத்திய திருச்சபை ஒன்றே அருணோதயம்போ லழகு வாய்ந்து, வளர்மதிபோல் வர்த்தித் தொழுகித் தைரிய வருட்பிரசாதத்தை அண்டகோள மெங்கும் வீசி, அந்தகாரத்தி லடைபட்டிருந்த அனந்தங் கோடி ஆத்துமங்களை நித்திய மோக்ஷானந்த கிரீடங்களுக்குப் பங்காளிகளாக்கி, தேஜோன் மயானந்த சிமாட்டியாய் ஜொலித் தோங்கி நிற்கின்றாளென்பது குன்றாத சத்தியமன்றோ? ஓ! உத்தமர் வாழும் உத்தியான வனமே! கன்னியர் களிக்கும் காருண்யக் கடலே! எக்காலங்களிலு முள்ள இணையிலா தேவனின் பொற்கரமானது கற்பாறை மீதுன்னை ஸ்தாபித்து, பூஜிதமாய்த் தாங்கி நிற்கையில், “வானத்தை நோக்கி வைரவன் குறைத்தவாறாக,” புல்லறிவாளரான புறச் சமயத்தோர் உன்னுடன் போர் புரிந்தாலென்ன?

தாகவிடாய் தீர்க்க அலையும் மானானது கடைசியாய்த் தண்ணீர்ச் சுனையைத் தேடி வருவதுபோல, உலகெலாம் அலைந்து திரியும் அனந்தங்கோடி ஆன்மாக்களும் கடைசியாய் நித்திய சீவிய ஊருணியாகிய உன்னைத் தானே தேடி ஓடி வரவேண்டும். பல நாடுகளை ஊடுருவிப் பாயும் நீர்ப்பெருக்கானது முடிவில் சமுத்திரத்தைக் காணாவிடில் வேறுவகை யேது? ஊதாரிப் பிள்ளை ஊரெல்லாம் அலைந்து திரிந்து அயர்ந்து சோர்ந்தபின் இளைப்பாறின விடம் தன் இனிய பிதாவின் மனையிலன்றோ? பிரளய காலத்தில் வெளிப்பட்ட புறாவானது பலநாள் பறந் தயர்ந்தபின் போக்கிடமின்றி மீண்டும் பேழையையே அடைக்கலமெனத் தேடி அடைந்ததை அறியாதார் உண்டோ? இதோ! தங்களபத்த மதங்களிலுதித்து மகா சாஸ்திரிகளெனவும் வேதவிற்பன்னரெனவும் தர்க்க சிகாமணிகளெனவும் பெயரோங்கி உயரப் பறந்த எண்ணில்லாத பதிதமத பிஷப்புகளும், ஆர்ச் பிஷப்புகளும், பாதிரிமார்களும், மூப்பர்களும், போதகர்களும், பிரிவினைக்காரரும் கடைசியாய் ஞானப்பிரகாச மடைந்து திரை திரையாய் உன்னிடம் ஓடி வருகிறார்கள்.

இதற்கிணையாக நடந்த ஓர் சம்பவத்தைக் கேளுங்கள். உயர்ந்த வங்கிஷபதியான தந்தையிடமா யுதித்த, 19-வயதுடைய ஓர் வாலர் தெய்வாதீனமாய் எனக்குச் சிநேகிதரானார். அடக்க வொடுக்கம், பேரை மரியாதை, பொறுமை சாந்த முதலிய சற்குணங்களமைந்த சௌந்தரிய வாலராயினும், தன் தந்தையைப்போல் பதித மார்க்கத்தில் வெகு வைராக்கியங் கொண்டிருந்தார். இவர் பேர் ஜேம்ஸ். ஓர் ஆத்துமத்தை நற்கரையில் சேர்ப்பிப்பதை விட மேலான புண்யம் வேறில்லை யாதலால், சமயோசிதமாய்ச் சற்புத்தி இவருக்குச் சொல்லிவர, சுபாவத்தில் நல்ல பிள்ளையா யிருந்தாலும், வழக்கம் இரண்டாஞ் சுபாவ மாதலால், என்ன சொன்னாலும் எறுமாறான பதிலளிப்பதே யிவர் இயல்பு. சமஸ்த விசுவாசிகளுக்கும் சத்திய மறை பஞ்சாமிர்த மென்றால், பதிதருக்கு மட்டும் பாஷாண மல்லவா? இப் பாஷாணத்தில் ஊறிப் பிடிவாதமென்னும் நோய்கொண்ட இவ்வாலிபனுக்காக “பாவிகட் கடைக்கலமே, பதிதர் மனந்திரும்ப வேண்டிக்கொள்ளும் என்று பிரார்த்தித்து வந்ததின் பலனாக, நாளுக்குநாள் நல்ல பிள்ளையாய் அனர்த்த வினைக்களைத் தொலைத்து, அரிய விஷயங்களைத் தாமே கேட்கத் தலைப்பட்டார். இதர நேரங்களில் பிரான்சீஸ், ஆரோக்கியசாமி யெனும் வேறு இரு உத்தமர்களும் இவருக்காக வெகுவாய் உழைத்து வந்தார்கள். இங்ஙனமிருக்க, சில வாரங்களாக வாலிபனைக் காண்பதே அரிதாய் விடவே, அதன் காரணத்தை ஷை இருவரிடத்தில் விசாரித்ததில் அவர் மெத்தவும் ஊக்கமுட னிருப்பதாகவும், ஞான தீக்ஷைக் கென்று தங்களை வற்புறுத்துவதாகவும் சொல்ல, உடனே பிரிய ஜேம்ஸை அழைத்து “தம்பீ, சுவாமி நம்மிருவருடைய விண்ணப்பத்தையும் கேட்டருளினார், பயப்படாதே.” என்று சொல்லி “நீ அறியவேண்டியவை யின்னும் மநேகமுண்டு. தேவதாய் ஆத்தும சரீரத்தோடு பரலோகம் சென்றார்கள் என்று நீ விசுவசிப்பதற்குள்ள நியாயத்தைத் தெரியப்படுத்துவாயாகில், இன்றே நீ ஞானஸ்நானம் பெறத் தக்க முயற்சி செய்வேன்” என்னவே அவர் “ஐயாவே! சர்வேசுரனின் தாயாகிய அர்ச். கன்னிமரியம்மாள் ஜென்மப் பாவமில்லாமலுற்பவித்தார்களென்று விசுவசிக்கும் எனக்கு அந்த அம்மாள் பரலோகம் சென்றார்களென்று விசுவசிப்பதும் கஷ்டமோ? பாவத்தி லுதித்த ஓர் குழந்தை தன்னைப்போ லுதித்துத் தனக்குத் தாயானவளிடமாய் பிறக்கவேண்டிய தெவ்விதமோ, அவ்விதமே ஜென்ம தோஷ மணுகாமல் இஸ்பிரீத்து சாந்துவினால் உதித்த இரக்ஷகரும் எவ்வித தடையுமின்றி ஜென்ம தோஷமில்லாத தாயிடமாய்ப் பிறக்கவேண்டியதாமே. பாவத்தி லுதித்த தாயும் சேயும், வேண்டும் வேண்டாம், ஒரு நாள் மரித்து புழுக்களுக் கிரையாவது நிச்சயத்திலும் நிச்சயம். ஆனால் இஸ்பிரீத்து சாந்துவினால் உற்பவித்த சுவாமியானவர் ஆத்தும சரீரத்தோடு பரலோகம் சென்றாரென்பது பட்டப்பகலைப்போன்ற வேத சத்திய மாதலால், அவருடைய பரிசுத்த தாயாரும் ஆத்தும சரீரத்தோடு பரலோகம் செல்லவேண்டியதும், சென்றதும், சத்தியந்தானே. ஆகவே, இச் சத்தியத்தை நம்பாதவன் குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ளும் குருடனும், ஆவேசங்கொண்டலையும் அஞ்ஞானியும் ஆயக்காரனும், பரிசேயனும், பதிதனுமாவா னாதலால், இதோ! என் ஆண்டவளும் கல்லறையை விட்டு, வானோர் பரிவாரஞ்சூழ, மதுரமான கான சங்கீதங்கள் தொனிக்க, பரலோகத்திற் கெழுந்தருளினார்களென்றும், அங்கே, அர்ச். தமதிரித்துவத்தால் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இராக்கினியாக கிரீடந்தரிக்கப்பட் டிருக்கிறார்கள்” என்றும் சாமாரியாய்ப் பொழியவே, நான் ஆனந்த பாஷ்பங்கள் சொரிய என் அன்பனைக் கட்டி மினவி, மகனே! நீ மெய்யாகவே பாக்கியவான். உண்மையும் ஞானமும் உன்னில் துளிர் விட்டுப் பிரகாசிக்கிறது என வாழ்த்தி, அன்றே குருவானவரிடம் நாங்கள் செல்ல, அவரும் ஜேம்ஸைப் பரிசோதித்து மனம் பூரித்து ஞானஸ்நானத்துக்கு அனுமதி யளிக்கவே, இவர் 1915௵ அக்டோபர்௴ 31௳ மாலை 6-மணிக்கு அநேக இஷ்ட மித்திரர் சூழ, நானும் என தருமை மனைவி ஞானமாணிக்கம்மாளும் ஞானத்தாய் தந்தையாய் நிற்க சாம்பியன்ரீப்ஸ் அர்ச். ஜெயமிராக்கினி ஆலயத்தில் சங். பெல்லின் குருப்பிரசாதி யவர்களால் “சூசைமரி ஞானப்பிரகாசம்” என்ற ஞானதீக்ஷை பெற்றதுமன்றி, 1915௵ டிசம்பர்௴ 25௳ கர்த்தர் பிறந்த திருநாளன்று காலைப்பூசையில் திவ்விய சற்பிரசாதமும் அருந்த பாக்கியம் பெற்றார்.

இதோ! தேசமெங்கும் திராக்ஷ கனிகள் பழுத்து நிறைந்திருந்தும், பறித்து பதனப் படுத்துவோரின்றி, நரிகள் நுழைந்து நாசப்படுத்துகின்றன. சிதறி யிருக்கும் ராணுவ சேனையை எக்காள தொனியால் இணைத்துக் கூட்டுவது இயல்பாதலால், திருச்சபையின் அரிய மக்களெனும் பிரிய ஆத்துமங்களே! இன்றே உங்கள் தேவ எக்காளத்தைப் பிடித்துக் காதிருந்தும் கேளாத செவிடர்களின் காதை அடைத்திருக்கும் மெல்லிய தோல் கிழிபட திடமாய் ஊதுங்கள். தளக்கர்த்தனின் நுண்ணறிவால் தேசத்தார் நன்னிலை யடைவதுபோல, உங்களது உத்தம போதகத்தினால் அநேக ஆத்துமங்களை நற்கரை சேர்ப்பிக்க அயரா துழைக்க அனைவரையும் அடிபணிந்து பிரார்த்திக்கும்.

T. ROSS. M. S.
*Oorgaum.*

## கோழும்பு பரத சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டம்.

இக்கூட்டமானது, கொழும்பு புறக்கோட்டை பூந்தோட்டத்தில் அமைந்திருக்கும் (*Pettah Library*) பெட்டா லைப்ரேரியில், நாளது 1916 வருஷம் ஜனவரி மாதம் 23௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 5½ மணி யளவில், பிரபல வர்த்தகராகிய ஸ்ரீமான், **S. A. A. T.** தெமெல் அவர்களின் கௌரவ அக்கிராசனத்தின் கீழ் கூடப்பட்டது. காவேரி முதல் கன்னியாகுமரிவரை வியாபித்திருக்கும் எல்லா ஊர்களிலுமுள்ள பரதகுல பிரபுகர்கள் ஏறக்குறைய 700-க்கு மேல் விஜயஞ் செய்திருந்தனர். அவர்களுள், மணப்பாடு ஸ்ரீமான், S. G. மிராந்த அவர்கள் ஷை கூட்டத்தின் பிரதம விஷயமாகிய “தூத்துக்குடி முதலாவது பரத கான்பெரன்ஸ்” ஆக்ஷேபத்தைப்பற்றி யாவர்க்குந் தெளிவாய் எடுத்துக்காட்டிய பின் ஷை தூத்துக்குடியில், நம்சகோதரர் சிலரால் யாதுகாரணம்பற்றியோ நடத்தப்பட்ட கூட்டம் அவர்கள்

எண்ணுவதுபோல், பரதஜன சமூகத்துக்கும் ஓர் பொதுவான தாய்க்கூட்டமல்லவென்று தீர்மானித்தார்கள். ஷை தீர்மானத்தை யாவரும் மனப்பூரணமாய் அங்கீகரித்து முறையே பலவூர்களிலுமுள்ளவர்கள் ஒருவர் பின்னொருவராய் ஆமோதித்து ஆதரித்தனர். இரண்டாவதாக தூத்துக்குடி ஸ்ரீமான், யம், எ, பீரீஸ் அவர்கள் குலாபிமானத்தைப்பற்றி இனிய நடையிற் பிரசங்கித்து, தூத்துக்குடி பரத காண்பரன்ஸின் தப்பு மார்க்கத்தையும் பரதவர் ஒவ்வொருவரும் கண்டுபிடித்து உண்மையைப் பின்பற்றுவதற்கு இக்கூட்டத்தில் நடைபெற்ற விஷயங்களை அச்சிடுவித்துப் பிரசுரப்படுத்தவும், அவைகளை மேல்பார்வையிடுவதற்கு தனியான ஓர் கமிட்டியையும் தீர்மானித்தார்கள். இவ்விரண்டு தீர்மானங்களும், முறையே ஆமோதித்து ஆதரிக்கப்பட்டன. மூன்றாவதாக தூத்துக்குடி ஸ்ரீமான், விக்டர் பரணாந்து B. A., அவர்கள் கல்வியின் விசேஷத்தையும் அதனால் ஜனசமூகங்கள் விர்த்தியாகக்கூடிய வழிகளையும் அநேக ஆதாரங்களுடன் மாதுர்யமாய்ப் பிரசங்கித்துப், பரதகுலமாணவர்கள் கல்வி கற்றுக்கொள்வதற்கு அத்தியாவசியமான சிறந்த அனுபவ முறைகளையும், அம்முறைகளை நிர்வகிப்பதற்கு ஓர் பெரிய கமிட்டியையும் தீர்மானித்தார்கள். இவைகளும் சர்வஜன சம்மதமாய் ஆமோதித்து ஆதரிக்கப்பெற்றன. நான்காவதாக, வேம்பார் ஸ்ரீமான், S. S. வாஸ் அவர்கள், பரதகுலத்தாரின் சீர்திருத்த சம்பந்தங்களைப்பற்றி விரிவாகப்பேசிக் கல்வி சம்பந்தமாகப் பூரா அக்கறை பாராட்டுவதற்குத் தென் இந்திய கத்தோலிக்க சங்கத்தின் ஆதரணையைப் பெறவேண்டுவது அவசியமாகத் தெரிகிறபடியால் இக்கொழும்பிலும் ஷை தென்னிந்திய கத்தோலிக் கிளைச்சங்கமொன்று ஸ்தாபிக்கவும், அதற்கோர் கமிட்டியாரையும் தீர்மானித்தனர். முறையே அங்கீகரித்து ஆமோதிக்கப்பெற்றன. முடிவாக, அக்ராஸனாதிபதியவர்கள் ஜனசமூகமென்றால் என்ன வென்பதையும், அதன் சரியான ஒருமை, செல்வாக்கு முதலியவைகளைப் பற்றியும் நெடுநேரம் பேசி சபாஜனங்களைக் குதூஹலிக்கச்செய்த பின்னர், பெரியோர்களால் யாவர்க்கும் வர்த்தன மளிக்கப்பெற்று தேச கீதத்துடனும் வேத கீதத்துடனும் சபை கலைந்தது.

சுபம்.

## கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

தூத்துக்குடியில் சென்ற டிசம்பர்மீ 24உ "முதல் பரதர் காண்பரென்ஸ்" என்று சொல்லப்பட்டதாகக் கூடிய கூட்டத்தைக் கண்டித்து இலங்கையில் வாசம்பண்ணும் பரதர்கள் பல ஊர்வாசிகளும் ஏறக்குறைய 500-பேர் கொழும்பில் நாளது ஜனவரிமீ 23உ கூடிய ஒரு பெரிய கூட்டத்தில் நம் கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் கிளைச்சங்கம் ஒன்று அவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பதாக ஒரு பிரேரேபனை கொண்டுவரப்பட்டு நிறைவேறினதை அறிந்து மிகவும் ஆனந்திக்கிறேன்.

எல்லாம் வல்ல கடவுள் இத்தாய்ச்சங்கம் இன்னும் கிளைத்துப் பலத்துத் தழைத்தோங்கும்படி கிருபை செய்வாராக.

நன்மை விரும்பி.

["அர்ச். தனிஸ்லாஸின் சரித்திரசுருக்கம்" என்னும் தலைப்பெயரிட்ட விலாசம், அடுத்தமாத பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.—ப. ர.

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

**யூதர்கள்.**—தற்காலம் யுத்தம் நடைபெற்றுவரும் பிராந்தியங்களில் ஏறக்குறைய 40 இலட்சம் யூதர்கள் வசித்து வருகின்றனர். நேசப்படையாருக்கு ஜெயமுண்டானால் இவர்களுக்கு நன்மை யுண்டாகுமாம்.

**மனந்திரும்பல்.**—"கத்தோலிக்கு டிராக்டரி" என்னும் புத்தகத்தில் கண்டிருக்கிற கணக்கின்படி 1914-ம் ஆண்டில் மனந்திரும்பின புரோடஸ்டாண்டாரின் தொகை 7,184; 1915-ம் வருஷத்தில் மனந்திரும்பினவர்கள் 9,034 பேர். இரக்கம் நிறைந்த சர்வேசுரன் இன்னும் ஏராளமான பேர் மனந்திரும்பி கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர கிருபை புரிவாராக.

**ஒரு மகனீய நன்கொடை.**—நிகழும் யுத்தத்தினால் நிர்வாகமற்று நிர்ப்பாக்கிய நிலைமையாயிருக்கும் பெல்ஜிய தேசத்தாருக்கு உதவியாக அமெரிக்காவிலுள்ள சீமான் ஒருவர் 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் அனுப்பியிருக்கிறாராம். அதிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ 30 கொடுக்கும்படியாகவும் பணம் அனுப்பியிருக்கிறார்.

**இரண்டு கோடி தங்க நாணயங்கள்.**—சென்ற அநேக மாதங்களாக தங்களுக்கு இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட இரண்டு கோடி தங்க நாணயங்களை அமெரிக்காவின் ஐக்கிய நாகாணத்தரர் உருக்கி ஒரே கட்டியாய் வார்க்கிறார்களாம். அந்தக் கட்டியின் நீளம் 11 அடியும், அகலம் 6 அடியும், உயரம் 6 அடியுமாம். அதன் எடையோ 200 டன்னும்.

**இது எம்மட்டும் உண்மையோ?**-பாப்பரசருடைய நாடுகள் அவருக்கு மறுபடி கொடுக்கப்படுமென்றும், சுலுத்தானுடைய அனுமதியின்பேரில் கானான்தேச பரிசுத்த நாட்டிலே பாப்பரசரின் அரசு ஸ்தாபிக்கப்படுமென்றும், ஜெருசலேமும் மற்ற பரிசுத்த ஸ்தலங்களும், யப்பா என்னுந் துறைமுகமும் அவருக்குக் கொடுக்கப்படுமென்றும் ஜர்மனிய சக்கரவர்த்தி சொல்லியிருக்கிறதாக ஒரு பத்திரிகை கூறுகின்றது.

**ஓர் தாயும் மகளும்.**—இவர்களிருவரும் ஒருநாள் சார்டீன் மீன் அடங்கியுள்ள தகரடப்பி ஒன்றைத் திறந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது தாய் தன் மகளைப் பார்த்து "இந்தச் சிறுமீன்களைச் சில தருணங்களில் பெரிய மீன்கள் விழுங்கி விடுவதுண்டு" என்றாள். இதைக் கேட்ட சிறுமி தான் சாப்பிடு மீன்களைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு "அம்மா இந்த மீன்களைத் தின்ன பெரிய மீன்கள் எப்படித் தகரடப்பியைத் திறக்கும்?" என்று கேட்டாளாம்.

**பாவம் இன்னதென்று நாங்களறியோம்!**—பதித பாதிரியார் ஒருவர் ஒரு விசாரணையிலிருந்து இன்னொரு விசாரணைக்கு மாற்றப்பட்ட சில நாட்களுக்குப்பின் அவ்விடத்தில் பாவத்தைப்பற்றி ஓர் பிரசங்கம் செய்தார். பிரசங்கம் முடிந்தவுடன் தன் பிரசங்கம் எப்படியிருந்ததென்று அங்கிருந்தவர்களைக் கேட்கவே, அவர்களில் ஒரு கிழவி "ஐயா, தாங்கள் இந்த விசாரணைக்கு வருகிற வரையில் பாவம் இன்னதென்று நாங்கள் அறியோம்!" என்றாளாம். இவள் எந்தக் காரணத்தை முன்னிட்டு இந்த மறுமொழி கொடுத்தாளோ நாம் அறியோம். இது பாதிரியாருடைய புகழ்ச்சிக்கோ அல்லது இகழ்ச்சிக்கோ?

**காகிதக்கயிறு.**—யுத்தத்தில் தற்போது கயிறு கிடைப்பது அரிதாய்விட்டதாம். கயிற்றுக்குப் பதிலாய் வேறெதையும் உபயோகித்துக்கொள்ள சௌகரியப்படாமற்போக, கடைசியாக இஞ்சினீர் ஒருவர் சாதாரண கடுதாசியினால் கயிறு செய்ய ஒரு வழிகண்டுபிடித்திருக்கிறார். இக்கயிறானது தோற்றத்தில் டுவைன் கயிறு போலவேயிருக்கிறதுமல்லாமல், எவ்விதமான வேலைக்கும் உபயோகப்படுகிறதாம். அக்கயிறானது ஒரே மாதிரியான பருமனில் இப்போது செய்யப்படுகிறதென்றும் இன்னுங் கொஞ்சகாலத்துக்குள் வெவ்வேறு பருமனிலும் செய்யப்படுமென்றும் சொல்லப்படுகிறது. ஆபத்திலும் அவசரத்திலும் எதையும் யுக்தியாக உதவிக்கொள்ள வழியும் வகையுமுண்டாகிறதல்லவா?

**கைக்கெட்டினது வாய்க்கு எட்டவில்லை.** மலையாளத்தில் ஓர் கான்ஸ்டேபிளுக்கு ரூ. 12-6-4 சன்மானம் கொடுக்கும்படி சென்னை கவர்ன்மெண்டார் சாங்க்ஷன் செய்திருந்தார்கள். சாங்க்ஷன் உத்திரவும் கொடுக்கப்பட்டு விட்டது. இப்படி இருக்கையில், யாருடைய தவறுதலினாலோ, அக்கான்ஸ்டேபிளுக்கு மலையாளம் லோகல் கஜானா ஆபீசிலிருந்து ரூ 1,264 கொடுக்கப்பட்டாயிற்று. கவர்ன்மெண்டார் அதைப்பற்றி விசாரித்துப் பரிசீலனை செய்ததில், அவனுக்குச் சேரவேண்டியது ரூ 12-6-4-தான் என்று தெரியவந்ததாம். ஆகவே, அக்கான்ஸ்டேபிள் தான் வாங்கின 1,264 ரூபாயிலிருந்து, ரு 12-6-4 ஐ போக மீதி ரூ 1251-9-8-ஐயும் சர்க்காருக்கு வாபீஸ் செய்யவேண்டியதாய் நேர்ந்ததாம்.

**ஜான்னி என்னும் சிறுவன்.**—ஆறுவயதுள்ள இச்சிறுவனை அவனுடைய தாயார் பள்ளிக்கூடத்துக்கனுப்ப உடுத்திக்கொண்டிருந்தாள். இவன் தன்னுடைய சட்டையெல்லாங் கிழிந்து கந்தையாயிருப்பதைப் பற்றித் தன் தாயை நோக்கி: "அம்மா, என்ன! அப்பா அவ்வளவு ஏழையா? அவர் கையில் இருப்பு ஒன்றுமில்லையோ?" என்று

கேட்க, தாயானவள் "ஏன் இல்லை? இருக்கிறது; அவர் உன்னை இரண்டு இலட்சத்துக்கும், என்னை இரண்டு இலட்சத்துக்கும், கைக்குழந்தையை ஒரு இலட்சத்துக்கும் மதித்திருக்கிறார்" என்றாள். இதைக் கேட்ட சிறுவன் தனக்குள் சற்றுநேரம் யோசனையாயிருந்துவிட்டு "அம்மா! அப்படியானால், நீங்கள் தகப்பனாரிடஞ் சொல்லி குழந்தையை விற்று நாமிருவரு மணிந்துகொள்ள நல்ல ஆடை ஆபரணங்களை வாங்கிக் கொடுக்கச் செய்யுங்கள்" என்றானாம்!!

**ஓர் கிழ மாணாக்கி.**—அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்த ஐக்கிய மாகாணத்திலுள்ள விஸ்கோன்சின் சர்வகலாசாலையில் 83 பிராயமுள்ள ஒரு கிழவி கல்வி கற்றுவருகின்றனளாம். என்னை இக்கிழவிக்குள்ள கல்விப்பிரியம்! கேட்பதற்கு இது விந்தையாயிருப்பினும், நம் கத்தோலிக் மாணாக்கர்களுக்கு இதோர் நல்ல பாடமாமே. கல்வியின்பேரில் இப்பேர்ப்பட்ட அபிலாஷை நம் கத்தோலிக் மாணாக்கர்களுக்கு மிருக்குமானால், இவர்களுக்குள் எத்தனையோ பெயர் உயர்தரக் கல்வியில் தேர்ச்சியடைந்து உயர்ந்த உத்தியோகம் வகிக்க அருகராவது மல்லாமல், உத்தம கிறீஸ்துவர்களாய் ஒழுகுவார்களானால், சத்திய திருச்சபையின் பிரிய மக்களாயு மிருந்து அநேக ஆத்துமாக்கள் கடைத்தேறக் காரணமாவார்களல்லவா? காரிய மிப்படியாயிருக்கக்கொள்ள, இவர்களுடைய தற்கால நிலைமையைப் பார்த்தால், இவர்களுக்குள் அநேகர் ஸ்கூல் பைனல் பரீட்சையில் தேறுவதே பெருந் திண்டாட்டத்தி லிருக்கிறது!!.

**அர்ச். ஞானப்பிரகாச இராசா.**-பிரான்சு தேசத்தை அரசாண்டவரும் 13-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவுக்கு ஓர் மகிமையாகச் சிறந்து விளங்கினவருமான இவர் தாம் தொடங்கும் ஒவ்வொரு இராஜாங்க அலுவலுக்கு முந்தி மாத்திரமல்ல, இன்னும் நம்முடைய மற்ற எல்லா அலுவலுக்கு முந்தியும் சிலுவை அடையாளம் வரைந்துகொள்ளும் வழக்கமுடையவராயிருந்தார். இவ்வழக்கம் இவரிடத்திலன்பாக இவரைப் பெற்றெடுத்து, அன்பாய் வளர்த்துவந்த இவருடைய அருமை தாயாரே காரணம். தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்னும் பழமொழிக்கொப்ப பிள்ளைகளிடத்தில் சிறுவயதில் படியும் வழக்கப் பழக்கங்களே அவர்களிடத்தில் கடைசி மட்டும் குடிகொண்டிருக்கும். ஆகவே, அர்ச். ஞானப்பிரகாச இராசவின் நல்ல தாயைப்போல் நம் கத்தோலிக்க தாய் மார்களும் தங்கள் பிள்ளைகளிடத்தில் தேவபயமும் நல்லொழுக்கமும் உண்டாக கவலை கொள்ளவேண்டிய தல்லவா? தங்கள் பிள்ளைகளுடைய ஒழுங்கீனத்துக்கும் விசுவாசமின்மைக்கும் பெற்றோர் பழிசுமத்தப்படுவார்கள்.

**பேர்போன ஓர் புரளிக்காரன்.**—யுத்த ஆரம்பத்திலிருந்து பரிசுத்த பாப்பவர்கள் பேரில் எத்தனையோ அபாண்டங்களெல்லாஞ் சொல்லப்பட்டன. அப்படியே, இப்போதும் ஓர் புரளிக்காரன் கிளம்பி ஓர் பொய் வதந்தியைக் கட்டிவிட்டிருக்கிறான். அதென்னவெனில்: இப்போது அர்ச். இராயப்பர் சிம்மாசனத்திலிருந்தரசாளும் பாப்பானவர் பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் அல்லவென்றும், அவர் பிரான்சுக்காரருக்குச் சனுகாயிருக்கிறாரென்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, ஜெர்மன் சக்கரவர்த்தியின் கட்டளைப்படிக்கு இப்போது ஓர் சந்நியாச மடத்தில் கைதியாக வைக்கப்பட்டிருக்கிறாரென்றும், இவருடைய சாயலுள்ள ஒரு இஸ்பானிய குருவானவரைக் கர்தினால்மார்கள் பாப்புஸ்தானத்துக்குத் தெரிந்துகொண்டிருக்கிறார்களென்றும் ஓர் பிரான்சு பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறானாம். பசாசைப் பொய்க்குத் தகப்பனென்றால் இப்புரளிக்காரனைப் பேய்க்குத் தகப்பனென்று சொல்லுவதில் சந்தேகமில்லை. பிரான்சு தேசத்தில் இப்புரளி வார்த்தைக்குச் சிலர் காது கொடுத்து மிருக்கிறார்களாம். சண்டை தொடங்கின காலத்தில் இருந்த சூரியனல்ல இப்போது பிரகாசிப்பது; வேறொரு சூரியன் பிரகாசிக்கிறதென்றாலும் இவர்கள் நம்புவார்கள்போலும்.

**ஓர் சிறுவனும் பெட்டைக்கோழியும்.**—இங்கிலாந்தின் வடமாகாணத்திலுள்ள போலீஸ் கோர்ட் ஒன்றில், தன் அண்டை வீட்டாருக்குச் சொந்தமான ஒரு பெட்டைக்கோழியைத் திருடிக்கொண்டதாகச்



சிறுவன் ஒருவன் குற்றஞ் சாட்டப்பட்டான். குற்ற விசாரணையில், பிள்ளையாண்டான் தன் வீட்டுப் புறக்கடை வாசற்படி தற்செயலாய்த் திறந்திருக்க கோழி வீட்டுக்குள் புகுந்து, நிலக்கரி கிடங்கிற் பதுங்கிக்கொண்டதைத் தான் பார்த்தானே யன்றி அதைத் திருடவில்லையென்றான். அதற்கு,

ஜட்ஜ்.-அந்தக் கோழி உன் அண்டை வீட்டாருடையதென்று உனக்குத் தெரியுமா?

சிறுவன்.—நன்றாய்த் தெரியும், தரும துரைகளே,

ஜட்ஜ்.-அப்படியென்றால்,ஏன் அதை சொந்தக்காரருக்குக் கொடுத்துவிடவில்லை?

சிறுவன்.—கொடுத்துவிடத்தா னிருந்தேன், துரைகளே.

ஜட்ஜ்.—ஏன் உடனே கொடுத்துவிடவில்லை?

சிறுவன்.—முட்டை யெல்லாம் விட்ட பிறகு கோழியைக் கொடுத்துவிடலாமென்றிருந்தேன், என்றானாம்!!

**"அல்லது" என்னும் தமிழ்ப் பதத்துக்குச்சரியான இத்தாலிய பதம்:**—இத்தாலிய தேசத்திலிருந்த பெரிய வியாபாரி ஒருவருக்கு ஏஜெண்டாக ஒருவர் இந்தியாவில் இருந்துவந்தார். அந்த வியாபாரியின் மனைவிக்கு நாய், பூனை, பெட்டைக்கோழி போன்ற சிறிய பிராணிகளை வளர்ப்பதில் பிரிய மதிகமாம். ஆகவே, தனக்கு இந்தியாவிலிருந்து 1 அல்லது 2 குரங்குக்குட்டிகளை அனுப்பும்படி அந்த ஏஜெண்டுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ள வேண்டுமெனத் தன்னுடைய கணவனை வேண்டினாள். "அல்லது" என்ற பதத்துக்கு "o" என்ற இத்தாலிய பதந்தான் சரியான சொல்லாம். அவ்வாறே அந்த இத்தாலிய வியாபாரி தமக்கு '1 o 2' குரங்குக்குட்டிகள் அனுப்பவேண்டுமென தமது ஏஜெண்டுக்குத் தந்தி கொடுத்தார். தந்தியைப் பார்த்த ஏஜெண்டு '102' (நூற்றிரண்டு) குரங்குகள் தேவையென எழுதப்பட்டிருப்பதாக உணர்ந்து, தந்திவந்த கொஞ்ச தினங்களுக் கப்பால் இத்தாலிக்குப் புறப்பட்ட ஓர் கப்பலில் 50 குரங்குகளை ஏற்றிவிட்டு அத்துடன் அவ்வியாபாரிக்கு அடியிற்கண்டபடி "இந்தக் கப்பலில் 50 குரங்குகள்தான் ஏற்றப்பட்டிருக்கின்றன. பாக்கி குரங்குகள் பிடிக்கப்பட்டவுடன் அனுப்பப்படும்."—என்ற நோட்டீசையும் அனுப்பினாராம்! இதைப் பார்த்த அவ் வியாபாரி குலுங்கக் குலுங்க நகைத்து ஆச்சரிய முற்றாராம்!

**ஓர் புராதனக்கோவில்.**—மைலாப்பூர் மேற்றிராசனக் கோவிலுக்கு ஓர் மைல் தூரத்தில் காட்டுக்கோவிலென் றழைக்கப்படும் பிரகாசி மாதாவின் ஆலயமொன்றுண்டு. இவ்வாலயமானது நம்முடைய முன்னோருக்குச் சத்தியவேதத்தைப் போதிக்க பொர்த்துக்காலிலிருந்து 1500-ம் ஆண்டு புறப்பட்டுவந்த அர்ச். பிரான்சீஸ்கு சபைக் குருக்களால் 1516-ம் ஆண்டில் கட்டப்பட்டது. ஆகவே, நம் தென்னிந்தியாவின் கண் உள்ள கோவில்களெல்லாவற்றிலும் இதுவே அதிக புராதனமானது போலும். ஏனெனில், இக்கோவில் கட்டப்பட்டு இப்போது 400 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இது ஓர் அரிய சம்பவமென எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இச்சம்பவத்தை ஷை கோவில் பங்கு கிறீஸ்துவர்கள் மாத்திரமல்ல, தென்னிந்தியாவிலுள்ள சகல கிறீஸ்துவர்களும் கொண்டாடவேண்டியதல்லவா? ஆனபடியால், ஷை கோவில் விசாரணை குருவாகிய சங். மோத்தா வாஸ் சுவாமிகள் இதன் 400-ம் வருஷத்திய ஜூபிலி மகோற்சவத்தை இவ் வருஷம் ஆகஸ்டுமீ 6உ கொண்டாட உத்தேசித்திருக்கிறார். இவருடைய இந்தச் சுகிர்த கருத்து நிறைவேறுமாறு நம்முடைய சந்தாதாரர்களெல்லோரும் ஒரு சிறு பிரயாசைப்படக் கேட்டுக்கொள்ளுகிறோம். அதாவது: ஜூபிலி கொண்டாட்டத்துக்காகத் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யவேண்டுமென்பதே. உங்களுக்குக் கொடுக்க இஷ்டமான தொகையை நீங்களே அவருடைய பின் வரும் விலாசத்துக்கு அனுப்பிக்கொள்ளவும்: சங். மோத்தா வாஸ், காட்டுக்கோவில், மைலாப்பூர், சென்னை.

**ஓர் ஓட்டல் காரியின் சமர்த்து.**—பேர்போனவான சாஸ்திரியாகிய காலஞ்சென்ற சர் ராபர்ட் பால் என்றவர் தம்முடைய சிநேகிதர்களோடு ஒருநாள் ஓட்டல்

ஒன்றில் சாப்பிடப்போனார். இவர்களெல்லோரும் சாப்பிட்டான பிறகு, அந்த ஓட்டல்காரி தனக்குச் சேரவேண்டிய சாப்பாட்டுப் பணத்தைத் தனக்குக் கொடுக்கும்படி அவர்களிடங் கேட்டபோது, ஷிவான சாஸ்திரி அவளை நோக்கி "வான சாஸ்திர விஷயமாய் நான் உமக்கு ஓர் பாடம் சொல்லிவைக்கப் போகிறேன். அதென்னவெனில்: இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் வருடங்களுக் கொருமுறை இவ் வுலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் தன் தன் பழய நிலைமைக்கு வந்துவிடும். ஆகையால் இப்போது இங்கிருக்கிற நாங்களும் இங்கேயே சாப்பிடவருவோம். அப்போது உமக்குச் சேரவேண்டிய இந்தப் பணத்தைச் செலுத்திப் போடுவோம். அதுவரையிலும் அதை எங்களுடைய பாக்கியாக தாக்கல் செய்துகொள்ளச் சம்மதந்தானோ? வென்று கேட்க, அதற்கு ஓட்டல்காரி "அப்படியானால், நீங்கள் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் வருடங்களுக்கு முன் இவ்விடத்தில் வந்து சாப்பிட்டதற்கு இன்னும் பணங்கொடுக்கவில்லையே. அந்தத் தொகையை நீங்கள் இப்போது செலுத்திவிடுங்கள். இப்போது சாப்பிட்டதற்கு இன்னும் இரண்டுகோடியே ஐம்பது இலட்சம் வருஷம் பொறுத்து எனக்குக் கொடுத்துக்கொள்ளலாம்" என்றாளாம்.

**காலஞ்சென்ற இரு குருமார்கள்.**-நமது சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த செல்லம்பட்டடையில் விசாரணை குருவாயிருந்த சங். அலூஷியஸ் (*Fr. P. M. Aloysius*) சுவாமியாரவர்கள் கடந்த டிசம்பர்மீ 30உ சென்னை, புதுப்பேட்டையில் தேகவியோகமான சங்கதியை மிக்க விசனத்துடன் நம்முடைய "நல்லாயன்" சந்தாதாரர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம். இவர் புதுவை குரு மடத்தில் வேத சாஸ்திரங்களை நன்றாய்க் கற்றறிந்து, காலஞ்சென்ற சென்னை அதிமேற்றிராணியாரான ஜோசேப் கால்நன் ஆண்டவரவர்களால் குருப்பட்டம் கொடுக்கப்பெற்று, சென்னை அதிமேற்றிராசனத்தில் பல பங்குகளில் 15-வருஷகாலம் மிக்க சாமர்த்தியமாயும் உற்சாகமாயும் விசாரணை செய்துவந்தார். ஓர் நல்ல பிரசங்கியுமென்று பேர் பெற்று விளங்கினார். தமக்குண்டாயிருந்த காச நோவால் மிக்கப் பீடிக்கப்பட்டபோதிலும் தெய்வச் சித்தத்துக் கமைந்து அதைப் பொறுமையாய்ச் சகித்துத் தம்முடைய 40-ம் பிராயத்தில் பாக்கியமான மரண மடைந்தார்.

மயிலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். பாயிஸ் (*Fr. G. F. Paes*) சுவாமியாரவர்களும் கோவையில் மரணமானாரென்று கேள்வியுற்று விசனிக்கிறோம். இவர் இந்தமேற்றிராசனத்தின் வயோதிப குருக்களில் ஒருவர். கடந்த 36 வருடங்களாக, அதாவது, 1880-ம் ௵த்திலிருந்து அம் மேற்றிராசனத்தின் பல விசாரணைகளில் மிக்க உற்சாகத்துடன் உழைத்து வந்தவர். கிறீஸ்துவர்கள் மட்டில் மிக்க அநுதாபமும் இரக்கமுமுள்ளவர். தம்முடைய அந்தியகாலத்தில் காட்டுக் கோவிலென்று அழைக்கப்படும் பிரகாசி மாதாக் கோவில் பங்குசுவாமியாராயிருந்துவந்தார். இவருக்குண்டான நோயின் நிமித்தம் மேற்றிராணியாருடைய அநுமதியின் பேரில் தம்முடைய சுயநாடான கோவைக்குக் கடந்த எப்பிரல் மாதஞ் சென்று, அவ்விடத்தில் சுகப்பட்டு வந்தார். ஆயினும் சென்ற ஜனவரிமீ 15உ இறந்துபோனாரென்று தெரிய வருகிறது. இவருக்கு பிராயம் 72. இவருக்கும் சங். அலூஷியஸ் சுவாமியாரவர்களுக்கும் நித்திய இளைப்பாற்றி உண்டாக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**யுத்தம் முடிவாகும் காலம்.**—மேனாட்டுப் பத்திரிகை ஒன்றில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது. பிரான்ஸ் தேசத்திலுள்ள மாண்டு மார்டிரி என்னும் குன்றின் மீது கிறீஸ்துவர்கள் கோவிலொன்றுண்டு. தெய்வ பக்தியுள்ள சில மனிதர்கள் அக்குன்றின்மீதேறி அங்குள்ள கோவிலைச் சந்திக்கப்போயினர். போகும்பொழுது வழியிலே தள்ளாடித் தள்ளாடிப் போய்க்கொண்டிருந்த ஒரு வயதுசென்ற பெண்பிள்ளையைக் கண்டு அவளுக்கு உதவிசெய்து, அவளையும் குன்றின் மீது அழைத்துச் சென்றார்கள். அதனால் அந்த மனுஷி மிகவும் மனக்களிப்படைந்து நண்பர்களே, நீங்கள் எனக்குச் செய்த பேருதவிக்காக நான் உங்களுக்கு ஒரு நற்செய்தி சொல்லப் போகிறேன்; அது என்னவென்றால்: யுத்தம் எப்போது முடிவாகுமென்பதைப் பற்றியேயாகும், என்று சொன்னவுடனே, அவர்கள் அனைவரும் அடங்கா மகிழ்ச்சிகொண்டு யுத்தம் முடிவாகும் காலத்தைச் சொல்லுக என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனுஷி நண்பர்களே, இம்மகா யுத்தமானது பெப்ரவரி, மார்ச்சு மாதங்களுக்குள் முடிவாகும் என்று பதிலளித்தாள். இதை அவர்கள் நம்பவில்லை. அப்போது அந்த மனுஷி நண்பர்களே, நான் சொல்லுவதை நம்புவதற்கு ஆதாரமாக ஒரு செய்தியுண்டு. அது யாதெனில், நீங்கள் ஏறிவந்த வண்டிக்காரன் இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் மாண்டுபோவான் என்று உறுதி கூறினள். பின்பு சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தக் கிழவி போனவிடந் தெரியவில்லை. அப்பால் அவர்கள் குன்றை விட்டிறங்கி கீழே வந்து பார்க்கவே, தங்களை ஏற்றிவந்த வண்டிக்காரன் ஒரு கடையில் மாண்டுகிடப்பதைக் கண்டு அதிசயித்தார்களாம். யுத்த முடியுங் காலத்தைப்பற்றிய இச்சங்கதி யிப்படி யிருக்க, யுத்த நிபுணர்களும் இராஜாங்க மந்திரிகளும் ஐக்கிய கட்சியார் தேசங்களிலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களும் இந்த மகா யுத்தம் இவ் வருஷத்தில் முடிவாகிவிடுமென்று அபிப்பிராயப் படுகிறதாகத் தெரியவருகிறது. ஆயினும், அநேக கேடுபாடுகளை விளைவித்துவரும் இக் கொடிய யுத்தம் கூடிய சீக்கிரத்தி லொழிந்து சமாதானமுண்டாகக் கருணையங் கடவுள் கிருபை புரிவாராக.

**சென்னை ஐக்கோர்ட்டுத் தீர்மான மொன்று.**-வடக்கன் குளம் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களான பிள்ளைமாரும் முதலிமாரும், ஷெ ஊர் நாடார் கிறீஸ்துவர்கள் பேரிலும், வடக்கன் குளம் பங்கு சுவாமியார், திருச்சினாப்பள்ளி மேற்றிராணியார் இவர்கள் பேரிலும் திருநெல்வேலி சப்கோர்ட்டில் ஒரு சிவில் பிராது கொண்டுவந்திருந்தார்கள். அதாவது, வடக்கன் குளத்துக் கோவில் தென்பாகம் தங்களுக்குப் பிரத்தியேகமாய்ச் சொந்தமென்றும், தாங்களிருக்கும் பாகத்தில் சாணாரக் கிறீஸ்துவர்கள் பிரவேசிக்கப்படாதென்றும், தங்கள் பாகத்துக்கும் நாடார்கள் பாகத்துக்கும் மத்தியிலிருந்த கிராதியைத் திரும்பவுங் கட்டிக்கொடுக்கும்படிக்கு பங்குசுவாமியாருக்குக் கட்டளை யிடவேண்டுமென்றும் பிராது. மேலும் பங்குசுவாமியார் தங்களுக்குத் தவிர நாடார்மார்களுக்கு சிற்சில சடங்குகள் செய்யக்கூடாதென்றும்; உற்சவ ஊர்கோல காலங்களில் தங்களுக்கு முதன்மையானவிடம் இது முதலிய பூர்விக வழக்மாய் தாங்கள் அநுபவித்து வந்த சில பாத்தியதைகளை அநுபவிக்க அநுமதி கொடுக்க வேண்டுமென்றும் வாதித்தார்கள். கீழ்க்கோட்டில் வாதி தரப்பில் கோரிக்கொண்டபடி அநேக சுதந்தரங்களை சப் ஜட்ஜ் தீர்மானஞ் செய்தார். அப்பீலில் டிஸ்திரிக்டு ஜட்ஜ் இவ்வித பாத்தியதைகள் ஜாதி அநுஷ்டானத்திற்கு முற்றிலும் சம்பந்தப்பட்டவைகளென்றும், கிறீஸ்துவர்களுக்கு ஜாதியநுஷ்டான பாத்தியதைகள் கிடையாதென்றும், சிவில் கோர்ட்டார் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் பிரவேசிக்கக் கூடாதென்றும் தீர்மானித்து, அசல் பிராதை செலவு தொகையுடன் தள்ளிவிட்டார். டிஸ்திரிக்டு ஜட்ஜ் தீர்மானத்திற்கு விரோதமாய்ப் பிள்ளைமார்களும் முதலிமார்களும் ஐக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளவே, சென்ற ஜனவரிமீ 25உ ஐக்கோர்ட்டார் அடியில் கண்டபடி தீர்மானஞ் செய்தார்கள். கிறீஸ்துவர்களுடைய கோவிலில் ஜாதி வித்தியாசம், இடவித்தியாசம் இருக்கக்கூடாதென்றும், சட்டப் பிரகாரமும் ருசுப்பிரகாரமும் வேளாளர்கள் கோரும் பாத்தியதைகளுக்கு ஆதாரமேயில்லை யென்றும், இந்துக்களுடைய ஆலயங்களில் இந்து ஆராதனைக்காரர்கள் அநுசரிக்கும் ஜாதி பேத முறைகள் கிறீஸ்துவர்களுக்கு ஞாயப்பிரகாரம் சம்மந்தப்பட மாட்டாதென்றும் தீர்மானித்து, வேளாளர்கள் செய்த அப்பீலைச் செலவு சகிதத்துடன் தள்ளிவிட்டார்கள்.

**புதிய வைசிராயும், பழயவைசிராயும்.**—நமது தற்கால வைசிராயாகிய லார்ட் ஹார்டிஞ்சு இம்மாதம் 30-ந்தேதி டெல்லியை விட்டுப் புறப்பட்டு எப்ரல்மீ 1உ காலை பம்பாய் வந்து சேர்ந்து மாலையில் சீமைக்குப்போக கப்பலேறுவார். அன்றே புதிய வைசிராயாகிய லார்ட் சேம்ஸ்பர்ட் பம்பாய்வந் திறங்குவார்.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா**

ப. ர்..

### நன்மரண அறிக்கை.

#### சென்னை, தேவனாம்பேட்டை.

தேவனாம்பேட்டை நிவாசர்களாகிய Y. M. ஜான் பிள்ளை, M. யேசுதாஸ் பிள்ளை இவர்கள் சகோதரர் அ. மகிமைதாஸ் பிள்ளை தனது 24-ம் வயதில் கூடலூர் தாலுக்கா நெல்லிக்குப்பத்தில் 1916ஆ ஜனவரிமீ 27உ விடியற்காலை 4-மணிக்கு பரலோகபிராப்தி யடைந்தார். இவர் ஆத்துமநித்திய இளைப்பாற்றிக்காக நிகழும் பெப்பிரவரிமீ 17உ ஒப்பிஸ் பூசை சங்கை M. மோத்தவாஸ் குருசுவாமிகளால் சென்னை மையிலை காட்டுக்கோவில் என்றழைக்கப்பட்ட அர்ச். ஞானப்பிரகாசி மாதாவின் ஆலயத்தில் செய்விக்கப்பட்டது. பூசையில் நிறைவேற்றப்பட்ட துக்கத்துக்குரிய சடங்குகளை கண்ணுற்ற பந்துமித்திரர்களும், மற்றவர்களும் கண்ணீரோடு வீட்டுக்குத் திரும்பினர். அ. மகிமைதாஸ் பிள்ளை மரண சமயத்தில், மோட்சவாசல் திறந்திருக்கிறதாகவும், சேசுநாதசுவாமியோடு கன்னியாஸ்திரிமார்களும் குருவானவரும் தன்னை அழைத்துக்கொண்டுபோக வந்திருக்கிறதாகவும், விடியற்காலை 4-மணிக்கு தான் இவ்வுலகத்தைவிட்டுப் பிரிந்துபோகிறதாகவும் சமீபத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களிடம் சாட்சி பகர்ந்தார். இவர் ஜீவியத்தில் காணப்பட்ட அன்பு. சாந்தம் தெய்வ பக்தியின் அடையாளமாகப் பரலோக காட்சியை காணும்படியான பாக்கியம் பெற்றார். இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளும்படியாய்ப் பிரார்த்திக்கின்ற,

22-3-1916. } இப்படிக்கு,
M. யேசுதாஸ் பிள்ளை.

எனது அருமை மனைவி ஐ. செபஸ்தியம்மாள் நிமோனியாவென்ற விஷஜுரத்தால் பீடிக்கப்பட்டுப் பிப்ரவரிமீ 16உ புதன்கிழமை காலை 9-மணிக்கு அவஸ்தையும் ஆயத்தமும் பெற்றுக்கொண்டு தனது இரண்டு குழந்தைகளையும் பரதவிக்கவிட்டுப் பரமபதவியிற் சேர்ந்தனள். இவளுடைய ஆத்துமத்தைக்குறித்து வேண்டிக்கொள்ளவேணுமாய்க் கேட்டுக்கொள்ளும் தங்கள் நிற்பாக்கியன்,

V. A. ஆரோக்கியசாமி ஆசாரி,
V. A. சிலுவைமுத்து ஆசாரி அண்ட் பிரதர்ஸ்.

## எடப்பாடி, அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தருமம்

நண்பர்களே!

சென்ற வருஷம் நாம் அர்ச். செல்வநாயகி அம்மாள் கோவில் கட்டிட தர்மமென்று அறிக்கையிட்டு, செய்துகொண்ட எமது வேண்டுகோளுக் கிணங்கி, எமக்குதவிபுரிந்து, எமது கஷ்டநஷ்டங்களுக்குப் பங்காளிகளான உதார குணமுள்ள சகல கனதனவான்களுக்கும் சகல கிறிஸ்துவர்களுக்கும் எடப்பாடி நேயர்களுக்கும் அதிக நன்றியறிதலுடனும் விநயத்துடனும் வந்தனஞ் செலுத்துகிறோம்.

1914-ஆ எப்ரல் மாத முதல் 1915-ஆ மார்ச்மீ 31உ வரையில் நேயர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபாய் 193-2-0. சென்ற பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக சாவடி சத்திரங்களை முடிவாக்கவும், விசாரணை குரு வசிக்கும் பங்களாவை மராமத்துச் செய்யவும், கோவில் கட்டிட விர்த்தியைப் பூர்த்திக்குக்கொண்டுவரவும் செலவான தொகை ரூபாய் 2620-8-4. இவ்விஷயமாய்த் தற்காலம் நமக்கு ஏற்பட்டிருக்கும் கடன் ரூபா 738.

நண்பர்களே! தேவதாயின் பராமரிப்பாலும் உங்களுடைய விசேஷ உதவியாலும் நாம் தைரியத்தோடு துவக்கின சாவடி சத்திரங்கள் முடிவிற்கு வந்தன. ஆகிலும், பழைய சத்திரங்களை மராமத்துசெய்யப் போதுமான பணமில்லாமையால் அவ்வேலைகளை நிறுத்தவேண்டி நேரிட்டதைப் பற்றி விசனிக்கிறோம். தர்ம சிந்தையுள்ள அர்ச். நாயகியின் ஊழியர்கள் சகலமும் முடிவிற்கு வருமளவும் எமக்குத் தகுந்த பொருளுதவி புரிவார்களென்பது எமக்குள்ள நம்பிக்கை. அவளது மகிமைக்காக கடனுளியானேம் என்பதைச் சிந்தித்து எமது பேரில் இரக்கம் புரிவார்களென்பது திண்ணம். நண்பர்களின் தர்மம் எவ்வளவு சிறியதேயாயினும் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அர்ச். செல்வநாயகி அம்மாளும் தமது செல்வத்தை அவர்கள் பேரில் பூரணமாய்ப் பொழியக் கிருபை செய்ய வேணுமென்பது எமது பிரதிதின வேண்டுகோள்.

இப்படிக்கு,
எடப்பாடி. அர்ச். செல்வநாயகி அம்மாளின் ஊழியனாகிய, விசாரணைக் குரு
ஜே. ஞானதிக்கம்.

ஷை தருமத்துக்காக வரவேற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற தொகை 889 ரூ.



## தருமகுண நண்பருக்கு ஓர் விண்ணப்பம்.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சூளையில், 30-வருடத்துக்கு முன் சுதேச பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து, அநாத பிள்ளைகளை ஆதரித்துச் சிறு குழந்தைகளை வளர்த்து, சகல கிறிஸ்துவர்களுக்காக வேண்டிக்கொண்டுவர அர்ச். ஐந்துகாய பிரான்சீஸ்கு என்பவரின் மூன்றும் சபை சுதேச கன்னியர் மடம் ஒன்று ஸ்தாபகமானது.

அம்மடத்தைத் தற்போது விஸ்தரித்துக் கட்டவேண்டுமென அதிமேற்றிராணியார் உத்தரவளித்தார். தருமமெடுத்து கன்னியருக்கான கட்டிடத்தைக் கட்டினோமாயினும் பூச்சு வேலையும், கதவு ஜன்னல்கள் வேலையும் முடிவுபெறாது வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அநாத பிள்ளைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த சாலை 1914ஆ நவம்பர் மாதம் 7உ நடு இரவில், இவ்விடம் பெய்த அகோர மழையால் சுவர்கள் நனைந்து பாதி வீடு இடிந்து விழுந்து, சமான்களெல்லாம் பொடிப் பொடியாய் நொறுங்கிப்போயின. எமது மடத்தின் பாதுகாவலரான அர்ச். சூசைப்பருடைய அற்புத சகாயத்தால் மேற்கூறை விழுமுன் திடீரெனப் பிள்ளைகள் எழுப்பிவிடப்பட்டு, அகால மரணத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். பிதாப் பிதாவான அர்ச். சூசையப்பருக்குச் சதா நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம்.

இருக்க இடமின்றி தவிக்கும் ஏழை அநாத பிள்ளைகள் மட்டில் மனமிரங்கி உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். உங்கள் நன்றிக்குக் கைம்மாறாக உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் ஆத்தும சரீரங்களுக்காக நாமும் சகோதரிகளும் அநாத பிள்ளைகளும் மறவாமல் நாடோறும் வேண்டிக்கொண்டு வருவோம். நல்லாயன் சந்தாதாரர் கொஞ்சம் தருமம் அனுப்புவார்களாக.

**S. Jos. Balasami,**
*St. Adrew's Church, Choolai P. O., Madras.*

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| எற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை | 212 | 1 | 0 |
| மரியம்மாள், (இரங்கூன்) | 10 | 0 | 0 |
| சயத்தான் வில்வராயர், (தூத்துக்குடி) | 10 | 0 | 0 |
| பெர்நாந்தோ | 5 | 0 | 0 |
| ரோசாரியோ பெர்நாந்தோ | 3 | 0 | 0 |
| ஆக மொத்தம். | 240 | 1 | 0 |

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌண்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய். அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக்கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந்தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 3861-11-6. ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத்தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ் வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன்வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகக் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறும் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந்தொகையாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப்பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள
ரங். அநுாப்பநாத சுவாமிகள்,
அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,861 | 11 | 6 |
| ஓர் நன்கொடை | 20 | 2 | 0 |
| Mr. அநந்தநாத பிள்ளை | 1 | 0 | 0 |
| Mr. James Pereira (Etyantota) | 5 | 0 | 0 |
| Dr. M. Gnanadicam (Bangalore) | 2 | 0 | 0 |
| Mr, A. C. Fernandez (Madura) | 2 | 0 | 0 |
| ஆக மொத்தம். | 3,891 | 13 | 6 |

## ரோஷா நகரத்துக் கோவில்கட்டிட தருமம்.

நண்பர்களே, சென்னைக்கு வடக்கே ஆரம்பாக்கம் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு
9-மைல் தூரத்தில் ரோஷாநகரமென்னும் ஓர் சிற்றூர் உண்டு. இவ்வூரிலும் இதைச் சுற்றிலுமுள்ள
ஊர்களிலும் சென்ற 10 வருஷங்களுக்குள் ஞானஸ்நானம் பெற்ற 1000-புது கிறிஸ்துவர்களிருக்
கிறார்கள். இவர்களுக்கு ஓர் தகுதியான கோவிலில்லை. அவசரத்தின் நிமித்தம் கட்டப்பட்டி
ருந்த குச்சுக் கோவில் இடிந்து விழுந்துவிட்டது. ஆனதுபற்றி, புதுக்கோவில் ஒன்று கட்டத் தீர்
மானித்து வேலையைத் தொடங்கிவிட்டோம். மூன்றடி வரையிலும் சுவர் எழும்பி விட்டது.
இதற்காக இதுவரையிலும் பிடித்த செலவு ரூ. 600. பூர்த்தியாய்க் கோவில் கட்டிமுடிக்க 4000 ரூ.
பிடிக்குமென மதிப்பிடப்படுகிறது. ஆகவே "நல்ல ஆயன்" சந்தாதாரர்கள் எமக்குக் கை
கொடுத்து உதவுவார்களென நம்பி இந்த மனு செய்துகொள்ளுகிறோம். "ஆயிர மாதாணி அறு
பத்திரண்டரை" என்பதுபோல் ஒவ்வொருவரும் கொஞ்சங் கொடுத்து உதவுவார்களே யாகில்
இப்புது கிறீஸ்துவர்களுடைய பேருபகாரிகளாகி, தேவாசீரைப் பெற்றுக்கொள்ளுவார்களென்பதே
திண்ணம்.

Fr. KOPERDRAAD,

விசாரணை குரு, ரோஷாநகரம், சத்தியவேடு

---

## ஓர் வேலைக்காரி தேவை.

கவர்ன்மெண்டு சப் அசிஸ்டெண்டு சேர்ஜனும் வேளாளருமான ஒருவருடைய வீட்டுக்கு
வேலைக்காரி தேவை. வீட்டிலுள்ளவர்கள் மூன்று பேரே. தன் காலமெல்லாம் சம்பளமின்றி
பணிவிடைசெய்யப் பிரியப்பட்டவளும், 20 வயதுக்கு மேற்பட்டவளும் 35 வயதுக்குட்பட்டவ
ளும், நன்னடத்தையுந் திரேக சௌக்கிய முள்ளவளுமான ஆதரவற்ற ஓர் கைம்பெண் அல்லது
கலியாணம் இல்லாதவள் வேண்டியது. இவளும் குடும்பத்தில் ஒருவளாகப் பாவிக்கப்பட்டு பட்ச
பாமரிப்போடு ஆதரிக்கப்படுவாள். பஞ்சமர் வேண்டியதில்லை. பிரியமுள்ளவள் சென்னை, பிராட்
வே "நல்லாயன்" அச்சியந்திரச்சாலை மானேஜர் வழியாக "ஆவே மரியா" வுக்கு எழுதிக்கொள்ள
வும்.

---

திருக்குடும்பத் துணை.

## தேம்பாவணி விருத்தியுரை.

### வெகுநயம்.

குறைந்த விலை!

### வெகுநயம்.

குறைந்த விலை!!

☞ இப்புத்தக மிருக்கும் ஒவ்வொரு வீட்டிலேயும் தேவாசீர் பெருகுமென்பது ஆன்றோர்
வாக்கு. திருக்குடும்ப சரித்திரமென்னுந் தேம்பாவணி விருத்தியுரை முன் 5-ரூபாய்களுக்கு விற்
கப்பட்டு இப்போது குறைந்த விலையாகிய 3-ரூபாய்களுக்கு விற்கப்படுகிறது. இது அதிக சங்கை
தங்கிய வரப்பிரசாத ஆர்ச்பிஷப்பெனும் அதிமேற்றிராணியாரான குசை கால்கன் ஆண்டவரவர்
கள் உத்தரவினாலும் அநேக குருப்பிரசாதிகளின் அபிப்பிராயத்தாலும் நேர்த்தியான காகிதத்தில்
ராயல் சைசில் அச்சிட்ட பெரிய புத்தகம். இப்போது கொஞ்சநாளுக்குத்தான் ரூபா 3-க்கு விற்
கப்படும். பிறகு விலை அதிகமாகிவிடும்.

இதுவிற்க

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அர்ச். அந்தோனியார் நாடகம் | 1 | 4 | 0 | அர்ச். சீவியப்பர் விலாசம் | 1 | 4 | 0 |
| அர்ச். ஜெனிக்கிளால் விலாசம் | 1 | 8 | 0 | அர்ச். பார்பாரம்மாள் மாலை | 1 | 0 | 0 |
| நூதன யோசேப்பு சபா | 0 | 12 | 0 | கெட்ட குமாரன் கதை யென்னும் ஊதாரிப்பிள்ளை விலாசம் | 1 | 0 | 0 |

சைவ மகத்துவ திமிரபானு விவிலிய விரோததிக்காரமெனும் பெயர்போன தர்க்கப் புத்தகம்
மை. அதிமேற்றிராணியார் அனுமதி பெற்றது. 2 0 0

ஏ. எப். சைமன், கமிஷன் ஏஜண்ட் மகா விகடதூதன் ஆபீஸ், ஜார்ஜ்டவுன், மதராஸ்.

The
Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுசெம்மறிகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 14. | ஏப்ரல், 1916. | இலக்கம் 4



## சென்னை அதிமேற்றிராணியாருடைய நிருபம்.

### சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த குருக்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் கர்த்தரில் ஆரோக்கியமும் ஆசீரும் உண்டாவதாக!

சேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குப் பிரியமுள்ள சங்கைக்குரிய சகோதரர்களே, பிரிய
மான பிள்ளைகளே,

கொடிய யுத்தத்தினாலும், சொல்லொண்ணா துன்பத்தினாலும் பயமுந் திகிலு
முற்றிருக்கும் இக்காலத்தில், உலக மடங்கலிலுமுள்ள கத்தோலிக்குக் கிறிஸ்துவர்
கள் சமாதான இராயரான கிறீஸ்துநாதருடைய பிரதிநிதியின் குரலுக்குக் காது
கொடுத்து, பக்திக்குரிய மன்றாட்டுகளைக் குறித்த நாட்களில் வெளிப்படையாய் ஒப்
புக்கொடுத்து வந்ததானது, அவர்களிடத்தில் விளங்கின உண்மையும் நம்பிக்கையு
முள்ள விசுவாசத்தின் அறிகுறியாயிருந்தது. ஜெபத்தையே நீங்கள் உங்களுடைய
அடைக்கலமாகக்கொண்டு "உங்களுக்குக் கடைசி நம்பிக்கையாயிருக்கும் மிகவும்

நேசம்பொருந்திய சேசுவின் திரு இருதயத்தையே நாடிச் சரணமாய்ப் போகவேண்டும்.'' என்று சொல்லி, இந்த யுத்த காலத்தில் முன் இரண்டு விசை நாம் உங்களைத் தூண்டலானோம். ஜெபத்தின் தொனியானது யுத்தாயுதங்களினுடைய தொனியுடன் கலந்து ஒலித்தபோதிலும், யுத்தம் இன்னும் மும்முரமாகவே நிகழ்ந்து, ஆயிரமாயிரமான குடும்பங்களுக்கு அபாரமான நஷ்டத்தையும் துன்பத்துக்குமேல் துன்பத்தையும் விளைவித்துக்கொண்டுவருகிறது.

இதோ! பரிசுத்த தபசுகாலம் நெருங்கி வருகிறது. இந்தக் காலத்திலே முன்னிலும் அதிகமாய் நீங்கள் நினைப்பூட்டப்படுவது யாதென்றால், உலகமானது தன்னுடைய பாவாக்கிரமங்களின் நிமித்தம் தேவ கோபாவேசத்தைத் தன்பேரில் நியாயப்படி வருவித்துக்கொண்டதற்காகத் தவம்புரிந்து தக்க பரிகாரம்செய்யக் கடமைப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றியேயாம். பரிசுத்த பாப்பானவர் கற்பித்தபடியும், அவருடைய மேலான முன் மாதிரிகையைப் பின்பற்றியும் சென்ற வருஷத்தில் மூன்று நாட்களைக் குறித்து, அம்மூன்று நாட்களில் நீங்களும் நம்மோடு ஒரு பொழுது உபவாசமாயிருக்க நாம் உங்களை ஏவினோம். அத் தவமுயற்சியானது அவரவருடைய இஷ்டானுசாரத்தைச் சார்ந்ததாயிருந்ததேயன்றி, கடமையானதாயிருந்த தன்று.

பரலோகத்திலிருந்து விசேஷ கிருபைகளை யடையவேண்டுமானால், அவைகளை ஜெபத்தோடு கூடிய தவத்தின் பலத்தினாலேயே சில தருணங்களில் அடையலாகுமென்று தம்முடைய சீஷர்களுக்குக் கிறீஸ்துநாதர் சுட்டிக்காட்டியிருப்பதாக நாம் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். ஆம், இப்பேர்ப்பட்ட தருணங்களில், நாம் ஜெபம் செய்வது மாத்திரம் போதாது. ஜெபத்தோடு ஒறுத்தல் உபவாசத்தையும் அநுசரிப்பது அவசியமாமே. ஆனபடியால், சர்வேசுரன் உங்களுடைய மன்றாட்டுகளுக்குக் காதுகொடுக்கவும், நிகழும் பயங்கர தண்டனையை நிறுத்தவும், உலகத்துக்கு மறுபடியும் அமரிக்கையையும் சமாதானத்தையுந் தந்தருளவும் தாமதிப்பாரேயானால், அவநம்பிக்கைப்படாதேயுங்கள். ஆகவே, ஜெபத்தோடு தவத்தையுஞ் சேர்த்து அநுசரியுங்களென்று நாமும் உங்களுக்குச் சொல்லி இப்போது உங்களைத் தூண்டுகிறோம். அழிவுக்குரிய காலக்கொடுமையும், அவரவர்களுக்கு வந்துறும் கேடுபாடுகளும் ஏற்கெனவே உலக புத்தி யுடைத்தானவர்களைத் திருந்தி நடக்கச் செய்திருக்கையில், கத்தோலிக்கரான நாம் தவத்தினாலும் விசுவாசத்தினாலுந் தூண்டப்பட்டு "தண்டித்துக் குணப்படுத்துவதைச் சுதந்தரமாகக் கொண்டிருக்கும்'' சர்வேசுரனுக்கு முன் நம்மைத் தாமே எம்மாத்திரமோ தாழ்த்தவேண்டியவர்களாயிருக்கிறோம்.

சென்னை அதிமேற்றிராசனத்தில் அநுசரிக்கப்படுகிற தபசுகால ஒழுங்குகள் "எவ்வளவு இலேசானவைகளென்றால், கிறீஸ்துவர்கள் அவைகளை இன்னும் இலேசானவைகளாகச் செய்துகொள்ள அநுமதி கேட்கக் கூடாதென்றும், குருக்களும் வெகு அபூர்வமான சந்தர்ப்பங்களில் முதலாய்ப் பலத்த காரணங்களை முன்னிட்டேயன்றி, மற்றப்படி அவைகளுக்கு அநுமதி கொடுக்கக்கூடாதென்றும்'' சொல்லும்படிக்கு அவ்வளவு இலேசானவைகளாய் அவ்வொழுங்குகள் இருக்கின்றனவென்பது எக்காலத்தும் உண்மையே. அப்படியானால், இந்நிபந்தனைகளைத் துன்பத்துக்குரிய இக்காலத்திலே நீங்கள் எவ்வளவோ சுமுத்திரையாய் அநுசரிக்கவேண்டியது. இவ்வருஷம் நீங்கள் தபசுகால ஒழுங்குகளில் யாதொன்றைக் குறைக்க, உத்தரவு அரிதாய்க் கேட்பீர்களென்றும், எல்லோரும் சுத்தபோசனம், ஒரு பொழுது இவைகளைக் கண்டிப்பாய் அநுசரிப்பதுடன், அநுசரிக்கக் கற்பிக்கப்பட்டிருப்பவைகளுக் கதிகமாகவே ஒறுத்தல் உபவாசத்தை உங்களுடைய சுயேச்சையாய் அநுசரிப்பீர்களென்றும் நாம் நம்பியுள்ளோம். அந்த இலட்சம் பேர்களிடத்தில் சர்வேசுரன் கேட்கிற பெரும் பரித்தியாகங்களுக்குமுன் உங்களிடம் அவர் கேட்பது அற்பமானவைகளாயிருக்கின்றன. ஆனதுபற்றி, நீங்கள் செய்யும் சொற்பப் பரித்தியாகத்தை உதாரமாயும் சந்தோஷமாயுஞ் செய்யுங்கள். கிறீஸ்துநாதருக்காகவும், கிறீஸ்துநாதருடைய



திருச்சபைக்காகவும், உலகத்தின் சமாதானத்துக்காகவும் பாவத்தைக் கட்டிக்கொள்ளாதபடி நீங்கள் சுகிக்கக்கூடிய இன்பசுகத்தையும் அல்லது சந்தோஷத்தையும் நிக்கிரகஞ் செய்யுங்கள். இல்லாவிட்டால் "நாமெல்லோரும் இவர்களைப்போல் நசிந்துபோவோம்.'' ஆண்டவர் மட்டில் உங்களுக்குள்ள சிநேகத்தைப்பற்றியும், திருச்சபையைப்பற்றியும், நமது சகோதரர்களான அந்த இலட்சம் பேர்களுக்காகவும், கைவிடப்பட்டிருக்கிற விதவைகளுக்காகவும், தாய்மார்களுக்காகவும் உங்கள் ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும், ஒறுத்தலினாலும் சகல ஜாதி ஜனங்களுக்குள்ளும் திரும்பவுஞ் சமாதான முண்டாகவும், சிநேக ஐக்கியத்தோடு அவர்களெல்லோரும் ஒன்றித்து முன்போல வாழவும் இந்தப் பரிசுத்த தபசுகாலத்தில் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடுங்கள்.

அர்ச். கன்னிமரியாயி லூர்து நகரத்தில் காட்சிகொடுத்த திருநாளன்று 1916௵ சென்னையில் கொடுக்கப்பட்ட இந்த நிருபமானது நமது அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த எல்லா ஆலயங்களிலும், சிறிய ஆலயங்களிலும், மடங்களைச் சேர்ந்த கோவில்களிலும் தபசுகாலத்தில் வரும் முதல் ஞாயிறன்று வாசிக்கப்படவேண்டியது.

1909௵ ஜனவரி 9உ மிகவும் பரிசுத்த பிதாவினால் நமக்களிக்கப்பட்ட அப்போஸ்தல அதிகாரப்படி, சென்னை அதிமேற்றிராசனத்துக்காக விதிக்கப்பட்டிருக்கிற தபசுகாலத்தின் வழக்கமான ஒழுங்குகள், 1916-ம் வருஷத்தில் விபூதித் திருநாளுக்கு முந்தின ஞாயிறன்று வாசிக்கப்படவேண்டியது.

உங்களனைவரையும் சர்வேசுரன் தமது பரிசுத்த பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றுவாராக.

கிறிஸ்துநாதரில் உங்க ளன்புள்ள தந்தையாகிய

✠ அருளப்ப ஆலன்,
சென்னை அதிமேற்றிராணியார்.

எ. மோர்கேஸ்,
காரியதரிசி.

## GOD OF GENESIS.

## ஆதியாகம தேவன்.

(முன் தொடர்ச்சி.)

கடைசியாய்ச் சாந்தகுணம் பொருந்திய யாக்கோபென்பவர் எசாவுக்குப்பயந்து மெசோபொட்டேமியா என்னும் நாட்டிற் கோடுகையில், ஒரு நாளிரவு வழியில் வெளியிடத்தில் கண்ணுறங்க நேர்ந்தது. அப்போது அவர் கண்ட சொப்பனம் என்னவென்றால், ஓர் ஏணி பூமியிலே ஊன்றியது; அதன் மேல்நுனியோ வானத்தை யெட்டும். அதன் மேல் வானதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமா யிருந்தார்கள்; அதற்கு மேலாக ஆண்டவர் வீற்றிருந்து அவரை நோக்கி, "நாம் உன் தந்தையான ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்: நீ படுத்துக்கொண்டிருக்கிற இப்பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தந்தருள்வோம். உன் சந்ததியோ நிலப் புழுதியை யொக்கும்; நீ மேற்குக் கிழக்கு வடக்குத் தெற்குத் திசைகளிற் பரம்புவாய்; உன்னிலும் உன் சந்ததியிலும் பூமியினது சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படுவன; நீ எங்கு போனாலும் உனக்கு நாம் காவலாயிருந்து இத்தேசத்திற்குன்னைத் திரும்பிவரச்செய்வோமன்றி, நாம் உனக்குச் சொல்லியயாவும் நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிட மாட்டோ'' மென்றார். யாக்கோபு நித்திரை தெளிந்து: மெய்யாகவே ஆண்டவர் இவ்விடத்திலிருக்கின்றார், நானோ அதை யறியா திருந்தேனென்று, திகிலடைந்து: இந்த ஸ்தலம் எவ்வளவோ பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடும் பரலோகத்தின் வாசலுமே, என்றார்.

ஆதியாகம தேவனின் முக்கிய குறிப்பிதுவாம். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மீண்டும் மீண்டும் இக்குறிப்பையே காணலாம். ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனும் விசேஷமாய் நன்மைத்தனமும் இரக்கமும் நிறைந்த உதாரகுணமுள்ளதேவன். அவர் அருளுவதனைத்தும் அவர் குணத்தைக் காட்டுகின்றன; தமக்குச் சொந்தமானவர்கள் தம்மை நன்றாயறிந்து, தம்மில் நம்பிக்கை வைத்து அகமகிழும் பொருட்டே தாம் மேற்கூறியவற்றை யருளுவதாக வாக்குறுதித் தந்திருக்கிறார். அப்படியே சங்கீத சாகரராகிய தாவீதரசர் பாடுவதை யிங்கறியற்பாலது. "ஆண்டவருக்குத் துதிபுரிந்து, அவருடைய திருநாமத்தைக் குறித்து வேண்டுதல் செய்து, அவருடைய கிரியைகளைச் சனங்களுக்குள்ளே பிரஸ்தாபப்படுத்துங்கள். அவர் பேரிலே பாக்களைப் பாடிச் சங்கீதங்களைச் சொல்லி, அவருடைய அதிசயங்களை யெல்லாம் பிரசுரியுங்கள். அவருடைய திருநாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள்; ஆண்டவரைத் தேடுகிறவர்க ளிருதயம் பூரிக்கக்கடவது. ஆண்டவரைத் தேடிப் பலங்கொள்ளுங்கள்; எப்போதும் அவருடைய சமுகத்தை நாடுங்கள்; அவருடைய அடியாராகிய ஆபிரகாமின் சந்ததியோ அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட யாக்கோபின் புத்திரரே; அவர் செய்த அதிசயங்களையும், அற்புதங்களையும், அவர் திருவாயின் ஞாயத்தீர்ப்புகளையும் நினைத்துக்கொள்ளுங்கள். அவரே நமது சர்வேசுரனாகிய ஆண்டவர்; அவர் ஞாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் செல்லும். ஆயிரந்தலைமுறையளவாக (நிறைவேறும்படி) அவர் கட்டளையிட்ட வாக்கையும், ஆபிரகாமோடே அவர் செய்த உடன்படிக்கையையும், அவர் ஈசாக்குக்குச் செய்த சத்யவாக்கையும் எப்போதும் நினைத்துக்கொண்டேயிருந்தார். அதையே யாக்கோபுக்குக் கற்பனையாகவும், இஸ்ரவேலருக்குச் சுதந்தமான உடன்படிக்கையாகவும் ஸ்தாபகஞ் செய்தார்"

இவ்வாறே சீராக்கின் குமாரர் இச்சரிதையைப் பின்வருமாறு சுருக்கிச்சொல்லுகிறார்: "ஆபிரகாம் அநேக ஜாதிசனங்களுக்குப் பெரிய தந்தையாயிருந்தார்; உன்னதமானவரின் கற்பனைகளை யநுசரித்து அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டு மகிமையில் விளங்கினவர்கள் அவரைப்போல் ஒருவரு மில்லை. அவருடைய மாம்ஸத்தில் உடன்படிக்கையை ஏற்படுத்தினார்; சோதனையில் உண்மையுடையவராய் விளங்கினார். ஆதலால் தேவன் அவருக்கும் அவருடைய சந்ததியாருக்கும் பூமியின் புழுதியைப் போல் பெருகவேண்டுமென வாக்குத்தத்தத்தால் மகிமையளித்தார். அவருடைய சந்ததியை நட்சத்திரங்களைப்போல் மேன்மைப்படுத்தி, ஒரு கடலிலிருந்து மற்றொரு கடல் வரையிலுள்ளவற்றையும், ஆற்றங்கரையிலிருந்து பூமியின் முடிவு வரையில் உள்ளவற்றையும் அவர்களடைய வேண்டுமென்று அருளிச்செய்தார். ஈசாக்கினிடமும், தன் தந்தையாகிய ஆபிரகாமை முன்னிட்டு அப்படியே செய்தார். ஆண்டவர் எல்லா ஜாதி ஜனங்களின் ஆசீரையும் அவருக் கருளி, யாக்கோபின் சிரசின்மேல் தம்முடைய உடன்படிக்கையை யுறுதிப்படுத்தினார். அவர் சந்தோஷமாயிருக்கையில் அவரைஅங்கீகரித்து, அவருக்கு ஒரு சுதந்தரத்தைத் தந்து, அவருடைய பாகத்தை பன்னிரண்டு உபஜாதிகளாகப் பிரித்தார். மாம்ஸத்தின் கண்களில் இஷ்டப்பிரசாதமுடையோரெனத் தோன்றிய இரக்கமுள்ள மனிதரை அவருக்காகக் காப்பாற்றி வைத்தார்."

புதிய ஏற்பாட்டைத்திறந்தால், பிதாப்பிதாக்களின் தேவனாகிய இவரைப்பற்றியே முதலிரண்டு பாடல்கள் கூறுகின்றன. "மாக்னிபிக்காத்" என்னும் ஞானசங்கீதத்தி னிறுதியில், நமதாண்டவளாகிய தேவதாய் சொல்லுவதிதுவே. "அவர் நமது பிதாப் பிதாக்களிடமும், ஆபிரகாம், அவர் சந்ததியாரிடமும் எப்போதும் பேசியதுபோல், தம்முடைய இரக்கத்தை நினைத்து, தம்முடைய தாசராகிய இஸ்ரவேலரை ஏற்றுக்கொண்டார்."

இவ்விஷயத்தைப்பற்றியே "பெனதிக்துஸ்" என்னும் சங்கீதத்தின் முதல் பாகத்தில், ஸக்கரியென்பவர் பாடியிருப்பதாவது:—"இஸ்ரவேல் தேவனாகிய ஆண்டவர் ஸ்துதிக்கப்படுவாராக: ஏனெனில், அவர் தம்பிரசைகளை நாடிப்போய், அவர்களை மீட்டிரட்சித்தார்: அவருடைய அடியானாகிய தாவீதின் வீட்டில் நமக்காக இரட்சணியத்தின் கொம்பை உயரத் தூக்கிவிட்டார். ஆதிமுதலிருக்கிறவர்களாகிய தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாயிலாய் அவர் பேசினார். நமது பகைவரிடமிருந்தும், நம்மைப் பகைப்பவருடைய கரங்களினின்றும் மீட்சி (செய்பவர் அவரே). நமது பிதாப்பிதாக்களுக்கு இரக்கம் புரிந்து, தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைந்து, நமது பிதாப்பிதாவாகிய ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தஞ் செய்தபடி, அவர் நமக்களிப்பார். நமது பகைவர் கையினின்றும் மீண்டபின், பயமின்றி நமது வாழ் நாளெல்லாம் அவர்முன் நீதியிலும் பரிசுத்தத்திலும் நடந்து அவருக்குத் தொண்டுபுரிவோமாக.

S. Selva Raju.



## EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

### 1.—அதிகாரம்; வசனங்கள் (5–10)

ஸ்நாபக அருளப்பர் போதிக்கும் வர்த்தமானத்திலிருந்து மார்கு தம் சுவிசேஷத்தை ஆரம்பிக்கிறார். மத்தேயுஸ், கிறிஸ்துநாதரின் வம்சவரிசையின் வரலாற்றினின்று துவக்குகிறார். லூக்காஸோ, ஸ்நாபக அருளப்பரின் உற்பவத்திலிருந்து தொடங்குகிறார்.

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளில் மலாக்கியா என்பவர் ஒருவர். அவர் தமது தீர்க்கதரிசனங்களின் முடிவில், கிறீஸ்து மெஸ்ஸியாவின் வழிகளை முஸ்திப்பு செய்கிறவராகிய அவருடைய முன்னோடியைப்பற்றியும், உலக முடிந்த காலத்தில் எலியாஸ் முனி இப்பூமியில் மறுபடியும் தரிசனமாகி, அக்காலத்து யூதர்களைச் சத்தியவேதத்தில் திருப்புவார் என்பதைப் பற்றியும் அறிக்கை யிடுவதினால், லூக்காஸ், எலியாவின் வல்லமையாலும் ஆவியாலும் ஆண்டவருக்கு முன் தூதனாய் வரும் ஸ்நாபக அருளப்பரின் வரலாற்றைக் கூறி சுவிசேஷத்தை ஆரம்பிப்பது, வேதாகம புஸ்தகங்களின் அற்புத பொருத்தத்தையும் சம்பந்தத்தையும் நன்றாய்க் காண்பிக்கிறதென்று வேதசாஸ்திரியான மால்தொனத்துஸ் (Maldonatus) கூறுகிறார்.

முன்னோடியும் தூதருமானவரின் உற்பவமும் பிறப்புமே, அதிசயங்களால் நிறைந்து அலங்கிப்பிரகாசித்தால், இவருடைய குருவும் ஆண்டவருமாகிய மெஸ்ஸியாவின் உற்பவமும் பிறப்பும் இன்னும் எம்மாத்திரம் அகோசர மகிமை சிறப்புகளாலும், அற்புதங்களாலும் நிறைந்து துலங்கவேண்டு மென்பதை நாம் கண்டுணரும்படிக்குத்தான் லூக்காஸ், அர்ச் ஸ்நாபக அருளப்பருடைய ஜனனவரலாற்றைத் துலக்கமாயும் நுணுநுணுக்கமாயும் வெளிப்படுத்துகிறார். முன்னோடியாகிய ஸ்நாபக அருளப்பர் குருவம்சத்தைச் சார்ந்தவர் என்று லூக்காஸ் எழுதிக் காண்பிப்பதினால், மெஸ்ஸியாவின் குருத்துவ மகிமைப் பிரதாபத்தை வெளியிடுகிறார் என்று சொல்லத்தகும்.

**5-வது வசனம்.**—"யூதேயா தேசத்து அரசனாகிய எரோதின் நாட்களிலே, அபியாவின் கோத்திரத்தார் முறையைச் சேர்ந்தவராகிய சக்கரியாஸ் என்னும் பேருள்ள ஓர் குருப்பிரசாதி யிருந்தார். அவருடைய மனைவி ஆரோன் குமாரத்திகளிலொருத்தி. அவளுக்குப் பேர் எலிசபெத்."

லூக்காஸ் பலஸ்தீனா இராச்சியத்தை சில சமயங்களில் யூதேயா என்று கூறுகிறார். எரோதரசன் அக்காலத்தில் பலஸ்தீனா முழுமையுமே ஆண்டுவந்தான். அவனே தன்னிஷ்டம் போல் தேவாலயத்தில் பணிவிடை செய்யும் பிரதான குருக்களை நியமிப்பதும், தள்ளிவிடுவது முண்டு. ஆகையால், இக்குருக்களுடைய ஸ்திதி வெகு கேவலமாயும் பரிதாபத்துக்குரியதாயுமிருந்ததென்பது நிச்சயம். சக்கரியாஸ் அக்காலத்துப் பிரதான குருவல்ல; குருக்களில் ஒருவராய் இருந்தார். குரு கோத்திரமாகிய ஆரோன் வம்சம் பலுகிப்பெருகினதால், அக்கோத்திரத்தார் 24 குடும்பங்களாக அல்லது வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். 8-வது வகுப்பு அபியாவினுடையது. சக்கரியாஸ் இக்குடும்பத்தைச் சார்ந்தவர். 7-நாள் பரியந்தம் அதாவது, ஒரு சாபத்திலிருந்து மறு சாபத்துவரையில் ஒவ்வொரு வகுப்பினரும் திருப்பணி செய்யும்படி சீட்டால் குறிக்கப்படுவார்கள்.

"சக்கரியாவலின் மனைவி ஆரோன் குமாரத்திகளில் ஒருவள். அவளுக்குப் பேர் எலிசபெத்." எலிசபேத் என்னும் நாமத்தால் ஆரோனுடைய மனைவியும்

அழைக்கப்பட்டாள். எலிசபெத்தும் குரு கோத்திரமாகிய ஆரோன் வம்சத்தில் பிறந்தவள். குருவம்சத்தைச் சார்ந்தவர்களாகிய தந்தை தாயினிடமிருந்து ஸ்நாபக அருளப்பர் பிறந்தது அவருக்குக் குலமகிமையாய் இருந்தது. எபிரேய பாஷையில் சக்கரியாஸ் என்றால் "தேவன் நினைவு கூருகிறார்" என்றும், எலிசபெத் என்றால் "தேவன் ஆணையிடுகிறார்" என்றும் அர்த்தமாகும்.

மெய்யாகவே சர்வேசுரன் பூர்வீகத்தில் பிதாப்பிதாக்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆணையிட்டு வாக்குத்தத்தம் செய்த மகத்தான காரியங்களை நினைவுகூர்ந்து, நிறைவேற்ற தமது ஏகசுதனை மனுவுருவாய் இப் பூலோகத்துக்கு அனுப்புகிறகாலம் நெருங்கினதை ஸ்நாபக அருளப்பரின் உற்பவமும் பிறப்பும் அறிவிக்கிறதினால், அவருடைய பிதாவும் மாதாவும் ஆழ்ந்த அர்த்தம் பொருந்திய இந்நாமங்களைக் கொண்டிருப்பது தேவ திருவுளம் என்று தொலேதுஸ் (Toletus) என்பவர் வசனிக்கிறார்.

6-வது வசனம்.—"அவர்கள் இருவரும் ஆண்டவருடைய சகல கற்பனைகளிலும் நீதி முறைமைகளிலும் குற்றமின்றி நடந்து, தேவ சமுகத்தில் நீதிமான்களாயிருந்தார்கள்".

அவர்கள் குருவம்சத்தினரானதினால் உயர்குல மகிமையும், தேவ சமுகத்தில் நீதிமான்களாயிருந்தார்கள் என்றதினால் உண்மையான அர்ச்சியசிஷ்டதனத்தின் மகிமையும் அவர்களுக்கு இருந்தது. "மனுஷருக்குமுன் நீதிமான்களாய் இருப்பவர் எல்லோரும் தேவ சமுகத்திலும் நீதிமான்களாயிருப்பதில்லையே. ஏனெனில், மனிதர் காண்பது ஒரு விதம், தேவன் அறிவது வேறுவிதம். மனிதர் முகத்தை அறிகிறார்கள், தேவன் அகத்தை பரிசோதிக்கிறார்." என்று அர்ச். அம்பிரோசியார் உரைக்கிறார்.

"தேவ சமுகத்தில் நீதிமான்களாய் இருந்தார்கள்" என்னும் இவ்வரிய வார்த்தைகளால் சுவிசேஷகர் ஸ்நாபக அருளப்பருடைய தாய் தந்தையரின் மேலான அர்ச்சியசிஷ்டதனத்தைச் சுட்டிக் காண்பிக்கிறார்.

"அவர்கள் இருவரும் ஆண்டவருடைய சகல கற்பனைகளிலும், நீதி முறைமைகளிலும் குற்றமின்றி நடந்து" என்பதானது, வேத கற்பனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் தங்கள் சீவிய காலமெல்லாம் போக்கினார்கள் என்று தெரிவிக்கின்றது. இது "நீதிமான்களாய் இருந்தார்கள்" என்று முன் கூறப்பட்டதை இன்னும் தெளிவாய் விவரித்துக் காண்பிக்கிறது.

"ஆண்டவருடைய சகல கற்பனைகள்" எவையென்றால், சன்மார்க்கத்தைப் பற்றிய தேவ கட்டளைகளாம். நீதி முறைமைகள்........என்றால் எபிரேயர் கடவுளுக்குச் செலுத்தவேண்டிய சந்திப்பு, காணிக்கை, நேர்ச்சிக்கடன்,......அவர்கள் அனுசரிக்க வேண்டிய சுத்திகரச் சடங்குகள், சாபத் முதலிய ஓய்வு நாட்கள், தேவ ஊழியத்திற்கடுத்த ஆசார முறைமைகள், ஒழுங்குகள், நீதி சட்டங்களாமே. குற்றமின்றி: (Sine querela) அதாவது, மனிதரும் அவர்கள் மீது யாதொரு குறையும் கூறா வண்ணம், வெகு நாணயஸ்தராய், சுசிலராய், மேன் குலத்தோரின் பெருந்தன்மை வாய்ந்தவராய் விளங்கினார்கள் என்பதாம். ஆகையால், சக்கரியாஸ், எலிசபெத்தம்மாள் இவர்கள் இருவரிடம் குலப்பெருமை, குணப்பெருமை, மனப்பெருமை, மதிப் பெருமை, இஷ்டப்பிரசாத வரங்களின் புண்ணிய பெருமைகள் எல்லாம் ஒருங்காய் அமைந்திருந்தன. இவர்கள் தேவனுக்கு மகா பிரியமுள்ளவர்களாயினும் பழைய ஏற்பாட்டில், புண்ணியத்தின் பலனாகவும் கைம்மாறாகவும், தேவ ஆசீர்வாதமாகவும், தேவ கருணையின் அடையாளமாகவும், வரமாகவும், யூதஜனங்களால் வெகு சிலாக்கியமாய் மதிக்கப்பட்டு, வெகு ஆவலாய்த் தேடப்பட்ட புத்திரசந்தான பாக்கியம், இவ்வுத்தம புண்ணியவாளருக்கு இல்லாததினிமித்தம், தங்கள் இனத்தார் மத்தியில் இந்த அவமானத்தைச் சிந்தாகுலத்தோடு சகித்து வந்தார்கள்.

7-வது வசனம்.—"எலிசபேத் மலடியுமாய், இருவரும் வயது சென்றவர்களுமாயிருந்தமையால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது." ஸ்நாபக அருளப்பருடைய உற்பவம் ஓர் புதுமையென்று காண்பிக்கிறதற்காகத்தான் சுவிசேஷகர் இந்த 7-வது வசனத்தை எழுதியிருக்கிறார். அருளப்பருடைய தந்தையும் தாயும் விருத்தாப்பியராயிருந்ததினாலும், எலிசபெத்தம்மாள் மலடியாயிருந்ததினாலும், இந்த விருத்தாப்பிய தசையில், இவர்களுக்கு ஒரு குமாரன் பிறந்தது தேவ செயலாய் ஆனதென்றே சொல்லவேண்டும். அற்புதமான இச் சம்பவத்தால் இவர்கள் சொல்லொண்ணா சந்தோஷ மகிழ்ச்சி யடைந்தார்கள் என்பதற் கையமில்லை. அன்றியும் இவர்களும் இன்னும் மற்றப் பந்து ஜனங்களும் இச் சம்பவத்தின் அதிசயத்தால் வரப்போகிற தீர்க்கதரிசியாகிய அருளப்பர் மட்டில் மேலான பூஜித மதிப்பும் எண்ணமும் கொண்டவர்களாய், அவர் முகத்தைக் காணவும் அவர் போதகத்தைக் கேட்கவும் வெகு ஆவலுற்றிருந்தார்கள்.



8-வது வசனம்.—"அப்படியிருக்கையில் சம்பவித்ததேதெனில், அவர் தேவ சந்நிதானத்தில் தமது வரிசை முறையில் குருத்துவத் தொழில் நடத்திவருங் காலத்தில்"...........மெய்யான அதி உன்னத குருவாகிய மெஸ்ஸியாஸ் பூலோகத்தில் எழுந்தருளி வரும் காலமும், மெய்யான தேவ பலிபூசை நிறைவேறும் காலமும் கிட்டி நெருங்கினதினால், ஜெருசலேம் தேவாலயத்தில் குருத்துவ பணிவிடையாகிய பூஜை பலி நடைபெறும் வேளையில் மெஸ்ஸியாவின் முன்னோடியின் வருகை அறிவிக்கப்படுகிறது நியாயமே.

மண்டபம், பரிசுத்த ஸ்தலம், (Sanctum) அதி பரிசுத்த ஸ்தலம், (Sanctum Sanctorum) என்னும் மூன்று பாகங்களாகத் தேவாலயம் பிரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் குருக்கள் தத்தம் முறைப்படி பற்பல சடங்கு, காணிக்கைகளையும், பலிகளையும் நடத்தி வந்தார்கள். அதி பரிசுத்த ஸ்தலமோவெனில் சில விசேஷமான பொருள்கள் வெகு பூஜித வணக்கமாய் வைக்கப்பட்ட ஸ்தலமாயிருந்தது. அதிலே பிரதான குரு வருஷத்தில் ஒரு தரம் மாத்திரம் பிரவேசித்துச் சனங்களுக்காகப் பாவ நிவர்த்திக்கான பலிகளைச் செலுத்தினார். அதிலுள்ளவைகளை மற்றொருவனும் காணாதபடிக்கு அது ஒரு திரைச்சீலையினாலே மற்ற ஸ்தலத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. பரிசுத்த ஸ்தலத்தில் தான் (Sanctum) பரிமளவர்க்க தூபம் நாடோறும் இரண்டு விசை காலையிலும் மாலையிலும், அங்கு வைத்திருந்த பொற்பீடத்தின் மேல் காட்டப்பட்டது.

9-வது வசனம்.—"குருத்துவ தொழிலுக் கடுத்த வழக்கப்படி கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசித்துத் தூபம் கொடுக்கும்படி, அவருக்குச் சீட்டு விழுந்தது"...........கோவில் திருப்பணியில் பலவகைச் சடங்குகள் இருந்தன. இவைகளில் தூபம்காட்டுவது ஓர் முக்கிய சடங்கு. இதைச் செய்ய சக்கரியாஸ் அதிஷ்ட சீட்டினால் தெரிந்து கொள்ளப்பட்டார். ஆகையால், அவர் கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து தூபம் போடுகிற தம்முடைய பணிவிடையை நிறைவேற்றும் தருணத்தில்......

10-வது வசனம்.—"ஜனங்கள் எல்லோரும் கூட்டமாய் வெளியே ஜெபஞ் செய்து கொண்டிருந்தார்கள்."........சக்கரியாஸ் என்னும் குருப்பிரசாதியின் கைகளினால் சர்வேசுரனுக்குச் சுகந்த பரிமளம் வீசும் பலி ஒப்புக் கொடுக்கப்படும் வேளையிலும், சகல ஜனங்களும் ஒரே கூட்டமாய், ஒரே மனமாய், சாபத்து ஓய்வு நாளில், தேவாதி தேவனுக்குப் பகிரங்க பொது செபங்களையும், தோத்திர ஸ்துதி நமஸ்காரங்களையும், செலுத்தும் மகா பூஜிதமான வேளையிலும், பழைய ஏற்பாட்டின் பலிகளுக்கெல்லாம் அர்த்தமும், காரணமும், ஆதாரமும், முடிவுமாகிய சிரேஷ்ட, உத்தம, பலியாகிய செம்மறிப் புருவையான மெஸ்ஸியாஸ் வருகிற காலம் நெருங்கிவிட்டதைத தேவ தூதன் அறிவிக்க தேவாலயத்தில் தோன்றினது தேவ திருவுளச் செய்கையே.

S. M.

[நீ இங்கே ஜீவிக்குமட்டும் உன்னோடு போராடி சத்துருவோடு யுத்தஞ்செய்யவேண்டியது. உனக்கு வருந் துன்பங்களை எல்லாம் சர்வேசுரனைக் குறித்து சகித்துக்கொண்டால், இது உன்னுடைய பேறுபலன்களை அதிகரிக்கச் செய்யும். துன்பம் வேண்டாமென்று ஓடுபவனுக்குத் துன்பமே வரும். இந்தப் பூலோக சீவியம், குறைச்சலும் துன்பங்களும் நிறைந்த சீவியம்.]

GNANAMANI, III PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

## 30-ம் அதிகாரம்.

### அந்த நிர்ப்பாக்கிய மனிதனை மனந் திரும்பச் செய்யும்; என் குழந்தை சத்திய வேதக்காரர் கையில் வளரச் செய்யும்.

சலமோன் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டவுடனே தாமதமின்றி கதவைச் சாற்றித் தாளிட்டு, தூக்க மயக்கத்துடன் கட்டிலில் போய்ப் படுத்தாள் அபிராமி.

மறு நாள் காலை அபிராமி தன் ஜெபத்தை முடித்துக்கொண்டு குழந்தைக்குப் பால் கொடுக்கும்படி தொட்டிலண்டை போனபோது தொட்டில் வெறுமனே இருக்கிறதைக் கண்டு அதிசயித்து, சிலவிசை குழந்தை கீழே விழுந்து இருக்குமென்று வீடெல்லாம் தேடிப்பார்த்தும் குழந்தை அகப்படாதபடியால், காலைச் செபத்தை முடித்துக்கொண்டு பூசை காணும்படி கோவிலுக்குப் போகும் தன் தகப்பனைப் பார்த்து கண்ணீர் அழுகையுடன் கை ரெண்டையும் முறித்துக்கொண்டு, "நாயனா! குழந்தையைக் காணோம், நீங்கள் பார்த்தீர்களா?" என்றாள்.

ஈசா.—நான் பார்க்கவில்லையே! (துக்க முகத்துடன் கைகாலில் நடுக்கல் கண்டு) கதவு சாற்றி தாட்பாள் போடப்பட்ட வீட்டுக்குள் யார் நுழைவார்? இராத்திரி சிலவிசை சலமோன் வந்தானோ?

அபி.—ஆமா, நாயனா! இராத்திரி நடுச்சாம வேளையில் குடி வெறியுடன் வந்து, என்னைப் படுத்தாத பாடெல்லாம் படுத்தி, "இந்த க்ஷணமே என்னைப் பின் செல்வாயா, இல்லையா?" என்று என்னைப் பயமுறுத்தினபின் வெளியே போனார்.

ஈசா.—அவன் வெளியே போகும்போது குழந்தையைத் தூக்கிக்கொண்டு போனானா?

அபி.—நான் பார்க்கவில்லை நாயனா! நான் அவருடன் வரமாட்டேன் என்றவுடனே விளக்கை அணைத்துவிட்டு வெளியே புறப்பட்டார். ஆனால் விளக்கை அணைத்த வுடனே குழந்தை வீச்சென்று கத்தினேன், உடனே சப்தமும் நின்று போனது. அந்த க்ஷணமே அவரும் வெளிப்பட்டார்.

ஈசா.—அவன் வெளியே போனவுடனே கதவைத் தாளிட்டாயா?

அபி.—உடனே எழுந்து தாளிட்டேன்.

ஈசா.—அப்போது குழந்தையைப் பார்த்தாயோ?

அபி.—நான் குழந்தையைத் தொட்டிலில் பார்க்கவில்லை.

ஈசா.—அவன் இராவேளையில் வீட்டுக்கு வரும்போது கதவைத் திறக்கவேண்டாம் என்றேனே; என் அம்மா திறந்தாய் கடந்த இராத்திரி?

அபி.—நடுச்சாம வேளையில் யாரோ ஒருவர் கதவைத் தட்டினதைக் கேட்டு, கதவைத் தட்டுகிறது யார் என்றேன். நான் தான் ரூத் என்றதைக் கேட்டுச் சில விசை அத்தையம்மா ஏதோ ஒரு அவசர நிமித்தம் வந்தார்கள் என்று விளக்கேற்றிக் கதவைத் திறக்கவே, அவர் வீட்டுக்குள் பிரவேசித்ததைக் கண்டு எனக்கு மெத்த பயமுண்டானது. அந்நேரத்தில் உங்களைக் கூப்பிடக்கூட எனக்கு நினைவு வரவில்லை.

ஈசா.—எப்பேர்ப்பட்ட அயோக்கியன் இவன்! தேவபயமும் மனிதபயமும் அற்ற சண்டாளனாய் விட்டானே! இப்பேர்ப்பட்ட கேப்புமாறியையும் துர்மார்க்கனையும் நான் பார்க்கவே இல்லை.

சந்தேக மின்றி அவனே குழந்தையை எடுத்துக் கொண்டு போயிருக்கவேண்டும் என்று பவுல்போதகர் வீட்டுப் பக்கமாய்ப் புறப்பட்டார். கோவிலுக்குப் போகும் பவுல் போதகரிடம் அன்று இராத்திரி தன் வீட்டில் நடந்த கோஷ்டத்தைப்பற்றி விவரித்துக் கொண்டே இருவரும் கோவிலுக்குப் போய்ப் பூசை கண்டார்கள். பூசை நேரத்தில் உபதேசியார் ஒரு மூலையில் முழங்காலிலிருந்து தன் பேரப்பிள்ளை காணாமல் போனதை நினைத்துச் சொல்லி முடியாத துக்கங்கொண்டு, அதைச் சர்வேசுரன் தனக்குக் கொடுக்கும்படி மகா பத்தி உருக்கத்துடன் கண்ணீர் சிந்தி மன்றாடினார்—————பவுல் போதகரும் அதே கருத்துடன் திவ்விய பூசை கண்டார்—— பூசை முடிவாகவே, போதகர் விஸ்வாச நாயகருக்குக் குழந்தை காணாமற்போன சங்கதியை அறிவித்து, ஈசாக் உபதேசியாருடன் இருவரும் சேர்ந்து பேசிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.



அபிராமியோ கன்றை இழந்த பசுபோல கதறி யழுது படத்துக்கு முன் சாஷ்டாங்க தண்டனிட்டு, "ஸ்வாமீ! நீர் எனக்கு அனுப்பிய சிறுவையைச் சுமப்பதற்கான பலத்தைக் கொடும். பாலனை உம்மிடம் அழைத்துக்கொண்டால் நலமாயிருக்கும்; ஆனால் அபத்த மதத்தார் கையில் அகப்படாதபடி செய்யும்."

"ஓ! பரிசுத்த கன்னிகையே! வியாகுல மாதாவே, உமது திருக்குமாரன் மூன்று நாள் அளவாய்க் காணாமல்போனபோது எவ்வளவோ துயரங் கொண்டீர்! பிள்ளையின் அருமை அறிந்த தாயே! அடியாள் மீது கிருபை கண்ணோக்கியருளும். நான் என் பாலனை எவ்வளவு அருமையாய் நேசித்தேன் என்று அறிவீர்! இப்போதோ, ஐயையோ! அந்த மாணிக்கத்தை இழந்து பரிதவிக்கும் என்மீது கிருபை கூர்ந்தருளும். எத்தனையோ நிர்ப்பாக்கியருக்கு உதவி புரிந்தீர்! எத்தனையோ பேருடைய கண்ணீரைத் துடைத்து ஆறுதல் உண்டாக்கினீரே! என் ஆண்டவளே! தாயே! உமது திருக்குமாரனுக்குச் சித்த மிருந்தால் என் அருமைப் பிள்ளையை என்னிடம் சேர்க்கத் தயை கூர்ந்தருளும்," என்று மகா தாழ்ச்சி வினயத்துடன் மன்றாடினாள்.

விஸ்வாச நாயகரும் ஈசாக் உபதேசியாரும் பவுல் போதகரும் வீட்டில் பிரவேசிப்பதைக் கண்ட அபிராமி கண்ணைத் துடைத்துக்கொண்டு பெருமூச்சு தேம்பலுடன் உள்ளறைக்குள் சென்றாள்.

ஈசா.—சலமோன்தான் குழந்தையைக் கொண்டுபோ யிருப்பானென்று நினைக்கிறீரோ, ஐயா?

விஸ்.—அவன்தான் என்று நம்புகிறேன்.

பவு.— அவன் விளக்கை அவித்தபோதே குழந்தையை யெடுத்திருக்கவேண்டும். நாம் இப்போது சும்மா பேசிக்கொண்டிருப்பதால் காரியமில்லை; குழந்தையைத் தேடுவது புத்தியென்று போதகரும் நாயகரும் எழுந்து, நாலைந்து, நாலைந்து பேரை வரவழைத்து நாலா பக்கமும் போய்ப் பிள்ளையைத் தேடும்படி அனுப்பிவைத்தார்கள். சிலவிசை குடி வெறியால் சலமோன் குளத்தில் குழந்தையுடன் விழுந்திருப்பானென்று நினைத்து செம்படவரை விட்டு குளத்தில் வலை வீசி பார்க்கும்படி செய்தும் ஒன்றும் தென்படவில்லை.

நாயகரும் போதகரும் முத்துப் பிள்ளையுடன் சேர்ந்து, சாராயக் கடைக்காரனைப் பயமுறுத்தி, அவனிடத்தில் சலமோன் சிலவிசை குழந்தையை விற்றுப்போட்டானோ என்று வினவினபோது. அவர்களுடைய உத்தரவுப்படி தான் சலமோனுக்கு சாராயம் வார்ப்பதில்லை யென்றும் அது முதல் அவன் கடைக்கு வருவதில்லை யென்றும் சொன்னான்.

அன்று மத்தியானம் மணியக்காரருடைய உதவியால் 3 மைல் தூரத்திலுள்ள குறவர் வசிக்கும் ஊருக்குப் போய் விசாரித்துப் பார்த்தும். குழந்தை அகப்படாதபடியால் ஈசாக் உபதேசியார் தன் பேரப்பிள்ளை போன விஷயத்தைப்பற்றிப் போலீசாருக்கு அறிக்கை செய்தார். அவர்களும் நாலா ஊர்களுக்குந் தந்தி கொடுத்து விசாரித்துப் பார்த்தும் பிள்ளை போனபோக்குத் தெரியவில்லை. சலமோனுக்குக் குடிக்கக் கொடுத்துச் சங்கதியை அறிந்து கொள்ளலாமென்று பார்த்தாலோ, அவன் போன போக்கும் தெரியவில்லை! விஸ்வாச நாயகரும் பவுல் போதகரும் ஊர் ஊராய்ப்போய் விசாரித்துப் படாதபாடெல்லாம் பட்டாலும் குழந்தையின் புலம் அகப்படாதபடியால் 16-ம் நாள் ஊருக்குத் திரும்பினார்கள்.

சலமோன் கடன்காரருக்குப் பயந்து சிறு பாலனை விற்றுப்போட்டு அந்தப் பணத்துக்குக் குடித்திருக்க வேண்டுமென்று எல்லோரும் நிச்சயித்தார்கள்.

இதனால் அபிராமிக்கும் ஈசாக் உபதேசியாருக்கும் உண்டான துக்க துயரம் நாவால் சொல்லுந் தன்மையல்ல. இரவும் பகலும் கண்ணீர் சிந்தி அழுதார்கள். அபிராமியோ அன்னாகாரமின்றி, அழுத கண்ணும் சிந்தின மூக்குமா யிருந்தாள். தன் மகன் காணாமல் போனதில், தன் வீடு பிரகாசமின்றி அந்தகாரமாய்ப் போனதென்பாள். தன் ஆடையாபரணமெல்லாம் மாயமாய்ப் போனதென்று துக்கிப்பாள். "இனி உலகத்திலிருந்து பலனில்லை, ஸ்வாமீ! என்னையும் என் பிள்ளையுடன் உமது சமூகத்துக்கு அழைத்துக் கொள்ளும்" என்று புலம்புவாள். இந்தத் துக்கத்தால் அபிராமி வியாதியாய் விழுந்து வெகுநாளைக்குப்பின் குணமடைந்தாள். நாள் போகப் போக இவளுடைய துக்க வியாகுலம் குறையாமல் அதிகரித்துக்கொண்டே வந்தது. கடைசியாய் இவளுக்குப் பிள்ளையைப்பற்றி சுபாவமாக உண்டாகு மிதமிஞ்சின பக்ஷ அன்பை விஸ்வாசம்

மேற்கொண்டது. அதெப்படியெனில், ஒரு நாள் படத்துக்குமுன் தன் பிள்ளையைப்பற்றி நினைத்துக்கொண்டு செபிக்கும் சமயத்தில், திடீரென்று அவள் இருதயத்தில் மாற்ற முண்டாகி, முற்காலத்தில் ஜெருசலேம் வீதியிலுண்டான துக்கத்துக்குரிய காக்ஷி அவ ளிருதயத்தில் பளிச்சென்று காணப்பட்டது. மகா துக்க வியாகுலத்துடன் பாரமான சிலுவை சுமந்து போகும் நமது பரம கர்த்தரைத் துஷ்ட யூதர் அடித்து உதைத்துத் தூஷணங்களைக் கக்கிக்கொண்டு அவரைக் கபாலமலைக்குத் தள்ளிக்கொண்டு போகிறதைக் கண்டாள். தம்மைப்பற்றி அழும் புண்ணிய ஸ்திரீகளை நோக்கி "பச்சை மரத்துக்கு இப்படியானால் பட்ட மரத்துக்கு என்ன சம்பவிக்கும்!" என்னும் வார்த்தைகள் அவள் காதில் விழுந்தன. உடனே அபிராமி கர்த்தரை நோக்கி, "ஸ்வாமீ! என் பாவத்தைப் பொறுத்தருளும். தெரியாமல் செய்தேன். உமது சிலுவைக்கு என் சிலுவை தக்கையிலும் இலேசானது; இனிமுறையிடேன். தேவரீர் இப் பெரும் பாத்திரத்திலுள்ள கசப்பான பானத்தை அருந்தியிருக்க, ஒரு துளியாகிலும் நான் ருசிபார்க்காதிருப்பது உம்மைப் பின்செல்லும் அடையாளமல்ல. ஆகையால், ஆண்டவரே! இப்போது தேவரீர் அடியாள் மீது சுமத்தின சிலுவை மாத்திரமல்ல இதிலும் மகா பாரமான சிலுவையையும் சுமக்க தயாராயிருக்கிறேன்" என்று எழுந்து முன்போல சந்தோஷத்துடன் தன் வேலையைப் பார்த்து வந்தாள்.

குழந்தையைப்பற்றித் துக்கித்து அழும் தன் தகப்பனுக்கு ஆறுதல் சொல்லி, "சர்வேசுரனுடைய திருச்சித்தத்துக்கு நாம் அமைந்து இருக்க வேண்டும். ஜோபுக்கு உண்டான துன்பத்திலும் இது பெரிதல்ல" வென்று அவள் சொல்லும் புத்தியால் ஈசாக் உபதேசியார் ஆறுதல் அடைந்தார்.

யாராகிலும் குழந்தையைப்பற்றிப் பேசும் பொழுது: அபிராமி, சகலமும் தேவ சித்தத்தால் உண்டாகிறபடியால் அவர் சித்தம் வாழ்த்தப்படக்கடவ தென்பாள். தன் தகப்பனுடன் சேர்ந்து நாடோறும் இராச்செபம் செய்யும்போது "கருணை நிறைந்த கர்த்தரே! அந்த நிர்ப்பாக்கிய மனிதன் மனந் திரும்பச் செய்யும். என் குழந்தை அபத்த வேதக்காரர் கையில் அகப்படாமல் சத்திய வேதக்காரர் கையில் வளரும்படி செய்யும்" என்று உருக்கத்துடன் செபித்துவருவாள்.

அபிராமி நர்ஸ் வேலையில் தேர்ந்தவளாதலால், அவ்வூரிலுள்ள சொற்ப வியாதிக்காரருக்கு வைத்தியம் பார்ப்பாள், சிறு பிள்ளைகளுடைய வியாதியைப் பார்ப்பதில் கெட்டிக்காரியாகையால், தாய்மார் தங்கள் குழந்தைகளை அபிராமியிடம் கொண்டுவந்து காட்டுவார்கள். அபிராமியோ சகலருக்கும் பக்ஷ அன்புடன் மருந்து கொடுத்து விசாரிப்பாள். ஏழைகளானவர்களுடைய குழந்தைகளுக்கு இனமாய் மருந்து கொடுப்பாள். பத்தியத்துக்கு வேண்டிய செலவையும் அவர்களுக்குக் கொடுப்பாள். தன்னைக் கேட்கும் எந்த ஏழைக்கும் தர்மம் இல்லை யென்னாள். இந்த புண்யவதியின் பக்தி விஸ்வாசத்தையும் தர்ம குணத்தையுங் கண்டவர்கள், இவள் பெண்ணாய்ப் பிறந்தும் மனிதாவதாரம் எடுத்த சம்மனசு என்று கூப்பிடுவார்கள் அபிராமியை.

தன் வீட்டு வேலையை அசட்டை செய்யாததுடன்; அடிக்கடி கோவிலுக்குப்போய்ச் செபஞ் செய்வாள். வாரந்தோறும் பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்குவாள். வியாதிக்காரரான ஏழைகளை அடிக்கடி சந்தித்துத் தன்னால் கூடிய உதவி புரிவாள் அவர்களுக்கு. துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லி; ஒரே வார்த்தையில், இவள் சகல புண்ணியங்களையுங் குறைவற நிறைவேற்றிச் சுமுத்திரையாய் நடந்து வந்தபடியால். அவ்வூருக்கு அபிராமி சுக்கிரன்போலப் பிரகாசித்து வந்தாள்.

## HOW TO RAISE OUR STATUS?

## முன்னேறுவதெப்படி?

### முதல் வியாசம்.

### ஜாதிப்பேய்.

[ஜாதி வித்தியாசம் பாராட்டுதல் அதாவது, ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினர் விஷயத்தில் தாரதம்மியம் பார்த்து, அதற்கேற்ப விகற்பமாய் நடந்துகொள்ளுதல், எக்காலத்தும், எத்தேசத்தாரிடத்தும் வழங்கிவருகிற வழக்கம். ஆனால், இவ்வழக்கம் இவ்விந்தியா தேசத்தில் மற்றெல்லா தேசங்களிலும் விட, மிகு கண்டிப்பாயும், பிறர் சிநேகமின்றி வரம்பு கடந்த விதமாயும் அநுசரிக்கப்பட்டு வருகிறது. இதனால் இத்தேசத்தில் ஜாதிகள் பெருகிக் கிடக்கின்றன. இந்தியர்கள் வெவ்வேறாய்ப் பிரிவினைப்பட்டு,



ஒற்றுமையும் தேசாபிமானமும் மற்று: ஒரு தேசத்தாராய் ஒரே கட்டாய் யாதோர் காரியத்தை நிலைநின்று சாதிக்கமாட்டாதவர்களா யிருக்கிறார்கள். இவ்வித ஜாதி வித்தியாசம், அல்லது குறைந்த பட்சம் அதன் கொடூரம் அறவே ஒழிகிறவரையில் இந்தியா ஈடேறுவதற்கில்லை. இவ்விஷயம் இப்படி யிருக்க, உயர்ந்த ஜாதியார் என்போரால் நிராகரிக்கப்படுபவர்கள் தங்களுக்குப் பல விதத்திலும் சமத்துவங் கிடைக்காததைப்பற்றிச் சஞ்சலமுற்று மனமழிவது ஆச்சரியமல்ல. கல்வியும் நாகரிகமும் விருத்தி யடைந்துள்ள காருண்ய பிரிட்டிஷ் இராஜாங்கத்தில், பிறர் சிநேக முதலிய கிறிஸ்தவ தருமங்கள் போதிக்கப்பெற்ற கத்தோலிக்குச் சகோதரருக்குள்ளும் இவ்வித ஜாதி வித்தியாசத்தின் கோடூரம் நிலைத்திருப்பது மிக்க விசனத்துக்குரியது. உயர்ந்த ஜாதியார் என்போர்கள் தங்கள் கொடூரத்தைத் தணித்து மற்றவர்களைத் தயையோடும் பட்சத்தோடும் நடத்தவேண்டும். தாழ்ந்த ஜாதியார் எனப்படுவோரும், தங்களை அவ்வாறு இழித்துக் கூறுவதற்குக் காரணமாயுள்ள குறைகளைக் களைந்து, குணத்தை யேற்று மற்றையோர்கள் மதிக்கத்தக்க விதமாய் நடக்கப் பிரயாசைப்படவேண்டும். இன்னோர்கள் புறத்தி யுதவியை நாடாது தங்களுடைய விடாமுயற்சியால் தங்களைத் தாங்களே உயர்த்தும் வழி தேடவேண்டும். இவ்விஷயத்தைப்பற்றியே ஆசார சீர்திருத்தத்தில் தளரா ஊக்கமுடையவரும், தேர்ந்த அநுபவஞானமுடையவருமாகிய எமது அரிய நண்பர் ஒருவர் "முன்னேறுவதெப்படி?" என்னும் பின்வரும் வியாசத்தை எழுதுகிறார். இதை நமது சந்தாதாரர்கள், நிதானித்து வாசித்து அதன்படி நடக்கப் பிரயாசைப்படுவோர்களாக.—ப.—ர்.]

நமது குலத்தார் இந்தியாவின் பூர்வீகக் குடிகளென்றும் ஆதி திராவிடர்களென்றும் ஒரு காலத்தில் சிறப்புடன் அரசு புரிந்து வந்தவர்களென்றும், ஆனால் "பார்ப்பானுக்கு மூத்த பறையன் கேட்பாரற்றுக் கீழ்க்குலமானான்" என்றபடி நமது நாட்டில் புதியதாய்க் குடியேறிய அந்நிய ஜாதியார்கள் செய்த இம்சையால் இக்கதிக்குள்ளானார்களென்று சரித்திரம் கதிக்கிறது.

பசித்தவன் பழைய கணக்கைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பதைப்போல், நமது பூர்வீகத்தைப்பற்றி நாம் விசாரிப்பதை விட்டு நமது தற்கால ஸ்திதி எப்படிப்பட்டதென்றும் நாம் கடைத்தேற வழியுண்டோ இல்லையோ வென்றும் விசாரிப்பது விவேகம்.

கிராமங்களில் நமது ஜனங்கள் ஒரு விதமான அடிமைத்தனத்திற் குட்பட்டு படும்பாட்டை யறியாதவர் யார்? பூர்வ ரோமனர்களின் பிரஜாதிபத்தியத்தில் (Roman republic) கிருஷிக சட்டங்கள் (Agrarian laws) ஏற்படுமுன் பிளெபியர்களுடைய (Plebians) நிலைமை எவ்வாறு இருந்தனவோ, அதிலும் கேடுகெட்டது கிராமங்களி லிருக்கும் நமது குலத்தாரின் நிலைமையென்று அநுபோகஸ்தர்கள் அறிவார்கள். அங்கு அவர்கள் ஏழைகளாயும் அறிவிலிகளாயும் கொஞ்சம். சாப்பிட்டு அதிகம் உழைத்துச் சுய சொத்தின் சுதந்தர மின்னதென் றறியாமல் அகதிக்காகாயந்துணை என்றபடி அந்நியர்களுடைய பூமிகளில் உழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டு, ஜாதியாரால் அமுக்கி நசுக்கப்பட்டு, அநியாய வட்டிவாங்கும் கடன்காரர்களுக்குத் தங்களையும் தங்கள் மக்களையுமே ஆதாரமாகவைத்து, அடிமைப்பட்டு, மீள வழிதெரியாமல் பாடுபட்டு வருகிறார்கள். இவர்கள் தாங்களே முன்னுக்கு வர வழியறியாதவர்களாயும் புறத்தியாராகிய ஜாதிஜனங்களால் முன்னுக்குக் கொண்டுவர அபாத்திரராயு மிருக்கிறார்கள். மேலும் அநேக யுகங்களாய்ப் படிப்பின் வாசனை யறியாத அவர்கள் மூடர்களாயும், அநேக யுகங்களாய் ஆங்காரிகளால் இம்சிக்கப்பட்டுவந்த அவர்கள் கோழைகளாயுமிருக்கிறார்கள். அவர்களில் வருஷாந்திரம் ஆயிரக்கணக்கானபேர் அயல் பட்டணங்களுக்கும், மோரிஸ், சிங்கப்பூர், சிலோன் தென் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களுக்கும் குடியேறி கொஞ்சம் ஐவேசுடன் ஜீவித்துத் தங்கள் ஜென்ம கிராமங்களை நாளைக்கும் சபித்துவருகிறார்கள்.

பட்டணங்களிலிருக்கும் நமது குலத்தாரைப் பற்றியோவெனில், அவர்களும் பொதுப்பட ஏழைகளாயும், அறிவிலிகளாயும், ஜீவிக்க வகையறியாதவர்களாயுமிருக்கிறார்கள். இதை யோசிக்கும்போது நமது கதிதான் என்ன? நாம் முன்னுக்கு வரும் வழிதான் எப்படி? பூர்வ இஸ்ரா

யேஸித்தாரை யிரட்சித்த மோயீசனைப் போல ஒரு மோயீசன் நமக்குத் தோன்ற மாட்டாரோ வென்னும் சந்தேகம் பிறக்கிறது.

ஆனால் ஜலப்பிரளயத்தைக் கண்டு நடுங்கின ஜனங்களுக்கு நம்பிக்கைக் குறியாக ஒரு வானவில் தோன்றினதுபோல், நமது பொது நிலைமையைக்கொண்டு உள்ளங்கசிந்துருகும் நமக்கும் ஒரு நம்பிக்கை காணப்படுகிறது. அதேதெனில், இத்தனை நெருக்கிடைப்பட்டுவரும் நமது குலத்தாருள் சிலர் கல்வியைக் கையாடி, உத்தமர்களாய் ஒழுகி, குருக்கள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளாயும், கச்சேரிகளில், ஆபீசுகளில், ரெயில்வே டெலிகிராப், மெடிக்கல், டிபார்ட்மெண்டுகளில், வர்த்தகசாலைகளில், மிலிட்டேரியில் நற்பதவியடைந்து உத்தியோகஸ்தர்களாய் விளங்கி வருகின்றனர். சிலர் ஐரோப்பா மட்டும் போய் உயர்தரப் பரிட்சையில் தேறியிருக்கின்றனர். சிலர் ஐரோப்பிய நடை உடை பாவனைகளையனுசரித்துத் தங்களை ஈரோஷியன்களென்று சொல்லிக்கொண்டு இந்தியாவின் பலபாகங்களில் சிறந்த உத்தியோகங்களை வகித்து வருகின்றனர். இதைப் பார்க்கும்போது நமது குலத்திலும் ஒரு சத்து உண்டென்று தெரியவருகிறது. ஆதலால் (Longfellow) லாங்பெல்லோ என்னும் கவிவாணர் சொல்வதுபோல் நாமும் அவர்களுடைய காலடிச் சுவடுகளைப் பின்பற்றியாவது முன்னுக்கு வரக்கூடும். அப்படி ஒரு குடும்பத்தைப் பார்த்து ஒரு குடும்பம் ஞானப்போட்டி புரிந்து முன்னுக்கு வந்தால் ஒரு தெருவே சீர்படும். அப்படி பல தெருக்கள் சீர்பட்டால் ஒரு கிராமம் சீர்படும். பல கிராமங்கள் சீர்பட்டால் ஒரு பட்டணமே சீர்படும். பல பட்டணங்கள் சீர்பட்டால், நமது குலமே சீர்படும்.

இதற்கெல்லாம் நமது முயற்சியே தேவை. யார்யார் சுய முயற்சி யெடுத்து ஒரு நற்காரியத்திற்காக உழைக்கின்றனரோ, அப்படிப்பட்டவர்களுக்குக் கடவுள் கட்டாயம் உதவி புரிகின்றனர் என்பது ஒரு ஆங்கிலேய பழமொழி.

இவ்வளவாவது நாம் கடைத்தேற உதவி புரிந்த குருக்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் நாம் நன்றி பாராட்டி, நம்முள் ஒவ்வொருவனும் தன் தன் ஊதாரித்தனமான செலவை நிறுத்தி, நாலு பேர் எப்படி முன்னுக்கு வருகிறார்களென்று பார்த்து, கல்வியையும், கைத்தொழிலையும், நல்லொழுக்கத்தையும் கையாடி, க்ஷேமமாய் வாழாமல், அசட்டைத்தனத்தில் காலங் கழித்து, ஆடத்தெரியாத தாசி கூடம் பற்றாதென்றதுபோல், "நாங்கள் என்ன செய்வோம், ஜாதி யேற்பாட்டின் கொடுமையால் நாங்கள் இந்த ஸ்திதியி லிருக்கிறோம். ஜாதி யநுசரிக்கிறவர்கள் ஜாதியை விட்டு விட்டு எங்கள் மட்டில் பரிதாபங்கொண்டு எங்களைக் கடைத்தேற்றட்டும்," என்று வறட்டுத் தவளையைப்போல் கத்துவது என்ன நியாயம்?

ஜாதி யொழிந்தால் நாம் முன்னுக்கு வருவது சுலபம் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளக்கமான விஷயமே யாயினும், சமுத்திரத்தின் அலை நின்றால் நீந்துவேன், என்று சொல்லிய மூடனைப்போல நாம் ஜாதி ஒழியுமட்டும் காத்திருப்பது அவிவேகம்.

மேலும் சகலரையும் சமமாய் நடத்தி, ஏழைகளையும் திக்கற்றவர்களையும் அநுதாபத்துடன் பரிபாலிப்பது, கிறிஸ்துவேத லட்சணமே யாயினும், அச் சிறந்த லட்சணத்தை ஆயிரம் வருஷத்துக் கிறிஸ்துவர்களான ஐரோப்பியரிடம் மாத்திரம் எதிர்பார்க்கக் கூடுமே யொழிய, சிற்சில வருஷங்களுக்கு முன் சத்தியவேதத்தைத் தழுவி, இன்னும் அஞ்ஞான ஆசார வகைகளில் பெருமை கொள்ளும் புதுக் கிறிஸ்துவர்களிடம் எதிர்பார்ப்பது அநுபோகக் குறைவு.

ஒரு காரியத்தை மறக்கவொண்ணாது. ஜாதி யொழிந்தாலும் அந்தஸ்தென்பது ஏற்படும். இப்போதே அது ஏற்பட்டுவருகிறது. கல்வி, ஒழுக்கக் குறைவினால் நாம் தாழ்ந்த ஜாதியாரென்று நிராகரிக்கப்பட்டுவருவோமேயானால், ஜாதியொழிந்து அந்தஸ்தென்பது பூரணமாய் ஏற்பட்ட பிறகும், நாம் தற்காலத்திய நிலைமையிலேயே யிருப்போமே யானால், அப்போதும் நாம் தாழ்ந்தவர்களென்றே நிராகரிக்கப்படுவோம். அதற்கு மாறாக நாம் இப்போதே முன்னுக்கு வர முயலுவோமேயானால்



ஜாதிப் பேயானது உச்சாடன மின்றியே ஓடிப்போகும். சென்னை ஆசார சீர்திருத்த சங்கத்தில் ஒரு வித்துவான் சொன்னதுபோல் ஜாதியழிவென்பது பார்ப்பார் பறையராவதன்று, ஆனால் பறையர் பார்ப்பாராவது தான். அதாவது, உயர்ந்தோர் தாழ்ந்தோருடைய அநாசாரங்களைக் கைக்கொண்டு சீர் குலைவதல்ல, ஆனால் தாழ்ந்தோர் உயர்ந்தோருடைய ஆசார வகைகளைக் கைக்கொண்டு சீர்படுவதுதான்.

ஆதலால், நாம் முன்னுக்கு வரவேண்டுமேயானால், நம்முள் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். தங்கள் குடும்பங்களை விட்டு விட்டு ஆயிராயிரம் பணச் செலவு செய்து, தேச தேசமெல்லாம் சுற்றிப் பிரசங்கம் செய்து, அனைவரையும் சீர்திருத்தவேண்டு மென்பதல்ல. அது நம்மாலாகுங் கருமமன்று. ஆனால் ஒவ்வொருவனும் தன்னையும் தன் அயலானையும் சீர்திருத்தட்டும். சுயப்பரித்தியாகமின்றி ஒன்றும் ஆகப்போகிறதில்லை. ஒரு கல்லின்மேல் ஒரு கல் வைத்தால்தான் கட்டிடமாகும். தன் பசிக்குத் தான் சாப்பிடாவிட்டால் இன்னொருவன் வந்து ஊட்டுவானோவென்ன? நாம் தலை யெடுக்கக் கூடாதென்னும் நிர்ப்பந்தம் காருண்ய ஆங்கிலேய கவர்மெண்டில் இலவலேசமும் கிடையாது. பிரிட்டிஷ் சட்டமும், இந்தியன் பெனல்கோடும் (Indian Penal Code) யாவருக்கும் பொதுவாயிருக்கிறதே யொழிய, மனுவின் அதர்ம சாஸ்திரத்தைப்போல் ஜாதிக் கொருவிதமாயில்லை. அப்படி யிருக்க, நாம் கேவலம் யாசகர்களைப் போல் இவன் அவன் காலைத் தொட்டுக் கும்பிட்டு, "அப்பா, சாமி, என்னைக்கொஞ்சம் முன்னுக்குக்கொண்டுவா" என ஏன் பல்லைக் காட்டிக் கெஞ்சவேண்டும்? அப்படிக் கெஞ்சினாலும் நமது மட்டில் கரிசனைகொள்ளுபவர்கள் சர்க்காரும் கிறிஸ்துவ குருக்களும் தவிர, வேறு யாருங் கிடையாது. நாம் முன்னுக்கு வர ஒரே ராஜ பாட்டையுண்டு. அவ் விராஜ பாட்டையில் அநேகர் வழி நடந்து நமக்கு முன் மாதிரிகை காட்டி யிருக்கிறார்கள். அப்பாட்டை யேதெனில், சுய முயற்சியும் சுயப்பரித்தியாகமுமேயாம். அப்படிப்பட்ட சுய முயற்சியும் சுயப்பரித்தியாகமுங் காட்டுங்கால் எந்தச் சண்டாளனாவது நமது விருத்திக்கு இடைஞ்சலாயிருப்பானேயானால், அப்போது நாம் அதிகாரிகளை யண்டிப் போய் நமது குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளக் காரணமுண்டு.

இது தெரியாமல் சிலர் மட்டு மிதமின்றி, ஆயிரம் வருஷத்து மரத்தை நகத்தால் கிள்ள முயன்றதுபோல், ஜாதியின் மேல் கச்சை கட்டி, இங்கு மங்கும் அவதிப்பட்டு, குருக்களோடும் மற்றும் பெரியோரோடும் வீண் கலகம் செய்து, அதைப்பற்றிச் சில சமயம் வேத விசுவாசத்தையுமிழந்து, கடைசியாய்க் "குந்தினாயா குரங்கே உன் சந்தடியடங்க" என்று மூலையில் உட்கார்ந்து "ஓ! ஓ! நான் நமது குலாபிவிருத்திக்காக மெத்த உழைத்தேன். ஏராளமான பண விரையம் செய்தேன். அநுதாபப்படுகிறவர்கள் யாருமில்லை. ஜனங்களுக்குள் ஐக்கியமில்லை," என்று பெருமூச்சுவிடுவார்கள். அஸ்திவாரம் பலமா யிருந்தால்தானே கட்டிடமேறும். அஸ்திவாரமில்லாவிட்டால் கட்டிடம் எப்படி நிற்கும்?

ஜாதியைப்பற்றி நாம் கவலை கொள்வதே தகாது. அது போக்காலத்தில் போகும். அதற்கும் தலைவலி துவக்கியிருக்கிறது. இந்தியா தேசம் நமது வழிக்குத்தான் வருகிறது. அப்படி வராவிட்டால் அதற் கீடேற்றமே கிடையாது. இது என் வாக்கல்ல பெரியோர் வாக்கு. நாம் ஆத்திரப்படுவதில் பயனில்லை. நாம் நமது பாட்டைப் பார்த்துக்கொண்டு வீண் சந்தடியும் அமர்க்களமும் செய்யாமல், சுயவிருத்தியின் மட்டில் கண்ணுண்டாய் ஓரே சாதனையாய்ச் சாதித்து வருவோமேயானால், ஜாதி சூரியனைக் கண்ட இருளைப் போல் ஒழியும்

ஆதலால் நாம் விருத்தியடைய நமது சுயமுயற்சியும் சுயப்பரித்தியாகமுமே தேவை. இவை இரண்டோடுகூட கிறிஸ்துவேத அநுஷ்டானமு மிருக்குமேயானால் நமக் கென்ன குறை?

**இந்திய கிறிஸ்துவன்.**

குறிப்பு:—இவ்வியாசங்கள் வலங்கமத்தாரின் முன்னேற்றத்தைப்பற்றி யென்று பெப்பிரவரி மீ த்துச் சஞ்சிகையில் சொல்லியிருந்தபோதிலும், இவை

பொதுவாய் ஜாதியில்லாதவர்கள், அல்லது தாழ்ந்த ஜாதியாரென்னப்படும் பள்ளர், புலையர், செருமர் முதலிய சகலரையும் சார்ந்தவை யென்றறியவும்.

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### புன்னைக்காயல் கனவான்களுக்கு ஓர் அறிக்கை.

நல்லாயா!

நீ தமிழ் நாடெங்கும் சந்திரனைப்போல் ஜொலித்து அளவிறந்த நன்மைகளைப் புரிந்து வருவதைக் கண்கூடாய் கவனித்து வந்த யான், புன்னைக்காயலில் நடைபெறும் சில காரியாதிகளைப் பற்றி அறிக்கையிட ஆசித்து, இதனை எனது எளிய நடையில் எழுதத்துணிந்தேன். தயைபுரிவாய். சொற்பகாலத்துக்கு முன் புன்னைக்காயலில் கட்சிபுரளிகள் நடந்து இப்பொழுது வெகு அமரிக்கையாக இருப்பதை எவரும் அறிவார். இதற்குக் காரணம் தற்சமயம் புன்னைக்காயலில் பங்கு விசாரணை சங்கைக்குரிய குலே சுவாமியார் அவர்களே. புன்னைக்காயல் ஜனங்களுக்காக இவ்வருந் தாதை எடுக்கும் சிரமத்தை எவர் அளவிடுவார்! என்ன அன்பு, என்ன உழைப்பு! ஆ! என்னவென்று சொல்வது. வெயிலென்றும், மழையென்றும், கிஞ்சித்தும் கவனியாது, ஊர் நன்மை, ஜனநன்மையென்று எண்ணமும் ஏக்கமும்கொண்டு இரவும் பகலும் உழைத்துவரும் இந்நல்ல மேய்ப்பனுக்கு எவர் இணை யாவர்? அவர் வந்த இவ்வளவு சொற்பகாலத்தில் அவர் செய்யாத நன்மையென்ன? கல்விச்சாலை திறந்து ஏராளமான பிள்ளைகளுக்குப் படிப்பை யூட்டி, அவர்களை ஞானத்திலும் ஒழுக்கத்திலும் பழக்கி, அவர்களை நல்ல நிலைமைக்கும், மதிப்புக்கும் கொண்டுவர அவர் கொண்டிருக்கும் இந்நேச தகப்பனுக்குப் புன்னைக்காயல் கனதனவான்கள் செய்யும் பதில் உபகாரமென்ன? பழையகோவிலை இடித்து வெகு அலங்காரமாயுள்ள புதுப் பிளான் தருவித்து செவ்வையாக்கின்றவரும், அருந்த ஜலமின்றிப் பரிதாப நிலைமையில் தத்தளிக்கும் குடிஜனங்களுக்குச் சுத்தஜலம் கிடைக்க பைப்பு முதலிய ஏற்பாடு பண்ணுபவரும், ஏழைகளுக்கு இரங்குபவருமாகிய இவ்வுத்தம குருவுக்குப் புன்னைக்காயலர் எல்லோரும் நன்றி செலுத்துவதைத் தவிர்த்துச் சிலர் அந்நல்ல தந்தை செய்யும் நன்மைகளுக்கு இடையூறாக இருக்கின்றார்கள். இது தர்மமா? ஊர் நாகரீகத்திற்காகவும் படிப்பு முதலிய நன்மைகளும் செய்யக் காத்திருக்கும் இம்மேலான குருவுக்குப் புன்னைக் காயலர் எல்லோரும் உற்ற துணையாக நின்று அவருக்கு வரும் இடைஞ்சல்களுக்கு வேண்டிய உதவி செய்வதற்குப் பதிலாய் அவர்பேரில் வீண் வாது வழக்கு பேசுவார்களேயாகில் புன்னைக்காயல் நாளாவட்டத்தில் சீர்திருத்தத்திலும் கல்வி முயற்சியிலும் முன்னேற்றத்திலும் குறைந்துவரும் என்பதற்கு யாதோர் சந்தேகமுமில்லை. தம்தேசம் செழித்தோங்கவேண்டுமென்பது மானிடப் பிறவிகளின் இயற்கையான சுபாவம். ஐரோப்பா கண்டத்தில் வெகு உக்கிரமமாய் நடக்கும் யுத்தத்தை இதற்கு அத்தாட்சியாக எடுக்கலாம். ஒவ்வொரு அரசருக்கும் தம்தம் தேசம் விர்த்தியாகவேண்டுமென்றும், அதினால் வியாபார முயற்சி, செல்வாக்கு முதலியவைகள் உண்டாக வேண்டுமென்றுமிருக்கிறது. அதை யுத்தத்தினாலன்றி வேறெவ்விதத்திலும் பெற முடியாதெனத் தீர்மானித்துச் சகல கலையிலும் கீர்த்திவாய்ந்த ஜெர்மன் அரசு இந்தப் பாதக யுத்தத்தைத் துவக்கினது. தமது தேசத்தை அந்நிய அரசரிடம் சேரவிட்டுவிட்டால் இப்பொழுது இருக்கும் சுவாதீனமும், முயற்சியும், சீர்திருத்தமும் இராதென மற்ற கட்சிக்காரர் கண்டு ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான ஜனங்களை மடியவிடுகிறார்கள். ஏன்? தம் தேசத்திற்காகவே. இதைப்போலவே நாம் நமது ஊருக்காக உயிரைக்கொடுக்கவேண்டாம். கருணை நிறைந்த நமது அரசர் நமக்காக அவருடைய பிரஜைகளை இழக்கிறார். ஆனால் நமது ஊர் சீர்திருந்தவேண்டிய வழிப்பாடு பண்ணவேண்டும். அதெவ்வாறெனில், நமது விஷயத்துக்காக முகாண்மையாக விருக்கும் கனம் சுவாமியார் அவர்களுக்கு இடையூறு பண்ணாமல் காரியம் சித்திபெற வேண்டியவழி பார்க்கவேண்டும். இதற்கு முன் புன்னைக்காயலில் நடந்த கட்சி புரளிகளில் கோட்டு வியாச்சியங்களுக்காக எவ்வளவோ பணம் செலவானது; இதினாலடைந்த பலன் ஒன்றுமில்லை. இனிமேலாவது அவ்வித வீணான செலவுகளுக்குக் காரணமாகாமல் நல்ல வழியில் செலவு செய்தால் வெகு பிரயோஜனமாயிருக்கும். கோவில் விஷயங்களுக்காகக் கூடிய உதவி செய்வது வெகு மேன்மையாகும். இதனால் நாமும் நமது சந்ததியார்களும் ஆசீர்வதிக்கப்படுவோம்.

மாத்தறை. }
14-12-15. } இங்ஙனம்.

எஸ். எம். ஞானப்பிரகாசப்பர்னந்து.



### அர்ச். ஸ்தனிஸ்லாசுவின் சரித்திரச் சுருக்கம்.

(மொழி பெயர்க்கப்பட்டு இதனடியில் காணும் அர்ச். ஸ்தனிஸ்லாசுவின் சரித்திரம் (Australia) ஆஸ்டிரேலியா தேசத்திற் பிரசுரமாகும் திரு இருதயத் தூதன் பத்திரிகையில் 1912-ம் வருடம் ஜூலை மீ சங்கைக்குரிய (W. J. Watson. S. J.) W. J. வாட்சன் சுவாமி அவர்களால் இங்கிலிஷ் பாஷையில் எழுதப்பெற்றது.)

வெகு நாள் பரியந்தம் ஸ்தனிஸ்லாசுவின் இருதயத்தில் உலகத்தைத் துறந்து ஞானவானாவோமென்ற அசரீரி வாக்கு கேட்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அவ்வித நோக்கத்திற்குத் தமது தந்தை ஒருக்காலும் சம்மதிக்கமாட்டாரென எண்ணித் தமது அபிப்பிராயத்தை வெளியிட அச்சமும் கூச்சமும் கொண்டிருந்தார். பின்பு தமது அச்சத்தை வெகுவாய்ப் பழித்து, இது சர்வேஸ்வரனுக்குத் தான் காட்டும் நன்றிகெட்டதன மெனவும் தமக்கு இது ஓர் பெரும் பாதகம் எனவும் எண்ணினார்.

சேசு சபைமடத்தில் புகவேண்டுமென பரிசுத்த தேவதாய் தமக்குக் கட்டளை பண்ணியிருக்கிறாளென அறிந்ததால், இனிமேல் பயந்து தாமதிக்கக் கூடாதென அவர் தீர்மானித்து, உடனே (Rev. Fr. Provincial Lorenzo Maggi) சங். புரோவின்ஷியல் லோரன்சோ மாகி சுவாமி அவர்களிடம் சென்று தம்மை மடத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாக மன்றாடினார். ஆனால், ஸ்தனிஸ்லாசின் தந்தையின் அநுமதியும் அங்கீகாரமு மின்றி தம்மால் ஒன்றும் செய்ய முடியாதென அவர் சொல்லியதால், தந்தையின் உத்தரவு பெறுவது குதிரைக் கொம்பென நினைத்து, சகிக்க முடியாத கவலை கொண்டார். தாம் கொண்டது கடவுளின் சித்தமாதலால், தமது மனம்போல் ஓர் காரியம் செய்யத் துணிந்தார். அதாவது, தமது விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களைக் களைந்து, கந்தைத் துணியை அணிந்து, தமது இடுப்பைச் சிறு கயிற்றினால் சுற்றி, கரத்தில் ஓர் கோலும் கொண்டு இரகசியமாய் 1567-ம் வருடம் ஆகஸ்டு மாதம் (Vienna) வீயன்னா நகரத்திலிருந்து புறப்பட்டுவிட்டார். அவருடைய தந்தை அவரைக் காணாததால் மறு நாள் காலையில் அவரைத்தேடிப் பிடித்து வரும்படியாய் (Paul and Bilneski) பவுலும், பில்னிஸ்கியும் புறப்பட்டார்கள்.

வெகு விரைவாய் ஓடக்கூடிய குதிரைகளைப் பூட்டிய வண்டியில் அவர்கள் சென்றதால், ஸ்தனிஸ்லாசு போகும் பாதை வழியாய்ச் சென்றும் அவரைக் கண்டுபிடிக்கக்கூடாமற் போனார்கள். ஸ்தனிஸ்லாஸ் பீற்றல் வஸ்திரத்தை அணிந்து இருந்தபடியால் யாரோ ஓர் ஏழைப் பரதேசி திரு யாத்திரைக்காக இக்கோலமாகப் போகிறானென நினைத்து, அவர்கள் தங்கள் வழியே சென்றார்கள். குதிரைகள் கொஞ்சநேரம் ஓடியபின் இனிமேல் முன்னேற முடியாத சயிக்கினையாய்ப் பின் அடிவைக்க முரண்டு பண்ணியதால் (Paul) பவுல் ஸ்தனிஸ்லாசைத் தேடுவதற்குப் பதிலாய் (Vienna) வீயன்னா நகரத்துக்குக் குதிரைகளைத் திருப்பினான். ஸ்தனிஸ்லாசோ மன அக்களிப்புகொண்டு, அக்கம் பக்கங்களில் கிடைக்கும்போஜன பதார்த்தங்களைப் புசித்துக்கொண்டு தாம் நினைத்த இடத்திற்கு வழி நடந்தார். இவ்விதமாய் இவர் கால் நடையாய் 400 மைல் நடந்து, கடைசியாய் இளைப்பும் களைப்புமாய் (Augsburg) ஆக்ஸ்பர்க் பட்டணம்போய்ச் சேர்ந்ததும் நேராய்ச் சேசுசபை மடத்து (Provincial Fr. Peter Canisius) புரோவின்ஷியல் சங். பீற்றர் கனிசியுஸ் சுவாமி அவர்களைக் காணச் சென்றார். (Augsburg) ஆக்ஸ்பர்க் நகரமிருந்து புரோவின்ஷியல் (Diligen) டிலிஜென் நகருக்குப் போயிருக்கிறாரென இவர் கேள்விப்பட்டதும், யாதோர் ஆகாரமென்கிலும் இளைப்பாறுதலென்கிலும் எடுக்காமல், மற்றோர் சேசு சபை மடத்தைச் சேர்ந்தவரும் புரோவின்ஷியலைப் பார்க்கவேண்டியதா யிருந்ததால், இவருடன் ஸ்தனிஸ்லாசும்புறப்பட்டுவிட்டார். (Augsburg) ஆக்ஸ்பர்க் நகரிலிருந்து கொஞ்ச தூரம் வந்ததற்

கப்பால் ஒரு கோவில் இருக்கக்கண்டு அவ்விடத்தில் பிரயாணிகள் இருவரும் பூசைகண்டு திவ்விய நன்மை வாங்க ஆசித்தார்கள். கொஞ்ச நேரம் ஜெபித்த பின், இப் பரிசுத்த கோவிலை (*Lutherans*) லூத்தரன்ஸ் எனும் மதஸ்தர் சொந்தமாக்கிக் கொண்டார்களென அறிய வந்து, தாங்கள் திவ்ய நன்மை வாங்க முடியாமற் போனதையிட்டும் கத்தோலிக்குக் கோவில் புற மதஸ்தர் கைக்கீழ் இருப்பதையும் நினைத்து தாங்க வொண்ணா துக்க சாகரத்தால் தனிஸ்லாஸ் தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தார். அக்ஷணமே ஒரு கும்பலான தேவ தூதர்கள் மோட்ச அலங்காரமாய்த் தோன்ற, அதில் ஒரு தேவ தூதர் திவ்விய சற்பிரசாதத்தைக் கையிலேந்தி வெகு உருக்கமாய்த் தியானித்துக்கொண்டிருக்கும் இவ்விள வாலிபனுக்குக் கொடுத்தார். அவருடைய தியானம் வெகு உருக்கமானதினாலும் அவருக்கு இம் மேலான உபகாரம் கிடைத்ததினாலும் மன ஆறுதல்கொண்டு ஆநந்த மகிழ்ச்சியுடன் உலக கோடி வரை இனி யாதோர் இளைப்பும் களைப்பும் இல்லாமல் சொல்லக்கூடிய விதமாக அவருக்குத் தோன்றியது. (*Diligen*) டிலிஜென் நகரில் சேர்ந்து புரேவின்ஷியலைக் கண்டதும் அவருடைய பாதங்களில் வீழ்ந்து தம்மைச் சேசுசபை மடத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கெஞ்சினார். கனம் (*Canisius*) கனிசியுஸ் சுவாமியவர்களோ, கட்டி அரவணைத்து அவரைத் தமது விசாரணைப் பகுதியாகிய (*Upper Germany*) வடஜெர்மனிக்குக் கூட்டிச் செல்வதாகச் சொன்னார். அப்படியானால் தமது உற்றார் ஊருக்குச் சமீபத்தில் இருக்கவேண்டி வருமெனச் சிந்தித்தார். சொற்பகாலத்திற்குப்பின் இரண்டு சேசு சபைக்காரர் ரோமாபுரிக்குச் செல்லவேண்டியிருந்ததால், அவர்களுடன் ஸ்தனிஸ்லாசையும் அனுப்ப ஆசித்து, அவரை அன்று தொட்டு ஓர் நோவிசாகப் பாவித்துக் கொள்ளும்படியாக ஆக்ஞாபித்தார். இவ்வித உறுதிப்பாடு ஸ்தனிஸ்லாசுக்கு மகா பாக்கியத்தைக் கொடுத்தது. ஸ்தனிஸ்லாஸ் (*Diligen*) டிலிஜன் நகரில் கொடுத்த திடமான வாக்குத்தத்தத்திற்கும் உறுதியான நிலைமைக்கும் ஞாபகமாக அவர் ஜீவித்த அறையை அவர் மரித்த பின் ஓர் தேவாலய மாக்கிக்கொண்டார்கள். (*Fr. Canisius*) சங். கனிசியுஸ் சுவாமி அவர்கள் அனுப்பும் மூவரையும் பற்றி சேசுசபை சிரேஷ்டஜனரல் (*St. Francis Borgia*) அர்ச். பிரான்சிஸ் போர்ஜியாருக்கு கடிதமூலியமாக எழுதியதுடன் ஸ்தனிஸ்லாசைப்பற்றிக் குறித்ததாவது: "நான் அனுப்பும் மூன்றாவதாளாகிய ஸ்தனிஸ்லாஸ் (*Pole*) போல் ஜாதியில் ஓர் உயர்குலத்தில் பிறந்து புண்யத்திலும், படிப்பிலும் சிறந்த சிறுவர். இவருடைய தாய்தந்தையர் இவரைக் குருமடத்திற்கு அனுப்ப இடைஞ்சல் செய்ததினால் (*Vienna*) வீயன்னா தேசத்துக் குருக்கள் இவரை நோவிசாக எடுக்கப் பயப்படுகிறார்கள். வெகு காலமாய் இவருடைய மனதில் தோன்றிய எண்ணத்தை நிறைவேற்ற என்னிடம் வந்தார். சில வருடங்களுக்கு முன்னமே இவர் சேசுசபை மடத்தில் சேர்வதாக தம்மில் தாமே சத்தியம் பண்ணிக்கொண்டார். இவருடைய நடக்கையைக் கண்டறிய காலேஜில் மடத்துப்பிள்ளையாக வைத்திருந்தேன். அங்கே இவர் ஒவ்வொரு விதத்திலும் நல்ல மாதிரியாக நடந்து, தனக்குக் குறிக்கப்பட்ட எல்லா அலுவல்களிலும் சுறுசுறுப்பும் நற்குணமு முடையவராக இருக்கக் கண்டேன். இவருடைய பெற்றோர் சமீபத்தில் இருப்பதால் தொந்தரவு உண்டாகுமெனப் பயந்து தூர தேசமாகிய ரோமாபுரிக்குப் போய்த் தமது பத்தி முயற்சியையும் பிரயாசத்தையும் விருத்திபண்ண வேண்டுமென்கிற எண்ணம் இவருடைய இருதயத்தில் குடிகொண்டிருக்கிறது. இதுவரை இவரை நமது நோவிஸ்களுடன் சேர்க்க வில்லை. ஆனால் நோவிசாக இருக்கக் குறிக்கப்பட்ட காலங்களை ரோமா புரியிலேயே நம்முடைய நோவிஸ்மார்களுடன் முடிக்க ஆசைப்படுகிறார். நான் இவரிடம் அநேக பெரும் காரியங்களுக்கு எதிர்பார்த்திருக்கிறேன்." என்று எழுதியிருந்தார்.

இதுபோக இன்னும் இரண்டு கடிதங்களில் எழுதியதாவது "ஸ்தனிஸ்லாஸ் மேல்குலத்துதித்த ஓர் உத்தம (*Pole*) போல் ஜாதிச் சிறுவர். இவருடைய பெற்றோர் வெகு விரோதமாய் இருந்தபோதிலும் நம்முடைய ஜீவியத்தைப் பின்பற்று மாசை இவருடைய இருதயத்தில் உற்பத்தியாகிக்கொண்டே யிருக்கிறது." என்றும் மற்றோர் கடிதத்தில் (*Pole*) "போல் ஜாதியைச் சேர்ந்த ஸ்தனிஸ்லாசு மேலான குலத்துதித்த ஓர் நல்ல வாலிபர்." என்றும் எழுதப்பட்டிருந்தது.

இம்மூன்று வழிப்பிரயாணிகளும் ரோமாபுரிக்கு நூற்றுக்கணக்கான மைல்கள் போக வேண்டியதாதலால் (*Alps, Apennines*) ஆல்ப்ஸ், அப்பினைன்ஸ் மலைச்சாரல்களைக் கடந்த



நேர்ந்தது. வழியில் பிச்சைவாங்கித் தங்களுடைய பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். கடைசியாய் இம்மூவரும் இளைப்பும் களைப்பும் தொய்வும் ஆயாசமுங்கொண்டு 1567-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25 உ (*Flaminian Gate*) பிளாமினியன் கேட் வழியாய் ரோமாபுரி வந்து சேர்ந்தார்கள். சேசுசபை சிரேஸ்ட ஜெனரல் (*Fr. Francis Borgia*) சங். பிரான்சிஸ் போர்ஜியார் இம்மூவரையும் வெகு அன்பாய் ஏற்றுக் கொண்டார். ஸ்தனிஸ்லாஸ் தமது அலுவலாகிய நோவிஸ் வேலையை (*Saint Andrea*) சன்ட் அன்றீயா வென்னும் நோவிஸ் மடத்தில் செவ்வையாய்ச் செய்துவந்தார். அநேகந் தடவைகளில் இவர் ஆயாசத்தால் கீழேவிழுந்தார். தமது அந்தியகாலத்தை இவர் முன்னாடியே அறிவித்தார். பின்னும் பரிசுத்த கன்னிமரியாயி மோட்சத்திற்குச் சென்ற தினத்தன்று அந்த மேலான தாய்க்கு மோட்சத்தில் புரியும் மங்கள வாழ்த்தலுக்குத் தாமும் பங்காளியாக இருப்போமென்று திருவாய் மலர்ந்தருளினார். அதாவது 1568-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15 உ பரிசுத்த தாய் பரலோகத்திற்குப்போன திருநாளைக்கு மூன்றுநாளைக்கு முன்னமே ஸ்தனிஸ்லாஸ் வியாதியாய் விழுந்தார். மறுநாள் அன்று அவருடைய வியாதி அதிகமானதால் அவஸ்தை முதலிய கடைசித் தேவதிரவிய அனுமானங்கள் யாவும் வெகு பக்தியாய்ப் பெற்றார். அவர் உத்தம மனஸ்தாபத்தோடு மரிக்கவேண்டுமென அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தார். இறுதியாய் இவருடைய படுக்கையை மற்றோர் இடத்திற்கு மாற்றினார்கள். இவருடன் சேர்ந்த நோவிஸ்மார்களெல்லாரும் இவருடைய படுக்கையைச் சுற்றி கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தார்கள். தாம் செய்த குற்றங் குறைகளுக்கு மன்னிப்புக்கேட்டும், அவர்கள் செய்த உபகாரங்களுக்கு நன்றியும் செலுத்தினார். இவ்வுலகத்தை விட்டுப்பிரிய ஆசையாவென்க "ஆம், எனது இருதயம் தயாராக இருக்கிறது; என் ஆண்டவரே! என் இருதயம் தயாராக இருக்கிற" தென்றார். பரலோகமாதாவின் பெருநாள் உதயமாச்சுது. அவர் உரக்க ஜெபித்துக்கொண்டிருந்ததை நிறுத்தினார். ஆச்சரியமும் சந்தோஷமும் அவருடைய உதடுகளில் காணப்பட்டது. புந்நகை அவர் உதடுகளிலிருந்து புறப்பட்டது. தம்மைச் சுற்றி பரிசுத்த தாயும் தேவ தூதர்களும் சூழ நிற்பதாகச் சொல்லி ஊழியுள்ளகாலம் பாக்கியம் அனுபவிக்க அவருடைய ஆத்துமம் அவருடைய உடலைவிட்டு நீங்கியது. 1726-ம் வருடம் அவருக்குப் பரிசுத்த 13-ம் ஆசீர்வாதப்பரென்னும் பாப்பரசரால் அர்ச்சியசிஷ்ட பட்டம்கொடுக்கப்பட்டது."

அர்ச். தனிஸ்லாசுவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மாத்தறை.
23—1—16. }

இங்ஙனம்.
J. பிச்சை றெட்ரிகஸ்.

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

**இங்கிலீஷ் பாஷை.**—இப்பாஷை உலகத்தில் பதினான்கு கோடி ஜனங்களாற் பேசப்படுகிறது.

**ஐரோப்பாவில் அரசாளுகிறவர்களின் தொகை.**—12 இராசாக்களும், 3 சக்கரவர்த்திகளும், 3 பிரசாதிபதிகளும், 1 இராணியும், ஒரு சுலுத்தானும் ஆக இருபது பேர் அரசாட்சி செய்து வருகிறார்கள்.

**ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை.**—இந்தச் சர்வகலாசாலையைச்சேர்ந்த அச்சுக்கூடத்தில் 150 பாஷைகளில் அச்சடிக்கும்படியான சாதனங்களும் கருவிகளும் இருக்கின்றனவாம்.

**பாத்தியஸ்தரற்ற மணியார்டர்கள்.**—இங்கிலாந்தில் மாத்திரமே இவ்வித மணியார்டர்களால் தபாலாபீசுக்கு வருஷம் ஒன்றுக்கு அறுபதாயிரம் ரூ கிடைக்கின்றதாம்.

**100-நாட் பலன்.**—"பரிசுத்த ஜெபமாலையின் இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று பத்தியோடு சொல்லும் ஒவ்வொரு முறைக்கும் நூறு நாட் பலனை அர்ச். பாப்பானவர் அளித்திருக்கிறார்.

**சண்டையிற் சுடும் குண்டு.**—போர் முனையில் உபயோகிக்கப்படும் இக்குண்டு ஒவ்வொன்றும் ஏறக்குறைய எழுபது பவுண்டு நிறையுள்ள தென்றும், அது வெடிக்கும் போது 1,200 துண்டுகளாக உடைந்து சிதறுகிறதென்றும் தெரியவருகிறது.

**பண்டயணியில் சேவிப்போருக்குப் பத்திரிகைகள்.**—தற்காலம் யுத்தமுனையினின்று போராடுகிறவர்களும் காயப்பட்டவர்களும் வாசிக்கும்படியாக அனுப்பப்பட்ட பத்திரிகைகளும் புத்தகங்களும் பதினைந்து இலட்சமாம்.

**சோப்புக்குப் பதிலாக ஆரேஞ்ச்.**-புளோரிடாவி லுள்ளவர்கள் தங்கள் வீட்டுத்தளங்களைச் சுத்திசெய்யவும் சோப்பைக்கொண்டு சுத்தி செய்யக் கூடிய சகல வேலைகளுக்கும் ஆரஞ்ச் பழங்களையே உபயோகிக்கிறார்களாம். அவற்றைக்கொண்டு சுத்தி செய்யப்பட்ட சாமான்களனைத்தும் மெத்த பளபளப்பா யிருக்கின்றனவாம்.

**யுத்தக்கைதிகள்.**-ஜெர்மனியரிடம் அகப்பட்டிருக்கும் யுத்தக்கைதிகள் 14 லட்சத்து 30 ஆயிரம். பீரங்கிகள் 9 ஆயிரத்து 700. துப்பாக்கிகள் 13 லட்சம். மெஷின் பீரங்கிகள் 3 ஆயிரம். அன்றியும் பலபீரங்கிகள் போர்முனையில் ஜெர்மனியரால் நாசமாகப்பட்டன. நாசமடையாத பீரங்கிகளை அவர்களே உபயோகிக்கிறார்களாம். பிரித்தானியாவில் 13,821 ஜெர்மன்கைதிகளும் நட்டுக்காவலில் வைக்கப்பட்ட 3,218 ஜெர்மனியரும் இருக்கிறார்களாம்.

**ப்ரஸல்ஸ்.**—பெல்ஜியத்திலுள்ள இந்நகரத்தில் அன்னாகாரமின்றி வருந்துகிறவர்களின் தொகை நான்கு இலட்சமாம். யுத்தத்தினால் வருந்தும் பெல்ஜியம், போலாண்டு தேசங்களுக்கு உதவி புரிய அர்ச். பாப்பானவருடைய கோரிக்கையின்படி இந்தியாவிலுள்ள பல மேற்றிராசனங்களில் நிதி சேர்க்கப்பட்டு வருகிறதை நம் சந்தாதாரர்கள் அறியாதவர்களல்லர். துன்பத்துக்குள்ளா யிருக்கும் இத்தேசத்தவர்களுக்கு நாம் உதவி புரிவது பெரும் புண்ணியமாகும்.

**வெள்ளைக் காகம்.**—யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கழுத்துறையிலே யுள்ள நாகோடா என்னு மூரில் அப்புஹாமி என்பவர் ஒருவர் வெள்ளைக் காகம் ஒன்றை வைத்து வளர்ந்து வருகிறாராம். பேதைச்சனங்கள் அதை யொரு பூச்சியப் பொருளாகப் பாவித்து அதன் தரிசன மடைய வருகிறார்களாம். இப்படி வருகிறவர்கள் அக் காக மிருக்குங் கூட்டில் அது எச்சமிடுந் தட்டுக் கருகில் வைத்திருக்கும் உண்டிப்பெட்டியில் தருமம் போடுகிறார்களாம்!! இதுவும் காசு பறிக்க ஒரு வழிபோலும்.

**வாழைநாரெடுக்கும் யந்திரம்.**—மைசூரில் தொழில் டைரக்டரா யிருந்துவரும் மிஸ்டர் சாட்டர்ட்டன் என்பவர் வாழைமட்டையிலிருந்து நார் எடுக்க ஒரு யந்திரங் கண்டுபிடித்திருப்பதாகத் தெரியவருகிறது. இதன் உதவியால் எடுக்கப்படும் நார் மிக வெண்மையாயும் உறுதியாயும் இருக்கிறதாம். யந்திரத்தின் விலை ஐந்நூறு ரூபாய்க்கு மேலில்லையாம். அதைக்கொண்டு கற்றாழை முதலியவைகளிலிருந்தும் நாரெடுக்க முடியுமாம். ஸ்திரீகளுங்கூட அந்த யந்திரத்தை உபயோகிக்கக் கற்றுக்கொள்ளக்கூடுமாம்.

**மடகாஸ்கர்தீவில் எருத்துப்பட்டாளம்.**-மடகாஸ்கர்தீவானது குதிரைகள் ஜீவிக்கக்கூடிய பூமியல்ல. அவை அவ்விடத்தில் பலவித பிணிகொண்டு சொற்ப காலத்துக்குள் மரித்துப்போகின்றன. ஆகையால், இக்குறையை நிவர்த்திக்குமாறு சர்க்கார் பீரங்கிகளை யிழுக்கவும் மற்றும் யுத்த தளவாடங்களைக்கொண்டு போகவும் எருதுகளை வைத்துப் பழக்குகிறார்கள். குதிரைப்பட்டாளத்தைப்போல் எருத்துப்பட்டாளம் அவ்வளவு வேகமுள்ளதாயில்லை யாயினும் காரிய பாகங்களைக் கண்டுபிடித்துச் செய்வதில் குதிரைப்படைக்குப் பிந்தின தல்லவாம்.

**காகித உடை.**—ஜப்பான் தேசத்தில், மல்பெரி என்ற ஓர் மரத்தின் பட்டையினின்று செய்யப்படுகிற காகிதத்தைக் கொண்டு, மழைகாலத்திலும் பனி காலத்திலும் தரித்துக்கொள்ளும்படியான ஏராளமான உடுப்புகள் செய்யப்பட்டு ருஷிய படைவீரருக்கு மிகுதியாய் ஏற்றுமதி யாகின்றனவாம். இவ் வுடையானது சாதாரணமாய் வழங்கப்படுகிற மற்றமற்ற உடைகளை விட, குளிரைத் தாங்குவதில் அதிக சலாக்கியமானதாயும் விலையில் மெத்த சரசமானதாயும் இருக்கின்றதாம். இவ்வுடையை ஜப்பானிய படைவீரரும் மற்ற ஜனங்களும் சென்ற அநேக வருடங்களாகக் கையாடி வந்திருக்கிறார்களென்றும், சலவைசெய்யக் கூடாதிருப்பதொன்றே அதற்குள்ள குறையென்றும் சொல்லப்படுகிறது.



**சாவியின்றி நூறு வருடம் ஓடக்கூடிய கடியாரம்.**—கை கடியாரமும் பெரிய கடியாரமுந் தானே சொந்தத்தில் செய்பவனான ஒருவன் பர்ட்டன் என்னும் ஊரி லிருக்கிறான். இவன் மின்சாரத்தினால் ஓடக்கூடிய ஒரு கடியாரத்தைச் செய்து தன் வசத்தில் வைத்திருக்கிறான். இக் கடியாரமானது சாவி கொடாமலே இப்போது 12 வருடங்களாக நில்லாது சரியாய் ஓடிக்கொண்டிருக்கிறதென்றும், இன்னம் 50 வருடங்களளவும் அப்படியே ஓடுமென்றும், அதுபோல் 100 வருடங்கள் ஓடினாலும் அது தனக் கதிசயமல்லவென்றும் அதைச் செய்தவன் சொல்லுகிறானாம்.

**பெண்சாதிக்குப் பயந்த புருஷன்.**—நல்லமழை பெய்து நின்றவுடன் ஒரு தனவான் தனது தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து வருகையில் "இன்றையத்தினம் பெய்த மழையால் பூமி செழித்துத் தன்னிடத்திலுள்ள சகலத்தையும் மனிதர்களுக்குக்கொடுக்கும்" என்று கூறினார். இதைக்கேட்டுக்கொண்டிருந்த தோட்டக்காரன் "எசமானே, அப்படிச் சொல்லாதீர்கள். நான் இங்கே புதைத்துவிட்ட ராக்ஷசியான என் பெண்சாதியையும் இந்தப் பூமி வெளியே கொண்டுவந்துவிட்டால் என் கதி அதோகதி தான்" என்று பயந்து கூறினான்.

**ஓர் அரிய இரத்தினக்கம்பளம்.**—பெர்ஷியாவினின்றும் மற்றுங் கீழ்த்தேசங்களினின்றும் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக் கம்பளங்களில் அநேகம் யுத்த தேசச்சாமான்களாகப் பறிமுதல் செய்யப்பட்டு, இப்போது இங்கிலாண்டில் ஏலம் போடப்படுவதாகவும், அவை அறுநூறுவரையிலிருக்கின்றனவென்றும், அவற்றில் ஒன்று வெகு விசேஷித்த தென்றும், அது ஒன்றைமட்டும் நெய்ய முப்பது வருஷம் பிடித்ததென்றும், அக்கம்பளம் ஒன்றுமாத்திரமே இரண்டாயிரம் பவுனாக விலைமதிக்கப்படுகிறதென்றும் தெரியவருகிறது.

**போர்த்துகல்.**-இத்தேசத்தையும் ஜெர்மனி தனக்கு விரோதமாக்கிக்கொண்டு சண்டை கூறிவிட்டது. இத் தேசத்திலுள்ள எல்லா கக்ஷிக்காரரும் ஒரு மனப்பட்டு சண்டையை ஏற்றுக்கொண்டு அதை சரிவர நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்விடத்தில் குடியரசு உண்டாவதற்கு முன், அரசு புரிந்துவந்த மாஜி அரசர் மானுவேல் போர்த்துக்காலில் எந்தக் கட்சிக்காரர் அரசு புரிந்து வந்தபோதிலும் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து இச் சண்டையை நடத்த வேண்டுமென்று தம்முடைய கட்சிக்காரருக்கு அதாவது இராஜ கட்சிக்காரருக்குத் தெரியப்படுத்தி யிருக்கிறாராம்.

**மின்சாரச் சவுக்கு.**—இந்தச் சவுக்கானது குதிரை யல்லது கோவேறு கழுதையின் முதுகின்பேரில் போடப்பட்டிருக்குமென்றும், இதற்கு இருபுறத்திலும் இரண்டு வளையங்க ளிருக்குமென்றும், வண்டி ஓட்டுகிறவன் உட்காரும் ஆசனத்தின்கீழ் வைக்கப்பட்டிருக்கும் மின்சார யந்திரமும் மேற்படி வளையங்களும் கம்பிகளால் இணைக்கப்பட்டிருக்குமென்றும் குதிரையை அடிக்கிறதற்குப் பதிலாக சவுக்கிலுள்ள வளையங்களைக் கால் விரலால் அழுத்தின மாத்திரத்தில் குதிரைக்கு ஒருவித உணர்ச்சி உண்டாகி வேகமாயோடத் தொடங்கும் என்றும் சொல்லப்படுகிறது.

**மனிதனென்று நினைக்க தெய்வமொன்று நினைக்கிறது.**—பாம்பாட்டி யொருவன் வருஷக் கடைசி நாளன்று ஓர் பெரிய பாம்பைப் பிடித்து அதை ஓர் மூங்கிற் கூடையிற் போட்டு அடைத்துப் பத்திரப்படுத்திவிட்டு, மறு நாள் வருஷப்பிறப்பானதால், அந்தப் பாம்பை ஆட்டி ஊருக்குள் நல்ல ஊதியஞ் சம்பாதிக்கலாமென்று மனப்பால் குடித்தவனாய்ச் சந்தோஷத்துடன் படுத்து நித்திரை செய்தான். கூடைக்குள் ஏதோ ஓர் பட்சணமுண்டென்று நினைத்து அதைப் பட்சிக்க ஆசித்த ஓர் எலி அக்கூடையைக் கடித்துத் துளைத்து அதில் பிரவேசிக்கவே, பாம்பானது ஓரேபாய்ச்சலாய் அதன் பேரில் பாய்ந்து அதைக் கவ்விக்கடித்து விழுங்கிவிட்டு, அவ்வெலி கூடையில் செய்திருந்த துவாரத்தின் வழியாய் வெளியேறி ஓடிப்போய் விட்டது. "பிறர்க்கிடுந் தீங்கு தனக்கே தாங்கும்" என்ற பழமொழிக் கொப்ப எலியின் எண்ணம் தனக்கே தீங்காக முடிந்ததோடுகூட பாம்பாட்டியின் பேராசையும் நிராசையாய் முடிந்தது.

**என்னை நாய்க்குள்ள விசுவாசம்!**—இங்கிலாண்டைச் சேர்ந்த எடின்பர்க் மாகாணத்தில், நீல உடையணிந்த ஒரு சந்நியாச மடத்தில் பாபி என்ற ஓர் நாய் வளர்க்கப்பட்டு வந்தது. அம் மடத்தின் சிரேஷ்டர் 1858-ம் வருஷம் மரணமானபோது அந்நாயானது அவருடைய பிரேதத்தைச் சற்று நேரமென்கிலும் விட்டுப் பிரியாதிருந்தது மல்லாமல், அவரை அடக்கம் பண்ணின பின்னும் அவருடைய கல்லறையில் 14-வருடங்களாகப் படுத்துக் கிடந்து, 1872-ம் வருஷம் அங்கேயே உயிர்விட்டதாம். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற பழமொழிக் கிணங்க நடந்த இந்நாயின் விசுவாசத்தைக் காணும் மனிதர்களான நாம் நமக்கு எண்ணிறந்த உபகார சகாயங்களைச் செய்து நமக்காகத் தமது ஜீவனையே பரித்தியாகஞ் செய்தவரான சர்வேசுரன் மட்டில் எப்படி நடந்து வருகிறோமென்று நன்றாய்ச் சிந்தித்துப் பார்த்து வெட்கமடைய வேண்டியவர்களாயிருக்கிறோமல்லவா?

**ஆஸ்பத்திரிகளில் இனிப் பண வசூல்.**—சென்னையிலுள்ள ஸர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பரம ஏழைகள் தவிர, மற்ற வியாதியஸ்தர்களிடமிருந்து அவர்களது சிகிச்சைக்காக பணம் வசூலிக்கப்படலாமென்று கவர்ன்மெண்டார் கருதி, 1914-ம் ஸு அக்டோபர் மாதம் 11-ந்தேதி ஒருத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அதை யொட்டி வெளிவந்த அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் முன்னிட்டுப் பணம் வசூலிக்கப்படுவதே உசிதமெனக் கருதி, இந்த ஏப்ரல் மாத முதல் அதை அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் சர்க்கார்வேலை யில்லாமல் மாதம் ஒன்றுக்கு முப்பது ரூபாய்க்கு மேற்படாது வருமான முடையவர்களுக்கும், ஸர்க்கார் வேலையில் மாதம் ஒன்றுக்கு அறுபது ரூபாய் சம்பளத்திற்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கும் மருந்துகள் எவ்வித சார்ஜுமில்லாமல் இலவசமாகக் கொடுக்கப்படும்.

**ஓர் கைதிக்கு இடப்பட்ட தீர்ப்பு.**—நியாயாதிபதி குற்றவாளி ஒருவனை நோக்கி "உன் விஷயத்தில் ஜோர்ட்டாருடைய தீர்ப்பென்னவெனில், உன்னுயுசு நாள் பரியந்தம் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதே" என்றான். உடனே குற்றவாளி நியாயாதிபதியைப் பார்த்து: "ஆனால், தர்ம துரைகளே.—" என்று வாயெடுத்துச் சொல்லத் துவக்குமுன், நியாயாதிபதி அவனைக் கண்டித்து, "இன்னொரு வார்த்தை பேச வாயைத் திறப்பாயானால், இன்னும் நாலுவருஷம் அதிகமாய்ச் சிறையிலிருக்கத் தீர்ப்பளிப்பேன்" என்றானாம். என்னை, இந்த நியாயாதிபதிக்குள்ள அதிகாரம்! ஒருவன் இறந்துபோனாலும் அவன் பேரிலும் அதிகாரஞ் செலுத்துவான் போலும்.

**ஓர் தந்த வைத்தியன்.**—தண்ணீரில் விழுந்து முழுகும்படியான அபாயத்திலிருந்த ஓர் தந்தவைத்தியனை குடியானவன் ஒருவன் தண்ணீரினின்றெடுத்துக் காப்பாற்றினான். அப்போது வைத்தியன் அக்குடியானவனைப் பார்த்து அவன் தனக்குப் புரிந்த பேருபகாரத்துக்குத் தான் மனப்பூரணமாய் நன்றி செலுத்துவதாகவும், அவனுக்குப் பிரதி நன்றியாக அவன் தன் வீட்டுக்கு வரும்பட்சத்தில், ஒரு துட்டும் அவனிடம் வாங்காமல் தர்மமாக அவனுடைய பற்களையெல்லாம் பிடுங்கிவிடுவதாகவும் சொன்னானாம். உபகாரியான குடியானவன் ஒரு வாலிபனாயிருந்திருப்பானானால் மெய்யாகவே இதை ஒரு கைம்மாறாக எண்ணுவானோ?

**க்ஷயரோகத்திற்கு.**—12 எலுமிச்சம் பழங்களை அறுக்காமல் குளிர்ந்த ஜலத்தில் போட்டு அவித்து, வெந்தவுடன் அவற்றை எடுத்து, அறுத்துப் பிழிந்துகொண்டு அவற்றுடன் போதிய சீனிசேர்த்துத் தினந்தோறும் குடிக்கவேண்டும். அதனால் தேகத்தில் வலி அல்லது கழிச்சலுண்டானால் ஐந்தாறு பழங்களைக் குறைத்து தேகத்தின் கோளாறு நீங்கும்வரையில் உபயோகிக்கலாம். 60 அல்லது 70 பழங்கள் உபயோகித்தபின் நோயாளிக்குத் தேகபலமும் பசியுமுண்டாகும். வரவர க்ஷயரோகமும் குறையும். சுகமுண்டாக உண்டாக பழத்தொகையைக் குறைக்கவும். இம்முறை கைகண்டதாம்.

**டாக்டர் ஸ்மித்தின் மருந்து.**—இரு சிநேகிதர்கள் ஒரு நாள் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது அவர்களில் சின்னப்பனென்றவன் தன்னோடிருந்த இராயப்பனைப் பார்த்து "டாக்டர் ஸ்மித்தென்பவரின் அவிழ்தத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்?" என்று கேட்க, இராயப்பன் "அந்த டாக்டர் சொல்லிய முறைகளைக் கையாடி அந்த மருந்தை உபயோகித்துக்கொண்டு வந்தால் அது நல்ல மருந்தென்றே நினைக்கின்றே" னென்றான். அதற்குச் சின்னப்பன், டாக்டர் அதை உபயோகிக்கச் சொல்லியிருக்கு முறைகளென்னவென்று கேட்டதற்கு, இராயப்பன் அவருடைய மருந்தடங்கிய சீசாவை எடுத்துக்காட்டி, "மேலே எழுதி ஒட்டியுள்ளதை வாசித்துப் பார்" என்று கையில் கொடுக்கவே, அதைச் சின்னப்பன் வாங்கிப் பின் கண்டிருக்கிறபடி வாசித்தான்:—"இச்சீசாவைக் காற்றே நுழையாமல் வெகு பதனமாய்க் கார்க்கிட்டு மூடி வைக்கவும்" என்று எழுதியிருந்ததைப் பற்றிச் சின்னப்பன்: இப்படியானால் இம்மருந்து நல்ல மருந்துதான். மருந்தைக் குடிக்க முதலாய்ச் சீசாவை திறக்கக்கூடாதுபோலும், என்றானாம்.



**கலியாணப்பெண்ணும் செருப்பும்.**—ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி வேறொருவனுக்குக் கொடுப்பதானது தன் சொத்தை அம்மனிதனுக்குச் சுயாதீனப்படுத்தினதற்கு அடையாளமென்றும், அவ்வழக்கம் இசரயேல் ஜனங்களுக்குள்ளும் இருந்துவந்ததென்றுஞ் சொல்லப்படுகிறது. ஆதிகாலத்திய இந்தப் பழக்க வழக்கத்தை யனுசரித்தே இங்கிலாந்து, ஸ்காட்லாண்டு தேசங்களிலும் புதிதாய்க் கலியாணம் முடிந்த பெண்ணின்பேரில் ஓர் பழைய பாதரட்சையை யெறிவார்களாம். அது எதற்காகவென்றால், தாய் தகப்பனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஏவ்வித சுதந்தரமும் இல்லையென்று காட்டும்படிக்காம். ஆங்கிலோசாக்சன் காலத்திலே பெண்ணின் தகப்பனானவர் தமது மகளின் பாதரட்சையை வாங்கித் தமது மருமகனின் கையில் கொடுக்க, அதை வாங்கி மருமகன் தனது பாரியாளின் சிரசின்பேரில் வைப்பானாம். அநானது அவளைத்தான் சொந்தப்படுத்திக்கொண்டதாகக் காட்டும் பொருட்டாம். துருக்கி தேசத்திலே புது மாப்பிள்ளையின்பேரில் கலியாணத்துக்கு வந்த விருந்தாடிகள் தங்கள் தங்கள் பாதரட்சையை யெடுத்தெறிந்து அடிப்பார்களாம். இந்தச் செருப்படிக்கு ஆசைப்பட்டுத் தானோ மகம்மதியரில் சிலர் அனேகம் பெண்களை மணந்துகொள்ளுகிறார்கள் போலும்.

**கவுண்ட் ஸெப்பெலின்.**—இவரே ஸெப்பெலின் என்ற ஆகாய விமானத்தை முந்த முந்த கண்டுபிடித்தவர். இவருக்கு இருபத்தைந்து வயது நடக்கும்போது அமெரிக்காவில் அதைச் செய்து வேறொரு துரைசாணியையும் அதில் ஏற்றிக்கொண்டு 1863-ம் வருஷத்தில் மின்னேசோட்டோ என்ற பட்டணத்திலுள்ள அர்ச். சின்னப்பர் கோவிலினின்று மேலே கிளம்பி அதைப் பரீட்சித்துப் பார்த்தாராம். அதற்குப்பின் ஜெர்மனிக்குப் போய், அங்கேயே தங்கியிருந்து, வேண்டிய பிரயாசையும் முயற்சியுமெடுத்து ஆகாய விமானத்திலிருந்த சிற்சில குறைவுகளை யெல்லாஞ் சீர்படுத்தி, அத்தேசத்துக்குத் தற்கால யுத்தத்தில் மெத்தவும் உதவிசெய்து வருகிறாரென்பது எல்லோரும் அறிந்த விஷயம். இவருக்குத் தற்போது 77-வயதாகியும் தான் செய்த ஆகாய விமானத்திலேறி ஐரோப்பாவினின்று அட்லான்றிக் மகா சமுத்திரத்தைக் கடந்து, நேராய் அமேரிக்காவிலுள்ள அர்ச். சின்னப்பர் ஆலயத்தின் சிகரத்தில் போயிறங்கவேணுமென்பதே இவருக்குள்ள தற்போதிய தீராத ஆவல். ஆயினும் இவருக்குள்ள இந்த ஆவல் எப்போது முற்று பெறுமோ!!

**போர்செய்யும் ஸ்திரீகள்.**—ருஷியாவில் தற்போது 400-ஸ்திரீகள் படைகளில் சேர்ந்து யுத்தம் செய்துவருகிறார்கள். இவர்கள் ஆண் உடைதரித்து, ஆண்கள்போல் நடித்து, சேனைகளில் சேர்ந்துகொண்டார்களாம். இவர்கள் போரில் காயப்பட்டு சிகிச்சைக்கு வந்தபோதுதான் ஸ்திரீகளென்று தெரிய வந்ததாம். இதனால் ருஷியாவில் ஸ்திரீகள் எவ்வளவு தேசாபிமானமுள்ளவர்களாயிருக்கிறார்களென்று தெரியவருகிறது. காக்கவ்ட்சிலா என்னும் பெயருள்ள ஒரு ஸ்திரீ ஒரு சேனைக்கு கர்னலாக இருக்கிறாளாம். இவள் கிழக்கு ருஷியாவில் யுத்தஞ்செய்துகொண்டிருந்தபோது, இரண்டுமுறை காயமடைந்தாளாம். இவள் மிக்க தைரியமாய் யுத்தஞ்

செய்ததற்காக இவளுக்கு ஒரு விருது கொடுக்கப்பட்டிருக்கிறது. இவளுக்கு அரசாட்சியார் இராணுவப் பென்ஷன் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்களாம். அலெக்சாந்திரா என்ற ஒருபெண் ராணுவத்தில் காசக்ஸ் என்னும் குதிரைப் படையிற் சேர்ந்திருக்கிறாள். அவளையும் இன்னும் ஆறுபெயரையும் ஜெர்மனியர்கள் மறியல்செய்து ஒரு கோவிலிலே அடைத்துவிட்டார்கள். அந்த ஸ்திரீ அவளோடு அடைபட்டிருந்த மற்ற ஆறுபேர்களுடன் கோவிலின் சன்னல்களை உடைத்து, வெளியில்வந்து காவற்காரனைச் சுட்டுக் கொன்றாள். அவர்கள் தங்களுடைய குதிரைகளிருந்த இடத்துக்குப்போய் குதிரைகளில் ஏறிக்கொண்டு, தப்பியோட முயலும்போது 18 ஜெர்மானிய குதிரைவீரர்கள் அவர்களை எதிர்த்தார்கள். அவர்கள் சாதுரியமாய் ஜெர்மானிய வீரர்களை மறியலாக்கி, அவர்களிடமிருந்த முக்கிய குறிப்புப் பத்திரங்களை எடுத்துக்கொண்டுபோய் சேனாபதியினிடம் கொடுத்தார்களாம்.

**வேர்டனில் சண்டை.**--தற்போது பிராஞ்சு தேசத்திலுள்ள வெர்டன் பிராந்தியத்தில் பிராஞ்சுக்காரருக்கும் ஜெர்மனியருக்கும் சண்டை மிக்க மும்முரமாய் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. பிராஞ்சுக்காரர் எவ்வளவு கணக்குடன் பீரங்கியை உபயோகிக்கிறார்களென்பதைக் கவனித்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதாம். ஜெர்மனியர் பெல்ஜியத்திலுள்ள லீஜ், நாமூர் முதலிய கோட்டைகளைச் சுலபமாய்ப் பிடித்ததுபோல் வெர்டனையும் பிடித்துவிடலாமென்று பூரணமாக நம்பி மூர்க்கத்தனமாய் எதிர்க்கிறார்கள். ஆயினும், பீரங்கி உபயோகிப்பதில் மேலான சாமர்த்தியமுள்ள பிராஞ்சுப் படைகள் இவர்களை மேலே செல்லவொட்டாமல் செய்வதுமன்றி, இவர்களுக்கு ஏராளமான நஷ்டத்தையுமுண்டுபண்ணிக்கொண்டு வருகிறார்களாம். ஜெர்மனியர் கொண்டுவந்திருக்கும் பெரிய பீரங்கிகளுக்குச் சமானமான பீரங்கிகளையும் பிராஞ்சுக்காரர் இந்தவாரின் சண்டையில் மிக்க சாமர்த்தியமாயும் குறிப்பாயும் உபயோகித்து வருகிறபடியால் வெர்டன் பிராந்தியத்தைவிட்டு ஜெர்மனியரைத் துரத்திவிடுவார்களென்று யூகிக்கப்படுகிறது. இந்தச் சண்டையில் தோல்வியடையும் ஜெர்மனியர்கள் ஆயிரமாயிரமாய் அதிக காயத்துடன் பெல்ஜியத்துக்கு வந்து சேர்கிறார்கள். அப்படியே ஹாலந்துக்கும் போய் அடைக்கலம் புகுகிறார்கள். ஜெர்மனியத் துருப்புகள் படும் கஷ்டங்களைச் சொல்லி முடியாதென்று அடைக்கலஸ்தரே கூறுகிறார்கள். யுத்தஞ்செய்யும் படைகளுக்கு வேளாவேளைகளில் உணவுப் பொருள் கிடைப்பதும், துணைப்படை வந்துசேர்வதும் துர்லபமாயிருக்கிறதாம். பெர்லினில் இதுவரையிலுமிருந்து வந்த போர்த்துகல் தேச மந்திரியார் ஜெர்மனியிலிருந்த யுத்தக் கிளர்ச்சியெல்லாம் தற்போது ஓய்ந்துபோய் விட்டதென்றும், எங்கு பார்த்தாலும் சமாதானப் பேச்சே பெரும்பேச்சாயிருக்கிறதென்றும் சொல்லுகிறார். கூடிய சீக்கிரத்தில் சமாதானமுண்டாக சர்வேசுரன் கிருபை கூர்வாராக.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.**

**ப. ர்.**

### ஜனன அறிக்கை.

**அவிசவளை.**

பரிசுத்த கன்னிகையின் கிருபையாலும் அர்ச். அந்தோனி முனீந்திரரின் வேண்டுதலினாலும் 1916௵ பெப்ரவரி௴ 23௳ புதன்கிழமை காலை 3¼-மணிக்கு எனதருமை மனைவி செபஸ்தி அம்மாள், ஓராண் குழந்தையைப் பெற்றனள். Mr. எட்வின் பெரநாந்தோ அவர்களும் பரிபூரணம் அவர்களும் அச்குழந்தைக்கு ஞானத்தகப்பன் ஞானத்தாயாக நிற்க, மார்ச்சு௴ 12௳ ஞாயிற்றுக்கிழமை இராஜரிஷி Joseph Piron S. J. சுவாமியாரவர்கள் தெய்வபட்டி (Dehiowita) அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் அந்தோனி பீட்டர் என்ற நாமகரணமிட்டு திருச்சபை யாசாரப்படி அக்குழந்தைக்கு ஞானதீட்சை கொடுத்தார். தாயுங் குழந்தையும் சுகம். இதனைக் கண்ணுறும் நம்மித்திரரனைவரும் அப்பாலகனைக் கடவுள் ஆசிர்வதித்து அதற்கு நல்ல சுகத்தையும் நீடிய ஆயுளையும் நித்திய செல்வ பாக்கியத்தையுங் கட்டளையிட கடவுளை மன்றாடப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
தங்களின் உண்மையுள்ள
**மரியான்.**

### நன்மரண அறிக்கை.

**மாந்தரை.**

நாளது மாதம் 13௳ திங்கட்கிழமை இரவு 10½-மணிக்கு எனது ஞானத்தாயார் ரோசம்மாள் பர்ணாந்து காசநோயால் பீடிக்கப்பட்டு, எவ்வித சிகிச்சையாலும் குணப்படாததால், அவஸ்தை முதலிய கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைக் குறைவின்றிப் பெற்றுத் தமது ஆத்துமத்தைச் சர்வ கடாட்சமுள்ள எம்பிரான் சேசுவுக்கு ஒப்புக்கொடுத்து இப்பிரபஞ்ச வாழ்க்கையை விடுத்து விண்ணுலக மேகினார்கள்.

இவர்களுடன் நகமும் சதையும்போல இருபத்தைந்து வருடமாக ஜீவித்துவந்த பத்தா திகிலடைந்து கோவென்றலற, வாலிபப் பிராயமுடைய மக்கள் மூவரும் தங்களை ஈன்ற அன்னை தாங்கள் இடும் கூக்குரலுக்கு யாதோர் உத்தரமும் சொல்லாதிருக்கிறதைச் சகியாது, அடியற்ற மரம்போல் வீழ்ந்து, விம்மிவிம்மியழ, அவர்களுடன் பிறந்த இரு சகோதரர் சகோதரிகளுடைய கலங்கிய கண்களிலிருந்து கண்ணீர் ததும்ப, துயரப்பட்டார்கள். இதனைக் கேள்விப்படும் கிறீஸ்துவ சகோதர சகோதரிகளே, இவ்வாற்றுமம் கருணாம்பரக் கடவுளின் இராச்சியத்தில் அளவில்லாத பாக்கியம் அனுபவிக்க ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
உற்ற துணையாக நின்ற ஞானத்தாயை இழந்து கஸ்தியடையும் ஞானமகன்,
17-3-16. **ச. பிச்சை றெட்றிகஸ்.**

**வைநாடு கூடலூர்.**

கூடப்பிறந்தவர்களாகிய 1.–கித்தேரியம்மாள், 2.–*A. F. Xavier.* 3.–*A. F. Rayappen*, 4.–*A. F. Marian* ஆகிய நாங்கள் 19, 9, 5, 1, வயதுள்ளவர்களாயிருக்கையில் எங்களது தகப்பனார் அந்தோனிமுத்து, தாயார் மரியம்மாள் இறந்துவிட்டார்கள். எங்கள் தகப்பனோடு கூடப்பிறந்த மூத்த சகோதரி அந்தோனியம்மாள் என்ற அத்தையார் எங்களை ஜாக்கிரதையோடு வளர்த்து, போஷித்து, ஸ்கூலில் படிக்கவைத்து, உத்தியோகத்தில் அமர்த்திவைத்து, சிறப்புடன் கலியாணமும் செய்வித்துப் போஷித்து வந்தார்கள். அவர்கள் சிலநாட்களாய் அசௌக்கியப்பட்டு பலதடவைகளில் ஆயத்தம் நன்மை அவஸ்தை பூசுதலும் பெற்றபின் சுகமுண்டாகும். ஆனால் கடைசியாக தமது 96-வது வயதில், அகோர காய்ச்சலினால் கடைசி தேவத்திரவியானுமானத்தை அன்புள்ள குருவானவர் கிரிட்டெனேட் சுவாமியாரிடம் பெற்று, 1916௵ மார்ச்௴ 4௳ சாயங்காலம் 3½-மணிக்கு பரலோக பிராப்தி யடைந்த பின்னர், 5௳ சுமார் 3½-மணிக்கு சங்கைக்குரிய எங்கள் அன்புள்ள குருவானவருடனும் வெகு ஜனக்கூட்டங்களுடனும் கல்லறை வரை சென்று சடலத்தை நல்லடக்கம் செய்தோம். இவ்வாத்துமாவின் இளைப்பாற்றிக்காக நண்பர்கள் வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கின்ற நிர்ப்பாக்கியன்.

A. Francis Xavier.
10—3—16 L. F. Hospital.

**நாரேலியா.**

அந்தோ! அன்பார்ந்த என் தாயார் ரோசம்மாள் பெர்ணாந்து, தூத்துக்குடியில் ஒன்றரை வருட காலமாகக் காசம் என்னுங் கொடிய நோயாற் பீடிக்கப்பட்டு எவ்வித ஔஷதப் பிரயோகங்கட்குங் குணப்படாமல், இம்மாதம் 13௳யாகிய திங்கட்கிழமை இரவு 10½-மணிக்குக் கடைசித் தேவத்திரவிய அனுமானங்களைச் சம்பூரணமாய்ப் பெற்றுத் தங்களின் அருமைமக்கள், பர்த்தா, சகோதரர், பந்து மித்திராதியர் கண்ணீர் சிந்தியழுது தேம்பி நிற்கப் பரலோக பிராப்தியான ஆற்றொணாப் பெருந்துயரத்தை, இதைக் கண்ணுறும் அனைவருக்கும் அழுகைப் பிரலாபத்துடன் தெரிவித்து அவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒருபர., ஒருபிரி., ஒருதிரி. வேண்டிக்கொள்ள இரக்கமாய்க் கேட்டு நிற்கும் நிர்ப்பாக்கிய மைந்தன்.

செல்லையாமிராந்த,
16—3—16. (பாக்கியமிராந்த புதல்வன்.)

மேகுநயம்! தபசுகாலம் வந்துவிட்டது!! ஆர்டர் அனுப்புங்கள்.

தபசுகாலத்துக்குரிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| சேசுநாதருடைய திருப்பாடுகளின் தியானம் | 0 | 10 | 0 |
| வியாகுலப் பிரசங்கம் கலிக்கோ | 0 | 11 | 0 |
| ஷை ஷை அரைக்கட்டு | 0 | 9 | 0 |
| ஷை ஷை சிறியது கலிக்கோ | 0 | 8 | 0 |
| கிறிஸ்துநாதர் அநுசாரம் | 0 | 12 | 0 |
| தாழ்ச்சி அநுசாரம்-வாசிக்கும் ஒவ்வொருவிசைக்கும் 40-நாட் பலன் | 0 | 3 | 0 |
| திருஸ்தல வாசகம் | 0 | 3 | 0 |
| ஆத்தும நேசம் | 0 | 7 | 0 |
| அர்ச்சியசிஷ்ட வாரம் | 0 | 8 | 0 |
| வெள்ளிக்கிழமை புதுமை | 0 | 10 | 0 |
| வியாழக்கிழமை புதுமை | 0 | 8 | 0 |
| அர்ச். வருஷம் தோல் கட்டு | 1 | 0 | 0 |
| சிலுவைப்பாதை தோல் கட்டு | 0 | 12 | 0 |
| ஷை அரைக்கட்டு | 0 | 10 | 0 |
| ஷை கடுதாசி கட்டு | 0 | 3 | 6 |

திருப்பாடுகளின் ஒப்பாரி, வியாகுலமாமரி புலம்பல், திருமரி அன்னை பிரலாபம், வியாகுல மாமரி விசனசாகரம், வியாகுல காதல், சிந்தாகுல அந்தாதி. இப்புஸ்தகங்கள் ஒவ்வொன்றின் கிரயம் அணா 1½.

வியாகுல ஒப்பாரி, அன்னை அழுங்கல் ஒப்பாரி, தேவமாதாவின் ஒப்பாரி ஆகிய இப்புத்தகங்களின் கிரயம், அணா 2½.

தேவமாதா அம்மானை, அணா 9.

*N. B.* சாமான், வி. பி. (*V. P.*) மூலமாய் அனுப்பப்படும். எப்பிரல் மாதத்துக்குள் ஒரு ரூபாய்க்கு மேல் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு திருயாத்திரை சரிதை என்ற புஸ்தகம் இனாமாக அனுப்பப்படும். இன்னுமனேக வேதப் புஸ்தகங்களும், மற்றும் சாமான்களும் என்னிடமிருக்கிறது. கேட்லாக் இனாமாக அனுப்பப்படும். மேல் குறிப்பிட்ட புஸ்தகங்களுக்குத் தபாற்கூலி பிரத்தியேகம்.

விலாசம்.— **X. P. Paiva No. 7 Brass Founder Street, Colombo,**
எக்ஸ். பி. பாய்வ, நெ. 7 கன்னாரத்தெரு, கொழும்பு.

**400-வருஷத்து சுரூபத்திலிருந்து எழுதப்பட்ட அர்ச். இலாசரின் வர்ணப்படம்.**

சீமைப் படங்களைப்போல் இந்தப் படமும் பளபளப்பும் வெண்மையுமான கார்ட்போர்ட்டில் பஞ்ச வர்ணங்களில் மிகவும் நேர்த்தியாய் அச்சிடப்பட்டு விலைக்குத் தயாராயிருக்கிறது. இந்த அர்ச்சியசிஷ்டவர் மைலாப்பூரில் எழுந்தருளியிருந்து ஆயிரம் ஆயிரமான அற்புதங்களை இச்சென்னை வாசிகளுக்கு மாத்திரமல்ல, வெளியூர்களிலுள்ள அநேகமான கிறீஸ்துவர்களுக்கும் செய்து வருகிறாரென்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம். இவருடைய உருவப்படம் எங்குங் கிடையாதபடியால் மேற்சொல்லியபடி 400-வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட அவருடைய சுருபத்தினின்று இப்படம் சித்திரிக்கப்பட்டு. மைலாப்பூர் அர்ச். அடைக்கலமாதா மடத்துச் சிரேஷ்ட தாயாரம்மாளின் முயற்சியினால் அச்சிடப்பட்டது. ஷை தாயாரம்மாளின் முயற்சியினாலேயே இந்த அர்ச்சியசிஷ்டவரின் சுருக்கமான சரித்திரமும், பிரார்த்தனை ஜெபங்களும் அடங்கியுள்ள ஒரு சிறு புத்தகமும் அச்சிடப்பட்டிருக்கின்றது. படத்தின் அளவு 1¼ × 1 அடி. விலை 3 அணா. ஒரே தடவை 5 படங்கள் வாங்குகிறவர்களுக்கு 1 படம் இனாமாகக் கொடுக்கப்படும். தபாலில் அனுப்பினால் படம் ஒன்றுக்கு 6 அணாவாகும். புஸ்தகத்தின் விலை அணா 1. இவைகளை வேண்டியவர்கள் இதனடியிற் கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சங்கை. பெரியதாயார், அடைக்கலமாதா மடம், மைலாப்பூர், சென்னை.

**அர்ச். சூசையப்பர் அற்புத சரித்திரம்.**

அர்ச். சூசையப்பர் பேரில் பத்தியை யதிகரிக்கச்செய்யவும், திருக்குடும்பம் சீவித்த விவரத்தை யறியச்செய்யவும் அனுகூலமான புஸ்தகம். ஒரு தரம் வாசித்துப்பார்த்தால் இதன் மாட்சிமை தெரியவரும். நல்ல தமிழில் எழுதப்பட்டு, சென்னை, "நல்ல ஆயன்" அபீசில் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை அணா 10.





12 MAY 1916

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.

புத்தகம் 14. | மே, 1916. | இலக்கம் 5

## THE MOTHER OF GOD

## தேவ தாய்.

திருச்சபை மேமாதத்தைத் தேவமாதாவின் வணக்க மாதமாகக் கொண்டாடுகிறபடியால், அத்தாயின் பக்தர்களும், செல்வப் பிள்ளைகளும் தங்களுடைய பரமதாயின்மேல் வைக்கவேண்டிய பக்தியைப்பற்றி இச்சுப மாதத்தில் அடிக்கடி சிந்தித்து, அப்பக்தியானது தங்களிடத்தில் மென்மேலும் விருத்தியாகி வளரப் பிரயாசைப்படுவார்களானால், இவர்களுக்குச் சகல நன்மை பாக்கிய சம்பூரணமுந் தானேவந்து கைகூடும் என்பதற்கையமில்லை.

ஆகையால், தேவமாதாவின்பேரில் மெய்யான பக்தி உண்டாவதற்கு அல்லது அந்தப் பக்தியில் விருத்தியடைவதற்கு ஏதுவான சில நல்ல யோசனைகளை இம்மாத ஆயனில் எடுத்துரைக்கலானோம்.

தேவ மாதாவின்மேல் வைக்கவேண்டிய மெய்யான பக்திக்கு அத்தியாவசியமான குணங்கள் மூன்று. அவை தேவமாதாவைப்பற்றிய மேலான மதிப்பு, உருக்கமான சிநேகம், அளவுகடந்த நம்பிக்கை ஆகிய இவைகளே. இவை மூன்றும் நம்மிடத்தில் இருந்தால் நாம் தேவமாதாவின்பேரில் பக்தியுள்ளவர்களா யிருக்கிறோமென்றும், இவை இல்லாவிட்டால் நம்மிடத்தில் மெய்யான பக்தியில்லையென்றும் சொல்லலாம். இந்த மதிப்பையும், சிநேகத்தையும், நம்பிக்கையையும் நம்மிடத்தில் உண்டாக்கித் தூண்ட, தேவதாயினிடத்தில் மூன்று சுதந்தரங்களும் மகிமை பெருமைகளும் உண்டு.

அவள் சர்வேசுரனுடைய தாயானதினால், அவளை நாம் கனமாய் மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவள் மனிதர்களுடைய தாயானதினால், அவளை நாம் உருக்கமாய் நேசிக்கவேண்டும். அவள் கிருபைதயாபத்தின் மாதாவாய் இருப்பதினால் அவள்மட்டில் அளவுகடந்த நம்பிக்கை வைக்கவேண்டும்.

பரலோகத்தில் தேவ கன்னிகையின் கிரீடத்தில் தேஜோமயமாய் ஜொலித்துத் துலங்கும் ஆயிரக்கணக்கான முத்துரத்தினங்களில் சர்வேசுரனுடைய தாய், மனிதருடைய தாய், கிருபை தயாபத்தின் தாய் என்ற இம்மூன்று சுதந்தரப்பட்டங்களும்

மூன்று ராஜ மணிகளைப்போல் விளங்குகின்றன.

நம்முடைய இருதயத்தில் இவைகளுக்கொப்பான மதிப்பு, சிநேகம், நம்பிக்கை என்னப்பட்ட இம்மூன்று குணங்களுக்குரிய உணர்ச்சி பற்றுதல்களுமுள்ள உண்மையான பக்தி உண்டாகி, மென்மேலும் அது அதிகரித்து வளர்ந்தால், நமக்கு இம்மையிலும் மறுமையிலும் சர்வ பாக்கியத்துக்கும் காரணமாயிருக்கும்.

(1.) ஒரு சிருஷ்டியானது நம்முடைய உண்மையான மதிப்புக்குப் பாத்திரமாயிருக்கத்தக்கதாக, அதனிடத்தில் நன்மை விளங்கவேண்டும். மெய்யான நன்மை ஒரு சிருஷ்டியினிடத்தில் எப்போது சரியாய் விளங்குகிறதென்றால், அந்தச் சிருஷ்டி தன்னைப்படைத்த தன்னுடைய சிருஷ்டிகராகிய சர்வேசுரனுடன் நெருங்கி சம்பந்தப்பட்டதாயிருந்தால்தான். எவ்வளவுக்கு ஒரு சிருஷ்டி சர்வேசுரனோடு ஐக்கியப்பட்டிருக்கிறதோ அவ்வளவுக்கு அது நன்மை நிறைந்ததாயிருக்கும். ஆனால் இப்பூலோகத்திலுள்ள அநந்தம் கோடி சிருஷ்டிகளாகிய ஜீவராசிகளுக்குள்ளும், பரலோகத்திலுள்ள பலகோடி அசரீரிகளாகிய சம்மனசுகளுக்குள்ளும் பரிசுத்த கன்னிமரியாயி தன்னுடைய சிருஷ்டிகராகிய கர்த்தரோடு எல்லாவற்றுக்கும் மேலாய் நெருங்கி ஐக்கிய சம்பந்தப்பட்டிருக்கிறாள். ஏனென்றால் அவள் சர்வேசுரனுடைய தாய்.

இதனால்தான் சர்வேசுரனுக்கும், பரிசுத்த கன்னிகைக்கும் உண்டான ஐக்கிய பந்தனமும் ஒன்றிப்பும் மனோவாக்குக்கெட்டாதது. இந்த ஐக்கியத்தினால் ஒரு சிருஷ்டி தேவ நன்மைத்தனத்திலிருந்து எம்மாத்திரம் நன்மை வரங்களைப் பெறக்கூடுமோ அம்மாத்திரம் பரிசுத்தகன்னிகை பெற்றிருக்கிறாள். ஆகையால்தான் கபிரியேல் தேவதூதன் கன்னிமரியாயிக்கு மங்களவாழ்த்து சொல்ல வந்தபோது, "Ave, gratia plena, Dominus tecum." "மங்களம்! கர்த்தர் உம்மிடமிருக்கிறார்; ஆகையால், நீர் எல்லா வரப்பிரசாதங்களையும் நன்மைகளையும் பரிபூரணமாய்ப் பெற்றிருக்கிறீர்" என்று அதிசயித்து வாழ்த்தினார். எவ்விதம் உலக சிருஷ்டிப்பின் காலத்தில் சர்வேசுரன் உலகத்தில் காணப்படும் ஜீவகோடிகளிடம் இருந்த பல நன்மைகள் யாவையுங் கூட்டித்திரட்டி மனுஷனிடத்தில் வைத்து, அவனை ஒரு சிறு உலகமாய்ச் செய்தாரோ, அவ்விதமே சர்வேசுரன் உலகத்தை இரட்சித்த காலத்தில், திருச்சபையிலுள்ள உத்தம மேலான வரங்களையும், சகல சம்மனசுக்கள், அர்ச்சியசிஷ்டவர்களிடமுள்ள புண்ணிய நற்குண இஷ்டப்பிரசாத பேறுகளையும் ஒன்றாய்க் கூட்டிச்சேர்த்து தேவ ஆண்டவளிடத்தில் வைத்ததால், அந்தப் பாக்கியவதியைத் திருச்சபையின் சிறந்த உலகமென்றே சொல்லலாம். பரிசுத்த புண்ணியாத்துமாக்களில் ஒவ்வொருவரிடத்திலும் என்னென்ன மேலான வரங்களும், உன்னத பேறுகளும் உண்டோ, அவையெல்லாம் தேவதாயிடத்தில் அதி உத்தம அளவிலிருக்கின்றன. எந்த நன்மை ஒரு சிருஷ்டிக்குத் தகுமோ அது தேவமாதாவினிடத்தில் பூரணமாயுண்டாயிருக்கிறதென்று தாராளமாய்ச் சொல்லலாம். சர்வேசுரனுடைய தாயானதினால், தேவகன்னிகை எல்லா ஸ்துதி புகழ்ச்சிக்கும் உரியவளாய் இருக்கிறாள். "Nihil tibi aequale Domina" 'ஆண்டவளே, உமக்குச் சரியொத்தது ஒன்றுமில்லை.' "Nihil tibi comparabile" "உம்மோடு ஒப்பிடக்கூடியதும் ஒன்றுமில்லை. நீர் ஒப்பு உவமையெல்லாம் கடந்த தனிநாயகி. உமக்குமேல் இருப்பவர் சர்வேசுரன் ஒருவரே. சர்வேசுரன் அல்லாத மற்றதெல்லாம் உமக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" என்று ஒரு அர்ச்சியசிஷ்டவர் பிரமித்துக் கூறுகிறார். சர்வேசுரனுடைய தாய்! ஓ! இது சகல மகிமைகளுக்கும், சகல மேன்மை சிறப்புகளுக்கும், சகல பெருமைகளுக்கும், சகல கீர்த்திகளுக்கும், சகல வணப்புக்கும் இலக்ஷணத்துக்கும் மேற்பட்டு அதி உன்னதமாய்த் துலங்கும் அகோசரமகிமையாய் இருக்கின்றது. பரமநாயகியின் சகல பேறும் பெருமையும், சீரும் செல்வாக்கும் தேவதாய் என்ற இந்த உன்னத மகிமைப் பட்டத்திலிருந்துதான் உற்பத்தியாயின.

சர்வேசுரனுடைய தாய்! ஓ! இந்த வார்த்தையில் அடங்கியிருக்கும் மகிமையை வருணிக்க, இதில் உள்ள இன்பத்தைச் சுகிக்க, இதின் உயர்வையும், ஆழத்



தையும், அகலத்தையும், நீளத்தையும் எட்ட பரலோகத்தில் உள்ள எந்தச் சிருஷ்டியாலும் கூடாது. ஒரு மகா சாஸ்திரி வசனித்தபடியே உலகமெல்லாம் புத்தகங்களாகி, சிருஷ்டிகளெல்லாம் சாஸ்திரிகளாகிச் சமுத்திர சலமெல்லாம் மையாகி தேவமாதாவின் இலக்ஷண பெருமையைக் குறித்து எழுதப்படுமேயானால், அதைப் பூரணமாய் எழுதி முடிப்பதற்கு முன்னே புத்தகங்களெல்லாம் நிரம்பிப்போம்; எழுதுவர் கைகளெல்லாம் ஓய்ந்துபோம்; சமுத்திரமெல்லாம் சுவறி வற்றிப்போமே.

சர்வேசுரனுடைய தாய்! ஆகையால் தேவகன்னிகை வரப்பிரசாதங்களின் சம்பூரணம் பெற்றபாக்கியவதி.

சர்வேசுரனுடைய தாய்! ஆகையால் அவள் யாதொரு அற்பப் பாவ மாசுமில்லாமல் அற்புதமாய்ச் சன்மித்த சர்வாலங்காரமுள்ள அமலோற்பவ கன்னிகை.

சர்வேசுரனுடைய தாய்! ஆகையால் அவள் கர்த்தரைக் கருப்பந் தரித்தபோதும், அவரைப் பெற்றபோதும், பெற்றபின்னும் கன்னிமை மகிமை குன்றாத கற்பலங்காரி.

சர்வேசுரனுடைய தாய்! ஆகையால் அவள் இப்பூலோகத்தில் சீவித்த நீடிய சீவிய காலத்தில், சகல அர்ச்சியசிஷ்டவர்களைப் பார்க்கிலும்மேலாய்ச் சகல புண்ணியங்களையும் அதி உத்தம அளவில் ஒப்பற்றவிதமாய் அநுசரித்து வந்தவள். அவளிடத்தில் விளங்கிய தேவ சிநேகத்தின் உன்னதமும், கடல்போல் விரிந்த பிறர்சிநேகத்தின் விசாலமும், தாழ்ச்சியின் ஆழமும், அவளது பொறுமையும், நீடிய சாந்தமும் மதுரமும், இரக்க தயாளமும், சம்மனசுக்களுடைய பிரகாசத்தை மங்கடிக்கும் அவளுடைய பரிசுத்தத்தனமும், கற்பும், அவளுடைய விசுவாசமும், நம்பிக்கையும், கீழ்ப்படிதலும், ஒறுத்தலும், இன்னும் மற்ற புண்ணியங்களும் ஒப்பு உவமை எல்லாம் கடந்து, வியக்கத்தக்கதாயிருக்கின்றது.

சர்வேசுரனுடைய தாய்! ஆகையால் அவள் தேவ சிநேக பெருக்கத்தால் மரித்து, அழகிய சிநேகத்தின் மாதாவானாள். "Mater pulchrae dilectionis."

சர்வேசுரனுடைய தாய்! ஆகையால் அவள் மரித்து, வெற்றி மகிமை கிரீடம் பெற்று, பரலோக, பூலோக, பாதாளத்துக்கும் இராக்கினியாய் உயர்த்தப்பட்டு, மூவுலகமும் அதிசயித்துப் பிரமிக்கும்படியாய்த் தோன்றின பாக்கியம் பெற்ற அற்புத கன்னி இராக்கினி மாதா. தேவமாதா இவ்வளவு செல்வாக்கும், மகிமையும் பெற்றிருப்பதைப் பார்த்து, நாம் அவளைக் கன்னியமாய் மதிக்காமல் இருப்பதெப்படி? அவளைப் பூஜிதமாய்க் கொண்டாடாமலிருப்பதெப்படி? "Quantum potes tantum aude, quia major omni laude" "எவ்வளவுக்கு உன்னால் புகழ்ந்து வாழ்த்தக்கூடுமோ, அவ்வளவுக்கு அவளைப் போற்றி புகழ்ந்து வாழ்த்துவாயாக! எல்லா புகழ்ச்சிக்கும் உரியவள். எல்லா புகழ்ச்சியையும் கடந்தவள் அவள்." "Nunquam satis de Maria." மரியாயை புகழ்வதில் இது அளவைக் கடந்த புகழ்ச்சியென்றும், இவ்வளவு போதும் என்று வரையறுத்துக் கூறுதலும் தகாது.

அன்னை என உலகத்தார் ஏற்றும் மாதா
அன்புடனே எம்மை நிதம் காக்கு மாதா
என்னபுகழ் தாய் இவட்குச் சொன்னபோதும்
ஏற்ற புகழ் சொல்ல எயர்க்கிபலும் பாலோ!

(2.) பரிசுத்த கன்னிகை சர்வேசுரனுடைய தாயாய் இருப்பது மல்லாமல் மனிதர்களுக்கும் மாதாவாய் இருக்கிறாள். மனிதர்களுக்குத் தாய் என்று சொன்னால் இஷ்டப்பிரசாத ஒழுங்கில் நம்முடைய ஞானத் தாய் ஆகிறாள். அவள் எப்படி நம்முடைய தாய் என்றால், நம்முடைய திவ்ய இரட்சகரான சேசுக்கிறிஸ்துநாதரைப் பெற்றெடுத்து, அவருக்குத் தாயாய் இருப்பதினால் தான் மனிதர்களுக்கும் தாயாய் ஆகிறாள். அதெப்படியெனில், நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதர், தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்து, ஞான சீவியம் அல்லது ஞான உயிர் இல்லாத பாவிகளாகிய மனிதர்களுக்குத் தம்முடைய மனுஷ அவதாரத்தாலும், தாம் பட்ட நிஷ்டூரப் பாடுகளாலும், சிந்தின இரத்தத்தினாலும், தம்மைத்தாமே தம்முடைய திவ்விய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த பாவப் பலியாய்ச் சிலுவைமரத்தின் கொடிய பாடுகளுக்கும்

மரணத்துக்கும் உட்பட்டதாலும், நமக்கு ஞான சீவியத்தையும் உயிரையும் கொடுத்தாரென்பதைப்பற்றியேயாம். அதற்காகத்தான் சேசுக்கிறிஸ்துநாதரை நம்முடைய சீவியம் என்று உண்மையாய்ச் சொல்லுகிறோம் அல்லவா? ஆனால் இந்த நம்முடைய ஆத்துமத்தின் சீவியமாகிற சேசுக்கிறிஸ்துநாதரைப் பெற்றெடுத்து, அவரை நமக்கே முழுதும் தத்தம் செய்தது யார்? நம்முடைய இரட்சண்ணியத்துக்கும் பாவ நிவாரணத்துக்கும் வேண்டிய பலிப் பொருளாகிய சேசுநாதருடைய மாமிஷத்தையும் இரத்தத்தையும் உருவாக்கிக் கொடுத்தது யார்? அந்தத் திவ்ய சரீரத்தை அணைத்து ஆதரித்துப் போஷித்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தது யார்? ஆண்டவர் பாடுபடும் காலம் வந்தபோது, சிலுவை மரத்தடியில் நின்றுகொண்டு நித்திய பிதாவுக்கு அவரை ஒப்புக்கொடுத்தது யார்? சேசுநாதரோடு நம்முடைய இரட்சண்ணியத்துக்காக ஓயாமல் உழைத்து மனுக்குலத்துக்கு வேண்டிய எல்லா வரப்பிரசாத நன்மைகளையும், மெய்யான சீவியத்தையும் பெற்றடைந்து கொடுக்கக் காரணமா யிருந்தது யார்? தேவ தாயாகிய பரிசுத்த கன்னிமரியாயிதான் அல்லவா? ஆகையால், அவள் உண்மையாய் மனுக்குலத்துக்குத் தாய்-நம்முடைய தாய். இந்தத் தாயின் இருதயம் சமுத்திரம் போல் ஆழமும் அகலமும் தோன்றாமல் விரிந்து பெருகி சிநேகம் நிறையப்பெற்ற இருதயமாகும். உலகம் எத்திசையிலும் அடங்காத சர்வேசுரனைத் தனக்குள் அடக்கி, அவரை அணைத்துப் போஷித்து வளர்த்த தாய்மாத்திரம், மானிட ஜென்மம் எல்லாவற்றையும் அணைத்துக் காப்பாற்றி ஆதரிக்கத் திறமை பெற்ற தாயாவாள். இந்தத் தாயின் சிநேகம் எவ்வளவு என்று காட்டுதற்கு உலகமே சாட்சி. ஒரு அர்ச்சியசிஷ்டவர் கூறுமாப்போல் இந்தப் பூலோகத்திலுள்ள பல கோடி தாய்மார்களின் இருதயங்களில் சுரந்து பொங்கும் நேச உருக்கக் கரிசனப் பற்றுதல்களுக்குமேல், தேவமாதாவின் ஒரே இருதயத்தில் நம் ஒவ்வொருத்தர் மட்டிலும் சொல்லொண்ணா அன்பும் நேசமும் உருக்கப் பாசமும் நிறைந்திருக்கிறதாம்.

ஆனால் தேவதாய் நம்மை இவ்வளவு உருக்கமாய்த் தாய்போல் நேசித்துவந்தால், அவளுடைய பிள்ளைகளாகிய நாம் அவளைப் பிள்ளைக்குரிய பட்சத்தோடு நேசிப்பது நமது கடமையல்லவா? தாய் என்றால் சிநேகம் அகத்தியம் அவசியம். தாயும் சிநேகமும் ஒரு மொழிப் பதங்கள். சிநேகிப்பதென்றால் வாயால் மாத்திரம் சொல்வதல்ல. நமது இருதயத்திலிருந்து பட்சம் சுரந்து ஊறி வரவேண்டும். இருதயத்திலிருந்து சிநேகம் வந்தால், நமது கிரியைகளில், அது தானே தோன்றும். நாம் இருதயத்தோடு நமது தாயை சிநேகித்தால், தாய்க்கு எப்போதும் பிரியமாய் நடக்க நமக்கு மனசு உண்டாகும். தாயைப்போல் ஆத்துமத்திலும் சரீரத்திலும் சுத்தமாயிருக்க ஆசைப்படுவோம். நம்முடைய தாயிடத்தில் பாவமாசு அற்பமும் இருந்ததில்லை. நம்முடைய தாய் எப்போதும் தேவ இஷ்டப் பிரசாதம் நிறைந்தவளாய், சர்வேசுரனுக்கு எப்போதும் பிரியமுள்ளவளாய் இருந்தாள். அதுபோலவே, நாமும் பாவத்தால் கறைபடாமல் சுத்தமா யிருக்கப் பிரயாசைப்படவேண்டும். நம்முடைய நினைவும், வாக்கும், செய்கையும் எல்லாம் எந்த நேரத்திலும் பாவ அசுத்தமில்லாமல் இருக்க அதிக ஜாக்கிரதையோடு இருப்பது நமது கடமை. சேசுநாதரிட மிருந்த புண்ணியங்களெல்லாம் தேவ மாதாவின் சீவியத்தில் பிரதிபிம்பமாய் விளங்கினது. நாமும் அவளிடம் துலங்கிய தேவ சிநேகத்தையும் பிறர் சிநேகத்தையும், அவளுடைய தாழ்ச்சி, பொறுமை, கற்பு, சாந்தம், கீழ்ப்படிதல், ஒறுத்தல் என்னும் புண்ணியங்களையும், நமது அநுதின ஓயாத முயற்சியால், நம்முடைய நடத்தையில் விளங்கப் பண்ணினால் மாத்திரம் அவளை மெய்யாகவே சிநேகிக்கிறோம் என்று சொல்லலாம். அர்ச். பெர்நார்துஸ் சொல்லுமாப்போல் "Si Mariam diligitis humilitatem diligite," "நீங்கள் தேவமரியை சிநேகித்தால் தாழ்ச்சியை நேசியுங்கள். தாழ்ச்சியுள்ளவர்களா யிருங்கள்" என்பதாம். இப்படியே ஒவ்வொரு புண்ணியத்தைப் பற்றியும் பேசலாம். இவ்வாறு நாம் நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம் மாதத்துக்கு மாதம் தேவதாயின் பரிசுத்த நே



சத்தால், நமது பாவ தோஷங்களையும், பாவப் பழக்கங்களையும், சகல துர்க்குணங்களையும் ஒவ்வொன்றாய் ஒழித்து, நீக்கி, அவளிடம் பிரகாசித்துத் துலங்கும் புண்ணியங்களின் ஆடையைத் தரித்து, அவளுடைய புண்ணிய பரிமளத்தால் ஞான ஆரோக்கிய சுகத்தையும், பலத்தையும் பெற்று, புது மனுஷராகி, புது இருதயத்தோடு, அவளுடையவும் அவளுடைய திவ்ய குமாரனுடையவும் தோத்திரத்துக்காகச் சீவித்தால் அல்லவோ நாம் தேவ தாயை உண்மையாய் நேசிக்கிறோமென்று சொல்லலாம்?

"அம்மை நீ என்றால் பொய்யோ
யாரோ நீன் என்றால் மெய்யோ
இம்மைத் துயரில் ஐயோ
எனக்குன் அருள் இல்லையோ"

(3.) அர்ச். கன்னிமரியாயி, கிருபை தயாபத்தின் மாதாவா யிருப்பதால் நாம் அவள் மட்டில் அணைகடந்த நம்பிக்கை வைக்கவேண்டும். தேவதாயைக் கனிந்த மனதோடு நேசித்த அவளுடைய பெயர்போன ஊழியனாகிய அர்ச். பெர்நார்துஸ் சொல்லும் வாக்கியத்தைக் கேளுங்கள். "Laudamus humilitatem, miramur virginitatem, sed miseris sapit dulcius misericordia virginis." "தேவ கன்னிகையின் தாழ்ச்சியை வாழ்த்துகிறோம்; அவளுடைய கன்னி மகிமையை நினைத்து ஆச்சரியப்படுகிறோம் ; ஆனால் அவளுடைய கிருபையை நினைப்பதே நிர்ப்பாக்கியர்களாகிய நமக்கு இன்பமாயிருக்கிறது." ஆம், நிர்ப்பாக்கியர்களாகிய மனிதர்களுக்குத் தேவதாயின் கிருபை இன்பமானது, அவசரமானது. மனிதர் நிர்ப்பாக்கியரா? தேவதாய் கிருபை நிறைந்தவளா? இதற்கென்ன சந்தேகம்! இப்பூலோகத்தில் மனிதன் பிறந்து சாகும் வரையில் துன்பத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் தான் அநுபவிக்கவேண்டும். அதைப்பற்றித்தான் இப்பூலோகத்தைக் கண்ணீர் கணவாய் என்று சொல்லுகிறோம். மனுஷனாய்ப் பிறந்த எவரும் ஆணும், பெண்ணும், ஆதி மனுஷன் துவக்கி உலக முடியும் வரையில் பிறக்கும் கோடானுகோடி மனுஷர்களும் ஜென்மப்பாவத்தின் கொடிய விஷத்தால் பீடிக்கப்பட்டுச் சீரழிந்து கெட்டுப்போய் நிர்ப்பாக்கியராய் வருந்துகிறார்கள். அவர்களிடம் அஞ்ஞானம் முதிர்ந்து, பாவதோஷம் நிறைந்து, சர்வேசுரனைப்பற்றிய நிர்மல அறிவு நீங்கி, சிருஷ்டி கர்த்தரை மறந்து சிருஷ்டிகளை நாவிளை பென்று அவைகளைத் தொழுது சேவிக்கிறார்கள். அந்த ஜென்மப் பாவத்தின் கொடிய தோஷம் கரைபுரண்டு ஓடும் வெள்ளம்போல் மனிதர் எல்லோரையும் பாவக் கடலில் அமிழ்த்தி நாசமாக்குகின்றது. பாவத்தோடு அதின் துணைகளும் பரிவாரமுமாகிற சாவும், நோவும், துன்பமும், துயரமும், கவலையும், கண்ணீரும், சண்டையும், யுத்தமும், அநியாயமும், அக்கிரமமும் காட்டில் பற்றிய தீபோல் இவ்வுலகத்தில் பரவி ஆத்துமங்களை நரகத்தில் கொள்ளை கொண்டு போவதை நாம் பார்த்துவருகிறோம். மனிதனின் சுபாவமே சீர்குலைந்து, பஞ்சேந்திரியங்கள் புத்தியை விரோதித்து, நன்மை செய்ய வெறுப்பும், தீமை செய்ய ஆசையும் மேலிட்டு, நித்தம் யுத்த போராட்டமா யிருப்பதை நாம் கண்ணால் பார்த்தும், பட்டும், அறிந்தும் வருகிறோம். பிள்ளை பிறக்கும்போதே அழுதுகொண்டு பிறக்கிறது. மெய்யாகவே இந்தப் பூலோகம் துன்ப துயரம் நிறைந்த கண்ணீர் கணவாய். ஐயோ! இதில் நமக்கு ஒரு நம்பிக்கையும் இல்லையோ? நாமெல்லோரும் சீர்குலைந்து கெட்டலைந்து எப்போதும் துன்ப சாகரத்தில் அமிழ்ந்திக் கிடக்க வேண்டுமோ? இல்லை இல்லை. அர்ச். பெர்நார்துஸ் நமக்கு ஆறுதலாய் எழுதிய அமிர்த வசனங்களை வாசிக்கக்கடவோம்.

"அநந்த தயையுள்ள சர்வேசுரன், நிர்ப்பாக்கிய மனிதர்களைக் கைதூக்கி இரட்சிக்க ஒரு கன்னிகையை உண்டாக்கி, அவளைத் தமது தாயாராகத் தெரிந்துகொண்டு அவளிடம் மனுஷனாய்ப் பிறந்தார். ஓ! சர்வேசுரனுடைய அதி உன்னத யோசனை எவ்வளவு வியக்கத்தக்கது! பாவத்தால் கெட்ட மானிட ஜென்மத்தை இரட்சிக்கவந்த சர்வேசுரன் ஒரு பெண்ணால் விளைந்த பழியை நீக்க, ஒரு தேவமாதைத் தெரிந்தெடுத்தார். அந்த தேவமாதைச் சிறந்த வரங்களால் அலங்கரித்து, சிருஷ்டிகளுக்கெல்லாம் மேலாய் அவளை உயர்த்தி, தேவபிரகா

சம் வீசும் இராஜ ரத்தினப்போர்வையால் அவளைச் சிங்காரித்து, வரங்களின் சம்பூரணத்தை அவள் கையில் வைத்து, இந்தச் சம்பூரண பிரவாகத்திலிருந்து சகல மனுஷரும் தங்களுக்குத் தேவையான வரங்களைக் கேட்டு பெறும்படி சித்தமாயிருக்கிறார். ஓ மனிதா! ஓ பாவீ! தேவபிதாவின் சமுகமுன்வர நீ பயப்படுவாயோ? அவர் குரல் சத்தத்தைக் கேட்கும்போது அஞ்சி நடுங்கி ஆதாமைப்போல் மரங்களின் தழைகளுக்குள்ளே மறைந்துகொள்வாயோ? ஓ பார்! தேவபிதா உன் மனதைத் தேற்ற சேசுவை உனக்கு மத்தியஸ்தராக அனுப்பியிருக்கிறார். இன்னும் பயப்படுகிறாயோ? சேசுநாதர் உன்னைப்போல் மனிதரானாலும், அவர் சர்வ வல்லப சர்வேசுரனானதால், அவர் முகத்திலிருந்து ஜொலித்து வீசும் தேவமகத்துவ பிரதாபத்தை நீ தாளமாட்டாமல் அவர் கிட்டேவர அஞ்சுவாயோ? இவர் கிட்ட நீ பயமின்றி போகும்படியாயும் உனக்கு இன்னம் ஒரு மத்தியஸ்தர் வேண்டுமோ? நல்லது இதோ பார்! அன்பும் அருளும் அவதாரமானாற்போல் தோன்றும் அமலோற்பவ மாதா கிட்டே வரப்பயப்படாதே. இவள் கிருபை தயாபத்தின் மாதா. இவளிடம் அச்சம் உறுத்தும்படியானது ஒன்றுமில்லை. எல்லாம் தயை, எல்லாம் இரக்கம், எல்லாம் சிநேகம். இவள் உன்னை சேசுவின் பாதத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பாள். உனக்காக அவரிடம் சனுவாய்ப் பேசுவாள். தாயின் சொல்லை மகன் அன்பாய்க் கேட்பார். தன் மகன் வார்த்தையைப் பிதா தயவாய்க் கேட்பார்."

ஓ தேவதாயின் அன்பான மக்களே! தாயைத் தேடி பிள்ளை போவதுபோல் எந்த நாளிலும், எந்தச் சமயத்திலும் உங்கள் பரம தாயிடத்தில் நம்பிக்கையுடன் போங்கள். ஏதேது செய்தாலும் உங்கள் தாயின் சமுகத்தில் செய்யுங்கள். உங்கள் வீடுகளிலும் குடும்பங்களிலும் வரும் பல விசேஷ தினங்களிலும், உற்சவ நாட்களிலும் உங்கள் தாயின் சுரூபத்தை நடுவில் வைத்து, உங்கள் தாயைப் பார்த்து எல்லாஞ்செய்யுங்கள். இப்படிச் செய்தால் பாவமும், அஞ்ஞானமும், அயோக்கியமும், எவ்வித தின்மையும் கிட்டே வரமாட்டாது. தாய் உங்களைத் தமது அடைக்கலத்தில் வைத்துப் பாதுகாப்பாள். தேவ சிம்மாசனத்தின் முன் தமது வல்லபத்தாலும் இரக்கத்தாலும் உங்களுக்காக எப்போதும் பரிந்துபேசுவாள். தேவ கோபத்தை அகற்றி உங்களுக்காக மன்றாடுவாள். உங்களை நேசிப்பாள். உங்களை ஆசீர்வதிப்பாள். பரம தாயின் ஆசீர்வாதமும் நேசமும் உண்டானால் உங்களுக்கு என்ன குறைவு? இந்தக் கண்ணீர் கணவாயில் பரமதாய் உங்களுக்கு "சீவியமும் தஞ்சமும் மதுரமுமாய்" இருப்பதைக் கண்டுணர்வீர்கள்.

அன்னையே நின்னையே அநுதினமும் அடியேன்
அடுத்தவன் தானல்லவோ?
ஆதாரமான நின் பாதாரவிந்தங்கள்
அன்றி ஒரு துணையும் உளதோ?
என்னையே வந்தாண்டு கொள்வதொரு பாரமோ
இங்கு வர வெகு தூரமோ?
இன்னும் விசாரமோ? என் சொல் அபசாரமோ
எனை முனிய இது நேரமோ?
உன்னையே முன்னையே தஞ்சமென நம்பினோர்
ஒரு குறையும் உற்றதுண்டோ?
உலக மிசை விலகரிய கலகமிகும் அலகையால்
உள்ளம் நான் வாடினேனே.
பின்னையும் உனக்கு நான் பல சொல்ல வேண்டுமோ
பேதை எனை ஆண்டருளுவாய்
பிரியர் இதயம் வாழும் அரிய நாயகியான
பெரிய நாயகி அன்னையே.

(சத்தியவேதக் கீர்த்தனைகள்.)

S. M.

## GOD OF GENESIS.
## ஆதியாகம தேவன்.

இதுவே நாம் இதுகாறும் வரைந்த படத்தின் உட்புறம். இதுவே யூதர்கள் ஆதியாகம தேவனைப் பற்றிக் கடைசிவரையிற் கொண்டிருந்த பொது அபிப்பிராயம். இதில் இன்னங்கொஞ்ச மறைகுறையாயிருப்பதைப் பூர்த்திசெய்தால், ஆதியாகம தேவனின் மெய்யான சுபாவம் நன்கு விளங்கும்.



162023

நாம் இதுவரையில் சர்வேசுரன் மனிதருடன் நடந்த விதத்தினளவைப் பார்த்தோம்; இனி மனிதருடைய நடத்தை எப்படி யென்பதைச் சற்றே கவனிப்போம். மனிதர் சர்வேசுரனை நம்பி அவருடைய கற்பனைகளை யநுசரித்து வந்த வரையில் அவர்களுக்கு எப்போதுங் குறைவேயிருந்ததில்லை. அவர்கள் தேவனை முழுதும் நம்பி, ஆபத்துகாலத்தில் அவரைக் கூவி யழைத்தார்கள். உலக மாய்கையாலும், அலகையாலும், அலகையின் தந்திரத்தாலும், தேகாசாபாசத்தாலும் அலைக்கழிக்கப்பட்டு, பலவித கஷ்டநஷ்டங்களுக் குள்ளாயிருக்கையில், அவரையே தஞ்சமென்றடைந்தனர். உதாரணமாக ஆபிரகாம் என்பவரின் ஊழியன் சரிதையை யெடுத்துக் கொள்வோம். ஆபிரகாம் தன் சுற்றத்தாரில் ஒரு பெண்ணைத் தன் மகனாகிய ஈசாக்குக்குப் பார்த்துக்கொண்டு வரும்படி மெசோபொட்டேமியா என்னும் நாட்டிற்கு அவனை அனுப்பினார். அவ்வூழியன் அப்படியே அந்நாட்டிற்குச் சென்று ஊருக்கு வெளியிலிருந்துகொண்டு, பின்னர் என்னசெய்தான் என்பது பின் வருமாறு: "மாலை வேளையில் ஊருக்கு வெளியில் ஒரு கிணற்றண்டை தன்னுடைய ஒட்டகங்களைப் படுக்கச் செய்திருக்கையில், அங்கே அவ்வேளையில் ஊர்பெண்கள் தண்ணீரெடுக்க வருவது வழக்கமாகையால், அவன் சொன்னதாவது: ஆண்டவரே, என் எசமான் ஆபிரகாமின் தேவனே எனக்குதவியாய் இன்றுவந்து, என் எசமானிடம் அன்பைக் காட்டும்படி மன்றாடுகிறேன். இதோ இக்கிணற்றண்டை நான் நிற்கிறேன்; இவ்வூராரின் பெண்மக்கள் இங்கே தண்ணீரெடுக்க வருவார்கள். ஆதலால், 'நான் தாகவிடாய்த் தீர்க்க நின் குடத்தைக் கொடு' என்று கேட்டதும் "குடியும், வேண்டுமானால் உங்கள் ஒட்டகங்களுக்கும் குடிக்கக் கொடுக்கிறேன்" என்று எவளை நான் கேட்கிறேனோ, அவளும் பதிலுரைக்கின்றாளோ, அவளே உமது அடியானாகிய ஈசாக்குக்கு உம்மால் குறிக்கப்பட்ட பெண்ணாயிருக்கக் கடவாள். இதனால் நீர் என் எசமானர் மேல் அன்புகாட்டினீர் என்று நான் அறிந்து கொள்வேன்." அவ்வூழியனுடைய வேண்டுகோளுக்கிரங்கினார் சர்வேசுரன்; ஏனெனில் அவன் கோரியவண்ணமே யாவும் நிறைவேறின. பின்னர் அவ்வூழியன் கூறிய நன்றியறிந்த தோத்திரமாவது: "அம்மனிதன் சாஷ்டாங்கமாய்ப் பூமியில் வீழ்ந்து சர்வேசுரனை வணங்கினான். என்னுடைய எஜமானரிடமிருந்து தம்மிரக்கத்தையும் உண்மையையும் எடுத்துவிடாமல், என் எசமானரின் சகோதர ரில்லத்துக்கு நேரே என்னைக் கொண்டுவந்து சேர்த்த என் எசமானின் தேவனாகிய ஆண்டவர் துதிக்கப்படுவாராக."

குழந்தைகளிடங் காணும் நம்பிக்கையே இக்கதையில் நிறைந்திருப்பதாகத் தெரிகிறதன்றோ! இங்கே பயமும் பீதியும் அணுவளவும் இல்லை. மேலும் ஆபிரகாம் என்பவர் சோதோம் பட்டணத்து நிர்ப்பாக்கிய சனங்களுக்காக மன்றாடியபோதும் இத்தகைய நம்பிக்கையே முன்னிற்கின்றது. ஆனால் சூசையினுடைய சரித்திரமே எல்லாவற்றையும்விட விசேஷமானது. அதிலே சூசை சர்வேசுரனிடம் எப்படி நடந்துகொண்டாரென்பது நன்கு விளங்குகின்றது. அவர் தன் சகோதரர்விற்றுபோட எகிப்துதேசத்துக்கு அடிமையாகக் கொண்டுபோகப்பட்டார். வேதஞ் சொல்லுவதைக் கேளுங்கள். "ஆண்டவர் அவருடனிருந்தார்; எல்லாவற்றிலும் அவர் ஒரு பாக்கியமுள்ள மனிதனே; அவர் தன் எசமான் வீட்டில் வசித்தார்; எசமானோ அவருடன் ஆண்டவரிருந்து, அவர் செய்வதையெல்லாம் செழித்தோங்கும்படிச் செய்கிறார் என்பதை யறிந்தான்."

பின்னர் சூசை யவமானத்துடன் சிறைச்சாலை யடைய நேர்ந்தது. "ஆனால் ஆண்டவர் சூசையுடனிருந்தார்; அவர் பேரி லிரக்கம் வைத்து, சிறைச்சாலையின் தலைவன் அவரையன்புடன் நடத்தும்படி யநுக்கிரகித்தார்; அங்கே யிருந்த கைதிகளனைவரும் அவர் கைவசமாயினர்; அங்கே நடந்தவை யாவும் அவருடைய அநுமதியில் நடந்தன. ஆனால் அவருக்கோ ஒன்றுந் தெரியாது; யாவும் அவரிடம் ஒப்புவிக்கப்பட்டன; ஏனெனில் ஆண்டவர் அவரோடிருந்து, அவர் செய்தவை யனைத்தையும் செழித்தோங்கச் செய்தார்."

அவர் விடுதலையான பின் எகிப்து தேசத்துக் கதிபதியானார். பஞ்ச காலத்தில் அவருடைய சகோதரர் அவரை நாடி வந்தனர். கடைசியாய் அவர் தன்னை இன்னாரென அவர்களிடங் காட்டாம லிருக்க முடியவில்லை. அவர் தன் சரிதையைக் கூறித் தன் சகோதரரிடம் தெரிவித்துக்கொண்டவிதம் பின் வருமாறு: "நான்தான் எகிப்து தேசத்தில் உங்களால் விற்கப்பட்ட சகோதரனாகிய சூசை பயப்படவேண்டாம்; இத்தேசங்களில் என்னை விற்றதானது பெரும் பா

தகமென நீங்கள் யோசிக்க வேண்டியதில்லை; ஏனெனில் உங்களைக் காக்கும்பொருட்டே சர்வேசுரன் என்னை எகிப்து தேசத்திற்கனுப்பினார். ஏனெனில் பூமியில் பஞ்சந் தொடங்கி இரண்டு வருடங்களாகின்றன. இன்னம் ஐந்து வருடங்கள் போகவேண்டும் (பஞ்ச மடங்க); அதுவரையில் உழவும் அறுவடையும் எங்குங் காணமுடியாது. பூமியில் நீங்கள் காப்பாற்றப்படும்பொருட்டும், சீவிக்க உணவடையும்பொருட்டும், சர்வேசுரன் என்னை முன்னதாக அனுப்பினார். உங்கள் யோசனையாலல்ல, ஆனால் சர்வேசுரனுடைய சித்தத்தால் நானிங் கனுப்பப்பட்டேன்"

ஆதியாகம முடிவிலும் இத்தகைய விஷயங்களையே காண்கிறோம். யாக்கோபு மரணமாயினர்; சூசையின் "சகோதரர் பயங்கொண்டு ஒருவர் ஒருவருடன் பேசிய தென்னவெனில்: 'நம்மால் அவன் அநுபவித்த கஷ்டங்களை ஒருக்கால் நினைத்துக்கொண்டு, நம்மைப் பழிவாங்குவானோ என்னவோ?' என்று அவர்கள் சூசைக்குச் சேதி சொல்லி யனுப்பினர்: பின் வருவதை யும்மிடஞ் சொல்லும்படி யுமது தந்தை சாகுமுன் எங்களுக்குஉத்தரவுசெய்தார்: "உன் சகோதரர் உனக்குச் செய்த பாதகத்தையும் அக்கிரமக் கெடுதிகளையும் மறந்துவிடும்படி யுன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன்." நாங்களும் அப்படியே உமது தந்தையின் தேவனுடைய ஊழியர்களாகிய நாங்கள் செய்த பாதகத்தை மன்னிக்கும்படி மன்றாடுகிறோம். சூசை யிதைக் கேள்விப்பட்டதும் கண்ணீர் சொரிந் தழுதார். அவர் சகோதரர் அவரிடம் வந்து சாஷ்டாங்க தண்டனிட்டு "நாங்கள் உம்மூழியர்" என்றார்கள். அதற் கவர், பயப்படாதீர்: சர்வேசுரனுடைய சித்தத்தை யெதிர்க்க நம்மாலாகுமோ? நீங்கள் எனக்கு மாறாய்க் கெடுதி நினைத்தீர்கள். ஆனால் சர்வேசுரன் அதை நன்மையாக மாற்றி, நீங்கள் தற்சமயம் பார்க்கும் உன்னத பதவிக் கென்னை யுயர்த்தி, அநேகரைக் காக்கும்படியாகச் செய்தார். பயப்படாதீர்கள்; உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் வேண்டிய உணவைக் கொடுக்கிறேன்." என்று மிக்க அன்பு மமைநியுங் கொண்ட குரலுடன் அவர்களுக்குத் தேறுதல் கூறினார்."

இதுவே ஆதியாகமத்தின் முடிவு. இவ்வியாசத்திற் கூறிய வண்ணம் ஆதியாகமத்தையெடுத்துப் படித்தால், ஆதியாகம தேவனுக்கும் புதிய ஏற்பாட்டின் தேவனுக்கும் ஒருவித வித்தியாசமுமில்லை யென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குமன்றோ!

(முற்றிற்று.)

*S. Selva Raju.*

## GNANAMANI, III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 31-ம் அதிகாரம்.

### நாள் எல்லாம் செடியில் பதுங்கி யிருக்கும் முயலைப்போல் நீங்கள் வீட்டில் தனித்து இருந்து உலக விஷயத்தை அறியாதிருப்பது சரியல்ல.

ஒரு நாள் தேவதாஸ் பண்டிதரின் பாரியாளாகிய ருக்மணி, தன் வீட்டுக்கு வந்து தர்மங் கேட்ட ஒரு ஏழை ஸ்திரீக்குக் கால் ரூபாய் கொடுத்தபோது அவளுடைய கந்தையான வஸ்திரத்தைக் கண்டு மனமிரங்கி தன் வீட்டுக்குள் சென்று ஒரு வஸ்திரத்தையும் அந்த ஏழைக்குக் கொடுத்தனுப்பினாள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவளுடைய வேலைக்காரியாகிய முனியம்மாள் வயிற்றெரிச்சல் கொண்டு, தன் சீமாட்டியை நோக்கி, "என்ன அம்மா? உங்கள் பெயர் எவ்வளவு சிறந்தது! நீங்கள் எவ்வளவோ கௌரவ கண்ணியமாயிருக்கவேண்டியிருக்க, இந்த ஈனமான வேலையைச் செய்ததைப் பார்க்கும்போது எனக்கு வெட்கமுண்டாகிறது" என்றாள்.

ருக்மணி.—அப்படி நான் என்ன ஈனமான வேலை செய்தேன் முனி?

முனி.—நீங்கள் மகாப் பிரபுவின் மனையாட்டியா யிருக்கக்கொள்ள, ஏழை யெளியவர்களோடு பேசி, உங்கள் கையால் அப்பேர்ப்பட்ட பேதைகளுக்குத் தர்மங் கொடுப்பது சரியல்ல அம்மா என்றாள்.

ருக்.—ஏழைகளுக்கு நல்ல எண்ணத்துடன் கொடுக்கப்படும் தர்மம் கடவுளுக்கே கொடுக்கப்பட்டதென்று எங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (என்றதைக் கேட்ட,)



முனி.—மயிலிலும் சுந்தரியான துரைசானீ! "ஐயமிட்டுண்" என்று எங்கள் சாஸ்திரத்திலும் சொல்லப்பட் டிருக்குமாப்போல, தர்மஞ் செய்வது நல்ல கர்மந்தான். ஆனால் நீங்கள் வாசற்படி மட்டும் நடந்து சென்று தர்மங் கொடுப்பது உங்களுடைய மாகூதிமைக்கு யோக்கியமல்ல. தாங்கள் காலால் செய்யக் கற்பித்த வேலையைக் கையால் செய்யக் காத்திருக்கும் அடியாளுக்கு ஒரு வார்த்தை சொன்னால் செய்யேனோ? இது நிற்க, அரசிபோலச் சகலராலும் மதிக்கப்படுந் தாங்கள் சுத்தபேதையான அந்தப் பாவச் சிறுக்கிக்கு வஸ்திரங் கொண்டுபோய்க் கொடுத்ததை நான் பார்த்தபோது என் மனம் புண்ணாகித் துக்கித்தேன்.

ருக்.—ஏனடியம்மா அவ்வளவு துக்கங் கொண்டாய்? அவளுடைய நிர்ப்பாக்கிய அந்தஸ்தைக் கண்டோ?

முனி.—அவள் முன் செய்த பாவத்துக்கு உத்தரிக்கும்படி பிரமா அவளை யப்படிப் படைத்திருக்கிறான். ஆகையால் அவளைப்பற்றி நான் இரக்கப்பட்டே னில்லை. ஆனால் உங்களைப்பற்றியே மனத் துக்கங்கொண்டேன். அதெப்படியெனில்: எப்பேர்ப்பட்ட பிரபுக்களும், பணங் காசு, வஸ்திர முதலிய நன்கொடைகளை யாருக்குக் கொடுப்பார்கள்? இப்பேர்ப்பட்ட ஒன்றுக்கும் உதவாத கசடருக்கா? பரிச்சேதமில்லை; தங்களிடம் வந்து தங்களை ஸ்தித்துப் புகழ்ந்து, பாட்டையோ, காவியத்தையோ பாடும் புலவருக்கும் கவிராயருக்கும், தங்களைப் புகழ்ந்து கொண்டாடிச் சுபங்களைக் கூறும் பிராமணர் முதலிய பெரியோர், சாஸ்திரிகள், ரிஷிகள் முதலியோருக்கும் நன்கொடைகளையும், தட்சணைகளையும், நஜர்களையும் அளிப்பதுண்டு. நீங்களோ! அம்மா, இவ்வளவு பிரக்கியாதியாய்த் துலங்கும் நீங்கள், பாபிஷ்டியான இந்த முண்டைக்கு உங்கள் கையால் பணங் கொடுப்பதும் வஸ்திரங் கொடுப்பதும் உங்களுடையவும் உங்கள் மகாப் பிரபுவானவருடையவும் கௌரவத்துக்கு எவ்வளவோ குறைவு!

ருக்.—(வேலைக்காரி பேசின பேச்சுக்கு மறுமொழி கொடுக்கக் கூடாதவளாய், புன்சிரிப்புடன்) இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியுமடி முனி?

முனி.—பெரியவர்களுடைய போதனையாலும் அனுபோகத்தாலும் அறிந்திருக்கிறேன் அம்மா. மேலும் நான் என் எசமானியாகிய உங்கள் வேலையில் அமர்ந்து சொற்ப காலமானபோதிலும் அனேக விகற்பமான காரியங்களைக் கண்டு அதிசயித்து வருகிறேன் என் நாயகீ!

ருக்.—(புன்னகையுடன்) யாரிடத்தில்?

முனி.—உங்களிடத்தில் தான் தாயே!

ருக்.-என்னிடத்திலா விகற்பமான காரியங்களைக் கண்டாய்?

முனி.—ஆ! ஆ! துரைசானி, உத்தரவு அளித்தால், சொல்லக் காத்திருக்கிறேன் அடியாள்.

ருக்.—அது என்ன விகற்பமான காரியம் சொல் பார்க்கலாம்?

முனி.—தங்கள் அடியாளாகிய நான் அநேக பிராமணர் வீட்டிலும் முதலிமார் முதலிய உயர்ந்த ஜாதியார் வீட்டிலும் வேலைபார்த்துவந்திருக்கிறேன். ஆனால் இப்பேர்ப்பட்ட விகற்பமான காரியங்களை நான் அந்த வீடுகளில் பார்க்கவேயில்லை என் நாய்ச்சியாரே!

ருக்.—சொல் பார்க்கலாம் அந்த விகற்பமான காரியத்தை?

முனி.—ஒன்று இரண்டல்லவே?

ருக்.—எத்தனை யிருந்தபோதிலும் சொல் தாமதிக்காமல்.

முனி.-அம்மணீ! குயிலிலும் இனிய குரலுடைய சுந்தரீ! அன்ன பக்ஷியிலும் அலங்கிருதியான பூமணீ! உங்கள் பிறப்பும் வளர்ப்பும் சிறந்ததாயினும் உங்கள் நடத்தை அதற்கு ஒத்திராததைக் கண்டு அதிசயித்துப் பிரமிக்கிறேன்.

ருக்.—என்னடி முனியம்மா? ஏன் இவ்வளவு தாமதம்? என் பொறுமையைச் சோதியாமல் விரைவாய்ச் சொல்.

முனி.—சற்று நேரத்துக்கு முன் நீங்கள் செய்த கிரிகையும் விகற்பமே!

ருக்.—என்ன அந்த ஏழை ஸ்திரீக்குத் தர்மங் கொடுத்ததா?

முனி.—சந்தேகமா? அப்பேர்ப்பட்ட நீசருக்கு அரையணா காலணா விசிறி யெறியலாம். அல்லது ஒரு பிடி யரிசி வேலைக்காரி மூலமாய்க் கொடுப்பது உங்களைப்போன்ற பிரபுக்களுக்கு யோக்கியமே யன்றி, உங்கள் பொன்னான கையால் அப்பேர்ப்பட்ட அற்பருக்குப் பணமும் வஸ்திரமும் அளிப்பது உங்கள் மேலான அந்தஸ்துக்குச் சரியல்ல தாயே.

ருக்.—இன்னும் உண்டான விகற்பமான காரியங்களைச் சொல் பார்ப்போம்.

முனி.—என்? மூன்ரும் வாரத்தில் நீங்கள் அவ்வளவு அதிகாலையில் உங்கள் கோவிலுக்கு ஸ்வாமி கும்பிடப்போய் வீட்டுக்குத் திரும்பின போது மழையில் அகப்பட்டு, அதனால் 4, 5 நாள் ஜுவரங்கண்டு செத்துப் பிழைத்தது உங்களுக்கு ஞாபகமில்லையோ அம்மணீ!

ருக்.—இதில் என்ன விகற்பமான காரியம் கண்டுபிடித்தாய்?

முனி.—நீங்கள் அவ்வளவு அதிகாலையில் கோவிலுக்குப் போயிராவிட்டால் அந்தத் துன்பம் வந்திருக்குமோ? இன்னும் உங்களுக்கு பூரண சௌக்கியமுண்டாகவில்லையே. உங்களைப்போலொத்த மேல்லான அந்தஸ்தில் உள்ளவர்கள் சாமானியமான மனுஷரைப்போல் நாடோறும் பனி, காற்றுப் பாராமல் கோவிலுக்குச் செல்லுவது அயுக்தமானதென்று உயர்குலத்தோர் அனைவோரும் சாக்ஷிகூறுவார்கள்.

நாங்கள் அமாவாசிதோறும் கோவிலுக்குச் சென்று ஸ்வாமியைத் தொழுதுவருகிறோம். ஆனால் பெரிய உத்தியோகஸ்தருடைய ஸ்திரீகளும்; தாசில்தார், முனிஷிப்தார், வக்கீல்; ஜமீன்தார், சோஸ்திரியதார் முதலியவர்களுடைய மனையாட்டிகளும் மாதத்தில் ஒருமுறை முதலாய்க் கோவிலுக்குப் போகாமல் தங்கள் வீட்டிலேயே நின்று ஸ்வாமியைக் கும்பிடுகிறதுண்டு. நீங்களோ, உயர்ந்த கோத்திரத்தில் உற்பத்தியாகி சமஸ்தராலும் கண்ணியமாய் மதிக்கப்பட்டுவரும் பூமானுக்குத் துரைசானியாயிருக்கும் நீங்கள் சில்லறை ஜனங்களைப்போல் நாடோறும் மழை வெயில் பாராமல் வெளிப்படுவது உங்களுக்கு யோக்கியதையல்லவே நாயகீ.

ருக்.—கடவுளை நாடோறும் போய்த் தொழுவது தவருனதா?

முனி.—கடவுளை வணங்கக்கூடாதென்று நான் சொல்ல வரவில்லை. நீங்கள் இன்னம் இளம்பிராயமாயிருப்பதால் அதிகாலையில் எழுந்திரியாமல் நன்ருய் நித்திரைசெய்து இளைப்பாறுவதால் உங்களுக்கு அதிக சுகம் உண்டாகும் என்கிற கருத்துடன் நாடோறும் கோவிலுக்குப் போவது அனுவசியமென்றேன்.

மேலும் உங்களைப்போன்ற பெருமாட்டி சாமானியரான மனிதரைப்போல் நாடோறும் காலபேதம் பாராமல் ஆலயத்துக்கு ஏகுவது யுக்தமல்லவென்றேனேயன்றி, கடவுளைத் தொழக்கூடாது என்று எந்த மட்டியும் சொல்லாள்.

ருக்.—மானிடர் எவ்வளவு மகத்துவமுடையோரும் சிறந்தோருமாயினும் கடவுளோடு இணையிடப்படத் தக்கவர்களா? கடவுளார்? மனிதனர்?

முனி.—சரி; உங்கள் இஷ்டம். உலகத்தில் சாதாரணமாய் நடந்துவரும் காரியங்களைத் தங்களுக்கு வெளியிட்டேனேயொழிய நூதனமானதை யிங்கு நான் எடுத்துக் காட்டவில்லையம்மா.

ருக்.—இவ்வளவுதானு விகற்பமான காரியங்கள், இன்னம் ஏதேனுமுண்டோ?

முனி.—சுந்தரியான என் அம்மணீ! இன்னும் பல உண்டு; ஆனல் தாங்கள் அதன் சாராம்சத்தைக் கண்டறியாதபடியால் அதைத் தங்களுக்கு அறிவிப்பதால், பயன் உண்டாகாதென எண்ணுகிறேன் (என்று தன் முகத்தில் கஸ்தியின் அடையாளத்தைக் காட்டிச் சொன்னுள்.)

ருக்.—சொல் முனி; மறைக்காமல் சொல்.

முனி.—பூங்கொடியிலும் அழகான என் அன்னையே! உங்கள் வார்த்தையை மீருமல் என் எண்ணத்தைத் தங்களுக்கு வெளியிடுகிறேன். சாயந்திரந்தோறும். தங்களுக்கு வாசிக்கும்படி அடியாளுக்குக் கொடுக்கப்படும் புஸ்தகங்களை நான் வாசித்திருக்கிறேன்.

ருக்.—அதுகூட விகற்பமான காரியமோ?

முனி.—புஸ்தகங்களை வாசிப்பது விகற்பமான காரியமல்ல என் இராஜாத்தீ.

ருக்.—எதில் விகற்பமான காரியமுண்டு?

முனி.—அதை நான் வாசிக்கும்போது அதன்மட்டில் தங்களுக்கு கவனமும் உற்சாகமும் மனோஹரமும் உண்டானதோ, என் செல்வதாயே?

ருக்.—சந்தேகமா அதற்கு?

முனி.—அதில் இரண்டுவரி வாசித்தபின் எனக்குச் சலிப்பும் நித்திரையும் உண்டாகிறது!

ருக்.—என்னத்தைப்பற்றி?

முனி.—அந்த வாசகங்களில் உப்பும் சப்புமில்லாததைப்பற்றித்தான்.

ருக்.—என்ன அதிசயமாயிருக்கிறதே! நேற்றையத்தினம் வாசித்ததில் அக்னேசம்மாள் சரித்திரமானது மனதுக்கு எவ்வளவு பிரியமும் சந்தோஷமும் உண்டாக்கினது!



முனி.—அந்தச் சிறு பெண் தங்களைப்போல் ரூபலாவர்ணியும் தனவந்தியும் வாசிக்கத் தெரிந்தவளுமாயிருந்தும் என்ன பயன்? மகுடாதிபதியான சக்ரவர்த்தியை மணமுடித்துக்கொள்ளாமல் கத்திக்கு இரையானது என்ன மதிகேடென்னலாம்!

ருக்.—இம்மையில் சங்கடப்பட்டபோதிலும் மறுமையில் அழியாத சுகத்தை அடைந்தாள் அந்தப் புண்ணியவதி.

முனி.—அது என்னமோ எனக்குத் தெரியாது. இம்மையில் அனுபவிக்கக்கூடிய சுகபோகம் முதலிய அதிஷ்ட பாக்கியங்கள் தாமே வலிய வரும்போது அவைகளைத் தள்ளிவிடுவது புத்தியென்று எனக்குத் தோன்றவில்லை.

இதுசிற்க உங்கள் புஸ்தகங்களைப் படிக்கும்போது உங்கள் தேவர்களும் தேவதைகளும் செய்துவந்த நடவடிக்கை மனுஷ சுபாவத்துக்கு நேர்விரோதமாக இருந்தன.

ருக்.—எங்களுக்குத் தேவர்களும் தேவதைகளும் இல்லையே முனி!

முனி.—உங்களுக்குக் கடவுள் இல்லையோ அம்மா?

ருக்.—கடவுளே அன்றி பல தேவர்களில்லை. மேலும் உங்களுக்குள் வழங்கும் தேவதைகள் கிறிஸ்துவேதத்தில் இல்லை.

முனி.—அப்படியானல் ஆக்னேஸ் என்னும் பெண்மணி யார் அம்மா?

ருக்.—அந்தப் பரிசுத்த ஸ்திரீ நம்மைப்போல் இவ்வுலகிற் பிறந்தும் கடவுளுக்குப் பிரமாணிக்கமாய் ஒழுகி, அவருடைய கட்டளைகளை நுணுநுணுக்கமாய் அனுசரித்து நடந்து, இப்போது அவள் மோக்ஷத்தில் இருப்பதைப்பற்றி, அந்தப் புண்ணியவதியை அர்ச். ஆக்னேஸ் என்று அழைக்கிறோம்.

முனி.—இப்பேர்க்கொத்த ஆண் பெண்ணுனவர்களுக்கு அந்தப் பேர்தானு கொடுக்கிறீர்கள்?

ருக்.—ஆம், அவர்களை அர்ச்சியசிஷ்டவர்கள் என்று அழைக்கிறோம்.

முனி.—சரி, அந்த அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரத்தை வாசிக்கும்போது, அவர்களுடைய நடத்தை முழுதும் விகற்பமாக இருப்பதாய்த் தெரியவருகிறது.

ருக்.—அதெப்படி?

முனி.—நான் முந்தி சொன்னதுபோல், அநேக சிறந்த ஸ்திரீகள் அரசர்களுக்கு வாழ்க்கைப்பட்டு இன்பசுகங்களைச் சுகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தும், அவை மாயையென்று அவைகளை அகற்றிவிட்டது எப்பேர்ப்பட்ட மூடத்தனம்! இன்னம் எத்தனையோபேர் பெரிய உத்தியோகங்களை ராஜினமா கொடுத்துவிட்டு மனம்பொருந்தி யேழைகளாய்ப் போனர்கள்! கணக்கற்ற ஸ்திரீகள் ஆஸ்திபாஸ்தியையும் சுகசெல்வத்தையும் தாய் தந்தையரையும் விட்டுவிட்டு, அந்தரங்கத்தில் கஷ்ட சீவியத்தைத் தெரிந்துகொண்டார்கள்! இன்னும் எத்தனையோ ஸ்திரீபூமான்களான பேர் தங்கள் ஆஸ்திபாஸ்தி, பூமி காணியாட்சி முதலியவைகளை யேழைகளுக்கும் எளியவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்துத் தரித்திரராய்ச் சீவித்து வந்தார்கள்! இது எப்படிப்பட்ட மதிகேடு! என் ராஜாத்தீ! மனிதர் தின்று குடித்துச் சகல இன்ப சுகத்தைச் சுகிக்கப் படைக்கப்பட்டிருக்க, அப்பேர்ப்பட்ட சுக பாக்கியங்களை உதவாதவைகளென்று தள்ளிவிடுவது புத்தியோ சொல்லுங்கள் என் நேச அன்னையே?

ருக்.—எங்கள் வேதப் படிப்பினைக்கும் உங்கள் படிப்பினைக்கும் மெத்த வித்தியாசம். இம்மையில் கஷ்டம் அனுபவிக்கிறவர்கள் மறுமையில் சந்தோஷ பாக்கியத்தை அனுபவிப்பார்களென்றும், இம்மையில் சந்தோஷம் அனுபவிப்பவர்கள் மறுமையில் சங்கடப்படுவார்களென்றும் எங்கள் வேதம் படிப்பிக்கின்றது.

முனி.—நான் வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் தேர்ந்தவளல்ல. ஆனல் என் சாமான்ய விவேகத்தால் இம்மையி லிருக்குமட்டும் உண்டாகும் சகல சுக பாக்கியங்களையும் அனுபவிப்பது புத்தியென்று அறிந்திருக்கிறேன்.

உங்கள் புஸ்தகம் இவ்வளவு வறண்டதாயும் மனோரஞ்சித மற்றதாயும் இருக்கக்கொள்ள, எங்கள் புஸ்தகத்தை வாசித்துப் பார்த்தாலோ. ஆ! ஆ! எவ்வளவு சந்தோஷம் மனக்களிப்பும் மனோரம்மியமு முள்ளதா யிருக்கும்!!

ருக்.—அவ்வளவு நேர்த்தியான புஸ்தகங்களா அவைகள்?

முனி.—புஸ்தகத்தை யெடுத்து வாசிக்கத் துடங்குங்கால், அதை முற்றும் வாசிக்குமட்டும் புஸ்தகத்தை மூடிவிட மனம் வராது. கொடிய பசியாயினும் புசிக்க முதலாய்ப் பிரியம் உண்டாகாது.

ருக்.—அப்பேர்ப்பட்ட புஸ்தகங்களை நான் ஒருபோதும் வாசித்தேன் இல்லை. உன்னிடத்தில் இருந்தால் கொண்டு வருவாயோ சில புஸ்தகங்களை முனி?

முனி.—அப்படியே ஆகட்டும், என் அன்னையே. (சந்தோஷ முகத்துடன்) இன்னொரு வார்த்தை சொல்ல உத்தரவுதானோ அடியாளுக்கு?

ருக்.—(சிரித்துக்கொண்டு) இன்னம் எதாகிலும் விகற்பமான காரியமுண்டோ என்னிடத்தில்?

முனி.—இப்போது நான் சொன்னதெல்லாம் உங்களுக்கு விகற்பமாக காணப்படாவிட்டாலும் எனக்கு விபரீதமாகத் தோன்றுகிறது.

தங்களைப் போன்ற மேலான அந்தஸ்தில் உள்ள சீமாட்டிகள் வீட்டிலிருக்கும்போது நான் தற்போது சொன்ன புஸ்தகங்களை வாசித்து காலங்கழிப்பார்கள். அல்லது தங்களைப்போலொத்த கனவான்களுடைய பெண்கள் வீட்டுக்கு வரும்போது, தாயமோ, சொக்கட்டானோ, சீட்டோ அவர்களுடன் ஆடுவார்கள். நீங்களோ பூமணியாகிய என் அன்னையே! நாளெல்லாம் செடியில் பதுங்கி யிருக்கும் முயல்போல நீங்கள் வீட்டில் தனித்திருந்து. பூலோக விஷயங்களை யறியாமல் இருப்பதை நான் பார்க்கும்போது எனக்கு மெத்த விசனமுண்டாகிறது.

ருக்.–நான் மற்றஸ்திரீகளுடன் நீ சொன்ன விளையாட்டுகளை விளையாடுவதற்கு முன் அதை கற்றல் அவசரமல்லோ? உன் இஷ்டப்படியே ஆகட்டும். நாளை முதல் நீ கொண்டுவரும் புஸ்தகங்களை வாசித்தபின் சொக்கட்டான் முதலியவைகளைக் கற்கலாம். உனக்கு அவை தெரியுமோ?

முனி.–நன்றாய்த் தெரியும் அம்மணீ. டிப்டி கலெக்ட்டர் வீட்டில் நான் வேலைசெய்த காலத்தில்,—அந்த மகராசி நன்று யிருக்கவேண்டும்;—அந்த அம்மாளே இதெல்லாம் எனக்குச் சீராக கற்பித்துக்கொடுத்தாள்.

ருக்.—அந்த அம்மாள் இப்போது எங்கே இருக்கிறாள்?

முனி.—அவர்கள் மதுரைக்கு மாற்றப்பட்டார்கள்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களுக்குக் கற்பிக்கிறேன் அம்மணீ. இனிமேல் தாங்கள் இன்னொரு வேலையை விட்டுவிடவேண்டும்.

ருக்.—எந்த வேலை?

முனி.—நாளெல்லாம் ஏழைகளுக்கு வஸ்திரந் தைக்கிறீர்களே! அந்த வேலையைத்தான். ஏனெனில் அது உங்களைப்போலொத்த பெருமாட்டிகளுக்கு யோக்கியதையல்ல. மேலும் நான் கொண்டுவரும் புஸ்தகங்களை வாசிக்கத் துடங்கி, தாயம், சொக்கட்டான் முதலியவைகளை ஆடத் துவக்கினால் அப்பேர்ப்பட்ட வேலையை செய்ய உங்களுக்கு சமய முண்டாகாது (என்று எழுந்து ருக்மணியின் தலையைச் சீவி பூ முடிக்க ஆரம்பித்தாள்.)

## HOW TO RIASE OUR STATUS?

## நாம் முன்னேறுவதெப்படி?

### இரண்டாம் வியாசம்.

### ஜாதிப்பிரமை.

நாம் ஜாதியின் நிர்ப்பந்தத்தைக் கண்டும் காணாதவர்களைப்போலும், உணர்ந்தும் உணராதவர்களைப்போலும் பெருமித குணத்துடன் நடந்து, நம்முள் ஒவ்வொருவரும் முன்னுக்கு வரவேண்டு மென்னும் பேராவல்கொண்டு, அவ் விஷயமாய்ச் சுயமுயற்சி யெடுத்துக்கொள்ளல் அவசியமென்றும், அதுவே நம நீடேற்றத்திற்குத் தக்க உபகரணமென்றும் கடந்த வியாசத்தில் காட்ட முயன்றேன். இவ் வியாசத்திலோவெனில், நம்முள் முன்னுக்குவந்த சில குடும்பங்கள் ஜாதிப்பிரமையென்னும் மாயையில் சிக்கி, எப்படிச் சீரழிந்து போகின்றனவென்றும், ஆதியிலிருந்து ஜாதியென்னும் அர்த்தசாரமற்ற கட்டுப்பாட்டிற் குட்படாத நாம் சணப்பன் கோழி வலையில் மாட்டிக்கொள்ளுவதுபோல் அதன் பந்தனத்தில் சிக்கிக்கொள்ள முயலுவது வெட்கக்கேடென்றும், பரஸ்பர சகாய முறைமையை நாடி, கல்வி, கைத்தொழில் அனைத்திற்கும் மேலாக சுத்தம், சுசீலம், நன்னடத்தை ஆகிய இவைகளிலேயே நாம் நமது பெருமையைத் தேடி, நமது மனதிற் கானந்தத்தை யுண்டுபண்ணும் கிறிஸ்துவர்கள் என்னும் செல்வப் பெயரில் என்றும் திருப்திகொள்ளல் அவசியமென்றும் காட்ட முயலுவேன்.

ஒவ்வொரு ஊரிலும் கொஞ்சம் ஜீவேசுடன் சீவித்து வரும் நமது குலத்தாருள்



சிலர் ஜாதிப்பிரமைகொண்டு தங்களை வேளாளரென்றும், அல்லது உயர்ந்த ஜாதியாரென்னப்படுபவர்களுக்குச் சார்ந்தவர்களென்றும் சொல்லிக்கொண்டு, அங்ஙனம் வேஷம்போட்டுத் திரிவார்கள். இவர்களுக்குச் சற்று நல்ல உத்தியோகம் கிடைத்தால், அல்லது கையில் கொஞ்சம் காசு சேர்ந்தால், தங்கள் இன ஜன பந்துக்களை இழி குலத்தார் என்று திரஸ்கரித்து, தாங்கள் அசல் மேற்குலத்தாரென்று பட்டாங் கடிப்பார்கள். அநேக சமயங்களில், தங்களைப் பெற்று, வளர்த்து, கல்வி யூட்டி ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்த தங்கள் தாய் தந்தையரை வெறுக்கும் பரம சண்டாளர்களுமுண்டு. கோவிலிலும் தங்கள் போலிஜாதிப் பெருமையைக் காட்ட எத்தனித்து நம்மோடு கலந்து உட்காருவதினால், தங்களுக் கேதோ கௌரவக் குறைவுண்டாகுமென்று பயந்து, நம்மை அவமானப்படுத்துகிறாப்போல், ஜாதியார் பக்கம் உட்கார ஆசித்துப் பங்கமடைந்து பதுங்குலைவார்கள். அவர்களோடு கலந்து உட்கார சாத்தியப்படாவிட்டால், அவர்கள் தங்கள் பாதரட்சைகளைக் கழற்றி வைக்கும் மூலை முடுக்கில் அடங்கி, ஒடுங்கி, உட்கார்ந்து, பூசை காண்பதில் பரமானந்தங் கொள்ளுவார்கள். தங்கள் மக்களை நல்ல கிறிஸ்துவர்களோடு சகவாசம் செய்யவிடாமல், அவர்கள் அக்கியானிகளுள்ளும் மகம்மதியர்களுள்ளும் கழிகடையானவர்களோடு சிநேகபந்தனங்கொண்டு, பன்றியோடு கூடிய கன்றும் மலம் தின்பதுபோல் சீரழிவது தங்களுக்குப் பெருமையென் றெண்ணுவார்கள். இவர்களுடைய பெண்களுக்கு மாப்பிள்ளைகளும், இவர்களுடைய பிள்ளைகளுக்குப் பெண்களும் அகப்படாமல் இவர்கள் படும்பாட்டை வாக்கால் விவரிக்கமுடியாது. பட்சியிலும் பறவையிலும் கூட்டில்லாத வௌவாலைப்போல் இவர்கள் இதிலும் அதிலு மில்லாமல் சுப அசுப காரியங்களில் மெத்த சங்கடப்பட்டு, தாங்களே மேலோர் என்னும் மமதைகொண்டு, கொஞ்சம் ஜீவேசிருக்கிறவரையில் தத்தித்தடுமாறிச் சீவித்துவந்து, கடைசியாய்ப் "பழைய குருடி கதவைத் திறடி" யென்று தங்கள் குலத்தோடு வந்து சேர்வார்கள். அநேகமாய் இப்படிப்பட்ட குடும்பங்கள் அன்று பூத்து, அன்றே வாடிப்போகும் புஷ்பத்திற்கொப்ப, சிலநாட்கள் வரைக்கும் வாழ்ந்து, பிறகு இருந்த இடங்கூட தெரியாமல் மறைந்து ஒழிந்துபோகும்.

தாங்கள் எவ்வளவுதான் நல்ல பதவியடைந்தாலும், தங்கள் பூர்வீகமும் அதன் நிசிதமும் நிழலைப்போல் தங்களை என்றும் தொடர்ந்து வருவதைப்பற்றி இவர்கள் மனமழிந்து, இப்படியாவது ஒரு கள்ள வேஷம் போட்டுக் கௌரவம் தேடிக்கொள்ள வருந்துகிறார்களென்பது வாஸ்தவமே. ஆனால், இவர்கள் அப்படி வருந்திக் கண்ட பலன் யாது? ஐரோப்பியர்களுடைய அந்தஸ்து ஏற்பாட்டின்படி ஜாதியானது கல்வி, செல்வம், நல்லொழுக்கம் உடையவர்களை மாத்திரம் தன்னில் ஜீரணித்துக்கொண்டு, அங்ஙன மில்லாதவர்களைத் தன்னிலிருந்து வாந்தி செய்வதாயிருந்தால், இவர்கள் செய்வதில் ஒரு நியாயமிருக்கும். அப்படி யிருந்தால் உலகத்தில் எங்குமில்லாத ஜாதிக் கூச்சல் இந்தியாவில் மாத்திரம் ஏனிருக்கும்? ஆனால் ஜாதியேற்பாடு அப்படியல்ல. நாம் ஒரு கோடி வருஷம் ஊசி முனையின் மேல் தலைகீழாய்த் தொங்கி தபசு செய்தாலும், ஜாதியின் கணக்குப்படி மேன்மையடையவே முடியாது. ஜாதி பிறப்பைச் சார்ந்ததென்றும், பிறப்பு பூர்வ ஜென்மத்தின் பலனென்றும், கர்மத்தின் விதியென்றும் அக்கியானிகள் பிதற்றுகிறார்கள். ஆகவே, அது நாம் நமது தாய்ப் பாலோ டருந்திய சத்திய வேத விசுவாசத்திற்கு முற்றிலும் மாறுபாடான மடப்பேச்சு.

நாம் (Non Caste) ஜாதியில்லாதவர்களா யிருப்பது நமது விருத்திக்கு மெத்த அநுகூலமான காரியமென்று நம்முள் புத்தியுள்ளவர்கள் கண்டுணர வேண்டியது. நாம் ஐரோப்பியர்களைப் போலும் மகம்மதியர்களைப் போலும் பாரசீகர்களைப் போலும் ஒரு ஜாதி ஜனம் (race). நாம் ஒரு குலத்தாராயினும் நம்முள் பல அந்தஸ்தினருண்டு. நம்முள் தாழ்ந்தோர் சீர்பட்டால் உயர்ந்தோராவார்கள். உயர்ந்தோர் சீர்குலைந்தால் தாழ்ந்தோராவார்கள். அவ்வவ்வந்தஸ்தினர் தத்தம் நிலைமைக் கேற்றவரோடு சம்பந்தங்கொள்ளுவார்கள். தீட்டென்பது நமக்குக் கிடையாது, நம்மவர்

கத்தோலிக்கராயினும், புரோடெஸ்டான்டாராயினும், இந்துவாயினும், புத்தராயினும் உண்பன, தின்பன, கொள்வன, கொடுப்பன முதலிய விசேஷங்களில் எவ்வித ஆட்சேபனையுங் கிடையாது. கோவில்களிலும் நாம் யார்மட்டிலும் பேதம் பாராட்டோம். "எப்பொருள் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் குறள் வாக்கியப்படி நமக்கு இதமான போதனைகளை அல்லது ஆசாரங்களை வழக்கம், மாமூல் என்னும் நிர்ப்பந்தமொன்றுமின்றி ஏற்றுக்கொள்ள சர்வ சுதந்திரமுண்டு. நமக்குள் சிசுவிவாகம் கிடையாது. தாரமிழந்த நமது பெண்டுகள் ஆட்சேபனையின்றி மறு விவாகம் செய்யலாம். சமுத்திர யாத்திரை செய்யத்தகாதென்னும் கண்டனம் நமக்கில்லை. நாம் எதைச் செய்தாலும் நம்மை ஜாதிப்பிரஷ்டை செய்பவர் யாருமில்லை. நாம் சர்வ சுதந்திரமுள்ளவர்கள். இப்படிப்பட்ட சுதந்திரங்களுக்காக இந்துக்களுள் கல்விமான்கள், ஆசார சீர்திருத்த சங்கத்தார் படும்பாடு மெத்த. செய்யும் உபந்நியாசங்கள் அநந்தம். எழுதும் வியாசங்களுக்கு எண்ணிக்கையில்லை. நமக்கோவெனில் அவைகளெல்லாம் கைப்பொருளாயிருக்கின்றன. சேசுக் கிறிஸ்துநாதரின் திரு இரத்தத்தால், அக்கியானத்திலிருந்தும் அதன் அவலட்சணத்திலிருந்தும் சுத்தமடைந்த நாம், ஜாதியென்னும் மாய்மாலமொன்றுமின்றி உத்தம கிறிஸ்துவர்களாய் ஒழுகலாம். ஒற்றுமையாய் வாழலாம்.

நம்முள் எத்தனையோ பேர் ஜாதிவேஷமொன்றுமின்றி நல்ல அந்தஸ்தில் சகலரோடுங் கலந்து க்ஷேமமாய் வாழ்ந்து வருகிறார்கள்.

நமது புரோடெஸ்டாண்டு சகோதிரர் ஜாதியையும் ஜாதிப்பிரமையையும் நிராகரித்துத் தள்ளி கல்வியைக் கையாடி, நாகரீகத்திலும் விருத்தியிலும் நம்மிலும் மேம்பாடடைந்திருக்கிறார்களென்று கத்தோலிக்குப் பத்திரிகைகளே சாதிக்கின்றனவே. இதாவது நமக்கொரு தூண்டுகோலாயிருக்கலாகாதா?

ஆதலால், நம்முள் கற்றவர்கள், செல்வாக்குள்ளவர்கள், சீவிக்கும் வகையறிந்தவர்கள் ஜாதிப்பிரமையையும் அளவுக்குமிஞ்சிய அந்தஸ்து பிரமையையும் நீக்கி, மற்றவர்களுக்கு நன்மாதிரிகை காட்டி, அன்பென்னும் பாசத்தால் தூண்டப்பட்டு, "இனம் இனத்தைக் காக்கும், வேலி பயிரைக் காக்கும்" என்னும் பெரியோர் வாக்கியத்தை நினைத்து, ஏழைகளும் அறிவிலிகளுமான தங்கள் சகோதரர், கல்வி, கைத்தொழில் அனைத்திற்கும் மேலாக சுத்தம், சுசீலம், நன்னடத்தை முதலிய இலட்சணங்களைக் கையாடி வரும்படி, சமயம் பார்த்து அவர்களைத் தூண்டுதல் அவசியம். "சுடர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டு" மென்பது ஒரு பழமொழி. ஆனால் அவிந்திருக்கும் விளக்குக்கு என்னென்ன வேண்டும்? நமது குலம் அவிந்திருக்கும் விளக்குக்குச் சமானம். ஆகக்கொள்ள, நாம் நேற்று எப்படி யிருந்தோமென்பதை மறந்து, குலத்தைவிட்டுத் தூரமாய் நின்று, நமக்குக் கேட்டை விளைவித்துக்கொள்ளுவதுமன்றி பிறருக்கும் நன்மை செய்யும் சமயத்தையு மிழந்து "எட்டி பழுத்தாலென்ன? ஈயாதார் வாழ்ந்தாலென்ன?" என்று யாவரும் கண்டு நகைக்கச் சீவித்து, நமது குலத்தாருக்கு "அவர்கள் என்ன செய்வார்கள்? இவர்கள் என்ன செய்வார்கள்?" என்று எண்ணமிட்டுக்கொண்டு காலங்கழித்தால் நமது குலம் முன்னுக்கு வரும் விதமெப்படி? நமக்கில்லாத அக்கரை புறத்தியாருக்கென்ன வந்தது? நமது குலத்தாரை நாமே இகழ்ந்துவந்தால் புறத்தியார் அவர்களைப் புகழ்ந்து வருவார்களோ வென்ன? நமது ஜனத்தையே நாம் குப்புறத் தள்ளப் பார்த்தால், புறத்தியார் அவர்களுக்குக் கைலாகு கொடுத்து வழி நடத்துவார்களோ வென்ன? இக்காலத்தில் ஒவ்வொரு ஜனமும் ஒற்றுமை பாராட்டி முன்னுக்குப் போகும் வழியை நாடுகின்றது. இது போராட்டகாலம். யார் யார் சுயமுயற்சியோடும் சுயப்பரித்தியாகத்தோடும் போராடி முன்னுக்கு வருகிறார்களோ, அவர்களுக்கே ஜெயம். முயற்சி திருவினையாக்கும்.

இந்திய கிறிஸ்துவன்.



## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### புன்னைக்காயல் கிறிஸ்தவர்க்கோர் தாழ்மையான வேண்டுகோள்!

சகோதரரே!

சில நூற்றாண்டுகளுக்கு முன் பலவகையாலுஞ் சிறந்து விளங்கிய நமது ஊர் தற்போதிருக்குந் தன்மைக்கு வரவேண்டிய காரணமென்ன? காலத்துக்குக் காலம் நாம் குருக்களோடு பண்ணும் காரணமற்ற குழப்பங்களன்றோ? ஆம். இவ்வித குழப்பங்கள் பண்ணிக் கிடைத்த பலன் என்ன? ஒன்றுமில்லை. இதை நன்றாயறிந்திருந்தும் இன்னம் குழப்பம் பண்ண ஆரம்பிப்பதேன்?

சகோதரரே! குருக்கள் யாவர்? சத்ய ஸ்வரூபியாகிய சர்வேஸ்வரனின் ஸ்தானத்திலிருக்கிறவர்களல்லவா? அவர்களுக்குச் செய்வனவெல்லாம் கடவுளுக்கே செய்ததுபோலல்லவா? அக்குருக்களை விரோதித்தும் பகைத்தும் வருவோமாயின், கடவுளுக்கே அப்படிச் செய்தாற்போலாயிற்றல்லவோ? ஆகையால், நாம் தேவனுக்குப் பயந்திருக்கிறோமென்று எப்படிச் சொல்லுகிறது? இப்படியிருந்தால் அக் கடவுளின் கிருபையை அடைவதெப்படி? நாம் செல்வராய், தனவந்தராய், வாழவேண்டுமென்னும் எண்ணம் நமக்கிருக்குமேயாகில், குருக்களுக்கு எவ்வித தொந்தரவும் பண்ணாமலிருக்கவேண்டும். இல்லறத்தோரைவிட துறவறத்தோர் பன்மடங்கு பெரியோரன்றோ! இந்தப் பெரியோரின் பெருமையைச் சரியாய் எடுத்தோதுபவனார்?

"துறந்தார் பெருமை துணைக்கூறின் — வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று."

ஆதலால், பெருமையிற் சிறந்த இந்தப் பெரியோரின் கோபத்துக் குள்ளானோர் பெருங்கேட்டுக்குள்ளாவார்களென்பது மெய். இதற்கு நாம் தூரப்போய் ஆதாரம் தேடவேண்டியதில்லை. நமது ஊரில் நடந்தேறிய சம்பவங்களையே எடுத்தோதலாம். 1900-ம் ஆண்டு இங்கிருந்த பங்குக் குருவையும் அவரின் துணைவரையும் வைத இருவாலர் அடைந்த கதியை நாம் கண்ணுற் கண்டிருக்கிறோமல்லவா? கடந்த 1905-ம் வருடமுதல் 1910-ம் வருடம் வரையும் கட்சி செய்த காரணகர்த்தாக்கள் எப்பாடு பட்டனர் என்பதையும் அறிவோம். இவை நம் காலத்தில் நாம் கண்டறிந்தவைகள். இதைவிடப் பெரிய சம்பவமொன்று இன்றைக்கு 350 வருடங்களுக்கு முன் நடந்தேறியிருக்கிறது. இதைத் தெரிவிப்பதே நான் நினைத்த கருமமும், இதில் நிகழ்ந்திருப்பவையாலே நாம் பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தோமென்பதை யுணர்ந்து தக்க விதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்பதுமே எனது பிரார்த்தனையுமாம். சகோதரரே! சகோதரரே! தயவு செய்து கவனமாய்க் கேளுங்கள். அந்தந்தோ! அதை எழுத என் கை வழங்குதில்லையே. அகத்தியமாய் அதை அறிவிக்கவும் வேண்டியிருக்கிறதே; ஐயோ அது என்ன! ஆ சகோதரரே! அளவற்ற அற்புதங்கள் புரிந்த அருந்தவமுனியும் நமது ஞானப் பிதாவுமாகிய அர்ச். சவேரியாருடைய நடுநடுக்கத்துக்குரிய வசனமன்றோ? அதெப்படியெனில், இப்போது எவ்விதம் குருக்களோடு குழப்பங்கள் பண்ணிக்கொள்ளுகிறோமோ அப்படியே நமது முன்னோர்கள் கிறிஸ்துவர்களான துவக்கத்திலும் பண்ணியிருந்திருக்கிறார்களென்று அர்ச். சவேரியாரின் சீவிய சரிதை வழியாய்த் தெரிய வருகிறது. அதெவ்வாறெனில், அப்போது புன்னைக்காயலிலிருந்த மான்சியாஸ் என்னும் குருவானவருக்குப் பண்ணிய நெருக்கிடைகளை அவ்விடத்தை விட்டுச் சற்றுத் தூரத்திலிருந்த அர்ச். சவேரியாருக்கு அக்குரு தெரிவிக்க, அதற்கு அம் மாதவன் பதில் எழுதிய கடிதத்தில் "கடவுள் அவர்களைத் தண்டிப்பார்" என்று கண்டிருக்கிறது. ஆ! இதென்ன பயங்கர வசனமாயிருக்கிறது. இவ்வசனமன்றோ அப் பூர்வீக நகரின் மான்மியத்தை மறைத்துப் போட்டது. அங்குள்ளோரின் செல்வாக்கை யகற்றிவிட்டது. அவர்களை தீவு தீவாந்தரங்களிலும் பிற வூர்களிலும் குடியேறச் செய்துவிட்டது. பின்னுமென்ன? அதன் சிறப்பைப் பற்றி பற்பல பாஷைகளில் எழுதப்பட்டிருந்தமையால் அச்சிறப்பைப் பார்க்க ஆசையோடு வருபவர்களை "இதுதானா புன்னைக்காயல்!" எனச் சிந்திக்கவுஞ் செய்துவிட்டது. சகோதரரே, இதுகாலும் நாம் இதை அறியாதிருந்தோம். இப்போது அறிந்தபின்னாவது அத்தண்டனையை ஒழிக்கப் பிரயாசைப்பட வேண்டாமா? வேண்

டாமென்று சொல்ல எவர்க்கு வாய்வரும்! நாம் எவ்வளவோ ஜெபதபம் பண்ணி இத்தண்டனையை மாற்றவேண்டியிருக்கிறது. இன்னமும் குருக்களோடு குழப்பங்கள் பண்ணி வருவோமேயானால், மேற்சொன்ன தண்டனையைப் பெருக்கிக்கொள்ளுகிறோ மென்றே சொல்லவேண்டும். அவ்வித குழப்பங்களை இனிப் பண்ணோமென நாம் ஒவ்வொருவரும் பிரதிக்கினை செய்து முன்சொன்ன தண்டனையையும், நம்மாலியன்ற அளவு செய்யக்கூடிய ஜெபதபங்களினால் நீக்கிக்கொள்ளவேண்டும். இது விளையாட்டான காரியமல்ல. நேரப் போக்குக்காக எழுதினேனென்றுஎண்ணாதீர்கள். குருக்களுக்கு இடையூறுகள் பண்ணிய எந்தச் சக்கரவர்த்தி, எந்த மந்திரி, எந்த பிரதானி, எந்தச் சீமான், என்ன பிரயோசனம் கண்டடைந்தான்? ஐரோப்பாவின் பயங்கரம், என்னப்பட்ட நப்போலியன் முதலாய் எக்கதிக் குள்ளானனென்பதை இவ்வுத்தம நல்லாயன் வழியாய் வாசித்திருக்கிறோம்.

சவியேர்தாசன்.

## மதுரை.

அர்ச். அந்தோனியார் வாசகசாலையின் வருஷாந்தரக் கொண்டாட்டம் 16-1-16-ல் மதுரை மேல்வாசல் அர்ச். ஜெபமாலை மாதாக்கோவில் கம்பவுண்டில் ஸ்தாபகமாயிருக்கும் பாடசாலைக் கட்டிடத்தில் சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்தவரும், நல்லாயனின் பூர்வீக பத்திராதிபருமான சங். கனம் Joseph, பாலநாதர் சுவாமியவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. வாசக சாலையின் செக்ரெடெரியும் மதுரை முனிசிப்பல் போர்டு ஸ்கூல்,எட்மாஸ்டரும், திண்டுக்கல் சுஜாதி அபிவிர்த்தி சங்கத்தின் உபகாரியதரிசியுமான A. ரூசை உபாத்தியாயரால் வருஷாந்தர ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. ஷை ஆலயப் பங்குவிசாரணைக் கர்த்தரும் வாசகசாலையின் டைரெக்டருமான சங். கனம், L.B. ரோச்சு சுவாமியவர்களால்,பத்திரிகைகள், வேத சரித்திரங்கள் வாசிப்பதால் கிறீஸ்துவர்களுக்குண்டாகும் பயனைப் பலவித திருஷ்டாந்தங்களால் விளக்கிக்காட்டி உபந்நியாஸிக்கப்பட்டும், மதுரை Vincent & Co Proprietor, ம-ா-ா-ஸ்ரீ கனம் Vincent நாராயண அய்யரவர்களால், சங்கத்தின் பயன், "ஒற்றுமை வலிமை தரும்" என்னும் விஷயங்களைப்பற்றி நன்குணர்த்தப்பட்டும், சங்கைக்குரிய அக்கிராசனபதி யவர்களால் வேத! சரித்திரங்கள், பத்திரிகைகள், வாசிப்பதின் பயனையும், பிறர் சிநேகம், பரோபகாரம் மெம்பர்களின் விடாமுயற்சி ஆகிய இவ்விஷயங்களையும் முறையே தொகுத்துச் சுருக்கமாயும் தெளிவாயும் வாய்ச்சாலமாயும் எடுத்தோதப்படவும், ஷை சங்கத்தின் ஆலோசனைக் கமிட்டி மெம்பர்களில் ஒருவரும் தென்னிந்தியா ரயில்வே மதுரை டிவிஷன் தந்தி இலாக்கா இன்ஸ்பெக்டருமான ம-ா-ா-ஸ்ரீ F.X.Michael Pillai அவர்களால் சங். அக்கிராசனபதியவர்களுக்கும், சங். டைரெக்டர் சுவாமியவர்களுக்கும் விஜயஞ்செய்திருந்த சில கனவான்களுக்கும் புஷ்பாரங்கள் சூட்டப்பட ஷை பாடசாலையின் சிறுவர்களால் இவ்வாசகசாலையின் பாதுகாவலரும் வழியவர்களின் அன்ன தாதாவுமான அர்ச். அந்தோனியார்பேரில் சில மங்களப்பாக்கள் பாடப்பட்டும் இராஜ வாழ்த்துலுடன் சபை கலைந்தது.

C. பால் அந்தோனி.

## தூத்துக்குடி.

### தூஷணம் மலிந்த துண்டுப் பத்திரிகைகள்.

எமது நல்ல தந்தையாகிய அர்ச்சியசிஷ்ட பிரான்சீஸ் சவியேரென்னும் மாதவத்தோனின் செஞ்சரோருகம் நிகர்த்த, பாதங்கள் பட்டுத் தேய்ந்த புண்ய பூமியாகிய, இத் தூத்துக்குடியில் சில மாதங்களாகக் கள்ளொப்ப மிட்ட துண்டுப் பத்திரிகைகள் பல அலைகின்றதைப் பார்த்தோம். இப்பத்திரிகைகள் எங் குருப்பிரசாதியாகிய, சங்கை வாய்ந்த பிந்தோ சுவாமிகளையும், சங்கை வாய்ந்த யேசுசபை மார்டின் சுவாமிகளையும், பரதகுலாதிபனாகிய காலஞ்சென்ற தொன்கபிரியேல் மோத்தவாஸ் பரதவர்ம பாண்டியனையும், அப் பரதகுலாதிபனின் மைந்தன், தொன் அனஸ்தாசி மோத்த கொறேர பரதவர்ம பாண்டியனாகிய எங்குல இளவரசனையும் இன்னும் எங்குலத்திற் றோன்றிய பல பெரியவர்களையும் வீணே தூஷிக்கின்றன.

கேவலம்; இப்பத்திரிகைகள் இன்மையை உண்மையென் றோலமிடுகின்றன. சற்சனரைச் சண்டைக் கழைக்கின்றன. இப் பொய்யொப்பமிட்ட தூஷணத் துண்டுப் பத்திரிகைகளுக்கு, மறுப்புளதோ! என்கிறார் சிலர். இது அறியாமை. தர்க்கரீதிகொண்டு பிறர் தூஷணையின்றி யெழுதும் பத்திரிகைகளுக்கு மறுப் பெழுதலாமே யன்றி, தூஷணைக்கு மறுப்பெழுதல் எங்ஙனம்? தூஷிப்பவரைத் தூஷிப்பவருந் துஷ்டரல்லோ?

உள்ள வங்கனங் கசிந்தோடல் போலொரு
கள்ள நெஞ்சினன் புறங்கழற லன்னவ
னுள்ள மார்புரை யெலா மொழுகி வாய்வழி
வெள்ளமாய் வழிகின்ற விதத்தை மானுமே.

என்பது நீதி நூலோர் கூற்று.

குருப்பிரசாதிகள் செய்வது, ஒருக்கால் நம் புல்லறிவிற்கு அதிருப்தியாகத் தோன்றினும், அன்னவரிடத்துச் சென்று, நமது கருத்தைத் தாழ்மையுடன் வெளியிட்டு, அக் குருக்களின் மேங் கருத்தை யறிந்து கீழ்ப்படிய வேண்டியதே உத்தமமன்றி, அன்னவர்க்கு விரோதமாய்ப் பொய்யொப்பமிட்ட, பத்திரிகைகளைப் பிரசுரஞ் செய்தல் அதமமன்றோ! குரு வாக்கு தேவ வாக்குக்கு நிகரன்றோ! சர்வ வல்லப பெருமான் இக் குருக்களின் திருவாக்குக் கமைந்து ஓர் சிறு துண்டுக் கோதுமை யப்பத்தில் வந்தடங்குவாராகில், இக்குருக்களின் மகத்துவத்தை விரித்துரைக்க எவர் வல்லார்? "குருஸ்தானம் தேவஸ்தானம்" என்பதும் ஓர் முது மொழியே. சுருக்கி விளக்கிச் சொல்லில், குருக்கள் வானோர்களை விட வல்லமை கொண்டவர்கள் என்னலாம். என்னை! வானோர்களுக்கு மானிடரின் பாவங்களை மன்னிக்கும் அதிகாரமில்லை. குருக்களுக்கோ, பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை எந்நாதன் அன்றும் இன்றும் என்றும் கொடுத்தாரென்க.

துறவறத்தைக் கொண்டவரது பெருமை சாலவும் மேம்பாடுடையதென ஏனைய மதத்தாரும் அங்கீகரிப்பர். இத்தகைய குருப்பிரசாதியைத் துண்டுப் பத்திரிகைகளால் தூற்றல், எத்துணை மதிமோசம்! இதுவே மகா தோஷம்!!

"இருமை வகை தெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு."

என்றார் திருவள்ளுவரும்.

இஃதுநிற்க: பரதர் மதுரை யரசாட்சியை யுமிழந்து, அலை கடலோரம் வந் தொதுங்கி, நாயக்கராலும் மகம்மதியராலும் தாங்கொணாத் துன்புற்றகாலத்தில் அந்நாயக்கர் மகம்மதியரின் கொடுமையை நீக்கி, அன்னவர் சிதறுண்டு போகாது, எல்லவரையும் ஒன்று கூட்டி, அன்னவர்க்குள் ஓர் அரசனையும் நியமித்து, ஆதி தொட்டு அரசனை யுடைய ஓர் குலத்தவரென்னும் மகிமையைப் போர்த்துக்கல் தேயத் தரசனாகிய மூன்றாம் ஜாண் என்னும் மன்னனைக் கொண்டு நிலைநாட்டிக் கருணை புரிந்தார் கடவுளெனச் சங்கைக்குரிய யேசுசபை கால்றீஜ் சுவாமிகள் எழுதி வைத்த அர்ச்சியசிஷ்ட சவேரியாரின் சரித்திரம் சாக்ஷி கூறுகின்றது.

அன்றுமுத லின்றளவும், அவ் விராஜ குல வழியில், ஒருவர்பின் ஒருவராக, முறையே வந்துகொண்டிருக்கும் "சாதித் தலைமை யபிஷேகத்தைத்" தொலைத்துவிட வேண்டுமென்பதும் இத்தூஷணப் பத்திரிகைளின் துணிபு. இந் நியாயமற்ற துணிபுக்குத் தெய்வத்தின் நினைவு என்னவெனக் கூறுவோம்?

"நாமொன்று நினைக்கத் தெய்வந்தானொன்று நினைக்கும்" என்பது கன்னபாரம்பரைச் சுலோகமன்றோ. மும்மதங்கொண்ட யானை தன் றலைமேல் தானே மண்ணைவாறிப் போட்டுக்கொள்ளும் செய்கையை நிகர்த்த செய்கை யிதுவன்றி வேறென்ன? காவேரி முதற் கன்னியாகுமரி வரையுமுள்ள பரதகுலத்தவரின் நல்லெண்ணத்தைக் கெடுத்து, சமாதானத்தை யழித்து ஏனையோரும் எளனஞ் செய்யும் நிலைமையை நாடல் தகவாமா? பரதகுல மென்னும் நாமமே, பரதன் என்னும் ஓர் இராஜனால் வாய்ந்ததெனில், அரசனால் குலத்திற்கு நிகழும் நன்மைக்கு அளவுண்டோ!

இப் பரதகுலம் தன் முற்சீரை யிழந்து, சீர்குலைந்து தேய்பிறைபோலாகக் காரணமென்ன? ஒற்றுமையின்மையே காரணமென்க. பஞ்சமரெல்லாம் முன்னேற்ற மடையு மிக்காலம், பரதகுலம் தன் ஒற்றுமையை யிழந்து தனக்குட்டானே வாதாடுமாகில்,அதன் எதிர்கால ஜன சமூகம் மிகவும் பரிதாப நிலைமையை யெய்தும் என்பதற்கு ஐயமில்லை. இஃதிங்ஙன மிருப்ப:

பிறர் தூஷணை செய்து பொய் யொப்பமிட்ட துண்டுப் பத்திரிகைகளை வெளியிடல், கொடியது! கொடியது!! மிகவும் கொடியது!!! என்பது சர்வ ஜன சம்மதம். "முட்செடிகளில் அத்திக் கனிகளைப் பறிக்கிறதுமில்லை; நெருஞ்சிச் செடியில் திராட்சக் கனிகளைப் பறிக்கிறதுமில்லை" (லூக்கா; 6-44-45.) என்னும் வேத வாக்கின்படி, இத் தூஷணம் மலிந்த துண்டுப் பத்திரிகைகள் வரைந்துள்ளார், அப்பத்திரிகைகளால் யாதோர் பயனு மடையாரென்பது எமது நோக்கம்.

M. X. Rubeen Varma,
*Tuticorin.*

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

**18-சகோதரர்கள்.**—பெர்னார்து குயிச்சன்ட் என்பவரின் 18-புத்திரர்கள் ஜெருமானியர்களுக்கு விரோதமாய்ச் சண்டைபோடுகிற பட்டாளத்தில் சேர்ந்திருக்கிறார்களாம்.

**பிரிட்டிஷ் இராணுவத்தில்.**—செவிடும் ஊமையுமான 1,000 வேலைக்காரர்களடங்கிய பட்டாளம் ஒன்றிருக்கிறது. அவர்களுக்குச் சண்டைசெய்ய விசேஷமாய்க் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.

**நாலுகாலுள்ள கோழிக் குஞ்சு.**—மலாய் நாட்டிலுள்ள ப்ரூம் பீல்டு எஸ்டேட்டைச் சேர்ந்த மிஸ்டர் ஹென்ரிக்குச் சொந்தமான பெட்டைக்கோழி யொன்று சமீபத்தில் அடைகாத்துக் குஞ்சுபொரித்ததென்றும், அவற்றில் ஒன்றுக்கு நான்கு கால்கள் இருக்கின்றனவென்றும், இப்போது இரண்டுமாத காலமாகியும் அது நன்றாய் வளர்ந்துவருகிறதென்றும் சொல்லப்படுகிறது. இதுவும் ஓர் விந்தையே!

**கத்தோலிக்கு கான்பரென்ஸ்.**—திருவாங்கூர், கொச்சி, மலையாளம் இவ்விடங்களிலுள்ள கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களின் கான்பரென்சானது இம்மாதம் 9உ செவ்வாய்க்கிழமை தினம் கொரவேலங்காட்டில் நடைபெறும். அக்கான்பரென்சைச் செம்மையாக நிறைவேற்ற என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமோ அவையெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

**ஒரு தைரியமான உளவாளி.**—எர்னஸ்ட் ஸ்கில்லர் என்னும் ஜர்மன் உளவாளி, விளாடிவாஸ்டாக்கிலிருந்து சண்டை சாமான்களை ஏற்றிக்கொண்டு போன மெட்டோபி என்னும் பிரிடிஷ் கப்பலைக் கவிழ்க்க ஒண்டியாக எத்தனம் செய்கையில், கண்டு பிடிக்கப்பட்டான். அவன் கப்பல் தலைவனை ஒரு அறையில் போட்டுப் பூட்டிவிட்டு, கப்பலின் பேப்பர்களைப் பரிசோதித்துக்கொண்டிருக்கையில், மற்றவர்களால் பிடிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டான்.

**செவிடு நீங்கின விந்தை.**—பிரிட்டிஷ் படை வகுப்பில் சார்ஜன்ட் என்ற பதவி பெற்ற காக்சல் என்பவர், போர்முனையிலே கனத்த குண்டொன்று திடீரென்று வெடித்ததினால், மூன்றுமாதங்களுக்கு முன் செவிடாய்ப் போய்விட்டார். அன்று முதல் அவருக்குக் கொஞ்சமும் காது கேட்கவில்லை. ஆனதினால் அவர் ஒரு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். சிலதினங்களுக்கு முன் அவர் அவ்வைத்தியசாலையின் மேன்மாடியிலிருந்து திடீரென்று கீழேவிழுந்தவுடன் திரும்பவும் அவருக்குக் காது முன்போலக் கேட்கும்படியாய்விட்டதாம்

**வண்டியும் குதிரையும் களவுபோதல்.**—லண்டனிலுள்ள தெருக்களிலே வண்டிகளையும் குதிரைகளையும் வண்டிக்காரர்கள் அசாக்கிரதையாக விட்டிருக்க அவைகள் அடிக்கடி களவுபோய் விடுகின்றனவாம். சிலதினங்களுக்குமுன் சாராயம் ஏற்றப்பட்டிருந்த ஒரு குதிரை வண்டியை அதன் உடையவன் அசாக்கிரதையாக விட்டிருக்க, உடனே அவ்வண்டியை யாரோ ஓட்டிக்கொண்டுபோய் அதிலிருந்த சரக்குகளை எடுத்துக்கொண்டு வண்டியை வேறோரிடத்தில் விட்டுவிட்டுப் போய்விட்டனர். வண்டியிலிருந்த சரக்குகளின் பெறுமதி ஏறக்குறைய 300 பவுனும்.

**“உண்டு உறியில் இரு என்றால் உருண்டு தரையில் விழுந்ததுபோல்”**—லியல்பூரில் ஸப்ஜட்ஜி யொருவர் நியாயம் தவறி ஒருகேஸில் தமது சேகவன் மூலமாக 150 ரூபாயும் 250-ரூபாயும் லஞ்சம் வாங்கினாரென்று ஏற்பட்டு, ஒவ்வொரு குற்றத்துக்கும் இரண்டிரண்டு வருஷம் கடின காவலும் 450-ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். இரண்டு தண்டனைகளையும் தொடர்ந்து அநுபவிக்கவேண்டும். வேலி பயிர் காத்தால் விளையும் பலன் கொடுக்கும். வேலி பயிர்மேய்ந்தால் விளைவதுண்டோ அப்பலன்தான்? ஆகவே நியாயபரிபாலனஞ் செய்யவேண்டியவர்களே அநியாயத்துக்கேற்படுவார்களானால் நீதி கிடைப்பதெப்படி?

**பரிசுத்த பாப்பரசரும் கொச்சி இராசாவும்.**—ஐரோப்பிய யுத்தம் தொடங்கும்போது கொச்சி தேச இராசாவின் குமாரன் ஜெருமனியிலே இருந்தார். அதனாலே அவர் அங்கு மறியற்படுத்தப்பட்டார். அவரை விடுதலை செய்வித்துக்கொள்ள இராசா தம்மாலியன்ற வழிகளெல்லாம் பார்த்தார். என்றாலும் முடியவில்லை. கடைசியாக மயிலாப்பூர் மேற்றிராணியார் மூலமாக பரிசுத்த பாப்பரசருடைய தயவை வேண்டினார். அதற்கு மறுமொழியாக, பாப்பரசரின் பிறதேசகாரிய மந்திரியாரான கருதினால் மைலாப்பூர் மேற்றிராணியாருக்குத் தந்திமூலமாக நீர் வேண்டிக்கொண்டபடி பரிசுத்த பாப்பாண்டவர் கொச்சி இராசாவின் குமாரனை விடுதலை செய்வித்திருக்கிறார் எனத் தெரிவித்தார். இப்படி இளவரசர் விடுதலையடைந்து இங்கிலாண்டுக்கு வந்திருக்கிறாரென்றும் அவர் கல்விகற்குங் காலம் முடிகிறவரையில் இங்கிலாந்திலேயே தங்கியிருப்பாரென்றும் தெரியவருகிறது.



**சங். பி. ராயண்ண சுவாமிகளின் தேகவியோகம்.**—இந்நல்ல குருவானவர் 52-வருடங்களுக்கு முன்னர் பக்தியுள்ள தாய் தந்தையிடம் கர்நூல் ஜில்லாவைச் சேர்ந்த ஒன்றெத்துபல்லெ யென்னும் ஊரிற் பிறந்தவர். காலஞ்சென்ற சென்னை அதிமேற்றிராணியார் ஜோசப் கால்கன் ஆண்டவரவர்களால் 1893 ஆண்டு நவம்பர் மாசம் குருப்பட்டம் பெற்று, இச்சென்னை அதிமேற்றிராசனத்தில் கடப்பை, கர்நூல், குண்டூர், அநந்தப்பூர், பெல்லாரி முதலிய ஜில்லாக்களின் பலபங்குகளில் கடந்த 22-வருடங்களாக ஆத்துமங்களை யிரட்சிக்க அதிக ஆவலுடன் உழைத்துச் சென்ற மாசம் 23-ம் தேதி கர்த்தர் உயிர்த்த திருநாளன்று சென்னை, மண்ணடி, அர்ச். சவேரியார் கோவில் விசாரணை - சுவாமியாரின் அறைவீட்டில் பாக்கியமான மரணமடைந்தார். மறுநாள் அர்ச். சவேரியார் கோவிலில் அனேக குருப்பிரசாதிகள் சமுகமாயிருக்க, எமது அதிமேற்றிராணியாரால் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டு, அர்ச். ஆரோக்கியநாதர் கல்லறையில் வெகு ஆரவாரத்தோடு நல்லடக்கஞ் செய்யப்பட்டார். இவருக்கு நம்முடைய நல்ல சர்வேசுரன் நித்திய இளைப்பாற்றியைக் கொடுக்க வேண்டிக்கொள்ளுமாறு நல்லாயன் சந்தாதாரர்களனைவரையுங் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**பெல்ஜியம்.**—நிகழும் ஐரோப்பிய யுத்தத்தினால் சீர்குலைந்து நிற்கும் போலந்து தேசத்திற்குப் பொருள் உதவி செய்யும் பொருட்டு, நமது இந்தியாவின் பற்பல மேற்றிராசனங்களில் பணம் வசூலிக்கப்பட்ட சங்கதி நமது சந்தாதாரர்களறிந்திருக்கலாம். இவ்வாறே ஐரோப்பாவிலும் பற்பல தேசங்களிலும் போலந்து கஷ்ட நிவாரண நிதிக்காக பணம் சேகரிக்கப்பட்டது. வர்த்தகத்திலும், தொழிலிலும் செல்வாக்காய் சிறந்து விளங்கினதாய், தற்காலம் இரத்தவிடாயுள்ள ஜெர்மானியருடைய கொடூரத்தினால் பாழாய்க் கிடக்கிறதுமான பெல்ஜிய தேசத்தின் நன்மாதிரிகையைப் பாருங்கள்! பரிதாபத்துக்குரிய தங்கள் நிலைமையைச் சற்றுங் கவனியாது, ஏறக்குறைய 1,24,000 பிராங்குகளை (1-பிராங்கு 9-அணா) இத்தேசத்தார் மனப்பூர்வமாய்ப் போலந்து தேசத்துக்குக் கொடுத்து உதவிசெய்ததாக வதந்தி. என்னே, இந்த பெல்ஜியர்களுடைய அன்பும் தாராள குணமும்! இந்த உதாரகுணமுள்ள பெல்ஜியதேசத்தை சர்வேசுரன் ஒநாய்களாகிய ஜெர்மனியர் கைவசமிருந்து மீட்கும்படி நாம் சர்வேசுரனை மன்றாடுவோமாக.

**முட்டைக்கு இங்கிலீஷ் தெரியாத ஒரு பிராஞ்சுக்காரன்.**—பசியின் கொடுமையினால் வருந்தின ஒரு பிராஞ்சுக்காரன் அங்குமிங்கு மலைந்து, கடைசியில் ஒரு இங்கிலீஷ் ஹோட்டலில் சாப்பிட நுழைந்தான். அவனுக்கு 2-முட்டைகள் மாத்திரம் தேவையாயிருந்தன. ஆனால் முட்டைக்கு இங்கிலீஷ்ப் பதம் அவனுக்குத் தெரியாதபடியால், சாப்பாட்டுக்காரியை என்னவிதமாய் முட்டை கொண்டுவரச் சொல்லுவதென்று ஆலோசனை செய்கையில், முற்றத்தில் ஒரு சேவல் நீணி பொறுக்கிக்கொண்டிருக்கக் கண்டு, சாப்பாட்டுக்காரியை நோக்கி “அதென்ன பறவை?” என்றான்.

சாப்பாட்டுக்காரி.—“அது சேவல், ஐயா”

பிராஞ்.—“பெண்சேவலை என்னமாய் ஜனங்கள் கூப்பிடுகிறார்கள்?”

சாப்.—“பெட்டைக் கோழி”

பிராஞ்.—“சேவலினுடையவும் பெட்டைக்கோழியினுடையவும் பிள்ளைகளை யெப்படிக் கூப்பிடுகிறீர்கள்?”

சாப்.—“கோழிக் குஞ்சுகள்”

பிராஞ்.—“அவைகள் குஞ்சுகளாகிறதற்குமுன் அவைகளை என்னமாய்க் கூப்பிடுகிறீர்கள்?”

சாப்.—கோழி முட்டைகள்”

பிராஞ்.—“ஆம்!! ஆம்! அதுதான் எனக்குத் தேவை” என்று இரண்டு முட்டைகளை வாங்கிச் சாப்பிட்டுச் சென்றனும்.

**லலிதா சோப் தொழிற்சாலை, மாம்பலம்.**—இந்தியர்களாலேயே ஆரம்பித்து நடத்தப்பட்டுவரும் இந்த லலிதா ஸோப் தொழிற்சாலை என்பது சைதாப்பேட்டைக் கடுத்த மாம்பலத்தில் ஸ்தாபகமாயிருக்கிறது. மேனுடுகளில் கொழுப்பைக் கொண்டு செய்யப்படும் சோப்புகளுக்கு இக்கம்பெனியாரது சோப்புகள் தாழ்ந்துவிடவில்லையென்றே சொல்லும்படியாயிருக்கிறதாம். சென்னை கைத்தொழிற் காட்சியில் லலிதா ஸோப்புத் தொழிற்சாலையார்க்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் ஸன்மானிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் செய்யும் சோப்புகளிலுள்ள விசேஷம் என்னவென்றால், ஸோப்புக்குப் பிரதமமா யிருக்வேண்டிய எண்ணெய்ப் பதார்த்தங்களெல்லாம் கந்த மூலாதிகளிலிருந்து இறக்கப்பட்டவைகளிலிருந்தே செய்யப்படுகின்றன. இவர்களது போராக்ஸ் ஸோப்பின் விலை 6 அணுவுக் கதிகமில்லை. மற்ற மாதிரிகள் அரை ரூபாய்க்கு 3 கட்டிகள் வீதம் விற்கப்பட்டு வருகின்றன. துணிகளை வெளுப்பதற்காக ‘புல் மூன்’ ஸோப்பின் விலை 2 அணு வீதம் விற்கப்பட்டு வருவது ஜனங்களுக்குப் பெரிதும் உபயோகமாகி வருவதாகத் தெரிய வருகிறது.

**மரங்களே காவல் சேனைகள்.**—மேனுட்டுப் பத்திரிகை யொன்றில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது. ஜெருமானியர் இன்னும் தம்தேசத்து நாய்கள் பூனைகள் முதலியவற்றிற்கு ஆயுதம் கொடுக்கவில்லை. இவைகளுக்கும் சீக்கிரம் அவர்கள் ஆயுதங்கள் கொடுத்துச் சண்டையிடச் சொல்லுவார்களென்று முன்பே சொல்லப்பட்டது. இப்போது யுத்தத்தில் அவர்கள் தம் நாட்டு மரங்களைக்கூடக் காவல்சேனையாக நியமித்திருக்கிறார்கள். இவ்விஷயம் இரண்டு பிராஞ்சு மறியற்காரரால் கண்டுபிடிக்கப்பட்டது. இம்மறியற்காரர் துணிந்து செருமானியரிடமிருந்து தப்பியோடி ஜெருமன், உலாந்து எல்லைப்புறங்களுக்குப் போயினர். அப்படி ஓடும்போது காவல் சிப்பாய்கள் அங்கே காவல்செய்துகொண்டிருப்பதாக இவர்கள் எதிரில் பார்த்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்துவிடுவதே சரி என்று அவ்விடம்போக, அவ்விடம் மரங்களே மனிதர்களின் கழுத்து, கைகள், முகம்போலச் செய்யப்பட்டு ஜெருமன் போர்வீரர்கள் ஆயுதபாணிகளாய் நிற்பதுபோல இருந்ததைக் கண்டுகொண்டனர். அவ்வெல்லைப் புறங்களிலுள்ள மரங்கள் யாவும் அவ்வாறு செய்யப்பட்டிருந்தனவேயொழிய அங்கு உண்மையான போர்வீரர்களே இல்லை. ஆகவே, தப்பியோடின மறியற்காரர் நடுநிலைமைத் தேசத்தில் ஓடி யொளித்துக்கொண்டார்கள். பிறகு சிலநாள் கழித்துப் பிரான்சு தேசம் வந்து சேர்ந்தார்கள்.

**விசுவாசப்பரம்புதல் சபை தலைவரின் மரணம்.**—இச்சபைக்குத் தலைவராயிருந்த மிக வந்திக்கத்தக்க ஜெரொம் மரிய கோத்தி என்னும் கருதினு லாண்டவரவர்கள் சென்ற மார்ச்சு மாதம் 19௳ அர்ச். சூசையப்பரின் திருநாளன்று பாக்கியமான மரணத்தை யடைந்தார். இவர் இத்தாலியிலுள்ள ஜெனீவா நகரத்தில் பிறந்தவர். இவர் மரிக்கும்போது இவருக்கு 82 வயது. உலக முழுமையிலும் சத்தியவேதம் பரம்பும்படி உழைத்துவரும் கருதினுல்மார்களின் சங்கத்துக்கு இவரே தலைமையாய் முன்னின்று உழைத்துவந்தவர். சர்வேசுரன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிடுவாராக.

**எண்ணூர் கத்திவாக்கம் அர்ச். சூசையப்பர் திருவிழா.**—எண்ணூர் கத்திவாக்கத்தில் பிரதிஷ்டையாகி யிராநின்ற அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் வருஷாந்திரம் நடந்தேறிவரும் மகோற்சவம் நாளது 1916௵ மேமீ 4-ம் தேதியாகிய வியாழக்கிழமை சாயரட்சை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, பிரதிதினம் காலை, 7-மணிக்கு பூசையும், சாயரட்சை 6-30 மணிக்கு அர்ச். சூசையப்பர் தேர் சுற்றுப் பிரகாரமும், பிரார்த்தனையும், திவ்விய சுரூப ஆசீர்வாதமும் நடக்கும். ஷை மாதம் 13௳ சனிக்கிழமை சாயரட்சை பெரிய (Vespers) வெஸ்பராவும், திவ்ய நற்கருணை ஆசீர்வாதமும், சிறப்புடன் அலங்கிர்தமான தேர்கள் எழுந்தருளப்படியும் இருக்கும். மறுநாள் 14-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்கள் எழுந்தருளப்படியும், பெரிய பாட்டுப்பூசையும், திவ்ய நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெறும். இத்திருவிழா சம்பிரமமாக நிறைவேறுதற்கு ஒத்தாசை செய்கிறவர்களுக்கு இகத்திலும் பரத்திலும் சகல சம்பத்துக்களும் அர்ச். சூசையப்பரின் மன்றாட்டினால் கிடைக்கவேணுமென்று இத்திருவிழா ஆரம்ப முதல் பிரதிதினமும் திவ்ய பூசை, பிரார்த்தனை நிகழ்ந்தேறும்.

**காசியிற் பிரசண்டமாருதம்.**—சென்ற மாதம் ஞாயிற்றுக்கிழமை யிரவு 10மணிச் சுமாருக்கு கங்கை நதியின் வடக்குக் கரையிலிருக்கும் காசியில் பிரசண்டமாருதம் பலமாக வீசியடித்தது. ஆகாயத்தில் மேகப்படலங்கள் கறுத்து அங்குமிங்கும் மலைகளையொப்ப ஊடாடிக்கொண்டிருந்தன. சற்றேறக்குறைய பத்து நிமிஷநேரம் ஊர் முழுவதும் ஒரு இருள்கவ்விய அகண்டாகாரத்தில் மூழ்கியிருந்தது. ஒருமணி நேரம் பெருங்காற்று மகா பலமாக வீசியடித்ததன் காரணமாக அனேக கூரைக் கட்டுக் குடிசைகள் அடியோடு பெயர்ந்தன. மரங்கள் வேருடன் பிடுங்கப்பெற்றன. உயரமான பற்பல வீடுகளிலிருந்து உதிர்ந்த கல்லுகள் காற்றிலடிபட்டெறியப்பட்டன. கங்காநதியில் ஓடும் படகுகளிற் பல அவ்வவ்வாறே கவிழ்ந்துபோயின. புறாவாத்தினங்கள் பல, காற்றின் வேகம் தாங்கமாட்டாமல் சுற்றிச் சுழன்று கங்காநதியில் இறந்து கிடந்து மிதந்தன. இதன் மத்தியில் தீவிபத்தும் நேராமலில்லை. ஒரு மாட்டுக் கொட்டகையைச் சேர்ந்த கவணையில் பசுவும் ஆடும் கட்டப்பட்டிருந்தன. அக்கொட்டகை காற்றினு லெறியப்பட்டதோர் தீப்பொறியின் காரணமாகப் பற்றியெரிய, அச்சமயத்தில் அக்கொட்டகையண்டை போவாரெவரையும் காணேம். வாயில்லாச் சீவன்களான அக்நால்நடைப் பிராணிகள் கவணையிற் கட்டப்பட்டிருந்தவாறே தீயினுள் சிக்குண்டு மாண்டு நிலத்தில் விழுந்து நீறாயின. பின்னர் கொஞ்ச நேரங் கழித்துச் சரசரவென்று மழை பொழிந்ததே யாயினும் வானத்தில் தோன்றிய மேகப்படலங்கள் மட்டும் கலையவில்லை. காசியில் வசிக்கும் வயோதிபர் பலர் இம்மாதிரியான பிரசண்ட மாருதத்தைத் தமக்கு விவரந்தெரிந்த பின்னர் இதுவரையில் பார்த்ததில்லை யென்று சொல்லி ஆச்சரியப்படுகிறார்களாம்.

**நம்முடைய அளவைக்கொண்டே நமக்கும் அளக்கப்படும்.**—ஒரு பலசரக்கு வர்த்தகனுக்கு ஓரிடைச்சி யன்றாடம் ஒரு பவுண்டு வெண்ணையை வாடிக்கையாய் விற்றுவந்தாள். அந்த வெண்ணை ஒரு பவுண்டு நிறை சரியாய் இருக்கமாட்டாதென்ற சந்தேகம் அவ் வர்த்தகனுக்குச் சில தினங்களுக்குப்பின் உண்டாகவே, அதை நிறுத்துப் பார்த்தான். அவன் சந்தேகித்தபடி வெண்ணை ஒரு பவுண்டுக்கு இரண்டு அவுன்ஸ் குறைவாகவே யிருந்தது. மறுநாள் வர்த்தகன் ஷை இடைச்சியைச் சந்தையில் கண்டபோது தனக்குஅவள் கொடுத்த வெண்ணை ஒரு பவுண்டுக்கு இரண்டு அவுன்ஸ் குறைவாயிருந்த விஷயத்தைப்பற்றித் தெரிவித்துச் “சரியான படிக்கல்லுபோட்டு நிறுத்து விற்கிறாயா, யில்லையா?” வென்று அவளைக் கேட்டான். அதற்கவள்: “ஐயா, நான் தினந்தோறும் தங்கள் ஷாப்பில் ஒரு பவுண்டு அடங்கின தேயிலைக் கட்டை வாங்கிப்போகிறேனே, அது சரியான நிறைதானே?” வென்று வர்த்தகனை விசாரித்தாள். அதற்கவன் “அதைப்பற்றி இப்போ தென்ன பேச்சு? தேயிலைக்கும் வெண்ணைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?” என்று சொன்னான். அப்போது இடைச்சி, அந்த வர்த்தகனுடைய ஷாப்பில் தான் அன்றாடம் வாங்கிப்போகும் தேயிலைக் கட்டின்பேரில் “ஒரு பவுண்டு” என்று குறித்திருப்பது சரியான எடையா யிருக்குமென்று எண்ணி படிக்கல்லுக்குப் பதிலாய் அந்தத் தேயிலைக் கட்டைத்தானே திராசின் ஒரு தட்டில் வைத்து அவ்வெடைக்குச் சரியாய்

மறு தட்டில் வெண்ணெயை வைத்து நிறுத்து அவனுக்குக் கொடுத்து வந்ததாகச் சொன்னாள். வர்த்தகன் ஒன்றும் பேசாமல் வந்த வழியே திரும்பிப்போனான். இந்த வர்த்தகன் புறத்தியாருக்கு நிறுத்தகள்ள நிறையைக்கொண்டே இவனுக்கும் நிறுத்துப் போடப்பட்டதினால் நம்முடைய அளவைக் கொண்டே நமக்கும் அளக்கப்படும் என்னும் சுவிசேஷ வாக்கியம் இவனில் பூரணமாய் நிறைவேறிற்றன்றோ?

**பெல்ஜிய தேசத்துக் கருதினல் மேர்சீயாண்டவர்.**—சில நாளைக்குமுன் ரோமாபுரி வத்திக்கானில் கூடிய கருதினல்மார் சங்கத்துக்கு கருதினல் மெர்சியாண்டவரைப் பரிசுத்த பாப்பாண்டவர் அழைத்திருந்தாராம். அதின் பிரகாரம் பாப்பாண்டவரைப் போய்ச் சந்தித்துவர, பெல்ஜிய தேசத்திலிருக்கும் ஜெருமானிய உத்தியோகஸ்தரிடம் (பாஸ் போர்ட்டு) பயணச்சீட்டுத் தரும்படி கேட்டுக்கொண்டார். வான் பிஸ்சிங் என்ற கவர்னர் உடனே பயணச்சீட்டு அனுப்பினதுமல்லாமல் அவர் போகவர ஒரு விசேஷ புகைவண்டியையுந் திட்டம்பண்ணிக் கொடுத்தாராம். கருதினல் ஆண்டவர் வெகு மரியாதையுடனும் நன்றியறிதலுடனும் தமக்குப் பிரத்தியேகமாய் புகைவண்டி வேண்டியதில்லையென்று கடுதாசி எழுதிவிட்டுப் பயணச்சீட்டை ஆராய்ந்துபார்த்தார். அதில் பயணச்சீட்டு இவ்வளவு காலத்துக்குச் செல்லுமென்று கண்டிருக்கவில்லை. சந்தேகம் தீர கவர்னருக்கு எழுதிக்கேட்டார். காலத்தைக் குறிப்பிடுவது அநாவசியமென்றும், பயணச்சீட்டு எவ்விதத்திலும் குறைவில்லையென்றும், ஓர்வித பயமுமின்றி ரோமைநகரத்துக்குப் போய்வரலாமென்றும் பதிலளித்தாராம். ஆனால் கருதினலதிமேற்றிராணியாண்டவர் போய் திரும்புங்காலையில் தமக்குச் சங்கடம் நேரக்கூடுமென்று முன்யோசனை பண்ணி காலத்தைக் குறிப்பிட வேண்டுமென்று வற்புறுத்தினாராம். கருதினலாண்டவர் எப்போது பெல்ஜிய தேசத்தைவிட்டுப் போவாரோவென்று எதிர்பார்த்த கவர்னர் திரும்பி கருதினலாண்டவர் ரோமாபுரிக்குப் போய்வருவது துர்லபமாயிராவிட்டாலும் சங்கடமாயிருக்குமென்று ஒத்துக்கொண்டாராம். ஆனால் பாஸ்போர்ட்டைத் திருத்திக்கொடுக்கவில்லை. அதின்பேரில் தந்திமூலமாய்ப் பாப்பரசருக்குச் சங்கதிகளைத் தெரிவித்து ரோமாபுரியிலிருப்பதைவிட உபத்திரவப்படும் தம்முடைய ஜனங்களுடன் பெல்ஜியத்திலேயிருப்பது தமக்குப் பிரியமென்று தாழ்மையாய்த் தெரிவித்துக்கொண்டார். அதன் பேரில் பாப்பாண்டவர் ஜெருமானிய சக்கரவர்த்திக்குத் தெரிவிக்கவே, கருதினலாண்டவர் ரோமாபுரிக்குப்போய் பெல்ஜிய தேசத்துக்குத் திரும்பி வர பாஸ்போர்ட் கொடுபட்டது. கருதினல் மெர்சியர் ஆண்டவர் சென்ற ஜனவரி மாசம் 11-ந்திகதி ரோமாபுரி போய்ச் சேர்ந்தார். ஆனால் அதற்கு முன்னதாகவே திருச்சபைப் பிரதானிகளின் கூட்டம் முடிந்து போய் விட்டது. குருப்பட்டத்துக்குப் படிக்கிறவர்களின் கல்விச்சாலை விஷயமாய் ஆலோசிக்க அதிமேற்றிராணியாரைப் பரிசுத்த பாப்பாண்டவர் வரவழைத்திருந்தார்.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.**

ப. ர்.

### நன்மரண அரிக்கை.

பழைய காயல்.

எம்மூர் கோவில் கணக்கப்பிள்ளையாகவும், பள்ளிக்கூடத்து தலைமை உபாத்தியாயராகவுமிருந்த கனம் வி. சேந்திமிக்கேல் தமேல் அவர்கள் வாய்வுபொருப்பு நோவால் பீடிக்கப்பட்டு நாளது மாதம் 13-தேதி பகல் 11 மணிக்கு சேசுமரிய சூசை என ஆத்துமத்தை உங்கள் கையில் ஒப்புவிக்கிறேனென உச்சரித்து கர்த்தரிடம் தனதாத்துமத்தை ஒப்புவித்தனர். தெய்வபக்தி, கீழ்ப்படிதல், பிறர் சிநேகம், சுறுசுறுப்பு முதலிய நற்குணங்களையுடைய இவ்வுத்தமர் கடந்த 12-வருடங்களாக குருக்களுக்கும் மற்றும் கிறிஸ்தவர்களுக்கும் வெகு பொருத்தமுள்ளவராயிருந்து, தமது கோவில் வேலையை வெகு பிரமாணிக்கமாய் நிறைவேற்றி இவ்வூருக்கு வந்த பங்கு ஸ்வாமிமார்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, இவரிடமாய் வைத்திய உதவி கேட்கும் எவர்களுக்கும் வைத்தியம் செய்வதில் இரவோ, பகலோ, வெயிலோ, மழையோ வெனப் பாராமலும், கொள்ளை நோயோ, கொடிய நோயோவெனக் கருதாமலும், பிரதிப் பிரயோசனம் கருதாது வைத்தியம் செய்து வந்தபடியால் இவரை எல்லாரும் தர்ம வைத்தியரென் றழைப்பதுண்டு. எல்லார்க்கும் நல்லவரான இவரது அகால மரணத்தை யறிந்த இவ்வூர் கிறிஸ்தவர்களும், இந்துக்களும், மகம்மதியர்களும் இவரது சடலத்தண்டை ஓடிவந்து கோவென்றலறி யழுத கண்ணராவியான காட்சியினால் இவர்மீது இவ்வூர் ஜனங்கள் கொண்டுள்ள அன்பும், பற்றுதலும் எத்தன்மையதென விசிதமாயிற்று. அன்று மாலை 6-மணிக்கு வண. C. E. கொலெ ஸ்வாமிகள் இவரது சடலத்தை மந்திரித்து முடித்ததும் அர்ச். கார்மேல் மாதா சபையினரும், அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் வாசகசாலை அங்கத்தினர்களும், பள்ளிக்கூடத்து சிறுவர் சிறுமிகளும், இவ்வூர் கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மகம்மதியர் முதலிய எண்ணிறந்த ஜனங்கள் புடைசூழ்ந்து இவரது சடலத்தை தேவாலயம் கொண்டுபோக, அங்கும் மேற்சொன்ன குருவானவரால் மந்திரிக்கப்பட்டு கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதை வாசிக்கும் நண்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

15—4—16. அனுதாபி.

ஓட்டகமண்ட்.

என் பெண்ஜாதி ஜ. செபஸ்தியம்மாள் மார்ச்சு 16-மீ தேதி புதன்கிழமை காலை 9-மணிக்கு அவஸ்தையும் ஆயத்தமும் பெற்றுக்கொண்டு இரண்டு குழந்தைகளையும் விட்டு நிமோனியா ஜுரத்தால் தெய்வீக பரகதி அடைந்தாள். இவள் ஆத்துமத்துக்காக வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளும் தங்கள் நிர்ப்பாக்கியன்.

V. A. ஆரோக்கியசாமி ஆசாரி
of V. A. சிலுவைமுத்து ஆசாரி (அன்) பிரத...



## அர்ச் அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய், அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக்கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந் தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக,உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 3951-1-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு மேற்படி கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந்தொகையாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து மேற்படி கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலாயிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அநாப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,951 | 1 | 6 |
| Mr. A. Waller | 10 | 0 | 0 |
| ,, Swyny | 5 | 0 | 0 |
| ,, அநந்தநாத பிள்ளை | 1 | 0 | 0 |
| ,, S. Antony (S. Africa) | 5 | 0 | 0 |
| ,, C. M. மிக்கேல் (இரங்கூன்) | 5 | 0 | 0 |
| ஓர் நன்கொடை | 10 | 0 | 0 |
| Mr. Francis Joseph F. P. O. | 5 | 0 | 0 |
| ஆக மொத்தம், | 3,992 | 1 | 6 |

## சென்னப்பட்டணத்தில் ஒரு சத்திரம் தேவை.

சென்னப்பட்டணத்தில் இந்திய கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கென்று ஒரு சத்திரம் சாவடி கிடையாது. இந்துக்கள் மகம்மதியர் முதலானோருக்கோ எங்கு பார்த்தாலும் சத்திரமும், சாப்பாட்டு விடுதியும், டீகிளப், காபிகிளப் முதலியனவும் ஏராளமாயுண்டு. கோர்ட்டு வியாஜ்ஜிய விஷயமாயாவது, வைத்திய சிகிச்சைக்காகவாவது, வியாபார சம்பந்தமாயாவது அல்லது படிப்பு விஷயமாயாவது ஒவ்வொரு நாளும் சென்னைக்கு வருகிற கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் எத்தனையோ பேர். இப்படி வருகிற நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமில்லாமலும், தண்ணீர் குடிக்கத் தாவில்லாமலும் தயங்கித் தவிக்கின்றார்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்பது பல நாள் பிரயத்தனம். பெரிய கட்டிடமொன்று பட்டணத்து மத்தியில் கட்டவேண்டுமென்பது எல்லோருடையவும் எண்ணம். ஆனால் இந்த எண்ணத்தை நிறைவேற்ற மிகுந்த திரவியம் வேண்டும். அவ்வளவு திரவியஞ் சேகரஞ்செய்து காரிய முடிக்கவேண்டுமானால் அதிக நாளும் செல்லும். ஆனது நிமித்தம் "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்பதுபோல தற்காலம் ஜியார்ஜடவுனுக்குள் ஒரு சிறு வீடாவது வாங்கி, அதில் ஒரு விடுதி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இதற்குக் குறைந்த பட்சம் 10,000 ரூபாயாவது வேண்டும். இத்தொகை நமது பொதுஜன நலத்தை விரும்பும் கத்தோலிக்குக் கனதனவான்களிடமிருந்து தான் வரவேண்டும். இதை வருவிக்க செய்வதற்காக இதனடியில் குறிக்கப்பட்டுள்ள நம்பர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் முயற்சிசெய்து வருகிறார்கள். இவர்கள் தங்களுக்குள்ளேயே சிறுகச்சிறுக சென்ற சில மாதங்களாய்ச் சேகரஞ் செய்திருக்கிற ரூபாய் 500. இச்சென்னை இராஜதானி முழுவதிலும், இலங்கை. பர்மா, சிங்கப்பூர், சைகோன், மோரிஸ், நெட்டால் முதலிய பல தேசங்களிலுமுள்ள கத்தோலிக்குச் சகோதரர்களெல்லாரும் இக் கைங்கரியத்துக்கு கைகொடுத்து, தங்கள் தங்களாலான மட்டும் பொருளுதவிசெய்து காரியத்தை முடித்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தச் சத்திர தருமத்துக்காக பணம் அனுப்புபவர்கள், மதராஸ் வட ஜியார்ஜடவுன் மோட்சராக்கினி மாதாக்கோவில் விசாரணை குரு, சங். எல். எக்ஸ். பெர்நாந்தீஸ் சுவாமிகளுக்கு அனுப்ப வேண்டும். *(Revd. Father L. X. Fernandez, Vicar, Assumption Church, North George-town, Madras.)* பணங் கொடுப்பவர்கள் பேரும், கொடுக்குந் தொகையும் இப்பத்திரிகையிலும், "கத்தோலிக்கு நேசன்" பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

சென்னப்பட்டணம், சத்திரத்துக்காக வரவு:

| | ரூ. அ. ப. |
|---|---|
| பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் | 530—0—0 |
| Mr. D. நல்லதம்பி பிள்ளை, சப் அசிஸ்டன்டு சர்ஜன், பவானி | 5—0—0 |
| ஆக மொத்தம், | 535—0—0 |

சங். L. X. பெர்நாந்தீஸ்.
பி. ஜெகராயலு செட்டியார்.
டி. எம். சவரிமுத்துப் பிள்ளை.
டி. எம். மாணிக்கம் பிள்ளை.
டி. எஸ். ஏ. மாணிக்கம் பிள்ளை.
டி. ஏ. தோமாஸ் பிள்ளை.
எம். பி. குழந்தைசாமிப் பிள்ளை.
டி. குழந்தைசாமிப் பிள்ளை.


## English & Tamil Popular Vocabulary and Reader.

**இங்கிலீஷ் அன்ட் டாமில் பாப்புலர் வக்காபிலரி அன்ட் ரீடர். விலை குறைவு**

முன் விற்ற விலை ரூபா 2-8-0. தற்காலம் 1 ஒரே ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மேற்படி புஸ்தகமானது கொஞ்சம் இங்லீஷ் படித்தவர்களும், முற்றிலும் இங்கிலீஷ் படிக்காதவர்களும், பெண்களும், சிறு பிள்ளைகளும் இங்கிலீஷ் பாஷையை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும் நோக்கமாய் எண்ணிறந்த இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரசையாகவும் ஈரசையாகவும் மூவசையாகவும் வாக்கியங்களாகவும், இங்கிலீஷ் வார்த்தைகளைத் தமிழில் திருப்பி வாக்கியங்களையும் தமிழ்ப்படுத்தி யிருக்கின்றன. (திருஷ்டாந்தரமாக) Ache. என்னும் மொழியை தமிழில் எக் என்றும், Cash என்னும் பதத்தை காஷ் என்றும், அவைளின் அர்த்தத்தையும் எக்-வலி, காஷ்-பணமென்றும், Who are you என்பதை ஹூ ஆர் யு; நீ ஆர் என்றும் இப்படி பற்பலவகையாய் சிறியவர்களுக்கும், பெரியவர்களுக்கும், கற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பிரயோசனமாகவும் A, B. C & Z வரைக்கும் படங்களுடனும் பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும் பயன்தரத்தக்க அருமையான இங்கிலீஷ் லெட்டர் ரைட்டரும் இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

**எமது விலாசம், மஹா விகடதூதன் ஆபீஸ், மதராஸ்.**



# The Good Pastor




"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு கேளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.

| புத்தகம் 14. | ஜூன், 1916. | இலக்கம் 6 |
|---|---|---|


17 JUN 1916

## THE MONTH OF JUNE.

### ஜூன் மாதம்.

நமது ஆண்டவராகிய சேசுக்கிறிஸ்துநாதருடைய திரு இருதயத்துக்குச்செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்கு நாம் விசேஷித்த விதமாய்ப் பரிகாரஞ்செய்ய நமது தாயாராகிய சத்திய திருச்சபையால் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிற ஜூன் மாதம் இதோ வந்துவிட்டது! இந்த சேசுவின் திரு இருதய மாதம் அல்லது நிந்தைப் பரிகார மாதம் வருடந்தோறும் வரும்போதெல்லாம், நமது திவ்விய கர்த்தருடைய அற்புத சீவியத்தைப்பற்றிய வர்த்தமானங்களும், மனிதர்மீது அவருக்குள்ள அணைகடந்த அன்பின் மிகுதி, இரக்கத்தின் பெருக்கம் இவைகளின் அறிகுறியாக அவர் திருவாய் மலர்ந்தருளிய அமிர்த வசனங்களும், புத்திப் போதகங்களும், செய்தருளிய புதுமைகளும், பட்ட பாடுகளும் நமது ஞாபகத்தில் எழும்புகின்றன வல்லவா?

தொட்டிலிலிருந்து சிலுவை யடிவாரம்வரையிலும் நடந்த நமது திவ்விய கர்த்தரின் சீவிய சரித்திர வரலாறுகளை நாம் ஒவ்வொன்றாய்த் தியானிக்கையிலும், பரம அன்பின் மிகுதியினால் நமது தேவாலயப் பீடங்களின்மேல் நிலையாயிருக்க தயைபுரிந்த அவரை நாம் சந்திக்கையிலும் நம்மு ஞானக் கண்களுக்குப் புலப்படுவதென்ன? சகலவித்மான பத்திக் கிருத்தியங்களுக்கு ஆதிமூலமும், எல்லா வரப்பிரசாதங்களுக்கும் என்றும் வற்றா ஊருணியும், நமது ஞான சீவியத்தில் என்றும் உல்லாசங்கொள்ளச்செய்கிற ஞான சூரியனுமாகிய தயாளமுள்ள அவருடைய திரு இருதயந்தானே புலப்படுவது.

பெத்லேம் நகரில் மாட்டுக்கொட்டிலில் புல்லணைமீது கிடத்தப்பட்டு நித்திரை செய்கிற திவ்விய பாலனை நினைக்கும்போதெல்லாம், விலையேறப்பெற்ற அவருடைய திரு இரத்தம் நிறைந்த சீவியமுள்ள பாத்திரத்தையே காண்கிறோம். சிறுவர்களையும் சிறுமிகளையும், தமது கரங்களினால் மார்போடு அணைத்து அவர்களுடன் சம்பாஷித்ததற்கும், மகனை இழந்து பிரலாபித்துக்கொண்டிருந்த நாயீம் பட்டணத்து விதவையின் நிலைமையைக்கண்டு தாமும் கண்ணீர் விட்டழுததற்கும், தன்

னுடைய பாவாக்கிரமங்களுக்காக அழுது துக்கப்பட்ட மரியமதலேனம்மாளுக்குப் பாவப் பொறுத்தல் அளித்ததற்கும் காரணமாயிருந்தது அன்பும் இரக்கமும் நிறைந்த அவருடைய திரு இருதயந்தானல்லவா? தமது ஜீவியகாலத்தில், இராக்காலங்களில் மலையடிவாரங்களுக்குச் சென்று தனித்திருந்து செபம் பண்ணினதும், களைப்பு மிகுதியினால் கற்களை தலையணையாக வைத்து அயர்ந்து நித்திரை செய்கையிலும் நமது ஈடேற்றத்தின்பேரில் கொண்டிருந்த ஆவலினால் உறங்காமல் விழித்துக் கொண்டிருந்ததும் அவருடைய திரு இருதயந்தானே.

தாம் பாடுபடப்போகிறதற்கு முந்தினநாளாகிய பெரிய வியாழக்கிழமையன்று தமது சீஷர்களுடன் கடைசியாக போஜனமருந்தி, தேவநற்கருணையை உண்டாக்கினதும் சினேக அக்கினிச் சுவாலைவிட்டெரியும் அவருடைய திரு இருதயந்தானே. ஜெத்சமனி தோட்டத்தில் நமது திவ்ய கர்த்தர் துக்கசாகரத்தில் அமிழ்ந்தி மரண அவஸ்தைப்பட்டதையும் இரத்தக் கறைகளால் அவருடைய திருமுகம்வேறுபட்டிருப்பதையும் நினைக்குங்கால், நம் பாவாக்கிரமங்களாலும் நன்றிகெட்டத்தனத்தாலும் மிகுந்த வியாகுலப்பட்டிருக்கும் அவருடைய திரு இருதயமே நமது ஞாபகத்தில் தோன்றுகிறது. இரத்தம் வெள்ளாறுக ஓடும்வரையில் கசைகளால் அடிபடவும், திருச்சிரசு முட்களால் ஊடுருவப்படவும், இன்னும் சொல்லொண்ணு நோக்காடுகளை அனுபவிக்கவும் அவரை ஏவினதும், நமது ஈடேற்றத்தின்மேல் என்றுங் கவலையாயிருக்கும் அவருடைய இரக்கம் நிறைந்த திரு இருதயந்தானே. மீளவும், சிலுவையினின்று "என் பிதாவே, என் பிதாவே நீர் என்னைக் கைநெகிழ்ந்த தேது" என்றுசொல்லி அவர் உயிர்விட்டதைநாம் தியானிக்கையில், சகல மனிதர்களோம் அவர் அணைகடந்த விதமாய் நேசித்தும், தமது இரத்தத்தையெல்லாம் கடைசித் துளி பரியந்தம் அவர்களுக்காக அவர் சிந்தியும், அவர்களிற் பெரும்பான்மையோர் தம்மை நிந்தித்துப் புறக்கணிக்கிறதைப் பார்க்கச் சகியாமல் அவர் விசனமுற அவருடைய திரு இருதயமே காரணமா யிருந்ததென்றும் அறிந்துகொள்ளுகிறோம்.

நமக்காகப் பாடுபட்டு, மரித்து, உயிர்த்து, பரலோகத்துக் காரோகணமானபோதிலும் கண்ணீர்க் கணவாயாகிய இப்பிரபஞ்சத்தில் நமக்கு நமதாண்டவர் ஆதரவும் தஞ்சமுமா யிருக்கவேண்டி, தம்மையே நமக்குப் போஜனமாகத் தந்ததற்கும், நமது தேவாலயங்களில் சுயேச்சையாய்ச் சிறைபட்டிருக்கச் சித்தமானதற்கும் காரணம் இரக்கம் நிறைந்த அவருடைய திரு இருதயமேயன்றி வேறென்ன?

சாயங்கால வேளையில் நமது கோவிலில் பிரவேசிக்குங்கால், பீடத்தருகில் மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருக்கிற விளக்கானது, திவ்விய நற்கருணைப் பேழையில் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கும் நமது கர்த்தரை நினைப்பூட்டுகிறது. முழந்தாட்படியிட்டு சற்றுநேரம் அவருடன் சம்பாஷிப்போமானால் நமதுள்ளத்தில் எழும்பும் எண்ணங்கள் யாவை? ஒரு பக்கத்தில், நமது ஆத்துமம் பனியிலும் வெண்மையான ஆடையாபரணமாகிய பரிசுத்தத்தனத்தினால் அலங்கரிக்கப்பட்டு, முதல்விசையாக தனது சிருஷ்டிகர்த்தருடன் ஒன்றித்த அந்தப் பாக்கியமான நாளாகிய நாம் புதுநன்மை வாங்கினநாளும், அதன்பின் நாம் அவரை உட்கொண்ட நாட்களும், பரிசுத்த தேவநற்கருணையில் அவரைச் சந்தித்து, நமது கஸ்தி துன்பங்களை அவரிடஞ்சொல்லி ஆறுதலடைந்து போன அனேக சமயங்களும் நமக்கு ஞாபகத்தில் வருமல்லவா? மற்றொரு பக்கத்திலோ நாம் அவருக்கு விரோதமாய்க் கட்டிக்கொண்ட பாவங்களும், தகாதவிதமாய் அவரை உட்கொண்ட சமயங்களும் தோன்றி, அவர் சமுகத்தில் நம்மை வெட்கி நாணச்செய்கின்றன. கடைசியாக, நாம் அவருக்குச் செய்த துரோகங்களுக்காக, அவரிடத்தில் பொறுத்தல் கேட்டு, அவருடைய சந்நிதியில் எப்போதும் புண்ணியவாளராய்ச் சீவிக்க அவருடைய வரப்பிரசாதத்தை மன்றாடி, அவருடைய சமுகத்தை விட்டுப்போகும் பாக்கியம் நமக்குக் கிடைக்கவும் நேசம்பொருந்திய சேசுவின் திரு இருதயமே காரணமல்லவா?



ஆனபடியால், சேசுவின் திரு இருதயத்துக்கு மனுமக்கள் மட்டிலுள்ள அணைகடந்த அன்பு, இரக்கம், தயாளம் இவைகளை நன்றாய்க் கண்டுணரவும், உணர்ந்து அத்திரு இருதயத்தை நம்மாலானமட்டும் முழு மனதோடும் முழு இருதயத்தோடும் நேசிக்கவும், அத்திரு இருதயத்துக்கு கெட்ட கிறிஸ்துவர்கள், பதிதர், பிரிவினைக்காரர், அஞ்ஞானிகள், அவிசுவாசிகள் முதலியவர்களாற் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குத் தக்கப் பரிகாரஞ் செய்யவும் நாம் ஆசிப்போமானால், நம் கர்த்தருடைய அற்புத சீவியத்தின்பேரில் அதாவது, அவர் பிறந்தது, வளர்ந்தது, பிரசங்கித்தது, புதுமைகள் செய்தது, திவ்ய நற்கருணை உண்டாக்கினது, பாடுபட்டு மரித்தது, இவை முதலிய விஷயங்கள் ஒவ்வொன்றின்பேரிலும் கொஞ்சங் கொஞ்சமாய் இம்மாசத்தில் ஒவ்வொருநாளிலும் சற்று யோசிப்பது உத்தமமாயிருக்கும். இப்படி யோசிக்கையில் சேசுவின் இருதயம் நம்மட்டில் கொண்டிருக்கும் அளவற்ற நேசம், அன்பு, இரக்கம் முதலியவைகளை நாம் மெய்யாகவே உணர்வோம்; மெய்யாகவே அத்திரு இருதயத்தை நேசிப்போம்; மெய்யாகவே அத்திரு இருதயத்துக்கு ஏற்காத எதையும் செய்யத்துணியோம்; மற்றவர்களால் அத்திரு இருதயத்துக்குச் செய்யப்படுகிற நிந்தை, அவமானங்களைப்பற்றிப் பரிதாபமுங் கஸ்தியுங்கொண்டு அவைகளுக்காகப் பரிகாரஞ்செய்ய திவ்ய நற்கருணையைப் பயபக்தியாய்ச் சந்தித்தும், அதைப் பயபக்தியாய் உட்கொண்டும் நந் திவ்யகர்த்தருக்கு ஆறுதலும் சந்தோஷமும் வருவிப்போமென்பதற்கையமில்லை.

## ABUSE OF TIME.

## காலத்தை வீணிற் கழித்தல்.

காலத்தி னருமையை யறிந்தார், அதை வீணிற் கழிக்க மனந்துணியார். ஏனெனில், மனிதனுடைய வாணாள் வெகு சொற்பமே. அதில் சரீர நன்மைக்கென்றே பாதிக்குமேல் செலவழித்துவிடுகிறோம். மீதியாயிருக்குஞ் சொற்பகாலத்தைக் கூடியவரையிற் பயன்படும்படிக் கழித்தலவசியம். நீயூமென் என்னும் வேத சாஸ்திரி தன் சீவியகாலத்தில் எப்பாகத்தையும் வீணிற் கழிக்குங் குற்றத்திற் காளாகவில்லையெனத் தன்னுடைய கடிதங்களொன்றில் வரைந்துள்ளார். அர்ச். தெரசம்மாள் என்னும் புண்ணிய கன்னிகை பல வருஷங்களாக ஜெபத்திலும் தபத்திலும் பத்திக் கிருத்தியங்களைச் செய்வதிலும் தன் சீவியத்தைச் சீர்ப்படுத்திக்கொண்டு, கடைசி காலத்தில் ஒரு நிமிஷத்தை முதலாய் வீணிற்கழிப்பதில்லையென விரதம் பூண்டுகொண்டதாக அவளுடைய திவ்ய சரிதையில் வாசித்திருக்கிறேன். இவ்வுலகில் தம்முடைய சிறந்த வொழுக்கங்களாலும் வீரச் செயல்களாலும் அபூர்வ ஞானத்தாலும் காலப் புத்தகத்தில் தமது பேரை நன்குபதியும்படி எழுதிவைத்து அழியாப்புகழெய்திய ஆடவர் பெண்டிரைப் பற்றி விசாரிக்கையில், அன்னார் தஞ் சீவியத்தில் இத்தகைய வெற்றியடைந்ததின் காரண மென்னவென்று கேட்டால், மறுமொழியாக, "அன்னார் தம் வாணாளில் ஒவ்வொரு நிமிஷத்தையும் பயன்படும்படி செலவிட்டதனால் தான்" என்று சொல்லலாம்.

ஆதலின் காலத்தை வீணிலும், பயன்படும்படியாகவும் செலவுசெய்தல் என்பதென்னவென்று சற்றே ஆராய்ந்தறிவது நமக்கு நன்மை விளைக்காமற் போகாது. இவ்வாராய்ச்சி யாரம்பத்திலேயே, இதன் பொருளைப்பற்றிப் பலர் பலவித அபிப்பிராயங்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் காலத்தைப் பயன்படச் செலவு செய்ததாக ஒருவன் நினைக்கையில், மற்றொருவன் அக்காலம் வீணிலே கழிக்கப்பட்டதென அபிப்பிராயப்படுகிறான். ஒன்றுக்குப் பலமடங்கு வட்டிக்கு விட்டு பணஞ் சம்பாதிக்குஞ் சாவகாரியொருவன் பணஞ்சேர்க்காமற் செலவிட்ட காலமெல்லாம் வீண் காலம் என்கிறான்; ஆனால் செல்வ நிலையாமையை யறிந்த ஒருவன் இப்படி எந்நேரமும் பணம் பணம் என்று வாய்பிளந்து கணக்கிட்டு பணத்தைச் சேர்ப்பதிற் கழித்த காலம் வீண்காலமென மதிக்கிறான். நாம் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் அபிப்பிராய பேதமுடையவர்களா யிருக்கிறோம். நமக்குள் எத்தனையோபேர் "அநேக காரியங்களில் கவலைகொண்டவர்களா" யுழைத்துவந்து, கடைசியில்

நமது காலத்தை வீணிற் கழித்தோமென்னும் நினைவு வாதிக்க வருத்தப்படவில்லையா? இதற்கு மாறாய் எத்தனையோபேர் காலத்தை வீணிற் கழித்தோமென்று நம்மைத்தாமே நிந்தித்துக் கொண்டிருந்து கடைசியில் வீணல்ல வென்று கண்டறிந்து மனக்கிலேசமொழிந்து ஜீவிப்பவர்கள்!

மெய்யாகவே காலத்தைப் பயன்படும்படி செலவழிக்குமாந்தரைப் பார்த்து அவர்களுடைய ஜீவியத்தை உதாரணமாக எடுத்துக் காட்டி, அதினின்றும் நல்ல நீதிகளைப் புகட்டுவதற்கு எங்குபோனால் அத்தகைய மாந்தர் கிடைப்பர்? காலை முதல் மாலைவரையில் நெற்றி வேர்வை நிலத்தில்விழக் கஷ்டப்பட்டு கைத்தொழில் முதலியவற்றில் வேலை செய்யும் ஆடவரும் பெண்டிரும் வசிக்கும் பெரிய நகரங்களில் எனச் சிலர் சொல்வார்கள். அங்கே மனிதர் அல்லும் பகலு முழைத்துத் தம்முடைய பதவியை யுயர்த்திக்கொள்ள முயல்வ துண்மையே. அங்கே தஞ் ஜீவியத்தைப் பயன்படவே செலவழித்தவர்கள் இருப்பதுஞ் சகஜந்தான். ஆனால் அங்கே நாம் பார்க்க நேரிடும் ஒவ்வொருவனுடைய ஜீவியத்தை யாராய்ந்து பார்க்குமிடத்து, இத்தகைய பரபரப்பும் ஆரவாரமும் நிறைந்த அந்நகரில் வீணாய்க் கழிக்கப்பட்ட காலத்தி னளவைக் கவனித்தால் நமக்கே ஆச்சர்யமாயிருக்கும். வேடிக்கை விநோதங்க ளென்ன, வேலையி னலுப்பென்ன, இயந்திரங்க ளுடைந்து போனதால் வேலை நின்றுபோன தென்ன, முதலாளிக்கும் வேலைக்காரர்களுக்குமுள்ள சண்டை சச்சரவுக ளென்ன, இவைகளாலும் இவைபோலும் மற்ற காரணங்களாலும் பரபரப்புள்ள பெரிய நகரங்களில் வீண் காலப்போக் கதிகமெனச் சந்தேகமின்றிச் சொல்லலாம். ஆதலால் நமக்கு வேண்டிய உதாரணம் இந்நகரங்களில் சுலபமாய்க் கிடைக்காது.

இதைவிட்டுப் பரபரப்பில்லாத இடத்தை நாடிச் செல்வோமானால், அங்கே நாம் கண்டுபிடிக்கும் அளவற்ற பரபரப்பும் நற்காலப் போக்கும் நமக்கு வியப்பைத் தராமற்போகா. கார்த்தூசியர் என்னுஞ் சன்னியாசிகள் வசிக்கும் மடத்தை நாடிச் செல். அங்கே வசிப்பவர் உலகவிஷயத்தில் தம்முடைய நன்மைக்கென்றே ஒன்றுஞ் செய்வதில்லை யென விரதம்பூண்ட புண்ணிய புருஷர். அன்னார் தஞ்ஜீவியத்தை வீணிற் கழிப்பவரென்றே சிலர் எளனஞ்செய்த போதிலும், அம்மடத்தில் இரண்டொருநாள் தங்கி அச்சன்னியாசிகளின் தினசரிவேலையைக் கவனித்துப்பார். அதன்பின் உன் புத்தியிற்படுவதை நான் முன்னதாகவே இங்கே வரைகிறேன். அதாவது, "இம்மனிதர் என்ன வேலை செய்கின்றனர்! தம்முடைய நேரத்தை எவ்வளவு நல்லவிதத்திற் செலவழிக்கின்றனர்! காலை முதல் மாலைவரையில் அவர்கள் சோம்பலாயிராமல் ஏதாவது நற்காரியத்தைச் செய்துகொண்டே யிருக்கின்றனர். இராவேளையில் முதலாய் நாமெல்லோரும் அயர்ந்து நித்திரைசெய்கையில், இச்சன்னியாசிகள் அநேக மணிநேரம் விழித்திருந்து நேரத்தை நல்வழியிற் போக்குகின்றனர்." அல்லது கார்மேல் மடத்துக்குப் போய்ப் பார்; அங்கும் இதே அபிப்பிராயத்துடனே மீள்வாய் என்பது திண்ணம். காலைமுதல் மாலைவரையில் ஒரு கார்மேல் கன்னிகை ஜெபத்திலோ, நற்கிருத்தியத்திலோ அல்லது தனக்கிட்ட வேலையைச் செய்வதிலோ தன்னேரத்தைக் கழிக்கிறாள்; வெளியார் அவளைப் பார்க்க வந்தால், அவர்களுடன் அவள் நின்று பேசுவது வெகு சொற்ப நேரமே; அவள் இப்படி வந்தவர்களிடஞ் சாவகாசமாய் நின்று பேசாதது, மடத்தின் சட்டதிட்டங்களுக்கு மாறாகும் என்னும் பயத்தாலல்ல. ஆனால் அவளுக்கு நேரமில்லாமையாலாம். கார்மேல் கன்னியரின் உத்தம நடவடிக்கைகளைக் கண்டறிந்து புகழ்வது, அவர்களுடைய பரபரப்பும் சுறுசுறப்புமான வாழ்க்கையாலன்றோ!

இதை என்னவென்று சொல்வது? என்ன மாறுதலான காரியம்! வெளியும் புரமும் எவ்வளவு வித்தியாசம்! வேலை பரபரப்பு முதலியவற்றை முற்றுமொழித்தவர்களே சிறந்த உழைப்பாளிகள். மனிதரிற் பெரும்பான்மையோருங் கத்தோலிக்கருங் கூட வீண்காலம்போக்குபவர் என இகழ்ந்து பேசுவதற்கிடமான ஜீவியமே பூரண ஜீவியமா யிருக்கின்றது. கார்தூசிய சபையை யுண்டாக்கிய அர்ச். புருனோ என்பவர் தனிமையை நாடி அதற்காகவே உழைத்தவரென்றெண்ணலாகாது. அளவற்ற வேலையும் அதை எப்படியும் முடித்தே தீரவேண்டும் என்னும் அவாவுமுடைய பெரிய நியாயவாதி புருனோ. கர்மேல் சபையை யுண்டாக்கிய அர்ச். தெரசம்மாளைப் பற்றி முன்னமேயே கூறி யிருக்கிறோம். அவளுக்குச் சோம்பல் என்றால் சுத்தமாய்ப் பிடிக்காது; ஆதலால் ஒருகணமேனும் வேலையின்றி சும்மா யிருப்பதில்லை யென்னும் விரதம் பூண்டதுமன்றி, தான் ஸ்தாபித்த மடங்களொவ்வொன்றும் இவ்விஷயத்தில் தேன்கூட்டிற்கு சமானமாயிருந்து வீண்காலப் போக்கிற் கிடங்கொடுத்தலாகாதெனப் போதித்தாள். ஆனால் இத்தகைய ஒவ்வாமைமேலுக்குத் தோன்றுவதுபோல் உண்மைதானா வென்று பார்ப்போம். வீண்காலப்போக்கின் பொருளை கவனிக்குமிடத்து, அது ஒருக்கால் வியாபார சங்கத்திற்கும் சன்னியாச மடத்திற்கும் சமமான பொருத்த முடையதெனினு மமையும். வீண்காலப்போக்கென்பது தான் என்னை? நேரத்தைக் குறிக்கப்பட்ட விஷயத்துக்கின்றி வேறுவழியிற் செலவழிப்பதே வீண்காலப் போக்காம். படிப்பதற்கென்று குறிக்கப்பட்ட நேரத்தில் விளையாடும் ஒரு பையனை வீண்காலம் போக்குகிறவனென்று கண்டிருக்கிறோம்; ஆனால் விளையாடும் வேளையில் அவன் விளையாடினால், அவன் தன்னேரத்தை நல்வழியிற் போக்குவதாகக் கூறுகிறோம். அப்படியே விளையாடவேண்டிய காலத்தில் அப்பையன் படிப்பானேயாகில், பெரியோர் அவனை வீண்காலப்போக்கியென நிந்திப்பதும் சகஜமே. இந்தப் பையனைப்போலவே பெரியமனிதரும். நமக்குள் அநேகமா யெல்லோரும் நமது தினசரி ஜீவியத்தில் இந்நேரத்தில் இவ்வேலையைச் செய்தல் என்று குறிப்பிட்டிருக்கிறோம்; குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்தல், அவ்வேலை எவ்வளவு கேவலமாயினும், ஒருக்காலும் வீண்காலப் போக்காகாது. உண்பது முறங்குவதும் இதன்படி உழைத்தல், ஜெபித்தல், போர்முகத்தில் சண்டைசெய்தல் முதலியவற்றிற்குச் சமானமென்றே சொல்ல வேண்டும்.

கடமைகள் நிறைந்து அவற்றை நிறைவேற்ற உழைக்குஞ் ஜீவியம் பாக்கியமுள்ளதாம்; கர்மேல் கன்னியரின் பாக்கியமுள்ள உத்தம ஜீவியத்தின் இரகசியம் இதுவே. இவ்வுலகில் நற்பதவியிலிருந்த ஒரு மனிதனை நானறிவேன். அவன் நல்லவனென்றே சொல்லவேண்டும்; அவன் தொட்டதெல்லாம் தங்கமாக, அவன் சம்பத்து முயர்ந்தது. அவன்மேல் ஒருவரும் குறை கூறியதில்லை; அநேகர் அவன் ஜீவியத்தை நல்வழியிற் செலவழிக்கப்பட்டதென்றே சொல்வர். ஆனால் அம்மனிதன் சாகுந்தருவாயிலிருக்கிறான். அவன் பந்துமித்திரர்கள் அவனைச் சுற்றி நிற்கின்றனர்; இன்னம்புத்தி தடுமாறவில்லை; அப்போது அவன் தன் சிநேகிதரை நோக்கி: "வீணிற் காலத்தைக் கழித்தேன்! வீணிற் கழித்தேன்! என் ஜீவியமே வீண்காலப் போக்கன்றோ!" என்று சொல்லி உயிர் விட்டான்.

இன்னும் வரும்.

*Selva Raju.*

## THE HOLY BIBLE.

## வேதாகமம்.

சர்வ தயாபர சர்வேசுரன் தமது அளவற்ற நேசமிகுதியால் மனிதனை மண்ணால் உருவாக்கி, தமது சாயலாக ஓர் ஆத்மாவைப் படைத்து, அதனுள் அமைத்து, சுபாவத்திற்கு மேற்பட்ட வரங்களாலலங்கரித்து, மோக்ஷ பேரின்ப பாக்கியத்திற்குப் பங்காளியுமாக்கி வைத்தார். அவர் சொற் பணிவதே யவனது கடமையாயிற்று. அவன் சோதிக்கப்படலாயினன். நரமனிதனோ பரம கடவுளின் வார்த்தையை மீறினான். சோதனையில் வீழ்ந்தான். பராசிற் கடிமையானான். உடனே அவனது புத்தி மங்கிற்று. மனப்பலங் குன்றிற்று. இருதயங் கெட்டுப்போயிற்று. சுபாவத்திற்கு மேற்பட்ட சுகிர்த கொடைகளையெல்லாம் அவன் இழக்கலாயிற்று. சாத்தானுக்கு அது அதிமிக சந்தோஷம். ஆயினுந் தனது ஆட்டத்தை யது ஆண்டவர் முன் காட்ட வல்லதா? பரிச்சேதமில்லை. நல்ல தேவன் மீண்டுமிரக்கங்கொண்டார். தவறிப்போன மனிதனை யிரட்சிக்க மனம் வைத்தார். அவனைத் திரும்பவும் முற்பதவிக்குக் கொண்டுவந்ததுமன்றி, அவனுக்குத் தேவ ஞானத்தையும், இரக்கத்தையுந் தெரிவிக்கலாயினர். சுபாவத்திற்கு மேற்பட்டதோர் கதியை யடைய சிருஷ்டிக்கப்பட்டவனாதலால், மனிதனுக்கு அது தெரிவிக்கப்படவேண்டியது அவசியமாயிற்று. கடவுள் மனிதனுக்குப் புத்திக் கெட்டாத பரம இரகசியங்களைத் தெரிவித்ததுமன்றி, அற்பப் புத்தியாலறியக்கூடிய விஷயங்களையுந் தெரிவிக்கச்

சித்தமானார். மனிதன் தனது சுயபுத்தி
யால் சில சத்தியங்களை யறியக்கூடியவனா
னாலும், சுலபமாய் அறிவது அசாத்தியம்.
அதிலும், எத்தரத்தோரும் அறிவதென்
றால் அற்புதமாகும். தனது சுயவல்லமை
யால் தப்புத் தவறின்றி அறியவேண்டின்
அதிக உழைப்பும் சவகாசமும் விசேஷ
மாய்ப் புத்திக்கூர்மையு மவசரம். இவ்
வழி எல்லாருக்கும் இயன்றதல்ல. ஆகை
யால் மனிதன் தனது சுயபுத்தியாலறியக்
கூடியதும் கூடாததுமான சத்தியங்களை
யவனுக்குத் தெரிவித்துளர் கடவுள்.

இப்படித் தெரிவிக்கப்பட்ட சத்தி
யங்களை வழுப்படாது காத்துவரக் காவல
னாகவும், மனிதருக்குக் கற்றுக்கொடுக்க
ஆசானாகவு மிருப்பது, சேசுகிறீஸ்துவால்
ஏற்படுத்தப்பட்ட சத்திய திருச்சபையே.
அது உண்மை விளம்பி. அதின் வார்த்தை
உறுதிமொழி. உலகமுற்றும் தேவ இஷ்
டப்பிரசாதத்தைப்பெற்றுக்கொடுப்பதும்
அதுவே. தேவ அருள் சுரந்துவர, தேவத்
திரவியாநுமானங்களெனுஞ் சுனைகளும்,
வேத சத்தியங்களை எடுத்துப் போதிக்க
பாரம்பரையும் பரிசுத்த புஸ்தகங்களு
மிருக்கின்றன. இப்புத்தகங்களே வேதா
கமம். இஸ்பிரீத்து சாந்துவின் ஏவுதலால்
அது எழுதப்பட்டமையால், அதை ஆக்கி
யவர் கடவுளே. அதின் சகல உரிமைக
ளுஞ் சத்திய திருச்சபைக்கே யளிக்கப்
பட்டிருக்கின்றன. அதைச் சரிவரப் படித்
துக்காட்டவும், தெளிவுற விவரித்துச்
சொல்லவும், அதிகாரம் பெற்றது திருச்
சபையே. அப்படியே செய்துவரத் தவறு
கிற்கின்றது. தனது வேலையின்மீது வெகு
பிரமாணிக்கமாயுங் கண்காணிப்பாயு
மிருந்து, வேதாகமத்தின் மட்டில் அதிக
மதிப்பும், பூச்சியமுங் காட்டிவருகிறது.
இது நிற்க சமஸ்த கிறிஸ்வர்களும் அதை
வாசித்துவர வேண்டுமெனத் தூண்டியும்
வருகிறது. பரமண்டலங்களிலே யிருக்கிற
பிதாவானவர் இக்கண்ணீர்க் கணவாயி
னின்று தவிக்குந் தமது பிள்ளைகளுக்கு
விடுவித்த சுபசேதிக ளடங்கிய நிருபமே
வேதாகமமன்றி வேறென்ன? அர்ச். சின்
னப்பர் வேதாகமத்தை வாசிக்கும்போது
கடவுளின் வார்த்தைகளைக் காதால் கேட்
பதாகப் பாவித்துவந்தார். அப்படியே கத்

தோலிக்குத் திருச்சபையுஞ் செய்து வருகி
றது. ஆம்! மெய்யாகவே கடவுள் பேசுகி
றார். முதலில் தீர்க்கதரிசிகள் மூலமாயும்
பிறகு தமது திருக்குமாரனின் வழியா
யும், கடைசியாக அப்போஸ்தலர்களைக்
கொண்டும் பரம இரகசியங்களை வெளிப்
படுத்தி, நமது இரக்ஷணிய அலுவலுக்
கின்றியமையாத சாதனங்களைக் காட்டித்
தெளிவாய்ப் பேசுகிறார்.

வேதாகமமானது வெகு மேன்மை
பெற்றதும் வணக்கத்துக்குரியது மென்ப
தில் ஐயமன்று. மனிதனுக்கு வேதத்தை
யூட்டவும், நன்னெறி வழிகாட்டவும், அவ
சரமானபோது அவனைக் கண்டிக்கவும்,
சீர்ப்படுத்தவும், அவன் கற்பனைகளை
யனுப் பிசகா தநுசரிக்கவும், புண்ணிய
சாங்கோபாங்கத்தில் வளரவும் தூண்டி
வர ஏற்ற சாதனமாயிருப்பது வேதாகம
மே. இதற்காகவே யெழுதப்பட்டுளதென்
பது சேசுவின் சாதனையாலும் அப்போஸ்த
லர்களின் நடத்தையாலும் நன்றாய்வெளிப்
படுகின்றது. நமது இரட்சகர் தமது சொந்
தவல்லமையால் புதுமைகள் பலசெய்தார்.
புத்தி போதனையால் விசுவாசத்தை ஸ்தி
ரப்படுத்தினார். அவரது அமிர்த மொழி
களைக் கேட்க அநேகமநேக ஜனங்கள்
வந்து கூடினர். அப்போது தமது போத
னையில் பழைய ஏற்பாட்டின் வாக்கியங்க
ளையே யபரிமிதமாய் உபயோகித்தனர்.
தாம் கடவுளா லனுப்பட்டவ ரென்றும்,
தாம் கடவுளென்றும் வெளிப்படுத்தவும்,
தாம் கொடுத்த வேத கோட்பாடுகளை
யுறுதிப்படுத்தவும், அப்போஸ்தலர்களைப்
படிப்பிக்கவும் மேற்கோளாக வேதாகமத்
தையே யெடுத்துரைத்தார். அது தேவ
வாக்கியங்க ளடங்கிய புத்தகமெனக்
காட்டி, வேத விரோதிகளின் அபத்தங்
களை அதின் வாயிலாகவே மெய்ப்பித்து
முளர். தான் சிலுவையிற் உயிர்துறக்கும்
போதும், வேதாகம வார்த்தைகளையே உச்
சரிக்கச் சித்தமானார். தான் உயிர்த்தபின்
வேதாகமத்தை யப்போஸ்தலர்களுக்கு
விளக்கிக் காட்டி அதற்கொப்ப நடக்கப்
போதித்தார்.

நமது இரட்சகருக்குப்பின், அப்
போஸ்தலர்கள் தமது எஜமானின் கால
டிச் சுவடுகளைப் பின்பற்றி, அக்கியானி



களை மனந்திருப்பவும், கல்நெஞ்ச யூதர்க
ளின் கபடத்தை முறிக்கவும், ஆதியிலு
தித்த வேத விரோதிகளை யடக்கவும் வே
தாகமத்தையே தகுந்த ஆயுதமாக பாவி
த்து வந்தார்கள். அவர்களுக்குப் பதிலாக
விருக்கும் மேற்றிராணிமார்களும் குருக்க
ளும் வேதாகம சத்தியங்களையே போதி
த்து வருகிறார்கள். அவர்கள் சொல்வது
கடவுளின் வார்த்தை. அவ்வார்த்தை வே
தாகமத்திலடங்கியுளது. வேதாகமம் முதற்
பக்கம் முதல் கடைசிப் பக்கம் வரையில்,
கடவுளையுஞ் சிருஷ்டிகரையும் இரக்ஷக
ரையும் நம்மை யாசீர்வதிப்பவரையும்பற்றி
நீண்டளவு எடுத்துப் பேசுகின்றது. ஆகை
யாற்றான் அர்ச். ஜெரோம் பின் வருமாறு
சொன்னார். "வேதாகமத்தை யறியாதவன்
சேசுநாதரை யறியாதவன். திருச்சபைக்
காகப் பரிந்து நியாயம் பேசத் துணிகிற
வன் வேதாகமத்தை யறிந்தவனா யிருக்க
வேண்டும்". கிறிஸ்துவர்கள் அவர்களது
மேலான அழைப்புக்குத்தகுந்தாற்போல்
ஒழுகிவர ஏவி வருகிறார்கள் நற்போதகர்
கள். அவர்களுடைய வாக்குக் குறுதியாக
வேதாகம வார்த்தைகளே நல்லாதாரம்.
சகல புண்ணியங்களையும் புகட்டவல்ல
நல்ல ஏற்பாடுகளும், உத்தம திருஷ்டாந்த
ங்களும் ஏராளமாய் அங்குள. பாவிகளுக்கு
வருந் தண்டனையைப்பற்றியும் புண்ணிய
வான்களுக்கு வருஞ்சம்பாவனையைப்பற்றி
யும் கடவுளுடைய அமிர்த மொழிகளைக்
கொண்டு கற்பிப்பது எவ்வண்ணமென வே
தாகமம் காட்டுகிறது. ஆனதுபற்றியே அ
தை யாதாரமாகக் கொண்டு போதிக்கப்ப
டும் போதனைகள், மனிதன் இருதயத்தை
யூடுருவிப் பாயும்; புத்தியைக்கவரும்; மன
தையுறுதிப்படுத்தும். இது பற்றியேவேத
பாரகர்கள் வேதாகமத்தைப் பற்றும் பற்
றாய்ப் படித்துவர தத்தம் வாழ்நாட்களைச்
செலவிட்டனர். அப்போஸ்தலர்களுக்குப்
பின் ஆதியில் கிளெமென், இஞ்ஞாசியார்,
போலிக்கார்ப், ஜஸ்டின், இரெனியஸ் ஆ
கிய அர்ச்சியசிஷ்டவர்களுக்கு வேதாகமம்
ஆதாரமாயிருந்தது. பின்னர் அர்ச். ஜெ
ரோம் முதல் பீட்வரையும், அங்கிருந்து
அர்ச். பெர்நார்து ஈறாக எத்தனையோ வேத
பாரகர்கள்வேதாகமத்தைவியாக்கியானஞ்
செய்துளர். இதை எடுத்துரைக்க யாரால்

சாத்தியப்படும். தாம் சொல்லிய பிரசங்கங்
களிலும் எழுதிய கிரந்தங்களிலும் வேதா
கம வார்த்தைகளை வரையறுக்கக் கூடாத
விதமாய் வரைந்திருக்கிறார்கள். அர்ச். அக்
குயினாஸ் தோமையார் முதல் இதுவரையி
ல்வேதாகமசாஸ்திர வித்தியா கர்த்தர் எத்
தனைபேருளர் எனச்சொல்வது இலேசான
காரியமன்று. வேதாகமமானது வானுலகமி
ருந்துவந்த சத்திய கோட்பாடுகளடங்கிய
பேழை. இரட்சணிய அமிர்த மளிக்குஞ்
சுனை. கர்த்தரின் மந்தையிலுள்ள ஆடுகள்
நல்லுணவு தேடுகிறதற்கு ஏற்ற பசும்புற்
றரை எனச் செப்பியுளர் வேதபாரகர்கள்.
அதினாற்றான், விசுவாசிகள் வேதாகமத்
தை வாசித்துவர வேண்டுமென சத்திய
திருச்சபை மீண்டும் மீண்டு மெடுத்தோதி
வருகிறது. அதை எவ்வளவுக்கு வாசித்து
கிரகித்துவருவார்களோ அவ்வளவுக்குப்
பக்தியில் முதிர்ந்து வருவார்கள்.

சகல கிறீஸ்துவர்களும் ஆண்டவரு
டைய அமிர்த வார்த்தைகளைக் கேட்டு,
வேதாகமத்தை யடிக்கடி படிக்கும்படி
யாக 13-ம் சிங்கராய பாப்பானவர் நிரு
பங்கள் எழுதினதுமன்றி, அதுதினம் வா
சிப்போர்க்கு ஞானப்பலனு மளித்துளர்.
10-ம் பத்திநாதர் ரோமைநகர் விசுவாசி
களைத் தம்முன்வைத்து வேதாகம விஷயங்
களை விளக்கிக் காட்டப் பின்வாங்க வில்லை.
சுவிசேஷம் பரம்புதலுக்காக உழைத்து
வர பிரயாசைப்படும் சபையோருக்குப்
பொருளுதவி யீந்ததுமன்றி, தமது வார்
த்தைகளால் அவர்களை யுற்சாகப்படுத்தி,
வேலையைச் சுமுத்திரையாய் நடத்திவர
தைரியமுங் கொடுத்தார். புத்திமதிகளும்,
கஷ்டத்தில் ஆறுதலுமடைய சகல கிறீஸ்
துவர்களும் வேதாகமத்தையே தேடிப்
போக வேண்டுமெனப் போதனையாலுஞ்
சாதனையாலுங் காட்டி வருகிறார் 15-ம்
ஆசீர்வாதப்பர்.

ஆகையால் கிறீஸ்துவர்களாகிய நாம்
நமது மேய்ப்பர்களது நல்வார்த்தைக்கி
ணங்கி, வேதாகமத்தை யடிக்கடி, கூடுமா
னால்(ஏன் கூடாது? மனமுண்டானால் வழி
யுண்டு) தினந்தோறும் கால்மணித் தியால
மாகிலும் வாசித்து வருவது நலமாகும்.
நமது பாஷையில் தற்காலும் பழைய ஏற்
பாடும் புதிய ஏற்பாடும் சொற்சுவை பொ

ழிய மொழி பெயர்க்கப்பட்டுள. அதை வாசிக்க, நமது புத்தி தெளியும், வேத அறிவு விருத்தியாகும், நற்புத்தி படியும், கற்பனைகளை யநுசரிக்க மன உறுதி யுண்டாகும்.

பிரயோஜனமற்றதும் கெட்டதுமான விநோத நவீனக் கதைகளைப் படித்து வீணாய் நாளைக் கழிக்காது ஆத்துமத்தைப் போஷிக்கவல்ல ஆண்டவரது வார்த்தைகளை யடிக்கடி வாசித்துவர முயலுவதே கிறிஸ்துவ லக்ஷணம்.

---

## GNANAMANI, III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 32-ம் அதிகாரம்

**குள்ளநரிக்குள்ள சூதை யுடைத்தான வேலைக்காரி முனியம்மாள் ருக்மணி சுத்த பேதையென்று அறிந்து அவளுக்குத் தகுந்தபடி கூத்தாட ஆரம்பித்தாள்.**

அன்று இராத்திரி ருக்மணி நித்திரை செய்யப் போனபோது, வெகுநேரம் தூக்கம் பிடிக்காமல் அவள் வேலைக்காரியான முனியம்மாள் பேசின விளையாட்டுகளைப்பற்றியும், இன்பந்தரும் புஸ்தகங்களைப் பற்றியும் நினைத்துக்கொண்டு கட்டிலில் அங்குமிங்கும் புரண்டுகொண்டிருந்தாள்.

முனியம்மாள் பேசின விஷயங்களில் பல ருக்மணிக்குக் கொஞ்சமும் பிரியப்படவில்லை. அர்ச்சியசிஷ்டவர்களைப்பற்றி அவள் பேசினதும், தர்மம் புரிவதைப்பற்றி அவள் சொன்ன நியாயங்களும் இவளுக்குச் சரிப்படாவிடினும், விளையாட்டைப் பற்றியும், புஸ்தகவாசகத்தைப் பற்றியும், பனி, காற்று அடிக்கும் அதிகாலை வேளையில் வெளியே புறப்படுவதால் உண்டாகும் வியாதி முதலிய சங்கடங்களைப்பற்றியும் அவள் எடுத்துக்காட்டிய நியாயங்கள் ருக்மணிக்குத் திருப்திகரமாயிருந்தன.

இனிமேல் சொக்கட்டான், சீட்டு முதலியவைகளை ஆட கற்றபின், அவ்வூரிலுள்ள பெருமாட்டிகளுடன் பேசிப்புழங்கி விளையாடிச் சந்தோஷிக்கலாமென்று வெகுநேரம் யோசனை செய்துகொண்டே கண்மூடி நித்திரை செய்தாள்.

மறுநாள் காலை விழித்தெழுந்தபின் தான் வழக்கமாய்ச் செய்யும் ஜெபக் கிருத்தியங்களை மாத்திரம் முடித்துக்கொண்டு, வழக்கப்படி போகும் தேவாலயத்துக்கு அன்று போகாமலே, முனியம்மாளுக்காக மகா ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தாள்.

முனியம்மாளோ, இரண்டு புஸ்கங்களையும் சொக்கட்டான், தாயம், சீட்டு முதலியவைகளையும் எடுத்துக்கொண்டு தன் எஜமானியிடம் போனபோது, ருக்மணி புஸ்கங்களைக் கையில் வாங்கி, அதைத் திறந்து அங்கங்கே இரண்டொரு வரி வாசித்தபின், "எங்கே பார்க்கலாம் அந்த சொக்கட்டான்? பாயைவிரி" என்றாள். முனியம்மாள் "சொக்கட்டான் ஆடுவதும், சீட்டு விளையாடுவதும் சுலபமானதல்ல, தாயம்போடக் கற்றுக் கொடுக்கிறேன்" என்று சொல்லி ஒரு பலகையில் கோடுகிழித்து, அதை ஆடும் விதத்தைக் கற்றுக்கொடுத்தபின், இருவரும் உட்கார்ந்து சம்பா போடத் துடங்கினார்கள். முதலாட்டம் முடிய, இரண்டுமணிநேரம் பிடித்தது. ருக்மணி தாயம்போடக் கற்றுக்கொண்டு, "இனி நீ எனக்குக் கற்றுக்கொடுக்க அவசர மில்லை, நானே விளையாடுவேன்" என்று மறுபடியும் விளையாடத் துவக்கினாள். அது முடிய ஒரு மணிநேரம் பிடித்தது. அந்நேரத்தில் பங்காரம்மாள் தன் எஜமாட்டி யண்டையிற் போய், "என்ன அம்மா! எட்டுமணிக்கெல்லாம் காலைப் பலகாரம் சாப்பிடுகிறவர்கள் பத்துமணி யடித்தும் வரவில்லையே! எழுந்திருங்கள்" என்னவே, ருக்மணி எழுந்து தந்தசுத்தி செய்துகொண்டு காலை அசனம் அருந்தி மெத்தைமேல் ஏறினாள்.

முனியம்மாள் தன் எஜமானியைக் காணவே, "என்ன அம்மா? இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டீர்கள்!" என்றதைக் கேட்டு ருக்மணி "நீ கொண்டுவந்திருக்கும் புஸ்தகங்களும் விளையாட்டும் காந்தம்போல் என்னை யிங்கு இழுக்கின்றன" என்று சிரித்துக்கொண்டு "எங்கே சொக்கட்டான்? பாயையெடுத்து விரி, ஒரு ஆட்டம் ஆடலாம்" என்றாள். வேலைக்காரியும் பாயை



விரித்து, அதை ஆடும் விதத்தைக் கற்றுக்கொடுத்தாள். அதற்குப்பின், சீட்டு ஆடுவதைப்பற்றியும் அவளுக்குக் கற்பித்தாள். இந்த இரண்டு விளையாட்டுகளும் ருக்மணிக்கு முதல் முதல் சற்று பிரயாசையாய்த் தோன்றினாலும், ஒரு வாரத்துக்குள் அந்த இரண்டு விளையாட்டையும் நன்றாய்க் கற்றறிந்தாள்.

வேலைக்காரி கொண்டுவந்த இரண்டு புஸ்தகங்களில் ஒன்றை அன்று மத்தியானம் தொடங்கி தனக்கு வாசித்துக்காட்டச் சொன்னாள் ருக்மணி. வேலைக்காரி அந்தப்புஸ்தகத்தை வாசிக்கத்துடங்கினபோது ருக்மணி பெரிய நாற்காலியில் சாய்ந்துகொண்டு அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அந்த எட்டுநாள் முழுதும் கதைப் புஸ்தகங்களை வாசிப்பதிலும் விளையாடுவதிலும் காலத்தைப் போக்கினாள். வேலைக்காரியாகிய முனியம்மாள் சொன்னது போலவே காலமெல்லாம் காற்றுப்போல் பறந்து போயிற்று. இதனால் உல்லாச சந்தோஷம் உண்டானது ருக்மணிக்கு. தன் எஜமானி தன் கருத்துக்கு இணங்கிச் சந்தோஷ சுகத்தைக் கைக்கொண்டதினால் சந்துஷ்டி கொண்டு மகிழ்ந்தாள் முனியம்மாள். தன் வேலைக்காரியின் புத்தி ஆலோசனையால் தனக்கு இவ்வளவு சுகமும் மனக்களிப்பும் உண்டானதென்று ருக்மணியென்பவள் எண்ணி, அவளை வேலைக்காரியாகப் பாவியாமல் தன் தோழியாக்ப் பாவித்து, அவள்மட்டில் அதிக விசுவாசங்கொண்டு மகா அன்புடன் அவளை நேசித்து வந்தாள்.

குள்ளநரிக்குள்ள கபடசூதை உடைத்தான முனியம்மாள் ருக்மணி முழுப்பேதை யென்று அறிந்துகொண்டு, அவளுக்கு ஏற்ற விதமாய்க் கூத்தாடத் துவக்கினாள். தன் சீமாட்டி தோத்திரப்பிரியள் என்று அறிந்த மாத்திரத்தில், அவளிலும் ரூபலாவண்ணியமானவர்கள் இவ்வுலகில் இல்லை யென்பாள். அவளைப் புத்திசாமர்த்தியமுள்ள மாது என்று துதிப்பாள். தேவுலகப் பெண்களில் அவளும் ஒருவளென்று அவளை இச்சகமாய்த் துதித்துப் புகழ்வாள்.

முதல் முதல் தமாஷும் வேடிக்கையுமான புஸ்தகங்களை ருக்மணிக்குக் கொடுத்து வாசிக்கச் சொன்னபின், கொஞ்சங் கொஞ்சமாய்க் கெட்ட புஸ்தகங்களையும் அதற்குப்பின் அசுசியும் அவலக்ஷணமுமான விஷயங்களைப்பற்றி எழுதப்பட்ட புஸ்தகங்களையும் கொண்டுவந்து கொடுத்தாள். சற்றேனும் விமரிசையற்ற ருக்மணி அன்னப்பக்ஷியைப்போல் பால்வேறாகவும் ஜலம் வேறாகவும் பிரிக்கத்தக்க அறிவு அற்றவளாய், தன் கையில் கொடுக்கப்பட்ட புஸ்தகங்கள் அனைத்தையும் வாசித்து வந்தாள். அசுசி யென்றும் அமிர்த மென்றும் பகுத்தறியாமல் தனக்கு எதிர்ப்பட்ட சகலத்தையும் ருசி பார்த்தாள் பேதையான ருக்மணி.

தன் எஜமானியின் குணத்தையறிந்த முனியம்மாள் மதிராசிலிருந்து அவலக்ஷணமான கதைப்புஸ்தகங்களைத் தருவித்துக் கொடுத்தாள். மேலும் நன்னடத்தையற்ற சில ஸ்திரீகளைத் தன் எஜமானியின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய்விட்டு தாயம், சொக்கட்டான், சீட்டுமுதலிய விளையாட்டுகளை விளையாடும்படி சொன்னாள். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுடன் பேசிப் புழங்குவதால் ருக்மணிக்கு அதிக சந்தோஷமும் உல்லாசமும் பிறந்தது. அவர்கள் எப்போது தன் வீட்டுக்கு வருவார்களோவென்று அபிலாஷையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். அந்தப் பெண்பிள்ளைகளும் ருக்மணியின் பேதைத்தனத்தையறிந்தபின், அவளை ஒரு சிறு பிள்ளையாகப் பாவித்து நடந்துகொள்வார்கள். தங்கள் வீட்டிலுள்ள கெட்ட புஸ்தகங்களைக் கொண்டுவந்து அவளுக்கு வாசிக்கக் கொடுப்பார்கள். இவளிடத்திலுள்ள புஸ்தகங்களையும் அவர்கள் கொண்டுபோய் வாசிப்பார்கள்.

சிலகாலத்துக்குப் பின், தேவதாஸ் பண்டிதர் வீட்டில் நாள்முழுதும் பெருஞ் சந்தடியாயிருந்தது. தன் மனைவி உற்றார், பெற்றார், உறவினரின்றி அன்னிய நாட்டில் தனிமையா யிருந்தபடியால், அவ்வூர் பெண்டீர்களுடன் பேசிப் புழங்குவதானது ஏகாந்தத்தால் அவளுக்கு உண்டாகும் மனோ சஞ்சலம் நீங்கிப்போகுமென்று எண்ணிச் சந்தோஷித்தார்.

நாள் எல்லாம் அநேக ஸ்திரீகள் ருக்மணியிடம் வரப்போக இருந்தபடியால், அவளுக்குக் கொஞ்சநேரமாகிலும் ஒழிவு இல்லை. மத்தியான போசனத்தைப் பலதடவைகளில் பரபரப்பாய்ப் புசிப்பாள். தன் கணவன் மத்தியான வேளையில் வீட்டில் தங்கும்படி நேரிடும்போது சில நேரம் அவருடன் சம்பாஷித்து, தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஸ்திரீகளிடம் துரிதமாய்ப் போய்ச் சேருவாள்.

தேவதாஸ் பண்டிதர் செங்கல்பட்டுக்குப் போய்ச் சேர்ந்த இரண்டாம் வருஷத்தில் ருக்

மணியின் குணகுணமும் நடத்தையும் முற்றும் பேதப்பட்டுப்போனது. ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் கோவிலுக்குப் போகாள். முன்போல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நன்மை வாங்காமல், வருஷத்தில் இரண்டொரு விசை மாத்திரம் பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்குவாள். ஞானப்புஸ்தகங்களை அரிதாய் வாசிப்பாள். முன்போல ஏழை எளியவர்களுக்குத் தர்மங் கொடுக்கச் சங்கோசப்படுவாள். மாத மாதம் ஏழைப்பிள்ளைகளுக்கு இவள் கொடுத்து வந்த வஸ்திரங்களை நிறுத்திவிட்டதை யறிந்த குருஸ்வாமியார் அதிசயப்பட்டார்.

ருக்மணியிருந்த விசாலமான அறையில் பலவகையான புஸ்தகங்களைப் பார்க்கலாம். தமாஷான கதைப்புஸ்தகங்களும், துர்நடத்தையைப் பற்றிய கெட்ட புஸ்தகங்களும்ஆங்காங்கு மேசையின் மேலும் நாற்காலிகளிலும் சோப்பாக்களிலும் வைக்கப்பட்டிருந்தன. வேதபுஸ்தகங்கள் பெட்டியில்போட்டு பூட்டப்பட்டிருந்தன.

அந்த ஊரில் நடக்கும் சகல சமாச்சாரங்களையும் கேட்கலாம் ருக்மணி வீட்டில். ஊரிலுள்ள சண்டைசச்சரவுகளும் அலங்கோலையான துர்நடத்தைகளும் அவதூறான சம்பாஷணைகளும் அங்கு பேசப்படும். புருஷன் பெண்சாதிக்குள்ள விவாதங்களும் விகற்ப நடத்தைகளும் குடும்பங்களிலுள்ள போர் பொருத்தங்களும் கேட்கப்படும் அவ்விடத்தில். வாசிப்பிலும் விளையாட்டிலும் செலவழிக்கும் நேரத்தில் முதலாய், வீணும் பாவமுமான பேச்சில் வெகு நேரம் செலவழிக்கப்படும்.

ஒருநாள் ருக்மணியும் அவள் வேலைக்காரியும் வீட்டில் தனித்திருக்கும் காலத்தில், முனியம்மாள் ஏதோ ஒரு புஸ்தகத்தை அல்மாரியில் தேடிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு சிறு கடுதாசி, மேலேயிருந்து கீழேவிழுந்ததைக் கண்டு அதை எடுத்து தன் எஜமானியின் கையில் கொடுத்து "இந்தக் கடுதாசி இங்கே விழுந்துகிடந்தது அம்மா" என்றாள்.

* அதை ருக்மணி கையிலேந்தி புன்னகைப்புடன், "ஓகோ! இது அந்தகிழக்கன்னியாஸ்திரீ செய்தவேலை! தன்னைப்போல் என்னையும்கன்னியாஸ்திரீயாகும்படி இந்தப்போதனையை எனக்குக்கற்பித்தாள்" என்று அந்தக் கடுதாசியை வாசித்துப் பாராமலே பர பர வென்று துண்டு துண்டாய்க் கிழித்து எறிந்துவிட்டாள்.

சற்று நேரத்துக்குள்ளாக ஸரஸ்வதியென்னும் ஒருபெண்பிள்ளை அறைக்குட் சென்று ருக்மணிக்கு வந்தனஞ்சொல்லி சோபாவில் உட்கார்ந்தாள். இந்த ஸரஸ்வதி என்னும் ஸ்திரீ ஒருநாளைக்கு இருமுறை வருவாள் ருக்மணியுடன் பேச. இவள் குணத்திலும் நடத்தையிலும் முனியம்மாளுக்குக் கீழ்ப்பட்டவளல்ல. தமிழ் நன்றாய் எழுத வாசிக்க அறிந்திருந்ததுடன் இங்கிலீஷும் கொஞ்சம் பேசுவாள். அன்று இவள் ருக்மணியைப் பார்க்கவந்தபோது கையில் ஒரு சிறு புஸ்தகத்தை யெடுத்துக் கொண்டு வந்திருந்தாள். ருக்மணி ஸரஸ்வதிக்குப் பிரதிவந்தனம் கூறி, "அதென்ன புஸ்தகம் அம்மா?" என்றாள். அதற்கு ஸரஸ்வதி: இது வெகு நேர்த்தியான புஸ்தகம்; இதை ஒருமுறை வாசித்து இரண்டாந்தரம் வாசிக்கிறேன் என்றாள். அதன் கதா விஷயம் எதைப்பற்றினதோ என்று ருக்மணி வினவ, ஸரஸ்வதியிவ்வாறு கூறுவாள்—இது புருஷன் பெண்சாதியைப்பற்றிய விநோதக் கதை. இதை வாசிக்கும்பொழுது பெண்ணாய்ப்பிறந்தவளுக்கு உரோசமும் ஆக்கிரோஷமும் பொங்கித் ததும்பும்.

ருக்மணி.—சுருக்கமாய்ச் சொல்லுங்கள், பார்க்கலாம் அந்தச் சரிதையை.

ஸரஸ்வதி.—நீங்கள் இதை சாவகாசமாய் வாசித்தால் அதன் உருசியைக் கண்டறியலாம்.

ருக்.—அவ்வளவு இன்பமுள்ளதோ?

ஸரஸ்.—பெண்கள் தங்கள் சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கத்தைக் கற்பிக்கின்றது இந்தப் புஸ்தகம். ஆண்பிள்ளைகள் இந்தப் புஸ்தகத்தைப் பார்த்தால் சந்தேகமின்றி யெரிகரும்பாக்கி விடுவார்கள் இதை!

ருக்.—எதினிமித்தம் அது பூமான்களுக்குச் சரிப்படாது?

ஸரஸ்.—பெண்ணாய்ப்பிறந்தவள் தன் உரிமைக்காகப் பாடுபடுவதைப் பற்றியே.

முனியம்மாள்.—(ஸரஸ்வதியைப்பார்த்து) போனவாரத்திலே நீங்கள் வாசித்துக்கொண்டிருந்தீர்களே, அந்தப்புஸ்தகந்தானா?

* ருக்மணி ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் கன்னியாமடத்தில் ஞானோபதேசம் கற்றபோது மடத்துத் தாயாரம்மாள் சொன்ன ஞான புத்திகளில் முக்கியமானவைகளை இவள் குறிப்பிட்டுக்கொண்ட காகிதந்தான் இது.



ஸரஸ்.—ஆமாம், அதுதான். நீ கூட அதை வாசித்தாயே.

முனி.—ஆமம்மா நானும் வாசித்தேன். வெகு நேர்த்தியான சரிதை! அதை யெஜமானிக்குக் காட்டலாமென்று எண்ணினேன்; ஆனால் என்னவோ குறுக்கேவந்து அதைப்பற்றி முற்றுமே மறந்துவிட்டேன்.

ஸரஸ் — (ருக்மணி பக்கமாய்த் திரும்பி.) நீங்களிதை அவசியம் ஒருவிசை மாத்திரமல்ல, பத்துமுறை வாசிக்க வேண்டும். அந்தக் கதையில் மயிலிமி யென்னும் ஓர் கற்பலங்காரி யிருந்தாள். தங்களைப்போல இவளும் அழகிலும் தமிழ்ப் பாஷையிலும் சிறந்தவள். புத்தி சாமர்த்தியத்தில் பேர்வகித்தவள். இவ்வளவு சிறந்த லக்ஷணங்களை உடைத்தான இம்மங்கை ஏழுமலை யென்னும் ஒரு இளைஞனுக்கு வாழ்க்கைப்பட்டாள். இவனும் படிப்பாளி, பூஸ்திதி தனஸ்திதியுள்ளவன். மாதம் 1-க்கு ரூ 150 சர்க்கார் சம்பளம் வந்துகொண்டிருந்தது. ஆனால் இவையெல்லாமிருந்தும், பிரயோஜனமென்ன? ஆண்மகன் ஆண்மகன்தான்; பெண்மகள் பெண்மகள்தான்.

ருக்மணி.—அந்த ஏழுமலை செய்த தப்பிதமென்னவோ?

ஸரஸ்.—நமக்குள் நாடோறும் நடந்துவரும் கண்ணராவியே அவர்களுக்குள்ளும் நடந்தேறி வந்தது.

ருக்மணி.-அதென்ன கண்ணராவி அம்மா?

ஸரஸ்.—இது தெரியாதா அம்மா உங்களுக்கு? புருஷாள் ஸ்திரீகளை எவ்வளவு ஹீனமாய் நடத்துகிறார்கள் என்று அறியீர்களோ? தங்களைப்போல் பேதைப் பெண்களை நடத்துகிறார்களா அந்த ஆங்காரிகள்! தாங்கள்மாத்திரம் நினைத்த வீட்டுக்கும், நினைத்த வேளையிலும் போகலாம்; ஆனால் தங்கள் மனையாட்டிகள் ஆந்தை பொந்தில் பதுங்கி யிருப்பதுபோல நாளெல்லாம் வீட்டில் தங்கியிருக்க வேண்டுமாம். அவன் வீட்டுக்கு வந்தவுடன், இவள் அடிமைபோல அவனுக்குப் பணிவிடை செய்து, ஆக்கிவைத்ததெல்லாம் அவனுக்குப் பரிமாறினபின், அவன் தின்று மீதியான உச்சிட்டத்தை இவள் தின்ன வேண்டுமாம். கோபம் வந்தால் போடி, வாடி யென்று வைது, மயிரைப் பிடித்து அடிக்கவும் தலைப்படுவான். பணங்காசு முதலியவற்றை அவன் தன் கையில் வைத்துக்கொண்டு தன்னிஷ்டப்படி செலவு செய்வானே ஒழிய, தன் பெண்சாதியைநம்பி அவள்கையில் ஒன்றுங் கொடான். அவள் வேறே யார் வீட்டுக்காவது போன செய்தி யறிந்தால், புலி போலச் சீறிவிழுவான் அவள் மேல்! இதெல்லாம் கண்ணராவி யல்லவோ அம்மா?

முனி.—இதுதானா? இன்னும் எத்தனையோ குரூரமான செய்கைகள் செய்கிறார்கள் இரக்கமற்ற ஆண்பிள்ளைகள்!

ருக்மணி.—புருஷாள் தங்கள் வீட்டுக்கு எஜமானர்களா யிருப்பதைப்பற்றி வெளியே போய் உத்தியோகம் செய்யவேண்டியதும், வரவு செலவு பார்க்க வேண்டியதும், இன்னும் மற்ற வீட்டுக்காரியங்களை யெல்லாம் நடத்தவேண்டியதும் அவர்கள் பாரந்தானே!

ஸரஸ்.-அப்படியானால் பெண்டீர்கள்வேலை சட்டிப்பானையைச் சுரண்டுவதுதானோ?

ருக்மணி.—ஸ்திரீயானவள் தன் வீட்டு வேலையைக் கவனித்துப் பிள்ளைக்குட்டிகளை வளர்ப்பதில் ஜாக்கிரதையாயிருப்பதே அவளுடைய வேலை.

ஸரஸ்.—இப்படித்தான், நாமே, பெண்களாய்ப்பிறந்த நாமே நம்மைக் காட்டிக் கொடுப்பதைப்பற்றித்தான் புருஷாளுக்கு அதிக ஆணவமுண்டாகி நம்மை நிஷ்டூரமாய் நடத்துகிறார்கள். பெண்கள் எல்லோரும் மயிலிமி யென்பவளைப் பின் செல்வார்களேயாகில் அதாவது ஆண்மக்களை வரவு செலவுசெய்யாமல் சமயத்துக்குத் தகுந்தபடி வாயடி கையடி யடித்தால் ஒழிய அவர்கள் வழிக்கு வரமாட்டார்கள்.

ருக்மணி.—ஆமா, அந்த மயிலிமியின் கதி எப்படியானதோ?

ஸரஸ்.—பிரமா எழுதின எழுத்தை யழிக்க ஆரால் கூடும்? சீக்கிரத்தில் அவளுக்குத் துர்க்காலமுண்டாகி, புலிக்கு ஒப்பான அவளுடைய துஷ்ட கணவனைவிட்டுப் பிரிந்து சகலவித துன்பங்களுக்கு முள்ளாகி, அகாலமரணமானாள்.

ருக்மணி.—அப்படியானால் அந்த மயிலிமியைப் பின்செல்லுவோருக்கும் அதே கதிதானே உண்டாகும்.

ஸரஸ்.—ஒரு போதுமில்லை. அவளை நாம் கண்டு பாவித்து, பெண்மணிகள் அனைவோரும் மனத்தைரியத்துடன் அவளுடைய பாத அடியைப் பின்செல்வோமாகில் நமக்கு ஜயமுண்

டாகுமென்பதற்கு ஐயமில்லை. இப்போது நாம் இருவரும் நமது உரிமைகளையடைய சிரத்தையுடன் பாடுபடுவோமேயாகில் அதை யடைவோம் என்பது என் பூர்ண நம்பிக்கை. இது முதற்கொண்டு நானும் மயிலிமியைப்போல் என் ஆம்படையானை ஒரு ஆட்டு ஆட்டி விடாவிட்டால் நான் ஸரஸ்வதியல்ல. எத்தனை நாளாய்ப் புழுக்கைவேலை செய்கிறது. ஆணுக்குள்ள சுதந்திரம் பெண்ணுக்கு இல்லையோ? ஆணுக்குச் சிவப்பு ரத்தம், பெண்ணுக்குக் கறுப்பு ரத்தமா? அவர்களுக்கு மாத்திரம் உரோசமிருக்க, நமக்கு ரோசமில்லையா? என்ன? நாம் உப்பின்றியா சாதம் உண்கிறோம்? (ருக்மணிபக்கம் திரும்பி) நீங்களும் அம்மா, உங்கள் சுதந்தரத்துக்காகப் பாடுபடாவிட்டால் சுகப்படமாட்டீர்கள். சங்கடத்தால் சுகமுண்டாகுமென்னும் பெரியோருடைய வார்த்தையை மறக்க வேண்டாம் அம்மா!

ருக்மணி.— (சிரித்துக்கொண்டு) நாங்கள் இருவரும் நகமும் சதையும்போல் அன்னியோன்னியமா யிருக்கிறோமே. என்ன முகாந்திரத்தை முன்னிட்டு என் கணவனோடு தலை மோதி சண்டையிடுவேன்?

ஸரஸ்.—உங்கள் வீட்டிலுள்ள அலங்கோலங்கள் உங்களுக்குத் தெரியாது போலும்!

ருக்மணி.-அது என்ன அலங்கோல யம்மா, ஸரஸ்வதி?

ஸரஸ்.—இவ்வளவுதானோ? இந்தச் செங்கல்பட்டு முழுதும் அறிந்த விஷயம் உங்களுக்குத் தெரியாதது பெரும் அதிசயந்தான்!

ருக்மணி.-என்ன அலங்கோலபம்மா அது?

ஸரஸ்.— (முனியம்மாள் பக்கம் திரும்பி) ஏண்டி முனி! நீ யிந்த புண்யவதிக்கு வேலைக்காரியா யிருந்தும் உன் எஜமானியின் கணவனுடைய துர் நடத்தையைப்பற்றி ஒருபோதும் அவர்களுக்கு அறிவிக்க வில்லை?

முனி.—......அதைப்பற்றி ஏன் சும்மா இங்கே பேசுகிறீர்கள்.

ருக்மணி.—என்ன? என் கணவனைப்பற்றியா?

ஸரஸ்.—ஆமா, நகமும் சதையும் போல இருந்ததாக சொன்னீர்களே, அந்த உங்கள் புருஷனைப்பற்றித்தான். அவருடைய நடத்தையைப்பற்றி இந்தப் பட்டணம் முழுதும் சிரிக்கிறது!

ருக்மணி.—(முகத்தில் கஸ்திக்குறி காணப்பட்டு) பண்டிதருடைய நடத்தையைப்பற்றியா?

ஸரஸ்.— ஆமா, அம்மா! இன்னம் பச்சையாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கள் புண்ணியவாளன் என்று கொண்டாடும் உங்கள் புருஷனாகிய தேவதாஸ் பண்டிதருடைய ஆகாத நடத்தையைப்பற்றியே நான் பேசுகிறேன். நீங்கள் அவயக் கோழிபோல வீட்டை விட்டு அகலாமலிருக்கிறதினால் தான், உங்கள் கணவனைப் பற்றிய சங்கதி உங்கள் காதுக்கு எட்ட வில்லை. ஊரில் சென்றால் சகலமும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்து கொள்வீர்கள்.

ருக்மணி.—என், அப்போதைக் கப்போது நான் என் கணவனோடு இரதச் சவாரி செய்வதைப் பார்த்த தில்லையோ நீங்கள்?

ஸரஸ்.—இரதச் சவாரி செய்யும் போது ஊர்சங்கதியை அறிவதெப்படி அம்மா? பாவம்! நீங்கள் அறியாப் பெண்மணியாகையால் உங்களுக்கு ஒன்றுந் தெரியவில்லை. (முனியம்மாள் பக்கமாய்த் திரும்பி) அடி முனி, பண்டிதருடைய நடவடிக்கை யெல்லாம் உனக்குத் தெரிந்திருந்தும் அதை அம்மா அவர்களுக்கு அறிவியாதது உனக்குப் பெருந் தப்பிதமடி! பாபிஷ்டி சிறுக்கி, ஒன்றும் மறைக்காமல் சகலத்தையும் உன் துரைசானிக்கு வெளிப்படுத்தடி.

ருக்.—உனக்கு இதெல்லாம் தெரியுமா முனி?

முனி.—(தலைகுனிந்து, மெதுவாய்) தெரியும் அம்மா.

ருக்.—தெரிந்தால் எனக்கு ஏன் வெளிப்படுத்தவில்லை?

முனி.—சொன்னால் நீங்கள் என்னைக் கோபிப்பீர்கள் என்கிற பயத்தால் சொல்லவில்லை. (என்னும்போது, தேவதாஸ் பண்டிதர் வீட்டில் பிரவேசித்துத் தமது கோட்டு, தலைப்பாகையைக் கழற்றிவிட்டு வழக்கப்படி ஜெபக்கூடத்துக்குப் போனார்.)

ஸரஸ்.—என்ன இன்றைக்குப் பண்டிதர் எழு அடிப்பதற்கு முன்னே வந்துவிட்டார்? அடிமுனி, இந்தப் புஸ்தகங்களையெல்லாம் எடுத்துப்பெட்டியில் போட்டுப் பூட்டிவிடு. (ருக்மணியைப்பார்த்து) அம்மா நான் கொண்டுவந்த புஸ்தகத்தை ஒருவரி விடாமல் வாசித்துப்பாருங்கள்; அப்படிச் செய்தால் சுகப்படுவீர்கள். (முனியம்மாளைப் பார்த்து) அடி முனி, நாளைகாலை உன் துரைசானிக்கு நீ பார்த்ததும் கேட்டதுமான சகலத்தையும் தெரியப்படுத்த மறக்காதேயடி. (என்று சொல்லி, முனியம்மாளுடன் எழுந்து ருக்மணிக்கு சலாம் செய்தபோது ருக்மணியின் கண் கலங்கியிருப்பதைக் கண்டு, தான் போட்ட இரையை மீன்கடித்தது என்று மனதில் சொல்லிக்கொண்டு வெளிப்பட்டாள் ஸரஸ்வதி முனியம்மாளுடன்.)

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

ஐயா பத்திராதிபரே!

இதனடியில் வரைந்துள்ள சில சம்பவங்கள் வெகு புராதனமானவையும் பத்திக்குரியவையு மாயிருப்பதால் தயை செய்து தங்கள் பத்திரிகையின் ஓர் கோணத்தில் இதனை வரையக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### அர்ச். கன்னிமரியாயின் அற்புதமான சுரூபம்.

ராக் அமதோர் என்ற ஆலயமானது பிராஞ்சு தேசத்தின் தென்மேற்கு பகுதியிலுள்ள ஓர் மலையின்பேரில் கட்டப்பட்டிருக்கிறது. இதைக் கட்டி யெழுப்பினவர் சுவிசேஷத்தில் சொல்லி யிருக்கிற ஆயக்காரனான சக்கேயு என்பவரே. இவர் பலஸ்தீன தேசத்தினின்று பரிசுத்த கன்னிகையின் ஓர் சுரூபத்தைத் தம்மோடு ஓர் சாதாரணமான படகி லேற்றிக்கொண்டு வேறோர் உபகரணமுமின்றி காற்றினாலும் அலைகளாலுமே நடத்தப்பட்டவராய் இப்பகுதியை வந்தடைந்தார். அக்காலத்தில் இம்மலைப் பிராந்தியமானது துஷ்ட மிருகங்களின் வாசஸ்தானமா யிருந்தது. இந்த ஸக்கேயுவின் வேண்டுதலால் அது முதல் அத்துஷ்ட மிருகங்கள் அவ்விடத்தை விட்டு முழுதும் ஒழிந்துபோயின. அவர் அம்மலையில் வனவாசியாக ஓர் குகையில் சஞ்சரித்து, கர்த்தர் பிறந்த எழுபதாம் வருஷம் மரித்து தமது கையால் செதுக்கப்பட்டிருந்த ஓர் கல்லறையில் அடக்கஞ் செய்யப்பட்டார். கி· பி. 1166-ம் வருஷத்தில் அவருடைய கல்லறையை வெட்டிப் பார்த்தபோது அவருடைய சரீரம் அழியாதிருந்ததுமல்லாமல் அவருடைய வேண்டுதலால் எண்ணிலடங்காத அற்புதங்களும் நடந்தேறின. அக்கால முதல் அத்தலத்தைச் சந்திக்கப் போனவர்களும் பொருத்தனை செலுத்தப் போனவர்களும் இத்தனை பேரென்று சொல்ல முடியாது. இங்கிலாண்டு தேசத்தின் அரசனான இரண்டாம் என்றியென்பவன் அத்தலத்தைச் சந்தித்துத் தனக்கிருந்த பிணி தீர்ந்தால் பெக்கெட் என்னும் தன் தேசத்து மேற்றிராணியாரோடு தான் திரும்ப சமாதானமாய்ப் போவதாக பொருத்தனை செய்துகொண்ட க்ஷணமே, பூரண சுகமடைந்தான். பெக்கெற்றென்பவரும் பழயபடி தமது மேற்றிராசனத்தை ஒப்புக்கொண்டார். "ராக் அமேதோர்" என்றால் பாறையின் சிநேகிதர் என்று பொருள்படும். ஆதியில் சக்கேயு என்பவர் அம்மலையில் சஞ்சரித்து வந்தபோது அவருக்கு அப்பேர் வழங்கிவந்தது. அவர் மரித்தபின் அவர் கட்டிய கோவிலுக்கும் அதே பேர் வழங்கினது. அவருடைய கல்லறையைச் சுற்றி ஒரு காலத்தில் பன்னிரெண்டு கோவில்கள் கட்டப்பட்டிருந்ததாகவும், தற்போது அவற்றில் ஆறு மாத்திரமிருக்கிறதாகவுந் தெரியவருகிறது. பிற்காலத்தில் மேற்படி கல்லறைக் கோவிலுக்கு மேலே இருந்த கோவிலானது மேலேயிருந்து விழுந்த பாறையால் சேதப்பட்டுப் போனதால், 1479-ம் வருஷத்தில் இப்போதிருக்கிற பிரமாண்டமான பஸிலிக்கா வென்ற கோவில் கட்டப்பட்டு, அதில் ஷை பரிசுத்த சக்கேயு என்பவர் பலஸ்தீனாவி னின்றுகொண்டுவந்த பரிசுத்த கன்னிகையின் சுரூபத்தை ஸ்தாபித்தார்கள். அக்கோவிலைச் சந்திக்க வருகிறவர்கள் மலைமேலே போக 216 படிகளுண்டு. அவற்றை முழங்காலாலேயும் கையை யூன்றியும் ஏறிச் செல்லவேண்டியது மல்லாமல் ஒவ்வொருத்தர் கையிலும் எரிகிற மெழுகு வர்த்தியையும் பிடித்திருப்பார்கள். ஒவ்வொரு படி யேறினதும் ஒரு பிரியதத்த மந்திரஞ் சொல்லி "ராக் அமேதோர் மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற ஜெபத்தையும் சொல்லுவார்கள். பொருத்தனை செலுத்தப் போகிறவர்களும் நேர்ச்சி செய்யப்போகிறவர்களும் விசேஷமாக மே மாசத்திலும், தேவமாதா பிறந்த திருநாளாகிற செப்டம்பர் மாதம் 8-ம் தேதி முதல் 15-ம் தேதி வரையிலும் உள்ள 10-நாட்களிலும் மற்ற விசுவாசிகளுடன் திரளாய்

வந்துகூடுவார்கள். ஒவ்வொருநாள் சாயந்தரத்திலும் ஜனங்கள் தங்கள் கரங்களில் மெழுகுவர்த்தியை யேந்திக்கொண்டு முன் சொன்னதுபோல் முழங்காலால் படிகளை யேறுவதையும். அம்மலையின்பேரில் நாலாபக்கங்களிலும் பலவர்ணமான சிறு விளக்குகள் எரிந்துகொண்டிருப்பதையும் தொலை தூரத்தினின்று பார்ப்பவர்களின் கண்ணுக்கு மகா சோபித அலங்காரமாயிருக்கும். ஒரு மூலையில் ஜெருசலேமிலிருந்து எடுத்துவரப்பட்ட சிலுவை சிவப்பு நிறமான வெளிச்சத்தின் மத்தியில் தோன்றுகிற காட்சியானது மலையெல்லாம் ஒரே வெளிச்சமாய் ஜொலித்து யாத்திரைக்காரரைத் தன்னிடம் வெகுவாஞ்சையோடு அழைப்பதுபோல் காணப்படும்.

கிறீஸ்து பிறந்த பதினொறாம் நூற்றாண்டில் "ஹூஜ்நாட்ஸ்" என்ற பதிதரால் இத்தேவாலயத்துக்கு நேர்ந்த சேதங் கொஞ்சமல்ல. ஆயினும் பத்தியுள்ள கிறீஸ்துவர்களின் முயற்சியால் ஏறக்குறைய முழுதும் பழுது பார்க்கப்பட்டு முன்னைய நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்பதிதரின் கைக்கு அகப்படாவண்ணம் முன் சொல்லிய தேவமாதாவின் அற்புதமான சுரூபமும், ஓர் புதுமையான மணியும், அர்ச். மார்ஷால் என்பவரால் மந்திரிக்கப்பட்ட பலிபீடமும் தக்க இடத்தில் முன்னாடியே யொளித்து வைக்கப்பட் டிருந்தன. இந்த அற்புதமான சுரூபம் மரத்தினால் செய்யப்பட்டதும் வெள்ளித்தகட்டால் பொதியப்பட்டதுமாயிருந்தது. அது 29 அங்குலம் உயரமானது. நாளாவட்டத்தில் சுரூபத்தின் மேலுள்ள வெள்ளியெல்லாந் தேய்ந்துபோய் இப்போது சுரூபத்தின் அடிவிளிம்பில் மாத்திரம் வெள்ளிநிறம் தென்படுகிறது. தேவமாதா தமது திருக்குமாரனைத் தமது முழந்தாளின் பேரில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிற பாவனையாக இச்சுரூபஞ் செய்யப்பட்டிருப்பது மல்லாமல், மாதாவின் சிரசிலும் சேசுநாதரின் சிரசிலும் கிரீடந்தரிக்கப்பெற்று சேசுநாதர் கையில் வேத புத்தகத்தைப் பிடித்திருக்கிற மேரையாகவும் காணப்படுகிறது. காலஞ்சென்ற சுருபமானதானாலும் நேர்ச்சிக்காக இடைவிடாமல் எரிகிற மெழுகுவர்த்திகளின் புகையினாலும் மாசு படிந்து இச்சுரூபம் கறுத்திருப்பதால் அது பரிசுத்த கன்னிகையின் அற்புதமான கறுத்த சுரூபம் எனப் பேரிடப்பட்டிருக்கிறது. இச்சுரூபத்தின் வழியாக நடந்தேறிய அற்புதங்களைக் கணக்கிட முடியாது. நோய் கொண்ட பிணியாளரும் உபகாரம் அடைந்த பிரபுக்கள் முதலியவர்களும் கொண்டுவந்து செலுத்தியிருக்கிற அபூர்வமும் விலையுயர்ந்ததுமான காணிக்கைகளே அதற்கு கண்கண்ட அத்தாட்சி. ஆயினும் முன்சொன்ன பதிதரால் மிகுதியான விலையுயர்ந்த காணிக்கைகள் அக்கிரமமாய்க் கொள்ளையடிக்கப்பட்டுப் போயின. இக்காலத்தில் ஷை மாதாவின் சுரூபம் விலையுயர்ந்த பீதாம்பரத்தால் சிங்காரிக்கப்பட்டு மத்திய பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பரால் காலியா தேசத்துக்கு அனுப்பப்பட்ட அர்ச். மார்ஷால் என்பவரால் மந்திரிக்கப்பட்ட பீடத்தின் ஒரு பாகத்தை யிக்கோயிலில் காணலாம். இக்கோவில் தோம்பில் தொங்குகிற மணியும் வெகு பேர்பெற்றது. அம்மணியை அடிக்க அதற்கு இயாதொரு கயிறும் சங்கிலியுங் கிடையாது. அக்கோவிலி லிருப்பவர்களானாலுஞ் சரி, தொலைதூரத்திலுள்ளவர்களானாலுஞ் சரி பரிசுத்த கன்னிகையை நோக்கி வேண்டிக்கொள்ளவே, அவ்வேண்டுதல் அனுகூலமானதின் குறிப்பாக இம்மணி தானாகவே யடிக்கும். அப்படியே நடுக்கடலில் புயலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் ஓர் மாலுமியானவன் ராக் அமேதோரின் மாதாவே, சமுத்திரத்தின் நட்சேத்திரமே! என்று வேண்டிக் கொண்டமாத்திரத்தில் அவனுடைய வேண்டுதல் தம்மால் கேட்கப்பட்டதாக அம்மாதா தம் மணியை யடிக்கவே, அத்தொனியானது வேண்டுதல் செய்தவன் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அவனுடைய காதுக்கு எட்டுமாம். அப்படியே 1385-௵ பிப்ரவரி௴ 10௳யிலும், 1435-௵ ஜுலை௴ 20௳யிலும் 1454௵ மே௴ 5௳யிலும் இன்னும் வேறே பதினொரு சமயங்களிலும், இதுபோல் 1554௵ செப்டம்பர்௴ 23௳யிலும் இம்மணியானது தானாகவே யடித்ததாகத் தக்க ஆதாரங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

முன் சொல்லியது போல் 216 படிகளையும் விசுவாசிகள் ஏறிச் சென்றதும் அவர்கள் முந்த முந்தத் தரிசிக்கக் கூடியது ராக் அமேதோர் ஆன வனவாசியின் காலத்திலிருந்த கர்த்தருடைய பாடுபட்ட சுரூபமாம். இது இரண்டு தூண்களுக்கு மத்தியில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. இச்சுரூபத்தைத் தரிசித்து வேண்டிக்



கொண்டபின், இக்கோவிலுக்கு அடியிலுள்ள அர்ச். அமோதோரின் கோவிலுக்குச் செல்லுவார்கள். இதிலேதான் சக்கேயுஸ் என்ற அர்ச். அமோதோரின் சரீரம் பூச்சியமாய்க் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கிறது. யூஜ்நாட்ஸ் என்ற பதிதர் இச்சரீரத்தைச் சுட்டெரித்துப்போடும்படியாக அநேக விறகுகட்டைகளை அப்பிரேதத்தைச்சுற்றிக் குவித்துத் தீயிட்டு எரித்தார்கள். ஆனால் காலமானது அச்சரீரத்தை யழிக்க வல்லமை யிழந்துபோனதுபோல் இத்தீயிக்கும் இச்சரீரத்தைச் சுட்டெரிக்க எவ்வித பலமும் இருந்ததில்லை. இதைக் கண்ட மேற்படி பதிதப்படையின் தலைவன் தனது கையில் ஓர் பெரிய சம்மட்டியை எடுத்து "நீ எரிந்து போகமாட்டேனென்கிறாய்; நல்லது, உன்னை நான் துண்டுதுண்டாய் நறுக்கி யெறிகிறேன்" என்று சொல்லி அப்பிரேதத்தின் பேரில் ஓர் அடிபோடவே அச்சம்மட்டி துண்டுதுண்டாய்ச் சிதறிப்போனது மல்லாமல் அத்தப்பரிசுத்த சரீரத்தினின்று சிவந்த உதிரம் புறப்பட்டது. இதைக்காணவே அச்சண்டாளர் ஓடிப்போனார்கள். பிற்பாடு அச்சரீரமானது மிக்க பத்தி ஆசாரத்துடன் விலையுயர்ந்த பெட்டகத்தில் அடக்கப்பட்டுப் பீடத்தின் மத்தியில் உயரமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோவிலில் அர்ச். சக்கேயுவின் சீவிய சரித்திரத்தைக் காட்டும்படியான எட்டு படங்களுமுண்டு. அவர் கிறிஸ்து நாதரைத் தரிசிக்க ஆசைகொண்டு அத்திமரத்தில் எவ்விதமா யேறிப் பார்த்தாரென்பதையும், அவர் அர்ச். வெரோணிக்காளென்ற தமது சமுசார சகிதமாய் மெடொக் பட்டணத்துக்குச் செல்ல எவ்விதமாய்ச் சமுத்திரத்தில் பிரயாணஞ் செய்தாரென்றும், அந்தப் பட்டணத்தைச் சேர்ந்தபின் அவ்விடத்தில் வனவாசஞ் செய்து அந்நாட்டாருக்கு எவ்வண்ணமாய்ச் சத்தியவேதத்தைப் போதித்தாரென்றும் இதுபோல் சித்திரிக்கப்பட்ட எட்டுப்படங்களை அக்கோவிலில் காணலாம். இன்னும் இக்கோவிலைப்பற்றிய அதிசயங்கள் அநேக முண்டு. சேசுநாதரைக் கண்ணாலே கண்டு சம்பாஷித்தவருடைய சரீரம் நாளதுவரையும் அழியாதிருப்பதை விட மேலான அற்புதம் வேறென்ன இருக்கிறது?

---

நமக்கு நடுநீதி செலுத்துகிறவராகிய சுவாமியின் திரு இருதயத்தின்பேரில் இடைவிடாமல் பத்தியாயிருந்து மரிப்பது எவ்வளவோ சந்தோஷகரமானது. (முத். மார்கரீத்மரி.)

## உதகமண்டலம்.

கனம் பத்திராதிபர் அவர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

இத்தென்னிந்தியாவின் கண் உலாவி சகல விதமான கனதனவான்களுக்கும் புத்தி புகட்டும் "நல்லாயன்" வாயலாக யான் சில சந்தேகங்களை நிவர்த்தியாக்கிக்கொள்ளும்பொருட்டு எழுதத் துணிந்தேன். அவை யெவையெனில், சில காலத்துக்கு முன் நல்லாயனில் ஜெப சங்கிலி என்று ஓர் ஜெபத்தை யான் வாசித்திருக்கிறேன். அது அன்னவிதமாயிருக்க தற்காலம் கீழ்கண்ட விதமாய் ஓர் ஜெபம் ஏற்பட்டு அநேக ரோமான் கத்தோலிக்கர்களால் விசேஷமாய் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த ஜெபம் ஓர் மேற்றிராணியாரால் அங்கீகரிக்கப்பட்டதாக விளங்குகிறது. அந்த ஜெபத்திற்கும் நம்முடைய கத்தோலிக்கு வேத கொள்கைக்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை. இப்படியாக யான் பல சந்தேகங் கொள்வதால் இதைக் கண்ணுறும் கனம் பத்திராதிபராவது, ஏனைய சந்தாதார நேயர்களாவது "நல்லாயன்" வாயலாக தகுந்த விடை, அதாவது இந்த ஜெபம் எவ்விடத்தில் உற்பத்தியானது? எதற்காக இவ்விதம் நடக்கிறது? அதை யார் முதலில் துவக்கினவர்? அவர் எந்தக் காரணத்தை முன்னிட்டு துவக்கினார்? அந்த ஜெபத்தினால் உண்டாகும் பிரயோசன மென்ன? என்னும் இவற்றுக்கு தகுந்த விடையளித்து என் சந்தேகத்தை நிவர்த்திக்கவேணுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## ஜெபம்.

ஓ! கர்த்தராகிய சேசுக்கிறிஸ்துவே, முடிவில்லாத பராபரனே, மனுஷராகிய எல்லோர் மேலும் இரக்க முடையவரே, விலையேறப்பெற்ற இரத்தத்தால் எங்களை பாவத்தினின்று விலக்கி எங்களை உம்மண்டை சதா காலத்துக்கும் சேர்த்துக்கொள்ளும். (ஆமென்சேசு).

கவனிப்பு.—இந்த ஜெபம் ஜெருசலேம் பட்டணத்தில் பரிசுத்த பண்டிகை யன்று சொல்லப்பட்டது. இது லாரென்ஸ் மேற்றிராணியாருக்கு அனுப்பப்பட்டது. இதை யவர் வேறு ஒன்பது பேருக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். இதை யாராவது தெரிவிக்காமலிருந்தால் அவர்கள் ஒருவித துன்பமடைவார்கள். இதை யார் ஒரு நாளைக்கு ஒன்றாக, ஒன்பது நாளைக்கு எழுதி

வேறு ஒன்பது பேருக்கு அனுப்பிவைப்பார்களோ, அவர்கள் அந்த ஒன்பது நாட்களிலாவது, அதற்கு பின்னிட்டாவது, ஒருவித பெரிய சந்தோஷத்தை அடைவார்கள். இவ்விதமாக இது ஒரு நண்பரிடமிருந்து எனக்கு அனுப்பப்பட்டது. ஆதலால் இதை வாசிக்கும் நண்பர்களே, இதைச் செய்யத் தவறாதீர்கள்.)

இப்படிக்கு
G. S. M.
ஓர் கத்தோலிக் நண்பன்,
உதகமண்டலம்.

[நமது ஆத்துமத்துக்கும் சரீரத்துக்குந் தேவையானவைகளை சர்வேசுரனிடத்தில் இரந்து கேட்பதே ஜெபமாகும். இதற்கொப்ப நமதாண்டவரும் அப்போஸ்தலர்களுக்கு பரமண்டல மந்திரத்தை ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார். திருச்சபையும் இப்படியே அநேக ஜெபங்களை உண்டாக்கி அவைகளை ஜெபிக்க விசுவாசிகளுக்குக் கற்பிக்கிறது. இப்படியிருக்க, திருச்சபையின் விரோதிகள் விசுவாசிகளைக் குருட்டுப்பத்தி யுள்ளவர்களென்று எளனஞ் செய்யுமாறும், அவர்களை ஏமாற்றவும் மேற்சொன்னதைப் போன்ற சில ஜெபங்களைக் கல்பனைபண்ணி விசுவாசிகளுக்குள் பரப்பி வருகிறார்கள். இத்தகைய ஜெபங்கள் தன்னிலே தப்பறையற்றனவாயும் திருச்சபையின் போதகத்துக்கு ஒத்தனவாயு மிருந்தபோதிலும், இவைகளை ஒன்பது நாளில் ஒன்பது பேருக்கு எழுதியனுப்பவேண்டுமென்றும், இல்லாவிடில் ஏதோ வோர் துன்பம் நேரிடுமென்றும் பயமுறுத்துவதானது சத்தியவேத போதனைக்கு முற்றும் விரோதமா யிருப்பது மன்றி, விசுவாசிகளைக் குருட்டுப் பக்தியுள்ளவர்களென்று மெய்ப்பிக்க கள்ளப்போதகரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு கள்ள சூட்சியாயிருக்கிறதென்றுந் தெளிவாகிறது. ஆகவே, விசுவாசிகள் இப்பேர்ப்பட்ட சங்கிலி ஜெபங்களை வரப்பெறுவார்களானால் அவற்றை நம்பாமல் உடனே அவைகளைக் கிழித்தெரிந்துவிடவேண்டும். அல்லது அவைகளைச் சுட்டெரித்துப் போடவேண்டும். ப—ர்]

---

## ஒழுக்கம்.

ஓடுகின்ற தண்ணீரைப் பார்க்கிலும் ஒழுகுகின்ற ஜலம் உதகிருஷ்டமானது. ஆகவே, ஒழுக்கம் உயர்குலமென்பது உண்மைப் பழமொழி. உலகத்தைச் சுற்றிவர நினைக்கும் கப்பல் மாலுமியானவன், தான் எந்தத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டானோ அந்தத் துறைமுகத்தில் திரும்பவும் வந்து சேரும் வரையில் அவன் எண்ணம் முற்றப் பெறுகிறதில்லை. அதுபோலவே மனிதன் யாரிடத்தில் இருந்து உற்பவித்தானோ அவரிடத்திலேயே மறுபடியும் போய்ச் சேருவது தான் மானிட ஜீவியத்தின் மங்களமான முடிவு. கடவுளிடத்திலிருந்து சூட்சம நிலைமையிற் பிறந்த ஆத்மா, ஓர் ஸ்தூலதேகத்தை இவ்வுலகத்தில் அடைந்து கொஞ்சகாலம் இங்கு யான் எனதென்னும்பற்றுகளுக்கு ஈடுபட்டுழன்று திரிந்து, இறுதியாய் அந்த ஸ்தூல தேகத்தைவிட்டுப் பழைய சூட்சம நிலைமையில் திரும்பவும் அக்கடவுளினது இடத்தையே சேர்ந்து ஒடுங்கவேண்டியது கிரமமாயிருக்கின்றது. ஆதாமின் ஆத்துமாவைக் கடவுள் சிருஷ்டித்த காலத்தில் அது எத்தனை சுசிகரமாயிருந்ததோ, அத்தனை சுசிகரமாகவே எல்லோருடைய ஆத்துமமும் திரும்பவும் கடவுளை அடைகிறகாலத்தில் இருக்கப் பார்ப்பதுதான் ஒழுக்கத்தின் பிரதான குணமாய் இருத்தல் வேண்டும்.

அப்படியாயின் "ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது நிரம்பவும் சரி. உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒழுக்கம் ஒருப்போல நன்மை செய்து வருவதால், நமது உயிரைக் காட்டிலும் பதின்மடங்கு நம் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பது மேற்சொன்ன கவியின் சாராம்சம். நாம் செய்கிற வேலை எல்லாம், படுகிற பிரயாசை எல்லாம்; அநுபவிக்கிற கஷ்டநஷ்டங்களெல்லாம் நம் உயிரை இன்னுங் கொஞ்ச காலம் காப்பாற்றிக்கொள்வதற்காக வல்லவா? அப்படியாயின் எல்லாவற்றினும் உயிரன்றோ சிறந்த பொருள்? ஆனால் கற்றுணர்ந்த மேதாவிகள் அவ்வுயிரினும், ஒழுக்கமே பெருமையுடைய தென்கின்றனர்.

கல்வியில்லாதவனா யிருக்கலாம், அட்டதரித்திரனாயிருக்கலாம், கபோதியாயிருக்கலாம், மற்றெவ்வித அங்கப் பழுதுள்ளவனாகவு மிருக்கலாம்; இவை எல்லாம் மானிட ஜீவியத்தை அத்தனை வடுப்படுத்திவிடாது. ஆனால் ஒழுக்கமற்றவனா யிருப்பதோவென்றால், அவன் வாழ் நாளாகிய விருக்ஷத்தின் அடியில் ஓர் கோடரியை வைத்தது போலாம். ஒழுக்கம் பிரதானத்துக்கெல்லாம் அதி பிரதானமானது. முக்கியமாய் மெய்விவாகம் செய்யும்பக்ஷத்தில், கோத்திரத்தை யறிந்து பெண் கொடு என்றபடி, புராதன நூல்களின் கருத்தின்படியே, மணமகன் குடும்பமும் மணமகள் குடும்பமும் நாலு தலைமுறை மட்டும் சோதிப்பது நலம்.

இத்தகைப்பட்ட கனமான விஷயத்தில் அழகு, கல்வி, செல்வம், சம்பத்து இவைகள் முதலியவற்றைப் பார்ப்பதைவிட சம்பந்தம் செய்யப்போகும் ஒவ்வொரு குடும்பத்திலுள்ளோர்களுடைய ஒழுக்கத்தை கவனிப்பது அதிக அவசரமும் யோக்கியமுமா யிருக்கும் என்பதை மறுப்பாரில்லை.

ஆனால், ஒழுங்கீனரோடு அல்லது ஒழுக்கமற்ற குடும்பத்தாரோடு சம்பந்தம் செய்துகொள்ளுவோமாயின், அதனால் வரும் இழுக்கை எவ்வித அதிர்ஷ்டத்தாலும் மாற்றமுடியாது. ஆகையால் "ஒழுக்கமுடைமை குடிமையிழுக்க மிழிந்த பிறப்பாய்விடும்" என்னும் நீதிமொழிகொண்டு விஷயங்களை உய்த்துணர்ந்துகொள்க.

M. P. Mascarenhas.

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

**ஒரு புதிய யந்திரம்.**—வாயால் பேசும் பொழுதே சப்தத்தைக்கொண்டு டைப் அடித்துவரும்படியான ஒரு நூதன யந்திரமானது தற்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

**ஓர் அறிக்கை.**—கோயம்பத்தூருக்கடுத்த பிலியகுளத்தில் நளவருஷ ஆனிமீ 5-ம் தேதிக்குச் சரியான 1916-ம் வருஷம் ஜூன்மீ 18உ ஞாயிற்றுக்கிழமை யன்று பதுவைப் பதியரான அர்ச். அந்தோனியார் திருவிழா வெகு சிறப்புடன் கொண்டாடப்படும்.

**வேர்டன் சண்டை.**—இச்சண்டையானது இன்னும் முடிவானபாடில்லை. மிகக் கடூரமாய் நடந்துகொண்டேயிருக்கிறது. ஜெர்மனியர் முன்னேறுவதும்பின்னுக்குத் துரத்தப்படுவதுமாயிருக்கிறார்கள். மிக்க வீரசூரமாய்ப் போராடும் ஜெர்மனியருடைய கொட்டத்தை இந்த வெர்டன் சண்டை அடக்கிவிடும் போலும்.

**ருஷியருடைய நிலைமை.**—இவர்களுடைய தற்கால நிலைமை மெத்த மெச்சத்தக்கதாகவே யிருக்கிறது. இவர்கள் கீழ் யுத்தகளத்தில் அதாவது, அர்மேனியா மெசோபொத்தேமியா, பெர்ஷியா முதலிய தேசங்களின் பிராந்தியங்களில் முன்னேறிக்கொண்டு போகிறார்கள். தாங்கள் கைப்பற்றுமிடங்களில் தங்களுக் கனுகூலமாக இருப்புப்பாதைகளையும் போட்டு வருகிறார்களாம்.

**ஞான ஒடுக்கம்.**—மைலாப்பூர் மிஷனைச் சேர்ந்த கோவளம் பங்கு சுவாமியாராகிய சங். எஸ். மரியானந்த சுவாமியவர்களால் தூத்துக்குடியி லிருக்கும் ஷை மிஷனைச் சேர்ந்த சந்த மரிய நஸ் நேவிஸ் ஆண்டவளின் தேவாலயத்தில் முப்பது ஆண் பிள்ளைகளுக்கு ஞான ஒடுக்கம் ஐந்து நாள் பரியந்தம் கொடுக்கப்பட்டுச் சென்ற மே மாதம் 20-ந் தேதியோடு முடிவு பெற்றதாகத் தெரியவருகிறது.

**ஒரு உபாத்தியாயர்.**—மாணாக்கர்களுக்கு தாவர சாஸ்திரப் (Botany) பாடம் கற்பித்துக்கொண்டிருக்கையில், ஒரு பையனை நோக்கி (Orchid) ஆர்கிட் (என்பது வாசனையுடைய ஒரு வகை புஷ்பச்செடி) இனத்தைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லு என்று வினவ, மாணாக்கன் "ஐயா, என் தாய், யாதொரு இனத்தாரைப்பற்றியும் பேசக்கூடாதென்று தாக்கீது செய்திருக்கிறாள்" என்றானாம்.

**நிகழும் யுத்தத்தின் சேதம்.**-தற்போது நிகழ்ந்துவரும் யுத்தத்தில் இருதரப்பிலும் நேர்ந்திருக்கும் சேதம் அதாவது, யுத்தகளத்தில் இறந்தவர்களும், காயம்பட்டவர்களும், கைகால் போனவர்களும், உயிராயிருந்தபோதிலும் யாதொரு வேலை செய்யக் கூடாதவர்களுமான இவர்களெல்லோருடையவும் தொகை, ஒரு கோடியே முப்பது லட்சம் என்று சொல்லப்படுகிறது. இப்பெருஞ் சேதத்திற்கு ஜெர்மன் சக்கரவர்த்தியாகிய கெய்சரே உத்தரவாதியாம்.

**உனக்கு வயதென்ன?**—ஜெர்மனி தேசத்திலுள்ள (Munich) முனிச் என்னும்

பட்டணத்தில் நடந்த ஒரு வழக்கில், ஒரு ஸ்திரீ சாட்சி சொல்லுவதற்காக, நீதிஸ்தலத்திற்கு அழைக்கப்பட்டாள். நியாயாதிபதி அந்த ஸ்திரீயை நோக்கி "உன் வயதென்ன?" வென்று கேட்க, அதற்கவள் "துரைகளே, உமக்குத் தெரிந்திருப்பதுபோல் நேற்றிருந்த வயது எனக்கு இன்றைக்கில்லை. இன்றைக்கிருக்கும் வயது நாளைக்கிராது. இப்படி மாறிக்கொண்டிருக்கும் என் வயதை நான் எப்படி ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடும்? அதைப்பற்றி என்னை வினவுதல் தருமமல்ல. ஆகையால், மன்னியுங்கள் தர்ம் துரைகளே" என்றாளாம்.

**உக்கிராணத்தில் ஒரு எலி.**—ஒரு நாள் ஒரு சிறு எலி, எப்படியோ, விஸ்கி சாராயம் வைத்திருந்த அறையில் நுழைந்துவிட்டது. அங்கே சாராயப் பீப்பாயின் வழியாய் சாராயம் கசிந்து கொண்டிருப்பதை அந்த எலி கண்டு, பீப்பாயருகில் ஓடி சாராயத்தை முதலில் முகர்ந்துபார்த்தது. பிறகு அதைக் கொஞ்சம் ருசிபார்த்தது. பிறகு கொஞ்சம் குடிக்க ஆரம்பித்தது. கடைசியில் நன்றாக விலாப்புடைக்க குடித்த பின்னர், நிமிர்ந்து நின்று "நேற்று என்னைத் துரத்தின பூனை எங்கே? ஒரு கை பார்க்கிறேன்" என்றதாம். இதுவேதான் குடிகாரன் செய்கையும்.

**ஒரு கிழவியின் யோசனை.**—ஒரு பெரிய திருவிழாவன்று, பிரார்த்தனை செய்ய ஜனங்கள் ஏராளமாய்க் கோவிலுக்குச் சென்றார்கள். பிரார்த்தனை முடிந்த பின் எல்லோரும் ஒருமிக்க கோவிலைவிட்டு வெளியே வரும்போது, ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டும், இடித்துக்கொண்டும், சந்தடி செய்துகொண்டும் வெளியேற முயலுவதை ஒரு கிழவி பார்த்து தான் உட்கார்ந்திருந்த விடத்திலேயேயிருந்துகொண்டு "எல்லோரும் வெளியே போகிறவரையில், ஒவ்வொருவனும் என்னைப்போல தன் தன் இடத்திலேயே இருப்பானேயாகில், கதவண்டை அவ்வளவு கூச்சலும், சந்தடியும் இராது" என்றாள். இதுவும் ஒரு பக்கா யோசனைதான்!!

**தன்வினை தன்னைச் சுடும்.**—இலங்கையைச் சேர்ந்த நுவரேலியாவிலுள்ள ஓர் மதுபானக் கடையில் ஓர் மகம்மதியன் அன்றாடம் வந்து திருட்டுளவாய்க் குடித்துப் போவான். ஓர் நாள் இந்த மகம்மதியன் சாராயக் கடைக்குள் மறைவாயிருந்து குடிக்கையில் தற்செயலாய் ஓர் கிறீஸ்துவப் பொடியன் அக்கடைக்கெதிரினின்று "மன்னனவரக் காணாமல் மயங்கிறேன் தியங்கிறேன்" என்று பாடினான். இதைக் கேட்ட ஷை மகம்மதியன் தன்னைக் குறித்துத்தான் ஷை பொடியன் அப்பாட்டைப்பாடினானென்று தனக்குள் எண்ணமிட்டவனாய் "வேசிமகன் கண்டு கொண்டானே" என்று சொல்லி ஷாப்பைவிட்டு வெளியே வந்து பொடியனை வெறிக்க வெறிக்கப் பார்த்து மிக்க கோபத்தோடு புறப்பட்டுப் போனானாம்.

**ஸ்பேயின் தேசத்து அரசனாகிய 2-ம் பிலிப்பு.**—ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தில் "சூரியன் அஸ்தமிக்கிறதேயில்லை" யென்று நாம் பெருமை பாராட்டுகிறதுபோல், ஏராளமான பிரதேசங்களை அரசாண்ட ஸ்பேயின் தேச சக்கரவர்த்தியான 2-ம் பிலிப்பும் கி. பி. 16-ம் நூற்றாண்டில் பெருமைகொண்டாடிவந்தான். ஆனால் அவன் சாகுந்தறுவாயில், தன்னைச் சுற்றியிருந்தவர்களை நோக்கி "நான் இராயனாயிராமல் நவசன்னியாசியாய் ஒரு மடத்தில் இருந்து என் வாணாளைச் செலவழித்திருந்தால் எவ்வளவோ நலமாயிருந்திருக்கும்" என்று சொல்லி உயிர்விட்டானாம்.

**ஓர் வியாதிக்காரனுடைய வைராக்கியம்.**—தன் அயலானோடு வெகுகாலம் பேச்சு வார்த்தையின்றி வர்மமாயிருந்த ஒரு மனிதன் சாகுந்தறுவாயிலிருப்பதைக் கண்ட அவனது சிநேகிதர்கள் அவனிடஞ் சென்று "அண்ணே, நீர் சாகுந்தறுவாயிலிருக்கின்றீர்; உமது அண்டை வீட்டுக்காரனோடு நீர் வர்மமாயிருப்பது யோக்கியதையன்று; அவனுடன் சமாதானஞ் செய்து கொள்வது உமக்குக் கடமை" என்று சொல்லி, அயலானை வியாதியஸ்தனிடம் கூட்டிக்கொண்டு போனார்கள். அவனைக் கண்டதும், வியாதியஸ்தன் எழுந்து அவனுடன் கை குலுக்கி சமாதானமான பின், அவனைப் பார்த்து "நான் இறந்துபோனால் போச்சுது; ஆனால் பிழைத்துக்கொண்டேனோ இச்சமாதானமெல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணிக்கொள்ளும்" என்று சொன்னானாம். இது நல்ல சமாதானந்தான்!!

**நம்மிருவரைத் தவிர வேறு யாருமில்லை.**—மெதடிஸ்ட் பாதிரியார் ஒருவர் தன் கோவிலில் பிரசங்கம் செய்யும்போதெல்லாம், ஒரு மனிதன் குறட்டைவிட்டுத் தூங்கி, மற்றவர்களுக்குத் தொந்தரவாயிருந்து வந்தான். ஒரு ஞாயிற்றுக்கிழமை பிரசங்கத்தில் அம் மனிதன் வழக்கம்போல் தூங்குகிறதை அப்பாதிரியார் கண்டு, ஜனங்களை நோக்கி "மோட்சத்துக்குப் போகமனதுடையவர்கள் எல்லாரும் எழுந்து நில்லுங்கள்" என்று தூங்குகிறவனை எழுப்பக்கூடாத அவ்வளவு மெதுவான குரலுடன் சொல்லவே, தூங்குகிறவனைத் தவிர மற்றெல்லோரும் எழுந்து நின்றார்கள். அவர்கள் எல்லோரும் உட்கார்ந்த பிறகு, பாதிரியார் "நரகத்துக்குப் போகமனதுடையவர்கள்" (என்னும் இந்த வார்த்தைகளை மெதுவாகச்சொல்லி) "எழுந்து நில்லுங்கள்" என்று உரக்கச் சொல்லவே, தூங்கிக்கொண்டிருந்தவன் திடுக்கிட்டு விழித்தெழுந்து நின்று ஜனங்களைச் சுற்றுமுற்றும் பார்த்த பின், "ஐயா நம்மிருவரைத் தவிர வேறு யாருமில்லை" என்று சொன்னானாம்.

**திவ்விய பூசையின் மகத்துவம்.**—13-ம் நூற்றாண்டில் பிரான்சு தேசத்தை யாண்ட அர்ச். ஞானப்பிரகாச இராசா, இங்கிலாந்து தேச அரசனாகிய 3-ம் ஹென்றி அரண்மனைக்கு விருந்தாடியாய்ப் போயிருக்கையில், ஒரு நாள், ஹென்றியை நோக்கி "நீர் பிரதிதினமும் திவ்விய பூசை காணப் பின்வாங்குகிறதில்லை. ஆனால், பிரசங்கம் கேட்பதில் உமக்கு அதிக விருப்பமில்லை போலும்" என்க, அதற்கு ஹென்றி "நமது உற்ற சிநேகிதனை முகமுகமாய்க் கண்டு அவனோடு பேசுவதற்கும், அவனைப் பற்றி மூன்றாவது பேர் மூலமாய்ச் சமாச்சாரம் அறிவதற்கும் எவ்வளவோ பேதமுண்டு. அதுபோல், திவ்விய பூசை நடக்கும்போது மெய்யான தேவனும், இரட்சகரும், நமது உயிர்த்தோழனுமாகிய நமதாண்டவரைத் தேவநற்கருணையில் முகமுகமாய்த் தரிசிக்கிறதானது பிரசங்கத்தில் அவரைப் பற்றி கேள்விப்படுகிறதைவிட எவ்வளவோ மேலானது!" என்று பதிலுரைத்தார். ஆகையால் திவ்விய பூசை காண்பது எவ்வித பத்திக் கிருத்தியத்தையும்விடச் சிறந்ததானதால் நாம் பிரதிதினமும் திவ்விய பூசை காண ஆவலுடன் கோவிலுக்குப்போக வேண்டியது.

**அர்ச். ஆஸ்முந்தப்பரும் சாத்தானும்.**—ஒருநாள் அர்ச். ஆஸ்முந்தப்பர் கோவிலுக்குப் போகையில், பசாசு மனித ரூபமெடுத்து அவருக்குத் தோன்றி "நீர் செய்கிற ஜெபதபங்களினாலும், அநுசரிக்கிற உபவாசத்தினாலும் நீர் எனக்குத் தீங்கு விளைவிப்பதில்லை. ஏனெனில், நீரோ எப்போதாவது ஒரு நாளில் உபவாசமாயிருக்கிறீர்; நானோ ஒருநாளும் சாப்பிடுகிறதில்லை. நீர் இரவில் சற்று கண்விழிக்கிறீர்; நானோ ஒருபோதும் தூங்குகிறதில்லை. நீர் கொஞ்ச நேரம் வேலைசெய்து இளைப்பாறுகிறீர்; நானோ ஓயாமல் வேலைசெய்கிறேன். எனக்கு இளைப்பாற்றி சற்றுமில்லை. ஆனால், நீர் செய்கிற ஒரு காரியமாத்திரம் என்னால் செய்யக்கூடவில்லை. அதாவது, நீர் தாழ்ச்சியை அநுசரிக்கிறீர்; நீர் உம்மை ஒருபோதும் பெருமையாக எண்ணுகிறதேயில்லை. இது விஷயத்தில் தான் நீர் எனக்குத் தீரா விசனமுண்டாக்குகிறீர்" என்று சொல்லி மறைந்ததாக அவருடைய சரித்திரத்தில் வாசிக்கிறோம். ஆங்காரத்தினால் கெட்டு நித்திய காலத்துக்கும் சபிக்கப்பட்டிருக்கிற பசாசானது தாழ்ச்சியை எப்படி யநுசரிக்கக்கூடும்?

**நப்போலியனும் ஒரு சிறுமியும்.**—நப்போலியன் தன் அந்திய நாட்களை எலினா தீவில் செலவழிக்கலாயிற்று. அங்கே ஒருநாள் ஒரு சிறுமியுடன் பேசிக்கொண்டிருக்கையில் அவளைப் பார்த்து "நீ புதுநன்மை வாங்கி எவ்வளவு நாளாயிற்று" என்று கேட்க, சிறுமி "எனக்கு மந்திரம் ஞான உபதேசம் ஒன்றுந் தெரியாது; நான் இன்னும் புது நன்மையும் வாங்கவில்லை" என்றாள். அதற்கு நப்போலியன் "மந்திரம் ஞான உபதேசம் கற்றறிந்திருப்பது மெத்த அவசியம். நீ என்னை உனக்கு உபதேசியாகத் தெரிந்துகொண்டால், உனக்கு வேத விஷயங்களையெல்லாம் கற்றுக்கொடுப்பேன்; அவை உனக்கு அநேக நன்மைகளை விளைவிக்குமல்லாமல், பல ஆபத்துக்

களிலிருந்தும் உன்னை விலக்கும்" என்றான். சிறுமியும் நப்போலியனைத் தனக்கு வேதபோதகராகத் தெரிந்துகொள்ளவே, சீக்கிரத்தில் அவள் வேதசத்தியங்களையெல்லாம் கற்றுக்கொண்டு புது நன்மைவாங்கி ஒரு புண்ணியவதியாய் ஜீவித்து மரித்ததாகத் தெரியவருகிறது. அவள் சாகுமுன் தன்னைச்சுற்றி யிருந்தவர்களை நோக்கி "நான் அறிந்திருக்கும் வேதவிஷயங்களுக்கும் என்நல்ல சீவியத்திற்கும் நப்போலியனே காரணம்" என்று சொன்னாளாம்.

**ஓர் குருட்டாட்டம்.**—பிராஞ்சு தேசத்தில் நேய் என்ற ஓர் பட்டணமுண்டு. அப்பட்டணத்துக் கோவில் மணிக்கூண்டிலிருந்த பெரியமணியானது சிறிதும் உடையாமலே இப்போது கீழேவிழுந்து கிடக்கிறதாம். இம்மணியானது முன்னிருதருணங்களில், அதாவது 1854-ம் 1856-ம் வருடங்களில், ஆங்கிலேயரும் பிராஞ்சுக்காரரும் ஒரு தரப்பிலும், மற்றொரு தரப்பில் ருஷ்யரும் சேர்ந்து செய்த கிரீமியன் யுத்தம் முடிவாக இன்னும் சரியாய் மூன்று மாதகாலமிருக்கையிலும், பிறகு 1870-ம் 1871-ம் வருஷங்களில் பிரான்கோ-பரஷிய யுத்த முடிய இன்னும் மூன்று மாதமிருக்கையிலும் யாதோர் சேதமும் படாமற் கீழேவிழுந்து கிடைந்ததாம். இப்போதும் அது விழுந்து கிடப்பதை முன்னிட்டு அப்பட்டணத்தார் நிகழும் கொடிய யுத்தம் முடிவாக இன்னும் மூன்று மாதகாலமேயிருக்கிறதென்று சாதிக்கிறார்களாம். ஆனால் இந்த யுத்தத்தின் நிலைமையைப் பார்த்தாலோ இன்னும் மூன்று மாதங்களுள் முடிவாகுமென்பதற்கு இடமில்லை.

**ஐயர்லாந்தில் கலகம்.**—இத்தேசத்தாருள் சிலர் ஜெர்மனியருடைய வஞ்சகத்துக் கிடங்கொடுத்ததின் நிமித்தமோ அல்லது வேறு காரணத்தின் நிமித்தமோ செய்துகொண்டிருந்த கலகம் தற்போது அமர்த்தப்பட்டிருக்கிறது. இவர்களுக்குள் 14-பேர் மரணதண்டனைக் குள்ளானார்கள். 73-பேர் மரணபரியந்தம் மறியற் செய்யப்பட்டார்கள் 1706-பேர் பிறதேசங்களுக்கனுப்பப்பட்டார்கள். மீதியான கலகக்காரர் மட்டில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் கிருபையாயிருக்கும்படியாய், விசேஷமாய்ச் செர் ரோஜெர் கேஸ் மெண்டைச் சிரசாக்கினை செய்யாதபடி பரிசுத்த பாப்பானவர் சிபாரிசு செய்ய வேணுமாய் வத்திக்கான் அரண்மனைக்கு விண்ணப்பப் பத்திரங்கள் பலவிடங்களிலிருந்து, முக்கியமாய் அமெரிக்காவிலிருந்து வந்துகொண்டிருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. இக்கலகத்தின் சரியான காரணத்தை விசாரணை செய்ய ஒரு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. நமக்கு இராஜப் பிரதிநிதியாயிருந்து, சமீபத்தில் இங்கிலாண்டுக்குச் சென்றலார்ட் ஹார்டிஞ்என்னும் பிரபுவே இக்கமிட்டிக்கு அக்கிராசனராய் நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

**ஒரு உத்தியோகத்துக்காக மனுசெய்தவன்.**—ரயில்வே இலாக்காவில் காலியாயிருந்த ஒரு உத்தியோகத்துக்காக ஏறக்குறைய 20 பேர் மனு செய்திருந்தார்கள். மனுக்காரர்களெல்லோரையும் பரீட்சை செய்து அவர்களுக்குள் தக்க நபரை மாத்திரம் அவ்வுத்தியோகத்துக்குத் தெரிந்துகொள்வது வழக்கமானபடியால், மனுக்காரர்களை படிப்பு முதலிய விஷயங்களில் பரீட்சை செய்தபின்னர், அவர்களுடைய கேள்வி நுட்பத்தை பரீட்சிக்கும் பொருட்டு, இன்ஸ்பெக்டர் அவர்களில் ஒருவனைத் தம்மண்டை வரவழைத்து அவன் காதில் தன் கடியாரத்தை வைத்து "இதின் சத்தம் உனக்குக் கேட்கிறதா?" என்றார்.

மனுக்காரன்.—"நன்றாய்க் கேட்கிறது, சார்."

இன்ஸ்பெக்டர்.—(கடியாரத்தைக் கொஞ்சம் எட்டிப் பிடித்து) "இப்போது சத்தம் உனக்குக் கேட்கிறதா?"

மனு.—"ஆம்"

இன்ஸ்.—(கடியாரத்தை மனுக்காரன் காதுக்கு 10 அடி தூரத்தில் வைத்து) "இன்னும் சத்தம் உனக்குக் கேட்கிறதா?"

மனுக்காரன் சற்று கவனித்து "இப்போதும் எனக்குச் சத்தம் கேட்கிறது."

இன்ஸ்.—"என்னை! உன் காதின் கூர்மை! கடியாரம் ஓடாமல் நின்று மூன்று வாரத்துக்குமேல் ஆகிறது" என்று சொல்லி நகைத்தாராம்.



**ஜெர்மன் மறியற்காரருக்கு வேலை.**—இங்கிலாந்திலுள்ள ஜெர்மன் மறியற்காரர் பலரும் அங்கே பலவிடங்களில் பொதுச்சன வேலைகளைச் செய்யும்படி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ராணுவ மறியற்காரராயிருப்பவர்கள் வேலை செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படலாம். ராணுவத்தில் சம்பந்தப்படாத சாதாரண ஜெர்மன் மறியற்காரர் தாங்கள் இருக்கும் இடங்களை ஒழுங்காய் வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். ஜெர்மன் மறியற்காரரில் பலரும் தபால் மூட்டைகளைக் கட்டும் வேலையில் அமர்த்தப்பட் டிருப்பதோடு, வேறு சிலர் விவசாயத்திலும், இன்னுஞ் சிலர் வேறு வேலைகளிலும் வேலை செய்யுமாறு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இப்படியே ஆஸ்டிரியாவிலுள்ள ருஷிய மறியற்காரரில் பல்லாயிரக் கணக்கானவர்கள் அங்கே யுத்த தளவாடச்சாலைகளில் வேலை பார்த்து வருகிறார்களென்று மேனாட்டுப் பத்திரிகையொன்றில் காணப்படுகிறது.

**மேல் ஆப்பிரிக்கா நாட்டாரின் நாணயமும், உடையும்**—இந்நாட்டார் கோழிகளை நாணயமாக வழங்கி வருகிறதாகத் தெரியவருகிறது. இப்படியே ஈச்சம் ஓலையாலும் புல்லாலுஞ் செய்யப்பட்ட பாய்களும், சோகி அல்லது பலகறையும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்விடத்தில் உப்பு கிடைப்பது அருமையானபடியால் 5 தேக்கரண்டி உப்புக்காக ஒரு கோழியைக் கிரயமாகக் கொடுப்பார்களாம். ஒரு கோழியைக் கொடுத்து நீல நிறமும் துவாரமுமுள்ள 100 கண்ணாடி மணிகளை வாங்குவார்களாம். இங்கிலாந்தில் 10,000 பவுன் பெறுமான ஒரு வைரக்கல்லை அவர்களிடத்தில் கொடுத்து ஒரு கோழிமுட்டையை முதலாய் வாங்க முடியாதாம். அதேனெனில், துவாரமில்லாத எந்தப் பொருளும் அந்நாட்டாருக்கு உபயோகப்படாதாம். துவாரமிடப்பட்டிருக்கிற பலவகையான மணிகளையெல்லாம் கோர்த்து இவர்கள் தங்கள் கழுத்திலும் இடுப்பிலும் ஆபரணமாக அணிந்துகொள்வார்கள். அவற்றின் பருமனுக்கும் வெவ்வேறான நிறத்துக்குந் தக்கபடி அவற்றின் விலைமதிக்கப்படுமாம். மண்ணாலோ, மரத்தாலோ, பஞ்சலோகத்தாலோ, வேறெதிலாலோ செய்யப்பட்ட எவ்வித மணிகளும் அத்தேசத்திற் கிரயமாகிப்போம். அவர்களுக்கு உடையில்லை, சட்டையில்லை, சராயில்லை. கோர்த்த மணிகளைத் தலையிற் சுற்றிக்கொள்வதுதான் அவர்களுக்குப் பெருமையும் கவர்ச்சியுமாம். அவர்களுக்குள் அடிமையாயிருக்கிறவன் அம்மணிகளை வேண்டியமட்டும் தன் கழுத்திலும் மார்பிலுந் தரித்துக்கொள்ளலாமேயன்றி சிரசில் தரித்துக்கொள்ளவே கூடாது. வெண்மையான ஒரு கெஜம் கலிக்கோ துணிக்கு 5-கோழியும், பரும்படியான சிவப்பு பிளானல் ஒரு கெஜத்துக்கு 10-கோழியும், மானுமிகள் தரித்துக்கொள்ளும் ஒருகெஜ நீல துணிக்கு 8-கோழியும், ஒருகெஜ ஆக்ஸ்பர்ட்டு ஷேர்ட்டு துணிக்கு 6-கோழியுங் கொடுப்பார்களாம். ஆங்கிலேயர் இத்துணிகளையும், இருப்புக் கம்பி, பித்தளைக் கம்பி, பித்தளை ஆணி முதலியவைகளையும் அந்நாட்டுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து வேண்டியமட்டும் கோழி முதலிய அத்தேசத்துப் பொருட்களைத் தங்கள் நாட்டுக்கு வாங்கிக் கொண்டுபோகிறார்களாம். இவர்கள் பொருளைக் கொடுத்து பொருளை மாற்றிக்கொள்வதினால் இவர்களுக்குள் காசு பணம் வழங்குகிறதில்லைபோலும்.

## DOMESTIC OCCURRENCES.

## குடும்ப் சுபாசுப விளம்பரங்கள்.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப. ர்.**

### நன்மரண அறிக்கை.

### வேப்பேரி.

சென்னை, வேப்பேரி சக்கன் சாலை வீதியில் வசித்தவரும் என தரும ஞான தந்தையருமாகிய 39-வது பட்டாளத்து பென்ஷனர் நாயக், S. ஆரோக்கியம் எப்ரெல் மாதம் 29ம் திகதி சனிவாரம் காலை $10\frac{1}{2}$ மணிக்கு கர்த்தருக்குள் நித்

திரை அடைந்து; மாலை 4½ மணிக்குள்ளாக கீழ்ப்பாக்கக் கல்லறையில் நமது கிறிஸ்துவர்களின் ஒழுக்கப்படி நல்லடக்கம் செய்யப்பட்டார். இதைக் கண்ணுறும் சகோதரர்கள் ஷை யாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., ஒரு பிரி., ஒரு திரி. வேண்டிக்கொள்ளும்படி பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

ஞான குமாரன்,

P. S. C. பிரான்சீஸ் பிள்ளை.

புதுப்பேட்டை.

---

மண்ணை உருவாக்கப்பட்டுத் தேவ திருவுளத்தால் மானிடராய்ப் பிறந்த எவரும் அற்பத்தில் தோன்றி மறையும் இம் மண்ணுலகின் வாழ்க்கைக்குப் பின் தத்தம் மனோ வாக்குக் காயத்தால் செய்த நல்வினை தீவினைக் கொப்ப என்று மழியாத விண்ணுலகின் பலா பலனை அனுபவித்தல் அகத்தியம். அத் தேவ கட்டளைக் கமைந்தவராய் எமது தந்தை சந்தியாகுவாஸ் அவர்களும் தமது 48வது பிராயத்தில் எம்மை விட்டுப் பரலோகப் பிராப்தியாகி இன்றோடு ஒரு வருடம் பூர்த்தியானதால் கஸ்திக்குரிய அப்பிரிவாற்றுமையை மீண்டும் எமது உறவின்முறையாருடன் அரிய நண்பர்களுக்கும் ஞாபகப்படுத்தி அவ்வாத்துமம் கர்த்தரில் சமாதானத்தோடு இளைப்பாறும் பொருட்டுத் தங்களின் அனுதின ஜெபத்தில் வேண்டிக்கொள்ள வேண்டுமாய் உங்களனைவரையும் பிரார்த்தித்துக்கொள்ளும் தந்தையையிழந்த மைந்தன்.

எம். எக்ஸ். வாஸ்

---

குன்னூர்.

நல்ல ஆயன் சந்தாதாரரும் எனது கணவருமாகிய நெட்டால் வியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ, G. ஞானப்பிரகாச ரெட்டியார் சென்ற ஏப்பிரல்மீ 11உ பகல் 12-மணிக்கு புதுச்சேரிக்கடுத்த பாகூரில் கடைசித் தேவத்திரவிய அனுமானங்களை யெல்லாஞ் சரிவரப்பெற்று பரலோக பிராப்தியாயினர். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., ஒரு பிரி., ஒரு திரி. வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளும்.

G. கித்தேரியம்மாள்,

குன்னூர், (நீலகிரி.)

# அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌன்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய். அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக்கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந் தொகை ரூ. 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ. 3992-1-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ் வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பல துளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந் தொகையாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 3,992 | 1 | 6 |
| ஓர் நன்கொடை | 75 | 0 | 0 |
| Mr. ப்வல் | 1 | 0 | 0 |
| ,, அந்தோனி, பம்பாய் | 2 | 0 | 0 |
| ,, உத்தரியதாஸ், கல்கத்தா | 1 | 0 | 0 |
| ,, K. P. W. (Madras) | 15 | 0 | 0 |
| Messrs Costa & Brothers, (Matale) | 10 | 0 | 0 |
| Mr. M. A. M. Doss, Banting | 3 | 8 | 0 |
| ,, P. X. Dairiam, Sungei Siput | 2 | 0 | 0 |
| ஆக மொத்தம், | 4,101 | 9 | 6 |



# சென்னப்பட்டணத்தில் ஒரு சத்திரம் தேவை.

சென்னப்பட்டணத்தில் இந்திய கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கென்று ஒரு சத்திரம் சாவடி கிடையாது. இந்துக்கள் மகம்மதியர் முதலானோருக்கோ எங்கு பார்த்தாலும் சத்திரமும். சாப்பாட்டு விடுதியும், டீகிளப், காபிகிளப் முதலியனவும் ஏராளமா யுண்டு. கோர்ட்டு வியாஜ்ஜிய விஷயமாயாவது, வைத்திய சிகிச்சைக்காகவாவது, வியாபார சம்பந்தமாயாவது அல்லது படிப்பு விஷயமாயாவது ஒவ்வொரு நாளும் சென்னைக்கு வருகிற கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் எத்தனையோ பேர். இப்படி வருகிற நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமில்லாமலும். தண்ணீர் குடிக்கத் தாவில்லாமலும் தயங்கித் தவிக்கின்றார்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்பது பல நாள் பிரயத்தனம். பெரிய கட்டிடமொன்று பட்டணத்து மத்தியில் கட்டவேண்டுமென்பது எல்லோருடையவும் எண்ணம். ஆனால் இந்த எண்ணத்தை நிறைவேற்ற மிகுந்த திரவியம் வேண்டும். அவ்வளவு திரவியஞ் சேகரஞ்செய்து காரிய முடிக்கவேண்டுமானால் அதிக நாளும் செல்லும். ஆனது நிமித்தம் "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்பதுபோல தற்காலம் ஜியார்ஜடவுனுக்குள் ஒரு சிறு வீடாவது வாங்கி. அதில் ஒரு விடுதி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இதற்குக் குறைந்த பட்சம் 10,000 ரூபாயாவது வேண்டும். இத்தொகை நமது பொதுஜன நலத்தை விரும்பும் கத்தோலிக்குக் கனதனவான்களிடமிருந்து தான் வரவேண்டும். இதை வசூல் செய்வதற்காக இதனடியில் குறிக்கப்பட்டுள்ள நம்பர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் முயற்சிசெய்து வருகிறார்கள். இவர்கள் தங்களுக்குள்ளேயே சிறுகச்சிறுக சென்ற சில மாதங்களாய்ச் சேகரஞ் செய்திருக்கிற ரூபாய் 500. இச் சென்னை இராஜதானி முழுவதிலும், இலங்கை. பர்மா, சிங்கப்பூர், சைகோன், மோரிஸ், நெட்டால் முதலிய பல தேசங்களிலுமுள்ள கத்தோலிக்குச் சகோதரர்களெல்லாரும் இக் கைங்கரியத்துக்கு கைகொடுத்து, தங்கள் தங்களா லான மட்டும் பொருளுதவிசெய்து காரியத்தை முடித்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தச் சத்திர தருமத்துக்காக பணம் அனுப்புபவர்கள், மதராஸ் வட ஜியார்ஜடவுன் மோட்ச ராக்கினி மாதாக்கோவில் விசாரணை குரு, சங். எல். எக்ஸ். பெர்நாந்தீஸ் சுவாமிகளுக்கு அனுப்ப வேண்டும். (*Revd. Father L. X. Fernandez, Vicar, Assumption Church, North George-town, Madras.*) பணங் கொடுப்பவர்கள் பேரும், கொடுக்குந் தொகையும் இப்பத்திரிகையிலும், "கத்தோலிக்கு நேசன்" பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

சென்னப்பட்டணம், சத்திரத்துக்காக வரவு :

| | ரூ. அ. ப. |
|---|---|
| பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் | 530—0—0 |
| Mr. D. நல்லதம்பி பிள்ளை, சப் அசிஸ்டன்டு சர்ஜன், பவானி | 5—0—0 |
| ஆக மொத்தம், | 535—0—0 |

சங். L. X. பெர்நாந்தீஸ்.
பி. ஜெகராயலு செட்டியார்.
டி. எம். சவரிமுத்துப் பிள்ளை.
டி. எம். மாணிக்கம் பிள்ளை.
டி. எஸ். ஏ. மாணிக்கம் பிள்ளை.
டி. ஏ. தோமாஸ் பிள்ளை.
எம். பி. குழந்தைசாமிப் பிள்ளை.
டி. குழந்தைசாமிப் பிள்ளை.

---

## English & Tamil Popular Vocabulary and Reader.

**இங்கிலீஷ் அன்ட் டாமில் பாப்புலர் வக்காபிலரி அன்ட் ரீடர்.** விலை குறைவு

முன் விற்ற விலை ரூபா 2-8-0. தற்காலம் 1 ஒரே ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மேற்படி புஸ்தகமானது கொஞ்சம் இங்லீஷ் படித்தவர்களும், முற்றிலும் இங்கிலீஷ் படிக்காதவர்களும், பெண்களும். சிறு பிள்ளைகளும் இங்கிலீஷ் பாஷையை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும் நோக்கமாய் எண்ணிறந்த இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரசையாகவும் ஈரசையாகவும் மூவசையாகவும் வாக்கியங்களாகவும், இங்கிலீஷ் வார்த்தைகளைத் தமிழில் திருப்பி வாக்கியங்களையும் தமிழ்ப்படுத்தி யிருக்கின்றன. (திருஷ்டாந்தரமாக) Ache என்னும் மொழியை தமிழில் எக் என்றும், Cash என்னும் பதத்தை காஷ் என்றும், அவைகளின் அர்த்தத்தையும் எக்-வலி, காஷ்-பணமென்றும், Who are you என்பதை ஹூ ஆர் யு; நீ ஆர் என்றும் இப்படி பற்பலவகையாய் சிறியவர்களுக்கும், பெரியவர்களுக்கும், கற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பிரயோசனமாகவும் A, B, C & Z வரைக்கும் படங்களுடனும் பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும் பயன் தரத்தக்க அருமையான இங்கிலீஷ் லெட்டர் ரைட்டரும் இன்னும் பல விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

**எமது விலாசம், மஹா விகடதூதன் ஆபீஸ், மதராஸ்.**

## வீரமாமுனிவர் ஔஷதசாலை.

வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை அல்லது "சர்வரோக நிவாரண சஞ்சீவி" யானது பற்பல வியாதிகளைப் பற்றறப்போக்கும் மருந்து. எழைகளுக்கு எற்ற மருந்து. ஆயிரம் ஆயிரம் ஜனங்களுக்கு ஆரோக்கியத்தை அளித்த, அளித்துக்கொண்டு வருகிற அரிய ஔஷதம். இது உண்மை. வேண்டியவர்கள் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம். இந்தியாவில் மாத்திரமல்ல, பர்மா, சிலோன், சிங்கப்பூர், செட்டால் முதலிய தூரதேசங்களிலெல்லாம் பேர்போனது. சுகமடைந்தபோர் களிடமிருந்து வரும் நற்சாட்சி பத்திரங்கள் அனந்தம். சமீபத்தில் நமக்கு வந்த கடிதங்களில் சில வற்றின் சங்க்ஷேபம் பின் வருமாறு:—

**மாண்டலே, அர்ச். சவேரியார் பள்ளிக்கூடம், மிஸ்டர் பவுல் வாத்தியாயர் 14-1-16** இங்கிலீஷில் எழுதியதின் மொழி பெயர்ப்பு:—"ஐயா உமது மாத்திரை ஆச்சரியத்துக்குரிய வேலை செய்தது. எனது சகோதரி இரத்த மின்மையினால் முகம் வெளுத்து, நெடுநாள் நோயுற்றிருந் தாள். விலை உயர்ந்த ஐரோப்பிய ஔஷதங்களில் பலவற்றை உபயோகித்தும் பலனில்லாமற் போயிற்று. கடைசியில் உமது "வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை" அவளிடத்தில் முழு மாற்றத்தை உண்டாக்கிப் போட்டது. நீர் அதனிடத்தில் இருப்பதாகச் சொல்லுகிற எல்லா குணங் களையும் அது (உண்மையாகவே) உடைத்தா யிருக்கிறது. அது விசேஷமாய் ஸ்திரீகளுக்குள்ள வியாதிகளுக்கு விலை மதிக்கப்படாத மருந்து. விஷ ஜுரங்களுக்கும் வெகு சிரேஷ்டமானது"

**காரைக்கால், டாக்டர் ஆர். கோபாலசாமி செட்டியார் 24-1-16ல்:**—"ஐயா, தங்களு டைய மாத்திரையானது கூடியமட்டும் எல்லா வியாதிகளையும், விசேஷமாய், வயிற்று போக்கு, சோகை, பாண்டு, மூலம் முதலியவைகளைக் கண்டிக்கிறது. இவைகளுக்கு நான் உறுதியாய்ச் சொல்வேன்.

| | | |
|---|---|---|
| விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூ. | | 1—0—0 |
| தபாற்செலவு, வி. பி. சார்ச்சு உட்பட | ... ,, | 1—3—0 |

வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

C. A. Silveira,
Branch Office,
2/74, Broadway, Madras.

சி. எ. சில்வேயிரா,
பிரான்சு ஆபீசு,
2/74, பிராட்வே, மதுராஸ்.

---

## சொற்ப காப்பிகளே கைவசமிருக்கின்றன.

இதுவரையிலும் வெளிவந்திராத ஓர்
அபூர்வ இனிய தமிழ் நாவல். துன்பத்தின்மேல் துன்பம்.
அல்லது

416 பக்கம். **தமன்யரூபி.** 416 பக்கம்.

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் படத்துடன் பதிபிக்கப்பெற்றது.

இஃது தூத்துக்குடி வித்வான் M. A. பீரீஸ் அவர்களால் இயற்றப்பெற்றது. ஷை யூர் முனிசிப்பல் செயர்மன் மகா-ா-ா-ஸ்ரீ N. S. நாராயணசுவாமி ஐயர் B.A., B.L. அவர்களுடைய நான்முகத்துடன் கூடியது.

விலை ரூபா 1 4 0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

**பத்திராதிபர்கள் முதலியோரின் அபிப்பிராயங்கள்.**

**'சுதேசமித்திரன்' 1-3-1916:**—தமன்யரூபி என்னும் இயற்பெயரினையுடைய ஒரு நாவல் இன்று எமதிடத்து வரப்பெற்றனம். இஃது தற்கால நாகரீகமென்னும் மயக்கத்தால் கட்டுண்டு நடக்கும் மாதர்களுக்குச் சிறந்த பாடமாகும். இதில் மரகதவல்லி என்பாள் ஒருவள் நவீன நாகரீ கத்தையொட்டி, மூதாதைகளால் அநுஷ்டித்துவந்த எற்பாடுகளை வரம்புகடந்து, கொலை, களவு, காமம் முதலிய பஞ்சமா பாதகங்களுக்கு ஆளாகி சாந்தமும், தயையும், சத்தியமும், கற்பும், துன்பம் வருமிடத்தே கிஞ்சித்தேனுஞ் சலியாத சமத்துவ புத்தியுங் கொண்டிருந்த கதாநாயகியைப் பல காலும் வஞ்சித்துத் தன்னையும் தன் பொருட்டு உதவினவர்களையும் மாளவைத்துக் காலாங்கிப் போன்றிருந்தாள். இதில் தமன்யரூபியின் பொலிவுற்ற நடக்கையும் மரகதவல்லியின் மெலிவுற்ற நடக்கையும் கவனித்தற்பாலது. ஆகவே இந்நாவல் முக்கியமாக பெண்பாலர்களுக்குரிய தெனி னும் புருடர்களும், ஸ்திரீகளின் சாகஸத்தினால் எமாறுதிருக்குமாறு நல்ல இனிய நடையில் உலக வழக்கத்தையொட்டி வெகு நயமுடன் எழுதின M. A. பீரீஸ் அவர்களுக்கு வந்தனம்.

7 JUL 1916


# The Good Pastor

# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகேளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.

புத்தகம் 14. | ஜூலை, 1916. | இலக்கம் 7


## OUR LADY OF MOUNT CARMEL.

### உத்தரியமாதா திருநாள்.

பலஸ்தீனா தேசத்தின் மேற்பாகத்தில் மத்திய தரைக் கடல் ஓரமாய்க் கர்மேல் என்னும் பெயர்கொண்ட மலை ஒன்றுண்டு. இம்மலையும் அதின் சுற்றுப் பக்கங்களும் சுபாவத்தி லேயே மிகச் செழிப்பானவை என்று பழைய ஏற்பாட்டின் பற்பல இடங்களில் வாசிக்கிறோம். முற்காலத்தில் தேவமாதா வுக் கடையாளமாயிருந்த அற்புதமான ஒரு மேகத்தை இம்மலையிலேயே எலியாஸ் என்னும் தீர்க்கதரிசி கண்டார். எலியாஸ் தீர்க்கத்தரிசியும் அவருடைய பிரிய சீஷராகிய எலிசேயுஸ் என்பவரும் இம் மலையிலேயே தபசுபுரிவதில் தங்கள் சீவிய காலத்தைக் கழித்தார்கள். அவர்களுக்குப் பின் பத்தியுள்ள அநேக புண்ணியவான் கள் இம்மலையிலேயே ஒரு சபையாய்க் கூடிச் செபதபம் செய்துகொண்டு சந்நியாசிகளாய் இருந்தார்கள். அச்சபையா னது நமது ஆண்டவராகிய சேசுக்கிறிஸ் துநாதர் காலம் வரையில் நீடித்திருந்ததென் றும், அர்ச். ஸ்நாபக அருளப்பர் முந்திய பெரிய அர்ச்சியசிஷ்டவர்கள் அம்மலைக்குப்போய் அங்குள்ள தபோதனர்க ளோடு பேசிப் புழங்கி வந்தார்களென்றும் பாரம்பரையாய்ச் சொல்லப்படுகிறது. அப் பாரம்பரைப் பிரகாரம் ஷை சந்நியாசிமார் களும், அர்ச். ஸ்நாபக அருளப்பருடைய போதனையைக் கேட்ட பலரும் தீர்க்க தரிசனங்களையெல்லாம் நிறைவேற்றினவர் சேசுநாதர் ஒருவரே; ஆதலால் அவரே உலக இரக்ஷகர் என்று உணர்ந்து ஞான ஸ்நானம் பெற்றார்கள். அதற்குப்பின் அவர்கள் அர்ச். தேவமாதாவை அடிக்கடி சந்தித்து அத்தேவதாயாரின் திருவாயி னின்று அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டதுமன்றி, அத்திவ்விய கன்னிகையை விசேஷவிதமாய் அநுசரிக்கவும் கொண் டாடவும் தலைப்பட்டார்கள். அர்ச். தேவமாதா மோக்ஷத்துக்கு ஆரோகணமான பின் தாங்கள் அத்தேவதாயாரின்பேரில் கொண்டிருக்கும் சிநேகத்தையும் பத்தி யையும் காட்டுவதற்காகக் கர்மேல் மலையின் உச்சியில் அர்ச். தேவமாதாவின்பே ரால் ஒரு செபக்கூடத்தைக் கட்டினது மல்லாமல் அத்தேவதாயாருக்குத் தோத்

திரமாகக் கர்மேல் சபையென்னும் பெயரையுடைய ஒரு சபையையும் ஏற்படுத்தினார்கள். அச்சபையானது ஆயிர வருஷக் காலமாய் யாதொரு இக்கட்டுமின்றித் தழைத்தோங்கிச் செழித்து அநேகாயிரம் பேர்களுடைய புண்ணிய சாங்கோபாங்கத்துக்குக் காரணமாயிருந்தது. பதினோராம் நூற்றாண்டில் மகம்மதியர் பலஸ்தீனா தேசத்தைப் பிடித்து கிறீஸ்துவர்களை உபத்திரவப்படுத்தின காலத்தில் கர்மேல் சபையார்களிலநேகர் சத்துராதிகளுடைய கையிலகப்பட்டு வேதசாக்ஷிகளானார்கள். அக்கொடூர உபத்திரவத்தினின்று தப்பிப் பிழைத்தவர்கள் ஐரோப்பாவின் பற்பல தேசங்களில் நாடோடிகளா யலைந்து திரிந்தார்கள். கர்மேல் சபையும் நசிந்துபோனதுபோலிருந்தது.

இதிப்படி யிருக்குங்காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் 1164-ம் வருஷத்திற் பிறந்து தனக்குப் பன்னிரண்டாவது பிராயம் நடக்கும்போது காட்டிற் புகுந்து, மலைக் குகைகளிலும் மரப் பொந்துகளிலும் வசித்து, காய் கனிகளையும் காட்டுக் கிழங்குகளையும் புசித்து அநேக வருஷ காலமாய்க் கடின தபசு புரிந்துவந்த சிமோன் ஸ்டோக்கென்னும் நாமதேயம் பூண்ட ஒரு பெரிய அர்ச்சியசிஷ்டவர் இருந்தார். அவர் அநேக சமயங்களில் கர்மேல் சபையார்களிற் சிலரைக் கண்டுபேசி அவர்கள் தேவமாதாபேரில் கொண்டிருந்த விசேஷப் பக்தியைப்பற்றி யதிக சந்தோஷப்பட்டுத் தாமும் அவர்களில் ஒருவராகவேண்டுமென்று ஆசித்து அச்சபையிலுட்பட்டார். சில வருஷங்களுக்குப் பின் அவரையே அச்சபைக்குத் தலைவராக ஏற்படுத்தினார்கள். அப்பொழுது கர்மேல் சபையார் வெகு சொற்பப் பெயராயிருந்ததைப்பற்றி சிமோன் ஸ்டோக்கென்பவர் மிகவும் மனநொந்து, விசனப்பட்டு அடிக்கடி தேவதாயாரை நோக்கி: "திவ்விய தாயே, உம்மைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுவதற்காகவும், உம்முடைய மகிமையை உலகமெங்கும் பரவச் செய்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட இச்சபையை நீர் கைவிடலாகாது" என்று வெகு உருக்கத்துடனும் பக்தியுடனும் வேண்டிக்கொண்டு வந்தார். இப்படி இவர் வெகு காலம் செய்துகொண்டு வர, ஒரு நாள் தேவமாதா அவருக்குத் தரிசனையாகிச் சொன்னதாவது. "மகனே கர்மேல் சபையார்மீது நாம் கொண்டிருக்கும் சிநேகத்துக்கும், அவர்களுக்கு என்னால் கிடைக்கும் வரப்பிரசாதங்களுக்கும் அடையாளமாக இந்த வஸ்திரத்தைப்பெற்றுக்கொள். அதைத் தரித்துக்கொண்டு இறந்து போகிறவன் எவனோ, அவன் நித்திய நரகத்துக்குத் தப்பித்துக்கொள்வான். இது இரக்ஷணியத்தின் அடையாளம். இது சகல இக்கட்டுகளிலும் ஆதரவாயிருக்கும். இது நல்ல சமாதானத்திற்கும் என் விசேஷ அடைக்கலத்திற்கும் அடையாளம்" என்று சொல்லி அதை அவருடைய கையிற் கொடுத்து மறைந்தாள். அந்நாள் முதற்கொண்டு கர்மேல் சபையார் அவ் வஸ்திரத்தைத் தரித்து அதின் வழியாய் ஆத்துமத்திற்கும் சரீரத்திற்கும் எண்ணிறந்த உதவி ஒத்தாசைகளைத் தேவதாயின் மூலமாய் அடைந்திருக்கிறார்கள். அதுமுதல் சீமோன் ஸ்டோக் கென்பவரும் உத்தரியத்தைப்பற்றி எங்கும் போதிக்க ஆரம்பிக்கவே, இராசாக்களும் பிரபுக்களும் கணக்கற்ற சனங்களும் அதைப் பெற்றுவர நாள் வட்டத்தில் உத்தரிய சபை எங்கும் பரம்பி அதனால் அச் சபையிலுட்பட்டவர்கள் அநேக நன்மைகளையும் தேவமாதாவின் விசேஷ உதவியையும் அடைந்துவந்தார்கள். இதுநடந்த கொஞ்சக் காலத்துக்குப்பின் தேவமாதா இருபத்திரண்டாம் அருளப்பர் என்னும் பாப்பானவருக்குத் தரிசனையாகிச் சொன்னதாவது: "உத்தரிய சபையார் மரண மடைகிற நாளுக்குப் பின்வரும் சனிக்கிழமை யன்று அவர்களுடைய தாயாகிய நாம் உத்தரிக்கிற ஸ்தலத்தி லிறங்கி அவர்களை யவ்விடத்து வேதனையினின்று மீட்டிரக்ஷித்து நித்திய சீவியத்துக்குக் கூட்டிக்கொண்டு போவோம்" என்று வாக்களித்தாள். ஆதலால் உத்தரியச் சபையி லுட்பட்டிருக்கிறவர்களுக்கு இரண்டு விசேஷப் பலன்களிருக்கின்றன. முதலாவது: நித்திய நரகத்துக்குத் தப்பித்துக்கொள்ளல்; இரண்டாவது, மரணமடைந்த நாளுக்குப்பின் வரும் சனிக்கிழமை யன்று உத்தரிக்கிற ஸ்தலத்தின் வேதனையினின்று தப்பித்துக்கொள்ளல். முதற்பலனை யடைவதற்காக கர்மேல் சபை ஒழுங்குப் பிரகாரம் அதிகாரம் பெற்ற சுவாமியாரால் மந்திரித்த உத்தரியத்தைப் பெற்று அதற்காகக் குறிக்கப்பட்டிருக்கும் டாப்புப் புஸ்தகத்தில் பெயரை எழுதி வைக்கிறது மல்லாமல், எப்போதும் விசேஷமாய் மரணத் தறுவாயில் அவ்வுத்தரியத்தை அணிந்திருக்கவேண்டியது. 10-ம் பத்திநாதர் என்னும் பாப்பானவர் செய்த ஏற்பாட்டுப் பிரகாரம், உத்தரியத்தை மேற்சொன்னபடி பெற்ற பிற்பாடு அதற்குப் பதிலாய் உத்தரிய சுரூபத்தைத் தரித்துக்கொள்ளலாம். இரண்டாவது பலனை யடைவதற்காகப் பின் வரும் புண்ணியங்களையும் அநுசரிக்கவேண்டியது. அதின் முதலாவது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்காப்போல் கற்பென்கிற புண்ணியத்தை அநுசரித்தல். இரண்டாவது திருச்சபை கட்டளையிட்டிருக்கிற சுத்த போசன நாட்களை அநுசரிக்கிறதோடு ஒவ்வொரு புதன் சனிக்கிழமைகளிலும் சுத்தபோசனம் அநுசரித்தல். யாதொரு விக்கினத்தினால் அப்படிச் செய்ய முடியாவிட்டால் ஆத்தும குருவின் உத்தரவின்பேரில் வேறொரு புண்ணியத்தைச் சுத்த போசனத்துக்குப் பதிலாய் அநுசரிக்கலாம்.



இவ்விதமாய்த் தேவமாதா கர்மேல் சபையார்களுக்குச் செய்த சகல நன்மை உதவிகளுக்கும் நன்றியறிதலாக அச்சபையார் வருஷத்தில் ஒரு நாளை கர்மேல் மாதாத் திருநாளாகக் கொண்டாடி வந்தார்கள். அத்திருநாள் நாள் வட்டத்தில் அர்ச். பாப்புமார்கள் அநுமதியின்பேரில் உலகம் எங்கும் பரம்பி இப்போது ஜூலை மாதம் 16-ம் தேதி உத்தரியமாதாத் திருநாளாக எங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இத் திருநாளில் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்கி கர்மேல் சபையாருடைய கோவிலைச் சந்தித்து அர்ச். பாப்பானவருடைய கருத்துக்காக வேண்டிக்கொள்ளும் ஒவ்வொரு விசைக்கும் 13-ம் சிங்கராயர் என்னும் பாப்பானவர் ஒரு பரிபூரணப் பலனை அளித்திருக்கிறார். இதல்லாமல் அநேக சமயங்களில் அநேக பாப்புமார்கள் உத்தரிய சபையாருக்குப் பற்பல விசேஷப் பலன்களையும் கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆதலால் இத் திருநாளில் திருச்சபைக்கருத்தின் பிரகாரம் உத்தரிய மாதாவின் மூலமாய் நாமடைந்துள்ள சகல நன்மை உதவி ஒத்தாசைகளுக்கு நன்றிசெலுத்த நம்முடைய சகல பாவங்களுக்கும் மெய்யான மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து தகுந்த ஆயத்தத்துடன் நன்மைவாங்கி திருநாளின் பலன்களையும் விசேஷமாய் உத்தரியத்தின் பலன்களையும் அடையப் பிரயாசைப்படுவோமாக.

## WASTE OF TIME.

## காலத்தை வீணிற் கழித்தல்.

காலத்தைச் சரியாய்ச் செலவிடுவதற்கு யாதாமொரு பயனைப் பயக்கக்கூடிய தொழிலைச் செய்வதுமட்டும் போதாதென்பது சிலருடைய கொள்கையென மேற்கூறியவற்று லறியலாம். அன்னாருக்குக் காலம் ஒரு முடிவுக்குரிய வழியே; அன்னாருக்கு இம்முடிவு இரண்டு வகைப்படும். முக்கிய முடிவும் அவ்வளவு விசேஷமில்லாத சிறிய முடிவுமாம். முக்கிய முடிவையடையச் செலவழிக்கப்படும் காலமே மிக்கச் சரியான வழியிற் பிரயோகிக்கப்பட்டதாம். ஒருவன் இயல்பாகவே சங்கீதஞானமுடையவனா யிருக்கக்கூடும்; அதை யவனறிந்து, தன் முழுமனதையு மச்சங்கீதத்தில் செலுத்தலாம். ஆனால் அவனுக்குக் கஷ்டகாலம் வர, தன் சீவனத்துக்கு வேண்டியதை வேறு வழியிற் சம்பாதிக்க நேரிடலாம். அத்தகைய மனிதன் தன் வயிற்றுப் பிழைப்பை முன்னிட்டு வேறு தொழிலைக் கைக்கொள்ளச் சம்மதிக்கிறான். அப்படிச் செய்வதே சரியென அவனறிகிறான். ஆயினும் சங்கீதவிஷயத்தில் செலவிடாத ஒவ்வொரு நிமிஷமும், வீணிற்கழித்த காலமென்றே அவனினைப்பது சகஜமே. அப்படியே ஒவ்வொரு முக்கிய தொழிலிலும். ஆதலால், தன் மனதிற் குகந்ததும் முக்கியமானதெனத் தன் புத்திக்குப் பட்டதுமான தொழிலொன்றே, ஒருவன் அடைய விரும்பு முக்கிய முடிவு. அதை

யடைய செலவழிக்கும் நேரமெல்லாம் நல்வழியிற் பிரயோகிப்பட்ட காலம்; மற்றதனைத்தும் வீண்காலமே.

ஆனால் எப்போதும் வேலை செய்துகொண்டே யிருக்கவேண்டுமென்று இதனால் நினைக்கலாகாது. சங்கீதகியானி எப்போதும் பாடிக்கொண்டோ அல்லது வாத்தியங்கள் வாசித்துக்கொண்டோ இருக்கவேண்டியதில்லை. மற்றவர்களுடன் பேசிக்கொண்டல்லது அவர்கள் சொல்வதையோ பாடுவதையோ கேட்டுக்கொண்டு வேடிக்கையாகக் கழிக்குங்காலம் அவனுக்குண்டு; சிலவேளை அவன் ஒன்றுமே செய்யாமல் சோம்பலாய் விழித்தவண்ணம் கனவு கண்டுகமிழும் வேளையு மவனுக்குண்டு; சில சமயம் கடைசியிற் கூறியுள்ள காலமே தான் பயன்பட செலவிட்ட காலமென அவன் நினைக்கலாம்.

ஒரு நூலாசிரியனு மிப்படியே; தானெழுதும் நூலிலாழ்ந்த கருத்துக்களும் சொற்சுவை பொருட்சுவையு மலிந்திருக்க வேண்டுமாயின், அவன் கையும் பேனாவும் எப்போது மசைந்த வண்ண மிருக்கவேண்டியதில்லை. தன் வேலையைச்செய்ய மூளைக்கு நேரம் வேண்டாமா? மேலும் கையும் பேனாவும் ஒருபக்கம் மூளை யொருபக்கம் தத்தம் வேலையைச் செய்து முறையே களையாற வேண்டிய தவசியமல்லவா?

ஆதலால் காலத்தை நல்வழியி லுபயோகித்தலென்பதற்கு அளவற்ற வேலைசெய்தல் என்பதல்ல பொருளென்று நாம் பார்த்தோம். மிக்கச் சுறுசுறுப்புள்ள மனிதரையும் ஆத்மகாரியத்தில் மிக்கச் சுறுசுறுப்புள்ளவர்களையும் பார்த்திருக்கிறோம். ஆத்மகாரியங்களான அநேக காரியங்களையும் ஜனங்கள் செய்வதைப் பார்த்திருக்கிறோம். அக்காரியங்கள் வீண்கால போக்கென்றும், அவற்றால் தமக்கேனும், பிறருக்கேனும், ஒருக்கால் கடவுளுக்கேனும் எவ்வித பயனும் விளைவிக்க முடியாதென்று நினைத்து, அன்னோர் அவசியமான காரியத்தில் தங் கவனத்தைச் செலுத்தினால் நன்மை யடைவாரென்று அன்னோர் விஷயத்தி லடிக்கடி யபிப்பிராயப்பட்டிருக்கிறோம்.

அப்படியானால் அவசியமான காரியம் என்பதுதான் என்ன? காலத்தை நல்வழியில் செலவழிப்பதைப் பெற் றுதவக்கூடிய அந்த ஒரு காரியம் என்ன? அதுதான் கடமை; ஆனால் ஒருவன் எப்போதும் தன் கடமையையே செய்துகொண்டிருக்க முடியாது. மேலும் ஒருவன் செய்யவேண்டியவற்றுடன் செய்வது அவசியமில்லாதனவும் உண்டு. இதற்குமாறாய் ஒன்றுமே செய்வதற்கில்லாமல் கணக்கற்ற நேரத்தையுடைய அநேகர் இருக்கிறார்கள். இந்தக் கேள்வி இத்தகைய மானிடர்க்குத்தான் மிக்க அவசியமானது. "இவ்வுலகில் நான் செய்யக் கிடப்ப தொன்றுமில்லை. நான் காலத்தை வீணாக்காமல் என்ன செய்யக்கூடும்" என்று அன்னோர் சொல்லுவர்.

இவர்களுக்கும், மற்றெல்லாருக்கும் ஒரு பதில் உண்டு. நமக்கு நேரம் எதற்காகக் கொடுக்கப்பட்டது, யார் கொடுத்தது, என்? கொடுக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன் நாம் அந்நேரத்தை எவ்வாறு கழித்திருக்கலாமென்று ஆசிப்போம்? அது முடிந்ததும் அதைப்பற்றி யோசிக்கும்போது அக்காலத்தின் எப் பகுதியை முக்கியமானதாக நாம் கருதுவோம்? சர்வேஸ்பரனை அறிந்து நேசித்து சேவிக்க நாம் உண்டாக்கப்பட்டோமென்றும், இந்த வழியில் செலவழிக்கப்பட்ட நேரமே சரியாய்ப்போக்கியநேரமென்றும், ஒவ்வொரு கிறிஸ்துவனும் அறிந்த இச் சத்தியத்தை நான் வீணாய் இங்கு கூறவரவில்லை. ஜீவியத்தை அஃதிருப்பதுபோலவே பார்த்து. தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் இச்சத்தியத்தைப் பிரயோகித்துப் பார்ப்போம். அப்படிப் பார்க்குங்கால் இச்சத்தியம் பாவமுடையதாய்த் தோன்றும். ஜீவியத்தில் எத்தனை மாறுபாடுகள் உண்டோ அவற்றிற்குத் தகுந்த ரூபமும், வர்ணமும் இச்சத்திய மியற்கும். இவ்வுலகில் நான் கழிக்கவேண்டிய ஜீவியம் ஒன்று உண்டு; நான் அடையயேண்டிய பதவி யொன்றுண்டு. என்னுடைய பிறப்பினால் நான் ஒரு ஜீவியத்தைத் தொடங்குகிறேன், மீதியை என் ஜீவிய வரலாற்றின் அறு விஷயங்கள் செய்து முடிக்கின்றன. ஆனால் இந்த அறு விஷயங்களுடன் எனக்குள்ள ஆசையும், விருப்பும் இருக்கின்றனவென்பதை மறக்கலாகாது. இந்த ஆசையும், விருப்பும் தான் நாம் கவனிக்கும் இவ்விஷயத்திற்கு ஆதாரமானவை.

ஆசை யதிகமாயுள்ள ஜனங்கள் எல்லோரும் கெட்டவர்களென்று மதிப்பது பெருந் தவறு. ஆசை ஒரு புண்ணியமாகவும் அல்லது பாவமாகவு மிருக்கலாம். ஆசை யில்லாவிட்டால் இவ்வுலகில் பெருங் காரியங்களை சாதிக்க முடி



யாது. செய்யவேண்டிய காரியத்தில் செலுத்தும் ஆசை நல்லதென்று பொதுவாகச் சொல்லலாம். தான் ஜெயித்தாலும் தோற்றாலும் ஜெயிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு அதற்கு தன் சக்தி யுக்தி யெல்லாம் பிரயோகித்து கஷ்டப்படும் ஒரு தளக்கர்த்தன் மேற்கூறிய நல்ல ஆசையால் தூண்டப்பட்டிருக்கிறான் என்று சொல்லவேண்டும். ஆனால் இந்த ஆசை சுய நலத்துடன் கலந்த க்ஷணமே கெட்டதாய் மாறிப்போய் விடுகிறது; தானே ஜெயமடையவேண்டும், மற்றவர்களடையலாகாது, ஆதலால் கீர்த்திப் பிரதாபமுற்றுந் தனக்கே வரவேண்டுமென்னும் தீர்மானத்துடன் உழைக்கும் தளக்கர்த்தனுடைய ஆசை கெட்ட ஆசையே. முதலவன் ஜெயமடைகிறான், அதனால் தன் காலத்தை நல்ல வழியில் செலவழித்தவனாகிறான்; இரண்டாமவனோ ஜெயமடைந்த போதிலும் சுய நலத்தைக் கோரினவனானமையால் மற்றவர்களால் காலாகாலத்திற்கும் அவமதிக்கப்படுகிறான்.

நம்முடைய ஆசை விருப்பங்களை யோசிக்கும்போது அவற்றிற்குப் பின்னால் என்ன இருப்பதென்று யோஜிப்பதவசியம். நமக்கு செய்ய மனமில்லாததும், நம்முடைய ஆசைக்கு ஒவ்வாததுமான வேலை பலகாரணங்களால் நமக்குக் கிடைக்கிறது; ஆதலால் அவ்வேலையை நாம் வீண்காலப் போக்கென்கிறோம். நாமேன் அப்படி கூறவேண்டும்? பலதடவைகளில் அது நமக்கு ஒன்றையுங் கொணராமல், நம்மனதையுந் திருப்திசெய்யாம லிருப்பதினாலல்லவா? அப்படியானால் அதை வீண்காலப் போக்கென்பதற்குமுன் மீண்டும் யோசிப்பது கடமை. அல்லது பலகாரணங்களால், நாம் செய்வதற்கொன்றும் நமக்குக் கிடைக்கவில்லையென்று வைத்துக்கொள்வோம். அப்பவும் அமைதியின்றி யிருக்கிறோம், என்? இப்படி யிருப்பது நம்முடைய தப்பிதத்தாலல்லவே. இத்தகைய நிலைமையை நாமே வருவித்துக் கொண்டதல்லவே. ஆதலால் இதை வீண்காலப் போக்கென்று சொல்லக் கூடாது. ஒன்றுமே செய்யாமல் நாளெல்லாம் சோம்பலாய் யுத்தமுனையில் தன் குழியரங்கத்தில் காத்துக்கொண்டிருந்த போர்வீரனும், நாளெல்லாம் ஓயாமல் போர்புரிந்து கொண்டிருந்தவனும் தத்தம் நேரத்தை நல்வழியில் செலவிட்டதாகவே சொல்லவேண்டும். இவ்வுலகில் வெளிப்படையாய்ச் செய்யவேண்டிய வேலைகளைவிட அந்தரங்கமாய்ச் செய்யவேண்டிய வேலைகள் அதிகமிருக்கின்றன.

நமது வினாவிற்கு இதுவே விடையென்று சொல்லலாம். நல்வழியில் செலவழிக்கப்பட்ட நேரம் எப்போதும் சுறுசுறுப்புடன் வேலைசெய்வதில் போக்கிய நேரமல்ல; அது ஒன்றுமே செய்யாமல் செலவழிக்கப்பட் டிருக்கலாம். நல்வழியில் போக்கிய நேரம் எப்போதும் அரியபெரிய விஷயங்களை உண்டுபண்ணுவதில் செலவழிக்கப்பட்ட நேரமாயிருக்க வேண்டியதில்லை; அவ் வரும்பெரும் விஷயங்களே வீண்காலப்போக்கென காட்டினும் காட்டலாம். ஆனால் பின்வரும் மூன்று விஷயங்களால் காலத்தைநல்வழியில்செலவழித்ததாகச் சொல்லலாம். முதலாவது நம்மைச் சுற்றிலும் உள்ளவற்றிற்குத் தக்கவாறு அமைந்து நடத்தல். இரண்டாவது, கூடியவரையில் சுயநலத்தைக் கருதாமல் காலத்தைக் கழித்தல். மூன்றாவது, நாம் செய்யும் வேலை நமக்குப் பிரியமோ, இல்லையோ, நன்மைப் பயக்குமோ, பயக்காதோ என்பதைக் கவனியாமல் அதை நமக்கு அருளிய தேவனின் திருச்சித்தத்திற்கு அமைந்திருக்கிறதா என்று கவனித்துச் செய்தல். இத்தகைய ஜீவியம் வீண்காலப் போக்காகத் தோன்றலாம். ஒரு விசேஷவேலை செய்வோன் தன் னேரம், தன்னைவிட்டு மெதுவாய்க் கழிவதையும் அதனால் தனக்கொன்றும் வாராததையும் உணரலாம். மற்றவர்கள் பார்த்து உபகரணங்களைச் சரியாய் பிரயோகிக்க வில்லையென்று குறை கூறலாம். ஆனால் நஜரேயர், தமக்குள் தன்காலத்தை வீணிற்போக்கிய மனுமகனைப்பற்றி அப்படியே பேசினார்கள். அவருடைய ஜீவியம் இவ்வுலகிற் போக்கிய எல்லா ஜீவியங்களிலும் மிக்க விலை மதிக்கப்படாததா யிருந்திருப்பதுபோல் அதே வழியில் போக்கிய "சோம்பலான" ஜீவியங்களில் அநேகம் தேவனுக்கும் மனிதனுக்கும் மிக்க விலை யுயர்ந்ததும், நன்மை பயப்பதுமாய் இருந்திருக்கின்றன.

*S. Selva Raju.*

---

கத்தோலிக் பத்திரிகை யில்லாத வீடு கடவுள் சம்பந்தமில்லாத பள்ளிக்கூடத்துக்குச் சரியென்று கிறீஸ்தி அநிமேற்றிராணியார் சொல்லுகிறார்.

உலக முழுமையும் சீர்திருத்த எனக்கொரு வழி தெரியும். அதாவது, ஒவ்வொருவனும் தன்னைத் தானே சீர் திருத்திக்கொள்ளட்டும்.

(பத்தாம் பத்திநாதர்.)

# EXPLANATION OF THE GOSPEL OF St. LUKE.

# அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

## 1.—அதிகாரம்; வசனங்கள் (11—14.)

சக்கரியாசுக்கு பரலோக தூதன் மெஸ்லியாஸ் நெருங்கிவருகிற காலத்தை அறிக்கையிடுகிறார். தனியேல் தீர்க்கதரிசிக்கு மெஸ்லியாவின் காலத்தை வெளிப்படுத்தின தேவதூதனாகிய கபிரியேல் சம்மனசானவரே சக்கரியாஸுக்குந் தரிசனையாகிறார். 11-வசனம் "அப்போது ஆண்டவருடைய தூதன் தூபப்பீடத்தின் வலது புறத்தில் நிற்கிறவராய் அவருக்குத் தரிசனையானார்". அதாவது: தேவதூதன் மானிடரூபமாய்த் திடும் பிரவேசமாய் சக்கரியாஸுக்குத் தம்மைக் காண்பித்தார். சக்கரியாவின் கண்களுக்குப் புலப்பட்டார்,

சம்மனசானவர் தேவாலயத்தில், அதுவும் பீடத்தினருகே வலது புறத்தில் தரிசனமானது ஆழ்ந்த அர்த்தங்களை வெளிபடுத்துகிறது. தேவாலயத்தில் காணப்பட்டது வரபோகிற உத்தம குருவாகிய மெஸ்லியாவையும், பீடத்தினருகே தரிசனமானது, அவரால் ஏற்படுத்தப்படும் உண்மையான தேவபலி பூசையையும், வலதுபுறத்தில் நின்றது பரலோக கொடையின் சந்தோஷத்தையும் சுட்டிக் காண்பிக்கிறது என்று அர்ச். பேதா (Beda) வசனிக்கிறார். அன்றியும் வலது பாரிசம் மேன்மையையும், சிரேஷ்டத்தையும் குறிக்கிறது.

12-வசனம் "சக்கரியாஸ் அவரைக் கண்டு கலங்க, பயமும் அவரைப் பிடித்தது." தனியேல் தீர்க்கதரிசி சம்மனசானவரைக்கண்டு எப்படி கலங்கி நடுங்கி பயப்பிராந்தி கொண்டாரோ, அவ்வாறே சக்கரியாஸும் தேவதூதனைக் கண்டதும், பயந்து நடுநடுங்கினார். (தனியேல் 10-அதி. 8-வசனம். எசெக்கியேல் 2-அதி. 1-வச. நமது சுபாவ சக்திக்கு மேற்பட்ட வல்லமையைக்கொண்ட எந்த பொருளின் முன்னிலையிலும் இயல்பிலே நாம் பயப்படுகிறோம்; திகில்கொண்டு நமது சித்த சமாதானத்தை இழந்துபோகிறோம் என்று அர்ச். அம்புரோஸ் வசனிக்கிறார்.

மனுஷ சுபாவத்தின் பலவீனம் எப்பேர்க்கொத்ததென்றால், நூதனமானதையும் அசாதாரணமானதையும், தன் சக்திக்கு மேற்பட்ட வல்லபத்தையும் அது காண்கில், கலக்கமும் நடுக்கமும் அடைந்து சித்தபிரமை கொள்கின்றது. "இந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன். என் பெலன் எல்லாம் போயிற்று, அல்லாமலும் என் உருவம் மாறி வாடிப்போயிற்று. சத்துவமில்லாமல் இருந்தேன். அவருடைய (சம்மனசுவின்) வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன்; கேட்டு பயத்தினால் முகம் குப்புற விழுந்தேன். என் முகம் தரையில் பதிந்து கிடக்கும்" என்று தனியேல் தீர்க்கதரிசி சம்மனசானவரைக் கண்டபோது தனக்குண்டான உணர்ச்சியை வெளியிடுகிறார். (தனியேல் 10-அதி. 8-வசனம்.)

13-வசனம் "தேவதூதனோ அவரை நோக்கி: சக்கரியாஸே, நீ பயப்படாதே; ஏனெனில் உன்னுடைய மன்றாட்டு கேட்டருளப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபேத் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் அவனுக்கு (யொவானெஸ்) அருளப்பனென்று பேரிடுவாய் என்றார்." மனம் கலங்கி, நடுங்கி நின்ற சக்கரியாஸைச் சம்மனசானவர் நயமாய், சிநேக வாஞ்சையாய்த், தேற்றுகிறார். அன்னியோன்யமாய் அவருடன் பேசுகிறார் சக்கரியாஸ் என்று அவருடைய சொந்த பெயரை உச்சரித்து உற்சாகப்படுத்தி அழைக்கிறார். மனுஷ சுபாவத்துக்கு மேற்பட்ட அரூபியின் தரிசனையால் கலங்கி நடுங்கி பயப்படுவதானது, மானிட பலவீனத்துக்கு இயற்கையே. ஆனால் சம்மனசுவின் அன்பும் அருளும் பொழியும் தரிசனமும், மங்களகரமான வசனமும், அச்சத்தால் மயங்கினவரைத் தேற்றிக் குதூகுலப்படுத்துகின்றது. "பயப்படாதே" என்று சம்மனசானவர் விளம்பிய சொல் மெய்யாகவே சக்கரியாவின் மனதில் இருந்த கலக்கத்தையும் பயத்தையும் அறவே நீக்கினதென்றே சொல்லவேண்டும். ஏனெனில் பயந்தெளிந்து அவர் தேவதூதனின் நிபந்தனையை ஆற அமர கேட்கவேண்டியதா யிருந்தது.



மேலும் இத்தகைய அச்சம் தேவதூதனுடைய மகத்துவ பிரதாபத்தை எடுத்துக் காட்டுவதுபோல், சம்மனசு சொல்லப்போகிற காரியத்தை விசுவசிக்க சக்கரியாஸை முஸ்திப்பு செய்வதற்கு ஏதுவாயுமிருந்தது. ஏனென்றால் நாம் எவ்வளவுக்கு ஒருவருடைய மாட்சிமையையும் சிரேஷ்ட மகிமையையும் கண்டு பயத்தினால் பிரமித்து ஆச்சரியப்படுகிறோமோ, அவ்வளவுக்கும், அவருடைய வார்த்தைக்குச் செவி சாய்த்து அதை விசுவசிக்க மனங்கொள்கிறோம். பயப்படாதே என்று கூறிய சம்மனசானவர்கூட முகாந்தரத்தையும் எடுத்துரைக்கிறார். "ஏனெனில் உன்னுடைய மன்றாட்டு கேட்டருளப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபேத் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்." சம்மனசானவர் "உன்னுடைய மன்றாட்டு கேட்டருளப்பட்டது" என்று சொன்னவுடன், "எலிசபேத் உனக்கு ஒருகுமாரனைப்பெறுவாள்" என்றதினால், பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதஜனங்கள் புத்திர சந்தானத்தைத் தேடினதுபோல், சக்கரியாஸும் தன் பெயர் இஸ்ரயேலில் அற்றுப் போகாதபடிக்கு, தனக்கு ஒரு குமாரன் வேண்டுமென்றுதான் மன்றாடினார் என்றும், அந்த வேண்டுகோளுக்குப் பதில்மொழியாக சம்மனசு விடைகொடுத்து "உன் மன்றாட்டு கேட்டருளப்பட்டது" என்றார் என்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனால் சக்கரியாஸ் அந்நேரத்தில் உலக இரட்சண்ணியத்துக்காகவும், மெஸ்லியாவின் வருகைக்காகவும் தான் மன்றாடினார் என்று மற்ற அநேக வேத சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஏனென்றால் சக்கரியாஸ் குமாரனுக்காக மன்றாடி யிருந்தால், தனக்கு சர்வேசுரன் ஓர் குமாரனைக் கொடுப்பார் என்கிற நம்பிக்கை அவருக்கு உண்டாயிருக்குமே. அவ்வித நம்பிக்கை அவர் உள்ளத்தில் இருக்குமேயாகில் உடனே அவர் தேவதூதன் சொன்ன வாக்கியத்தை விசுவசித்திருக்கவேண்டுமல்லவா? ஆனால் அவர் தன் குமாரனைபற்றிச் சம்மனசு வெளிப்படுத்திய விசேஷத்தை முதல் முதல் விசுவசிக்கவில்லையே. அதற்காகத் தான் அவர் தேவாலயத்தில் தூபம்கொடுக்கும் வேளையில் வேறே காரியத்தைப்பற்றி அதாவது உலக இரக்ஷகராகிய மெஸ்லியாவைப்பற்றி சிந்தனையாய் இருந்தார் என்று சொல்ல நியாயம் உண்டு.

ஜெருசலேம் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் குருக்கள் பரிமளவர்க்க தூபம் காட்டும் வேளையில், வாய்மொழியாய் இன்னின்ன ஜெபங்களைச் சொல்லவேண்டுமென்ற நிபந்தனை யில்லையென்றாலும் அங்கே அனுதினமும் நடைபெற்ற பலியானது ஜனங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட ஓர் ஜெபக்கிருத்திய மல்லவா? இப்பலிகளால் குறிக்கப்பட்டது யாது? பிற்காலத்தில் மெஸ்லியாவால் ஆகவேண்டிய பாவப்பரிகாரம் அல்லவா? மேலும் பக்தியுள்ள இஸ்ராயேலர் அக்காலத்தில் விருத்தாப்பிய சிமையோன் முனியைப்போல் மெஸ்லியாவின் வருகைக்கு அதிவேகமான ஆசை ஆவலோடு எதிர் பார்த்திருந்தார்கள். அல்லும் பகலும் இதே சிந்தனையாய் இருந்தார்கள். ஆகையால், நமது திவ்ய இரட்சகர் கூறியவண்ணம், அநேக தீர்க்கதரிகளும், இராஜாக்களும் நீதிமான்களும், அப்போஸ்தலர்கள் கண்டதையும் கேட்டதையும் காணவும் கேட்கவும் விரும்பினார்கள் என்றால், நீதிமானாகிய சக்கரியாஸ் என்பவர் இந்த உத்தம ஆசையின்றி திருஸ்தலத்தில் பிரவேசித்திருப்பாரோ? அவர் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்த பலியின் பூஜித வேளையில் அக்காலத்தில் நீதிமான்களை ஆட்கொண்ட இவ்வாசைப் பற்றுதலை மறந்திருப்பாரா? பரிச்சேதமில்லை.

"உன் மனைவியாகிய எலிசபேத் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்" என்னும் வசனம், "உன்னுடைய மன்றாட்டு கேட்டருளப்பட்டது" என்ற வசனத்துக்குப் பின் உடனே தேவதூதனால் சொல்லப்பட்டதினால், சக்கரியாஸ் தனக்கு குமாரன் வேண்டுமென்பதைப்பற்றித்தான் செபித்தார் என்று சொல்லலாகாது. ஏனெனில் இவ்வசனங்களை, அவைகளுக்குப் பின்வரும் மற்ற வசனங்களோடு ஒப்பிட்

டுப் பார்த்தால், மெஸ்ஸியாவினால் உண்டாகப்போகிற மனுக்குல இரட்சண்ணிய காரியத்தைப் பற்றியே சம்மனசானவர் இங்கே அறிக்கையிடுகிறார் என்று சொல்லவேண்டும். ஏனெனில் ஸ்நாபக அருளப்பராகிய முன்னோடியின் பிறப்பைப்பற்றியும் அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தின் பெருமைகளைப்பற்றியும் சம்மனசு பேசும்போது, இவைகளையெல்லாம் உலக இரட்சகரை முன்னிட்டே வெளிப்படுத்துகிறார். அவர் பூலோகத்தில் தோன்றும் காலம் சமீபித்துவிட்டதென்றும் இதினால் விளங்குகிறது.

இந்த முன்னோடியின் பெயரும் மாட்சிமையுள்ளது. "அவனுக்கு அருளப்பன் (யொவானெஸ்) என்று பெயரிடுவாய்" இது பரலோகத்திலிருந்து வந்த பெயர், சர்வேசுரனால் தெரிந்தெடுக்கப்பட்ட பெயர், தேவதூதனால் உச்சரிக்கப்பட்ட பெயர். இதற்கு தேவ அருள்வரப்பிரசாதம் என்றநேர்த்தியான அருத்தம் உண்டு. ஒரு மனிதனுக்கு சர்வேசுரன் தாமே ஓர் பெயரை இட்டால், அல்லது அம்மனிதனுடைய பெயரை மாற்றி ஒரு நூதன பெயரை அவனுக்குச் சூட்டினால், அதினால் அவன் உன்னதமான அந்தஸ்துக்கும், ஒரு விசேஷ மகத்தான அலுவலுக்கும் அழைக்கப்படுகிறான் என்று தப்பாமல் சொல்லலாம். அருளப்பர் என்கிற பெயரால் தேவ அருள் விசேஷமாய் அளிக்கப்பட்டது. சக்கரியாஸ் எலிசபேத் என்பவர்களுக்கு ஒரு குமாரன் கிடைத்தது தேவ அருளன்றி வேறென்ன? அருளப்பர் என்கிறபெயரைப் பெற்றவருக்கும் தேவ அருள் ஏராளமாய் கொடுக்கப்பட்டது. அருளப்பருடைய போதகத்தால் இரட்சண்ணிய பாதையில் வந்து சேர்ந்த இஸ்ராயேல் புத்திரர்களும் விசேஷ தேவவரங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

சக்கரியாஸுக்கும் எலிசபேத்துக்கும், அவர்களுடைய குமாரனாகிய யொவானெஸுக்கும் கிடைத்த பேர்கள் ஆழ்ந்த அர்த்தங்களை கொண்டவைகள். அவைகள் மெஸ்ஸியாவின் காலத்தோடு ஆச்சரியமாய்ப் பொருந்தினதாகவும் தோன்றுகின்றன. எபிரேய பாஷையில் சக்கரியாஸ் என்றால் தேவன் நினைவு கூருகிறார் (தேவன் ஞாபகம்) எலிசபேத் என்றால் தேவன் ஆணையிடுகிறார். யொவானெஸ் என்றால் தேவன் அருள்பொழிகிறார், என்றர்த்தமாகும். மெய்யாகவே பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிதாபிதாக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் சர்வேசுரன் ஆணையிட்டு வாக்குத்தத்தம் செய்த காரியங்களை நினைவுகூர்ந்து மெஸ்ஸியாவின் மூலமாய்த் தமது தேவ அருளை ஏராளமாய் மனுக்குலத்தின்மேல் பொழிந்தாரல்லவா? இந்நாமங்களுக்கு அர்த்தம் சொல்லி தேவன் ஞாபகமும், தேவன் ஆணையும் ஐக்கியமாகி தேவ அருளை நமக்குப் பெற்றளித்தது என்று ஒரு வேத சாஸ்திரியார் அலங்கிர்தமாய் உரைக்கிறார்.

14-வசனம் "உனக்குச் சந்தோஷமும் அக்களிப்பும் உண்டாகும். அநேகரும் அவனுடைய பிறப்பினால் மகிழ்வார்கள்" சம்மனசானவர் சக்கரியாஸின் குமாரனுடைய குணாதிசயங்களையும் புண்ணிய பெருமைகளையும் எடுத்துக் காண்பித்து அவருடைய மனதைச் சந்தோஷத்தால் பூரிக்கச்செய்கிறார். தன் குமாரனுடைய ஜனனத்தால் தான்மாத்திரம் அல்ல, தன் உற்றார் பந்துமித்திரர், இனத்தாரும், இன்னும் இவரால் மனந்திரும்பப்போகிற சகலருமே ஆனந்த மகிழ்ச்சியை யடைவார்கள் என்று சம்மனசானவர் சக்கரியாஸுக்கு அறிவிக்கிறார்.

S. M.

---

நமது கத்தோலிக் கோவில்களில் சற்பிரசாத ஆண்டவர் வீற்றிருப்பதால், நாம் அந்தப் பக்கமாய்ச் செல்லும்போதெல்லாம் சற்று தலைகுனிந்து வணங்குதல் விசுவாச முயற்சியாகும். மேலும் அவ்வணக்கத்துக்கு ஒவ்வொரு விசைக்கும் 300-நாள் பலன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

தனது புண்ணிய ஒழுக்கத்தின் வாசத்தால் உலகத்தை மணக்கச்செய்து, பிறருக்கு உத்தமதனத்தின் வழியைக் காட்டுபவன் எவனோ, அவன் ஒரு நாள் முடிவில்லாக் காலத்துக்கும் ஓர் மகா சிறந்த நட்சத்திரம்போல் வானமண்டலத்தில் பிரகாசிப்பான்.

(அர்ச். பிராஞ்சிஸ்கு சலேசியார்.)



## GNANAMANI, III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 33-ம் அதிகாரம்

**சகலத்தையும் பக்குவமாய் ஜோடித்து வைத்திருக்கிறேன். அவள் அந்த வலையில் விழாவிட்டால் விதியில்லை.**

---

ஸரஸ்வதியும் முனியம்மாளும் ருக்மணியுடன் சம்பாஷித்தபின் தங்கள் வீட்டுக்கு ஏகும்போது, ஸரஸ்வதி முனியம்மாளை நோக்கி, "நாம் விரித்த வலையில் அகப்பட்டாளடி அந்த பேதைப்பெண், ருக்மணி!"

முனி.—நன்றாய் அகப்பட்டுக்கொண்டாள்! அவள் கண் இரண்டும் கலங்கினதை கவனித்தீர்களா அம்மா நீங்கள்?

ஸரஸ்.—ஆ. ஆ. நன்றாய்ப் பார்த்தேன். நாம் வெளியே வந்தபின் கண்ணீர்விட்டு அழுதிருப்பாள். அவள் எக்கேடுகெட்டாலும் நமக்கென்ன? ஆனால் ஒரு காரியம்; எந்தப் பிராணிக்கும் இதைப்பற்றி அறிவிக்கக்கூடாது. எச்சரிக்கையடி முனி!

முனி.—நான் இதை வெளியிடுவேனா அம்மா!

ஸரஸ்.—நீ நாளைக்கு அவள் வீட்டுக்குப் போனவுடனே தன் புருஷனுடைய நடத்தையைப்பற்றி விசாரிப்பாள். உன் பேச்சில் நீ வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். நீ யாதொன்றை பார்த்ததாகச் சொல்லிவிடாதேயடி. அவர்கள் சொன்னார்கள், இவர்கள் சொன்னார்கள் என்றும், ஊரில் பிரஸ்தாபமாயிருந்தது, இவ்வித வதந்தியாயிருந்தது என்றும் கோமுட்டிப் பேச்சாய்ப் பேசவேண்டுமே ஒழிய. எதையும் நிச்சயமாக்காமலும் யாருடைய பெயரையும் வெளிப்படுத்தாமலும் இருக்கவேண்டும். அவளோ சிற்பேதை! சொல்வதையெல்லாம் நம்புங்குணமுள்ளவள். வெகு சுளுவில் அவளை யேமாற்றிவிடலாம். ருக்மணி நாளைக்கு உன்னைப் பார்த்து தன் புருஷனுடைய நடத்தையைப்பற்றி வினவும்போது, முதல், கலியாண சுந்தரத்தைப்பற்றிச் சொல், பிறகு ராமகிருஷ்ணனையும் அவனுடைய தங்கை மீனாட்சியைப்பற்றியும் பேசு. ஆனால் மகா தந்திர உபாயத்தோடு பேசாவிட்டால் நமதுபேரில் திரும்பிவிடும் பழியெல்லாம். இது நிற்க கலியாண சுந்தரம் என் பந்துவென்று காட்டிக்கொள்ளாதே. அது அவளுக்குத் தெரிந்தால் நமதுமட்டில் சம்சயங்கொள்வாள். அவள் கண்ணைக் கட்டி பாழுங் குழியில் தள்ளிவிடவேண்டும். அப்போது நமக்கு ஜயமுண்டாகும்.

முனி.—நீங்கள் சொன்னதெல்லாம் நான் மறக்கவில்லை யம்மா; என் குணம் உங்களுக்குத் தெரியாதா? சகலத்தையும் பக்குவமாய் ஜோடித்து வைத்திருக்கிறேன். அவள் அந்த வலையில் விழாவிட்டால் விதியில்லை.

ஸரஸ்.—"நான் இன்ஸ்பெக்டர் வீட்டுக்குப் போய்வருகிறேன், நீ வீட்டுக்குப்போடி" என்று சொல்லிவிட்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டுப் பக்கமாய் நடந்துபோனாள் ஸரஸ்வதி. வைத்தியநாத நாயகர் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டிருந்த காலத்தில் இரண்டு கொலைக் கேசை அவர் பகு சாமர்த்தியத்துடன் பிடித்தபடியால் அவருக்கு டெப்டி சூபரின்டென்டு உத்தியோகம் கிடைத்து மறுபடியும் செங்கல்பட்டு ஜில்லாவுக்கு மாற்றப்பட்டார்.

ஸரஸ்வதியும் முனியம்மாளும் எழுந்து வீட்டுக்குப் போனபின், தங்கள் மூவருக்குள் நடந்த சம்பாஷணையைப்பற்றி ருக்மணி யோசனை செய்து கொண்டு, "அந்த ஸரஸ்வதி புருஷர்களைப்பற்றி விரோதமாய்க்கூறும் குறைகள் நியாயமற்றவை. புருஷன் வெளியேபோய் வேலைசெய்தோ, உத்தியோகஞ் செய்தோ சம்பாதியாவிட்டால் பெண்சாதி பிள்ளைகள் எப்படி பிழைப்பார்கள்? புருஷாள் செய்யும் வேலை ஸ்திரீகளுக்கு மாளுமா? ஸ்திரீ ஊர் ஊராய்த்திரிந்தால் வீட்டு வேலைகளைப் பார்ப்பதார்? குழந்தைகளை சவரக்ஷணை செய்வதார்? புருஷரால் இந்த வேலையாகுமோ? பரிச்சேதம் ஆகாது.

ஸரஸ்வதி சாதாரணமாக பெருமை சலாக்கியமும், தான் என்னும் ஆணவமுங்கொண்டவள். ஆங்காரமே அவளிடத்தில் குடிகொண்டிருப்பதாகச் சகலரும் அறிந்துகொள்வார்கள். ஒட்டாரமும் வைராக்கியமும் உள்ளவளாகையால், இப்படி புருஷாளுக்கு விரோதமாய் க்ஷாத்திரியங்கொண்டு பேசினாளே ஒழிய அவள் சொன்ன நியாயங்களைப் பெண்ணாய்ப் பிறந்த எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

ஆனால் அவள் பண்டிதரைப்பற்றி சொன்னவை சந்தேகத்துக்குரியவையே. அவர் அடாத காரியம் செய்வதாக சொன்னாளே! என்ன அடாதகாரியம் செய்திருப்பார்? அவர் குடிக்கிறதில்லை; சூதாடுகிறதில்லை; விபசாரதனத்துக்கு உட்படமாட்டார்; பொய்ப்புரட்டு, திருட்டு திரியாவரம் முதலிய பாவக்கிருத்தியங்களை அவர் அறியார். அவர்மேல் என் இப்படித் தூறு பேசினாள்? அவருடைய துர்நடத்தை ஊரெல்லாம் பிரஸ்தாபமாயிருக்கிறது என்றாளே! ஊர் சங்கதியெனக்கு என்ன தெரியும்? இவள் ஊரெங்கும் சுற்றித்திரிவதால் ஆங்காங்கு பேசிக்கொள்ளுகிற சங்கதி யிவள்காதில் விழுந்திருக்கலாம்.

பண்டிதர் மிகவும் நற்குணசாலியும் புண்ணியவாளனுமா யிருக்கக்கொள்ள அந்தப் பெண்பிள்ளை சொன்ன பிரகாரம் துர்நடத்தைக்குள்ளாயிருப்பாரோ? என்? மனிதன் பலவீனன்; சிலவிசை யாதோர் தப்பிதத்துக்கு உள்ளாயிருக்கலாம்; என்னவோ ஸ்வாமிக்குத்தான் தெரியும். அந்திசந்தி யெவ்வளவு நேரம் செபக்கூடத்தில் ஜெபிக்கிறார்! இப்பேர்ப்பட்டவர் துஷ்டவேலைக்குட்படுவாரா? நெருப்பில்லாவிட்டால் புகை கிளம்புமா? யாதொரு காரணமுமின்றி யிப்பேர்ப்பட்ட புகார் வெளிப்படாது" என்று தன் புருஷனுடைய நடத்தையைப்பற்றி அநியாயமாய் சந்தேகித்துக்கொண்டிருந்தாள்.

தேவதாஸ் பண்டிதர் செபக்கூடத்தில் ஜெப முடித்துக்கொண்டு, தன் மனைவி யிருந்த அறைக்குப்போய், "ருக்மணி" என்று பலதடவை அழைத்தும் அவள் மறுமொழி சொல்லாததைக் கண்டு கதவைத் திறந்து உள்ளே பிரவேசித்தார். அவ்விடத்தில் அவள் ஒரு சோப்பாவில் சாய்ந்துகொண்டு கண்கலங்கி முகம்வெளுத்து துக்கமாய் இருப்பதைக் கண்டு, "உனக்கு என்ன வியாதி ருக்மணி?" என்று அன்புடன் வினவியபோது: தலையைத் தன் இரண்டு கையால் தாங்கிக்கொண்டு "தலை கொஞ்சம் சூடாயிருக்கிறது" என்றாள். டாக்டரை வரவழைக்கிறதாவென்று சொன்னபோது—"என்னத்துக்கு டாக்டர்? இராத்திரிக்கு நன்றாய் நித்திரை செய்தால் தலைநோய் பறந்துபோகும்" என்றதன்மேல், பண்டிதர் ஒடிக்கலன் என்னும் வாசனைத் தைல புட்டியைக் கொண்டுவந்து கொடுத்து, அதை அவள் நெற்றியில் பூசும்படி சொல்லிவிட்டு தன் அறைக்குப் போய் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அன்று மத்தியானம் பண்டிதருக்கு தந்தி வந்ததன்மேல் தஞ்சாவூருக்குப் புறப்பட்டுப் போனார்.

தன் வேலைக்காரியான முனியம்மாளை ருக்மணி அன்று காலை பார்த்தவுடனே, "வா. முனியம்மா. வந்துநீபார்த்ததும் கேட்டதுமான சகல காரியங்களையும் மறைக்காமல் எனக்குச் சொல்வாய். உன் மட்டில் நான் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேனென்று அறியாயோ? புண்ணான என் மனதை உன் பேச்சால் சாந்தப்படுத்துவாயாகில் முன்னிலும் பத்துமடங்கு அதிகமாய் நேசிப்பேன் உன்னை" யென்றாள் ருக்மணி. இதைக் கேட்ட முனியம்மாள், "அம்மா, தாயே, நான் கேட்டவைகளைச் சொன்னால் உங்களுக்கு அதிக துக்கமும் மனச்சஞ்சலமு முண்டாகுமென்கிற எண்ணத்துடன் உங்களுக்கு அதை அறிவிக்கவில்லை. இப்போது நீங்கள் அவ்வளவு சிரத்தையுடன் கேட்டுக்கொள்வதைப்பற்றி, உங்கள் கோரிக்கைபடி ஆகட்டும். நீங்கள் அன்னியோன்னியமாய் நேசிக்கும் உங்கள் 'பத்தாவானவர் மெத்த நல்லவர். தயை தாக்ஷணியமுள்ளவராயினும், அவருடைய நடத்தையைப்பற்றி ஊரார் மெத்த கேவலமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். பல பெண்கள் என்னைப் பார்த்து, 'உன் எஜமானனும் எஜமானியும் மகா நல்லவர்கள்; தங்கமான குணமுள்ள மனிதர்; சன்மார்க்கர்; கற்புடையோரென்று வீம்பு பாராட்டினாயே! இதற்கு என்ன சொல்லுகிறாய்? கலியாண சுந்தரத்தின் கதை உனக்குந் தெரிந்திருப்பதால் உன் எஜமானுடைய வண்டவாளம் வெட்டவெளியாய் தெரிந்துவிட்டதே' என்று அவர்கள் சிரித்தபோது எனக்குண்டான துக்க வியாகுலம் நாவால் உரைக்குந் தன்மையல்ல, என் அம்மணீ!" என்று சொல்லி, தன் முகத்தைச் சுளித்துக் கொண்டதுபோல் பாசாங்கு காட்டினாள்.

அப்போது நிஷ்கபடியான ருக்மணி முனியம்மாளுடைய இரண்டு கரங்களையும் பிடித்துக்கொண்டு, தன்னுடன் சோபாவில் உட்கார வைத்து, "முனியம்மா, இது முதற்கொண்டு நீயென் வேலைக்காரியல்ல, ஆனால் உன்னைத் தோழியாக பாவிப்பேன். நடந்த சங்கதியை யெல்லாம் சொல்" என்றாள்.

இதைக்கேட்ட முனியம்மாள் அதிக தைரியங்கொண்டு, "அம்மா! நீயே என் தாய். தாய்க்குப் பிள்ளை யெதையாகிலும் மறைக்கிறதுண்டா? என்காதில் விழுந்ததெல்லாம் உங்களுக்கு வெளியிட காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றதைக் கேட்ட ருக்மணி, "கலியாண சுந்தரத்தின் சங்கதி என்ன முனி" என்றாள்.



"அந்த வாலனை நீங்கள் பார்த்ததில்லையோ? அவர் நல்ல மனிதன், எதார்த்தவாதி; சகல புண்யமும் அவரிடத்திலுண்டு; இவர் பாடுவதிலும் பிடில் வாசிப்பதிலும் பாண்டித்தியமானவர். இந்த வித்தையில் அதிக தேர்ச்சி பெறும்படி உங்கள் கணவனிடம் கற்க ஆரம்பித்தார். ஆனால் அவர் வெகுகாலம் பண்டிதரிடம் கற்கவில்லை" யென்று சொல்வதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த ருக்மணி, "என் கற்கவில்லை? வியாதியாய் விழுந்தாரோ?" என்று ஆவலுடன் வினவும்போது, "அவர் தன் வீட்டுக்கு வரக்கூடாதென்று கண்டிப்பான விலக்கஞ் செய்தார் பண்டிதர்" என்றாள் வேலைக்காரி.

அப்போது ருக்மணி கேட்பாள்: என் தள்ளிவிட்டார் பண்டிதர் அவரை? "அது பரம ரகசியம் அம்மா என் இராஜாத்தி" என்றாள் முனியம்மாள். அப்போது ருக்மணி தன் வேலைக்காரியின்மேல் சாய்ந்துகொண்டு, "முனியம்மா, என் நேசத்தோழி, என்னை யிவ்வளவு மனச்சஞ்சலத்தில் விடுவது உனக்கு தர்மமா? நடந்ததெல்லாம் மறைக்காமல் வெளியிட வாக்குக்கொடுத்து, இப்போது அதை மீறலாமா?" என்று கெஞ்சுவதுபோல வேலைக்காரியை மன்றாடும்போது, முனியம்மாள் சொல்வாள்: என் எஜமானியாகிய அம்மணீ, நடந்த சங்கதியெல்லாம் உங்களுக்கு வெளியிட்டால் உங்கள் இளைய இருதயம் தாளமாட்டாது. அதனால் உங்களுக்கு வியாதியுண்டாகும் என்றதைக்கேட்ட ருக்மணி. அது என்ன சங்கதியோ என்று அறிய நூதனப் பிரியங்கொண்டவளாய் முனியம்மாளுடைய இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு, "முனியம்மா, என் னேசத்தோழி! எனக்கு நீ அநியாயஞ் செய்வது தர்மமா? உன்னை நம்பின எனக்கு துரோகம் புரியலாமா? நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் நீ சொல்லுமட்டும் உன் கையை விடேன்" என்று பரிதாபத்துக்குரிய விதமாய் மன்றாடினாள்.

"சற்று பொறுங்களம்மா சொல்லுகிறேன். ஆனால் நடந்த சங்கதியைச் சொல்லும்போது அதிக விதனப்படுவதில்லையென்றும் இதை யாருக்கும் சொல்வதில்லையென்றும் நீங்கள் உறுதிமொழி கொடுத்தால் சொல்வேன்" என்றதன்மேல், "அப்படியே ஆகட்டும் என்றாள்" ருக்மணி.

சூதுகாரியான முனியம்மாள் தன் அசுத்த வாயைத் திறந்து இவ்வாறு கூசாமல் சொல்லுவாள்: கலியாணசுந்தரம் என்பவர் சகல புண்ணியங்களை உடைத்தானவரா யிருப்பதுடன், மகா எதார்த்தவாதி, அற்பபொய் சொல்லமாட்டார். உலகம் கீழது மேலதாய்ப் புரண்டாலும், யாதொரு தப்பிதஞ் செய்தவன் சிறியவனாகிலும் பெரியவனாகிலும் முகதாக்ஷணியமின்றிக் கண்டிக்கும் குணமுள்ளவர் அவர். இவருக்கு வஞ்சகம், சூது முதலிய துர்க்குணங்கள் உதவாது. மிகவும் நேர்மையான குணமுள்ளவர். யாதொருவன் பாவஞ் செய்தபோதிலும் புண்ணியஞ் செய்தபோதிலும் அதை யாருக்கும் பயப்படாமல் உலகத்துக்கு எடுத்துக்காட்டும் தைரியமுள்ளவர். இப்பேர்ப்பட்ட கல்யாண குணங்களையுடையவரும் முகதாக்ஷணிய மற்றவரும் எதார்த்த குணமுள்ளவருமான இந்தப் புண்யபுருஷனான கல்யாணசுந்தரம் என்பவர் தன்னிடம் படித்தால், தான் அந்தரங்கத்தில் நடத்திவரும் துர்க்கிருத்தியங்களை உலகத்துக்குத் தெரியப்படுத்துவாரென்று பண்டிதர் பயந்து, தமது பள்ளிக்கூடத்தினின்று அவரை நிறுத்திவிட்டார். இதுதான் அம்மா அந்தப் பரம ரகசியம்" என்று முனியம்மாள் சொல்லி முடிப்பதற்குள்ளாக, ருக்மணியின் நெஞ்சு படபடவென்று அடிக்க, இரத்தம் தலைமட்டும் ஏறிப் பொங்க, தன் வேலைக்காரியைப் பார்த்து, "பண்டிதர் துர்நடத்தையுள்ளவரா?" என்று ஆத்திரத்துடன் வினவ: வினைக் குடுக்கையான வேலைக்காரி. "நான்மாத்திரமல்ல, என் துரைசானீ! செங்கல்பட்டு முழுதும் சாக்ஷிகூறும் பண்டிதர் துர்நடத்தை யுள்ளவரென்று" என்றாள்.

வஞ்சக குணமுடைத்தான அந்தத் துஷ்ட வேலைக்காரி பெரும் அபாண்டம் சொல்வதை ருக்கணி கேட்டு, அதிசயத்தால் பேச வாய் வராமல் சற்று மவுனமா யிருந்து, முனியம்மாளைப் பார்த்து இவ்வாறு வினவுவாள்: அம்மா, முனியம்மா! என் நேசத் தோழி! நீ சொன்னதெல்லாம் கவனமாய்க் கேட்டேன். கேட்டு என் மனம் மெழுகுபோல் உருகுகின்றது. பண்டிதர் இப்பேர்ப்பட்டவரென்று கனவில் முதலாய் நான் நினைக்கவில்லை. அவருடைய துர்நடத்தை உனக்கு எப்படித் தெரியவந்தது?

"இந்த ஊருக்கெல்லாம் அவருடைய துர்ந்டத்தை தெரிந்திருக்கும்போது எனக்குத் தெரியாதிருக்குமோ அம்மா? நாலு பேர் சொல்ல நானுங் கேட்டேன்" என்றாள் முனியம்மாள்.

"ஆமா, பண்டிதருடைய துர்நடத்தை இன்னதென்று விளங்கச் செய்வாயாகில் உனக்கு நூறு தண்டம் போடுவேன் முனியம்மா!" என்றாள் ருக்மணி.

"இன்னம் நீங்கள் கண்டுபிடிக்கவில்லையா? ஒரு பெண்ணைப்பற்றி ஒருவனை கொலையுஞ் செய்தார் உங்கள் புருஷன்!"

இதைக் கேட்ட ருக்மணி முகம் வெளுத்து கண் கலங்கி, கை ரெண்டையும் நெரித்துக் கொண்டு, "இது மெய்தானா முனியம்மா? இப்பேர்ப்பட்ட பாபிஷ்டியான வேலையைச் செய்வாரென்று நான் நினைத்தேன் இல்லை" என்றாள் அழுதுகொண்டு.

முனி.—ராமகிருஷ்ணன் என்பவனை யெப்போதாகிலும் பார்த்திருக்கிறீர்களா அம்மா?

ருக்.—ராமகிருஷ்ணன் ஆரம்மா? அவனை யெனக்குத் தெரியாது; ஒருபோதும் பார்த்ததில்லை.

முனி.—பாட்டுக்கச்சேரியைச் சேர்ந்த ஒரு வாலன். போன வருஷம் இறந்துபோனது உங்களுக்குத் தெரியாதா?

ருக்.—ஆமா, ஆமா, அவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் செத்ததைப்பற்றி பண்டிதர் அநேக நாள் துக்கப்பட்டார்.

முனி.—அதெல்லாம் கள்ள துக்கம் அம்மா! இறந்துபோனவனுடைய தங்கையும் பண்டிதரும் சேர்ந்து அவனைக் கொன்றுபோட்டார்கள்.

ருக்.—அந்தப் பெண் பேர்?

முனி.—மீனாட்சி.

ருக்.—வாஸ்தவந்தானா முனியம்மா?

முனி.—வேண்டுமானால் சத்தியமும் செய்வேன்.

ருக்.—ஐயையோ! இப்பேர்ப்பட்டவரென்று நினைக்கவே யில்லை முனியம்மா நான். இவருடைய குணகுணத்தை முன்னதாக அறிந்திருந்தால், செத்தாலும் இவருக்கு வாழ்க்கைப்பட்டிருக்கமாட்டேன். அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் குமாரனைக் கட்டிக்கொண்டிருந்தால் இந்தப் பொல்லாங்கெல்லாம் நேரிட்டிருக்காதே! திரண்ட ஆஸ்திக்காரனான துர்மார்க்கனைக் கட்டிக்கொள்வதிலும் பரம ஏழையான நற்குணசாலிக்கு வாழ்க்கைப்படுவது உத்தமம்.

அது வாஸ்தவமே. பண்டிதரும் அந்தத் துஷ்டச் சிறுக்கியும் சேர்ந்து எப்படிப் பாலகிருஷ்ணனைக் கொன்றார்கள்?

முனி.—எப்படிக் கொன்றார்களோ தெரியாது. ஆனால் அவர்கள் இருவரும் அக்கொலையை நடத்தினதாக ஊர்வதந்தி.

ருக்.—இதுகாரியம் சர்க்காருக்குத் தெரியாதோ?

முனி.—ஒருவருக்கும் தெரியாதவிதமாய்க் காரியத்தை அவ்வளவு பக்குவமாய்ச் செய்து முடித்தார்கள்.

ருக்.—இப்போது அந்தப் பாபிஷ்டி சிறுக்கி யெங்கே இருக்கிறாள்?

முனி.—அவள் இருக்கிற இடம் பண்டிதருக்கு மாத்திரம் தெரியுமேயொழிய மற்ற எந்தப் பிராணிக்கும் தெரியாது.

"அப்படியா என்று" ருக்மணி தன் தலையை இருகரங்களால் அடித்துக்கொண்டு மாலை மாலையாய்க் கண்ணீர்விட்டு அழத் தொடங்கினாள். அப்போது, வஞ்சகத்தை நெஞ்சில் வைத்துக் கொண்டு, இவ்வாறு பாவ பயமின்றி பெரும் அபாண்டத்தைச் சொன்னபின், ருக்மணி பக்கமாய்த் திரும்பி, "அம்மா சத்தஞ் செய்யாதேயுங்கள்; அந்தக் கிழவி பங்காருக்கு உங்கள் அழுகை சத்தம் கேட்டாலும் கேட்கும், சந்தடி செய்யாதேயுங்கள்" என்றாள் பித்தலாட்டக்காரியாகிய வேலைக்காரி.

அப்பொழுது ருக்மணி அழுகையை அடக்கி சதிமான ஸ்திரீயாகிய தன் வேலைக்காரி பக்கமாய் மகா பரிதாபத்துடன் முகத்தைத் திருப்பி, "அம்மா முனியம்மா, இனிமேல் இந்த வீட்டிலிருந்து பயன் என்ன?" என்று சொல்லக்கேட்ட அந்தப் பாபிஷ்டி மகள் முனியம்மாள்: இனி தேவடியாள் வீட்டுக்கு ஒப்பான இந்த இடத்தில் கற்பலங்காரியான நீங்கள் அரை நாழிகையும் இருப்பது தகாது. எனக்கு இப்பேர்ப்பட்ட துற்கதி சம்பவித்திருக்குமாகில் கிணற்றில் விழுந்தாகிலும் நான்றுகொண்டாகிலும் இறப்பேனே அன்றி, இந்த விட்டில் தங்கமாட்டேன்" என்று ருக்மணிக்கு அவள் புருஷன்மட்டில் அருவருப்பு உண்டாக்கும்படிக்கான உரோசமான சொற்களைச் சொல்லிக்கொண்டிருந்தாள்.



இப்படிச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் பண்டிதரிடத்திலிருந்து வந்த தந்தி சமாச்சாரம் அடங்கிய கடிதத்தைப் பிரிந்து வாசித்தபோது, அவர் அன்று சாயரட்சை ஐந்துமணிக்கு வீடு வந்து சேருவதாக அறிந்துகொண்டாள் ருக்மணி.

"இப்பேர்ப்பட்ட துஷ்ட மனிதன் என் எஜமானியினிடம் வந்து சேருவதை விட புகைவண்டி விபத்தில் அகப்பட்டு துர்மரணம் அடைந்தால் நலமாயிருக்கு" மென்று சாபனையிட்டுச் சொன்னாள் அந்த சண்டாள வேலைக்காரி.

சாப்பாடு முஸ்திப்பாயிருக்கிறதென்று கிழவி பங்காரம்மாள் ருக்மணிக்குச் சொல்லவே, அவள் மெத்தையிலிருந்து இறங்கி போசனசாலைக்குச் சென்றாள். வேலைக்காரியும் எழுந்து தன் வீட்டுக்குப்போனாள்.

## HOW TO RAISE OUR STATUS?

## நாம் முன்னேறுவதெப்படி?

### மூன்றாவது வியாசம்.

### நாம் வசிக்கும் இடம், வீட்டின் அமைப்பு.

ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் சிற்சில இடங்களுண்டு. அவ்விடங்கள் நல்லொழுக்கத்திற் கேதுகரமான இடங்களல்ல. அவ்விடங்களில் வசிப்பவர்கள் தேவபத்தியும் தேவ பயமுமின்றி மிருகங்களைப்போல் சீவிப்பார்கள். "சுவாமியைக் கண்டதார்? பூதத்தைக் கண்டதார்?" என்று பிதற்றுவார்கள். வேதவழிப்பாடின்றி நடப்பார்கள். தாய்தந்தையர் பிள்ளைகளை வளர்ப்பதெப்படி யென்று அறியாத குறையால், அவர்களிடம் அடிதின்று புறத்தியாரைச் சாட்சிக்குக் கூப்பிடுவார்கள். பிள்ளைகள் படிப்பும் நல்லொழுக்கமுமின்றி மூத்திரம் ஓடும் சாக்கடைகளிலும், கால்வாய்களிலும் பன்றி குட்டிகளைப்போல் திரிந்தலைவார்கள். வீடுகளில் ஒழுங்கு கிரமம் என்பது கிடையாது. அப்பிள்ளைகள் பகலெல்லாம் வெறிநாய்களைப்போல் திரிந்தலைவது போதாமல், இரவு 10-மணியானாலும் தெருத் தெருவாய்ச் சுற்றிக்கொண்டும், அசுத்த பாடல்களைப் பாடிக்கொண்டும் காலங்கழிப்பார்கள். இவர்களுடைய கோஷ்டத்திற்குப் பயந்து நல்ல வாலிப பெண்கள் தண்ணீரெடுக்கமுதலாய்க் குளங்குட்டைகளுக்குப்போக பயப்படுவார்கள். பெண்டுகளுக்கு அடக்கமென்பது கிடையாது. சற்றுநேரம் வீடடங்கி யிருப்பதென்றால், அவர்களுக்கு ஜெயிலில் இருப்பதுபோல் தான். வீட்டு வாசற்படியைத் தாண்டி தெருவுக்கு வந்து அங்கு பஞ்சாயத்துகூடி கும்மாளம் போடுவார்கள். ஆண்பிள்ளைகளுக்கு நல்ல சம்பாதனை யுண்டென்பது மெய்தான். நியாயம் அநியாயம், தன்சொத்து பிறர்சொத்து என்னும் பேதாபேதம் பாராமல் மெத்த கஷ்டப்பட்டு சம்பாதிப்பார்கள். ஆனால், அத்தனையும் குடியிலும் வீண்செலவிலும் அழித்து எப்போதும் கந்தைத்துணியும் கரிவேஷமுமா யிருப்பார்கள். ஆபத்திற்கென்று கொஞ்சம் மீர்த்து வைக்கும் புத்தி இவர்களுக்குக் கிடையவே கிடையாது. இவர்கள் எப்பிக்கூரியன் தத்துவசாஸ்திரத்தைப் படிக்காவிட்டாலும் அத்தத்துவ சாஸ்திர போதனைகளை ஒரு எழுத்தளவும் குறைவின்றி அநுசரிக்கும் மேதாவிகள். நன்றாய்க் குடிப்பதும், நன்றாய்த் தின்பதும், சளுக்காய் உடுத்துவதுமே இவர்கள் ஆனந்தம். நாளைக் கெப்படி? நாளைக்குச் சுவாமியுண்டு. நாளையை நாளை பார்த்துக்கொள்ளட்டும்; நாளையைப்பற்றி இன்றைக் கென்ன கவலை? இரவு 10-மணியானாலும் சாராயக்கடைக்கு ஊர்கோலமும், சந்திப்பும் நிற்காது. உத்தியோக மிழந்தாலோ அவர்கள் படும் தரித்திரம் சொல்லுந் தரமல்ல. அச்சமயங்களில் கும்பல் கும்பலாய்க்கூடி சூதாடுவார்கள். இப்படிப்பட்ட இடங்களில் வேசிகளும் துன்மார்க்கரும் குடியேறுவதுண்டு. "குடியும், தரித்திரமும் ஒரே தாய்க்குப்பிறந்த இரட்டைப் பிள்ளைகள்" என்னும் அநுபவப் பழமொழியை யாராவது நம்பாமல் சந்தேகங் கொண்டால், இவ்விடங்களைப் பார்த்தால் அச்சந்தேகந் தொலையும். இப்படிப்பட்ட இடங்களி லுண்டான சகல வித தோஷங்களுள் அதிக முக்கியமான தோஷம் யாதெனில், அசுத்த வார்த்தைகள்தான். இதைத் தோஷமென்று சொல்லாமல் சாபமென்றாலும், ஒருவன்

சத்தியத்தின் வரம்பைக் கடந்ததாக புத்திமான்கள் சொல்லமாட்டார்கள். அசுத்த வார்த்தைகள் இந்தியாவின் சாப மென்பது பெரியோர் நிர்மானம். அசுத்தவார்த்தைகள்மட்டு மல்ல, அசுத்த மென்பதே இந்தியாவின் சாபம். தேம்பாவணி "குறுங்கு மந்திரப்படலத்தில்" சத்தனுசு என்னும் பசாசின் வாய்ப் பிறப்பாலேயே நாம் அறிவதுபோல மோகநடத்தைகள், மோக குறிப்புகள், மோகச் சிலைகள், மோகச் சித்திரங்கள், மோகப் பாடல்கள், மோகவார்த்தைகள் இந்துவேதத்தின் லட்சணம். மோகத்திற்கே ஒரு பண்டிகை காமன் பண்டிகை யென்று ஏற்படுத்தப்பட்டு, அன்னுளில் முக்கியமாய் வடஇந்தியாவில் இந்துவேதத்தின்பேரால் அசுத்த வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டுவருகின்றன. இன்னுட்டில் பொதுவாய் இப்படிப்பட்ட அசுத்த வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டு வந்தபோதிலும் விசேஷமாய் மேற்படி இடங்களில் தண்ணிர் குடித்த மாதிரியாய் ஒடிய உதாசனங்களைப் பேசுவார்கள். சந்தோஷத்திற்கு ஒரு கெட்ட பேச்சு, கோபத்திற்கு ஒரு கெட்ட பேச்சு, விசனத்திற்கு ஒரு கெட்ட பேச்சு, விளையாட்டிற் கொரு கெட்ட பேச்சு. இவர்கள் வாய்ப்பிரயோகத்தை விட்டு கைப்பிரயோகம் செய்து, ஏதோ ஒரு அவயவத்தைப் பழுதாக்கிக் கொண்டாலும் தாவிலை. அதில் அவர்கள் வீரத்தன்மை யாவது பலாஷ்டியமாவது விளங்கும். இவர்கள் மலச்சட்டிக் கொப்பான தங்கள் வாய்களைத் திறந்து கக்கும் புழுக்கள் நெளியும் ஊத்தைக் கொப்பான ஒடிய உதாசனங்களைக் காதுகொடுத்துக் கேட்க முடியாது. சுபாவமாய் இப்படிப்பட்ட வார்த்தைகளை வழங்குபவர்கள் குடித்தாலோ அவர்களுக்கு முறை தறை யென்பது கிடையாது. அண்டைவீட்டார் என்னசொல்லுவார்கள், அயல்வீட்டார்என்ன நினைப்பார்கள் என்னும் கூச்சநாச்சம் இலவலேசமும் கிடையாது. அவ்வார்த்தைகளை அழுத்திச் சொல்லி ஆநந்தங் கொள்ளுவார்கள். இப்படிப்பட்ட இடங்களில் இரவு ஆக,ஆக, சண்டை சச்சரவுகள் மும்மரமாகும். போலீஸ்காரர்முதலாய் அவைகளெல்லாம் அவ்விடங்களுக்குச் சாதாரணமானவை யென்று அவ் விஷயங்களில் தலையிடமாட்டார்கள். பிள்ளைகள், வாலிபர்கள் இவ்வார்த்தைகளைக் கேட்பார்கள். அவைகளைப் பற்றிச் சிந்தனை செய்வார்கள். எப்படி, எவ்வித மென்று தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். தாங்கள் அவ்வார்த்தைகளை உபயோகிக்கத் தலைப்படுவார்கள். தறிதலைகளாவார்கள். அரும்பேறுமுன் குறும்புகள் செய்வார்கள். கெட்டழிந்து போவார்கள். கொஞ்சம் பணக்காரர்கள் அவ்விடங்களில் வசிப்பது மெத்த ஆபத்து. அயலி லிருக்கும் ஏழைகள், துன்மார்க்கர்கள் காலைப்பிடித்த அட்டையைப்போல் இவர்களைப் பற்றிக்கொண்டு இவர்களுக்கும், இவர்கள் பெண்டு பிள்ளைகளுக்கும் துர்ப்பழக்கங்களைக் கற்றுக்கொடுத்து காசு, பணம் சம்பாதிக்க வழி தேடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆயத்தத்திற்குப் போகமுதலாய் அஞ்சுவார்கள். ஐயோ! பாவசங்கீர்த்தனத்திற்குப்போய் இரவெல்லாம் கெட்டவார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்து எப்படித்தான் பொழுது விடிந்து தேவநற்கருணை வாங்குவது! அதைவிட சும்மாயிருப்பது தாவிலை யென்று மனக்கடினமாயிருப்பார்கள்.

முன்னுக்குப் போகவேண்டும், சீர்படவேண்டும், நல்ல கிறிஸ்துவர்களாய் சீவிக்க வேண்டும் என்னும் எண்ணம் யார் யாருக்குண்டோ, அப்படிப்பட்டவர்கள் அத்தகையான இடங்களைக் காலில் கண்ட நாகத்தை உதறித் தள்ளுவதுபோல் வெறுத்துத்தள்ளி, நல்லவர்கள், உத்தமர்கள், யோக்கியர்கள் மத்தியில் குடியேற வேண்டும். வாடகை 1 ரூபா அதிகமானலும் பரவாயில்லை; அந்த ரூபாய் வட்டியும் முதலுமாய் மூன்றாறு வரும் நல்லவர்கள் மத்தியில் சீவித்துவந்தால். "பூவோடுகூடிய நாரும் மணம்" பெறும் என்னும் பழமொழியின்படி நாமும் அவர்களுடைய நல்லொழுக்கத்தைக் கண்கூடாய்க் கவனித்துப் பார்க்க, நமது நடத்தையில் மாற்றமுண்டாகும். அதிகம் பேசுவது அவசியமில்லை; ஆனல் இவ்விஷயமாய்ப் பொதுவில் வீட்டுப் பயிற்சியைப் பற்றி ஒரு சங்கைக்குரிய குருவானவர் செய்த உபந்நியாசத்தை அடியில் மொழிபெயர்த்துக் காட்டி இவ்வியாசத்தை முடிக்கிறேன்.



நல்ல குடும்ப சீவியம் புண்ணியப் பயிற்சிக்கு ஆதாரமென்றும், நன்னடத்தைக்கும் ஆத்தும ரட்சண்ணியத்திற்கும் ஏதுகரமான நல்ல இடங்களில் கிறிஸ்துவ குடும்பங்கள் சீவிக்க வேண்டுமென்றும், அப்படிப்பட்ட இடங்கள் திரேகாரோக்கியத்திற்கும் பிள்ளைகளின் உத்தம பயிற்சிக்கும் அநுகூலமானவையாயிருக்கவேண்டுமென்றும் கத்தோலிக்குத் திருச்சபை கற்பிக்கின்றது.

ஆதலால் கிறிஸ்துவ ஏற்பாட்டின்படி நல்ல குடும்ப சீவியத்தில் விளங்கவேண்டிய இலட்சணங்கள் மூன்று. அவையாவன: பரிசுத்தத்தனம்,—தாய் தந்தையர் தங்கள் மக்கள் மட்டில் விவேகத்துடன் காட்டும் அதிகாரம்,—மக்கள் தாய் தந்தையர் மட்டில் காட்டும் கீழ்ப்படிதல்.

### பரிசுத்தத்தனம்.

குடும்பத்தார் யாவரும் ஒரு வீட்டில் ஒற்றுமையாய் வாழ்வதினல், ஒருவர் ஒருவரைச் சங்கிப்பார்களென்றும், அப்படிப்பட்ட சங்கையுடன் ஒருவர் ஒருவரை நேசிக்கும் அன்பிற்கே அன்பென்னும் பெயர் செல்லும் என்றும் விளங்கும். இப்படி ஒருவர் ஒருவர் மட்டில் காட்டும் சங்கை, வணக்கம் என்பதே கிறிஸ்துவ ஸ்திரீ புருஷருடைய சிறந்த அடையாளம். ஸ்திரீகள் புருஷர் தனித்திருக்கும் இடங்களுக்குப் போகலாகாதென்றும், அவர்கள் படுக்கை யறைக்குள் பிரவேசிக்கலாகாதென்றும், அவர்கள் உடுத்தும்போது பார்க்கலாகாதென்றும், அவர்கள் தங்கள் சிநேகிதர்கள் அல்லது அந்நிய புருஷர்களுடன் வார்த்தையாடும்போது தாங்கள் அச் சம்பாஷணையில் கலக்கலாகாதென்றும், அவர்கள் வீட்டிலில்லாத சமயத்தில், அவர்களுடைய பிராண நேசர்கள் வீட்டுக்கு வந்தால் பெரியோர்களில்லாத பட்சத்தில் அவர்களை உபசரிக்கலாகாதென்றும், அவர்களுடன் வீண் சம்பாஷணைக் கிடங்கொடுக்கலாகாதென்றும், உத்தமியென்று நாலு பேர் கண்டு மெச்சும்படி எப்படி பேசுவது, எப்படி நடப்பது, எப்படி சீவிப்பதென்றும் வீட்டில் தான் கற்றுக்கொள்ளுவார்கள். அப்படியே ஆண்பிள்ளைகளும் ஸ்திரீகள் தனித்திருக்கும் இடங்களுக்குப் போகலாகாதென்றும், அவர்கள் உடுத்தும் போது பார்க்கலாகாதென்றும், அவர்கள் தங்களுடைய சிநேகிதிகள் அல்லது அந்நியமாதர்களுடன் வார்த்தையாடும்போது தாங்கள் அச்சம்பாஷணையில் கலக்கலாகாதென்றும் தங்கள்மனைவிமாருக்குத் துரோகம் செய்யலாகாதென்றும் வீட்டில் தான் கற்றுக்கொள்ளுவார்கள். இப்படிப்பட்ட சங்கை வணக்கம் இருந்தால்தான் தகப்பனர், தாயார், புருஷன், பெண்சாதி, சகோதரன், சகோதரி, மற்றும் இன்னின்னுரை இன்னின்ன விதமாய் மதிக்கவேண்டியது, இன்னின்ன விதமாய் நடத்தவேண்டியது, இன்னின்ன விதமாய் நேசிக்கவேண்டியது என்னும் சித்தாந்தம் ஏற்படுகிறது. அதுவே கிறிஸ்துவ நேசம். இப்படிப்பட்ட நேசம், இப்படிப்பட்ட சங்கை, இப்படிப்பட்ட மதிப்பு போனல், அப்படிப்பட்ட குடும்பத்தைப் புத்தியுள்ள மனிதர் கூடிவாழும் குடும்பமென்று சொல்லாமல், மிருகங்கள் கூடியிருக்கும் லாயம் எனத்தகும். குடும்பத்தில் இப்படிப்பட்ட சங்கையிருந்தால், உத்தமமான அன்பென்பது ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அன்புள்ளவர்கள் எங்கும் யாரிடத்திலும் மரியாதையோடு நடந்து நல்ல பேரெடுப்பார்கள்.

### பெற்றோரதிகாரம்.

இதனல் மனிதர்கள் விவேகத்துடன் கட்டளை கொடுக்கவும், குடும்பத்தை ஆளவும் கற்றுக்கொள்ளுகிறர்கள். குடும்பத்தின் தினசரி கருமங்களினல் தங்கள் கடமைஎன்ப தென்ன வென்று பெற்றோர் அறிகிறர்கள். அதாவது, தங்களுடைய குடும்பத்தாருக்காக பாடுபடுவது, அவர்களுடைய நன்மைத்தனத்தை நாடி அவர்களை அடக்கி ஆள்வது. அரசனுக்குப் பிரஜைகள் மேலும், குருவுக்குச் சிஷ்யர்கள் மேலும், எஜமானுக்கு ஊழியர்கள் மேலும் அதிகாரம் இருப்பதுபோலவே, தகப்பனுக்கும் குடும்பத்தின்மேல் அதிகாரமுண்டு. சேரிகளிலும், அயோக்கியர் மத்தியிலும், சதா தரித்திரத்திலும் சீவித்து சரியாய் தெய்வபயத்துடன் வளர்க்கப்படாத பிள்ளைகளுக்குப் பெற்றோரதிகாரமென்

ருல் வெறுப்பு. நாய்களைப்போல் யதேச்சையாய்த் திரிய ஆசை. ஆனால் அவர்கள் நல்ல இடங்களில் வசித்துப் பசியில்லாமல் சாப்பிட்டு, நல்லொழுக்கத்தில் பயிற்சியடைந்தால் குடும்ப சீவியத்தின் மாட்சிமை இன்னதென்று அவர்களுக்குத் தெரியவரும். பெற்றோருக்குப் பணிந்து நடப்பதும், சகோதரர் சகோதரிகளை நேசிப்பதும், சகல பந்துக்களையும் அவரவர்கள் முறை யறிந்து அவர்களைச் சங்கிப்பதும் உலகத்தில் நாம் பாக்கியமாய் வாழ அத்தியாவசியமான காரியங்களென்று கண்டுணர்வார்கள்.

### மக்களின் கீழ்ப்படிதல்.

குடும்ப சீவியத்தினால்தான் சரியான கீழ்ப்படிதல் உண்டாகிறது. அடிமைகள் காட்டும் கீழ்ப்படிதலன்று; ஆனால் மக்கள் காட்டும் கீழ்ப்படிதல். அடிமைகள் காட்டும் கீழ்ப்படிதலில் பயமும் வெறுப்பும் அடங்கி யிருக்கிறது. ஆனால் மக்கள் காட்டும் கீழ்ப்படிதலில் அன்பும் சங்கையும் அடங்கி யிருக்கிறது. பிள்ளைகள் பெற்றோரை எவ்வளவு நேசிப்பார்களோ, அவ்வளவுக்கு அவர்களுக்குக் கீழ்ப்படிய ஆஜரா யிருப்பார்கள். பேற்றோர் விவேகத்துடன் அதிகாரம் காட்டும்போது, பிள்ளைகள் அவ் வதிகாரத்தை மனமார ஒப்புக்கொண்டு அன்போடு அவர்களுக்குப் பணிந்து நடப்பார்கள். ஆதலால் அவர்கள் பெரியவர்களாய், ஒரு எஜமானிடம் ஊழியம் செய்யப்போனாலும் அவனுக்கும் தன்மேல் அதிகாரம் உண்டென்பதை ஒப்புக்கொண்டு அவனுக்குப் பணிந்து நடப்பார்கள். ஆதலால்தான் நன்றாய் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் குருக்களுக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படிந்து நடந்து வருவார்கள். அப்படிப்பட்ட பிள்ளைகளை நல்ல தாய் தகப்பன்மார் வயிற்றில் பிறந்து நன்கு வளர்க்கப்பட்ட பிள்ளைகளென்று யாவரும் வாழ்த்துவார்கள்.

---

### அடக்கம் அவசியம்.

மேற்சொன்னபடி பரிசுத்தத்தனமாய் சீவிக்க அடக்கம் (Privacy) அவசியம். குடும்பத்திற்கு அடக்கம். ஒவ்வொருவனுக்கும் அடக்கம். குடும்ப விஷயங்கள் குடும்பத்திற்குச் சொந்தம். அதைப் பலரிடம் தூற்றுவது சரியல்ல. அந்நியர் நுழைப் பறிய ஆசிப்பதும் நியாமல்ல. இங்கிலீஷ்காரர் தங்கள் வீட்டைக் கோட்டை என்பார்கள். குடும்பமானது தன் சீவியத்தைப் பிறர் அறியாமல் சீவிக்கவும், கண்டவர் போனவர் எல்லாம் நினைத்த வேளையில் வராம லிருக்கவும், பிள்ளைகள் கெட்டவர்களுடன் கூடி கெட்டுப் போகாதிருக்கவும் ஒவ்வொரு குடும்பமும் ஒரு தனி வீட்டில் சீவிக்க வேண்டியது. எல்லாவற்றிற்கும் மேலாய் உள்ளடக்கம் அவசியம். ஆண் பிள்ளைகளுக்கு ஒரு அறை, பெண் பிள்ளைகளுக்கு ஒரு அறை. தாய் தந்தையருக்கு ஒரு அறை. பெற்றோர், கொஞ்சமாவது விவர மறிந்த தங்கள் பிள்ளைகளைச் சமுசாரப் படுக்கையில் சேர்க்கவே கூடாது. இத்தனையாவது குறைந்த பட்சம் அறைகளிருப்ப தவசியம். குடியில் வீண் விரயம் செய்து, ஒரு அறையிலேயே மிருகங்களைப் போல் சீவிப்பவர்கள் எத்தனை பேர்! வயதான தங்கள் மக்களைப் பார்த்து "வீட்டில் படுக்க இடமில்லை; எங்கேயாவது இரவில் இடந்தேடிக்கொள்" என்று வெட்கமின்றி சொல்லும் பெற்றோர் எத்தனை பேர்! அப்படிப்பட்ட பிள்ளைகள் நாய்களைப்போல் இரவில் கண்டவிடந் திரிந்து கஷ்டத்திற்குள்ளாவார்கள். வீட்டில் இடமில்லையென்று தகப்பனார் முதலிய பெரியோர் ஓழிவான நேரங்களில் வீட்டில் தங்காமல் சந்துகளிலும், சாராயக் கடைகளிலும் காலங் கழிப்பார்கள். ஆனதால் குடும்பம் யோக்கியமாய், பாக்கியமாய் வாழ, நாம் வசிக்கும் இடமும், நமது வீட்டின் அமைப்பும், அதன் அறைகளும் எவ்வளவு அவசியமானவை யெனத் தோன்றுகிறது. சிறிய வீட்டில் பிள்ளைகள் சற்று நேரம் சும்மாயிராமல் துரு துரு என்றிருப்பதினால், பெற்றோர் அவர்களை வெளியில் ஓட்டி விடுவதுண்டு. அச் சமயங்களில் அவர்கள் துஷ்டரோடு கூடி கெட்டுப்போவார்கள். ஆனதால் வீடுகள் பெரியவையாயும் பிள்ளைகள் ஆட அதில் முற்றம் உள்ளவையாயும் இருந்தால் விசேஷம். அப்போது பிள்ளைகளைக் கண்ணெதிரில் ஆடவைக்கக் கூடும். அவர்களுக்கும் தீங்குண்டாகாது.

இந்திய கிறிஸ்துவன்



## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### ஏலாக்குறிச்சி மகோற்சவம்.

பாடிப்புகழ்ந்து படர்காவலூர்நங்கை
நாடிவணங்கு நரரெல்லாம் - கேடிலரே
மண்ணவருண் மாசிலராய் வாழ்ந்திவண்மற் [றெப்பிலராய்
விண்ணவருள் வீற்றிருந்தோப்பார்.

சிறப்புற்றோங்குஞ் சோழநாட்டில் திருச்சிராப்பள்ளி ஜில்லா, ஜெயங்கொண்ட சோழபுரந் தாலூக்கா, கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள ஏலாக்குறிச்சி யென்னுங் கிராமத்தில், முற்காலத்தில் செந்தமிழ் தேசிகரும், கலைஞானமணியும், மெய்ம்மறைப் போதகருமாகிய சங். தைரியநாத சுவாமிகளென்னும் கீர்த்திப்பேர்பெற்று விளங்கிய வீரமாமுனிவர்களால் சாலிவாகன வருடம் 1657-ல் அரியனூர் ராசினிலை யிட்டரங்கப்ப மழவராயரிடம் சர்வேசுரன் கோவில் கட்டுவதற்கு, சிலாசாசனமாக வோர் விசால மான ஸ்தலத்தைப்பெற்று, 1729ஆம் அந்த ஸ்தலத்துக்குத் திருக்காவலூரென்னும் மாகிமை தங்கிய பெயர்கொடுத்து, அதில் அர்ச். அடைக்கல நாயகியின் திவ்ய திருநாமத்தால் ஓரலங்கிர்தமான கோவிலைக் கட்டி தேவகிருபை மகிமை பொருந்திய உன்னத அர்ச். அடைக்கல நாயகியின் திருச் சுரூபத்தை மகோற்சவக் கொண்டாட்டத்துடன் அக்கோவிலில் மகாபூச்சிய மேரையாய் ஸ்தாபித்து, தெவிட்டாத மதுரமாய், தெளிந்த கருத்தாய், தேர்ந்த வலங்கிர்தமாய், திவ்ய பேரின்பமாய்த் திருக்காவலூர் கலம்பகம் பாடிப் பணிந்து வணங்கி, திவ்ய பலிபூசையுந் தாமே யர்ச்சித்த காரணமாய், நாளும் அத்திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருவதில் நாளது வருஷம் மே மீ 14-ம் தேதி நடந்த பிரஸ்தாப உற்சவத்தின் காட்சியைச் சொல்லவுந் தரமோ!

மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம் மற்றும் மதுமலர் வாசனைநிறைந்த புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட வோரிமுப்புத் தேரில் தெய்வீகக் கிருபைநிறைந்து வடிவமர்ந்த தேவகன்னியெனும் அர்ச். அடைக்கலநாயகி சந்திரவாகனத்தின் மீது, சூரியவுடைதாங்கி, வான்மீனை முடியாய்ப் புனைந்து எழுந்துவருந் தேரினிருமருங்கும், மற்றும்புடைசூழ்ந்துவரும் அடர்ந்த சனங்களில் பாடுவோர் அப்பரம நாயகியை ஸ்துதித்துப் பாடும் சங்கீத பஜனையின் தொனியும், பக்தர்களந்தப் பரமநாயகியை இரந்து மன்றாடி செபிக்குந் தொனியும், வண்டினங்களின் வீணைவாய்க் குரலினு மினிமையா யிருந்தது. வண்டினங்கள் பாடி மலர் மதுவை யுண்டுகளிப்பது போல பரமநாயகியைச் சூழ்ந்து பணிந்து செபிக்கும் பக்தர்கள் தேவதாயி னிரக்கத்தை நிறைய விண்டு ஆனந்திப்பவர் கரைகவே காட்சி.

அன்று அதிகாலையில் பூசையும் பிரசங்கமும் சங். மரிய ஆரோக்கியநாதசுவாமிகளால் நடைபெற்றபோது கூடியிருந்த ஆயிரக்கணக்கான சனங்கள் பிரசங்கஞ் செய்பவருக்குத் தொந்தரை யின்றியும், பக்தர்களுக் கிடையூறின்றியும், பூசை பிரசங்கம் நடந்தகாலத்தில் அப்பெருங்கூட்டத்தில் சொற்ப சந்தடியும் நேரிடாதிருந்த தானது அப்பரம நாயகியின் கிருபையே.

அன்றதிகாலை முதல் மறுநாள் வரையில் ஜனங்களாற் செலுத்தப்பட்ட காணிக்கை பொருத்தனைகளுக்குக் கணக்குமில்லை. அளவுமில்லை. பலவகை வாத்தியங்களோடு வெடி முழக்கங்களும், பலவகை சாமான்கள் நிறைந்த ஆயிரக்கணக்கான கடைகளில் விற்போர் கொள்வோர் சப்தங்களும், ஆயிரக்கணக்காய்க் கூடிய சவாரி வண்டிகளாலுண்டாகுஞ் சப்தமும், நெய், பால், தயிர், மோர் விற்போ ரோசையும், இரப்போர்க் கன்னமிட அவர்களை யழைப்போர் குரலோசையும், மற்றும்பல தேவதாயின் தோத்திர வோசைகளுஞ் சேர்ந்து கடலொலியை யொக்கும்.

ஆகவே, புண்ணிய வரங்களால் நிறைந்தலங்கரிக்கப்பட்ட வீரமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்காவலூர் கலம்பகத்தில் அவர் புகழ்ந்துரைத்தவண்ணமே காட்சி யென்பதற்கு சந்தேகமுண்டோ?

இந்த மாகிமைதங்கிய திருவிழாவைச் சென்ற 25-வருஷங்களாக வெகு ஊக்கத்துடனும் விமரிசையுடனும், பிரயாசையுடனும் நடத்தி உழைத்துவரும் சங். *G. Rayoust* சுவாமியாரவர்கள் பெருமையை எவரும் புகழத்தக்கதே.

ஏராளமான திருயாத்திரைக் காரர்களின் வசதிக்காக இன்னும் பல கட்டிடங்கள் கட்டி வைப்பதும் எப்பக்கத்திலும் சனங்களுக்குச் சுலுவாய் ஜலம் கிடைக்கத் தக்கவண்ணம் முயற்சியெடுத்து செய்வதும் தர்மவாளர் கடமை.

ஆயினும் தேவ வரப்பிரசாதங்களா னிறைந்தலங்கரிக்கப்பட்டு. அற்புதங்களாற் பிரபலித்த அந்த மாக்ஷிமைதங்கிய திருக்கோவிலில் பிரதிதினமும் திவ்ய திருப்பலிபூசை நிறைவேறிவரும் பக்ஷம் அனேக பக்தர்க ளவ்விடம் குடியேற உதவியாகு மென்பதற்குச் சந்தேகமில்லை. இதை மகிமைதங்கிய மேற்றிராணியாரவர்கள் தயைபுரிய கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும்,

திருயாத்திரைக்காரன்.

---

தூத்துக்குடி

## பரத மஹாஜன பொதுக்கூட்டம்.

நாளது 1916ஸு ஜூன்மீ 18வ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30-மணிக்கு பரத ஜாதித்தலைவமோரவர்கள் மாளிகையில் ஸ்ரீமாந் N. M. ரோச் விக்டோரியா அவர்கள் கௌரவ அக்கிராசனத்தின்கீழ் பரத மஹாஜன பொதுக்கூட்டம் கூடிற்று. இக்கூட்டத்தில் கல்விமான்கள், பிரபுக்கள், வர்த்தகர்கள் ஆகிய மேதாவிகள் பலரும் விஜயஞ்செய்திருந்தனர். அவர்களுள் பிரபல கண்டிராக்டரும் நிலச்சுவான்தாருமாகிய ஸ்ரீமாந் ஜோசேப் சி. மோத்தா அவர்கள் "நமது கடமை" என்னும் விஷயத்தையிட்டு மிக விரிவாகவும் அழகாகவும் பிரசங்கித்து, அதன் முடிவாக தொன்று தொட்டு நங்குலத்திற்கு ஓர் மகிமையாக வாழையடி வாழையாய் வந்துகொண்டிருக்கும் ஜாதித் தலைமையென்னுங் கௌரவ பதவியை ஆதரித்து உற்சாகப்படுத்தி வரவேண்டியது அவசியம் என்ற தீர்மானத்தைப் பிரேரேபிக்க, ஸ்ரீமாந் ஜோசேப் பர்னாந்து அவர்களாலும் சபையாராலும் முறையே ஆமோதித்து ஆதரிக்கப்பட்டது. இரண்டாவதாக, பாண்டியவம்ச பாரம்பரை நூலாசிரியர் ஸ்ரீமாந் சுவர்னம் எட்வார்டு அவர்களால் ஜாதித்தலைமை வரன்முறையைப்பற்றிப் பிரசங்கித்து, காலஞ்சென்றுபோன ஜாதித்தலைவர் தொன் கபிரியேல் தெகுருஸ் லாசர் மோத்தவாஸ் அவர்களின் சிரேஷ்ட புத்திரரும் வாரீஸ்தாருமாகிய தொன் அனஸ்தாசியூஸ் மோத்தா கொறைரா அவர்களே நமது ஜாதித்தலைவராக இருந்து வருகின்றமையான் அவர்களுக்குரிய சுதந்தரங்களை மாமூல்படி செலுத்திவரவேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டதை ஸ்ரீமாந் M. F. ஜாக்ஸன் அவர்களாலும் சபையாராலும் ஆமோதித்து ஆதரிக்கப்பட்டது. மூன்றாவதாக, பிரபல வர்த்தகரும் கண்டிராக்டருமாகிய ஸ்ரீமாந் ஸ்டீபன் சின்னய்யா மோத்த அவர்கள் பட்டாபிஷேக மகிமையைப்பற்றி விஸ்தாரமாகவும் இனிமையாகவும் அநேக மேற்கோள்களோடு பிரசங்கித்து முடிவாக, நமது ஜாதித்தலைவர் தொன் அனஸ்தாசியுஸ் மோத்த கொறைரா அவர்களுக்கு மாமூல்படி பட்டாபிஷேக உத்ஸவம் நடத்திவைக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். இத்தீர்மானம் ஸ்ரீமாந் லாசர் மோத்த அவர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையாரால் மிகுந்த கரகோஷத்துடன் ஆதரிக்கப்பெற்றது. இறுதியில் சன்பிராஞ்சீஸ்கு சவியேர் கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீமாந் அல்பீன் பர்னாந்து அவர்களால் மேற்படி பட்டாபிஷேக உத்ஸவ சம்பந்தமாக நடவடிக்கை முதலியன செய்துகொள்ளும் பொருட்டு, ஓர் கமிட்டி நியமனஞ் செய்யப்பட்டது. இந்நியமனத்தை எல்லாரும் அங்கீகரித்தனர். அப்பால் அக்ராஸனாதிபதியவர்கள் தமது முடிவுரையை சபையார் அடிக்கடி கரகோஷஞ்செய்து ஆநந்திக்கும்படி பேசினர். பிரபுக்களிலொருவரும் கண்டிராக்டருமாகிய ஸ்ரீமாந் M. F. ஜாக்ஸன் அவர்கள் முறையே அக்கிராஸனருக்கும் சபையாருக்கும் வந்தனமளித்து, அக்ராஸனருக்கு மாலை சூட்டினர். அதன்பின் தாம்பூல சந்தன முதலியன வழங்கப்பெற்று, கடவுள் நமதரசரைக் காப்பாராக என்ற ராஜ வாழ்த்துடன் சபை கலைந்தது.

பரதன்.

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

---

**நமது ஜெபமும், கடவுளின் கிருபையும்.**—நமது ஜெபத்தையும், சர்வேசுரனுடைய கிருபையையும் கிணற்றில் தண்ணீர் இறைக்க உபயோகிக்கும் இரு (Buckets) இறைசால்களுக்கு ஒரு மேற்றிராணியார் ஒப்பிடுகிறார். அதெப்படியெனில், ஒரு இறைசால் கீழே போக மற்றொன்று



மேலே வருவதுபோல, நமது ஜெபம் மேலே யெழும்ப, சர்வேசுரனுடைய இரக்கம் நமது பேரில் இறங்குகிறது.

**ஓர் பெரிய உணவு களஞ்சியம்**—ஜர்மனியைச் சேர்ந்த ஹால்பர்ஸ்டாட் என்னும் நகரில் ஓர் பிரமாண்டமான களஞ்சியமானது இந்த யுத்தத்தை முன்னிட்டு ஓர் தளவாடத் தொழிற்சாலையாக மாறியிருந்தது. அத்தொழிற்சாலையில் திடீரென்று தீ பரவிவிடவே 20 லட்சம் மாமிச டப்பிகள் சாம்பலாய்ப் போயின. தீவிபத்தின் காரணத்தை உளவாயறிந்து தகவல் தெரிவிப்போருக்கு இனாம்கள் கொடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**காக்கையின் மாமிஸமும் அதன் முட்டையும்**—ஜர்மனியில் ஜனங்கள் ஆகாரத்துக்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்களென்று நமது நேயர்களே அறிவார்கள். அதற்குத் திருஷ்டாந்தமாகவே விவரங்களும் நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. காகங்களின் மாமிசத்தையும், அவைகளின் முட்டைகளையும் ஆகாரமாகப் புசிக்கும்படி ஜர்மன் மந்திரிமார்கள் ஜனங்களைத் தூண்டுகிறார்களாம். என்ன பரிதாபம்! இதுவும் அக்குடிகளின் துர்க்காலமேயன்றி வேறல்ல.

**மனிதனுடைய நாவு.**—நமது நாவு, நமக்கு இன்றியமையாத உறுப்புகளில் ஒன்று. நாவினால் ருசி பார்க்கிறோம், பேசுகிறோம். நாவின் நிறத்தைக்கொண்டு வைத்தியன் நோவாளியின் வியாதி இன்னதென்று அறிந்துகொள்ளுகிறான். இப்படியே நமது நாவிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளைக் கொண்டு, நமது ஆத்துமத்தின் நிலைமையை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

**புத்திமான் பெரியவன்.**—ஓர் பெரியவரைப் பார்த்து ஒரு பொடியன்: ஐயா, தினசரிப் பத்திரிகையானது அன்றாடம் பிரசுரமாகிற பத்திரிகையா? என்று கேட்டான். அப்போது பெரியவர்: அதற்குச் சந்தேகமா? அதனுடைய பேரே அதைத் தெளிவாய் விளக்கவில்லையா? என்றார். தாங்கள் சொல்லுகிறது சரியானால் (Century) நூற்றாண்டின் பத்திரிகை யென்பதாய் ஒன்று வெளியாகிறதே, அப்பத்திரிகை நூறு வருடங்களுக் கொருமுறைதான் பிரசுரமாகின்றதோ? என்று கேட்டதற்குப் பெரியவர் என்ன பதிலுரைப்பதென்று தெரியாமல் மௌனஞ் சாதித்தாராம்.

**ஓர் அறியாச் சிறுவனின் விண்ணப்பம்.**—ஓர் சிறுவன் தகரத்தால் செய்த (Trumpet) ஊதும் கருவி ஒன்றைத் தனக்கு வாங்கிக் கொடுக்கும்படி தன் தகப்பனை மெத்தவும் தொந்தரவு செய்தான். தகப்பனோ, “நான் வாங்கிக்கொடுத்தால் நீ என்னேரமும் அதை ஊதி என் மண்டை பிளந்துபோகச் செய்வாய்” என்று சொல்லி, அதை வாங்கிக் கொடுக்க மறுத்தான். அப்போது மகன் “ஆஞீ, நான் எப்போதும் ஊதமாட்டேன்; நீங்கள் சுகமாய்த் தூங்கும் சமயத்தில் மாத்திரம் ஊதுவேன்; அப்போது உங்களுக்குத் தொந்தரவு இராது” என்றானாம்

**ஓர் சமர்த்தான வாக்குமூலம்.**—நேப்பின்ஸ், பட்டணத்துப் போலீஸ் கச்சேரியில் சாட்சி சொல்லவந்த ஒருவனை “நீ எங்கே வசிக்கிறாய்?” என்று மேஸ்திரட்டார் கேட்டதற்கு அவன் “நான் ஜென்னாரியோ என்பவனோடு வசிக்கிறேன்” என்றான். “ஜென்னாரியோ எங்கே வசிக்கிறான்?” என்று மறுபடியும் மேஸ்திரட்டார் கேட்க “அவன் என்னோடு வசிக்கிறான்” என்றான். “நீயும் ஜென்னாரியோவும் எங்கே வசிக்கிறீர்கள்?” என்று திரும்பவும் மேஸ்திரட்டார் கேட்டதற்கு “நாங்கள் இருவரும் ஒன்றாய்ச் சேர்ந்து வசிக்கிறோம்” என்றானாம்.

**ஒரு திருடனின் தந்திரம்.**—ஒரு பிரபுவின் வீட்டில் களவாண்ட விலையுயர்ந்த பண்டங்களை யெல்லாம் ஒரு இரும்புப் பெட்டியில் போட்டுத் தன் தோளில் தூக்கிச் செல்லும் திருடன் ஒருவனை வீதியில் கண்ட சிலர் அவனைப் பார்த்து ” நீ எங்கே இப்பெட்டியைச் சுமந்துகொண்டு போகிறாய்?” என்று வினவியபோது, அவன் “நானிருந்த வீட்டில் ஒருவன் இறந்துபோனபடியால் என் சாமான்களை யெல்லாமெடுத்துக்கொண்டு இன்னொரு வீட்டுக்குப்போய்க் குடியிருக்கப் போகிறேன்”

என்றான். அதற்கவர்கள் "அப்படி யானால் நீயிருந்தவீட்டில் யாதோர் அழுகை சத்தத்தையுங் காணோமே" என்று கேட்க, திருடன் "பொழுது விடிந்ததும் அங்கே அழுகை சத்தம் கேட்கப்படும்" என்று சொல்லிவிட்டு தன் வழியே சென்றானாம்.

**அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் சத்தியவேதம் பரம்புதல்.**—அமெரிக்கா ஐக்கிய மகாணங்களில் கத்தோலிக்கு ஜனசங்கியை ஏறக்குறைய 2¼ கோடியென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கே 3 கர்தினால்மார்களும், 14 அதிமேற்றிராணிமார்களும், 102 மேற்றிராணிமார்களும், 17,945 குருக்களும், 6,100 குருப்பட்டத்திற்காக படிக்கிறவர்களும் சத்தியவேத பரம்புதலுக்காக உழைத்து வருகிறார்கள். மேலும் வருஷா வருஷம் ஆயிரக் கணக்காய் பதிதர் சத்தியவேதத்தில் உட்பட்டு வருகிறார்கள். 1905-ம் வருடத்தில் 25,055 பேரும், 1908-ல் 28,789 பேரும், சென்ற வருஷத்தில் 33,247 பேரும், இப்படியாக வருஷத்தில் ஏறக்குறைய 25,000 ம் பேருக்குக் குறையாமல் பதிதர் மனந்திரும்புகிறார்கள். இது அமெரிக்கர்மீது சர்வேசுரன் காட்டும் அன்பின் அறிகுறியல்லவா?

**ஒரு பிச்சைக்காரனும் ஓர் அரசனும்.**—ஓர் எளியவன் ஒருநாள் இஸ்பேயின் தேசத்து அரசனிடம்போய்த் தான் அவ்வரசனுடைய சகோதரன் என்பதாகச் சொல்லித் தர்மங்கேட்டான். அரசன் ஆச்சரியப்பட்டு எப்படி அந்தப் பிச்சைக்காரன் தனக்குச் சகோதரனாயிருக்கக்கூடுமென்று அவனை விசாரித்தபோது, பிச்சைக்காரன் "ஆதாம் ஏவாள் ஆகிற ஒரே தாய் தந்தையருக்கு நாமெல்லோரும் பிறந்தவர்களானதால் சகோதரரல்லவா?" என்றான். இதைக்கேட்ட அரசன் காலணாவையெடுத்து அவனுக்குக்கொடுக்க, பிச்சைக்காரனோ அரசனைப்பார்த்து "உம்முடைய சகோதரனுக்குக் காலணாதானா கொடுக்கிறது? இது சரியான பங்கல்லவே" யென்று முறையிட்டதன்பேரில் "உன்னுடைய மற்றெல்லா சகோதரரும் நான் கொடுத்த அவ்வளவு உனக்குக் கொடுத்தால் நீ என்னிலும் மகாராசனாயிருப்பாய்" என்று அரசன் சொல்லிப் பிச்சைக்காரனை அரண்மனையினின்று துரத்திவிட்டானாம்.

**எல்லா மதங்களும் ஒன்றுதானா?** ஆயிரக் கணக்கான மதக் கொள்கைகளையுடைய நமது இந்து தேசத்தில் "எல்லா மதங்களும் ஒன்றுதான்; எல்லா மதங்களும் மெய்யானவைகள்தான்" என்று ஒருவன் மற்றொருவனை நோக்கி சமாதானஞ் சொல்லிக்கொள்வது எல்லோருக்குத் தெரிந்த விஷயம். "எல்லா மதங்களும் ஒன்றுதானோ?" என்கிற கேள்விக்கு Mr. G. K. Chesterton தகுந்த மறுமொழி கூறுகிறார்; அதாவது: 100 குதிரைகள் பந்தயத்திற்கு ஓட நிற்கின்றன. நூறு குதிரைகளும் பந்தயத்தில் கெலிக்குமோ, அல்லது ஒரே ஒரு குதிரை மாத்திரம் கெலிக்குமோ?" என்பதே. இதுபோல, எல்லா மதங்களும் மெய்யா யிருக்கமாட்டா; ஒரே ஒரு மதந்தான் மெய்யாயிருக்கக்கூடும். ஏனெனில் இன்ன குதிரைதான் பந்தயத்தைக் கெலிக்கும், இன்ன மதந்தான் மெய்யா யிருக்கலாம் என்று சொல்ல நமக்குக் கூடாமையா யிருந்தபோதிலும், ஒரே ஒரு குதிரைதான் பந்தயத்தைக்கெலிக்கும், ஒரே ஒரு மதந்தான் மெய்யானதா யிருக்குமென்று உறுதியாய்ச் சொல்ல நமக்கிடமுண்டு. ஆனபடியால், அந்த ஒரு மெய்யான மதம் இன்னதென்று கண்டுபிடித்து அதில் சேர்வது ஒவ்வொருவனுக்குமுள்ள கடமையாமே.

**நான் இந்தப் பங்கைச் சேர்ந்தவனல்ல, சுவாமீ!**—ஓர் பட்டிக்காட்டான் தன்னூருக்கு வெகு தொலைவிலிருந்த வேறொரு கோவிலுக்குப் போனபோது, அக்கோவில் குருவானவர் சொன்ன பிரசங்கத்தைக் கேட்டிருந்த எல்லோரும் மன முருகிக் கண்ணீர் சிந்தி யழுதார்கள். குருவானவர் சனங்களை யெல்லாம் ஏறிட்டுச் சுற்றிப் பார்த்தபோது இவன் ஒருவன் மாத்திரம் கொஞ்சமும் உருக்கப்படாமல் பிடித்துவைத்த பிள்ளையாரைப்போல் சும்மா உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, அவன் ஒருக்கால் பாவவழியில் நிலைக்கொண்ட கடின இருதய முடையவனா யிருக்கலாமென்று உத்தேசித்து அவனை நோக்கி: நீ மாத்திரம் கடின சித்தனாய் யாதும் சிந்தைப்படாமல் இருக்கிறாயே; உன் காதுக்கு நான் சொன்ன வார்த்தைகள் ஒன்றும் ஏறவில்லையோ? என்றார். அதற்கவன் "நான் இந்தப் பங்கைச்சேர்ந்தவனல்ல, சுவாமீ"! என்று பதிலுரைத்தான். இவனைப்போலவே அனேகங் கிறிஸ்துவர்களும் இந்தப் பிரசங்கத்தை குருவானவர் இன்னாரின்னாரைக் குறித்துச்சொல்லுகிறார் என்றும், பிரசங்கிக்கிற குருவானவரின் பங்குக்குத் தாங்கள் புறம்பானவர்களென்றும் எண்ணி வீணே மோசம் போகிறார்கள்.



**பாவசங்கீர்த்தனஞ் செய்யப்போய்ப் பாதரக்ஷையைக் களவாண்டவன்.**—ஓர் குருவானவர் தமக்கிருந்த சுகயீனத்தால் தம்முடைய அலுவலைச் செய்யக்கூடாதவராய்க் கட்டிலில் படுத்திருந்தார். அவர் படுத்திருந்த கட்டிலுக் கடியில் தாம் புதிதாய் வாங்கின பாதரக்ஷையை கழற்றி வைத்திருந்தார். இதைக் கவர்ந்துபோகவென்று அங்கு வந்த ஓர் திருடன் படுத்திருந்த குருவானவரண்டை போய்த் தனக்குப் பாவசங்கீர்த்தனங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கட்டிலண்டை முழங்காலிலிருந்து பாவசங்கீர்த்தன மந்திரஞ் சொல்லுகிற ஜாடையாய்த் தலைகுனிந்து கட்டிலுக் கடியிலிருந்த மேற்சொன்ன பாதரக்ஷையை யெடுத்துத் தன் மேற்சட்டைக்குள்ளே மாட்டியிருந்த தோற் பையில் போட்டுக்கொண்டு, தலைநிமிர்ந்து, பாவசங்கீர்த்தனஞ் செய்யத் தொடங்கித் தானொரு பாதரக்ஷையைத் திருடினதாகத் தெரிவித்தான். உடனே குருவானவர் "நீ யந்தப்பொருளைச் சொந்தக்காரனுக்குத் திரும்ப கொடுத்தாலொழிய உனக்குப் பாவபொறுத்த லாசீர்வாதங் கொடுக்கமாட்டோம்" என்றார் அப்போது திருடன் குருவரனவரை நோக்கி "சுவாமீ உங்களுக்கு அந்தப் பாதரக்ஷையைக் கொடுத்துவிடுகிறேன்" என்றான். அதற்குக் குருவானவர் "அந்தப் பாதரக்ஷை நமக்கு வேண்டாம், அது யாருக்குச் சொந்தமோ அவனுக்கே கொடுத்துவிடு" என்றார். அப்போது திருடன் "சுவாமீ பாதரக்ஷைக்குச் சொந்தக்காரர் அதைத் தனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்" என்றுரைக்க, குருவானவர் "அப்படியானால் அதை நீயே வைத்துக்கொள்" என்று சொல்லி அவனுக்குப் பாவப் பொறுத்த லாசீர்வாதங் கொடுத்து அவனை யனுப்பிவிட்டார். இவனைப்போலவே குருக்களை ஏமாற்றி, பாவப் பொறுத்தலடையும் கிறிஸ்துவர்களு மிருக்கிறார்கள்.

**கோவளம் அர்ச். உத்தரியமாதா திருநாள்.**—கோவளத்திலிருக்கும் அர்ச். உத்தரியமாதா தேவாலயத்தில் வருஷாந்திரம் நடந்தேறிவரும் மகோற்சவம், நாளது 1916ஞ ஜூலையீ 6உ யாகிய வியாழக்கிழமை சாயரட்சை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, பிரதிதினம் காலை 7-மணிக்கு திவ்ய பூசையும், மாதாவின் சுரூப ஆசீர்வாதமும், சாயரட்சை 6-30-மணிக்கு ஜெபமாலையும், பிரார்த்தனையும், திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் நடக்கும். ஷை மாதம் 14உ வெள்ளிக்கிழமை இரவு அர்ச். லூர்துமாதா தேர் சுற்றுப்பிரகாரமும், 15உ சனிக்கிழமை சாயரட்சை பெரிய வெஸ்பராவும், பிரசங்கமும், திவ்யநற்கருணை ஆசீர்வாதமும், அலங்கிர்தமான தேர்கள் எழுந்தருள்படியும் நடைபெறும். மறுநாள் 16உ ஞாயிற்றுக்கிழமை காலை தேர்கள் எழுந்தருள்படியும், பெரிய பாட்டுபூசையும், திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் நடந்தேறும். வருஷாவருஷம் சென்னப்பட்டணத்திலிருந்தும் இன்னும் பல ஊர்களிலிருந்தும் பல ஆயிரம்பேர்கள் கோவளத்தில் அர்ச். உத்தரியமாதாவின் ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு கொண்டாட்டங்களைத் தரிசித்து அந்தச் செல்வநாயகியின் ஆசீர்வாதங்களைப் பெற்று திரும்புகிறவர்களின் பாக்கியமே பாக்கியம். இவ்வருஷத்திலும் அவர்கள் தங்கள் பரமதாயின் திருநாளை இன்னும் அதிக சம்பிரமமாயும், சிறப்பாயும் கொண்டாடும்படி அவர்களுக்கு நல்வரவு கூறி அழைக்கின்றோம். திருவிழாவுக்கு வருகிற ஜனங்கள் தங்குகிறதற்கு சௌகரியமான சத்திரமும் கிராமத்தில் போதுமான வீடுகளும் கிடைக்கும்.

ச. மரியானந்த சுவாமிகள்,
விசாரணை குரு,
கோவளம்.

## தேவை.

லோயர் செக்கண்டரி பரீட்சை (Lower Secondary) கொடுத்தவர்களும், (Qualified) போதனு முறையில் தேர்ச்சி யடைந்தவர்களுமான இரண்டு உபாத்திமார்கள் 50ரூ.,40ரூ. சம்பளத்தில் தேவை. இன்னும் இவர்கள் (Normal Training) நார்மல் டிரேயினுங்கு முள்ளவர்களாயிருந்தால் உத்தமம். அவர்களுடைய பிரயாசைக்கும் உழைப்புக்குந் தக்கபடி சம்பளம் அதிகரிக்கும். இவர்களிருவரும் போதனு முறையிற் தேர்ச்சியடைந்துள்ள புருஷன் பெண்சாதியா யிருந்தால் மிக்க அநுகூலம். புருஷனுனவர் (Drill & Gymnasium) டிரில், ஜிம்னேசியம் கற்றுகொடுப்பதிலும் தேர்ச்சி யடைந்திருந்தால் இன்னும் ரூ. 20 கூட கொடுக்கப்படும். பிரியமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக் கெழுதிக்கொள்ளவும்:

**Rev. Fr. F. M. Hervy,**
St. Xavier's Tamil Church,
*Mandaly, Burma.*

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினுலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.**

### நன்மரண அறிக்கை.

உலகெல்லா மொருங்கு வாழ்த்தும் ஒரு பரன் திருத்தாளின் பாத கமலத்தைச் சிரமேற்கொள்ளும் திருபுத்தக்துறையின் மிக்கேல் பெர்நாந்து அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், இராஜாக்கள் மங்கலம் ஜேசுதாசன் விக்டோரியா அவர்களின் பத்தினியுமாகிய ஸ்ரீமதி சந்தனுள் பர்ஞந்தாள் என்ற மாதுஇரத்தினம். நிகழும் 1916-ம்ஞு மேமீ 27உ நடப்புவியாதியால் பரலோக பிராப்தியானுர். மரணத்துக்குத் தம்மை நன்மனதோடு கையளித்துவிடுவது மாத்திரம் போதுமென்றிராமல் அதை ஆவலோடெதிர்பார்த்து மிருந்தனர். மோக்ஷத்தின் பரம சந்தோஷத்தை நாம் அர்ச். சின்னப்பரைப்போல் அறியக்கூடுமாயிருந்தாலல்லோ நாமும்பரவசமாயிருந்து அதை ருசி பார்த்துக்கொண்டு சர்வேஸ்வரன் தம்மை நேசிக்கிறவர்களுக்கென்று ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற ஆனந்த சந்தோஷங்களை "மனிதர் கண்கண்டதில்லையே. காது கேட்டதில்லையே, இருதயம் உணர்ந்ததில்லையே" என்று கூவுவோம். 2-கொரி 12-4.) இப்படியே இவ்வுத்தம மாதுஇரத்தினமும், தமதரிய காதலரையும் அருமையுடனீன்ற புத்திரரையும் தாய் சகோதரரையும் அவனியில் விட்டுவிட்டு அம்பரன் திருவடியை ஆவினர்:

சர்வ வல்ல சர்வேஸ்பரன் இவ்வாத்துமத்துக்கு நித்திய பிரகாசத்தைக் கொடுப்பாராக. ஒரு பர. பிரி. திரி. சொல்லவும்.

சகோதரியை இழந்து துன்புறும்,
தோமாஸ் பர்ஞந்து.

### பிரார்த்த.

காலஞ்சென்ற என் தகப்பன் ஹேமாதிரி இராயலு பந்துலு, என் தாயார் ஹேமாதிரி சார்தம்மாள், என் தமயனுர் ஹேமாதிரி ஜோசேப் பந்துலு, என் அண்ணியார் ஹேமாதிரி கமலம்மாள் இவர்களுடைய ஆத்துமங்களின் இளைப்பாற்றிக்காக 1 பர., 1 பிரி., 1 திரி. வேண்டிக்கொள்ளும்படி பிரார்த்திக்கின்ற

ஹேமாதிரி அமிர்தசாமி பந்துலு,
கிரியான் எஸ்டேட், } உபாத்தியாயர்.
பினங்கு. }

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌண்ட்ரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய் அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக்கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந் தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 4101-9-6. ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு டை கோவில்



வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந் தொகையாகுமே. ஆகவே. அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பக்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து டை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில்,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 4,101 | 9 | 6 |
| ஓர் நன்கொடை, கல்கத்தா | 5 | 0 | 0 |
| ,, ,, டேய்பிஸ் | 10 | 2 | 0 |
| ஆக மொத்தம், | 4,116 | 11 | 6 |

## சென்னப்பட்டணத்தில் ஒரு சத்திரம் தேவை.

சென்னப்பட்டணத்தில் இந்திய கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கென்று ஒரு சத்திரம் சாவடி கிடையாது. இந்துக்கள் மகம்மதியர் முதலானோருக்கோ எங்கு பார்த்தாலும் சத்திரமும், சாப்பாட்டு விடுதியும், டீகிளப், காபிகிளப் முதலியனவும் ஏராளமா யுண்டு. கோர்ட்டு வியாஜ்ஜிய விஷயமாயாவது, வைத்திய சிகிச்சைக்காகவாவது, வியாபார சம்பந்தமாயாவது அல்லது படிப்பு விஷயமாயாவது ஒவ்வொரு நாளும் சென்னைக்கு வருகிற கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் எத்தனையோ பேர். இப்படி வருகிற நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமில்லாமலும், தண்ணீர் குடிக்கத் தாவில்லாமலும் தயங்கித் தவிக்கின்றுர்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்பது பல நாள் பிரயத்தனம். பெரிய கட்டிடமொன்று பட்டணத்து மத்தியில் கட்டவேண்டுமென்பது எல்லோருடையவும் எண்ணம். ஆனுல் இந்த எண்ணத்தை நிறைவேற்ற மிகுந்த திரவியம் வேண்டும். அவ்வளவு திரவியஞ் சேகரஞ்செய்து காரிய முடிக்கவேண்டுமானுல் அதிக நாளும் செல்லும். ஆனது நிமித்தம் "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்பதுபோல தற்காலம் ஜியார்ஜடவுனுக்குள் ஒரு சிறு வீடாவது வாங்கி, அதில் ஒரு விடுதி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இதற்குக் குறைந்த பட்சம் 10,000 ரூபாயாவது வேண்டும். இத்தொகை நமது பொதுஜன நலத்தை விரும்பும் கத்தோலிக்குக் கனதனவான்களிடமிருந்து தான் வரவேண்டும். இதை வசூல் செய்வதற்காக இதனடியில் குறிக்கப்பட்டுள்ள மெம்பர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் முயற்சிசெய்து வருகிறுர்கள். இவர்கள் தங்களுக்குள்ளேயே சிறுகச்சிறுக சென்ற சில மாதங்களாய்ச் சேகரஞ் செய்திருக்கிற ரூபாய் 535. இச் சென்னை இராஜதானி முழுவதிலும், இலங்கை, பர்மா, சிங்கப்பூர், சைகோன், மோரிஸ், நெட்டால் முதலிய பல தேசங்களிலுமுள்ள கத்தோலிக்குச் சகோதரர்களெல்லாரும் இக் கைங்கரியத்துக்கு கைகொடுத்து, தங்கள் தங்களாலான மட்டும் பொருளுதவிசெய்து காரியத்தை முடித்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள். இந்தச் சத்திர தருமத்துக்காக பணம் அனுப்புபவர்கள், மதராஸ் வட ஜியார்ஜடவுன் மோட்சராக்கினி மாதாக்கோவில் விசராணை குரு, சங். எல். எக்ஸ். பெர்நாந்தீஸ் சுவாமிகளுக்கு அனுப்பவேண்டும். (*Revd. Father L. X. Fernandez, Vicar, Assumption Church, North George-town, Madras.*) பணங் கொடுப்பவர்கள் பேரும், கொடுக்குந் தொகையும் இப்பத்திரிகையிலும். "கத்தோலிக்கு நேசன்" பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

| | ரூ. அ. ப. |
|---|---|
| ஏற்கெனவே வரவேற்கப்பட்ட தொகை. | 535—0—0 |
| பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகளால் ஏப்பிரல்மீ வரவு | 30—0—0 |
| do மேமீ do | 30—0—0 |
| do ஜூன்மீ do | 30—0—0 |
| Mr. ஏ. சுவாமிக்கண்ணுப் பிள்ளை சப் அசிஸ்டன்டு சர்ஜன், நாயுடு பேட்டை | 5—0—0 |
| ஆக மொத்தம், | 630—0—0 |

சங். L. X. பெர்நாந்தீஸ்.
பி. ஜெகராயலு செட்டியார்.
டி. எம். சவரிமுத்துப் பிள்ளை.
டி. எம். மாணிக்கம் பிள்ளை.
டி. எஸ். ஏ. மாணிக்கம் பிள்ளை.
டி. ஏ. தோமாஸ் பிள்ளை.
எம். பி. குழந்தைசாமிப் பிள்ளை.
டி. குழந்தைசாமிப் பிள்ளை.

## அழகான காலண்டர்களும் படங்களும் இனாம்.

கீழ் குறிக்கப்பட்டிருக்கும் சரக்குகளில் ஒரே தடவையில் ரூபாய் 3-க்கு குறையாமல் வாங்கினால், ஒரு காலண்டராவது அல்லது படமாவது இனாமாகக் கொடுக்கிறோம்.

"ஸ்டிரெங்த்தோஜன்" (Strengthogen) இந்த திவ்வியமான ஔஷதம் தேக பலவீனம், நரம்பு தளர்ச்சி, மூளை பலயீனம், ஞாபகமின்மை. இரத்த குறைச்சல் இரத்த கெடுதியால் உண்டாகும் எல்லாவித வியாதிகள். இவைகளையெல்லாம் குணப்படுத்தி அதிசயிக்கத்தக்க விதமாய் இரத்தத்தை விர்த்திசெய்யும். வீரிய விர்த்திக்கு முதன்மையான ஔஷதம். விலை புட்டி 1-க்கு ரூபா 2 4 0. தபால் பாக்கிங் கூலி தவிர.

டாக்டர் பார்த் என்பவரின் சர்வ படை சங்காரி.—இதை யுபயோகப்படுத்தினால் எவ்விதத்திலும் தீராத படைகள், தடிப்பு படைகள், படர்தாமரை, எச்சிற்றேம்பல், இன்னும் அநேகவித படைகள், தேம்பல்கள், வண்டுகடி, தேகஊரல், நமைச்சல், சொறி இவைகள் எல்லாம் கண்டிப்பாய் குணமாய்விடும். மறுபடியும் வரவேவராது. ஆயிரக்கணக்கான நற்சாட்சிப்பத்திரங்கள் இருக்கின்றன. விலை பெட்டி 1-க்கு அணா 12, தபால் பாக்கிங்கூலி தவிர.

முதல்தரம் அயதிராவகம் விலை புட்டி 1-க்கு ... ரூபா 2 12 0
காஷ்மீர் கூந்தல் எண்ணெய் நம்பர் 100 விலை புட்டி 1-க்கு அணா 8
மல்லிப்பூ சோபு கேக் 1-க்கு அணா 6
வெட்டிவேர் சோபு கேக் 1-க்கு அணா 8. இவைகளுக்கு தபால் பாக்கிங்கூலி வேறு.

எமது விலாசம்:—

பீ. எஸ். பொம்மையா அண்டு கோ.
தபால் பெட்டி, 208, மதராஸ்.

---

நாய்களுக்கு மருந்து! நாய்களுக்கு மருந்து!!

நாய்களை வளர்க்கிற ஒவ்வொரு வீட்டிலும் இம்மருந்து முக்கியமாய் இருக்கவேண்டியது.

இதனால் சகலமான அன்பர்கட்கும் தெரிவிப்பது. நாய்களுக்கு உண்டாகும் சகலவிதமான நோய்களையும், சொறி, சிரங்குகளையும். சொஸ்தப்படுத்த வெகுவாய் தீர்ந்த பண்டித ஆராய்ச்சி செய்து இம்மருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. நாய் போஷகர்கள் தங்களின் நாய்களுக்கு எதாவது பிணிகள் கண்டு தெரிவித்தால் தகுந்த ஔஷத மனுப்பப்படும். மற்றும் நாய்கள் 2-3 நாட்கள் தீனி சாப்பிடாமலிருப்பினும் அதற்கு மருந்தனுப்பப்படும் (Bull dogs) புல் நாய்களுக்கு கண்ணில் சதி வளர்ந்திருப்பினும் இம்மருந்தினால் சொஸ்தமாக்கப்படும். இம்மருந்து எல்லாவிதமான நாய்களின் பிணிகளையும் தீர்க்கவல்லது. அனேகரால் நன்கு மதிக்கப்பெற்றது. மருந்து பிரயோகிக்கும் முறையை மருந்தோடு தெரிவிக்கப்படும். முன்பணம் கட்டியாவது வி. பி. மூலியமாவது மருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டப்பி ஒன்றுக்கு வி. பி. யுள்பட ரூபா 1 4 0
1 டெஜன் டப்பிகளை மொத்தமாய் வாங்கினால் ,, 10 0 0

தேவையானவர்கள் கீழ்கண்ட விலாசதாரரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

J. A. சாமி,
242, ஓல்ட் பூர் அவுஸ் ரோட்,
பெங்களூர்.

---

## கவனிப்பு.

### சில காப்பிகள்தான் இருக்கிறது.

சங். சாங்கோபாங்க சுவாமிகள் அருளிச்செய்த புராதிம-பச்சிம காண்டங்கள் என்னும் பழய புதிய ஏற்பாட்டின் வேத சரித்திரங்களை (Old and New Testaments narratives) திருஷ்டாந்தங்களாலும் உபமானங்களாலும், வியாக்கியானங்களாலும், பொருட்சுவை சொற்சுவையுடன் செய்யப்பட்டுள்ளது. இவ்வரிய வேதநூல் சென்னை அதிமேற்றிராணியாராகிய மகா வந்தனைக்குரிய J. Aelen ஆண்டவர் அளித்த உத்தாரப்படியும், தென் இந்தியா இலங்கையிலுள்ள மேற்றிராணிமார்களின் அனுமதியின்படியும் இரண்டாம் பதிப்பாக உயர்ந்த காகிதத்தில் சில படங்களுடன் அச்சியற்றப்பட்டது. இப்பிரபந்தத்தை வாசிப்பவர்கள் எல்லோரும் வேத உண்மையை அறிந்து சத்தியநெறியில் தேறி ஞான மகிழ்ச்சியை அடைவார்கள்.

இரு காண்டங்களின் விலை ரூ. 1 8 0. உள் நாடுகளுக்குத் தபாற்செலவு 0 4 0 அர்ச். சூசையப்பர் கலம்பகம் அணா 0 1 0. தபாற்செலவு 0 0 6. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இப்போது வாங்குகிறவர்களுக்கு அர்ச். சூசையப்பர் கலம்பகம் ஒரு புத்தகம் இனாமாக கொடுக்கப்படும்.

ஆ. சூசை அண்ணாதுரை,
Publisher,
6-வது அப்பாவுபிள்ளை சந்து, ராயபுரம், மதராஸ்.




"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.

புத்தகம் 14. | ஆகஸ்டு, 1916. | இலக்கம் 8.

## THE POPE & THE WAR.

## நமது பரிசுத்த பிதாவும் யுத்தமும்.

நமது பரிசுத்த பிதாவாகிய 15-ம் ஆசீர்வாதப்பர் திருச்சபைக்குத் தலைவராகத் தெரிந்துகொள்ளப்பட்ட அக்ஷணமுதற்கொண்டே, உலகத்தில் நாகரீகத்திலும், செல்வத்திலும் சிறந்து விளங்கும் ஐரோப்பா கண்டத்தைச் சீர்குலையச்செய்யும் நிகழும் கொடிய யுத்தம் இவரையும் பிடிக்கத் தொடங்கிற்று. இவர் அர்ச். இராயப்பருடைய சிம்மாசன மேறிய நான்காம் நாளே, ஐரோப்பாவிலுள்ள மன்னர்களுக்கும் தேசாதிபதிகளுக்கும் அன்பும் அமிர்தமும் பொருந்திய மொழிகள் நிறைந்த ஒரு நிருபமெழுதி, அவர்கள் எல்லோரும் தங்கள் கடமைகளைச் சரிவர உணரவும், சர்வேசுரன் இக்கொடிய யுத்தத்தை யொழித்து உலகத்துக்குச் சமாதானத்தை கிருபை செய்தருள அவர்களெல்லோரும் தம்முடன் ஒன்றுசேர்ந்து அவரைப் பிரார்த்திக்கவும் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

ரீம்ஸ் அதிமேற்றிராசனக் கோவில் இடிபட்டுப் பாழாய்ப் போனதைப் பற்றியும், பிராஞ்சு தேசம் அனுபவிக்கும் கஷ்டநஷ்டங்களைப் பற்றியும் வெகு துயரப்பட்டு, அப்பட்டணத்து மேன்மை தங்கிய கர்தினால் அதிமேற்றிராணியாருக்குத் தாம் அநுதாபக் கடிதமெழுதினபோதும், கொலோனியா, அந்திவாரி பட்டணங்களின் மேற்றிராணிமார், யுத்தத்தில் சிறைப்பட்ட போர்வீரர்கள் விஷயமாக எடுத்துக்கொண்ட சிரமத்துக்காக அவர்களுக்கு நன்றியறிதல் கூறினபோதும், இப்படிப்பட்ட அநேக இதர சமயங்களிலும், சமாதானத்துக்காக சர்வேசுரனை எப்போதும் மன்றாடிவா, இவர் அவர்களுக்கு நினைப்பூட்டத் தவறினவரல்ல.

1914ஸு நவம்பர்மீ சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாளன்று அவர் எழுதிய நிருபத்தில், மன்னர்களும், அரைத்தனத்தார்களும் அவரது குரலுக்குக் காது கொடுத்து, தங்களுக்குள்ள விவகாரங்களைத் தீர்த்துக்கொண்டு, தங்கள் தங்கள் பிரஜைகளுக்குச் சமாதான பாக்கியத்தைக் கொடுக்கும்படிக்கும், அரசரும் குடிகளும் நீதி வழுவாது சன்மார்க்க நெறி

யில் நடக்கும்படிக்கும் தூண்டி வந்தார். மேலும், சென்ற வருடம் ஜூலை 28உ யாகிய இந்த யுத்தம் தொடங்கின வருஷாந்திர நாளன்று, சதா காலம் சுயஞ்சீவியரான சர்வேசுரனுடைய நாமத்தின் பேராலும், மனிதனுடைய ஈடேற்றத்திற்காகச் சிந்தப்பட்ட விலை மதியாத அவருடைய திரு இரத்தத்தின் பேராலும், யுத்தத்தில் கை கலந்திருக்கும் தேசாதிபதிகளுக்கு அவர் எழுதிய நிருபத்தில், யுத்த களத்தில் சிந்தப்படுகிற இரத்தம் தங்கள் சகோதரர்களுடையதென்று அவர்களை நினைவு கூரச்செய்து, ஏராளமான உயிர்ச் சேதத்தை விளைவிக்கும் இம்மகா கொடிய யுத்தத்தை நிறுத்த அவர்கள் முயற்சியெடுக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்களிற் பெரும் பான்மையோர் இச் சமாதானக் கூக்குரலை விபரீத அருத்தப்படுத்தினார்கள். ஆயினும் நமது பரிசுத்த பிதா சற்றும் மனஞ் சலியாமல் கஸ்தி துன்பம் அநுபவிக்கிறவர்களுக்கு ஆறுதலும், தஞ்சமும், நம்பிக்கையுமாயிருந்து வருகிறார். அப்படியே, பெல்ஜியம், ரீம்ஸ், பாரீஸ் முதலிய விடங்களின் மேன்மைதங்கிய கர்தினால் மேற்றிராணிமார்களுக்கும், பாழாய்க் கிடக்கும் போலாந்து தேசத்தின் அதிமேற்றிராணியாருக்கும், கிராக்கோ, லக்ஸம்பர்க் மேற்றிராணிமார்களுக்கும் ஆறுதல் சொல்லி யிருக்கிறது மல்லாமல், லூவேன் பட்டணத்து புத்தக சாலையைத் திரும்பவும் ஸ்தாபிப்பதில் தாமும் உதவி செய்வதாகவும் பெல்ஜிய தேசத்து மந்திரிக்கு வாக்களித்திருக்கிறார்.

சென்ற வருடம் கர்த்தர் பிறந்த பண்டிகை நாளன்று சண்டையைச் சற்று நிறுத்தும்படி தேச அதிபதிகளை இவர் கேட்டுக் கொண்டதற்கு, அவர்களுக்குள்ளிருக்கும் சிற்சில விவகாரங்களினிமித்தம் இவருக்கு அவர்கள் காது கொடாமற் போனபோதிலும், யுத்தத்தில் வெகுவாய்க் காயப்பட்டு சிறைப்பட்ட போர்வீரர்கள் அவரவர்கள் சுய தேசம் போய்ச் சேரும்படி சிபார்சு செய்ததில் அவர் முற்றிலும் அனுகூலமடைந்தார். ஏனெனில், நமது சக்கரவர்த்தியும், ஜெர்மனி, ஆஸ்திரியா, ருஷியா, ஜப்பான் சக்கரவர்த்திகளும், பிராஞ்சு தேசாதிபதியும், பெல்ஜிய, செர்விய தேச மன்னர்களும் துருக்கி சுல்தானும் அவருடைய பிரேரபணைக்கு முழு மனதோடு இணங்குவதாக வாக்களித்தார்கள். மேலும், இராணுவங்களில் போர்வீரர்களுடைய சுக நிலைமையைச் சீர்ப்படுத்துவதிலும், காயப்பட்டு சிறைப்பட்டிருக்கும் போர்வீரர்களுக்கும், அவரவர்கள் பந்து மித்திரர்களுக்கும் சமாச்சாரப் போக்குவரத்து ஸ்தாபிப்பதிலும் அதிக சிரத்தையெடுத்துக்கொண்டார்.

இது நிற்க, துருக்கி ஏகாதிபத்தியத்திற் குட்பட்டிருக்கும் ஆர்மீனிய கிறிஸ்துவர்களின் நிலைமையைப்பற்றித் தமக்கு அடிக்கடி தெரிவிக்கும்படிக்கும், அவர்களுடைய நன்மைக்காக துருக்கி துரைத்தனத்தாருடன் கலந்து பேசும்படிக்கும், கான்ஸ்தாந்திநோப்பிளிலிருக்கும் தமது ஸ்தானபதிக்குக் கட்டளை கொடுத்ததுமல்லாமல், தமது கைப்பட சுல்தானுக்கு ஒரு நிருபமும் எழுதியனுப்பினார். இது விஷயத்திலும் அவர் அனுகூலமடையாமற் போனதில்லை.

ஜெர்மனியரால் கைதி செய்யப்பட்ட போர்வீரர்களிற் சிலர் தப்பியோடுவதற்கு உடந்தையாயிருந்த சில பிராஞ்சு, பெல்ஜியபிரபுக்களும், பெருமாட்டிகளும் மரண தண்டனை விதிக்கப்பட்டார்களென்ற செய்தி ஐரோப்பா முழுதும் பரவவே, பல விடங்களிலிருந்து, முக்கியமாய் இங்கிலாந்து, பெல்ஜிய முதலிய தேசங்களிலிருந்து இவரிடத்திற்குப் பிரதிநிதிகள் சென்று, மரண தண்டனைக்குள்ளாயிருந்த அவர்களை விடுவிக்க ஜெர்மன் சக்கரவர்த்திக்குச் சிபார்சு செய்ய இவரைக் கேட்டுக் கொண்டார்கள். இவரும் கொலோன் பட்டணத்து ஜெர்மன் கர்தினாலாண்டவர் மூலமாய் கெய்ஸரை அவ்விதம் கேட்டுக் கொள்ளவே, இவனும் இவ்விஷயத்தைத் திரும்பவும் சரிவர விசாரிக்கிற வரையிலும் தண்டனையை நிறுத்திவைப்பதாகப் பதிலளித்தான். இதன் முடிவென்ன வென்றால், தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 8-பேர் விடுதலையாக்கப்பட்டனராம்.

மேலும், யுத்தத்தில் கைதிசெய்யப்பட்ட போர்வீரர்களடங்கிய இராணுவங்களில் ஞாயிற்றுக்கிழமைகளை அனுசரிக்க



அந்தந்த துரைத்தனத்தார்கள் அநுமதி கொடுக்கவேணுமென்று இவர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கும், அவர்களிற் சிலர், தாங்கள் அப்படியே செய்துவருகிறதாகவும், சிலர் இவருடைய வேண்டுகோளுக்கு இணங்குவதாகவும் தெரிவித்தார்கள்.

கடைசியாக யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்காகவும், சிதறுண்டு போனவர்களுக்காகவும் இவர் எடுத்துக்கொள்ளுகிற தந்தைக்குரிய சிரத்தையானது மிகவும் பாராட்டப்படத் தக்கது. காயம்பட்டவர்களையும், சிதறிப்போனவர்களையும் விசாரித்து அவரவர்களுடைய பந்து மித்திரர்களுக்கு சமாச்சாரம் அறிவிக்கும்பொருட்டு ஒரு விசாரணைச் சங்கமும் ஏற்படுத்தியிருக்கிறார். இம்மகா யுத்தத்தில் வெகு கஷ்டமடைந்து உலகத்தின் எத்திசையிலுமிருந்து அநுதாபம் பெற்றிருக்கும் போலாந்து தேச யுத்த நிவாரண நிதிக்கு இவர் 25,000 கிரவுன் கொடுத்து, உலகத்திலுள்ள சகல மேற்றிராணிமார்களும் போலாந்துதேசத்திற்காக பண உதவி செய்யும்படி ஒரு நிருப மெழுதினதுமல்லாமல் ஆஸ்திரிய, ஜெர்மன், ருஷியா ஆதீனத்துக்குட்பட்ட கத்தோலிக்க மேற்றிராணிமார்களைப் போலாந்து விஷயத்தில் கவலையெடுத்துக்கொள்ளவுங் கேட்டுக் கொண்டார். போலாந்து தேசத்தாரும் உலகத்திலுள்ள சகல கத்தோலிக்கர்களிடத்தில் பொருளுதவிக்காக செய்துகொண்ட விண்ணப்பம் வீணாகவில்லை.

இப்படியாக நம்முடைய பரிசுத்த பிதா தமது பிள்ளைகளின் ஆத்தும சரீர நன்மைகளுக்காக அல்லும் பகலும் உழைத்து வருகிறார். சர்வேசுரன் இவருடைய எண்ணங்களெல்லாம் நிறைவேற இரக்கம் புரிந்து, இவ்வுலகத்திற்குச் சமாதானத்தை அருளும்படி நாமும் மன்றாடி வருவோமாக.

---

வீண் பார்வையிலும், வீண் கேள்வியிலும், வீண் வாசிப்பிலும், விசேஷமாய் வீண் பேச்சிலும் பொழுது போக்காதே.

---

## HONOUR THE PRIEST.

*(A True Story).*

## குருவானவரைக் கனம் பண்ணு.

(ஒரு மெய்க் கதை).

மாலைப்போதில் சூரியன் மேற்கடல் குளிக்குஞ் சமயம். வானத்தில் மேக மணுவளவு மில்லை யாகலின், கதிரவனொளி கனக மயமாய் அப்பெரிய நகரெங்கும் பரவ, அதன் மாடகூடமாளிகைகளனைத்தும் பார்ப்பவர் கண்களுக்கு வெகு அழகாய்த் தோன்றின. நகரின் ராஜவீதியிற் செல்லும் கணக்கற்ற மாந்தரிற் சிலர், மேற்றிசையிற் றோன்றும் பகலவன் கிரணங்களைப் பார்க்கமுடியாமல் தம் கண்களைக் கரங்களால் மறைத்த வண்ணஞ் சென்றனர். அங்கே டிராம் வண்டிகள் வெகு பரபரப்புடன் போவதும் வருவதுமாயிருந்தன. கால் நடையாய்ச் செல்லும் காசில்லாமாந்தரைக் கனத்த விபத்திற்குள்ளாக்கவே யுள்ளனவை யென்று சொல்லத் தக்க மோட்டார் வண்டிகளும், குதிரைகள் பூட்டிய சாரட்டுகளும், ஜட்காவண்டிகளும் ஒன்றன்பின் னொன்றாக வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தன. அவ்வீதியில் ஒரு சார் அமைக்கப்பட்டுள்ள பெரிய வைத்தியசாலையின் மேன்மாடியில் ஒரு குருவானவர் நின்றவண்ணம், மேற்றிசையிற்றோன்று மியற்கை வனப்பி னமதியையும், வைத்தியசாலையின் பக்கல் வீதியில் விளங்கும் பரபரப்பையும், சந்தடியையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டும், மேற்கூறிய யாவற்றிற்கும் காரணமாய் ஆண்டளிக்குந் தேவதயாபரனின் உன்னத மகத்துவத்தைத் தியானித்துக்கொண்டு மிருந்தார். அப்போது தானின்ற ஜன்னலுக் கடியிற் கிளம்பிய சத்தத்தைக் கேட்டு சுவாமியார் குனிந்துபார்த்தார். ஏதோ ஒரு நோயாளியை வைத்தியசாலைக்குக் கொண்டுவருவதால் சேர்ந்த சந்தடியே தன் தியானத்தைக் கெடுத்ததாக வுணர்ந்தார்.

அது ஒரு பரிதாபமான விபத்து. சுமார் இருபத்தைந்து வயதுள்ள அழகிய வாலிபன் ஒருவன், குடிமயக்கத்தால் மதிமருண்டு தள்ளாடி நடந்து வருகையில் தானடந்த பக்கம் வந்து

டிராம் வண்டிக்குத் தப்ப மற்றொருபக்கம் போகையில், பின்னால் வேகமாய் வந்துகொண்டிருந்த மோட்டார்வண்டியி லகப்பட்டு, கரங்களிரண்டும் அரைபட்டு, மூர்ச்சையாய்க் கீழே விழுந்துவிட, அவனை அங்கே யிருந்தவர்கள் தூக்கி வைத்திய சாலைக்குக் கொண்டுவந்தனர். அவனுக்கு நேர்ந்த விபத்தில் அவனுயி ரிழந்திருக்கவேண்டியவனே. என்ன காரணத்தால் அவன் தப்பினனென்பது தெய்வத்திற்குத்தான் வெளிச்சம். வைத்திய சாலையிலுள்ள அறுக்கு மறைக் கவனை எடுத்தேகினர். அங் கவனைச் சோதிக்கத் தயாரா யிருந்த வைத்திய நிபுணர்கள், நோயாளியைப் பரிசோதித்ததும், அவ னுயிர் தப்புவதாயின், அவனது இருகரங்களையும் வெட்டிவிடவேண்டு மென்னும் முடிவுக்கு வந்தனர். இடதுகரத்தை, தோளுக்கு முழங்கைக்கு மிடையே துணித்தெறிந்தனர்; வலது கரத்தை முழங்கைக்குக் கீழே பிடித்து வெட்டிவிட்டனர். என்ன செய்வது? வேறு வழியில்லை. சதை, எலும்பு, தோல், நரம்பு முதலிய யாவும் நொறுங்கிக் கூழாய்விட்டன. கரங்களை வெட்டி யெடுக்காவிடில், இரத்தம் விஷமாய்த் தேக முழுதும் பரவி, இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் உயிர் உடலைவிட்டு நீங்கு மென்பது திண்ணம்.

அந்தோ! இதனினும் மிகப் பரிதாபத்துக் குரிய நிலைமையைக் கண்டதுண்டா? அறுபட்டுக் குறைந்துள்ள கரங்களில் மருந்துவைத்துக் கட்டியானதும், அக்கட்டுகளுடன் நோயாளியை ஒரு படுக்கையிற் கிடத்தினர். அங்கே அவன் பிரக்ஞையற்றுக் கிடந்தான். படுக்கையின் பக்கம் ஒரு நர்ஸ் நின்றுகொண்டு நோயாளி நிலைமையையும் அதன் மாற்றங்களையுங் கவனித்துக் கொண்டிருந்தனள்.

இதற்கிடையில் மேற்கூறிய குருவானவரும் அங்கே வந்தனர். அவரைக் கண்டதும் நோயாளியைக் காத்துநின்ற நர்ஸ் "சுவாமீ, இவனுக்குப் பிரக்ஞை வந்ததும் தங்களைக் கூப்பிடுகிறேன். இவனொரு கிறிஸ்துவன் சுவாமி, எனெனில், அவன் கழுத்தில் பாதா உத்தரிய மிருப்பதைக் கண்டேன்." என்றாள்.

நல்ல தென்று அக்குருவானவர் மொழிந்து அவ்வறையைவிட்டு வெளியே வந்தனர். கையிரண்டும்போய் சாவின் கரையில் காலடிவைக்கப்பார்க்கும் அந்நிர்ப்பாக்கியனுடைய கதியைப் பற்றிச் சற்றே யோசித்தார். இருகரங்களும் போயின! பார்வைக்கு வயதோ இருபத்தைந்துக்கு மேலிராது! என்ன பரிதாபம்! அவனுடைய ஆதரவில் பிழைத்துவரும் மனைவி, மக்கள், உற்றார், பெற்றார் எவரேனு முண்டோ? இவ்வாழ்க்கையின்மேல் எந்நேரமும் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் துன்ப துயரங்களாகிய மேகங்களை என்னவென்பது? சற்றுமுன் மேற்றிசையில் ஆகாயம் மாசுமருவின்றி எவ்வளவோ அழகாயிருந்தது. இருள் சூழ்ந்ததும் அங்கே தோன்றி யொளிர்ந்த அளவற்ற தாரகைகளை நோக்க அக்குருவானவர் எவ்வளவோ ஆனந்தங்கொண்டிருந்தார். என்ன மாற்றம்! அந்த வைத்தியசாலையில் அந்நேரத்தில் கணக்கற்ற காந்த விளக்குகள் எரிய, அங்கே சிகிச்சைக்காக வந்து படுத்திருக்கும் நூற்றுக்கணக்கான நோயாளிகள், சந்திர சூரிய நட்சத்திரங்களையும் தம்மையும் படைத்தளிக்கும் பரம தேவனைத் துதித்து, தம்முடைய உதவியற்ற நிலைமையில் தங்கள் பேரிலிரக்கமாயிருக்கும்படி வேண்டிக்கொண்டனர். நோயும் பிணியும் தன்னை வந்தெய்தியதும் மனிதன் பலங்குன்றி உதவியற்றவனாகிறான். அவன் மெய்ந்நெறியை விட்டேகி, தன் ஆசாபாசத்துக் கிடங்கொடுத்து, மனம்போனபோக்கில் நடந்திருப்பனேயாகில், அச்சமயம் அறிய முடியாத மகத்தான எதிர்கால நித்தியத்தைப்பற்றி யவனினைக்கும்போது அவனுக் கெவ்வளவோ பயங்கரமாயிருக்கிறது! அவன் மனச்சாட்சி அவனைக் குத்த, கடந்த காலத்திற்செய்த பாவதோஷங்களைப் பரிகரிக்க அவன் எவ்வளவோ ஆசிக்கின்றனன்! சாவுக்கும் நோயுக்கும் பயப்படாதவர்களு முண்டு; ஆனால் அன்னோர் வெகு சொற்பமென்றே சொல்லவேண்டும். ஆண், பெண் என்னும் மாந்தரிற் பெரும்பான்மையோர் நோய் வந்திறின் நடுங்குகின்றனர்; சாவி னினைவே அவர்களைக் குன்றச்செய்கிறது.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே அக்குருவானவர் வைத்தியசாலைக்கு வெளியிலுள்ள தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். மாலைக் காட்சியால் மனமகிழ்ந்திருந்த அவரிதையம் அங்கே கொண்டுவரப்பெற்ற நோயாளியின் நிர்ப்பாக்கியத்தைக் கண்டு பரிதபித்தது. அப்போது தலை நிமிர்ந்து பார்த்தார்; நோயாளியண்டையிலிருந்த நர்ஸ் தன்னைக் கூப்பிடுவதாக அறிந்தார்.

"சுவாமீ, அவனுக்கு பிரக்ஞை வந்திருக்கிறது. தற்சமயம் ஆபத்தொன்றுமில்லை; தேக



மாகிறது. நாளைவரையிற் காத்திருந்து அவனைப் பார்ப்பதே நல்லதென்று நினைக்கிறேன். அதற்குள் அவன் பூரணமாய்ப் புத்தி சுவாதீனமடைவான்."

சுவாமியார் நல்லதென்று சொல்லித் தன்னறைக்குச் சென்றார்.

மறுநாள் அவர் அவ்வாலிபனைப் பார்க்கப் போயினர். அவனுக்கு நோய் மிகுந்து வெகு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் முகம் வெளுத்திருந்தது. அவனுடைய பரிதாப நிலைமையைக் கண்டு சுவாமியார் மனதிலெழுந்த துக்கத்தை யொருவாறடக்கிக்கொண்டு, "மகனே, நீ ஒரு பெரிய கண்டத்தினின்றுந் தேவகிருபையால் தப்பித்துக்கொண்டாய் என்று நினைக்கிறேன். குறிகள் யாவும் உனக்கு அநுகூலமாயிருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் நீ பூரண சௌக்கியமடைந்துவிடுவா யென்று நம்புகிறேன். உன் குடும்பத்தார் வசிப்ப தெங்கே?" என்றார்.

நோயாளியின் முகம் வேறுபட்டது; ஆழ்ந்த குரலில், "சுவாமீ என் குடும்பமா? எனக்கொரு மனைவியுங் குழந்தையுமுண்டு. அவர்கள் என்னை வந்து பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"அதற் கென்ன தடை? பார்க்கலா மப்பா, பார்க்கலாம். உன் விலாசத்தைச் சொல், யானுன் எண்ணத்தை நிறைவேற்றுகிறேன்" என்று குருவானவர் மொழிந்தார்.

நோயாளியும் அப்படியே தன் விலாசத்தைச் சுவாமியாரிடந் தெரிவிக்க, அவருமுடனே ஓராளைப் பிடித்து நோயாளியின் வீட்டுக்கனுப்பினார். வீட்டிலவன் மனைவியிடம் நேர்ந்த விபத்தை நேர்ந்தபடிச் சொல்லாமல், ஏதோ காயத்தால் வைத்தியசாலையில் இருப்பதாகமட்டும் சொல்லி யவளை யழைத்துவரும்படி யாளுக்குச் சொல்லியிருந்தார் அக்குருவானவர். அதன்பின் சுவாமியார் நோயாளியிடம் வரவே, அவன் காட்டிய நன்றியறிதல் மிகவும் உருக்கமுடையதாயிருந்தது. அவன் சுவாமியாரிடந் தன் கடந்த ஜீவியத்தைப் பற்றியே பேசலானான். வேலை யகப்படாமை, அதைரியம், துர்ச்சகவாசம், குடி முதலியன அவனுடைய ஜீவிய சரிதையின் முக்கிய பிரிவுகளாம். அவன் ஒரு கத்தோலிக்கனென்பது மெய்தான்; ஆனால் அவன் ஒரு கிறிஸ்துவன் செய்யவேண்டிய கடமைகளை பல வருஷங்களா யநுசரிக்கவே யில்லை. அவன் மனைவி ஒருத்தம கிறிஸ்துவள்; அவனுக்கொரு பெண் மகவு முண்டு; இன்னம் இரண்டு வயதாகவில்லை; அதன்மட்டி லவனுக் களவற்ற பட்சம். கல்யாணஞ் செய்யும்போது நல்ல வேலையிலிருந்தமையால், கொஞ்ச காலம் எல்லாம் ஒழுங்காகவே நடந்து வந்தது. ஆனால் அதிர்ஷ்டம் அவனை விட்டு விலக, "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" யென்பதுபோல், மதிகேடனாய் கோபின் முகம் பாராக் கொடியவனாய் மாறிக் கடவுளை மறந்தவனாய்த் தன் மனம்போன போக்கில் நடக்க ஆரம்பித்தான். இத்தகைய மாறுதலைத் தன் காதலனிடங் கண்ட மனையாளினிதய மிருந்த பரிதாப நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ? மனமுடைந்தவளாய் அப்பெண்மணி "திக்கற்றவர்க்குத் தெய்வமே கதி" யென்னு முது மொழியைக் கடைப் பிடித்து, அந்தி சந்தி தேவாலயஞ் சென்று மானிடர்மேல் வைத்த அளவுகடந்த அன்பினால் தன்னுயிரையே யிழக்கத் துணிந்த தேவ பரனையும், அவர் திருத்தாயையும், தன் கணவன் மனந்திரும்ப வேண்டுமென மன்றாடி வருவது வழக்கமாம். அவன் தெருவில் தடுமாறி வீழ்ந்த அன்றைய மாலை தன் மனைவியுடன் ஏதோ வீண் சண்டை செய்து வெளிக் கிளம்பி, மயக்கமேற மதுபானமருந்தி, ஸ்மரணை தப்பியிருந்தனன். அதன் பின் வைத்திய சாலையில் கரங்கள் நொறுங்கி வளர்த்தப்பட்டிருப்பதை புத்தி சுவாதீனத்துடனிருக்கையி லுணர்ந்தான்; அதற்கிடையில் நடந்த தொன்றும் அவனுக்குத் தெரியாது. அப்போதவன் இரு கரங்களுமின்றி யென்ன செய்ய முடியும்? இந்நிலைமையினும் சாவு மேலல்லவா? இவ்வாறு அந்நோயாளி தன் சரிதையைச் சொல்லித் துன்புறுவதைக் கண்ட குருவானவர், அவனுக் காறுத லுரைக்கலாயினர்.

"அப்பா, வருத்தப்படாதே. சர்வேசுரன் நமக்குத் துன்ப துரிதங்களைக் கொடுத்து நம்மைச் சோதிக்கும்போது, அவற்றைப் பொறுமையோடு சகிப்பதற்கான பலத்தையுங் கொடுக்கிறார். தேவன் உன்னுயிரைக் காப்பாற்றியதற்கு நீ நன்றி செலுத்த வேண்டியிருக்க, சாவே உத்தமமென்பது தகுமா? உன்னை மரணத்தினின்று காத்தது அவருடைய அளவற்ற அன்பு, நன்மைத்தனமும் என்று நினைத்துக்கொள். கரங்கள் போனபோதிலும், நீ வாலிபனென்பதை மறவாதே; சர்வேசுரன் உனக்கென்று என்ன செய்ய யோசித்திருக்கிறாரோ? மரம் வைத்தவன்

தண்ணீ ரூற்றமாட்டாளு? உன் கடந்த சீவியத்தை நினைத்து மனஸ்தாபப்படும்படித் தருணம் வாய்த்தது கடவுள் கிருபையாலல்லவா? இதைவிட மேலான காரியம் வேறென்ன வேண்டும்? யோசித்துப்பார். பாவம் நிறைந்த ஆத்துமத்துடன் நித்தியத்தி லவருன்னைத் தள்ளியிருந்தால் உன் கதியென்ன? மேலும் உன் மனைவியும் குழவியும் போகும் வழியாது? ஆகலால் மனம் வருந்தாதே, மகனே; சர்வேசுரன் கொடுத்த நோயைப் பொறுமையாய்ச் சகித்துக் கொள். அவர் கிருபையால் நீ பூரண சௌக்கிய மடைவாய். நீயும் திக்கற்ற நின் மனைவிக்கும் பெண்ணுக்கு மாதரவா யிருப்பாய்."

மனைவி மக்களென்றதும் அவ்வாலிபன் கண்களில் நீர் ததும்பிற்று. அதனால் அவர்கள் மேல் அவனுக்குப் பிரிய மதிகமெனத் தெரிந்தது.

"ஸ்வாமீ, என் னல்ல மனைவியின் காதலுக் குரியவன் நானல்ல. என் காதலி ஒரு சம்மனசை நிகர்த்தவள். அவள் பொறுமைக்கிருப்பிடம். நான் என்ன செய்தபோதிலும் மன்னிக்கத் தயாரா யிருக்கு மாணிக்க மவள். நான் செய்யும் பாதகங்களை யுடனுக் குடன் மறந்து, நான் எவ்விதத்திலாவது நல்வழியி னடக்கவேண்டுமெனக் கோருபவள் அம்மாதரசி. ஆதலால் நானெப்படி அவளுக் குகந்த கணவனாகக்கூடும் சுவாமீ?" என்று அன்னோயாளி மிக்க வருத்தத்துடன் கேட்டான்.

"தம்பீ, வருத்தப்படாதே. அநேகமாய்ப் பெண்க ளனைவரு மப்படியே. சர்வேசுரனுடைய தயவு உன்மே லிருக்கிறது. கொஞ்ச நேரத்தில் உன் மனைவியு மிங்கிருப்பாள் என்று நம்புகிறேன். அவளைக் காண்கையில் நீ தைரியத்துடனும் நம்பிக்கையுடனு மிருக்கவேண்டும் என்பதை மறவாதே." என்று சுவாமியார் பதில் சொன்னார்.

இவ்வளவு தூரம் பேசி யிருந்தும் சுவாமியார் நோயாளியின் பெயரைத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் இரண்டு மணிநேரஞ் சென்றது. மரியம்மாள் என்னுமோ ரிளம்பாவை சுவாமியாரைப் பார்க்க வந்திருப்பதாக வேலைக்காரன் சொன்னான். உடனே அந்த நல்ல குருவானவர் அப்பெண்மணியை எதிர் கொண் டழைத்தார். அவள்தான் நோயாளியின் மனைவி யெனத் தெரிந்து கொண்டதுமன்றி அவளுக் காறுதல் மொழி கூறலாமென வாயெடுக்கையில், அவள்,

"ஓ, சுவாமீ! என் கணவர் பிழைப்பாரா? ஓ அவர் பிழைக்காவிட்டால், நான் உயிர் தரிப்ப தெங்ஙனம்? அவருக் கென்ன நேர்ந்தது? இவ்வுலகில் அவரைப் போல் நல்ல கணவர் கிடைப்பதரிது. தாங்கள் சொல்லி யனுப்பும் வரையில் அவருக்கு நேர்ந்த விபத்தைப்பற்றி எனக் கொன்றுந் தெரியாதே. என்ன நடந்தது? சொல்லுங்கள் சுவாமீ, சொல்லுங்கள். கீழே விசாரித்தேன் ஒருவரும் பதில் கூறவில்லை." என்று கதறினள் மரியம்மாளென்னும் அம்மாது.

(இன்னும் வரும்.)

*S. Selva Raju.*

## EXPLANATION OF THE GOSPEL OF St. LUKE.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

### 1.—அதிகாரம்; வசனங்கள் (15—17.)

அருளப்பருடைய பிறப்பு அவருடைய தந்தை தாய் உறவினர் இனத்தார் அனேகருக்கும் சொல்லொண்ணு சந்தோஷ பூரிப்பை வருவித்ததற்குக் காரணம்:

**15**-வசனம். "அவர் ஆண்டவருடைய சமுகத்தில் பெரியவரா யிருப்பார்" என்பதே. மனுஷர் சமுகத்தில் பெரியவராய் இருப்பார் என்று மனிதரால் மதிக்கப்படும் பெருமையைப்பற்றிக் கூறுமல், தேவ சமுகத்தில் மதிக்கப்படும் உண்மையான அர்ச்சியசிஷ்டதனத்தின் நிகரற்ற பெருமையைக் கொண்டிருப்பார் என்று சம்மனசானவர் வெளிப்படுத்துகிறார். மனிதனிடம் பெருமையாய்த் தோன்றுவது தேவனிடத்தில் சிறுமையாகவும் வறுமையாகவும் தான் தோன்றும். ஆண்டவரிடத்தில் பெரியவராய் இருப்பார் என்றவுடன்



சம்மனசானவர் அப் பெருமையைப் பின் வரும் வசனங்களால் வருணித்து விளக்குகிறார்.

அதாவது: நான்கு காரியங்களைப் பற்றி அவர் பெரியவர் ஆவர். அவைகளில் இரண்டு காரியங்கள் தன்னைச் சார்ந்ததும், மற்ற இரண்டு காரியங்கள் ஜனங்களின் இரட்சண்ணியத்தைச் சார்ந்தவைகளுமாம். "திராட்ச இரசத்தையும், மதுவையும் பானஞ் செய்யார். அவர் இன்னும் தாயின் உதரத்தி லிருக்கும்போதே இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்படுவார்," **16**-வசனம். "இஸ்ராயேல் புத்திரரில் அநேகரைத் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவார்." **17**-வசனம். "பிதாக்களின் இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், அவிசுவாசிகளை நீதிமான்களின் விவேகத்திற்குந் திருப்பி, கர்த்தருக்கு உத்தம ஜனத்தை ஆயத்தப் படுத்தும்படி அவர் எலியாசுடைய ஞானத்தையும் வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன்னாக நடப்பார்."

பழைய ஏற்பாட்டில் கர்த்தருக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும்படி விரதம் பண்ணுகிறவர்களாகிய நசரேயர் தாங்கள் தங்கள் பொருத்தனை பிரகாரம் கர்த்தருக்குப் பிரதிஷ்டையா யிருக்கும் காலமெல்லாம் மதுபானம் அருந்தமாட்டோமென்று வார்த்தைப்பாடு கொடுப்பதுபோல (எண்ணாகமம் 6-அதி. 5-வச.) அருளப்பர் தன் சீவியகாலமெல்லாம் தன்னை தேவனுக்குப் பிரதிஷ்டை செய்து தேவ ஊழியத்துக்குத் தன்னை நேர்ந்து கொடுத்துவிட்டார் என்றும், அவர் மெய்யான நசரேயர் என்றும் காண்பிக்க தேவ தூதன் அருளப்பர் திராட்ச இரசத்தையும் மதுவையும் பானஞ் செய்யார் என்று முன்னதாகவே அறிவிக்கிறார்.

"மதுவை பானஞ் செய்யார்." கிரேக் பாஷையில் (சிக்கேரா) என்னும் பதம் திராட்ச பழ இரசத்தைத் தவிர, பனை, தெங்கு, ஈந்து இவைபோன்ற மரங்களிலிருந்தும், பல்வகை தானியங்கள் அல்லது பழவகைகளிருந்தும் எடுக்கப்பட்ட எவ்வித லாகிரி பானத்தையும் குறிக்கும். ஆகையால் அருளப்பர் எவ்வித மதுவையும் அருந்தமாட்டார் என்ற இந்த வசனம், அவர் அநுசரிக்கப் போகிற கடின தவ ஒறுத்தலை விவரமாய் வருணித்துக் காண்பிக்கிறது.

"அவர் இன்னும் தாயின் உதரத்திலிருக்கும்போதே இஸ்பிரீத்து சாந்துவினால் நிரப்பப்படுவார்." அதாவது: அவர், ஆத்துமத்தை அர்ச்சித்து பரிசுத்தமாக்கும் தேவ இஷ்டப்பிரசாத வரத்தால் பூரணமாய் அலங்கரிக்கப்படுவார் என்றர்த்தமாகும். இங்கே புதுமை செய்கிற வரம், தீர்க்கதரிசன வரமாகிய இஸ்பிரீத்து சாந்துவின் மற்ற தேவ வரங்களைப்பற்றி சொல்லப்படுகிறதென்று நினைக்கலாகாது. ஏனெனில், அருளப்பர் தம்முடைய முதிர்ந்த பிராயத்தில் முதலாய் இவ்வித வரங்களைப் பெற்றவராகக் காணப்படாததினால், தாய் உதரத்தி லிருக்கும்போதே இவ்வரங்கள் அவரிடம் இருந்ததென்று சொல்வதற்கு என்ன ஆதாரம் உண்டு? (அருளப்பர், 10-அதி. 41-வசனம்.) அன்றியும் அருளப்பர் பிறக்கு முன்னே தாய் உதரத்திலேயே ஜென்மப்பாவதோஷம் நீங்கி, சுத்தமாக்கப்பட்டு, தேவ இஷ்டப் பிரசாதத்தால் அர்ச்சிக்கப்பட்டார் என்பதை இவ்வசனம் விளக்குகிறதென்று அர்ச். தோமாஸ் அக்குவினாஸ், சுவாரெஸ் என்பவர்களும் இன்னும் அநேக வேத சாஸ்திரிகளும் நிச்சயிக்கிறார்கள். அருளப்பருடைய அர்ச்சியசிஷ்டதனத்தை வெளிப்படுத்திய பின்னர், அவர் நடத்தப்போகிற அலுவலை சம்மனசானவர் வருணிக்கிறார்.

"இஸ்ராயேல் புத்திரரில் அநேகரைத் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவார்". அதாவது அவர்களைப் பாவாக்கிரமங்களினின்று விடுதலையாக்கிப் பச்சாத்தாபத்துக்கும் புண்ணிய மார்க்கத்துக்கும் கொண்டுவந்து சேர்ப்பார் என்பதாம்.

"அவருக்கு முன்னாக நடப்பார்" என்ற இவ்வசனம் "தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவார்" என்ற வசனத்தை கிரேக் பாஷையிலும் லத்தீனிலும் உடனே தொடர்ந்து அடுத்து வருகிறபடியால் "அவருக்கு" என்னும் பிரதிப்பெயர் (*Pronoun*) "தேவனாகிய கர்த்தர்" என்ற

பதத்திற்குப் பதிலாய்த் தான் கூறப்பட்டது. ஆனதால் அருளப்பர் எவருக்கு முன்னோடியாக வருவாரோ, அவரே தேவனாகிய கர்த்தர் என்று சொல்வதற்குச் சரியாம். ஆனல் மெஸ்ஸியாவாகிய கிறிஸ்துநாதருக்கே அருளப்பர் முன்னோடியாய் வந்தபடியால், மெஸ்ஸியாஸ் என்பவர் தேவன் என்றும், கர்த்தர் என்றும் தெளிவாய் இவ்வசனத்தில் அழைக்கப்படுகிறார் என்று வேத சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். (அர்ச். பேதா, தொலேத்துஸ்).

“அவர் எலியாசுடைய ஞானத்தையும் வல்லமையையும் உடையவராய் இருப்பார்.” லத்தீன் பாஷையில் எலியாசுடைய ஞானமல்ல, (*Spiritus*) ஆவி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வேதகாரியங்கள் மட்டிலும், தேவ சட்டத்தின் பேரிலும், தேவ ஊழியத்திலும் எலியாசுவிடம் துலங்கின வேகமான ஆசை, ஆவல், பக்தி, வைராக்கியமும், வீர சௌரிய பராக்கிரமமும், அருளப்பரிடம் விளங்கும் என்பதினால், அவருடைய ஆவியையும், வல்லமையையும் அருளப்பர் உடையவராய் இருப்பார் என்று கூறப்பட்டது. மலாக்கியாஸ் விளம்பிய தீர்க்க தரிசனங்களில் “ஆண்டவருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்” வருகிறதற்கு முன்னே அதாவது: உலக ஈறுந்த காலத்தில், எலியாஸ் முனி உலகத்தில் தோன்றுவார் என்ற வர்த்தமானத்தை, யூதர்கள், கிறிஸ்துமெஸ்ஸியாவின் முதல் வருகையைப் பற்றி கூறப்பட்டதாக நினைத்து எலியாசை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். (மத்தேயுஸ் 17-அதி. 10-வசனம்.) ஆனல் சம்மனசானவர் அருளப்பரைப்பற்றி அவர் எலியாசுவின் ஆவியையும் பலத்தையும் கொண்டிருப்பாரென்றும், அவருடைய அலுவலையே இவரும் நடத்துவார் என்றும் சொல்லும்போது, மலாக்கியாஸால் வரையப்பட்ட மெஸ்ஸியாவின் பயங்கரமான இரண்டாம் வருகையின் காலத்தினின்று பிரித்துக் காண்பிக்கிறார்.

எலியாசுவின் சீவியமும், அருளப்பருடைய சீவியமும் ஒரே வித நடபடிக்கைகளால் விளங்குகின்றன. இப்பொருத்தத்தை வேதாகம புஸ்தகங்கள் வெளிப்படையாய் அறிவிக்கின்றன. இருவரும் பெரிய தபசிகள். இருவரும் ஒட்டக ரோம அங்கியணிந்து சருமவார் அரையிலிறுக்கி, கானகத்தில் கடின வனவாசம் செய்தார்கள். அன்னபானமின்றிக் கடூரமாய்த் தங்களை ஒறுத்தார்கள். இருவரும் வேத முறைமைகளையும் வேத கட்டளைகளையும் அநுசரிப்பதில் வெகு பக்தி வைராக்கிய முள்ளவர்களாய் விளங்கினார்கள். இருவரும் தங்கள் காலத்தின் இராயர்களின் துஷ்டாட்டங்களையும் துன்மார்க்க செயல்களையும் மனமுடுக்கோடு கண்டித்தார்கள். அதினால் இருவரும் அவ்வரசர்களுடைய நாயகிகளின் மூட கோப வெறிக்கும், குரோதத்துக்கும் இலக்காகி எலியாஸ் பரதேசம் ஓடி ஒளியவும், அருளப்பர் சிரசு வெட்டுண்டு மரிக்கவும் நேரிட்டது.

**17-வசனம்.** “அவர் பிதாக்களின் இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்குத் திருப்புவார்.” அருளப்பருடைய அலுவல் இனி வரப்போகிற எலியாசுவின் அலுவலுக்கு ஒத்ததாய் இருப்பதையும், எலியாசைப்போலவே அவர் மகத்துவ பிரதாபமுள்ளவர் என்பதையும் காண்பிக்க, மலாக்கியாஸ் தீர்க்கதரிசனத்தில், எலியாசைப் பற்றி வரையப்பட்ட அதே வார்த்தைகளைக்கொண்டு (அதாவது: “அவர் பிதாக்களுடைய இருதயத்தைப் புதல்வரிடத்திலும், புத்திரர் இருதயத்தைப் பிதாக்களிடத்துமாய்ச் சேர்த்துவைப்பார்.” மலாக்கி 4-அதி. 6-வசனம்.) தேவதூதன் அருளப்பரை வாழ்த்துகிறார். அதாவது: எலியாசைப்போல், அருளப்பர் யூதர்களுடைய இருதயத்தில், அவர்களுடைய பிதாக்களாகிய அபிரகாம், ஈசாக், யாக்கோபிடத்தில் இலங்கிய நற்சிந்தைகள், மெஸ்ஸியாவின் மட்டில் அபேட்சை ஆவல், பக்தி, விசுவாசம் முதலிய பற்றுதல்களை ஏவி விடுவார் என்பதே. “அவிசுவாசிகளை நீதிமான்களின் விவேகத்துக்குத் திருப்புவார்.” ஆதாவது: அவிசுவாசிகளை:—சர்வேசுரனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்கும் அக்கிரமிகளை; நீதிமான்களின்:—தேவ கட்டளைகளையும் தேவ சித்தத்தையும் நிறைவேற்ற வெகு ஆவலுற்றிருக்கும் புண்ணியவாளரின்; விவேகத்துக்



குத் திருப்புவார்:—மெய்ஞ்ஞான உத்தம மார்க்கத்துக்குக் கொண்டுவந்து சேர்ப்பார் என்பதாம்.

“கர்த்தருக்கு உத்தம ஜனத்தை ஆயத்தப்படுத்துவார்.” அதாவது: கர்த்தராகிய மெஸ்ஸியாவை யூத ஜனங்கள் விசுவாசத்தால் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும்படியாக முயலுவது முன்னோடியின் வேலை. இவ்வேலையை அருளப்பர் தன் போதகத்தினாலும் புண்ணிய மாதிரிகையினாலும், பச்சாத்தாப ஞானஸ்நானத்தாலும் வெகு ஊக்க உற்சாகத்தோடு செய்வார் என்பதே. மெஸ்ஸியாஸ் உலகத்தில் தோன்றும்போது அவரை மிக்க அன்பு பூரிவோடு ஏற்றுக்கொள்ளவும், அவருடைய திவ்ய உபதேசங்களைப் பிரியத்தோடும் மகிழ்ச்சியோடும் கேட்டு விசுவசிக்கவும் யூத ஜனங்களின் இருதயங்களில் நற்சிந்தைகளையும் பற்றுதல்களையும் தூண்டி எழுப்பிவிடுவதற்காகவுந்தான் அருளப்பர் முன்னோடியாக அனுப்பப்பட்டார்.

ஆகையால், ஒரு வேத சாஸ்திரியார் வசனிப்பதுபோல் கல்லும் களரும், புல்லும் முள்ளும் மலிந்த கரம்பு நிலம் மனிதர் இருதயமானல், அதைத் திருத்திச் சமனாக்கி, உழுது பண்படுத்துவது அருளப்பருடைய அலுவல் என்றும், அவ்வாறு பதமாய்ச் செப்பனிட்டபின் அதில் தேவவாக்கியமாகிய ஞான வித்துகளை விதைத்து, அவைகள் முளைத்தெழும்பி, பூ, காய், கனிகளைக் கொடுத்துத் தழைத்தோங்கும்படி செய்வது மெஸ்ஸியாவின் அலுவல் என்றும் சொல்லுவது சரியே.

*S. M.*

துன்பப்பட்டாலும், வாய் திறவாமல் மௌனமா யிருத்தல், ஓர் தெய்வீக சாஸ்திரம். பிறர் ஆறுதலைத் தேடுவது அப்புண்ணியத்துக்கு ஊனமாகும். பிறர் தன் குறைகளை வெளிப்படுத்தாமையினாலேயே உன்னைவிட சொற்பமான துன்பத்தை அநுபவிக்கிறார்களென நினைப்பது பிசகு.

நீ சொல்லுஞ் செபங்களையும் செய்யுந் திருத்தியங்களையும் படும் துன்ப துயரங்களையும் சுத்த கருத்தோடு உத்தமவிதமாய்ச் சொல்லிச் செய்து பட்டனுபவித்துவா.

---

# GNANAMANI, III PART.

# ஞானமணி 3-ம் பாகம்.

## 3½-ம் அதிகாரம்

பண்டிதருடைய நற்குணங்களை யெல்லாம் சொன்னாய் அவருடைய துர்க்குணங்களைச் சொல் பார்க்கலாம்.

ருக்மணி போசனத்துக்கு உட்கார்ந்து துக்க சஞ்சலத்துடன் புசித்துக் கொண்டிருக்கும்போது, பங்காரம்மாள் அவளைப் பார்த்து, “என்ன அம்மா, விசனமாயிருக்கிறீர்களே, உங்களுக்கு ஏதேனும் சுகக் குறைவோ?” என்று வினவினபோது, “எனக்குத் தேகவியாதியில்லை, ஆனல் மனவியாதி மெத்த, பங்காரம்மா!” என்று ருக்மணி சொல்ல, “ஆமா, நாளெல்லாம் இடைவிடாமல் பெண்களோடு பேசிக்கொண்டிருப்பதால் மனதுக்கு ஆயாச முண்டாவது மெய்தான் அம்மா” என்றாள் பங்காரம்மாள்.

ருக்.—பேச்சால் ஆயாச முண்டாகுமோ? அது இருக்கட்டும்; என் முகம் எப்படி யிருக்கிறது இன்றைக்கு?

பங்கா.—வாடி வதங்கி வெளுத்து, கடின வியாதியாய் விழுந்து எழுந்திருந்தவர்கள் முகம் போ லிருக்கிறது!

ருக்.—அவ்வளவு விகாரமா யிருக்கிறதோ?

பங்.—உங்கள் முகம் முன் ஒருபோதும் இப்படிக் காணப்படவில்லை அம்மா.

ருக்.—எங்கே, கொண்டுவா முகக்கண்ணாடியை. (கண்ணாடியில் முகத்தைப் பார்த்து, ஆமா, வாடினாற்போலத்தா னிருக்கிறது.

பங்.—இன்றைக்கு சாயந்திரம் 4-மணிக்கு பண்டிதர் வருவார்; அவர் வந்து சேருவதற்குள்ளாக ஸ்நானஞ் செய்துகொண்டால், இவ்வளவு வித்தியாசமாய்த் தோன்றாது.

ருக்.—சற்று நேரத்துக்கு முன் என் அறையில் ஏதாகிலும் சத்தம் கேட்டாயா பங்காரம்மா?

பங்.—உங்கள் அழுகைச் சத்தம் என்காதில் விழுந்தது; உடனே நான் எழுந்து மெத்தைப்படியேறி வாசற்படி சேர்ந்தபோது நீங்கள் பேசுகிற சத்தத்தைக் கேட்டு கீழே இறங்கிவிட்டேன்.

ருக்.—நான் அழுதேனா?

பங்.—உங்கள் அழுகைச் சத்தம்போலத் தான் இருந்தது.

ருக்.—நீ பிராயஞ் சென்றவளானதால் காது சரியாய்க் கேட்டிராது!

பங்.—இருந்தாலும் இருக்கும் அம்மா?

ருக்.—நான் கேட்கப்போகிற கேள்விக்கு சரியான மறுமொழி கொடுப்பாயா?

பங்.—நீங்கள் என் துரைசானியா யிருக்கக்கொள்ள, உங்கள் பேச்சை மறுப்பேனா அம்மா? எப்போதாகிலும் உங்கள் பேச்சுக்குத் தடை சொன்னதுண்டா?

ருக்.—இல்லை, யில்லை. இப்போது நான் கேட்கப்போகிற சங்கதிக்கு எதார்த்தமான மாறுத்தரம் சொன்னால் எனக்கு இப்போது இருக்கும் மனோ வியாதி நீங்கிவிடும்; துயரம் அற்றுப்போய்ச் சுகமும் சந்தோஷமும் உண்டாகும். நான் சந்தோஷமா யிருப்பது உனக்குப் பிரியமா, துக்கமா யிருப்பது பிரியமா? சொல் பங்காரம்மா.

பங்.—நீங்கள் சுக சந்தோஷமா யிருப்பதே எனக்குப் பிரியம். இதற்காகத்தானே எஜமான் உங்களிடம் என்னை நிறுத்தி யிருக்கிறார்.

ருக்.—நல்லது, என்னைப்பற்றி ஊரார் என்ன சொல்லுகிறார்கள்?

பங்.—நீங்கள் புதிதாய் இவ்வூருக்கு வந்தபோது, உங்களைப் புண்யவதி யென்றும் தர்மசீலி யென்றும் புகழ்ந்தார்கள் கிறிஸ்துவர்கள்.

ருக்.—ஹிந்துக்கள்?

பங்.—உங்களைப்பற்றி அவர்கள் எப்பவும் ஒன்றும் சொல்லவில்லை.

ருக்.—கிறிஸ்துவர்கள் இப்போது என்ன சொல்லுகிறார்கள்?

பங்.—பண்டிதர் பெண்சாதிக்கு முன்னிருந்த தர்ம குணம் குறைந்துபோனது; முன் நாடோறும் கோயிலுக்குப் போய்ப் பூசை காண்பார்கள்; வாரா வாரம் பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்குவார்கள்; இப்போது அரிதாய் பூசைக்குப் போகிறார்கள்; வருஷத்தில் இரண்டு மூன்று முறை மாத்திரம் நன்மை வாங்குகிறார்கள் என்கிறார்கள்.

ருக்.—இன்னம் என்ன சொல்லுகிறார்கள்?

பங்.—முன்னிருந்த தர்ம குணம் முற்றும் குறைந்துபோனது; திங்கள், வெள்ளி, சனிக்கிழமைகளில் தவறாமல் அநேக ஏழைகளுக்குத் திருப்தியாய் போசனம்விசாரித்து ஏராளமாய்த் தருமம் கொடுப்பார்கள்; இப்போதோ, ஏழைகள் அந்த வாசற்படியில் வரக்கூடாதென்று தாக்கீது செய்ததாகச் சொல்லுகிறார்கள். முன் மாதமாதம் சராய், சட்டை முதலியவைகளைத் தைத்து பங்கு ஸ்வாமியார் மூலமாய் ஏழைகளுக்கு கொடுத்து வந்தார்கள்; கடந்த 2 வருஷ காலமாய் அந்த தர்ம வேலையை நிறுத்தி விட்டார்கள் என்கிறார்கள்.

ருக்.—இன்னும் என்ன சொல்லுகிறார்கள்?

பங்.—வேறொன்றும் சொல்லவில்லையம்மா.

ருக்.—பண்டிதரைப் பற்றி ஊரில் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள்?

பங்.—அவரைப்போ லொத்த புண்யவான் இந்தச் செங்கல்பட்டில் இல்லை யென்கிறார்கள்.

ருக்.—யார் அப்படிச் சொல்லுகிறது?

பங்.—சகல ஜனமும் அவரைப் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள்.

ருக்.—மெய்தானா?

பங்.—இது எதார்த்தம் அம்மா.

ருக்.—உன் தாற்பரியம் என்ன?

பங்.—என்னத்தைப்பற்றி யம்மா?

ருக்.—பண்டிதருடைய நடத்தையைப் பற்றி?

பங்.—அவரைப்போலொத்த தர்மப் பிரபு அகப்படுவாரா பூலோகத்தில்?

ருக்.—அவ்வளவு நல்லவரா?

பங்.—அதுகூட கேட்கவேண்டுமோ அம்மா? சகல புண்ணியமும் அவரிடத்தில் காணலாம். ——தர்மிஷ்டர்! தயாள குணமுள்ளவர்! நீதிமான்! தெய்வ பக்தன்! இவ்வளவு நற்குணங்கள் போதாதோ?

ருக்.—அவருடைய நற்குணங்களை எல்லாம் சொன்னாய்; அவருக்குள்ள துற்குணங்களைச் சொல் பார்க்கலாம்.

பங்.—அம்மா, நானல்ல இல்லாத காரியத்தைப்பற்றிப் பேச. இப்பேர்க்கொத்த நற்குணசாலி யிடத்தில் தீமை உண்டாகுமா?

ருக்.—நல்லது, அவர் யார் வீட்டுக்கு அடிக்கடி போகிறார் தெரியுமா?

பங்.—அது எனக்குத் தெரியாதம்மா.



ருக்.—கலியாண சுந்தரம் யாரென்று உனக்குத் தெரியுமா?

பங்.—(சற்று நேரம் யோசித்துப் பார்த்து) அது யாரோ அம்மா எனக்குத் தெரியாது.

ருக்.—ராமகிருஷ்ணன்?

பங்.—அந்தப் பேரை நான் கேட்டதே இல்லை.

ருக்.—மீனாட்சி?

பங்.—(சிரித்துக்கொண்டு) மீனாட்சியா? அது ஆரோ அம்மா, எனக்குத் தெரியாது. எனக்கு இதெல்லாம் என்னத்துக்கு? காலையில் கோவிலுக்குப் போய் பூசை காண்கிறேன்; சாயந்திர வேளையில் திவ்விய நற்கருணை சந்திக்கப் போகிறேன். அந்த இரண்டு வேளை தவிர, மற்ற நேரமெல்லாம் உங்கள் காலடியில் தானே விழுந்து கிடக்கிறேன்.

ருக்.—அப்படியானால் பண்டிதர் புண்யவாளர்! அந்தரங்கத்திலும் பயிரங்கத்திலும் அவரிடத்தில் ஒரு தப்பிதமுமில்லை யல்லவா?

பங்.—என்ன அம்மா, நான் திர்க்கதரிசியா, மனிதருடைய இருதயத்திலிருக்கும் எண்ணங்களை கண்காணிக்க? மேலும் பண்டிதருடைய அந்தரங்க காரியங்களை அறிய நான் கடவுளா அம்மா? உங்கள் புருஷனுடைய குணகுணங்களையும் வெளி நடத்தையையும் பற்றி நான் பார்த்ததையும் மற்றவர்கள் மூலமாய் நான் கேள்விப்பட்டதையும்பற்றி உங்களுக்குச் சொன்னேனே ஒழிய, அவருடைய அந்தரங்க நடத்தையையும் அவருடைய இருதயத்தி லுண்டாகும் எண்ணங்களையும் கருத்தையும் பற்றிச் சொல்ல என்னால் மாளாது அம்மா.

ருக்.—அவர் இரா வேளையில் யார் யார் வீட்டுக்குப் போகிறாரென்று உனக்குத் தெரியாதா?

பங்.—இது என்ன, அதிசயமாயிருக்கிறது உங்கள் கேள்வி! புண்யவந்தரான உங்கள் புருஷன் மட்டில் சம்சயங் கொள்வதுபோலக் காணப்படுகிறது! இப்பேர்ப்பட்ட சந்தேகமான கேள்வியைக் கேட்பதால் எனக்குத் துக்கமுண்டாகிறது.

ருக்.—இல்லை, பாட்டியம்மா; உனக்கு ஏதாகிலும் தெரிந்திருந்தால் சொல்லும்படி கேட்கிறேனே ஒழிய, பண்டிதர் மட்டில் யாதொரு சந்தேகமும் படுகிறதில்லை.

பங்.—அம்மா, தாயே, ஒருத்தர்மேல் அவதூறு சொல்லும் குணமில்லை யெனக்கு. மேலும் பண்டிதரோ, நற்குணசாலியும் புண்யவந்தனுமா யிருப்பதால் அப்பேர்ப்பட்டவர்மேல் தூறு கூறுவது மகா பாவமாகும்.

ருக்.—அவர் இரா வேளையில் யார் வீட்டுக்கும் போனதைப் பார்க்கா விடினும் மற்றவர்கள் சொல்லவாவது கேட்டதில்லையோ?

பங்.—இல்லை அம்மா. நான் ஒருவர்மேல் புரணி சொல்லுகிறது மில்லை. புறத்தியார் சொல்லும் புரணிக்குக் காது கொடுக்கிறதுமில்லை?

ருக்.—அப்படியானால், என்னைச் சந்தேகமாகிற பாதாளத்தில் அமிழ்த்தித் தமாஷ் பார்க்க மனதா யிருக்கிறாயோ?

பங்.—அம்மா தாயே! சந்தேக பாவமாகிறது மகா தின்மையுள்ளது. நீங்கள் பேசுகிற பேச்சை கேட்கக் கேட்க உங்கள் புருஷன் மட்டில் நீங்கள் சந்தேகங்கொள்வதுபோலக் காணப்படுகிறது (என்று சொல்வதற்குள்ளாக)

ருக்.—ஆமாம், அவருடைய நடத்தையைப் பற்றி கேள்விப்படும்போது சம்சயம் உண்டாகிறது. நெருப்பில்லாமல் புகையுமா? நீயே சொல் பங்காரம்மா?

பங்.—நெருப் பில்லாமல் புகையாதென்பது வாஸ்தவமே. ஆனால் மனிதர் வாயிலிருந்து புறப்படும் வார்த்தை யெல்லாம் உண்மையுள்ளதா? பரிச்சேதமில்லை. நாலு பெண்கள் சேர்ந்து பேசும்போது எத்தனையோ பொய் புரட்டு! புரணி வார்த்தை! அபதூறான சொற்கள்! இதையறிய சாஸ்திரமும் படிப்பும் தேவையில்லை; நாடோறும் சம்பவிக்கும் காரியம்!

ருக்.—அப்படியானால் நமது வீட்டுக்கு வந்து பேசிப் போகும் டிப்டி கலெக்டருடைய மகள், தாசில்தார் பெண்சாதி, வக்கீல்மார்களுடைய பெண்டீர், நமது வீட்டுக்கு அடிக்கடி வரும் வேலப்ப நாயகருடைய சகோதரி ஸரஸ்வதி முதலிய கௌரவமும் கண்ணியமுமுள்ள ஸ்திரீகள் கெட்டவர்களும், தூறு சொல்லக்கூடிய பாபிஷ்டி மக்களுமா?

பங்.—ஐயையோ! அப்பேர்ப்பட்ட கனவான்களுடைய ஸ்திரீகள் கெட்டவர்கள் என்றால், என் கண் போய்விடுமே!

ருக்.—இப்பேர்ப்பட்டவர்களில் ஒரு பெண்மணிதான் பண்டிதருடைய கேவலமான நடத்தையைப்பற்றித் தெரியச் செய்தாள்.

பங்.—பண்டிதருடைய நடத்தையைப்பற்றி கேவலமாய்ப் பேசின ஸ்திரீயின் வார்த்தை உண்மையுள்ளதா யிராதென்று நான் நாட்டுகமாய்ச் சொல்லுவேன்.

ருக்.—என்ன ஆதாரம் உன் அபிப்பிராயத்துக்கு?

சங்.—பண்டிதருடைய புண்ய நடத்தையே ஆதாரம்.

ருக்.—அதை நான் நம்பேன்.

பங்.—நம்பா விட்டால் உங்கள் இஷ்டம். ஆனால் ஒரு விஷயம் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நாளெல்லாம் பேசுவதும் சிரிப்பதும் விளையாடுவதும் உங்களைப் போன்ற வாலிபப் பெண்ணுக்கு அழகல்ல. மேலும் நீங்கள் இந்த ஊருக்கு அன்னியர். உங்களிடம் வரும் ஸ்திரீகளின் குண குணம் உங்களுக்குத் தெரியாது. மேலும் ஸ்திரீயானவள் சாதாரணமாக அதிக பேச்சுக்காரி. நாலு ஸ்திரீகள் சேரும் கூட்டத்தில் அபநாறும், கோள் குண்டனி முதலிய பிற சிநேகத்துக்கு விரோதமான பேச்சும் நடவாதிருப்பது புதுமை யென்று சொல்வார்கள் வயதில் முதிர்ந்தோர். ஆகையால், அம்மா! உங்கள் காதில் விழும் வார்த்தையெல்லாம் சத்தியமானதென்று நம்பவேண்டாம். மேலும் நான் கேள்விப்பட்டமட்டும் உங்களிடத்தில் வந்து பேசும் பெண்டீர்கள் எல்லோரும் நற்குண சீலிகளென்றும் மெய் உரைப்போரென்றும் கிஞ்சித்தென்கிலும் நம்பவேண்டாம்.

ருக்.—அதெப்படி? நமது வீட்டுக்கு வரும் ஸ்திரீகளில் நல்லோர் தீயோர் இன்னாரென்று சொல் பார்க்கலாம்.

பங்.—அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒன்பது மாசத்துக்கு முன் நடந்த சங்கதியை மட்டும் சொல்லுகிறேன்.

ருக்.—மெத்த சந்தோஷம்! சொல்லு பங்காரம்மா?

பங்.—ஒரு நாள் சாயந்திரம் கோவிலுக்குப் போய் தேவநற்கருணை சந்தித்து வீட்டுக்குத் திரும்பும்போது, ஒரு மரத்தடியில் மூன்று நான்கு ஸ்திரீகள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி என்னைப் பார்த்த மாத்திரத்தில், அவள் என்னை கை நீட்டிக்காட்டி அங்கிருந்தவர்களுக்கு என்னவோ சொன்னாள். அப்போது என் பிராயமுள்ள ஒரு பெரியம்மாள் என்னைக் கூப்பிட்டு அழைத்து, "அம்மா நீபண்டிதர் வீட்டில் வேலை செய்கிறாயோ?" என்றாள். ஆம் என்றேன். "வேலப்ப நாயகருடைய தங்கை அந்த வீட்டுக்குப் போவதாகச் சொல்லுகிறார்களே; அது நிசந்தானா?" என்றாள். ஆம் என்றேன். "முனியம்மாள் எற்கனவே அங்கே வேலை செய்கிறாள் அல்லவா?" என்றாள். அதற்கும் ஆம் என்றேன். அப்போது அந்த பெரியம்மாள் சொல்வாள்: "அந்த இரு பாபிஷ்டி முண்டைகளுடைய நடத்தை அந்த வீட்டுக்காரருக்குத் தெரியாது போலும். அந்த இரண்டு சிறுக்கிகளும் அநேக வீட்டைப் பாழாக்கி பல குடும்பங்களைக் கெடுத்தது போதாமல், பாவம்! அந்த அன்னியருடைய வீட்டைக் கெடுத்து, குடும்பத்தை அவசியம் கலைத்து விடுவார்கள். சமயம் நேரிடும்போது இதைப் பற்றி உன் எஜமானனுக்கும் தெரியப்படுத்தம்மா. நீயும் அந்த இரண்டு வஞ்சகிகள் மட்டில் ஜாக்கிரதையா யிரு" என்று சொன்னாள்.

ருக்.—இதைச் சொன்னவள் இன்னாரென்று உனக்குத் தெரியுமோ?

பங்.—எனக்குத் தெரியாதம்மா.

ருக்.-சரி, இப்போது நாம் பேசிக்கொண்ட சம்பாஷணையைப்பற்றி யாருக்கும் தெரியப்படுத்தவேண்டாம் பங்காரம்மா.

பங்.—அப்படியே ஆகட்டும் அம்மா.

ருக்.—பண்டிதருக்குக்கூட சொல்லவேண்டாம்.

பங்.—நீங்கள் ஒரு விசை சொன்னால் போதாதா அம்மா? ஒருவர் சொன்னதை மற்றவருக்குச் சொல்லும் துர்வழக்கம் எனக்கு இல்லையம்மா. உங்களிடத்தில் இரண்டு மூன்று வருஷ காலமா யிருக்கிறேனே! நீங்கள் சொன்னதை யாருக்காகிலும் சொன்னதுண்டா?

ருக்.—உன் குணம் எனக்கு நன்றாய்த் தெரியும் பங்காரம்மா?

என்று எழுந்து கை கழுவி மேல் மெத்தைக்கு ஏறினாள் ருக்மணி. தன் அறைக்குச் சென்று வழக்கம்போல் சற்றுநேரம் இளைப்பாறும்படி மஞ்சத்தில் தலைசாய்த்துப் படுத்தாள். அன்று ஸரஸ்வதியும் முனியம்மாளும் சொன்ன சங்கதி யெல்லாம் ருக்மணியின் மனதுக்குத் திரும்பினது.—பண்டிதர் மகா யோக்கியர்; தெய்வ பயமுள்ளவர்; ஏழைகளின்மட்டில் மகா இரக்கமுள்ளவர்; வெகுநேரம் ஜெபக்கூடத்தில் பக்தியுடன் ஜெபம் புரியும் தேவபக்தன். இப்பேர்க்கொந்த குணங்களையுடைய மனிதன் ஒரு பெண்ணின் மீது வைத்த இச்சையினிமித்தம் ஒருவனைக் கொலை செய்வாரா?

பங்காரம்மாளுடைய பேச்சுக்கும் அந்த இரண்டு ஸ்திரீகளுடைய பேச்சுக்கும் எவ்வளவு பேதம்! பங்காரம்மாள் பண்டிதரை வெகுவாய்ப் புகழ்ந்து பேசுகிறாள். அவர் புண்ணியவாளன், தர்மிஷ்டன், தேவபக்தன் என்கிறாள்; அந்த இரண்டு ஸ்திரீகளோ: அவர் கபடன், கொலைஞன், விபசாரன் என்கிறார்கள். யாருடைய பேச்சு நிஜமாயிருக்கும்?

மேலும் பங்காரம்மாள் பண்டிதரைப் புகழ்ந்து பேசுவதாலும் அவருடைய சற்குணங்களைக் குறித்துக் கொண்டாடுவதாலும் அவளுக்கு என்ன பிரயோஜனம்?

அவ்விரு ஸ்திரீகள் பண்டிதர்மேல் இல்லாத குற்றங் குறைகளை சாற்றுவதால் அவர்களுக்கு உண்டாகும் பலன் என்ன? ஒன்றுமில்லை.

ராமகிருஷ்ணன் என்பவனையும் அவனுடைய தங்கையையும் சம்ரக்ஷணை செய்து காப்பாற்ற பண்டிதருக்கு என்ன வந்தது? அவர்கள் இவருடைய பந்துக்கள் அல்ல; அவர்களுடைய பெற்றோரை இவர் அறியார். அன்னியரான அவர்களைக் காப்பாற்றி சம்ரக்ஷணை செய்ய இவருக்கு என்ன கடமை?

மனிதன் பலவீனனாகையால், சில விசை பண்டிதர் அந்தப் பெண் மட்டில் துர் இச்சை கொண்டிருந்தாலும் இருக்கலாம். ஆனால் அப்படி அவர்கள் இருவருக்கும் துர்நேசமிருக்குமாகில் ஊராருக்குத் தெரியாமல் போகாது. ஊராருக்குத் தெரிந்திருந்தால் குரு ஸ்வாமியாருடைய காதுக்கு அது எட்டாமல் போகுமோ? அது அவருக்குத் தெரிந்தால் அதைப்பற்றி அவர் பண்டிதரைக் கண்டியாமலிரார். சிலவிசை, பண்டிதருடைய துர் வழக்கத்தை அறிந்த ஊரார் முகத்தாக்ஷணியத்தைப் பற்றி குருவானவருக்கு அதை அறிவிக்கப் பயந்து இருக்கலாம்.

இதெல்லாம் பெருங் குழப்பமாயிருக்கிறது என் மனதுக்கு. என்ன செய்யலாம்! பங்காரம்மாளை இரண்டு மூன்று வருஷ காலமாய் அறிவேன். அவள் வாயில் பொய் புரட்டு வராது. கபட தந்திரம் இன்னதென்று அறியாள். இதுவரையிலும் பண்டிதரைப் பற்றியாகிலும் வேறு எந்த வேலைக்காரரைப் பற்றியென்கிலும், என்னிடம் முறைப்பட்டவளுமல்ல. அவர்களுடைய குற்றங் குறைகளை யென்னிடம் சொல்லிக் கொண்டவளு மல்ல. அவள் பேச்சு எதார்த்தமாயிருக்கலாம்.

ஸரஸ்வதியும் முனியம்மாளும் என்னைப் புகழ்ந்து பேசி, பண்டிதருடைய குறைகுணங்களை வெகுவாய் இகழ்ந்து பேசினார்கள். மேலும் அந்த இரண்டு பெண்களுடைய குணம் இன்னதென்று பங்காரம்மாளுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள் இந்த ஊரில் சில பெண்பிள்ளைகள்.

இதுநிற்க, அந்த இரண்டு ஸ்திரீகளும் பண்டிதர்மேல் பெருங் குற்றஞ் கூறினதை நான் கேட்டு, நான் இந்த வீட்டைவிட்டுச் சொந்த ஊருக்குப் போவது நலமா யிருக்குமென்றபோது, அவர்கள் எனக்கு ஆறுதல் சொல்லி தேற்றாமல், அப்படித்தான் செய்யவேண்டுமென்று சொன்னதுடன், ஜலத்தில் விழுந்தாகிலும், நான்றுகொண்டாகிலும் உயிர் துறப்பது நலமென்று சொல்லி யிருக்கிறார்கள். இது நல்ல யோசனையாகத் தோன்றவில்லை—என்று வெகுநேரம் கண்மூடாமல் யோசித்துக்கொண்டிருந்து, கடைசியாய், பண்டிதர் குற்றமற்றவரென்று உறுதியாக நம்பினாள். இவ்வளவு ஸ்பஷ்டமாய் அவளுக்கு உண்மை விளங்கினபோதிலும் சிற்சில அற்ப சந்தேகம் அவள் மனதை விட்டுவிட்டதல்ல.

மணி நாலடிக்கவே மெத்தைமேல் ஏறி வந்த வேலைக்காரியை அழைத்து, ஸ்நானத்துக்கு முஸ்திப்பு செய்யச்சொல்லி, போய் குளித்து முனியம்மாள் உதவியால் ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு, தலைவாரி, பூ முடித்துக் கொண்டு, பண்டிதருடைய வருகைக்கு ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தாள் ருக்மணி.

## HOW TO RAISE OUR STATUS ?

## நாம் முன்னேறுவதெப்படி ?

### நான்காம் வியாசம்.

கிறிஸ்துவப் பயிற்சி; குடும்ப பொது ஜெபம்.

சிறந்த தேசசகாயக் குருவாகிய சங். இராஜரிஷிகுரு (Valuy) வாலே சுவாமியாரவர்கள் தாம் எழுதிய ஓர் சிறந்த பிரபந்தத்தில் முன்னுக்கு வரும்வித மெப்படி,

ஐஸ்வரியவான்களாவ தெங்ஙனம், நாலு பேரால் நன்கு மதிக்கப்பட்டு வாழ்வதெவ்விதம் என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசி, அதற்கு நான்கு வழிகளைக் காட்டுகிறார். அந் நான்கு வழிகளும் வேதாகமங்களில் கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்ட வழிகளே. கடவுள் சத்தியமானவரா யிருப்பதால், அவ் வழிகளும் சத்தியமான வழிகளென்பதற்குச் சந்தேகமில்லை. முன்னுக்கு வரவேண்டும், உத்தமர்களாய் வாழவேண்டும், எளியவர்களா யிருந்தபோதிலும் நல்ல சமுசாரிகளாய் ஜீவித்துப் பரலோக பாக்கியத்தைச் சுதந்தரிக்க வேண்டுமென்னும் ஆவல் யார் யாருக்குண்டோ, அவர்கள் இவ் வழிகளைக் கவனித்து, அவைகளில் நடந்து வந்தால் சந்தேகமின்றி அவர்கள் கோரிய காரியம் கைகூடும். அவைகளேதெனில்:

(1) அனைத்திற்கும் மேலாக உன் ஆத்தும ரட்சண்யத்தைத் தேடு. சர்வேசுரனுடைய ராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்த முந்த தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு VII-33) சர்வேசுரனுக்குப் பயப்படுகிறவன் பாக்கியவான். அவருடைய கற்பனைகளில் மிகவும் பிரியப்படுவான். அவனுடைய சந்ததி பூமியில் வல்லபமுள்ளதாகும். செம்மையானவர்களின் வங்கிஷம் ஆசீர்வதிக்கப்படும். மகிமையும் திரவியங்களும் அவன் வீட்டிலிருக்கும். அவனுடைய நீதித்தன்மை என்றென்றைக்கும் நிலை நிற்கின்றது. (சங்கீதம் III—1, 2, 3).

(2) உன் பெற்றோரைக் கனஞ் செய். கிரியையிலும் வார்த்தையிலும் உன் தந்தைக்குப் பொறுமையோடு சங்கை செய். அதனால் உனக்கு அவருடைய ஆசீர்வாதங் கிடைக்கும். அவர் ஆசீர்வாதமும் உன் ஜீவிய காலம் வரைக்கும் உன்னோடிருக்கும். தந்தையின் ஆசீர்வாதமும் பிள்ளைகளின் குடும்பங்களை நிலை நாட்டும். தாயின் சாபமோ பிள்ளைகள் குடும்பங்களின் அஸ்திவாரத்தைப் பிடுங்கிவிடும் (சர்வப் பிரசங்கி III.-9-10-11).

(3) ஏழைகள் மட்டில் இரக்கங் கொள். ஏழைக்கு இரங்குகிறவன் ஆண்டவருக்கு வட்டிக்குக் கொடுக்கிறான். அவரும் அவனுக்குக் கைம்மாறளிப்பார். (பழமொழி XIX.-17). கடவுள் கொடுக்கும் வட்டி ஒன்றுக்கு நூறு என்று அர்ச். கிறிசொஸ்தோம் அருளப்பர் வசனிக்கிறார்.

(4) ஞாயிற்றுக்கிழமையை யநுசரி. நமது சாபத் நாட்களை அநுசரியுங்கள். நமது பரிசுத்த ஸ்தலத்தண்டை பயபக்தியா யிருங்கள். நாமே ஆண்டவர். நீங்கள் நமது கற்பனை வழியிலே நடந்து நமது கட்டளைகளையுங் காத்தநுசரிப்பீர்களேயாகில், உங்கட்குப் பருவ காலங்களிலே மழையைப் பெய்யப் பண்ணுவோம். (லேவியர் XXVI.-2, 3, 4).

இந் நான்கு வழிகளும் கிறிஸ்துவ போதனையின் சாராம்சம். இவ் வழிகளில் கூடிய மட்டும் எச்சரிக்கையோடு நடந்து வருகிறவர்கள் சந்தேகமின்றி பூலோகத்தில் நல்லவர்களென்று மதிக்கப்படுவார்கள். யாவரோடும் சமாதானமாய் இடைஞ்சலின்றி வாழ்வார்கள். அப்படிப்பட்டவர்கள்மேல் தேவாசீர்வாதம் பொழியும். அவர்கள் தொடுத்த காரியங்களும் பலிக்கும். அவர்கள் மக்கள் அவர்களுடைய தலையணி கிரீடங்களைப்போல் துலங்கி, நாளுக்கு நாள் விருத்தி யடைவார்கள். அவர்கள் குடும்பங்கள் செழித்து, வாழ்ந்து வரும். இந் நான்கு வழிகளிலும் நாம் நடந்து அவைகளில் நிலைத்திருக்க பெரிய வழி ஒன்றுண்டென்று மொசிஞ்ஞோர் தெ செகுர் என்னும் மேற்றிராணியாண்டவர் வசனிக்கிறார். அதேதெனில், குடும்ப பொது ஜெபந்தான். அவர் சொல்வது: குடும்ப பொது ஜெபமென்றால், விளக்குவைத்த பிறகு சிறு பிள்ளைகள் ஏதோ கிளிப்பிள்ளை யாட்டமாய் மந்திர ஜெபங்களைச் சொல்லுவதன்று. அல்லது பெண்சாதியானவள் தனிப்பட ஒரு மூலையில் ஜெபிப்பது மன்று. அல்லது புருஷனானவன் படுத்துக் கம்பளியை யிழுத்துப் போர்த்துக்கொள்ளும்போது ஈயோட்டுகிற மாதிரியாய் சிலுவையை வரைந்து கொண்டு, சில ஜெபங்களை உளறுவதுமன்று. ஆனால் தகப்பனும், தாயும், பிள்ளைகளும், மற்றும் பந்துக்களும் ஒன்றாய் ஒரு இடத்தில் கூடி, பக்தி வினயத்துடன் சபதயாய் ஜெபிக்கும் ஜெபமேயாம். ஒரு குடும்பத்தின் அங்கத்தினர் யாவரும் மாலை வேளையில் ஒன்று கூடி பொது ஜெபம் ஜெபித்து, குடும்பத் தெசமான் அல்லது தந்தைக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவருடைய ஆசீர் அடைவதைப் பார்க்கும் காட்சி எப்படிப்பட்ட சிறந்த காட்சி! உண்மையாகவே அவர்க ளனைவருக்கும் ஒரே இருதயமுண்டு, ஒரே ஆத்தும முண்டு. அவர்கள் தங்கள் அக்கம் பக்கத்தாரால் நன்கு மதிக்கப்படுவார்கள். சத்துராதிகள் அவர்களை வெல்ல முடியாது. சேசுக்கிறிஸ்துநாதர் அவர்களிடையில் வசிக்கிறார். அவரோடு, சமாதானமும், ஐக்கியமும் பிறசிநேகமும் அக் குடும்பத்தில் வியாபித்திருக்கும். அப்படிப்பட்ட குடும்பத்தில் ஒழுங்கு கிரமமும், ஒற்றுமையும், செழிப்புமிருக்கும். கடவுள் நடத்தும் குடும்பம் நன்றாய் நடத்தப்படும் குடும்பம் என்று பழமொழியாகமம் வசனிக்கிறது. குடும்ப பொது ஜெபத்தின் சிறப்பைப்பற்றியும், அதனால் விளையும் அநந்த நன்மைகள், முக்கியமாய் உத்தம ஜீவியம், அன்பு, ஐக்கியம் விருத்தி ஆகிய இவைகளைப்பற்றியும் ஒரு சிறந்த ஆங்கிலேய வித்துவான் ஓர் வியாசம் எழுதியிருக்கிறார். அதைத் தீர மொழி பெயர்த்துக் காட்ட இங்கு இடம் தராது.

எவ்விதத்திலும், அதாவது, ஆத்தும சம்பந்தமாயாவது சரி, சரீர சம்பந்தமாயாவது சரி முன்னுக்குவரப் பிரியங்கொள்ளுகிறவர்கள் கட்டாயம் குடும்ப பொது ஜெபம் ஜெபிக்கவேண்டும். அதன் பயனாக கிறிஸ்துவப் பயிற்சியில் தேறவேண்டும் என்பதுவே. மற்றவை யாவும் தம்மாலே தாமாய் வரவேவரும். நமது குலத்தாருள்ளும் ஒழுங்கு கிரமமுள்ள சில நல்ல குடும்பங்களில் பிரதி இரவும் இரா ஜெபம் நடந்துவருகின்றதென்பது நல்ல காரியமே. ஆனால் எத்தனையோ குடும்பங்களில் இராச் செபமென்பது மருந்துக்கும் கிடையாது. ஏதோ கிறிஸ்துவ முகத்தாட்சணியத்திற்குப் பயந்து எட்டு நாளைக்கொருமுறை கட்டாயத்திற்குக் கோவிலை எட்டிப்பார்த்துவந்துவிட்டால், அத்தோடு கிறிஸ்துவக் கடமை முடிந்தாச்சுதென்று நினைப்பார்கள். "சங்கட்டம் வந்தால் வெங்கட்டராமா" என்றபடி சில குடும்பங்களில் ஏதோ ஒரு கஷ்டம் வந்தால் அப்போது தான் அவர்கள் வீட்டில் ஒரு ஜெபமோ அல்லது உபயமோ நடக்கும். சில குடும்பங்களில் பிள்ளைகள் கொஞ்ச நேரம் கிளிப்பிள்ளை யாட்டமாய் சிலமந்திரங்களைச் சொல்லுவார்கள். வேறு குடும்பங்களில் பக்தியுள்ள பெண் பிள்ளைகள் ஒரு மூலையில் ஜெபம் செய்தாலும் ஆண் பிள்ளைகள் தெருத்திண்ணைமேல் உட்கார்ந்துகொண்டு கதை பேசுவார்கள். அல்லது பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருப்பார்கள். இரா வேளையில் கேடு கெட்ட குடும்பங்களில் நடக்கும் குடி, வெறி, சண்டை நீங்கலாக, சற்று சுமாரான குடும்பங்களில் முன்னிரவு கழிவது இப்படித்தான். ஏனெனில் ஒழுங்கற்ற குடும்பங்களில் குடும்பத் தெசமான் அல்லது தகப்பன் வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போதே குடித்துவிட்டு வந்து அலப்பான பேச்சுகளைப் பேசி வம்புவளர்ப்பான். பிள்ளைகள்—பிள்ளைகள் எங்கேயோ? ஆடுமாடுகள் விளக்கேற்று முன்னமேயே வீடுவந்து சேரும். இவர்கள் முன்னிரவு கழிந்த பிறகுதான் வீடு வருவார்கள். பெண்சாதியானவள் இந்தப்பிள்ளையைத் தூஷித்துக்கொண்டும் அந்தக் குழந்தையைச் சபித்துக்கொண்டும் சமையலறைப்புகையில் மண்டிக் கிடப்பாள். இப்படிப்பட்ட குடும்பங்களில் இராச்செபம் நடப்பதெப்படி?

இதை வாசிக்கும் என் நேச சகோதரமே, உனக்கு முன்னுக்குவரப் பிரியமுண்டா, தேவாசீர்வாதத்தை யடைந்து விருத்தியடைய ஆசையா, பன்னிப் பன்னிப் பேசுவதில் பயனில்லை. உத்தம கிறிஸ்துவனாய் ஒழுகு. தினந்தோறும் இராச் செபமாவது பொதுவில் குடும்பத்தோடு செய்யத் தீர்மானம் செய். ஜெபம் செய்வது பேதைப் பெண்டுகளுக்கும் விவரமறியாக் குழந்தைகளுக்கும் உரியதென்று நினையாது குடும்பத் தெசமானாகிய உனக்கே அது முதல் உரியது. "செங்கோல் கோணினால் எங்கும் கோணும்." நீ கடைத் தெருவெல்லாம் சுற்றித் திரிய அல்லது வீணான சம்பாஷணையில் காலங் கழிக்க, உன் பிள்ளை பெண்டுகள் மாத்திரம் பத்தியோடு ஜெபதபத்தில் அமர்ந்திருப் பார்களோ வென்ன? அல்லது ஜெபத்தைப்பற்றி அவர்களுக்குப் புத்திசொல்ல

உனக்கு வாய் ஏது? நேரத்தோடு வீட்டுக்கு வா; வரும்போதே குடித்துவிட்டு வராதே. உன் மக்கள் இரவில் வீட்டிலிருக்க திட்டம் செய். உன் மனைவி பொழுதோடே சமையல் காரியங்களை முடிக்கப் பார். அனைவரும் ஒன்றுகூடி ஜெபம் செய்யுங்கள். ஜெபமாலை சொல்லத் தவறாதே. ஒரு தேவ ரகசியம் முடிக்கப் பதினைந்து நிமிஷம் போதும். பொதுவாய் ஜெபமாலை ஜெபிப்பதினால் குடும்ப சீவியம் பரிசுத்தமடைகிறதென்றும், நமது பெரியோர் காலத்தில் அதுவே கிறிஸ்துவ சீவியத்தின் சிறந்த இலட்சணமாக விளங்கிவந்ததென்றும், அப்படி இக்காலத்தில் ஜெபமாலை ஜெபியாததினாலேயே, கிறிஸ்துவ குடும்பங்கள் இப்படிப்பட்ட கேடுகெட்ட ஸ்திதிக்கு வந்ததென்றும் திருச்சபையின் பிரபுவாகிய கருதினால் மெக். குலோஸ்கி (McClosky) என்பவர் ஓரே கண்டிப்பாய் சொல்லுகிறார். புருஷன் ஜெபம் ஜெபிக்க பெண்சாதி உதவி மந்திரம் சொல்லுவது எப்படிப்பட்ட ஐக்கியத்தைப் பிறப்பிக்கும். தகப்பன் ஜெபம் ஜெபிக்க பாலமனம் மாறாத மக்கள் தங்கள் மழலைச் சொற்களால் தேவனை ஸ்துதிப்பது எப்படிப்பட்ட பாசத்தை யுண்டுபண்ணும். அப்படிப்பட்ட குடும்பங்கள் நல்ல குடும்பங்கள். கிறிஸ்துவப் பயிற்சியுள்ள குடும்பங்கள். "யானைக்கும் அடி சறுக்கும்" என்கிற பழமொழியின்படி ஏதோ ஒரு சமயம் நெறி தவறினாலும், சீக்கிரத்தில் தங்களைச் சீர்படுத்திக்கொள்ளக் கூடிய குடும்பங்கள். ஆனதால் நீயும் இச்செபக் கிருத்தியத்தைக் கையாடி வருவாயேயாகில், உன் குடும்பத்தில் உண்டாகும் மாற்றத்தை வெகு சீக்கிரத்தில் கண்டு கொள்வாய்.

இந்திய கிறிஸ்துவன்.

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### ஓர் புதுமை.

புன்னைக்காயல் அர்ச். தோமையார் கோவிலைப் பற்றி தென் இந்திய கத்தோலிக்கரில் அநேகர் கண்டறிந்திருக்கிறார்கள். பலவகைப்பட்ட நோயாளரும், புத்திரசந்தானமில்லாதவர்களும், கஸ்தி சஞ்சலப்படுகிறவர்களும் இக்கோவிலுக்கு வந்து வேண்டிய உதவி சகாயங்களை அடைந்திருக்கிறார்களென்பதையும் அறிந்திருக்கிறார்கள். இத்தேவாலயத்துக்குப் போகும் வழி எவ்வளவு கஷ்டமானதாயிருந்தாலும் அவையெல்லாம் கவனியாது கிறிஸ்துவர்கள் அவ்விடம்போய் வந்துகொண்டிருப்பதே அர்ச். தோமையார் செய்யும் பேருபகாரங்களுக்குத் தகுந்த அத்தாட்சி. திருயாத்திரைக்காரரின் கூட்டமே அவ்விடத்தில் ஓர் சிற்றூரைப்போல் காணப்படுகிறதென்றால் ஆங்கு அர்ச். தோமையப்போஸ்தலரால் செய்யப்படும் அற்புதங்கள் அளவற்றன என்பது மலையிலக்கே. திருயாத்திரைக்காரராலேயே குழுமியிருக்கும் அத்திருஸ்தலத்தில் சமீபத்தில் நடந்த ஓர் புதுமையை அப்போது அங்கே வெவ்வேறு பட்டணம், ஊர்களிலிருந்து வந்திருந்தவர்களுடைய கையொப்பங்களுடனே வெளியிடுகிறோம். சென்ற ஜூலை மாதம் நாலாந் திகதியன்று ஆவேமரி கபித்தான் என்னப்பட்டவர் இத்திருஸ்தலத்திற்கு வந்திருந்தார். வந்திருந்த இரண்டு நாட்களிலும் அதாவது 4-ம் 5-ம் திகதிகளில் சைஜாடை காட்டித் தமக்கு வேண்டியவைகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். இத்திருஸ்தலத்திற்கு வருவதற்கு முன் இரண்டு நாளாக வாய் பேசாமலிருந்தாரென்பதற்குப் போதிய அத்தாட்சிகளுண்டு. 6-ந் திகதியாகிய வியாழக்கிழமையன்று தமது படுக்கையைக் கோவிலுக்குள்ளேயே வைத்துக்கொண்டு மனஜெபம் பண்ணிக்கொண்டிருந்தனர். பிறகு அங்கு மாட்டியிருந்த சிலுவைப்பாதைப் படங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த்து தியானித்துக்கொண்டு வரும் வேளையில், மூன்று சிறுவர் அக்கோவில் சுவரில் வைத்திருந்த கடிகாரம் காட்டும் மணியைப் பற்றித் தங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் மணியிப்போது 9½ என்றான். வேறொருவன் பத்து என்றான். இன்னொருவன் பத்தரை யென்றான். சிலுவைப் பாதைப் படங்களைப் பார்த்து தியானம் பண்ணிக்கொண்டிருந்த முன் சொன்ன வாய் பேசா மனிதன் சிறுவரை நோக்கி "மணி யிப்போது 11" என்று உரக்கக் கூவினான். உடனே சிறுவர் திகிலடைந்து வெளியே போய் குடிசைகளிற் றங்கியிருந்த சகல



திருயாத்திரைக்காரரிடம் ஊமையாயிருந்தவன் பேசுகிறானென்று தெரிவித்தனர். அவர்களெல்லாரும் ஓடிவந்து நடந்தவை யனைத்தையும் விவரமாகக் கேட்டு சந்தோஷ வெள்ளத்திலாழ்ந்து அர்ச். தொம்மை யப்போஸ்தலரை வாழ்த்தித் துதித்தனர். அது முதல் அந்த மனிதன் தெளிவாகப் பேசிவருகிறார்.

சாட்சிகள்.

1. சேசையா பருனாந்து, தூத்துக்குடி.
2. பிச்சை பருனாந்து, ,,
3. சூசைமிக்கேல் பருனாந்து, உடன்குடி.
4. சூசைமாதவடியான் பருனாந்து, ஆலந்தலை.
5. ஆ. சூசை நசரேத், ,,
6. கபிரியேல் பூபாலராயர் வீரபாண்டியன் பட்டணம்
7. ஜோசப் கொரேர சிப்பிகுளம்.

இன்னம் வேறநேகரும் உண்டு.

[இஃது மெய்யான புதுமையென்றறிய அவ் ஊமையர் பிறவி ஊமையராயிருந்தவரா, அல்லது மத்தியில் ஊமையரானவரா வென்று தெரிவித்திருந்தால் நலமாயிருந்திருக்கும்—ப. ர்.]

## MISCELLANEOUS NEWS & NOTES

## பற்பல சமாச்சாரம்.

**உருளைக்கிழங்கின் உபயோகம்.**—பரீஸ் பட்டணத்தில் ஸ்தாபகஞ் செய்திருக்கும் துணிகளைச் சுத்தி செய்யும் யந்திரத்தில் சோப்புக்குப் பதிலாக அவித்த உருளைக் கிழங்கை உபயோகஞ் செய்கின்றார்கள். இது சோப்பைப் பார்க்கிலும் துணிகளை நன்றாகவும் சுறுக்காகவும் சுத்தப்படுத்துகிறதாம்.

**ஒரு இங்கிலீஷ்காரனும் ஐரிஷ்காரனும்.**—ஐயர்லாந்து தேசத்தின் பிரதான பட்டணமாகிய டப்ளின் நகரத்தில் பெரிய நந்தவனமொன்று உண்டு. அதன் வாசற்படியண்டை வெள்ளை சலவைக் கற்களினால் உயிரா யிருப்பது போல் தோன்றும் 2 பெரிய நாய்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. மோட்டார் வண்டியில் ஏறி அவ்வழியாய்ச் சென்ற ஒரு ஆங்கிலேயன், வண்டி ஓட்டுகிற ஐரிஷ்காரனைப் பார்த்து "இந்த நாய்களை ஒரு நாளைக்கு எத்தனை தடவை போஷிக்கிறார்கள்?" என்று கேட்டான். அதற்கு ஐரிஷ்காரன் "அந்த நாய்கள் குரைக்கும்போதெல்லாம்" என்று சொன்னானாம். இவ்விருவரில் யார் யாரை ஏமாற்றப் பார்த்தனரோ நமக்குத் தெரியாது. இருந்தாலும், ஐரிஷ்காரனுடைய விவேகமே புகழத்தக்கது.

**நிகழும் யுத்தத்தின் இரண்டாவது வருஷாந்திர நாள்.**—வருகிற வெள்ளிக்கிழமை நம்முடைய ஆங்கிலேய அரசாட்சியார் ஜெர்மனியரோடு யுத்தந் தொடுத்த இரண்டாவது வருஷாந்திர நாளாகையால், அன்றையதினம் மிகவும் வந்திக்கத்தக்க சென்னை அதிமேற்றிராணியார் தம்முடைய அதிகாரத்துக் குட்பட்ட எல்லா கோவில்களிலும் விசேஷ ஜெப தபம் நடத்துமாறு கட்டளை கொடுத்திருக்கிறார். அன்றியும் கவர்ன்மெண்டு கிறிஸ்துவ உத்தியோகஸ்தர்களனைவரும் மேற்படி ஜெப ஆராதனைக்குச் சமுகமாயிருக்க, கவர்ன்மெண்டாரும் விசேஷ உத்தரவு அளித்திருக்கிறார்கள்.

**மைலாப்பூர் காட்டுக்கோவில்.**—இக்கோவிலின் 400-ம் வருஷத்திய ஜூபிலி மகோற்சவம் வருகிற ஞாயிற்றுக்கிழமை மிக்க சிறப்பாய் நடைபெறும். அன்றையத்தினம் காலை, மயிலை மேற்றிராணியாரவர்களால் பெரிய பாட்டுப்பூசை. மாலையில் 5½-மணிக்கு அர்ச். தோமையார் கல்லறையிலிருந்து, ஷை கோவிலுக்கு மேற்றிராணிமார், குருக்கள், கிறிஸ்துவர்களெல்லோரும் புடை சூழ்ந்து பவனி செல்லுவார்கள். பிறகு பிரார்த்தனை, பிரசங்கம், திவ்யநற்கருணை ஆசீர்வாத முதலியவை நடந்தேறும். கிறிஸ்துவர்களெல்லோரும் இந்த ஜூபிலி மகோற்சவத்துக்கு வந்து, அதைச் சிறப்பித்து அர்ச். ஞானப்பிரகாசிமாதாவின் ஆசீரைப்பெற்றேகுவார்களாக.

**மருமகனும் மாமியும்.**—தோமை யென்கிற மாப்பிள்ளை மறுவுக்காக தன் மாமியார் வீட்டுக்குப் போயிருந்தான். மாப்பிள்ளைக்கு இலையில் பற்பல பதார்த்தங்களும் பலகாரங்களும் பரிமாறப்பட்டிருக்க, மாப்பிள்ளையும் உட்கார்ந்து இலையில் ஒன்றும் வைக்காமல் எல்லாவற்றையும் சாப்பிட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த அவனது மாமியார் "மருமகனே,

இன்னும் கொஞ்சம் பலகாரம் சாப்பிடுங்கள்" என்று சொல்லிக்கொண்டு, ஒரு தட்டில் சில பண்டங்களை அவனிடங்கொண்டுவர, மாப்பிள்ளை "அத்தை, எனக்கு ஒன்றும் வேண்டாம், போதும் போதும்" என்னவே அதற்கு மாமியார் "என்ன, உங்களுக்கு பசி யில்லாதநிலைப்படிச் சொல்லுகிறீரோ?" என்று வினவ, அதற்கு மாப்பிள்ளை "இல்லை, இல்லை, மரியாதைக்காகவே நான் அப்படிச் சொல்லுகிறேன்" என்றானாம்.

ஒரு ஜெர்மன் போர்வீரன் தன் மனைவிக்கு எழுதிய கடிதம்.-இதுவரையும் ரிசர்விலிருந்த ஒரு ஜெர்மனிய போர்வீரன் தான் போர்முனைக்கு அனுப்பப்படபோகிறதாகக் கேள்வியுற்று, சந்தோஷித்து, ஸ்விட்சர்லாந்திலிருந்த தன் மனைவிக்கு அனுப்பின கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தான். "போர்முனையில் அரண்களில் சண்டைபோட நான் அனுப்பப்படபோகிறது எனக்கு மெத்த சந்தோஷம்; ஏனெனில் எனக்கு அவ்விடத்திற் சாப்பாடு கொஞ்சம் திருப்தியாய்க் கிடைக்கும். போர்முனைக்கு அனுப்பப்படாமல் இதுவரையிலும் நான் ரிசர்விலிருந்தபோது எனக்குக் கிடைத்த சாப்பாடோ வெகு கேவலம்; இன்னுங் கொஞ்சநாள் இங்கேயே நான் இருக்க நேரிடுமாகில், என்னால் தாளமுடியாது" என்று எழுதினானாம். இதனால் சாப்பாட்டுக் கவலையே இப்போது ஜெர்மனியருக்குப் பெருங் கவலையெனத் தெரியவருகிறது.

ஓர் வியாதிக்காரன்.—ஒருவன் ஒரு வைத்தியனுடைய சிகிச்சையினால் சுகப்பட்டிருந்தான். அவனது அண்டை வீட்டுக்காரன் இவனைப் பார்த்து "என்ன, சவுக்கியமாகிவிட்டீர் போலும். வைத்தியன் ஒவ்வொரு தடவையும் உம்மைப் பார்க்க வரும்போது அவனுக்கு என்ன பீசு கொடுப்பதாக ஒப்புக்கொண்டீர்?" என்று கேட்டான்.

வியாதிக்காரன்.—10-ரூபாய்.

அண்டை வீட்டு.—வைத்தியன் உம்மை எத்தனை தரம் பார்க்க வந்தான்?

வியாதி.—இருபது தரம்.

அண்டை.—ஐயோ! அப்போது நீர் 200-ரூ. கொடுத்தீர்களோ?

வியாதி.—இல்லை இல்லை. 10-ரூ.தான் கொடுத்தேன்.

அண்டை.—என் 10-ரூபாய் மாத்திரம்?

வியாதி.—எனக்கு வைத்தியஞ்செய்ய அவன் வந்ததெல்லாம் ஓரே தடவை. ஆனால் இப்பத்து ரூபாயையும் வசூல் செய்ய அவன் 19 தடவை வந்தான்.

சாப்பிடத்துவக்குமுன் உன் தகப்பனார் என்ன செய்கிறார்?—ஒரு உபாத்தியாயர் சில மாணாக்கர்களுடன் ஒரு லீவு நாளில், வனப்போஜனம் செய்து உல்லாசமாய் நாளைக்கழித்துவர, ஊருக்கப்பாலுள்ள ஓர் இடத்துக்குச் சென்றார். அவ்விடத்தில் அங்கு மிங்கும் ஓடியாடித் திரிந்த பின்னர், தங்கள் பசியை ஆற்றிக்கொள்ள, மாணாக்கர்களெல்லோரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, தாங்கள் கொண்டுவந்திருந்த பதார்த்தங்களைப் பரிமாறிக் கொள்ளுகையில், உபாத்தியாயர் அவர்களை நோக்கி "பிள்ளைகளே, கடவுளுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வதற்கு தக்க சமயம் எது?" என்று கேட்டார். பிள்ளைகளெல்லோரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு மௌனமா யிருந்தார்கள். பிறகு உபாத்தியார் "வீட்டில் நீங்களெல்லோரும் சாப்பிட உட்கார்ந்தவுடன் உங்கள் தகப்பனார் என்ன செய்கிறார்?" என்று கேட்டு வாய் மூடு முன் ஒரு சிறு பையன் எழுந்து எல்லோரும் நகைக்க "சமையல் காரனைக் கோபிக்கிறார்" என்றான். பெற்றோர்கள் எவ்வழியோ அவ்வழியே பிள்ளைகளுமென்பதற்கு இதோர் உதாரணம். சாப்பிடுமுன் ஜெபம் செய்யும் பழக்கம் பெற்றோருக்கு இருந்தால் தான் அது பிள்ளைகளுக்கு முண்டாகும்.

ஓர் உபாத்தியாயரும் மாணாக்கனும்.—ஒரு தாயானவள் தன் மகனுக்கு வீட்டுத் தோட்டத்திலுள்ள மரங்களின் பழத்தைப் பறித்துச் சாப்பிடக்கூடாதென்று கட்டளை கொடுத்திருந்தாள். ஒருநாள் அப்பையன், தன் தாய் வீட்டிலில்லாத சமயத்தில் ஒரு பழத்தைப் பறித்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், அவன் தாய் திடீரென்று வீட்டில் நுழையவே, பையன் பழத்தைத் திருட்டுத்தனமாய் சாப்பிடுவதைக் கண்டு "நான் அப்பழங்களையெல்லாம் பறித்து ஊறுகாய்போட வைத்திருக்க, நீ அதைப் பறிக்கலாமா?" என்று அவனைக் கோபித்து நையப் புடைத்தாள். அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை ஞான உபதேசக் கிளாசில், உபாத்தியாயர் அப்பையனை சர்வேசுரன் ஆதாம் ஏவாளுக்கு ஒரு மரத்தின் கனியைமாத்திரம் சாப்பிடக்கூடாதென்று கட்டளை கொடுப்பானேன் என்று கேட்க, அதற்குப் பையன் "சர்வேசுரன் அம்மரத்தின் கனிகளை ஊறுக்காய்போட வைத்திருந்ததனால் அவ்வித கட்டளை அவர்களுக்குக் கொடுத்தார்" என்று மிக்க பயத்துடன் பதிலுரைத்தான்!!

இன்னுங் கொஞ்சம் சூப் உங்களுக்குத் தேவையா?—ஒரு துரைசானி வீட்டில் மேரி என்ற ஒரு சிறுமி வேலைக்கு அமர்ந்தாள். அவளுக்கு வேலைகொடுக்கு முன் துரைசானி அவளை அழைப்பித்து "மேரி, நீ சாப்பாட்டு மேசையிலிருந்து சூப் பாத்திரத்தை அப்புறப்படுத்துமுன் விருந்தினர் ஒவ்வொருவரிடமுஞ் சென்று அவர்களுக்கு இன்னுங் கொஞ்சம் சூப் தேவையாவென்று விசாரித்து, பிறகு பாத்திரத்தை எடுத்துப் போகவேண்டும்" என்று அவளுக்குக் கற்பித்தாள். "நல்லது, அம்மா, அப்படியே செய்கிறேன்" என்றாள் மேரி. மறுநாள் சூப் பாத்திரத்தை மேசையிலிருந்து எடுக்கு முன், மேரி ஒரு கனவானிடஞ் சென்று "ஐயா உங்களுக்கு இன்னுங் கொஞ்சம் சூப் தேவையா?" என்று கேட்க, அவன் "ஆம், எனக்குக் கொஞ்சம் தேவை தானம்மா" என்றான். மேரியோ சூப் பாத்திரத்தை அவனுக்குக் காண்பித்து "ஐயா, சூப் எல்லாம் ஆய்விட்டது; பாத்திரத்தில் ஒன்றுமில்லை" என்று சொல்லி பாத்திரத்தை எடுத்துக் கொண்டுபோய்விட்டாள். இவளும் நல்ல வேலைக்காரிதான்!!

ஓர் விருத்தாப்பிய மாலுமியும் கப்பற்றலைவனும்.—வட அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் மிஸ்ஸிஸிப்பி என்ற பெரிய நதி ஒன்றுண்டு. இந்த நதி ஏற்றுமதி இறக்குமதிக்கும் பிரயாணத்துக்கும் ஏற்றதாயிருந்து வருகிறது. ஒரு நாள் வயது சென்ற ஒரு மாலுமி, துறைமுகத் தலைவனிடஞ் சென்று கப்பலோட்டும் வேலைக்குத் தன்னை வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். தலைவன் மாலுமியைப் பார்த்து "இந் நதியில் கப்பற் சேதமடைய காரணமாயிருக்கிற கற்பாறைகளும், மணல் மேடுகளும் உள்ள இடங்களை யெல்லாம் நீ நன்றாய் அறிவாயா?" என்று கேட்க, அவன் அவைகளைப்பற்றித் தனக்கு ஒன்றுந் தெரியாதென்றான். தலைவன் "அப்படியானால், நீ கப்பலோட்டும் வேலைக்கு லாயக்கல்ல" வென்று சொல்ல மாலுமி அதற்கு "இந் நதியில் கற்பாறைகளும் மணல் மேடுகளும் இருக்கிற விடங்கள் எனக்குத் தெரியாதே போனாலும் அவைகளில்லாத இடங்களெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். அவ் வழியாக நான் கப்பலுக்கு யாதோர் சேதமுமின்றி நடத்திச்செல்லுவேன்" என்றான். இந்த விருத்தாப்பிய மாலுமியைப்போல், நாமும் நமது ஆத்தும இரட்சணிய விஷயத்தில், அதற்கு ஞான நஷ்டத்தை வருவிக்கும் கெட்டப் புஸ்தகங்கள், கெட்ட கதைகள் முதலானவைகளை விநோதப் பிரியத்தினால் அறியத்தேடுவதைவிட நம்முடைய ஆத்துமத்துக்கு ஞான நன்மையை விளைவிக்கிறவைகளை மாத்திரம் அறிய ஆசிப்பது புத்தி.

ஜெர்மனியரின் பெரிய பீரங்கி.—16¾ அங்குலம் வாயகலமுள்ள இப் பீரங்கியைப்பற்றிய விவரங்கள் "நியு யார்க் வர்ல்ட்" என்னும் ஓர் அமெரிக்க சமாச்சாரப் பத்திரிகையில் சவிஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு:—இப் பீரங்கியின் கனம் 97 டன்; அடிப் பீடம் 41¼ டன்; குழாயின் நீளமோ 16 அடி, 5 அங்குலம்; இதில் சுடும் ஒவ்வொரு குண்டின் இடை 885 பவுன்; குண்டின் நீளம் 4 அடி 2 அங்குலம்; இப் பீரங்கியின் பாகங்கள் 172. இதை ஓரிடத்தினின்று மற்றோரிடத்துக்குக் கொண்டுபோக பிடிக்கு ரயில் ட்ரக்குகள் 12; இப்பீரங்கியை யேற்றி வைக்க வேண்டிய இடத்தில் போடவேண்டிய அஸ்திவாரத்தின் ஆழம் 26 அடி; இப் பீரங்கியின் முதல் குண்டினால் லீஜ் கோட்

டையில் சேதமானவர்கள் 1,700 பேர்; இரண்டாம் குண்டினால் 2,300 பேர்; நாமூர் கோட்டையும் மாபூஜ் கோட்டையும் இரண்டே வெடிகளினால் தகர்க்கப்பட்டன; ஸ்பியர் கோட்டையும், ஹாயி கோட்டையும் ஒரே வெடியால்; இப் பீரங்கியைச் சேர்த்துப் பூட்ட பிடிக்கும் நேரம் 25, 26 மணி நேரம்; சுடுகிறதற்கு இலக்கு பார்க்க பிடிக்கும் நேரம் 6 மணி; இப் பீரங்கியைச் சுடுகிறவன் இருக்கவேண்டிய தூரம் 300 கெஜம்; 2½ மைல் சுற்றுப் பரப்பளவு தூரத்திலுள்ள எல்லா ஜன்னல்களையும் உடைத்துத் தகர்க்கக் கூடியது. ஒவ்வொரு குண்டும் சுடுகிறதற்குப் பிடிக்கும் செலவு 524 பவுன் அல்லது 7860ரூ; இப் பீரங்கியைச் சுட செல்லும் வேலைக்காரர் 200 பேர்; இப் பீரங்கியைச் சுடும் வேலைக்காரர் அவ்வதிர்ச்சியால் சேதமுறாவண்ணம் தங்கள் வாயிலும் காதுகளிலும் கண்களிலும் மூடிபோட் டடைத்துக் கொண்டு, தரையில் குப்புற படுத்துக் கொள்ளுவார்கள். இப் பீரங்கி எதிரிகளின் கையிலகப்படாதபடி அதை உடைத்துப் போட அதன் இருப்பிடத்திற் கடியில் சுரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறதுமல்லாமல், இதற்கு பொறுப்புதாரியாயிருக்கும் இஞ்சினியர் ஆபத்துகாலத்தில் சுரங்கத்துக்குவெடி வைத்துப் பீரங்கியை உடைத்துப் போடவும் சத்தியஞ் செய்து கொடுத்திருக்கிறான்.

ஆரம்பாக்கத் திருவிழா—ஆரம்பாக்கத்து மோக்ஷ முடி இராக்கினி மாதாக் கோவிலின் 2-ம் வருஷாந்திர உற்சவம் இம்மாதம் 20உ ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். திருநாளுக்கு முன் 12உ கொடியேற்றம். திருநாளன்று தேர் சுற்றுப்பிரகாரம், பிரசங்கம், பாட்டுப்பூசை முதலியன நடைபெறும். சென்னையிலும் மற்ற விடங்களிலுமுள்ள கிறிஸ்துவர்கள் இக்கோவிலுக்குத் திருயாத்திரையாய் வந்து இத்திருவிழாவைச் சிறப்பித்து மோக்ஷ முடி இராக்கினி முடிபெற்ற பரம ஆண்டவளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுப்போகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. M. F. Ignatius,
விசாரணை குரு.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

**அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.**

### ஜனனம்.
### வேம்பார்.

தேவானுக்கிரகத்தால் எனது சகோதரி பெத்தம்மாள் தால்மேய்த ஜூலை 3உ முதல் பேறாக ஓர் பெண் மகவைப் பெற்றனள். தாயுஞ் சேயுஞ் சுகம், சேசுவுக்கு ஸ்துதி.

### திருமண மகோற்சவ விளம்பரம்.

நிகழும் 1916ஆ ஜூலை 10உ திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு சென்னை வாலாஜா பேட்டை அர்ச். காணிக்கை உபகாரமாதாவின் ஆலயத்தில் சங்கைக்குரிய W.G. உட் சுவாமியார் அவர்களாலும் டீக்கன் சப்டீக்கன் மார்களாலும் செய்யப்பட்ட பெரிய பாட்டு பூசையில் எனது சகோதரரும் மெட்ருஸ் சென்ட்ரல் ஸ்டேஷன் ரிப்ரெஷ்மென்ட்ரூம் மானேஜருமாகிய ஸ்ரீமான் G. டேவிட் பிள்ளையவர்கள் ஜேஷ்ட குமாரன் சிரஞ்சீவி அருமைதாஸ் பிள்ளைக்கும் நீலகிரி கவர்ன்மென்ட் அவுஸ் போலீஸ் ஆபீஸர் கனம் R. A. அந்தோனிமுத்துபிள்ளை அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி லில்லி ஆரோக்கியமரி அம்மாளுக்கும் சென்ற மாதம் 8-ந் தேதியில் வெளியான சென்னை மறாவிகடநாதன் பத்திரிகையில் பிரசுரஞ் செய்தவண்ணம் மெய்ம்மண வார்த்தைப்பாடும் பிறகு St. Mary's Castle என்னும் எங்கள் கிருகத்தில் நடத்தேறிய மற்றுமுள சுப விஷயங்களு மொருங்கே நடைபெற்றதால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் எங்கள் இன ஜன பந்துமித்திரர் யாவரும் இத்தம்பதிகள் திருக்குடும்ப தயவால் செவ்வனே வாழ வேண்டிக்கொள்ளும்படியாக வுங்கள் மேலான கனத்தை பெரிதும் பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்
மணமகனின் இளைய சிறிய தந்தை
F. David Pillai
Mining Signaler,
Nandy droog, G. M. Co. Oorgaum.
சுபம்! சுபம்!! சுபம்!!!

### நன்மரண அறிக்கை.

### வெல்லிங்டன்.

கன்னனூர் வர்ணச் சேரியில் பிறந்து நீலகிரி வெல்லிங்டன் ரிஜிமென்டல் இன்ஸ்டிட்யூட்டில் வேய்ட்டர் (*Waiter*) வேலையிலமர்ந்து, ஆஸ்பத்திரிச் சேரியில் சில காலமாய் தன் பெரிய குடும்பத்தாரோடு நல் வாழ்வு வாழ்ந்துவந்த ***A. T. A.*** அந்தோனி யென்பவர் திடீரென (*Dropsy*) என்னும் நீர்க்கோவை வியாதி கண்டு பாலக்காடு சென்று வைத்தியர்களாலும் ஔஷதங்களாலும் குணமடையாமல் 3½ மாதகாலமாய் வியாதியின் கொடுமையைப் பொறுமையோடு சகித்து கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைச் சம்பூரணமாய்ப் பெற்று சென்ற எப்பிரல் மாதம் 18-ம் தேதி இரவு 8-மணிக்கு தமது சுற்றத்தாரையும் இரண்டு அருமந்த மக்களையும் அநாதைகளாய்ப் பரிதபிக்கவிட்டுப் பரகதி வாழ்வை யடைந்தார். அவருடைய சடலம் எப்பிரல்மீ 20உ சுற்றத்தார்கள் ஒருங்கு சேர்ந்தவுடன் பாலக்காட்டிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. அடுத்தமாதம் வெல்லிங்டனில் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பெரிய பாடல் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவருடைய மரணம் இவர் குடும்பத்துக்கும் விசேஷமாய் வே. அர்ச். செபஸ்தியார் பஜனையோர்க்கும் அதிக நஷ்டகரமானது. இவ் வுத்தமர் தமது ஜீவிய காலத்தில் ஷை பஜனையில் ஓர் முதன்மையான ஏஜெண்டா யிருந்து பற்பல உதவி சகாயம் செய்து வந்தது மன்றி கொளும்பிலிருந்து நேர்த்தியான செபஸ்தியார் சுரூபம் ஒன்றை ஷை பஜனைக்கூடத்தில் தமது ஞாபகார்த்தமாக வாங்கி வைத்தனர். பொது நலப் பிரியராகிய இவரது 2 அநாதப் பிள்ளைகளையும் கடவுள் ஆசீர் வதிப்பாராக: இதைக் கண்ணுற்று வாசிக்கும் சுற்றத்தாரும் மற்ற இரக்கமுள்ள நற்குண சீலர்களும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக் கொள்ள மன்றாடுகின்றேன்.

அறுதாபி,
A. தருஸ்,
வெல்லிங்டன்.

### மட்டக்களப்பு.

புன்னைக்காயல் சீமான் V. கிரகோரிப் பேர்னாந்து கொறேரா அவர்கள் பத்தினியும், எனது பிரிய தமக்கையாருமான ஜெபமாலை பிச்சைக்காரி ரொத்ரீகு அம்மாள் பிரசவ நோயால் பீடிக்கப்பட்டு சிப்பிக் குளத்தில் தனது நேசபத்தாவையும் அருமையான இரு குழந்தைகளையும் அன்புடன் நேசித்துவந்த பிரிய தாயார் சகோதரர் மற்றும் பந்துமித்திரரையும் இக்கண்ணீர் கணவாயில் கலங்கிப் பாதவிக்கவிட்டு சென்ற ஜூன் மாதம் 24-ம் தேதி சனிக்கிழமை காலை 1-30 க்கு தனது 26-ம் வயதில் நித்திய பிதாவுக்குத் தனதாத்துமத்தை ஒப்புக்கொடுத்தார்கள்.

நண்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
அன்பையும் மதுர குணத்தையும் கொண்ட
நேச தமக்கையை இழந்து தூங்கிக்கும்
சகோதரன்
A. ஜோசப்வாஸ்.

மட்டக்களப்பு,
1-7-1916.

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌண்டரோட் "நேப்பியர்" சிம்காரத் தோட்டத்திற் சருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய் அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக்கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந் தொகை ரூ 7,000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்கும் நிதி ரூ 4117-11-6 ஆயினும், தப்பாமல் அனுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வசூலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்

வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெருவெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந் தொகையாகுமே. ஆகவே, அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து இக் கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

| | |
|---|---|
| புதுப் பேட்டை, சென்னை. | உங்கள் நன்றியறிதலுள்ள சங். அநூபப்பநாத சுவாமிகள், அர்ச். அந்தோனியார் கோவில் |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 4,116 | 11 | 6 |
| Mr. M. Xavier, Galle | 1 | 0 | 0 |
| ஆக மொத்தம், | 4,117 | 11 | 6 |

## சென்னப்பட்டணத்தில்
# ஒரு சத்திரம் தேவை.

சென்னப்பட்டணத்தில் இந்திய கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கென்று ஒரு சத்திரம் சாவடி கிடையாது. இந்துக்கள் மகம்மதியர் முதலானோருக்கோ எங்கு பார்த்தாலும் சத்திரமும், சாப்பாட்டு விடுதியும், டீகிளப், காபிகிளப் முதலியனவும் ஏராளமா யுண்டு. கோர்ட்டு வியாஜ்ஜிய விஷயமாயாவது, வைத்திய சிகிச்சைக்காகவாவது, வியாபார சம்பந்தமாயாவது அல்லது படிப்பு விஷயமாயாவது ஒவ்வொரு நாளும் சென்னைக்கு வருகிற கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் எத்தனையோ பேர். இப்படி வருகிற நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமில்லாமலும், தண்ணீர் குடிக்கத் தாவில்லாமலும் தயங்கித் தவிக்கின்றார்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்பது பல நாள் பிரயத்தனம். பெரிய கட்டிடமொன்று பட்டணத்து மத்தியில் கட்டவேண்டுமென்பது எல்லோருடையவும் எண்ணம். ஆனால் இந்த எண்ணத்தை நிறைவேற்ற மிகுந்த திரவியம் வேண்டும் அவ்வளவு திரவியஞ் சேகரஞ்செய்து காரிய முடிக்கவேண்டுமானால் அதிக நாளும் செல்லும். ஆனது நிமித்தம் "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்பதுபோல தற்காலம் ஜியார்ஜ்டவுனுக்குள் ஒரு சிறு வீடாவது வாங்கி, அதில் ஒரு விடுதி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இதற்குக் குறைந்த பட்சம் 10.000 ரூபாயாவது வேண்டும். இத்தொகை நமது பொதுஜன நலத்தை விரும்பும் கத்தோலிக்குக் கனதனவான்களிடமிருந்து தான் வரவேண்டும். இதை வசூல் செய்வதற்காக இனடியில் குறிக்கப்பட்டுள்ள மெம்பர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் முயற்சிசெய்து வருகிறார்கள். இவர்கள் தங்களுக்குள்ளேயே சிறுகச்சிறுக சென்ற சில மாதங்களாய்ச் சேகரஞ் செய்திருக்கிற ரூபாய் 535. இச் சென்னை இராஜதானி முழுவதிலும், இலங்கை, பர்மா, சிங்கப்பூர், சைகோன், மோரிஸ், செட்டால் முதலிய பல தேசங்களிலுமுள்ள கத்தோலிக்குச் சகோதரர்களெல்லாரும் இக் கைங்கரியத்துக்கு கைகொடுத்து, தங்கள் தங்களாலான மட்டும் பொருளுதவிசெய்து காரியத்தை முடித்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தச் சத்திர தருமத்துக்காக பணம் அனுப்புபவர்கள், மதராஸ் வட ஜியார்ஜ்டவுன் மோட்சராக்கினி மாதாக்கோவில் விசாரணை குரு. சங். எல். எக்ஸ். பெர்நாந்தீஸ் சுவாமிகளுக்கு அனுப்ப வேண்டும். (*Revd. Father L. X. Fernandes, Vicar, Assumbtion Church, North George-town, Madras.*) பணங் கொடுப்பவர்கள் பேரும், கொடுக்குந் தொகையும் இப்பத்திரிகையிலும். "கத்தோலிக்கு நேசன்" பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

| | ரூ. அ. ப. |
|---|---|
| ஏற்கெனவே வரவேற்கப்பட்ட தொகை. | 535—0—0 |
| பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகளால் எப்பிரல்மீ வரவு | 30—0—0 |
| do மேமீ do | 30—0—0 |
| do ஜூன்மீ do | 30—0—0 |
| Mr. எ. சுவாமிக்கண்ணுப் பிள்ளை சப் அசிஸ்டன்டு சர்ஜன், நாயுடு பேட்டை | 5—0—0 |
| ஆக மொத்தம், | 630—0—0 |

சங். L. X. பெர்நாந்தீஸ்.
பி. ஜெகராயலு செட்டியார்.
டி. எம். சவரிமுத்துப் பிள்ளை.
டி. எம். மாணிக்கம் பிள்ளை.
டி. எஸ். ஏ. மாணிக்கம் பிள்ளை.
டி. ஏ. தோமாஸ் பிள்ளை.
எம். பி. குழந்தைசாமிப் பிள்ளை.
டி. குழந்தைசாமிப் பிள்ளை.

திருக்குடும்பத் துணை.

# நீசவாசகம் ஆண்டவ ரம்மானை.

**விலை 6 அணா!** **விலை 6 அணா!!**

இந்த ஆண்டவரம்மானை பழைய காலத்து அண்ணாவிமார்களால் பாடப்பட்டு ஓலைச் சுவடியில் எழுதி வைத்திருந்து பிறகு புத்தக ரூபமாக அச்சிட்டு விற்று வந்ததை இப்போது. சங். சு. சி. பாலசாமியா ரவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டு, அதிமேற்றிராணி ஆண்டவரவர்களின் உத்தரவின்படி அச்சிடப்பட்டு, கிறிஸ்துவ சகோதரருக்குப் பிரயோசனமாக, சகாய விலையாகிய 6-அணாவிற்கு விற்கப்பட்டு வருகிறது. இரண்டு புத்தகங்களை மொத்தமாக வாங்குகிற நம் கத்தோலிக்க சகோதரருக்கு வெகு பிரயோசனமானதாகிய, புரோட்டஸ்டாண்டு மதங்களின் பரீட்சை யென்னும் புத்தக மொன்று இனமாக அனுப்பப்படும்.

தேம்பாவணி விருத்தியுரை இந்தப் புத்தகத்தைப்பற்றி நமது நல்ல ஆயனில் பலதரம் விளங்க விரிவாக வெளிப்படுத்தி யிருப்பதால் இப்போது அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. அவைகளை மொத்தமாகச் சொல்லவேண்டுமானால் இந்த புத்தக மிருக்கு மொவ்வொரு வீட்டினும் தேவாசீர் பெருகுமென்பது ஆன்றோர் வாக்கு. இது 800-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம். விலை 3 ரூபா.

சைவ மகத்துவ திமிரபானு விவிலிய விரோதிக்காரமென்னும் பெயர்போன தர்க்க புத்தகம் விலை 2 ரூபா.

நம் சேசுக்கிறிஸ்துநாதர் திருவாய்மலர்ந்த, ஊதாரிப்பிள்ளை கதை யென்னும் கெட்ட குமாரன் டிராமா. இது துர் நடத்தையுள்ள பொல்லாத பால்யருக்கு நற்புத்திமதிகளை புகட்டக் கூடியது. *படங்களுடன் விலை 12 அணா.

எ. எப். சைமன்,
கமிஷன் ஏஜன்ட்,
மஹா விகடதூதன் ஆபீஸ். ஜார்ஜிடவுன் மதருஸ்.

**நாய்களுக்கு மருந்து!** **நாய்களுக்கு மருந்து!!**

நாய்களை வளர்க்கிற ஒவ்வொரு வீட்டிலும் இம்மருந்து முக்கியமாய் இருக்கவேண்டியது.

இதனால் சகலமான அன்பர்கட்கும் தெரிவிப்பதாவது; நாய்களுக்கு உண்டாகும் சகலவித மான நோய்களையும், சொறி, சிரங்குகளையும், சொஸ்தப்படுத்த வெகுவாய் தீர்ந்த பண்டித ஆராய்ச்சி செய்து இம்மருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. நாய் போஷகர்கள் தங்களின் நாய்களுக்கு ஏதாவது பிணிகள் கண்டு தெரிவித்தால் தகுந்த ஒளஷத மனுப்பப்படும். மற்றும் நாய்கள் 2-3 நாட்கள் தீனி சாப்பிடாமலிருப்பினும் அதற்கு மருந்தனுப்பப்படும் (Bull dogs) புல் நாய்களுக்கு கண்ணில் சதை வளர்ந்திருப்பினும் இம்மருந்தினால் சொஸ்தமாக்கப்படும். இம்மருந்து எல்லாவிதமான நாய்களின் பிணிகளையும் தீர்க்கவல்லது. அனேகரால் நன்கு மதிக்கப்பெற்றது. மருந்து பிரயோகிக்கும் முறையை மருந்தோடு தெரிவிக்கப்படும். முன்பணம் கட்டியாவது வி. பி. மூலியமாயாவது மருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| டப்பி ஒன்றுக்கு வி. பி. யுள்பட | ரூபா | 1 | 4 | 0 |
| 1 டெஜன் டப்பிகளை மொத்தமாய் வாங்கினால் | ,, | 10 | 0 | 0 |

தேவையானவர்கள் கீழ்கண்ட விலாசதாரரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

J. A. சாமி,
242, ஓல்ட் பூர் அவுஸ் ரோட்,
பெங்களூர்.

## கல்கட்டாவில் லாட்டரி.

கனம் ஐயன்மீர்! தங்கள் அதிர்ஷ்டம்—வருகிற அக்டோபர்மீ 8உ கல்கத்தாவில் வழக்கத்தின் பிரகாரம் லாட்டரி நடைபெறப் போகிறது. முதல் பிரைஸ் 800 ரூபாய் 2-வது பிரைஸ் 306 ரூபாய். இப்படியே 125 பிரைஸ்கள் போடப்படும். அதிர்ஷ்ட வசத்தினால், பிரைஸ்கள் கிடைக்கும். டிக்கட் 1-க்கு விலை 4 அணா தான். 10 டிக்கட்டுக்கு 1 டிக்கட் இனமாகக் கிடைக்கும். டிக்கட் தேவையுள்ளவர்கள் அடியிற்கண்ட என்னிடமிருந்து பண மனுப்பியாவது வி. பி. மூலமாயாவது தருவித்துக்கொள்ளலாம். இந்த விசை உம்முடைய அதிர்ஷ்டம் எப்படி இருக்குமோ ஏமாறுமல் உடனே தருவித்துக்கொள்ளவும். பிரைஸ் விழுந்தவர்களுக்கு உடனே தெரிவிக்கப்படும். கூடுமானவர்கள் முழுப்புஸ்தகங்கள் தருவித்து விற்பனை செய்து என்னிடமனுப்பி கமிஷன் பெறலாம். புஸ்தகங்களும் டிக்கட்டுகளும் அதிகமாக செலவாகிறபடியால் உடனே தருவித்துக் கொள்ளவும். லாட்டரி நெருக்கத்தில் தொந்தரவு செய்வது சரியல்ல.

இப்படிக்கு,
M. M. தோமாஸ்,
கத்தோலிக் உபதேசி,
ஒசூர் ரிமவுண்ட் டிப்போ, தென் இந்தியா.

## காஷ்மீர் கூந்தல் எண்ணெய் நம்பர் 100.

மித்திரர்காள்! நீங்கள் இதுவரைக்கும் எத்தனையோவித கூந்தல் எண்ணெய்களைப் பார்த்தும் உபயோகித்தும் இருப்பீர்கள். ஆயினும் எங்களுடைய காஷ்மீர் கூந்தல் எண்ணெய் நம்பர் 100 ஒரேதரம் உபயோகித்துப் பாருங்கள். பிறகு நீங்களே இதன் குணத்தைப்பற்றி புகழ்வீர்கள். வாசனை மிக்க குளிர்ச்சியாயும் நீடித்தும் இருக்கும். இதர எண்ணெய்களைப்போலில்லாமல் சிரசுக்கு குளிர்ச்சியைக் கொடுத்து சந்தோஷிக்கத்தக்க விதமாய் கூந்தலை வளரச் செய்யும்.

விலை அழகான புட்டி 1-க்கு அணா 8. தபால் பாக்கிங் கூலி பிரத்தியேகம்.

## அதிசயிக்கத்தக்க விதமாய் குணப்படுத்தும்.



டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரியை யுபயோகித்தால் ஆறாத ரணங்கள், புண்கள், எவ்விதத்திலும் தீராபடைகள், மேகப்படைகள், தடிப்பு படைகள் படர்தாமரை எச்சிற்தேமல் இன்னும் அநேகவித படைகள், தேமல்கள், வண்டுகடி, தேகஊறல், நமைச்சல், சொறி இவைகளெல்லாம் பூரணமாய் குணமாய்விடும். இதன் புகழத்தக்க குணமாவது மருந்தைப் போட்ட உடன் நமைச்சல் நின்றுவிடும் பிறகு வெகு சீக்கிரத்தில் வியாதியைக் குணப்படுத்தி இதரப்படை மருந்துகளைப் போலில்லாமல் எப்பொழுதும் வாராதபடிக்கு செய்யும். இதை யாவரும் கவனிக்கவேண்டிய அவசியம். எல்லா வியாபாரிகளும் இப்படி சொல்கிற வழக்கமென்று நினைக்காதேயும். போலி வியாபாரிகளுடைய படை மருந்துகளை யுபயோகித்து சுகமடையா யாவரும் டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரியை யுபயோகித்தால் ஆச்சரியப்படுவார்கள். இச்சர்வபடை சங்காரியை யுபயோகித்த யாவரும் இதைப்போல் மருந்து எங்குமே கிடையாதென்று புகழ்ந்து நற்சாட்சிபத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். அநேக வருஷங்களாயுள்ள படைகளை இரண்டு, மூன்று வேளையிலே பூரணமாய் குணப்படுத்தினதென்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். இம்மருந்தின் குணத்தைப்பற்றி தினம் தினம் நற்சாட்சி பத்திரங்கள் வந்துகொண்டே யிருக்கின்றன. டாக்டர் பார்த் என்பவரின் சர்வ படை சங்காரியின் விலை பெட்டி 1-க்கு அணா 12. தபால் பாக்கிங்கூலி பிரத்தியேகம்.

எமது விலாசம்:—

பி. எஸ். பொம்மையா அண்டு கோ.

தபால் பெட்டி, 208, மதராஸ்.

## லாட்டரி விளம்பரம்.

RAFFLE! RAFFLE!!

**Grand Variety Raffle in aid of St. Ann's Orphanage, Relief of the poor.**

சகோதரர்களே! 4-அணா கொடுத்து உங்கள் அதிர்ஷ்டத்தை பாருங்கள். இதுவே தக்க சமயம். தவறின் மறுசமயம் வாய்ப்பதரிது.

முந்துங்கள் உடனே லாட்டரி புஸ்தகங்களுக்காக எழுதுங்கள்.

1?5-பிரைஸ்கள்.

முதல் பிரைஸ் *First prize* 800—0—0. 800 ரூபாயிலிருந்து 4-ரூபாம் வரையில் உள்ளது. 22 டிக்கட்டுகளடங்கிய லாட்டரி புத்தகம் ரூபாய் 5 0 0.

1 புஸ்தகம் விற்கிறவர்களுக்கு 2 பிரி டிக்கட். 2 புஸ்தகம் விற்பவர்களுக்கு 4 பிரி டிக்கட்டுகளும், 1 ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும். தேவையுடையவர்கள் கீழ்கண்ட விலாசதாரிடம் எழுதி பெற்றுக்கொள்ளலாம். தயவுசெய்து சீக்கிரத்தில் புஸ்தகங்களுக்காக எழுதவும்.

ஜே. ஏ. சாமி
242, ஓல்ட்பூர் அவுஸ்ரோட்,
பெங்களூர் தண்டு.

J. A. Sawmy,
242, Old poor house Road,
Bangalore,
Contonment.





The Good Pastor

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுசிலவும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.

புத்தகம் 14. | செப்டம்பர் 1916. | இலக்கம் 9.


## HOW TO BEHAVE IN CHURCH.

## கோவிலில் நாம் எப்படி நடந்துகொள்வது.

நமதாண்டவரான சேசுநாதசுவாமி ஒரு நாள் ஜெருசலேம் தேவாலயத்தில் பிரவேசித்த போது, அதில் விற்றுக்கொண்டும் வாங்கிக்கொண்டுமிருந்தவர்களை வெளியிற் றுரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறுக்கள் விற்கிறவர்களுடைய ஆசனத்தையும் கவிழ்த்தாரென்று நாம் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். இவ்வாறு நமது கர்த்தர் செய்தது நம்முடைய தேவாலயங்களில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை நமக்கு வற்புறுத்திக் காட்டுகின்றது.

யூத ஜனங்கள் ஜெருசலேம் தேவாலயத்துக்குச் சென்று தேவ கட்டளைப்படி ஆடு, மாடு, புறு முதலிய ஜீவ ஜெந்துக்களைப் பலி காணிக்கைகளாகவும், நேர்ச்சிகளாகவும் சமர்ப்பித்து வந்ததுண்டு. இதற்கு அனுகுணமாக ஷை ஜெந்துக்கள் தேவாலயத்தில் விற்பனையாகி வந்தன. மேலும் யூதேயா நாடு முழுதும் ரோமையர் அரசாட்சிக் குட்பட்டிருந்தபடியால், யூதருக்குள் ரோமையர் நாணயம் வழங்கி வந்தது. ஆயினும், மேற்சொன்ன காணிக்கை பொருட்கள் யூத நாணயத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தபடியினால், அவைகளைக் கொள்வார் தங்களிடத்தி லிருக்கும் ரோமையர் நாணயத்தை யூத நாணயத்துக்கு மாற்றிக்கொள்வார்கள். இப்படி மாற்றிக்கொள்ளும்படி காசுக்காரர்களும் தங்கள் கடைகளைத் தேவாலயத்தில் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

இக் கடைகள் மெய்யாகவே காணிக்கை செலுத்த தேவாலயத்துக்குப் போகும் ஜனங்களுக்கு அவசரமும் அனுகூலமுமானவைகளா யிருந்தன வென்பதற் கையமில்லை. ஆயினும், அவைகள் தேவாலயத்துக்கு வெளியே ஒரு வசதியான விடத்தி லிருந்திருக்கவேண்டியது. அதேதெனில், நம் மெல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்திருப்பதுபோல, ஒரு கடைத்தெருவில் உண்டாகும் சந்தடியும் கூச்சலும் கொஞ்சமா? நடக்கும் சண்டையும் சச்சரவும் சொற்பமா? மேலும் அவ்விடத்தில் பொய், திருட்டு, மோசம், பித்தலாட்டங்க

ளுக்கும் குறைவில்லை. இவைகள் தேவாலயத்தில் நடக்கத் தக்கவைகளா?

நமது கர்த்தர் எத்தனையோ தடவைகளில் இவ் வாலயத்துக்குப் போயிருக்கிறார். அப்போதெல்லாம் அவர் அவ்விடத்தில் நடந்த இந்த அநாச்சார, அபசார நடவடிக்கைகளைக் கவனியாது விட்டவரல்லவென்றாலும், அவைகளைக் கண்டித்தவரல்ல. ஆனால் இந்தத்தடவை அவர் ஞானகோபாவேசங்கொண்டு சிறு கயிறுகளால் ஓர் சாட்டை பின்னி அவ்விடத்தில் ஆடு, மாடு, புறா முதலானவைகள் விற்பனை செய்துகொண்டிருந்தவர்களை அவர்களுடைய ஆடு, மாடு, புறாக்களுடனும், காசுக்காரருடைய பலகைகளைக் கவிழ்த்து அவர்களையும் அடித்து தேவாலயத்துக்கு வெளியே விரட்டினார். இந்தவிசை நமதாண்டவர் இவர்களிடத்தில் இவ்வளவு கண்டிப்பாய் நடந்து கொள்வதற்குக் காரணமென்ன? அவர் ஜெருசலேம் பட்டணத்துக்குள் பிரவேசித்த இந்த நாள் குருத்து ஞாயிறு. இன்னுஞ் சில தினங்களுக்குள்ளாக, அதாவது அடுத்து வரும் வெள்ளிக்கிழமையில், அவர் சிலுவையி லறையுண்டு மரிக்கவேண்டியதா யிருந்தபடியால், கடைசிவிசையாக ஜெருசலேம் பட்டணத்துக்குப் போனார். மேலும் ஜனங்கள் இவரைத் தேவகுமாரனென்று விசுவசித்து, ஆர்ப்பரிப்பு சந்தோஷத்துடன் எதிர்கொண்டுபோய் பட்டணத்துக்குள் அழைத்து வந்தார்கள். ஆகையால், இந்தச் சமயமே தேவாலயம் தேவனுடைய வீடென்றும், அதில் அநாச்சாரமும் அவசங்கையுமான கிருத்தியங்களைச் செய்யாமல் அதைச் சன்மானிக்க வேண்டுமென்றும் வற்புறுத்திச் சனங்களுக்குக் காட்ட தகுதியும் வசதியுமான சமயமென்று நமது கர்த்தர் தீர்மானித்தார். அப்படியே, அன்று தேவாலயத்தில் பிரவேசித்த மாத்திரத்தில் அவருக்குக் கோபமும் தாபமும் பொங்க, அங்கு விற்றுக்கொண்டும் வாங்கிக்கொண்டு மிருந்தவர்க ளெல்லோரையுந் துரத்தி யடித்தார்.

அவர் அவர்களைத் துரத்தினபோது வசனித்த வார்த்தைகளைச் சற்று சிந்திப்போமானால், நம்முடைய தேவாலயங்களில் மேரை மரியாதையோடும், பக்தி விநயத்தோடும் நாம் நடந்துகொள்வது நமக்குள்ள கடமையென்று உணர்ந்துகொள்வோம். "என் வீடு செபத்தின் வீடென்று எழுதியிருக்க, நீங்கள் அதைக் கள்ளர் குகை யாக்கினீர்கள்" (இசை 56. 7.) என்றார். இதனால் தேவாலயமானது தேவனுடைய இருப்பிடமா யிருக்கிறதென்றும்; ஆனபடியால் அப்பேர்ப்பட்ட இடத்தில் ஜெபத்தியானம், தேவாராதனை முதலிய பக்திக் கிருத்தியங்கள் மாத்திரம் நடந்தேறவேண்டுமென்றும், தேவாலயம் தேவனுடைய இருப்பிடமா யிருக்கிறபடியால் அது பரிசுத்த ஸ்தலமென்றும், அப்பேர்ப்பட்ட பரிசுத்த ஸ்தலத்தில் கள்ளர் குகையில் நடக்கும் அக்கிரமங்களான கொலை, களவு, காமம், குரோதம் முதலியவைகள் எட்டுணையும் நடக்கத் தக்கவைகளல்லவென்றும் நமக்குத் தெரியப்படுத்துகிறாரல்லவா? சக்கேயுஸ், (இவன் பிறர் சொத்தை அபகரித்து ஐசுவரியவானானவன்), விபசாரத்தில் சீவித்துவந்த பெண்பிள்ளை, தம்மைக் கலகக்காரன், குடியன், பேய் பிடித்தவன் என்று இழிச் சொற்களால் ஏசினவர்கள், இவர்களிடத்தி லெல்லாம் நமது கர்த்தர் எவ்வளவு பொறுமையையும் சாந்தத்தையும் காட்டச் சித்தமானார். ஆனால் அன்று தேவாலயத்தில் பிரவேசித்தவுடன் அவ்விடத்தில் விற்பனை, கொள்வனை செய்து அதை அநாச்சாரப்படுத்தினவர்களைப் பார்க்க முதலாய்ச் சகிக்கக் கூடாதவராய்த் தம்முடைய சத்துவமெல்லாங் கொண்டு அவர்களை யடித்து விரட்டினார். தேவாலயத்தை அனாச்சாரப்படுத்துவது சர்வேசுரனுக்கு மிக்க அருவருப்புக்குரியதென்று இதனால் நமக்குத் தெரியவருகிறதல்லவா?

ஜெருசலேம் தேவாலயத்தைவிட நம்முடைய தேவாலயங்கள் எவ்வளவோ மீசுரமானவைகள். ஜெருசலேம் தேவாலயத்தில் தெய்வீகத்துக்கு அடையாளமாயிருந்த தேவபெட்டகம் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் நம்முடைய தேவாலயங்களில் தேவ குமாரனும் நமதாண்டவருமான சேசுநாதசுவாமி மெய்யாகவே தேவநற்கருணையில் எழுந்தருளி யிருக்கிறார். இரவும் பகலும் மினுக்கு மினுக்கென்று அவ்விடத்தி லெரிந்துகொண் டிருக்கும் தேவநற்கருணை விளக்கு நமக்கு அவருடைய பிரசன்னத்தை அறிவிக்கிறது. அன்றியும், அவர் நம்மை நோக்கி "வருந்திச் சுமை சுமக்கிறவர்களே என்னண்டைக்கு வாருங்கள்; நான் உங்களுக்குத் தேற்றரவு பண்ணுவேன்" என்று அன்பாய்க் கூப்பிட்டழைக்கும் அவருடைய குரலையும் நம்முடைய காதில் விழச் செய்கின்றது அவ் விளக்கு. அப்படியென்றால், நாம் தேவாலயத்தி லிருக்கும்போது சர்வேசுரனுடைய சந்நிதியி லிருக்கிறோமென்றும், அவர் நம்மோடு சம்பாஷிக்க ஆசிக்கிறாரென்றும் நினைவு கூர்ந்து, நமக்குத் தெரிந்த ஜெபங்களைச் செபிப்பதினால் அடக்கவொடுக்கமாயும் மேரை மரியாதையாயும், பராக்குப் பாராமலும், புறத்தி விசாரங்களுக் கிடங்கொடாமலும், பேசாமலும், சிரியாமலும், கொட்டாவி விட்டுத் தூங்கிவிழாமலும், அவரோடு சம்பாஷணை செய்து, நமக்கு வேண்டியவைகளை அவரிடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டுமல்லவா?



முற்காலத்தில் தேவாலயங்களின் ஒவ்வொரு வாசற்படியிலும் விளம்பரப் பட்டிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவைகளில் வரையப்பட்டிருந்தன பின்வருமாறு:

(1) கோவிலில் பேசுவதினால் சர்வேசுரனுடையவும் சம்மனசுக்களுடையவும் அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் சந்தோஷம் அபகரிக்கப்படுவது மல்லாமல், உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களும் ஆறுதலடையாமற் போகிறார்கள்.

(2) அப்படிப் பேசுகிறவர்கள் தங்களுடைய பக்தி விசுவாசத்தை யிழந்துபோவதுமன்றி, தங்களா லடையக்கூடிய பேறு பலன்களையும் உதவி சகாயங்களையு மிழந்து போகிறார்கள்.

(3) தாங்கள் பேசுவதினால் மற்றவர்களுக்குத் துர்மாதிரிகை கொடுப்பதுடன் அவர்கள் பக்தியாயிருக்க இடைஞ்சலுமுண்டுபண்ணுகிறார்கள்

(4) கோவிலில் பேசுகிறவர்கள் அற்பபாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்களென்றாலும், அவைகளுக்காக உத்தரிக்கிற ஸ்தலத்தில் கடினமாய்த் தண்டிக்கப்படுவார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கோவிலில் ஒழுங்காய் நடந்து கொள்ளப் பார்க்கக் கடவார்களாகவென்றும் வரையப்பட்டிருந்தன.

இப்படியிருக்க, நாமும் நம்முடைய கோவில்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருநாள் பெருநாட்களிலும், கூடுமானால் மற்ற நாட்களிலும் போகிறோம். அப்போது அவ்விடத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறோம்? ஐயோ! நமக்குள் எத்தனையோ பெயர் கோவிலுக்குப்போய் அவ்விடத்தில் எங்கேயாவது உட்கார்ந்து தூங்கிவிழுந்துவிட்டாவது, அல்லது பக்கத்தி லிருக்கிறவர்களோடு பேசி சிரித்துக்கொண்டிருந்துவிட்டாவது, அல்லது அங்குமிங்கும்பராக்குப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டாவது, அல்லது கோவிலுக்குள் இடமிருந்தபோதிலும் கோவிலுக்குள் நுழைய மனமில்லாமல் வெளியே நின்றுகொண் டிருந்துவிட்டாவது வீட்டுக்குத் திரும்பி வருகிறார்கள். இன்னுஞ் சிலர் தங்களுடைய தகாத வர்த்தகத் தொழிலை அவ்விடத்திற் செய்யப்போகிறார்கள். அதாவது, கண் அடக்கமில்லாதவர்களாய் ஆகாத பார்வைக்கும் ஆசைக்குமிடங்கொடுக்கிறார்கள். சிலபேர் கெட்ட கருத்துடன் இன்னின்னாரைப் பார்க்க வேண்டும், இன்னின்னாரைச் சந்திக்க வேண்டும், இன்னின்னாரோடுபேசவேண்டுமென்று கோவிலுக்குப்போகிறார்கள். இன்னுஞ் சிலர் தங்களுக்குள்ள ஆடை ஆபரணம், அழகு சௌந்தரியம் இவைகளைக் காட்டிக்கொள்ளும் பொருட்டும், மற்றவர்களுக்கு இடறலா யிருக்கும் பொருட்டும் கோவிலுக்குப் போகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கி அதை அநாச்சாரப்படுத்தி, சர்வேசுரனுடைய கோபத்தைத் தங்கள் மேல் வருவித்துக்கொள்ளுகிறார்களென்றறியக்கடவார்களாக.

---

ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்து ஆஸ்திக்காரனாய்ப் போனவன் எவனுமில்லை.

கிரமந்தப்பி சம்பாதித்த பொருள் ஒருபோதும் நிலையாது.

பிச்சையிட்டு நஷ்டமடைந்தவர் ஒருவரும் இல்லை.

## HONOUR THE PRIEST.
*(A True Story)*

## குருவானவரைக் கனம் பண்ணு.
(ஒரு மெய்க் கதை.)

முன் தொடர்ச்சி.

அவளுடைய பரிதாபகரமான முகத்தையும் நீர் நிறைந்த நேத்திரங்களையுங் கண்டதும், குருவானவர் மனத்திடன் சற்றே குறைந்தது. ஆயினும் அவளை எதிரிலிருந்த அறைக்குள் ளழைத்துப் போயுட்காரவைத்து, அவள் கணவனுக்கு நேர்ந்த விபத்தையும் அதனால் அவனுயிருள்ளளவு முடமாய்ப்போன விதத்தையும் மெதுவாய் எடுத்துரைத்தார். அம்மங்கையோ, குருவானவர் பேசுகையில், தன் கரத்தால் முகத்தை மூடிக்கொண்டழுதாள். அவள் மனதி லெழுந்த துக்கத்தை யொருவாறு ஆற்றிக்கொள்ளட்டுமென்று, அவளழுகையை நிறுத்தாமல் சுவாமியார் கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் அம்மாதவர், "நீ வந்திருப்பதாக நான் உன் கணவனிடஞ்சொல்லி வருகிறேன். அதுவரையில் இங்கேயே இரு. மேலும் இப்போது நீ தைரியமா யிருத்தல்வேண்டும். இத்தகைய அசந்தர்ப்பங்களில் தனக்குள்ள துன்ப வருத்தங்களைப் பொறுமையுடன் சகிப்பவளே நல்ல மனைவி யென்பதை மறவாதே. நீ தைரிய முகத்துடன் உன் கணவன் முன் தோன்றினால் மட்டுமே, அவனுந் தன் னோயைத் தாங்கக்கூடும்; உன்னைப் பார்ப்பதால் அவனாறுதலடைவதற்குப் பதிலாய், உன் முக வாட்டத்தால், அவனுக்கு சரீர நோயுடன், மன வியாதியு முண்டாகும்படிச் செய்யாதே. இரண்டொரு நிமிஷந் தாமதித்து நீ யுள்ளே வா; நான் முன்னால் போய் அவனுக்குத் தெரிவிக்கிறேன்." என்று சொல்லி, நோயாளியி னறைக்குள் நுழைந்தார்.

சுவாமியார் வந்ததும் நோயாளியாகிய சவரிநாதன் புன்னகை பூத்த முகத்துடன் அவரை நோக்கி வந்தன மளித்தான். சுவாமியார் அவனுக் காசீர்கூறி; அவன் மனைவி வந்திருக்குஞ் சேதி யுரைத்தார். இதைக் கேட்டதும் அவன் மனங் குழம்பியதாய்த் தெரிந்தது. அதற்குள் அவன் மனைவியுங் கதவைத் திறந்துகொண்டு வந்தாள். அவளைப் பார்த்ததும் ஒரே ஓட்டமாய்ப் படுக்கையண்டை யோடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கண்ணீர் ஆறாய்ப் பெருக்கினாள். ஆனால் அவள் முகத்தில் புன்னகை விளங்கிற்று. நோயாளியோ வென்றால், அவளைக் கண்டதும் இன்னது செய்வதென்று தெரியாதவனாய்ச் சிறு குழந்தையைப்போல் உரக்க அழ ஆரம்பித்தான். அழுகையில் கட்டுக் கட்டியுள்ள தன்னிரு கரங்களையும் நீட்டி யவளுக்குக் காட்டினான். "மரி, பார்த்தாயா? உன்னையுங் குழந்தையையுங் காப்பாற்றக் கூடியவனைப் பார்!" என்று நோயாளி மிக்க துக்கக் குரலில் மொழிந்தான்.

மரியாள் அவன் கரங்களைக் கவனியாதது போல், "தாங்களேன் கவலைப் படுகிறீர்கள். நீங்கள் சீக்கிரம் சுகமடைவீர்கள். கால்கள், அறிவு, நல்ல குரல் இவை மூன்று மிருக்கத் தங்களுக்கென்ன பயம்? நான் தங்களை யிழந்திருந்தால்," என்று சொல்லிக்கொண்டே, தன் சிரத்தை யவன் மார்பின்மேல் வைத்தழுதாள்.

"சர்வேசுரன் என்னை மன்னிப்பாராக, கண்ணே! நான் சுகமடைந்தால் நல்லவனா யிருப்பேன். நானிருந்ததை மறக்கக்கூடியவள் நீ யொருவளே; ஆனால் எனக் கென்ன வேலை கிடைக்கும்? எங்கே கிடைக்கும்?"

"நீங்கள் செய்யக்கூடிய வேலைக ளநேக முண்டு. உலகி லுங்களைப் போன்ற கணவன் கிடைப்ப தருமையென் றெனக்குத் தெரியும். நமக்கியாதொரு குறையு மிராது. நீங்கள் சௌக்கியமடையும் வரையில், இதைப்பற்றிய கவலையே வேண்டாம். உங்க ளுயிரைக் காத் தெங்களுக் கருள்புரிந்த நல்ல சர்வேசுரனுக்கு நாம் எவ்வளவோ நன்றிகாட்ட வேண்டியவர்களா யிருக்கிறோம்."

"அஃதென்ன மணி சுவாமீ? வெளியார் போகவேண்டியதற்காக அடிக்கு மணியோ?" என்று நோயாளி குருவானவரைக் கேட்டான்.

"ஆம், அம்மணிதான். நின் மனைவி சொல்வதுபோல நீ சர்வேசுரனுக்கு மிக்க நன்றி செலுத்த வேண்டியவனா யிருக்கிறாய்" என்றார் குருவானவர்.

"மெய்தான் சாமி. நன்றியுள்ளவனா யிருப்பதுடன், என் கடமைகளைச் சரிவரச் செலுத்தி, இனி நான் வேறு மனிதனாவேன்." என் றுறுதி



யாய்ப் பேசினான். அவன் மனத் திடனுடன் பேசுகிறானென்றறிந்து சுவாமியார் மரியாள் பக்கந் திரும்பி அவள் கேட்டுக்கொண்டபடி, அவள் கணவனை யன்புடன் விசாரித்து அடிக்கடிப் பார்த்துப் போவதாக வாக்களித்து; விடைபெற்று அவ்விடத்தை விட்டகன்றார்.

மறுநாள் சுவாமியார், அவனை வந்து பார்க்கையில் அவன் தனியா யிருந்தான். அன்று அவன் கரங்களில் கொஞ்சம் நோய் அதிகரித்திருந்தது. சுவாமியார் அவனுடன் பேசி, அவன் மன நிலைமையைச் சோதித்ததில், எல்லாந் திருப்திகரமாகவே யிருந்தது. நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து மறுநாள் தேவநற்கருணை யுட்கொள்ள வேண்டுமெனச் சுவாமியார் தூண்டினார். "நல்லது, சாமி. அப்படியே செய்கிறேன். ஆண்டவர் என்மே லிவ்வளவு இரக்கங் காட்டுவதேனோ அறியேன். என் மனைவி மரியாளைப் பாருங்கள். ஏன், நான் அவளுக்கு ஒரு விநாடியளவுந் துன்பம் விளைத்ததில்லை யென்று நீங்கள் நினைக்கக்கூடும்; ஆனால் நானவளை எவ்வளவு குரூரமாய் நடத்தினேனென்பது கடவுள் ஒருவருக்கே தெரியும். அவள் பேசிய ஆறுதல் மொழிகளைக் கேட்டீர்களல்லவா? இரு கரங்களையுடையவனினும், அவற்றை யிழந்தவனே பாக்கியவானென்ன, அவள் பேசியதி லிருந்து நீங்கள் நினைக்கக்கூடும். அவள் என் குழந்தையை யின்றைக்குக் கூட்டி வருவாள். அவ்விருவ ராதரவில் யான் சீக்கிரஞ் சொஸ்தமடைவேன். பிறகு யான் மெய்யாகவே இவ்வுலகிலொன்றுக்கு முதவாதவனா யில்லையா என்பதைக் கண்டறிவோம். அவள் என்னவோ, இல்லையென்கிறாள்; ஆதலால் நான் பல்லைக் கடித்துக்கொண்டு, இந்நோயைப் பொறுமையுடன் சகிப்பேன். ஏனெனில் யான் இத் தண்டனைக் குரியவனே; சுவாமி, நான் இதுகாறும் பெரும் பாதகனாய்ச் சீவித்து வந்தேன்." என்று மனங் கசிந்தவனா யவன் பேசினான். சுவாமியார் அவனுக்கு வேண்டிய தைரியஞ் சொல்லி, அவனைப் பாவசங்கீர்த்தனத்துக் காயத்தஞ் செய்யும்படி சொன்னார்.

மறுநாட் காலை அவன் மனைவியும் பிள்ளையு மவனைப் பார்க்க வந்தனர். மரியாள் அங்கு வருமுன் தன் மகளுக்கு வேண்டியவற்றைப் போதித்து தந்தையுட னெவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமெனப் பழக்கி யிருந்தாளானதால், அச்சிறுமி நோயாளியி னிலைமையைக் கண்டதும் கொஞ்சமும் பயப்படாமல் அவனருகிற் சென்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசலானாள். மகளின் மதலைச் சொற்களைக் கேட்ட நோயாளியின் மனம் எப்படி யிருந்திருக்குமென்று இதை வாசிப்போரே தெரிந்துகொள்ளலாம். அவன் மகள் ஓரழகிய சிறுமி; தன் தாயின் விசாலக் கண்களையும் வில்லைப்போன்ற நெற்றிப் புருவங்களையுமுடையவளாய்த் தன் தந்தையைப்போல் எப்பவும் புன்முறுவல் பூத்து விளங்கும் வதனத்துடன் பரபரவென்று என்னென்னவோ குளறிக் குளறித் தன்னினிய குரலிற் பேசினாள். அச்சிறுமி தன் கரங்களால் நோயாளியைத் தடவினாள்; நோயாளியின் மனம் பூரித்தது; உருக்குலைந்து கட்டப்பெற்றிருந்த தன் கரங்களைக் கண்டவ்விள மங்கை யஞ்சவில்லையென்பதில் அவனுக்குத் திருப்தி. அவன் காதலி தன் அன்பனைத்தையும் அவன்பாற் செலுத்திக் காட்டிய அநுதாபத்தைக் கண்டவர் எவர்தான் ஆறுதலடையார்? அவனுக் கச்சமயம் நோயதிகரித்திருந்தமையால், அதிகநேரம் பேச முடியவில்லை. ஆயினும் தாயும் பிள்ளையும் அவனை வந்து பார்த்ததால் நோயாளி யடைந்த ஆறுதலுக் களவில்லை. மரியாளு மிக்க ஆறுதலடைந்தவளாய்த் தன் காதலனை யணுகி முத்தமிடுகையில், அவன் "கண்ணே, மரி, நானின்று பாவசங்கீர்த்தனஞ் செய்யப் போகிறேன். எனக்காக வேண்டிக்கொள்ளமாட்டாயா கண்ணே?" என்றான். அதற்கு விடையாக மீண்டுமொரு முத்தமீந்து, "அதற்கென்ன தடை என்னேய வன்பரே. அதைவிட எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது வேறொன்றுமில்லை யென்பதைத் தாங்க ளறியீரா?" என்றாள் அம்மாசற்ற மங்கை.

இவ்வாறு நாளடைவில் இச்சிறு குடும்பத்தைக் கவனித்துவந்த சுவாமியாருக்கு, அதன் மேல் ஒருவிதப் பிரியமுங் கவலையுமுண்டாயின. தாயோ பத்தியும் புத்தியும் நிறைந்த பாவையர் திலகம்; பிள்ளையோ அழகும் அமைதியும் பொருந்திய அலங்காரச்சிறுமி. தந்தையோ முன்கோபம், ஆணவ முதலிய குணங்களால் ஒருவாறு கெடுக்கப்பட்ட சாமர்த்தியம் வாய்ந்த வாலிபன்; அவனிடந் தோன்றிய மன்னிக்குங் குணமும் பச்சாத்தாபமும், அவன் பாதகமனைத்தையு மற்றவர் மறக்கச் செய்தன.

அன்றவன் பாவசங்கீர்த்தனஞ் செய்து தேவநன்மை வாங்கினான். அவன் மனைவி யவனைக் காண வரும்போது, அவன் முகத்தி லமைதியும் பேரானந்தமும் விளங்கின. மரியாளவற்

றைக் கவனித்தாள்; அவற்றிற்குக் காரணமின்னதென்றறிந்ததும் அவள் மனஞ் சந்தோஷத்தால் குதித்தது. உடனே அவன் சிந்தை வருங்காலத்தை நாடிற்று. இனி யென்ன நேருமோவென்று சிந்திக்கலானான். அவர்களுக்குத் தாங்கள் குடியிருந்த வீட்டுடன், வேறு இரண்டு வீடுகளிருந்ததால் அவற்றின் வாடகை வந்துகொண்டிருந்தது. அதனால் அக்குடும்பம் ஒன்றுமே கையில்லாத திட்டாண்டியல்லவெனத் தெரிந்தது. ஆனால் அவன் இனி வேலை யொன்றுஞ் செய்யமுடியாது; செய்யக் கரங்களில்லையே. இதை நினைக்க நினைக்க, பாவம்! அவன் மனந் துன்புற்றது. தன் கணவன் இனி செய்யத் தகுந்தது யாதென்பதைக் கவனித்தறிய முயன்றாள் மரியாள். தெய்வாதீனமாய் அவன் வலது கர முழங்கைக்குக் கீழ்த் துணிக்கப்பட்டிருந்தபடியால், அதற்குப் பதிலாய்ப் பொய்க்கரமொன்றமைத்து வைத்துக்கொள்ளலாம். அந்தக் கரமே முதலிற் சொஸ்தப்பட்டது; பொய்க்கரம் ஒன்று செய்வதற்காக அளவெடுக்கப்பட்டது. நாள் போகப்போக இரணமு மாறிக்கொண்டுவரவே நோயாளியின் நம்பிக்கையு மதிகரித்தது.

ஒருநாள் மாலை அவன் தன் படுக்கையிலுட்கார்ந்திருக்கையில், தன் கடந்த சீவியத்தைப்பற்றி சுவாமியாரிடம் பேசிக்கொண்டிருந்தான். "சாமி, என் முன் கோபமே எனக்குச் சாபமா யிருந்தது. சிறுவந் துவக்கியே என் கோபமே எனக்குக் கஷ்டத்தை யுண்டுபண்ணுவதற்குக் காரணம். நான் இங்கு நோயால் வருந்துகையில், என் வாழ்நாளில் என் கோபத்தால் விளைந்த கெடுதிகள் ஒன்றன்பின்னொன்றாய் என்முன் னெழுவது தங்களுக்குத் தெரியாது. அவைகளின் ஞாபகம் எனக்குச் சந்தோஷந் தரத்தக்கதல்ல; அதனால் நான் பெருமை பாராட்டவும் இடமில்லை. என் பெற்றோர் நல்லவர்கள்; கடவுளுக்குப் பயந்து நடந்தவர்கள்; வீட்டில் எனக்கியாதொரு குறைவுமில்லை; ஆதலால் நானும் நல்லபிள்ளையாகவே வளர்ந்திருக்க வேண்டியவன். என்கரங்களை யிழந்து இவ்வாறு முடவனானது, யோசித்துப் பார்க்குமிடத்து, கடவுள் என் பாவங்களுக் கனுப்பிய தண்டனையென்றே நம்புகிறேன். இது நிச்சயம் சாமி!" என்றான் சவரிநாதன். இதற்குமேல் அவனொன்றும் பேச முடியாமல் மௌனமா யிருந்தான். இதைக் கண்ட குருவானவர், "என்ன காரணத்தால் அப்படிச் சொல்லுகிறாயப்பா?" என்று மெதுவாய் வினவினார். "நல்லது சாமி காரணத்தை விவரமாய்ச் சொல்லுகிறேன். தாங்களும் இதை மற்றவர்களுக்குச் சொல்லுங்கள். இதைக் கேட்பதால், என்னைப்போல் முன் கோபத்தாலும் தானென்கிற ஆணவத்தாலும் தனி நிலைகளாய்த் திரியு மனிதருக்கிது ஒரு நல்ல படிப்பினையா யிருக்கும்" என்று தன் சீவிய சரிதையைச் சொல்லத் தொடங்கினான்.

(இன்னும் வரும்.)

*S. Selva Raju.*

## EXPLANATION OF THE GOSPEL OF St. LUKE.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

### 1.— அதிகாரம்; வசனங்கள் (18—25.)

(முன் தொடர்ச்சி.)

சர்வேசுரன் ஓர் குமாரனைத் தனக்கு அளிப்பாரென்ற நம்பிக்கையை அபிரகாம் தன்னுடைய விருத்தாப்பிய தசையில் முதலாய் விடவில்லை. அவர் விசுவாசத்தில் பலவீனராகவுமில்லை. தான் ஏறக்குறைய நூறு வயதுள்ளவராகக்கொள்ள, தன் சரீரமும் க்ஷீணித்து, தன் மனைவியாகிய சாராளுடைய கர்ப்பமும் வரண்டு போயிற்றென்று யோசித்தவருமல்ல. சர்வேசுரனுடைய வாக்குத்தத்தத்தின்மேல் அவர் சந்தேகப்பட்டு, தத்தளிக்கவுமில்லை. ஆனால் சர்வேசுரனைக் கொண்டாடி, விசுவாசத்தில் உறுதிப்பட்டிருந்தார். ஏனெனில், அவர் என்னென்ன வாக்குத்தத்தம் பண்ணுவாரோ, அவையெல்லாம் அவர் நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று சம்பூரணமாய் அறிந்திருந்தார். (உரோமர் 4-அதி. 18-வசனம்.

ஆனால் சக்கரியாஸ் தேவதூதன் சொன்ன வாக்கின்மேல் சந்தேகப்பட்டுத் தத்தளிக்கிறார். **18-வசனம்.** "அதற்குச் சக்கரியாஸ் தேவதூதனை நோக்கி: இதை நான் அறிவதெப்படி? நானோ விருத்தாப்பியனா யிருக்கிறேன்; என் மனைவிக்கும் நாள் கடந்து போயிற்றே என்றார்."



சம்மனசானவர் உரைத்த தேவ வாக்கை யோசியாமல், தேவ வல்லபத்தைச் சற்றும் நினையாமல், தான் விருத்தாப்பியனென்றும், தன் மனைவி வயதுசென்றவளென்றும், இக்காரியம் எப்படிச் சித்திக்கும் என்றும், இது சுபாவ சக்திக்கும் ஒழுங்குக்கும் மேற்பட்டிருப்பதை மாத்திரம் சிந்தித்து மனதில் சந்தேகத்தால் கலங்குகிறார். மேலும் இவ்வாறு சந்தேகப்படுவதற்கு அவருக்கு நியாயமிருந்ததில்லை. ஏனெனில், அபிரகாமின் மனைவி சாராளென்பவளும், சம்சோனுடைய தாயும், சமுவேலின் தாய் அன்னாவும் மலடிகளாய் இருக்க, தெய்வச் செயலால் கர்ப்பந்தரித்து புத்திரரைப் பெற்றார்கள் என்பதை வேத புஸ்தகங்களில், குருவாகிய சக்கரியாஸ் வாசித்தறிந்திருக்கக்கூடும்.

சம்மனசானவருடைய வார்த்தையை விசுவசியாமல் சந்தேகங் கொண்டதினால் அவருக்குக் கிடைத்த ஆக்கினையை முன்னிட்டு, அவர் அற்பப் பாவத்துக்குள்ளானார் என்று வேத சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். சக்கரியாசுடைய பாவம் எதினால் நேர்ந்ததென்றால், தான் தேவதூதனிடமிருந்து, நம்புகிறதற்கு ஆதாரமான புதுமை அடையாளங்களைக் கேட்டதினால் அல்ல, ஆனால் அவருடைய வாக்கை நம்பாமல் போனதினால்தான்.

ஏனென்றால், தங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்திக்கொள்ள, அபிரகாமும், சேதெயோனும் தேவனிடத்தில் அடையாளங்களைக் கேட்டிருக்கிறார்கள். தேவனே இத்தகைய அடையாளங்களையுங் கொடுத்து அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்தியுமிருக்கிறார். அவைகளைக் கேட்கவும் எச்சரித்திருக்கிறார். ஆகையால் சக்கரியாஸ் விசுவசியாததற்குக் காரணம், அவர் சம்மனசானவரின் மகத்துவ பிரதாபத்தையும், தேவன் பேரால் அவர் கொண்டுவந்து வெளிப்படுத்திய வாக்குத்தத்தத்தையும் கவனியாமல், சுபாவத்தின் இயலாமையை மாத்திரம் சிந்தித்ததேயாம்.

ஆனபடியால், தேவன் அனுப்பிய தூதனுடைய பதவியின் பிரதாபத்தையும் அதிகாரத்தையும் சக்கரியாஸ் சிந்தித்துக் கவனிக்க வேண்டுமென்று சம்மனசு கற்பிக்கிறார்.

**19-வசனம்.**—"தேவதூதன் அவருக்கு மாறுத்தாரமாக: நான் ஆண்டவருடைய சந்நிதானத்திலே நிற்கிற கபிரியேல். உன்னுடன் பேசி இந்தச் சுபசெய்திகளை உனக்கு அறிவிக்கும்படியாய் அனுப்பப்பட்டேன்."

தனியேல் தீர்க்கதரிசிக்கு மெஸ்வியாவின் காலத்தையும் அவரால் வரப்போகிற ஈடேற்றத்தின் நன்மைகளையும்பற்றி அறிக்கையிட்ட சம்மனசானவரே இப்போது சக்கரியாசுக்குந் தரிசனமாகிறார்.

கபிரியேல் என்ற பதம் எபிரேய பாஷையில் தேவனுடைய வல்லபம், தேவ பராக்கிரமம் என்றர்த்தங் கொள்ளும்.

அருளப்பருடைய ஜனனத்திலும், அதைத் தொடர்ந்துவந்த சகல சம்பவங்களிலும் நன்மைகளிலும், தேவ வல்லமை விசேஷமாய் விளங்குகிறபடியால் தேவ பராக்கிரமத்தைக் கொண்ட கபிரியேல் சம்மனசானவர் தூதனாய் அனுப்பப்பட்டது நியாயமே. இவர் சம்மனசுக்களின் பிரதான வகுப்பைச் சார்ந்தவர். அதிதூதர்களில் ஒருவர். ஆண்டவருடைய சந்நிதானத்தில் நிற்கிறதென்றால், ஆண்டவருக்குப் பணிவிடைசெய்வது, அல்லது ஆண்டவருடைய கட்டளைகளை நிறைவேற்ற எப்போதும் ஆயத்தமாய் இருப்பது என்றர்த்தமாம்.

ஆனால், எல்லோரும் கடவுளுடைய ஊழியர்களாய் இருந்தாலும், சில மனிதரை மாத்திரம் வேதாகம புஸ்தகங்கள் தேவ ஊழியர் என்ற மகிமையான நாமதேயத்தால் குறிப்பிட்டு வாழ்த்துவதைப் போல், சம்மனசுக்கள் எல்லோரும் ஆண்டவருடைய சந்நிதானத்தில் நிற்கிறவர்களாயிருந்தாலும், ஒரு சம்மனசுக்கு இவ்வித நாமதேயத்தை விசேஷமாய்ச் சூட்டினால், அவருக்கு இது ஒரு சிறந்த மகிமையான பட்டப்பெயராகின்றதென்றும், அவருடைய மேலான பதவியைக் குறிக்கின்றதென்றும் சொல்லவேண்டும்.

சக்கரியாஸ் சம்மனசானவர் உரைத்த வாக்கை விசுவசிக்கும்படியாக ஓர் அடையாளத்தைப் பெற்றுக்கொள்கிறார்.

ஆனால், இவ்வடையாளம் அவருடைய அவிசுவாசத்துக்கு ஆக்கினையாகவும், அவர் செய்த மன்றாட்டுக்குச் சம்பாவனையாகவும், பலனாகவுமிருக்கும்.

20-வசனம். "தக்க காலத்திலே நிறைவேறப்போகிற என் வாக்கியங்களை நீ விசுவசியாததினிமித்தம், இவைகள் சம்பவிக்கும் நாளளவும் இதோ நீ பேசக்கூடாத ஊமையா யிருப்பா யென்றார்."

"Ecce" "இதோ" இப்பதம் சம்மனசு அறிவிக்கப்போகிற ஓர் நவமான காரியத்தை முன் எச்சரிக்கிறது. சக்கரியாவின் கவனத்தை எழுப்புகிறது.

தேவதூதனின் தரிசனத்தாலும் சம்பாஷணையாலும் சக்கரியாஸ் வழக்கத்துக்கு விரோதமாய்த் தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் அதிக நேரம் தாமதிக்கலானார்.

அவர் தூபம்போடுகிற சடங்கைத் தீவிரமாய் முடித்திருக்கலாம். மேலும், தேவாலயத்தின் அதி பரிசுத்த ஸ்தலத்தில், பிரதான குரு பாவப்பரிகார பலிகளைச் செலுத்தும் வெகு முக்கியமான காலத்தில் முதலாய், வெகு சொற்ப நேரம் தான் இருப்பது வழக்கம். ஆகையால் சக்கரியாஸ் தாமதிக்கிறதைப்பற்றி, அவருக்கு என்னவோ, ஏதோ சம்பவித்ததென்று ஜனங்கள், மனக் கவலையோடு அவரை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

21-வசனம். "ஜனங்களோ சக்கரியாசுக்காகக் காத்திருந்து, அவர் தேவாலயத்தில் தாமதிக்கிறதைப்பற்றி, ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள்."

22-வசனம். "அவர் வெளியே வந்தபோது அவர்களிடத்தில் பேசக்கூடாதிருந்தார். அதினாலே அவர் தேவாலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டாரென்று அவர்கள் அறிந்துகொண்டார்கள். அவரோ அவர்களுக்குச் சயிக்கினைசெய்து ஊமையாகவே யிருந்தார்."

சக்கரியாஸ், பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே வந்தபோது, தான் கண்ட தரிசனத்தைப்பற்றி, ஆச்சரிய பிரமிப்பால் மனங்கலங்கி யிருந்தார். அச்சத்தால் அவருடைய முகம் வேறுபட்டிருந்தது.

தனக்குக் கிடைத்த தண்டனையின் நிமித்தம் திகில் நடுக்கம் கொண்டவராய்த் தோன்றினார். அவர் பேசக்கூடாதவராயிருப்பதை ஜனங்கள் கண்டு, தேவாலயத்தில் சக்கரியாசுக்கு, ஏதோ ஓர் ஆச்சரியமான விசேஷம் நடந்திருக்க வேண்டுமென்று சரியாய்ச் சிந்திக்கலானார்கள்.

அவரோ, தான் மெய்யாகவே ஓர் தரிசனத்தைக் கண்டதாக, அவர்களுக்குச் சயிக்கினையால் வெளிப்படுத்தினார்.

குருக்களின் 8-வது வகுப்பைச் சார்ந்தவர் சக்கரியாஸ். எட்டுநாள் பரியந்தம் அதாவது ஒரு சாபத்திலிருந்து மறுசாபத்து வரையில் ஒவ்வொரு வகுப்பின் குருக்கள் தேவாலயத்தில் திருப்பணி செய்யும்படி குறிக்கப்படுவார்கள். அவர்கள் தேவாலயத்தில் சேவிக்கிற காலமெல்லாம், விரத்தராய் இருக்கக் கடமைப்பட்டவர்கள்.

இக்கண்டிப்பான ஒழுங்கு, பிற்காலத்தில் மெய்ம்மறை திருச்சபையின் குருக்கள் எந்நாளும், எந்நேரத்திலும் தேவாலய சடங்குகளையும், பலிபூசைகளையும், தேவத்திரவிய அநுமானங்களையும் நிறைவேற்ற வேண்டியவர்களானதினால், எக்காலத்திலும் விரத்தர்களாய்ச் சீவிக்க வேண்டுமென்கிற திருச்சபையின் மேலான நிபந்தனைக்கு முன் அடையாளமாகவும், முற்குறிப்பாகவு மிருந்ததென்று அர்ச். பேதாவும், அர்ச். போனவெந்தூரும் வசனிக்கிறார்கள்.

23-வசனம். பின்னும் சம்பவித்ததேதெனில், அவருடைய திருப்பணி நாட்கள் நிறைவேறின பின் அவர் தம் வீட்டுக்குத் திரும்பினார். அவர் ஜெருசலேம் பட்டணத்தில் வாசம்பண்ணவில்லை. யூதேயா தேசத்தின் மலைநாடுகளில் ஜெருசலேம் பட்டணத்துக்கு தெற்கே யிருந்த குருவம்ஸத்தாரின் நகராகிய எப்ரோன் (Hebron) என்ற ஊரில் அவருடைய இல்லிடம் இருந்ததாக தொலேதுஸ் என்பவர் நிச்சயிக்கிறார்.



திருப்பணி நாட்களில் குருக்கள் தேவாலயத்தின் வெளிக்கட்டு அறைகளில் தங்கியிருப்பார்கள்.

24-வசனம் அந்நாட்களுக்குப் பின் அவருடைய மனைவியாகிய எலிசபேத் கர்ப்பந் தரித்து, ஐந்துமாதமாக வெளிப்படாதிருந்தாள்." தனக்குத் தேவாலயத்தில் சம்பவித்த காரியங்களைப்பற்றி சக்கரியாஸ் தன் மனைவியினிடம் வெளிப்படுத்தினார் என்று எண்ண நியாயமுண்டு.

அதென்னவென்றால் எலிசபெத்தம்மாள் தான் கர்ப்பந்தரித்ததானது தேவ கிருபையால் நடந்த காரியம் என்று அறிந்து தனக்குவந்த மாற்றத்தைப்பற்றி விசாரப்பட்டுக் கலங்காமல் சர்வேசுரனுக்குத் தோத்திர நமஸ்காரங்களைச் செலுத்துவாளென்பதே.

அவள் ஐந்துமாதமாய் வெளிப்படாதிருந்ததற்குக் காரணம், மனிதருடைய சஞ்சாரத்தை விலக்கி, மௌனத்திலும் அடக்கத்திலும், தனக்கு ஆண்டவர் செய்த மகத்தான நன்மையைச் சிந்தித்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துவதற்காகத்தான். ஆறுவது மாதம் தேவதாய் அவளைச் சந்திக்க வந்தகாலத்தில், அவள் மற்றவர்களுக்குத் தன்னைக் காண்பிக்க அஞ்சவில்லை.

25-வசனம். "மனிதருக்குள்ளே எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க, ஆண்டவர் என்னைக் கிருபா கடாட்சத்தோடு நோக்கின இந்த நாட்களிலே, எனக்கு இப்படிச் செய்தருளினார் என்று சொல்லி வந்தாள்."

வேதாகம புஸ்தகத்தில் ஆண்டவர் ஒருவனைக் கடாட்சித்தார் அல்லது நோக்கினார் (Respexit) என்றால் அவன்மட்டில் தயையைக் காண்பித்து, நன்மைகளையும் வரங்களையும் பொழிந்தார் என்றர்த்தமாகும்.

பழைய ஏற்பாட்டில் புத்திர சந்தானத்தை யூதஜனங்கள், புண்ணியத்தின் பலனாகவும், தேவகருணையின் அடையாளமாகவும் வெகு சிலாக்கியமாய் மதித்துவந்தார்கள். புத்திர சந்தானமற்றவர்கள் நிந்தைக்கும் இகழ்ச்சிக்குமுள்ளானார்கள்.

ஏனென்றால் யூதஜனங்கள் மெஸ்லியாவாகிய கிறிஸ்துநாதர் தங்கள் கோத்திரத்தில் அல்லது சந்ததியாரிடத்தில் உதிக்கவேண்டுமென்று வெகு அபேட்சையா யிருந்தார்கள். அவர்களுக்குப் புத்திர சந்தானம் இல்லாமற்போனால் இவர்கள் நம்பிக்கை அறவே அற்றுபோகு மல்லவா? மெஸ்லியாவுடன் தூரமான அல்லது கிட்டின முறையோடு எவ்விதத்திலும் மாம்ச சம்பந்தப்படுவது தங்களுக்குப் பேறும் பெருமையுமா யிருந்ததால் யூதஸ்திரீகள் மலடிகளாயிருக்க சகிக்கவில்லை. மலடிகள் தேவனால் சபிக்கப்பட்டவர்கள் என்றும் எண்ணினார்கள்.

இதினிமித்தம் தான் மலடியா யிருந்ததை நினைத்து மனிதருக்குள்ளே எனக்கிருந்த இகழ்ச்சியை ஆண்டவர் நீக்கினார் என்று எலிசபேத்தம்மாள் தேவ கிருபையை வாழ்த்துகிறாள்.

S. M.

## GNANAMANI, III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 35-ம் அதிகாரம்

**சமுத்திரத்தின் ஆழத்தை அறிந்தாலும் அறியலாம். ஆனால் சந்தியின் மனதை அறிவது அசாத்தியம்.**

ஐந்தரை மணிக்கு பண்டிதர் தமது பங்களாவுக்கு வந்து சேர்ந்தவுடனே, தன் மனைவி யிருந்த அறைக்குச் சென்று, "ருக்மணி உன் சௌக்கியம் எப்படி? உன் முகத்தைப் பார்த்தால் சுகமா யிருக்கிறதுபோல காணப்படுகிறது" என்றவுடனே, "ஸ்வாமி தயவால் சுகமா யிருக்கிறேன்" என்று சொல்லி, "நீங்கள் போன வேலை அனுகூலமாய் முடிந்ததோ?" என்று ருக்மணி வினாவினாள்,

பண்.—ஓ! மெத்த அனுகூலமாய் முடிந்தது. நமது பாட்டுக்கச்சேரியைப்பற்றிப் புகழாதவர் ஒருவரு மில்லை.

ருக்.—யாருக்குக் கலியாணம்?

பண்.—ஒரு பெரிய மராட்டிய பிரபுவின் குமாரனுக்கு. நீ யென்னுடன் வந்திருந்தால் நடந்த விருந்தின் மேன்மையையும் ஊர்கோலத்தின் ஆடம்பர வைபவத்தையும், அங்கு வந்திருந்த கனவான்களுடையவும் அவர்கள் ஸ்திரீகளுடையவும் வஸ்திராபரண சிறப்பலங்காரத்தையும். பந்தல்களின் சோடினைகளையும் கண்டு அதிசயத்துடன் அகமகிழ்ந்திருப்பாய்!

ருக்.—முன்னொரு தபா நீங்கள் போனபோது நல்ல வீடு இல்லாதபடியால் சங்கடப்பட்டதாகச் சொன்னீர்களே!

பண்.—அந்த விசை கோமுட்டி கலியாணத்துக்குப்போனேன். கோமுட்டி யெல்லாத்திலும் செட்டாய்த்தானே இருப்பான்! ஆனால் இந்த மகாராட்டியப் பிரபு பணத்தை யதேஷ்டமாய் செலவழித்தார். பணத்தைப் பணமாகப் பாவிக்கவில்லை. அது ஒரு அரசனுடைய கலியாணம் போலக் காணப்பட்டது. (தமது சொக்காயை சற்றுமேலே இழுத்து கைரெண்டையும் காட்டி) இதோ பார். பொன் காப்பும் கொலுசும் அடித்துப் போட்டார் அந்தப் பிரபு! இந்த மோதிரமும் அவர் போட்டதுதான். 300 ரூ பெறுமென்றார்கள் தட்டார்கள் இந்த மோதிர மாத்திரம்.

ருக்.—தங்குகிறதற்கு நல்ல இடம் அகப்படாதா?

பண்டி.—இரண்டு அடுக்கு மெத்தை அகப்பட்டது. நானும் நமது மாணாக்கரும் சுகமாயிருந்தோம். ஒன்றும் குறைவுபடவில்லை. நான் கொண்டுபோன வேலைக்காரன் தவிர், வேறு மூன்று வேலைக்காரர் ஒரு சாரட்டு வண்டியுடன் எனக்கு தயாரா யிருந்தார்கள். கறிபதார்த்தமோ ஒவ்வொரு வேளைக்கும் 12வகைக்குக் குறையாது. மராட்டியர் மகா சமர்த்தர் சமயல் வேலையில்!

ருக்.—நீங்கள் பந்தியில் சாப்பிடவில்லையோ?

பண்டி.—வரச்சொன்னார்கள்; ஆனால் நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. நமது சமயல்காரனுக்கு ஒரு வேலையு மில்லாமல் நாளெல்லாம் சும்மாதா னிருந்தான்.

ருக்.—அப்படியா? களைப்பாய் இருப்பீர்கள் போதும்; ஸ்நானம் தயாரா யிருக்கிறது, குளிக்கப் போங்கள்.

அப்போது பண்டிதர் ஸ்நானஞ் செய்து தமது மனைவியுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

மறு நாள் பண்டிதர் வழக்கப்படி காலைபலகாரம் செய்தபின், தமது மாணாக்கர் கூடியிருந்த மண்டபத்துக்குப் போனார்.

பண்டிதரோடு தஞ்சாவூருக்குப் போயிருந்த சமயல்காரன் தான் கொண்டுபோயிருந்த சமயல் பாத்திரங்களை யெல்லாம் துலக்கிக் கொண்டுபோய் வீட்டில் வைத்துக்கொண் டிருக்கும்போது ருக்மணி யவனைப் பார்த்து:

"அடே, முத்துக்கண்ணு" என்றவுடனே, வேலைக்காரன் அவளுக்கு எதிரே போய் "என்னம்மா துரைசானியே" என்றான்.

ருக்.—தஞ்சாவூர் பெரிய ஊராடா?

வேலை.—பெரிய ஊரம்மா! இந்தச் செங்கல்பட்டை விட பல மடங்கு பெரிது. இராஜா அரண்மனை யெவ்வளவு பெரிது! எவ்வளவு அலங்காரமா யிருக்கிறது! கோவில்களுக்கும் கோபுரங்களுக்கும் கணக்கில்லை!

ருக்.—உனக்கு அங்கே அதிக வேலையில்லையாமே, மெய்தானா?

வே.—வேளைக்கு சாப்பிடுவதும், ஊர் சுற்றுவதுந்தான் என் வேலை யம்மா!

ருக்.—பண்டிதருக்குச் சமயல் வேலை செய்ததார்?

வே.—இரண்டு பேர் சமயல் வேலைக்குத் தயாரா யிருந்தார்கள்.

ருக்.—ஆண் பிள்ளைகளா பெண் பிள்ளைகளா?

வே.—ஆண் பிள்ளைகள்தான்.

ருக்.—பண்டிதர் கலியாண வீடு தப்ப எந்த வீட்டுக்கும் போகவில்லையோ?

வே.—அவருக்கு யாருடைய வீட்டுக்குப் போக சாவகாச மிருந்தது! பாட்டுக்கச்சேரி முடிந்தவுடனே அவரும் மற்ற மாணாக்கரும் அவர்களுக்குக் குறிக்கப்பட்டிருந்த பெரிய பங்களாவுக்கு வருவார்கள். ஆனால் ஒரு நாள் எஜமானும் மாணாக்கரும் குதிரை ரதம் ஏறி, இராஜ அரண்மனை பார்க்கும்படி போனார்கள்.

ருக்.—நீ கூட போனாயா?

வே.—நான் போகாதிருப்பேனா?

ருக்.—அவர் பங்களாவி லிருந்தபோது அவரை யாராகிலும் போய் பார்த்தார்களா?



வே.—அநேக பெரிய மனிதரும் பிரபுக்களும் போய் அவரைக் கண்டு பேசினார்கள்.

ருக்.—ஸ்திரீகள் கூடப் போனார்களோ?

வே.—பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தியும் அதில் கால் வைக்கவில்லை. போன ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் போனார்.

ருக்.—எங்கே?

வே.—உங்களுடைய வேதக் கோவிலுக்கு. தஞ்சாவூரில் இரண்டு கோவிலுண்டு. ஒன்று புதுக்கோவிலென்றும் மற்றொன்று பழய கோவிலென்றும் அழைக்கப்படுகிறது. புதுக்கோவிலில் காலையில் போய் பாட்டுக்கச்சேரி செய்தார். பழய கோவிலில் சாயங்கால வேளையில் பாட்டுக்கச்சேரி செய்தார்.

ருக்.—நல்லது, பாத்திரங்களை யெல்லாம் நன்றாய்த் துலக்கி அடுக்கிவை, என்று சொல்லி, தன் அறைக்குப் போனாள். சமயற்காரனுடன் ருக்மணி பேசியபின், அவளுக்கு அதிக மனச் சமாதானமுண்டாகி, தன் புருஷன் மட்டில் அதிக விஸ்வாசமும் பிரமாணிக்கமும் வைத்தாள். ஏனெனில், நாலைந்துநாளாய் அவர் வெளியூருக்குப் போயிருந்தும் ஸரஸ்வதி சொன்னதுபோல், பண்டிதரிடத்தில் துற்நடத்தை காணப்படாததினாலே அவள் சந்துஷ்டிகொண்டிருந்தாள்.

ருக்மணிக்கு நேர்த்தியான கீச்சுக்குரலிருந்தும் சங்கீத பயிற்சியற்றிருந்தாள். ஆனால் பண்டிதர் அவளுக்குச் சில பாட்டுகளைக் கற்பித்து கொடுத்ததன்மேல், அவளும் இன்பமாய்ப் பாடவும் பியானோ கொட்டவும் கற்றிருந்தாள். இராவேளையில் பண்டிதர் பிடில் கையிலெடுத்து கொட்டும்போது ருக்மணி யினியகுரலெடுத்து பாடுவதைக் கேட்டால் வெகு இன்பமாயிருக்கும் காதுக்கு. அன்னேரத்தில் அனேகர் பெருங்கூட்டமாய்க் கூடி நிற்பார்கள் ரஸ்தாவில். செவிக்கின்பந்தரும் அந்தச் சங்கீதப் பாடலைக் கேட்கும்படி பலதடவை பண்டிதருடைய மாணாக்கரும் ரஸ்தாவில் நிற்பார்கள். பண்டிதரும் ருக்மணியும் சேர்ந்து பிடிலும் வீணையும் வாசித்துக்கொண்டு, இருவரும் பாடத்துவக்கினால்; ஆ! ஆ! ஆயிரம் செவி யிருந்தபோதிலும் சலியாமல் கேட்கலாம்! அவ்வளவு இன்பமும் சொகுசுமா யிருக்கும்! என்பார்கள் எல்லோரும்.

மறுநாள் ஸரஸ்வதி ருக்மணியைச் சந்திக்க வந்தபோது, "என்ன அம்மா, எப்படியிருக்கிறீர்கள் அம்மா?" என்றாள்.

ருக்.—சுகமாய்த்தா னிருக்கிறேன்.

ஸரஸ்.—பண்டிதர் வந்துவிட்டாரா?

ருக்.—ஆம், நேற்று சாயந்திரம் வந்தார்.

ஸரஸ்.—என்ன வேலையாய்ப் போனாரோ தஞ்சாவூருக்கு?

ருக்.—பாட்டுக் கச்சேரியி னிமித்தந்தான்.

ஸரஸ்.—வேறு வேலை ஒன்றுமில்லையோ?

ருக்.—எனக்கு தெரிந்தமட்டும் வேறு வேலை ஒன்றுமில்லை.

ஸரஸ்.—புருஷாள் ஸ்திரீகளிலும் உபாய யுக்தியுள்ளவர்கள்.

ருக்.—ஆமா, அவர்கள் சாதாரணமாக கல்வி பயிற்சி யுள்ளவர்களானதையால் உபாய யுக்தி அவர்களுக்கு இருப்பது அதிசயமல்ல. ஸ்திரீகளாகிய நாம் அதிகமாய்ப் படியாதபடியால் அது நமக்கு மெத்த குறைவு.

ஸரஸ்.—நான் உபாய யுக்தி யென்று சொன்னபோது, வஞ்சகம், சூது என்கிற அருத்தத்துடன் சொன்னேனே ஒழிய மற்றப்படியல்ல.

ருக்.—சமுத்திரத்தின் ஆழத்தை அறிந்தாலும் அறியலாம், ஆனால் சத்தியின் மனதை யறிவது அசாத்தியமென்று சொல்லக்கேட்டிருக்கிறேன்.

ஸரஸ்.—இப்பேர்ப்பட்ட வசனத்தை மொழிந்தவன் ஒரு பெரு முட்டாளா யிருக்கவேண்டும். அது இருக்கட்டும் அம்மா. நான் கொடுத்த புஸ்தகத்தை வாசித்தீர்களா?

ருக்.—இன்னம் அதை வாசிக்கவில்லை.

ஸரஸ்.—அதை வாசித்தால் மாத்திரம் மங்கையர்மட்டில் நல்ல அபிமானம் உங்களுக்கு உண்டாகும். ஆண் மக்களுடைய அகங்கார கெருவத்தையும் அவாள் பெண்கள் மட்டில் காட்டும் நிஷ்டூரமும் குரூரமுமான குணத்தையுங் கண்டுபிடித்து, அவர்களை யெதிர்க்கவேண்டிய வழிப்பாடுகளை அறிந்துகொள்ளலாம். நான் முன் சொன்னதை மறந்தீர்களோ?

ருக்.—எந்த விஷயம் ஸரஸ்வதி?

ஸரஸ்.—(முனியம்மாள் பக்கமாய்த் திரும்பிப்பார்த்து) என்டி! அந்த சங்கதியெல்லாம் துரைசானிக்கு அறிவித்தாயோ?

முனி.—அறிவித்தேன்.

ருக்.—அதை நான் நம்பவில்லை.

ஸரஸ்.—சரி, நம்பாவிட்டால் உங்கள் இஷ்டம். (ஸரஸ்வதி துக்க முகத்துடன்) வாங்கம்மா ஒரு ஆட்டம் சொக்கட்டான் ஆடலாம்.

ருக்.—அப்படியே ஆகட்டும்.

என்று இருவரும் உட்கார்ந்து ஆடும்போது ருக்மணி கெலித்தாள். அப்போது ஸரஸ்வதி, "ஏது அம்மா, நன்றாய்த் தேர்ந்துபோனீர்கள்!" என்று சில நேரம் பேசிக்கொண்டு, அங்கு வெகு நேரம் தங்காமல் எழுந்து தன் வீட்டுக்குச் சென்றாள்.

அது முதல் ஸரஸ்வதி ருக்மணியினிடம் வெகு அரிதாய் வருவாள். வந்தாலும் குடும்ப விஷயத்தைப்பற்றி பேசமாட்டாள். ஆனால் இவள் பண்டிதர் வீட்டுக்கு அரிதாய் வந்தபோதிலும் அங்கு நாடோறும் நடக்கும் சங்கதிகளை முனியம்மாள் மூலமாய் அறிந்துகொள்வாள்.

பண்டிதர் செங்கல்பட்டுக்கு வந்து சேர்ந்த ஐந்தாம் வருஷம் ஒரு நாள் இவர் தன் மனைவியுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் தபால்காரன் பல கடிதங்களைக் கொண்டுவந்து பண்டிதர் கையில் கொடுத்தான். அவர் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வாசித்து மூன்றாவது கடிதத்தைப் பிரித்து வாசிக்கும்போது முகத்தில் சந்தோஷம் காட்டி, "இது நமது ஊரிலிருந்து வந்த கடிதம்" என்றார்.

"என்ன விசேஷம்?" என்று ருக்மணி கேட்டாள்.

அப்போது பண்டிதர் சொல்வார்: பல விசேஷங்களுண்டு இந்தக் கடிதத்தில். எல்லாம் சந்தோஷகரமானவை. என் தம்பிக்கு நாலா மாதத்தில் கலியாணம்.

ருக்.—பெண்?

பெண்.—சின்னப்ப நாயகர் குமாரத்தி மரிய நட்சத்திரம். உன் தங்கைக்கும் கலியாணம்.

ருக்.—யாருக்கோ?

பண்.—பிலவேந்திர நாயகர் மகன் அருளானந்தத்துக்கு. இதிலும் மகா சந்தோஷத்துக்குரிய விசேஷம் ஒன்றுண்டு.

ருக்.—அதென்ன விசேஷம்?

பண்.—உன் தங்கைக்குக் கலியாணம் நடக்கும்போது உன் தாய் தகப்பனும் மற்ற குடும்ப சமேதமும் ஞானஸ்நானம் பெற்று சத்திய வேதத்தில் சேரப்போகிறார்களாம்.

ருக்.—அப்படியா? ஸ்வாமிக்குத் தோத்திரம். இதற்காக நாள்தோறும் நான் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடி வந்தேன்.

பண்.—நாம் இருவரும் அந்தக் கலியாணத்துக்கு வரவேண்டுமென்று எழுதி யிருக்கிறார்கள்.

ருக்.—போகிறதற்கு என்ன விக்கினம்?

பண்.—இந்தக் கலியாணத்துக்குப் போகாவிட்டால், பின் எந்தக் கலியாணத்துக்குத்தான் போவோம்?

ருக்.—பாட்டுக்கச்சேரி செய்யமாட்டார்களோ அப்போது?

பண்.—அதுகூட கேட்கவேண்டுமோ?

மேலும் உன் பெற்றோர் முதலியவர்கள் சத்திய வேதத்தில் சேரப்போகிறதைப்பற்றி அன்றையத்தினம் ஒரு நேர்த்தியான நாடகமும் போடலாம்.

ருக்.—என்ன நாடகம்?

பண்.—(சில நேரம் யோசித்துப்பார்த்து) இஸ்தாக்கியார் நாடகம் நன்றா யிருக்கும்.

ருக்.—அது எப்பேர்ப்பட்ட சரித்திரம்?

பண்.—இஸ்தாக்கியாரும் அவருடைய பெண்சாதி பிள்ளைகளும் அஞ்ஞானிகளா யிருந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள் கிறிஸ்துவர்கள் ஆனபின் பல சோதனைகள் நேரிட்டது அவர்களுக்கு. இஸ்தாக்கியாருடைய மனைவியும் இரு பிள்ளைகளும் சடுதியில் காணமல் போனார்கள்! பெருந் தனவந்தனாயிருந்த இஸ்தாக்கியாருடைய ஆஸ்தி பாஸ்தியெல்லாம் இவர் ஞானஸ்நானம் பெற்றதனால் பறி முதல் செய்யப்பட்டு வறுமைக்குள்ளானார். ஆனால் அவர் சர்வேசுரனை மறவாமல் அவருக்குப் பிரமாணிக்கமா யிருந்தார். சில காலத்துக்குப்பின் காணமற்போன மனைவியும் பிள்ளைகளும் அற்புதமான விதமாய் வந்து சேர்ந்தார்கள். முன்னிருந்த கீர்த்தி வெகுமானமும் அவருக்கு மறுபடியு முண்டாகி, சத்திய வேதத்துக்காக தன் மனைவி மக்களுடன் வேத சாக்ஷி முடிபெற்று மோக்ஷ பாக்கியமடைந்தார்.

ருக்.—அப்படியானால், நன்றா யிருக்கும் அந்த நாடகம்!

பண்.—(நாலாவது கடிதத்தைத் திறந்து) "அது யாரிடமிருந்து வந்தது சொல் பார்க்கலாம்" என்ன, "என்னமோ" என்றாள். (அதையவர் வாசித்துப் பார்த்தபின்) "நீ யிதைவாசி"



162083

என்று அதை ருக்மணி கையில் கொடுத்தார். அதை யவள் இவ்வாறு வாசிப்பாள்:—

எனது அன்புக்குரிய அண்ணன் அவர்களுக்கு மங்களங் கூறி யெழுதுவது.

நான் உங்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதுகிறதில்லையென்று சிரேஷ்ட தாயாருக்கு அறிவித்ததாக எனக்குத் தெரிய வந்தது. மேலும் சிரேஷ்ட தாயாருடைய கட்டளைப்படி யிக்கடிதம் எழுதலானேன்.

எனது பிரியமுள்ள அண்ணே! நான் உங்களுக்குக் கடிதம் அடிக்கடி யெழுதுவதா யிருந்தால் என்ன சங்கதியைப்பற்றி யெழுதுவேன்? நானோ உலகத்தைத் துறந்து சர்வேசுரனுடைய ஊழியத்தில் வேலையா யிருக்கும் துறவி; துறவறத்தோர் உலகத்துக்குச் செத்து இருப்பதால், உலக சங்கதியும் சமாச்சாரமும் என் காதுக்கு எட்டாது. உலக சங்கதிகளை காதில் போட்டுக் கொள்வதால் என்னுடைய ஒழுங்கையும் என் அந்தஸ்தின் கடமைகளையும் சரியாய் அனுசரிக்க அவை விக்கினமா யிருக்குமென்று, அப்பேர்ப்பட்ட உலக சேதிகளை யென்றால் கூடுமானமட்டும் விலக்கப் பிரயாசைப்பட்டு வருகிறேன். உலக காரியங்கள் என் இருதயத்தில் இருக்குங்கால் ஞானக் காரியங்களைச் சரிவர அனுஷ்டிப்பது அசாத்தியமென்றும், அவைகளுக்கு என் இருதய வாசலை திறவாதிருக்கும்பொழுது மெஞ்ஞான சந்தோஷமும் மனச் சமாதானமும் என்னில் குடிகொண்டிருப்பதாகவும் பிரதிதின பரீட்சையால் அறிவேன். ஆகையால் என் பிரிய அண்ணே! வீட்டுச் சங்கதியைப்பற்றி உங்களுக்கு எழுதாததை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வரும் டிசம்பர்மீ 8உ நான் நித்திய வார்த்தைப்பாடு கொடுக்கப்போகிறேன். இந்தப் பெரிய வார்த்தைப்பாட்டால் சாகுமட்டும் நான் சர்வேசுரனுக்குமாத்திரம் சொந்தமாகிப் படைப்புண்ட சகல வஸ்துக்களுக்கும் செத்து அவரில் மாத்திரம் சீவிக்கப்போகிறேன். சர்வேசுரன், என்னதும் பாக்கியத்துக் குரியதுமாகிய இந்தப் பூலோக மோக்ஷத்துக்கு என்னை அழைத்ததற்காக நித்திய காலமாய் அவருக்கு நன்றியறிந்திருக்கிறேன்.

சகலத்தையும் துறந்துவிட்டு, பெற்றோர் பந்துக்களை விட்டு விட்டு, சேசுக்கிறிஸ்துநாதரைப் பத்தாவாகத் தெரிந்துகொண்டு, நாளெல்லாம் ஜெபத்திலும் சகல புண்ணியங்களிலும் செலவு செய்து, பிறர் நேசத்தின் வேலையாகிய சிறுவருக்குக் கல்வி கற்பித்தல், அறியாதவர்களுக்கு புத்திமதி சொல்லல், சிறுவருக்கு ஞானோபதேசம் படிப்பித்தல், வியாதியஸ்தரை விசாரித்தல் ஆகிய பரோபகார வேலை செய்யும் புண்ணியாத்துமாக்களான சகோதரிகளோடு நான் சீவிப்பது யார் செய்த புண்ணியமோ நான் அறியேன்! நான் இந்த மடத்தில் அனுபவிக்கும் சந்தோஷமும் மனச் சமாதானமும் எப்பேர்ப்பட்டதென்று விவரிக்க என்னால் கூடாது.

அபிராமியுடைய கஸ்திக்குரிய சங்கதி உங்களுக்குத் தெரியாதிராது! ஆனால் அவள் மெய்யாகவே புண்ணியவதி! தனக்கு உண்டான துன்ப துரிதங்களை மகா பொறுமையுடன் அனுபவித்து வருகிறாள். அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரத்தில் நாம் வாசித்துவரும் சிறந்த புண்ணியவதிகளில் இவளும் ஒருவள் என்னலாம். அடிக்கடி மடத்துக்கு வந்து என்னைக் கண்டு பேசிவருகிறாள். நீங்கள் அவளுக்கு அனுப்பிவைத்த படத்தின் மூலமாய் இந்தப் படிப்பினையைப் படித்துக் கொண்டதாக பலமுறை சொல்லி யிருக்கிறார்கள் எனக்கு.

எனது பிரிய அண்ணனே! உங்களுக்காகவும் அண்ணிக்காகவும் நாடோறும் தவறாமல் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடி வருகிறேன். நான் கொடுக்க இருக்கும் நித்திய வார்த்தைப்பாட்டைத் தகுந்த முஸ்திப்புடன் கொடுத்து, அதற்கு அனுசரணையாக சாகுமட்டும் நடந்துவர எனக்குப் பிராப்தியுண்டாகும்படி நீங்கள் இருவரும் எனக்காக வேண்டிக்கொள்ளும்படி உங்கள் இருவரையும் மகா தாழ்மையுடன் மன்றாடுகிறேன்.

இப்படிக்கு,

புஷ்பமரி சகோதரி.

இக்கடிதத்தை ருக்மணி வாசித்தவுடனே, பண்டிதர் அவளைப் பார்த்து, "சந்நியாச அந்தஸ்து லேசானதல்ல; ஆனால் அது கஷ்டமான சீவியமாயினும் நல்ல மனதுடன் அதைக் கையேற்றுக் கொள்வோருக்கு, அது புஷ்பமரி சொன்னது போல, பூலோக மோக்ஷமா யிருக்கும்! ஆனால் அதைத் தகுந்த விதமாய் கைக்கொள்ளாதவர்களுக்கு மகா கஷ்டமுள்ளதா யிருக்கும்."

"இதற்கு அழைக்கப்பட்டவர்களே அன்றி, மற்றவர்கள் இதில் சேருவது தகாது. என் தகப்பனும் என்னைக் குருப்பட்டத்துக்குப் படிக்கச் சொன்னார். என் ஆத்தும குருவும் எனக்கு தேவ அழைப்பு உண்டென்று அறிவித்தார். காலேஜில் படிக்கும்போது அப்பேர்க்கொத்த கருத்து எனக்கு அனேகந் தடவையுண்டானது. ஆனால் சங்கீத வித்தையில் எனக்கு உண்டாயிருந்த மிதமிஞ்சின ஆவலாலும், உலகில் அதிக கீர்த்தி வெகுமானங்களையும் பேர் பெருமையையும் அடையவேண்டுமென்கிற கருத்தாலும்தேவ ஊழியத்துக்குச் சம்மதிக்கவில்லை. என் வாலிப பிராயத்தின் ஆங்காரத்தால் இப்பெருந் தப்பிதத்தைக் கட்டிக்கொண்டேன் என்று இப்போது தெரியவருகிறது."

"புஷ்பமரி அனுபவிக்கும் சந்தோஷம் மெய்யான சந்தோஷமாயிருக்குமா? நான் கேள்விப்பட்டதுபோல, ஒரு காசும் கையில் வைத்துக் கொள்ளக் கூடாதாம் கன்னியாஸ்திரி! எப்பேர்ப்பட்ட இழிவான வேலை செய்யச்சொன்னாலும் செய்யவேண்டியதாம்; எவ்வளவு தூர ஊருக்குப் போகச் சொன்னாலும் போகவேண்டியதாயிருக்கக் கொள்ள, எப்படி மெய்யான சந்தோஷம் உண்டாகும் அந்த அம்மாளுக்கு?" என்று ருக்மணி அதிசயத்துடன் கேட்டாள்.

அப்போது தேவதாஸ் பண்டிதர் இவ்வாறு சொல்வார்: "உனக்கு வேத சங்கதி தெரியாதபடியால் துறவற அந்தஸ்தின் கனகனத்தை உன்னால் அறியமுடியாது. நீயிப்போது சொல்லிக்காட்டின கஷ்டங்கள் புண்ணியாத்துமாக்களுக்கு கஷ்டமல்ல. அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்திருப்பதும், வெகு நேரம் ஜெபத் தியானம் செய்வதும், அடிக்கடி ஒருசந்தி யுபவாசம் பிடிப்பதும், தனக்குக் கொடுக்கப்படும் அன்ன வஸ்திரத்தில் திருப்தி கொள்வதும், எதையும் தனக்கு சொந்தமாய்ப் பாராட்டாம லிருப்பதும், போகச் சொல்லுகிற இடத்துக்கு முறைப்பாடின்றி போவதும், நியாயமின்றி கோபித்து தண்டித்த போதிலும் பொறுமையாயிருப்பதும், இவை முதலியவை உலகத்தில் உள்ளவர்களுக்கு அசாத்தியமாயிருக்கும். ஆனால் தேவ அழைப்புள்ள ஆத்துமாக்களுக்கு அது சுலபமாயிருக்கும். இப்படியிருந்தும், சிலர் செருவங்கொண்டு பெரியவர்களுக்கு கீழ்ப்படியமாட்டார்கள்; செபதபங்களை அசட்டையாயும் அசமந்தமாயுஞ் செய்வார்கள்; கையில் காசு பணம் வைத்துக்கொண்டு இரகசியமாய்ச் செலவு செய்வார்கள்; தனி ஸ்நேகம் பிடிப்பார்கள்; பெற்றோர் பந்துக்கள் மட்டில் அதிக பற்றுதல்வைத்து அடிக்கடி அவர்களுக்குக் கடிதம் எழுதுவார்கள்; உலக சங்கதிகளையறிய அதிக ஆவல் கொள்வார்கள். சபை ஒழுங்குகளை வேணுமென்று மீறுவார்கள்; பெரியவர்களுக்கு விரோதமாய்க் கோள் குண்டணி சொல்லுவார்கள்; மற்றவர்களுடைய நடத்தையில் இடைவிடாமல் தப்பிதம் பிடிப்பார்கள்; தங்களுக்குப் பிரியமான வேலையைச் செய்வார்கள்; பிரியமற்ற வேலையைச் செய்யமாட்டார்கள். இவர்களுடைய அடாத நடத்தையால் நல்லவர்களுக்கும் துர்மாதிரிகை உண்டாகும். இப்பேர்ப்பட்டவர்களுக்குச் சன்னியாசத்தால் ஞான சந்தோஷமும் மனச் சமாதானமும் உண்டாகாது" என்று சொல்வதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த ருக்மணி சிரித்துக்கொண்டு, நான் ஒருபோதும் கன்னியாஸ்திரி ஆகமாட்டேன்; சந்நியாசம் செய்வது லேசான காரியமல்ல என்று சொல்லி எழுந்தாள்.

## HOW TO RAISE OUR STATUS?

## நாம் முன்னேறுவதெப்படி?

### ஐந்தாம் வியாசம்.

#### கல்வி.

*கண்ணுடைய ரென்பவர் கற்றோர் - முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்.* (நாயனார்.)

நமது குலத்தாரையும் நம்மைப் போன்றவரையும் இக்காலத்தில் பொதுவாய் நெருக்கப்பட்ட வகுப்பினர் (Depressed Classes) என்று அழைக்கிறார்கள். கர்த்தா இன்றிக் காரியமில்லையாகையால், அப்படி நம்மை நெருக்கி வாட்டும் நாசகாலன் (Oppressor) யாரெனில் ஜாதியேற்பாடும் அதனை யொரு தெய்வம்போலப் பாவித்துப் பக்தியுடன் பூஜித்துவரும் உயர்ந்த ஜாதியாரென்னப்படுவர்களுமே.

சிறுபத்தில் தக்க போஷணையும் பார்வையு மில்லாத குழந்தை எப்படி நெருக்கப்பட்டுப்போய் கேவலம் பஞ்சத்தில் அடிபட்ட பணுதியைப்போல் கண்டோர் வெறுக்கக் காணப்படுமோ, அப்படியே நமது குலமும் ஜாதியார்கள் செய்துவந்த, இன்னும் செய்துவரும் இம்சையால் முன்னோர்களின் நல் வழிப்பாடும், கல்விப் பலனும், நல் சகவாசப் பலனும் இல்லாது ஈனதிசை யடைந்து, முன்னுக்கு வரவேண்டுமென்னும் பேராவல் சற்றுமின்றி, தான் கண்டதே காட்சி கொண்டதே கோலமென்பதாய்த் தன் நிர்ப்பாக்கிய நிலைமையில் திருப்திகொண்டு தரித்திரத்திலும் அறியாமையிலும் நாள் கழித்து வருகின்றது. இப்படி இது அயர்ந்து செய்யும் அநியாய நித்திரையிலிருந்து இதனைக் குத்தி யெழுப்பும் தாற்றுக்கோலேதெனில் கல்வியேயன்றி வேறன்று என்று சொல்லாமலே விளங்கும்.

முற்காலத்தில் உயர்ந்த உத்தியோகம் கிடைக்குமென்னும் பேராவலைப்பற்றி இந்தியர் கல்வியின்மேல் கருத்தாயிருப்பார்கள். இக்காலத்திலோவெனில் பொதுவாய் ஒரு ஜாதி ஜனம் ஈடேறக் கல்வியே ஆவசியமென்பதாய்ச் சாதித்து வருகிறார்கள். ஆனதால்தான் நமது இந்திய தேசத்தோலிக்கு மேதாவிகளும் குமார் கடந்த இரண்டு வருஷகாலங்களாக இந்திய கத்தோலிக்கு கிறிஸ்தவர்களுள் உயர்தரக் கல்விக் குறைவைப்பற்றி வாயாலாவது பேசி வருகிறார்கள், பத்திரிகைகளிலாவது எழுதி வருகிறார்கள்.

ஒரு ஜாதி ஜனம் முதலில் பிரதமக் கல்வியில் பூர்த்தியானபிறகு படிப்படியாய் மத்திமக் கல்வியிலும், அதன்பிறகு உயர்தரக் கல்வியிலும் தேறினால்தான் அது மொத்தத்தில் முன்னுக்கு வருமென்பது ஐரோப்பிய தேச சரித்திர அநுபோகம். ஆனால் நமது இந்திய கத்தோலிக்கு ஜன சமூகத்தில் பெரும்பான்மையோராகிய நம்மவர் பொதுவாய்ப் பிரதமக் கல்விக்கும் மத்திமக் கல்விக்கும் ஆஸ்பதமின்றி அறியாமையி லிருக்க, அதில் ஒரு சிறு பகுதியார் மாத்திரம் உயர்தரக் கல்வியில் தேறிவர வேண்டுமென்று கங்கணங் கட்டி நின்றால், பொதுவாய் அச்சன சமூகம் கடைத்தேறுவது எப்படி யென்று அறியக்கூடுமாயில்லை. இந்துக்கள் தங்கள் மதத்துக் கீழ்குலத்தாரைப்பற்றிச் சற்றும் அக்கறைகொள்ளாமல், அவர்கள் தங்களை இந்து என்னும் மதப்பெயரால் அழைத்



துக்கொள்ளுவதை முதலாய்ச் சகியாமல் அவர்களைத் தள்ளி வைப்பதுபோல், ஷை இந்திய கத்தோலிக்கு மேதாவிகளும் நமது மட்டில் நடந்துகொள்ள மாட்டார்களென நம்பப்படுகிறது.

அப்படி யிருந்தின், புரோடெஸ்டாண்டு இந்திய கிறிஸ்தவர்களுள் ளிருப்பது போலவே, கத்தோலிக்கு இந்திய கிறிஸ்தவர்களுள்ளும் ஐக்கியம், பரஸ்பர சகாயம் இருக்கும் என்று நமது காருண்ய ஆங்கிலேய துரைத்தனத்தார் நம்பபிப்பிராயங் கொண்டு, தேச பரிபாலன காரியங்களில் ஷை மேதாவிகளுக்குக் கொடுக்கும், அல்லது கொடுக்கப்போகும் சுதந்தரம் தங்களுக்குப் பிடிக்காதென, நம்மவர், சென்னை பறையர் மாஹாஜன சபையார் சிறிதுகாலத்திற்கு முன் சுயராஜ்ய சம்பந்தமாய்ச் செய்ததுபோல, சர்க்காருக்கு மனுசெய்ய வேண்டிவருமோ? தேவ தயவால் அப்படிப்பட்ட கட்சியும் எதிர் கட்சியும் நமது பால்ய இந்திய ஜனசமூகத்தில் உண்டாகாதிருப்பதாக. வெள்ளம் வருமுன் அணை போடுவதே புத்திசாலித்தனம்.

ஆனால் திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்னும் சத்திய வாக்கின்படி தெய்வத்தின் ஊழியர்களாகிய கிறிஸ்தவக் குருக்கள்தான் நமதுமட்டில் கரிசனை கொண்டு தங்களால் இயன்றமட்டும் ஆங்காங்கு பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நம்முள் பலரைப் பயிற்றுவித்து வருகிறார்கள். அவர்களுடைய வலது கைக்கு இடது கையாக இப்போது கவர்ன்மெண்டாரும் முன்னுக்கு வந்து தங்களுடைய திரண்ட திரவியத்தில் விசேஷ பாகத்தைப் பிரதம கல்வி விருத்திக்காகத் தாராளமாய்ச் செலவழித்து வருகிறார்கள். மேலும் சிறிது காலத்திற்கு முன் காலஞ்சென்ற கோகேல் மஹான் (Honourable Gokhale) பிரேரேபித்தபடி (Compulsary Primary Education) கட்டாயப் பிரதமப்படிப்பு இன்னம் இந்தியாவில் அமுலுக்கு வராதிருப்பினும் மழைகாலத்தில் காளான் பூர்ப்பது போல் தாழ்ந்த ஜாதியாருக்கு எங்கெங்கும் இக்காலத்தில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருவதைப் பார்த்தால், பரோடா, மைசூர் ராஜ்யங்களில் ஆனது போல், பிரிட்டிஷ் இந்தியாவிலும் அது சீக்

கிரந்தில் அழூனுக்கு வருமென நம்பிக்கையுண்டு. அது எப்போது அழூனுக்கு வருமோ அப்போதுதான் நமது வகுப்பினருக்கு இரட்சண்யம்.

ஏனெனில் உயர்ந்த ஜாதியானுக்குப் படிப்பு வாசனை யில்லாதிருந்தாலும் தன் முன்னோர்களின் ஒழுக்க வழிப்பாட்டினலும் சகவாசப் பலனாலும் அவனிடம் சுயமரியாதை (Self-respect) அடக்கம், செட்டுத்தனம், விவேகம் ஆகிய இலட்சணங்களைக் காணக்கூடும். புராதனப் பெருமை, குலப்பெருமை, செல்வப்பெருமை, சகவாசப்பெருமை முதலியன இல்லாத நம்மவர்களிடமோவெனில் அப்படிப்பட்ட இலட்சணங்களைச் சாதாரணமாய்க் கொஞ்சமாவது எழுத்து வாசனை யறிந்தவனிடம் காணக்கூடுமே யொழிய மற்றப்படியல்ல. கொஞ்சமாவது விவேக முள்ளவர்களுக்கு மாத்திரம்தான் நமது திவ்விய வேதத்தின் அருமையும் மாட்சிமையும் விளங்குமே யன்றி, அங்ஙன மில்லாதாருக் கன்று.

ஆனதால் நமது கடமை யேதெனில், நமது பிள்ளைகளைக் கட்டாயம் பிரதமப் படிப்பில் (அதாவது எதையும் சரசரவென வாசிக்கவும், எழுதவும், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்கு செய்யவும்) தேற்ற எவ்வித கஷ்டத்திற்கும் பின்வாங்காமல் அவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டும். படிப்பிருந்தால் விவேக முண்டாகும். விவேகமிருந்தால் ஒழுக்கமுண்டாகும். ஒழுக்கமிருந்தால் யாவும் கைகூடும். பெற்றோர் குடி முதலிய வீண் செலவுகளில் பணத்தை விரயஞ்செய்து, பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் அவர்கள் கழுத்துப்பட்டி யில்லாத நாய்களைப்போல் சந்து சந்தாய்த் திரிந்து கெட்டலைய விடுவதும், அல்லது அவர்கள் பால் மணம் மாறுமுன் அவர்களைக் கூலிக்கும் நாலிக்கும் அனுப்பி வாட்டுவதும் அநியாயம்.

படிப்பின்மேல் ஆவல் காட்டுகிற பிள்ளைகளை மத்திம படிப்புக்கு (Secondary Education) அனுப்புவது நன்று. ஏனையோருக்கு யாதாமொரு கைத்தொழில் கற்பிப்பதே சிரேஷ்டம். இந்தியாவுக்கு கைத்தொழிலாளர் மிகுதியும் தேவையாயிருக்கின்றது. காலாவட்டத்தில் இத்தகையோருக்கே பெருஞ் சிறப்புங் கிடைக்கும். ஆனதால் போதிய செல்வமும் விவேகமு மில்லாத நமது பிள்ளைகள் கைத்தொழிலில் தேர்ந்தால், தற்காலத்திற்குத் தங்களுக்கு ஒரு ஜீவனம் தேடிக்கொள்ள வழியாவதுடன் இந்தியாவுக்கு ஒரு முதுகெலும்பைப்போல் விளங்குவார்கள். அவர்களுடைய சந்ததியார் கூடிய பட்சத்தில் உயர்தரக் கைத்தொழிலையோ, அல்லது உயர்தரக் கல்வியையோ நாடி முன்னுக்கு வரக்கூடும். எந்த ஜாதி ஜனமும் படிப்படியாய்த்தான் பதவியிலும் பாக்கியத்திலும் உயரும்.

பெற்றோர் சக்தியுள்ளவர்களாயும் பிள்ளைகள் விசேஷ திறமையுள்ளவர்களாயு மிருக்கும்பட்சத்தில் அப்படிப்பட்ட பிள்ளைகளை B. A. முதலிய உயர்தரக் கல்விக்கு அனுப்பக்கூடும். கவர்ன்மெண்டாபீசுகளில் குறைந்த சம்பளத்தில் நிர்ப்பந்தப்படுவதைவிட, மில், பாக்டரி முதலிய ஷாப்புகளில் உத்தியோகம் அமர்வது நன்று. மத்திமப் படிப்பானவுடன் (Secondary Education) ரெயில்வே, மெடிக்கல், இஞ்சினீயரிங், அக்ரிகல்ச்சர் என்னும் விவசாயம், பாரஸ்டு முதலிய டிபார்ட்மெண்டுகளில் சற்றுச் சுமாரான உத்தியோகங்களைத் தேடிக்கொள்ளுவது உசிதம். அல்லது புக்கீப்பிங், (Book Keeping), டைப்ரைட்டிங் (type writing, Shorthand writing) ஷார்ட் ஆண்ட் ரைட்டிங் முதலிய விஷயாதிகளைக் கற்றிருந்தால் மெத்த நல்லது. நமது பிள்ளைகளை நாம் கல்வியில் தேற்ற நாம் பெருஞ் சங்கங்கள் ஸ்தாபித்து, திரண்ட திரவியத்தைச் சேகரித்து, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச்சம்பளம் கொடுக்க நாம் எவ்விதத்திலும் ஏலாதவர்களா யிருந்தாலும் (Gratitude insures further favours) ஒருவர் செய்த உபகாரத்திற்கு நன்றி பாராட்டினால், அன்னவரிட மிருந்து இன்னம் அனேக உபகார சகாயங்களை அடைய வழியாகும் என்னும் ஆங்கிலேய பழமொழியைக் கவனித்து, கிறிஸ்துவப் பிறசிநேகத்தினால் தூண்டப்பட்டு நமமை இவ்வளவாவது கல்வியில் தேர்ச்சி செய்யப்பாடுபட்டு வரும் உத்தம தருமகுண சீலர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களுமாயிருந்து, சமயத்தைக் கைசோரவிடாமல் நாமும் கொஞ்சம் உடன் முயற்சியெடுத்துக்கொண்டு நமது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டியது. சமயாசமயம் பார்த்து படிப்பின் மாட்சிமையையும், அலாதீனுக்குக் கிடைத்த அற்புத தீபஸ்தம்பத்தைப்போல நமது குலத்திற்கும் ஆத்தும விஷயமாயும் சரீர விஷயமாயும் அது செய்யக்கூடிய பெரும் நன்மைகளையும் விவரித்துக் காட்டவேண்டியது. படிக்கும் மாணாக்கர்களுக்கு உற்சாகத்தை யூட்டித் தைரியத்தைப் பிறப்பிக்க வேண்டியது.



அநுகூல மிருக்கும் பட்சத்தில், ஒவ்வொரு ஊரிலும் எத்தனை பிள்ளைகள் படிக்கிறார்களோ அத்தனை பிள்ளைகளுடைய தகப்பன்மார் ஒன்று கூடி, தங்கள் தங்கள் பிள்ளைகளுடைய படிப்பின் விருத்தி, அல்லது விருத்தியின்மை, அதற்குண்டான பரிகாரம் முதலிய விஷயங்களைப்பற்றி வருஷத்திற் கொருமுறையோ அல்லது இருமுறையோ பேசினால் அநந்தம் பயனுண்டாகும்.

ஆனால் எவ்வித கல்வி கற்றாலும் வீட்டுப் பயிற்சி (Home training) இல்லாவிடில் ஒரு பயனுமில்லை. அப்படிப்பட்ட பயிற்சி யில்லாத பிள்ளைகள் நன்றாய்ப் படிக்கமாட்டார்கள். சீக்கிரத்தில் துஷ்டர் சகவாசத்தில் சிக்கிப் பாழாய்ப் போவார்கள். சில சமயங்களில் அகங்காரப் பிண்டங்களாய்த் தலை தெரியாமல் ஆடுவார்கள்.

நமது பிள்ளைகளுள் அநேகர் 10-12 பிராயம் வரைக்கும் மெத்த நல்ல பிள்ளைகளாய் விளங்குவார்கள். அவர்களைச் சரீரம் கொண்ட சம்மனசுக்கள் என்றாலும் பொய்யிராது. படிப்பிலும் சுறுசுறுப்பு உள்ளவர்களே. ஆனால் 10-12-வது பிராயந்தாண்டி முதலாம் இரண்டாம் பாரங்களுக்கு வந்தார்களோ பிடித்தது பேய். படிப்பின் மட்டில் விசனத்துக்குரிய அசட்டைத்தனம்; அதற்குள் மூக்குத்தூள், சிகரட், சில சமயம் இலாகிரி பானங்கள் கூட. படித்தும் பயனின்றி தாழ்ந்த பதவியிலேயே தங்கி விடுவார்கள்.

காரணம் யாதெனில், வீட்டுப் பயிற்சியில்லை குடும்பத்தில் பொது ஜெபதபம் கிடையாது. பெற்றோர் விசாரணையில்லை. துஷ்டர் சகவாசம் மெத்த. தாழ்ந்த பதவியிலிருந்து கஷ்டப்பட்டுப் படித்து முன்னுக்கு வந்து சுகசெல்வத்திலிருக்கும் பெற்றோர் சிலர் தாங்கள் கடைத்தேறி வந்த இராஜமார்க்கந்தான் தங்கள் பிள்ளைகளுக்கும் என்பதை மறந்து அவர்களுக்கு இல்லாத செல்லம் காட்டுவார்கள். அவர்களை மயிலைப்போல் சிங்காரித்து, பன்றியைப்போல் கொழுக்கவைத்து, மாட்டைப்போல் வளர்த்து, நாயைப் போல் திரிய வைப்பார்கள். அதனால் சற்றுவது முன்னுக்கு வந்த குடும்பம் ஒரு தலைமுறை கழியு முன்னமேயே வந்த வழி பார்த்துக் கொண்டு திரும்புகிறது.

ஒருவன் சரியான (Gentleman) பெருந்தகைமையுள்ள மனுஷன் ஆக, மூன்று தலை முறைகள் பிடிக்குமென ஆங்கிலேய சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். ஆனதால் குறைந்தது மூன்று தலைமுறை மட்டோவது ஒரு குடும்பம் எச்சரிக்கையுடன் நடந்தால், மூன்றும் தலைமுறையில் அக்குடும்பத்தின் பிதிர்வழிக்கு ஒருவித (Heredity) பூர்வீக வழிப்பாடுண்டாக, அக்குடும்பத்தார் கண்ணியமுள்ளவர்களாவார்கள்.

முற்காலத்தில் நம்முள் முன்னுக்கு வந்தவர்களுள் சிலர் வேத வழிப்பாடின்றி ஜாதிபாசாங்கு செய்து தங்கள் இனஜனங்களைத் திரஸ்கரித்து வந்தபடியால், நம்மவர்களுக்குக் கல்வி யாகாதென்று சிலர் அபிப்பிராயங்கொண்டார்கள்.

எப்போதும் இருட்டிலேயே யிருந்த ஒருவனைத் திடீரென சூரிய வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தால், அவன் கண்கள் கூச்சங் கொள்ளுவதைப் போல், ஆரம்பத்தில் சிலர் விவேக மின்றி நடந்துவந்தபோதிலும், நம்முள் கல்விப் பழக்கம் ஆக ஆக அப்படிப்பட்ட விபரீத நடத்தை அருமையாகிறது நல்ல காரியம்.

(தொடரும்.)

இந்திய கிறிஸ்துவன்.

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதங்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### ஓர் புதுமை.

இதனடியில் தோன்றும் அற்புத சரிதை இலங்கையில் பொது ஜன நன்மைக்காக ஊக்கத்தோடு உழைத்துவரும் (Ceylon Morning Leader) சிலோன் மார்னிங் லீடர் 20-7-16 பத்திரிகையில் பிரசுரம் பண்ணப்பட்டது:—

“சில வாரங்களுக்கு முன் இலங்கையின் தலை நகராகிய கொழும்பின் (Kotahena) கொட்டஞ்சன் பகுதியில் 15-பிராயமுடைய ஓர் இளம் பெண் (Peritonitis) பெரிட்டோனிடிஸ் எனும் வயிற்று நோவால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப் பட்டதால் தேர்ந்த டாக்டர்மார்களைக் கொண்டு சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்கள். மருந்தினால் இக்கொடிய நோய் குணப்படாதெனக் கண்டு பிணியாளியை உடனே (Operations) ஆப்பரேசன் பண்ணும்படியாய் (General Hospital) ஜெனரல் ஆஸ்பிற்றலுக்குக் கொண்டு வரக் கட்டளை பண்ணினார்கள். டாக்டர்களின் அபிப்பிராயப்படி செய்யுமுன்னரே (The Good Shepherd Convent of Kotahena) கொட்டஞ்சன் நல்ல ஆயன் கன்னியர் மடத்தில் பரிசுத்த லூர்து தாயின் தீர்த்தம்பெற்று, பிள்ளையின் பிரியப்படி நோவால் வாதைப்படும் நேரமெல்லாம் தீர்த்தத்தைப் பெற்றோர்கள் கொடுத்துவந்தார்கள். மறுநாள் உதயம் வியாதியஸ்தியை டாக்டர்மார்கள் பார்த்ததும் முந்திய நாளைவிட நல்ல குணத்திற்கு வந்திருக்கிற மர்மம் அறியாமல் பெரும் ஆச்சரியத்திற்கும் திகைப்புக்கும் உள்ளானார்கள். கடைசியாய் டாக்டர்மார்களின் கத்திப் பிரயோக ஆப்பரேசன் இல்லாமற் அர்ச். லூர்துமலை மாதாவின் தீர்த்தத்தாலும் டாக்டர்மார்களின் இரண்டொரு மருந்துப் போத்தல்களாலும் அவ்விளம்பெண் பூரண சுகம் பெற்றாள்.

இங்ஙனம்,

J. பிச்சை ரோட்றிகஸ்.

---

### பெங்களூர் அர்ச். அன்னம்மாள் மதுவிலக்குச் சபை, 9-ம் வருட மஹோத்ஸவக் கொண்டாட்டம்.

எற்கனவே விடுத்திருந்த அழைப்பு பத்திரிகையின்படி, செயின்ற் ஜான்ஸ்ஹில் அர்ச். சவேரியார் கோவில் வாசகக்கூடத்தின் கண் ஷை சபை தலைச்சபையோரும், அர்ச். காணிக்கை மாதா கோவில், அர்ச். சூசையப்பர் கோவில் பரிசுத்த இருதய ஆண்டவர் கோவிலைச் சார்ந்த புது சிமோன் சேரி சத்துரு சங்கார அர்ச். அந்தோனியார் பஜனை, சூளை அர்ச். ஆரோக்கிய மாதா பஜனையைச் சார்ந்த கிளைச் சபைகளும், அர்ச். செல்வ நாயகி அன்னை திருவடி பக்த பஜனை, அர்ச். சந்தியாகப்பர் பஜனை ஹெப்பால் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயன்ஸ் கிளைச் சபை மெம்பர்களும் சென்ற ஜூலை௴ 30-ம் வ ஆதிவார முதயம் 6½ மணிக்கு வந்தொருங்கு சேர அங்கிருந்து சபை விருதுடனும் மேற்படி பஜனை கொடிகள், சங்கீத வாத்ய கோஷத்துடனும் சுற்றுப் பிரகாரமாய் கோவிலுக்குட் செல்லவே, பாடல் பூசை யாரம்பிக்கப்பட்டு சபையோ ரனைவரும் கூட்டமாக சற்பிரசாத முட்கொண்டனர். சபை அக்ராஸனரும் விசாரணை சிரேஷ்ட குருவுமாகிய சங். T. B. சர்வாங்கோன் குரு ஸ்வாமியவர்கள் குடிப்பழக்கத்தா லுண்டாகும் பெருங் கேடு பாடுகளைக் குறித்து கல்லுங் கரைந்துருகுமாறு தெள்ளிய தமிழில் தேனமிர்தப் பிரசங்கமாரி பொழிந்தார். சீர்வாத மருள, அங்கிருந்து சபையோ ரனைவரும் அணிவகுத்து மீண்டும் வாசகக்கூட மணுக, அங்கு சிற்றுண்டி உபசரிப்பு நடந்த பின்னர், அக்கிராஸனர் சர்வாங்கோன் குருஸ்வாமிகளும், சங். பிகோ ஸ்வாமிகளும், சங். பின்டோ சுவாமிகளும் தங்களுக்குக் குறித்த ஆசனத்தமர, பரிசுத்தபாப்பாண்டவர் வாழ்த்துப் பாடப்பட்டு, குருமார்களுக்குப் பூமாலை சூட்டப்பட்டது. உடனே சபை பொது காரிய நிர்வாகரும் மைசூர் துரைத்தன சீப் அக்கவுண்டண்ட்டு மாகிய கனம் K. ஜோஸேப்பு பிள்ளை யவர்கள் 9-ம் வருட ரிப்போர்ட் வாசித்தனர். புரோமோட்டர்களாகிய கனம் M. பாபு பிள்ளை, அந்தோனி அய்யாவு, அந்தோனி தாஸ், ஜான் லாசர் இவர்கள் சபை விருத்தியை நாடி, எடுத்த பெரும் பிரயாசையி னறிகுறியாக வெண் பொற்பதக்கங்கள் அக்ராஸன ரவர்களாற் மார்பிலணியப் பெற்றார்கள். அதன்பின் கிளைச் சபை கார்ய நிர்வாகரும், பொது பொக்கிஷாதிபருமாகிய கனம் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்களா லியற்றப்பட்டு, ஷை சபையோராலும், கனம் சி. அ. அப்பாதுரை பிள்ளை, கரக்பூர் அர்ச். அந்தோனியார் திருவடி பக்த பஜனை சபையோர் பொருளுதவியால் அச்சு வாஹன மேற்றிய அர்ச். அன்னம்மாள் மதுவிலக்குச் சபை கும்மி சிந்து என்னும் மகுடம் புனைந்த சிறு சுவடியின் நூன்முகம் அதனுக்கியோனால் வாசிக்கப்பட்டது. பிறகு சபை புரோமோட்டர்களு ளொருவராகிய கனம் S. தங்கப்பிரகாசம் பிள்ளை, குடியினால் விளையுங் கேடு, என்னு விஷயத்தை தாட்டாந்த திருட்டாந்தங்களுடன் சாதுர்ய மாதுர்யமாக உபந்யாவித்தனர். உடனே சாராயம் திராம் 3 அணு என்று தலைப்பிட் டச்சிட்டிருந்த துண்டு பத்திரம் வாசிக்கப்பட்டது. சத்தியம் புதுப்பித்தானவுடன் சபை அக்ராஸன ரவர்கள் வாசித்த ரிப்போர்ட்டை யநுசரித்து சபையாருக்கும் ஆங்கு கூடியிருந்த எனைய கனவான்களுக்கும் புத்திபோதனையாகவும், சபையில் சேர்ந்து பிரமாணிக்கந் தவறாது நடப்பவர்கள் அடையும் அளவிலா நன்மைகளையும் பசுமரத்தாணிபோல் பதிரங்கமாக வெடுத்துக் கூறி மிக்கப் பெருமையுரிமையாகப் பேசியபின் அர்ச். அன்னம்மாள் பிரார்த்தனை சொல்லப்பட்டது. சபை புரோமோட்டர்கள் 40 பேர்களுக்கு மாலை சூட்டப்பட்டு, குடிப்பழக்கத்தால் குடும்பங்கள் அநுபவிக்கும் கொடிய துன்பங்களை யெடுத்துக்காட்டும் சிறு நாடகமொன்று சபை சிறுவர்களால் நடத்தப்பட்டு, இராஜ வாழ்த்துலுடனும் கரகோஷ ஆரவாரத்துடனும் சபை திருவிழா முடிவுபெற்றது. இந்நல்ல சபை வளர்பிறைபோல் வளர்ந்து செழித்து, அநேக குடும்பங்கள் சமாதானமாய் ஒற்றுமையுடன் சுக ஜீவனம் செய்து வருவது செவியாறக் கேட்கத் தீரா மகிழ்ச்சியும் சபைக்குப் பெரும் புகழ்ச்சியுமென்பதற்கென்ன தடை.

புரோமோட்டர்களு ளொருவர்.

---

### காட்டுக்கோவில் 400-ம் ௵ ஜுபிலி.

சங். பத்திராதிபரே,

சென்னையைச் சேர்ந்த மைலாப்பூர் காட்டுக்கோவிலென வழங்கும் அர்ச். ஞானப்பிரகாசி மாதா ஆலயத்தின் 400-ம் ௵ ஜுபிலி கொண்டாட்ட சிறப்பைப்பற்றி யான் எழுதும் சில வரிகளை உமது அரிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்குமாறு உம்மைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அர்ச். பிரகாசி மாதாவின் ஆலயமாகிய இக்காட்டுக்கோவில் போர்த்துகல் தேசத்திருந்து வந்த அர்ச். பிரான்சிஸ்கு சபை குருக்களால் 1516-ம் வருஷத்தில் கட்டப்பட்டது. பூமியின் மட்டத்துக்கு மேலாக உயர்ந்திருக்கும் ஒரு பீட பூமியில் கட்டப்பட்டிருக்கும் இக் கோவில் பார்ப்பவர்களுக்கு ஒரு சிறு குன்றின்மேல் கட்டப்பட்டிருப்பதாகத் தோன்றும். இக்கோவில் கட்டப்பட்டு இப்போது 400 வருஷங்களாகிறபடியாலும், இக்கோவிலே தென்னிந்தியாவில் முதன் முதல் கட்டப்பட்டஓர் புராதனக் கோவிலான படியாலும்இதன் 400-ம் வருட ஜுபிலி கொண்டாடப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இக்கோவிலின் உற்சவ நாளன்றே இந்த ஜுபிலி மகோற்சவம் கொண்டாடப்பட்டபடியினாலும், இந்தத் தருணத்திலேயே சரியாய் வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணியாரும் விசாரணைசெய்ய இக்கோவிலுக்கு வந்தபடியாலும், இம்மூன்று சம்பவங்களும் ஒன்றுக் கொன்று துணையாயிருந்து ஜுபிலி கொண்டாட்டத்தை மிக்கச் சிறப்பித்ததென்று சொல்லத் தேவையில்லை.

ஜூலை௴ 27௳ மாலை 6-மணிக்கு மயிலையிலுள்ள சங். குருப்பிரசாதிகளும் குருமடத்து மாணவர்களும் பங்கு கிறீஸ்துவர்களும் ஒருங்கே வந்து கூடியிருக்க, மயிலை ஆர்பனேஜ் பாண்டு வாத்தியம் முழங்க, வைகர் ஜெனரல் Right Rev. Mgr. J. லோபஸ் சுவாமிகள் கொடியேற்றஞ் செய்தார். பிறகு, பிரார்த்தனை சங்கீதங்கள் பாடப்பட்டு தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. இது போலவே மற்ற ஒன்பது நாட்களிலும் காலையில் பூசை, பிரார்த்தனை தேவ சற்பிரசாத ஆசீர்வாத முதலியவை நடந்தேறின.

ஆகஸ்டு௴ 5-ம் தேதி மாலை 6-மணிக்கு மயிலை மேற்றிராணி ஆண்டவரை வரவேற்குமாறு கோவிலுக்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் இட்டிருந்த சிங்காரப் பந்தலின் கீழ் குருசுவாமிமார்களும், கிறீஸ்துவர்களும் ஆஜராய் வந்து காத்திருக்க 6½ மணிக்கு மேற்றிராணி ஆண்ட

வர் மோட்டோர்கார் என்னும் இரதத்தில் வந்திறங்கி எல்லோராலும் வரவேற்கப்பட்டு அவருக்கென அமைக்கப்பட்டிருந்த ஆசனத்திலமரவே, சபையோரால் ஆயத்தஞ் செய்யப்பட்டிருந்த புஷ்ப மாலையை போர்மன் Mr. C. V. தோமாஸ் பிள்ளை அவருக்குச் சாற்றினர். ரிட்டயர்டு போர்மன் Mr. A. A. எபிராம் அவருக்கு ஓர் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து முடித்தார். மேற்றிராணி ஆண்டவர் கிறீஸ்துவர்கள் வெளிச்சத்தின் மக்களென்றும் புறமதஸ்தரனைவரும் அந்தகாரத்தில் திரிகிறவர்களென்றும் சமயோசிதமான புத்திமதிகளைக் கூறி பதிலுரைத்தார். இதன் பிறகு கோவிலில் வெகு ஆரவாரத்தோடு மேற்றிராணியாரவர்களும் குருக்களும் கிறீஸ்துவர்களும் பிரவேசித்தபோது, அது பட்டுப் பட்டாவளிகளாலும் வகை வகையான துவசங்களாலும் எரிகிற எண்ணிறந்த மெழுகு வர்த்திகளாலும் பகலை விட அதிக சோதிப்பிரகாசமாய்த் துலங்கினது. மேற்றிராணி ஆண்டவர் தமக்கென்று அமைக்கப்பட்டிருந்த உயர்ந்தவோராசனத்தி லமர்ந்திருந்து (Vespers) வெஸ்பர்ஸ் என்னும் மாலை ஆராதனை பிரார்த்தனை பாடி முடிந்ததும் தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது.

திருநாளாகிற ஆகஸ்டுமாதம் ஆறுந் திகதி ஞாயிறன்று காலை பாடற் பூசை டீக்கன் சப் டீக்கன்மாரோடு மேற்றிராணியா ரவர்களால் வெகு ஆடம்பரமாய்ச் செய்யப்பட்டது. அப்பூசையில் பல நூற்றுக்கணக்கான கிறிஸ்துவர்கள் திவ்ய சற்பிரசாதம் உட்கொண்டார்கள். பூசை முடிந்தபின் மேற்றிராணியாரவர்களால் அர்ச். பாப்பானவரின் ஆசீர்வாதம் அளிக்கப்பட்டது. M. V. G. பாண்டுவாத்திய முழக்கமானது எல்லோரையும் அக்களிக்கச் செய்தது.

மைலாப்பூர் மேற்றிராசனக் கோவிலாகிய அர்ச். தோமையார் கோவிலிலிருந்து இக்கோவிலுக்கு ஆரவாரச் சிறப்பாய்ப் பவனி செல்ல செய்திருந்த எற்பாட்டின்படி, மைலாப்பூர், சென்னை முதலான விடங்களிலிருந்தும் இன்னும் வெளியூர்களிலிருந்தும் அநேக குருக்களும், கன்னியர் சன்னியாசிகளும், ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களும் ஷை கோவிலில் மாலை 5½ மணிக்கு வந்து ஒருங்கு கூடினார்கள். பிறகு இவர்களெல்லோரும் மயிலை மேற்றிராணியாருடன் ஷை ஆலயத்திலுள்ள அர்ச். தோமையார் கல்லறையைச் சந்தித்து செபஞ் செய்தானபின், பவனி போகப் புறப்பட்டார்கள். முன் அணியில் அடையாறு ஆர்பனேஜ் பாண்டு வெகு மனரம்மியமாக வாத்தியம் வாசித்துக்கொண்டு செல்ல. கன்னியர் தங்கள் மடத்துப்பிள்ளைகளுடன் சிலுவைக் கொடியும் ஜெபமாலையுங் கையிலேந்தி ஜெபித்துக்கொண்டு போக இவர்களைத் தொடர்ந்து சன்னியாசிகளும், குருப் பட்டத்துக்குப் படிக்கும் மாணவர்களும், குருப்பிரசாதிகளும் செல்ல மேற்றிராணியாரவர்கள் சரிகைப் பட்டாடைக ளணிந்து, சிரசில் கிரீடந் தரித்து, இந்து தேச அப்போஸ்தலராகிய அர்ச். தோமையாரின் அர்ச். பண்டம் அடங்கிய பொற்சுடர் பாத்திரத்தைத் தமது கரங்களிலேந்திப் போக இவரைத்திரண்ட ஜனக்கும்பல் புடை சூழ்ந்து சென்றது. இச் சுற்றுப்பிரகாரஞ் செல்லும் சமயத்தில் அவ்வழியே ஜனங்களும், மோர்ட்டோர் கார், டிராம்கார் முதலிய எல்லா வண்டிகளும் போகாமல் தடுக்கப்பட்டிருந்தது மன்றி, சந்தடிச்சச்சரவு ஒன்றும் நடவாமலிருக்க போலீஸ் காபந்தும் செய்யப்பட்டிருந்தது.

காட்டுக்கோவிலிலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரம் வரையில் நமது ஆண்டவரையும் அர்ச். தேவமாதாவையும் புகழ்ந்து கூறிய சங்கீத வாக்கியங்கள் பலவித சித்திர எழுத்துக்களால் எழுதி பத்தடிக் கொன்றாக நீண்ட கம்பங்களில் கட்டப்பட்டிருந்தன. அங்கங்கே துவசங்களும், கொடிகளும், விருதுகளும், பறந்துகொண்டிருக்க, புஷ்ப தோரணங்களும் மகர தோரணங்களும் கட்டப்பட்டிருந்தது மல்லாமல், மின்சார வெளிச்சத்தாலும், மத்தாப்பு வெளிச்சத்தாலும், பல நிறமான சீனு விளக்குகளாலும் உண்டான பிரகாசமானது பகலோ இரவோவென யாவரையும் மருளச் செய்தது. மகத்துவ காம்பீரியத்தோடு சென்ற பவனி காட்டுக் கோவில் முடுகி வரவே, அக்கோவில் மணிகள் வெகு அக்களிப்போடு தொனிக்க ஆரம்பித்தன. மேற்றிராணியாரவர்களும் அவருடைய பரிவாரமும் கோவிலை நெருங்கி வருகையில் புகைப்படம் பிடிக்கப்பட்டது. பிறகு மேற்றிராணியார் கோவில் முகப்பண்டையிலிருந்த சிங்காரப் பந்தலின் கண் வந்துசேர்ந்து, அங்கமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

இந்த ஜூபிலி சுற்றுப்பிரகார காட்சி எவ்விதமாக இருந்ததெனில், அர்ச். அருளப்பர் காட்சி



ஆகமத்தில் எழுதியிருப்பதுபோல் "ஆண்டவர் தமது மகிமையில் வரும்போது எக்காளந் தொனிக்கக் கன்னியாஸ்திரீகளும் சந்நியாசிகளும் வெண்மையான உடை தரித்தவர்களாய்த் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு பிரதான தூதரோடும் நவ விலாச சபை சம்மனசுக்களோடும் சென்ற" காட்சியையொத்ததாயிருந்தது. சத்திய கத்தோலிக்கு வேதத்தின் மகிமைப் பிரதாபத்தையும், அதின் சீர் சிறப்பு ஒழுங்கையும் கொஞ்சமும் அறியாமல் அதைப் பழித்து புறங்கூறித் திரிந்த புற மதஸ்தரும் புரோடெஸ்டாண்டாரும் கத்தோலிக்கு வேதமே சத்தியவேதமெனத் தேறினர் பலர். அச்சத்திய வேதத்துக்குப் புறத்திப் பட்டபேர்களாய்த் திரிகிறோமேயென பச்சாத்தாபப் பட்டார் வேறு சிலர்.

ஜூபிலி உபந்நியாசத்துக்கென்று குறிக்கப்பட்டிருந்த சங். கார்டின் சுவாமியார் அவர்கள், B.A., ஆங்கிலேய பாஷையிலும். நல்லாயனின் பத்திராதிபராகிய சங். ஜான் சுவாமியாரவர்கள் தமிழிலும் இக்கோவில் இவ்விடத்தில் அமைந்த அற்புத வரலாற்றையும், இக்கோவிலில் சென்ற 400 வருடங்களாய் அர்ச். ஞானப்பிரகாசி மாதாவின் மூலமாய் சர்வேசுரன் எண்ணிறந்த உபகார சகாயங்களை நமக்கும் நம்முடைய முன்னோருக்குஞ் செய்தருளினாரென்றும், இவைகளுக்காக நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும் தெளிவாய்ச் சித்திர அலங்காரமாய்த் தெவிட்டாத மதுரமாய்ப் பிரசங்கித்தார்கள். பின்னர் ஆரவாரச் சிறப்புடன் தேதேய மென்னும் நன்றியறிந்த தோத்திரகீதம் பாடி திவ்யநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது.

மேலும் ஜூபிலி அன்று பகல் சங். மோதாவாஸ் சுவாமிகள் 400-ஏழைகளுக்கு அன்னம் அளித்தார்.

அன்று இரவு Madras Central Station Messrs. Spencer & Co., Refreshment Room Manager, Mr. G. டேவிட் பிள்ளை, அவர்கள் மேற்றிராணி ஆண்டவருக்கும் ஜூபிலி கொண்டாட்டத்திற்காக வந்திருந்த சங்கை இராஜரிஷி சுமாமிமார்களுக்கும் விருந்தளித்தார்.

ஜூபிலி மஹோற்சவ விசேஷமாக கோவிலின் உட்புறத்திலும், காம்பவுண்டிலுமுள்ள எல்லா ஜோடிப்புகளும் சந்தோம் கிளப் (St. Thomé Club) மெம்பர்ஸ்களாலும் காட்டுக் கோவில் (Choirs) பாட்டு மெம்பர்ஸ்களாலும் ஊக்கமாகவும் உற்சாகமாகவும் செய்யப்பட்டன.

400வருஷங்களுக்கு முன் போர்த்துகல் தேசத்து பிரான்சிஸ்கு சபைக் குருவானவர் ஒருவரால் கட்டப்பட்ட இக்கோவிலின் இந்த ஜூபிலி மகோற்சவமானது தற்போது இக்கோவிலுக்கு பங்கு சுவாமியாராயிருக்கும் சங். M. மோதாவாஸ் சுவாமிகளால் சர்வேசுரனுக்குத் தோத்திரமாகவும் அர்ச். ஞானப்பிரகாசி மாதாவுக்கு மகிமையாகவும், இவ்வளவு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டதானது ஷை சுவாமிகளுக்கு சர்வேசுரன் மட்டிலும் திருச்சபையின் மட்டிலுமுள்ள பக்தி வைராக்கியத்தைக் காட்டுகிறதென்பதற் கையமில்லை. இந்த நல்ல குருவானவருக்கு சர்வேசுரன் இவ்வுலகத்தில் நீடிய ஆயுளையும், பூரண சுகத்தையும், பெலனையும், பக்தியையும், ஞானத்தையும் தந்து, கடைசியாக மோட்சலோகத்தில் வானோர்களின் கூட்டத்திலே இவருக்குப் பொற்கிரீடத்தையுந் தந்தருளுவாராக.

C. V. தோமாஸ் பிள்ளை.

சென்னை. தேனாம்பேட்டை 19—8—16. } *Foreman*

["பச்சாத்தாபமும் இலங்கைப் பரதரும்." "தூத்துக்குடி ஜனசங்கமும் ஜாதித்தலைமையும்" என்ற தலைப்பேர்கொண்ட இக்கடிதங்கள் அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.—ப. ர்.]

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

சேசுவின் திரேசம்மாள் —இப்பரிசுத்த கன்னியாஸ்திரி தமது மரணத்தின்போது மொழிந்த வசனங்கள்: "பூவுலகத்துக்கு நன்மைசெய்யும்படிக்குத்தான் எனது பரலோகத்திற்குச் செல்ல ஆசிக்கிறேன். எனது மரணத்தின் பின்பு ரோசாப் புஷ்ப மாரியை வருஷித்து வருவேன்."

காகித கட்டிடம்—பிராஞ்சு தேசத்தின் தலை நகராகிய பரீஸ் பட்டணத்தில் ஒரு பிரபு நாலாயிரம் பவுன் செலவிட்டுக் காகிதத்தினால் ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறார். அதில் காகிதத்தால் செய்தவைகள் தவிர வேறு விதமான சாமான்கள் இல்லையாம்.

**ஓர் பெரிய முதலை.**—பெங்காளத்தில் ஒரு ஹெட் கான்ஸ்டேபில் சில தினங்களுக்குமுந்தி முதலை ஒன்றைச் சுட்டு வீழ்த்தினான். அதன் நீளம் 18 அடியும் சுற்றளவு 10½ அடியுமாம். அதைக் கரையில் கொண்டுவந்து சேர்த்து அதன் வயிற்றைக் கீறி பார்த்தபோது அதில் மனிதருடைய மண்டை யோடுகளும், அநேக எலும்புகளும், ஸ்திரீகள் கைகளில் போட்டுக்கொள்ளும் தங்க வளையல், காப்பு, கொலுசு முதலிய ஆபரணங்களும் இருப்பதைக்கண்டு பயந்து பிரமித்தார்களாம்.

**மதுவிலக்குக் கும்மி.**—இப்பெயர் கொண்ட துண்டு புத்தகமொன்று பெங்களூர் மதுவிலக்குச் சபை காரியதரிசியிடமிருந்து நம்முடைய பார்வைக்கு எட்டினது. இதில் மதுவினா லுண்டாகும் கேடுபாடுகளெல்லாம் சென் மேரிஸ் ஸ்கூல் தலைமை யுபாத்தியாராகிய C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்களால் மிக்க இனிமையாய்ப் பாடப்பட்டிருக்கின்றன. இஃது ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய புத்தகம். விலை அணா 2. வேண்டியவர்கள் மேற்படி ஞானப்பிரகாசம் பிள்ளை அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**சட்ட நிரூபண சபையில் நியமனம்.**—எமது மிகவும் வந்திக்கத்தக்க சென்னை அதிமேற்றிராணியாரை நமது காருண்ய இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் சென்னை சட்ட நிரூபண சபையின் ஓர் மெம்பராக நியமனம் செய்திருக்கிறார்களென்று அறிந்து சந்தோஷிக்கிறோம். கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களின் முன்னேற்றத்துக்கான காரியங்களை சட்ட நிரூபண சபையில் எடுத்துப் பேசி நம்முடைய இலௌகிக நன்மைகளை மாத்திரமல்ல, இன்னும் நம்முடைய வைதீக நன்மைகளையும் கவர்ன்மெண்டார் கவனிக்குமாறு செய்ய ஓர் அதிமேற்றிராணியார் தெரிந்துகொள்ளப்பட்டதானது சென்னை அதிமேற்றிராசன கிறிஸ்துவர்களுக்கு மாத்திரமல்ல, இந்தியாவிலுள்ள எல்லா கிறிஸ்துவர்களுக்குமே சந்துஷ்டியை உண்டுபண்ணுமென்பதற்குச் சந்தேகமில்லை.

**புது நன்மை.**—ரோமாபுரி பட்டணத்தில் நூறு பிள்ளைகள் சென்ற ஜூன்மீ 21௳ அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாளன்று புது நன்மை வாங்கினபின், அர்ச். பாப்பவர்களைச் சந்தித்து அவரிடத்தில் ஆசீர்வாதம் பெறப்போனார்கள். பரிசுத்த பாப்பவர்கள் அப் பிள்ளைகளுக்கு பேட்டி கொடுத்து, புது நன்மை வாங்கின அந்தப் பிள்ளைகள் தம்மைச் சூழ்ந்திருப்பது தமக்கு மெத்த பாக்கியமென்றும், அதிலும் விசேஷமாய்த் தாம் ஐம்பது வருடங்களுக்கு முன் புது நன்மை வாங்கின அதே திருநாளில் அவர்களும் புது நன்மை வாங்கினதினால் தாம் மிகவும் சந்துஷ்டி கொள்ளுகிறதாகவுஞ் சொன்னது மல்லாமல், தமக்கு முன்னிருந்த பரிசுத்த பாப்பவர்களின் விசேஷ ஞானத்தின்படி கொடுத்த அனுமதியினால் அப் பிள்ளைகளுக்கு இவ்வளவு சிறு பிராயத்தில் புது நன்மை வாங்கக்கிடைத்த சுதந்தரம் தமது காலத்தில் கிடைக்கவில்லையென்றும், அதனால் அப் பிள்ளைகள் தம்மிலும் பாக்கியவான்களென்றும் அவர்களை வாழ்த்தினார்கள். அல்லாமலும் அவர்கள் புது நன்மை வாங்கின நாளில் அவர்கள் ஒவ்வொருவரும் செய்துகொண்ட பிரதிக்கினைகளை மீண்டு மீண்டும் புதுப்பித்து, அடிக்கடி சற்பிரசாதத்தைப் பெறவேண்டுமென்றும் அவர்களுக்குப் புத்தி கூறி அவர்களெல்லோரையும் ஆசீர்வதித்தனுப்பினார்கள்.

**என்னை நீதிசட்டத்தின் விந்தை.**—

ஓர் குற்றவாளியை நீதிபதி நோக்கி: எழுந்து நில், என்றான்.

குற்றவாளி.—தர்ம துரைகளே தேச சட்டத்தினால் எனக்குக் கிடைத்திருக்கிற சுயாதீனத்தை யனுசரித்து உட்கார்ந்திருக்கிறேன்.

நீதி.—அதெப்படி?

குற்ற.—ஒருவனும் தன்னைத்தானே குற்றவாளியாக்கிக் கொள்ளக்கூடாது; நான் எழுந்து நின்றால் என்னை நானே குற்றவாளியாக்கிக் கொள்ளுகிறதாகும்.

நீதி.—சட்டத்தின் கருத்தைச் சரியாய்க் கண்டுபிடித்தாய்; நீ யுட்கார்ந்திருக்கலாம். நீ யிந்த மனிதனுடைய கால் சட்டையைத் திருடினதாக குற்றஞ் சாட்டப்



பட்டிருக்கிறாய். ஆனால் அதை ருசுப்பிக்க ஒரு சாட்சியையுங் காணோம்.

குற்ற.—ஆமா, தர்ம துரைகளே, ஒருவரும் இல்லை.

நீதி.—ஆனபடியால் உன்னை நாம் விடுதலை செய்துவிட்டோம்.

குற்ற.—அனேக வந்தனம், தர்ம துரைகளே.

நீதி.—நல்லது அதிருக்கட்டும், நீ யேன் எழுந்து நிற்க மனதில்லாம லிருந்தாய்?

குற்ற.—நான் எழுந்து நின்றால், நான் போட்டிருக்கிற கால் சட்டை தன்னுடையது என்று சொந்தக்காரனுக்குத் தெரிந்துபோகுமென்றே எழுந்து நிற்க மனமில்லாதிருந்தேன், தர்ம துரைகளே.

**இது ரோமன் கத்தோலிக்குக் கோவிலா?**—இப்போது கத்தோலிக் குருவானவராயிருக்கும் சங். பிலிப்பு கிரெஷாம் ப்ரவுன் சுவாமியாரவர்கள்முன் தாம் புரோட்டெஸ்டாண்டு பாதிரியாராயிருந்த காலத்தில் தமக்கு நேர்ந்த ஓர் விசேஷ சம்பவத்தைப் பின்வருமாறு ஆவெ மரியாவென்ற பத்திரிகையின் வாயிலாய்த் தெரிவித்திருக்கிறார். அதென்னவெனில், பொலோஞா பட்டண வாசிகளான சில செம்படவர் கடலில் அடித்த புயலினால் சேதப்பட்ட தங்கள் படகைச் செப்பனிடும்படி எங்கள் துறைமுகத்தில் வந்து தங்கியிருந்து, ஒருநாள் எங்கள் கோவிலுக்கு வந்து அதில் நடந்த தேவாராதனையைக் கண்டார்கள். அவர்கள் கோவிலை நாலாபக்கத்திலும் சுற்றிப்பார்த்து கலக்கங் கொண்டவர்களைப்போல் காணப்பட்டார்கள். தீர்த்த தொட்டியும் தேவமாதாவின் சுரூபமும் அக்கோவிலில் இல்லாமற்போனதே அவர்கள் அதிக கலக்கங்கொள்ள காரணமாயிருந்தது. அப்போது நான் எங்கள் சபை மெய்யான கத்தோலிக்கு சபைதானென்று அவர்களுக்குத் தெளிவித்து அவர்களுடைய கலக்கத்தை நீக்கும்படியாக நாங்கள் கோவிலில் அணிந்துகொள்ளும் வஸ்திரங்களை அவர்களுக்குக் காட்டினேன். அவைகளை யெல்லாம் பார்த்துவிட்டு அவர்கள் வெளியே போகும்போது அவர்களுக்குள் ஒருவன் என்னைப்பார்த்துப் பின் கண்டவாறு எனக்கு உபதேசஞ் செய்யும்படி "இது இங்கிலிஷ் கத்தோலிக்குக்கோவிலா?" என்று கேட்டான். ஆம், என்று நான் பதிலுரைத்தேன். "இது அப்போஸ்தலிக்குச் சபை கோவிலா?" என்று மீளவும்கேட்டதற்குநான் அதற்கும் ஆமென்று சொன்னது மல்லாமல், இத்தோடே அவன் திருப்தியடைந்து வேறே கேள்வி கேட்கமாட்டானென்று நினைத்திருக்க, பின்னுமவன் "இது ரோமன் கத்தோலிக்குக் கோவிலா"? என்று என்னைக் கேட்டான். நான் இல்லை என்றேன். அப்போதவன் தன்னோடு வந்தவர்களைப் பார்த்துத் தன் தோளை யசைத்துக்கொண்டு புன்சிரிப்போடு "இது பிரிவினைக்காரர் கோவில்" என்றுரைத்தான். இவர்கள் அதிக கல்வி கற்காத சாதாரண ஜனங்களாயிருந்தபோதிலும் எங்களுடைய சபைக்கும் சத்திய திருச்சபைக்குமுள்ள பேதாபேதத்தை திருச்சபையின் வேத சாஸ்திரிகளைப்போலே வெகு சுருக்கத்தில் அடக்கிப் போட்டார்களல்லவா?

**இன்னோர் தார்சியுஸ்.**—ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஆல்ப்ஸ்மலைப் பிராந்தியத்தில் டோர்செனோ என்ற ஓர் ஊருண்டு. இதில் சில தினங்களுக்குமுன் இராவேளையில் திடும்பிரவேசமாய்ச் சில போர்வீரர் நுழைந்து அவ்வூர் கோவிலிலிருந்த பங்கு சுவாமியாரையும் அவருக்கு உதவியாகவிருந்த சுவாமியாரையும் பிடித்துக்கொண்டுபோய் விட்டார்கள். இதை யறிந்த அவ்வூர் ஜனங்கள் கோவிலில் ஸ்தாபித்திருந்த தேவநற்கருணை விஷயத்தைப்பற்றிக் கவலை கொண்டவர்களானார்கள். பற்றாக்குறைக்கு அவ்வூர் வாசிகளனைவரும் அவ்வூரைக் காலி செய்துவிட்டு ஓடிப்போகும்படியாய்க் கண்டிப்பான உத்திரவும் வந்ததினால் தேவநற்கருணையைப் பற்றிய அவர்களுடைய கவலை பின்னும் அதிகரித்தது. ஆகையால் எல்லோருங்கூடி தீர ஆலோசித்துத் தாங்கள் ஊரைவிட்டு வெளியேறுமுன் தாங்களே தேவநற்கருணையையெல்லாம் உட்கொண்டுவிட்டுப் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள். பூர்வீகக் கிறிஸ்துவர்கள் வேத கலாபனை காலத்தில் சுரங்கங்களில் ஒளிந்திருந்த

போது தார்சியுஸ் என்னும் ஒரு சிறுவன் அவர்களுக்கு நன்மை கொடுக்க அதை எப்படிக் கொண்டுபோனனே, அப்படியே இப்போதும் ஷை ஜனங்கள் தங்களுக்கு நன்மை கொடுக்க ஆறுவயதுள்ள ஒரு பையனை தயார் செய்து அடுத்த ஞாயிறன்று எல்லோரும் கோவிலில் வந்துகூடி வெகு பக்தியுருக்கத்தோடு ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். கோவிலடங்கலும் யாதொரு சத்தஞ் சந்தடியில்லாமல் வெகு அமைதியாயிருந்தது. சம்மனசை யொத்த அச்சிறுவன் வெண்மையான வஸ்திரத்தை யணிந்தவனாய்ப் பீடத்தை நோக்கிவரக் கண்டார்கள். எல்லோருடைய கண்களும் இமைகொட்டாமல் அவனையே பார்த்த வண்ணமா யிருந்தன. அவன் பீடத்தின் முன் வந்து நின்றதும் ஒருவர் பாவசங்கீர்த்தன மந்திரத்தை உரக்கச்சொல்லத் தொடங்கவே, கோவிலிலிருந்த மற்றனைவரும் மெத்த உருக்கத்தோடும், சிலர் மெய்யாகவே அழுகையோடும் மேற்படி ஜெபத்தைச் சொன்னார்கள். பின் பையன் பீடத்தின் படிமேலேறி தேவநற்கருணைப் பெட்டியைத் திறந்து, தேவநற்கருணைப் பாத்திரத்தை வெளியே யெடுத்து, நமதாண்டவரைக் கிராதியண்டை கொண்டுபோகவே, பத்தியுள்ள கிறீஸ்துவர்க ளனைவரும் மாசற்றவனின் சிறு கரங்களினின்று சற்பிரசாதத்தை மிகுந்த பக்தி வினயத்தோடு பெற்றுக்கொண்டார்கள். பாத்திரத்தில் தேவநற்கருணை அதிகமா யிருந்ததினால் தேவநற்கருணை முழுதுஞ் செலவாகிற பரியந்தம் தேவநற்கருணை வாங்கினவர்களுக்கே திரும்பத் திரும்பக் கொடுத்துச் செலவு செய்துவிட்டு பாத்திரத்தைப் பீடந்தண்டை கொண்டுபோய்ச் சுத்தி செய்தபின், தான் வந்ததுபோல் திரும்பிப்போய்விட்டான். இதைக் கண்ணுற்ற எல்லோரும் மனங்கசிந்து அழுதார்கள். இச் சம்பவத்தை அவ்விடத்து மேற்றிராணியார் மூலமாய்க் கேள்வியுற்ற நமது பரிசுத்த தந்தையாகிய பாப்பானவர் தமது காரியதரிசியைக் கொண்டு ஷை சிறுவனுக்குத் தமது அப்போஸ்தோலிக் ஆசீர்வாதத்தை யளித்ததுமல்லாமல், இச் சம்பவத்தின் ஞாபகார்த்தமாக அவனுக்கு நேர்த்தியான ஓர் அடையாளத்தையும் கொடுத்தனுப்பினர்.


## தேக சௌக்கியம்.

தேக சௌக்கியத்துக்கு நல்ல ஜீரணசக்தியே ஆதாரம். ஜீரண சக்திக் குறைவுள்ளவர்களை எப்பொழுதும் நோயாளிகளென்றே சொல்லவேண்டும். இவ்விதமான அஜீரண முறைப்பாடுள்ளவர்கள் இக்காலத்தில் நூற்றில் எண்பது பேரிருக்கலாம். விசேஷமாய் ஜனநெருக்கம், சுத்தமான காற்றின்மை, துர்க்கந்தம் இவைகள் உள்ள பட்டணங்களில் அனேகருக்கு இந்த நோயிருக்கலாம். இந்த அஜீரண ரோகமுண்டாவதற்கு வேறுபல காரணங்களுமுண்டு. மேலும், இந்த அஜீரண ரோகத்தில் ஆரம்பித்தே பற்பல உதர ரோகங்களும் உண்டாகின்றன. இப்படிப்பட்ட உதர ரோகங்கள் அனைத்தையும் வேரோடுகளைந்தெறியத் தக்க வல்ல ஆயுதம் வீரமாமுனிகள் செய்தருளிய சுகந்தரு மாத்திரையே. இந்த வீரமாமுனிவர் சுகந்தரு மாத்திரையானது பசிதீபனக்குறைவு, அடிக்கடி பேதியாதல், புளியேப்பம், அக்கினிமந்தம் முதலியவைகளை நீக்கி, தீபாக்கினியைக் கிரமப்படுத்தி, சுபாவ நிலைமைக்குக் கொண்டுவரும் ஓர் அற்புத சஞ்சீவி. அது மூல வாய்வு, மூலத்தில் வாய்வு தங்குவதால் உண்டாகும் இரைச்சல், இரத்தமும் சீதமும் விழுதல் முதலிய வாய்வினா லுண்டாகும் சகல ரோகங்களையும் போக்குவதில் ஒப்புயர்வற்றது.

யாவருக்கும் திடீரென உண்டாகக்கூடிய வயிற்றுவலி, அஜீர்ணம், வயிற்றுளைச்சல், வாந்திபேதி முதலிய கொடிய நோய்களைத் தக்ஷணமே ஒரே பொழுதில் கண்டித் தகற்றிவிடுந் தன்மை வாய்ந்தது. பாண்டு, சோகை, பலவீன முதலிய நோய்களையும், உடல்வீக்கம், தேகவெளுப்பு, ஈரல் வீக்கம், காய்ச்சல்கட்டி முதலிய நோய்களையும் தப்பாதகற்றும் அருமருந்து. இம்மாத்திரையைச் சிலநாள் உட்கொண்டுவர அது இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, இரத்த விருத்திசெய்து ஜீர்ணசக்தியுடன், நல்ல பசியை உண்டுபண்ணி, இரத்தப்பழுது இரத்தக் குறைவினாலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியத்துக்குரிய விதமாய் அகற்றி, நரம்புகளுக்கு வலுவையும், தாதுபுஷ்டியையும், உடம்புக்குப் பலத்தையும், உற்சாகத்தையும், இரத்த புஷ்டியையும் கொடுக்கும்.

**வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை** வேண்டுவோர் பின்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை 100-மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூ 1—0—0

C. A. Silveira, Branch Office,
**27/4, Broadway, Madras.**

சி. ஏ. சில்வேயிரா, பிரான்சு ஆபீசு,
**27/4, பிராட்வே, மதராஸ்.**





# The Good Pastor

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகெளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.

புத்தகம் 14. | அக்டோபர் 1916. | இலக்கம் 10.

## THE ECCLESIASTICAL AUTHORITY.

## திருச்சபையின் ஞான இராசாங்கம்.

இப்பிரபஞ்சத்தில் உலக இராசாங்கம், ஞான இராசாங்கம் ஆகிய இருவித இராசாங்கங்களுண்டு. அந்தந்த தேசத்தையும் இராச்சியத்தையும் அரசாளும் அரசர்களுக்கும் சக்கரவர்த்திகளுக்கு முரியது உலக இராசாங்கம். ஞான இராசாங்கமோ, திருச்சபைக் குரியது. உலக இராசாங்கமானது உலகத்துக் கடுத்த விஷயங்களில் நம்பேரில் அதிகாரம் படைத்ததா யிருப்பதையிட்டு, நாம் அதற்குக் கீழ்ப்படிய கடமைப்பட்டிருக்கிறோம். நாம் இரட்சண்ணியமடையவும் மோட்ச கரை யேறவும் ஆசிப்போமானால், ஞான இராசாங்கமான திருச்சபைக்கும் கீழ்ப்படிந்து நடப்பது நமக்கு அத்தியாவசியம்.

திருச்சபை யாவதென்ன? அதோர் சங்கம் அல்லது கூட்டம். ஆனால் கட்டுப்பாடில்லாத, சட்ட திட்டங்களில்லாத ஜனங்களுடைய ஒரு கூட்டமென்று நாம் அதை எண்ணத்தகாது. அல்லது தலைமை, அதிகாரமில்லாத ஒரு பெரிய ஜனக்கும்பலென்றும் நாம் அதை நினைக்க வொண்ணாது. இவ்வுலக இராசாங்கங்களைப் போலவே, நம்முடைய ஆங்கிலேய அரசாங்கத்தைப்போலவே, இதுவும் தலைமையும், அதிகாரமும், சட்டங்களுமுள்ள ஓர் இராசாங்கமாகும். ஆகவே, இந்த இராசாங்கத்தில் அதிபதிகளுமுண்டு, பிரஜைகளுமுண்டு; அதிகாரஞ் செலுத்துகிறவர்களு முண்டு, கீழ்ப்படியவேண்டியவர்களுமுண்டு. இதில் முதன்மையான அதிகாரம் படைத்தவர் பரிசுத்த பாப்பானவரே. இவர் நம்முடைய ஞான விஷயங்களிலே, அதாவது விசுவாசத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் அடுத்த விஷயங்களிலேயும், திருச்சபையை ஆண்டு நடத்துவதிலேயும் சர்வாதிகாரமு முள்ளவர். இப்பேர்ப்பட்ட காரியங்களில் இவருடைய தீர்மானமே முடிவான தீர்மானம். இவருக்குப் பிறகு நமக்குள்ள ஞான அதிகாரிகள் மேற்றிராணிமார்கள். இவர்கள் அரச குமாரர்களைப்போல் தந்தமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இடங்களிலே, அதா

வது அந்தந்த மேற்றிராசனங்களிலே பாப்பானவரின் இராஜரீகத்துக்கடங்கி ஞானவதிகாரஞ் செலுத்திக்கொண்டு வருகிறவர்கள். இவர்களுக்குங் கீழ் குருக்கள். இவர்கள் தங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் பங்குகளிலுள்ள கிறிஸ்துவர்களின் மேல் ஞான அதிகார முடையவர்கள். இவ்விதமாக பாப்பானவரும், மேற்றிராணிமார்களும், குருக்களும் ஞான இராசாங்கஞ் செலுத்தும் அதிகாரிகளாகிறார்கள். இந்த ஞான அதிகாரிகளுடையவும் இவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் சகல கிறிஸ்துவர்களுடையவும் சங்கமே அல்லது கூட்டமே திருச்சபையாகும்.

இந்த ஞான இராசாங்கம் உலகத்திலிருந்தாலும், இதை ஆளுகிறவர்கள் மனிதர்களாயிருந்தாலும், இதற்குச் சொந்த சுதந்தரம், காணி பூமி, மானிய முதலிய பூஸ்திதிகளிருந்தாலும் இதோர் உலக இராசாங்கமல்ல. இதைப்பற்றியே நமது கர்த்தர் தம்மை நோக்கி "நீ ஓர் இராசாவா?" வென்று கேட்ட பிலாத்துக்கு, நம்முடைய இராச்சியம் இவ்வுலகத்திலில்லையென்று சொல்லாமல், அது இவ்வுலகத்துக் கடுத்ததல்ல வென்றார். அதேதெனில், அதோர் ஞான இராசாங்கமாயிருப்பதைப்பற்றியே. அது ஏற்படுத்தப்பட்டிருப்பது இலௌகிக காரியங்களில் நமக்கு உதவி புரிவதற்காகவல்ல—நம்மை ஐசுவரியவான்களாக்க வல்ல—நாம் இப்பிரபஞ்சத்திலிருக்கிற வரையிலும் வறுமைக்கும் சிறுமைக்கும் உள்ளாகாமல், சௌகரியமாயும் சௌக்கியமாயும் சீவிக்கும்படி செய்வதற்காக வல்ல—நம்முடைய தேசத்தின்மேல் படையெடுத்து வரும் சத்துருக்களை எதிர்த்து அவர்கள் மேல் வெற்றியடையச் செய்வதற்காக வல்ல—அதற்குச் சேனைகளுமில்லை; யுத்தத்துக்கு வேண்டிய தளவாடங்களுமில்லை; மேலும் அதன் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படியாம லிருப்போரைச் சர்க்கார் தண்டிப்பதுபோல் தண்டிக்க அதற்கு ஆயுதங்களுமில்லை; சேவகருமில்லை.—ஆனால் நமக்கு இரட்சணிய வழியைக் காட்டவும், பரிசுத்தர்களாயொழுகி நாம் மோட்சகரை யேறும்படி செய்யவுமே அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது இவ்வுலகத்திலிருந்தபோதிலும் அதன் எண்ணமும் ஆசையும் பரலோகத்தை நாடினதாகவேயிருக்கிறது. ஆனதுபற்றியே, நமதாண்டவர் இவ்வுலகத்திலிருந்த காலத்தில் திருச்சபையைப்பற்றி பேசினபோதெல்லாம் அதைச் சர்வேசுரனுடைய இராச்சியமென்றும், ஞான இராச்சியமென்றும், மோட்ச இராச்சியமென்றும் அழைத்ததாகச் சுவிசேஷத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் திருச்சபையானது இவ்வுலகத்திலிருந்தபோதிலும் அது இவ்வுலக இராசாங்கமாயிராமல், மெய்யான ஞான இராசாங்கமாயிருக்கிறது.

நாம் குற்றவாளிகளாகும்போது முதலாய் நம்மைத் தண்டிக்க ஆயுதங்களும் சேவர்களுமில்லாத இந்த ஞான இராசாங்கத்துக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியதுதானோ? ஆம், கீழ்ப்படிய வேண்டியதே. அதேதென்றால் நமதாண்டவரான சேசுநாத சுவாமியே இதற்கு இராசாவாயிருக்கிறார். இவர் சர்வ வல்லமையுள்ள கடவுள்; சர்வாதி கர்த்தர். நமக்காக மனிதாவதாரஞ் செய்து நம்மை நரக வாக்கினையிலிருந்து இரட்சித்தவர். நம்முடைய இரட்சணியத்தின் ஏக நம்பிக்கை. அவருடைய தயவு, இரக்கம், உதவி சகாயமின்றி நமக்குள் யாரும் மோட்சகரை ஏற முடியாது. இந்த ஆண்டவர்தான் இந்தக் கத்தோலிக்குத் திருச்சபையை உண்டாக்கினவர். அவர்தான், அதை ஆளுகிற பாப்பானவர், மேற்றிராணிமார், குருக்கள் முதலியவர்களை நியமித்தவர். அவர்தான் இவர்களுக்கு உலகம் எங்கும் போய் சுவிசேஷத்தைப் போதித்துச் சகலரையும் மோட்சவழியில் நடப்பிக்கும்படி கட்டளை கொடுத்தவர். அவர் திருவுளம்பற்றியிருப்பதாவது: பரலோகத்திலேயும், பூலோகத்திலேயும் எனக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய் சகல ஜாதி ஜனங்களுக்கும் உபதேசித்து......நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ நான் உலக முடியுமட்டும் எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேன் (மத் XXVIII. 18-20.) என்பதே. ஆகையால் திருச்சபையின் அதிகாரிகளாகிய பாப்பானவர் மேற்றிராணிமார்கள் குருக்கள் நமது கர்த்தருக்குப் பதிலாயிருக்கிறவர்கள். நம்முடைய சக்ரவர்த்தி லண்டன் பட்டணத்திலிருந்துகொண்டு எப்படித் தம்முடைய வைசிராய், கவர்னர் முதலிய அதிகாரிகள் மூலமாய் நம்முடைய தேசத்தை அரசாண்டு வருகிறாரோ, அப்படியே சேசுநாதரும் மோட்ச சிம்மாசனத்திலிருந்துகொண்டு மேற்சொன்ன தம்முடைய பிரதிநிதிகளால் திருச்சபையை ஆண்டு வருகிறார். ஆகையால், இந்தப் பிரதிநிதிகளுடைய அதிகாரம் நம்மாண்டவருடைய அதிகாரம். இவர்களுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் நமதாண்டவருக்கே கீழ்ப்படிகிறார்கள். இவர்களை யெதிர்க்கிறவர்கள் நம்முடைய ஆண்டவரையே எதிர்க்கிறார்கள். ஆகையால், தன் தேசத்து இராசாவை எதிர்க்கிற எவனும் எப்படி இராச துரோகத்துக் குள்ளாகிறானோ, அப்படியே ஞான இராசாங்கமாகிய திருச்சபையை எதிர்க்கிறவனும் ஞான இராச துரோகத்தைக் கட்டிக்கொள்ளுகிறானென்பது சத்தியம்.

நமதாண்டவர் திருச்சபைக்கு இராசாவாயிருப்பதுமல்லாமல், அதற்கு உயிராயுமிருக்கிறார். திருச்சபையானது சேசுநாதருடைய சரீரமென்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருப்பதினாலே, அதனுடைய மாமிசம் சேசுநாதருடைய மாமிசத்தோடும், அதனுடைய எலும்புகள் சேசுநாதருடைய எலும்புகளோடும் ஐக்கியமாயிருக்கின்றனவென்று அருத்தமாகிறது. இதை நாம் ஞானவிதமாய்க் கண்டுபிடிக்க வேண்டியதாமே. அதாவது, நம்மிடத்தில் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் எப்பேர்ப்பட்ட பொருத்தமும் ஐக்கியமுமுண்டோ, அப்பேர்ப்பட்ட பொருத்தமும் ஐக்கியமும் திருச்சபைக்கும் சேசுநாத சுவாமிக்கு முண்டென்று தெரிந்துகொள்ள வேண்டியது. நம்முடைய ஆத்துமம் நம்முடைய சரீரத்தின் பல அவயவங்களுக்கும் உயிரளித்து அதை யெப்படி ஒன்றுகச் செய்கின்றதோ, அப்படியே சேசுநாதரும் திருச்சபையிலுள்ள சகலருக்கும் உயிராயிருந்து அவர்கள் எல்லோரையும் ஞான விதமாய் ஒன்றிக்கச் செய்கிறார். சரீரத்தோடு ஒன்றித்திருக்கிற அவயவங்களுக்கு மாத்திர நம்முடைய ஆத்துமத்தின் தத்துவங் கிடைக்கின்றதேயன்றி அதோடு ஐக்கியமில்லாத அவயவங்களுக்குக் கிடைப்பதில்லையல்லவா? இப்படியே சேசுநாதரும் தம்முடைய சரீரமாகிய திருச்சபையோடு ஒன்றித்திருக்கிறவர்களுக்கே தம்முடைய ஞான உயிரைக் கொடுக்கிறார். நம்முடைய சரீரத்திலிருந்து தறிக்கப்படும் ஒரு அவயவம் எப்படி உயிரற்று அழிந்துபோகுமோ, அப்படியே திருச்சபைக்குக் கீழ்ப்படியாமல் அதன் ஒற்றுமையை விட்டு நீங்கிப்போகிறவர்களும் ஞான உயிரின்றி ஞான மரணமடைகிறார்கள். ஆகையால், திருச்சபையை எதிர்க்கிறவர்கள் மேற்சொன்னபடி ஞான இராசதுரோகத்தைக் கட்டிக்கொள்ளுவது மன்றி, தற்கொலை செய்துகொள்ளுவதுபோல தங்களுடைய ஞான உயிரையும் தங்களிடத்திலிருந்து பறித்துப்போடுகிறார்கள்.



## HONOUR THE PRIEST.

*(A True Story)*

## குருவானவரைக் கனம் பண்ணு.

(ஒரு மெய்க் கதை.)

முன் தொடர்ச்சி.

"எனக்குப் பன்னிரண்டு வயது நடக்கும்போது, பூசைக் குதவிசெய்யும் பிள்ளைகளில் ஒருவனாய்த் தெரிந்துகொள்ளப்பட்டேன். கோவில், பீட முதலியவற்றிற் குரிய விஷயங்களை நன்றாயும் சீக்கிரமாயும் அறிந்துகொள்ளும் சக்தி யெனக்கிருந்தமையால், பங்கு சுவாமியாருக்கு என் மேல் அதிகப் பட்சம். ஒரு புதிய சுவாமியார் எங்கள் கோவிலுக்கு வந்தாலுஞ் சரி, மேற்றிராணியார் விசாரணைக்கு வந்தாலுஞ்சரி, அல்லது கோவிலில் ஏதாவது திருநாள் நடந்தாலும் சரி. எங்கள் சுவாமியார் "சவரிநாதனை யழைத்துவா" என்பார். இது எனக்கும் பிரியமாயிருந்ததுடன். இரண்டு வருஷங்களுக்குப் பின், நான் அக்கோவிலுக் கவ

சியமானவனென்றும், எல்லாம் என்னால்தான் நடைபெறுவதென்றும் நினைக்க ஆரம்பித்தேன். கர்வம் மெதுவாய் என் மனதிற் குடிகொண்டது. நானேதாவது கோபமாய்ப் பேசினால், சுவாமியார் என்னுடன் அமைதியாய்ப் பேசி, என்னைச் சமாதானம் செய்வார். இப்படியாய்க் காலங் கழித்துவந்தோம். நான் பதினைந்து வயதுடையனா யிருக்கும்போது ஒரு காரியம் நடந்தது. என்னிரு கரங்களும்போனது சர்வேசுரனுடைய தண்டனையே யென்று நான் உணர்வதின் காரணம் சொல்லப்போகிறேன், கேளுங்கள் சுவாமீ. ஒருநாள் கோவிலில் ஏதோ திருநாள். அன்று மாலை திவ்யநற்கருணை யாசீர்வாதத்திற்கு நானுதவிசெய்ய வேண்டியவன். அன்று ஞாயிற்றுக் கிழமையல்ல வாதலால், நான் வேலை செய்துகொண்டிருந்த கடையில் நினைவின்றி இருந்துவிட்டேன். நான் திவ்யநற்கருணை யாசீர்வாதத்தைப் பற்றி நினைக்கும்போது, குறித்த நேரத்துக்குமேல் அரைமணி நேரமாய்விட்டதாக அறிந்தேன். உடனே பைத்தியங் கொண்டவன் போல் வேகமாய்க் கோவிலுக் கோடினேன். பூசைக் குதவி செய்வோர் உடுத்திக்கொள்ளும் அறைக்குள் நுழைந்ததும், எங்கள் சுவாமியார் அங்கு வந்தார்.

'அடே பயலே, இந்நேரம் எங்கே போயிருந்தாய்? எல்லா முடிந்த பிறகு தானா வருகிறது? இங்கிருக்கவேண்டியது உன் கடமையாயிருக்க, நீ இவ்வாறு ஊர் சுற்றுவதற்குத் தக்கப் படிப்பினை கற்றுக்கொடுக்கிறேன்.' என்று சிரித்துக்கொண்டே, சுவாமியார் என் கன்னத்தில் மெதுவா யறைந்தார். நான் என்ன காரணத்தால் வரத் தாமதமாயிற்றென்பதைக் கேட்காமலே சுவாமியார் என்னை இவ்வாறு நடத்தியது, என் சுபாவ குணமாகிய முன் கோபத்தைக் கிளப்பிவிட்டது. உடனே என்னிரு கரங்களையு மோங்கிக்கொண்டு, சுவாமியாரை யடிக்கத் தாவினேன். உடனேதான் அவரைக் கீழே விழத் தாட்டி, அவரை நன்றா யடிக்க வேண்டுமென்பதென் எண்ணம். என் வாயில் நுரைத் தள்ளியது; என் நெற்றியில் வியர்வை பெருகிற்று.

"ஆனால் சுவாமியார் வயதிலும் பருமனிலும் என்னைவிட எவ்வளவோ மடங்கு பெரியவரானபடியால், தூக்கிய என் கரங்களை லபமாய்ப் பிடித்துக்கொண்டு, நடுங்கிய குரலிற் பின் வருமாறு பேசினார். 'ஓ, சவரி, சவரி! உன் குருவானவரை நினைத் தீண்டி யடிக்கலாமா? எவனொருவன் ஆண்டவரால் அர்ச்சிக்கப்பட்ட குருவானவரை யடிக்கத் தன் கரத்தை யோங்குகிறானோ, அவனை யாண்டவர் தண்டிப்பார் என்பதை நீ அறியாயோ? மகனே, நிறுத்து! சிறு பிள்ளையாகிய நீ இப்போதே இப்படி யிருந்தால், பின்னால் உன் கதி யென்ன?'

"என்னவானாலும் சரிதான். எது வரினும் அவசியமில்லை. 'உன்னை யடிக்காமல் விடேன்! என்னை விடுகிறாயா, இல்லையா? என்று கோபாவேசங் கொண்டவனாய், நன்றாய்ப் பேச முடியாமற் கதறினேன். ஆனால் சுவாமியார் என்னை ஒரு சிறு குழந்தையைப்போல் தன் கரத்தால் பிடித்திருந்தார். நான் அவர் கரங்களினின்றுந் திமிறிக்கொண்டு வர என்னதான் பிரயாசைப்பட்டபோதிலும் ஒன்றும் பயன்படவில்லை. அவர் என்னைக் கைப்பற்றியவாறே கதவண்டை யிழுத்துக் கொண்டுவந்து, கதவைத் திறந்து, 'சவரி, வீட்டுக்குப் போ. உன் கோபம் தணிந்ததும், திரும்பிவந்து, சர்வேசுரனுடைய குருவானவரை யடிக்க உன் கரங்களை யோங்கியதற்காக நீ மெய்யாகவே மனஸ்தாபப்படுவதாய் என்னிடஞ் சொல். 'போ' என்று என்னை வெளியில் விட்டுக் கதவை மூடிக்கொண்டார். நானோ கோபத்தால் வெறிகொண்ட பித்தனைப்போல் கதவைப் பிடித்துக்கொண்டு, நான் வரமாட்டேன். உன்னிடம் வந்து ஒன்றுஞ் சொல்லப் போவதுமில்லை. உன்னைச் சும்மா விட்டேனா, பார், என்று கூவினேன்.

"சுவாமீ, நான் சொன்னதுபோலவே, அக் குருவானவரிடம் நான் மறுபடியும் போகவேயில்லை. வீட்டுக்குப்போய், என் தாயைக் கண்டு, இனி யெனக்குப் பூசைக் குதவிசெய்வதில் பிரியமில்லையென்று சொல்லிவிட்டேன். இது நடந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் அக் குருவானவரை வேறெந்த ஊருக்கோ மாற்றிவிட்டார்கள். அது முதல் நானும் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டேன். என் ஜீவியமும் அது முதல் பாவ வழியைப்பற்றியது. அக் குருவானவர் எனக்குச் செய்த அவமானத்தை யென்றாயினும் ஒருநாள் மறவாமல் அவரை யெப்படியாவது பழிவாங்குவதே சரியெனத் தீர்மானித்துக்கொண்டேன். ஆனால் இப்போ தெனக்கு நேர்ந்திருக்கும் விபத்தின் மாதிரியை யோசிக்க யோசிக்க, நான் அக்காலத்தில் ஒரு குருவானவரை யடிக்க கரங்களை யோங்கியதற்காகவும், அதன் பின் நான் வீணாய்ப் போக்கிய தெய்வ பயமற்ற ஜீவியத்திற்காகவுமே சர்வேசுரன் எனக் கனுப்பிய தண்டனை யிதுவென எனக்கு நன்றாய் விளங்குகிறது. என்னிரு கரங்களும் போய்விட்டன! என் கால்கள் போகாமல் என் கரங்கள் மாத்திரம் போனதின் காரணம், அக்கரங்களே ஒரு குருவானவரை யடிக்க உயரத்தூக்கப்பட்டவை என்பதாலாம். சுவாமீ, இது சரியான தண்டனை யல்லவா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஓ, இப்போது மட்டும் அந்த நல்ல குருவானவர் இருக்குமிடந் தெரிந்தால், நான் எப்படியாவது அங்கு போய், அவர் செய்ததே சரி யெனவும், நான் செய்தது தான் தவறெனவும் ஒத்துக்கொண்டு, என்னை மன்னிக்கும்படி அவரைக் கெஞ்சி மன்றாடுவேன். நாளானால் என்ன? சுவாமியார் மட்டும் உயிருட னிருக்கவேண்டும். அப்போது சர்வேசுரன் என்னை மன்னிப்பதுடன், எனக் கேதேனும் ஒரு நல்ல வழியையுங் காட்டுவார் என்று நம்புகிறேன். எனக்கோ வயது இருபத்தைந்து. இவ் வயதில் என் கதி யிதுவாயின், மீதி நாளை நான் இவ்வுலகில் எவ்வாறு போக்க முடியும்? சொல்லுங்கள் சுவாமி." என்று சவரிநாதன் இதற்குமேல் ஒன்றும் பேச முடியாமல் பெருமூச்சுவிட் டழுதுகொண்டே, கட்டைத் துணிகள் சுற்றிக் கட்டப்பெற்றிருந்த தன்னிரு கரங்களையும் உற்று நோக்கினான்.

சுவாமியாரும் மிக்க அநுதாபத்துடன் இவ் வரலாற்றைக் கேட்டுக்கொண்டிருந்தார். இத்தகைய சம்பவங்கள் இதற்கு முன் அநேகம் நேர்ந்திருப்ப தவருக்குத் தெரியும். ஒரு குருவானவரை யடிக்க கரங்களை யோங்கிய மானிடரை அவ் வப்போதே தேவன் தண்டித்திருப்பதும் அவர் ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் சவரிநாதன் மற்றுஞ் சிலரைப்போல் கல் நெஞ்சனாய் மனந்திரும்பும் மார்க்கமின்றிப் பிடிவாதத்திலுழலும் பேதையல்ல வென்றறிந்தார். அவனைத் தேற்றப் பிரயாசைப்பட்டார். அவன் யாவற்றையும் திறந்து ஒன்றும் ஒளியாமல் சொல்லிவிட்டதால், அவனைத் தேற்றுவது கஷ்டமா யிருந்தது. "அப்பா சவரிநாதா, இத்தகைய தண்டனைகள் நேர்ந்திருக்கின்றன வென்பதை நான் மறுக்க முடியாது. ஆனாலும் இதனால் நீ நம்பிக்கையை இழப்பது சரியல்ல. கடந்துபோன உன் ஜீவியத்துக்காக நீ மெய்யான மனஸ்தாபப்படுகிறாயல்லவா?" என்று குருவானவர் கேட்டார்.

சவரிநாதன்:—வருந்தமா, சாமீ! மெய்யாகவே மனஸ்தாபப்படுகிறேன். அந்த நல்ல குருவானவர் இப்போ தெங்கே யிருக்கிறார் என்றறிந்தால், நான் உடனே அவரிடஞ் சென்று, அவர் காலில் விழுந்து, என்னை மன்னிக்கும்படியாய்க் கெஞ்சி மன்றாடுவேன்.

சுவாமியார்:—நீ நிச்சயமா யப்படியே செய்வாயென் றெனக்குத் தெரியும். சவரிநாதா. ஆனால் நீ யவர் பேரின்னதென் றுரைக்கவில்லையே.

சவரி:—அவர் இப்போது மிக்க வயது சென்றவரா யிருக்கவேண்டும். அப்போதே அவர் இளமைப் பருவத்தைக் கடந்து முதுமைப் பருவத்தி லிருந்தார். அவர் நாமம் சின்னப்பநாதர்.

சுவாமியார் அவனை வெறித்துப் பார்த்தார். சின்னப்பநாதரென்னும் அதே குருவானவர் அச் சமயத்தில் அடுத்த ஆஸ்பத்திரியில் சாகக்கிடப்பதும் என்ன வாச்சரியம்! சுவாமியார் முகத்திலுண்டான மாற்றத்தைச் சவரிநாதன் கண்டு, "என்ன, சுவாமீ, அவரை நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டான்.

சுவாமி.—நானவரை யறிந்திருப்பது மாத்திரமா? அச் சுவாமியாரே தற்சமயம் இதே ஆஸ்பத்திரியி லிருப்பது மெனக்குத் தெரியும்.

சவரி:—இங்கேயா? இதே ஆஸ்பத்திரியிலா சின்னப்பநாதர் வந்திருக்கிறார்? நீங்கள் ஏதோ தவறுதலாய்ச் சொல்லுகிறீர்கள் சுவாமீ.

சுவாமி:—இல்லை, இல்லை, மெய்தான். இன்றைக்கே அவரைப் பார்க்கிறேன். அவரிடம் உன்னைப்பற்றிப் பேசி ஞாபகப்படுத்துகிறேன். உன்னை யவர் ஒருக்காலும் மறந்திருக்கமாட்டார். இத்தகைய சம்பவங்கள் ஒருவர் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து விடுவது சகஜம். இதுமுதல் உன் துன்பந் தொலைந் தொழிந்ததென்று நினைத்துக்கொள். சர்வேசுரன் எவ்வளவு நன்மைத்தன முள்ளவர் பார்: அவர் சித்தத்தை யளவிட்டறியக் கூடியவர் யார்? ஆதலால் நீ யவர் மகத்துவத்தைத் துதித்து அவருக்குன் நன்றியைச் செலுத்து. ஓ, சவரிநாதா, இதைவிட என்ன புதுமை வேண்டும்?

(இன்னும் வரும்.)

S. Selva Raju.

---

[நாம் நமது நாட்டில் நீதியாய் நடந்து, நம்மை எல்லாத்திலும் ஒறுத்து, நமது மனதை மறுத்துத் தளராத பொறுமையோடு இருக்கவேணும்.

## VISIT TO THE B. SACRAMENT.

## தேவநற்கருணை சந்திப்பு

தேவநற்கருணை சந்திக்கிறது என்றால் என்ன தெரியுமா? சொல்லுகிறேன் கேள்: உன் தாய் தகப்பன்மார் உன் அண்டை வீட்டுக்காரருடைய வீட்டுக்கும் உன் பந்துக்கள் வீட்டுக்கும் போய் வீட்டுக்காரரைச் சந்திக்கிறதில்லையா? நீயும் சிலவிசை அவர்களுடன் போகிறது உண்டு அல்லவா? அந்த வீட்டுக்கு உன் தாய் தகப்பன்மார் போனபின் அங்கே என்ன செய்வார்கள்? அந்த வீட்டுக்காரரைக் கண்டு அவர்களுடன் பேசுவார்கள்; அவர்கள் சுகக்ஷேமத்தைப்பற்றி விசாரிப்பார்கள் அல்லவா?

திவ்யநற்கருணை சந்திக்கப் போகும்போது நீயும் அப்படித்தான் செய்யவேண்டும். தேவநற்கருணைப் பெட்டியில் இருக்கும் சேசுநாத ஸ்வாமியோடு நீ பேசவேண்டும். நீ பேசுவதைக் காது கொடுத்துக் கேட்கும்படிக்குத்தான் அவர் அந்தச் சிறு பெட்டியில் நாள் முழுதும் அடைபட்டிருக்கிறார். நீ பேசுவதைக் கேட்கும்படிக்கே அவர் இரவெல்லாம் உனக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்.

அவரோடு என்ன பேசுகிறதென்று உனக்குத் தெரியுமா? அவரோடு நீ என்ன பேசவேண்டும் என்று தெளிவாய்ச் சொல்லுகிறேன், கேள்.

• முதலாவது: தேவநற்கருணை ஸ்தாபித்திருக்கிற கோவிலில் நீ பிரவேசிக்கும்போது, உனக்கு ஒருவித வணக்கத்துக்குரிய அச்சம் இருக்கவேண்டும். தேவநற்கருணைப் பெட்டியில் சேசுநாதஸ்வாமி கணக்கற்ற சம்மனசுக்களால் சூழப்பட்டுச் சத்தியமாக அதில் இருக்கிறாரென்று உன் விசுவாசக் கண்ணால் அவரைப் பார்த்து வணங்கவேண்டும். காந்தம் இரும்பை இழுப்பதுபோல, நீயும் அவரை அன்புடன் தாவவேண்டும். பிறகு நீ அவருடன் சம்பாஷிக்கவேண்டும். அதெதினாலெனில்:

சேசுநாதசுவாமி தேவநற்கருணையில் சத்தியமாக எழுந்தருளியிருக்கிறார். உன்னை அவர் பார்க்கிறார். நீ பேசுவதையும் அவர் கேட்கிறார். நற்கருணையில் அவர் சர்வேசுரனாகவும் இரக்ஷகராகவும் இராஜாவாகவும் எழுந்தருளியிருக்கிறார்.

அவர்தான் பரலோகத்தையும் பூலோகத்தையும் உன்னையும் உண்டாக்கின சர்வேசுரன். ஆகையால் நீ அவரைப் பார்த்துப் பின் வருமாறு பேசக்கடவாய்:

என் சர்வேசுரா சுவாமீ! தேவரீர் என்னை ஒன்றும் இல்லாமையினின்று உண்டாக்கி உமது பிள்ளையாகச் செய்து உமது மாமிசத்தையும் இரத்தத்தையும் எனக்குப் போசன பானமாகக் கொடுத்தபடியால், உமக்கே தோத்திரம். நான் அநேகவிசை பாவ அந்தஸ்தில் இருந்தபோது என்னைச் சாகடித்து நரகத்தில் தள்ளாமல் தயவு கூர்ந்த தேவரீருக்கு, அநந்த முறை நன்றியறிந்த ஸ்தோத்திரம் புரிகிறேன். உன்னதமான சர்வேசுரா! பரலோக பூலோக ஆண்டவரே! புழுவுக்குச் சமானனை அடியேன் தேவரீரை அறிந்து சிநேகிக்கும்படி கிருபை கூர்ந்தபடியால், உம்மை நித்தியமாய் ஸ்துதித்துத் தோத்திரித்துப் புகழுகிறேன், என்று அவருடன் பேசக்கடவாய்.

உன் இரக்ஷகராகிய சேசுநாதர் நற்கருணைப் பெட்டியில் மெய்யாகவே எழுந்தருளியிருப்பதால் அவரை நோக்கி: என் கர்த்தரே சுவாமீ! நீசப் பாவியாகிய அடியேன் மீது தேவரீர் வைத்த மிதமிஞ்சின ஸ்நேகத்தைப்பற்றி பரலோகத்தில் இருந்து பூலோகத்துக்கு இறங்கி நீச மனித வேஷத்தை எடுத்துச் சகலவித கஸ்தி துன்பங்களையும், இடையூறு இக்கட்டுகளையும், தரித்திர வறுமையையும், நிந்தை அவமானங்களையும் பொறுமையுடன் அனுபவித்தீர்! உமது திருச்சரீரம் அடிகளால் கிழிந்து காயப்படவும், உமது திருச் சிரசு முட்களால் ஊடுருவப்படவும் சித்தமானீர்! கடைசியாய்ச் சிலுவையில் அறையுண்டு மூன்று மணிநேரம் வாக்குக் கெட்டாத கொடிய வேதனையை அனுபவிக்கச் சித்தமானீர்! இதெல்லாம் எனக்காகவே, என் சபிக்கப்பட்ட பாவத்துக்காகவே தேவரீர் அனுபவித்தீர் என்று



அறிந்து துக்கப்படுகிறேன். உமது அகோர பாடுகளுக்குக் காரணமான என் நிர்ப்பாக்கிய பாவங்களை முழு மனதுடன் வெறுக்கிறேன். இனி ஒருபோதும் அவைகளைக் கட்டிக்கொள்ளமாட்டேன், என்று நீ அவரோடு சம்பாஷித்தால், ஓ! திவ்விய நற்கருணையில் இருக்கும் நமது திவ்விய இரக்ஷகர் உன்மட்டில் எவ்வளவு சந்தோஷப்படுவார்! இவ்வளவு பச்சாத்தாபத்துடன் பேசும் உன் பேச்சுக்கு மகா ஆவலுடன் தமது செவிசாய்ப்பார். உன் மட்டில் அதிக பிரியங்கொள்வார். உன் பாவங்களையும் மன்னித்து உனக்குத் தேவையான வரங்களையும் ஏராளமாய்க் கொடுப்பார்.

தேவநற்கருணைப் பெட்டியில், சேசுநாதஸ்வாமி சகல நன்மை உடைத்தான இராஜாதி இராஜாவாக எழுந்தருளி இருக்கிறார். நீ அவரிடத்தில் கேட்பதைக் கொடுக்கும்படி இந்தப் பெட்டியில் காத்துக்கொண்டிருக்கிறார்.

உனக்கு ஒன்றும் தேவை இல்லையா? உனக்கு அநேக காரியம் தேவையாயிருக்கிறதென்று தெரியப்படுத்துகிறேன் கவனமாய்க் கேள்:

உன் ஆத்தும சத்துருக்களாகிய உலகம், பசாசு, சரீரம் உன்னைப் பலமுறை துன்பப்படுத்துகிறதில்லையோ? உலக புத்தியுடைத்தான கெட்ட மனிதரும் கெட்ட பிள்ளைகளும் தங்களுடைய துற்புத்தியாலும் துர்மாதிரிகையாலும் உன்னை எத்தனை விசை கெடுக்கப் பார்த்தார்கள்! உனக்கு ஞாபகம் இல்லையோ? அந்தக் கெட்டவர்கள் கையில் நீ அகப்படாமல் இருக்க வேண்டுமானால், தேவநற்கருணைப் பெட்டியில் இருக்கும் உன் இரக்ஷகருடைய உதவியைக் கேள். சந்தேகமின்றி அவர் உனக்கு உதவி புரிவார்.

பொய்ப்புரட்டு சொல்லவும், திருடவும், அந்தந்தப் பாவங்களைச் செய்யவும் உனக்குத் துற்புத்தி சொல்லி உன்னைக் கெடுக்கப் பார்க்கும் துஷ்ட பசாசின் தந்திர சோதனையினின்று தப்பித்துக் கொள்ள மனதிருந்தால், நற்கருணைப் பெட்டியில் இருக்கும் ஆண்டவருடைய உதவியைக் கேள். சத்துரு உன்னைக் கெடுக்கப் பார்த்தபோது, ஏன் நற்கருணை ஆண்டவரிடம் போய் அவருடைய சகாயத்தைக் கேட்கவில்லை? இனிமேல் நரகப் பேய் உன்னைச் சோதித்து, உன்னைப் பாவத்தில் விழத்தாட்டப் பார்க்கும்போது நற்கருணை நாதருடைய பாதம் சென்று உன் சங்கடத்தை அவருக்குத் தெரியப்படுத்தினால், நீ அதை ஜெயிப்பதற்கான சகாயத்தை அவர் உனக்கு அருளுவார்.

உன் சரீரத்தில் உண்டாகும் ஆசாபாசத்தால் எத்தனைவிசை கலக்கத்துக்கு உள்ளாகி வருந்தப்பட்டாய்! உன் சுயபலத்தால் இந்தப் பாவச் சோதனையை ஜெயிப்பது கஷ்டம். ஆனால் சர்வேசுரனுடைய உதவியால் அவைகளை எளிதில் தள்ளிவிடலாம். நீ தேவநற்கருணைக்கு முன்னிருக்கும்போது நீ நம்பிக்கையுடன் அவருடைய உதவியைக் கேள். அவர் சந்தேகமின்றி உனக்கு உதவி புரிவார்.

மேலும் நீ பிராயத்தில் அதிகரிக்க, அதிகரிக்க, உன் ஞான சத்துருக்கள் உன்னை அதிக மூர்க்கமாய்த் தாக்கிக் கெடுக்கப் பார்க்கும். ஆகையால், நீ நற்கருணையின் சந்நிதியிலிருக்கும்போது, உன் வருத்தங்களை அவருக்குச் சொல்லிக் காட்டி அவருடைய உதவியைக் கேட்டால், நீ கேட்பதை எல்லாம் அவரிடத்தில் பெற்றுக்கொள்வாய். "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று அவரே வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறபடியால், உனக்குத் தேவையானதை எல்லாம் அவரிடத்தில் நம்பிக்கையுடன் கேட்கக்கடவாய்.

நீ சுவாமியைப் பார்த்துக் கேட்க வேண்டியது இவ்வளவுதானா? உன் தாய் தகப்பனையும் பந்துக்களையும் மறக்கலாமா? அவர்களுக்காகவும் சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக்கொள்ளவேண்டாமா? உன் பெற்றோர், உன் கூடப்பிறந்தவர்கள் முதலிய பந்துக்கள் நல்ல கிறிஸ்துவர்களாயிராமல் திருடவும், திட்டி, சண்டைபோட்டு, வர்மம் மனஸ்தாபமாயிருந்து, வேறு யாதொரு துற்பழக்கங்களுக்கும் உள்ளானவர்களாயிருந்தால், அவர்கள் நல்ல கிறிஸ்துவர்களாய் நடக்கும்படி ஸ்வாமியைப் பார்த்து மன்றாடு. உனக்கும் உன் குடும்பத்துக்கும் அவசரமான உலக

நன்மையையும் கேட்கலாம். அது அவருடைய சித்தத்துக்கு ஒத்திருந்தால் அதையும் கொடுப்பார்.

மரணமடைந்து உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கும் உன் பந்துக்களுடையவும் நிக்கற்றவர்களுடையவும் ஆத்துமங்கள் மோக்ஷம்போய்ச் சேரும்படிக்கும் வேண்டிக்கொள்.

அக்கியானிகள், பதிதர் சத்திய வேதத்தில் சேரவும், பாவிகள் மனந்திரும்பவும், அவஸ்தையா யிருக்கப்பட்டவர்கள் நல்ல மரணம் அடையவும் அன்னேரத்தில் வேண்டிக்கொள்ளலாம். இதற்குப்பின் ஞானவிதமாய் நன்மை வாங்க மறவாதே. இதுதான் தேவநற்கருணை சந்திக்கும் விதம். இப்படிச் செய்தால் உனக்கு எவ்வளவு ஞான சந்தோஷமும் ஆறுதலும் உண்டாகும்!

எல்லாம் முடிந்தபின், உன் பரம தாயாரை மறவாதே. தேவமாதா சுரூபத்தின் பக்கமாய் உன் கண்ணைத் திருப்பி, அந்தப் பரிசுத்த தாயாருக்கு ஸ்தோத்திரமாக "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்கிற ஜெபத்தையும், "கிருபை தயாபத்துக்கு மாதா" என்கிற செபத்தையும் பத்தியுடன் சொல்லி தேவநற்கருணை சந்திப்பை முடிப்பாயாக.

உனக்கு இஷ்டம் இருந்தால் திவ்விய நற்கருணை சந்திப்பு அடங்கிய யாதொரு புஸ்தகத்தைப் பத்தி கவனத்துடன் வாசித்து, திவ்வியநற்கருணை சந்திப்பது உத்தம வழக்கமாகும். (பாடசா. ஞானே.)

இம்மாதம் ஜெபமாலைமாதவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம். திருச்செபமாலைச் சபையார்கள் செபமாலை செபிக்கையில் ஒவ்வொரு பிரியதத்த மந்திரத்துக்கும் 2025 நாள் பலனைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படியாய் 53 மணிச் செபமாலைக்கு இலட்சத்து ஓராயிரத்து இருநூற்றைம்பது நாட்பலனும், ஒரு முழுச் செபமாலைக்கு (153-மணி) மூன்று இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றைம்பது நாட்பலனும் கிடைக்கும். இச்சபையார் இச்செபமாலையைத் தங்களிடம் வைத்திருந்தால், நாள் ஒன்றுக்கு 40,000 நாட்பலன் அடைவார்கள். இவர்கள் கோவிலில் செபமாலை செபித்தால் 50 வருஷப் பலன்.—(9-ம் பத்திநாதர்.)

GNANAMANI, III PART.

## ஞானமணி 3-ம் பாகம்.

### 36-ம் அதிகாரம்

ஒருவன் சாகுந் தறுவாயில் தான் அவனுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற நேரம் சமீபித்திருக்கிறது.

மறுநாள் ருக்மணிக்கு அவளுடைய தகப்பனாரிடத்திலிருந்து வந்த கடிதத்தால் தன் தங்கையின் கலியாணத்தையும் தன் வீட்டார் அனைவோரும் சத்தியவேதத்தில் சேர இருக்கும் சங்கதியையும் அவள் அறிந்துகொண்டாள். அன்று தான் தன் புருஷனோடு தங்களூருக்கு வரும்படி தன் தகப்பனார் கேட்டுக் கொண்டதனால் ருக்மணி அதிக சந்தோஷங்கொண்டு, அன்றுதினமே தன் பெற்றோருக்குக் கடிதமெழுதி, அவர்கள் கேட்டுக்கொண்டபிரகாரம் தானும் தன் கணவனும் ஊருக்குப் புறப்பட்டு வருவதாக அறிவித்து, அந்த நாட்களில் தன் புருஷன் நூதனமான நாடகத்தை ஏற்படுத்தினைத்திருப்பதுடன் வெகு சுந்தரமான பாட்டுக் கச்சேரியும் நடத்த ஆயத்தஞ் செய்வதாகவுந் தெரியப்படுத்தினாள்.

ஞானதீட்சையும் கலியாணமும் நடக்க ஒருமாத மிருக்கும்போதே. ருக்மணி ஒருநாள் தன் கணவனுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் "எனக்கு 1000-ரூபாய்க்குச் செலவு இருக்கிறது" என்றாள்.

பண்.—என்ன செலவு?

ருக்.—கலியாணத்துக்குப் போகும்போது என் தங்கைக்கு நகை போடவேண்டாமா? என் பிரிய தாய் தகப்பனுக்கு வஸ்திரங்கள் வாங்கிக்கொண்டு போகவேண்டாமா? இன்னும் எத்தனையோ சிநேகிதர் ஆசையுடன் காத்துக்கொண்டிருப்பார்கள் நன்கொடைக்கு?

பண்.—உன் இஷ்டமானபடி செய்ய தடையில்லை ருக்மணி.

ருக்.—நானும் கலியாண நாளில் தரித்துக்கொள்ள புது வஸ்திரங்கள் வாங்கவேண்டியிருக்கும்.



பண்.—இருக்கிற வஸ்திரங்கள் போதாதா?

ருக்.—கலியாண நாளில் புது வஸ்திரம் தரிப்பது விசேஷமல்லோ?

பண்.—கன்னியாஸ்திரி மடத்துக்கு என்ன கொடை கொடுக்கப்போகிறாய்? சிரேஷ்ட தாயார் உனக்கு எவ்வளவோ நற்புத்தி சொன்னார்கள்!

ருக்.—அதெல்லாம் உங்கள் சொந்த வேலை. மேலும் கடந்த இரண்டு வருஷ காலமாய்த் தாயாரம்மாளுக்குக் கடிதம் எழுதவே இல்லை. ஊருக்குப் போனால் என்ன சொல்வார்களோ?

பண்.—ஆம், அதுதான் எனக்கும் விசனமாயிருக்கிறது.

பண்.—இன்றைக்கே ஒரு காகிதம் எழுதிப்போடு.

ருக்.—நல்லது, அப்படியே ஆகட்டும்—என்று பேசிக்கொண்டிருக்கும்போது பண்டிதர் தனக்கு வந்த தந்தியை வாசித்துப் பார்த்து: மறுவாரத்தில் புதுக்கோட்டைக்குப் பாட்டுக் கச்சேரிக்காக என்னை வரும்படி தந்தி வந்திருக்கிறதென்றார். அதன் பின் அப்படியே ஆகட்டுமென்று உடனே மறு தந்தி கொடுத்துவிட்டுத் தமது மாணாக்கர் சேர்ந்திருந்த மண்டபத்துக்குப் புறப்பட்டார்.

ருக்மணி ஒரு காகிதத்தை யெடுத்து என்னென்ன வாங்கவேண்டுமென்று ஒரு ஜாப்தா போட்டபோது, அது 1500 ரூபாய்க்கு அதிகமாகவே பிடிக்குமென்று தெரிய வந்தது. அதைப் பத்திரமாய் வைத்துக்கொண்டு, பண்டிதர் அந்தப் பணத்தை அவசியம் கொடுப்பாரென்று எண்ணி, அவருடைய வருகைக்கு ஆசையுடன் காத்துக்கொண்டிருந்தாள்.

பண்டிதர் தமது வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தபோது, ருக்மணி தான் போட்ட ஜாப்தாவைப் பண்டிதருக்குக் காட்டவே, "ஆர் என்ன கேட்டபோதிலும் நான் தடை செய்வதில்லையே; ருக்மணி! உனக்குத்தானா இல்லை யென்பேன்" என்றார்.

அப்போது ருக்மணி தன் புருஷனுடைய தாராள குணத்தையும் அவர் தன்மீது காட்டும் பட்ச நேசத்தையுங் கண்டு சந்தோஷித்து அக மகிழ்ந்து, அவரை மகா அன்புடன் நோக்கி "கலியாணசுந்தரம் என்பவனை என் தள்ளிவிட்டீர்கள்?" என்றாள்.

பண்.—அதிசயத்துடன், எந்தக் கலியாணசுந்தரத்தை?—என்று யோசிக்கத்தொடங்கினார்.

ருக்.—உங்களிடத்தில் பிடில் கற்க வந்தவனை!

பண்.—அவன்போய் இரண்டு வருஷமாகப் போகிறதே! அவனைப்பற்றி யிப்போது ஏன் பேசுகிறாய் ருக்மணி?

ருக்.—அவனைத் தள்ளிவிட்ட காரணம் யாதோ?

பண்.—அந்தத் துஷ்டனைப்பற்றி உனக்குச் சொன்னதார்?

ருக்.—அவன் துஷ்டனா? மகா சன்மார்க்கன் என்கிறார்களே!

பண்.—அவனைப்பற்றி உனக்கு அப்படிச் சொன்னதார்?

ருக்.—இங்கே பேசவரும் பெண்கள் மூலமாய் அதை அறியலானேன்.

பண்.—என்ன! அதிசயமாயிருக்கிறதே! அவனைத் தள்ளிவிட்டு இப்போது இரண்டு வருஷத்துக்கு அதிகமாகக்கொள்ள தற்போது அவனைப் பற்றிப் பேச நியாயமென்ன?

ருக்.—ஒரு நியாயமு மில்லையா?

பண்.—அவனைத் தள்ளிவிடுவதற்கு அநேக காரணங்களுண்டு. அதை யிங்கு விவரிப்பது அனாவசியம்.

ருக்.—என்னத்தைப்பற்றி அனாவசியம்?

பண்.—என்ன, ருக்மணி! சிறு குழந்தை போலப் பேசுகிறாய்! நான் எத்தனையோ காரியங்களைச் செய்துவருகிறேன்; எத்தனையோ பேருக்கு சங்கீதவித்தை கற்பிக்கிறேன்; எத்தனையோ பேரைத் தள்ளிவிடுகிறேன்; எத்தனையோ பேர் எனக்குத் தெரியாமலே நின்றுபோகிறார்கள். காரியம் இப்படி யிருக்க, கலியாண சுந்தரத்தின் மட்டில் அவ்வளவு அக்கறையாய்ப் பேசுகிறாய். ஏதாகிலும் இருந்தால் சொல்.

ருக்.—ஒன்றுமில்லை, என்ன காரணத்தைப் பற்றி அவனைத் தள்ளிப்போட்டீர்கள்? அது மாத்திரம் சொன்னால் போதும்.

பண்.—(தன் மனைவியினுடைய பிடிவாத குணத்தையும் தான் சொல்லாததினால் அவளுக்குண்டாகிற மன வருத்தத்தையுங் கண்டு) பல பெருங் குற்றங்களைப்பற்றியே அவனைத் தள்ளிவிட்டேன்.

ருக்.—அதுபோதும். ராமகிருஷ்ணன் என்பவனுக்கு இலவசமாய் சங்கீத வித்தை கற்பித்ததுடன், அவனையும் அவன் தங்கையையும் சம்ரக்ஷணை செய்ததாகக் கேள்வி, இது மெய்தானா?

பண்.—ருக்மணி! உனக்கு இன்றைக்கு என்ன............ஒருபோதும் இப்பேர்ப்பட்ட கேள்விகளை நீ கேட்டதில்லையே; இன்றைக்கு இப்பேர்ப்பட்ட கேள்விகள், உன் வாயிலிருந்து வரக் காரணமென்ன? சந்தேகமற, கேட்பார் பேச்சைக் கேட்டு இப்படிப் பேசுகிறாயென்று தெரியவருகிறது! கடந்த ஐந்து வருஷகாலமாய் அநேகர் என்னிடம் வந்து சங்கீதவித்தை கற்றுக்கொண்டார்கள். அநேகருக்கு அவர்களுடைய தரித்திரத்தைப்பற்றி அவர்கள் கொடுக்கவேண்டிய சம்பளத்தைக் குறைவாய் பெற்றுக்கொண்டேன்; சிலருக்கு முழுதும் தள்ளிவிட்டு இனாமாகக் கற்பித்தேன். இன்னும் புத்திசாலிகளான சிலரிடம் ஒருகாசு முதலாய் வாங்கிக்கொள்ளாததுடன், அவர்களுடைய சம்ரக்ஷணைக்காக ரூபாய் பத்தோ, எட்டோ, ஐந்தோ மாதமாதம் இனாமாகக் கொடுத்தும் வந்தேன்.

இப்படி யிருக்க, அந்த நபர்களை யெல்லாம் விட்டு விட்டு கலியாண சுந்தரத்தையும் எனக்குப் பிரிய பிள்ளையைப்போ லிருந்த ராமகிருஷ்ணனையு மாத்திரம் இப்போது நீ யெடுத்துக் காட்டுவதற்குக்காரணம் இன்னதென்று தெரியவில்லை. உன் கேள்வி எனக்கு மெய்யாகவே பரம ரகசியமாய்த் தோன்றுகிறதுடன், உன் விமரிசையற்ற கேள்வி வாளைப்போல என் இருதயத்தில் பாய்ந்து வருத்தம் உண்டாக்கிறது—என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது

ருக்.-(ஸரஸ்வதி, முனியம்மாளுடைய கபடதந்திரத்தால் தான் ஏய்க்கப்பட்டதாக அறிந்துகொண்டு, தன் கணவனுடைய இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு) சிறியோர் செய்யும் பிழையைப் பொறுப்பது பெரியோர் கடமையென்று பள்ளிக்கூடத்தில் வாசித்திருக்கிறேன். ஆகையால், என் தப்பிதத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று தங்களை மன்றாடுகிறேன்.

பண்.—(இரக்கமும் தயாள குணமுமுள்ள பண்டிதருடைய மனம் மெழுகுபோல இளகி பச்சாத்தாபப்படும் தன் மனைவியின் கன்னத்தில் முத்தி செய்து) "பொறுத்துக்கொண்டேன் ருக்மணி! பிடிலை கொண்டுவா"—என்று, தேவமாதாவுக்கு ஸ்தோத்திரமாக ஒரு பாடலைப் பாடச்சொல்லி யிவர் பிடில் வாசித்தார்.

மறுநாள் இவர் வாக்குக் கொடுத்ததுபோல, தன் மனைவியுடன் புதுக்கோட்டைக்குப் போய் வேலையைமுடித்துக்கொண்டு செங்கல்பட்டுக்கு வந்து சேர்ந்து, தமது ஊருக்குப் புறப்படுவதற்காக முஸ்திப்பு செய்தார்.

ருக்மணி மதிராசுக்குக் கடித மெழுதி, தன் தங்கைக்கும் பெற்றோருக்கும் ஸ்நேகிதருக்கும் கொடை யளிப்பதற்காக வேண்டிய வஸ்திரங்களையும், நகை நட்டு முதலியவைகளையும் வரவழைத்து சகலத்தையும் அநேக பெட்டிகளில் போட்டுப் பூட்டிப் பத்திரப்படுத்தினாள்.

பண்டிதரும் மதிராஸ் ஷாப்புகளுக்கு கடித மெழுதி தமக்கு வேண்டிய வஸ்திராபரணங்களை பாக் செய்து நேராய் தமது ஊருக்கு அனுப்பும்படி ஆர்டர் செய்தார். அவரோடு கலியாணத்துக்கு வர விருக்கும் மாணாக்கரும் பிரயாணத்துக்கு வேண்டிய முஸ்திப்பு செய்துகொண்டார்கள்.

கலியாணத்துக்குப் புறப்பட இரண்டுநாளிருக்கும்போதே..பயணத்துக்கு அவசரமானதெல்லாம் சேகரித்து தயார் செய்த பின், "இன்று கடைசிப் பாட்டுப் பாடுவோம் வாருங்கள்" என்று ருக்மணி சொன்னதன்மேல், "அப்படியே ஆகட்டும் தேவதாயாருக்குத் தோத்திரமாக "ஓ கிளோரியோசா" (*O Gloriosa Virginum*; *by Lambiloth*) என்னும் பாடலைப்பாடுவோம், நீ பிடில் எடுத்துக்கொள் நான் பாஞ்சோவை யெடுத்துக்கொள்கிறேன்" என்றார் பண்டிதர்.

அவ்வாறே இருவரும் தங்கள் தங்கள் வாத்தியக் கருவிகளை கையில் பிடித்து வாசித்துக்கொண்டுபாடத் துவக்கினார்கள். பண்டிதருக்கு தேவமாதாவின் பேரில் அதிக பக்தி யிருந்தபடியால், அதைப் பாடும்பொழுது இவருக்கு அதிக உற்சாகமும் சந்தோஷமும் பக்தியும் பொங்கினபடியாலும் தன் சத்துவங் கொண்டமட்டும் செவிக் கின்பமாய்ப் பாடத் தொடங்கினார். லத்தீன் பாஷையை நன்றாய்ப் படித்து இந்தப் பாடலின் அருத்தத்தை அவர் நன்றாய் அறிந்திருந்தபடியால் தேவதாயார் சந்நிதியில் நின்று அப்பரமநாயகியைக் கண்ணால் தரிசித்துப் புகழுவதுபோல நேத்திரங்களை அங்குமிங்கும் திருப்பாமல், அவைகளை மேலே உயர்த்தி, யாரையோ பார்த்து மன்றாடுவதுபோல மகா விஸ்வாச நம்பிக்கையுடன் பாடினார். அவருடைய பக்தி உருக்கத்தைக் கண்ட ருக்மணி அன்று அதிசயித்தாள். இப்படி கன்னிமரியாயிக்கு தோத்திரமாக லத்தீன், இங்கிலீஷ், தமிழ் முதலிய பாஷைகளில் பல சங்கீதக் கருவிகளுடன் இருவரும் வெகுநேரம் பாடிக்கொண்டிருந்தார்கள்.



வழியில் போகிறவர்களும் ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்தி இச் சங்கீதங்களைக் கேட்டுக்கொண்டு அங்கேயே நின்றார்கள். இரதச் சவாரி செய்த அநேக ஐரோப்பிய, இந்திய பிரபுக்களும் தங்கள் இரதங்களைப் பாட்டையில் நிறுத்திக்கொண்டு கவன கருத்துடன் பாடலுக்குச் செவி சாய்த்துக் கொண்டிருந்தார்கள். ரோட்டுக்கு முன்புறத்திலும் பின்புறத்திலும் சுமார் அரை மயில் தூரத்தில் வழிப்போக்கர் மௌனக்கிராந்தராய் ஒரு வார்த்தையும் பேசாமல் ஏதோ ஒரு அற்புத சமபவத்தை பார்ப்பதுபோல, அங்குமிங்கும் பாராமல், பாடல்தொனி கேட்கப்படும் பலகணி பக்கமாய் கண்களை உயர்த்தி, பரவசங் கொண்டவர்களைப் போல் காணப்பட்டார்கள். இக்காரணத்தை முன்னிட்டு பாட்டைசாரிகளும் வண்டிகளும் செல்லாமல் நிற்பதற்கு வழியில் என்ன தடை யுண்டானதென்று பார்க்கும்படி அநேக போலீஸ்காரரும் ஓட்டமாய் ஓடிப்போய்ப் பார்க்க, அங்கு சண்டை சச்சரவு ஒன்றுமின்றி, பிரஜைகளும் பிரபுக்களும் அங்கு அமரிக்கையாய் நின்று இன்பானந்தத்தை உண்டாக்கும் இனியபாடலைக் கேட்டுக்கொண்டு நிற்பதைக் கண்டு அவர்களும் அங்கேயே நின்றார்கள். இவ்விதமாய் சுமார் ஒன்றரை மணி நேரம் ஆயிரக் கணக்கான ஜனக்கூட்டம் மந்திர தந்திர கட்டால் பந்திக்கபபட்டவர்கள் போல அற்ப சந்தடியின்றி நின்றுகொண்டிருந்தார்கள்.

வேலைக்காரன் கதவண்டை வந்ததைக் கண்ட பண்டிதர் பாடலை முடித்து, அவனை உள்ளே வரக் கற்பித்தார். பாடல் அமர்ந்ததைக் கண்டவர்கள்: எவ்வளவு நேர்த்தியான கீர்த்தனைகள் இவைகள்! சொர்க்கத்தின் பாடல்போலக் காணப்படுகிறது! வாத்தியக் கருவிகள் குரலெடுத்துப் பாடுவதுபோ லிருக்கிறது! அன்னாகாரமின்றி நாளெல்லாம் இந்த வாத்தியத்தையும் சங்கீத கீர்த்தனையையும் சலியாமல் கேட்டுக்கொண்டிருக்கலாம்! என்று சத்தமாய்ப் பேசிக்கொண்டு நடப்பதையும் அநேக வண்டிகள் அங்குமிங்கும் படபடவென ஓடும் சத்தத்தையும் கேட்ட பண்டிதர் அது என்னவோ என்று பார்க்கும்படி பலகணி வழியாய் எட்டிப்பார்க்கவே, வழியில் போய்க்கொண்டிருந்தவர்கள் அதோ பண்டிதர் என்று அவரைப் புகழ்ந்து கொண்டாடும்போது, தேவதாஸ் பண்டிதர் சுமார் ஒரு மயில் தூரம் வரைக்கும் சமுத்திரம்போலப் பரவி யிருக்கும் ஜனங்கள் தங்கள் பாடலை கேட்டுக்கொண்டிருந்தார்களென்று கண்டு, அறைக்குள் சென்று நாற்காலியில் உட்கார்ந்து வந்த கடிதத்தை உடைத்தார். ஜனத்திரளைக் கண்ட ருக்மணி அதிசயித்து, எவ்வளவு நேரம் இங்கு நின்றுகொண்டிருந்தார்களோ என்று பண்டிதருக்கு எதிராக இருந்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

பண்டிதர் கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினபோது: முழுதும் மலர்ந்த தாமரை புஷ்பம்போல் சந்தோஷித்து களிப்புகொண்டிருந்த அவருடைய முகம் சுருங்கி, அதில் துக்கக்குறி காணப்பட்டது. இதைக் கண்ட ருக்மணி அதிசயித்து, தங்கள் வீட்டில் யாருக்காகிலும் வியாதி கண்டதோ என்னவோ என்று கவலையும் நூதனப் பிரியமும் அவளுக்குண்டாக: அது எங்கே இருந்து வந்த கடிதம், நமது ஊரிலிருந்து வந்த கடிதமா? என்றாள்.

பண்.—இல்லை, நமது ஊரிலிருந்து வந்ததும் அல்ல, நமது பந்துக்களிடத்தி லிருந்து வந்ததுமல்ல.

ருக்.—அப்படியானால் இப்படி நீங்கள் கலங்குவதற்குக் காரணமேது?

பண்.—நான் ஏன் கலங்குவேன்?

ருக்.—உங்கள் முகமே அதற்கு அத்தாட்சி!

பண்.—புறத்தியாருக் குண்டான துன்பத்தால் நாம் அனுதாபப்படுவது சர்வ சாதாரணம்.

ருக்.—அப்படி யாருக்குத் துன்பம் உண்டானது?

பண்.—இது இரகசியமான சங்கதியாகையால் இன்னதென்று வெளிப்படுத்துவது விமரிசையன்று.

ருக்.—அதை யெனக்குத் தெரியச்செய்தால் நானும் துன்பத்துக்கு உள்ளானவர்கள் மட்டில் அனுதாபங் கொள்ளேனோ?

பண்.—நீ சொல்வது உண்மையே ருக்மணி, ஆனால் நான் அந்த சங்கதியை வெளிப்படுத்துவது தகாதென்று இருக்க, அதை மறுபடியுங் கேட்பது சரியன்று—என்று சிரித்தார்.

ருக்.—(முகத்தில் துக்கங் காணப்பட்டு) சரி, உங்கள் இஷ்டம்.

பண்.—ருக்மணி! ஒருவன் சாகுந்தருவாயில் அவனுக்கு நான் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற நேரம் சமீபித்திருக்கிறது.

ருக்.—என்ன வாக்குத்தத்தமோ?

பண்.—அது இரகசியமென்று நான் சொன்னதை நீ யின்னங் கவனிக்கவில்லையே! மேலும் நான் தக்ஷணமே புறப்படவேண்டும்.

ருக்.—என்னைத் தனியே விட்டுவிட்டுப் புறப்படப்போகிறீர்களோ?

பண்.—(சிரித்துக்கொண்டு) நாலரை மணி வண்டியில் புறப்பட்டால் நடுச்சாமவேளையில் வந்து சேருவேன் உன்னிடம்; பயப்படவேண்டாம்.

ருக்.—என்னைவிட்டு நீங்கள் புறப்படத்தகாது. நாளையத்தினம் நாம் ஊருக்குப் புறப்படப்போகிறோம். இன்றைய இராத்திரி யென்னைத் தனியே விட்டுப் போவது சரியல்ல.

பண்.—வார்த்தைப்பாட்டை மீறுவது பாவமல்லோ?

ருக்.—காகிதத்தின்மூலமாய் உங்கள் வார்த்தைப்பாட்டை நிறைவேற்றுங்கள்.

பண்.—கடிதத்தால் செலுத்தக்கூடுமாகில் நீ சொல்லத் தேவையில்லை—என்று அறைக்குள்ளே புறப்பட்டுப்போய் இருப்புப் பெட்டியைத் திறந்து ரொக்கத்திலும் நோட்டிலும் ஆயிரம் ரூபாய் எடுத்துத் தமது சட்டை சாக்கில் போட்டுக்கொண்டு, தன் மனைவியை நோக்கி: இராத்திரி போசனம் தயாராயிருக்கட்டும். 12 அல்லது 12½ மணிக்கு வருவேன் என்று வெளியே புறப்பட்டார். மேலும் வாசற்படியில் நின்றுகொண்டிருந்த பங்காரம்மாளை நோக்கி: இராத்திரி போசனத்துக்கு வருவேன். ஆனால் நீங்கள் ஒருவரும் எனக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. போசன மாத்திரம் அறையில் வைக்கப்பட்டிருந்தால் போதும், என்று சொல்லி, துரிதமாய் ரயில்வே ஸ்டேஷனுக்கு நடந்துபோனார் பண்டிதர். பண்டிதர் பணம் எடுக்கும்படி உள் அறைக்குச் செல்லுஞ் சமயத்தில் தமது கையில் பிடித்திருந்த கடிதத்தை தமது சட்டை சாக்கில் போட்டபோது அது சாக்கில் விழாமல் தாழ விழுந்தது. உடனே ருக்மணி அதை யெடுத்துக்கொண்டாள்.

பண்டிதர் வெளிப்பட்ட வுடனே அதை அவள் வாசித்தபோது முகத்தில் துக்கமுண்டாகி வாசலில் நின்றுகொண்டிருந்த பங்காரம்மாளைக் கூப்பிட்டழைத்தாள்.

## HOW TO RAISE OUR STATUS.
## நாம் முன்னேறுவ தெப்படி?

ஐந்தாம் வியாசம்.

கல்வி

(முன்தொடர்ச்சி.)

எழுத்து வாசக மறியாதவள் மட்டி
எது மறியாள் அவள் சுரண்டுவாள் சட்டி
கழுத்திலே அவளுக்குத் தாலியைக் கட்டி
காரிய மிலையது காசுக்கு நஷ்டி
(வேதநாயகம்பிள்ளை.)

நமது பெண்களைப்பற்றி யோசெவனில் அவர்களுக்கும் கட்டாயம் பிரதமப்படிப்பு (Primary Education) தேவையே தேவை. எழுத்து வாசனை யறியாத மட்டி சாம்பிராணியைக் கட்டிக்கொள்ள யாருக்குத்தான் மனம் வரும். பெண்கள் கல்வியில் தேர்ந்தால் அவர்களுக்கு ஞானம் உதயமாகும். ஒழுக்கத்தில் தேர்ச்சியடைவார்கள். சத்தியவேதத்தின் மேன்மையை யறிவார்கள். கிறிஸ்துவப் பயிற்சி யடைவார்கள். நல்ல மனைவியாயும், நல்ல தாயாராயுமிருந்து பின்சந்ததிக்கு நல்ல காரணஸ்தர்களாவார்கள். தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை. மூர்க்கமும் பிடிவாதகுணமும் ஆணவமும் படைத்த தாயாருக்கு மூர்க்கமும் பிடிவாதகுணமும் ஆணவமும் படைத்த பிள்ளைகள்தான் பிறக்கும். சமாதான குணமும், பிறசிநேகமும் கீழ்ப்படிதலுமுள்ள தாயாருக்கு அப்படிப்பட்ட பிள்ளைகள்தான் பிறப்பார்கள். எப்போதும் நகைதரிப்பதிலும் பட்டுப்பட்டாவளிகளை உடுத்துவதிலும், பிறர்கண்டு மகிழ சளுக்கோடு திரிவதிலும் கண்ணுங் கருத்துமா யிருக்கும் தாய்மாருக்கு அப்படிப்பட்ட பிள்ளைகள்தான் பிறப்பார்கள்.



கிறிஸ்துவேதமும் ஏனைய வேதங்களைப்போல் ஒரு வேதம் என்று நினைத்துக்கொண்டு அஞ்ஞான சகுன சாஸ்திரங்களை யநுசரிக்கும் மூட தாய்மாருக்கு அப்படிப்பட்ட மூடப் பிள்ளைகள்தான் பிறப்பார்கள். பக்தியில் முதிர்ந்த தாய்மாருக்குப் பக்தியுள்ள பிள்ளைகள் பிறப்பார்கள்.

ஐரோப்பாவின் சீர் சிறந்த கனவான்களெல்லாம் தங்களுடைய தாய்மார் உத்தமிகளா யிருந்தபடியால்தான் அங்ஙனமானார்களென சரித்திரக்காரர் நிச்சயிக்கிறார்கள். சீன ராஜ்யத்தில், ஒரு ஆண்பிள்ளை ஒரு வீரத்துவமான காரியத்தைச் செய்தால், அவனுடைய பெண்சாதிக்குத்தான் பரிசளிப்பார்கள். ஏனெனில் ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே. 8-9 பிராயம் வரைக்கும் ஒரு பிள்ளையை நல்வழியில் நடத்திவந்தால் அது அவ்வழியில் நிலைப்படுமென்பதும், ஒருக்கால் தவறினும் பிறகு சீர்ப்படுமென்பதும், வித்தியார்த்திகளாய் விளங்கும் சேசுசபை சுவாமிமார்களின் அநுபோக சித்தாந்தம். ஆதலால் மெழுகைப்போல் இளகிய மனதையுடைய பிள்ளைகள் தாய் மடியிலிருந்துதான் சகலவிதமான நற்குணப் பயிற்சிகளிலும் தேறலாகும்.

நமது பெண்களுக்குப் படிப்பு ஆவசியகமென்பதை ஸ்தாபித்த பிறகு அவர்களுக்கு எப்படிப்பட்ட படிப்பு தேவையென்று ஆராய்வது தகுதி. ஐரோப்பாவில் இப்போது புறப்பட்டிருக்கும் நவ பெண்களுடைய (New woman) தொத்துவியாதியானது நமது இந்தியாவில் இந்திய புரோட்டெஸ்டாண்டு மாதர்களுள் முதலில் துவக்கி தற்காலம் இந்துக்களையும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பற்றிக்கொண்டுவருகிறது. அவ்வியாதியின் விபரமேதெனில், பெண்பிள்ளைகள் மேலான படிப்புகளைக் கற்றுணர்ந்து, ஒரு ஆண்பிள்ளையின் கட்டுக்கடங்கி யிருக்கும் கலியாண அந்தஸ்தை நீச பந்தன மென்றவர்கள் நினைத்து, அதை நிராகரித்துத் தன்னிதனிச்சீவியம் சீவித்துப் பாடுபட்டு வயிற்றை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே. அப்படிப்பட்டவர்கள் படிக்கத் துவக்கும்போதே நர்ஸ், கம்பவுண்டர், அப்பாத்தக்கரி, டாக்டர், ஸ்கூல் மிஸ்டிரஸ், பைபில் உமன், டைபிஸ்ட், ஷாப் அட்டெண்டர், கிளர்க் முதலிய பலவிதமான வேலைகளில் ஒன்றைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டு மென பிரமைகொள்ளுவார்கள். சமுசாரச் சீவியத்தின் சந்தோஷத்தைப்பற்றி அக்கறைகொள்ளமாட்டார்கள். ஏதோ ஒரு அசந்தர்ப்பத்தில் நல்லமாப்பிள்ளை ஒருவன் அகப்பட்டால் அவனைக் கட்டிக்கொண்டு, அவன் ஒரு பக்கம் உத்தியோகமாயும் இவளொருபக்கம் உத்தியோகமாயும் செல்ல, வீட்டையும், குடித்தனத்தையும், பிறந்த அருமையான குழந்தைகளையும் வேலைக்காரர் வசம் ஒப்புவிப்பார்கள். தேவ அழைப்பை யடைந்தவள் துறவற வந்தஸ்தில் சேர்வதும், படிப்பில்விசேஷ திறமை யடைந்தவள், அல்லது தக்க புருஷனை யடையாதவள், அல்லது அப்படி யடைந்தும் பால்யத்தில் விதவையாகி தன் ஜீவனத்தைத்தானே நடத்திக்கொள்ள வேண்டி யிருப்பவள், அப்படியாதாமொரு உத்தியோகம் செய்து காலட்சேபம் செய்வதும் நியாயமா யிருக்கும். ஆனால் வேண்டுமென்று கலியாண அந்தஸ்தை வெறுத்துச் சுதந்தரமாய்ச் சீவிக்கலாமென்னும் கருத்துடன் அங்ஙனம் செய்வது தேவ ஏற்பாட்டிற்கு முழுதும் விரோதமான காரியம். பெண்பிள்ளைகள் இல்லாவிட்டால் குடித்தனம் நடப்பதெப்படி? பிள்ளைகளைப் பராமரித்து அவர்களை நல் வழியில் தேர்ச்சி செய்கிறவர்கள் யார்? ஆனதால் நமது மாதர்கள் உத்தியோகம் செய்து வயிறு பிழைக்கும் நவமாதர்களுடைய சளுக்கு பிலுக்கைக் கண்டு மயங்கிப் போகாமல், சமுசாரத்தில் தங்களுக்கிருக்கும் அந்தஸ்தே சிறந்த அந்தஸ்தென்றுணர வேண்டியது.

நமது மாதர்கள் இங்கிலீஷ் படிப்பது அவசியமோவெனக் கேட்டால், சிறந்த உத்தியோகஸ்தர்களாயும், செல்வாக்குள்ளவர்களாயும், விசேஷ சீதனம் கொடுத்து தகுதியான மருமகப்பிள்ளைகளை யடையக்கூடியவர்களுமாகிய சிலருடைய மக்கள்மார் தவிர மற்றப்படி மொத்தத்தில் அலைவருக்கும் தமிழ்ப்படிப்பே போதுமென காண்கிறது. லார்ட் மக்காலே (Lord Macau-

lay) என்னும் ஆங்கிலேய சரித்திர சாஸ்திரியார் தான் எழுதிய (Essay on Bacon) ஒரு வியாசத்தில் சொல்வதுபோல் 15-ம், 16-ம் நூற்றாண்டுகளுக்கு முன் ஆங்கிலேய மாதர்களுள் கிரேக்கு லத்தீன் பாஷைகளில் தேர்ந்தவர்களே மாத்திரம் படித்தவர்கள் என்று சொல்வார்களாம். ஆனால் அச்சியந்திரம் உண்டானபிறகு அப்பாஷையிலிருந்த சிறந்த புஸ்தகங்களெல்லாம் ஆங்கிலேயத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டதாலும், ஆங்கிலேயர்களுள் பல சாஸ்திரிகள் தோன்றி வேறு சிறந்த புஸ்தகங்களைச் சுயமாய் ஆங்கிலேயத்தில் எழுதினதினாலும் அப்போதிருந்து ஆங்கிலேய மாதர்கள் பொதுவாய் அந்நிய பாஷைகளைப் படிப்பதை யொழித்து, தங்கள் சுயபாஷை யொன்றையே சாதித்து வருகின்றனர். அவர்களுள்ளும் தங்கள் தங்கள் குடும்ப அந்தஸ்து, விசேஷ திறமை மற்றும் அநுகூலாதிகளுக் கேற்றபடி, பெரும்பாலோர் பிரதமப்படிப்பையும், சிலர் மத்திமப் படிப்பையும், வேறு சிலர் உயர்தரப் படிப்பையும் கையாடி க்ஷேமமாய் வாழ்ந்து வருகிறார்கள்.

அங்ஙனமே நமது தமிழ்ப் பாஷையில் வித்தைப் பயிற்சிக்கேற்ற புஸ்தகங்களில்லாதிருந்தால் நமது மாதர்கள் ஆங்கிலேயங் கற்று படிப்பாளிகளாய் விளங்கவேண்டி யிருக்கும். ஆனால் இக்காலத்திலோவெனில், ஆங்கிலேய புஸ்தகங்களுள் பல தமிழில் திருப்பப்பட்டிருப்பதினாலும், தமிழர்கள் பலர் சிறந்த புஸ்தகங்களைத் தமிழில் இயற்றி யிருப்பதினாலும், சுமார் 6-வது வயதில் பள்ளிக்குச் சென்று, 13-அல்லது 14-வது வயதில் சமைந்து, படிப்புக்கு (goodbye) போய் வருகிறேனென்று விடைபெற்றுக்கொள்ளும் நமது மாதர்கள் இடையிலுள்ள சொற்பகாலத்தில் இந்தப் பாஷையையும் அந்தப் பாஷையையும் படிக்கத் துவக்கி முடிவில் எந்தப் பாஷையிலும் தேர்ச்சியடையாமற் போவதைவிட, நமது தாய்ப் பாஷையாகிய தமிழ்ப்பாஷை யொன்றையே சாதித்து, எதையும் தாராளமாய் வாசிக்கவும், எதையும் இலக்கணப்பிழையற எழுதவும், கணக்கு செய்யவும், அதோடுகூட, வேதோபதேசம், வேத சரித்திரத்திற்கடுத்த புஸ்தகங்கள், சமையல் சாஸ்திரம், சுகாதார சாஸ்திரம், சிக்கன சாஸ்திரம், பால வைத்தியம், தையல் முதலியவைகளையும் கற்றறிந்தால் அப்படிப்பட்டவர்கள் தக்க பருவத்தில் விவாக அந்தஸ்தை யடைந்த பிறகு தங்கள் குடித்தனத்தைச் செவ்வையாய் நடத்துவார்கள். அவர்கள் வீட்டில் ஒழுங்கு, கிரமம், சுத்தம் இருக்கும். அவர்கள் தங்கள் புருஷர்களுக்குப் பணிந்து நல்ல உயிர்துணையா யிருப்பார்கள். பிள்ளைகளைச் சீராய் வளர்த்து அறநெறியில் பயிற்சி செய்வார்கள். அவர்கள் செய்யும் சாதத்தை அனைவரும் பசியாற உண்பார்கள். அப்படிப்பட்டவர்கள் புருஷனின் தோழிகள், மக்களின் வாத்திச்சிகள், வேலையாட்களின் எசமாட்டிகள், குடும்பத்தின் ராணிகள், சமுசாரத்தின் நிர்வாகிகள். பரிசுத்தமும் அடக்கமுமுள்ள பெண்ணானவள் வரத்தின்மேல் வரம். அவளுடைய மக்கள் அவளை வாழ்த்துவார்கள்.

ஆனதால் நமது கடமை யேதெனில், எந்தெந்த விசாரணைகளில் நமது மாதர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்பள்ளிக்கூடங்களுக்கு அவர்களை அனுப்பிவைப்பதுவே. தாய்மார் சோம்பேறித்தனத்தில் காலங் கழித்துக்கொண்டு, சிறு பெண்குழந்தைகளுக்கு இல்லாத வேலையெல்லாம் இட்டுக்கொண்டும், அல்லது அவர்கள் சோம்பேறித்தனத்திலும் வீண் கதையிலும் காலங் கழிக்க விடுவதும் நிர்ப்பாக்கியம். இக்காலத்தில் படிப்பை தேசத்தின்(asset)ஆஸ்தியென்பார்கள். அப்படியே படிப்பைக் குடும்பத்தின் ஆஸ்தியென்றும் சொல்லலாகும். நமது குலத்தாருள் எத்தனையோ பேர் பரம ஏழைகள், தாழ்ந்த பதவிகளிலிருந்தவர்கள், படிப்பு ஒன்றைக் கையாடி அந்தஸ்தெனும் படியிலேறி அனைவரோடு சரிசமானமாய் வாழ்ந்துவருகிறார்கள். இதை வாசிக்கும் படித்தவர்கள் சற்றுவது நல்ல ஸ்திதியிலிருப்பவர் தங்கள் மனச்சாட்சியைத் தட்டி இந்த எங்கள் நிலைமை படிப்பொன்றினால் ஆன நிலைமையன்றோ? இப் படிப்பொன் றிராவிட்டால் எங்கள் கதி என்னவா யிருக்கும், என்று யூகிக்கட்டும். படித்த பெண்பிள்ளைக்குத் தான் படிப்பின் அருமை தெரியவரும். அப்படிப்பட்டவள் தான் தனக்குப் பிறந்த பிள்ளைகளையும் படிப்பில் தேர்ச்சிசெய்யக்கூடும். ஆனதால் நமது மாதர்கள் படிப்பது நமது குலத்தின் முன்னேற்றத்திற்கு ஓர் நல்லடையாளம் என்பதற்கையமில்லை.

(தொடரும்.)

இந்திய கிறீஸ்துவன்.



## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### தூத்துக்குடி

### ஜன சங்கமும் ஜாதித் தலைமையும்

பரதகுல பாண்டிய ராஜனாகிய காலஞ்சென்ற ஆண்டகை, தொன் கபிரியல் மோத்தவாஸ் பரத வர்ம பாண்டியனின் பட்டத்திற்குரிய மகன், தொன் அனஸ்தாசி மோத்த கொறேரா பரதவர்ம பாண்டியனின் பட்டாபிஷேகச் சடங்கை நிறைவேற்றுவதற்கு தூத்துக்குடியில் எம திராஜ மாளிகையில், நிகழும் 1916-ம் வருடம் சூன் மாதம் 18-ந் தேதி ஞாயிறு வாரம் மாலை 5-30 க்கு நடைபெற்ற மஹா சபையின் சாராம்சத்தை, அச் சபையால் அச்சிட்டு வெளியிடப்பட்ட துண்டுப் பத்திரிகைகளாலும், எமது நல்லாயன் பத்திரிகை வாயிலாயும் நன்குணர்ந்தேம். பரதகுல முதல்வனாகிய சந்திரன் என்னும் அரசன் முதல் முறையே நடைபெறும் இம் மகுடாபிஷேகச் சடங்கு, காலதாமதமின்றி எம் மரசன் மகன் அரசனுக்கு நடைபெற வேண்டுமென்பது எமது அளவு கடந்த ஆசை. இச் சபையை நடாத்திய குலாபிமானம் மிகுந்த எங்குலத்தவர்க்கு யாம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமை கொண்டேம் என்பதைத் தெரிவிப்பதோடு, அம் மஹா சபைமட்டில் எமக்குள்ள சில அபிப்பிராயங்களையும் இங்கு கூறத் துணிவுற்றேம். நல்லாயா! காவேரி தொட்டுக் கன்னியாகுமரி வரையுமுள்ள பரத்குலத்தவர்க்கு இவ் வியாசம் நன்மை பயப்பதால் இஃதைத் தம் பத்திரிகையில் வெளியிட வேண்டுகிறேன்.

பரதகுல இராஜரீகத்திற்கு ஓர் நிர்வாக சபையிருத்தல் வேண்டுமென்பது, பரத குலாபிமானி ஸ்ரீ மாந் : S. T. மச்சாது அவர்கள் அச்சன சபையிற் கொண்டுவந்த அபிப்பிராயம். இவ் வபிப்பிராயம் எங்குலத்தாரும் ஏனைய குலப் பெரியோரும், வாழ்த்தத்தக்க நல் லபிப்பிராயமென்க. முறிவுற்ற எலும்பைச் சிதறற்று நீங்காது பொருத்தத்தக்க பசையுற்ற ஒளஷதமென்னலாம். இஃதால் இப் பரதகுலம் ஒற்றுமைத்திடனுங் கல்விப்பலமுங் கொண்டு வாழ்வதுடன், இனி வருஞ் சந்ததிக்கும் அழியாப் புகழைப் பயக்கு மென்பதிற் றடை யேதுமில்லை. ஒற்றுமையின்றியாம் எத்தனை மலைபோன்ற செய்கையை முடித்து மென்ன பயன்? எல்லாம் விழலாம். எங்குலத்தவராகிய துரியோதனாதிகள் காலந் தொட்டு இற்றை வரையும் பரதகுலம் இந்நிலைமையை யடையக் காரணமென்ன? எமது அத்தினபுரத் தரசு தொலைந்ததற்கும் மதுரை யரசு நிலை குலைந்ததற்கும் காரணமென்ன? ஒற்றுமையின்மையே காரணம், காரண மென்போம்.

பரதகுல ஒற்றுமைக் குறைவைப்பற்றி பாப்பரசரின் பிரதிநிதியாகிய ஸெலஸ்கியாண்டவனவர்கள் பின் வருமாறு கூறுகின்றார்:—(Seo Speeches of His Excellency.)

“பரதராகிய நீங்களெல்லோரும் ஒற்றுமையில் சேர்ந்து வாழ்வீர்களானால், இந்நகரத்திலும் இக்கடலோர நாடெங்குமே மெய்யாகவே பராக்கிரமசாலிகளா யிருப்பீர்கள். உங்கள் மத்தியில் பிரிவும் பேதமும் வந்து நுழைந்த நாள் முதல் உங்கள் பலமும், சக்தியும், கீர்த்தியும் குன்றிக் குறைந்து இப்போது ஒழிந்தே போகின்றது. பிரிவினையும் பிறர் சிநேகக்குறைவுமே, பரதருடைய நாசத்திற்கும் மோசத்திற்கும் ஏதுவாச்சுது.

இதை நீங்கள் போக்கி பிறர் சிநேகத்தையும் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் நாடித் தேடி நடந்தால் மாத்திரம் உங்கள் முன்னோர் காலத்திலிருந்ததுபோல நீங்கள் மீண்டும் பராக்கிரம மன்னராவீர்கள்.”

இந்தியாவின் செல்வச் சிறப்பை மங்கச்செய்த சாதிவேற்றுமை யென்னும் பொல்லாப் பைசாசத்தை எம் திராவிடர் மத்தியில் கொணர்ந்துவிட்ட பிராமண குலத்தவரும் ஆசாரச்சீர் திருத்தமென சமபந்தி போஜனஞ்செய்யும் இக்காலத்தில், பரதகுலத்தார்மட்டும் ஆங்காங்கு சிதறுண்டு கிடக்கும் தங்குலத்தவரை ஒருங்கு

சேர்த்து உயர்தரக் கல்வியையூட்டி, முன்னேறச் செய்யத் தாமதித்தல் உத்தமமன்று.

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல காலவகையினானே"

என்னும் விதிபற்றி, தற்கால நாகரீகத்திற்கேற்ப காரியங்களை நடத்தி உயர்தரக்கல்வியையும் ஒற்றுமையையும் நாடல்வேண்டும். இவையாவும் முறையே நிறைவேற முக்கிய கருவியாய் நிற்பது யாதெனில்: ஸ்ரீமாந், S. T. மச்சாது அவர்கள் கொண்டுவந்த நிர்வாக சபையே.

இந்நிர்வாக சபையில் எமது சிற்றூர்களிலுள்ள பரதகுலத்தவரையும், மதுரை, நாகை, நீர்கொழும்பு, மன்னார் முதலிய நகர்களிலுள்ள எங்குலத்தவரையுஞ் சேர்த்தல்வேண்டும். காலவேறுபாட்டால் நீங்கிக்கிடக்கும் அடப்பன் அல்லது சிற்றரசன் என்னும் பட்டத்தையும் முறையே ஊர்கடோறும் அபிஷேகஞ் செய்தல்வேண்டும். இந் நற்கருமத்திற்கு இடர்விளைக்கும் நண்பர் சிலரும் உளர் என்னலாம். ஆனால் அன்னவர் கொல்லனின் உலைக்குச் சமானமானவரென்க. உலையின்றேல் பொன்னின் சொந்தப் பிரகாசத்தைக் காண்பதெங்ஙனம்?

என் அன்பரின் தூஷணை யெல்லாம் இன்பமாகக் கொண்டால், அன்னவரே மதித்தற்கேதுவாகிய, சிறப்பை யடைவோ மென்பது வெளிப்படை.

> " இன்னாமை யின்பமெனக் கொளினாகுந்தன் னொன்னார் விழையுஞ் சிறப்பு

என்றார் திருவள்ளுவரும்.

யாமோ, அன்னவர்க்குஞ் சமாதானஞ் சொல்லவேண்டியதே கடமை. ஆயினுமென்ன? இராஜனுண்டேல் இராஜ விரோதிகள் இடைக்கிடை தோன்றல் ஸகஜமன்றோ? எவ்வித இடையூறையும் எம் பனிமயத்தாய் நீக்கி, எமதிறைவன் மகன் இறையனை யாசீர்வதிக்க வேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

5–8–16.
கொழும்பு.

M. X. Rubeen Varma.
*Tuticorin.*

---

**பச்சாத்தாபமும் இலங்கைப்பரதரும் :**

சென்ற. ஸ்ரீ திரு இருதயத்தூதனில் பரத வேதசாட்சி என்ற முகவுரையின் கீழ் தோன்றிய வியாசத்தைக் கண்ணுற்றேன்.

முற்காலங்களில் பரத குலத்தார், நிறைந்த வேதாபிமானிகளா யிருந்தார்கள். அங்ஙனம் வேதாபிமானிகளா யிருந்தார்கள் என்பதற்கு அர்ச். பிரான்சீஸ் சவேரியாரே சாட்சி. தாங்கள் சத்திய கத்தோலிக்க மதத்தின் பத்தி வைராக்கிய முள்ளவர்கள் என்று காண்பிப்பதற்காக அநேகர் வேத சாட்சியாயும் பிராணனைத் தந்திருப்பது உலகறிந்த சத்தியம். இங்ஙன மிருக்கத் தற்காலம் இலங்கை பரத வர்த்தகருள் சிலர் தங்களிடம் ஊழியஞ் செய்வோர்கள் காலை துவக்கி மாலை வருமட்டாக ஒரே நிலையாய் நின்றுழைத்து கன கஷ்டப்பட்டும் பின்பு மாதத்தில் வரும் முதல் வெள்ளிக்கிழமையில் பாவசங்கீர்த்தனஞ் செய்ய உத்தரவு கொடுக்க வசதியில்லையென்கிறார்கள்.

அப்படியல்ல. வியாழக்கிழமை பாவ சங்கீர்த்தனஞ் செய்ய அரை மணி நேரம் சாயங்காலமும், வெள்ளிக்கிழமை நற்கருணை அருந்த காலைப் பூசைக்காகக் கொஞ்ச நேரமும் விடுதலை கொடுக்க வேண்டுமென்பதுதான் என் வேண்டுகோள். இதில் ஒரு முக்கிய காரணமென்னவென்றால்; பாவசங்கீர்த்தனத்துக்கென்று அரை மணி நேரம் விடுதலை கொடுத்தால், பாவசங்கீர்த்தனஞ் செய்ய பிரியமுள்ளவனும் பிரிய மில்லாதவனும் கட்டாயம் பாவசங்கீர்த்தனஞ் செய்துகொள்வான். இதனால் பிறருடைய ஆத்தும ரட்சணியத்துக்கு தூண்டுகோலா யிருப்பது மாத்திரமல்ல, சர்வேஸ்பரனுக்கும் மகிமையுள்ளவர்களாயு மிருப்பீர்கள். ஆதலால் நங்குலத்தவர்களும் இனியேனும் நாம் வேதசாட்சி முடிபெறா விட்டாலும் தங்கள் ஷாப்பு வேலைக்காரருடைய ஆத்தும இரட்சணியத்துக்காக உதவியாயிருக்க பிரார்த்திக்கிறேன். சேசுவின் திரு இருதயம் எம் முதலாளிமார்களுக்குஞ் சம்பளக்காரருக்கும் கிருபை பாலிப்பாராக.

பரதகுல வர்த்தர்களின் ஊழியனாகிய

கொழும்பு.
10—7—16.

பரதன்.

---

**வைப்பார்.**

சங். பத்திராபரே,

இதனடியில் வரும் வந்தனோபசாரப் பத்திரிகையை தங்களுடைய மேலான பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரம் செய்யும்படியாய்ப் பிரார்த்திக்கின்றனன்.



**வந்தனோபசாரப் பத்திரம்.**

மகா மாட்சிமைதங்கிய ஞானசெல்வச் சேத்திரமாகிய கனம். A. பாக்கிய நாதசுவாமிகள் அம்போருக மலர்ப் பாதாம்புஜங்களுக்கு வந்தனம் அதிவிநயத்துடன் தந்தனம்.

மகாமகிமை தங்கிய பிதாவே, தேவரீர வர்கள் 1909-ம் ஆகஸ்டு மாதத்தில் எங்கள் கிராமப்பங்கு விசாரணைக் கர்த்தனாக நியமனம் பெற்று, 1916-ம் ஆகஸ்டு வரை எழாண்டாக எங்களூரிலிருந்து வெகு பிரயாசையாய் ஞானம், கல்வி, நன்னடை, நாகரீக முதலியவைகளை யூட்டி, அன்புபாராட்டி எங்களூர் பரிசுத்த மோக்ஷராக்கினி மாதா தேவாலயத்துக்கு வேண்டிய அதிக அழகு வாய்ந்த விலையேறப்பெற்ற வஸ்துக்களைச் சம்பாதித்துத்தந்தும் அவ் ஆலயத்தின் மேல் மகுடத்தைச் சூட்டித் தந்தும், காலாகாலங்களெல்லாம் ராஜரிஷிகள் வசிக்கத்தக்க அலங்கார மாளிகை யொன்றமைத்துத் தந்தும் அதனருகே அருமைச் சிசுக்களுக்கு அறிவடிவமர்ந்த வித்தியாசாலையு மாக்கித் தந்து, அதை நடைபெறும்படிக்கான சாதுர்ய வேலைகளையும், அதிசிறப்போடு திருநாள் உற்சவங்களை நடத்திவந்த சற்குணசீல சௌந்தரதீரனே. தங்களை எங்கள் கிராமவிஜாரணையிலிருந்து மாற்றி முத்துப் பேட்டை விஜாரணைக் கர்த்தனாகத் தீர்மானம் பெற்ற சேதியைக் கேட்க எங்களிதயந் துக்கசோப சஞ்சல சாகரத் தமிழ்ந்தி ஆலோபமுற்றுப் பரிதவிக்கின்றோம்.

ஐயையோ! அழகிலருஞ் சிறப் பமைந்த வைகை மாநகரமே! உனக்கதிக சீர்சிறப்பருளி அதிகவன்போ டாதரித்து அருளருமை ஞானப்பாலூட்டி அதிக சிறப்பும் ஆனந்தமும் தந்த ஆற்றும இரக்ஷண்ய கர்த்தாவாகிய A. **பாக்கிய நாத சுவாமிகள்** உன்னை விட்டுப்பிரிய எவ்விதஞ் சகிப்பாய்! இவ்வைகை நகரைச் சூழ்ந்திருக்கும் சோலைகளே, ஆறுகளே, கடல்களே, நம்மை இதுவரை பரிபாலித்து வந்த பரமசற்குருவை எவ்விதம் மறந்திருப்போம்! பரிசுத்த மோக்ஷராக்னி மாதாவின் திருவாலயமே, உன்னை மகா அழகிய நவரத்னங்களாலும் தங்கம், பொன், வெள்ளி முதலான உலோகங்களாலும் பட்டுப் பட்டாடையாகிய பீதாம்பரங்களாலும் அலங்கரித்துச் சோதிப்பிரகாசமான வர்த்திகளுடன் சொர்ண கஜிதமாகிய பூமலர்ச் செண்டுகள் நிறைந் திலங்க சதா சதா பரிசுத்த திவ்ய பலி பூசை முதலிய அநுஷ்டானங்களை அதியுன்னத மாட்சிமையோடு நிறைவேற்றிவந்த பரமசற்குருவை எவ்வாறு பிரிந்திருக்கச் சம்மதிப்பாய்! இப்பரமகுருவால் அழகும் அருமையும் அதிசிறப்பும் பெற்ற ஆசிரமே. இதுவரை எங்களிரக்ஷண்ய நாதரை விட்டுப் பிரியாத நீ இனிமே லெப்படி விட்டுப் பிரிந்திருப்பாய். இப்பரம தேசிகரின் அதிக பிரயாசையால் நிர்மிக்கப்பட்ட வித்யாசாலையே, தினே தினே உன்னோ டிசைந்திருக்கும் பாலரோடும் உன்னோடும் நிதம் நிதம் அன்பு பாராட்டி வசித்திருந்த வள்ளலை அகன் றென்னென்றிருப்பாய். ஐயோ மாணவர்களே மாணவிகளே கல்வியையும் ஞானத்தையும் கருணையோடூட்ட அதிசிரம மெடுத்த காதலராகிய நம் பிதாவைக் காணாதிருக்க நம் கண்களுஞ் சகிக்குமா? அமலோற்பவியாகிய பரிசுத்த தேவமாதாவின் சபைக் கன்னிப் பெண்மக்களே. காருண்யசீலமாய்க் கல்வி ஞானமுடன் தேவ தோத்திர சங்கீத சாகித்யங்களைக் கற்பித்தருளிய தந்தையை இனிப்பா ராதிருக்க மனப்பறைப் புயிர் தாங்குமா! செல்வத்தின் சிறப்பமைந்த இவ்வைப்பார் நகரப்பங்கு விஜாரணைக் கர்த்தனாகிய சுடர்வீசு மணிகளுக்காஸ்பத மணியாகிய குசை மாணிக்கமெனும் ஞான ரத்தினமே, தாங்கள் தான் இப்பரமகுருவை நீங்கிப் பிரிய தங்கள் நெஞ்சமுஞ்சகிக்குமா! வைகை மாநகர வாசிகளே நம் நகருக்கு நாகரீகத்தையும் கல்வி ஞானத்தையும்நடைபெறும்படி சீர் திருத்தி நேர் நிலை நிறுத்திய இச்செல்வ சிரோ ரத்தினத்தின் ஆட்சியை இழக்க நேர்ந்த பரிதாபத்தை என்னென்று சொல்லியாற்றவோம்! வானமே, பூமியே, சூரியனே, சந்திரனே, நட்சத்திரங்களே, கடலே, மலையே எங்கள் கிராமத்துக்குச் சீர்சிறப்போடு மலைமேல் தீபமாய்ஜொலித்துவந்த சோதி மணியை மாற்றிப் பிரிக்க மாபாவஞ்செய்தோமோ! அந்தோ! அந்தோ பரிதாபம்!

அருளன்பு சீர் சிறப்பு இவைகளமைய வைகைநகர்க்கோர் பாக்கியமாய் வந்த ஞானவள்ளலெனும் பாக்கிய குருநாதர் கண்ணுங் கருத்தும் காருண்யமும் எம்மிறவைத் தல்லும் பகலும் அதிக அன்பு பாராட்டி எம்மன்பை ஆபரணமாய்ப் பூண்ட ஐயனே, தங்களைப் பிரிந்திருக்க எவ்வாறு சகிப்போம்!? இக்கோலத்துடன் மனங்கசிந் தழுதுருகிநிற்கும் எங்களை விட்டுப்பிரியத் தங்கள் மனம் எவ்வாறு செல்லும்! இஃது சாட்சாதி கடவுளின் திருச்

சித்தமென நிட்சயிக்கின்றோம். ஆகையால் தேவரீரவர்களுக்கு நித்ய சுகமும் நிறைந்த ஞானமும் நீடியஆயுளுங் கொடுக்கும்படிக்கும் எங்களுக்குத் தாங்களடிக்கடி வந்து ஆனந்த தரிசனம் தந்து ஆகவேண்டிய உபகாரங்களைச் செய்யும்படிக்கும் எங்களையும் எங்கள் குடும்பத்தையும் எங்கள் தொழிலையும் எங்கள் கிராமத்தையும் ஆசீர்வதிக்கும்படிக்கும் திரியேக தேவனைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளும்.

வைப்பார்

27—8—1916. பரதகுல கிறிஸ்துவர்கள்

---

### கல்கத்தா.

நமது பரமதாயின் ஜனன தினமாகிய செப்டம்பர்மீ 8உ-யை, வேளாங்கண்ணி, அரியாங்குப்பம், திருச்சி முதலிய விடங்களில் வெகு பூச்சியமாய்க் கொண்டாடுவதால், கல்கத்தா, இரங்கோன், சிங்கப்பூர், சைகோன் முதலிய தூர தேசங்களிலிருந்து முதலாய் அநேகர் திருயாத்திரையாய் அவ்விடங்களுக்குப் போவதுண்டு. ஆனால் கடந்த இரண்டு வருஷங்களாக பல காரணங்களை முன்னிட்டு கல்கத்தாவிலுள்ள அநேக பக்தர்கள் ஷை திருஸ்தலங்களுக்குப் போகக்கூடாததினால் துக்கித்ததைக் கண்ணுற்ற Mr. G. லாசரஸ் அவர்கள், தமிழர்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள அர்ச். சூசையப்பர் கோவிலின் விசாரணை குருவினது அநுமதிபெற்று, தமது நண்பர்களுள் சிலரை ஒன்றாய்க் கூட்டி "திருக்குடும்பச் சங்க" மென்றோர் சங்கமேற்படுத்தி ஷை திருநாளுக்கு முன் நவநாள் கொண்டாடத் துடங்கினர்.

கோவில் வெகு அலங்காரமாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்ததுடன் பீடத்தின் முன்பாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேவமாதாவின் அழகிய சுரூபத்தைக் கண்ட சகலரும் பரமானந்த மடைந்தார்கள். மழையை முன்னிட்டு முடிவுதினத்திற்குமுன்னமேயே (அதாவது 3-ந் தேதி) தேவதாயின் அழகிய உருவமமைந்த கொடி ஒன்று கோவிலையும் அதற்கடுத்தாப்போ லிருக்கும் அர்ச். அந்தோனியார் பள்ளிக்கூடத்தையும் சுற்றிவந்தது. முடிவு தினமாகிய 8-ந் தேதியன்று காலை 7-மணிக்கு சேசுசபை சங். C. லிம்பேர்க் குருசுவாமியாரவர்கள் பாட்டுப்பூசை செய்தார். Mr. லூயிஸ் என்பவரின் மக்களுள் Anna, Mary என்னுமிரு மாதுசிரோன்மணிகள் மாதுரிய குரலோடுபாட, இவர்களின் தமயனார் மானுவேல் என்பவர் ஆர்கன் வாசித்தார். அன்றையத்தினம் விசாரணைக்கிறிஸ்துவர்களுள் அநேகர் திவ்யநன்மை வாங்கினார்கள். அநேகர் தேவதாயின் சலுகையை யிரந்து மன்றாடியதுடன் தாங்கள் நேர்ச்சி செய்திருந்த பொருத்தனையையும் செலுத்தினார்கள். பூசைக்குப்பிறகு திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட, நவநாள் முடிவுபெற்றது.

பரோபகார கருத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட இத் திருக்குடும்ப சங்கமும் அதின் அங்கத்தவர்களும் செழித்தோங்க அர்ச். கன்னிமரியாயி கிருபை புரிவாளாக!

G. Lazarus, Calcutta.

---

### நமது முன்னேற்றம்.

பிரான்ஸ்போர்த்துக்கிஸ் துரைத்தனங்கள் நமது தாயாகிய சத்திய திருச் சபையை விட்டு ஒதுங்கிக்கொண்ட காரணத்தினாலும் தற்போது நடந்துவரும் யுத்த முகாந்தரத்தினாலும் இனிமேல் மேனாட்டிலிருந்து குருப்பிரசாதிகள்வருவது தீர்ந்து போகுமேயெனக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மற்றொரு விஷயம் கேள்வியுற்று மிகவே மனத்துயரடைகின்றோம். அவ்விஷயம் எவ்விஷயமோ வெனில் "இந்தியாவில் கிறீஸ்து மதத்தைப் பரவச்செய்யும் அல்லது கல்வியை அபிவிர்த்தி பண்ணும் நோக்கத்துடன் மேனாட்டிலிருந்து புறப்படநினைக்கும் குருப்பிரசாதிகள் லண்டனில் இந்தியா மந்திரி ஆபிசின் அநுமதி பெறாமல் இனி இந்தியாவுக்கு வரப்படா" தென்பதேயாம். இவ்வுத்தரவு இப்போது சமீபத்தில் பிறந்ததாகத் தான் தெரிகிறது. யுத்தமே காரணமாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோதிலும் யுத்தம் முடிந்தபின் இது எத்தனை காலம் நிலைத்திருக்குமோ எமக்குப் புலப்படவில்லை. சாஸ்வதமாகிவிடுமோ வெனப் பயப்படுகிறோம். அப்படி சாஸ்வதமாகிவிடும்பட்சத்தில் இனிக் கிறீஸ்துவேத பரம்புதல் இவ்விந்தியாவில் எத்தனை தூரம் பாதிக்கப்பட்டுப்போகுமோ வென்பதை அளவிட்டுச் சொல்லுந்தரம் இப்போது கூடுமானதல்ல.'

எம்மதமும் சம்மதமே யென எல்லா வேதத்திற்கும் பொதுவில் நிற்கும் நமது காருண்ய பிரித்தான்னிய அரசாட்சியில் இந்துக்களும்



மகம்மதியரும் மனோ தைரியத்தோடும் விடா முயற்சியோடும் தத்தம் மதக் கோட்பாடுகளையும் ஏனைய லௌகீக சம்பிரதாயங்களையும் பலப்படுத்திக்கொண்டு வருகிறதைப் பார்த்தால், எது இன்னும் 50. 60 வருஷங்களுள் நம்மத்தியில் ஏதேது மாற்றங்களும் தோற்றங்களும் வந்து நேரிடுமோ வெனத் திகைக்கவேண்டியதா யிருக்கின்றது. இந்துக்கள் முன்னேற்றம் இந்துக்கள் கையில் இருப்பதாகவும், மகம்மதியர் முன்னேற்றம் மகம்மதியர் கையில் இருப்பதாகவும், அவர்கள் நினைத்துத் தங்கள் ஜீவாதார நிலைமையை உயர்த்துவதற்காகத் தாங்களே பாடுபட்டுவர, நாமோ வென்றால் நம் முன்னேற்றம் நம் கையிலல்ல நம் குருக்கள் கையில் இருக்கிற தெனச் சொல்லிக்கொண்டு படுத்தபடுக்கையிலேயே இன்னமும் நிலைத்திருப்பது ஒரு சிறிதும் யுக்தமாகமாட்டாது. குருக்களையன்றி சிறு துரும்பும் அசைக்க முடியாத இந்தப் பருவத்தில் மேனாட்டில் இருந்து நம்மை நோக்கி வந்துகொண்டிருந்த அந் நல்ல குருக்களின் தாராளமான வருகைகள் பற்பல ஹேதுக்களால் தடைபட்டுவிடுமாயின் நம்முடையவும் நம் பின் சந்ததிகளுடையவும் கதி யென்னமாய் முடியுமோ அது கடவுளுக்குத்தான் வெளிச்சம். இவ் வினைத்தையும் தீர்க்கதரிசனமா யறிந்தல்லவா காலஞ் சென்றுபோன நமது தாதை 13-ம் சிம்மராயப் பாப்பரசர் இந்தியரிலேயே நமக்கு மேற்றிராணிமாரை நிருபித்துத் தந்தார். இந்தியரிலேயே ஏராளமான குருக்கள் கிடைக்கும்படியாகத் தமது சொந்தச் செலவில் கண்டியிலோர் குரு மடத்தை ஸ்தாபித்துங் கொடுத்தார்.

இந்துக்களுடையவும் மகம்மதியர்களுடையவும் செல்வாக்கு எத்தனை தாரம் பலப்பட்டு வருகின்றதென்பதை நாம் இருந்த இருக்கையில் இருந்துகொண்டுபார்க்க நினைத்தால் முடியாது. இந்தியாவின் ஒரு கோடி முதல் மறு கோடி வரைக்கும் பிரயாணம் பண்ணிப் பாருங்கள். அல்லது அவர்கள் மாதத்திற்கு மாதம் வாரத்திற்கு வாரம் பிரசுரித்து வரும் அபூர்வ கிரந்தங்கள் ஆயிரக் கணக்கானவைகளைக்கொண்டு அளந்து கொள்ளுங்கள். எங்கு பார்த்தாலும் சங்கங்கள், எங்குபார்த்தாலும் சபைகள், எங்கு பார்த்தாலும் பிரசங்கங்கள், எங்கு பார்த்தாலும் கோஷ்டங்கள் இப்படியாக எண்ணிறந்தவை நடக்கின்றன. யூனியன் முதல் நிர்வாகசபை முதல் ஏறக்குறைய எல்லா உத்தியோகமும் அவர்களுக்கே கொடுக்கப்பெற்று வருகின்றன. சென்னை நிர்வாகசபை இந்திய மெம்பர்ஸ்தானத்தில் முன்னிருந்தவரும் இந்துதான், பின்னிருக்கிறவரும் இந்துதான், இனி வரப்போகிறவரும் இந்துவாய்த்தானிருப்பர். அல்லது ஹானரபில் அப்துல்ரகிமைப்போல் ஓர் மகம்மதிய சனவானுக்கு அவ்வுத்தியோகம் கிடைத்துவிடும். ஏன்! நிர்வாக சபைக்கு இந்திய கிறீஸ்துவர்களில் ஒருவர் வரக்கூடாதோ வென்றால் இதற்காக எவர் முயற்சிக்கின்றனர்? எவர் சரமாரியாய்ப் பத்திரிகைகளுக்கு எழுதுகின்றனர்?

இனிக் காலதாமதம் உதவாது. யுத்தம் முடிந்ததும் இந்தியாவிற்கு அநேகவித சதந்தரங்கள் கொடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் கதவுள்ளபோதே பூட்டிக்கொள்" என்பதற்கிணங்க கிறீஸ்துவ சமுகத்தார் தங்களுக்குள்ளிருக்கும் அற்ப அபிப்பிராய பேதத்தை அறவே களைந்துவிட்டு ஆகவேண்டிய காரியங்களுக்கு உடனே முயற்சிசெய்யவேண்டும். தேவாநுக்கிரகத்தால் நமது கையில் இருக்கிறது நம் முன்னேற்றம்.

M. P. Mascarenhas.

---

## MISCELLANEOUS NEWS & NOTES.

## பற்பல சமாச்சாரம்.

---

நீளமான பாலம்—இவ்வுலகத்திலுள்ள பாலங் களுக்குள் மிக நீளமானது சீனதேசத்திலே யிருக்கிறதாம். இது 23,000 அடி நீளமும், 70 அடி அகலமும், 70 அடி உயரமும் உள்ளது. தனித்தனி 75 அடி விஸ்தாரத்துக் கிடையிலுள்ள 300 தூண்களால் அது தாங்கப்பட்டுள்ளது.

ஒரு பையனும் மாதும்.—ஒரு பையன் தெருவில் அழுவதைப் பார்த்து இரக்கமுள்ள ஒருமாது, "ஏன் அப்பா அழுகிறாய்?" என்று கேட்க, "என் காசு கெட்டுப்போச்சு" என்று அவன் சொன்னான். "அழாதே, அந்தக்காசு போகட்டும். இதை வைதுக்கொள்" என்று ஒருகாசைக் கொடுத்து விட்டுப் போக, அவன் முன்னிலும் அதிகமாய் அழ

வதைப்பார்த்து, "ஏன் அழுகிறாய்" என்றாள். அவன் "அந்தக்காசு கெட்டுபோகாமலிருந்தால் இரண்டுகாசாகுமே" என்றான்.

குடியின்மை பெருநன்மை.—மதுபானவிலக்கினால் ஆத்துமத்துக்கு நன்மை, அயலுக்குச் செம்மை, தேகத்துக்குச் சவுக்கியம், செல்வத்துக்கு முக்கியம், மூளைக்குக் குளிர்ச்சி, முயற்சிக்கு வளர்ச்சி, வீட்டுக்குப் பாக்கியம், வெளிக்கு யோக்கியம், ஊருக்குச் செழிப்பு, உற்றார்க்குக் களிப்பு, மடிக்கு மகிழ்ச்சி, மனைக்குப் புகழ்ச்சி, அறிவோர்க்குக் கண்ணியம், அருந்தார்க்குப் புண்ணியம்.

ஜெர்மன் புது வெடிகுண்டும், திராவகமும்.—ஜெர்மனியர் இப்போது ஒரு புது வகையான வெடிகுண்டு கண்டுபிடித்திருக்கிறார்களாம். அது வெடிக்கும்போது அதில் அடங்கியிருக்குந் துண்டுகள் பக்கவாட்டமாய்ப்போய் 30 கஜ விஸ்தீரணத்திற்குப் பரவுகிறதாம். இப்படியே புது திராவகமொன்றும் தற்போது உபயோகித்து வருகிறார்கள். அது இதுவரையிலும் அவர்கள் உபயோகித்துவந்த நெருப்புப் பிடிக்கிற திராவகங்களைப்போலல்ல. இது தேகத்தில் பட்ட மாத்திரத்தில் ஓர் வகையான எரிவந்தம் உண்டாகிறதாம். இதனால் ஒருவன் உடனே சாகாவிட்டாலும் மூன்று நான்கு தினங்களுக்குள்ளாக இறந்துபோகிறானாம்.

மைசூரின் புது மேற்றிராணியார்.—மிகவும் சங்கைக்குரிய தெசியே சுவாமியார் மைசூர் மேற்றிராணியாராக அர்ச். பாப்பானவரால் நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறாரெனக் கேள்வியுற்றுச் சந்தோஷிக்கின்றோம். இம்மேற்றிராசனத்தில் இவர் கடந்த 27-வருடங்களாக பங்கு சுவாமியாராகவும், புரொக்குரேட்டராகவும், விக்கர் ஜெனரலாகவும், சென்ற ஒரு வருடமாக அதிசிரேஷ்டராகவும் மிக்க ஊக்கத்துடன் உழைத்து வந்தவர். இந்த மேற்றிராசன மேய்ப்பராக இவர் தெரிந்துகொள்ளப்பட்டதற்காக நாம் இவருக்கு மனமுவந்து மங்களவாழ்த்துக் கூறுவதுடன் பல்லாண்டு சுகஷேமமாய் இவர் இந்த மேற்றிராசனத்தை யாண்டுவர தேவன் கிருசெய்யவும் பிரார்த்திக்கின்றோம்.

கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.—சென்றமீ 23உ சென்னை பெரிய கோவிலைச் சேர்ந்த செய்ன்ட் மேரிஸ் ஹைஸ்கூல் ஹாலில் எமது அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க ஆலன் ஆண்டவரவர்களை, சென்னை கவர்னர், சென்னை சட்டநிரூபண சபையின் அங்கத்தினராக நியமனஞ் செய்ததற்காக மேற்படி நமது கவனர் அவர்களுக்கு வந்தனமளிக்கவும், நமது அதிமேற்றிராணியாரவர்களுக்குச் சோபனங்கூறவும் இச்சங்கங்கூடினது. அக்கூட்டத்தில் சரியாய் வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார். அநேக குருப்பிரசாதிகளும், சங்கத்தின் அநேக அங்கத்தினரும், வெளியூர்களிலிருந்து சில பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். அதிமேற்றிராணியாரவாகளுக்கு சோபனபத்திரம் வாசித்தானபின் அதை நல்ல வேலைப்பாடான ஒரு வெள்ளிப் பெட்டியில் அடக்கிக் கொடுத்தனர். உபசரிப்புக்குரிய சிற்றுண்டி ஆடல் பாடல்களுடன் கூட்டம் முடிவுபெற்றது.

ஆங்லிக்க்ன் சபையாருக்குத் தேவமாதாவின்பேரில் பக்தி.—இதுவரையிலும் தேவமாதாவின் பேரில் கத்தோலிக்கருக்குள்ள பக்தி விசுவாசத்தை பழித்துப் பரிகாசித்து வந்த ஆங்கிலிக்கன் சபையார் தற்போது ஞானவெளிச்சமடைந்து தேவதாயாரின்பேரில் பக்திவைக்கத் தொடங்கியிருக்கிறார்களென் றறிந்து சந்தோஷிக்கிறோம். ஆங்கிலிக்கன் சபையார் மற்றுமுள்ள புரோடஸ்டான்டு சபையாருக்குள் முதன்மையானவர்களா யிருக்கிறதுமல்லாமல் இவர்களுக்குள் அநேகச் சிறந்த கல்விமான்களு மிருக்கிறார்கள். இக்காலத்தில் மனந் திரும்பி நமது சத்திய திருச்சபையில் சேரும் புரோடஸ்டான்டு மதத்தாருக்குள் இவர்களுடைய தொகையே பெரிதா யிருக்கிறது. இவர்களுடைய ஜெபப் புஸ்தகத்தில் அர்ச். கன்னிமரியாயைக் குறித்து திரிகால ஜெபமும், இன்னும் அநேக ஜெபங்களும், கீர்த்தனைகளும் காணப்படுகின்றன. பரலோகத்தின் வாசலா யிருக்கிற நம்முடைய பரமாண்டவள் இவர்கள் பரலோக பாக்கியத்துக்குப் பங்காளிகளாகக் கிருபை செய்வாளாக.



நெட்டை மனுஷரும் குட்டை மனுஷரும்.—உலகத்தில் வசிக்கும் சகல மனுஷரும் ஒரே உயரமுள்ளவர்களல்ல. அப்படியிருந்தால் அது அநேக காரியங்களுக்குச் சௌக்கியமாயிருக்கும். ஆயினும் சர்வ ஞானமுடைத்தான கடவுள் மனுஷர்களைப் பல சாதியாராயும் பல நிறமுள்ளவர்களாயும் பிரித்திருப்பதுபோல் அவர்களுடைய உயரத்தையும் பலவாறாக விபரீதப்படுத்தியிருக்கிறார். ஐரோப்பாக் கண்டத்தில் பொதுப்பட தென்மார்க், நார்வே, சுவீடன், கிரெட்பிரிட்டன், ஒலாந்து, வடஜெர்மனி, பின்லன்டு, பால்திக் மாகாணங்களில் வசிப்பவர்கள் நெட்டை மனுஷர்களாம். பிராஞ்சு, பெல்ஜியம் மத்திய ஜெர்மனி, சுவிற்சர்லாந்து முதலான தேசங்களின் சனங்கள் நடுத்திட்டமானவர்கள். ருசியா, போலாந்து, ஹங்கெரி, தென் இத்தாலி, ஸ்பானியா, சாக்சனி முதலான தேசங்களின் சனங்கள் குட்டையாயிருக்கிறார்கள். ஐந்தடி ஐந்தங்குலத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் குட்டையர்களென்றும் ஐந்தடி ஆறங்குலமுள்ளவர்கள் நடுத்தரமுள்ளவர்களென்றும் ஐந்தரை அடிக்கு மேற்பட்டவர்கள் நெட்டையர்களென்றும் பிரோப்பெஸ்செர் தெனிகெர், மானிட வகுப்பு வருணசாஸ்திரியார் கூறுகிறார்.

மகா பாரியானவன் ஞான தீட்சை பேற்றது.—காப்பிரி ஜாதியைச் சேர்ந்த ஜேம்ஸ் சிம்மன்ஸ் என்ற 27 வயதுள்ள ஒரு வாலிபன் சில தினங்களுக்குமுன் சங். கோஹாஸ் என்ற சேசுசபை குருசுவாமியார் கையால் ஞானதீட்சை பெற்றான். இவன் பிறந்தபோது 3 பவுண்டு நிறையுள்ளவனா யிருந்தான். இப்போதோ 793 பவுண்டு நிறையுள்ளவனா யிருக்கிறான். இவன் சிறு பிராயத்தில் 10-வருடமளவாக காட்சி சாலையில் வைக்கப்பட்டிருந்தான். இவனுடைய இடுப்பின் சுற்றளவு 9¼-அடி. அவன் போடுகிற சப்பாத்தின் நெ. 9½, அவனுடைய கழுத்துப்பட்டி (காலர்) 24 அங்குலமும் அவன் தொப்பியின் குறுக்களவு 7¾ அங்குலமுமாம். இவனுக்குத் தொப்பியொன்றே கடையில் கிடைக்கக்கூடியது. மற்றவை யனைத்தும் அவனுக்கென்று விசேஷித்துச் செய்ய வேண்டியதாம். அவனுட்கார மூன்று பேர் உட்காரக்கூடிய அவ்வளவு பெரிய நாற்காலி தேவை. அவன் ஒருவனுடைய நிறை அவன் குடும்பத்திலுள்ள ஆறு பேர்களுடைய நிறைக்கு அதிகமாயிருக்கும். இவன் ரயில் வண்டியில் பிரயாணம் செய்யும் போது மற்ற ஜனங்களோடு ஏறாமல், சாமான்களை யேற்றிப்போகும் வண்டியில் ஏறிச் செல்வானாம். இவன் தான் ஞானதீட்சை பெற்றது மன்றி தன் பெண்சாதியும் தன் சகோதரனும் ஞானதீட்சை பெறும்படி ஏற்பாடு செய்திருக்கிறான்.

கலியாண விக்கினம்—பல்கேரியா தேசத்து இளவரசர் பிரிவினைமதமாகிய ருசியசபையைச் சேர்ந்தவர். இவருக்கு ஆஸ்திரிய கத்தோலிக்கு இராசகுமாரத்தியை மெய்விவாகம் செய்துகொடுக்கத் தடையாயிருக்கும் மதபேத விக்கினத்தை நீக்கி உத்தரவளிக்கவேணுமென்று ஆஸ்திரிய சக்கரவர்த்தி பரிசுத்த பாப்பாண்டவருக்கு மனுசெய்துகொண்டார். ஆனால் சில விசேஷ முகாந்தரங்களினிமித்தம் பரிசுத்த பாப்பாண்டவர் உத்தரவு கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார். திருச்சபைக்குமுன் ஏழைப் பிச்சைக்காரனும் பல தேசங்களை ஆண்டுவரும் சக்கரவர்த்தியும் ஒன்றுதான் என்பது இச்சம்பவத்தைக்கொண்டு அறிந்து கொள்ளலாம்.

ஆக்பரின் கிறிஸ்து மனைவி.—இந்தியாவை மொகலாயர் அரசாண்டுவந்த காலத்தில் ஆக்பர் சக்கரவர்த்திக்கு மரியாம் சமானி என்னும் ஒரு அர்மீனிய கிறிஸ்தவ பெருமாட்டி மனைவியாயிருந்ததாகத் தெரியவருகிறது. இந்த இராணிக்கு மேற்படி சக்கரவர்த்தி ஒரு கோவில் கட்டிக் கொடுத்ததுமல்லாமல் அதில் தேவாராதனை சடங்குகளை நடத்த ஒரு குருவானவரை நியமித்து, அவரைச் சவரட்சணை செய்துவந்ததாகவும் புராதன தஸ்தாவேஜுகளைக் கொண்டு கல்கத்தா அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சேசுசபை குருவாகிய சங். H. ஹாஸ்டென் சுவாமியாரும், இன்னும் Mr. பிரடெரிக்பான்தோம் என்பவரும், இந்துஸ்தான் சரித்திராசிரியரான Mr. கீன் என்பவரும், வேற்னேகரும் உருசுப்பிக்கலாமென்கிறார்கள். ஆகிராபட்

டணத்தில் கிறிஸ்தவர்களை யடக்கஞ் செய்யும் தோட்டத்தில் இந்த மேரியென்ற இராணியின் கல்லறை யிருக்கிறதாக ஓர் பாரம்பரிய வதந்தியுமுண்டு. இந்த ஆக்பர் சக்கரவர்த்தி 7, 8 மனைவிமாரை மணமுடித்தானாயினும் அவனுடைய சுருந்த நாட்களில் "அனைவருக்கும் தேவன் ஒருவரா யிருப்பதுபோல், முந்தின மனைவி மலடியா யிருந்தாலொழிய மற்றப்படி ஒவ்வொருத்தனுக்கும் ஒரே மனைவிமாத்திரம் இருக்கவேணு" மென்று ஓர் சட்டத்தை யேற்படுத்தினனும்.

பதிமூன்று மாதங்கள் கொண்ட வருஷம்.-அமெரிக்காவைச்சேர்ந்த நியுயார்க்கிலுள்ள சங். ஹியூம்ஸ் (H. P. Humes) என்னும் சுவாமியார் தற்போது உலகத்தில் நடைபெற்று வருகிற ஒரு வருஷத்தின் 12 மாதங்களை 13 மாதங்களாகப் பங்கிடுவதினால் அனேக அனுகூலங்களுக்கு ஏதுவாயிருக்குமென்று சொல்லுகிறார். அதேதெனில், ஒவ்வொரு மாதமும் 28 நாள் கொண்டதா யிருக்கவேண்டு மென்றும், இப்படி மாதமொன்றுக்கு 28 நாளென்றால் 13 மாதங்களுக்கும் உள்ள நாட்கள் (28×13) 364 நாட்களாகுமென்றும், ஆனால் வருஷமொன்றுக்கு 365 நாளாகும்படி டிசம்பர் மாசத்துக்கு 1 நாளைக்கூட்டி அந்நாளுக்குப் புது வருஷத்துக்கு முந்தின நாளென்று பெயரிடவுஞ் சொல்லுகிறார். நான்கு வருஷத்துக்கு ஒருமுறை வருகிற ஆக்க வருஷம் (Leap Year) 366 நாட்களை யுடையதாகையால், அதிகமாயிருக்கும் அந்த ஒருநாளை புதிதாய் ஜூனுக்கும் ஜூலாயுக்கும் மத்தியில் சேர்க்கவேண்டிய மாசத்தின் 14-ம், 15-ம், தேதிக்கிடையில் சேர்த்து உலகமுழுதும் அந்த நாளைப் பொது விடுமுறைநாளாக கொண்டாடவும் வேண்டியதாம். இப்படிச் செய்வதினால் வருஷத்தின் ஒவ்வொரு மாதமும் ஞாயிற்றுக்கிழமையிலேயே தொடங்குமென்றும், சந்திர மாதங்களுக்கு இந்தப் புது மாதங்கள் ஏறக்குறைய ஒத்து வருமென்றும் முன் சொல்லிய குருசுவாமியார் சொல்லியிருக்கிறார். இப்படி வருஷ மொன்றுக்கு 13 மாதங்களானால், மேற்படி குருசுவாமியார் சொல்லுகிறபடி பல அனுகூலங்களுண்டானாலும் பெரிய அனுகூலம் ஒன்றுண்டு. அதென்னவென்றால், இது வரையில் வருஷத்தில் பனிரெண்டு முறை சம்பளம் பெற்று வந்தவர்கள் எல்லோரும் இந்தப் புது ஏற்பாட்டால் பதின்மூன்றுமுறை சம்பளம் பெறுவார்கள் என்பதே. இந்தப் பஞ்ச காலத்தில் 13 மாதங் கொண்ட வருஷம் சீக்கிரம் சித்தி பெறுமாறு கோருகிறோம்.

ருமேனியா.—இத்தேசமும் நிகழும் ஐரோப்பியயுத்தத்தில் தலையிட்டுக்கொண்டது. வெகுநாளாய் எல்லோராலும் எதிர்பார்த்திருந்தபடி ஐக்கிய கட்சிக்காரர் பக்கத்திலேயே இது சேர்ந்துகொண்டது. தன் நலத்தைக் கோரியே இத்தேசம் இப்படிச் செய்ததேயன்றி மற்றப்படியல்லவென்னலாம். அதேதெனில் ஐக்கிய கட்சியார் தற்போது எப்பக்கத்திலும் முன்னேறிக்கொண்டு போவதினாலும் அவர்களுக்கு ஜெயம் நிட்சயமாய்க் கிடைக்குமென்னும் நம்பிக்கையுண்டென்பதினாலும் இத்தேசமும் அவர்களுடன் சேர்ந்துக்கொண்டது. தன் சுயநலத்தை நாடியே, இத்தேசம் ஐக்கிய கட்சிக்காரரோடு சேர்ந்ததென்றாலும் இதன் ஐக்கியத்தையிட்டு யுத்தம் கூடிய துரிதத்தில் முடிவுக்கு வருமென்பதற் கையமில்லை. அதேனென்றால் ருமேனியா மூன்று லட்சம் போடங்கிய ஓர் நல்ல இராணுவத்தை யுடையது. போர்வீரரும் நேர்த்தியான யுத்தப்பயிற்சி யுடையவர்கள். யுத்தத் தளவாடங்களும் ஏராளமாயுண்டு. இன்னும் மூன்று இலட்சம் போர்வீரர் ரிசர்வி லிருக்கிறபடியினால் ருமேனியாவுக்கு ஆறு லட்சம் பேருடைய இராணுவ மிருக்கின்றதென்னலாம்.

சாமி பாடுபட்ட சிலுவை மரம்.-லோத்தென்பவர் சோதோம் பட்டணத்தினின்று தப்பியோடினபோது, ஓர் சம்மனசானவர் அவருக்குத் தோன்றித் தாம் சைப்பிரஸ் மரத்திலின்று வெட்டியெடுத்துவந்த மூன்று கிளைகளை அவருக்குக் கொடுத்து, "இவைகளை நட்டுவை. இவை முளைத்து வளர்ந்தால் உன்னுடைய பெரும் பாவம் பொறுக்கப்படும். இவை பட்டுப்போனால் உனக்கேற்ற தண்டனை யிடப்படும். அவைகளைப் போஷிக்க நீ வார்க்கும் தண்ணீரானது ஒவ்வொரு நாளும் புதிதாகவே யோர்தான் நதியினின்று கொண்டுவரப்பட வேண்டியது," என்று சொன்னார். இது கடினமான வேலையாயிருந்தும் இதைப்பற்றி லோத் தென்பவர் முறைப்படாமல் ஏற்றுக்கொண்டார். பிரதி தினமும் காலையில் அப் பரிசுத்த ஆற்றுக்குப் போய் அம் மரங்களுக்குத் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றினார். அவை வளர்ந்து மிகவும் செழித்தோங்கின. ஒருநாள் காலையில் தண்ணீர் எடுத்துக்கொண்டு திரும்பி வரும்போது ஓர் பிச்சைக்காரன் வழியோரத்தில் அவருக்கு எதிர்ப்பட்டு தாகத்துக்குத் தண்ணீர் கேட்டான். இதற்கவர் "இவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்த போதிலும் மரங்களுக்கும் போதுமான ஜலம் இருக்கு"மென்று தமக்குள் சிந்தித்துக்கொண்டு அவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தார். பிறகு வேறொருவனும், அவனுக்குப் பின் இன்னொருவனுமாக தண்ணீர் கேட்டதால் இருந்த தண்ணீரெல்லாம் செலவாகிவிட்டது. அப்போது லோத் தென்பவர் தரையிலே குப்புற விழுந்து மரத்துக்குத் தண்ணீ ரில்லையே யென் றழுது, சிரசை யுயர்த்தினபோது ஓர் தேவதூதன் தம தருகில் நிற்கிறதைக் கண்டார். அப்போது தேவதூதன்: "ஏன் அழுகிறாய்" என்று கேட்க, லோத்தென்பவர் நடந்த சம்பவத்தைத் தெரிவித்தார். அதற்கு வானதூதன் "பயப்படாதே, கீழ்ப்படிதலானது சர்வேசுரனுடைய சமூகத்தில் மேலானதாயினும் பிறசிநேகம் அதினும் மேலானது. அவருடைய ஏழைகளுக்கு நீ யுதவினதினால் நீ அவருக்கே ஊழியஞ்செய்தாய். இதற்குப் பலனாக, இது முதல் அம் மரங்கள் தண்ணீரின்றியே செழித்து வளரும். நீ செய்யவேண்டியிருந்த தபசு முடிந்தது" என்றார். அது முதற்கொண்டு லோத்தினுடைய உதவியில்லாமல் அம்மரங்கள் வளர்ந்து வந்தன. அவைகளில் ஒன்றினாலேயே செய்யப்பட்ட சிலுவையில் சேசுநாதர் பாடுபட்டு மரித்ததாகச் சொல்லப்படுகிறது. மனிதர் மேல் வைத்த அன்பினால் மரிக்கத் திருவுள மானவர் பிறசிநேக வரப்பிரசாதத்தால் அர்ச்சிக்கப்பட்ட அம்மரத்தில் பாடுபடலாயிற்று.



## DOMESTIC OCCURRENCES

## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

### நன்மரண அறிக்கை.

**தும்மங்குளம்.**

எனது நேசத் தகப்பனார் ஆரோக்கிய உடையார் நெடுநாள் சீக்காயிருந்து நல்ல நினைவு இருக்கும்போது பாவசங்கீர்த்தனம் அவஸ்தைப்பூசுதல் அவஸ்தைநன்மை முதலிய கடைசி தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று ஆகஸ்டுமீ 26உ சனிக்கிழமை மாலை 6-மணிக்கு புத்திரர்களும் பேரர்களும் மற்றும் இனஜன பந்துமித்திரர்களும் சூழ பாக்கியமான மரணத்தை அடைந்தார். அவருடைய சடலம் 27உ ஞாயிற்றுக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் நேயர்கள் ஆரோக்கிய உடையாருடைய ஆற்றும இளைப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி 1-திரி. வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

தந்தையை இழந்து தவித்து நிற்கும்,

ப. ஆ. அருளாந்துடையான்.

**தும்மங்குளம்.**

எனது அத்தை அருளாயி நெடுநாள் சீக்காயிருந்து அவஸ்தைப்பூசுதல் பெற்று தனது 70-பிராயத்தில் சுற்றத்தார்கள் சூழ 1916ளு செப்டம்பர்மீ 3உ ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு சர்வேஸ்பரன் சன்னிதிக்குச் சென்றார்கள். மறுநாள் 4உ திங்கட்கிழமை நல்லடக்கம் செய்தோம். இதைக் கண்ணுறும் நேயர்கள் அருளாயியின் ஆற்றுமத்துக்காக 1-பர. 1-பிரி. 1-திரி. வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:

பரிதபித்து நிற்கும்,

ஆரோக்கிய உடையான்.

## தேக சௌக்கியம்.

தேக சௌக்கியத்துக்கு நல்ல ஜீரணசக்தியே ஆதாரம். ஜீரண சக்திக் குறைவுள்ளவர்களை எப்பொழுதும் நோயாளிகளென்றே சொல்லவேண்டும். இவ்விதமான அஜீரண முறைப்பாடுள்ளவர்கள் இக்காலத்தில் நூற்றில் எண்பது பேரிருக்கலாம். விசேஷமாய் ஜனநெருக்கம், சுத்தமான காற்றின்மை, துர்க்கந்தம் இவைகள் உள்ள பட்டணங்களில் அனேகருக்கு இந்த நோயிருக்கலாம். இந்த அஜீரண ரோகமுண்டாவதற்கு வேறுபல காரணங்களுமுண்டு. மேலும், இந்த அஜீரண ரோகத்தில் ஆரம்பித்தே பற்பல உதர ரோகங்களும் உண்டாகின்றன. இப்படிப்பட்ட உதர ரோகங்கள் அனைத்தையும்வேரோடு களைந்தெறியத் தக்க வல்ல ஆயுதம் வீரமாமுனிகள் செய்தருளிய சுகந்தரு மாத்திரையே. இந்த வீரமாமுனிவர் சுகந்தரு மாத்திரையானது பசி தீபனக்குறைவு, அடிக்கடி பேதியாதல், புளியேப்பம். அக்கினிமந்தம் முதலியவைகளை நீக்கி, தீபாக்கினியைக் கிரமப்படுத்தி, சுபாவ நிலைமைக்குக் கொண்டுவரும் ஓர் அற்புத சஞ்சீவி. அது மூல வாய்வு, மூலத்தில் வாய்வு தங்குவதால் உண்டாகும் இரைச்சல், இரத்தமும் சீதமும் விழுதல் முதலிய வாய்வினா லுண்டாகும் சகல ரோகங்களையும் போக்குவதில் ஒப்புயர்வற்றது.

யாவருக்கும் திடீரென உண்டாகக்கூடிய வயிற்றுவலி. அஜீர்ணம். வயிற்றுளைச்சல், வாந்தி பேதி முதலிய கொடிய நோய்களைத் தக்ஷணமே ஒரே பொழுதில் கண்டித் தகற்றிவிடுந் தன்மை வாய்ந்தது. பாண்டு, சோகை, பலவீன முதலிய நோய்களையும். உடல்வீக்கம், தேகவெளுப்பு, ஈரல் வீக்கம். காய்ச்சல்கட்டி முதலிய நோய்களையும் தப்பாதகற்றும் அருமருந்து. இம்மாத்திரையைச் சிலநாள் உட்கொண்டுவர அது இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, இரத்த விருத்திசெய்து ஜீர்ணசக்தியுடன், நல்ல பசியை உண்டுபண்ணி; இரத்தப்பழுது இரத்தக் குறைவினாலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியத்துக்குரிய விதமாய் அகற்றி, நரம்புகளுக்கு வலுவையும். தாது புஷ்டியையும், உடம்புக்குப் பலத்தையும், உற்சாகத்தையும், இரத்த புஷ்டியையும் கொடுக்கும்.

வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை வேண்டுவோர் பின்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை 100-மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூ 1—0—0

C. A. Silveira, Branch Office,
27/4, Broadway, Madras.
சி. ஏ. சில்வேயிரா, பிரான்சு ஆபீசு,
27/4, பிராட்வே. மதராஸ்.

திருக்குடும்பந் துணை.

### நீசவாசகனாம் ஆண்டவ ரம்மானை

விலை 6 அணா! விலை 6 அணா!



இந்த ஆண்டவரம்மானை பழைய காலத்து அண்ணாவிமார்களால் பாடப்பட்டு ஓலைச் சுவடியில் எழுதி வைத்திருந்து பிறகு புத்தக ரூபமாக அச்சிட்டு விற்று வந்ததை இப்போது, சங். சு. சி. பாலசாமியா ரவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டு, அதிமேற்றிராணி ஆண்டவரவர்களின் உத்தரவின்படி அச்சிடப்பட்டு. கிறிஸ்துவ சகோதரருக்குப் பிரயோசனமாக, சகாய விலையாகிய 6-அணாவிற்கு விற்கப்பட்டு வருகிறது. இரண்டு புத்தகங்களை மொத்தமாக வாங்குகிற நம் கத்தோலிக்க சகோதரருக்கு, வெகு பிரயோசனமானதாகிய, புரோட்டஸ்டாண்டு மதங்களின் பரீக்ஷை யென்னும் புத்தக மொன்று இனாமாக அனுப்பப்படும்.

தேம்பாவணி விருத்தியுரை மூன்று புத்தகத்தைப்பற்றி நமது நல்ல ஆயனில் பலதரம் விளங்க விரிவாக வெளிப்படுத்தி யிருப்பதால் இப்போது அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. அவைகளை மொத்தமாகச் சொல்லவேண்டுமானால் இந்த புத்தக மிருக்கு மொவ்வொரு வீட்டிலும் தேவாசீர் பெருகுமென்பது ஆன்றோர் வாக்கு. இது 800-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் விலை 3 ரூபா.

சைவ மகத்துவ திமிரபானு விவிலிய விரோததிக்காரமென்னும் பெயர்போன தர்க்க புத்தகம் விலை 2 ரூபா.

நம் சேசுகிறிஸ்துநாதர் திருவாய்மலர்ந்த, ஊதாரிப்பிள்ளை கதை யென்னும் கெட்டகுமாரன் டிராமா. இது துர் நடத்தையுள்ள பொல்லாத பாலியருக்கு நற்புத்திமதிகளை புகட்டக் கூடியது. படங்களுடன் விலை 12 அணா.

ஏ. எப். சைமன்,
கமிஷன் எஜண்ட்,
மஹா விகடதூதன் ஆபீஸ். ஜார்ஜிடவுன் மதருஸ்.

சிங்கப்பூர், பெனாங், நெட்டால் முதலிய தூரதேசங்களுக்கு வி. பி-யிலனுப்பமுடியாது. முன் பண மனுப்பவேண்டும்.






"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 14. | நவம்பர் 1919. | இலக்கம் 11.


## PURGATORY.

### உத்தரிக்கிற ஸ்தலம்.

உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்னும் வேத சத்தியத்தை வேத புஸ்தகத்தினின்றும், பாரம்பரையினின்றும், பிதாப்பிதாக்கள், வேத சாஸ்திரிகள் முதலியவர்களுடைய படிப்பினைகளினின்றும் முன்னொருவிசை எடுத்துக் காட்டலானோம். இப்போது உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமாக்கள் மகா கொடிய வேதனையை அநுபவிக்கிறார்களென்றும், இவ்வுலகத்திலிருக்கும் நாம் அவர்களுடைய வேதனை குறையவும், ஒழியவும் அவர்களுக்கு வெகு சுலபமாய் உதவி ஒத்தாசைகள் செய்யலாமென்றும் தெரியச் செய்வோம்.

உத்தரிக்கிற ஸ்தலத்தின் வேதனையானது இவ்வுலகத்தின் சகல துன்ப துயரங்களையும், சகல நோவு நொடிகளையும், சகல நிஷ்டூரங்கள் நிர்ப்பந்தங்களையும், சகல வேத சாக்ஷிகளு முள்ளான கணக்கு வழக்கற்ற வேதனைகளையும் விட பெரிதும் கடுமையுமானதென்றும், உத்தரிக்கிற ஸ்தலத்தில் ஒரு நாள் வேதனைப்பட்டநுபவிப்பதை விட இவ்வுலக சகல இடுக்கண் துன்பங்களையும், பொல்லாப்புகளையும் அநேகாயிர வருஷங்களுக்கு அநுபவிப்பது சுலபமா யிருக்குமென்றும் அநேக வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

அதேதெனில், அவ்விடத்திலுள்ள ஆத்துமாக்களுக்கு சர்வேசுரனுடைய பேரின்ப தரிசனங் கிடையாதிருப்பதே சகல வேதனைகளிலும் மகா பெரிய வேதனையாகும். உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கிறவர்கள் நம்மைப்போல் இவ்வுலகத்திலிருந்த காலத்தில் சர்வேசுரனை முகமுகமாய்க் கண்டு தரிசிப்பதின் அத்தியாவசியத்தையும், அதினால் தங்களுக்குக் கிடைக்கும் பாக்கியத்தையும் தெளிவாய் உணர்ந்தவர்களல்ல. ஆனால் அவைகளை யிப்போது நன்றாய் உணர்ந்து, சர்வேசுரனைக் காணவும், அவருடனிருக்கவும், அவரோடு ஒன்றிக்கவும் அவர்கள் அணைகடந்த விதமாய் ஆசைப்படுகிறார்கள். ஆயினும் சர்வேசுரனுடைய அளவில்லாத பரிசுத்தத்தனமும் நீதியும் அவர்களுடைய அந்த அணைகடந்த ஆசைக்கு இடங்கொடாததினால்

தங்கள் உள்ளத்தில் மகா கொடிய வேதனையை யநுபவிக்கிறார்கள்.

அன்றியும் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக இவ்வுலகத்தில் இலேசாய் உத்தரிக்கக் கூடுமா யிருந்தும், தங்களுடைய சொந்தக் குற்றத்தினாலேயே அப்படிச் செய்யத் தவறினதைப் பற்றியும், அதனால் இன்னும் தாங்கள் தெய்வ தரிசனத்தையும் மோட்ச பாக்கியத்தையு மடையக் கூட வில்லையே யென்பதைப்பற்றியும் கஸ்தியினால் வாதனைப்படுகிறார்கள்.

இதுவு மல்லாமல் தங்களுக்குக் கிடைக்கப்போகும் மோக்ஷ வெகுமான வரிசையை இன்னு மதிகமாய்ப் பெற்றுக் கொள்ளாமற்போகத் தங்களுடைய அசட்டைத்தனமும் கவலையீனமுமே காரணமென்று அறிவதினாலும் அவர்கள் வேதனைபடுவதோடுகூட, சர்வேசுரனுடைய கோபத்தினால் மூட்டப்பட்ட அக்கினிச் சுவாலையினாலும் உபாதிக்கப்படுகிறார்கள். எப்படித் தட்டான் தங்கத்தை நெருப்பிலிட்டுச் சுத்தி செய்கிறானோ, அப்படியே சர்வேசுரனும் அவர்களை மோக்ஷ பேரின்ப பாக்கியத்துக்குப் பாத்திரவான்களாக்க அவர்களை உத்தரிக்கிற ஸ்தலத்தின் நெருப்பினால் பரிசுத்தப்படுத்துகிறார்.

உத்தரிக்கிற ஸ்தலத்துக்கும் நரகத்துக்கும் மகா பார தூர வித்தியாச மிருந்தபோதிலும் உத்தரிக்கிற ஸ்தலத்தின் அக்கினியும் நரகத்தின் அக்கினியும் ஒன்றுதானென்று வேத சாஸ்திரிகள் படிப்பிக்கிறார்கள். ஆதலாற்றான், உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஒரு அற்ப வேதனையானது இவ்வுலக எவ்வித வேதனையையும்விட மிக்கக் கொடூரமானதென்று பெரிய வேத சாஸ்திரியாகிய அர்ச். தோமாஸ் சொல்லுகிறார். இவ்வித கொடூர வேதனைகளை அநுபவிக்கும் ஆத்துமாக்களுக்கு உதவி செய்வது சர்வேசுரனுக்குகந்ததும், அவ்வாத்துமாக்களுக்குப் பிரியமானதும், நமக்கு மிக்கப் பிரயோசனமானது மென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், நம்மா லியன்றமட்டும் நாம் அவ்வாத்துமாக்களுக்கு உதவிசெய்வது நம்முடைய கடமை. ஏனெனில், அவ்வாத்துமாக்கள் தங்களுடைய பாவங்களுக்காகத் தாங்களே வேதனைப்பட்டு உத்தரிக்கவேண்டியவர்களா யிருக்கிறார்களே யொழிய வேறு விதமாய், அதாவது தங்களுடைய செப தபங்களினாலாவது, தேவத்திரவிய அநுமானங்களினாலாவது பேறு பலன்களைச் சம்பாதித்துத் தங்கள் உத்தரிப்புக் கடன்களைத் தீர்க்கக் கூடாதவர்களா யிருக்கிறார்கள். "இராக்காலம் வருகின்றது அப்போது வேலை செய்ய எவனாலும் முடியாது" (அரு. IX. 4) என்ற வேதவாக்கியப்படி பேறு பலன்களைச் சம்பாதிப்பது மறு வுலகத்தில் கூடாத காரியம். ஆனால் இவ்வுலகத்திலிருக்கும் நாமோவெனில் அவர்களுக்கு இலேசாய்ப் பலவித உதவி ஒத்தாசைகளைப் புரியலாம். எல்லாவற்றிற்கு மேலாக நாம் அவர்களுக்காக திவ்வியபூசை காண்பதினாலும், செய்விப்பதினாலும் அதிக உதவி செய்யலாம். அல்லாமலும், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்கியவர்களுக்காக ஒப்புக்கொடுப்பதினாலும், செபத்தியானம் செய்வதினாலும், விசேஷமாய்ச் சிலுவைப் பாதை சேவிப்பதினாலும், செபமாலை வேண்டிக்கொள்வதினாலும், மற்றும் ஞானப் பலன்க ளளிக்கப்பட்டிருக்கும் செபங்களைச் செபித்து அப்பலன்களை அவர்கள் வேதனை குறைய சர்வேசுரனுக்கு ஒப்புக் கொடுப்பதினாலும் நாம் அவர்களுக்குப் பேருதவி புரியலாம். அன்றியும் தான தர்மம் செய்வதினாலும், ஒறுத்தல் செய்வதினாலும் நாம் அவர்களுக்கு இளைப்பாற்றியை வருவிக்கலாம். ஆகையாற்றான் பல பத்தியுள்ள புண்ணியவாளர்கள் தங்கள் சீவிய காலத்திய சகல நற்கிரியைகளின் பேறு பலன்களை யெல்லாம் உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களுடைய இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கிறார்கள். சத்திய திருச்சபையும் அவர்களுடைய இந்த வீரச் செய்கைகளை யங்கீகரித்துப் புகழ்கின்றது.

இவ்விதமாய் நாம் உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களுக்கு உதவி புரிவோமானால் சம்பாவனை யடையாமற்போகமாட்டோம். ஏனெனில், தாகமா யிருக்கிறவர்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுப்பதற்காக மோக்ஷ சம்பாவனை யளிக்கும் சர்வேசுரன், தமக்குப் பிரியமுள்ள உத்தரிக்கிற ஸ்தலத்தி லிருக்கிற ஆத்துமாக்களுக்கு நாம் புரியும் உதவி சகாயங்களுக்குச் சம்பாவனை அளிக்கத் தவறமாட்டார் என்பது திண்ணம். மேலும் நம்முடைய செப தபங்களாலும் புண்ணியக் கிரியைகளாலும் உத்தரிக்கிற ஸ்தலத்தினின்று மீட்கப்பட்டு மோக்ஷம் சென்றவர்கள் தங்கள் உபகாரிகளான நம்மை ஒருக்காலும் மறக்கவே மாட்டார்கள். அவர்கள் நமக்காக எப்போதும் வேண்டிக்கொள்ளுவதோடுகூட நம்முடைய சகல இக்கட்டு வருத்த துன்பங்களிலும் விசேஷமாய் நம்முடைய மரண நேரத்திலும் நமக்கு உதவியாய் இருப்பார்கள். உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கும்போதே அவர்கள் தங்களுடைய உபகாரிகளுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்களென்று சில வேத சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். நம்முடைய உதவியால் மோட்சத்தை யடைந்தவர்கள் நாம் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கும்போது நமக்காக விசேஷமாய் இடைவிடாமல் சர்வேசுரனிடத்தில் மன்றாடுவது மல்லாமல், நமக்காக மற்றவர்களையும் வேண்டிக்கொள்ளும்படி தூண்டுவார்கள். இதுவுமல்லாமல் நாம் இவ்வுலகத்திலிருக்கும்போது மற்றவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவோமானால், நமக்குப் பின் இவ்வுலகத்தில் சீவிப்பவர்களும் நமக்காக வேண்டிக்கொள்ளுவார்கள். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே இரக்கமடைவார்கள்."

(மத். 5. 7.)



## HONOUR THE PRIEST.

*(A True Story.)*

## குருவானவரைக் கனம்பண்ணு.

(ஒரு மெய்க்கதை.)

முன் தொடர்ச்சி

இம்மொழிகளைக் கேட்டதும் சவரிநாதன் மனம் இளகிவிட்டது. அவன் விழிமுளரியிலின்றும் நீர் தாரை தாரையாய் வழிந்தது. முகத்தைத் தலையணையால் மூடிக்கொண் டழுதான்; தலைநிமிர்ந்து பார்க்கையில், அவன் கண்ணீரைச் சுவாமியார் துடைக்கவேண்டிய தாயிற்று; ஏனெனில், பாவம், கட்டிலிருந்தாலல்லவோ கண்ணீரை யவன் துடைக்கக்கூடும். "ஓ! சுவாமி! இவ்வளவு காலம் அக்குருவானவர் என்மேல் குரோதங்கொண்டு கோபமாயிருப்பாரென நீங்கள் நினைக்கிறீர்களா? என் அதிர்ஷ்டவீனத்தால் கர மிழந்தது நியாயந்தானென்றும், இத்தகைய தண்டனைக்கு நான் பாத்திரவானென்றும் சொல்லி யென்னை நிந்திப்பாரா?" என்று வெகுபரிதாபமாய்க் கேட்டான்.

சுவாமியார்—"இல்லை! இல்லை! ஒருக்காலும் அப்படி நடவாது. அப்படி நீ நினைப்பதே தவறு—ஒரு குருவானவர் அத்தகைய எண்ணங்களைத் தன் புத்தியில் வைத்திரார் என்று நிச்சயமாய் நம்பு; அமைதியாயிரு; அலட்டிக்கொள்ளாதே. வா, சவரிநாதா. என்ன யோசனை! உனக்கினி வரவிருக்கும் நற்காலத்தினறிகுறிகள் இப்போதே தோன்றுகின்றன. பொறுமையுந் தாழ்மையும் பொன்னுலகுய்க்கும். தாழ்ச்சியை யநுசரி; கடவுள் உனக்கிருக்கும் துன்பவருத்தங்களைப் பரிதிமுற் பனிபோற் களைந் தெறிவார். ஒன்றுக்கு மஞ்சேல். இதோ நான் போய் சின்னப்பநாதரைக் கண்டு பேசுகிறேன்." என்று புன்முறுவல்பூத்தமுகத்துடன் அவனிடம் விடைபெற்று அவ் வறையை விட்டகன்றார்.

சின்னப்பநாதசுவாமியார் படுத்திருந்த அறை கொஞ்சதூரத்தில் கட்டிடத்தின் பின்புறமிருந்தது. சுவாமியார் அவ்வறையை நோக்கி நடந்தார். போகையில் சவரிநாதன் மனந்திரும்பிய அற்புதசம்பவத்தை நினைத்து நினைத்து மனம் பூரித்தவராய், அம் மனந்திரும்புதலின் காரணராகிய காருண்ய கடவுளுக்கு மனமாற நன்றிபுரிந்துகொண்டே சென்றனர். சின்னப்பநாதரின் அறைக்குள் நுழைந்தார். வயதுசென்றமையால் இயல்பாயுண்டாகும் பிணியால் வருந்திய அக்குருவானவர் தன்படுக்கையி லிருந்தவண்ணமே தன் மெல்லிய குரலால், தன்னறைக்குள் நுழைந்த சுவாமியாரை வரவேற்றுத் தன் மெலிந்த கரங்களை நீட்டினார். அன்பு மருளும் நிறைந்த அவரினிய வதனம் புன்னகை யரும்பிப் பிரகாசித்தது. "வாருங்கள் சுவாமி! இன்னம் பாவிகளை மனந்திருப்பு மலுவல்தானா?" என்றார்.

சுவா.—அதனிலும் மேலான அலுவலொன்றுளது, சுவாமி, இன்றைக்கு உடம்பு எப்படியிருக்கிறது? சற்றுச் சௌக்கியமென்றே நம்பு

கிறேன்; தங்கள் முகத்தைப் பார்த்தால் நோய் கொஞ்ச மடங்கியிருப்பதாகத் தோன்றுகிறது.

சின்.—இப்படி யுட்காருங்கள். உம்முடைய அலுவலின்னதென்று என்னிடஞ் சொல்லுங்கள்; நான் கேட்க ஆவலாயிருக்கிறேன். நானிவ்வுலகிலிருப்பதெல்லாம் சொற்ப காலமே. ஆதலால் என்னோ டெப்படியிருந்தாலென்ன? அதைப்பற்றிய கவலையைவிட்டு தங்கள் அலுவலின்னதென்றியம்பும். ஆயினும் இன்றைக்கெனக்குக் கொஞ்சம் சௌக்கியமாகத்தானிருக்கிறது.

சுவாமியார் உட்கார்ந்தார்; தனக்குள்ளேயே சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லி, புரந்த குரலில்: "சுவாமீ, தாங்கள் ஒரு காலத்தில் மெய்ஞ்ஞான புரத்தின் பங்கு சுவாமியாராயிருந்தது தங்கள் ஞாபகத்திலிருக்கிறதா?" என்று வினவினார்.

சின்.—நன்றாக ஞாபகமிருக்கிறது. அது ஓர் அழகிய சிறுநகர். பங்கு ஜனங்களெல்லாம் அன்பும் பக்தியும் நிறைந்த மாந்தர். அநேகமாய் எல்லோருங் கத்தோலிக்கரே. அவ்வூரில் ஒரு குடும்பமிருந்தது. அக்குடும்பத்தில் சவரிநாதன் என்றும் ஒரு சிறு பையனிருந்தான். நல்ல பையன்; அவனை நான் என்றும் மறப்பதில்லை; ஏனெனில் அவன் மிக்க முன் கோபி. ஆனால் அவன் கோபம் ஒரு நொடியில் மாறி யுடனே மன்னிக்குங் குணமுடையவன். அவனுக்குக் கோபம் வருவதுந் தெரியாது போவதுந் தெரியாது. மற்றப்படி யவனைப்போல் நல்லபையன் அகப்படுவதருமை. அவன் இப்போ தெங்கிருக்கிறானோ, அறியேன்.

சுவா.—அவன் இப்போது இதே ஆஸ்பத்திரியில் இருப்பதாய் நீங்கள் கேள்விப்பட்டால்?

சின்.—என்ன? வேடிக்கை செய்கிறீரா? இதே ஆஸ்பத்திரியிலா? முடியாத காரியம்! அவனே யிங்குவரவேண்டும்? பாவம்! சவரிநாதன் இளங்காளை யாயிற்றே. அவனுடம்புக்கென்ன?

சுவா.—சவரிநாதனுக்கு நேர்ந்த விபத்தின் வரலாற்றைச் சுருக்கமா யெடுத்துரைத்தார். அதைக் கேட்ட வயோதிபரின் கண்களில் நீர் ததும்பிற்று.

சின்.—பாவம்! சவரிநாதனுக்கா? என்ன நிர்ப்பாக்கியம்! அவனுக்குக் கல்யாண மாய் விட்டதா?

சுவா.—ஓரழகிய சிறுமியை மணந்து ஒரு குழந்தையுமிருக்கிறது. அவ்விருவரையும் நான் பார்த்தேன்.

சின்.—அவன் மனைவி நல்ல கிறிஸ்தவள் தானோ?

சுவா.—ஆமாம். சுவாமீ, திட மனதும் பக்தியு முள்ளவள்.

பின்னர் சுவாமியார் சவரிநாதனுடைய சீவிய சரிதையைச் சொல்ல வாரம்பித்தார். அவன் மனஸ்தாபம், குருவானவரை யடிக்க ஓங்கிய கரங்களின் வரலாறு முதலியவற்றை யெடுத்துக் கூறி, அவன் கரங்களுக்கு நேர்ந்த விபத்து தேவ கோபாக்கினையே யென அவன் நிச்சயமாய் நம்பி மனம் வருந்துவதாகச் சொன்னார்.

சின்.—அத்தினம் எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. அச்சம்பவ முழுதும் நடந்தது நடந்தாப்போல், இப்போதுதான் நடந்தது போல் என் மனக் கண் முன்னிற்கின்றது. நன்றால் எழுந்து நடக்கக் கூடுமான சக்தி யுண்டானாலும் என்னை வந்து பார்க்கும்படி சவரிநாதனிடம் சொல்லுங்கள். இதைப்பற்றி யவனிடம் நானே பேசி யவனைச் சமாதானப்படுத்துகிறேன்.

இவ்வாறு கொஞ்ச நேரம் பேசியிருந்து சுவாமியார் அவ்வறையினின்றுங் கிளம்பி நமது நோயாளியின் அறைக்கு வந்தார். அங்கே யவன் மனைவி மரியம்மாளும் வந்திருந்தாள். சவரிநாதன் சுவாமியாரிடஞ் சொன்ன சரிதையை யவளிடஞ் சொல்ல, அவள் முகத்தில் துக்கக் குறிகள் தோன்றின.

சுவா.—நான் சின்னப்பநாதரைச் சற்று முன் பார்த்தேன். சவரிநாதா, அவர் உன்னை மறக்கவேயில்லை. உன்னைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் அவருக் கதிகம். அந்த வயோதிபரிடம் நீ சென்றால், அவர் உன்னை மிக்க அன்பாய் நடத்துவார். அவர் இவ்வுலகில் அதிக நாளிருக்கப் போவதில்லை. மெய்ஞ்ஞான புரமென்று வாயெடுத்ததும், அவரே யுன்னைப்பற்றிப் பேச ஆரம்பித்து, உன்னைப்போல் நல்ல பிள்ளை கிடைப்ப தருமை யென்றார்.

சவரி.—ஆ! சின்னப்பநாதரா? அவரன்பிற்கு நான் பாத்திரவானல்ல. ஓ! சுவாமீ, நான் அவரைப் போய்ப் பார்க்கவேண்டுமே! நான் எப்போ போகலா மென்று நினைக்கிறீர்கள்? என் கரங்கள் அநேகமாய்ச் சொஸ்தமாய் விட்டன.

சுவா.—வைத்தியரைக் கேள். எழுந்துட்கார்ந்து அறைக்குள் உலாவும் நீ, அறைக்கு வெளியில் சென்று வருவதால் கெடுதி யொன்று மிருக்காதென்று நினைக்கிறேன்.

சவரிநாதன் சுவாமியார் சொன்ன வண்ணமே தான் கீழிறங்கிச் சென்று ஒரு நண்பரைப் பார்த்துவர வைத்தியரை யுத்தரவு கேட்டான்.

வைத்தியர்.—காலப் போக்காக நீர் என்ன செய்த போதிலும் அது நல்லதே. ஆனால் நீர் சீக்கிரம் சொஸ்த மடைவீர்.

ஆதலால் மறுநாள் சின்னப்பநாதருக்குக் கெடுதி யொன்று மில்லாவிட்டால், சவரிநாதனும் அவன் மனைவியும் சுவாமியார் சகிதமாய்ப் போய்ப் பார்ப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. சின்னப்பநாதரும் மறுநாள் பார்க்கத் தடையொன்றுமில்லை யெனச் சொல்லி யனுப்பினார். அப்படியே மறுநாள் பிற்பகல் சவரிநாதன் தன் மனைவியைப் பிடித்துக்கொண்டு சுவாமியாரும் பக்கத்துணையாய் வர, மெதுவாய் நடந்து சின்னப்ப நாதர் அறைக்குச் சென்றான்.

நோயாளியாகிய வயோதிப சுவாமியார் வெளுத்த முகத்துடன் வாசற்படியைப் பார்த்த வண்ணம் அசைவற்றுப் படுத்திருந்தார். மேற்கூறிய மூவரும் அறைக்குள் நுழையவே, அவர் வதனம் புன்னகை பூத்து விளங்கியது. தன் மெலிய கரங்களை நீட்டி, "என்னேச மகனே சவரிநாதா! உன்னைப் பார்த்ததும் தெரிந்துகொண்டேன். பெரிய மனிதனாய் வளர்ந்து விட்டாயே." என்று அவன் கரங்களின் நிலைமையைப் பார்த்து மிக்கப் பரிதாபத்துடன் கண்களில் நீர் ததும்ப, "ஐயோ பாவம்! என்ன நிர்ப்பாக்கியம்!" என்று அதற்கு மேல் ஒன்றுஞ் சொல்ல முடியாதவராய் அவனை யுற்று நோக்கிய வண்ணமிருந்தார்.

சவரிநாதன் அவர்படுக்கையண்டை முழந்தாட் படியிட்டான். சாவினறிகுறிகள் தோன்றும் அக்குருவானவரின் முகத்தைக் காண அவனிதயம் பிளந்தது. "ஓ! சுவாமீ! தாங்கள் என்னை யன்புடன் நடத்த நான் பாத்திரவானல்ல. ஒருகாலத்தில் நான் தங்களை யடிக்கக் கையோங்கினேன். தங்களிடம் மன்னிப்புக் கேட்பதில்லை யென்று சபதங்கூறினேன். நான் செய்தது தப்பிதமென நான் நன்குணர்ந்த போதிலும், தங்களிடந் திரும்பிவரவில்லை. இப்போது நீங்கள் என்னை மன்னிப்பீர்களா? என் பாவத்துக்காக கடவுள் என்னைத் தண்டித்து விட்டார்!" என்று கதறினான்.

சின்னப்ப நாதர் தன்னோயையுங் கவனியாமல், சற்றே நிமிர்ந்து, நடுநடுக்குந் தன் கரங்களால் சவரிநாதனைக் கட்டிக்கொண்டு, "சவரி, மன்னிப்பா? நானா உனக்கு மன்னிப்பளிப்பது? என் சர்வேசுரன் எற்கனவே உன்னை மன்னித்து விட்டாரே. இந்த விஷயமாய் நீ மனம் நொந்து மிக வருந்தியிருக்கிறா யென்றெனக்குத் தெரிகிறது. நீ யுன் பாவக்கடனைத் தீர்த்து விட்டாய். நானும் உன்னை மனப்பூர்வமாய் மன்னிக்கிறேன்; ஏனெனில் நீயும் அக்காரியத்தை முன்கோபத்திற் செய்தாய்; நீ செய்வதின்னதென அப்போதுனக்குத் தெரிந்திராது மகனே, தைரியமாயிரு. சீக்கிரம் உன் பங்கு சுவாமியார் தேவசந்நிதியிலிருப்பார்; உன் இரட்சகரி னிருதயத்தை யிளக்குஞ் செல்வாக்கு அவருக்கிருக்குமானால், நீ கையிழந்ததை எப்பவும் உணராமலிருக்கச் செய்யக்கூடும். சவரி, நான் சொல்வதுனக்குக் கேட்கிறதா?" என்றார். அந்த நல்ல குருவானவர் இதற்குமேற் பேசமுடியாமல் கலை மேலிட்டு அப்படியே படுக்கையில் வீழ்ந்து விட்டார்.

"ஓ, சுவாமீ! நான் உங்களை நம்புகிறேன். என்னை ஆசீர்வதியுங்கள். நான் சௌக்கியப்பட்டு நல்லவிதமாய்ச் சீவிப்பேன் என்று சொல்லுங்கள். என் சீவிய முழுமையு மாற்றி சர்வேசுரனுக்குப் பிரியப்பட நடப்பேன். இதோ நாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கும் என் மனைவி சாட்சியாகச் சொல்லுகிறேன். அப்படியே நான் நடக்க கடவுள் கிருபை புரிவாராக" என்று சவரிநாதன் அழுதுகொண்டே மொழிந்தான். அவனுடைய மனைவி மரியாளும் கண்ணீர் சொரிந்துகொண்டே தன் கணவன் கண்களைத் துடைத்தாள்.

சின்னப்பநாதர் கடைசியாகத் தன் பலத்தையெல்லாம் ஒன்றுகூட்டித் தன் தலையைச் சற்றே தலையணைமேல் நிமிர்த்திச் சொல்வார்:—"சவரி, சர்வேசுரன் உன்னை ஆசீர்வதிப்பாராக. அவர் உனக்கு நல்ல காலத்தைத் தந்தருளுவாராக. உன் குடும்பத்துக் காறுதலையும், உன்னுத்துமத்துக்குச் சமாதானத்தையுந் தந்தருளுவாராக. முடமான உன் கரங்கள் உன் முன்னேற்

றத்தைக் கிடையூறு யிராமல், நீ இவ்வுலகில் இருக்குமளவும் சந்தோஷமாய்ச் சீவிக்கும்படி கடவுள் அருள்புரிவாராக. ஆமென்.” என்று சொல்லி சவரிநாதன்மேல் தன் கரங்களை நீட்டி சிலுவை யடையாளம் வரைந்து, குனிந்துள்ள அவன் சிரத்தின்மேல் தன் கரம் படியும்படி அதை வைத்தார்.

அப்போது அவ்வறை நிசப்தமாயிருந்தது, என்ன காட்சி! எல்லோரு முழந்தாட் படியிட்டு தேவாசீர்வாதம் பெற்றனர். களைப்பால் வயோதிபர் கண்ணை மூடிக்கொண்டார். சவரிநாதன் தனக்கு முதல்தரம் தேவ சற்பிரசாதத்தை யூட்டிய கரங்களைப் பயபக்தியுடன் குனிந்து முத்தமிட்டான். அவன் மனைவியும் அப்படியே செய்தாள். எல்லோரும் எழுந்து சந்தடி செய்யாமல் அவ்வறையினின்றும் வெளியில் வந்தனர். சவரிநாதன் வாசற்படியண்டை வருகையில் கடைசித் தடவையாகத் தன்னேச நண்பராகிய குருவானவரை மீண்டுந் திரும்பிப் பார்த்தான். அவர் அப்போது கண் விழித்துப் புன்னகை கொண்டார்.

அதன் பின்னர் அக்குருவானவரை யவர்கள் உயிருடன் பார்க்கவில்லை. அவர் ஒரு வார முடியுமுன் இவ்வுலகை விட்டு நீங்கி சவரிநாதனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற தேவ சந்நிதி சென்றார்.

சவரிநாதன் சீக்கிரத்தில் சொஸ்தமடைந்தான். ஆஸ்பத்திரியிலிருக்கும்பொழுதே பொய்க்கரமொன்று அமைத்து மாட்டிக்கொண்டு, அதை யுபயோகிக்கக் கற்றுக்கொண்டான். அவன் ஆஸ்பத்திரியை விட்டேகுகையில், அவன் சரீரமும் ஆத்துமமும் முழுதுமாறி ஒரு புதிய மனிதனாய் வெளிப்பட்டான். அவன் தேக நிலைமைக்குத் தகுந்தமாதிரி, உடனே அவனுக்கு ஒரு நல்ல வேலையும் கிடைத்தது. அவ்வேலையைக் கடைசிவரையில் காப்பாற்றி தன் எஜமானுக்குத் திருப்தி வர நடந்து, தன் னலுவலைச் சீராகப் பார்த்து வந்தான். தன் பங்கு சுவாமியாருக்கவன் வாக்களித்த வண்ணம் அவன் நல்ல பிள்ளையாகவே நடந்து வந்தான். அவன் குடும்பம் பெருகி, க்ஷேமமும் சமாதானமும் அக்குடும்பத்தை இன்னும் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. அவன் கரமிழந்ததால் உண்டான கஷ்டத்தை யுணர்வதாய்த் தோன்றவில்லை; ஏனெனில் அவன் வேலைக்கு முக்கியமாய் வேண்டியதெல்லாம் கண்ணே யொழிய கரமல்ல. அவன் எஜமானும் சவரிநாதனுடைய சுறுசுறுப்பையும் உண்மைக் குத்தார முடைமையையுங் கண்டு அவனை மெச்சி வருகிறார்.

சின்னப்பநாதருடைய நாமம் அக்குடும்பத்தில் வெகு மரியாதை வணக்கத்துடன் அதிமுதல் உச்சரிக்கப்பட்டு வருகிறது. சில சமயங்களில் சவரிநாதன் தன் நண்பர்களைப் பார்த்து, “இழந்துபோன சர்வேசுரனை மீண்டும் காணும் பாக்கியம் பெற்ற பாவியினிடத்தும் மோட்சத்தில் சம்மனசுக்கள் ஆனந்திப்பது உண்மையினும் உண்மையாம்” என்று சொல்வது வழக்கம். மேலும் அவன் தன் இரு கண்மணிகள் போலும் தனக்குக் கிடைத்த தன் இரண்டு புத்திரர்களையும் பார்த்து “என் மக்களே, குருவானவரைக் கனம்பண்ண எப்போதும் மறவாதீர்கள்.” என் றடிக்கடி சொல்வானும்.

*S. Selva Raju.*

## EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

### 1.—அதிகாரம் ; வசனங்கள் (26-27)

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—(26) “ஆறும் மாதத்தில் கபிரியேல் என்னும் தேவதூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டு (27) தாவீதின் கோத்திரத்தாராகிய சூசையப்பர் என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாகபந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் வந்தார். அந்தக் கன்னிகையின் பேர் மரியம்மாள்.

தேவ கன்னிமரிக்கு கபிரியேல் தேவதூதன் மங்களம் கூறிய விசேஷம், அன்பும், அருளும், இன்பமும், மதுரமும், நிறைந்ததுமாய் எவ்விதத்திலும் மகத்துவமும் உன்னதமும் பெற்றதுமாய் விளங்குகிறது. ஏனென்றால் தூதனை அனுப்பினவர், விண்ணுலக இராசாதி இராசாவாகிய நித்திய உன்னதக்கடவுள்; அனுப்பப்பட்ட தூதனும் உன்னதமானவர்; தூதனைக் காணப் பெற்றவளும் உன்னத திவ்விய கன்னிகை. தூதன் கொண்டுவந்த சுபசெய்தியும் உன்னதமானது. இதுவே உலகில் மனிதர் நடுவில் நடைபெறும் சகலமான காரியங்களையும், தூது செய்திகளையும் பார்க்கிலும் சிறந்து உயர்ந்து ஒப்பு உவமை எல்லாம் கடந்து தனியாய் நிற்கின்றது. ஏனென்றால் இதிலேதான் சமஸ்த மனிதருடைய இரட்சண்ணியத்தைப் பற்றி சர்வ வல்லப நித்திய கடவுள் ஓர் எளிய கன்னிகையிடம் தம் தூதனை அனுப்பி, தம் உட்கருத்தை வெளியாக்கி, அதற்கு இணங்கும்படி அவளைக் கேட்டுக்கொண்ட அன்பான அற்புத வர்த்தமானம் அடங்கியிருக்கிறது.



அர்ச். லூக்காஸ் இம் மங்கள வர்த்தமானம் நடந்த காலத்தையும், இடத்தையும், அனுப்பப்பட்ட தூதனையும், தூதனை ஏற்றுக்கொண்ட கன்னிகையையும் எல்லாவற்றையும் பற்றி தெளிவாயும் நுணுக்கமாயும், சிறந்த நடையில் சரித்திர மேரையாய் எழுதுகிறார்.

26-வது வசனம். ஆறும் மாதத்தில் கபிரியேல் என்னும் தேவ தூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டார்.

ஆதிகாலத்தில் ஆதித்தாயாகிய ஏவாள் துர்மனப் பசாசு அனுப்பிய சர்ப்பத்தின் வஞ்சக நயமொழியைக் கேட்டு மதிமயங்கிக் கெட்டு மனுக்குலத்தை நித்திய கேட்டுக்கும் நிர்ப்பாக்கியத்துக்கும் முள்ளாக்கினதுபோலவே, சர்வஜீவ தயாபரக் கடவுள் அனுப்பிய சம்மனசின் திவ்விய உண்மையான சுபமொழியால், பரிசுத்த கன்னிமரி கர்ப்பந் தரித்து தான் ஈன்ற தேவ குமாரனால் ஏவையின் சீர்குலைந்த மக்கள் யாவரும் இரட்சண்ணியமடைய காரணமானாள்.

சம்மனசுகள் வழியாய் தேவகொடைகளும் வரங்களும் மனிதர்களுக்கு அளிக்கப்படுவது தேவபராமரிப்பின் ஏற்பாடு என்று அர்ச். தோமாஸ் வசனிக்கிறார்.

“ஆறும் மாதத்தில்” அதாவது எலிசபேத் கர்ப்பந்தரித்த காலம் துவங்கி ஆறு மாதங்கள் கணக்கிடப்படுகின்றன.

கபிரியேல் தேவதூதன் அதிதூதர்களில் ஒருவர். “கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டார்”:— நாசரேத் என்னும் ஊர் யூதேயாவில் அல்ல, இசராயேல் இராஜாங்கத்தைச் சார்ந்த கலிலேயாவிலுள்ள சிறப்பற்ற தாழ்ந்த எளிய ஊர். பழைய ஏற்பாட்டின் புஸ்தகங்களில் இவ்வூரின் பெயரே கிடையாது. மெஸியாஸ் பூலோகத்தில் உதிக்கும் காலத்தில் தாவீது இராசாவின் அரசு முழுதுமே அற்றுப்போகும் என்று இசாயாஸ் தீர்க்கதரிசி வசனித்திருக்கிறார். (7-ம் அதிகாரம் 6-ம் வசனம்)

இந்தத் தீர்க்கதரிசியின் வசனத்துக்கு இசைவாய் தாவீது இராசாவின் நிகரற்ற இராஜ கோத்திரம் யூதஜனங்களால் புறக்கணிக்கப்பட்ட கலிலேயா நாட்டின் ஓர் சிற்றூரில் இவ்வாறு சிறுமையிலும் வறுமையிலும் மறைந்து தாழ்ந்து கிடந்தது.

27 வது வசனம். “தாவீதின் கோத்திரத்தாராகிய சூசையப்பர் என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாகபந்தனமான ஓர் கன்னிகை யிடத்தில் வந்தார்” லத்தீனிலும், கிரேக் பாஷையிலும் De Domo David “தாவீதின் வீட்டார், அல்லது கோத்திரத்தார்” என்னும் பதங்கள் கன்னிகை, சூசையப்பர் என்ற பேர்களுக்குப் பின் வந் தமைகிறபடியால், சூசையப்பர் மாத்திரம் அல்ல, கன்னிமரியுங்கூட தாவீது இராசாவின் கோத்திரத்தில் உதித்தவர்கள் என்று இவ்வசனம் தெளிவாய்க் கூறுகின்றது. (பேதா, அல்பெர்துஸ்)

“அந்தக் கன்னிகையின்பேர் மரியம்மாள்.” தேவதாய் முப்பொழுதும் கன்னிகையாயிருந்தாள் என்பது விசுவாச சத்தியம். அவளுக்கு மூன்று பிராயம் நடக்கும்போதே அவளுடைய தாய்தந்தையர் தாங்கள் நேர்ந்து கொண்ட நேர்ச்சிக்கடன்படி அவளைத் தேவாலயத்தில் ஒப்புவிக்க, அவள் தன் கன்னிமையின் வார்த்தைப்பாட்டை மனோபிரீதியாய் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து அதனை சாகுந்

[illegible]

... Miriam ... Maryam ... [illegible]

... (Myrre) ... [illegible]



[illegible]

S. M.

## GNANAMANI. III PART.
## ஞானமணி 3-ம் பாகம்.

37-ம் அதிகாரம்.

[illegible]



[illegible]

பங்.—ஒரு நல்ல மனிதனை இகழுவது தப்பிதமாகும் அம்மா!

ருக்.—கள்ளனைக் கள்ளன் என்பது தப்பிதமா? சோர புருஷனை விபசாரன் என்பது தப்பிதமா?

பங்.—ஆத்திரத்தாலும், கோபத்தாலும், கேட்பார் பேச்சைக்கேட்டு நீங்கள் சொல்வதை நான் நம்பேன். அவர் சூதனும் கபடனும் சோர புருஷனுமாவாராகில், நீதிமான் என்னும் பெயர் வேறே ஆருக்குத்தான் செல்லும் அம்மா?

ருக்.—(கடிதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு) நான் சொன்னதற்கெல்லாம் இதோ சாக்ஷி பங்காரம்மா!

பங்.—புறத்தியார் எழுதிய கடிதத்தை நம்ப வேண்டாம் அம்மா.

ருக்.—நீ பைத்தியக்காரி! நீ மெய்யாகவே ஒன்றுந் தெரியாத மூடாத்மா! உலகத்தை யறியாத மௌடீகி நீயே! புண்ணியவாளன், தேவ புருஷன், எதார்த்தவாதி, நீதிமான் என்று நீ புகழ்ந்து கொண்டாடின பண்டிதருக்கு ஒரு முண்டைச் சிறுக்கி யெழுதின காகிதம் இது (என்று கையில் பிடித்துக்கொண்டிருந்த கடிதத்தை மறுபடியும் விசிறி யெறிந்து) நீ சொல்வது போலப் பண்டிதர் நல்லவரானால் ஒரு தேவடியாளிடத்திலிருந்து கடிதம் வருமோ அவருக்கு? ஒருவனுடைய மரணத்தருவாயில் இவர் அவனுக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டை நிறைவேற்றப் போனாராம்! பளா! பளா! நல்ல வார்த்தைப்பாடு! பரவாயில்லை. இவர்தான் நீதிமானும்! புண்ணியவானும்! அர்ச்சியசிஷ்டவனும்! இப்பேர்ப்பட்ட கள்ளவேஷம் என்னத்துக்கு?

பங்.—அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தது அம்மா?

ருக்.—அதில் என்ன எழுதி யிருந்தபோதிலும், அதுயாரிடமிருந்து வந்ததென்று நினைக்க நினைக்க என் அங்கம் நடுங்கி என் இருதயம் புண்ணாகிறதே! பிரக்கியாதியாய் உலகத்துக்குச் சுக்கிரனைப் போலத் துலங்கும் ஒரு பிரபுவுக்குக் கடை கெட்ட ஒரு பெண்பிள்ளை கடிதம் எழுத என்ன காரணமுண்டு? இவரோடு அவளுக்கு என்ன கணக்கு வழக்கு? என்ன சம்பந்த சாதனம்? அந்த முண்டையின் கடிதத்தை யவர் இவ்வளவு பெருமை பாராட்டுவானேன்? எலும்புக்கு எலும்பும் சதைக்குச் சதையுமான என்னை யிங்கு கண்ணீரிலும் அழுகையிலும் பெருமூச்சிலும் ஒப்பாரியிலும் விட்டுவிட்டு அந்தத் தேவடியாளுக்குப் பிரியப்படும்படி அவர் போனதற்குக் காரணம் என்ன? அது இன்ன காரணமென்று உலகமே சொல்லும். சொல்லி சிரிக்காதோ? சிரித்து இகழாதோ? இகழ்ந்து காறித் துப்பாதோ முகத்தில்?—என்று மாலை மாலையாகக் கண்ணீர் விட்டு அழத்தொடங்கினாள். ருக்மணி யிவ்வாறு சிறு குழந்தை போலத் துக்கித்து அழுவதைக் கண்ட பங்காரம்மாளுக்கும் மகா விசனமுண்டாகிக் கண் கலங்கி, ருக்மணியை மிகுந்த பேரன்புடன் நோக்கி, "மயிலைத்தோற்கடிக்கும் வடிவழகுள்ள என் கண்ணே! மணியே! கட்டழகியே! உங்கள் துக்கத்தை நான் பார்க்கப் பார்க்க என் மனம் பதைத்துத் துடித்து நொருங்குகிறது. நான் உங்களுக்குத் துணைவியாக நியமிக்கப்பட்டிருந்தும் உங்களுக்கு உண்டாகும் துக்கவியாகுலத்தைத் தணிக்க என்னால் இயலாமல் போயிற்றே! அம்மா, தாயே, நான் உங்கள் அன்புக்குரிய மாதாவினிடமா யிருப்பதால் சொல்லுங்கள் உங்கள் வருத்தத்தை; என்னால் கூடியமட்டும் உங்கள் துக்கத்தை நான் சாந்தப்படுத்துவேன்" என்று அவள் பக்கத்தில் உட்கார்ந்து ஒரு சுத்தமான வஸ்திரத்தை யெடுத்து விம்மலுடன் சோபாவில் சாய்ந்து துக்கித்து அழும் ருக்மணியின் கண்ணீரைத் துடைத்து, "அம்மா அழாதேயுங்கள், பதறாத காரியம் சிதறாது. துக்கத்தை அடக்குங்கள்" என்று ஆறுதல் சொன்னாள்.

ருக்மணி பங்காரம்மாளுடைய வார்த்தையால் சற்று ஆறுதல் அடைந்து "நீ அவ்வளவாகப் புகழ்ந்து பேசினவருடைய நடத்தை நல்லதோ பொல்லாததோ நீயே சொல். நான் இந்தக் கடிதத்தை வாசிக்கிறேன், கவனமாய்க் கேள்" என்று கையில் பிடித்திருந்த கடிதத்தை இவ்வாறு வாசிக்கத் தொடங்கினாள்:—

"என் பேருபகாரியான பிரபுவுக்குக் கோடி தண்ட நமஸ்காரம். மகாப்பிரபு! நீங்கள் எனக்கும் என் சகோதரனுக்கும் செய்த கணக்கற்ற உபகாரங்களுக்கு எப்படி நன்றி செலுத்துவேன். தாங்கள் அன்புடன் அன்ன வஸ்திரம் கொடுத்து இலவசமாக சங்கீத வாத்தியங் கற்பித்து வந்த ராமகிருஷ்ணனுடைய தங்கை நானே. என்பிரிய அண்ணன் செத்தபின் நான்



தங்களை கண்டு பேசாமலே என்னை இன்னாளென்று அறிந்து கொண்டீர்கள். என் அண்ணனுடைய மரணத்துக்குப் பின் அவரைக் குறித்து தாங்கள் எனக்கு அந்தப் பேருபகாரத்தைப் புரிந்திராவிட்டால் என் கதி யெப்படியா யிருக்குமோ! பகவானுக்கு மாத்திரம் தெரியும்.

தற்போது எனக்குப் பெருத்ததோர் ஆபத்துநேரிட்டிருக்கிறது. இந்நேரத்தில் தாங்கள் எனக்கு உதவியாக வராவிட்டால் நான் மரண பரியந்தம் நிர்ப்பாக்கியவதியாய்க் கெட்டுப் போவேன். இனி யெனக்கு என்ன துன்பதுரிதம் நேரிடுமோ கடவுளுக்குத் தான் தெரியும். தாங்கள் என் அண்ணனைக் குறித்து எனக்கு உதார தயாளத்துடன் அளித்த தனப்பொருள் அனைத்தும் நஷ்டமாய் விட்டது. அது எப்படி நஷ்டமானதென்றால் தங்கள் கனம் இன்று இராத்திரி நானிருக்கும் இந்த பாழ் வீட்டுக்கு வரும்போது அவைகள் சகலத்தையும் விவரிக்கிறேன்" என்று வாசித்த பின், ருக்மணி பங்காரம்மாளைப் பார்த்து தேம்பித் தேம்பி அழத்துவக்கினாள். அப்போது பங்காரம்மாள் காகிதத்தில் எழுதப்பட்டது இவ்வளவுதானா என்று வினவினபோது "இவ்வளவு போதாதோ அவருடைய நடத்தையைக் கண்டுகொள்ள. ஒரு துஷ்டப் பெண்ணால் மயக்கப்பட்ட இம்மனிதன்தானா நீதிமான்? புண்ணியவான்? என்ன கபடம், என்ன சூது? தன் பெண்சாதிக்கு அப்பிரமாணிக்கமாய் நடந்த புருஷன் பிழைத்தாலென்ன, செத்தாலென்ன? இனி நான் அப்பேர்ப்பட்ட அபசாரியானவனுடைய முகத்தில் விழிப்பேனா? என்ன காரணத்தைப்பற்றி யிவர் அந்த முண்டைக்குப் பணங் காசு கொடுத்து ஆதரித்தார்? பங்காரம்மா, நான் சொன்னதெல்லாம் கண்டு பிடித்தாயா?"

பங்.—ஆம், கண்டுபிடித்தேன்.

ருக்.—"இன்று இராத்திரி அவர் தன்னிடம் வரும்போது" சகலத்தையும் விவரிப்பதாகச் சொல்லுகிறாளே, அந்தத் தேவடியாச் சிறுக்கி! அவள் இப்படி யெழுத என்ன தைரியம்! என்ன ஆணவம்! ஆம், இவர் அவளுக்குக் கொடுத்த தைரியத்தால் அவ்வளவு துணிவாய்ப் பேசுகிறாள். அந்த மூதேவி முண்டை! அவள் இப்போது என் முன்னிலையில் நின்றால் அவளுடைய பல்லெல்லாம் உதிர்த்து அவள் கையில் கொடுப்பேன்! ஐயையோ! இப்பேர்ப்பட்ட சதிமான துரோகம் உண்டோ?—என்று பித்து கொண்டவன் போல ருக்மணி பேசி, அழுது புலம்புவதைக் கண்ட பங்காரம்மாள், அவள் கண்ணீரைத் துடைத்து அவளை ஆற்றித் தேற்றின பின், "இந்தக் கடிதத்தை யெழுதினவள் பேர் என்ன அம்மா," என்றாள்.

அப்போது ருக்மணி "கடிதத்திலுள்ளதெல்லாம் வாசித்து முடிக்கிறேன் கேள்."

"எனக்கு இப்போது 1000 ரூ. அவசரமா யிருக்கிறது. அது தங்கள் உதவியால்தான் கிடைக்க வேண்டும். நீங்கள் தவிர எனக்கு இவ்வுலகத்தில் ஒருவரும் இல்லை. உங்கள் தயவையும் கிருபையையும் நம்பி யிருக்கிறேன். ஆனால் சகலத்தையும்விட சாகக்கிடந்த என் அண்ணனுக்கு நீங்கள் கொடுத்த சத்தியவாக்கை நம்பி தாங்கள் எப்படியாகிலும் எனக்கு இப்பெரும் ஆபத்தான வேளையில் உதவி புரிவீர்களென்று பூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறேன்."

"நீங்கள் ரயில் ஸ்டேஷனில் இறங்கினவுடனே, வெளி வாசற்படியில் குப்பைமுத்து என்னும் ஒரு சிறுவன் உங்களுக்காக கையில் லாந்தர் பிடித்துக்கொண்டு காத்துக்கொண்டிருப்பான். அவனே தங்களை நானிருக்கும் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வருவான். அவனுக்கு மாத்திரம் தெரியும் நானிருக்கு மிடம். இப்போது நான் ஒளிந்திருக்கும்படி நேரிட்டிருக்கிறது."

"தாங்கள் என் அண்ணனுக்கும் எனக்கும் முன் புரிந்ததும் இன்று எனக்குப் புரிய இருக்கும் பேருபகாரத்துக்குமாக நன்றி காட்டும் —ஏழை மீனாட்சி".—பார்த்தாயா பங்காரம்மா! நான் வாசித்ததெல்லாம் கவனமாய்க் கேட்டாயல்லவோ? இதைப்பற்றி உன் தாற்பரியமென்ன? —என்று கேட்டாள் ருக்மணி. ஆம், அம்மா, கவனமாய்க் கேட்டேன். என் தாற்பரியத்தைத் தாங்கள் கேட்டதைப் பற்றி ஒளிக்காமலும் மறைக்காமலும் ஸ்வாமிக்குப் பொதுவாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். மீனாட்சி யென்கிற பெண் யாரோ, எனக்குத் தெரியாது; அவளுக்கும் அவள் சகோதரனுக்கும் பண்டிதர் ஒரு காலத்தில் உபகாரம் செய்ததாக விளங்குகிறது. இப்போது அவளுக்கு ஏதோ ஒரு துன்ப காலம் நேரிட்டிருப்பதால் அதைப் பரிகரித்துக்கொள்ளும்படி பண்டிதருடைய உதவியை எதிர்பார்க்

கிறாள். மேலும் பண்டிதர் முன் ஒரு காலத்தில் அந்த மீனாட்சி யென்பவளுடைய சகோதரன் சாகுந்தருவாயில் (அவளுக்கு அல்ல) அவனுக்குக் கொடுத்த சத்திய வாக்கை முன்னிட்டு தனக்கு அவர் உதவிசெய்யும்படி மன்றாடுகிறாள். இதில் யாதொரு ஆகாத காரியமும் என் புத்திக்குத் தென்படவில்லை. நீங்களோ அம்மா, விபரீதமான அருத்தம் பண்ணிக்கொண்டு இப்படி வீணாய்ச் சந்தேகித்துத் துக்கங்கொள்கிறீர்கள். நீங்கள் இன்று இராத்திரி நிதானித்தால் சகல சந்தேகமும் நிவர்த்தியாய் விடும் உதயத்துக்குள்,'' என்று சொன்னாள் பங்காரம்மாள்.

பங்காரம்மாளுடைய வியாக்கியானத்தைக் கேட்ட ருக்மணி அதன்மட்டில் திருப்தி கொள்ளாமல் முனியம்மாளை அழைத்து வரும்படி பங்காரம்மாளுக்குக் கற்பித்தாள். பங்காரம்மாளோ ருக்மணிக்குப் பல நியாயங்களைச் சொல்லிக் காட்டி, இந்த விஷயத்தைப்பற்றி அன்னியருக்கு அறிவிப்பது விமரிசை யல்லவென்று அவளைக் கெஞ்சி மன்றாடியும், ருக்மணி அதற்குச் சம்மதியாமல் தக்ஷணமே முனியம்மாளை அழைத்து வரவேண்டுமென்று கற்பித்ததன்மேல் பங்காரம்மாள் வெளியே சென்று வேலைக்காரியை அழைத்துவந்தாள்.

முனியம்மாள் தன் எஜமானியைத் திருஷ்டித்தபோது: அவள் மகா துக்கங்கொண்டு முகம் வேறுபட்டு வாடி சுருங்கியிருப்பதைக் கண்டு, ''அம்மா துரைசானி தங்களுக்குச் சுகக் குறைவோ? இவ்வளவு கேவலமாயிருக்கிறீர்களே!'' என்று துக்கத்துடன் வினவுவதைக் கண்ட ருக்மணி ''ஆம்; ஆறு வியாகுலத்துக்கு உள்ளாயிருக்கிறேன்! ஸரஸ்வதியைப் போய்த் தக்ஷணமே அழைத்து வா; அவள் வராவிட்டால் என் புண் ஆறாது'' என்றாள்.

முனி.—கீழே விழுந்து காயப்பட்டீர்களோ அம்மணி?

ருக்.—என் நிர்ப்பாக்கிய புருஷனே என்னைக் காயப்படுத்தினார்! உடனே போய் ஸரஸ்வதியை அழைத்துவா என்றாள்.

இதைக் கேட்ட முனியம்மாளுடைய மனம் சந்தோஷத்தால் பூரித்து மான்போல ஓட்டமாயோடி தன் எஜமானி சொன்ன சங்கதியை அறிவித்து இருவருமாக வெகு துக்க துயரத்துடன் ருக்மணியிடம் போய் ஆசீர்வாதி, ''தண்டம் அம்மா'' என்றாள் ஸரஸ்வதி.

அப்போது ருக்மணி கண்ணீர் சொரிந்து கொண்டு, ''முன் சொன்னதெல்லாம் நிஜமாக சம்பவித்தது!'' என்றாள்.

ஸரஸ்.—தாங்கள் விளம்புவது இன்னதென்று தெரியவில்லை அம்மா?

ருக்.—என் துஷ்ட புருஷனுடைய துர் செய்கையைப்பற்றி முன்னதாக நீ அறிவித்ததை மறந்தாயோ அம்மா?

ஸரஸ்.—நான் மறக்கவில்லை. அவர் பார்வைக்குச் சாதுவும் சாந்தமுமான மனிதனாகக் காணப்பட்டாலும் மகா துஷ்டன், மூர்க்கன், குரூர குணமுடைத்தான பாவி. கோபநேரத்தில் தாய் தகப்பன் என்றும் பெண்சாதி பிள்ளையென்றும் பார்க்காமல் தன் கையிலுள்ள ஆயுதத்தால் தாக்கக்கூடிய நிஷ்டூரன். அந்த மனிதன் என் உங்களைக் குத்தினான்? காயம் பெரிதோ? எங்கே பார்க்கலாம்?

ருக்.—என் நிர்ப்பாக்கிய புருஷன் என் இருதயத்தைக் குத்தி திறந்தார் (என்று அழும் போது).

ஸரஸ்.—அம்மா பயப்படாதேயுங்கள். அந்த நிர்பாக்கியனை பழிவாங்க அநேகர் காத்திருக்கிறார்கள் இத்தவூரில்! உங்கள் வாயினின்று ஒரு வார்த்தை வந்தால் போதும். போலீஸ் சூப்பரெண்டும் 50 ஜவான்களும் இக்ஷணமே இங்கு வரும்படி செய்வேன். உடனே அவர்கள் அவரைச் சார்ஜ் செய்து விசாரணை செய்து தண்டிப்பார்கள்.

ருக்.—இல்லையம்மா ஸரஸ்வதி, நீ யென் வார்த்தையின் சாரத்தைக் கண்டுபிடிக்கவில்லை. என் புருஷன் கத்தியாலும் ஈட்டியாலும் என் சரீரத்தைக் குத்தி காயப்படுத்தினவரல்ல. ஆனால் அவருடைய துர் நடத்தையால் என் இருதயத்தைப் புண்ணாக்கினார்.

ஸரஸ்.—அப்படியா? தேக நஷ்டத்திலும் மன நஷ்டம் பெரிது. மேலும் நான், அம்மா உங்களுக்கு எற்கெனவே அறிவித்திருப்பது போல, இந்த மனிதன் வஞ்சகன்; ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு மற்றொன்றை வெளிக்குக் காட்டுவார். அவருடைய தீய குணத்தை நான் அறிந்தே பலமுறை உங்களை யெச்சரித்தேன்.

ருக்.—ஆம், அம்மா, உன் வார்த்தையை நான் நம்பி, உன் ஆலோசனைக்குச் செவிசாய்த்திருந்தால் இப்பேர்ப்பட்ட தின்மைகள் வரா!



(என்று அழுதுகொண்டு தன் கையிலிருந்த கடிதத்தை அவள் கையில் கொடுத்தாள்.)

ஸரஸ்.—(அதைக் கவனமாய் வாசித்தபின், சற்று புன்னகையுடன்) சரி, நான் சொன்னபடி ஒரு அக்ஷரமும் பிசகாமல் சகலமும் நடந்தேறின. அதில் கையொப்பம் இட்டிருக்கும் அந்த சிறுக்கி யாரென்று தெரியுமா அம்மா?

ருக்.—தெரியாதே, உங்களுக்குத் தெரியுமா?

ஸரஸ்.—எட்டு மாசத்துக்குமுன் நான் சொன்னதை மறந்தீர்களோ? பண்டிதர் அந்த முண்டை வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தாரென்று நான் சொன்னது ஞாபகமில்லையோ?

முனி.—அவளார் அம்மா?

ஸரஸ்.—இன்னம் உனக்கு யாரென்று தெரியவில்லையோ? ராமகிருஷ்ணன் தங்கச்சி மீனாட்சி யல்லவா!

முனி.—அந்த வேசி சிறுக்கியா?

ஸரஸ்.—இவளும் பண்டிதரும் சேர்ந்து அவளுடைய அண்ணனாகிய ராமகிஷ்ணனை கொலை செய்தார்களென்று நான் உங்களுக்குச் சொன்னதை மறந்தீர்களோ அம்மா?

ருக்.—இவள்தானா?

ஸரஸ்.—ஆம் ஆம். அவள்தான்.

ருக்.—அப்படியா, என்று வாய்க்கு வந்தபடி தன் புருஷனைத் திட்டி, சபித்து பெருங் குரல்பாய்ச்சி அழத்தொடங்கினாள்.

ஸரஸ்.—அம்மா. பார்த்தீர்களா? அந்த கழுதை முண்டை 1000 ரூ கொண்டு வரும்படி கற்பிக்கிறாள்! என்ன நெஞ்சுத் துணிவு இது? மேலும் இருவருக்கும் முன் ஸ்நேகம் இராவிட்டால் இப்படிப் பேசுவாளா பெண்ணாய் பிறந்த ஒரு தாஷ்டை? உமது புருஷன் எவ்வளவு இரஸ்தர்! இவள் எவ்வளவு? இந்த நாயின் பவிஷென்ன? இப்படி யிருந்தும், இவள் அவருக்கு கட்டளையிட்டு 1000 ரூ கொண்டுவரச் சொல்லுகிறாளே! என்ன ஆணவம்!

மேலும் பண்டிதர் அந்த ஊத்தைப்பிடித்த சிறுக்கிக்குச் சத்திய வாக்கு கொடுப்பதற்குக் காரணமென்ன? இவளார்? அவரார்? சம்பந்தமுண்டா? குலகோத்திர பொருத்தமுண்டா? அதுவு மில்லையே. இவள் ஒரு கணவனுக்கு இப்பேர்ப்பட்ட கடிதம் எழுதுவதற்கு காரணமென்னவென்று அம்மா நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்.

ருக்.—ஆம்; ஆம், அதை நான் நன்றாய்க் கண்டுபிடித்தேன். இனி நான் போகும் பார்ப்பது உத்தமம்.

ஸரஸ்.—நான் உங்கள் ஸ்தானத்தி லிருப்பேனாகில்—அதாவது என் புருஷனிடத்தில் இப்பேர்ப்பட்ட நடவடிக்கையைக் காண்பேனாகில், ஒன்றில் கிணற்றில் விழுந்து சாவேன் அல்லது, ஊரை விட்டு ஓடிப்போவேன், (என்று அந்த வஞ்சகி, ருக்மணியைக் கெடுக்கும்படி குதாய்ப் பேசினாள்.)

ருக்.—இன்றைய இராத்திரி பார்த்துக் கொண்டு நாளை காலையில் பண்டிதரைக் கண்டு பேசிய பின் என் ஊருக்குப் போகலா மென்று கருத்தாயிருக்கிறேன்.

ஸரஸ்.—அம்மா நீங்களோ உயர்ந்த குலத்தில் உதித்த பெண்மணி. உங்களுக்கு இங்கு ஒரு குறைவு மில்லை. உங்கள் தாய் வீட்டிலும் குறைவு கிடையாது. என் ஆலோசனையை கேட்குங்கால் உங்கள் தாய் வீட்டுக்குப் போக மனமிருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த தேசத்துக்குப் போக மனமிருந்தாலும் சரி ஒரு வார்த்தை சொல்லுங்கள்; உங்களுக்குப் பிரமாணிக்கமான துணை பிடித்து அனுப்புகிறேன். பணப்பெட்டியின் சாவி உங்கள் கையிலிருக்கிறது; உங்கள் நகையெல்லாம் உங்கள் கையிலிருக்கிறது. சகலத்தையும் வாரியெடுத்துக்கொண்டு புறப்பட இது நல்ல சமயம். வேண்டுமானால் நானும் உங்களுக்குத் துணையாக வருகிறேன்.

இதை ருக்மணி கேட்டு வீட்டை விட்டு வெளியேற மனம் வராமல் ''இன்னம் 9 மணி நேரந்தானே இருக்கிறது. அதற்குள்ளாக சகலத்தையும் ஆற அமர யோசித்துப் பார்த்து செய்வது யுக்த'' மென்றாள். இந்த வார்த்தை படும் பாவியாகிய ஸரஸ்வதிக்குச் சரிப்படாமல், ''சரி உங்களிஷ்டம்போல ஆகட்டும்,'' பண்டிதர் என்றைக்குத் திரும்புவாரென்று ஸரஸ்வதி கேட்டதற்கு, ''இன்றைய ராத்திரி 12 அல்லது 12½ மணிக்கு வருவா'' ரென்று ருக்மணி சொன்னாள்.

''அப்படியானால் நீங்கள் சுகமே இருங்கள், எனக்கு வீட்டில் வேலை யிருக்கிற'' தென்று முனியம்மாளுடன் வீட்டைவிட்டு புறப்பட்டாள். அப்போது ருக்மணி முனியம்மாளைப் பார்த்து

"இராத்திரிக்கு நீ யென் அறையில் படுத்துக் கொள்ளும்படி வரவேண்டும்" என்றதற்கு "அப்படியே ஆகட்டு" மென்றாள் முனி.

ஆனால், வீட்டை விட்டு இருவரும் இரகசியமாய்ப் பேசிக்கொண்டு சற்று தூரம் சென்றபின் முனியம்மாள் பண்டிதர் வீட்டுக்கு திரும்பிப் போய் பங்காரம்மாள் வெளி வாசற்படியில் நின்றிருப்பதைக் கண்டு "அம்மா, எஜமானி என்னை தம்முடன் இராத்திரிக்கு படுத்துக்கொள்ளும்படி வரச்சொன்னார்கள்; எனக்கோ தலைநோவு கடினமாயிருப்பதால் வரமுடியாதென்று எஜமானிக்குசொல்லி விடுங்கள்" என்று கேட்டுக்கொண்டு ஓட்டமாய் ஓடிப்போய் ஸரஸ்வதியோடு சேர்ந்து உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு போனாள். ஸரஸ்வதி நேராக போலீஸ் டிப்டி சுப்பிரமணியனுடன்டு வீட்டுக்குச் சென்றாள்.

## INDULGENCES.
## ஞானப்பலன்.

பாவசங்கீர்த்தனத்தினால் பாவத்தின் தோஷமும், நித்திய ஆக்கினையும் பொறுக்கப்பட்ட போதிலும், அந்தப் பாவத்தின் அநித்திய தண்டனை மன்னிக்கப்படுகிறதில்லை. இந்த அநித்திய ஆக்கினைக்குத் திருச்சபை அளிக்கும் மன்னிப்பே ஞானப்பலன் என்னப்படும்.

ஒருவன் ஒரு கனமான பாவத்தைக் கட்டிக்கொள்ளும்போது, நித்திய தண்டனை அநித்திய தண்டனை ஆகிய இருவித தண்டனைக்கு அவன் ஆளாகிறான். அவன் உத்தம மனஸ்தாபமும் பாவ சங்கீர்த்தனமும் இன்றி அந்தப் பாவத்தோடு சாவானாகில் நரகத்துக்குப் போவான். ஆனால் அவன் அந்தப் பாவத்தைப் பாவசங்கீர்த்தனம் செய்தால் அந்தப் பாவத்தின் தோஷமும் அதற்கு விதிக்கப்பட்ட நரக ஆக்கினையும் அவனுக்குப் பொறுக்கப்படுமே ஒழிய அநித்திய தண்டனை பொறுக்கப் படமாட்டாது. ஆகையால் இந்த அநித்திய தண்டனையை அவன் இவ்வுலகத்திலாவது அல்லது உத்தரிக்கிற ஸ்தலத்திலாவது உத்தரித்துத் தீர்க்க வேண்டும். அந்த அநித்திய தண்டனையை திருச்சபை அளிக்கும் ஞானப்பலன்களைக் கொண்டும் தீர்த்துக்கொள்ளலாம்.

ஒரு உதாரணத்தால் இது தெளிவாய்விளங்கும். நமது ஆதித் தகப்பனாகிய ஆதாம் தேவகட்டளையை மீறி நடந்து விலக்கப்பட்ட கனியைத் தின்றதினால் கனமான பாவத்தைக் கட்டிக்கொண்டார். இதன் தோஷம் கனமானது. இதைப் பற்றி நரகதண்டனையாகிற நித்திய தண்டனைக்கு உள்ளானார். அவர் தன் பாவத்துக்கு மனஸ்தாபப்படாமலும் தேவ மன்னிப்புப் பெறாமலும் செத்திருந்தால், சந்தேகமற நரகத்துக்குப் போயிருப்பார். ஆனால் அவர் மனஸ்தாபப்பட்டுச் சர்வேசுரனுடைய பொறுத்தல் அடைந்தார். அந்தப் பொறுத்தலால், அந்தப் பாவத்தின் தோஷமும் நரக ஆக்கினையும் மன்னிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பாவத்தின் அநித்திய தண்டனையை அவர் இவ்வுலகத்தில் உத்தரிக்கவேண்டி நேரிட்டது. ஆகையால் அவர் உயிரோடு இருந்த 900 வருஷகாலம் தன் பாவத்துக்காக அழுதார். கஸ்தி துன்ப ஆதிகங்களை அநுபவித்தார். பசி தாகம், வியாதி முதலிய அநேக கஷ்ட சங்கடங்களையும் தவக் கிருத்தியங்களையும் சாகுமட்டும் பொறுமையுடன் அநுபவித்துத் தன் பாவங்களுக்கு உத்தரித்தார்.

### ஞானப்பலன் எப்படி உண்டானது

வேத ஆரம்பத்தில் வேதகலகம் மகா கொடூரமாய் நடந்துவந்தது. பெரியவர்கள், சிறியவர்கள், விருத்தாப்பியர் என்று பாராமல் கிறிஸ்துவர்களாயிருக்கப்பட்ட சகலரையும் சங்காரம் செய்தார்கள். சிலரை வாளால் நறுக்கினார்கள். சிலரை நெருப்பில் போட்டு வாதித்தார்கள். சிலரைத் துஷ்ட மிருகங்களுக்கு இரையாகப் போட்டார்கள். சிலரை ஜலத்தில் போட்டு அமிழ்த்தினார்கள். இவர்கள் எல்லோரும் தைரியத்துடன் வேதசாக்ஷிகளாக மரித்தார்கள்.

ஆனால் இவர்களில் சிலர் பயந்து சத்தியவேதத்தை மறுதலித்தார்கள். சிலர் அந்நியமான இராசாக்களுடைய நிஷ்டூர ஆக்கினைக்குப் பயந்து தங்களிடத்திலிருந்த வேத புத்தகத்தை அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். சிலர் கிறிஸ்துவர்கள் ஒளிந்திருக்கும் இடத்தைத் தெரியப்படுத்தினார்கள். இப்பேர்ப்பட்ட கோழைத்தனம் உடைத்தான கிறிஸ்துவர்கள் பயங்கரமான சாவுக்குத் தப்பித்தபின் தங்கள் கனமான பாவத்தைக் கண்டுபிடித்து தங்களை மறுபடியும் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளும்படி மேற்றிராணிமாரை மன்றாடினார்கள்.

திருச்சபையும் பலவீனத்தால் வழுவினவர்களைக் கைவிடாமல், இப்பேர்ப்பட்டவர்களுடைய பாவங்களுக்குத் தண்டனை விதித்துவந்தது. 5, 7, 20 வருஷகாலம் வெறுந் தண்ணீரும் சாதமும் புசிக்கும்படி திருச்சபை சிலருக்குக் கற்பிக்கும். சிலர் மரணபரியந்தம் ஒருசந்தி பிடிக்கும்படி கற்பிக்கப்படுவார்கள். வேறு சிலர், பூசை நடக்கும்போது கோவில் வாசல் படிக்கு வெளியே பல வருஷகாலம் முழங்காலிலிருந்து பூசைகாணும்படி கற்பிக்கப்படுவார்கள்.

மேலும், பிரசித்தமாய்க் கட்டிக்கொள்ளும் பாவங்களை, கோவிலில் சகலரும் அறிய பகிரங்கமாய்ப் பாவசங்கீர்த்தனம் செய்யும் வழக்கம் திருச்சபை ஆரம்பத்தில் வழங்கிவந்தது. அந்தந்தப் பாவங்களின் தோஷத்திற்கும் கனகனத்துக்கும் தகுந்தபடி, முன் சொன்னதுபோல் அநேகநாள், அநேக மாதம், அநேக வருஷம், அல்லது மரணபரியந்தமும், மேற்கூறிய அபராதத்தைச் செலுத்த கற்பிக்கப்படுவார்கள்.

சர்க்கார் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் குற்றவாளிகளில் ஒழுங்காய் நடக்கும் கைதிகளுக்கு விதிக்கப்பட்ட காலத்தைக் குறைப்பதுபோல, திருச்சபையும் தயையுள்ள தாயைப்போலத் தன் பிள்ளைகளாகிற கிறிஸ்துவர்கள்மட்டில் இரக்கம் காட்டிவந்தது. அது எப்படியெனில்: தங்கள் பாவங்களினிமித்தம் பிரசித்தமான தண்டனையை அநுசரித்து வர குறிக்கப்பட்டவர்களில், யார் தங்கள் பாவங்களுக்காக அதிக துக்கப்பட்டு, தங்களுக்கு இடப்பட்ட அபராதத்தை அதிக ஜாக்கிரதையுடன் [...] களோ, அவர்களுக்கு நியம[...] அபராதநாள் அல்லது தபசு [...] குறைக்கப்பட்டு வந்தது. இதற்கு [...] அல்லது இரக்கம் என்னும் பெயர் வழ[...]கியது. இதையே நாம் ஞானப்பலன் என்கிறோம்.

காலக்கிரமத்தில் திருச்சபையானது பாவசங்கீர்த்தனம் செய்கிற வழக்கத்தையும், பிரசித்தமாய் அபராதம், அல்லது தபசை விதிக்கிற வழக்கத்தையும், பல காரணங்களைப்பற்றி நிறுத்திவிட்டது. மேற்படி கடின ஒருசந்திக்கும் தவக்கிருத்தியத்துக்கும் பதிலாக சில செபங்களையும் நற்கிருத்தியங்களையும் ஏற்படுத்தி, மேற்படி செபங்களுக்கும், நற்கிருத்தியங்களுக்கும் நாள் கணக்கும், மாதக்கணக்கும், வருஷக்கணக்குமான ஞானப்பலன்களை ஸ்தாபித்தது.

அந்தந்த செபத்துக்கும், நற்கிரிகைக்கும் 100 நாள் பலன் என்றும், ஏழு வருஷப் பலன் என்றும் சொல்லும்போது, உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களுக்கு 100 நாள், அல்லது ஏழுவருஷ வேதனை குறைந்து போகுமென்று சொல்லக்கூடாது. முற்காலத்தில் கிறிஸ்துவர்கள் பிரசித்தமாய்ச் செய்த பாவத்துக்கு, திருச்சபை விதித்த 100 நாளில் அல்லது 7 வருஷத்தில் தவம் புரிந்து எவ்வளவு மன்னிப்பு அடைந்தார்களோ, அவ்வளவு மன்னிப்பு நாம் ஞானப்பலனுள்ள செபத்தை அல்லது ஞானக்கிருத்தியத்தைச் செய்யும்போது அடைவோம் என்பதே.

(பாடசா. ஞானோ.)

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

### ஆரம்பாக்கத் திருவிழா!

ஆரம்பாக்கத்து பொருத்தனை கோவில் பேர்கொண்ட மோக்ஷ முடிவிராக்கினி (தேவதாய் மோக்ஷத்தில் முடிசூட்டப்படல்) வருஷாந்திரத் திருவிழா கொடியேற்றம் நவநாள் ஜெபத்

...ஆகஸ்டு மீ 20உ ஆரவாரமாய் ...பட்டது. முந்தின நாள் சாயந்தி... ...சங்கை A. Merkes, சிரேஷ்ட சுவாமி... ...பெரிய வெஸ்பெர்ஸ் பிரார்த்தனை; ...இங்கிலீஷில் பிரசங்கம்; திவ்விய நற்கருணை ஆசீர்வாதம், தேர் சுற்றுப்பிரகாரம், ஆரவாரமாய் நடந்தது. திருநாளன்று காலையில் மூன்று சில்லறை பூசைகளும் பிறகு 7-மணிக்கு சிரேஷ்ட சுவாமியாரால் பெரிய பாடல் பூசையும் சங்கை L. X. Fernandes, சுவாமியாரால் தமிழில் பிரசங்கமும் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும் இருந்தது.

சென்னை அதிமேற்றிராணியார் தாமே நேரில் பிரசன்னமாய் வரக்கூடாமல் போனதால் தமது Secretary குருவானவராகிய மிக்க சங்கை A. Markes சிரேஷ்ட சுவாமியாரை தமது பிரதிநிதியாக திருநாளில் விஜயமாய் இருக்கும்படி மெத்த தயவுடன் அனுப்பிவைத்தார். இந்தக் கோவில் விசாரணை குருவானவராகிய சங்கை S. M. F. Ignatius சுவாமியாருடன் சென்னையிலிருந்து வந்த சங்கை L. X. Fernandes சுவாமியாரும் ரோஷா நகரத்திலிருந்து வந்த சங்கை F. Koperdraad சுவாமியாரும் கூட துணை குருக்களாயிருக்க சிரேஷ்ட சுவாமியார் சகல கைங்கிரியங்களையும் மெத்த ஆரவாரமாய் நடத்தினார். சங். F. Koperdraat சுவாமியாருடைய பிரயாசை முயற்சி ஒத்தாசையினால் பீடம் மெத்த நேர்த்தியாய் ஜோடிக்கப்பட்டிருந்தது.

சென்னை, வேப்பேரி, அர்ச். பிரான்சிஸ்கு சபைமடத்து கன்னியரில் Mother Mary Stanislaus, Sister Mary Bridget என்னுமிருவர் தங்கள் வியாதிநிமித்தம் ஆகாய மாற்றத்துக்காக ஆரம்பாக்கத்துக்கு ஏற்கனவே வந்திருந்தமையால் திருநாளுக்கும் இவர்களிங்கே இருக்க தேவதாயார் சித்தமானார்கள். இப்படியாக பரித்தியாக பக்தரும் சிலர் இத்திருநாட்காலத்தில் தேவதாயாரை தொழவந்திருந்த திருயாத்திரைக்காரரோடு இருக்க சம்பவித்தது மெத்த நூதனமானதும் சந்தோஷகர மானதுமான காரியம். மோக்ஷமுடி விராக்கினியின் வேண்டுதலால் இக்கன்னியரிருவருக்கு நல்ல சவுக்கியமும் நீடூழியும் தர நமது திவ்விய ஆண்டவர் தயை செய்வாராக. இந்தக் கன்னியருடைய சபை மேன்மேலும் சுகக்ஷேமமாய் வளர்ந்து விர்த்தியடைய மோக்ஷவிராக்கினி வேண்டிக்கொள்வாளாக.

200-பேர் வரையில் சென்னையிலிருந்தும் பெரம்பூரிலிருந்தும் மற்ற விடங்களிலிருந்தும் கிறிஸ்துவர்கள் திருயாத்திரையாக திருநாளுக்கு வந்திருந்து பக்தி விநயத்துடன் தங்கள் வேண்டுதலையும் பொருத்தனைகளையும் செலுத்தி 100 பேர் வரையில் பரலோக அப்பத்தின் பந்தியில் அமர்ந்தார்கள். திருநாள் செலவுக்கு சென்னை கிறிஸ்துவர்களும் பெரம்பூர் கிறிஸ்துவர்களும் முக்கியமாய் உதவி செய்தார்கள். மெத்த நேர்த்தியாய் சோடிக்கப்பட்ட தேரின் செலவெல்லாம் ம-ா-ா-ஸ்ரீ T. M. மாணிக்கம் பிள்ளை; தோமாஸ் பிள்ளை; ஆகிய இவர்கள் இருவரும் ஏற்றுக்கொண்டு தாங்களே திருநாளுக்கு வந்து சுற்றுப்பிரகாரத்தை கண்காணித்து நடத்தினார்கள்.

பெரம்பூர் குழந்தைசாமி பிள்ளை நவநாட் பிரார்த்தனை தினங்களிலும் திருவிழா நாளிலும் நேர்த்தியாய் HARMONIUM வாசித்துக்கொண்டு பூசை முதலிய கோவில் கைங்கரியங்களுக்கெல்லாம் பாடி நன்றாய் காரியங்களை நடத்தினார். திருநாளன்று சென்னை பெலவேந்திரசாமி முதலியார் இவருக்கு மெத்த உதவியாயிருந்து பாடினார். விசாரணை குருவானவரின் வேண்டுகோளின்படி Dy. General Traffic Manager ஆகிய H. E. Judd துரை அவர்கள் திருயாத்திரைக்காரருக்காக மெத்த தயையுடன் திருநாளன்றும் முந்தின நாளன்றும் சென்னையிலிருந்து ஆரம்பாக்கம் ஸ்டேஷனுக்கு வருகிற போகிற ரயில்வண்டிகளில் ஜாஸ்தி (Carriages) சேர்க்க உத்திரவு செய்தார்.

இவ்விதமாக தேவ தாயாருடைய திருநாள் நல்ல சிறப்புடன் நடக்க தயை செய்த பரம தந்தைக்கு சகலபுகழும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக. தேவ தாயாருடைய மகிமையும் வல்லமையும் இப்பக்கங்களில் அதிக மதிகமாய் விளங்குவதாக.

கவனிப்பு.—திருவிழாவுக்கு வரும் திருயாத்திரைக்காரர் கோவில் விஷயத்திலும் தாங்கள் தங்கும் இடத்து விஷயத்திலும் இடத்தின் குறைவால் சங்கடப்பட நேரிடலாகின்றது. இந்த குறைவை பரிகாரம் செய்யும்பொருட்டு விசாரணை குருவானவர் கோவில் இருபுறத்தில் ரெக்கையும் தாழ்வாரமும் முன்புறத்தில் பண்டபமும், தனியாய் ஒருபெரிய சத்திரமும் ஏற்கனவே கட்டத்துவக்கி இருக்கிறார். வேலைநடந்து வருகிறது. இதற்காக இவ்வருஷம் மார்ச்சு மாதம் துவக்கி இந்த 6 மாதகாலத்தில் 1200 ரூ தருமம் தண்டல் செய்தார். இக்கட்டிடங்களெல்லாம் சம்பூரணமாய் கட்டி முடிவாவதற்கு இன்னும் 800 ரூபாய் மாத்திரமே தேவை. இக்கட்டிடங்கள் வருகிற பெப்ரவரி மாதம் ஊர்து ஆண்டவளின் தரிசனை திருநாளுக்குமுன் கட்டி முடிவானால் யாத்திரைக்காரருக்கு சவுக்கியமாய் இருக்கும். இல்லை என்று சொல்லாமல் தங்களால் இயன்ற தருமம் அளிக்கும் நல்ல உபகாரிகளுக்கு நமது திவ்விய இருதய ஆண்டவரும் அமலோற்பவ மோக்ஷகிரீட விராக்கினியும் நூறத்தனை சம்பாவனை அளிப்பார்களென்பது திண்ணம். உங்கள்தருமத்தை Revd. S. M. F. Ignatius, Arambakam Ry. (Nellore Dist.) என்று மேல் விலாசம் போட்டனுப்பிவையுங்கள்.

இப்படிக்கு;
கண்கண்ட சாட்சி

---

## கொழும்பு.

சகல வளமுஞ் செறிந்து செழிப்புற்றோங்கும் பாண்டிய நாட்டின் முத்துக்குளித்துறைகளிலொன்றாயிலங்கும், புராதன சரித்திரவகமான நகராய் விளங்கும், புன்னைக்காயலில் வசிக்கும் பரதகுலத்தவர்களுக்குப் பாதுகாவலும் அடைக்கல தாயுமாகிய பரிசுத்த ரோசாரியோ அன்னையின் கெம்பீரமான மகோற்சவம் கொழும்பு நகரில் வதியும் மேற்படியூரவர்களால் புறக்கோட்டையில் அர்ச். பிலிப் நேரியாரின் ஆலயத்தில் மிக்க சிறப்பாடம்பரமாய் நடத்தப்பட்டது. இம்மாதம் 8-ம் தேதியாகிய ஞாயிறன்று காலை 9 மணிக்கு சற்குணபூஷணராகிய சங்கை நிறைந்த பொவியர் ஸ்வாமிகள் இரு குருப்பிரசாதிகளுடன்பெரிய பாடல் பூசை நிறைவேற்றினர். அச்சமயத்தில் அவ்வாலயத்தின்கண் விளங்கிய விசித்திராலங்கிர்த காட்சியின் மாட்சிமையை வியக்தமாய் விவரிக்க யான் அருகனல்லேன். திவ்விய பலி பீடமோ அநேக மெழுகுவர்த்திகளின் ஜோதிச் சுடர்களினால் ஸ்வாலிக்க, கண்டி, நாவலேரலியா முதலிய ஊர்களிலிருந்து பக்தர்களால் அனுப்பப்பட்ட மிக்க சுகந்த சிறந்த பற்பல நறுமலர்களினால் அலங்கரிக்கப்பட்ட இதன் மத்தியில் ஓர் மகோன்னத ஆசனத்திலே, எமை மீட்க வானிடம் வாழ்பவனை மானிடனாகத் தந்த பரிசுத்தஜெபமாலை அரசி... எண்ணிலா வானதூதரான வி... எம்மை ஆசீர்வதித்து அரவணைத்து... செலேம் நகர்க்கு எம்மை அழைத்து... வந்ததுபோல் தமது இரு கரங்களையும் வி... பாவனையாய்த் தோன்றினள். இவ் வபூர்வ தே...ற்றத்தைத் தரிசித்த பக்தர் ஆனந்த பரவசராயினர். எனையர் ஸ்தம்பித்தராயினர். இதென்றி தேவதுத்ய சங்கீத கானத்தைச் செவிமடுத்த விசுவாசிகள் பூவுலகில் நாமிருக்கின்றோமென்பதை மறக்க, வான்சுரக்கும் தேவ அருள் பெற பாவ இருள் பரவிய இதய கமலங்கள் திறக்க, கோவிலினுட்புறமோ நானாவித ஜோதிகளால் சிறக்க, வெளிப்புறத்திலோ பலவர்ண தூவாசங்கள் ஆகாயமளாவிப்பறக்க, ஆனந்த வாரிதியிலமிழ்ந்தினர் ஆங்கு குழுவிய எவருமே.

இவ்வரிய திவ்விய மகோற்சவத்தைச் சிறப்பாய் நடத்த உதவிசெய்த புன்னைகாயல்வாசிகளுக்கும், விசேடவிதமாய் உபகரித்த காருண்ய குண நிதிகளாகிய பிரபல்லிய வர்த்தகர்கள் பி. ஜி. கோமுஸ், லேயோ மச்சாது, ஜே. என். ரேச்ச பிஞ்ஞேய்ர முதலிய ஸ்ரீமான்களுக்கும் எனது மனமுவந்த வந்தனத்தை நிர்த்தய பூர்வகமாய்ச் சமர்ப்பிக்கிறதுமன்றி; இரக்கத்தின் தாயாராகிய அந்தப் பரம ஆண்டவள் அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆசீர்வதித்து விசேட வரப்பிரசாதங்களை அன்னோர் மீது பொழிந்தருள்வாளாக.

கொழும்பு
10-10-1916. } மரியாயின் மைந்தன்.

---

## ஜனசமூக ஊழியம்.

ஊழியங்களுட் சிறந்தது அனைவரும் தத்தம் ஜனசமூகத்திற்குச் செய்யும் தொண்டு ஜனசமூகவூழியமே. நமது கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துநாதசுவாமிகள் தமது ஜீவியகால முழுதும் நடத்திக் காண்பித்ததும் இப்போது முதலாய் அந்தப் பரம தேவநற்கருணையிலிருந்து செய்து வருவதும் எல்லாம் ஜனசமூக ஊழியமே. ஒருவர் இவ்வுலகத்திலோ மறுவுலகத்திலோ மேம்பாடு பெற்றுக்கொள்வது அனைத்தும் அவரது ஜனசமூக ஊழியத்தையே பொறுத்திருக்கின்றது. உலகத்துவக்கத்திலும் அதன் மத்தியகாலத்திலும் இருந்த முனிவர்களும் தபோதனர்களும் இக்காலத்தில் இருக்கும் பெரியவர்களும் மேதாவிகளும் தங்கள் இரக்ஷண்யத்திற்குப் பற்

[...]க்கொண்டது இந்த ஜன[...]ய.

[...] ஊழியத்திற்கு முதற்படி தன்[...] இல்லது பலியிடும் குணமேயாம். ஒரு[...]தன் ஐம்பொறிகளை அவைகள் போகுமிடமெல்லாம் போகவிட்டால் எவ்விதமான தன் மறுப்பையும் எடாகூடப்படுத்தி விடும். செல்வம் வந்த காலை சந்தோஷப்படுவதும், தரித்திரம் உற்றபொழுது கவலைப்படுவதும் தன் மறுப்பிற்கு முழுதும் விரோதம். இற்றைச் செல்வத்தால் மிதமிஞ்சின இன்பம் அநுபவிக்க விரும்புவார் எவரோ அவர் நாளை தரித்திரத்தால் மிதமிஞ்சின துன்பம் அநுபவியாதிருத்தல் முடியாது. ஆகையால் செல்வத்திடத்து விருப்பும் தாரித்திரத்திடத்து வெறுப்புமில்லாது இவையனைத்தையும் ஒரு சேரக்கடந்த தன்மறுப்பே தன்மறுப்பாகும். இவ்வித தன் மறுப்புடையவரே ஜனசமூகவூழியத்திற்குத் தகுதியுள்ளவர். அன்றியும் டாம்பீக நோக்கும் கெம்பீரப் போக்குமில்லாத தன் மறுப்புடையவரே ஜனசமூகத்தை ஆளக்கூடியவர். சமுதாயத்தை ஆளுவதும் சமுதாயத்திற்கு ஊழியம் பண்ணுவதும் மேதாவிகள் கருத்தில் ஒன்றே யன்றே? சக்கரவர்த்தி மகன் சக்ரவர்த்தியாயினும் அவனும் ஜனசமூக ஊழியனே.

சமுதாய ஊழியத்தை எவரும் எந்த அந்தஸ்திலும் செய்யலாம். இதற்கு கல்விமான்களென்றோ செல்வவான்களென்றோ, அதிகாரிகளென்றோ அல்லது இக்காலத்தில் சிலர் விரும்புகிறதுபோலச் சேர்மன் கவுன்சிலர் மாஜிஸ்ட்ரேட்என்றோ இருக்கவேண்டுமெனல் அவசரமல்ல. பொதுத் தீர்வை காலத்தில் நாம் செய்துவந்த நன்மை தீமைகள் கணக்கெடுக்கப்படுமே யொழிய நாம் எத்தனை ஷாப் வைத்து நடாத்தினோ மென்றும் நமக்கு எத்தனை தோணிகள் இருந்தன வென்றும் நாம் எந்தெந்த ஆபீஸ்களில் உத்தியோகம் பார்த்தோ மென்றும் ஒருவரும் கேட்கமாட்டார்கள். அர்ச். இஞ்ஞாசியார் அர்ச். சவேரியார் போன்ற பெரிய புண்ணியவான்கள் தோணிகளும் ஷாப்புகளும் வைத்து நடாத்தினவர்களல்ல. அவர்களுக்குப் பின்னிருந்த தத்துவ போதகர் வீரமாமுனிவர் போன்ற விற்பன்ன கேசரிகளுக்கும் ஆத்தும கண்ட்ராக்ட்கள் இருந்தனவே யொழிய ஆபீஸ் கண்ட்ராக்ட்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

இனி, நம் ஜனசமூக ஊழியம் எப்படி நடைபெறவேண்டுமென்பதைக் கவனிப்போம். ஜன சமூக அபிவிர்த்தியைப் பற்றி எவர் என்ன சொன்னாலும், அபிவிர்த்தி. ஜனசமூகத்தில் ஏறக்குறைய எல்லோருமே எழுதவாசிக்கத் தெரிந்துகொள்வதிலிருந்து ஏற்படவேண்டும். தாய்பாஷையையேனும் எழுத வாசிக்கக் கற்றுக்கொள்ளாத பிள்ளைகளை யுடைத்தான ஓர் ஜனசமூகம் ஏனைய நாகரீகங்களில் முன்னேறுவதெப்படி? ஆகையால் சமுதாய ஊழியத்தைச் சரிவரச் செய்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் முதல்முதல், தம் சமூகத்தினர் எழுத வாசிக்கக் கற்றுக்கொள்வதற்குவேண்டிய சாதகங்களைக் கையாடுவதே சிரேஷ்டம். இதுகேட்ட சிலர் "இளமையிற் கல்" என்னும் முதுமொழி யொன்றை ஆதாரங்கொண்டு, மாணவ பதவி தப்பிப்போன மற்றையோருக்குக் கல்வி சாலுமோ என்பார்களாக்கும். கல்விக்கு இளம்பிராயம் நல்லதென்பதே யொழிய முதிர் பிராயத்தில் கல்வி சாலாதென்பது மேற்படி முதுமொழியின் பொருளன்று. இதற்குத், திருக்குறளில் கல்வியைப் பற்றிய அதிகாரத்தில் ஆக்கியோன் இன்னவயதில் கற்க என வரையிடாது பொதுப்படக் "கற்க" எனச் சொன்னதே சான்றாகின்றது. அப்புறம் அத்திருவள்ளுவரே அவ்வதிகாரத்தின் மற்றொரு சூத்திரத்தில் "என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" எனச் சொல்லியிருப்பதானது கல்வியை நாம் எவ்வயதிலும் விருத்தி பண்ணலாமென்பதை வலியுறுத்துகின்றது. ஆகவே கல்வி எல்லாவயதினும் பொருந்தும். ஆனால் மாணவபதவியொழிந்த மற்றையோருக்குக் கல்வி புகட்டுவதற்கு நாம் செய்யவேண்டிய தொண்டு. அதாவது :

ஜனசமூகத்தில் தொழிலாளிகளுக்காக ஆங்காங்கு வாசகசாலைகளும் பள்ளிக்கூடங்களும் நிருமாணிக்கவேண்டும். அத்தொழிலாளிகளுக்கு வாசித்துக்காட்டவும் போதிப்பதுமான அவ்வலைக் கற்றுணர்ந்த நண்பரிற் பலர் ஒப்புக்கொள்ளவேண்டும். சாவதானமுள்ள பத்துப்பேர் ஒவ்வோர் கிராமத்திற் சென்றும் ஏற்பட்டு தினத்திற் கொருவர் மாலைநேரத்தென்கிலும் இப்பரம தொழிலை நடாத்திவரவேண்டும். அல்லது இதற்காக சிறிது பொருள்சேர்த்து அதன் வருவாயைக்கொண்டு மாலைப்பள்ளிக்கூடத்திற்கென்றே ஓர் உபாத்தியாயரை, யேற்படுத்திப்போடலாம். இன்னும் சிலர் வீடுவீடாய்ப் போய் ஆங்குள்ள பத்திரிகைகளையும் புத்தகங்களையும் சேகரித்து வாசகசாலைகளுக்கு கொடுத்துதவலாம்.



ஜனசமூக ஊழியர்கள் யமுதா தம்தம் அறிவில் வளர்ந்தேறுவதற்குரிய கருமங்களையே முதலில் கைக்கொள்ளவேண்டும். அறிவைப் பரப்புதற்குக் கலாசாலைகளையும் வாசகசாலைகளையுமன்றி அநுகூலமான எத்தனம் வேறு கிடையா. ஆகையால் ஜனசமூக ஊழியம் கலாசாலைத் திறத்திலும் வாசகசாலை பலத்திலுமே அடங்கியிருக்கின்றது. அதுவே ஜனசமூக ஊழியத்தி[ன்] தத்சொரூபம்.

M. P. Mascarenhas.

[மதுபானத்தின் தீமையைப்பற்றிய தொண்டிச்சித்து அடுத்த மாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.]

---

## MISCELLANEOUS NEWS & NOTES.
## பற்பல சமாச்சாரம்.

**பேர்லின் பட்டணம்.**—ஜெர்மனியின் முக்கிய பட்டணமாகிய இப்பட்டணத்தின் பெரும் பாகம் 1870-ம் வருடம் ஜெர்மனியருக்கும் பிராஞ்சுக்காரருக்கும் நடந்த யுத்தத்தில் பிராஞ்சியரிட மிருந்து பெற்றுக்கொண்ட பணத்தைக் கொண்டே கட்டப்பட்டதாம்.

**தலைமயிர் உதிர்வதற்கு மருந்து.**—மா. எலுமிச்சை, நார்த்தை, கொளுஞ்சி, மாதுளை, விளா இவைகளின் வித்துப் பருப்புகளை ஓர் நிறையாயெடுத்துப் பசும்பாலில் அரைத்துக் கொதிக்கவைத்து, ஒரு மண்டலம் வரையில காலையில் சிரசில் தேய்த்து மாலையில் ஸ்நானஞ் செய்து வர குணங் கொடுக்கும்.

**யுத்தகளத்திலிருக்கும் தேசங்கள் 15.**— அவைகளில் நேச வல்லரசுகள் தரப்பில், செர்வியா, ருஷியா, பெல்ஜியம், பிராஞ்சு, இங்கிலாந்து, மோண்டனீக்ரோ, ஜப்பான், இத்தாலி, அல்பேனியா, போர்த்துகல், ரொமேனியா ஆகிய 11 தேசங்கள். சத்துராதிகள் தரப்பில் ஆஸ்திரியா–ஹங்கேரி, ஜெர்மனி, துருக்கி, பல்கேரியா ஆகிய 4 தேசங்கள்.

**ஒரு எளிய வித்வானும் தனவானும்.**— ஒரு தனவானுக்கு எளியவர்கள் மட்டிலும் படித்தவர்கள் மட்டிலும் அதிக வெறுப்புண்டாயிருந்தது. ஒரு நாள் எளிய வித்துவான் ஒருவன் அ[...] வீட்டுக்குப்போய், அவனு[...] பால் ஒரு சாண் தூரத்தி லுட்[...] அப்போது அத்தனவான் [...] கொண்டு, வித்துவானை நோக்கி: [...]னக்கும் உமக்கும் என்ன வித்தியாசம் [...] ஒன்றுமில்லை" என்றான். அதற்கு வித்துவான் "இல்லை இல்லை; ஒரு சாண் வித்தியாசமுண்டு" என்று இருவருக்குமுள்ள தூரத்தை அளந்து காட்டவே தனவான் வெட்கி எழுந்துபோய்விட்டான்.

**ஒரு வக்கீலும் மாஜிஸ்திரேட்டும்.**— ஒரு வக்கீல் கோர்ட்டில் பிடிவாதமாய் வழக்காடிக் கொண்டிருக்கையில், மாஜிஸ்திரேட்டு "கழுதை கத்துகிறது" என்று சொல்லி தனக்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். வக்கீல் இதைக் கேட்டுங் கேளாதவர்போல், தன் கட்சியைப் பேசி முடித்தார். பிறகு மாஜிஸ்திரேட்டு தீர்ப்பு சொல்லுகையில், கோர்ட்டின் பின்புறத்திலிருந்த ஒரு கழுதை கத்த ஆரம்பித்தது. உடனே மாஜிஸ்திரேட்டு "அதென்ன சப்தம்?" என்று கேட்க அதற்கு வக்கீல் எழுந்து "அது தங்களுடைய குரலின் எதிரொலியே யன்றி வேறல்ல" என்று சொல்லிப் பழிக்குப்பழி வாங்கினாராம்.

**ஒரு போர்வீரனும் காப்டனும்.**—இவ்விருவருக்கும் வெகு நாளாய் விவாதமேற்பட்டிருந்தது. ஒரு நாள் போர்வீரன் காப்டனைப்பார்த்து "நான் உன்னை இப்போது கழுதை யென்று கூப்பிட்டால் நீ என்ன செய்வாய்?" என்றுகேட்க, அதற்குக் காப்டன் "நான் உன்னைக் கொட்டடையிலடைப்பேன்" என்றான்.

போர்வீரன்.—"நான் உன்னை கழுதை யென்று நினைத்தால் நீ அப்போது என்ன செய்வாய்?

காப்டன்.—"நான் உன்னை ஒன்றுஞ் செய்யமுடியாது. ஏனெனில் நினைவுகளுக்குச் சாட்சி கிடைப்பது அசாத்தியம்."

போர்வீரன்.—"அப்படியானால் நான் உன்னை அப்படித்தான் நினைக்கிறேன்" என்று சொல்லிப்போய்விட்டான்.

**உலகத்திற்கு அதிகப் பிரயோசனமுள்ளது சூரியனோ, அல்லது சந்திரனோ?** வட

...ரோ ஜாதியாருடைய
...பேற்சொன்ன கேள்வி
...வெகு உற்சாகத்துடன் பல
...யத் தர்க்கித்துக்கொண் டிருந்
..., அவர்களில் ஒருவன் எழுந்து,
...ரையும் சமாசாபதரையும் வணங்கி
...சூரியனை விடச் சந்திரன்தான் உலகத்
திற்கு அதிக பிரயோசனத்தைக் கொடுக்
கின்றது. எப்படியென்றால், நமக்கு வெளிச்
சம் அதிகமாய்த் தேவையா யிருக்கும்
இரவிலே யல்லவா சந்திரன் பிரகாசித்து
நம்மைச் சந்தோஷிக்கச் செய்கிறது? சூரி
யனோ நமக்கு வெளிச்சம் தேவையில்லாத
பகலில் அதிக உஷ்ணத்தைக் கொடுத்து
நம்மை வருத்துகிறது" என்று சொல்லி,
சபையிலுள்ள அநேகருடைய ஓட்டுகளைப்
பெற்றுத் தர்க்கத்தை முடித்தானாம்.
பேஷ்!! சபையினர் அனைவரும் அறிவா
ளிகளே.

ஒரு மாணாக்கன் பரீட்சையில் தேறி
னது.-இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒரு பள்ளிக்
கூடத்தைப் பரிசோதனைசெய்யப் போயி
ருந்தார். வகுப்புப் பிள்ளைகளை கணக்கைத்
தில் பரிசோதனை செய்ய, ஒரு சிறுவனை
நோக்கி "ஒன்பதில் பாதி என்ன?"
என்று கேட்டார்.

பையன்.—"ஐந்து சார்"

இன்ஸ்.—"எப்படி?"

பையன்.—வெகு உற்சாகத்துடன்
"சார் ஆரஞ்சு பழக்காரி 2 பழங்களை 9
பைசாவுக்கு விற்கிறாள்; ஆனால் ஒருபழத்
தின் கிரயம் 5 பைசாவென்கிறாள். ஆகை
யால் 9-ல் பாதி 5" என்றான். அப்போது
இன்ஸ்பெக்டர் உபாத்தியாயர் மூலமாய்
அவ்வூரில் பழக்காரி அவ்விதமே விற்பனை
செய்கிறாளென்றறிந்து பையனுடைய மறு
மொழி சரியென்று சொல்லி அவனை மேல்
வகுப்புக்கு மாற்றிவிட்டுப் போனார்.

மூன்று பூசை.—கர்த்தர் பிறந்த திரு
நாளன்று உலகத்திலுள்ள ஒவ்வொரு
குருவானவரும் மூன்று பூசைசெய்ய எப்
படி நிருபிக்கப்பட்டிருக்கிறதோ அப்படி.
யே உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநா
ளன்றும் குருக்கள் மூன்று பூசைசெய்ய
சென்ற வருஷத்தில் நம்முடைய பரிசுத்த
தந்தை 15-ம் ஆசீர்வாதப்பரால் நிருபிக்கப்
பட்டது. இப்பேர்ப்பட்ட கட்டளையைப்
பிறப்பித்த பாப்பானவருக்குள்ள கருத்து
யாதெனில் நிகழும் கொடிய யுத்தத்தினால்
இலட்சக்கணக்கானபேர் மடிகிறார்களென்
கிறதினாலேயும், உத்தரிக்கிற ஆத்துமாக்க
ளுக்குக் கிடைக்கக்கூடிய ஆறுதல் பல
காரணங்களின் நிமித்தம் தற்காலத்தில்
கிடைக்காமற் போகிற தென்கிறதினாலேயு
மாம். ஆகையால் கிறிஸ்துவர்கள் இத்
திருநாளன்று எத்தனை பூசை காணக்கூ
டுமோ அத்தனை பூசையுங் கண்டு உத்தரிக்
கிற ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுப்
பார்களாக.

கோசுவின் உபத்திரவத்தைப் போக்கும்
வழி—புதிதாக ஓர் தேசத்துக்குச் சென்ற
ஐரோப்பிய ரொருவர் அத்தேச வாசியொ
ருவனை நோக்கி, "இவ்விடம் வசிப்பதற்கு
நல்ல இடமா?" என அவன் "இடமென்
னவோ நல்ல இடந்தான். கொசுவினுடைய
உபத்திரவந்தான் சொல்லமுடியாது" என்
றான். அதற்கு அவர், "அப்படியானால் இங்
குள்ளோர் கொசு கடியாமலிருப்பதற்கு
என்ன செய்கிறார்கள்?" என்று கேட்க,
அவன் "ஐயா அதைப்பற்றி எனக்குத்
தெரியாது, நான் மாத்திரம் ஒரு உபாயத்
தினால் கொசுவின் உபத்திரவத்திலிருந்து
தப்பித்துக்கொள்கிறேன். எப்படியெனில்,
எனக்கு வழக்கமானபடி முற்பாதி யிரவில்
போதுமானவரையிலும் என் வயிற்றை
நிரப்பிக்கொண்டு உறங்குவதால் கொசுவி
னுபத்திரவந் தெரியாது. பிற்பாதி யிரவில்
நான் விழித்துக்கொண்டபோதும் அவை
களுடைய வயிறு நிரம்பி யிருக்குமாகை
யால் அவை என்னைக்கடிக்கமாட்டா" என்
றானாம்.

நற்போதனை.—ஒரு வேலையைச் செய்
யும்போது முழு மனதையும் அதிலேயே
நிறுத்தி அது முடிந்தபின்பே வேறொரு
வேலையைத் தொடங்கவேண்டும். பெரியோ
ரைக் கண்டவுடனே முன்பு வந்தனஞ்
செய்யவேண்டும். பிறகு அவர்கள் கேட்
கும் கேள்விகளுக்கு மட்டும் அடக்கமாய்
விடையளிக்கவேண்டுமேயன்றி அனாவசிய
மாக எதையும் பேசலாகாது. ஒருவரி
டம் சம்பாஷிக்கும்போது அவர் முகத்
தைப் பார்த்தே பேசவேண்டும். எந்நேர
மும் ஒருவரைக் கேலி செய்வதும் பரிகடி
பண்ணுவதும் விகடம் பேசுவதும் அறிவா



ளிகளுக்கு அழகல்ல. ஒன்றைப் படித்து
விட்டதினாலேயே பலனை அடைந்துவிட்ட
தாய் ஒருபோதும் நினைக்கலாகாது. அத
னால் ஒரு பயனும் உண்டாகாது. படித்தது
போல் நடக்க முயலவேண்டும். கற்பது
கற்றபடி நடப்பதற்காகவே. நூல்களில்
வாசிப்பதைவிட ஆன்றோர் வாக்கியம்
மிகச் சிறந்தது. ஆதலால் பெரியோர்
கூறும் புத்திமதியை அலட்சியஞ் செய்யா
மல் அதன்படி நடக்கவேண்டும்.

அர்ச். பாப்புவின் ஸ்தானபதியாகிய
ஸேலஸ்கி ஆண்டவரவர்கள்.—இந்தியா,
பர்மா, சிலோன் முதலிய தேசங்களுக்கு
அர்ச். பாப்புவின் பிரதிநிதியாக விருந்து
வந்த மேன்மை தங்கிய, வந்திக்கத்தக்க
ஸெலஸ்கி அதிமேற்றிராணியா ரவர்கள்
அர்ச். பாப்பானவர்கள் உத்தரவின்படி
உரோமாபுரிக்குப் போகப்போகிறாரென்
றும், மறுபடியு மிந்நாட்டிற்குத் திரும்பி
வரமாட்டாரென்றும், கேள்வியுற்று விச
னிக்கிறோம். இவர் நிகழும் வருஷம் டிசம்
பர் மாதம் தம் ஸ்தானத்தினின்று நீங்கி
ரோமாபுரிக்குப் புறப்படுவார். இவர் ஏறக்
குறைய 25 வருஷ காலமாக ஆஷ் உன்னத
பதவியை வகித்துவந்தார். இவர் நம்மிந்தி
யருடைய அபிவிருத்தியின் மட்டில் மிகக்
கவலையுள்ளவர். இவரது தூண்டுதலாலும்,
பிரயாசத்தாலும் கண்டியில் பாப்பானவர்
குருமடமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. மே
லும் மலையாளத்தில் சுதேச மேற்றிராணி
மார்களும் ஏற்படுத்தப்பட்டனர். இவர்
ரோமாபுரியில் நம் முன்னேற்றத்திற்காக
இன்னும் உழைப்பாரென்று நம்புகிறோம்.
சர்வேசுரன் நம் மிந்திய திராட்ச தோட்
டத்தில் ஏறக்குறைய 25 வருஷ காலமாக
உழைத்த இவருக்கு நல்ல சம்பாவனை
யளிப்பாராக.

புது நன்மை.—நிகழும் யுத்தத்தின்
ஆவக்கத்தில் பெல்ஜிய தேசமானது ஜெர்
மனியரால் பிடிபட்டபோது, ஜனங்களும்
இராஜ குடும்பத்தாரும் தம் சுய தேசத்தை
விட்டு பிரான்சு, இங்கிலாந்து முதலிய
தேசங்களுக் கோடிப்போய் அவ்விடத்தில்
அடைக்கலம் புகுந்திருக்கிறார்களென்று
நாமெல்லோரும் அறிவோம். இராஜ குடும்
பத்துப் பிள்ளைகளெல்லோரும் பிரான்சு
தேசத்தில், கன்னியாஸ்திரீ மடங்களிலும்,
காலேஜ்களிலும் கல்வி பயி...
கள். அரசரின் குமாரத்தியா...
ஜோஸ் என்னும் பெண் ஒரு க...
மடத்தில் வாசித்து, ஆகஸ்ட் மாதம் ...
தேதியன்று அநேக எளிய பிள்ளைகளுட...
தானும் ஒருவளாக, ஆடையாபரணம் முத
லிய ஆடம்பரச் சிறப்பொன்றுமின்றி புது
நன்மை வாங்கினாளாம். நம் கத்தோலிக்குத்
தாய் தகப்பன்மார்களுக்கு இது ஒரு நல்ல
படிப்பினை. பங்கு சுவாமிமார்கள், பிள்ளை
களை புதுநன்மை வாங்க, ஞான உபதே
சத்திற்குக் கூப்பிட்டால் சில தாய் தகப்
பன்மார்கள் "என் பிள்ளைக்கு இன்னும்
வயது வரவில்லை.' நல்ல நகை, உடுப்பு
ஒன்றுமில்லை, அடுத்த பண்டிகைக்குப்
பார்த்துக்கொள்ளலாம்" என்று பல சாக்
குப்போக்குகளைச் சொல்லி பிள்ளைகளை
அனுப்பாம லிருந்துவிடுகிறார்கள். இது
ஒழுங்கல்ல.

காலஞ் சென்ற பம்பாய் அதிமேற்றிரா
ணியார்.-பம்பாய் அதிமேற்றிராணியாரா
யிருந்த வந்திக்கத்தக்க ஹெர்மன் ஜார்
ஜன்ஸ் ஆண்டவரவர்கள் சென்ற மாதம்
28உ காலஞ்சென்றாரென்கிற சங்கதியைக்
கேள்வியுற்று மிக்க விசனமடைகின்றோம்.
இவர் 1880-ம் வருடம் குருப்பட்டம்
பெற்று 1886-ம் வூ நம் இந்தியாதேசத்
துக்குவந்தார். 1907-ம் வருஷத்தில் சங்.
ஜார்ஜன்ஸ் சுவாமிகள் பம்பாய் அதிமேற்
றிராணியாராகத் தெரிந்துகொள்ளப்பட்
டார். இவர் அதிமேற்றிராணியாராக வி
ருந்த 9 வருஷங்களுக்குள் செய்த நன்மை
கள் பல. நிகழும் கொடிய ஐரோப்பிய
யுத்தம் தொடங்கினது முதற்கொண்டு
யுத்தத்தில் நடத்தப்படும் கொடூரங்களும்,
தம் குருக்களில் அநேகர் மறியல் செய்யப்
பட்ட சங்கதியும் அவரைப் பீடிக்கத் தொ
டங்கின. நாளாவட்டத்தில் அவரது வலி
மைகுன்றி மூப்பும் மேலிட்டு கடைசியாய்
சென்ற செப்டம்பர் மீ 28உ காலை தேக
வியோகமானார். சர்வேசுரன் இவருக்கு
நித்திய இளைப்பாற்றியைக் கொடுப்பாராக.

ஒரு போலீஸ் கோர்ட்டு.—ஒரு மாஜிஸ்
திரேட்டு தன்னால் பல தருணங்களில் தண்
டிக்கப்பட்ட ஒரு பழைய குற்றவாளி மறு
படியும் குற்றஞ் சாட்டப்பட்டுத் தன்முன்
நிறுத்தப்பட்டபோது அவனைநோக்கி "நீ

...யபுந் தோழர்களால்தான் ...லமுறை தண்டிக்கப்படுகிறாய்" ... அதற்குக் குற்றவாளி "ஆம், ஆம், ...களே, தங்களுக்குத் தெரிந்தவரை ...ல், சிறுவந்துவக்கி, போலீஸ்காரர், மாஜிஸ்திரேட்டு, இவர்களுடன்தான் நான் சகவாசஞ் செய்துவருகிறேன்; அதுபற்றியே எனக்கு இந்த கதி" யென்றான்.

நிசவாகனம்.—எனும் ஆண்டவரம்மானை ...பா காலத்துக் கொப்பான இந்த நவம்பர் மாதத்திற்கு வெகு பிரயோசனமான ...து. விலை 6-அணா.—எ. எப். சைமன்,
கமிஷன் ஏஜெண்ட், மஹாவிகடதூதன் ஆபீஸ்,
ஜார்ஜ்டவுன் மதராஸ்.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

ப—ர்.

### ஜனன அறிக்கை.
#### தூடதுப்பேட்டா.

திரிலோகபரமனருளால், எனது சகோதரியும் Mr. R. Joseph writer அவர்களின் பிரிய மனைவியுமான சி. சௌ. மரியம்மாள், கடந்த August மாதம் 28-ம் வ. திங்கட்கிழமை காலை சுமார், 9-30 மணிக்கு பரலோக, பூலோக இராஜேஸ்பரரான பரிசுத்த சேசுவின் திரு இருதயக் கருணையாலும் அர்ச். ஊர்து தேவ ஆண்டவளின் கிருபையாலும் பிதாப்பிதாவாகிய, அர்ச். சூசையப்பரின் பரிபூரணசீராலும் யாதொரு பிரசவ வேதனையின்றி தனது 7-வதுபேறுகதர் பெண் மகவை யீன்றனள். நிகழும் 1916ஆண் Sept. மாதம் 23ம் திகதி சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு தென் குடகுப்பாளிபெட்டாவில் எழுந்தருளி இராநின்ற அர்ச். ஊர்து நாயகியின் தேவாலயத்தில் Mr. M. John Aruldoss Pillai யும் மேற்படியாரின் மனைவி, மரியம்மாள் அவர்களும் ஞானத்தகப்பன் ஞானத்தாயாகவும் நின்று Revd. Fr. (J. Caster.) ஜே. கோசர் இராஜ ரிஷிகளால் அக்குழந்தைக்கு ஜெயப்பூரணியம்மாள் என்று நாமகரணமிடப்பட்டு திருச்சபையாசாரப்படி ஞானதீட்சை கொடுக்கப்பட்டது. தா யும்சேயும் சுகம்.

இதனைக் கண்ணுறும் எம் நேயர்களேவோரும் அப்பாலகனைத் தேவாசீர்வதித்து நற்பிராய் வளர்ந்து நீடிய ஆயுளையும் நித்திய சகசெல்வப் பாக்கியத்தையும் அருளும்படி ஆபல திரியேக சுதனை மன்றாடப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:
M. V. Doraswamy Pillay.
குழவியின் தாய் மாமன்.

### நன்மரண அறிக்கை.

#### புரசைவாக்கம்.

சென்னை புரசை கிரீன் வில்லாவில் வசித்து வரும், வேப்பேரி அர்ச்: பௌலேவந்திரர் ஆலய பள்ளிக்கூடத்து தலைமை உபாத்தியாயருமாயிருந்தவருமான எனதருமை மாமனார் அ. தே. பரமானந்தம் பிள்ளை 1916 ஆண் அக்டோபர் மீ 1உ ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தனர். அன்று சாயரட்சை 5 மணிக்கு கீழ்பாக்கத்து கல்லறையில் நல்லடக்கஞ்செய்யப்பட்டது. இவரது ஆத்தும ஈடேற்றத்துக்காக இதனை வாசிப்போர் வேண்டிக்கொள்ளகோரும்;

A. ஜோஸ் பிள்ளை.
நெ. 30. எழுகிணற்று தெரு.
ஜார்ஜ்டவுன், சென்னை.

#### சோலாப்பூர்.

சோலாப்பூரில் வசிக்கும் கனம் சீமோன் மெஸ்மென், குமாரத்தியும் எனது மனைவியுமாகிய அந்தோணியம்மாள், 1916 ஆண் செப்டம்பர் மீ 30உ தனது ஆறுவது ஆண்குழந்தை பெற்று அதிலிருந்து அசௌக்கிய மடைந்து, வைத்திய உபயோகங்கள்யாவும் செய்து சுகப்படாமல் கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் சரிவரப்பெற்று அக்டோபர் மீ 3உ செவ்வாய்க்கிழமை காலை 6½ மணிக்கு தனது 22 ம் பிராயத்தில் எங்களனைவோரையும் தனது ஏகருமாரனையும் பரதவிக்கவிட்டு தனது ஆத்துமத்தை சர்வேசுரனுடைய கரத்தில் ஒப்படைத்தனள். இந்த ஆத்தும இளப்பாற்றிக்காக 1-பர. 1-பிரி. 1-திரி வேண்டிக்கொள்ளவும்.

இப்படிக்கு,
மனைவியை இழந்து பரதவிக்கும்
E. S. Barnard.



### இரத்தமே பிராணாதாரம்.

பயிர்களுக்கு ஜலம் ஆதாரமாயிருப்பது போல மன்னுயிர்களுக்கு இரத்தமே ஆதாரமென்பது யாவரும் அறிந்த விஷயம். இரத்தத்தினாலேயே சப்த தாதுக்களும் போஷிக்கப்பட்டுப் பராமரிப்படைந்து சரீரம் நடைபெற்று வருகிறதேயன்றி வேறல்ல. நமது சரீரத்தில் உயிர் தரித்திருப்பதற் கேதுவான பிராணவாயுவைச் சேகரஞ்செய்து, தேகத்திலுள்ள பலபாகங்களுக்குங் கொண்டு சேர்ப்பதும், தேகத்திலுள்ள கழிவுப் பொருளாகிய கரியமிலவாயு விசர்க்கப் பொருளாதியவற்றைக் கழிவுகாலாகும் அங்கங்களில் சேர்த்து வெளிப்படச் செய்வதும் இரத்தத்தின் தொழிலேயாகும். தேக போஷிப்புக்கு ஆதாரமாயிருக்கிற உணவுப் பொருட்களின் சத்தைப் பெற்றுக்கொண்டு, மாமிசமாக்கும் பதார்த்தத்தை மாமிசத்துக்கும், சருமமாக்கும் பதார்த்தத்தை சருமத்துக்கும், எலும்பாக்கும் பதார்த்தத்தை எலும்புக்கும், மூளையைபோஷிக்கும் பதார்த்தத்தை மூளைக்கும் கொண்டுசெலுத்துவது இரத்தமே. ஜீரணக் கருவிகளுக்கு வேண்டிய அனலைத்தந்து, அவைகளின் தொழில் நடைபெறச் செய்வதும் இரத்தமே. இவை மாத்திரமா? மனுஷனுடைய சத்துவ சக்தி ஜீவசக்தி முதலியவை வெளிக்குத் தோன்றுகின்றதும் இரத்தத்தினாலேயேதான். சுருக்கி ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால்,

#### இரத்தமே ஜீவன், ஜீவனே இரத்தம்.

உவர்ஜல முதலியவற்றால் பயிரின் செழுமைகெட்டுப் பலன் குன்றிப்போவது போல், கெட்ட இரத்தத்தினால் தேகசுகங்கெட்டுப் பல நோய்கள் உண்டாகின்றன. ... தன் இயற்கை நிலையில் இரு... மனுஷனை யாதொரு நோயும் அ... லால், இரத்தம் கெடாமல் காப்பதும், ...க்கால் கெட்டால் உடனே அதைச் சுத்தப்... அதன் சுபாவ நிலைக்குக் கொண்டுவருவதும் தேகிகளாய் ஜீவிக்க விரும்புபவரின் கடமையாகும்.

இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, இரத்தத்தை விருத்தி செய்து, ஜீரணசக்தியுடன் நல்ல பசியையுண்டுபண்ணி, நரம்புகளுக்கு வலிமையும் தாது புஷ்டியையும் தந்து, உடம்புக்குப் பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கத்தக்கது வீரமாமுனிவரின் சுகந்தருமாத்திரையே.

#### வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரையால் தீரும் வியாதிகள்.

விஷசுரம், மலேரியா, முதலிய விஷக் காய்ச்சல்களும்; டிஸ்பெப்சியா என்னும் அஜீரணம், கிராணி, அதிசாரக்கழிச்சல் முதலிய பலவகை வயிற்றுப் போக்குகளும்; மேகவெட்டை, நீர்ச்சுருக்கு, பிரமிய முதலிய மேகரோகங்களும்; ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகவாய்வு, சூதகசிக்கல், முதலிய வியாதிகளுந்தீரும். (Cholera) என்னும் விஷபேதிக்கும் இது நாடெங்கும் பேர்போன மருந்து.

100-மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 1—0—0. தபாற் செலவு வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மருந்தருந்தும் விதமும் அநுபான முறைகளும் மாத்திரையுடன் அனுப்பப்படும்.

C. A. Silveira, 2/74, Broadway, Madras.
சி. ஏ. சில்வேயிரா, 2/74, பிராட்வே, மதராஸ்.

### ரோஷா நகரத்துக் கோவில்கட்டிட தருமம்.

நண்பர்களே, சென்னைக்கு வடக்கே ஆரம்பாக்கம் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு 9-மைல் தூரத்தில் ரோஷாநகரமென்னும் ஓர் சிற்றூர் உண்டு. இவ்வூரிலும் இதைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலும் சென்ற 10 வருஷங்களுக்குள் ஞானஸ்நானம் பெற்ற 1000-புதுக் கிறிஸ்துவர்களிருக்கிறார்கள். இவர்களுக்கு, ஓர் தகுதியான கோவிலில்லை. அவசரத்தின் நிமித்தம் கட்டப்பட்டிருந்த குச்சுக் கோவில் இடிந்து விழுந்துவிட்டது. ஆனதுபற்றி, புதுக்கோவில் ஒன்று கட்டத் தீர்மானித்து வேலையைத் தொடங்கிவிட்டோம். மூன்றடி வரையிலும் சுவர் எழும்பி விட்டது. இதற்காக இதுவரையிலும் பிடித்த செலவு ரூ 600. பூர்த்தியாய்க் கோவில் கட்டிமுடிக்க 4000 ரூ பிடிக்குமென மதிப்பிடப்படுகிறது. ஆகவே "நல்ல ஆயன்" சந்தாதாரர்கள் எமக்குக் கை கொடுத்து உதவுவார்களென நம்பி, இந்த மனு செய்துகொள்ளுகிறோம். "ஆயிர மாகாணி அறுபத்திரண்டரை" என்பதுபோல் ஒவ்வொருவரும் கொஞ்சங் கொடுத்து உதவுவார்களே யாகில் இப்புது கிறீஸ்துவர்களுடைய பேருபகாரிகளாகி, தேவாசீரைப் பெற்றுக்கொள்ளுவார்களென்பது திண்ணம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| எற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை | 100 | 4 | 0 |
| சௌபாக்கியவதி அற்புத மரியம்மாள் (நர்ஸ், பெங்களூர்) | 10 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ | 110 | 4 | 0 |

Fr. KOPERDRAAD.
விசாரணை குரு, ரோஷாநகரம், சத்தியவேடு.

## ...ப்பட்டணத்தில் ...சத்திரம் தேவை.

...சென்னபட்டணத்தில் இந்திய கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களுக்கென்று ஒரு சத்திரம் சாவடி கிடையாது. இந்துக்கள் மகம்மதியர் முதலானோருக்கோ எங்கு பார்த்தாலும் சத்திரமும், சாப்பாட்டு விடுதியும், டீகிளப், காபிகிளப் முதலியனவும் ஏராளமாயுண்டு. கோர்ட்டு வியாஜ்ஜிய விஷயமாயாவது, வைத்திய சிகிச்சைக்காகவாவது; வியாபார சம்பந்தமாயாவது அல்லது படிப்பு விஷயமாயாவது ஒவ்வொரு நாளும் சென்னைக்கு வருகிற கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் எத்தனையோ பேர். இப்படி வருகிற நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமில்லாமலும், தண்ணீர் குடிக்கத் தாவில்லாமலும் தயங்கித் தவிக்கின்றார்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்பது பல நாள் பிரயத்தனம். பெரிய கட்டிடமொன்று பட்டணத்து மத்தியில் கட்டவேண்டுமென்பது எல்லோருடையவும் எண்ணம். ஆனால் இந்த எண்ணத்தை நிறைவேற்ற மிகுந்த திரவியம் வேண்டும். அவ்வளவு திரவியஞ் சேகரஞ்செய்து காரிய முடிக்கவேண்டுமானால் அதிக நாளும் செல்லும். ஆனது நிமித்தம் "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்பதுபோல தற்காலம் ஜியார்ஜ்டவுனுக்குள் ஒரு சிறு வீடாவது வாங்கி, அதில் ஒரு விடுதி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இதற்குக் குறைந்த பட்சம் 10,000 ரூபாயாவது வேண்டும். இந்தொகை நமது பொதுஜன நலத்தை விரும்பும் கத்தோலிக்குக் கனதனவான்களிடமிருந்து தான் வரவேண்டும். இதை வசூல் செய்வதற்காக இதனடியில் குறிக்கப்பட்டுள்ள மெம்பர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் முயற்சிசெய்து வருகிறார்கள். இவர்கள் தங்களுக்குள்ளேயே சிறுகச்சிறுக சென்ற சில மாதங்களாய்ச் சேகரஞ் செய்திருக்கிற ரூபாய் 535. இச்சென்னை இராஜதானி முழுவதிலும், இலங்கை, பர்மா, சிங்கப்பூர், சைகோன், மோரிஸ், நெட்டால் முதலிய பல தேசங்களிலுமுள்ள கத்தோலிக்குச் சகோதரர்களெல்லாரும் இக் கைங்கரியத்துக்கு கைகொடுத்து, தங்கள் தங்களாலான மட்டும் பொருளுதவிசெய்து காரியத்தை முடித்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தச் சத்திர தருமத்துக்காக பணம் அனுப்புபவர்கள், மதராஸ் வட ஜியார்ஜடவுன் மோட்சராக்கினி மாதாக்கோவில் விசாரணை குரு: சங். எல். எக்ஸ். பெர்நாந்தீஸ் சுவாமிகளுக்கு அனுப்ப வேண்டும். (*Revd. Father L. X. Fernandes, Vicar, Assumption Church, North George-town, Madras.*) பணங் கொடுப்பவர்கள் பேரும், கொடுக்குந் தொகையும் இப்பத்திரிகையிலும், "கத்தோலிக்கு நேசன்" பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

| | ரூ. அ. ப. |
|---|---|
| எற்கெனவே வரவேற்கப்பட்ட தொகை. | 706—7—0 |
| பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகளால் அக்டோபர் மீ ௳ த்துக்கு வரவு | 30—0—0 |
| ,, சவரிநாத முதலியார். கிளர்க். பப்ளிக் வர்க்ஸ், கர்னூல், அக்டோபர் மாதத்துக்கு. | 1—0—0 |
| ,, எம் எல். மரியதாஸ் பிள்ளை, I. S. M. D. டோரா இஸ்மேல்கான். | 1—0—0 |
| ஆக மொத்தம், | 738—7—0 |

சங். L. X. பெர்நாந்தீஸ்.
பி. ஜெகராயலு செட்டியார்.
டி. எம். சவரிமுத்துப் பிள்ளை.
டி. எம். மாணிக்கம் பிள்ளை.
டி. எஸ். ஏ. மாணிக்கம் பிள்ளை.
டி. ஏ. தோமாஸ் பிள்ளை.
எம். பி துரைசாமிப் பிள்ளை.
டி. துரைசாமிப் பிள்ளை.


## பம்பாய்ச் சேலைகள்.

**மிகவும் நாஜுக்கானது ! மிகவும் சரசமானது !! 16 முழ நீளம்.**



இந்தச் சேலைகள் நேர்த்தியான வெள்ளைமல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப்பிறை, சந்திரப்பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள் இவைகள் போல் ஒவ்வொரு சேலையிலும் ஒவ்வொரு விதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக்கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடியசீக்கிரத்திற் தருவித்துக்கொள்ளவும். நெட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்பமுடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2 அணா 4.

விலாசம்.—கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.





# நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்" (அரு. 10:11-16.)

புத்தகம் 14. | டிசம்பர் 1916. | இலக்கம் 12.


## ADVENT.

## ஆகமனகாலம்.

ஆகமனம் என்றால் வருகை யென்றருத்தமாகும். நம்முடைய இரட்சண்யத்தின் நிமித்தம் சுதனாகிய சர்வேசுரன் மனிதாவதார மெடுக்க இவ்வுலகத்திற்கு இறங்கிவந்ததை நமக்குத் தெரியச்செய்ய திருச்சபை "ஆகமனம்" என்னும் வார்த்தையை உபயோகிக்கிறது. ஆகமன காலம் என்பதினால் நாம் அறிந்துகொள்ளவேண்டியது யாதெனில்: சுதனாகிய சர்வேசுரன் மனிதனாய்ப் பிறந்த திருநாளைக் கிறிஸ்துவர்களான நாம் எல்லோரும் தக்க பயபக்தியுடனும் பேறுபலனுடனும் கொண்டாட ஆயத்தஞ் செய்வதன் பொருட்டு பரிசுத்த திருச்சபையினால் ஏற்படுத்தப்பட்ட காலமாகும். இந்த... பெரிய திருநாளுக்கு ஆயத்த காலமாக திருச்சபை ஆரம்பத்தில் நாற்பது நாட்களை... குறித்திருந்தது. அந்நாட்களில் சில ...களில் சுத்தபோசனமும் ஒருபொழுதும் அனுசரிக்கப்பட்டு வந்தது, இக்காலத்தில் முதலாய் சில துறவற மடங்களில் இந்நாற்பது நாட்களிலும் ஒருபொழுது அனுசரிக்கப்படாவிடினும் சுத்த போசனமாகிலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

கிறிஸ்துவர்களுக்கிருந்த பக்தி வைராக்கியம் காலக்கிரமத்தில் குறையவே, அந்த நாற்பது நாட்களுக்குப் பதிலாகவும், பிதாப்பிதாக்களான ஆதாம், நோவே, ஆபிரகாம், தாவீது முதலியவர்கள் ஆதரவாகிய சர்வேசுரனுடைய வருகைக்காக எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்த 4,000 வருடங்களுக்கு அடையாளமாகவும் நான்கு வாரங்களை மாத்திரம் திருச்சபை யிப்போது நியமித்திருக்கின்றது. ஆதலால் டிசம்பர் மீ 25-ம் தேதிக்குமுன் வரும் நான்கு வாரங்களும் ஆகமன காலமென்று சொல்லப்படுகிறது.

இந்நான்கு வாரங்களை ஆகமன காலமென்று திருச்சபை ஏற்படுத்தினதின் அர்த்தம் கருத்து இன்னதென்று இப்பரிசுத்த காலத்தில் நடைபெறும் தேவ ஆராதனைச் சடங்குகளினாலேயே (Liturgy) வெளிப்படையாகும். ஆகமன காலத்தின் முதல் நாளிலிருந்து திருச்சபை ஜெபிக்கும் ஜெபங்களில் "ஆண்டவரே உம்மை வாழ்த்துகிறோம்" (Te Deum) என்னும் சந்தோஷ

...தீனையும், பூசையில்
...உந்த பரமண்டலங்க
...னுக்கு மகிமை யுண்டாவ
...oria in excelsis) என்னும் சம்
...ள் பாடின வாழ்த்து சங்கீதமும்,
...தாஷத்துக்கு அடையாளமாக எல்லா
...சபங்களிலும் சேர்த்துச் சொல்லப்படும் "அல்லேலூய்யா" வென்னும் வாழ்த்துச் சொல்லும் ஆகிய இவைகளைத்தாம் சொல்லப்படாமற்போவதையும், தபசுக் கடையாளமாகிய ஊதா வஸ்திரத்தை குருவானவர் அணிந்துகொண்டு பூசை செய்வதையும், வழக்கம்போல் பீடங்கள் அலங்கரிக்கப்படாமல் வெறுமையா யிருப்பதையும், கோவில்களில் வாத்திய முழக்கங்கள் ஒன்றுமில்லாம லிருப்பதையும், கலியாணங்களுக்கு உத்தரவு கொடுபடாமல்போவதையும் நாம் சிறிது கவனிப்போமானால், இக்காலமானது துக்கத்துக்குரிய காலம் அல்லது தவஞ்செய்ய குறிக்கப்பட்ட காலமென நாம் அறிந்துகொள்வோமல்லவா? ஆதலால் இப்போது துவக்கப் போகும் ஆகமனகாலத்தில் சுத்த போசனம் ஒருசந்தி முதலிய தவக்கிருத்தியங்களை யனுஷ்டிக்க திருச்சபை நமக்குக் கற்பியாவிடினும், சர்வேசுரனுடைய அளவில்லாத நீதிக்கு நாம் உத்தரிக்கவும், நம்முடைய பாவாக்கிரமங்களின் நிமித்தம் அவர் நம்மேல்கொண்டிருக்கும்கோபாவேசத்தைத் தணியச் செய்யவும் நமக்குத் தபசு அத்தியாவசிய மாகையால், "தபசு செய்யுங்கள் ஏனெனில் பரலோக இராச்சியம் சமீபித்து வருகிறது" (இசையா. XL. 3) கர்த்தருடைய வழியை "முஸ்திப்பு செய்யுங்கள். அவருடைய வழிகளை செவ்வைப்படுத்துங்கள்" (லூக் III. 4. 5.) என்னும் வேத வாக்கியங்களுக் கிணங்கி, ஒறுத்தல் உபவாசத்தினாலும், தான தருமத்தினாலும், உத்தம மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து அடிக்கடி தேவநற்கருணை உட்கொள்வதினாலும், தேவநற்கருணை சந்திப்பதினாலும், விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேக முயற்சிகளினாலும், தாழ்ச்சி பொறுமை முதலிய புண்ணியங்களினாலும், நாம் அடிக்கடி கட்டிக்கொள்ளும் பாவங்களையும் விசேஷமாய் அப்பாவங்கள் மட்டில் நமக்குள்ள பற்றுதல்களை வேரோடு பிடுங்கி யெறிந்துவிட்டு அப்பாவங்களுக்கு விரோதமான புண்யங்கள் நம்முடைய ஆத்துமத்தில்வேரூன்றி வளரும்படி செய்வதினாலும் கர்த்தர் பிறந்த திருநாளைத் தக்க விதமாகக் கொண்டாட இப்பரிசுத்த காலத்தில் ஆயத்தஞ் செய்வோமாக.

அன்றியும் இப்பரிசுத்த காலத்தில் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கவேண்டிய முக்கிய கவலையுங் கருத்தும் ஒன்று உண்டு. மேற்சொன்ன பக்திக் கிருத்தியங்களை நாம் அநுசரித்து எந்தத் திருநாளைக் கொண்டாட ஆயத்தஞ் செய்கிறோம்? சுதனாகிய சர்வேசுரன் மனுஷாவதார மெடுத்து மனிதனாய் இவ்வுலகிற் பிறந்த திருநாளைக் கொண்டாட வல்லவா? ஏன் சுதனாகிய சர்வேசுரனானவர் மனிதாவதார மெடுத்து ஒரு சிறு குழந்தையாய்ப் பிறந்தார்? ஏன் எளிமையில் சீவித்து பசிதாக முதலிய மனுக்குல துன்ப துயரங்களுக்குள்ளாகி கடைசியாய்ப் பாவிகளால் நிந்திக்கப்பட்டு, எல்லோராலும் கைவிடப்பட்டு, படாத பாடுகளை யெல்லா மனுபவித்து, சிலுவையில் தம்மைப் பலியாக பிதாவான சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார்? நம்முடைய ஆதித்தாய் தகப்பனுடைய பாவங்களைப் பற்றியும், நாம் மோட்சத்தை யிழந்து, நரகத்துக்காளாகி, சர்வேசுரனுடைய பிள்ளைகளென்னும் உரிமையைப் போக்கடித்து, பசாசுக் கடிமையாகி, பாவச்சேற்றிலமிழ்ந்திக்கிடந்த நம்மை மீட்டி ரட்சித்து, நாமிழந்துபோன மோட்ச பாக்கியத்தை நமக்கு மறுபடியும் அடைந்தருளவல்லவா? ஆகையால் அவர் பிறந்த திருநாளைக் கொண்டாட ஆயத்தம் செய்யும் இந்தக் காலத்தில் நம்முடைய ஆத்துமத்திலும் இருதயத்திலும் நன்றியறிதலென்னும் புண்ணியம் பற்றி யெரியவேண்டியதல்லவா? நம்மாலானமட்டும் நம்முடைய நன்னடத்தையினால் சிநேகத்துக்குச் சிநேகங் காட்டவேண்டியதல்லவா? ஆகையால் நமதாண்டவர் நமக்குச் செய்த பேருபகாரத்துக்கு நன்றியறிதலுள்ளவர்களா யிருப்பது ஆகமனகாலத்தில் நாம் அநுசரிக்கவேண்டிய பிரதான புண்யங்களில் ஒன்றாகும்.

இவ்வாகமன காலத்தில் நாம் கவனிக்கத்தக்க இன்னொரு முக்கிய காரியமும் உண்டு. அதாவது சேசுநாதசுவாமியுடைய வருகைக்காக மிகுந்த ஆசைப்படுதல். நம்முடைய பாவப் பிணியிலின்று நம்மைச் சொஸ்தப்படுத்துகிறவரும் நமக்கு நேரிடும் சகல துன்ப துயர பொல்லாப்பு இக்கட்டுகளில் நமக்கு ஆறுதல் கொடுக்கிறவரும், உலகம், பசாசு, சரீரமாகிய நமது ஜென்ம சத்துராதிகளோடு நாம் புரியும் போரில் நம்மை ஸ்திரப்படுத்தி நமக்குத் தைரியத்தைத் தருகிறவரும், கடைசியாக மரணத்தருவாயில் நமக்குதவியாயிருந்து நம்மைத் தம்மோடுகூடத் தம்முடைய மோட்சத்திற்கு கூட்டிக்கொண்டு போய் நம்முடைய சகல பாக்கியங்களுக்கும் நம்மை பங்காளிகளாக்குகிறவரும் அவர்தான் என்று நாம் நன்குணர்ந்து அறிந்திருந்தும், அவரை அடைய—அவரோடுகூட ஒன்றித்திருக்க—ஆசைப்படாமலும் அவர் எப்போது நம்மிடத்தில் வருவாரோ வென்று ஏங்கி எதிர்பாராதிருப்பதும் எவ்வளவோ நன்றிகெட்டத்தனம். ஏனெனில், நாம் எவ்வளவு ஆசையோடு அவரை எதிர்பார்த்திருப்போமோ அவ்வளவு பிரியத்தோடு அவர் நம்மிடத்தில் வருவதுமல்லாமல் தம்முடைய இஷ்டப்பிரசாத வரங்களை நமக்கு பூரணமாய் அளிப்பாரென்பதும் திண்ணம். ஆதலால், தீர்க்கதரிசிகளோடும் அர்ச். தேவமாதாவோடும் திருச்சபையோடும் "வானங்களே, மேகங்களே, உலக ரக்ஷகரை வரவிடுங்கள், அவரை பொழியுங்கள்," என்று கூறுவோமாக.

எத்தனையோ பேர் இவைகளை யெல்லாம் சற்றுகிலும் கவனியாமல் இப்பரிசுத்த நாட்களை வீணாய்ச் செலவழித்து, அதின் யாதொரு பலனையும் அடையாமற் போகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களில் நாமும் ஒருவரா யிராதபடிக்கு இப்போதே விழிப்புள்ளோர்களா யிருந்து அதற்கு வேண்டிய பிரயத்தனங்களை எடுத்து அதின் சகல பலன்களையும் அடைய பிரயாசப்படுவோமாக. "இதுவே அநுகூலமான காலம், இதுவே இரக்ஷணியத்தின் நாள்," (2. கொரி. VI. 2.)

காலைச்செபம் செய்வதும் அநுதினம் பூசை காண்பதும் வேலைக்கு விக்கினமாயிராது; மாலை செபம் நித்திரையைக் கெடுக்காது.



# SISTER MARY CRUCIFIED

# சிலுவை சேசுவின் மரியெ... கன்னிகை.

பரலோகத்தில் பரம தேவனுடைய பாதபங்கயத்திலமர்ந்து அவருடைய தேசோமயானந்த ரூபத்தைக் கண்டனுபவிக்கும் பாக்கியம்பெற்ற கணக்கில்லா அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரிதைகளில் மேற்கூறிய மரியம்மாளென்னுங் கன்னியாஸ்திரியின் சீவிய சரிதையைப்போல் விநோதமானவை வெகு சிலவே. இக் கன்னிகை கார்மேல் சபையைச் சேர்ந்தவள். 1846-வருஷம் ஜனவரி மாதம் ஐந்தாந்தேதி நசரேத்தூருக் கருகாமையிலுள்ள ஆபலின் என்னுங் குக்கிராமத்தில் சீரிய வம்சத்தி லவதரித்தனள் மரியம்மாள் என்னு மிம்மங்கை. அவள் குழந்தையா யிருக்கும்போதே அவள் பெற்றோர் பரகதி யடைந்தனர். பின்னர் அவள் அலக்ஸான்ரு பட்டணத்தில் தன் சிற்றப்பன் வீட்டில் வளர்ந்துவந்தாள். அவளுக்குப் பதினன்கு வயது நடக்கும்போது, அவள் சிறிய தந்தை அவளை விவாகம் செய்துகொள்ளும்படித் தூண்டினன். அவளோ அவன் பேச்சைக் கேளாமல் தன் சீவியத்தைத் தேவனுக் கர்ப்பணஞ் செய்துவிட்டதாகவும் தனக்குக் கல்யாணந் தேவையில்லையென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டாள். ஆதலால் அவள் சிற்றப்பனும் உறவினரும் அவளைக் கொடுமையாய் நடத்த ஆரம்பிக்கவே, அவள் அன்னரை விட்டகன்று, யாருமற்ற அநாதையாய்க் கஷ்டப்படுகையில், ஒரு துஷ்டத் துலுக்கன் கையில் சிக்கினள். அக்கொடியவன் அம்மாதை நிஷ்டூரஞ்செய்து வேதத்தைவிட்டு மகம்மதிய வேதத்தைக் கைக்கொள்ளும்படி எவ்வளவோ நிர்ப்பந்தித்தும் முடியாமற்போய்விட்டது. ஒருதடவை அத்துலுக்கன் கோபாவேசத்தால் தன்னுடை வாளால் அவள் கழுத்தில் வெட்டினன். அவ்வெட்டால் அவள் சிரந்துணிக்கப்பட் டுயிர் போயிருக்கவேண்டியது. ஏதோ தெய்வாதீனத்தால் உயிர் தப்பிப் பிழைத்தாள்.

செய்ததுபோல், தன் சுய மல் தன் சொந்தக்காரர் வீட் ருசகாலம் வேலை செய்துவந்தாள். ர்கள் அவளை இன்னாளென்றறிந்து விடுவார்களென்று அவள் சந்தேகித்த முண்டானபோது, உடனே அவ்வில்லத்தை விட்டு நீங்கி மறைந்தனள். பின்னர் பேருட் என்னும் நகரில் அவள் வந்திருக்கையில் பிரா ன்சுதேச சிமாட்டி யொருவள் அவளைக் கண்டு தன்னுடன் வரும்படிக் கூப்பிடவே, மரியம்மாள் அவளைப் பின்பற்றி மார்சேல்ஸ் என்னுந் துறை முகப்பட்டணம்வந்து சேர்ந்தாள். அங்கே கொஞ்சகால மிருந்தபின், அவ்விடத்திலிருந்த அர்ச். சூசையப்பர் மடத்தைச் சேர்ந்து கன்னியாஸ்திரி பட்டம்பெற முயன்றாள். ஆனால் என்ன காரணத்தாலோ அம்மடத் ததிகாரிகள் அவளைத் தம்முள் ஒருவளாக ஏற்றுக்கொள்ளாததால் அம்மடத்தை விட்டகன்று 1867-வருஷம் பா என்னும்நகரிலுள்ள கார்மேல் கன்னியர் மடத்திற் புகுந்து பட்டத்துக்குப் படித்துவந்தாள்.

மங்களூர் அப்பஸ்தோலிக் விக்கராகிய மகா கனந் தங்கிய மரிய இப்ரேம் என்பவர் கேட்டுக்கொண்டதின்மேல் மங்களூரில் கார்மேல் சபைமடமொன்று ஸ்தாபிக்க, 1870-வருஷம் ஆகஸ்டு மாதம் மேற்கூறிய மரியாளென்னும் கன்னிகையும் வேறு சில கன்னிகையரும் இந்தியாவுக்கு வந்தனர். அந்த அம்மாள் சீர்மையிலிருந்து வருகையில் சென்னையில் ஒரு தினம் ஐரோப்பிய கன்னிகையர் மடத்தில் தங்கிப் போனதாகச் சொல்லுகிறார்கள்.

மங்களூருக்கு வந்தபின்னரே அக்கன்னிகைத் தன் கடைசி வார்த்தைப்பாடுகொடுத்தது. ஆனால் 1872 வருஷம் செப்டம்பர் மாதத்தில் மரியம்மாள் திடீரென ஒருவரும் எதிர்பாராத சமயத்தில், சீர்மையில் பா என்னும் நகருக்குத் திரும்பிவரும்படியாய் உத்திரவு வரவே, அவளும் உடனே புறப்பட்டுச் சென்றாள். பெத்லகேம் பட்டணத்தில் கார்மேல் மடமொன்று ஸ்தாபிக்கும்படி யவளை 1875 வருஷம் அங்கு அனுப்பினார்கள். அப்படியே அங்கு சென்று ஒரு மடத்தை ஸ்தாபித்து, அதைச் செவ்வனே நடத்திவருகையில், 1878 வருஷம் ஆகஸ்டு மாதம் 26-ந் தேதி தனது 32-வது வயதில் கடைசி தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்றுத் தானிவ்வுலகிற் தேடிச் சம்பாதித்த புண்ணியங்களுடன் தன்னாண்டவரைப் போய்ப்பார்க்க பரலோக பாக்கி சேர்ந்தாள்.

மேற்கூறிய சிறிய சரிதையில் நூதனமொன்றுமில்லையேனும், சிலுவையிலறையுண்ட சேசுவின் மரியாள் என்னும் கன்னிகையின் வாழ்வில் ஒரு விசேஷ சம்பவம் அடிக்கடி நேர்ந்தது. அவள் மடத்திற்குப் போகுமுன்னும் பின்னும் அவள் அடிக்கடித் தேவசினேகத்தால் தூண்டப்பட்டுப் பரவசமாயிருப்பது வழக்கமாம். அச்சமயங்களில் நமதாண்டவர், தேவதாய், அர்ச். தெரசம்மாள் முதலிய அநேக பரிசுத்த மோட்சவாசிகள் அவள் முன் தோன்ற அநேகப் புதுமைகளும், தீர்க்கதரிசனங்களும் அவள் செய்தும் சொல்லியு மிருக்கிறாளென்று அவள் சரித்திரிகியர் வரைந்துள்ளார். இத்தகைய தேவ வரங்களைப் பெற்ற கன்னிகையிடம் தாழ்ச்சியென்று மேலான புண்ணியம் மிகவாய் விளங்கியதோர் அதிசயமன்று! ஆனால் சர்வேசுரன் அவளுக் குதவியருளிய இஷ்டப்பிரசாதங்கள் எவ்வளவுக்கு மேலானதும் அசாதாரணமுமா யிருந்தனவோ, அவ்வளவுக்கும் பராசு ஆத்தும சம்பந்தமாயும் சரீர சம்பந்தமாயும் அவளுக்குப் பலவிதத் துன்ப வருத்தங்களைச் செய்ய உத்தரவு பெற்றிருந்தது. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள மகாத்மாவாகிய யோபென்பவரைப் போல், அவள் பேயின் கையில் அளவற்ற அவதியுற்றாள். தானிப்படியாக கஷ்டப்படப்போவதவளுக்கு முன்னதாகவே தெரியுமாம். இச்சோதனை நிகழ்ந்தகாலம் நாற்பது நாட்களாம். இது முடிந்ததும் சம்மனசொருவர் அக்கன்னிகைமுன் தோன்றி யவள் ஆத்துமசரீர சம்பந்தமான நோயனைத்தையும் சொஸ்தப்படுத்தி யவளுக்கு வேண்டிய ஆறுதலைத் தந்து மறைந்தனராம்.

சிலுவையிலறையுண்ட சேசுவின் மரியாளென்னுங்கன்னிகை சம்மனசைப்போன்ற பரிசுத்தத்தை யுடையவள். தாழ்ச்சி, பொறுமை, கீழ்ப்படிதல், முதலிய புண்ணியங்களெல்லாம் ஒருங்கே யமையப்பெற்ற மங்கையர் திலகம்; தேவவரங்கள் நிறைந்த திவ்விய சகோதரி; உலக பாசம் என்னளவுமில்லா எழில் பெருந்தகை; தன்னுடைய நேசனேயகன்மேல் தான்கொண்டுள்ள காதலுக்காய் இவ் வுலகில் எத்தகைய துன்ப வருத்தங்களையுந் திரளமா யெண்ணி யநுபவிக்கு மாற்றல் வாய்ந்தவள்; தன் சர்வேசுரன் பட்டில் அவளுக் கிருந்த உதாரத்துவத்



திற் கோரளவில்லை; அத் தேவனை யவளண்டி, ஒரு சிறு குழந்தை தன் பெற்றோரிடங் கொண்டுள்ள நம்பிக்கையை யவர் பால் காட்டினள்.

அம்மாதரசியின் தீர்க்கத் தரிசினங்கள் நேகமாயினும், அவற்றில் இரண்டை மட்டும் இங்கெடுத் துரைப்போம்; ஏனெனில் அவை யிரண்டும் தற்கால சம்பவங்களுக் குரியவைகளாம். ஒன்று பாப்புமார்களைக் குறித்தது; மற்றொன்று இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றியது.

1867 வருஷம் பாவென்னும் நகரில் அக் கன்னிகைக்கு நேர்ந்த பரவசங்களொன்றில், தனக்கு முன்தோன்றிய அர்ச். எலியாஸ் என்பவர் சொல்லியதுபோல அவள் கூறிய வசனங்கள் பின் வருமாறு:—

"இப்போதிருக்கும் நமது பரிசுத்த பிதாவின் அர்ச்சியசிஷ்டவர் அவருக்குப் பின் தனக்கு நிகரெவருமில்லை யென்னும்படியான வேறொருவர் வருவார்; நம் சத்துருக்களின் கரங்களில் அவர் மிக வருந்த வேண்டிவரும். மூன்றாவதான பரிசுத்தப் பிதா பத்திச் சுவாலகரைப் போன்றவர். நான்காமவரோ, அந்தோ, அந்தோ! அவர் சுமக்க விருக்கும் சிலுவையைப்போன்றது வேறொன்று மியாது! ஆனால் அவர் அதனையிலேயே திருச்சபை ஐயமடைய வாரம்பித்து, அவருக்குப்பின் முழுதும் ஜய மடைந்து விளங்கும்." ஐம்பது வருஷங்களுக்கு முன் சொன்ன மேற்கூறிய தீர்க்கதரிசின மொழிகள் நமது பரிசுத்த பாப்பரசர்களாகிய ஒன்பதாம் பத்திநாதர், பதின்மூன்றாம்சிங்கராயர், பத்தாம் பத்திநாதர், பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் என்னும் இந்நால்வரைக் குறித்து நிற்பதை இங் குணரற்பாலது.

மகா யுத்தத்தைப் பற்றிப் பின்வரும் பொருந்த மொழிகளை யவள் வசனித்திருக்கிறாள்: "அப்போது ஐரோப்பாவின் ஒவ்வொரு பாகத்தையும் நடுங்கச் செய்யும் பயங்கரமான யுத்தங்களிருந்தன; அவை முடிந்தபோது, மனிதரில் நான்கி லொருபங்கே யிருந்திருந்தனர்; மற்றவர்களெல்லாம் சண்டையில் மடிந்துவிட்டனர். அக்காலத்தில் குருமாரின் தொகை வெகு சொற்பமா யிருக்கும்; ஏனெனில் அவர்கள் அநேகமாய் வேதத்துக்காகவேனும் அல்லது தம் நாட்டின் பாதுகாப்புக்காகவேனும் தம் முயிரைச் செலவழித்திருப்பார்கள்." இந்தத் தீர்க்கத் தரிசனம் தற்சமயம் நடக்கும எவ்வளவு தெளிவாய் வர்ண இதை வாசிப்போரே தெரிந்துகொ

தம்முடைய திருச்சபைக்கு இத்த சிறந்த அர்ச்சியசிஷ்டவர்களைக் கொடுத் கொண்டுவரும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய நமதாண்டவருக்கு மனப் பூர்வமாய் நன்றி செலுத்துவதுடன், மனிதர் செய்யும் பாவத் துரோகங்களை மன்னித்து, இப்போது நடக்கும் இந்தக் கொடிய யுத்தம் சீக்கிரத்தில் முடிந்து உலகில் சமாதானத்தை நாட்டும்படியாக அவரை யல்லும்பகலும் மன்றாடுவோமாக.

*S. Selva Raju.*

## EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

### 1—அதிகாரம்; வசனம் (28).

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—(28). "தேவதூதன் அவளிருந்த இடத்தில் பிரவேசித்து: பிரிய தத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க. கர்த்தர் உம்முடனே. ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே என்றார்."

28. தேவதூதன் அவளிருந்த இடத்தில் பிரவேசித்தார் என்னும் வசனத்துக்கு தேவதூதன் மானிட ரூபம் பூண்டு கன்னிமரியாயி தனிமையாயிருந்த சிற்றறையினுட் சென்றார் என்றர்த்தம் கூறலாம்.

சர்வேசுரன் கன்னிமரியைத் தம்முடைய தாயாகத் தெரிந்துகொண்டமையால், அச் சமயத்தில் அவள் உள்ளத்தில் பத்திச் சுவாலகருக்கு ஒத்த மேலான உணர்ச்சி, ஆசை, பற்றுதல்களை உதிக்கச் செய்தார் என்றும், கன்னிமரியாயி அத்தருணத்தில் மெஸ்ஸியாவாகிய கிறிஸ்துநாதரின் வருகையின்மேல் அளவற்ற அபே

...ாயிருந்தாள் என்றும் ...க்கொள்ளலாம்.

...தூதன் பிரியதத்தத்தினாலே பூர...வளே வாழ்க என்றார். தேவதூதன் ...ரேய பாஷையில் கன்னிமரியை வாழ்த்தினார். அப்பாஷையிலும் கிரேக் பாஷையிலும் "கைரே" Avo வாழ்க என்பதற்கு "சமாதானம் உண்டாகுக" என்றர்த்தம் கூறப்படும். சமாதானம் என்ற பதம் இன்ப சுக செல்வ பாக்கிய மெல்லாவற்றையும் தொகுதியாய்க் குறிக்கும் இனிய சொல்.

சம்மனசானவர் மரியாயை நோக்கி "வாழ்க" என்று கூறியதால் அவளுக்குச் சகல சந்தோஷ பாக்கிய நன்மைகளை விரும்பினார். தேவ கட்டளையை மீறின ஏவைக்குச் சர்வேசுரன் துக்கத்தையும் துன்பத்தையும் கட்டளையிட்டார். "வேதனையோடே பிள்ளைகளைப் பெறுவாய்" என்று அவளுக்கு ஆக்கினையை விதித்தார். தேவ சித்தத்தை எப்பொழுதும் நிறைவேற்றின கன்னிமரிக்கோ வென்றால், சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் அளிக்கிறார். இச் சந்தோஷம் பண்டைகாலத்தின் துக்கத்தை நீக்குகின்றது. ஏவைக்கு விதித்த சாபத்தைப் போக்குகின்றது. ஏவை துக்கத்தின் தாய், மரியாயி சந்தோஷத்தின் மாதா. ஏவையால் நித்தியமான சாவு உலகத்தில் வந்தது. தேவ மரியால் ஞான உயிர் மனுஷர்களுக்குப் பிறந்தது. ஏவை மனுக்குலத்தைத் துக்க சாகரத்தில் அமிழ்த்தினாள். கன்னிமரி மனுக்குலத்தின் பேரின்ப பாக்கியத்துக்குக் காரணமாகிறாள்.

சந்தோஷத்தூதன் தேவமரிக்குச் சந்தோஷம் கூறி தன் சுப செய்தியை ஆரம்பிக்கிறார். ஏனெனில், தான் கொண்டுவந்த தூது, விசேஷம் சகல மனிதர்களுக்கும் சகல படைப்புக்கும் முதலாய் சந்தோஷத்தைப் பாலித்து சகல துன்பத்தையும் நீக்கக்கூடியதென்றும், இதினால் பூலோகத்தில் மெய்ம்மறை யொளி பிரகாசிக்க, அஞ்ஞான இருள் நீங்கும் என்றும் மரணத்தின் விஷம் ஒடுபடுமென்றும், ஆசாபாசத்தின் வலிவு குறையுமென்றும் நரகத்தின் வெற்றி ஒழியுமென்றும், பிரழ்ந்த பாவிக்கு இரட்சண்ணிய முண்டாகுமென்றும் அறிந்திருந்தார் தேவதூதன். (Gratia plena) பிரியதத்தத்தினாலே பூரணமானவளே, என்னும் மொழியால் கன்னிமரிக்கு உத்தம புகழும் உன்னத வாழ்த்துதலும் சொல்லப்படுகின்றது. Gratia என்பது அருள், வரம், பிரசாதம், தேவ கடாட்சம், தேவனால் செய்யப்பட்ட உபகாரம் என்றர்த்தம் கொள்ளும். Gratia plena வரங்களினால் பூரணமானவள் அல்லது அருட்பூரணி, பிரசாதபூரணி என்னும் தொடர் மொழி வரப்பிரசாதங்களின் ஏராளமான பெருக்கத்தைக் குறிக்கின்றது. சேசுநாதர் கன்னிமரியினிடம் மனுஷ அவதாரம் எடுத்து உற்பவமாகு முன்னதாகவே, தேவதூதன் அவளை அருட்பூரணியே என்று வாழ்த்தினதால் அச்சுப வாழ்த்துதல் அவளுடைய மேலான அர்ச்சியசிஷ்டதனத்தையும் மகத்துவ பெருமைகளையும் விளக்கிக்காட்டுகின்றது.

ஆகையால் தேவதூதன் கூறிய மங்கள மொழியால் சர்வேசுரன் கன்னிமரியைத் தம் திவ்ய சுதனுக்குத் தகுதியான இருப்பிடமாகவும், தேவ மகிமைக்கு ஏற்ற மாட்சியுள்ள மாதாவாகவும் செய்ய, அவளை எவ்வாறு அலங்கரித்து சிறப்பித்து ஆயத்தப்படுத்தினாரென்று நன்கு விளக்குகின்றது. மேலும் அருட்பூரணி என்னும் பதம் கிரேக்பாஷையில் ஒரே பதமாயும் காரணப் பெயராகவும் உபயோகப்படுகின்றது. இதுவே மரியாயிக்குத் தேவதூதன் நூதனமாயளித்த சிறப்பான செல்வ பெயரானகயால், அப்பெயரின் அர்த்தம் பூர்த்தியாய் அவளுக்கு மாத்திரம் பொருந்தும். சம்மனசு கன்னிமரியை நோக்கி "வாழி அருட் பூரணியான மரியே" என்று கூறாமல், "வாழி அருட்பூரணியே" என்று வாழ்த்தினதால் அவளுக்குச் சொந்தமான மரியாயி என்கிற நாமத்துக்குப் பதிலாய் அருட்பூரணி யென்றோர் நவமான சிறப்புப் பெயரைக் கொடுத்து, அவள் தேவ இஷ்டப்பிரசாத அருட் கொடைகளில் நிகரற்றவளாய், சகல மனிதர்களுக்கு மாத்திரமல்ல, சகல சிருஷ்டிகளுக்குமே மேலாய் உயர்ந்து, ஓங்கி விளங்கு மதிசயத்தை அறிவிப்பதே சம்மனசின் கருத்தாயும், இதைச் சர்வேசுரனுடைய பெயரால் அறிவித்தபடியால், சர்வேசுரனுடைய கருத்தாயு மிருக்கின்றது. கிறீஸ்துநாதருக்கு நீதிமான் என்றும், சலோமோன்



இராசாவுக்கு ஞானி என்றும் நாமகரணங்கள் சூட்டப்பட்டதானது, கிறீஸ்துநாதரிடம் நீதியும், சலொமோனரசனிடம் ஞானமும், மற்ற சாமானிய மனிதர்களிடம் இக்குணங்கள் அமைந்திருப்பது போல் இராமல் அவர்களிடம் வேறே விதமாய்ச் சகலரும் வியக்கத்தக்க வண்ணம் சிரேஷ்டமும் சிறப்பும் உயர்ச்சியும் பெற்று விளங்குவதைப்போல், திவ்யகன்னிகைக்கு அருட்பூரணி யென்ற நாமம் அவளிடமிருந்த அருட் பிரசாதத்தின் ஏராள பெருக்கத் தொகுதியையும், அகோசர உயர்வையும், நானாவித இலக்ஷண வகைகளையும், சிறப்பு வனப்புகளையும் எடுத்துக் காட்டுகின்றது. கன்னிமரியாயி இஷ்டப் பிராதசப்பூரணம் பெற்றிருந்தாலும், ஓயாமல் அதில் பெருகி வளர்ந்துகொண்டே வந்தாள். அவள் பெற்ற வரம் அவள் உயிரோடிருக்கும் காலமெல்லாம், க்ஷணத்துக்கு க்ஷணம் முன்னிருந்தது இருமடங்காய், இரு மடங்கு நான்கு மடங்காய் இரட்டித்து இரட்டித்து பெருகிக்கொண்டே அவள் சீவிய காலத்தின் கடைசி நாள் மட்டும் விர்த்தியாகி வந்தது. அப்படி நிமிஷத்துக்கு நிமிஷம் விர்த்தியானாலும் எந்தக் காலத்திலும் தேவதாய் இஷ்டப் பிரசாதத்தின் சம்பூரணம் பெற்றிருந்தாள். விஸ்தாரமான சமுத்திரத்திலே, பல ஆறுகளிலும் நதிகளிலும் உள்ள ஜலப்பிரவாகம், ஓயாமல் விழுந்தாலும், சமுத்திரம் எந்த நாளிலும் நிறைந்திருக்குமல்லவா? அப்படியே தேவ ஆண்டவளிடம் நன்மை வரங்களின் பிரவாகம் ஓயாமல் வளர்ந்துகொண்டே வந்தாலும் தேவ வரங்களின் சம்பூரணம் எப்போதும் பெற்றிருந்தாள். தேவ கன்னிகை உற்பவித்த முதல் க்ஷணத்தில் முதலாய் அவள் அருட்பூரணியா யிருந்தபடியால், அவள் பாவதோஷமின்றி இஷ்டப்பிரசாதத்தோடு உற்பத்தியானாள் என்று சொல்லவேண்டும். இல்லாவிட்டால் வரங்களின் சம்பூரணம் எங்கே? இதினால்தான், தேவதூதன் சொன்ன இச்சுப வசனத்தில் கன்னிமரியாயி ஜென்மப்பாவமில்லாமல் உற்பத்தியானாள் என்ற வேத சத்தியம் அடங்கியிருக்கிறதென்று வேத சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள்.

அருட்பூரணி பெ... யிடம் உள்ள இஷ்டப்பி... தைக் குறிப்பதுபோல், "கர்... னே" என்னும் சுபமொழியும் ... கர்த்தர் இருப்பாராக என்னும் ... கையையும் விருப்பத்தையும் அல்ல, க... தர் அவளிடம் வாசம் பண்ணுவதையே வெளிப்படுத்துகின்றது. சேசுநாதர் அவளிடம் உற்பத்தியாகுமுன், கர்த்தர் அவளிடம் இருந்தார் என்றால், நீதிமான்கள், புண்ணியவாள ரிருதயத்தில் சர்வேசுரன் வீற்றிருக்கும் மேரையாய் வாசம்பண்ணினார் என்று சொல்லவேண்டும். தம் பிரசன்னத்தினாலும், வல்லபத்தினாலும், தேவத்துவத்தினாலும் சர்வேசுரன் சகல சிருஷ்டிகளிலும் இருக்கிறார் என்றால், நீதிமான்களின் ஆத்துமத்தில், மற்ற சிருஷ்டிகளில் இருக்கிற மேரையாயும், இன்னும் புதிய விசேஷமான விதமாயும் ஓர் தந்தையைப்போலும், அன்பனைப்போலும் பரிவு நேசத்தாலும் பட்ச உருக்கத்தாலும் வீற்றிருந்து வாசம் பண்ணுகிறார்.

ஆனால் இத்தகைய அன்பு நிறைந்த கனிகர தேவ பிரசன்னம் சகல அர்ச்சியசிஷ்டவர்கள், சம்மனசுகளிடமிருப்பதைப் பார்க்கிலும் கன்னிமரியிடம் நெருங்கினதாயும் ஆழ்ந்ததாயு மிருக்கின்றது. "கர்த்தர் உம்முடனே" என்னும் மங்கள வார்த்தை பிதாவாகிய சர்வேசுரன் கன்னிமரியின்பேரில் வைத்த நிகரற்ற அன்பின் விசாலத்தையும் பெருக்கத்தையும் காண்பிக்கின்றது. ஏனெனில் அத்திவ்ய நேசத்தாலல்லோ அவர் தம் தேவ சுதனை திவ்ய கன்னிகைக்குக் குமாரனாய் அளிக்கச் சித்தமானார்.

"ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே":—கன்னிமரி, தேவதாயின் உன்னத மேன்மைக்கு சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டபடியால் அவள் மறுலோகத்திற் சர்வேசுரன் படைத்த ஸ்திரீ ஜனங்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்பதற்கையமில்லை. இவள் மாத்திரம் தேவ வரங்களையும் கொடைகளையும் சம்பூரணமாய்ப்பெற்றதினால், விசேஷ தேவ ஆசீர்வாதத்தினால் விளங்குகிறாள்.

அத்தேவ ஆசீர்வாதங்கள் ஏவையென்றால்: சர்வேசுரனுடைய தாயாக

...தல், கன்னி சுத்த ...சேசுவை கர்ப்பந்தரித் ...ரீகளுக்குள்ள பிரசவ நோ ...மும் தனக்கில்லாமல் திவ்விய ...ல்லாசமாய்ச் சேசுவை பெற்றெடுத் ...ரிய இவைகளே. மற்ற ஸ்திரீகளெல் ...லாரும் பாவத்துக்கும் சாபத்துக்கும் உள்ளானவர்கள். கன்னிமரி ஒருவளே தேவ ஆசீர்வாதங்களைச் சம்பூரணமாய்ப் பெற்ற அற்புத பாக்கியவதி; ஸ்திரீ சனங்களுக்குள் முன்னும் பின்னும் காணாத நிகரில்லாத சௌந்தரியவதி; நிர்மல புண்ணியவதி, அமலோற்பவ உத்தமி, பாவ மாசற்ற சர்வாலங்கார பிரிய செல்வி, பெண்கள் நாயகம், பெண்கள் இரத்தினம், பெண்கள் பூஷணம், பெண்ணாரமுதம், பெண்கள் பாக்கியம், பெண்கள் சிலாக்கியம், பெண்கள் அரசி.

தேவதூதனின் இந்த மங்கள வாழ்த்துதலை அர்ச்சியசிஷ்டவர்கள், தேவ வித்தியாபாரகர், வித்வான்கள் விளக்கி விஸ்தரித்து இயற்றின அருமையான பிரபந்தங்கள், கிரந்தங்கள், கீர்த்தனைகள், பிரார்த்தனைகள் சங்கீதங்கள் அநந்தங்கோடி. ஆனால் இவையெல்லாம் சம்மனசு கன்னிமரியைப் பார்த்து அதிசயித்து மகிழ்ந்து கூறிய மங்கள மொழிகளில் அடங்கிய சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய உத்தம புகழ்ச்சிக்கு நிகராகா.

---

நீயொரு தாயொரு தாதையு நீயுயிர் நீயவை யாகுநீ
நீகனி வார்கடல் நீயொளி யார்சுடர் நீயரு ளார்முகில்நீ
நீயிறை யோனெழு மாசன நீநெறி வேதம் வழாநெறிநீ
நீமுகி ழாத நறுமலர் நீர்றை ஞானிக ராவுருநீ.

ஏரணி யேயித யத்தி லிருந்தெனை யாளுடை யானவளே
சீரணி யேமதி வெண்குடை யேதிரு மாரி விடும்புயலே
யாரணி யேகரு ணாகரியே யுயிர் யாவு மளித்தமுதார்
வாரணி யேதனி நாயகி யேஎனி வாழுதி வாழுதியே.

வாழி யனந்த தயாபர நூக்குரி வாய்ந்தரு டாயவளே
வாழி விசும்பிடை வாழுய ரும்பரின் வாம விராக்கினியே
வாழி முகிண்டில பூவனை கன்னிய மாதரை யாளரசே
வாழி யழுந்தரு ளேமறை யேயற னேகனி வாழுதியே,

(தேம்பாவணி.)

S. M.

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

## 3௦-ம் அதிகாரம்.

### பங்காரம்மாள்! புயலில் அகப்பட்ட கப்பலைப்போல் அலைந்தழிந்து துன்பப்படுகிறேன்.

ஸரஸ்வதியும் முனியம்மாளும் ருக்மணியுடன் பேசும்படி வீட்டில் பிரவேசிப்பதைக் கண்ட பங்காரம்மாள் சொல்லி முடியாத துக்க துயரங்கொண்டாள். ஏனெனில், ருக்மணி விமரிசையின்றி தன் இருதயத்தை அந்த துஷ்ட பெண்பிள்ளைகளுக்குத் திறந்து காட்டுவாளேயாகில் அதனால் பண்டிதர் வீட்டுக்கும் பெயருக்கும் பெருந் துன்பம் உண்டாகுமென்று நிச்சயித்திருந்தாள். இது நிற்க, பேதையான ருக்மணி தன் புருஷன் மட்டில் அநியாயமாய்க் கொண்டிருக்கும் வீண் சம்சயத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துங்கால், வஞ்சக குணமுடைத்தான அந்த ஸ்திரீகள் தன் எஜமானிக்கு எப்பேர்ப்பட்ட துராலோசனையைக் கொடுத்து எவ்வளவு அவளை மயக்கிக் கெடுப்பார்களோ வென்று சிந்தை கொண்டவளாய்ச் செபக்கூடத்தில் சென்று, அங்கு தேவதாயார் சுரூபத்துக்கு முன் சாஷ்டாங்கமாக விழுந்து, விமரிசையற்ற வாலிபப் பெண்ணாகிய தன் எஜமானியைச் சூது வாது நிறைந்த அந்த துஷ்ட பெண்களுடைய துர் ஆலோசனைக்கு உட்படாமல் காப்பாற்றி இரக்ஷிக்கும்படி மகா பக்தி விஸ்வாஸத்துடன் வேண்டிக்கொண்டு 53 மணி ஜெபமாலை ஜெபித்து தேவதாயாருக்கு ஒப்புக்கொடுத்து வெளி வாசற்படிக்குப் போய்ச் சேர்ந்தாள்.

அந்நேரத்தில் ஸரஸ்வதியும் முனியம்மாளும் சந்தோஷ முகத்துடன் வீட்டை விட்டு வெளிப்படுவதைக்கண்டு, வேடர் விரிக்கும் வலையில் குருவி விழுவதுபோல், இந்த கெட்ட ஸ்திரீகளின் துராலோசனைக்கு ருக்மணி காது கொடுத்துப் படுகுழியில் விழுந்திருப்பாளென்று எண்ணி, கபடமற்ற அந்த புறாவை யெப்படி இரக்ஷிக்கலாமென்று பல யோசனைகளை யெண்...



...ணிக்கொண்டு இருக்கும் சமயத்தில், ருக்மணி தன்னைக் கூப்பிடுகிற சத்தங்கேட்டு அவள் கிட்டப் போனாள்.

ருக்.—பங்காரம்மா! புயலில் அகப்பட்ட கப்பலைப்போல் அலைக்கழிந்து துன்பப்படுகிறேன்! என்ன செய்வதென்று தெரியவில்லை.

பங்.—அம்மா, தாயே! நீங்கள் இப்படி வீணாய்க் கலவரித்து சங்கடப்படுவது சரியல்ல. உங்கள் கண் ரெண்டும் சிவந்து வீங்கினதுபோலக் காணப்படுகின்றன! முகம் வாடி வதங்கி விகார ரூபமா யிருக்கிறது! உங்கள் மனம், சொல்லவேண்டியதில்லை, அது படும் துக்க துயரத்தை! இப்படிக் காரணமின்றி பெருந் துக்கத்துக் குள்ளாவதால் கடின வியாதியும் அதனால் அகால மரணமு முண்டாகும்!

ருக்.—இப்படி மன வேதனைக்குள்ளாகி துன்பப்பட்டு உயிர் வாழ்வதிலும் சாவது நலமாயிருக்கும் (என்று அழத்தொடங்கினாள்).

பங்.—அம்மா, என் கண்மணி! அழாதேயுங்கள்; வீணாய் உங்கள் தேகத்தையும் மனதையும் ஹிம்சித்துக்கொள்ள வேண்டாம். ஒரு காரியத்தை முழுதும் அறியாமல், வீண் சந்தேகத்துக் குள்ளாகி வருத்தப்படுவதால் அதிக தின்மைக்கு வழியாகுமே ஒழிய, அற்ப சுகமு முண்டாகாது.

ருக்.—அப்படியானால் நீ யெனக்கு என்ன ஆலோசனை கொடுக்கிறாய்?

பங்.—முன் நான் சொன்னதுபோல், பொறுமையை வல்லாயுதமாகக் கொள்ளுங்கள். மணி எட்டாய் விட்டது. அதிகாலையில் சகல உண்மையுங் கண்டு கொள்வீர்கள். நீங்கள் பட்ட வீண் சந்தேகத்துக்காக அழுது பிரலாபிப்பீர்கள் (அப்போது.)

ருக்.—மெய்தானா நீ சொல்வது பங்காரம்மா?

பங்.—இது சத்தியமான பேச்சு. நீங்களோ வாலிபப் பெண், அனுபோகம் உங்களுக்கு மட்டு. உங்கள் தாய் தந்தையோர், சகோதரர், சகோதரிகள் ஒருவரும் இங்கு இல்லை உங்களுக்கு நல் லாலோசனை கொடுப்பதற்கு. கெட்ட நடத்தையும் வஞ்சக குணமுமுள்ள துஷ்ட ஸ்திரீகளை உங்கள் ஆலோசனைக் காரிகளாக தெரிந்துகொண்டு, அவர்களுக்கு உங்கள் மனதைத் திறந்து காட்டுகிறீர்கள். அவர்களோ உலகத் ...ன்னியர்; மனச்சாக்ஷியற்றவர்கள். அவர்களுடைய நடத்தை ... மே. இவர்களைப்பற்றி ... யை உங்களுக்கு எற்கெனவே ... றேன்.

ருக்.—ஆம், பங்காரம்மா! நீ ... மெய்யென்று இப்போது கண்டுபிடிக்கி... ஏனெனில். நான் சொன்னதெல்லாம் ... எனக்கு ஆறுதல் வருத்துகிறாய்; ... நீயும் துக்கித்து கண்ணீர் சிந்தினாய்; ... மட்டும் நிதானித்தால், காலையில் மெய்யும் பொய்யும் அறிந்துகொள்ளலா மென்றாய். ஸரஸ்வதியும் முனியும் என்ன சொன்னார்கள் தெரியுமா?

பங்.—தெரியாதம்மா.

ருக்.—ஆற்றிலோ குளத்திலோ விழுந்து சாகும்படி சொன்னார்கள்! அப்படி அவ... மரணம் அடைய பயமானால், வீட்டிலுள்ள பணம் காசையும் நகை நட்டையும் எடுத்துக்கொண்டு இன்று இராத்திரியே ஊரை விட்டு ஓடிப்போகும்படி ஆலோசனை கொடுத்தார்கள்! மேலும் நான் பண்டிதருடைய நடத்தையையும் மீனாட்சி யென்பவளுடைய கடிதத்தையும் பற்றி பேசும்போது எனக்கு அதிக கோபமும் உக்கிரமும் உண்டாகும்வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு, ஒருத்தி யின்னொருத்திக்கு கண் சிமிட்டிக் காட்டுவதையும், சிரிப்பதையும் பார்த்தபோது எனக்கு அவர்கள் மட்டில் சந்தேகமுண்டாகி, அவர்கள் மெய்யாகவே கபடரென்றும் வஞ்சகரென்றும் அறிந்துகொண்டேன்.

பங்.—அம்மா! உங்கள் வீட்டு சங்கதியையும் உங்களுக்கும் உங்கள் புருஷனுக்கு முள்ள விவாதங்களையும் அவர்களுக்கு அறிவித்தது மகாப் பிசகு உங்கள் மட்டில். இப்போது இவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? ...ங்கும் போய்த் தூற்றுவார்கள்! ஒன்றை இரண்டாக்குவார்கள்; உண்மையை மறைப்பார்கள்; இல்லாததைச் சொல்வார்கள்; இதனால் உங்கள் புருஷனுக்கு மாத்திரமல்ல, உங்களுக்குமே நிந்தை அவமானம்!

ருக்.—ஆ! பங்காரம்மா! உன் வார்த்தைக்குக் காது கொடுத்திருந்தால், இந்த பொல்லாப்பு உண்டாயிராது. அவர்களை நம்பினேன். அவர்களுடைய பசப்பான பேச்சாலும் இச்சகமான சிரிப்பாலும் என்னை யேமாற்றிவிட்டார்கள்! ஐயோ, கெட்டேனே! வஞ்சகச் சிறுக்கிகளுடைய பேச்சைக்கேட்டு கெட்டேனே! (என்று

…கொண்டாள், பாவம்!

… இருங்கள் அம்மா, போனது இனியாகிலும் ஜாக்கிரதையா யிருங்…

ருக்.—மேலும், பங்காரம்மா, பாஷாணத்துக் கொப்பான கெட்ட கதைப் புஸ்தகத்தாலும் என் இருதயத்தில் விஷமிட்டு, என் மனதைக் கெடுத்துவிட்டார்கள் அந்தப் பாவிமக்கள். புண்யவதியான மடத்துத் தாயாருடைய புத்திக்குச் சற்று இணங்கி யிருந்தால், இந்த பொல்லாப்பெல்லாம் வந்திரா. அந்தக் கெட்ட புஸ்தகங்களை வாசியாமலிருந்திருந்தால், என் மனது கெட்டு இப்படி விபரீதமுள்ளதா யிராது! என் புருஷன் மட்டில் சந்தேகம் கொள்ளேன்; அவரைக் கேட்காத கேள்விகளைக் கேட்டிருக்கிறேன். அடிக்கடி ஜெபஞ் செய்து தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று நல் வழியில் நடந்திருப்பேன்! இந்த ஊருக்கு நான் வந்தபோது எனக்கு இருந்த விஸ்வாசத்திலும் பத்தியிலும் பத்தில் ஒரு பாகம் இல்லை தற்போது. இதெல்லாம் அந்த கெட்ட பெண்பிள்ளைகளோடு கூடி சம்பாஷித்து கெட்ட புஸ்தகங்களை வாசித்ததினுலுண்டான பலாபலன் இதுதான் (என்று மகா துக்கத்துடன் அழத் தொடங்கினள்).

பங்.—(அவளுக்கு ஆறுதலான வார்த்தை சொல்லி): அம்மா, போனது போகட்டும், இனியாகிலும் நீங்கள் மனந்திரும்பி சர்வேசுரனை மன்னிப்பு கேட்பீர்களாகில் அவர் கொடாமல் போகார். மேலும் அந்த இரண்டு பெண்பிள்ளைகளும் உங்களிடம் வராதபடி செய்வதுடன் நாளைக்கே நீங்கள் கோவிலுக்குச் சென்று நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து, எதாப்பிரகாரம் வாரந்தோறும் நன்மை வாங்க தீர்மானித்துக் கொள்ளுங்கள். அப்படி நடந்தால் உங்களுக்கு உண்டாகும் சோதனைகளை எளிதில் ஜெயிக்கும்படிக்கான தேவ வரம் உங்களுக்கு அளிப்பார் சர்வேசுரன்.

ருக்.—நாளைக்கே அந்த முனிக்கு சேர வேண்டிய கணக்கைத் தீர்த்துவிட்டு, ஸரஸ்வதியும் இங்கு வராதபடிக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வேன். மேலும் பங்காரம்மா! நீ யெனக்குத் தாய்போலிருப்பதால் உன் வார்த்தையை ஒருபோதும் தட்டமாட்டேன். சகலத்திலும் உன் ஆலோசனையைக் கேட்பேன். இப்போது அறிந்துகொண்டேன் மெய் எது என்றும், பொய் எது என்றும். என் ஆங்காரத்தால் கெட்டேன். அவர்களுடைய வஞ்சனையான பசப்பால் மோந்து அருவருப்புக்குரிய அந்த கெட்ட புஸ்தகங்களை வாசித்தபடியால் வந்த பொல்லாங்கை நன்றாய் அறிந்துகொண்டேன். நாளை காலையில் நான் எழுந்தவுடனே அந்த கெட்ட புஸ்தகங்களை நெருப்பில் போட்டு பஸ்பமாக்குவதே என் முதல் வேலையாகும். மேலும் நீ யிப்போது சொன்னதுபோல நாளைக்கே போய் பாவசங்கீர்த்தனஞ் செய்து, நாடோறும் பூசை கண்டு, வாரந்தோறும் தவருமல் நன்மை வாங்குவேனென்று சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடுக்கிறேன்.

ஐயோ, பங்காரம்மா! நான் புதிதாய் இவ்வூருக்கு வந்தபோது நாள்தோறும் தவருமல் பூசை கண்டு, வார வாரம் பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்கி வரும் காலத்தில் எவ்வளவோ மனச்சமாதானமா யிருந்தேன்! எப்பேர்ப்பட்ட சந்தோஷமுண்டா யிருந்தது என் இருதயத்தில்! எனக்கும் என் புருஷனுக்கும் எவ்வளவு அன்னியோன்னிய ஸ்நேக மிருந்தது! தாழ்ச்சி, பொறுமை, கீழ்ப்படிதல் முதலிய புண்யங்களும் குறைவின்றி யிருந்தன! ஒருபோதும் என் புருஷனுக்கு எதிர்த்துப் பேசினவளல்ல. ஏழை யெளியவர்கள் மீது அனுதாபம் இரக்கங்கொண்டிருந்தேன்! இப்போதோ? அந்த கெட்ட புஸ்தகங்களை வாசித்து, துர்க்குணரான ஸ்திரீகளுடன் சகவாசம் செய்தபின் அந்த சன்மார்க்கமெல்லாம் காற்றுப்போல் பறந்துபோய் இக் கோலத்திலிருக்கிறேன்! என் இருதயத்தில் சந்தோஷமில்லை; சமாதானத்தின் வாசனை முதலா யில்லை. சகலருடைய நடத்தையின் மட்டிலும் சந்தேகம் பிறக்கிறது. எனக்கு யாரும் எதிர் வார்த்தை சொல்லத் தகாது. மனதில் பகை, பொருமை, காய்மகாரம், பேராசை, கோபம், காமம் முதலிய துராசாபாசங்கள் என்னை மேற்கொண்டன! ஆ! ஸ்வாமீ! ஆங்காரத்தாலும் அறியாமையினாலும் நான் கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களைப் பொறுத்தருளும் என்று சொல்லி மனஸ்தாபப் பட்டழுதாள்.

அந்நேரத்தில் பங்காரம்மாள் ருக்மணியின் நிஷ்கபடமான சங்கீர்த்தனத்தைக் கேட்டு, மனதில் ஆறுதல் கொண்டு, "நல்லதம்மா, வாருங்கள் சற்று நேரம் வேண்டிக்கொண்டு இராப் போசனம் செய்வீர்க"ளென்று ருக்மணியைச் செபக்கூடத்துக்கு அழைத்துப்போய், அங்கு இராச் செபம் சொல்லிமுடித்தாள். அந்நேரமெல்லாம் ருக்மணி தன் தப்பிதங்களை நினைத்து மகா மனஸ்தாபப்பட்டு ஸ்திரமான பிரதிக்னை செய்து கொண்டாள். அப்போது அவளிருதயத்திலுள்ள பெருங் கஸ்தி யெடுபட்டு மகா சமாதானங் கொண்டு தன்னிருதயத்திலுண்டாகும் சந்தோஷத்தை அடக்கக்கூடாதவளாய் பங்காரம்மாளைப் பலதரம் அன்புடன் கட்டி அரவணைத்து "அம்மா! நீயே என்தாய்! பெரும் ஆபத்தினின்று இரக்ஷித்த பேருபகாரி நீயே," என்று அவளை வாழ்த்திக்கொண்டு போசன அறைக்குச் சென்று இருவரும் புசித்து நித்திரிக்கப்போனர்கள்.

அன்றுதினம் ருக்மணிக்கு வெகு சீக்கிரம் நித்திரை உண்டானது. பங்காரம்மாளும் வழக்கம்போல் ருக்மணி படுத்திருந்த பக்கத்து அறைக்குள் சென்று செபதபங்களை முடித்துக்கொண்டு கண்மூடி நித்திரித்தாள்.

## HOW TO RAISE OUR STATUS?

## நாம் முன்னேறுவ தெப்படி?

### ஐந்தாம் வியாசம்.

### கல்வி.

(முன் தொடர்ச்சி.)

நாற்பாற் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே
எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்.
(அதிவீரராம பாண்டியன்).

ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் தக்க மட்டும் ஒழுங்காய்ச் சீவித்து வாழவேண்டில், தாங்கள் பிறந்தபோது இருந்த நிலைமையை விட ஒரு படியாவது முன்னுக்கு அடி யெடுத்துவைக்க வேண்டில், கட்டாயம் பிரதமப்படிப்பு படித்தே தீரவேண்டுமென்றும், அதற்குமேல் அந்தந்த குடும்பத்தின் நிலைமைக்கும் பிள்ளைகளின் திறமைக்கும் அநுகூலத்திற்கும் ஏற்றபடி உயர்தரக் கல்வியிலேயோ, அல்லது கைத்தொழிலிலேயோ தேர்ச்சியடைய வேண்டுமென்றும் கடந்த இரண்டு வியாசங்களில் ஸ்தாபிக்க முயன்றேன்.

இவ் வியாசத்திலே … டத்தில் அப்படிப்பட்ட … படித்தபோதிலும், அது … யிருந்தாலும் சரி, உயர்தரப் … ருந்தாலும் சரி, பள்ளிக்கூடம் விட்ட … வாசிக்கும் அப்பியாசம் ஒவ்வொருவருக்கும் கட்டாயம் இருக்கவேண்டுமென்றும், அது இல்லாவிட்டால் படித்ததும் பயனற்றதாகும் என்றும் காட்ட முயலுவேன்.

படிப்பென்பது பள்ளிக்கூடத்தோடு முடிந்துவிட்ட தென்னும் எண்ணம் தகாது. படிப்பின் அஸ்திவாரம் பள்ளிக்கூடத்தில். மேல் கட்டிடம் பள்ளிக்கூடம் விட்ட பிறகுதான். எழுத்துக்கூட்டி எப்படி ஒரு சொல்லை உச்சரிக்கிறதென்று மாத்திரம் பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படுகிறதே யொழிய மற்றபடியல்ல. நமக்கு மேலான அநுபவ ஞானத்தைத் தரும் இலக்கிய புஸ்தகங்களை பள்ளிக்கூடம் விட்ட பிறகுதான் கொஞ்சமாவது படிக்க முடியும். ஆதலால், பள்ளிக்கூடம் விட்டபிறகும் வேத புஸ்தகங்களிலும் இலக்கிய புஸ்தகங்களிலும் சில வற்றை கல்விமான்களின் யோசனையின்பேரில் தெரிந்தெடுத்துக் கொண்டு, அவைகளைத் திருப்பித் திருப்பி வாசிப்பது அவசியம். அப்படி வாசிக்க வாசிக்க, வாசிக்கும் அப்பியாசம் ஏற்படும். இவ்வப்பியாசம் ஒருவனுக்கு ஏற்பட்ட பிறகுதான், வாசிப்பதில் சிரமம் தோன்றாது. அதற்கு மாருக மகிழ்ச்சியுண்டாகும். அம் மகிழ்ச்சியை ஒருவன் உணர்ந்தானே, அப்புறம் அவனைப் படிக்கவேண்டாமென்றாலும் படித்தே தீருவான். இதைப்பற்றியல்லவோ, ஒரு ஆங்கிலேய சாஸ்திரியார், "என்னை ஜெயிலில் அடைத்தாலும் சரி, வனாந்தரத்திற்குத் துரத்தினாலும் சரி, என்னோடு என் நேச சிநேகிதர்களான என் அருமை புஸ்தகங்களைக் கூடக் கொண்டுபோக உத்தரவளித்தால், நான் பூரண மனதுடன் ஜெயிலுக்கும் வனாந்தரத்திற்கும் போய், பல நாட்டுக்குடிகளுக்குச் சம்பந்தப்பட்டவர்களும், பல குண லட்சணங்களைப் பெற்றவர்களுமான என் நேசர்களோடு சந்தோஷமாய்ச் சல்லாபித்துக்கொண்டு காலங்கழிப்பேன்" என்றார்.

ஐரோப்பியர்களுள் இந்த நல்ல வழக்கம் இருப்பதினால்தான், அவர்களுள் பெ…

...ய பாஷை ஒன்றில் ...ரதமப்படிப்பு படித்த ...ராலும், பள்ளிக்கூடம் ...ய பற்பல புஸ்தகங்களையும் பத் ...களையும் வாசிப்பார்கள். அவர்க ...ஞானம் உதயமாகும். ஜீவிக்கும் ...தை எப்படி யென்றுணர்வார்கள். அந் ...தஸ்து என்னும் படியில் ஒரு படியாவது மேலுக்கு ஏறும் வழியை யறிவார்கள். இப்படி யவர்கள் பொது இலக்கிய புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பதோடு, தங்கள் தங்கள் உத்தியோகத்திற்கும் தொழிலுக்கும் அடுத்த புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் கையாடி வருவார்கள். கணக்கனோ, வித்தனோ, டைப்பிஸ்டோ, லாயரோ, குமஸ்தாவோ, தையற்காரனோ, அம்பட்டனோ, சக்கிலியனோ, வண்ணானோ, பயிர்வேலை செய்யும் வேளாளனோ, ஆடுமாடு வளர்க்கும் இடையனோ, கோழி வளர்க்கும் கோழிக்காரனோ, நூல் நூற்கும் ஜனப்பனோ, இரும்பு வேலை செய்யும் ஜாயன்றரோ, பிட்டரோ, ரெயில்வேயில் அலுவலா யிருக்கும் கார்டோ, பைர்மனோ, ஒரே வார்த்தையில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஏற்ற புஸ்தகங்களும் பத்திரிகைகளும் இருந்தே யிருக்கும். அவைகளை யவர்கள் வாங்கி வாசித்து, நூதன காரியங்களை யறிந்து தங்கள் தங்கள் தொழிலில் தேறுவார்கள். படித்தவர்களென்று விளங்குவார்கள். இளமையில் பிரதமப்படிப்பு மாத்திரம் படித்தவர்கள் வயது ஆக ஆக உயர்தரப்படிப்பு படித்தவர்களிலும் மேலானவர்கள் ஆவார்கள்.

நமது இந்தியர்களுள் பெரும்பாலோர் அப்படி யன்று. பரிட்சை தீருமட்டும் தங்கள் சுகம் முதலாய்க் கெட படித்து, பரிட்சை தீர்ந்ததுதான் தாமதம், —பத்து நாளும் பணிந்தேற்றிய பிள்ளையாரைப் பத்தாம் நாள் தண்ணீரில் கவிழ்த்துத் தள்ளிவிட்ட—மாதிரியாக "ஒழிந்ததடா பாழும் படிப்பே" யென்று பாலவார்த்து ஸ்நானம் செய்து பார்த்துப் பார்த்துப் படித்த புஸ்தகங்களைப் பரணையின்மேல் பரப்பி வைத்துவிடுவார்கள். அதற்குமேல் அவர்கள் தங்கள் உத்தியோகத் தொல்லையிலேயோ, சமுசார சங்கடத்திலேயோ அமிழ்ந்திப்போய்த் தங்கள் ஒழிவான நேரங்களைச் சாடு என்னும் சீட்டாட்டத்திலும், அலப்பான பேச்சுகளைப் பேசுவதிலும் கழித்து, ஏதோ சமயா சமயம் தங்கள் விருத்திக்கு முற்றிலும் சம்பந்தமில்லாத விபரீத கதை புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசித்துக் காலங்கழிப்பார்கள்.

இது விருத்திக்கு ஏதுகரமான நல்ல வாசிக்கும் அப்பியாசம் மற்றக் குலத்தாருக்கு அவசிய மில்லாவிட்டாலும் நமது குலத்தாருக்கு மெத்த அவசியம். ஏனெனில், நம்முள் வருஷா வருஷம் உயர்தரப் படிப்பில் தேறுகிறவர்கள் வெகு சொற்பப் பேர். மத்திமப்படிப்பில் தேறுகிறவர்களின் தொகை பட்டண வாசிகளுள் இக்காலத்தில்தான் கொஞ்சங் கொஞ்சமாய் நத்தை நகர்வதுபோல் அதிகரித்து வருகிறது. பெரும்பாலோருக்குப் பிரதமப்படிப்பே. அதுவு மில்லாதவர்கள் ஆயிரங்கணக்காயிருக்கிறார்கள். ஆதலால், சொற்பப் படிப்பைக் கொண்டு தட்டித் தடுமாறி இக்காலத்தில் ஜீவனம் செய்வது கஷ்டம். வாசிக்கும் அப்பியாச மிருந்தால் ஏதோ தங்கள் துரதிஷ்டத்தினால் படிப்பு குறைவாயிருந்தாலும், பல புஸ்தகங்களை வாசித்து அறிவை விருத்தி செய்ய முடியும். உலகம் இக்காலத்தில் எப்படிப்பட்ட பரபரப்பி லிருக்கிறதென்று அறியலாகும். ஜீவியத்தின் பந்தயத்தில் தாங்களும் ஏனையரோடு சேர்ந்து ஓட சக்தி பிறக்கும்.

இதை வாசிக்கும் என் நேசர்களே, நான் வாசிப்பு வாசிப்பு என்று இவ் வியாசத்தில் சொல்லும்போது இது பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குச் சம்பந்தமான பேச்சு என்றெண்ணாதேயுங்கள். இது அனைவருக்கும் சம்பந்தம். கலியாணம் செய்து உத்தியோக சாலைகளில் அல்லது கைத்தொழில் சாலைகளில், அல்லது ஐரோப்பியர், ஈரேஷியர் வீடுகளில் அலுவலா யிருக்கும் நமது குலத்தார், சர்ஜனோ, டாக்டரோ, ஸ்டேஷன்மாஸ்டரோ, சிக்னல்லரோ, போஸ்ட்மாஸ்டரோ, இன்ஸ்பெக்டரோ, கணக்கரோ, வார்டரோ, ஸ்கூல் மாஸ்டரோ, கார்டோ, டைர்மனோ, போர்மனோ, கம்பாஸிட்டரோ, பிட்டரோ, ஜாயன்றரோ, டைப்பரோ, கம்பவுண்டரோ, நர்ஸோ, பட்லரோ, கூக்கோ,



ஆயாவோ, டிரசிங்பாயோ, குதிரைக்காரரோ, கூலிக்காரரோ, ஒரே வார்த்தையில் எழுத்து வாசனை யறிந்த சகலரும் தங்கள் படிப்பின் நிலைமைக்கேற்ற இங்கிலீஷ் அல்லது தமிழ்ப் புஸ்தகங்களையாவது பத்திரிகைகளையாவது வாசிக்கவேண்டும். அப்படிப்பட்ட புஸ்தகங்களும் பத்திரிகைகளும் இக்காலத்தில் அநேகம். இவைகளை நமது கிறிஸ்துவர்கள் பலர் வாசியாத குறையால் வேத காரியத்திலும் உலக காரியத்திலும் மூடரா யிருக்கிறார்கள்.

பூர்வத்தில் பிரதமப் பள்ளிக்கூடங்கள் முழுதும் குருக்கள் அதிகாரத்திலிருந்தபோது, நமது பிள்ளைகள் அவைகளில் ஜெபம், ஞானோபதேசம், தேவ சங்கீதங்கள் முதலியவைகளைக் கற்றுக்கொண்டு விசுவாசத்தில் தேறுவார்கள். இக்காலத்திலோ வெனில், சர்க்காருடைய சகாயத்திற்கு ஆசைப்பட்டு, அவைகள் ஒவ்வொன்றும் (Grant-in-Aid Schools) சர்க்கார் சகாயத்தை நாடும் பள்ளிக்கூடங்களாய் மாற்றப்படுவதினாலும், சர்க்கார் சட்டப்படி அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் வேதப்படிப்பு கற்பிக்கக் கூடாதாகையாலும், நமது பிள்ளைகள் மேற்கண்ட பள்ளிக்கூடங்களுக்குப் போயும், வேத அறிவுக்கு ஆஸ்பதமின்றி, அஞ்ஞானத்தில் வளர்ந்து வருகிறார்கள்.

ஆதலால் இக் குறையையாவது நிவர்த்தி செய்ய வாசிக்கும் அப்பியாசம் அவசியமே அவசியம்.

இக்காலத்தில் விசுவாசத்தைக் கெடுக்கும் விஷப் புஸ்தகங்களையும், மோகத்தை மூட்டி வளர்க்குஞ் சிற்றின்பப் புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் சரசமான விலைக்கு வீடு தேடி வந்து விற்கிறார்கள். வீதிகளில் எப்பக்கம் போனாலும், இப்படிப்பட்ட புஸ்தகங்கள் மனதை மயக்கும் படாடோபங்களோடு நமது முகத்தில் வந்து மோதுகின்றன. அவைகளை நாம் மடியில் கண்ட நாகத்தைப் புறக்கணிப்பது போல விலக்கித் தள்ளி நல்ல ஆசிரியர்கள், குருக்கள் பிரசுரம் செய்பவைகளை வாங்கி வாசிக்கவேண்டும். பூர்வத்தில் நமது குருக்கள் ஜெப புஸ்தகங்களையும் தர்க்க புஸ்தகங்களையும் ஞான புஸ்தகங்களையும் பிரசுரித்து வந்தார்களென்றும், அவைகளை ஓயாமல் வாசிக்கும... டாகிறதென்றும் சொ... வேத விசுவாசத்தில் திட... லத்தில் அவைகள் அவசியமா...கும். ஆனால் அந்தந்த காலத்தி... ரத்திற்குத் தக்கபடி தன்னைச் சரிப...திக்கொள்ளும் சத்திய கத்தோலிக்கு திருச்சபையானது, இக்காலத்தில் இன்பந்தரும் விதமாய் வேத சரித்திரங்கள், சன்மார்க்கத்திற் கடுத்த காரியங்கள், முன்னேற்றத்திற் கடுத்த விஷயங்கள் அடங்கிய புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் பிரசுரித்து சரசமான விலைக்கு விற்று வருகின்றது. உதாரணமாக 64-பக்கங்கள் கொண்ட "திரு இருதயத்தூதன்" என்னும் மாதாந்தர சஞ்சிகைக்கு தபால்சார்ஜ் சேர்த்து வருஷத்திற்கு 12-அணா. இதிலும் இரட்டை யளவாய், 32 பக்கங்கள் கொண்ட "நல்ல ஆயன்" என்னும் மாதாந்தர சஞ்சிகைக்கு தபால் சார்ஜ சேர்த்து வருஷத்திற்கு ரூ 1—4—0. இவைகளில் வேத விஷயங்கள், உலக விஷயங்கள், சன்மார்க்க விஷயங்கள் மெத்தவும் காணலாகும். நான் அறிந்தமட்டில் வேத அறிவின்றி அஞ்ஞான நடத்தையில் அமிழ்ந்திக் கிடந்த அநேக கிறிஸ்துவர்கள் இவைகளைக் கிரமமாய் வாசித்து வர, வர, திருச்சபையின் மேன்மையை அறியலானார்கள். கிறிஸ்துவன் என்னும் பட்டப் பெயரின் பிரதாபத்தை உணரலானார்கள். கிரமமாய்க் கோவிலுக்குப் போகவும், அடிக்கடி ஆயத்தம் செய்யவும் தலைப்பட்டார்கள். அந்தி சந்தி ஜெபம் செய்யும் வழக்கத்தை அநுசரிக்கத் துவக்கினார்கள். யோக்கியமாய் நடந்து யோக்கியன் என்னும் பெயரை யடைய ஆசைகொண்டார்கள். தங்கள் குடும்பத்தை ஒழுங்காய் நடத்தி, பிள்ளைகளைத் தெய்வ பயத்திலும், கல்வியிலும் விருத்தி செய்து வந்தார்கள். இதுவே விருத்தி, இதுவே முன்னேற்றம். நமது குலத்தார் நாடித் தாவவேண்டிய (Goal) "இலக்கு" இதுதான். மற்றவை யெல்லாம் தாமாகத் தாமே வந்து வரும். அவைகளை அடக்கித் தடுத்துப் பார்த்தாலும் முடியாது.

(தொடரும்.)

ஓர் இந்திய கிறிஸ்துவன்.

## [CORRESP]ONDENCE.

## [க]டிதங்கள்.

—•••••—

[...நி]ருபர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

ஊர்காம்.

### “எட்டாம் தேதியென்றால் என்ன சார்?”

என் வழக்கப்படி காலையில் எழுந்து கர்மானுஷ்டானங்களை முடித்து உத்தியோக சாலைக்குப் போகும் வழியில், அநேக புஸ்தகங்களை அடுக்கிக்கொண்டு ஆங்கிலேய உடைதரித்த ஓர் சுதேச பதிபோதகர் வெகு முகமலர்ச்சியுடன் கை குலுக்கி, “குட்மார்னிங் சார், காலையில் தங்களைக் கண்ட என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். நல்லதோர் சேதி” என்று ஒரு நோட்டீசை நீட்ட, அதில் அமேரிக்காவில் பிறந்த வேத சாஸ்திரப் பாதிரி ஒருவர் பிரசங்கிக்கப் போவதாய்க் கண்டிருந்தது. நானோ பிரசங்கம், பாடல்கச்சேரி முதலியவைமட்டில் மெத்த அபிலாஷையுடையவனாயினும் சற்றே யோசித்து, போதகரே! மன்னிக்கவேண்டும், இடங்கேடான வேளையில் வந்திருக்கிறார் இந்தப் பாதிரியார். அதிலும் பிரசங்கமோ நாளை மாலை 5-மணிக்கு மேலானதால் தாங்கள் சிறந்திருக்கும் அன்பிற்குப் வந்தனம். நாளைக்கு இதைவிட 1000 மடங்கு அதிகமான ஓர் விஷயத்திற்கு, அதாவது தேவகுருவை ஆசீர்வாதத்திற்கு போகவேண்டும் என, இதுதானு சார்? அந்த ஆசீர்வாதத்தை ஆதிவாரம் கண்டுகொள்ளலாகாதா? உங்கள் கோவிலில் பூசை, ஆசீர்வாத முதலியவைகளுக்கு என்ன குறைவு? எந்நாளிலும்தான் உண்டு. இந்தப் புண்யவாளர் எப்போதும் வருவாரா? நாளைப்பொழுது தவறினால் 1000 கொட்டினாலும் இவர் முக தரிசனம் முதலாயகப்படுமா? தடை செய்யாதீர்கள். அந்த ஆசீரைப் பராபரன் இங்கே கொடுப்பா” ரென்று தனது கலைக்கியான கோணிப்பையை அவிழ்த்து உதற வாரம்பித்தார். நான் போதகரே! எதையும் தீரமாய் அறியாமுன் வற்புறுத்தலாகுமோ? போகட்டும், நாளைக்கு தேதி என்ன? “தெரியும் சார் 8-ம் தேதி”. அதை அறிந்தும் தானோ இவ்விதம் பேசுகிறீர்கள்! எட்டாம் தேதி என்றால் என்னசார்?” என்று கோபமுகமாய்ப் பேசவே, ஐயாவே, தேதியும் 8 தான். மாதமும் டிசம்பர்தான். ஆனால் அந்நாளில் என்ன விசேஷ மென்பதைமட்டும் மறந்துபோனீர்கள் போலும். சற்றே காலண்டரைப் பாருங்கள் என ஒரு புஸ்தகத்தைத் தலை கீழாய் புரட்டிவிட்டு “எனும் விசேஷம் காணோமே” யென, என் ஜெப புஸ்தகத்தை நீட்டி சுட்டிக் காட்டவே “தி பீஸ்ட் ஆப் தி இம்மாகுலெட் கன்சப்ஷன்” என்று வாசித்துக்கொண்டே, “நல்ல நூதனமான திருநாள் சார், என்ன மீனிங் இதற்கு?” என்று பரியாச வார்த்தையால் கேட்க, ஐயா! உமக்கு இது நூதனமா யிருந்தாலும், வெகு பூராதீனமானதும், மகா சிரேஷ்டமானதுமான திருநாளாகுமிது. கர்த்தர் திருநாட்களுக்கு அடுத்தபடியில் இதுவேதான் முதன்மையானது. அதாவது தேவமாதா ஜென்ம தோஷமின்றி யுற்பவித்த திருநாள் என்று சொல்லி சொல்லா முன்னமே அருமைப் போதகர் அடிபட்ட நாகம்போலச் சீற, முகம்மாற, கண்கள் சிவக்க, உதடு துடிக்க, தேகம் பதைக்க, புஸ்தகங்களைப் பொத்தென்று போட்டுவிட்டு, “என்ன சார், எப்போதும் இந்த ரோமான்காரருக்கு இதுவே ராமாயணமாய்ப் போச்சுதே! எந்த விஷயத்திற்கும் தேவமாதா தானோ! என்ன; அந்தம்மாள் அவ்வளவு உசத்தியோ? தெரியவில்லையே. அந்த இயேசுவானவர் அந்த அம்மாளிடமாய்ப் பிறந்தமையாலல்லவா இவ்வளவு புகழுகிறீர்கள்? அந்த இயேசு ஒரு மாட்டு வயிற்றில் பிறந்தார் என வைத்துக்கொள்வோம். இப்படியானால் இந்த அம்மாள் கெதி யென்ன சார்?” என்று வெங்காஞ்சொறிப்புதரில் விழுந்த வெறிகொண்ட மர்க்கடம்போல் எகிறிக் குதிக்கும்போது, எனக்கிருந்த கஸ்தியை அடக்கிக்கொண்டு நிற்கும் என்னை நோக்கி, “என் சார், வாய் அடைபட்டுப் போச்சுதா? பேசுமையா பார்ப்போம். பேச வகையில்லாவிட்டால் இன்றோடே அந்த வார்த்தையை விட்டொழியு”மென, நான் போதகரே! நீதானியும், பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாதபோது பரமநாயகியின் பிள்ளையா ஒரு பதிதனுக்கு பயப்படப்போகிறார்கள். கற்றோர்களென்பதைச் சீலமுடனே சொல்லும் கனவாக்கினுற் காணலாம். பெண்கள் ஒரே பருக்கையைச் சோதித்துப் பானையைக் கவிழ்த்துவிடுவதுபோல உமது ஒரே கேள்வி என் வாயை அடைத்துவிட்டதென்று நினைத்துவிட்டீர்போலும். உலக்கை கொழுந்துபோன்றவுமது கேள்வி உம்மிடமே யிருக்கட்டும். போதகரே! சுவாமி மனிதனுகப் பிறந்தாரென்று விசுவசிக்கிறீரா? “ஆம்” அந்த சுவாமியின் அடியார்களை கிறீஸ்துவர்கள்? “ஆம்” நீர் பிறந்தது மாட்டு வயிற்றிலா மனுஷி வயிற்றிலா? “மனுஷி வயிற்றில்.” யானை வயிற்றில் பூனையும், மான் வயிற்றில் மாடும் பிறக்கக்கூடுமா? “கூடாது”. ஏனையா கூடாது? மனுஷி வயிற்றில் குரங்குப் பிள்ளைகள் பிறந்ததைப் பார்த்ததில்லையா? “கேள்விமட்டும்தான்” என்றாலும் அது மனிதப்பிள்ளைதான், மந்திக்குட்டியா? அது “மனிதப் பிள்ளைதான்” இவ்வளவு போதும். மெய்யான கடவுளான சேசுநாதர் சுவாமி மனுக்குலம் மாசு கொள்ளுமுன் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரலோக ராஜேஸ்வரியிடமாய்ப் பிறந்து பாடுபட்டுப் பரகதிவாசலைத் திறந்தாரென்பது கத்தோலிக்கரின் குன்றாத விசுவாசமாதலால், அவர்கள் தங்களைக் கிறீஸ்துவர்களென்கிறார்கள். நற்குமரைக் கயற்றில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல் நானும் அவர்களைய சத்திய கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களென்கிறேன். ஆனால் உமது சித்தாந்தப்படிக்கு மாட்டின் வயிற்றில் பிறந்தது மனித உருவமாயிருந்தாலும் மாடுதான் என்று முன்னமே ஒத்துக்கொண்டீர். ஆகையால் அந்த மாட்டின் அடியார்களும் மாடுகளே! என்னும் அவ்வித கொள்கையிலிருக்கிற தாங்களும் அந்த இனத்தைச் சேர்ந்தவர்தானென்றும், உமது வேதபோதகத்தால் விளக்கிவிட்ட தங்களுக்கு அனந்த வந்தனம். ஓ! போதகரே! விளக்கைக் கொளுத்தி மரக்காலைக்கொண்டு மூடி வைக்கிறவன் மூடனல்லோ! ஆகையால் இவ்வித ஞானபோதகராகிய தாங்களும், தங்கள் ஞானமும் உலகெங்கும் அறியப்பட ஒரு புது சபையேர்ப்படுத்தி உமது திறமையை விளக்குவீரானால், போதகப் பட்டத்திலிருந்து (Reformers) சீர்திருத்தமுடையோர்களின் டாப்பில் வரையப்பட, லூத்தேரின் ஞானப் புத்திரரென்னும் பட்டமும் பெறுவீர். அப்போது வேதவாக்கியப்படி. அர்ச். பேதுரு தன் திருச்சபை ஆடுகளை ஒருபுறம் மேய்த்துக்கொண்டிருந்தால், அருமைப் போதகர் நீர் வளர வளர நிலத்தைப் பார்க்கும் நீண்ட வால்களையுடைய உமது மந்தையை மேய்த்துக்கொண்டிருக்கும் பாக்கியமடையீரென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது நிலத்தில் நட்ட கண்களை நிமிராமல் புத்தகங்களை வாரிக்கொண்டு வந்தனமுதலாய் சொல்லாமல் விட்டார் கம்பி வேதபோதகர்.

[...]ஓ! சீவியர்களில் [...] நித்தியமே! பூமியின் [...] சப்பட்டு. மாசுமைபொருந்[...] புக்கு முன்னமே தானே பரிசுத்த[...] முள்ளவளான பாம்பின் தலைசிலை[...] செடிக்குள் லீலியைப்போல் அழகுள்ள[...] ளாக விருக்கிறீரென்று சகல வர்ணிப்பும் உம்மை வர்ணிக்கக்கொள்ள, ஐயோ! இந்த பாதகரண்ட பதிதர்மட்டு முற்பேரில் இவ்வித வர்மம் சாதிப்பதேது! ஓ! தேவதாயின் மக்களே! வெளிப்பார்வைக்கு வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறைகள் போலும், சுவாபத்தில் விரியன்பாம்பு குட்டிகளாகவும் வெளிப்படும் வேஷதாரிகளைக் கண்டு மோசம் போகாதீர்கள். பட்டயத்தை எடுத்தவன் பட்டயத்தால் சாவானென்றபடி, பதிதரோடு உறவாடுகிறவன் பதிதனுகவே சாவான் என்று எச்சரிக்கையா யிருங்கள். ஆகவே கொம்புள்ளதற்கைந்து; குதிரைக்குப் பத்து முழம் வெம்புகளிக்காயிரந்தான் வேண்டுமே, வம்புசெறி, திங்கணர் (பதிதர்) தங்கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் நீங்குவதே நல்லநெறி.

பாவிகட் கடைக்கலமே! பதிதர் மனந் திரும்ப வேண்டிக்கொள்ளும்.

T. Ross. M. S.
Oorgaum.

---

### நமது கடமை.

நமது கடமையென்றது இங்கே, நம் கத்தோலிக்கு ஜனசமூகத்திற்கு நாம் செய்யவேண்டியகடமையென்பதைக்குறிக்கும். கத்தோலிக்குவேதம் இந்தியாவுக்கு, அப்போஸ்தலர்களில் ஒருவராகிய அர்ச். பர்த்தலோமு என்பவரால் கொண்டுவரப்பட்டது. பர்த்தலோமு இங்கு அர்ச். தோமையாருக்கு முன் வந்தவர்; ஆகையால் நம் ஜனசமூகம் இத்தேசத்தில் கேவலம் நேற்றைமழை இற்றைப்பருத்தி போன்றதல்ல; வயதில் அதனை, இந்தியாவில் பிராமணமதத்திற்கு இரண்டாவதாகச் சொல்லலாம். அர்ச். தோமையார் காலத்தில் இந்திய இராஜாக்களில் அநேகர் நமது கத்தோலிக்கு வேதவிசுவாசிகளாயிருந்தனரென்பதுமாத்திரமல்ல, அவர்களில் குருக்களாகவும், குருசிரேஷ்டர்களாகவும், மேற்றிராணிமார்களாகவும் சிலர் இருந்திருக்கின்றனரென்பதற்கு நமது புராதன சரித்திரங்களே சான்று பகருகின்றன. அஃதன்னியமாக, நம் ஜனசமூகத்

...ம்போக்கையும் இக்கா...யும் கவனிக்க எவர்தான் ...ாதிருக்கக்கூடும்?

...போது இவ்விந்தியாவில் எங்குபார்த்...ாஜ்யமுயற்சியில் கலக்கங்களும், பிரதிநிஸ்தானங்களுக்குக் கண்டனங்களும், நிருபண சபை நிர்வாக சங்கம் சுயஆட்சி முறைமையென ஓயாதொழியாது தொனித்துக்கொண்டு வருகிறபேரொலிகளுமே நிறைந்திருக்கின்றன. இம்முயற்சிகளில் இன்னமாகாணத்தார், இன்ன கிராமத்தார் இன்னஜாதியார் இன்னமதத்தார் என்றில்லாமல் எல்லோருமே, தத்தம் பதவிக்கேற்பப் பங்கெடுத்து உழைப்பாராகின்றனர். இவ்வுழைப்பின்வசத்தால் நமக்குப் பன்னூற்றாண்டுகளுக்குப் பின்னுள்ளவர்களான மகம்மதியசமூகத்தார் முதலாய் நாளுவித மேலான உத்தியோகங்களிலும், எவ்வித ஜீவாதாரத்திற்கும் அடிப்படையான உயர்தரக்கல்வி வன்மையிலும் சதாமுன்னேறிக்கொண்டுபோகின்றனர். அவர்களின் விடாமுயற்சி எத்தனை விஸ்தீரணமுடைத்தென்பதற்கு இற்றைக்குச் சிலவாரங்களுக்குமுன் அங்கே வாணியம்பாடியில் சென்னைச் சீப ஜஸ்டிஸ் கனம் அப்துல்ரஹீம் அவர்களின் சபாநாயகத்தில் நடந்தேறிய கல்விக்கான்பரென்ஸையும் ஓர் உதாரணமாகச்சொல்லலாம். இம்முயற்சியின் பலனாகத் தென் இந்திய முஸ்லீம்களுக்காக ஒரு காலேஜ் எற்படுத்தவேண்டுமாய் அதன் கட்டிடத்திற்கென ரூபா இருபத்தையாயிரமும் மாதசந்தாவாக ரூபாஆயிரமும் ஹைதிராபாத் நைஸாம் அவர்கள் உத்திரவளித்திருக்கிறார்கள். அன்றியும், கான்பரன்ஸ்கூடிய அந்த இடத்திலேயே ரூபா ஐம்பத்தையாயிரம் வசூல் பண்ணப்பட்டதெனச்சொல்லிக்கொள்ளப்படுகிறது. மகம்மதியரின் ஜனத்தொகைக்கு அவர்களில் படிப்பாளிகள் வெகு சொற்பப்பேரேயாயினும், அவர்களது மனோமுயற்சியை நம்துரைத்தனத்தார் நன்குமதித்து அவர்களுக்கும் கவர்னர், கவர்னர்ஜெனரல் இவர்களின் நிர்வாகசபைகளில் பிரதிநிதிஸ்தானங்கள் கொடுத்துவருகின்றனர்.

நாமோ முன்சொன்னதுபோல மகம்மதியர்களுக்குப் பலநூற்றாண்டுகளுக்குப் முன்னுள்ளவர்கள். மேலும், மேற்குறித்த நிர்வாகசபை அங்கத்தினர் அந்தஸ்திற்குத்தகுந்த யோக்கியதையுள்ளவர்கள். நமது கத்தோலிக்கு ஜனசமூகத்தில் இன்றைக்கும் பலர் இருக்கவே இருக்கின்றனர். அப்படியிருக்க, அந்நிர்வாக சபை அங்கத்தினருக்கு நம்மில் எவரேனும் இதுவரை அழைக்கப்படவேயில்லை. அன்றியும், சென்னைச்சட்டநிருபணசபையில் இந்தியக் கத்தோலிக்கரில் எவரும் இல்லாதிருப்பது எத்தன்மைதுர் அதிர்ஷ்டம். கத்தோலிக்கு ஜனசமூகப்பிரதிநிதிபோல மஹாவந்தனைக்குரிய ஆலன் ஆண்டவரவர்கள் சட்டநிருபணசபை மெம்பராய் இருக்கிறார்களென்பதுண்மையாயினும், இந்திய கத்தோலிக்கரிலும் சிலர் ஆண்டவரவர்களின் பக்கபலமாய் ஆங்கிருந்தால் எவ்வளவுநல்லது.

இந்துக்களும் மகம்மதியர்களும் மிகுந்த ஜனத்தொகையும், வேண்டிய செல்வாக்குமுடையவராயிருப்பதால் தத்தமக்கென அந்தந்த மாகாணங்களில் அநேகாநேக பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளுகின்றனர். ஜனத்தொகையும், செல்வாக்கும் குறைந்துள்ள நமக்கோவென்றால் அவர்களுக்கேற்பட்டிருக்கும் ஒருவித வசதியும் இன்றளவும் இல்லாமல் போய்விட்டது. என்றாலென்ன? இல்லாதொழிந்தவசதிகளை உண்டுபண்ணிக்கொள்ள அநேகவழிகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று நிறைந்த அந்தகாரத்திலிருக்கும் நமது கத்தோலிக்குச் சகோதரர்களுக்குக் கல்வியென்னும் ஞானவிளக்கைக்காண்பிப்பதேயாகும். இவ்வுண்மையைத் தெள்ளிதினுணர்ந்துகொண்ட நமது சகோதரர்களில் சிலர் இப்போது சிறிதுகாலமாக உயர்தரக்கல்வியின் பேரில் மிகவும் ஊக்கங்காட்டி வருகின்றனர். ஊக்கமளித்தும் மஹா உத்தமமே. ஆயினும்,

உயர்தரக்கல்விக்கு ஆஸ்பதம் மத்திமக்கல்வியிலும் அதற்கு அடிவாரம் ஆரம்பக்கல்வியிலும் இருக்கிறது. அஸ்திவாரம் பலமாயிருந்தால் மட்டும் அவ்வஸ்திவாரத்தில் நிருமாணிக்கப் பெறப்போகிற அரண்மனையும் பலமாயிருக்கும். நம்கத்தோலிக்கரிடத்தில் உயதரக்கல்விப் பூஜ்ஜியத்தின் காரணத்தையிட்டு, ஆங்குபல வித்தியாவிற்பனரை உசாவியதில், கத்தோலிக்பள்ளிக்கூடங்களில் மாணவருக்குக்கிடைக்கும் பிரைமெரி எலிமெண்டரிப்படிப்பின் மந்தகதியே இப்படி உயர்தரக் கல்வி ஊசலாடுவதற்குக் காரணமென அவர்களெல்லோரும் ஒருவாய்ப்பட உரைக்கின்றனர். நம்கல்லூரிகளில் இவ்விருவகைக்கல்விக்காக எற்பட்டிருக்கும் ஆசிரியரிற் பலரது லட்சணமும் மேற்படி வித்தியாநிபுணர்களின்மேலான சித்தாந்தத்தை உ...ப்படுத்துவதுபோலிருக்கிறது. ஆசிரியரிற்பலர் முறைதவறுப்பதிலும் கடமைதவறுப்பதிலுமே பேர்பெற்றிருக்கின்றனர். இன்றைக்கு இன்னபாடமென்பதை மாணவனே உபாத்தியாயருக்கு நினைப்பூட்டவேண்டியவனாகின்றான். உலகத்தின் கண்ணுள்ள சர்வஜனத்தலைவர்களும் ஒருநாள் சிறுபிள்ளைகளாயிருந்தவர்கள்தா னென்பதை இவ்வுபாத்தியார் அறியாதவர்போல் தமதுமாணவர் விஷயத்தில் ஏனோதானோவென நடந்துகொள்ளுகின்றனர். தகுந்தசம்பளமில்லாத இவ்வுபாத்தியார் நிறைந்த தாரித்திரத்தினால் தம் போதனைமேல் கவனம்செலுத்த வழியில்லாமல் பலவேலைகளில் திக்குமுக்காடுகின்றனர். முதலில் இவ்வுபாத்தியார்களின் நிலைமையைச் சீர்ப்படுத்திச் சுகமான ஆரம்பக்கல்வியின்மேல் சுகுணமான மத்திமக் கல்வியை நிருபித்து அதற்குமேல் அதிபிரயோஜனமான உயர்தரக் கல்விக்காகப் பிரயாசையெடுப்பதே நாம் நமது ஜனசமூகத்திற்குச் செய்யவேண்டியதான நமது கடமையென்க.

M. P. Mascarenhas.

---

அர்ச். அன்னம்மாள் மதுவிலக்குச் சபை.

**மதுபானத்தின் தீமை.**

நொண்டிச்சிந்து.

---

தந்தின தினதினனு - தினனு
தந்தின தினதின தினதினனு.

கொடிது கொடிது குடியே - இதனை
யடியோடு வெறுத்திடுவது கடனே.

நஞ்சினு மிகக் கொடிதே - மதுபானம்
நெஞ்சொற்றிக்குடல் ஓலமிடுதே.

நஞ்சு சரீரத்தைக் கொல்லும் - குடிவெறி
நஞ்சோ சரீரான்மாவிரண்டையும் கொல்லும்.

நஞ்சு இகசுகத்தைப் போக்கும் - மதுபான
நஞ்சோ இகபரமிரண்டையும் போக்கும்.

நஞ்சுக் கவுஷதமுண்டு - மதுபான
நஞ்சுக்கோ அவுஷத மில்லையன்று.

நஞ்சுண்டார் ஓர்க்கிரை செய்வார் - கட்குடி
நஞ்சுண்டார் எவற்றுக் கொப்பார்.

(ஆதலால்)

நஞ்சாகு மதுபானம் - கொடிய
வஞ்சனை செய்தழித்திடு மானம்.

ஐம்புல...
யம்பு செய...

புத்தியைக் கெடுத்திடு...
சித்த சுவாதீனங் குறைந்திடு...

பிணியும் பீடையும் செரு...
சனியினை வி...

சுகதேக மெங்குங் காயம் - குறைந்து
வெகுநாளிருந் திறப் பயம்.

வைகலுமுக விகாரம் - பேய
வைத்த பாவையும் விகாரம்.

பித்தேயாடிடுவான் - நாய்போல
மத்தமாயாது முறுமிடுவான்.

காய்போல் குரைத்திடுவான் - கரகப்
பேய்போல் துள்ளிக் குதித்திடுவான்.

பன்றிபோல் புரண்டிடுவான் - கடனை
மின்றியே அவமான முற்றிடுவான்.

கொலைகளவுக்கு மஞ்சான் - குடிவெறி
விளைவிப்போ நிறுத்துக்குவான்,

பொய்யும் புரட்டுவாசம் - கல்பனைச்
செய்தல்லது பதிந்திடுவான் மோசம்.

மனையை வெருண்டதங் குடியாம் - குடிய
முறைப்பாடொழியாப் பெருமிடியாம்.

மனைமக்கள் பலவாம் - ஐயோவத்
துணைபோ சொல்லது மனக்காயம்.

உள்ள முடைக்கும் பஞ்சம் - பரிவே
வேறுமென் றழித்துச் செய்வான் வஞ்சம்.

ஆன்ம சரீர கஷ்டம் - குடியற்று
மோக்ஷமில்லை யிதுமிக வபகஷ்டம்.

குடும்பத்தவர்க்கு க்லேசம் - இவன் செய்
யிடும்பையாலந்த குல நாசம்.

சொல்லச்சொல்ல விரியும் - உற்று
நல்லறிவுடையோர்க் கதுதெரியும்.

(ஆதலால்)

கள்ளுண்ணல் மிகக்கேடு - முற்றும்
தள்ளிவிடு இவ்வாரக் கேடு.

சொன்னேன் விகவாசம் - மிக்கவும்
துன்னுமெமொழி ஞானப்பிரகாசம்.

C. S. ஞானப்பிரகாஸம் பிள்ளை,
பிளாக் பள்ளி,
பெங்களூர்.

[கனவையும் சகுன சாஸ்திரத்தையும் பற்றிய கடிதம் அடுத்த மாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்].

## ...S & NOTES.

## ...ச்சாரம்.

...தேசிய குருக்கள்-இவர்களுடைய ... 50,000. இவர்களுக்குள் 20,000 ...ர் தற்போது போர்க்களத்திலிருக்கிறார்கள்.

**தந்தி சார்ஜில் ஏற்றம்**—இம்மாத முதற்கொண்டு 6-அணாவுக்கு அடிக்கக்கூடிய 12 வார்த்தைகளுக்கு சார்ஜ் 8-அணாவென்று தந்தி இலாக்காவினால் தெரியப்படுத்தப்படுகிறது. இனிமேல் 6-அணாவுக்கு தந்தி யடிக்க முடியாது.

**ஒரு பிரமாண்டமான ஆகாய விமானம்.**—780 அடி நீளமும், மணி ஒன்றுக்கு 65 மைல் வீதம் பறக்கக்கூடியதும், ஏறக்குறைய 3,000 மைல் தூரம் சுற்றித்திரியக் கூடியதுமான ஒரு பெரிய ஆகாய விமானத்தை ஜெர்மனியர் இப்போது கண்டு பிடித்திருப்பதாகத் தெரியவருகிறது.

**பாப்பரசரின் ஸ்தானாதிபதி.**—நாம் சென்ற மாதப் பத்திரிகையில் அறிவித்திருந்தபடி இவர் உரோமாபுரிக்கு இம்மாதம் 4உ புறப்பட்டுப்போகத் தீர்மானித்திருந்தபோதிலும், தாம் ஏறிச் செல்ல அமர்த்தியிருந்த கப்பல் தாமதப்பட்டு வருவதால், நாளது மாதம் 20உக்குப் பயணமாவாரென்றும், அதுவரையிலும் கொழும்பு மேற்றிராணியாரின் விருந்ினராயிருப்பாரென்றும் சொல்லப்படுகிறது.

**ஓர் எருதும் கன்றும் 1,113 பவுன்**—போலாந்து தேசத்திலிருந்து ஓர் எருதும் கன்றும் சென்ற 1914-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன, அவ்விரண்டையும் சிலவாரங்களுக்குமுன் இங்கிலாந்திலே விற்றபொழுது அவைகள் 1,113 பவுனுக்கு விலை போயினவென்று தெரிகிறது. அதாவது அவ்விரண்டுக்கும் கொடுக்கப்பட்ட விலை 15 ஆயிரம் ரூபாய்க்கு மேலாகிறது.

**புலிகளாலும் பாம்பு விஷங்களாலும் மாண்டவர்கள்.**—1914ஹு 1,702 பேர்களும், 1915ஹு 1,923 பேர்களும் புலிகளால் கொல்லப்பட்டார்களென்றும், அதுபோல் 1914ஹு 22,900 பேர்களும், 1915ஹு 26,385 பேர்களும் பாம்பினால் கடியுண்டு மாண்டார்களென்றும் சிம்லாவில் பிரசுரமாகிற கவர்ன்மென்று ரிப்போர்ட்டினால் தெரியவருகிறது. இப்படி கொலை புரிகிற இந்தப் புலிகளும், பாம்புகளும் ஐக்கிய சேனைகளின் முன்னணியத்தினின்று உதவிபுரிந்தால் நலமா யிருக்குமல்லவா?

**வேர்க்குருவுக்கு ஓர் ஒளஷதம்**—ஓர் ஆழாக்குக் குளிர்ந்தஜலத்தில் கொஞ்சம் உப்பைப்போட்டுக் கலக்கி வேர்க்குருவுள்ள பாகங்களில் தேய்த்துவர உடனே வேர்க்குருவினாலுண்டாகும் அரிப்பு, தினவுமுதலிய சங்கடங்கள் நீங்கிச் சுகமுண்டாகுமென்றும், இவ்விதமே பலநாள் செய்துவந்தால் மேற்படி உபத்திரவம் முற்றாயே தொலைந்து போகுமென்றுஞ் சொல்லப்படுகிறது.

**பொன், வெள்ளி பஞ்சம்**—ருஷியாவில் பரிசளிப்பதற்காக, மெடல்களும் பதக்கங்களும் இனிமேல் பொன், வெள்ளி உலோகங்களைக் கொண்டு செய்யப்படக்கூடாதென்றும், பொன், வெள்ளிக்குப் பதிலாக, தாழ்ந்த உலோகங்களை உபயோகப்படுத்தவேண்டு மென்றும் ருஷியா அரசிறை இலாக்கா மந்திரி ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறாரென்று வதந்தி. சென்ற 1915-ம் வருடத்தில் மாத்திரம் பரிசளிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்ட பொன், வெள்ளி பதக்கங்கள் ரூ 75 இலட்சத்துக்கு மதிப்பிடப்பட்டிருக்கின்றனவாம்!!

**ரோமேனியாவில் ஜெர்மனியருடைய கோரேம்.**—நிகழும் யுத்தத்தில் தங்களுக்கு விரோதமாய் ரொமேனியர் நேச வல்லரசுகள் தரப்பில் சேர்ந்தபடியால், அவர்களை யெப்படி யெப்படி இம்சைப்படுத்த வாகுமோ அப்படியெல்லாம் இம்சைப்படுத்த ஜெர்மனியர் கருதியுள்ளார் போலும். ரொமேனியாவுக்கு இவர்கள் ஆகாய விமானங்களி லேறிப்போய் பாஷாணங்கலந்த மிட்டாய்ப்பொட்டணங்களை எறிகிறார்களென்றும், சிறுவர்களும் சிறுமிகளும் அவற்றைப் பொறுக்கித் தின்னவே, சிலர் திடீரென்று சாகிறார்களென்றும், சிலருக்கு வியாதி இதனால் உண்டாகி சாகிறார்களென்றும், ரொமேனியாவின் தலைமை நகரத்திலிருக்



கும் சண்டையில் கலக்காத பிரதேச மந்திரிமார் தங்கள் தங்கள் தேசாதிபதிகளுக்கு இக் கொடூரச் செய்கையைப்பற்றி எழுதியிருக்கிறார்களாம்.

**குருடருக்குக் கைத்தொழிற் சாலைகள்.**—நிகழும் யுத்தத்தில் காயப்பட்டு கண் பார்வை யிழந்துபோன போர்வீரர்களும். மாலுமிகளும் இங்கிலாந்தில் ஓர் பட்டணத்தில், கூடை, பாய் முடைதல், தோல்வேலை, தோட்டவேலை, தச்சவேலை, செய்தல், உடுப்பு பிடித்தல் முதலிய பல தொழில்களைப் பயின்று வருகிறார்கள். இவர்களில் வேறு சிலர் தந்தி, டெலிபோன், டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்டு இவைபோன்ற தொழில்களைச் செவ்வையாய்ப் பயின்று, கம்பனிகளில் நல்ல வருமானத்தை யுடைய உத்தியோகங்களை வகித்து வருகின்றார்களாம்.

**சில அர்ச்சியசிஷ்டவர்களின் அழியாத சரீரங்கள்.**—நம்முடைய தேசத்தின் அப்போஸ்தலரான அர்ச். சவேரியாருடைய சரீரமானது ஏறக்குறைய 400 வருடங்களாக கோவையில் அழியாமல் அற்புதமாய்க் காப்பாற்றப்பட்டு வருகிறதென்று நாம் அறிந்திருக்கிறோம். அதுபோலவே இத்தலி தேசத்திலுள்ள அநேக பட்டணங்களில் சில அர்ச்சியசிஷ்டவர்களின் சரீரங்களும் நாளது வரையில் காப்பாற்றப்பட்டு வருகின்றனவாம். மிலான் பட்டணத்திலுள்ள பற்பல கோவில்களில், அர்ச். அம்புரோஸ், அர்ச். புரோத்தாஸ், அர்ச். ஜெர்வாஸ், அர்ச். சார்லஸ் பொரோமியோ, அர்ச். அக்குவினர், அர்ச். மரிய சக்காரிய அந்தோனியார், வேதசாட்சியான அர்ச். இராயப்பர் இவர்களுடைய சரீரங்களும், பவியா பட்டணத்தில் அர்ச். செளலீ அலெக்சாந்தருடைய சரீரமும் இதுவரையில் அழியாமல் சர்வேசுரனுடைய கிருபையால் அற்புதமாய்க் காப்பாற்றப்பட்டு வருகின்றனவென்று நாம் பத்திரிகைகளின் வாயிலாய் அறிகிறோம்.

**காலஞ்சென்ற சங். தாராஸ் சுவாமிகள்.**—புதுவை அதிமேற்றிராசனத்தில் அநேக ஆயிரம் ஆத்துமாக்களின் இரட்சணியத்துக்காக ஏறக்குறைய 57 வருஷகாலமாய் உழைத்துவந்த அதி சங்கைக்குரிய தாராஸ் சுவாமியார் சென்ற அக்டோபர் மாதம் ... இறந்துபோனாரெ... வும், விசனிக்கலாமே... போதக சபையிலுட்பட்... நம்மிந்து தேசத்திற்கு பிராஞ்... லிருந்துவந்த பூர்வ குருக்களில் இ... வர். இவர் தமது ஜீவிய காலத்தின் பெ... பாகத்தை வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களில் செலவழித்து, அநேகாயிரம் அஞ்ஞானிகளைச் சத்திய திருச்சபையில் சேர்த்து, அநேக புது பங்குகளை ஏற்படுத்தி, ஆங்காங்கு பல கோவில்களையும் கட்டி வைத்தார். இவரது தலைமை இருப்பிடமான சேத்துப்பட்டில் ஒரு நேர்த்தியான ஊர்நமாதா கோவிலையும் கெபியையும் கட்டியிருக்கிறார். தம் விருத்தாப்பிய காலத்தில் இளைப்பாறிக்காக புதுவைக்குப் போயிருக்கையிலு முதலாய் அவ்விடத்தில் பங்கு வேலை செய்து, வர வர தளர்ச்சியடைந்து தம்முடை 81-ம் வயதில் காலஞ்சென்றார். சர்வேசுரன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிடுவாராக.

**ஸ்ம்ஸ்ட் என்னும் ஒரு பெரிய யுத்த சாதனம்.**—இதை ஜெர்மனியில் வான்டாபிட்ஸ் என்பவர் தயாரித்துக்கொண்டிருக்கிறாராம். இந்த யுத்தக் கருவியானது பிரிட்டிஷாரால் இச்சமயம் போர்முனையில் உபயோகிக்கப்படும் டாங்க் என்ற புதுமாதிரியான மோட்டார் வண்டியைப்போல் நிலத்தில் சென்று அரண்களைத் தாக்குமாம். கடற்கரையை அடைந்ததும் சப்மரீனைப்போல் நீருக்குள் மூழ்கிச் செல்லுமாம். கடலைத்தாண்டி அக்கரை சேர்ந்ததும் அது ஆனேயிருக்கும் விசைபொறியினால் கவசம் பூண்ட செப்பளினைப்போல் ஆகாயத்திலே கிளம்புமாம். அதற்கு எதிரானால் அப்பத்து தோராதாவகையால் அது எந்த இடத்திலாம் இறங்கித் தனக்கு வேண்டிய உணவுகளைச் சேகரித்துக்கொள்ளுமாம். அது பரீட்சார்த்தமாகப் புறப்படும்போது கௌண்ட் செப்பலின் என்பவரும் அதனுடன் போவாராம். ஆயினும் அதனுடன் அவர் போகக்கூடதென்று அவருடைய நண்பர்கள் அவரைத் தடுக்கின்றனராம். ஆயினும் இவ்விதயுத்தக் கருவியும் செய்யப்படுகிறதென்பது சம்பத்தியமா?

...ளிவு—ஒரு சிறு
...உபாத்தியாயரிடந்
...ம் வாவு கேட்டான்.
...கொடுக்கப்படாதென்று
...ட்டார். 2-ம் 3-ம் தடவையும்
½-மணி நேரம் வாவு கேட்டும் பய
...லை. கடைசியில் 4-ம் தடவையாக
உபாத்தியாயரைப் பையன் ½-மணி நேர
வாவுக்காக கெஞ்சி கேட்டுக்கொள்ளவே,
வாவு கொடுக்கப்பட்டது. பையன் வெ
ளியே போய் 2-மணி நேரஞ் சென்று பள்
ளிக்கூடத்திற்கு வந்தான். உபாத்தியாய
ரோ கோபத்துடன் அவனை நோக்கி "நான்
உனக்கு ½-மணி நேரம் வாவு கொடுத்தி
ருக்க, நீ ஏன் 2-மணி நேரஞ்சென்று திரும்பி
வந்தாய்?" என்று கேட்க, பையன் "ஐயா,
நான் உம்மை ½-மணி நேரம் வாவு நான்கு
தடவை கேட்டேன். 4 அரை மணி,
2-மணி யல்லவா? ஆதலால் 2-மணி நேரஞ்
சென்று வந்தேன்" என்று எல்லோருக்
கும் நகைப்புண்டாகும்படி சொல்லவே,
உபாத்தியாயருக்குக் கோபந் தணிந்து,
பையனைத் தண்டியாமல் விட்டுவிட்டார்.

ஒரு புலியும் சேவலும்—சென்ற மா
தம் ரங்கூனிலிருந்து ஒரு புலி, "லாமா"
என்ற ஒரு மிருகம் (ஒட்டையை ஒத்தது),
3 கோழிகள் ஆகிய இவைகள் தனித்தனி
யே கூண்டுகளி லடைக்கப்பட்டு, ரயில்
மார்க்கமாய் கல்குத்தாவுக்கு அனுப்பப்
பட்டன. ரயில் வண்டி கல்குத்தாவிலுள்ள
ஹௌரா ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்த
வுடன், இந்தப் பிராணிகளை ஏற்றி யிருந்த
வண்டியின் பக்கத்து வண்டியைத் திறந்து
கூலியாட்கள் உள்ளே போகவே, புலியா
னது தன் கூண்டை உடைத்து வெளிப்
பட்டு, லாமாவையும் 2 பெட்டைகளையும்
பிடித்துக் கொன்று தின்றுவிட்டு, சேவலை
யும் பிடித்துத் தின்ன முயன்று கொண்டி
ருப்பதை இவர்கள் கண்டு, சங்கதியை
ரயில் அதிகாரிகளிடம் தெரிவித்தார்கள்.
சற்று நேரத்துக்குள் அவ்விடத்தி லிருந்த
ஜனங்களெல்லாம் திரண்டுவந்து புலி தன்
கூரிய நகங்களால் சேவலைப் பிடிக்கப் பல
முறை அதின்மேல் பாய்வதையும், சேவ
லோ தப்பித்துக்கொண்டு தன்மேல் புலி
பாயும் ஒவ்வொரு விசைக்குந் தன் இறக்
கைகளை விரித்து கொக்கரித்துத் தைரிய
மாய் அதைத் தொந்தரவு பண்ணுவதையும்,
புலி அப்போது பின்வாங்கிப் போவதை
யும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு
நின்றார்கள். இதற்குள்ளாக புலிக்குச் சொந்
தக்காரன் வேறொரு கூண்டைக் கொண்டு
வந்து மிக்க பிரயாசையோடும் ஜாக்கிரதை
யோடும் அதில் அதை அடைத்து, கொண்
டுபோய்விட்டான். சேவல் புலியின்மேல்
தான் கொண்ட வெற்றிக் கடையாளமாக
ஒய்யாரத்துடன் கொக்கரித்துக்கொண்டு
வண்டியை விட்டு வெளிப்பட்டதாம்.

## DOMESTIC OCCURRENCES.
## குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 1-ரூபாயும் முழுக்கலத்துக்கு 2-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. பத்—ரி.

### நன்மரண அறிக்கை.

தூத்துக்குடி.

எனது அரிய மாமனாராகிய எக்ஸ். எ. பருனாந்திஸ் அவர்களும் மாமியாராகிய மரிய மித்சேல் பொன்னம்மாள் மச்சாது அவர்களும் என்னைப் பெற்றதாய் தந்தையர்களிலும் பன்மடங்காய் அன்போடரவணைத்துத் தங்கள் சொந்தப் பிள்ளைகளில் ஒருவராய் என்னைப் பாவித்து எவ்விதக் குறையுமின்றிப் பாதுகாத்து வந்தார்கள். இவர்கள் கடவுள் பதமடைந்து வெகுநாளாகியும் அவர்களை நினைக்குந்தோறும் என்மனம் ஆற்றொண்ணாத் துயரத்தையடைகிறது. அவர்கள் என்பேரில் காட்டிவந்த அளவிறந்த அன்போ, என் ஜீவியகாலத்தில் அன்னவர்களை மறக்க விடவில்லை. அவர்களுடைய கடைசிப் புன்சிரிப்பான தோற்றத்தைக் கவனிக்குந்தோறும் என் கண்களில் நீர்ததும்பி எந்நேரமும் அவர்களையே நினைப்பூட்டுகிறது. தேடற்கரிய அன்னவர்களை இழந்த நான் கவனிப்பாரற்று படும் கஷ்டங்களோ விவரிக்குந் தரமல்ல. ஆகையால் இதைக்கண்ணுறும் சகோதரர் சகோதரிகளே, எவர்களாலும் கவனிப்பாரற்றுத் தயங்கும் என்னைக் காருண்யகடவுள் கண்ணோக்கி யாதரிக்கும்படியாகவும் எனது பிரிய மாமனார் மாமியாரவர்களுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவும் மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
M. I. P. Rayer,
Son of Antony Poobalarayer
Tuticorin.



எாணுநளம்
ஸ்ரீயாள் V. மநுவேல் பிள்ளை யவர்கள்
மரணநுதாபம்.

ஸ்ரீமான் V. மநுவேல் பிள்ளை யவர்கள் 1837-ம் ஆண்டில் பூவிருந்தவல்லியில் இந்துக்களான தாய் தந்தையர்களிடம் பிறந்து, தாம் இல்லறத்துக்குட்படுவதற்கு முன் 1866 ல். ஞானதீக்ஷை பெற்று இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய மேனுடுகளுக்கு உத்தியோகார்த்தமாய் விஜயஞ்செய்து பெரிய சிப்பாய் கலகத்தின்போதும் தாம் ப்ரஸன்னமாயிருந்து, 1885 ல் கொச்சி சமஸ்தானஞ் சேர்ந்து, பால்காட்டு ரெவிடன்வியில் ஸூப்பரின்டண்டாக 15 வருட கால மிந்த உத்தியோகத்தில் உத்தியோகஸ்தர் முதல் வேலையாட்களும், தனவந்தர் முதல் ஏழைகளும் புகழ்ந்தேற்ற ...
கொண்டாடப்பெ...
போகத்திலிருந்து வில...
வரைக்கும் உபகாரச் சம்...
மதாச்சார முறைப்படி யாவு...
பெற்று தனதருமை யில்லாளும், பு...
களும் பௌத்திரர்களும் மற்றநம் உற...
வரும் புடைசூழ 25-10-1916 ல் இவ்வ...
உலகத்தைவிடுத்து நித்தியத்தை நாடிச்சென்றார். அடிமையை யன்புடன் நேசித்து ஓர் உபகாரப் புருஷராயிருந்தவத்த இவர் பிரிவு அதிகசஞ்சலமும் பெரு நஷ்டமுமேயாம். இவருடைய குடும்பத்தாருக்கு எனது அநுதாபத்தை யிதனுலறிவிக்கின்றேன்.

ஆத்துமாக்களுக்கு உதவி செய்வது சர்வேசுரனுக் குகந்ததும், ஷை ஆத்துமாக்களுக்குப் பிரியமானதும், நமக்கு மிக்கப் பிரயோஜனமானதுமென்பதால் இதைக் கண்ணுறுங் கனவான்கள் ஷை V. மநுவேல் பிள்ளையின் ஆத்துமத்துக்காக வேண்டிவரப் பிரார்த்திக்கின்றேன்.

C. S. ஞானப்பிரகாஸம் பிள்ளை,
ஹெட்மாஸ்டர்
பெங்களூர் செயின்ற் மேரிஸ் ஸ்கூல்
பிராக் பள்ளி.

## அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை மௌண்டரோட் "நேப்பியர்" சிங்காரத் தோட்டத்திற் கருகாமையில் வசிக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களுக் கனுகூலமாய் அர்ச். அந்தோனியார் பேரால் ஒரு புதுக்கோவில் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்குந் தொகை ரூ 7.000. இதுவரையிலும் இதற்காக உபகரிக்கப்பட்டிருக்குந்தொகை ரூ 4.231-5-6 ஆயினும், தப்பாமல் அநுகூலந்தரும் அர்ச். அந்தோனியாருடைய மகிமைக்காகக் கட்டப்படும் இவ்வாலயம் அவராலும், அவருடைய பக்தராலுமே முடியக்கூடுமென நம்பி, வருலாயிருக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு ஷை கோவில் வேலையைத் தொடங்கிவிட்டோம். ஆகையால் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இவ்வேலையைத் தொடர்ந்து நடத்தி அதைக் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய முன் வருவீர்களாக! நீங்கள் கொடுத்து உதவும் தொகை எவ்வளவு சொற்பமாயினும் அது பேருதவியாகப் பாவிக்கப்பட்டு நன்றியறிதலோடு அங்கீகரிக்கப்படும். ஏனெனில் "பலதுளி பெரு வெள்ளம்" ஆவதுபோல் இதைக் கண்ணுறுங் கிறிஸ்துவர் ஒவ்வொருவரும் கொடுத்தால் பெருந்தொகையாகுமே. ஆகவே. அர்ச். அந்தோனியார் பேரில் உங்களுக்குள்ள பத்தி விசுவாசத்தைக் காட்டுவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஷை கட்டிடத்துக்குப் பொருளுதவி புரிவதோடு கூட, மற்றவர்களும் உதவி புரிய நீங்கள் ஓர் தூண்டுகோலா யிருக்கும்படி. மிக்க விநயமாய்க் கேட்டுக்கொள்ளும்,

புதுப்பேட்டை, சென்னை.

உங்கள் நன்றியறிதலுள்ள
ரங். அருளப்பநாத சுவாமிகள்,
அர்ச். அந்தோனியார் கோவில்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இதுவரையிலும் வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை. | 4.231 | 5 | 6 |
| ஓர் நன்கொடை | 25 | 0 | 0 |
| Mr. R. J. Nicholas (K. G. Fields) | 5 | 0 | 0 |
| ,, W. R. Smith (F. M. S.) | 8 | 12 | 0 |
| Miss. A. சுவாமிக்கிரம் | 0 | 8 | 0 |
| ஆக மொத்தம், | 4.273 | 9 | 6 |

விளம்பரம்.

## ...த்தில் ...தேவை.

...பட்டணத்தில் இந்திய கத்தோ...லிக்கு கிறிஸ்துவர்களுக்கென்று ஒரு சத்திரம் ...கிடையாது. இந்துக்கள் மகம்மதியர் ...ர்களுக்கோ எங்கு பார்த்தாலும் சத்திர...ம், சாப்பாட்டு விடுதியும், டிகிளப், காபிகிளப் முதலியனவும் ஏராளமாயுண்டு. 'கோர்ட்டு வியாஜ்ஜிய விஷயமாயாவது, வைத்திய சிகிச்சைக்காகவாவது, வியாபார சம்பந்தமாயாவது அல்லது படிப்பு விஷயமாயாவது ஒவ்வொரு நாளும் சென்னைக்கு வருகிற கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் எத்தனையோ பேர். இப்படி வருகிற நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமில்லாமலும், தண்ணீர் குடிக்கத் தாவில்லாமலும் தயங்கித் தவிக்கின்றார்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்பது பல நாள் பிரயத்தனம். பெரிய கட்டிடமொன்று பட்டணத்து மத்தியில் கட்டவேண்டுமென்பது எல்லோருடையவும் எண்ணம். ஆனால் இந்த எண்ணத்தை நிறைவேற்ற மிகுந்த திரவியம் வேண்டும். அவ்வளவு திரவியஞ் சேகரஞ்செய்து காரிய முடிக்கவேண்டுமானால் அதிக நாளும் செல்லும். ஆனது நிமித்தம் "சிறுகக்கட்டி பெருகவாழ்" என்பதுபோல தற்காலம் ஜியார்ஜ்டவுனுக்குள் ஒரு சிறு வீடாவது வாங்கி, அதில் ஒரு விடுதி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இதற்குக் குறைந்த பட்சம் 10,000 ரூபாயாவது வேண்டும். இத்தொகை நமது பொதுஜன நலத்தை விரும்பும் கத்தோலிக்குக் கனதனவான்களிடமிருந்து தான் வரவேண்டும். இதை வசூல் செய்வதற்காக இதனடியில் குறிக்கப்பட்டுள்ள மெம்பர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் முயற்சிசெய்து வருகிறார்கள். இவர்கள் நங்களுக்குள்ளேயே சிறுகச்சிறுக சென்ற சில மாதங்களாய்ச் சேகரஞ் செய்திருக்கிற ரூபாய் 535. இச் சென்னை இராஜதானி முழுவதிலும், இலங்கை, பர்மா, சிங்கப்பூர், சைகோன், மோரிஸ், நெட்டால் முதலிய பல தேசங்களிலுமுள்ள கத்தோலிக்குச் சகோதரர்களெல்லோரும் இச் சைங்கரியத்துக்கு கைகொடுத்து, தங்கள் தங்களாலான மட்டும் பொருளுதவிசெய்து காரியத்தை முடித்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தச் சத்திர தருமத்துக்காக பணம் அனுப்புபவர்கள், மதராஸ் வட ஜியார்ஜ்டவுன் போர்ச்சுகீஸ் மாதாக்கோவில் விசாரணை குரு, சங். எல். எக்ஸ். பெர்னாந்தீஸ் சுவாமிகளுக்கு அனுப்ப வேண்டும். (*Revd. Father L. X. Fernandes-Vicar, Assumption Church, North George-town, Madras.*) பணங் கொடுப்பவர்கள் பேரும், கொடுக்குந் தொகையும் இப்பத்திரிகையிலும், "கத்தோலிக்கு நேசன்" பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

| | ரூ. அ. ப. |
|---|---|
| ஏற்கெனவே வரவேற்கப்பட்ட தொகை. | 738—7—0 |
| பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகளால் நவம்பர்மீ த்துக்கு வரவு | 30—0—0 |
| Mr. S. சவரிநாத முதலியார், கர்னூல். நவம்பர் மீ | 1—0—0 |
| ஆக மொத்தம், | 769—7—0 |

சங். L. X. பெர்னாந்தீஸ்.
பி. ஜெகராயலு செட்டியார்.
டி. எம். சவரிமுத்துப் பிள்ளை.
டி. எம். மாணிக்கம் பிள்ளை.
டி. எஸ். ஏ. மாணிக்கம் பிள்ளை.
டி. ஏ. தோமாஸ் பிள்ளை.
எம். பி. குழந்தைசாமிப் பிள்ளை.
டி. துரைசாமிப் பிள்ளை.

## இரத்தமே பிராணாதாரம்.

பயிர்களுக்கு ஜலம் ஆதாரமாயிருப்பது போல மன்னுயிர்களுக்கு இரத்தமே ஆதாரமென்பது யாவரும் அறிந்த விஷயம். இரத்தத்தினாலேயே சப்த தாதுக்களும் போஷிக்கப்பட்டுப் பராமரிப்படைந்து சரீரம் நடைபெற்று வருகிறதேயன்றி வேறல்ல. நமது சரீரத்தில் உயிர் தரித்திருப்பதற்கு ஏதுவான பிராணவாயுவைச் சேகரஞ்செய்து, தேகத்திலுள்ள பலபாகங்களுக்குங் கொண்டு சேர்ப்பதும், தேகத்திலுள்ள கழிவுப் பொருளாகிய கரியமிலவாயு விசர்க்கப் பொருளாகியவற்றைக் கழிவுகாலாகும் அங்கங்களில் சேர்த்து வெளிப்படச் செய்வதும் இரத்தத்தின் தொழிலேயாகும். தேக போஷிப்புக்கு ஆதாரமாயிருக்கிற உணவுப் பொருட்களின் சத்தைப் பெற்றுக்கொண்டு, மாமிசமாக்கும் பதார்த்தத்தை மாமிசத்துக்கும், சருமமாக்கும் பதார்த்தத்தை சருமத்துக்கும், எலும்பாக்கும் பதார்த்தத்தை எலும்புக்கும், மூளையைபோஷிக்கும் பதார்த்தத்தை மூளைக்கும் கொண்டுசெலுத்துவது இரத்தமே. ஜீரணக் கருவிகளுக்கு வேண்டிய அனலைத்தந்து, அவைகளின் தொழில் நடைபெறச் செய்வதும் இரத்தமே. இவை மாத்திரமா? மனுஷனுடைய சத்துவ சக்தி ஜீவசக்தி முதலியவை வெளிக்குத் தோன்றுகின்றதும் இரத்தத்தினாலேயேதான். சுருக்கி ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால்;

இரத்தமே ஜீவன், ஜீவனே இரத்தம்.

உவர்ஜல முதலியவற்றால் பயிரின் செழுமைகெட்டுப் பலன் குன்றிப்போவது போல், கெட்ட இரத்தத்தினால் தேகசுகங்கெட்டுப் பல நோய்கள் உ... ...தன் இயற்கை... மனுஷனை யாதொரு...லால், இரத்தம் கெடாம... ...க்கால் கெட்டால் உடனே ... அதன் சுபாவ நிலைக்குத் ... தேகிகளாய் ஜீவிக்க விரும்புபவரி...கும்.

இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, இரத்த... விருத்தி செய்து, ஜீரணசக்தியுடன் நல்ல ...யையும் பெண்மை, நரம்புகளுக்கு வலிமையும் தாது புஷ்டியையும் தந்து, உடம்புக்குப் பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கத்தக்கது வீரமாமுனிவரின் சுகந்தருமாத்திரையே.

### வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரையால் தீரும் வியாதிகள்.

விஷசுரம், மலேரியா, முதலிய விஷக் காய்ச்சல்களும்; டிஸ்பெப்சியா என்னும் அஜீரணம், கிராணி, அதிசாரக்கழிச்சல் முதலிய பலவகை வயிற்றுப் போக்குகளும்; மேகவெட்டை, நீர்ச்சுருக்கு, பிரமிய முதலிய மேகரோகங்களும்; ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகவாய்வு, சூதகசிக்கல், முதலிய வியாதிகளுக்கும். (Cholera) என்னும் விஷபேதிக்கும் இது கைகண்டபேர்போன மருந்து.

100-மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 1—0—0. தபாற் செலவு வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மருந்தருந்தும் விதமும் அநுபான முறைகளும் மாத்திரையுடன் அனுப்பப்படும்.

C. A. Silveira,
2/74, Broadway,
Madras.

சி. ஏ. சில்வேயிரா,
2/74, பிராட்வே,
மதராஸ்.

## பட்டு குட்டை.

மிகவும் நாணயமானது ! மிகவும் சரசமானது !! 5½ முழ நீளம். 2½ முழ அகலம்.



இந்த பட்டு குட்டையானது அசல்பட்டு நூலினால் செய்யப்பட்டது. இது மிகவும் பளபளப்பாயும் பிரகாசமாயுமிருக்கும். மனதுக்கு ரமணியமான கலர் உடையது. இதை சொக்காயின்மேல் போட்டுக்கொள்வதற்கும் தலையில் சுற்றிக் கொள்வதற்கும் மிகவும் நேர்த்தியானது. சிறு பெண்களுக்கு தாவணிகளாகவும் உபயோகிக்கலாம். குட்டை 1-க்கு கிரயம் ரூ 2—8—0.

### வெங்கடாப வர்ணசேலை.

இந்த சேலைகள் நேர்த்தியான சிகப்பு. வெள்ளை நூல் கலந்து செய்யப்பட்டது. இது மிகவும் அழகாயும் கம்பீரமாயும் இருக்கும். சேலை 1-க்கு கிரயம் 2—6—0. இதில் கொட்டடிப்போட்ட சேலை 3—0—0.

விலாசம்.—கனக கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

## ரோஷா நகரத்துக் கோவில்கட்டிட தருமம்.

நண்பர்களே, சென்னைக்கு வடக்கே ஆரம்பாக்கம் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு 9-மைல் தூரத்தில் ரோஷாநகரமென்னும் ஓர் சிற்றூர் உண்டு. இவ்வூரிலும் இதைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலும் சென்ற 10 வருஷங்களுக்குள் ஞானஸ்நானம் பெற்ற 1000-புதுக் கிறிஸ்துவர்களிருக்கிறார்கள். இவர்களுக்கு ஓர் தகுதியான கோவிலில்லை. அவசரத்தின் நிமித்தம் கட்டப்பட்டிருந்த குச்சுக் கோவில் இடிந்து விழுந்துவிட்டது. ஆனதுபற்றி, புதுக்கோவில் ஒன்று கட்டத் தீர்மானித்து வேலையைத் தொடங்கிவிட்டோம். மூன்றடி வரையிலும் சுவர் எழும்பி விட்டது. பூர்த்தியாய்க் கோவில் கட்டிமுடிக்க 4000 ரூ இதற்காக இதுவரையிலும் பிடித்த செலவு ரூ 600. "நல்ல ஆயன்" சந்தாதாரர்கள் எமக்குக்கை பிடிக்குமென மதிப்பிடப்படுகிறது. ஆகவே "ஆயிர மாதானி அறு கொடுத்து உதவுவார்களென நம்பி, இந்த மனு செய்துகொள்ளுகிறோம். "ஆயிர மாதானி அறு பத்திரண்டரை" என்பதுபோல் ஒவ்வொருவரும் கொஞ்சங் கொடுத்து உதவுவார்களே யாகில் இப்புது கிறீஸ்துவர்களுடைய பேருபகாரிகளாகி, தேவாசீரைப் பெற்றுக்கொள்ளுவார்களென்பதே திண்ணம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை | 100 | 4 | 0 |
| சௌபாக்கியவதி அற்புத மரியம்மாள் (நர்ஸ், பெங்களூர்) | 10 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ | 110 | 4 | 0 |

Fr. KOPERDRAAD,
விசாரணை குரு, ரோஷாநகரம், சத்தியவேடு.

...டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரியை யுபயோகித்தல் ஆராத ரணங்கள், புண்கள், எவ்விதத்திலும் தீராத படைகள், மேகப் படைகள், தடிப்பு படைகள், படர் தாமரை, எச்சிற்றேமல் இன்னும் அநேகவித படைகள், தேமல் ...வண்டுகடி, தேக ஊரல், நமைச்சல், சொறி இவைகளெல்லாம் பூரணமாய் ...தன் புகழத்தக்க குணமாவது: மருந்தைப்போட்ட வுடன் நமைச்சல் நின்று ...கு சீக்கிரத்தில் வியாதியைக் குணப்படுத்தி இதரப் படை மருந்துகளைப்போலில் ...யாழுநம் வராதபடிக்கு செய்யும். இதையாவரும் கவனிக்கவேண்டிய தவசியம். எல்லா ...களும் இப்படிச் சொல்லுகிற வழக்கமென்று நினைக்காதேயும். போலி வியாபாரிகளுடைய மருந்துகளை யுபயோகித்து சுகமடையாயாவரும் டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரியை யுபயோகித்தால் ஆச்சரியப்படுவார்கள். இச் சர்வபடை சங்காரியை யுபயோகித்த யாவரும் இதைப்போல் மருந்து எங்குமே கிடையாதென்று புகழ்ந்து நற்சாட்சி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். அநேக வருஷங்களாயுள்ள படைகளை இரண்டு மூன்று வேளையில் பூரணமாய் குணப்படுத்தினதென்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். இம்மருந்தின் குணத்தைப்பற்றி தினம் தினம் நற்சாட்சி பத்திரங்கள் வந்து கொண்டே யிருக்கின்றன.

டாக்டர் பார்த் என்பவரின் சர்வ படை சங்காரியின் விலை பெட்டி 1-க்கு அணா 12. தபால் பாக்கிங் கூலி பிரத்தியேகம்.

கார்பாலிக் சோப் விலை 1-க்கு அணா 2.

## யாவருக்கும் இது முக்கியமானது.

162023

ஒரே தரம் உபயோகித்துப் பாருங்கள் பிறகு தெரியும்.

எங்களால் தயார் செய்யப்படும் முதல்தரம் அய திராவகத்தை யுபயோகப்படுத்தினால் ஆச்சரியப்படுவீர்கள். இது இரத்தக் கெடுதியால் உண்டாகும் சகல வியாதிகள், மேக வியாதிகள்; ஆராத ரணங்கள், மேகப் புண்கள்; முடக்குவாதம், பாண்டு, மேக கிரந்தி, சகல மேகரோகங்கள், மேகப் புற்று, மேகச் சொறி, மேகக் கரப்பான், மேகத்திற் காணும் தடிப்பு ரணம், கையில் ஊரல் வெளுப்பு சிரங்கு; இவைகளை யெல்லாம் பூரணமாய்க் குணப்படுத்தும். இம்மருந்தின் குணத்தைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டியதில்லை. வியாதி யில்லாதவர்களும் சாதாரணமாய் பலத்திற்காக இதைச் சாப்பிடலாம். பத்திய மில்லை. ஒருதரம் இதை யுபயோகப்படுத்திப் பாருங்கள். பிறகு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் டாக்டர் பார்த் என்பவரின் சர்வ படை சங்காரியை யுபயோகப் படுத்துகிறவர்கள் முதல் தரம் அய திராவகத்தைப் உபயோகப்படுத்தினால் மிகவும் நல்லது.

எங்களுடைய முதல் தரம் அய திராவகத்தின் விலை புட்டி 1-க்கு ரூ 2-12-0 தபால் பாக்கிங் கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர்:—பி. எஸ். பொம்மையா அண்ட் கோ தபால் பெட்டி 208. மதருஸ் என்றெழுதி பெற்றுக்கொள்ளவும்.

---

திருக்குடும்பத் துணை.

# XMAS & NEW YEAR PRESENTS.

## தேம்பாவணி விருத்தியுரை.

5-ரூபா புத்தகம்! இப்போது 3-ரூபாய்தான்!!

கிறிஸ்மஸ் ஜனவரி பண்டிகைக்கு இனாம் கொடுப்பவர்கட்கும், பெறுகிறவர்கட்கும் வெகு பிரயோசனமான திருக்குடும்ப சரித்திரமென்னும் இப்புத்தகம் இன்னும் கொஞ்சம் புத்தகங்கள்தான் கையிருப்பி லிருக்கிறது. விலை 3-ரூபா.



சைவ மகத்துவ திமிரபானுவி விலிய விரோததிக்காரம். இப்புத்தகம் நம் சத்திய கத்தோலிக் வேதத்தைப்பற்றியும், இந்து மதத்தைப்பற்றியும் விபரமா யெழுதியுள்ள தர்க்கப்புத்தகம். விலை 2-ரூபா.

கெட்டகுமாரன் கதை யென்னும் ஊதாரிப்பிள்ளை டிராமா. இப்புத்தகம் டிராமா நாடகக்காரர்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் வெகு பிரயோசனமானது. அர்ச். லூக்காஸ் சுவிசேஷத்தில் நம் சேசு ரட்சகர்தாமே திருவாய்மலர்ந்தது. இது தகுந்த இராகத் தாளத்தோடும், சுரத்தோடும், படங்களோடும் அச்சிட்டிருக்கிறது. தற்சமய விலை 12-அணா. பிறகு ஒரு ரூபாயாக விலை ஏறிவிடும்.

நீசவாகனமென ஆண்டவரம்மானை. விலை 6-அணா. மூன்று புத்தகங்கள் மொத்தமாக வாங்குகிறவர்கட்கு ஒரு நேர்த்தியான இனாம் புத்தக மனுப்பப்படும்.

எ. எப். சைமன்,
கமிஷன் எஜண்ட்,
மஹாச விகடதூதன் ஆபீஸ் ஜார்ஜிடவுன், மதருஸ்.